BL
XM m211, N09
N09.10
1:1179

கஷ்டகாலம்தான். அவைகளின் தொகை 31-லிருந்து 29-ஆகக் குறைந்தபோதிலும் தொழில்தனம் கொஞ்சம் அதிகரித்திருக்கிறது. 10-சொஸைடிகள் லேவாதேவி வேலைகள் செய்கின்றன. 12-சொஸைடிகள் அத்துடன் நெசவு நூல்களும் வாங்கி விற்கின்றன. இன்னம் 6 சொஸைடிகள் மெம்பர்களுடைய துணிகளையுங்கூட விற்கின்றன. ஹூப்ளியில் சொஸைடியானது சேணியர்களுள் வேலை நிறுத்தம் செய்து வியாபாரிகளை முன்னைவிட 100-க்கு 12 அதிகம் கொடுக்கும்படி செய்தது. சண்டையினால் இப்பொழுதுவிலைவாசிதிருப்தியில்லாமையினால்இவ்வினத்தில்புதுசொஸைடி ஏற்படுத்த ரிஜிஸ்ட்ராருக்குப் பிரியமில்லை. ரிபோர்டில் சிலப்ளைஷட்டில் (Flyshuttle) தறிவேலைகளைக் காட்டுவதும் நெசவுப் பள்ளிகூடம் ஏற்படுத்துவதுங்கூட காணப்படுகின்றன. ஆனால் அதற்கும் கோவாபரேடிவ் இயக்கத்திற்குமுள்ள சரியான சம்பந்தம், நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. இச்சங்கங்களெல்லாவற்றையும் காட்டிலும் அதிக திருப்திகரமானவை, நாணயத்தைச் சாராத விவசாயசங்கங்கள். இவைகள் முதலில் எவ்வளவு இருந்தன என்பது நமக்கு தெரியவில்லை. ஆனால் 1916-17ல் 42. புதுச் சொஸைடிகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுள் 9 முனிஸிபல் எல்லைக்குள் ஆரம்பித்த பாற் சங்கங்கள். இதில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வட்டியில்லாமல் கொஞ்சமும் வட்டிக்குக் கொஞ்சமும் கடன் கொடுக்க கவர்ன்மெண்டு ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள். சாதாரண பால்காரர்களுக்கும், கோவாபரேடிவ் பால்காரர்களுக்குச் சமமான சௌக்கியத்தை முனிஸிபாலிடியார் ஏற்படுத்தாவிடின் பிரயோஜனமில்லை. பட்டணத்திற்குள் பால் சப்ளையை விருத்தி செய்வதற்கு பதிலாக சுற்றுக்கிராமங்களிலிருந்து சப்ளை ஏற்படுத்துவது லாபகரமாயிருக்குமென்று ரிஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்பட்டு அடுத்த வருஷம் முதல் அப்படி செய்ய உத்தேசித்திருக்கிறார். எருக்கள் வாங்கி விற்க ஏற்பட்ட சங்கங்கள் 6-லிருந்து 14 ஆக அதிகரித்திருக்கின்றன. அவைகள் மொத்தத்தில் 70 ல்க்ஷம் ராத்தல் எருக்கள் வாங்கியிருக்கின்றன. 'நிரா' கால்வாய் பிரதேசத்திலுள்ள கரும்பு சாகுபடிக்காக எரு சப்ளை செய்யும் 'பரமாட்டி சங்கம் அதில்விசேஷ பாகத்தை வாங்கியிருக்கிறது. அதனால் உள்ளூர் விலையைவிட பாரம் ஒன்றுக்கு சராசரியில் இரண்டு ரூபாய் சகாயமாக சங்கங்களால் விற்கமுடிந்தது. எருவை மொத்தத்தில் வாங்க ஒரு சொஸைடி ஏற்படுத்துவது ரிஜிஸ்ட்ராவர்களின் நோக்கத்திலிருக்கிறதாம். பஞ்சை ஐக்கிய பத்ததியில் விற்க 6 சங்கங்கள் ஏற்பட்டன. அவைகளும் முதல் வருஷத்திலேயே 50 லக்ஷம் ராத்தல் பஞ்சுவிற்பனை செய்தன. அவைகளின் பெருமை சரக்கைத் தரம்போல் பிரித்து மிசிரம் செய்யாதிருப்பதில் இருக்கிறது. இப்படிச் செய்ததினால் குறித்த விலையைப் பெற்றது ஒரு அதிசயமல்ல.

வெல்லம் விற்பதற்கு மூன்று சங்கங்கள் தான் இருந்தன. ஆனால் அவைகளில் 80 லக்ஷம் ராத்தலுக்கு மேல் விற்பனையா யிருக்கிறது. இம்மாதிரிச் சங்கங்கள் ஏற்படக் காரணங்கள் இரண்டு. முதலாவது, பகிரங்க ஏல விற்பனையினால் விவசாயிகளுக்கு நல்ல விலையும் உள்ளூர் வியாபாரிகளின் தந்திரங்களுக்குத் தடையும் ஏற்படுகின்றன. இரண்டாவது விற்பனை சொஸைடியும் உள்ளூர் நாணயச் சங்கமும் பரஸ்பர அனுசரணையி லிருக்கின்றன. தன் மெம்பர்களுக்காக அது கரும்பு சாகுபடிசெய்ய, விற்பனைச் சொஸைடி அதற்குக் கடன் கொடுத்து அதன் சரக்குகளை தங்களிடம் விற்பனைக்காக அனுப்பும்படி செய்கிறது. விற்றபிறகு நாணயச் சொஸைடிக்குச் சேரவேண்டிய தொகையை நேராகச்செலுத்திவிடுகிறது. ஆகையால் விற்பனைச் சங்கம் சேருதல் நாணயச் சங்கத்தின் தொழிலுக்கு அதிகப் பதனத்தைக் கொடுக்கிறது. இச்சங்கங்களுக்கு இரண்டு இடைஞ்சல்கள் உண்டு. சங்கத்தின் ஏல விற்பனையினத்தில் போதுமான உள்ளூர் வியாபாரிகள் கிடைக்காமை ஒன்று. வெல்லம் ஏற்றுவதற்குப் போதுமான ரெயில் வண்டிகள் கிடைக்காமை ஒன்று. மேலும் மதராஸ் அண்டு ஸதரன் மாராட்டா ரெயில்வே கம்பெனியார் கோலாபூர் சந்தைக்கு சாமான்போக சுலப வாடகைவிகிதம் கொடுத்திருக்கிறார்கள் என்றும் சடாரா என்னும் பிரிடிஷ் ஜில்லா ஸ்டேஷனுக்கு அந்த சுலப ஏற்பாடு கொடுக்கவில்லை யென்றும் ரிஜிஸ்ட்ராரவர்கள் குறைகூறுகிறார். இம்மாதிரி இடைஞ்சலுக்கு இடமே இருக்கக்கூடாது. இருந்தால் இந்தியா கவர்ன்மெண்டார் அதை சரிப்படுத்துவார் என்பது நமது துணிபு.

பிரஸ்தாப வருஷ ஆரம்பத்தில் இரண்டு "கால் நடை விருத்தி"ச் சங்கங்களிருந்தன அவை ஒன்பதாக விருத்தி யடைந்தன. இச்சங்கங்களின் நோக்கம் என்னவென்றால் ஒரு நல்ல ஜாதிப் பொலிகாளையை வாங்கி ஒரு சம்பள ஆசாமிகையில் ஒப்புவித்து கிராமத்திலுள்ள நல்ல பசுக்களுடன் சேரவிட்டு அவ்வேலைகளை கிரமமாய் ஒரு புத்தகத்தில் குறித்துவைக்கச் செய்யவேண்டியது. சரியான பொலிகாளையில்லாமல் கால்நடை ஜாதிகள் க்ஷீணித்துப் போவதை முன்னிட்டு இம்மாதிரி ஏற்பாடு எங்கும் பரவ வேண்டுமென்பது எங்கள் ஆசை. சங்கங்கள் கூடிய வரையில் மேய்ச்சல் தரைகள் பெறப்பார்க்கின்றன. இந்த ரிபோர்டிலிருந்து கால்நடை இன்ஷியூரன்ஸ் சொஸைடிக்கு கிராக்கியில்லை என்று அறிவது சகஜமாகத் தானிருக்கிறது. சில "மாதிரிச் சங்கங்கள்" இன்ஷியூரன்ஸுக்காக உண்டாக்கி 100-க்கு ஐந்து வீதம் ப்ரீமியம் ஏற்படுத்தி ஒரு வருஷகாலத்திற்கு அபாய ஜாமீனுக்கு ஒப்புக்கொண்டு, ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ரஜிஸ்ட்ராருக்குஅதன்வேலையில்அவ்வளவு நம்பிக்கையில்லை. கொள்ளை நோய்க்கு ஜாமீன் கொடுக்காததினால் இந்தியக்



குடிகளுக்கு கால்நடைஇன்ஷியூரன்ஸ்பிரயோஜனமில்லை. பர்மாவில்இவ்வேற்பாடு அனுகூலமாகக்காரணம் அவிடத்து ஜனங்கள் மாட்டுமாமிசம் தின்னுகிறபடியால் இறந்த எருதுகள்கூடகிராக்கியுடன் விலைபெற்று விடுகின்றன. இந்தியாவில் அப்படியில்லை. வருஷக்கடைசியில் 27 களஞ்சியச் சொஸைடிகளிருக்கின்றனவென்றும், அவைகள் தங்கள் மெம்பர்களுக்கு மார்ச்சு முதல் செப்டம்பர் வரையில் தேவையான தானியங்களை சப்ளை செய்து அடுத்த மாசூலில் 100-க்கு 25 விதம் வட்டியுடன் வசூல்செய்கின்றனவென்றும், கேள்விப்படுகிறோம். அது மேற்குக் கணவாய்களிலுள்ள நாகரீக மற்ற காட்டுச் சாதியாருக்காகத்தான் என்றும் இவ்வேற்பாட்டை அவர்கள் மிகவும் கொண்டாடுகிறார்களென்றும் தெரிகிறது. விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது விதைச் சங்கம். அதன் தொகை 8-லிருந்து 12ஆக உயர்ந்திருக்கிறது. இவ்வினத்தில் முதல் தரம்சங்கம் "கடக்" நகரத்திலுள்ளதென்று கேள்விப்படுகிறோம். அது கோதுமை, யவை, பருத்திக்கொட்டை இவ்விதைகளை சுமார் ரூ. 1,900-க்கு விற்று அதனால் ரூ. 221 இலாபமடைந்திருக்கிறது. பீரார் ஏற்பாட்டைஅனுசரித்து 'காண்டெஷி'ல், அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகளின் நிலத்தில் திருத்தமான பருத்தியை விளைவித்து காலக்கிரமத்தில் பஞ்சைப் பிரித்தபிறகு பருத்திக்கொட்டையை விற்பதற்கு 6 சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இம்மாதிரிச் சீர்திருத்தக்கொட்டைகளின் சப்ளையைவிருத்திசெய்வதனால் அதன் விற்பனையை நாணயச்சங்கங்களின் மூலமாய் வரம்பில்லாமல் அதிகப்படுத்தலாம். இயந்திரங்களை வைத்துக்கொண்டு அவைகளை உபயோகிற சங்கங்கள் சிலவும், கருவிகளை விற்கும் சங்கங்கள் சிலவும் இருக்கின்றன. அவைகளுள் "ஈ வெட்டி"லுள்ள சங்கம் ஒன்றை உதாரணமாகச் சொல்லலாம். அதில் 23 கலப்பைகளிருக்கின்றன. அது அவைகளை நல்ல லாபத்திற்கு வாடகைக்கு விடுகிறது. ஹடாஸ்பர் கரும்பாலைச் சங்கம் 6,000 ரூ. செலவழித்து ஒரு ஆயில் எஞ்சினும் ஒரு கரும்பாலையும் வாங்கியிருக்கிறது. அதில் 70 ஏகர் நிலத்தில் சாகுபடியாகும் கரும்பைச் சாறுபிழியலாம். "மாஹாட்" என்னுமிடத்திலுள்ள சங்கத்திற்கு அரிசிகுத்தும் மெஷின்ஒன்றுஇருக்கிறது. வடகன்னடத்திலுள்ள சிர்சி என்னுமிடத்திலுள்ள சங்கத்தில் தோட்டக்காரர்கள் ஏராளமான பாக்கு ஏலக்காய் வெல்லம் இவைகளைக் கூட்டுறவில் விற்று அதனால் தங்கள் சங்கத்திற்கு ரூ. 500 நிகரலாம் சம்பாதித்தார்கள். உப்பு வியாபாரிகளுடைய சூழ்ச்சியை பேதிக்கும் பொருட்டு 'ஸால்ட் ரெவினியூகலெக்டரின் பிரேரணையின் பேரில்மூன்று வருஷங்களுக்குமுன் ஒரு சங்கம் ஏற்பட்டு அது இந்த வருஷம் வெகு திறமாய் வேலைசெய்து சுமார் 1,43,000 ராத்தல் உப்பு விற்றது.

இச்சங்கங்களின் தொகைகளும் இனங்களும் வெகு திருப்திகரமாயிருக்கின்றன. ஆனால் அநேக உத்தியோக உரிமையில்லாக் கனவான் சனங்கள் மனப்பூர்ணமாய் ஒற்றுமைத்திருக்காவிட்டால் இவ்வளவு திருப்தி ஏற்படாது. மிஸ்டர் யூபாங்கும் அவர்களுடைய உழைப்புகளை தன்னுடைய ரிபோர்டில் விசேஷமாய்க் கொண்டாடி யிருக்கிறார். பிரஸ்தாப வருஷத்தில் இராஜாங்கத்தார் ஒரு கோவாபரேடருக்கு சி. ஐ. இ. பட்டமும் மற்றொருவருக்கு ராவ்பகதூர் பட்டமும், இன்னம் இருவர்களுக்கு ராவ் சாஹேப் பட்டங்களும் கொடுத்து கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். பம்பாய் இராஜதானியைவிட இரண்டுமடங்கு அதிக ஜனத்தொகையுள்ள இந்த இராஜதானியில் கோவாபரேடிவ் சொஸைடிகளையும் வேலைகளின் இனங்களையும் நாம் உத்தியோக முறையில்லாக் கோவாபரேடர்களைக் கொண்டு விருத்திசெய்வது எளிதென்று நினைக்கவேண்டும். அநேகமாய் பம்பாய் மத்திய மாகாணங்கள், ஐக்கிய மாகாணங்கள் இவைகளில் புதுச் சங்கங்கள் ஏற்படுத்தும் வேலையெல்லாம் உத்தியோக உரிமையில்லாக் கோவாபரேடர்கள் கையில்தான் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்விடத்திலோ அநேகமாய் அவ்வேலைகளெல்லாம் டிபார்ட்மெண்டு சிப்பந்திகளினாலேயே செய்யப்படுகின்றன. இக்காரணத்தால் உத்தியோக உரிமையில்லாதவர்களுக்கு பொறுப்பு ஏற்படுகிறதில்லை. மேலும் சங்கங்களை ஏற்படுத்துவதற்காக நியமனமாயிருக்கும் கௌரவ உத்தியோகஸ்தர் இன்னாரென்றுகூட ஜனங்கள் அறிந்துகொள்ள வழியுமில்லை. பம்பாய் மாதிரியை அனுசரித்து அவர்கள் பெயர்களையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட விஸ்தீரணத்தையும் காட்டும் ஜாபிதாஒன்று ரிஜிஸ்ட்ராரவர்களின் ரிபோர்ட்டில் பிரசுரிக்கவேண்டுமென்று நாம் பிரேரிக்கிறோம். இடையில் அவர்களுடைய பிரயாணச் செலவுகளை அதிகப்படுத்தி அதை எளிதாகவும் பெறும்படி செய்யவேண்டியது அவசியம் என்றும் நினைக்கிறோம்.

விவசாய கான்பரன்ஸ்:—கவர்னருடைய அ கிராசனத்தின்கீழ் வழக்கம்போல இவ்வருஷத்திய விவசாயக் கான்பரன்ஸ் கோயம்புத்தூரில் 1918-ம் வருஷம் ஜூலை மீ 11, 12-ம் தேதிகளில் நடைபெற்றது. கான்பரன்சுக்கு இவ்விராஜதானியின் பல இடங்களிலிருந்து அநேக



பெரிய ஜமீன்தார்கள் வந்திருந்தது கவனிக்கத்தக்க விஷயம். கவர்னரவர்கள் இந்தியாவில் விவசாயம் அவசியம் என்பதை பல காரணங்களைக் காட்டி வற்புறுத்தினார். அவைகளுள் பூத தயையை ஆதாரமாகக் கொண்டு உடனே கவனிக்கவேண்டிய காரணம் ஒன்று. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சண்டையினால் அழிக்கப்பட்ட தேசங்களிலுள்ளவர்களும் கலகத்தால் அழிவுண்ட ருஷியா ஜனங்களும் தங்களுடைய ஜீவாதாரமான பயிர்ச் செலவுகளை கவனிக்கும் நிலைமையில் வருவதற்கு இன்னும் பல வருஷங்கள் செல்லும். அவ்விடங்களில் ஆகாரம் அகப்படாமல் சாகும் அநேக ஜனங்களுடைய கஷ்டங்களை கடவுள் கிருபையால் அக்கஷ்ட அனுபவமில்லாமலிருக்கும் தேசம்தான் இரக்கத்துடன் உணவுகொடுத்துத் தீர்க்கவேண்டும். இந்தியா உலகத்திற்கு ஒரு களஞ்சியம். அதுதான் தன் பங்கு உதவியைக் கொடுக்கவேண்டியிருக்கும். மேலும் தன்னுடைய 30 கோடி ஜனங்களைக் காப்பாற்ற அன்னியதேச உதவி உபயோகமில்லை. ஆகையால் இந்த தேசத்தில் விவசாயம் முக்கியமான தொழிலாக இருக்கவேண்டியது அவசியம். இதன் கைத் தொழில் தகுதியான விருத்திக்குவர விளைபொருள்கள் வேண்டும். கோதுமை அரிசி, பஞ்சு, தேயிலை, எண்ணெய் வித்துகள் முதலிய இதன் விளைபொருள்கள், எப்பொழுதும் தங்கள் பொருள்களின் தரத்தை விருத்தி செய்து விலையையும் மலிவு செய்துகொண்டுவரும் போட்டிக் காரர்களுடைய சரக்குகளுடன் போராடவேண்டி யிருக்கிறது. இப்போராட்டம் ஜயமாவதற்கு வேண்டிய ரசாயனவழிகளைக் காட்டிக்கொடுக்கத்தான் விவசாய டிபார்ட்மெண்டு ஏற்பட்டது, என்று இவ்வாறு பேசினார்.

பிறகு ஆக்டிங் விவசாய ரசாயன சாஸ்திரியான மிஸ்டர் ராமஸ்வாமி சிவன் "தென்னிந்தியாவில் கந்தக உபயோகவிஷயம்" என்பதைப் பற்றி ஒரு வியாசம் படித்தார். சரியான எரு இல்லாவிட்டால் அடர்த்தியான கதிர் ஏற்படாது என்றும் கந்தக எருக்களை உபயோகித்துப் பார்த்ததில் விசேஷதானியம் சாகுபடியாகக் கண்டிருக்கிறதென்றும் இது நம் இராஜதானிய திருச்சினாப்பள்ளி ஜில்லாவில்தான் எலும்புகளிலிருந்தும் கந்தகக்கட்டிகளிலிருந்தும் கிடைப்பதோடு மீன் எருவிலிருந்தும் கிடைக்கிறதென்றும் அவர் எடுத்துக் காட்டினார். இதனால் ஏற்பட்ட சம்பாஷணை

யில் நீடாமங்கலம் எரு சொஸைடி, எப்படி கந்தகக் கட்டிகளைப் பிரித்து வேலைசெய்து தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளுக்கு சப்ளைசெய்து உபயோகமான வேலைசெய்கிறது என்பதைக் காட்டப்பட்டது. பிறகு காப்டின் குத்ரீ என்பவர் "தென் இந்தியாதோல்" என்னும் விஷயத்தைப் பற்றிப் படித்த வியாசத்தில், கண்டபடி பதனிடுவதும், கண்டபடி தோலுரிப்பதும்தான் தோலின் விலை 100க்கு 25 முதல் 50 வரையிலும், மாதிரித் தோலின் விலை ரூ. 21 லிருந்து ரூ $9\frac{1}{2}$ வரையிலும், குறைந்ததற்குக் காரணம் என்று காட்டினார். இதை ஒட்டிய பேச்சில் மிஸ்டர் ஹெமிங்வே துரையவர்கள் "தோல் சக்கிலிகளிடம்போன பிறகு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை விவசாயிகள் கவனிக்கிறதில்லை என்றும் அவர்களுக்கு அதில் கவனமுண்டாகும்படி செய்ய ஏதாவது வழியுண்டா என்றும் பிரஸ்தாபித்தார். கவர்னரவர்களும் இந்த இராஜதானிக்கு இக்காரணங்களினால் மாதம் ஒன்றுக்கு $3\frac{1}{4}$ லக்ஷரூபாய் நஷ்டமாகிறது என்றார்.

"விவசாயமும் கோவாபரேஷனும்" என்ற விஷயத்தைப் பற்றிய அடுத்த வியாசம் மிஸ்டர் ஹெமிங்வே துரையவர்களால் படிக்கப்பட்டது. அநேகவித விவசாய சொஸைடிகள் செய்தவேலைகளை எடுத்துக் காட்டி அவைகளின் பயன் திருப்திகரமாக இல்லை யென்று சொல்லிமுடித்தார். அவ்வியாசத்தை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க எண்ணுகிறோம். விவசாயத்திற்கும் ஜீவப்பிராணிகளின் விஷயத்திற்கும் டிப்டி டைரக்டரான மிஸ்டர் கர்ரத் என்பவர் "பால் தயிர் வெண்ணெய் வியாபாரமும் அதன் சீர்திருத்தமும்" என்னும் விஷயத்தைப்பற்றிப் படித்தார். "சென்னபட்டணத்தில் சுத்தமான பால்விற்கும் ஒருவன் ஒரு பசுவின் உபயோகமான 6 வருஷத்தில் சமார் ரூ. 166 நஷ்டமடைகிறான். எருமையில் வரவுக்கும் சிலவுக்கும் சரியாய்ப் போகிறது" என்று தன் அபிப்பிராயத்தை விவரித்துக்காட்டி ஸ்காட்லாந்திலிருந்து ஐர்ஷைர் எருதுகளைக் கொண்டுவந்து ஓங்கோல் பசுக்களோடு கலக்கவிட்டு கறவைகளை விருத்தி செய்யலாம் என்று பிரஸ்தாபித்தார். ஆனால் மிஸ்டர். ஸாம்ப்ஸன் அதை அங்கீகரிக்காமல் ஆப்பிரிக்காவின் தென் கடற்கரைப் பக்கங்களில் இன்னம் திறமான ஜாதி மாடுகள் கிடைக்கும் என்று அபிப்பிராயப்பட்டார். கவர்னரவர்களுக்கு வந்தனத்துடன் கான்பரன்ஸ் கலைந்தது



## கோவாபரேஷனும் விலைவாசி ஏற்றமும்.

கோவாபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரவர்கள் பிரஸ்தாபித்ததின்பேரில், கள்ளிக்கோட்டை, பாலக்காடு முனிஸிபாலிடிகள் தங்கள் தாழ்ந்த வேலைக்காரர்களெல்லாம் சில்லறைக் கடைகளில் சாமான் வாங்கி நஷ்டமடையாமலிருக்க ஒரு ஏற்பாடு செய்து உதவுகின்றன. இப்படியே எஜமானர்களெல்லாம் தங்கள் வேலைக்காரர்களுக்கு உதவவேண்டுமென்பது எங்கள் ஆசை. அந்த ஏற்பாடு என்னவென்றால் ஒரு நாணயமுள்ள வியாபாரியை நியமித்து, வேலைக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் ஞாயமானகணக்குப்படி குறிப்பிட்டதொகை வரையில்வேண்டியசாமான்களை சப்ளைசெய்யச்சொல்லி கணக்கை அனுப்பி சம்பளத் தேதியில் ஆபீசிலிருந்தே பணத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்கிறது. இந்தக் கணக்கிற்குக்கொடுத்ததுபோக மிகுதி யிருப்பதைத் தான் வேலைக் காரர்களிடம் கொடுக்கிறது. இந்தக்குறிப்பிட்ட விஷயத்தில் மாத்திரம் கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படுத்துவதைவிட இவ்வேற்பாடேமேல் என்று அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அபிப்பிராயப் பட்டார். ஏனென்றால் இத்தாழ்ந்த வேலைக்காரர்களால் அம்மாதிரிஸ்டோரை நிர்வகிக்க முடியாது என்பதும் அப்படி சொஸைடி ஏற்பட்டு பணமாகக் கொடுத்தாலும் சாப்பாட்டுச் சிலவுக்கு பதிலாக கள்குடிக்கச் சிலவழித்து விடுவார்கள் என்பதுமே காரணம். பாலக்காடு முனிசிபாலிடியின் வேலையைப்பற்றி சிலாகித்த மதராஸ் மெயில் பத்திரிகை சென்னை முனிஸிபல் கார்பொரேஷனும் தன்னுடைய பொறுப்புள்ள அதிகாரி ஒருவருடைய மேற்பார்வையின்கீழ் தன் வேலைக்காரர்களுக்காக கோவாபரேடிவ் சொஸைடிகள் ஏற்படுத்தி வழிகாட்டவேண்டுமென்று பிரஸ்தாபித்தவிஷயம் எங்களுக்கு, மிகவும் திருப்தியாயிருக்கிறது.

---

## பாளையங்கோட்டை நகர நாணயச்சங்கம்

### 1917—18 வருஷத்திய ரிபோர்ட்டு

சென்ற வருஷத்தில் மகாசபை இரண்டும் நிர்வாக சபை நாற்பத்தி மூன்றும் நடைபெற்றன. ஆனால் இரண்டு நிர்வாக சபையில் போதுமான அங்கத்தினர் ஆஜர் ஆகாததால் வேலை ஒன்றும் நடைபெறவில்லை

இதற்கு முந்தின வருஷம் ரூ. 39,244—3—0 பெறுமான 67 டிபாஸிட்டுகள் வரவு. இவ்வருஷம் வரவு ரூ. 39,026—13—0 பெறுமான எழுபத்தேழு டிபாஸிட்டுகள். இந்த சங்கத்தின் மெம்பர்களின் டிபாஸிட்டுத் தொகைமொத்தம், மெம்பர் அல்லாதாரின் டிபாஸிட்டுத் தொகையைவிடக் கொஞ்சம் அதிகம். ரிகரிங் டிபாஸிட்டுகளும் கறண்டு டிபாஸிட்டுகளும் அதிகப்படவில்லை. பிரஸ்தாப வருஷத்தில் 26 கணக்குகள்தான் கறண்டு டிபாஸிட்டில் அதிகப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்தின வருஷத்திலோ 43 கணக்குகள் அதிகப்பட்டிருந்தன.

முன் வருஷம் ரூ. 26,048 இருநூற்று பதினைந்து கடன்களாக பட்வாடாகியிருக்கிறது. இந்த வருஷம் ரூ. 31,894 இருநூற்றுநாற்பத்தைந்து கடன்களாக பட்வாடா செய்யப்பட்டிருக்கிறது. பிரத்தியேகமாய்த் தயாரிக்கப்பட்ட அட்டவணைகளிலிருந்து கடன்களின் தரமும், ஜாமின்களின் விபரமும், கடன்களின் காரியமும் ஒவ்வொரு பாபத்தில் பட்வாடா செய்யப்பட்ட கடன்களின் எண்ணமும் தொகையும் தெரியவரும். கடன் பாக்கிக்காரர்களுடையவும் அல்லது அவர்கள் ஜாமீன் பேரில் கேட்கப்படுகிறதுமான கடன் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா என்ற நிபந்தனையை நிர்வாக சபையார் கண்டிப்பாய் இன்னும் அனுசரித்துவருகிறார்கள். இச் சங்கம் இவ்விஷயத்தை விசேஷமாய் கவனித்துவருகிறதினால் பட்வாடா செய்யப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் தொகையும் அவ்வளவு அதிகப்படவில்லை. ஆனால் அங்கத்தினர்க்குள் உண்மையான கூட்டுறவு உண்டாக்குவதில் இது வெகு பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது.

சென்ற வருஷக்கடைசியில் 31 வாய்தா கடந்த கடன்கள் இருந்தன. அவைகளின் மொத்தத் தொகை ரூ. 1,628—4—11. ரிகரிங்கு டிபாஸிட்டு மூலமாய் வாபஸ் செய்யவேண்டிய கடன்களில் எண்பது கணக்குகள், 4 மீத்துக்கு மேல் பணம் செலுத்தாததால் முடிவு செய்யப்பட்டவைகளும் இதில் சேர்ந்திருக்கின்றன. பின்னால் நாளது தேதி வரையில் வசூலான தொகை ரூ. 411. பாக்கி ரூ. 1217—4—11.

மூன்று வியாச்சியங்கள் சென்ற வருஷம் தொடுக்கப்பட்டதில் ஒன்று வருஷம் முடியுமுன் டிக்ரிசெய்யப்பட்டது. இரண்டு பாக்கியில் இருந்தன. முன் வருஷங்களில் செய்யப்பட்ட டிக்ரிகள் சேர்ந்து



மொத்தம் ஆறில், மூன்று டிக்ரிகள் தீர்ந்துபோயின. இன்னும் மூன்று டிக்ரிகளுக்கு உள்ள பணம் வசூலாகவேண்டியிருக்கிறது.

கவர்ன்மெண்டாரால் கணக்கு தணிக்கை செய்யப்பட்டு, தொகைகள் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. நாளது வருஷத்து நிகர லாபத்தில் அதாவது ரூ. 1673—9—10ல் கால் பங்கு அல்லது ரூ. 418—6—6 க்ஷேமநிதியோடு சேர்க்கப்படவேண்டும். இருபதில் ஒரு பங்கு அல்லது ரூ. 83—10—10 லைபிரரி, ரீடிங் ரூம் முதலிய வகைக்குள்ள பொது நன்மை நிதிக்குச் சேரவேண்டியது. பாக்கி இருக்கிற ரூ. 1171—8—6 பங்குத் தொகைக்கு ஈவித்துக்கொடுக்கிற டிவிடெண்டுக்குக் கொடுபடலாம். ஆனால் சட்டப்படி முக்கால் வட்டிக்கு அதிகப்பட்ட தொகை க்ஷேமநிதியைச் சேரவேண்டியது. முன் வருஷங்களின் கணக்குகளில் வசூலாகவேண்டிய வட்டித் தொகை அவ்வருஷத்து லாபத்தில் சேர்க்கப்படவில்லை. இவ்வருஷம் கணக்குப் பரிசோதனை செய்த உத்தியோகஸ்தர் புதிய ஏற்பாட்டின்படி சேர்த்திருக்கிறார். ஆகையால் நமது சங்கத்திற்கு இவ்வருஷம் திருநெல்வேலிப் பாலத்துச் சங்கம் பிரிந்ததினால் லாபம் குறைந்தும்கூட பங்குத்தொகைமேல் நூற்றுக்கு வருஷத்துக்கு ஒன்பது வீதம் கணக்கிட்டு டிவிடெண்டு பட்டுவாடா செய்யப் போதுமான லாபம் கிடைத்திருக்கிறது

நமது செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் செய்த சிபார்சின்படி மகாசபையாரின் அநுமதியை எதிர்நோக்கி சென்னைசென்ட்ரல் அர்பன் பாங்கில் பங்குஒன்றுக்கு நூறு ரூபாயுள்ள ஐந்து பங்குகளை இந்தச் சங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. தென் இந்தியா கத்தோலிக், குடும்பப் பாதுகாப்பு நிதி, நமது சங்கத்தில் ரூ. 11,000-க்கு மேல் டிபாஸிட்டிலிருந்தது. ஆனால் அந்நிதி முறிவடைந்து விட்டபடியால் ஷை டிபாஸிட்டை வாபஸ் செய்யவேண்டியிருந்தது. மூன்று வாரத்துக்குள் ஷை தொகை பூராவையும் நமது சங்கம் யாதொரு கஷ்டமுமின்றி வாபீஸ் செய்துவிட்டது. சென்ற வருஷம் மகாசபையில் திருநெல்வேலி முனிசிபாலிடி நமது வியவகார எல்லையினின்றும்விலக்கப்பட்டது. நீக்கப்பட்ட எல்லையில் திருநெல்வேலிப் பாலச்சங்கம் ஒன்று நடைபெற்று வந்தது. அதன் வியவஹார எல்லையில் வசித்தவர்களில் பலர் நமது சங்கத்தின் அங்கத்தினராய் இருந்தனர். ஆகையால் ம-ா-ா-ஸ்ரீ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அப்பேர்ப்பட்டவர்களை மாற்றி விடும்படி ஏற்பாடு செய்து 1—10—17 யோடு கணக்கு முடிவுகட்டிவிடும்படி உத்திரவு

செய்தார்கள். அதன் பிரகாரம் நமது கணக்குகளில் இந்த சர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்களால் ஷை மாறுதல்கள் 7—10—17ல் செய்யப்பட்டன. மாற்றும் மெம்பர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களையும் ஷை திருநெல்வேலிப் பாலம் சங்கத்திற்கு மேடோவர் செய்து கொடுத்து, ஷை சங்கத்துடன் கணக்குகளை தீர்த்து ரூ2394—3—0க்கு பி. ருமிஸேரி நோட்டு எழுதி வாங்கிக்கொள்ளப்பட்டது. 296 பங்குகள் எடுத்திருந்த 81 அங்கத்தினரை ஷை சங்கத்திற்கு மாற்றவேண்டியிருந்ததினால் அவர்களுடைய பங்குத் தொகை ரூ1585-ம் அதே சங்கத்திற்கு மாற்றப்பட்டது.

நமது சங்கம் ஒரே ரீதியாய் விருத்தியடைந்து வருகிறதினால் இந்த மாறுதல்களெல்லாம் அதன் வேலையை சரிவர நடத்துவதில் யாதொரு விதமான கஷ்டத்தையும் உண்டாக்கவில்லை.

---

## அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரின் 1918-ம் வருஷத்திய 530-ம் நெ. ஸர்க்குலர்.

கூடலூர் செக்ஷன் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லா ஐக்யசங்கங்களுக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால்:—

உங்களுடைய சங்கங்களின் க்ஷேமநிதிகள் தஞ்சை டிஸ்டிரிக்டுபாங்கில் டிபாசிட்டாக வைக்கப்பட்டிருக்கின்றனவல்லவா? அதற்குண்டான வட்டியை வருஷாவருஷம் இதுவரையில் அந்த க்ஷேமநிதி டிபாசிட்டுடனேயே டிஸ்ட்ரிக்டு பாங்கு சேர்த்துக்கொண்டு வந்தமையால் அடுத்தவருஷங்களில் நீங்கள் அனுப்பவேண்டிய க்ஷேமநிதியை அப்படி வட்டியை சேர்த்ததினால் அதிகமாயிருக்குந்தொகை அவ்வளவுகுறைத்து அனுப்பிவந்தீர்களல்லவா? அம்மாதிரி செய்வதில் சங்கங்களுக்கு அனாவசியமான வட்டி நஷ்டமும் அசௌகரியமுமிருப்பதை நிவர்த்திக்க டிஸ்டிரிக்டு பாங்கி டைரக்டர்கள் ஷை வட்டியை ஏற்கனவே கடன்வாங்கியிருக்கும் சங்கங்ளுக்கு அகைளால் வரவேண்டிய, (1) கெடுவு கடந்த வட்டி. (2) கெடுவுகடந்த அசல் (3) கெடுவு ஏற்படாத அசல் இந்த வரிசையாய் அந்த வருஷம் ஜூன்மீ 30உயிலேயே அல்லது அடுத்த ஜூலைமீ 1உயிலாவது முஜராகொடுப்பதாயும் கடன்வாங்கியிராதசங்கங்களின் வட்டியை ரொக்கமாக ஷை சங்கங்களுக்கு ஷை தேதியில் அனுப்பிவிடுவதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படி முஜராவைக்கப்பட்ட கேசில் அந்த விவரங்கண்ட ரசீது உங்களுக்குகிடைக்கும். அந்த உங்கள் கணக்குகளில் எந்த தேதியில் முஜரா வைகக்ப் பட்டிருக்கிறதோ அதே தேதியிலேயே முஜராவைத்துக் கொள்ளவேண்டும்.



## * கம்போடியா பருத்தி சாகுபடி.

கம்போடியா பருத்தி என்பது அமெரிக்கா பருத்தி என்று இந்தப் பக்கங்களில் சொல்லப்படுகிறது, இது முதலில் கொச்சின் சைனா தேசத்திலுள்ள கம்போடியா தேசத்திலிருந்து கொண்டுவரப் பட்டபடியால் கம்போடியா பருத்தியென்று பெயர் வழங்குகிறது. நம் நாட்டில் நாட்டுப்பருத்தி, உப்பம்பருத்தி, லாடம்பருத்தி என்று பல பெயர் கொண்ட ஒருவித பருத்தி வெகுகாலமாய் திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் பயிரிடப்படுகிறது. இதற்கும் கம்போடியா பருத்திக்கும் வித்தியாசமுண்டு. கம்போடியா பருத்தி பூமிக்கு ஆறங்குலத்திற்குள்ளே மேல்பாகத்திலேயே வேர் ஓடும். நாட்டுப்பருத்தியோ $1\frac{1}{2}$ அடி ஆழம் பூமியில் செல்லுகிறது. ஆகையால் கம்போடியா பருத்தியானது ஈரம் தேவையானதாயும் நாட்டுப்பருத்திக்கு அவ்வளவு நீர்ப்பாய்ச்சலாதாரம் தேவையில்லாமலு மிருக்கும். தவிர படையிலுள்ள ஈரம் மற்ற பயிர்களுக்கு சாதாரணமாய் எடுபட்டுப் போவதால் எருபோட வேண்டியது அவசியமாவதுடன் எருவும் சீக்கிரம் பலன்தரக் கூடியதாயிருக்கவேண்டும். ஆகவே கம்போடியா பயிர் வடிகால் வசதியுள்ள நீர்பாய்ச்சலுள்ள விடங்களில் சீக்கிரம் கலக்கக்கூடிய எருக்களைச் சேர்த்து பயிர் செய்யவேண்டும். செடிகளுக்கு நடுவே $2\frac{1}{2}$ முதல் 3 அடி விசாலமிருக்கும்படி விதைக்கவேண்டும். இதைச் செய்வதற்கு உபாயம் நாட்டுக்கலப்பையால் தெற்கு வடக்காய் $2\frac{1}{2}$ அடிமுதல் 3 அடிக்கு ஒரு சாலும், கிழக்குமேற்காய் $2\frac{1}{2}$ முதல் 3 அடிக்குஒருசாலும், போட்டு இருபுறமும் சேருமிடத்தில் அரை அடி ஆழத்தில் ஒரு குழி பரித்து அதில் 3 விதைகளை ஒரு அங்குல ஆழத்திற்குள் ஊன்றவேண்டும். இப்படிச் செய்வதால் கம்போடியா செடி வளமாய் பரவி வளர இடமாவதுடன் எருவிடுவதற்கு செடிக்கேற்றபடி போடவும் வேண்டியபோது பயிருக்கிடையே களையெடுக்கவும் நீர்பாய்ச்சவும் சௌகரியமாயிருக்கும். விதைப்பதற்கு முன் ஏகர் ஒன்றுக்கு 250 இராத்தல் தோல் உடைத்த முத்துக்கொட்டைப் பிண்ணாக்கை தூள்செய்து விதையுடன் கலந்தாவது தனியாயாவது விதைக்கும் சமயத்தில் எருவிடவேண்டும். முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு எருகிடைக்காவிட்டால் இதர எருக்களும்உபயோகிக்கலாம். செடி அரையடி ஆகுமுன் வளமான ஒன்றை நிறுத்திக்கொண்டு மீதி இரண்டு செடிகளையும் பேர்த்தெரியவேண்டும். பயிர்செய்த 15 தினங்கள் வரையில் சொற்ப ஈரம் இருந்து பிறகு மழை பெய்தாலும் குற்றமில்லை.

---

* விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் ம-ா-ா-ஸ்ரீ செல்வரங்கராஜூ அவர்கள் கம்போடியா பருத்திசாகுபடி விஷயமாய் திருவண்ணாமலை தாலூக்கா கோவாப்பரேடிவ் கான்பரன்ஸில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

ஆனால் காய்பிடிக்கும் காலத்திலும் காய்வெடிக்கும் காலத்திலும் மழையிருந்தால் கள்ளங்காயாய் பலன் குறைவுபடும். ஆதலால் பயிர் செய்யும் பட்டமானது மாசூல் உற்பத்தியாகும் காலத்தில் மழையில்லாத காலமாயிருக்கவேண்டும். அதாவது இந்த தாலூக்காவில் ஆவணிமாதக் கடைசியில் விதைக்கவேண்டும். ஆவணி மாதத்தில் மழை வசதியின்றி விதைகள் விதைத்து முளைக்க சௌகர்ய மில்லாவிட்டால் பாய்ச்ச லாதாரத்திலிருந்து தண்ணீர் குழிகளுக்கு இறைத்து அதினின்று குடங்களால் விதைக்கத் தயாரித்திருக்கும் குழிகளுக்கு விதை யூன்றியபின் தண்ணீர் ஊற்றவேண்டும். இப்படி தண்ணீர் வேண்டியமட்டும், குடம் தண்ணீரே பயிர்கள் மொக்கு காட்டும்வரைகூட ஊற்றலாம். மாசிமாதத்தில் காய் சேகரம் செய்யும் காலம்வரும். பருத்திச்செடி நிலவளத்துக்கு தக்கபடியும், செய்நேர்த்திக்குத் தக்கபடியும் பலனைக்கொடுக்கும். நஞ்சை நிலங்களில் பருத்தி பயிர் செய்வது உசிதமல்ல. ஆனால் புஞ்சையில் நஞ்சை என்னும் வடிகால் வசதியுள்ள இறைப்பு நிலங்களில் செய்யலாம். ஒரு ஏகருக்கு பத்து இராத்தல் எடையுள்ள பருத்திவிதை போதுமானது. விதை ஒரு அங்குலத்திற்குக்கீழ் நடக்கூடாது. பயிர் வளரும்போது களைகள் சேராமல் பார்ப்பதோடு வேர்கள் மேல்பக்கம் ஓடுமாதலால் மண் அணைவைக்கவேண்டும். பயிர்கள் வரிசை வரிசையாய்ப் போட்டிருப்பதாலும் பயிர்களுக்கு இடையே போதுமான இடம் இருப்பதாலும் பயிர் செய்பவர்களுக்கெல்லாம் ஏக காலத்தில் களையெடுக்க ஆள்கள் தேவையாயிருக்குமாதலாலும் இக்களை வெட்டுதற்குப்பதிலாய் கலப்பைகட்டியே பயிர்களுக்கு இடையே பயிர் ஓட்டுவதைப்போல் ஓட்டவும் செய்யலாம் இப்படிச் செய்வதால் களைவெட்டும் செலவும் குறையும்.

பிறகு பருத்தி வெடித்தபின் காய் எடுக்கும் காலத்தில் அடியிற்கண்டவைகள் கவனிக்கப்படவேண்டும். ஏனென்றால், பருத்தியின்மேல்மூடியிருக்கும் தோலானது வெயிலில் உலர்ந்தால் பருத்தி எடுக்கும்போது தூளாய் பருத்திக்காயில் ஒட்டிக்கொள்ளும். அப்படி ஓடு ஒட்டின பருத்திக்கு விலைமதிப்பு குறையும். ஆதலால் பருத்திக்காயில் வேறு தூசிகள் சேராமல் சேகரம் செய்யவேண்டும். சேகரம் செய்பவர் இரண்டு தோள்களிலும் இரண்டு பைகள் போட்டுக்கொண்டு ஒவ்வொரு செடியாய் சேக



ரம் செய்கையில் கொஞ்சம் மெலிவடைந்து நிறம்மாறி சிறுத்திருக்கும் காய்களின் பருத்தியை ஒரு பையிலும் சுத்தமான காய்ப்பருத்தியை மற்றொரு பையிலும் போட்டு தனித்தனியே காயவைத்து மூட்டையையும் தனித்தனியே கட்டவேண்டும். இதைவிட்டு நல்ல காய்களுடன் சில பழுப்பானவற்றை சேர்த்தால் கூட மொத்தத்திற்கும் அதிகவிலை குறைந்துவிடும். பருத்திக்காயின் மேல்ஓட்டை சிலர் பருத்தியை எடுத்துக்கொண்டவுடன் செடியிலேயே விட்டுவிடுகிறார்கள். இதனால் ஷை ஓடு செடிக்குப்போகும் சத்தை வீணில் கிரகிப்பதுடன் பூச்சி புழுக்கள் சேர்ந்து செடிக்கு நோயுண்டாக்குகிறது. இந்த மேலோட்டையும் உடனே சேகரம் செய்துவிடவேண்டும். இதுகூட சில விடங்களில் மாட்டுக்குத் தீவனமாய் உபயோகிக்கப்படுகிறது. மாசூல் ஒன்று சேர்த்தவுடன் கிராமத்திலுள்ள மாசூல்களை இராசிப்படி ஒன்றுசேர்த்து நல்ல விலைபோகக்கூடிய மார்க்கட்டுக்கனுப்பி விற்று கிடைக்கும் தொகையை அவரவர்களுக்குப் பட்வாடா செய்யலாம். இப்படி செய்ய ஐக்கிய சங்கங்கள்தான் லாயக்கானவைகள். தங்கள் மெம்பர்களின் மாசூல்களை ஒன்று சேர்த்து மொத்தமாய் விற்பனைசெய்ய சங்கங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். தவிர சங்கங்களில் மெம்பர்கள் எவ்வளவு விஸ்தீரணம் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிவித்தால், விவஸாய இலாகாவில் அவ்வப்போது பார்த்து வேண்டிய உதவியும் செய்வார்கள். இந்த ஏற்பாடுகளை விட்டு பருத்தி விதைகளை செய்நேர்த்தி இல்லாதமேடுகளில் வீணாய் விதைத்து பிறகு தக்க பலன் காணாமல் பருத்திப் பயிரையும் விவஸாய இலாகாவையும் பழிசொல்வதில் பலனில்லை. இந்த கம்போடியா பருத்தி சாகுபடியாகும் காலத்தில் இவ்விதைகளுடன் தவறி கலந்திருக்கும் மற்றவகைப் பருத்திச்செடி காணப்பட்டால், அவைகளை நீக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் அந்த தினுசு மாசூலில் சேர்வதால் இந்த உயர்தரமான பருத்தியின் விலையை குறைத்துவிடும்.

N. B. பருத்தியை விதைக்குமுன் விதையை செம்மண்ணையும் சாணத்தையும் சமமாய்ச் சேர்த்து குழம்பாய் கரைத்து ஒரு கெட்டித் தரையில் கரைத்த குழம்பில் விதையைப் பிசைந்து நன்றாய் தேய்த்தால் விதைகள் ஒன்று சேராமல் தனித்தனியாய்விடும். இதை சற்று உலர்த்தின பிறகு எடுத்து விதைக்கவேண்டும். இப்படிச் செய்வதால் விதை

கள் ஒன்றுசேராமல் தனித்தனியாய் விதைக்க சௌகர்யமாயிருக்கும். இப்படி தயார் செய்வது விதைக்கும் தினத்திலாவது அதற்கு முந்தின நாளாவது இருக்கவேண்டும்.

---

# சென்னையில் ஐக்கிய முயற்சி

(431-ம் பக்கத்தொடர்ச்சி)

தொழில் தனத்தில் மூன்றில் இரண்டு பாகம் சொந்தப்பணமாயும் மற்றது கடன் வாங்கின தொகையாயும் இருந்தால் நிச்சயமாய் நல்ல நிலைமையில்தான் இருக்கும். இவ்விஷயத்தில் நாம் சரியான வழியில் போகவில்லையென்றும் ஒரு சொஸைடி மிக்க அதிகமாய் வாங்கக்கூடிய கடன் அதன் மெம்பர்களின் ஜவேஜியில் 8-ல் ஒன்று என்று நிர்த்தாரணம் செய்வதற்கு பதிலாக அது கொடுத்திருக்கும் பங்குத் தொகையில் இவ்வளவில் ஒரு பங்கு என்று மேற்குறித்த கணக்கை அனுசரித்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. கடன் வரை அளவுள்ள டவுன் சொஸைடிகளின் விஷயத்தில் இவ்வேற்பாடு அனுசரிக்கப்பட்டு அதனால் கடன் வாங்க எளிதாவதற்குப் பங்குத்தொகை சீக்கிரம் அபிவிருத்தியாகும்படியான அனுகூலத்தை அடைந்திருக்கிறது.

மூன்றாவது, ஒவ்வொரு மெம்பரும் தன் டிவிடெண்டுப் பணத்தை சொஸைடியில் புதுப்பங்குகள் வாங்க உபயோகிக்கவேண்டுமே ஒழிய வீட்டிற்குக்கொண்டு போய் வீண் செலவுசெய்யக்கூடாது என்பதைக் கட்டாயப்படுத்தும் சட்டமாய் ஏற்படுத்துவது அவசியம். இச்சட்டம் பஞ்சாபில் வழங்கிவருகிறது. அதனால்தான் அந்த மாகாணத்தில் இவ்வினத்திய இலக்கம் உயர்ந்திருக்கிறது.

கடைசியாக சொஸைடிகள் மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டி விகிதங்களை அதிகப்படுத்துவது உசிதமாகும். தற்காலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு 1½-தம்படி வீதம் வட்டி இருக்கிறது. இந்த வட்டி விகிதமானது பணக்காரர்களை சங்கத்தின் ஒழிவாராமற் செய்யக்கூடிய அவ்வளவு அதிகமில்லை. இந்தக் காரணத்தால்தான் ஒரு மெம்பர் சொஸைடியில் சம்பந்தப்பட்டிருக்கும் காலம் முழுவதும் கடனாளியாகவே இருக்கிறான். நான் அபிப்பிராயப்படுவது என்னவென்றால், ரூபாய் ஒன்றுக்கு 2 தம்படியாகவட்டியை உயர்த்தி தற்கால விகிதத்திற்கும் உயர்த்தப்படும் விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தையாவது அதில் ஒரு அம்சத்தையாவது வருஷா வருஷம் பங்குகளிலாவது அல்லது சொஸைடியில் நீண்டகால டிபாஸிட்டிலாவது வைத்தால்தான் திருப்பிக்கொடுக்கலாம் என்பதே. அநேகமாய் இந்தப் பிரேரணை பல



மாய் எதிர்க்கப்படும். ஆனால் இது எவ்வளவு சௌகரியம் என்றும் எப்படி வேலை செய்யக்கூடும் என்றும் ஆலோசிக்கத் தக்கது.

## க்ஷேமநிதி.

சென்ற கோவாபரேடிவ் வருஷத்தில் சென்ட்ரல் சொஸைடிகளிலும் விவசாயமில்லாச் சொஸைடிகளிலும் மாத்திரம் தான் கூட்டப் படும்படியான தொகைகள் இருந்தன. ஆனால் விவசாயச் சொஸைடிகளில், லாப நஷ்டத்தலைப்பின்கீழ், கழிக்கவேண்டிய தொகைகள் தான் விசேஷமாயிருக்தன. இதனால் க்ஷேமநிதி இயற்கையாய் பாதிக்கப்படுகிறது. இதர மாகாணங்களெல்லாம் கிரமமாக க்ஷேமநிதியை விருத்திசெய்து கொண்டுவர, சென்னையிலுள்ள நாம் இருபுறமும் வர்த்தியை எறிக்கும் ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கிறோம். சொஸைடிக்கு குறித்தகாலத்தில் சேரக்கூடிய வட்டியை கணக்கில் விலக்கவும், ஆனால் சொஸைடியால் குறித்த காலத்தில் கொடுபடவேண்டிய வட்டியைச் சேர்க்கவும் இடங்கொடுத்ததாலும் பொறுப்பு வரையில்லாச் சங்கங்களுள் நிகர லாபங்களில் பாதியை பங்குக்காரர்களுக்கு வீதப்படி பகிர்ந்துகொடுக்கலாம் என்கிற புது கவர்ன்மெண்டு உத்தரவினாலும் நமக்குபலமான க்ஷேமநிதியைச் சேர்க்கும் சக்தி உண்டாவது மிகவும் அருமையாயிருக்கிறது. க்ஷேமநிதியானது தனியாய் வைக்கப்பட வேண்டியதா அல்லது சொஸைடியின் தொழில் தனத்துடன் கலக்கலாமா என்னும் சங்கை தவிர, பலமான க்ஷேமநிதி சொஸைடிக்கு விசேஷ பலத்தையும் மதிப்பையும் தருகின்றது என்னும் விஷயத்தை ஒருவராலும் மறுக்க முடியாது. அதிலும் பொறுப்பு வரையில்லாச் சொஸைடிகளுக்கு இது அதிகப் பயன் என்பதை உணர்ந்து இவ்வியக்கம் நல்ல மார்க்கத்தில் முன்னுக்கு வருவதே நோக்கமாகக் கொண்ட ஒவ்வொருவரும் க்ஷேமநிதி விருத்தியாகும் மார்க்கங்களைத் தடைப்படுத்தாமல் சௌகரியமாயும் சீக்கிரமாயும் வளருவதற்கு வேண்டிய காரியங்களை ஆதரிக்க ஏற்பட வேண்டும்.

## தவணைமீறின கடன்கள்.

விஷய ஏற்பாட்டின் கிரமப்படி கடைசியாய் கவனிக்கவேண்டிய பாகம் தவணைமீறின கடன்களைப் பற்றியதுதான். தவணைமீறின கடன் என்றால் ஏற்படுத்தப்பட்ட காலத்திற்குள் கொடுக்காமலும், அக்காலத்தை அதிகப்படுத்த சரியான உத்தியோகஸ்தரிடமிருந்து அனுமதிபெறாமலும் இருக்கப்பட்ட தொகை. இவைகள் விஷயமாய் நம் விவசாயமில்லாச் சொஸைடிகள் ஒழுங்காக நடந்திருப்பதினால் அவைகளில் குற்றங்கூற இடமில்லை. ஆனால் நமது விவசாயச் சொஸைடிகளின் இவ்வினத்திய இலக்கங்களை யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. கீழ்க்

காட்டிய ஜாப்தாவில் மெம்பர்களால் கொடுபடவேண்டிய கடன் பாக்கிகளும், அதில் தவணைமீறின தொகைகளும் அந்தந்த மாகாணங்களுக்கு நேராக ஆயிரக்கணக்கில் காட்டப்பட்டிருக்கின்றன :—

| மாகாணத்தின் பெயர். | தனிமெம்பர்களால் கொடுபட வேண்டிய கடன்கள் (ஆயிரக்கணக்கில்.) | அவைகளில் தவணை மீறியது (ஆயிரக்கணக்கில்.) | நூற்றின் அம்சம் |
|---|---|---|---|
| மதருஸ் ... | 7921 | 1,164 | 15 |
| பம்பாய் ... | 4,775 | 342 | 7 |
| பங்காளம் ... | 5,553 | 1,715 | 30 |
| பீகாரும் ஒரிஸ்ஸாவும் ... | 1,772 | 613 | 35 |
| ஐக்கிய மகாணங்கள் ... | 4,391 | 2,151 | 49 |
| பஞ்சாப் .. | 11,743 | 1,354 | 11 |
| பர்மா ... | 6,802 | ,, | ,, |
| மத்திய மாகாணங்கள் ... | 4,374 | 495 | 11 |

நமது நிலைமை இதர மாகாணங்களில் சிலவற்றைப் போல அவ்வளவு தாழ்மை அன்று என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் சீர்திருத்தப் படவேண்டிய அம்சம் வெகுவாகவிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். நூற்றின் அம்சம் குறைவாகவிருக்கிற பம்பாய், பஞ்சாப் மாகாணங்களை நாம் பின்பற்றுவது நலம். இவ்வித தவணைத்தவறுதல்களுக்கு காரணங்கள் பலவுள. அவைகளைத் தொகுப்பதும் கடினம். என்றாலும் அவைகளுள் சிலவற்றைக் கீழே காட்டி அவைகளுக்கு சாத்தியமான உபசாந்திகளையும் சொல்கிறேன்.

அவைகளுள் முதன்மையானது, கடன் வாங்குபவரின திருப்பிக் கொடுக்கும் சக்திக்குத் தகுந்தபடி, கடன்கள் ஏற்படுத்தப் படுவதில்லை; அது பஞ்சாயத்தார்களுடைய தெரியாத்தனம், அல்லது அலக்ஷியபுத்தி. மேலும் கடன்மனுவில் காட்டப்படும் காரணத்தைத் தீரவிசாரிக்கிறதில்லை. திருப்பிக் கொடுக்கும் ஏற்பாடுகளையும் தவணைகளையும் மெம்பர்களின் சௌகரியத்தை அனுசரித்துச் செய்கிறதுமில்லை. இவைகளிலெல்லாம் வெகு ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது. என் அனு



பவத்தையொட்டியவரையில் ஒரு பஞ்சாயத்தும் இவ்வித தீவிரவிசாரணைசெய்கிறதில்லை. ஏனென்றால், ஜனங்களுடைய ஆதரனை குறைந்து அல்லது பஞ்சாயத்து மெம்பர்களுள்ளேயே இதேபரிசோதனை ஏற்பட வேண்டியிருந்தால் தய்களுடைய பக்ஷபாதத்தைக் காட்டிவிடுமோஎன்ற சந்தேகமே ஆனால் கடன்கொடுக்கும் காலத்தில் தகுந்த முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள்எடுத்துக் கொள்ளப்பட்டால் தவணை மீறின துகைகள் விசேஷமாய்க் குறையும் என்பது என் அபிப்பிராயம்.

நாம் கவனிக்க வேண்டிய் அடுத்த விஷயம் என்னவென்றால், ஏற்பட்ட காலவரையை நீடிப்பிக்க அருகமான யிடங்களில்கூட பஞ்சாயத்தாராவது வேறு யாராவது அப்படி அனுமதி கொடுக்க பைலாக்களில் இடமில்லை. சட்டத்தில் "காலநீடிப்பே கொடுக்கமுடியாது" என்றிருக்கிறது. இப்படி மெம்பர்களை நடத்துவது அநியாயம் என்றும் சொஸைடிக்கே ஒருவாறு குறைவு என்றும் என் அபிப்பிராயம். கடன் வாங்குபவனுடைய சக்தியையும் இஷ்டத்தையும் ஏற்பாட்டையும் மீறின அநேக விலக்கமுடியாச் சம்பவங்கள் நேருகின்றன. அப்பொழுது காலநீடிப்பும் அவசியமாகிறது. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு விஷயத்தை நியாயமாய் பஞ்சாயத்தார் கவனிக்க முடியாது என்ற அவநம்பிக்கை யிருந்தால், அது யாராவது அன்னியனால் கொடுக்கப்பட வேண்டும். காலநீடிப்புக்கு அனுமதி கொடுத்திருந்தால், இப்பொழுது காணப்படுவது போல் அநேக இலக்கங்கள் காலங்கடந்த கடன் என்னும் தலைப்பின்கீழ் ஏற்பட முடியாது. மேலும் இத்தலைப்பில் காணப்படும் தொகை தவணைபாக்கியை மாத்திரம் காட்டுகிறதில்லை. பாக்கியிலிருக்கும் முழுத்தொகையையுமே! இவ்விஷயத்தைப்பற்றி கூடியவரையில் பைலா அவசரமாய் சீர்திருத்தப் படவேண்டுமென்று கோரப்படுகிறது.

மற்றொரு விஷயம் மிகவும் ஊர்ஜிதமாய் கவனித்தற்பாலது. அநேக சொஸைடிகளை அதி நுட்பமாய் விசாரித்ததின்பேரில் பணம் திருப்பிக் கொடுப்பதில் தவணைத் தவறுதல்ஏற்பட முக்கியகாரணம், சொஸைடியினால் மெம்பர்களுடைய எல்லா பணத் தேவைகளையும் திருப்தி செய்யச் சக்தியின்மையே யென்று தெரிந்தது. ஒரு சொஸைடி தன் மெம்பருக்கு அவன் பழைய கடனைத் தீர்ப்பதற்கோ, விவசாயச் செலவுக்கோ, நிலங்களின் சர்க்கார் கிஸ்தியைக் கொடுக்கவோ, சில சமயங்களில் குடும்பம் அல்லது கலியாணச் செலவுகளுக்கோ, கடன் கொடுக்கின்றது. ஆனால் தேவை முழுவதும் இந்த ஜாபிதாவுக்குள் அடங்கிவிடவில்லை. சில எதிர்பாராதசெலவுகளாகவும் இருக்கும், மற்றும்சில, பல இதர நிலைமைகளுக்கு உபகரணங்களுமாகும். வெகு அவசரச் சிலவுசில இருக்கும், அதை நிறுத்திவைக்கவே முடியாது. பாங்கியிலிருந்து பணம்வரும்வரை

யில் கார்க்கமுடியாது. அநேக இனங்களில் அவன் பொருமானத்திற்கு
மீறி ஏற்கனவே கடன் வாங்கி யிருப்பான். பஞ்சாயத்தார் மெம்பர்களுக்
குக் கடன் தேவையான பொழுதெல்லாம், பணம் உதவும் பாங்கிக்குக்
கடன் மனுவை அனுப் ும் சிரமத்தை வகிக்கிறதில்லை. தேவைகளெல்
லாம் சேர்ந்து ஒரு மொத்தத் தொகை ஆகும் வரையில் மனுக்
களைச் சேர்த்துவைத்திருந்து பிறகு எல்லாவற்றையும் ஒரே மனுபாரத்
தில் சுருக்கமாய் எழுதி அனுப்புகிறார்கள். உடனே கொடுத்து விடுவதற்கு
அவர்கள் கையில் பணம் இருக்கிறதில்லை. 100 சொஸைடிகளுள் 95
சொஸைடிகளில் சென்ட்ரல் பாங்கிலிருந்து கடன் தொகை வந்து மெம்
பர்களுக்கு பட்டுவாடா செய்ததேதிகளில் மாத்திரம் அவர்களுடைய காஷ்
புத்தகத்தில் கணக்கு எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பிறகு பணம்
திரும்பி வருவதாகும் போதுதான் அந்தப் புஸ்தகம் திறக்கப்படும். மத்திய
காலத்தில் இருப்புப்பணம் ஒன்று அல்லது இரண்டு ரூபாய்க்குமேலிருக்
காது இத்தகைய நிலைமையில் அவசரக்காரர்கள் பணத்திற்கு என்ன
செய்கிறது? கிராம ஸாவுகாரிடம் ஓடி உயர்ந்த வட்டிக்கு நிர்ப்பந்தமான
நிபந்தனைகளுடன் அதிலும் முக்கியமாய் மாசூலின் பேரில் பாத்தியம்
காட்டி வேண்டிய தொகையை வாங்குகிறான். இம்மாதிரி அவனுக்கு
இரண்டு எஜமானர்கள், (சொஸைடி, சவுகார்,) ஏற்படுகிறார்கள். ஸாவுகார்
அறுவடை காலத்தில் தயாராக வந்திருந்து தன் பணத்தை பிடுங்கிக்
கொண்டு போய்விடுகிறார். வாஸ்தவமாகவே சமயத்துக்கு உதவும்
ஜாக்கிரதையுள்ள ஸாவுகாரரைத்தான் நன்றாய் கவனித்து நாணயத்தைக்
காக்கிறார்களே ஒழிய தன்னைப்போலவே அசௌகரியத்தில் அகப்பட்டு
அதனால் தன் நிலைமையைப்பற்றிப் பரிதாபம் மாத்திரம் படக்கூடிய மெம்
பர்களால் நடத்தப்படும் சொஸைடியின்கடனை கௌரவிக்க முடிகிற
தில்லை. எனக்குத் தெரிந்தவரையில் கடன்காரரிடத்தில் காட்டவேண்
டிய இவ்விருவகைப்பொறுப்பே கடன் திருப்பிக்கொடுக்கும் விஷயத்தில்
ஒழுங்கீனத்திற்குக் காரணமென்று என் மனதில் தோன்றுகிறது.
இதற்குப்பரிகாரம் பிரேரிப்பது எளிதானகார்யமல்ல. ஒவ்வொரு கிராம
நாணயச் சங்கமும்கேட்ட மாத்திரத்தில் ஓர் ஏற்படுத்திய தொகைக்குள்
ளாக பணமுதவும் பாங்கியிலிருந்து பணம் பெறச்செய்து எந்தக் காலமும்
தன் கையிருப்பில் வைத்துகொள்ள ஒருதொகை யிருந்தாலொழிய இந்
தக் கஷ்டத்தை நீக்க முடியாது. ஒவ்வொரு மெம்பருக்கும் ஓர் நாணய
எல்லையை ஏற்படுத்தி அதற்குள் தாராளமாய் கடன்பெற அனுமதியும்
கொடுக்கவேண்டும். இம்மார்க்கத்திற்கு அநேக சங்கைகளிருக்கின்றன.
தற்கால நிலைமையில் எவ்வளவுவரையில் சொஸைடிகளை நம்பலாம்
என்பதும் அவைகளும் நம்பிக்கையை சரிவர கௌரவிக்காவிடின் எப்
படி சொஸைடிக்குப் பந்தோபஸ்து செய்யலாம் என்பதும் நிர்ணயிக்கப்



படுவது சந்தேகம். அம்மாதிரி ஏற்பாடு உண்டாகும்வரையில் மெம்பர்
கள் சொஸைடிக்கு உண்மையாயிருப்பார்களென்று நம்பமுடியாது.
இக்காரணத்தால் நாணயத்தை ஒழுங்காய்க் காப்பாற்றுவார்களென்று
நினைக்கவும் முடியாது.

---

# இந்தியா முதல் பசுக் கான்பரன்ஸ்

இப்பெயரோடு ஏற்பட்ட கான்பரன்ஸ் முதல் முதல் 1917-ம் வரு
ஷம் டிசம்பர் மாதம் 30-ம் தேதி கல்கத்தா யுனிவர்ஸிடி இன்ஸ்டிடியூட்
ஹாலில் நடைபெற்றது. அநேக பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்தி
ருந்தார்கள். ஹிந்திபாஷையில் சில பாடல்களோடு நடவடிக்கைகள்
ஆரம்பிக்கப்பட்டன. பிறகு வரவேற்புக் கமிட்டிக்கு அக்ராசனம்
வகித்த மிஸ்டர். பி. சக்கிரவர்த்தி, நல்வரவு உபந்யாசம் செய்தபொழுது
பின்வருமாறு பேசினார்.—

நமது நடவடிக்கைகளில் மதக்கொள்கையைப்பற்றியாவது தேச
ஆளுகையைப்பற்றியாவது பேசலாம் என்று பல மதஸ்தர்களும் கலந்தி
ருக்கிற நம்முடைய மெம்பர்களுள் சிலர் நினைத்துக்கொண்டிருக்கலாம்.
இவ்விரு நோக்கங்களும் இங்கு உரித்தானதல்ல யென வற்புறுத்தி முன்
னதாகவே சொல்லிவிடுகிறேன். கால்நடைகளை அபிவிருத்தி செய்யும்
விஷயத்திற்கும் இந்நோக்கங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இது
முற்றிலும் விவசாய சம்பந்தமுள்ளது. ஒருவன் மகமதியன் கிறிஸ்துவன்
பார்ஸி, பௌத்தன், இந்து முதலிய எவராக இருந்தாலும் குழந்தை
களுக்குப் பால் வேண்டியது அவசியம் என்பதை ஒத்துக்கொள்ளுவான்
என்பதிற் ஆக்ஷேபணையில்லை.

விவசாய விஷயத்தை கவனித்தால், சென்ற ஜனசங்கியைக் கணக்
குப்படி இவ்வின்சம்பந்தமான ஜனங்களின் தொகைமொத்த ஜனத்தொகை
யில் 100க்கு 75க்குமேல் இருப்பதாகத் தெரியவருகிறது. அதுவும் ஆண்
கள் மாத்திரமே. விவசாயத்திற்கு ஆதாரம், கால்நடைகளைத் தவிர
நமக்கு வேறுகிடையாது. விவசாயம் நமக்கு இன்றியமையாதது.
அதற்கு வியாதியில்லாத கால்நடைகள் வேண்டும். உலகத்தின் இதர
பாகங்களில் நவீன ஏற்பாடுகளினால் விவசாயம் நடைபெறுகிறது. இந்தியா
வுக்கு அவ்வேற்பாடு பொருத்தமில்லை. ஒவ்வொன்றுக்கும் கால்நடையே
வேண்டியது அவசியமாயிருக்கிறது. நாட்டுப்புறங்களில் வண்டிப்
போக்குவரத்துகள் சவாரிக்கானாலும் சாமானுக்கானாலும் கால்நடைகளி
னாலேயே ஆகிறது. ஆகையால் வியாபாரம் முதலிய சௌகரியங்களுக்கும்
கால்நடைகள் அத்தியாவசியம். மனுஷ்யபலம் திரவியபலத்திற்கு சம

மானது. நமது குழந்தைகளை சுக சரீரிகளாகவும், பலவந்தர்களாகவும், புத்திசாலிகளாகவும் வளர்க்கவேண்டுமானால் பசுக்களின் க்ஷேமத்தை பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகையால் கால்நடைகள் வேண்டியது அவசியம்.

தேசபலத்தைப்பற்றி கவனிக்கும் நோக்கத்தில் நான் சம்பந்தப்பட்டவரையில் கால்நடைகளின் க்ஷேமம், அவைகளின் உற்பத்தி, அதை கவனிக்கும்விதம், இவைகளெல்லாம் மற்றவிஷயங்களெல்லாவற்றையும் விட அவசியமானவை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் எல்லாரும் ஏகோபித்து தேச க்ஷேமத்தை விருத்திபண்ணும் விஷயத்தில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ருஷியா நீங்கலாக உள்ள ஐரோப்பாகண்டம் முழுவதிற்கும் சற்றேறக்குறைய இந்தியா சமமான விஸ்தாரமுள்ளது. ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லாண்டு என்னும் ஒரு சிறிய தேசம் இந்தியா முழுவதற்கும் பால்சப்ளை செய்கிறது என்பதை நாம் எப்படி நினைக்கிறது. இதுபரிகாசம் செய்வதுபோலத் தோன்றவில்லையா? ஆகையால், நாம் மனதை தீவிரமாய் இவ்விஷயத்தில் செலுத்தி உண்மையாய் உழைத்து தேசத்திற்கு மனிதர்களாலும் பணத்தாலும் உபகாரம் செய்தால் இவ்விஷயம் நன்கு அறியப்பட்டு தேகபலத்திலும் ஒழுக்கத்திலும் நாம் சிறந்தோங்கலாம்.

## பிரஸிடெண்டின் உபந்நியாஸம்.

பிரஸிடெண்டாகிய ஜஸ்டிஸ் ஸர் ஜான் உட்ராப் துரையவர்களின் உபந்நியாசத்தின் சாராம்சம் வருமாறு.—

இக்கான்பரன்ஸின் நோக்கத்தைப்பற்றி இதை ஏற்படுத்தியவர்களுடைய அடியிற்கண்ட அபிப்பிராயங்களைப் படித்து நானும் கொஞ்சம் பேச விரும்புகிறேன்.

1. இது இராஜாங்கசம்பந்தமுமில்லை, மதசம்பந்தமுமில்லை; தேச க்ஷேமத்தைப்பற்றியது. ஆகையால் எல்லா ஜாதி இந்தியரும் இந்துக்களானாலும், மகமதியர்களானாலும், கிறிஸ்துவர்களானாலும் வேறு எந்த வகுப்பினராலும் இதில் மனப்பூர்ணமாய்ச் சேர்ந்து ஒற்றுழைத்து இந்நோக்கங்களைப் பலிதமாகச் செய்வார்களென்று நம்பப்படுகிறது.

2. இக்கான்பரன்ஸின் போஷகர்கள் கல்கத்தாவில் அடுத்த இந்தியன் நாஷனல் காங்கிரெஸ் டிசம்பர் மாதத்தில் கூடும்பொழுது இந்தியாவின் எல்லாபாகத்தினின்றும் இதற்குடெலிகேட்டுகளை வரவழைக்கவும் எல்லா ஜாதி இந்தியர்களையும் ஒழுங்காய் வரவேற்க ஒரு கமிட்டி நியமிக்கவும் விரும்புகிறார்கள்.



3. விவசாய விருத்திக்கு ஆகவேண்டிய மார்க்கங்களைக்கண்டு பிடிக்கவும், கால்நடைகளை அதிலும் முக்கியமாய்ப் பசுக்களை சம்ரக்ஷித்து சுத்தமான நெய் உண்டாக்கவும் வழிகள் கண்டு பிடிப்பது இக்கான்பரன்ஸின் முக்கிய நோக்கம்.

4. இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் புற்றரைகளுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதோடு அவர்கள் நல்லஜாதி மாடுகளை விருத்திசெய்யும் விஷயத்தில் சௌகரியங்களும் செய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் விரும்புகிறது.

5. கல்கத்தாவுக்கு சமீபத்தில் ஒரு சாஸ்திர நிருபணப் பாற்சாலை ஏற்படுத்தி அதனால் இந்தியாவின் இதர பாகங்களிலும் அம்மாதிரி ஏற்பட்டு சுத்தமான பாலும் நெய்யும் பெரிய பட்டணங்களுக்கு ஒருவாறு சப்ளைசெய்ய இயலும் என்பதைக் காட்டக்கூடிய ஏற்பாடு செய்தல் நலம்.

6. வங்காளத்தில் கலப்பு நெய்யை விற்கக்கூடாது என்று ஏற்படுத்தப்பட்ட சட்டமானது அத்தீங்கை நிவர்த்திக்கப் போதாதாகையால் அக்குற்றத்தை சரியாய் நீக்குவதற்கு வேண்டிய அவசிய ஏற்பாடுகளை செய்யும் வழிகளை விஸ்தாரமாய் இக்கான்பரன்ஸ் பிரஸ்தாபிக்கிறது.

மேலே சொன்னதிலிருந்து இக்கான்பரன்ஸின் நோக்கம் ராஜாங்க ஸம்பந்தமாவது மதசம்பந்தமாவது இல்லை என்று தெரிகிறது.

சில வருஷங்களுக்குமுன் ஒரு அன்னியதேசத்து வித்வான் என் இந்து சிநேகிதரொருவரோடு மைதானத்தின் வழியாய் நடந்துகொண்டிருந்தபொழுது எலும்பெடுத்து நரித்துக்கிடந்த கால்நடைகளின் மத்தியில் செல்லவேண்டியிருந்தது. வித்வான் இக்காக்ஷியைப்பார்த்து " இத்தேசம் எப்படிக்ஷீணித்திருக்கிறதுபார். அந்த பசுக்களுக்கு கொம்புகள் வளரும் சக்திகூட இல்லை" என்றார். இவ்வபிப்பிராயம் மிகவும் நன்றாய் கவனிக்கத்தக்கது. எத்தேசத்தில் கால்நடைகள் நன்றாயிருக்கின்றனவோ அத்தேசம் க்ஷேமமாயிருக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இந்த தேசத்தில் 555 கோசாலைகளும் பிஞ்சரபோல்களும்இருக்கின்றன, அதில் கோசாலைகள் விசேஷமாய் சீர்திருத்தப்படவேண்டியிருக்கிறது, என்றாலும் மொத்தத்தில் இவ்விரண்டு ஏற்பாடுகளிலும் நல்ல எண்ணம், அறிவு, ஜீவகாருண்யம், இவைகள் விளங்குவதற்குப் பதிலாக தரித்திரம், அறிவீனம், அசட்டை சில சமயங்களில் ஹிம்சை இவைகள் நிறைந்திருப்பதை இவ்விஷய ஆராய்ச்சி செய்யும்பொழுது பார்க்கலாம். பசுவின் தெய்வீகத்தைப்பற்றிப் பேச்சுகள் இருந்தபோதிலும்

காரியத்தில் அசட்டையும் குரூரமும் காட்டப்படுகின்றன. ஒருவழியில் பார்த்தால் இரக்கமும் ஒழுக்கமும் பேசிக்கொண்டு கிடைத்தவரையில் அபகரிக்கமுயலும் வியாபாரிகளாகிய கோவாலர்களுடைய அருவருக்கத்தக்க கொடூரச்செயல்கள் மனதிற்கு அவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறதில்லை. மூடர்களாகிய வண்டிக்கார்களுடைய பேராசையும் அவ்வளவு வருத்தமுண்டாக்கவில்லை. நன்றாய்த் தெரிந்துகொண்டு நடக்கவேண்டிய சில பத்ரலாகிகளுடைய அலக்ஷியமே மிகுந்த விசனத்தைத் தருகிறது. இந்திய வீடுகளில் பசுக்களை கவனித்தல் கௌரவக் குறைச்சலென்று வேலைக்காரர்களிடம் ஒப்புவிப்பதாகக் கேள்விப் படுகிறேன். அவர்களுக்கென்ன கவலை. கன்றுக்குட்டிகளையும், வரட்டுப் பசு கிழப்பசு இவைகளையும் கவனிக்கிறதே இல்லாமல். பட்டினிபோட்டுக் கொல்லுகிறார்களாம். கன்றுக் குட்டிகளினால் பணம்வரும்படியில்லாமையால் கோவலர்கள் அவைகளை சாதாரணமாய் வளர்க்காமல் சில விடங்களில் அசட்டையினால் இறக்கும்படி விடுவதோடு சில விடங்களில் உயிருடனும் குப்பைத் தொட்டியில் எறிந்து விடுகிறார்கள் என்று டாக்டர் ஜோஷி சொல்லுகிறார். பசுவின் பாலை நாம் குடித்தால் கன்றுக்குட்டிக்கு குறைந்துவிடுமேயென்று குடிக்கத்துணியாதமூடபக்தியுள்ள அநாகரீக 'கோல்' ஜாதியாருக்கும் இந்நாக்ரீக ஜாதியாருக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள். ஒரு கௌரவமுள்ள மகமதிய சீமாட்டியின் எதிரில் அவளுடைய மகன் இங்கிலீஷ் கலெக்டரின் தூண்டுதலின்பேரில் தன் வீட்டிலுள்ள வரட்டுப் பசுக்களை விற்கவாவது கொல்லவாவது வேண்டுமென்று பிரஸ்தாபித்தபொழுது அந்த அம்மாளும் "அப்பா! முதல் முதல் என்னைக்கொன்றுவிட்டு பிறகு அவைகளைக் கொல்ல ஆரம்பிப்பாய்" என்று சொன்னது எவ்வளவு கவனிக்கத்தக்கது பாருங்கள். இந்த சண்டையினால் ஏற்படக்கூடிய பஞ்சகாலத்தில் எப்படி ஜனங்களைப் போஷிக்கிறது என்னும் கேள்விக்கு சிலர் தானியாபிவிருத்தியை கவனிக்க நாம் முக்கியமாய் பால், வெண்ணெய், நெய் இவைகளை கவனிக்கிறோம். இந்தியர்களுக்கு உறுதியில்லையென்றுசொல்லுவதில்,பயனில்லை. சரியானஆகாரமில்லாமல் எந்த உயர்ந்த மருந்தைக் கொடுத்தால்தான் பிரயோஜனப்படும்? ஆகையால்இந்தியர்களுக்கு சரியான ஆகாரமும் தேகமுயற்சியும் சுகாதாரத்தையொட்டிக் கொடுத்தால் இப்பொழுது இந்தியா அடைந்திருக்கும் சக்திக்குறைவு நீங்கி முன்போலவே. தேக பலத்திலும் மனோ பலத்திலும் அதிக திடவான்களாய் விடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

50-வருஷங்களுக்கு முன் ஒரு ரூபாய்க்கு 32-படி பால்கிடைத்தது. ஒரு படி இரண்டுபடி கேட்டால் இனமாகக்கூட கிடைத்தது. இப்பொழுது படி ஒன்றுக்கு 4-அணா கொடுத்தாலும் நல்ல பாலாகக் கிடைப்பது அருமையா யிருக்கிறது. அதாவது ஐரோப்பா அமெரிக்கா தேசத்



தைவிட கிராக்கியா யிருக்கிறது. இந்தியாவில் எல்லாம் மலிவு என்று பெயரே ஒழிய சமீபத்தில் நல்லமாடுகளுக்கு அசாத்தியமாய் விலை ஏறிப்பாலே கிடைப்பது அருமையாயிருக்கிறது. சில ஏழைக் குழந்தைகளுக்கு பால் கிடைப்பது அருமையாய்ப் போனமையால் கஞ்சியும், நீராரத்தண்ணீருமே ஆகாரம். 1904-ம் வருஷம் முதல் 1915-ம் வருஷம் வரையிலுள்ள காலத்திற்குள் காளை மாடுகள், பசுக்கள், கன்றுக் குட்டிகள் இவைகளில் முறையே 6-லக்ஷம், $5\frac{1}{2}$-லக்ஷம், $1\frac{1}{2}$-லக்ஷம், குறைந்துபோ யிருக்கிறது. இத்துடன் போகவில்லை. பாக்கியிருக்கும் கால் நடைகள் மட்டமான ஜாதியினவே.

பசுக்கள் குறைந்து போனதும், அவைகளின் கறவை குன்றியதும் பால் குறைவுக்கு இரண்டு முக்கிய காரணங்களாகும். அதிலும் கறவை குன்றியதே விசேஷகாரணம், இக்காரணங்கள், மட்டமான பொலிகாளைகள், வயிற்றுக்குப் போதாத பொருத்தமில்லாததீனிகள், சரிவரபராமரிக்காத்தினால் வியாதியும் அகால மரணங்களும் ஏற்படுதல், நல்ல பசுக்களையும் கன்றுகளையும் உணவுக்காகச் கொல்லுத ல்முதலிய இவைகளால் ஏற்படுவதே:—

இதனால் நல்ல ஜாதிப் பொலிகாளைகளையும் நல்ல பசுக்களையும் நம் நாட்டின் பிரயோஜனத்திற்காக கவனமாய்ப் பராமரிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. பங்காளத்து விவசாய டைரக்டரான மிஸ்டர் ப்ளாக் இந்த தேசத்தில் கால்நடை அபிவிருத்திக்கு விரோதமான காரணங்களை தன்னுடைய புஸ்தகத்தில் அடியில் வருமாறு எழுதி இருக்கிறார்:— (1) சீதோஷ்ணம், (2) புற்றரை குறைவு, (3) சரியான பொலிகாளைகள் கிடைக்காமை; அதற்காக பக்குவமடையாத காளைகளை விடுதல். கோவில் காளைகள் குறைந்துபோனது கன்றுகளைப் பட்டினிபோட்டுப் கால் நடைகளின் சக்தியையே ஒடுக்குதல்முதலியன. சிராத்த காலங்களில் விடும் கோவில் காளைகள் ஒருவருக்கும் சொந்தமில்லையென்று ஹைகோர்டில் தீர்ப்பான படியால் கண்டவர்கள் அவைகளை பிடித்துக் கொல்லும்படி யாயிற்று. இந்தத் தீர்ப்பினால் அன்னிய தேசத்துச் சட்ட ஏற்பாடு நமக்குப் பொருத்தமில்லையென்று தெரிகிறது. கோவில் மாடுகளைப் பொலிவுக்காக நம்பினாலும் இனிமேல் அம்மாதிரி தர்மத்திற்கு மாடுவிடுபவர்கள் உண்டோ என்று சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது. ஏனென்றால் பிரதி பலனை எதிர் பாராமல் ஒருவரும் ஒன்றும் தற்காலத்தில் கொடுக்கப் பிரியப்படுகிறதில்லை. ஆகையால் சரிவரத் தீனிபோடாத பொலிகாளைக்கொண்டு நல்ல மாடுகளைப் பிறப்பிக்க முடியாது. இதுதான் கறவை மாடுகளின் குறைவுக்குக்காரணம்.

ஆதிகாலத்தில் 4-ஜோடி எருதுகள் உழவுக்கு உபயோகிக்க வேண்டுமென்றும் அவ்விதம் செய்தலினால் ஒவ்வொரு ஜோடிக்கும் போதுமான விடாயாற்றி ஏற்படுமென்றும் 'பாராசரஸ்மிருதியில்' சொல்லியிருக்கிறது. ஆனால் இப்பொழுதோ ஒரே ஜோடி காளைகள் நாள் முழுவதும் உழுவதோடு தினந்தோறும்கூட அதே உழுகின்றன. கால்நடைகளைச் சரியாய் கவனிக்காததினால் அவைகளுள் அகால மரணங்கள் ஏற்படுகின்றன. கடைசியாக இளம்பசுக்களையும் கன்றுகளையும் ஆகாரத்திற்காகக்கொல்லுதல் கால்நடைகளின் க்ஷீணத்திற்கு முக்கிய காரணங்களுள் ஒன்று. சில காலத்திற்கு முன் கல்கத்தா முனிசிபாலிடியில் இக்கொடுமையைக் குறைக்க வெண்ணி வரியை அதிகப்படுத்தினபொழுது ஒரு பெரிய உறுமலும் ஊளையிடுதலும் ஊனுண்ணும் குழாத்திலிருந்து கிளம்பவே அதிகாரிகள் பயப்பட்டு விலகிவிட்டார்கள். ஆனால் பொது நலத்தை உத்தேசிப்பவர்கள் இந்தப் பூச்சிக்கெல்லாம் பயப்படாமல் ஜனங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு நன்மார்க்கங்களை அனுஷ்டிக்கும்படி செய்ய வேண்டும். ஐரோப்பா, அமெரிக்கா, குடியேற்ற நாடுகள் இவைகளில் கால்நடைகளை இரண்டு இனங்களுக்காகப் பிரித்து வளர்க்கிறார்கள். ஒன்று இறைச்சி ஆகாரத்திற்கு மற்றது பால், வெண்ணெய் முதலியவைகளுக்கு இத்தேசத்தில்மாட்டிறைச்சி துரைமார்களுக்கும்ஐரோப்பிய சேனைகளுக்குமே ஒழிய வேறொருவருக்கும் அவசியமில்லை. ஆகையால்தான் அவர்களைப் போல் இரண்டு வகையாகப்பிரித்து வளர்க்கவில்லை. இராஜாங்கத்தார் தங்களுடைய சேனையின் அவசியத்தின்பொருட்டு மாட்டிறைச்சியையிறக்குமதிசெய்திருந்தால்இவ்வளவுகொலை இந்தியாகால்நடைகளில் ஏற்பட்டிராது. அவர்கள் அவ்விதம் செய்யாத காரணம் தெரியவில்லை. விசேஷமாய் இந்தியர்கள் சாகபக்ஷணிகள் அல்லது உபாய மாம்ஸம் தின்னுபவர். அவர்களுக்குக் கால்நடைகள், உழவு, வண்டி, பால் முதலியவைகளுக்காகத்தான் அவசியமாய் வேண்டியது. ஆகவே தற்கால நடவடிக்கையினால் இராஜாங்கத்தாருடையசௌகரியத்திற்காக அநேகஇந்திய பிரஜைகள்அவஸ்தைப்படவேண்டி யிருக்கிறது. ஆகையால்எனக்குத்தோன்றுகிறதென்னவென்றால் (1)இராஜாங்கத்தார் சேனைகளுக்குவேண்டிய மாட்டிறைச்சிகளை இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். (2) கறவை வற்றி ஈற்றுமாறிப்போகும் பசுவைத்தான் கொல்லலாம் என்று வயதுக்கிரமம் ஏற்படுத்தவேண்டும். (3) மாட்டிறைச்சி தின்னுபவர்களுக்காக கவர்ன்மெண்டாரோ அல்லது சில இனத்தார்களோ ஒருமாட்டிறைச்சிச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச்செய்தால் கறவை மாடுகளை பாதிக்காமல் நிறுத்த முடியும். மேலும் இந்தியக் கால் நடைகள் வெளி தேசங்களுக்குப் போக வொட்டாமல் தடுக்கப்பட வேண்டும்.



## தீர்மானங்கள்.

கான்பரன்ஸில்அங்கீகரிக்கப்பட்டதீர்மானங்கள் அடியில்வருமாறு. முக்கியமானவை:—

1. பசுக்களின் விசேஷ மரணத்திற்கும் அதனால் ஏற்படும் பால் முதலியவைகளின் பஞ்சத்திற்கும் போதுமான புற்றரையில்லாமையே காரணம்.

(a) தேச ரெவினியூவிலிருந்தாவது லோகல் உத்தியோகஸ்தர்களின் பணத்திலிருந்தாவது ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் போதுமான தரிசு நிலங்கள் ஏற்படும்படி கவர்ன்மெண்டு தாக்கீது செய்யவேண்டும்.

(b) ஜமீன்தார்களும் ரயத்துகளும் சௌகரியமான இடங்களிலெல்லாம் தங்கள் நிலங்களை இதற்காக விடலாம் என்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

(2) போதுமான நல்ல பொலிகாளைகள் இல்லாமற்போனமைலும் கோவில் காளைகளை பொலிவுக்கு இல்லாமல் வேறு விதத்திற்கு உபயோகிக்கிறதினாலும் நல்ல ஜாதிப்பசுக்கள் வரவர க்ஷீணிக்கிறதை முன்னிட்டு கோவில் காளைகளைப் பற்றி ஹைகோர்ட்டு தீர்ப்பினால் விளைந்த தீங்குகளை இராஜாங்கத்தார் மாற்றி முனிசிபாலிடிகளும் லோகல் உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் போதுமான பொலி காளைகளைக்காப்பாற்றி வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு எளிதாகவும் சுகமாகவும் இலவசமாகவோ சொற்பக்கட்டணத்திற்கோ, பொலிவுக்கு விடவேண்டுமென்று ஆக்ஞாபிக்கவேண்டும்.

(3) "லோகல் அதிகாரிகள் மாதிரி நிரூபணப் பாற்சாலைகளை ஏற்படுத்திப் பராமரிக்கலாம்" என்று இராஜாங்கத்தார் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் அதன் மூலமாய் ஜனங்களுக்கு ஊக்கம் உண்டாகி பாற்சாலைகளையும் அத்துடன் நவீன விவசாய ஏற்பாடுகளையும் கைக்கொள்ளும்படி செய்யலாம் என்றும் இக்கான்பரன்ஸ் பிரஸ்தாபிக்கிறது.

4. பால்வற்றின பசுவைப் போஷிக்கும் சிரமத்தை உத்தேசித்து அவ்வரட்டுப் பசுக்களை ரக்ஷித்து அவைகளின் ஜாதியை நல்ல பொலி காளைகளைக்கொண்டு விருத்திசெய்ய ஒரு சங்கம் ஏற்படுத்துவதோடு தற்காலம் நிலைபெற்றிருக்கும் கோசாலைகளையும் பிஞ்சிரபோல்களையும் மேற்படி வேலையை சொற்ப கட்டணத்திற்கு ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுவது உத்தமம்.

# திருவண்ணாமலை தாலூகா கோஆபரேடிவ் யூனியன்

## 1917-18-ஆம் வருஷத்தின் ரிபோர்ட்டு.

இந்த தாலூக்காவில் 42 சங்கங்கள் இருப்பதில் 41 சங்கங்கள் யூனியனில் அணைக்கப்பட்டிருக்கின்றன ஸாரோன் கிறிஸ்டியன் எம்ப்ளாயீ சங்கம் இவ்வருஷம் ஆரம்பிக்கப்படவில்லை.

வருஷ ஆரம்பத்தில் ரூபாய் 11,552-4-0 சங்கங்களில் பங்குப்பணம் வசூலாயிருந்து வருஷா வருஷம் பங்குக்கு1-0-0 வீதம் வசூல் செய்வதால் இவ்வருஷக். கடைசியில் சங்கங்களில்மெம்பர்களின் பங்குபணம் வசூலாயிருப்பது ரூபாய் 15,539-15-0.

கடந்த வருஷக் கடைசியில் சங்கங்களால்ஸென்டரல்பாங்குகளுக்கு கொடுக்கும்படி ஏற்பட்டிருந்த கடன் ரூ. 1,51,293. இவ்வருஷத்தில் 30,490 ரூபாய் கடன் வாங்கியதில் ரூ. 1,31,038 கொடுக்கவேண்டியிருந்தது. அதில் 38,224-4-0 அசலுக்காக செலுத்தப்பட்டது. கடந்த வருஷத்திலேயே 30,442 ரூ. கெடுவுக்குமுன் அட்வான்ஸாய் செலுத்தப்பட்டபடியால் இந்த வருஷத்தில் ஸென்ட்ரல் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன் பகுதி அசல் ஒரு சங்கத்திலும் பாக்கி கிடையாது. வட்டிக்காக ரூ. 10,841-3-0 செலுத்தப்பட்டது. வருஷக்கடைசியில் 2 சங்கங்களில் வட்டியில் ரூ. 153-4-3 பாக்கி ஏற்பட்டது. அதுவும் தற்காலம் செலுத்தியாய் விட்டது. சங்கங்களில் மெம்பர்களால் வரவேண்டிய கடன்களின் பகுதிகள் சிற்சில பாக்கி காணப்படுகின்றன. வருஷக் கடைசியில் சங்கங்களின் க்ஷேமநிதி இருப்பு ரூபாய் 5,277-13-11.

பிரஸ்தாப வருஷத்தில் ஸென்ட்ரல் சங்கங்களிலிருந்து மேற்பார்வைக்காக கொடுத்த எதிர்வட்டி ரூ. 358-15-9. சங்கங்கள் கொடுத்த மேற்பார்வை கட்டணம் ரூ. 750-15-0. ஆக ரூபாய் 1109-14-9, தாலூக்காவில் சங்கங்களின் மேற்பார்வைக்காக கிடைத்தது. மாதம் 25 ரூபாய் சம்பளத்தில் இரண்டு சூப்பர்வைஸர்களும். மாதம் 7 ரூபாய் சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவும் யூனியனில் இருக்கிறார்கள். மேற்பார்வைக்காக சிப்பந்தி சம்பளம் ரூ. 625-0-5-ம் பிரயாணசெலவு ரூ. 203-4-0-ம் சில்லரை செலவு ரூ. 142-0-0-ம் செலவாயிருப்பதுடன் ஜில்லாமேற்பார்வை கௌன்ஸலுக்கு ரூ. 301-10-0 கட்டணம் செலுத்தியுமிருக்கிறது.

உப்பும் கிரோஸினையிலும் சங்க மெம்பர்களுக்கு மொத்தத்தில் வாங்கிக்கொடுக்கும் விஷயமாய் ரிஜிஸ்திரார் அவர்கள் நேரில் சங்கப்பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைக் கலந்து யூனியன் மூலமாய் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டு டெட்போக்களிலிருந்து உப்பு வாங்கிக்கொடுக்கும்படி



ஏற்பாடு செய்தார்கள். தவிர, மெம்பர்களுக்கு வேண்டிய சகல சாமான்களையும், மொத்தத்தில் வாங்கிக்கொடுப்பதாலும், அவர்கள் மாசூல்களையும் ஒன்றுசேர்த்து மொத்தத்தில் விற்க ஏற்பாடு செய்வதினாலும், மெம்பர்களுக்கு தக்கலாபம் கிடைக்குமென்று அதுவிஷயமாய் தம்மாலாகும் உதவிகளைச் செய்யத்தயாராயிருப்பதாயும் சொன்னார்கள். தவிரஒவ்வொரு சங்கப்பிரதிநிதிகளையும் நேரில்கண்டு அவர்களுடைய சங்க நடவடிக்கைகளைப்பற்றி பலபுத்திமதிகளை சொன்னார்கள்.

நடந்த வருஷக்கடைசியில் 2. கேஸ்கள் பஞ்சாயத்துக் கோர்ட்டில் பைசல்செய்யாமல் பாக்கியிலிருந்து அவைகளில் ஒன்றுக்கு டிக்கிரி கொடுத்து வசூலாய்விட்டது. மற்றொன்று டிக்கிரிக்கு முன்னமே வசூலாய்விட்டது. பிரஸ்தாப வருஷத்தில் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார் அவர்களால் பைசல்செய்யப்படுவதற்காக சில பஞ்சாயத்து வியாஜ்யங்கள் அனுப்பப்பட்டு சம்மன் பிறந்தும் சில அசந்தர்ப்பங்களால் விசாரிக்கப்படாமல் பாக்கியிலிருக்கின்றன. இவைகளில் பெரும்பான்மையனவைகள் ஏறகனவே வசூல்செய்யப்பட்டன. மெம்பர்கள் சம்மதம் கொடுக்காத கேஸ்களில்கூட பஞ்சாயத்தரை ரிஜிஸ்ட்ரார் நியமிக்கலாமென்று விதியேற்பட்டிருப்பதால் இனி பஞ்சாயத்துக் கேஸ்கள் உடனுக்குடனே பைசலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யூனியன் சூபர்வைஸர்கள் சங்கங்களை அடிக்கடி தணிக்கை செய்து மெம்பர்கள் செலுத்தவேண்டிய பாக்கிகளையும் கெடுக்களையும் ஞாபகப்படுத்தி, காலாகாலங்களில் வசூலிக்க ஏற்பாடு செய்கிறார்கள். மகாசபை கூட்டி எல்லாமெம்பருக்கும் சங்கத்தின் வரவு செலவு நடவடிக்கைகளையும், குறைகளிருந்தால் அவைகளை நிவர்த்தி செய்யவேண்டிய மார்க்கங்களையும், போதிக்கிறார்கள். தவிர ஐக்கிய முயற்சியால் மெம்பர்களின் நிலைமையை உயர்த்த என்னென்னவிதமாய் பிரயத்தனம் செய்யலாமென்பதையும், தெரிவித்து தீர்மானங்களை யூனியனுக்கு அனுப்புகிறார்கள். சில சங்கங்களில் யூனியன் அதிகாரிகளே மகாசபைகூட்டி அச்சங்கத்தை முன்னுக்கு கொண்டுவரும் வழிகளை மகாசபையாரை யோசித்து பிரேரிக்கிறார்கள். அசிரத்தையான பஞ்சாயத்துகளை பற்றியும், கையாடல், உத்திரவுக்குக்கீழ்படியாமை முதலிய அதிருப்திகரமான நடவடிக்கைகளைப்பற்றியும் மகாசபையில் சொல்லி அவர்களாலேயே வேறுபஞ்சாயத்து நியமிக்கவோ தக்கபடி சிட்சிக்கவோ செய்யப்படுகிறது. மெம்பர்கள் வாங்கும் கடன்களை சரியாய் உபயோககரமான விஷயங்களில் உபயோகிக்கிறார்களாவெனவும், நல் நடத்தையுடன் சிக்கனமாய் நடக்கிறார்களாவெனவும், சங்கங்கள் கவனிக்கும்படி தூண்டப்படுகின்றன. ஓலைப்பாடி சங்கத்தில் ஒரு மகாசபையில் ஒருமெம்பர் ஒருபொய் சொன்ன

தற்காக மகாசபையார் அவனை நிவர்த்திக்கும்படி தீர்மானித்தபோது அவன்
தப்பிதத்தை ஒப்புக்கொண்டு இனி அப்படி செய்வதில்லை யென்று மன்
னிப்புக்கேட்டுக்கொண்டதினால் அவனிடம் ரூ 2 அபராதம் வசூலித்துக்
கொண்டு மன்னித்துவிட்டார்கள். சக்கிலியர் சங்கத்தில் ஒரு மெம்பர்
காரியதரிசியை அவதூறு சொன்னதற்காக மகாசபையாரால் ரூ 5 அப
ராதம் விதிக்கப்பட்டு அதை அவன் செலுத்திவிட்டான். கல்லேரி
சங்கத்தில் ஒரு மெம்பர் ஒரு வியாபாரியை மோசம் செய்ததற்காக மகா
சபையார் அவனை மெம்பரிலிருந்து நீக்கி அவனால் வரவேண்டிய கடனை
வசூல்செய்து விட்டார்கள். கூத்தல்வாடியில் பிரசிடெண்டு ஒரு பொய்க்
கடன் எழுதி தான் உபயோகப் படுத்திக்கொண்டதை மகா சபையார்
அறிந்து அவரை நிவர்த்திசெய்து அவரால் வரவேண்டிய தொகை பூரா
வும் வசூல் செய்துக்கொண்டார்கள். சோமாசிபாடியில் பிரசிடெண்டு
கொஞ்ச காலம் சங்கப்பணத்தை அனுப்பாமல் காலஹரணம் செய்ததற்
காக வேறு பிரசிடெண்டை நியமித்துக்கொண்டார்கள். அழகானந்தலில்
மெம்பர்கள் இருவர் ஒருவர்க்கொருவர் ரூ 300 கடன் விஷயமாய் பெரிய
விவாதம்செய்து இருகட்சிகளிலும் சாட்சிகளுடன் சிவில் கோர்ட்டுக்குப்
போக ஏற்பாடு செய்திருந்ததை மகாசபையார் தெரிந்து அவர்களிருவ
ரிடமும் ஒப்புதல் வாங்கிக்கொண்டு எல்லாச் சாட்சிகளையும் விசாரித்து
இருவருக்கும் திருப்திகரமான தீர்ப்பு செய்தபடி அது பைசலாயிருக்கிறது.
இப்படி சங்கங்கள் ஆங்காங்கு மெம்பர்களின் நிலைமையையும் நடத்தையை
யும் உயர்த்தவேண்டிப் பிரயத்தனம் செய்து வருகின்றன. சங்கங்களின்
விருத்தியைக்குறித்து யூனியன் செய்யும் உத்திரவுகளுக்குக் கீழ்படியாம
லும் கவனிப்பின்றியுமிருக்கும் சங்கங்களுக்கு மறுகடன்கொடுக்காமல்
தடுப்பது முதலிய தங்களுக்குள்ள பொறுப்பை மகாசபையார் அறியும் பல
மார்க்கங்களும் செய்யப்படுகின்றன. மகா சபையாரும் சங்கத்தை விர்த்தி
செய்ய யூனியன் கொடுக்கும் புத்திமதிகளுக் கிணங்காவிட்டால் சங்கத்தை
முடிவுகட்டுவது தவிர வேறுவழியில்லை. இப்படி அசிரத்தை அதிகரித்
தும் மகாசபையாரின் கவனிப்பின்றியும் இருக்கும் சங்கங்கள் ஒன்
றிரண்டேயுள்ளன. இவைகளில் மகாசபை சேர்த்து மறுஉயிர் கொடுக்க
முடியுமாவென இவ்வருஷம் யோசித்து, முடியாவிட்டால் முடிவுகட்
டப்படும். சங்கத்தில் மிக்க பிரயோசனத்தை யெதிர் பாராத சிலர் பஞ்
சாயத்தாராயிருத்தலாலும், பிரயோஜனத்தை யடையும்ஏழைகள் அவர்
களுக்கடங்கி பயந்திருப்பதுடன் சங்கத்தை தாங்கள் சமாளிக்க சக்தி
யற்றிருப்பதாலும் சங்கங்களை முடிவு கட்டுவதால் ஏழைஜனங்களே மிக
வும் கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் உள்படுவார்களாதலால் முடிவுகட்
டும் விஷயம் யோசித்துச் செய்யவேண்டியிருக்கிறது.



பயிர்ச்செலவுக்கும் இதரவருஷாந்திரச் செலவுகளுக்கும் மெம்பர்கள் சாவு கார்களிடம் கடன்வாங்கி நஷ்டமடையாமலிருக்கும்படி குறுகிய காலக்கடன்கள் தேவையானவளவு கொடுக்கும்படி சங்கங்களுக்கு சொல்லியும் ஏதோசில சங்கங்கள் தவிர மற்றவைகள் குறுகிய கடன்வாங்குகிறதில்லை. இதற்கு அவர்கள் சொல்லும் காரணம். மெம்பர்களுக்கு பயிர்ச்சிலவுக்காக கடன்கொடுத்தால்முன்கட்டவேண்டியத் நீண்டகாலத்தவணையுடன் செலுத்த, தொகை அதிகமாவதால் கெடுக்கடந்து விடுகிறதென்கிறார்கள். பயிர்ச்சிலவுக்கடன் சங்கத்தில் கொடுக்காவிட்டால் சாவுகாரிடமாவது வாங்கியே ஆகவேண்டியிருக்கிறது. சங்கத்தில் அப்போதைக்கப்போது மெம்பர்களுக்கு வேண்டிய சில்லரைக்கடன் கொடுப்பதும் கணக்கெழுதுவதும் வருஷக்கடைசியில் வசூல்செய்வதும் பஞ்சாயத்தாருக்கு வேலையுண்டாக்குவதால் அதை நிவர்த்திசெய்ய இந்தச்சாக்கு சொல்லப்படுகிறதென்று நினைக்கிறேன். பயிர்ச்சிலவுக்கு கடன்கொடுப்பது, மாதாந்திர மகாசபை சேர்ப்பது முதலிய விருத்தியம்சங்களை நாடாதகாரியதரிசிகள் விஷயத்தில் மகாசபைகள் தங்கள் வெறுப்பைக்காட்டவேண்டும். காரியதரிசிகள் கண்ணிய உத்தியோகஸ்தர்களேயன்றி சம்பளக்காரர்களல்ல. அவர்கள் பொதுநன்மைக்காக உழைத்ததை மகாசபையார் அங்கீகரித்தலே அவர்களுக்குச் சம்பளமும் வெகுமதியுமாகும். இந்த பாவனையை விட்டு காரியதரிசிகள் சம்பளத்தைப் பெரிதாகப் பாராட்டும்படியான ஒரு தப்புவழியைக்கைக்கொண்டால் கண்ணிய உழைப்பு தலைகாட்டாது போவதுடன் பொதுநன்மைக்காகத் தற்காலம் தங்கள் சொந்தவேலைகளை அலட்சியம் செய்து உழைத்துவரும் காரியதரிசிகளின் உற்சாகமும் குறைந்துவிடும்.

விவசாயச் சங்க மெம்பர்களின் ஜீவனோபாயமான விவசாயத்தை விருத்திசெய்வதுதான் சங்கங்களின் முதல் வேலையாகும். தற்காலம் சங்கங்கள் வட்டிக்கடைபோல் ஒருகடனை வாங்கிக்கொடுப்பதும் 10 வருஷத்தில் தவணைப்படி திருப்பிவாங்குவதும் தவிர வேறு, பொது நன்மையானவும், மெம்பர்களின் நிலைமையை உயர்த்தும்படியானவுமான வேலைகளை மேற்கொள்ளவில்லை. நடந்த 2,3 வருஷங்களாய் யூனியனும் டிபார்ட்மெண்டாரும் இது விஷயமாகச் சங்கங்களில் கவனத்தைச் செலுத்தியதில் சங்கங்களின் மெம்பர்கள் இப்போது தங்களுக்குவேண்டிய விவசாயவிருத்திக்கு சங்கத்தை எதிர்பார்ப்பது மிகச் சந்தோஷத்தைத்தருகிறது. பிரஸ்தாபவருஷத்தில் தக்கைப்பூண்டு என்னும் பசுந்தாள் எருவின் விதை விவசாயப் பண்ணையிலிருந்து யூனியனால் தருவிக்கப்பட்டு சங்கங்களுக்கு பட்வாடா செய்யப்பட்டது. தற்காலம் ஏராளமாக கம்போடியா பருத்திவிதையைத் தருவித்து சங்கங்களுக்கு பட்வாடா செய்வதுடன்

துண்டுப்பத்திரிகை மூலமாய் கம்போடியாப்பருத்தி சாகுபடி மிக்கலாபகரமானதென ஜனங்களுக்குத் தெரிவித்தபடியால் அநேகர் இவ்வித அனுகூலங்களுக்காகவே மெம்பராகவும் சேருகிறார்கள். மீன் எருவும் தருவித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது சங்கங்களுக்கு இந்த விதை, எரு முதலிய விவசாயத்துக்கு வேண்டியவைகளைத் தருவித்துக் கொடுக்கவேண்டிய ஒரு பெரிய டெப்போவாக யூனியன் ஆக வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இவ்விஷயத்தில் விவசாய இலாகா அதிகாரிகளும் தங்களாலியன்ற உதவி செய்கிறார்கள்.

வியாபாரம்:— மெம்பர்களுக்கு வேண்டியவைகளைச் சில்லரை வியாபாரிகளிடம் கொஞ்சங்கொஞ்சமாய் அனியாய விலைக்கு வாங்குவதைத் தொலைத்து தங்கள்தேவைகளை ஒன்றுசேர்த்துமொத்தமாய் வாங்கிப் பிரித்துக்கொள்வதும் தாங்கள் விற்பனை செய்யும் மாசூல்களை தனித்தனியே சில்லரை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பதைவிட்டு சங்க மெம்பர்களிட மாசூல்களை ஒன்றுசேர்த்து தக்கவிலை வரும்போது லாபகரமான விலைக்கு விற்று பாகித்துக்கொள்வதும் ஒவ்வொரு சங்கமும் செய்யவேண்டிய வேலையாகும். விவசாயத்தினின்று குடிகளுக்குண்டாகும்ஊதியத்தின்பெரும்பாகத்தை மத்திய ஸ்தானத்திலுள்ளவியாபாரிகள் கொள்ளை கொள்வதால் தன் இரத்தத்தைச் சிந்திப் பாடுபடும் குடியானவனுக்கு கூலிகூடக் கிடைப்பதில்லை. அதிலும் இந்த யுத்தகாலத்தில் உணவுப் பொருள் முதல் சகல சாமான்களுக்கும் எதிர்பாராதவளவு கிராக்கி விலையேறியிருப்பதால் இந்தச் சமயத்தைக் கைவிடாமல் சங்கங்கள் இவ்விஷயத்தை ஏற்றுக்கொண்டு கூடியவரையில் மெம்பர்களுக்கு உபகாரஞ்செய்ய முன்வரவேண்டும். இவ்வருஷம் முழுமையும் இவ்விஷயங்களைப் போதித்தும் ஒன்றிரண்டு சங்கங்கள் தவிர மற்றவைகள் யாதொரு ஏற்பாடும் செய்ததாகத் தெரியவில்லை. வருஷ ஆரம்பத்தில் திருவல்லிக்கேணி ஸ்டோருக்கு வேண்டிய சில சாமான்களுக்கு இண்டெண்டு சங்கங்களில் கிடைக்கக்கூடியவைகளை சப்ளை செய்யும்படி தெரிவித்தும், அவர்கள் விலை இங்கிருந்த விலையைவிட லாபகரமாயிருந்தும், சங்கங்கள் கவனிக்கவில்லை. வேட்டவலம் காரியதரிசி ம-அ-அ-ஸ்ரீ துரைசாமிப் பிள்ளை மாத்திரம் கொஞ்சம் கொள்ளு சேர்த்தனுப்பினார். இவ்விஷயமாய் நான் சொல்லக்கூடியதென்னவெனில், கிராமங்களில் மெம்பர்களுக்கு லாபகரமானவும் பொது நன்மையனவுமான காரியங்களை சங்கங்கள் செய்யவேண்டுமானால் அதின் நன்மைகளைப்பற்றி பிரசங்கம் செய்வதாலேயே காரியம் முடிவதில்லை. காரியசித்திக்கு 2 விஷயங்கள் தேவையாயிருக்கின்றன. மெம்பர்களுக்குள் ஒற்றுமையும் சங்க காரியங்களில் நம்பிக்கையும் வேண்டும். இரண்டாவது இத்தகைய பொதுக் காரியங்களை



பொறுப்புடன் மேற்கொண்டு தன் கஷ்டங்களையும் கவனிக்காமல் செய்ய ஒன்றிரண்டு பொதுநலப் பிரியர்களாவது ஒவ்வொரு சங்கத்திலும் வேண்டும். இவ்விரண்டுமில்லாச் சங்கங்களில் வெளியார் என்னபாடுபட்டும் நிஷ்பிரயோஜனமாகும். நடக்கும் வருஷத்தில் சங்கங்கள் இந்த நல்ல காரியங்களைச் செய்ய முன் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே சங்கங்களின் மெம்பர்களுக்கு தேவையான உப்பு மொத்தமாய் தருவித்து யூனியன் மூலமாய் கொடுக்கப்படுவதால் மெம்பர்களுக்கு உப்பு இலாபகரமான விலையில் கிடைக்கிறது. இப்படியே கிரோஸினாயில்) விவசாயக் கருவிகள் முதலிய குடித்தனக்காரருக்கு வேண்டியவைகளும் தருவித்து பட்வாடா செய்யப்படும்.

கைத்தொழில்:—கைத்தொழிலால் ஜீவனம்செய்யும் ஜனங்களுக்கு அந்தக் கைத்தொழில் விருத்தியாகவும் அவர்கள் கஷ்டம் நீங்கி சுகமடையவும் ஐக்கிய சங்கங்கள் முயற்சிப்பது அவசியம். தண்டரையிலுள்ள நெசவுக்காரர்களை நெசவுத்தொழில் அபிவிருத்திக்காக சங்கத்தில்மெம்பராய் சேர்த்து பொதுவில் நூல்வாங்குவதற்காக அவர்களுக்கு ரூ. 1,500 கடன் கூட கிடைத்திருக்கிறது. நூல்விலை தாருமாறாயிருப்பதாலும், நெசவுச்சரக்குகளுக்கு இந்த விலையில் உடனே விற்பனையாவதும் கஷ்டமாயிருப்பதாலும் வேலை துவக்கவில்லை. திருவண்ணாமலை சக்கிலியர் சங்கம் இதிலொன்று. இதன் விவரம் கீழே காணப்பட்டிருக்கிறது. இன்னும் ஐக்கிய முறையில் பல தொழிலாளிகளுக்கும் சங்கங்களுண்டாக்கி உதவி செய்யலாம். ஆனால் படிப்பின்மையும் அவநம்பிக்கையும் இடையூறாய் நின்று விருத்தியைக் கெடுத்துவருகின்றன.

உபாத்திமார் சங்கம்:—இந்தத் தாலூக்காவிலுள்ள பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்கள் தாங்களுடைய சிக்கன சேகரத்தை டிபாஸிட்டு செய்யவும் வேண்டிய சில்லரைக் கடன்களை தங்களையறிந்தவர்களிடமே பெறவும் சௌகர்யமாயிருக்கும்படி ஒரு சங்கம் 2—8—18-ல் ஆரம்பித்து நடந்துவருகிறது, அதில் 24 மெம்பர்கள் 36 பங்குகளோடு சேர்ந்திருக்கிறார்கள். பங்குபணம் ரூ. 274-ம் டிபாஸிட்டு 112 ரூபாயும் வசூலாயிருக்கிறது. 600 ரூபாய் கடன்வாங்கி 10 மெம்பர்களுக்கு ரூ. 855 அடங்கிய 10 கடன்கள் கொடுத்திருக்கிறது. நடை முதல் வருஷத்தில் இன்னும் உபாத்திமார்கள் அதிகம் சேர்ந்து சங்கத்தை அபிவிர்த்தி செய்வார்களென நம்பப்படுகிறது.

முனிசிபல் கான்ஸர்வன்சி சங்கம்:—இச்சங்கமானது முனிசிபாலிட்டியில் குப்பைவாரும் ஆள்களுக்காக ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. 3 வருஷகாலங்களாய் இந்த சங்கம் பிரேரணையிலிருந்தாலும் பிரஸ்தாப வருஷத்தில் தான் சேர்மனாயிருந்த மிஸ்டர் A. V. De. ரொஜாரியோ

துரையவர்கள் மிக்க சிரமம் எடுத்துக்கொண்டு இதை ஆரம்பித்தார்கள்.
இதுவரையில் 26 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் இவர்க
ளுக்கு வேண்டிய ஆகாரப்பொருள்களை மொத்தமாய் வாங்கிக்கொடுப்ப
தும் சம்பளத்தில் அதை எடுத்துக்கொள்வதும் மாத்திரம் துவக்கப்பட்
டன. இப்படிச் செய்வதில் மீதியாகும் தொகைகளைக்கொண்டு அவர்க
ளுடைய கடன்களைப் பைசல் செய்யலாமென்பது சங்கத்தின் நோக்கம்,
காயம் மானேஜர் லீவிலிருந்து வந்திருப்பதாலும் புதியசேர்மன் அவர்
களும் தான் கவனிப்பதாய் வாக்களித்திருப்பதாலும் இனி இச்சங்கம்
கவனிக்கப்படுமென்று நம்புகிறேன்.

திருவண்ணாமலை சக்கிலியர் சங்கம்:—இச்சங்கம் 20—6—17உ
ஆரம்பிக்கப்பட்டது. இதில் 22 சக்கிலியர்கள் மெம்பராயிருக்கிறார்கள்.
இவர்களுள் 5 செங்கல்சூளை போடுபவர், 4 பயிர்த்தொழில் செய்பவர்,
9 செருப்புத்தைத்து ஜீவனம் செய்பவர், 4 கூலியாட்கள். இவர்களுக்கு
முன்கடன் ரூ. 90 இருந்தது அவைகளைக் கொடுத்து சங்கம் வெளிக்
கடனிலிருந்து நிவர்த்தி செய்தது. பிறகு மாடுவாங்க ரூபாய் 245-ம் சூளை
வேலைக்காக ரூ, 650-ம் வீடு ரிப்பேருக்காக ரூ. 25-ம் செருப்புத்தைக்
கும் தொழிலுக்காக ரூ. 390-ம் முன்கடன் தீர்க்க 90-ம் கடன்
கொடுக்கப்பட்டது. மொத்தம் வாங்கியதில் அசலுக்காக ரூ. 562-ம்
வட்டிக்கு ரூ. 94—3—7-ம் பிரஸ்தாப வருஷத்தில் செலுத்தியது தவிர
பங்குப் பணத்துக்காக ரூ. 59 கட்டியிருக்கிறார்கள். நாளதுவரையில்
கெடுத்தவறினவர் ஒருவரும் கிடையாது. 8 மெம்பர்கள் சேர்ந்து இவ்வரு
ஷம் 301 ஜதை சாதா செருப்புகள் தைத்து யூனியன் மூலமாய் வெளி
யூர்களுக்கனுப்பினார்கள். அதில் கூலிமாத்திரம் ரூ. 150—8—0 மெம்
பர்களுக்குக் கிடைத்தது. தவிர அவர்கள் டிபாஸிட்டாக ரூபாய் 87-4-11
சேர்த்திருக்கிறார்கள். இந்தத்தொழிலை அபிவிர்த்தி செய்ய பொதுப்
பண்டு ஒன்று ஏற்படுத்தி அதில் ரூ. 17-15-6 சேர்த்திருக்கிறார்கள். கனம்
ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சிபார்சு செய்து சால்ட் டிபார்ட்மெண்டாருக்கு
வேண்டிய குரோம் பாதரட்சைகள் சப்ளைசெய்ய கண்டிராக்ட் வாங்கிக்
கொடுத்தார்கள். அதையும் கெடுப்படிமுடித்து அனுப்பி யிருக்கிறார்கள்.
அதின் வரவு செலவுகள் நடைமுதல் வருஷத்தைச் சேர்ந்ததாயினும்,
கூலியில் மாத்திரம் ரூ. 150 இவர்களுக்கு கிடைத்திருக்கிறதென்பதை
ம்மட்டு குறிக்கிறேன். இப்படியே இச்சங்கம் விருத்திக்கு வரவேண்டிய
பல ஏற்பாடுகளும் இவ்வருஷம் நடந்துவருகின்றன.

பொது விஷயம்:—இந்த தாலுக்காவில் செங்கம் டிவிஷனில் பல
சங்கங்கள் ஏற்படுத்தினால் பொது ஜனங்களின் ஸ்திதி நல்ல நிலைமைக்கு
வர மார்க்கமிருக்கிறதென்று பல அதிகாரிகள் சொல்லுகிறார்கள். நடை



முதல் வருஷத்தில் இந்த யூனியன் சில புதிய சங்கங்களை அங்கு ஏற்
படுத்த உத்தேசித்திருக்கிறது. வெகுநாள்களாய் கொடுபடாமல் நிற்கும்
பெரும் கடன்களைத் தொகையாக்கி சங்கங்கள் கொடுத்துவிட்டு விர்த்தி
யம்சமில்லாமல் 10 வருஷத்திற்கு காத்திருந்து கொஞ்சங்கொஞ்சமாய்
வசூலிப்பதைவிட உடனே பலன்தரக்கூடிய இலாபகரமான விஷயங்
களுக்கு சொற்பகெடுவுக்கு கடன்கொடுக்கவேண்டுமென்று ரிஜிஸ்ட்ரார்
அவர்கள் அபிப்பிராயப் படுவதால் இவ்வருஷம் இந்த ஏற்பாடு நமது
பக்கங்களில் எதுவரையில் அனுசரிக்கக்கூடுமெனப் பரீட்சிக்கத் தீர்
மானித்திருக்கிறது.

சங்கங்களிலே பள்ளிக்கூடம் இல்லாத விடங்களில் பள்ளிக்கூடங்
கள்வைத்து நடத்தும்படி முன்வருஷ மகாசபையில் பிரஸ்தாபித்தோம்.
அதின்படி துரிஞ்சாபுரம், ரெயில்வே ஸ்டேஷனுக்கு சமீபமாய் துரிஞ்சா
புரம்மல்லவாடி இரண்டு சங்கத்தாரும் சேர்ந்து ஒருபள்ளிக்கூடம்வைத்து
நடத்துகிறார்கள். துரிஞ்சாபுரம் பிரஸிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ சுப்பாரெட்டி
யார் தன் பெரு முயற்சியாலும் திரவியச் செலவாலும் ஒரு பெரிய ஓட்டு
வில்லை கட்டடம் சங்கத்துக்காக கட்டியிருக்கிறார். தவிர இந்த பள்ளிக்
கூடமானது சங்கத்துக்காக இவர் பேராலேயே மானேஜ்மெண்ட் ரிஜிஸ்
தர் செய்யப்பட்டு இந்த இரண்டு சங்கங்களாலும் ஏற்படுத்தின ஓர்கமிட்டி
யாரால் நடத்தப்பட்டுவருகிறது. தற்காலம் மாதம் 15 ரூபாய் சம்பளத்
தில் ஒரு உபாத்தியாயர் இருந்துவருகிறார். சுமார் 60 பிள்ளைகள் படிக்கிறார்
கள். பிள்ளைகளிடம் சம்பளம் வாங்காமல் இலவசமாய் படிக்கும்படி
ஏற்பாடு செய்திருப்பதால் இன்னும் விசேஷ பிள்ளைகள் சேர்ந்து பள்ளிக்
கூடம் வலுக்குமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இப்படியே அழகாநந்தல்
கிராமத்தில் ஷை சங்கத்தின் பிரஸிடெண்டு காரியதரிசிகள் ம-ா-ா-ஸ்ரீ
சின்னுபிள்ளை ம-ா-ா-ஸ்ரீ அண்ணாமலைப்பிள்ளை இவர்களின் முயற்சியால்
ஓர் இலவசமான பள்ளிக்கூடம் ஏற்பட்டு அதில் சுமார் 40 பிள்ளைகளுக்கு
மேல் படிக்கிறார்கள். கட்டிடம் ஒன்று கட்டவும் ஏற்பாடு செய்திருக்
கிறார்கள். மெம்பர்களும் மற்றுமுள்ள கிராமவாசிகளும் தங்களாலியன்ற
வளவு பொருளுதவி செய்து பள்ளிக்கூடங்களை சங்கங்களின் மேற் பார்
வையில் விடுவதால் உபாத்திமார்கள் கிராமத்தாருக்கடங்கி வேலை செய்ய
வும் அதினால் கல்வி அபிவிருத்தியாகவும் இடமுண்டாகிறது. இதுவிஷய
மாய் முன்வருஷ மகாசபையில் இப்போதிருக்கும் லோக்கல் பண்டுப்
பாடசாலைகளைத் திறமான ஐக்கிய பஞ்சாயத்துகளிருக்கு மிடங்களில் மேற்
பார்வைக்குவிடவேண்டுமென தீர்மானித்ததை வித்யா இலாக்கா அதிகாரி
கள் கொஞ்சங்கூட ஒப்பவில்லை என்று தாலூக்போர்டு பிரஸிடெண்டவர்
கள்தெரிவித்தார்கள். இது விஷயத்தில்வித்யா இலாக்காதாரர் கொஞ்சமும்

யோசிக்காமல் பதிலளித்திருக்கிறார்களென்று மாத்திரம் நான் சொல்வேன். சங்கங்கள் பள்ளிக்கூடங்கள் வைத்துக்கொள்வதால் இப்படிப்பட்ட அஸம்பாவிதங்களும் நேராது. நடைமுதல் வருஷத்தில் அதிகப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தவிர தண்டிராம்பட்டு சங்கத்தார் தங்கள் பரசேரிக்கு ஒரு கிணறுதேவையென சிபார்சுசெய்து தாலூக்போர்டாரால் வேலை நடந்துவருகிறது. தலையாம்பள்ளம் சங்கம் பஞ்சாயத்தார் தங்கள் ஏரி மராமத்தை தாங்கள் ஏற்றுக்கொண்டு செய்துமுடித்தார்கள். சு. பாப்பாம்பாடி சங்கம் தங்களூரில் ஒரு குளம்வெட்டும்படி தாலூக்போர்டாரைக் கேட்டுக்கொள்ள சங்கத்தாரை நன்கொடைத்தொகை வசூலிக்கும்படி உத்திரவானதின்பேரில் தொகை வசூலாகிவருகிறது.

இந்தத் தாலூக்காவில் இத்தனை சங்கங்களை 4 வருஷ காலத்தில் ஸ்தாபித்து மற்றும் பலவிதத்திலும் இதற்கு வேண்டிய சகல உதவிகளும் கொடுத்துவந்த அஸிஸ்டேண்டு ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பஹதூர் A. வேதாசலய்யர், அவர்களுக்கு இவ்வருஷம் கவர்ன்மெண்டார் "ராவ் பஹதூர்" பட்டமளித்ததற்காக ஐக்கியர்கள் வந்தனம் செலுத்துகிறார்கள். இவ்வூரில் ஒரு ஜில்லா பாங்கி, இந்த திருவண்ணாமலை போளூர் இரண்டு தாலூக்காக்களுக்கும் ஒன்றுசேர்த்து ஏற்படுத்தவேண்டுமென்று பிரயத்தனம் செய்துக் கொண்டிருக்கிறார். இத்தகைய வேலைகளை சதா காலம் சிந்தனைசெய்து இந்த ஜில்லாவில் பல சங்கங்களை ஏற்படுத்தி ஐக்கிய வியாபகத்தை பரவச்செய்ததற்காக ஐக்கியவர்கள் வந்தனமளிக்கிறார்கள்.

15 NOV 1918


# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் X] 1918ளு ஆகஸ்டுமீ [இலக்கம் 2


## பத்திராதிபரின் குறிப்புகள்.

### விவசாய கூட்டுறவுச் சங்கங்கள்.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் இவைகள் யுனைடெட்கிங்டம் அதாவது ஐக்கிய ராஜ்யம் என வழங்குகின்றன. அந்த ஐக்கிய ராஜ்யத்தில் பிரசுரமாகும் மாதாந்திர பொருளாதார சஞ்சிகையொன்றில் காணப்படும் வண்ணம், 1915-ம் வருஷக்கடைசியிலே அங்கிருந்த விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் 994 ஆகும். விவசாயப்பொருள்களைப் பயிர் செய்வதும், வினியோகம் செய்வதும் அச்சங்கங்களின் வேலையாகும். அந்த 994 சங்கங்களிலே 522 சங்கங்களோ விவசாய விதைகள், எருக்கள், உபகரணங்கள், இதர பொருள்கள், இவைகளை விநியோகஞ் செய்பவை. இனி, வேறு 322 சங்கங்களோ வெண்ணெய் உற்பத்தி செய்பனவாகும். மொத்தத்தில் பார்த்தால், 911 சங்கங்கள் விவசாய விஷயத்திலேயே விளங்கியிருந்தன வென்று புலப்படும். அந்த 911 சங்கங்களிலுள்ள அங்கத்தினரின் தொகை 122,072. மூலதனம் 1,263,577 பவுன்; அவைகளில் விற்ற முதல் 21 லட்சத்து 51 ஆயிரத்து 922 பவுனாகும். அதாவது விற்ற முதல் தொகையோ 1914-ம் வருஷத்திலிருந்து நூற்றுக்கு 31 பங்கு வீதம் உயர்ந்துளது. இனி, பாவ பண்ணைத் தொழில், பயிரிடுந்தொழில் ஆகிய தொழில்களைச் செய்துவந்த தொழில் சங்கங்கள் 83 ஆகும். இவைகளில் விற்ற முதல் 432,549 பவுன்; பண்டங்களை விநியோகஞ் செய்பவைகளாய் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் உள்ள சங்கங்களின் விற்று முதலோ ஸ்காட்லாந்து அயர்லாந்து இவைகளிலுள்ள சங்கங்களில் விற்ற முதல் தொகையைக் காட்

டிலும் இருமடங்கு அதிகம். பண்டங்களை விளைவிப்பதில் அயர்லாந்திலுள்ள சங்கங்களே முன் உள்ளவை யென எண்ணத்தக்கனவர்கும்.

### மைசூர் கோவாபரேடிவ் பாங்க்.

மைசூர் புரொவின்ஷியல் கோபரேடிவ் பாங்க் என்ற பாங்க் ஏற்பட்டு மூன்று வருஷந்தான் ஆகிறது. அப்பாங்கியின் சென்ற 1917-18-ம் வருஷாந்திர ரிபோர்ட்டைப் பார்த்தாலோ பாங்கியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகப் புலப்படுகிறது. அங்கத்தினரின் தொகை முன்பு 1063; இப்பொழுதோ 1132 ஆகும். மூலதனம் முன்பு 101,809 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 120,234 ரூபாய்; அங்கத்தினரும் அங்கத்தினரல்லாதவருமாக அதில் முன்பு டிபாஸிட்டு செய்ததொகை 218,655 ரூபாய்; அத்தொகை இப்பொழுது 256,749 ஆக உயர்ந்திருக்கிறது. முந்திய வருஷத்திலே அப்பாங்கிக்கு வருலாக வேண்டியிருந்த கடன் தொகை 254,169 ரூபாய். பிரஸ்தாப வருஷத்திலோ 410,098 ரூபாய்; இக்கடன் தொகையால் எவ்வளவு தொகை காலங்கடந்த தொகையென்று ரிபோர்ட்டில் சொல்லப்படவில்லை. அப்பாங்கியிருந்து கடன் வாங்கி ஒழுங்குடன் கடனைத் கொடுத்துவரும் சங்கங்களுக்கு நூற்றுக்கு 2 வீதம் வட்டி தள்ளிக்கொடுக்கப் பட்டிருக்கிறது. பிரஸ்தாப வருஷத்திலே பாங்கியின் கஸர் லாபம் ரூ. 14,243; சேமநிதி 7,061 ரூபாய்; பெங்களூர் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியுடன் இப்பாங்கியையும் சேர்த்துவிடுவதாக ஒரு யோசனை இருந்தது. அவ்வாறே சேர்த்தாய் விட்டதென்று நாம் நினைக்கிறோம். பாங்கியின் நிர்வாக சபையார் பிரஸ்தாப வருஷத்திலே 20 முறை கூடினர். தவிர விசேஷமாகவும் இருமுறை கூடி யிருக்கின்றனர். ஏற்கனவே மைசூர் கவர்ன்மெண்டார் இப்பாங்கிக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பதோடு இன்னும் ஒரு லட்சம் ரூபாய் சொல்பவட்டிக்கு கடன் கொடுத்து உதவி யிருக்கின்றனர்.

### மதுரை ஸ்டோர்ஸ்.

மதுரையிலுள்ள மதுரை அர்பன் கோவாபரேடிவ் ஸொஸைடி அண்டு ஸ்டோர்ஸ், என்ற சங்கத்தின் 1917-18-ம்ஹு நிர்வாக ரிபோர்ட்டானது மிக்க விசேஷமானது. எவ்வாறென்றால் பண்டங்களை விநியோகம் செய்து நஷ்டமடைந்துவந்த அச்சங்கமானது லாபந்தரும் சங்கமாக மாறி யிருக்கிறது. இம்மாதிரி சங்கங்கள் திருத்தமடைதல் இத்தேசத்தில் அருமை. திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ் என்ற சங்கத்தைபோல்மேற்படி சங்கத்தில் அவ்வளவு ஏராளமான வியாபாரம் நடக்காமற்போயினும், பற்பல இனங்களிலே திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸுக்கு அது ஈடானது. பிரஸ்தாப மதுரை சங்கத்தின் மூலதனம் 14,699 ரூபா



யாக உயர்ந்திருக்கிறது. அங்கத்தினரும் இதரர்களும் வட்டிக்குப் போட்டிருக்கும் டிபாஸிட்டும் சேமநிதியும் முறையே 133,733 ரூபாயாகவும் 17,8,49 ரூபாயாகயும் உயர்த்துள்ளன. பிரல்தாப வருஷத்திலே 926 அங்கத்தினருக்கு 78,940 ரூபாய்கள் கடன் கொடுக்கப்பட்டுளது. முன் வருஷத்தில் 842 பெயருக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகையோ ரூ. 77,435; வருஷக்கடைசியிலே வசூலாகாமல் பாக்கிநின்ற கடன் தொகை ரூ. 47,077; இதில் 2,971 ரூபாய் காலங்கடந்த தொகை. முன் வருஷத்திலே 52,522 ரூபாய்க்கு சாமான்கள் விற்பனையாயின; பிரஸ்தாப வருஷத்தில் விற்று முதலான சாமான்களின் கிரயம் 57,124 ரூபாய்; சீட்டுப்போடும் விஷயம் அங்கத்தினருக்கு பலன் தருவதாய் இருக்கிறது. இந்த வகையில் கமிஷனாக அச்சங்கத்திற்குக் கிடைத்த தொகை ரூபாய் 892 ஆகும். அச்சங்கமானதுதான் வியாபாரத்திற்கு உபயேகப்படுத்தும் தொகையின்பேரில் யேற்படும் வட்டியைத் தள்ளிக்கொண்டுதான் பிறகு லாபத்தொகையை நிர்ணயிக்கிறது. இந்த வட்டித் தொகை சங்கத்தின் பங்குக்காரர்களுக்குபோய் விடாமல், சங்கத்தின் திரவிய நிலைமைக்கு ஆதரவாய்ச் சேர்க்கப்படுவதை நாம் சந்தோஷத்துடன் குறிப்பிடுவோம். பிரஸ்தாப வருஷத்திலே சங்கத்தின் ஜெனரல் மீட்டிங் இருமுறை நடைபெற்றது. நிர்வாக சபையினரோ 15 முறை கூடினர். 19,000 ரூபாயில் சங்கமே சொந்தத்தில் ஒரு கட்டடம் வாங்கியிருக்கிறது. அக்கட்டடத்திலேயே சங்கம் நடைபெற்று வருகிறது. இவ்வளவு தூரம் பலன் ஏற்பட்டிருப்பதற்காக அச்சங்கத்தின் நிர்வாக சபையினரையும் அங்கத்தினரையும் நாம் பாராட்டுவோம்.

### வியர்த்தமே.

லாபகரமான தொழில்களிலும் வியாபாரங்களிலும் போட்டுப் பலனடையாமல், பரம்பரையில் கிடைத்த சொத்துக்களைப் புதைத்து வைப்பதுபோல் சும்மா வைத்திருப்பதும், அதைப்பற்றிக் கவலை கொண்டிருப்பதும், வியர்த்தமே. புதைத்து வைக்கப்படும் பணமோ, வரவரக் குறைந்துபோகும். நாளடைவிலே இல்லாமலும் போய்விடும்.

2. மழுங்கலும் திறமையற்றதுமான ஆயுதங்களைக் கொண்டும் வயிற்றுக்கு ஒன்று மில்லாமலும் வேலை செய்தல் வியர்த்தம். அவ்வாறு வேலை செய்வதால் நாளுக்குநாள் உடம்பு இளைத்துவிடு மென்பதோடு, வைத்தியனும் பணங் கொடுக்கவேண்டி யிருக்கும்.

3. நம்மால் வகித்து நிர்வகிக்கக் கூடியதைவிட அதிகமான கால்நடைகளை வைத்திருப்பதும், ஒரே வயலில் அவைகளை நாளுக்குநாள் மேய்த்து வருவதும், வியர்த்தமாகும். ஏனென்றால், அவைகளுக்குத் தகுந்த அளவு தீவனம் கிடைக்காமற் போய்விடும்.

4. மனிதன் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழும் வண்ணம் வேலைசெய்து ஜீவிக்க வேண்டியதுதான். ஆகவே ஒவ்வொருவனும் தனக்கும் தன் சமுகத்தினருக்கும் உபயோகமாயிருக்கக் கூடிய ஏதேனும் ஒரு தொழிலைப் பார்த்து வரவேண்டும். ஆனால் எவரும் ஓய்வில்லாமலாவது உல்லாசப் பொழுதுபோக்கில்லாமலாவது, இருத்தலும் வரம்புகடந்து வேலை செய்வதும் வியர்த்தமாகும்.

5. இரண்டு வார்த்தை பேசவேண்டிய இடத்தில் இருபது வார்த்தை பேசுவதும், ஏதோ கார்யமாக போகும் மனிதனைப் பேச்சுக்காக நிறுத்தி வைத்தலும் வியர்த்தமே.

## ஐக்கிய முயற்சிக்காரர்களது ஒன்பதாவது வருஷதினம்.

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸொஸைடியின் ஒன்பதாவது வருஷதினம் ஆகஸ்டுமாதம் 25-ந் தேதியன்று திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டுறவு முயற்சிக்காரர்களில் முன்வைத்தெண்ணத் தக்கவர்களில் ஒருவரான ஸர். V. C. தேசிகாச்சாரியார் அக்கிராசனம் வகித்தார். ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் ஹெமிங்வே துரையும் உதவி ரிஜிஸ்ட்ராரான ராவ்பகதூர் A. வேதாசல ஐயரும் பிரசன்னமாயிருந்தனர். வேடிக்கையாக அக்கிராசனாதிபதி முகவுரை கூறியபின், 'வீடுகட்டும் கூட்டுறவுச்சங்கங்கள்' என்ற விஷயத்தைக் குறித்து மிஸ்டர் தண்டபாணி ஐயர் ஒருவியாசம் வாசித்தார். அவ்வியாசம் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

## ஆதியில் நகைப்பினும் முடிவில் பலன்.

கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ள விவசாயிகள் அவ்விதம் கட்டுப்பாடும் ஒழுங்குமில்லாத பிற விவசாயிகளுக்கு கூட்டுறவு முயற்சியைக் குறித்துப் பிரசங்கம் செய்யின், பிரசங்கம் செய்வோர் நகைக்கப்படுவரே யென ஒரு நிருபர் அபிப்பிராயப்படுகிறார். இவ்விஷயத்தைக் குறித்து "ஐரிஷ் ஹோம்ஸ்டெட்" என்ற சஞ்சிகை சொல்லியிருப்பதாவது :—

நல்லது, பிறர்களை நகைப்பின், அது பயங்கரமானதா என்ன? கூட்டுறவு முயற்சியைப் பிரபலப்படுத்தியதில் முன் வைத்தெண்ணத் தக்க எவரும் ஆதியிலே பிறரால் நகைக்கப்பட்டனர். ஆயினும் முடிவில் என்னாயிற்று? அயர்லாந்திலே கூட்டுறவு முயற்சியைப் பிரசித்தபடுத்திய ஸர் ஹோரெஸ் பிளங்கெட் என்பவர் ஆதியிலே 50 முறை ஜனங்களை மகாநாடு கூட்டிப் பேசியன்றோ முதன் முதற் தக்க ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டது. இப்பொழுது அனைவரும் அவரைப் போற்றிப் பாராட்டுகின்றனர். அயர்லாந்தில் விவசாயக் கூட்டுறவு முயற்சியிலே இப்பொழுது ஒன்றரை லட்சம் விவசாயிகள் சேர்ந்திருக்



கின்றனர். அம்முயற்சி காரணமாக ஏற்பட்டுள்ள விவசாயச்சங்கங்களிலே 70-லட்சம் பவுனுக்குப் பண்டங்கள் விற்றுமுதலாகின்றன. இத்தகைய அரும்பெரும் பலனைக்கண்டு யாரேனும் நகைப்பரோ? யுக்திபூர்வமாய்ப் பெரும் பலந்தரக்கூடிய அருமையான யோசனை சொல்லக்கூடிய எவரையுங்கண்டு ஆதியில் ஜனங்கள் நகைக்கத்தான் செய்வார்கள். புராதனமான யோசனைகளைக் கண்டு ஜனங்கள் மதிப்பதும், நவீனமான யோசனையைக்கண்டு நகைப்பதும் ஸகஜம். விவசாயிகள் தங்களது அயலாருக்கு கூட்டுறவு முயற்சியைக் குறித்து நன்கு விஷயங்களை எடுத்துச் சொல்வதில்தான் நல்ல பலனுண்டு. இம்மாதிரி விஷயத்தைப் பிரசித்தப்படுத்தலே சிறந்த உபாயமாகும். விவசாயிகள் பரஸ்பரம் கலந்துபேசிக்கொள்வதில் சிரத்தைகாட்டினபிறகுதான், கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் ஏற்படுத்தக்கூடிய நிபுணரின் உதவியால் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

## ஜெர்மனியில் கூட்டுறவு சங்கங்கள்.

ஜெர்மனியிலே "ஸெண்ட்ரல் யூனியன்" என்ற நடுநாயகமான பெரிய கூட்டுறவுச்சங்கமுள்ளது. பண்டங்களை வாங்கி விநியோகிப்பவைகளாய் அச்சங்கத்தின் ஐக்கியப்பட்டிருக்கும் சங்கங்களைப் பற்றிய விவரம் யாதெனில் :—1914 முதல் 1917 வரையில் மூன்று வருஷ காலத்தில் அந்நடுநாயகமான சங்கத்தின் நிர்வாகத்தைக் காட்டிக்கூடிய ரிபோர்ட்டில் காணப்படும் வண்ணம், 1914-ம் வருஷத்திலே ஐக்கியபட்டிருந்த சங்கங்களின் தொகை 1,100 ; ஆனால் 1917-ம் வருஷத்திலோ 1072 தான். சங்கங்களில் தொகை குறைந்திருக்கிறதே யென்று சிலர் நினைக்கலாம். ஆயினும், புதிதாய் ஏற்பட்ட பெரிய சங்கங்களுள் சிறிய சங்கங்கள் சேர்த்து விட்டதனாலேயே தொகை குறைந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அங்கத்தினரின் தொகை 17-லட்சத்து 17-ஆயிரத்து 519 ஆக முன் இருந்து, இப்பொழுது 21-லட்சத்து 80-ஆயிரத்து 630 ஆக உயர்ந்திருக்கிறது. அங்கத்தினரென்றால் ஒவ்வொரு குடும்பத்தினரும் ஓர் அங்கத்தினராவர். ஆகவே நடுநாயகமான சங்கத்தின் அங்கத்தினருடைய தொகை நூறுலட்சமாகும், அதாவது ஜெர்மன் ராஜ்ய ஜனத்தொகையில் ஏழில் ஒரு பங்காவார். 1914-ம் வருஷத்திலே 5,467 கடைகள், இருத்திருக்க, 1917-ம் வருஷத்திலே, 5318 கடைகள்தான். அச்சங்கங்களினால் 1914-ம் வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் விலை மதிப்பு 10 கோடியே 60-லட்ச மார்க்கு. (மார்க்கு என்பது ஜெர்மன் நாணயம்) 1917-ம் வருஷத்தில் உற்பத்தியான பண்டங்களின் மதிப்பு 14 கோடியே 40-லட்சம் மார்க்காகும்.

அச்சங்கத்தினரால் மிச்சம் பிடிக்கப்பட்டு சங்கங்களில் வட்டிக்குப்
போடப்பட்ட தொகையானது 800லட்சம் மார்க்கிலிருந்து 14,20லட்சம்
மார்க்காக பெருகி யிருக்கிறது. ஜெர்மனியரோ தாங்கள் மிச்சம் பிடிக்கும்
தொகை சொற்பமா யிருந்தால் கேட்டபொழுது தரவேண்டுமென்று அத்
தொகையை மேற்படி சங்கங்களிலேயே வட்டிக்குப் போட்டு விடுகின்
றனர். தொகை பெரிதாய் இருப்பின், குறிப்பிட்ட ஒரு தவணைக்குள்
கிடைக்க வேண்டுமென்று சொல்லி வட்டிக்குப் போடுவர்.

யுத்த சமயத்திலே சங்கங்களுக்கு நேர்ந்த செலவு தொகையானது
613 லட்சம் மார்க்கிலிருந்து 712 லட்சம் மார்க்காக உயர்ந்திருக்கிறது.
ஆனால் அவைகளின் கஸர் லாபமோ முன் 250 லட்சமார்க்காக இருந்து
அப்பால் 133 லட்ச மார்க்காகக் குறைந்திருக்கிறது.

தொழிலாளரின் சங்கங்களோ அந்த ஸெண்ட்ரல் சங்கத்தின் மற்
றொரு பிரிவாகும். இச்சங்கங்களின் தொகை 30; அங்கத்தினர் 9,666.
இவைகளில் விற்று முதல் தொகையான 111 லட்ச மார்க்கிலிருந்து
129 லட்சம் மார்க்காகப் பெருத்திருக்கிறது. ஆனால் பங்குத்
தொகைப் பெரிதும் குறையலாயிற்று. மொத்தத்தில் பண்டங்களை வாங்கி
விற்கும் சங்கங்கள் மகாயுத்தக் காரணமாக மிக்க பாதகம் அடைந்து
விட்டன. ஏனென்றால், இந்த யுத்தகாலத்திலே வாழ்வுக்குரிய பண்
டங்களோ யுத்தக் கம்பெனிகளாலும் சில வியாபாரிகளாலும் வினியோகி
கப்படும்படி அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர்.

## சீமை எண்ணெயின் விலை.

வெளி ஜில்லாக்களிலே மத்திபதரமான நிலைமையிலுள்ள ஜனங்க
ளும்கண்டு இவ்வளவு விலை யேற்றமா என்று ஏங்கும்வண்ணம் சென்ற
சில மாதங்களிலே மண் எண்ணெயின் விலை அவ்வளவு ஏறிவிட்டது.
இதனால் ஜனங்கள் புகார்கூறலானார்கள். புகாருக்குக் காரணம் என்ன?
யுத்தத்தினால் பற்பல கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பினும், மொத்தத்தில் எண்
ணெயை விற்கும் கம்பெனிகளோ முன்போலவே வெளி ஜில்லாக்களில்
தங்கள் ஸப்ஏஜண்டுகளுக்குவேண்டிய எண்ணெயை ஸப்ளைசெய்து வந்தி
ருக்கின்றனர். ஆகவே வெளி ஜில்லாக்களில் அவ்வளவு விலை யேற்றத்
திற்குக் காரணம் இல்லை. என்றாலும் அக்கம்பெனிகளின் ஸப் ஏஜண்டு
களும் இதரர்களும் கொள்ளை லாபமடையவேண்டி விலையை ஏற்றிவிட்
டனர். இவ்வியாபாரத்தைக் கம்பெனிகளின் ஏஜண்டுகளுக்குத் தெ
வித்துக்கொண்டும் பலனில்லை. பத்திரிகைகளிலும் இவ்விஷயத்தை
குறித்து மிக்க கிளர்ச்சி ஏற்படலாயிற்று. ஆதியிலேயே கூட்டுறவு
சங்கங்கள் இவ்விஷயத்தைக் கவனிக்காமல் இல்லை. அங்கத்தினருக்
எண்ணெயை வினியோகிக்க இலகுவாய் இருக்கும்வண்ணம், கம்பெ



களிடமிருந்து எண்ணெயை கிடைக்க வழி தேடவேண்டுமென்று ரிஜிஸ்ட்ராரைக் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டுக்கொண்டன. எப்படியென்றால், “வெளி ஜில்லாக்களிலே மண்எண்ணெய் கிடைப்பது கஷ்டமாயிருத்தலால், வெளி ஜில்லாக்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்னையிலுள்ள மண்எண்ணெய் கம்பெனிகளிடமிருந்து எண்ணெய் கிடைக்கும்வண்ணம் ரிஜிஸ்ட்ரார் உதவிபுரிவாராக.”

நடைபெற்ற சென்ற கூட்டுறவுக் கான்பரன்ஸில் இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்டதென்பது வெளிப்படை. ஆயினுமென்ன ? தீர்மானஞ்செய்தும் பலன் கிடைக்கவில்லை. கடைசியிலே மேற்படி விஷயத்தில் கவர்ன்மெண்டார் தலையிட்டு, விலையைக் கட்டுப்படுத்தலாயினர். கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு அதிகமாக விற்றால், சிட்சை கிடைக்குமென்றும் உத்தரவு செய்யும்படி ஆயிற்று.

## ஸூபர்வைஸர்களின் கூட்டம்.

தென்கன்னட ஜில்லாவானது மறுபடியும் இதர ஜில்லாக்களுக்கு வழி காட்டி யிருப்பதை, குறிப்பிட வேண்டும். விவரம் என்னவென்றால், தென்கன்னட ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி என்ற பாங்கியானது அந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களின் மேற்பார்வையை ஒப்புக்கொண்டிக்கிறதல்லவா? அதன் கீழ்வேலை பார்க்கும் ஸூபர்வைஸர்கள் அனைவரும் ஸெப்டம்பர் மாதம் 21-ந் தேதியன்று கூடவேண்டுமென அப்பாங்கி உத்தரவு செய்திருக்கிறது. ஒவ்வொரு ஸூபர்வைஸரும் தனக்கு அனுபவத்தில் தெரிந்த விஷயத்தைப் பரஸ்பரம் கலந்து பேசிக்கொள்ளவேண்டுமென்றும், மேற்பார்வை பார்க்கும் தற்கால முறையில் ஏதேனும் குறைகளிருந்தால் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதும், எழுத்து மூலமாய்த் தெரிவிக்கப்படமுடியாத விஷயங்களை நேரில் அப்பாங்கிக்கு அறிவிக்க சவகாசம் ஏற்படவேண்டுமென்பதும் அக்கூட்டத்தின் நோக்கமாகும். மேற்பார்வை வேலையைத் திறமையாக நடத்துவதற்குற்ற முறைகளைக் குறித்தும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

## செம்படவருக்குள் கூட்டுறவு

செம்படவருக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படும் விஷயமாய் ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர் அழுத்தமாயும் தெளிவாயும் ரிபோர்ட்டு எழுதியிருக்கிறார். கூட்டுறவு முயற்சியைக்கொண்டு செம்படவரின் ஜனாச்சாரத்தையும் திரவிய நிலைமையையும் உயர்த்தித் தீரவேண்டுமென்று அவருடைய தீர்மானம். மீன் இலாகாவின் எத்தொழிலையும் நன்கு அபிவிருத்தி செய்யவேண்டுமானால், செம்

படவர்களின் நிலைமையை உயர்த்தினாலன்றி முடியாதென அவர் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். செம்படவரின் அறியாமை, செட்டின்மை, மதுபானம், கட்டுப்பாடின்மை, முதலிய குறைகளை அவர்களுக்கு விரித்து அவர் அச்சமூகத்தினரிலே சில வாலிபர்களைப் பொருக்கி யெடுத்து அவர்களுக்கு பயிற்சி யூட்டி, அவ்வாலிபர்களை அச்சமூகத்தின் ஆசியர்களாக நியமிக்க வேண்டுமென்று பலமாய் வாதித்திருக்கிறார். ஆசிரியர்காளாய் மட்டும் அவ்வாலிபர்கள் இருந்தால் போதாதென்பதும், கூட்டுறவுச் சங்கங்களின் காரியதரிசி, சுகாதார அதிகாரி, உண்மை நண்பன், செம்படவத் தொழில் நிபுணர் ஆகிய இக்கடமைகளுக்கும் அவர்கள் வணக்கமாய் இருக்கவேண்டு மென்றும் அவருடைய கருத்தாகும், அவர் சொல்லியிருப்பது யெல்லாம் உசிதமானவைகளே. மிகவும் கீழ்மையடைந்துள்ள செம்படவர் சமூகத்தினரிலே அத்தகைய மனிதர்கள் கிடைப்பார்களா வென்பதுதான் நமது சிந்தனை. என்றாலும் தமக்குள்ள விசேஷ சிரத்தையையும் தாராளசிந்தையையும் முன்னிட்டு அவர் அத்தகை யவர்களையடைய முயன்றுவருகிறார். தம்முடைய சொந்தச் செலவில் சில ஆசிரியர்களுக்கு அவ்விதம் பயிற்சி கொடுத்து வருகிறார். அவரைப் போன்ற தீர்க்கதரிசிகள் வருங்காலத்தை யூகித்தறிந்து இதரர்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் ஊட்டக்கூடுமென்று நினைக்கிறோம்.

## ஸிம்லா கான்பரன்ஸ்

கோவாபரேடிப் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார்களுடைய எட்டாவது கூட்டம் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி யன்று ஸிம்லாவில் கூடிற்று. இதற்கு முந்திய எழாவது கூட்டம் 5வருஷங்களுக்குள்முன் நடை பெற்றது. இதற்கிடையில் ஐந்துவருஷகாலமாய்விட்டதென்பது வெளிப்படை. இந்த ஐந்துவருஷ காலத்திற்குள் கூட்டுறவுமுயற்சி விஷயமாய் முக்கியமான பல அபிவிருத்திகள் எற்பட்டுள்ளன. முக்கியமாக ஸர் எட்வர்டு மக்ளாகன் என்பவரின் தலைமையின்கீழ் கூட்டுறவுக்கமிட்டி நடைபெற்றுளது. அக்கமிட்டியாரோ கூட்டுறவு விஷயமாய் மிக முக்கியமான நிபந்தனை செய்திருந்தனர். அந்தச் சிபார்சுகளை பற்பல மாகாணங்களிலுள்ள சங்கத்தினரும் தனிமனிதர்களும் ஆலோசித்துப்பார்க்கின்றனர். மாகாண கவர்ன் மெண்டுகளும் அச்சிபார்சுகளைக்குறித்து ஆலோசனைசெய்துவருவதாகச் சொல்லப்படுகிறது. ஆதலில் எழாவது கூட்டத்திற்கு அப்பால் 5 வருஷகாலம் வரையில் கூட்டம் நடைபெறுமற் போயிற்றே என்று ஜனங்களுக்குவருத்தம் உண்டு. எட்டாவதுகூட்டத்திற்கு இம்மாகாணத்திலிருந்து உத்தியோகப்பற்றற்றவர்களில் பிரதிநிதியாய் மதுரை ரெய் ஸாஹிப் K ராமசுவாமிஐயர் அழைக்கப்பட்டிருந்தார். பலரும் எதிர்பார்த்தபடி, அக்கமிட்டியின் சிபார்சுகளைக் குறித்தே அக்கூட்டத்தில்முக்கிய



மான ஆலோசனை நடந்தது. அச்சிபார்சுகள் எத்தன்மையான தென்றால் ஜனங்களால் எகமனதுடன் அங்கீகரிக்கப்படும்படியாக இல்லை. அக் கூட்டத்தின் நடவடிக்கைகளைக் குறித்து தினசரிப்பத்திரிகைகளிலே விரிவான விபரங்கள் பிரசுரமாக வில்லை. ஆயினும், உத்தியோக முறையில் சீக்கிரம் அக்கூட்டத்தின் ரிபோர்ட்டு வெளியிடப்படுமென்று தெரியவருகிறது. ஆதலால், அக்கூட்டத்தின் நடவடிக்கைகளைக்குறித்து இப்போது நாம் விரிவாய் ஆராய்ந்து பார்ப்பதற்கில்லை. என்றாலும், இரண்டொரு விஷயங்களைப்பற்றி இப்போது ஆராய்ந்து பார்ப்போம்.

கவர்ன்மெண்டாருக்கு அவசியமானால், ஜனங்களின் நிலங்களை ஸர்க் கார் கிரயம் கொடுத்து எடுத்துக்கொள்ளலாமென்று லாண்டு அக்விஸி ஷன் ஆக்டு என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அச்சட்டத்தின்படி கம் பெனிகளுக்கும் ஷை நிலங்கள் கிடைக்க இடமிருக்கிறது. அவ்வாறே கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிலங்கிடைக்கும்படி யிருக்கவேண்டுமென கனம் லலூபாய் ஸாமல்தாஸ் பிரேரிக்க மேற்கண்ட கூட்டத்தில் அத்தீர் மானம் அங்கீகரிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களுக்காக நிலங்களை எடுத்துக்கொள்ள ஸர்க்காருக்கு அதிகாரம் இல்லை யென்பதாக வங்காள கவர்ன்மெண்டின் அட்வொகேட் ஜெனரலாயிருந்த காலத்தில், ஸர் ஸத் தியெந்திர பிரஸன்ன ஸின்ஹ சொல்லியிருக்கிறார். ஆகவே, சுயநலத் தைப்பாராட்டும் முதலாளியின் கம்பெனிக்கு நிலங்கிடைக்கும் விஷய மாய் ஸர்க்காரிலிருந்து ஆதரவு கிடைக்கையில், ஜனசமுகத்தினருக்கு பலன்தரக் கூடியதும், தேச க்ஷேமத்திற்கு உற்றதாய் இருக்கக் கூடிய தென ஸர்க்காரால் மதிக்கப்படக் கூடியதுமான கூட்டுறவுச் சங்கங்க ளுக்கு நிலங்கள் கிடைக்கும்படியான காரணம் இல்லை. இது விபரீத மன்றோ. ஆதலின் சங்கங்களுக்குச் சாதகமாய் இருக்கும் வண்ணம் அச்சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டிய தவசியம். ஏனென்றால், ஸர் ஸின்ஹவின் அபிப்பிராயத்துக்கு மாறாக இம்மாகாண கவர்ன்மெண் டார் அபிப்பிராயப்பட்டு தஞ்சை ஜில்லாவிலே பஞ்சமர்களின் நன்மை யைக்கருதி நிலங்களை எடுத்துகொள்ள மாகாண கவர்ன்மெண்டார் முன் வந்திருக்கின்றனர். வீடு கட்டிக்கொடுக்கும் சங்கங்களின் சார்பாகவே நிலங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மிராசுதார்களோ கவர்ன் மெண்டின் செய்கை சரியல்லவென்று கோர்ட்டில் வழக்குத்தொடுத் திருக்கின்றனர். இச்சென்னை நகரில் நரியங்காடு என்ற பறச்சேரியில் வசிக்கும் பறையர்களோ ஜனசமுக ஊழிய சங்கத்தின் ஆதரவைத்தழுவி கூட்டுறவுச்சங்கமொன்று ஏற்படுத்தியிருக்கின்றனர். அச்சேரியின் நிலங் களைத் தங்களுக்கு வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று அச்சேரி வாசி கள் கார்பொரேஷனைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்குரிய பணத்

தையும் சேகரித்திருந்தனர். கார்பொரேஷனே அந்நிலங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறது. ஆயினும் அந்நிலங்களின் சொந்தக்காரரோ கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருப்பதினால், வீடுகட்டும் சங்கமானது தன் வேலையைச்செய்ய முடியவில்லை. ஆதலின், மாகாண கவர்ன்மெண்டார், கூட்டுறவுக்காரர்கள், தாழ்ந்த வகுப்பினரைக் கைதூக்கி விடுவதில் சிரத்தையுடையவர்கள், ஆகிய அனைவரும் சேர்ந்து அச்சட்டத்தில் திருத்தம் ஏற்படும் வண்ணம் முயலுவார்களென்று நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

விவசாய அபிவிருத்தி விஷயமாய் விவசாயிகளுக்கு ஸர்க்காரிலிருந்து கடன் கிடைப்பதற்கான லாண்டு இம்ப்ரூவ்மெண்டு லோன் ஆக்ட் என்றும் அக்ரிகல்சரல் லோன் ஆக்ட் என்றும் இருசட்டங்கள் இருக்கின்றன. அச்சட்டங்களின்படி கூட்டுறவுச் சங்கங்கள் ஸர்க்காரிலிருந்து கடன் பெற்று அதை விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யலாமென்றும் அக்கூட்டத்திலே ஒரு தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. இது நல்ல ஏற்பாடுதான். ஆயினும் சங்கத்தின் நிலைமை எவ்வாறாகுமென்று பார்ப்போம். சங்கமெம்பர்களிடமிருந்து சங்கத்திற்கு வசூலாகவேண்டிய தொகை ஏராளமாய் இருக்கிறது. பிரைமரி ஸொஸைடிகளிலிருந்தும் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு கடன்தொகை வசூலாகவேண்டியிருக்கிறது. இப்படி யிருக்கையில் அத்தீர்மானத்தில் கண்டபடி புதிய பொறுப்புகளை சங்கங்கள் வகித்தல் நியாயமா? தவிர, அச்சங்கங்களுக்குக் கிடைக்கும் கடன் தொகையோ ஸம்மரியாக வசூலாய்விடவேண்டுமாம். சங்கங்களின் காரியங்களுக்குப் பணம் போதாமல் போனால், தங்களுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டுமென்று அவைகள் ஸர்க்காரைக் கேட்டுக் கடன் பெறலாம். ஆனால் அத்தீர்மானத்தின்படி காரியம் நடப்பதாயின், சங்கங்களுக்கு இன்னும் தொல்லை ஏற்படும். ஆதலால் இவ்விஷயமாய் காரியம் நடக்குமுன், ஆற அமர யோசித்துப் பார்க்கவேண்டிய தவசியம்.

---

## தஞ்சை மிராசுதார்களும் பஞ்சமக் குடிகளும்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள மிராசுதார்களுக்கும் பஞ்சமகுடிகளுக்கும் விவாதம் நடந்து வருவதை அனைவரும் அறிவர். அவ்விருபக்கத்தினருக்கும் சாதகமாகவும் பாதகமாகவும் பலபாதங்களை எடுத்துரைக்க இடமிருக்கிறது. ஆதலின் யார் கட்சியில் நியாயம் இருக்கிறதென்று ஜனசமூகத்தினர் எளிதில் அறிந்து தீர்மானங்கொள்வதற்கில்லை. ஆதிமுதலிருந்தே கஷ்டம் இருக்கிறது. அந்த விவாதம் எவ்வாறு உற்பத்தியாயிற்று என்பதைப்பற்றி இருவகையான மார்க்கங்கள் சொல்லப்படுகின்



றன. மிராசுதார்களின் சார்பாக நம் சென்னை சட்டசபையில் கனம் மிஸ்டர் T. அரங்காச்சாரியார் சொல்லப்பட்டிருப்பதாவது:—"சென்னைக்கு ராஜப்பிரதிநிதி விஜயஞ்செய்த காலையில், ஏழை எளியவர்களுக்குள் மதுபானத்தைத் தடுக்கவேண்டுமென்ற கொள்கையுடைய சங்கத்தார் அவரை பேட்டிகண்டு பேசினார்கள். அவ்விஷயத்தைக் குறித்து மாகாண கவர்ன்மெண்டார் ஆலோசிக்கட்டுமென்று அவர் சொல்லிவிட்டார். மாகாண கவர்ன்மெண்டாரோ தஞ்சை கலெக்டரான மிஸ்டர் வுட் என்பவருக்கு அவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்யவிட்டார். கவர்ன்மெண்டார் சொந்தக்காரர்களிடமிருந்து மனைக்கட்டுகளை எடுத்து அவைகளைப் பஞ்சமர்களுக்குக் கொடுத்து விடின், பஞ்சமர்களிடமுள்ள மதுபானத்திற்கு அதுவே சஞ்சீவியாகுமென்று அவர் யோசனை சொன்னார். இவ்வாறே ரெவினியூ போர்டார் உத்தரவு செய்பவரானார்கள்."

இவ்வாறு கனம் ரங்காச்சாரியார் சொல்ல, கவர்ன்மெண்டின் தரப்பில் கனம் ஸர் அலெக்ஸாண்டர் கார்டியூ சொல்லியதாவது:—"பிரஸ்தாப விவாதத்திற்கு ஆரம்பம் இன்னதுதானெனத் தாம் கருதியதை கனம் ரங்காச்சாரியார் சொல்லியிருக்கிறார். மிஸ்டர் வுட் யோசனை செய்வதற்கு முன்பாகவே, செங்கல்பட்டிலே பறையர்களின் நிலைமையைக் குறித்து மிஸ்டர் ஆஸ்புரு என்பவர் எழுதியிருப்பதை கனம் ரங்காச்சாரியார் அறியவில்லை என்பது நிச்சயம். பஞ்சமருக்கு மனைக்கட்டு வேண்டுமென்றும், அவர்களின் மீது மிராசுதார்களுக்கு மிக்க அமுல் செல்லுகிறதென்றும், மிஸ்டர் ஆஸ்புரு சொல்லியிருக்கிறார். ஆயுளுள்ளளவும் பஞ்சமர் தங்கள் எஜமானர்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறார்களென்பதாக தஞ்சை ஜில்லா பஞ்சமர்களைக் குறித்து மிஸ்டர் கிரே என்பவர் தமது ரிபோர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார். வேலையைச் செய்யாமற்போனால் மனையைவிட்டுப் போய்விட வேண்டுமென்பதாகப் பஞ்சமர்கள் பயமுறுத்தப்படுகின்றனர். பஞ்சமர்களுக்கு சொந்தத்தில் மனைக்கட்டுகள் இல்லாமலிருப்பது பெருங்குறை என்றும், அதனால் அவர்களின் நிலைமை திக்கற்றதாய் இருக்கிறதென்றும், மிஸ்டர் C. ஸ்ரீனிவாஸாச்சாரியார் குறிப்பிட்டிருக்கிறார். எஜமானர்களின் இஷ்டப்படி தொழிலாளிகளை மனைக்கட்டுகளை விட்டுப்போகச் சொல்லிவிடும்படி யிருத்தல் தீமைக்கு இடமாகுமென அவ்விரு அதிகாரிகளும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தஞ்சாவூரிலே தொழிலாளியானவன் அடிமையைப்போல் இருக்கிறான் என எளிதில் எடுத்துரைக்க முடியும். 163 பேர் கொண்ட 46 குடும்பத்தினர் 17 வீடுகளில் வசித்து வருவதாகப் புலப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளில் பலவும் ஓரே அறைகொண்ட குடிசைகளாகும். இத்தகைய சீர்கேட்டை கவர்ன்மெண்டார் போக்கவேண்டும்."

மேற்கண்டவாறு இருவரும் சொல்லியிருப்பதைப் பாருங்கள். பஞ்ச
மர்கள் நல்ல வீடுகளில் நல்ல சம்பளம் பெற்று இருப்பதாக கனம் ரங்
காச்சாரியார் சொல்லுகிறார். மனைக்கட்டுகளைவிட்டு அவர்களைப் போகச்
சொல்லுதல் அபூர்வம் என்கிறார். ஆனால் ஸர் கார்டியூவோ பஞ்சமர்
களின் நிலைமை அடிமைகளின் நிலைமையைப்போல் இருக்கிறதென்று
கூறுகிறார். தஞ்சையிலுள்ள பஞ்சமர்களின் நிலைமையை உயர்த்த
வேண்டுமென கவர்ன்மெண்டார் வாதாடுவதில் தக்க ஆதாரம் இருக்
கிறது. விசாலபுத்தி வாய்ந்த மிராசுதார்கள் இதை ஒப்புக்கொள்ளுகின்
றனர். ஆனால், கவர்ன்மெண்டாரின் நடவடிக்கைகளைக் குறித்து
அவர்கள் ஆட்சேபித்தில் விரோதமே. ஒரு பிராமண உத்தியோகஸ்
தரும் ஓர் ஐரோப்பிய உத்தியோகஸ்தரும் சொல்லி யிருப்பதில் பாதி
யாவது உண்மையாய் இருக்குமானால், கவர்ன்மெண்டாரின் நடவடிக்கை
முற்றிலும் நியாயம் என்பதோடு, சீர் கேடான நிலைமையைப் போக்கு
வதும் கவர்ன்மெண்டின் கடமையாகும். பஞ்சமர்களை மனைக்கட்டுகளை
விட்டுப் போகச்சொல்லுதல் தர்மமல்லவென இரண்டு அதிகாரிகளும்
சொல்லி யிருக்கிறார்கள். வீட்டை விட்டுப்போக நேருமோ வென்று பஞ்ச
மர்கள் எக்காலும் அச்சத்தில் ஈடுபட்டுக் கிடக்கவேண்டி யிருக்கிறது.
அவர்களிடமிருந்து வரம்பு கடந்த வேலை வாங்கப்படுகிறது. குறைவான
கூலி கொடுக்கப்படுகிறது. மிராசுதார்களில் பலர் நல்ல சிந்தை யுள்ளவர்
களாயினும், கொடுமை யில்லையென மறுக்கமுடியாதென்று ஸர் கார்டியூ
சொல்லியிருக்கிறார். இல்லை யென்று எல்லாரும் மறுக்கமுடியுமோ; சில
மிராசுதார்களோரபுகலான பத்திரங்களில் கையெழுத்துப்போடும்படி பஞ்ச
மர்களை எப்படியோ சரிபடுத்தி வருகின்றனர். அத்தகை பத்திரம் இருப்
பதனால், கொடுமையான எஜமானர்களின்வலையில் பஞ்சமர் பட்டுக்கிடக்க
நேருகிறது. இதைவிட இன்னும் நிர்ப்பந்தம் வேண்டுமோ? அவ்வித
மான இச்சீர் கேட்டைப் போக்குதல் கவர்ன்மெண்டின் கடமை யன்றோ
பஞ்சமர்களுக்கு மிராசுதார்களிட மிருந்து மனைக்கட்டு கிடைத்திருக்கிற
தானாலும், கனம் கார்டியூ சொல்லியவண்ணம் 163போடங்கிய 46 குடும்
பத்தினர் ஒரே அறையுள்ள 17 வீடுகளில் வசித்து வருகின்றனர். இதை
யாரும் மறுக்கவில்லை. ஆயினும், பரிகாரம் செய்வதென்றால், பின்னுக்கு
வாங்குகின்றனர். விவாதத்தின் உற்பத்தி எவ்வாறாயினும் சரி, சீர் கேடு
வெளிப்பட்டிருக்கிறது. அச்சீர் கேட்டைப்போக்காமற்போனால், கவர்ன்
மெண்டார் நியாயம் வழங்குவதில் தவறியவர்களாவர்.

தங்களுடைய மனைக்கட்டுகளை பஞ்சமர்களுக்கு கொடுத்துவிடக்
கூடாதென்றும், அப்படிச் கொடுத்துவிட்டால் அப்பால் அவர்கள்
பிறகு வேலை செய்யாம லிருக்கக்கூடு மென்றும், கல்போலுள்ள



நாற்றங்கால் நிலங்களைக் கொடுக்கக்கூடாதென்றும், மிராசுதார்களுக்கும்
பஞ்சமக்குடிகளுக்கும் அடிக்கடி சச்சரவு உண்டாகுமென்றும், முதலில்
இருபக்கத்தினரின் நிலைமையும் கஷ்டமாய் விடுமென்றும், மிராசுதார்கள்
வாதிப்பதில் தக்க அர்த்த புஷ்டி இருக்கிற தென்பதில் தடையில்லை.
தஞ்சை மிராசுதார்களின் பக்கத்தில் கனம் ரங்காச்சாரி நன்கு வாதிக்கக்
கூடியவர். அவருக்கு ஏராளமான பூ சொத்து இருக்கிறது. மிக்கதிறமை
யும் வாய்ந்தவர். விஷயங்களை நன்கு எடுத்து வாதிக்கக்கூடியவர்தான்.
பஞ்சமர்களுக்கு மனைகட்டுகளைக் கொடுத்தல் பொது ஜனங்களைப் பற்
றிய விஷயமல்லவென்றும், ஒருவனுக்காக மற்றவனுடைய சொத்தைப்
பிடுங்கிக் கொடுப்பதா என்றும்; அவர் வாதிக்கிறார். ஐரோப்பிய தோட்
டக்காரர்களுக்குச் சொந்தமான நிலத்திலே நடுவில் ஒரு பாகத்தை ஒரு
கூலிக்குக் கொடுப்பதானால், அதில் தோட்டக்காரர்களுக்குச் சம்மதம்
இருக்குமோ வென்றும், தஞ்சையிலுள்ள பொதுஜன சபைகளை ஆலோ
சித்துப் பாராமல் ரெவினியூ போர்டார் காரியம் நடத்திவிட்டனரென்
றும், அவர்கட்சி பேசியிருக்கிறார். தனி மனிதர்களுக்குள் விவாதத்
துக்கு இடமான விஷயமானது. அவ்விதமான நிலைமையை அடைந்து
விட்டால், அது போஜனங்களைப்பற்றிய விஷயமேயாகும். அத்தகைய
நிலைமையிலே எளியவர்களின் பக்கத்தில் கவர்ன்மெண்டார் தீமை
விளைப்பவர்களால் துன்பம் நேராவண்ணம் காக்கவேண்டும். தர்மத்தை
யும் நியாயத்தையும் மதித்தே பஞ்சமர்களின் விஷயத்தில் கவர்ன்மெண்
டார் கவனஞ் செலுத்துகின்றனரென்பதை அனைவரும் கவனிக்கவேண்
டும். மிராசுதார்களிடமிருந்து நிலத்தை அபகரிக்க கவர்ன்மெண்டார்
வர வில்லை. அவைகளை விலைக்கு வாங்கவே உத்தேசிக்கின்றனர்.
அவ்விலையை பஞ்சமர் கொடுக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார்
செய்யப்போகின்றனர். ஆகவே, தங்களுடைய நிலங்களுக்குள்ள கிரயத்
தை மிராசுதார்கள் பெற்றுக்கொள்வார்கள். இது அபகரிப்பைப்போல்
அவ்வளவு கெடுதலா என்ன ?

புறம்போக்கு நிலங்களையும் தரிசு நிலங்களையும் கவர்ன்மெண்டார்
பஞ்சமருக்குக் கொடுப்பதென்றால், அதில் மிராசுதார்களுக்கு ஆட்சேப
மில்லை. தங்களுடைய நிலங்களும் நாற்றங்கால்களும் போய்விடக்
கூடாதென்பதே மிராசுதார்களின் கட்சி. கூடியவரையில் ஜாக்கிரதை
யாலே மனைக்கட்டுகள் எடுத்துத் கொள்ளப்படுமென்று கலெக்டர்
மிஸ்டர் நாரயண ஐயர் சொல்லியிருப்பதை மிராசுதார்கள் கவனிக்க
வில்லையோ ?

மிக்க கண்டனத்திற்கு ஆளான அதிகாரிவர்க்கத்தினர் ஏழைப்பஞ்ச
மருக்கு நண்பர்களாய் முன்பற்றிருக்கையில், குடியரசு வேண்டுமென்

றும் சுயராஜ்யம் வேண்டுமென்றும் மார்தட்டி நிற்கும் தலைவர்கள் ஆட்சேபித்தல் அதிசயமேயென கனம் B. V. நரஸிம்ம ஐயர் சொல்லியிருக்கும் வண்ணம் நாம் சொல்லக்கூடாதோ? சுயராஜ்யக்காரர்களில்சிரேஷ்ட புருஷரான கனம் ராமானுஜாச்சாரியரோ மிராசுதார்களால் ஸாத்விக எதிர்ப்பு அனுஷ்டிக்கப்படும்படி நேருமெனவும் சொல்லியிருக்கிறார். ஸாத்விக எதிர்ப்பதென்றால் சிலருக்கு விளையாட்டுப்போலும், ஸாத்விக எதிர்ப்பென இலேசாய்ப் பேசிவிடவில்லை யென்றும் தெரிகிறது. எப்படி யென்றால், ரெவினியூ போர்டின் உத்தரவுப்படி காரியம் நடக்குமானால், வரியிலே ஒரு தம்படிகூடச் செலுத்தமாட்டோமென்று சில மிராசுதாரர்கள் தஞ்சை கலெக்டருக்குச் செய்துகொண்ட மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி மிராசுதாரர்கள் உணர்ச்சிகொள்ளுதல் துரதிருஷ்டமேயாகும். உத்தரவுப்படி காரியம் நடத்திவரும் டிப்டி கலெக்டரான மிஸ்டர் அருளானந்தம் பிள்ளையோ 23 மிராசுதாரர்களின் மேல் கேஸ் கொடுத்திருப்பதைக் கவனிக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் வசித்துவரும் கிராமத்திலே கிறிஸ்தவ குமாஸ்தா, கிறிஸ்தவ ரெவினியூ இன்ஸ்பெக்டர், கிறிஸ்தவ டிப்டி கலெக்டர் இவர்கள் சேர்ந்து காரியம் நடத்தும்படி நேர்ந்திருப்ப தெப்படியோவென கனம் ரங்காச்சாரியார் கேட்கிறார். பிராம்மண உத்தியோகஸ்தரான மிஸ்டர் ஸ்ரீனிவாஸாச்சாரியாரின் ரிபோர்டை யனுசரித்து, பிராம்மண கலெக்டரான மிஸ்டர் நாராயணஐய்யருக்கு உட்பட்டுக் காரியம் நடக்கும்படி நேர்ந்திருக்கிறதே யென்பன கனம் ரங்காச்சாரியார் மறந்துவிட்டார் போலும்.

சட்ட சபையிலே கனம் ரங்காச்சாரியார் கொண்டுவந்த தீர்மானம் ஒப்புக் கொள்ளப்படவில்லை. ஏனென்றால் விஷயத்தை ஆதிமுதற் கொண்டல்லவோ மீண்டும் ஆலோசித்துப் பார்க்க நேரும்; மிராசுதார்களின் பிரதிநிதிகளைக் கண்டு பேசுவதாகவும், அப்போது அவர்களுடைய குறைகளைக் கவனித்துப் பார்ப்பதாகவும் கவர்ன்மெண்டார் ஒப்புக் கொண்டிருப்பதால், மிராசுதார்கள் முட்டுக் கட்டைபோலில்லாமல் சமரஸமாய் அபிமானத்துடன் விஷயத்தை மதிப்பார்களென நினைக்கிறேன்.

அச்சம் எதற்காக? உத்தரவின்படி காரியம் நடந்தவுடனே, பஞ்சமர்கள் தங்கள் எஜமானர்களை விட்டு ஓடிவிடமாட்டார்கள். மிக்க நிர்பந்தம் இல்லாமற்போனால், பழைய எஜமானர்களிடமே வேலைசெய்ய வொப்புவார்கள். தஞ்சை ஜில்லா மிராசுதார்களும் பஞ்சமக்குடிகளும் பரஸ்பரம் நன்மைகளை கவனித்து தீமைகளைப் போக்கி மனவமைதியுடன் மிஸ்டர் நாராயணஐயர் சொல்லியபடி இருவரும் இருப்பார்களாக.



# செம்படவருக்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

செம்படவருக்கு கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தும் விஷயமாய் மீன் இலாகாவின் கௌரவத்தலைவரான ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர் சொல்லியிருக்கும் யோசனைகளின் ஸாராம்சம் என்னவென்றால்:—

மீன் இலாகாவை நாம் விருத்திசெய்ய முயலுமுன், செம்படவர்களை ஜனச்சாரத்திலும் பொருளாதார நிலைமையிலும் உயர்த்த வேண்டியதவசியம். அச்சமுகத்தினரின் அந்தஸ்து, புத்திசாலித்தனம், கல்வி, தன்மதிப்பு, சுயேச்சை, சிக்கனவாழ்வு, கூட்டுறவுநிலைமை, க்ஷேமலாபம், திரவியம், சுகவாழ்வு, முன்னேறவேண்டிய ஆசை இவைகளை உயர்த்தவேண்டும். அவர்களுடைய மதுபான வழக்கத்தைக் குறைக்கவேண்டும். இவ்விஷயங்களை நாம் உயர்த்திவிட்டால், மீன் இலாகா சம்பந்தமான சகல காரியங்களும் விருத்தியடைந்துவிடும்.

செம்படவர்கள் இம்மாகாணத்திலுள்ள சமுகத்தினரில் அறியாமையில் பெரிதும் மூழ்கிக்கிடப்பவர்கள். அவர்களுக்குப் பாடசாலைகளாவது ஆசிரியர்களாவது இல்லை. பகலிலும் இரவிலும் வெகுவாக அவர்கள் கடலில் போய்விடுவதால் இதர ஜனங்களுள் அவர்கள் பழகுவதற்கில்லை. தவிர, உலகத்தில் வழங்கும் கருத்துகளையும் உணர்ந்துகொள்வதற்கு சவகாசமில்லை. தங்களுடைய தரித்திரத்தினுலும் பரம்பரை வழக்கத்தினுலும் அவர்கள் திக்கற்றிருக்கின்றனர்; கடலிலே ஏராளமாய் மீன்கள் பிடித்துவரும்பொழுது கிடைக்கக்கூடிய அதிக வரும்படியில் அவர்கள் மிச்சம்பிடித்து வைக்கக்கூடிய சாதனங்கள் பெற்றிருக்கவில்லை; அறியாமையினுலும் பரம்பரை வழக்கத்தினுலும் அவர்களுக்கு மதுபானம் மிகுந்திருக்கிறது; தகப்பனுடைய குணம் பிள்ளைக்குப் பிடிக்கிறது; உல்லாசமாய்ப் போதுபோக்கவும், காலங்கழிக்கவும் அவர்களுக்கு வசதி இல்லை. கள்ளுக்கடைதான் நாகரீகவாழ்வென அவர்கள் மதிக்கும்படி யிருக்கிறது. அவர்கள் வசிக்கும் ஸ்தலங்களோ கேவலம் குடிசைகளாகும். அக்குடிசைகளோ அசுத்தமான இடங்களில் கட்டப்பட்டுள்ளன. தினந்தோறும் மீன்பிடித்து விற்பதைவிட அவர்களுக்கு எதிலும் சிரத்தை ஏற்படுவதில்லை. அவர்களுக்கு ஆசிரியர்களும் புத்திமதி சொல்வோரும் கிடையாது. அநேகமாக அச்சமுகத்தினர் அனைவரும் அறியாமைக்கு ஆளாய் இருக்கிறார்கள். பொதுஜனநலத்தில் சிரத்தை வாய்ந்தவர்களாய் அச்சமுகத்தினருக்கு ஆதரவளிப்பார் யாருமிலர். பெரியமனிதர்களோ அவர்களைக் கொண்டு எவ்வளவு பலன் அடையலாமென்பதில்மட்டும் சிரத்தை கொண்டிருக்கின்றனர். என

வே அச்சமுகத்தினர் பிற்போக்கிலுள்ள வகுப்பினரென்பதில் என்ன தடை ? ஆதலின் அவர்களுக்கும் உற்ற ஆதரவு தேடிக்கொடுக்க வேண்டும்.

கடன் சுமையிலிருந்து நீங்கி வெளிப்படுவதற்கு அவர்கள் வகையற்றவர்களாய் இருக்கிறார்கள். இன்னும் தரகர்கள், பணம் கடனை கொடுப்போர் முதலியவர்களின் ஆதிக்கத்திலிருந்து அவர்கள் விடுதலையடையும்படியான நிலைமையில் இல்லை. கையில் பணம் கிடைத்துவிட்டாலோ அவர்கள் கண்டபடி செலவு செய்துவிடுவார்கள். எனவே அவர்களுக்குள் சிக்கனம் ஏற்பட்டாலொழிய அவர்கள் கதிமோட்சம் அடைவதற்கில்லை. உயர்நிலைமை அடையவேண்டுமென்றும், அடக்கம் ஒடுக்கமாய் இருக்கவேண்டுமென்றும், சிக்கனமாய் வாழவேண்டுமென்றும், கவலையும் ஆசையும் அவர்களுக்கு உண்டாகும்படி நாம் வழி தேடவேண்டும். அவர்களுடைய நாணயம் பங்கப்படாமல் இருக்கவேண்டுமானால், சிக்கனமும் செட்டுமே ஜீவாதாரமாகும். மிச்சம் பிடிப்பவனுக்குத்தான் வேண்டும்பொழுது கடன்கிடைக்குமென்றும், அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

செட்டாயும் சிக்கனமாயும் இருப்பதனாலேயே அவர்களுக்கு மிச்ச முதல் பணம் கிடைத்துவிடமாட்டாது. அவர்களின் உண்மையை மதித்து ஏற்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டிலிருந்து சிறுகாலக் கடன்கள் கிடைக்கவேண்டும். அயர்லாந்திலே செம்படவர்கள் படகுகளும் வலையும் வாங்குவதற்கு இலகுவாய் இருக்கும் வண்ணம், அவர்களுடைய சங்கங்களுக்குப் பணவுதவி கிடைத்து வருகிறது. விவசாய இலாகாவும் தொழில் இலாகாவும் மீன் பிடிக்கும் துறை முதலிய சாதனங்களை அபிவிருத்தி செய்யும் விஷயமாய் ஏராளமான பணத்தைச் செலவிடுகின்றன. சிறுகாலக் கடன் கொடுத்தல் இத்தேசத்திலே பிரபலமாய் இருக்கிறது. ஆதலின், படகுகள், வலைகள் முதலியவைகளை வாங்கவேண்டி செம்படவருக்கும் மீன்களை உப்புப் போட்டு காய்வைத்து விற்பனை செய்வோருக்கும் அவ்விதக் கடன் கிடைக்க வேண்டியதவசியமாகும். அவர்களுடைய நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கே அவ்விதம் பணவுதவி செய்தல் நலம்.

கூட்டுறவுமுயற்சியை ஏற்படுத்துவதனால் அவர்களுக்கு ஓரளவு பலன்கிடைக்குமென்பதோடு, பொதுக்கல்வியும் அவர்களுக்கு ஊட்டப்பட்டு வரவேண்டும். சாதாரணமான கல்வி யில்லாமற்போனால், கூட்டுறவின் லட்சியங்களை அவர்கள் நன்கு உணர்ந்து நடக்க முடியாது. தன்மதிப்பு, நம்மினத்தாரென்ற அபிமானம், இக்குணங்கள்



அவர்களுக்கு உதிக்கும் வண்ணம் அவர்களுக்கு அறிவு புகட்டி, ஞானத்தைப் பெருக்கவேண்டும். இதற்கு ஏற்ற மனிதர்களான ஆசிரியர்கள் தேவை. அந்த ஆசிரியர்களோ அன்பும் அபிமானமும் கொண்டு கல்வி போதிப்பவர்களாய் இருக்கவேண்டும்.

கல்வி புகட்டுவதற்கு அடிப்படையாக, அவர்கள் அனைவரும் கூடுவதற்குப் பொதுவான கட்டிடம் ஒன்று ஏற்படவேண்டும். அத்தகைய பொதுக்கட்டிடம் ஏற்படும் வரையில், கள்ளுக்கடைதான் அவர்கள் கூடும் இடமாய் இருந்துவரும். கவர்ன்மெண்டார் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அடுத்தாற்போல் ஆசிரியர்கள் வேண்டும். சிறிய பய்யன்களுக்கு மட்டுமேயல்லாமல், வாலிபர்களுக்கும் கல்வி புகட்டவேண்டும். வயதுவந்து விட்டவர்கள் தங்கள் பரம்பரையான துர்வழக்கத்தில் மூழ்கிக்கிடப்பார்களாதலின், சீர் கேடான நிலைமையிலிருந்து தப்புவதற்கு வழியில்லை என்று சிந்திப்பவர்களுக்கும், சீக்கிரம் தகப்பனாராகிறவர்களுக்குமே விசேஷமாகக் கல்வி புகட்டவேண்டும்.

ஆசிரியர்கள் எத்தகையவர்களாய் இருக்கவேண்டுமென்றால், (1) செம்படவ ஜாதியைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்: செம்படவரில் நடையுடைபாவனை, நிலைமை, கஷ்டசுகங்கள் இவைகளை உணரவேண்டுமானால், அவ்வினத்தாராக இருத்தல் அவசியம். தவிர அந்த ஆசிரியர்களோ செம்படவர்களுடனேயே வசிப்பவர்களாய் இருக்கவேண்டும், அச்சமுகத்தினருக்கும் நம்பிக்கையும் திருப்தியும் கொடுக்கக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். கேவலம் வயிற்றுப் பிழைப்புக்கு ஆசிரியராய் வருவோமென்போர் ஆசிரியர் வேலைக்கு லாயக்கல்ல. ஆதலால், அவ்வினத்தினரே ஆசிரியர்களாய் இருக்க நாம் ஏற்பாடு செய்யவேண்டும். (2) ஆசிரியர்கள் மிகவும் வாலிபர்களாய் இருக்கக் கூடாது. (3) கூடியவரையில் அவர்கள் நல்ல படிப்பாளிகளாய் இருக்கவேண்டும். (4) ஜனாச்சாரம்; பொருளாதாரம், கூட்டுறவு, செம்படவத் தொழில், தொழிலின் பலவாறான சௌகரியா சௌகரியங்கள், முதலியவைகளை உணர்ந்தவர்களாய் இருக்கவேண்டும்.

செம்படவ சமுகத்தினர் பிற்போக்கடைந்தவர்களாய் இருக்கையில், அத்தகைய ஆசிரியர்களை எப்படியடையமுடியும் என்று யாரும் கேட்பார்கள். அச்சமுகத்தினரிலே கூடியவரையில் படிப்பும் முன்னோக்கமும் அடைந்துள்ள வாலிபர்கள் சிலர் இருக்கின்றனர். ஆகவே மீன் இலாகா அதிகாரிகள் அத்தகைய வாலிபர்களைப் பொறுக்கி எடுக்கமுடியும். மிக்க ஜாக்கிரதையாகவும் உஷாராகவுமே வாலிபர்

கள் பொறுக்கி யெடுக்கப்படுவர்கள். பொறுக்கி யெடுக்கப்பட்ட வாலிபர்களோ உடனே தானூர் மீன் சாலையில் ஒன்று இரண்டு வருஷம் பயிற்சி பெறுவார்கள். அச்சாலையில் அவர்கள் நன்கு வேலையில் பழக்கி வைக்கப்படுவார்கள். இம்மாதிரி தானூர் சாலையானது ஒரு விதத்தில் கல்விச் சாலையாகும். அவ்வாறு பழக்கி வைக்கப்பட்ட பின்பு, அவர்களோ தங்களுடைய கிராமத்தில் ஆசிரியராகவும் மத குரு போலவும் வேலை பார்க்க அனுப்பப்படுவர். ஏற்கனவே யுள்ள கூட்டுறவு சங்கத்திலோ அல்லது புதிதாய் ஏற்படும் கூட்டுறவுச் சங்கத்திலோ கரியதரிசிகளாய் இருப்பவர்களுடன் அவர்களும் உதவி காரியதரிசிகளாக இருந்து, சங்க வேலையில் பயிற்சி பெறுவர்கள். காரியதரிசியாகவும் வேலை பார்ப்பவர்; பொதுக்கூட்டத்திலே இடைவிடாமல் பிரசங்கம் செய்து வருவர்; தம் இனத்தாருடன் அடிக்கடி கலந்து பேசி புதிய விஷயங்களைச் சொல்லி வருவர்; சுகாதார விஷயமாகவும் ஆலோசனை சொல்லுபவராய் இருப்பர். கள்ளுக்கடைக்காரனோ, பணம் கடன் கொடுப்பவனோ தன்னுடைய சொந்த லாபத்தைக் கருதி செம்படவர்களுக்கு நண்பனைப்போல நடித்து வருவது நீங்கும்படி அந்த ஆசிரியர்களே உண்மை நண்பர்களாக இருந்து வேண்டும் பொழுதெல்லாம் நல்ல யோசனைகளைச் சொல்லி வருவர்.

ஆசிரியர்களாக வேலை பார்க்கும்பொழுது அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படும். எப்படி யென்றால், பள்ளிக்கூடம் நடைபெற வேண்டிய நேரங்களிலே செம்படவரின் குழந்தைகள் அநேகமாய் வேலையின்மேல் போயிருக்கும். ஆகவே அன்றாடம் செம்படவர்கள் மீன் பிடிக்கப்போய்த் திரும்பிவரும் நேரத்தைக் கவனித்தே அதற்கு ஏற்றவாறு பள்ளிக்கூட நேரத்தை திட்டப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறெல்லாம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் சொல்லும்பொழுது, இது சாத்தியமாகுமா என்று சிலர் நினைக்கலாம். அபிமானத்துடன் தக்கபடி முயன்றால், எதுதான் சாத்தியமாகாது. ஆரம்பத்திலே அத்தகைய ஆசிரியர்களைப் பொறுக்கி யெடுத்துப் பழக்குவதுதான் கஷ்டம். ஆயினும் அதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம். இனி கூட்டுறவு சங்கங்களின் மூலமாய் மூலப்பொருள்கள், ஆகாரம், உடை முதலியவைகளை அவ்வகுப்பினருக்கு வினியோகிக்கமுடியும்.

செம்படவரின் கூட்டுறவுச் சங்கங்களிலே சேர்ந்துள்ள பலரும் ஸ்திரீகளாகவும் மீன் பிடிக்கும் வலைகளை சொந்தத்தில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். ஏழைகளோ சில்லரையில் பருத்தி நூல் முதலியவைகளை அதிக விலைக்கு வாங்குகின்றனர். தங்களுடைய மாசூலையும் சில்லரையில் பெரிய வியாபாரிகளுக்கு கொடுக்கின்றனர். அப்பெரிய



வியாபாரிகள் இவ்வளவுதான் விலையென்று கொடுப்பதை அந்த ஏழைகள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆதலின், பண்டங்களை மொத்தத்தில் வாங்கி அவர்களுக்கு வினியோகம் செய்வதில் அவர்களுக்கு எவ்வளவு பலன்கிடைக்கு மென்பதைக்குறித்து நான் விரித்துரைக்கவேண்டிய அவசியமில்லை.

மீன் இலாகாவுக்குப் பின்கண்ட இனங்களில் கவர்ன்மெண்டார் சம்மதி கொடுக்கவேண்டும். (1) தகுந்த முறையில் செம்படவருக்குள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தல்; (2) கவர்ன்மெண்டிலிருந்து கடன் பெற்று வினியோகம் செய்வதற்கு அச்சங்கத்தை மத்திய புருஷனாகக் கொள்ளுதல்; (3) ஒவ்வொரு வருஷம் இடைவிடாமல் பல வாலிபர்களைப் பொறுக்கி யெடுத்துப் பயிற்சி கொடுத்தல். இந்த ஏற்பாடுகளுக்கு கவர்ன்மெண்டார் சம்மதிப்பார்களானால், அவைகள் எப்படி நடை பெறுமென்ற விவரங்களைத் தெளிவாய் அறிவிக்கவும், இவ்வளவு பணம்வேண்டுமென்று புள்ளி போட்டுச்சொல்லவும், நான் தயாராய் இருக்கிறேன்.

### கவர்ன்மெண்டாரின் உத்திரவு.

இவ்வாறெல்லாம் ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் எழுதியதற்கு கவர்ன்மெண்டார் பதில் கொடுத்திருப்ப தென்னவென்றால்:—செம்படவ சமுகத்தின் தேவைகளைக் குறித்து ஸர் நிக்கல்ஸன் தெளிவாய்ச் சொல்லியிருப்பதற்காக அவரிடம் கவர்ன்மெண்டார் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அச்சமுகத்தினருக்குள் அவர் சொல்லிய மாதிரியாய் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதையும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகின்றனர். அவ்வகுப்பினரின் நன்மைக்காக ஏற்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் கிடைக்கவேண்டு மென்பதைப் பற்றித் தெளிவான விபரங்களை அவர் சொல்லி யனுப்பும்பொழுது, அவ்விஷயம் கவனிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராருடன் ஸர் நிக்கல்ஸன் கலந்துகொண்டு, கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த முயலுவாராக.

# ஐக்கியமுறையில் விவசாயமும் கைத்தொழிலும்.

கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் F. R. ஹெமிங்வே துரையவர்கள் மேற்கூறிய விஷயமாய் எழுதியதின்சாராம்சம்:— குடியானவர்களையும் தொழிலாளிகளையும் கோவாபரேஷன் எவ்வளவு விதத்தில் உபகரிக்க சாத்தியமாகும் என்பதை கீழே சுருக்கிக்காட்ட முயலுகிறேன். விவசாயம், கைத்தொழில் இவைகளில் சிரத்தையுள்ளவர்கள் இதை ஆராய்ச்சி செய்தால் பயனுண்டாகு மென்பது என் அபிப்பிராயம்.

ஞாயமான விதத்தில் ஜனங்களுக்கு கடன்கிடைக்கச் செய்வது கோவாபரேஷனின் சாதாரண ஏற்பாடு. விவசாயிகளும் தொழிலாளிகளும் சவுகார்களின் கையிலகப்பட்டு தங்கள் சாமான்களை அவர்களுக்கு அநியாயக் குறைச்சல் விலைக்கு விற்றுக் கஷ்டப்பட நேரிடுவதையும் அவர்கள் அதை அநியாய அதிகவிலைக்குவிற்று லாபமடைவதையும் தடுப்பதே ஒரு பெரிய உபகாரம். இந்நாணயத்தால் விலையுயர்ந்த விவசாயக் கருவிகள், மாடுகள், சாமான்கள், முதலியன வாங்கவும் சுலபமாகிறது.

ஜனங்கள் நல்ல நடத்தையுடன் உழைப்பாளிகளாய் முன்னுக்குவரப் பிரியப்படும்பொழுது நாணயச்சங்கம் ஏற்படுத்துவது சுலபம். ஆனால் சில மெம்பர்களாவது ஆஸ்தியுள்ளவர்களாக இருந்தாற்தான் பாங்கிலிருந்து கடன்கிடைக்கும். சில சமயங்களில் மெம்பர்களுடைய யோக்கியதையையும் கைத்தொழிலையும், பாங்கியின் தாராள நோக்கத்தையும் பொருத்துக்கூட கடன் கிடைப்பதுண்டு. இந்த ராஜதானியில் நல்ல மேன்பார்வையிருந்தால் சாதாரணமாய் ஒரு சங்கமும் நஷ்டமடையாதென்பது அனுபவசித்தம். அது இல்லாமையே சில இடங்களில் சங்கம் மூடுபடக் காரணமாகயிருந்தால் அதைக்கொண்டு இதரஜில்லாவில் புது ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி சந்தேகம் கொள்ளக்கூடாது. நாளடைவில் கோவாபரேஷன் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படலாம்.

சொஸைடியின் கடனுக்காக எல்லா மெம்பர்களுடைய முழு ஆஸ்தியும் ஈடாகயிருப்பதால் கடன் எந்த மெம்பருக்குக் கொடுத்தாலும் மெம்பர்களுடைய சிபார்சும் அவர்களுடைய பொறுப்பும் யோக்கியதையும் சிக்கனமும் மனுவில் குறித்த விஷயத்திற்கே பணத்தை உபயோகிக்கிறார்களா என்பதைப் பார்ப்பதும் ஆகிய இவைகள்தான் முக்கியம். ஐரோப்பிய நாடுகளில், ஐக்கியநாணய சம்பந்தமாய் கோவாபரேஷன் நல்ல வேலை செய்திருந்தாலும் கீழே சுருக்கிக் காட்டியிருக்கும் விவசாய விஷயங்களிலும் விசேஷ வேலைகள் செய்திருக்கிறது.



1. மெம்பர்களுக்கு சில்லரையில் பகிர்ந்து கொடுப்பதற்காக வீட்டு சாமான்களையோ விவசாய சாமான்களையோ அல்லது இரண்டையுமேயோ கூட்டாக வாங்குதல்.

2. சங்கத்துக்குச் சொந்தமாகும்படி விலையுயர்ந்த யந்திரங்களையும், கருவிகளையும் சங்கங்கள் கூட்டாக வாங்கி மெம்பர்களின் உபயோகத்திற்கு வாடகைக்கு விடுதல்.

3. மெம்பர்களின் விளைபொருள்களைக் கூட்டுறவில் விற்றல்.

4. ஐக்கிய முயற்சியில் சாமான்களைத் தயாரித்து பிறகு ஐக்கிய முயற்சியில் விற்றல்.

மேற்கூறிய முறைகளில் அதிலும் முக்கியமாய் 1-வது, 4-வது இனங்களில் ஏற்பட்டிருக்கும் உபயோகங்களும் விருத்தியம்சமும் ஆச்சரியகரமாயிருக்கின்றன. இந்தியாவும் அம்மாதிரி அனுகூலங்களை அதிலும் முக்கியமாய் வீட்டு செலவு வேலைகளை அனுஷ்டித்து நன்மையடையலாம். அம்மாதிரி நன்மையடையும் விதங்களையும் நிலைமைகளையும் கீழே காட்ட முயன்றிருக்கிறது.

## I

சாமான்களை மொத்தமாக வாங்கி தங்களுக்குள் பிரித்துக்கொள்வதில் அநேக நன்மைகளுண்டு. தாகுச்சிலவு, லாபம், முதலியவைகளைச் சுமர்த்தும் சில்லரைக் கடைகளுக்குப் போகாமல் மொத்தமாய் வாங்குவதனால் மேற்படி லாபங்கள் மெம்பர்களையே அடைகின்றன. வியாபாரிகளும் இதை மதிப்பாகவும் கௌரவமாவும் பாராட்டுவதோடு சங்கங்களும் அவர்களின் சரக்குகள் நல்லதாக இருக்கும்படி கட்டாயப்படுத்தவும் கூடும். சங்கம் வியாபாரத்தில் நேராக சந்திக்கும் பொழுது போட்டியினால் சாமான்களின் உண்மை விலை தெரிந்துகொள்கிறது. ஒரு சேணிய மெம்பர் தன் நூலை உள்ளூர் முதலாளியிடமே விற்கவேண்டியிருந்தால் உண்மைவிலையை அறியவேமுடியாது. (4) இதனால் ரெயில், வண்டி, கூலிச் சத்தங்கள் தனித்தனியாய் கொடுக்கவேண்டியில்லாமல் மொத்தமாய் ஏற்படுவதால் விசேஷ செட்டு ஏற்படுகிறது. பொருளாதாரம் பலமாவதனால் சரியான மலிவுகாலத்தில் ஏராளமாய் வாங்கிச் சேகரிக்க முடியும்.

மெம்பர்களின் தேவைகளை கவனிக்கும் சொஸைடிகள் பலவிதமாயுள்ளன. இவைகளை இரண்டு பெரிய முக்கியப் பிரிவினைகளாக வகுக்கலாம். ஒன்று எல்லா மெம்பர்களின் தேவைகளை எழுதி வாங்கி வைத்துக்கொண்டு யுக்தமான காலங்களில் அவைகளை மொத்தமாக வாங்கி

ஜாப்தாப்படி கொஞ்சம் லாபம் கூட்டியோ அல்லாமலோ அவரவர்களுக்கு விநியோகம் செய்தல். இவ்வேற்பாட்டினால் கிடைச்சரக்காகப் போய் நஷ்டம் வரக் காரணமில்லை. ஆனாலும் பின்னால் வேண்டியவைகளை முந்தியே தீர்மானிக்க முடியாதாகையால் இடையில் வேண்டியிருக்கும் சாமான்களுக்கு வெளியாரிடம் போகவேண்டி யிருக்கிறது. இதனால் தகுந்த கணக்குகளுடனும் சிப்பந்திகளுடனும் சொஸைடிகள் ஸ்டோர்கள் வைக்க முயலுகின்றன. இரண்டாவது அப்படி ஸ்டோராக ஏற்படுத்தாமல் ஐக்கியக் கடன் சட்டப்படி மெம்பர்களின் தேவைகளுக்கு வேண்டிய ஆர்டர்களை மொத்தமாய் மேற் சொன்னபடி சொஸைடி பேரால் அனுப்புதல். இம்மாதிரி வேலைகளை மேற்கூறிய ஸ்டோர்களே திறமாய் நடத்தலாம். இந்த இராஜதானியில் மதராஸ், மதுரை, கோயமுத்தூர், திண்டுக்கல் முதலிய இடங்களில் மேற் குறித்தவண்ணம் ஸ்டோர்கள் ஏற்கனவே இலாபகரமாய் நடந்து வருகின்றன. விவசாயிகளுக்கு வேண்டிய விதை, எரு, கலப்பை முதலியவைகளையும் கூட்டு ஏற்பாட்டில் மிக்க உபயோககரமாக சப்ளை செய்து இப்பொழுது வெளியில் போகும் விசேஷ ஆர்டர்களைத் திருப்பி பொதுநல விருத்தியை அடையலாம். பர்ஹாம்பூரில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட சேணியர்களின் சங்கம் செய்த வேலையை கவனித்தால் நூலைக்கூட்டாக வாங்கி வேலை செய்வதனாலுண்டாகும் பலன் எல்லாவிதத்திலும் மிகத் திருப்திகர மென்று தெரிகிறது.

## II

விலை யுயர்ந்த யந்திரங்களை சங்கங்களுக்குச் சொந்தமாக வாங்கி மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுவதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவைகளை சரிவரக் கையாடத்தெரிந்த ஆள்களையும், கொஞ்சம் பிசகு ஏற்படும் பக்ஷத்தில் சமீபத்தில் பழுதுபார்க்கக்கூடிய சௌகரியங்களையும் பற்றி முதலில் கவனிக்கவேண்டும். செலவு, வட்டி, எதிர் பாராத செலவு, தேய்வு, ரிபேர் பண்டு முதலியவைகளை கவனித்து கட்டணம் விதிக்கப்படவேண்டும். குடிகளின் ஆதரணையும் நீடித்திருக்குமா என்பதையும் அறியவேண்டும்.

## III

தேவைகளை ஐக்கிய முயற்சியில் வாங்குவதனால் நன்மை யிருப்பதுபோல் மெம்பர்களின் சரக்குகளையும் அவ்வாறே விற்பதில்கூட நன்மை இருக்கிறது. மெம்பர்களுடைய சரக்குகளைத் தரவாரியாகச் சேர்த்து காலமறிந்து மொத்தமாய் விற்கவேண்டியது. இதனால் கீழ்க்கண்ட சௌகரியங்கள் உண்டாகின்றன. (1) அதிக விலை கிடைக்கிறது. தரகர்கள் ஒழிந்து போகிறதினால் அந்த லாபம் சங்கத்தைச் சேருகிறது. தவிர,



சங்கம் கலப்புகள் செய்யாது என்ற நம்பிக்கையினால் வியாபாரிகள் அதிக விலையும் கொடுப்பார்கள். (2)மொத்தமாய் அனுப்புவதில் விசேஷவண்டிக் கூலிச் சிலவுகள் மீதியாகின்றன. (3) ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தங்கள் சரக்குகளை தாங்களே விற்கவேண்டிய சிரமும் கவலையுமில்லை. சரக்குகளைக் கலப்பிடம் செய்யாமல் கண்டிப்பாய் சுத்தமாகவே உண்மையுடன் விற்று சங்கங்கள் நல்ல பெயர் எடுக்கவேண்டும். சங்கமானது தன் மெம்பர்களிடமிருந்து, யதோக்தமாய் விலை கொடுத்துச் சரக்குகளை வாங்கவேண்டுமென்பதில்லை. மெம்பரின் ஏஜண்டைப்போல் நடந்து சங்கமானது கொஞ்சம் கமிஷன் பெற்றால் போதும். சமீபத்தில் அனந்தபூரில் ஒரு பாகத்திலுள்ள விவசாயிகள் தங்கள் தானியங்களுக்கு நல்ல விலை கிடைக்காததினால் எல்லா வற்றையும் கூட்டுறவில் தரவாரியாகச் சேர்த்து பிரசுரித்தவுடன் சாதாரண கிரயத்துக்கு கிடைப்பதைவிட அதிக விலையே எளிதாகக் கிடைத்தது. மேலும் திருநெல்வேலியில் விவசாய இலாகாவின் பராமரிப்பின் கீழ் சில விவசாயக் கூட்டத்தார் தங்கள் பஞ்சுகளைக் கூட்டுறவில் மொத்தமாக விற்று விசேஷ லாபமடைந் திருக்கிறார்கள்.

## IV

இங்கிலாந்து அயர்லாந்து முதலிய இதர தேசங்களில் பாலை விசேஷமாய்ச் சேகரித்து வெண்ணெய் பாலடைக்கட்டி முதலியவைகளை அசாத்திய விலையுள்ள யந்திரங்களைக்கொண்டு ஐக்கிய முறையில் செய்வதினால் ஏராளமான இலாபம்கிடைக்கிறது.இவ்விலையுயர்ந்தயந்திரத்தினால் சரக்கு உண்டாக்கும் திறமையும், ஜல்தியும், செட்டும் ஒரு குடியானவனாலும் தன் வீட்டில் எவ்வளவு சிரமப்பட்டுப் பார்த்தாலும் பெறமுடியாது. அவனால் தனியாக அம்மாதிரி யந்திரம் வாங்கவும் முடியாது. இம்முறை இந்திய விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்றதாவென்பதை கவனித்தால், பஞ்சுகடைதல், கரும்பாலைவைத்தல், வேர்க்கடலை யுரித்தில், அரிசிகுத்தல், இவைகளை உலக வியாபாரங்களுக்காக திறமாகவும் சிக்கனமாகவும் விலையுயர்ந்த மெஷின்களைக்கொண்டு மிக்க லாபகரமாகச் செய்யலாம். இதேமாதிரி நெசவுகாரர்களும் செய்யலாம். இவைகளிலெல்லாம் முன் சொன்னதுபோல் அதிஜாக்கிரதையான பராமரிப்பும் ஊக்கமும்வேண்டும். மேற்கூறிய முயற்சிகளுக்குத் தனியாகவும் சங்கங்களேற்படலாம், அல்லது ஏற்கனவேயிருக்கும் நாணயச் சங்கங்களும் செய்யலாம். இதில் பிந்தியதுதான் அதிக உபயோகமுள்ளதாகும்.

இந்த இராஜதானியில் கிராம நாணயச் சங்கங்களே விசேஷம். அவைகள் பொறுப்புவரையற்ற ஏற்பாட்டில் உள்ளன. அடுத்தபடி

அர்பன் பாங்கு வகுப்பைச்சேர்ந்த 200 சங்கங்களுண்டு. அர்பன் பாங்கிகள் கிராமச் சங்கங்களின் தேவைகளை தங்கள் டிபாஸிட்டு முதலிய பணங்களைக்கொண்டு சமாளித்துவந்தும் எப்பொழுதாவதுசிலசமயங்களில்தான் பெரிய கோவாபரேடிவ் பாங்கியில் வாங்குகிறது. இப்பொழுது 14-ஜில்லாக்களில்சென்ட்ரல் பாங்கிகளிருகின்றது. இதரஜில்லாக்களிலும் பாங்கிகள் ஒருகாலம் ஏற்படலாம். இவைகளில் சங்கங்களும் தனிமெம்பர்களும் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். டிவிடெண்டு 100-க்கு 9 ஆக வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் பொறுப்பானது, ஏற்பட்ட பங்குக் கிரயத்தின் வரையே. இந்த பாங்குகளில் பங்குப்பணத்தைத் தவிர லோகல் டிபாஸிட்டுக்களினாலும், இதர சென்ட்ரல் பாங்கிகளிலிருந்தாவது மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்தாவது கடன் பெறுவதாலும் வேண்டிய நிதி ஏற்படுகிறது. இவைகள் கிராம நாணயச்சங்கங்களுக்கு 100-க்கு $7\frac{1}{2}$ வட்டிவீதமும் தங்கள் மெம்பர்களுக்கு 100-க்கு $9\frac{1}{2}$ வட்டிவீதமும் கடன் கொடுக்கின்றன. மதராஸ் சென்ட்ரல் பாங்கியில் இப்பொழுது தனிமெம்பர்கள்தான் அதிகமா யிருக்கிறார்கள். சொஸைடிகள் இனி அதிகமாக மெம்பர்களாகுமென்று நம்பலாம். இந்த பாங்கில்கூட டிவிடெண்டு 100-க்கு 9 ஆகத்தான் ஏற்பட்டிருக்கிறது. பாங்கியின் விசேஷதனம் லோகல் டிபாஸிட்டினால்தான். ஆனால் சென்ட்ரல் பாங்கிகளிலிருந்தும் டிபாஸிட்டு பெறுவதோடு மதராஸ் பாங்கியோடும் ஏராளமான திரவிய லேவாதேவி வைத்திருக்கின்றன. இந்த பாங்கி இந்த இராஜதானியிலுள்ள சென்ட்ரல் பாங்கிகளுக்கு அபெக்ஸ் பாங்கியாயிருந்து அவைகளுக்குத் தேவையானபொழுது கடன் கொடுக்கவும் அவைகளின் மிச்சத்தொகையை டிபாஸிட்டில் ஏற்றுக்கொள்ளவும் என்றே ஏற்பட்டது. சென்ட்ரல் பாங்கி இல்லாத இடத்தில் கிராம நாணயச் சங்கங்களுக்கும் அது பணவுதவிசெய்யவேண்டும். சாதாரணமாய் சென்ட்ரல் பாங்கிக்கு 100-க்கு 7 வீதமும், கிராம நாணயச்சங்கங்களுக்கு 100-க்கு $7\frac{1}{2}$ வீதமும் வட்டிக்குக் கொடுக்கிறது. இந்த ஏற்பாட்டின் உபயோகம் என்னவென்றால், கிராமநாணயச் சங்கங்களெல்லாம் தங்கள் சென்ட்ரல் பாங்கிக்கு மெம்பராவதோடு, எல்லா சென்ட்ரல் பாங்கிகளும் வலுவான கிராம நாணயச்சங்கங்களும் அபெக்ஸ் பாங்கியில் மெம்பராகவேண்டும். இதைத் தவிர சமீபத்தில் டிஸ்ட்ரிக்ட் யூனியன் அல்லது லோகல் யூனியன் என்று ஒரு மேற்பார்வை சங்கம் யேற்பட்டு விருத்தியாகிக்கொண்டு வருகிறது. இதில் அநேக தினுசுகள் இருந்தபோதிலும் சாதாரணமாய் லோகல் யூனியனில் தன் சுற்றுப் புறங்களிலுள்ள அநேக கிராமநாணயச் சங்கங்கள் பங்குகளெடுத்துக்கொள்ளுகின்றன. ஆனால் அந்தப் பங்குப்பணத்தை அவைகளிடமிருந்து வசூல் செய்யாமல் சேமநிதியைப்போல் அது உபயோகிக்கிறது. யூனியன் கடனும் கொடுக்கிறதில்லை. டிபாஸிட்டும் எடுத்துக்கொள்ளுகிறதில்லை. அதற்கு ஐக்கிய முறைக் கட்டணம் என்று ஒரு சிறிய வரும்படி உண்டு. ஆனால் முக்கிய நிதி சென்ட்ரல் பாங்கிகளிலிருந்தும் ஐக்கிய சங்கங்களிலிருந்துந்தான் வருகிறது. சென்ட்ரல் பாங்கியிலிருந்து எடுத்த கடன்பேரிலும் அப்படி எடுத்த முந்திய வருஷப் பாக்கியின்பேரிலும் 100-க்கு $\frac{1}{2}$ விழுக்காடும், அவைகள் பெறும் பிக்சட், (Fixed) ரெகரிங் (recurring) டிபாஸிட்டுகளில் 100-க்கு $\frac{1}{2}$ விழுக்காடும் ஐக்கியச் சங்கங்கள் கொடுக்கின்றன. மேலும் யூனியனைச் சேர்ந்த சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்பேரில் பாங்கி 100-க்கு $\frac{1}{4}$ விழுக்காடு கொடுக்கிறது. இப்படி ஏற்படும் நிதியைக்கொண்டு யூனியன் தேவையான சூபர்வைசரை நியமித்து அடிக்கடி சங்கங்களைப் பரிசோதிக்கிறது. யூனியன் மெம்பர்கள்கூட சில சமயம் திருப்திகரமில்லாதசங்கத்தைப்பார்வையிட்டு சீர்திருத்தப்பார்க்கிறார்கள். இவ்வேற்பாடு மிகத்திறம் என்பதில் ஆக்ஷேபமில்லை. மொத்தத்தில் யூனியன்களுடன் சேர்க்கப்பட்ட கிராம நாணயச்சங்கங்கள் 1758.



ரிஜிஸ்ட்ராரும் அவர் சிப்பந்திகளும் சட்டங்கள் சரிவர அனுஷ்டிக்கப்படுகின்றனவா, கணக்குகளை சரிவர வைத்து சோதித்து கடன்களைக்கொடுத்து அவைகளும் சரியாக விநியோகிக்கப்பட்டு காலத்தில் திருப்பிக் கொடுக்கப்படுகின்றனவா என்னும் விஷயங்களை மொத்தமாய் கவனிக்கிறார்கள். வேண்டிய இடங்களில் புதுச்சங்கங்களும் ஏற்படுத்துகிறார்கள்.

சங்கங்களை மூடுவதைத் தவிர ரிஜிஸ்ட்ராருக்குள்ள மற்ற எல்லா அதிகாரமும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுக்கும் உண்டு. அவர்கள் சங்கங்கள் ஸ்தாபித்து தங்கள் பார்வையில் நடத்துகிறார்கள். தங்கள் செக்ஷன் வேலைக்கு ஜவாப்தாரியிருந்துகொண்டு சங்கங்களிலிருந்து பாங்கிகளுக்குப் போகுங்கடன் மனுக்களையும் சிபார்சு செய்கிறார்கள். கடன்கள் சரியாய் உபயோகிக்கப்பட்டுத் திருப்பிக்கொடுக்கப் படுகின்றனவா என்றும் பார்க்கிறார்கள். ஒவ்வொரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் கீழேயும் சில இன்ஸ்பெக்டர்களிருந்து சாதாரணமாய் ஒவ்வொருவரும் 50 சங்கங்களைப் பரிசோதிக்கிறார்கள். போகப்போக யூனியன் சூபர்வைஸர்களே இந்த வேலைகளை ஏற்றுக்கொண்டு இன்ஸ்பெக்டர்களுக்கு தணிக்கை வேலையை மாத்திரம் தான் வைப்பார்கள் என்று நம்பலாம்.

---

# சுமங்கலி கிராம கோவ்ாபரேடிவ் சொஸைடி.

வடஆற்காடு ஜில்லா, செய்யாறு தாலூக்கா, 2541 நெ. சுமங்கலி கிராமத்திய கோவாபரேடிவ், சொஸைடியில், மஹாசபிகர்களின் மீடிங்கில், பிரஸிடண்டு வித்வான் கிராமாதிகாரி ம-ா-ா-ஸ்ரீ, விஜயராகவாசாரியாரால் செய்யப்பட்ட உபந்நியாசத்தின் ஸாராம்ஸம்.—

கனவான்களே? தற்சமயத்தில், ஸ்வதேச ஜனங்களின், நன்மையையும், சௌகரியத்தையும், கருதி சில வருடங்களாக கண்யமுள்ள கன தனவான்கள்; ஐக்யமுற்று, அதிக விருத்தியையும் அபேக்ஷியாமல், அளவற்ற மூலதனத்தைவைத்து அதை சரிவர பரிபாலிக்கும் விஷயத்தில் நமது காருண்ய கவர்ன்மெண்டாருடைய அநுகூலத்தையும் பெற்று சென்னையில் "ஐக்கிய நாணயச் சங்கம்" என்று ஒரு நிதியை ஸ்தாபித்து அதற்கு உபப்ரமாணங்களாய் அநேக உப சங்கங்களையும் ஏற்படுத்தி அவைகளை சரியாய் நடத்தும் விஷயத்தில் உயர்ந்தவித்யாபட்டமும் அந்தஸ்துமுடைய கனவான்களை நிர்வாஹர்களாக நியமித்து ப்ரகிருதம் ஜெநிதி சுக்லபக்ஷ சந்திரன்போல் வரவர விருத்திக்குவந்து, அதனால் சுதேசிகள், க்ஷேமத்தையும் நன்மையையும் அடைந்து வரும் விஷயம், யாவராலும், மெச்சத்தக்கதே.

கிராமச்சங்கமொன்றை இவ்வூரிலும் ஏற்படுத்தவேண்டுமென்று உங்களுடைய கோரிக்கையை இப்போது ஸெக்ரிடெரியாயிருக்கும் M. ஸுந்தரவரதாசாரியர் அறிந்து ஊக்கத்துடனும் யதார்த்தமான எண்ணத்துடனும் இவ்வூரில் ஷை சங்கத்தை கனம் பொருந்திய அசிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களுடைய பேருதவியினால் ஸ்தாபிக்கும்படி விடா முயற்சி செய்ததின்பேரில் அதிகாரி ம-ா-ா-ஸ்ரீ, வேதாசலஅய்யர் அவர்களே இவ்வூருக்கு விஜயம்செய்து, கிராம விஷயமான சில சிக்குகளை அகற்றி ஸ்தாபித்து நீங்கள் கோரிய 7,000 ரூபாயும் செய்யாறு தாலூக்கா கஜானா மூலமாய் வரவழைக்கப்பட்டு உங்களுக்கும் பட்டுவாடா செய்யப்பட்டுமிருக்கிறது.

சிநேகிதர்களே ! இவ்வூரிலும் அடுத்த ஊர்களிலும் சில தனவந்தர்களிருந்தாலும் அவர்கள் ஸ்வலாபத்தை நாடி சில சமயத்தில் அதிக வட்டிக்கும் அபேக்ஷிக்கும்படி நேர்ந்து அதனால் நீங்கள் அடைந்த கஷ்டநஷ்டங்களை நீங்களே யோசிக்கின் வியக்தமாகும்.

இந்த சந்தற்பமோ யுத்த நெருக்கடியானதால் பணம் கிடைப்பது துர்லபமா யிருந்தாலும்கூட! அடுத்த அனுக்காவூர் யூனியன் இன்ஸ்பெக்டர், சூப்ரவைஸர் இவர்களுடைய பேருதவியினாலும் ஸெக்ரிடெயினுடைய வேண்டுகோளினாலும் இச்சமயம் உங்களுக்கு ஷை ரிஜிஸ்ட்ரார் அவர்களால் திரவிய சகாயம் செய்யப்பட்டது உங்களுடைய பாக்கியமே.



இந்நிதியில் ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்தார்கள் வர்ணபேதம் வகியாமல் ஸமத்வஞானமுள்ள யோக்கியர்களாயும் ஸெக்ரிடெரியும் நிஷ்பக்ஷபதியாயுமிருப்பதால் இச்சங்கம் விருத்திக்கு வரக்கூடுமென்று நம்புகிறேன்.

நீங்கள் நிதியில் அவாவுடன் தனத்தை வாங்கி பலன்களை பரிஷ்கரித்ததுபோல் நிதிக்கு செலுத்தவேண்டிய வருஷத்தவணைப்படி தொகையை ஸெக்ரிடெரியிடம் செலுத்துவீர்களென்றும் நம்புகிறேன்.

இன்னும் உங்களைப்போன்ற, தனாபேக்ஷகர்களையும் ஷேர்களை எடுத்துக்கொள்ள செய்வது நிரம்பவும் பிரதி யுபகாரமாகும்.

இந்த சங்கமும் இதற்கு ஆதாரமாயுள்ள யூனியன் ஜில்லா சங்கங்களும் ஷை சங்க நிர்வாஹகர்களும் ஷை நிதியின் மூலக்காரணர்களான தனவான்களும்இதற்கு சகாயமாயிருக்கும் காருண்யகவர்ன்மெண்டாரும் நீடூழி வாழவேண்டுமென்று இப்போதுநமது காருண்ய சக்ரவர்த்தி அவர்கள் நடத்திவரும் தர்ம யுத்தத்தில் "ஸத்யேந லோகாந் ஜயதி" என்ற வாக்குப்படி, ஸ்ரீ சக்கிரவர்த்தி திருமகன் ராக்ஷஸர்களை ஜயித்ததுபோல் நமது மஹா சக்ரவர்த்தியும் விரோதிகளை ஜயித்து கீர்த்தியையும் ஜயக்கொடியையும் நாட்டும்படிக்கும் ஸ்ரீராம பிரானை வாயால்துதித்து அஷ்டோத்ராச்சனை செய்து பிரார்த்திக்கக் கடவோம்.

---

# செய்யார் தாலூக்கா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

இம்மகாநாடு நாளது ஆகஸ்டு மாதம் 19-ந்தேதி அனக்காவூரில் கூடிற்று. அக்காலம் சேலம் செக்ஷன் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ A. ராமானுஜாச்சாரியார் B. A. அவர்கள், விவசாய இலாகா டிப்டி டைரக்டர் ம-ா-ா-ஸ்ரீ செல்வ ரங்காராஜா அவர்கள், இந்த தாலுகா தாஸில்தார் ம-ா-ா-ஸ்ரீ கதிர்வேலு முதலியார் அவர்கள், போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர் ம-ா-ாஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் இன்னும் பலபிரமுகர்களும் வந்திருந்தார்கள். இந்த தாலுக்கா யூனியனில் அணைக்கப்பட்ட சொஸைடிகளின் பிரதி

நிதிகளும் மெம்பர்களுமாக சேர்ந்து சுமார் 200. ஐக்கியர்களும், வந்தவாஸி யூனியனைச்சேர்ந்த வடநாங்கூர் ம-ள-ள-ஸ்ரீ அருணாசலமுதலியார் முதலிய சில பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

பகல் 1-மணிக்கு சபைகூடியதும் யூனியன் பிரஸிடெண்ட் ம-ள-ள-ஸ்ரீ ப. பெரியதம்பி முதலியார் அவர்கள் அக்கிராசனாதிபதிக்கும் பிரதிநிதிகளுக்கு வந்தனோபசாரம் சொல்லி வரவேற்பு பத்திரிகை படித்து வட ஆற்காடு ஜில்லா பாங்கிங் யூனியன் நிர்வாகசபை மெம்பராகிய திருவண்ணாமலை ம-ள-ள-ஸ்ரீ M. S. சேஷாசலய்யர் அவர்களை அக்கிராசனாதிபதியா யிருக்கும்படி பிரேரேபித்து சபையோரால் ஆமோதிக்கப்பட்டது.

அக்கிராசனாதிபதியவர்கள் ஆரம்பத்தில் ஐக்கிய சங்கங்களின் பரிபாவங்களையும், அவைகளால் நமது தேசஜனங்களுக்கு உண்டாகக் கூடிய, நன்மைகளையும், இவ்விதமாய் மகாநாடு ஆங்காங்குகூடி ஐக்கிய பிரபாவங்களைப்பற்றி ஆலோசிப்பதால் ஐக்கிய முயற்சி நம் தேசத்தில் முன்னேற்றமடைய ஹேதுவாகுமென்றும் சுருங்கச் சொல்லிய பின்னர், யூனியன் காரியதரிசி ம-ள-ள-ஸ்ரீ பி. நாராயணய்யர் அவர்களால் யூனியனுடைய வருஷாந்திர ரிபோர்டும், அனக்காவூர் சங்கம் காரியதரிசி ம-ள-ள-ஸ்ரீ சா. இராஜகோபாலய்யர் அவர்களால் அனக்காவூர் சங்க ரிபோர்டும், கொடநகர் காரியதரிசி ம-ள-ள-ஸ்ரீ கோபாலதேசிகாச்சாரியர் அவர்களால் கொடநகர் சங்க ரிபோர்ட்டும். படிக்கப்பட்டன.

வடநாங்கூர், ம-ள-ள-ஸ்ரீ அருணாசல முதலியார் அவர்கள் குறுகிய காலகடன் என்பதைப்பற்றி ஒரு சிறு உபந்நியாசம் செய்தார். விவசாயிகளுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கடன்களையெல்லாம் ஒன்று சேர்த்து நீண்டகால கடனாக, ஐக்கிய சங்கங்கள் கொடுத்து பயிர் முதலிய தினசரி செலவுகளுக்குஅவ்வப்போது வேண்டியசகாயம் செய்யாமலிருப்பது ஐக்கிய சங்கங்களின் அபிவிர்த்திக்கு குறைவென்றும், சங்கங்கள் முதன்மையாய் குறுகிய காலகடன்களை கொடுக்க ஏற்பாடு செய்தபிறகு, போதுமான திரவியம் கிடைக்குமானால்வெகு ஜாக்கிரதையாய் கவனித்து கொஞ்சமாக கொடுத்துவருவது யுக்தமென்றும் சொல்லி முடித்தார்.

பின்னர் சோகத்தூர், ம-ள-ள-ஸ்ரீ M. S. விஜயராகவாச்சாரியர் அவர்கள் பஞ்சாயத்தின் கடமைகள் என்பதைபற்றி ஒரு சிறு வியாசமும், புல்லடின் பத்திரிகையின்பேரில் சில வாழ்த்து கவிகளையும் எழுதி படித்து முடித்தார்.

விவசாய இலாகா டிப்டி டைரக்டர் ம-ள-ள-ஸ்ரீ செல்வரங்கராஜா அவர்கள், நன்னில நஞ்சைகளுக்கும் கிளர்நில நஞ்சைகளுக்கும் எருவிடும் விஷயத்தைப்பற்றி பிரசங்கம் செய்தார்.



கிராமங்களிலே மாட்டு மூத்திரங்களில் பயிருக்குவேண்டிய உரமான சத்து விசேஷமாயிருந்தும் விவரம் தெரியாமல் குடிகள் அந்த சத்துக்களை வீணாக்குவதன்றி, சுகாதாரத்திற்கு கெடுதியாகவும் செய்துவிடுகிறார்கள் என்றும் அவைகளை ஒன்றுசேர்த்து பயிர்களுக்கு உபயோகப்படுத்தினால் மற்றெல்லா உரங்களையும்விட அதிக சத்தைக் கொடுக்கக்கூடியதென்றும் மேட்டுப்பாங்கான பூமிகளில் உள்ள உப்புசத்து பள்ளங்களில் கொண்டுவரப்பட்டு, நீர் அவ்விடத்தில் தங்கி பூமியுடன் கலந்து இறுகி போவதால் கிளர் நிலங்கள் உண்டாவதென்றும் அதினின்று அந்த உப்புசத்தை இழுத்துக்கொண்டு குறைக்கக் கூடியவிதமாய் பனைஓலை, வைக்கோல் முதலியவைகளை போட்டு சாகுபடிசெய்தால் கிளர் மாறுமென்றும் சொல்லி முடித்தார்.

பிறகு பத்துநிமிஷம் சிற்றுண்டி அருந்தியபின்னர் சபைகூடிற்று. அக்காலம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் ம-ள-ள-ஸ்ரீ A. ராமாநுஜாச்சாரியர் அவர்கள் ஐக்கிய சங்கங்கள் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டதின் காரணங்களும், கவர்ன்மெண்டார் ஐக்கியபிரபாவம் பரவுவதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் சங்கங்கள் தங்களுக்கும் வேண்டிய முதல்களை மெம்பர்களிடமிருந்து அவர்களுடைய சிக்கனத்தாலேயே சம்பாதிக்கவேண்டுமென்றும் சங்கம் கொடுக்கும் கடன்களை எந்த காரியத்திற்காக கொடுக்கப்பட்டதோ அதற்கு உபயோகப் படுகிறதாவென்று பார்க்கவேண்டுமென்றும் இன்னும் சில புத்திமதிகளையும் சொன்னார்.

கீழ்கண்ட பொதுநன்மையான தீர்மானங்கள் மகாசபையாரால் அங்கீகாரம் செய்யப்பட்டன:—

நம் நாட்டில் கல்வி அபிவிர்த்தி குறைவால் ஐக்கிய சங்கங்கள் போதுமானபடி அதிகரிப்பதற்கு இடமில்லாமலிருப்பதால் அவிவிவேகமே பொதுஜனங்களிடத்தில் குடிகொண்டிருப்பதாலும் தங்கள் முன்னேற்றத்திற்குவேண்டிய சௌகரியங்களை தேடிக்கொள்ள அசக்தர்களாயிருக்கிறபடியாலும் பிரதி ஐக்கியஸ்தர்களும் தங்களாலானமட்டும் பிரயாசப்பட்டு ஆங்காங்கே எல்லா ஜாதியாருக்கும் முக்கியமாய் பஞ்சமர்களுக்கு பிரைமரிடி பப்பிற்காவது பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டுமென்றும், இந்த யூனியனைச் சேர்ந்த சொஸைடிகளிருக்கும் கிராமங்களில் இங்கிலீஷ் பள்ளிக்கூடமில்லாததால் காருண்ய டிஸ்டிரிக்ட் போர்டார் அவர்களால் திருவத்தி புரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் செகண்டெரிஸ்கூலுக்கு பிரதி ஐக்கிய சங்க மெம்பர்களின் பிள்ளைகளையுமனுப்பி, ராஜ பாஷையில் தேர்ச்சி செய்விக்க பிரயத்தினம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இந்த யூனியனைச் சேர்ந்த சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய விதை எருக்களை மெம்பர்களிடம் நிர்தாரணம் செய்துகொண்டு யூனியனுக்கு இன்டெண்டு செய்த பின்னர், யூனியன் விவசாய இலாகா, ஐக்கிய இலாகாதார் இவர்களின் அங்கீகாரத்தின்மேல் மொத்தமாய்த் தருவித்து சங்கங்களுக்கு ஏஜண்டா யிருந்து உடனே பட்டுவாடா செய்ய வேண்டியதென தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய சங்கங்களிருக்கும் கிராமங்களில் சங்கத்தின் பஞ்சாயத்தாரைக் கொண்டாவது இதரர்களைக் கொண்டாவது கிராம பஞ்சாயத்து ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டாரை கோரவேண்டியதென தீர்மானிக்கப்பட்டது.

இங்கு விஜயம் செய்திருந்த ம-ா-ா-ஸ்ரீ தாசில்தார் அவர்கள் யுத்த கடனுக்கு எல்லா ஐக்கியர்களும் தங்களாலியன்ற அளவு சகாயஞ் செய்ய வேண்டுமென்றும் அதன் பிரயோசனங்களைப் பற்றியும் கௌரவமாய்ச் சொன்னார்.

பின்னர் சபாநாயகர் அவர்கள் தன் முடிவுரையில் இந்த யூனியனைச் சேர்ந்த சங்கங்கள் பொதுஜனங்களுக்காக தாம் எடுத்துக்கொள்ளும் உழைப்பு புகழத்தக்கதென்றும், இவ்வளவிற்கும் இந்த யூனியன் காரியதரிசி, ம-ா-ா-ஸ்ரீ P. நாராயணய்யர் அவர்களது நன்முயற்சியே காரணமென்றும், இன்று மகாநாட்டில் பகல் ஒரு மணிமுதல் இரவு 7-மணி வரையில் தங்கள் சிரமம் பாராத பிரதிநிதிகளெல்லாம் வெகு சிரத்தையோடு நடந்துவந்ததை கவனித்து வந்ததே ஐக்கிய முயற்சியில் அவர்களுக்கிருக்கும் ஊக்கத்தைக் காண்பிக்கிறதென்றும், உழைப்பாளிகளான குடிகள் விவசாயத்தை விருத்திசெய்ய திரவிய சகாயமும் சாஸ்திர அறிவுமின்றியே நாளுக்குநாள் க்ஷீணதசை அடைகிறார்களென்றும், இவ்விரு குறைகளையும் நிவிர்த்தித்து நமது விவசாயத்தை விருத்திசெய்து தேசச் செல்வபெருக்கை அபிவிர்த்திக்கு கொண்டுவரும் சூசனையாக இன்று இச்சபையில் சாஸ்திரஞானத்தை நமக்கு சதாகாலம் ஊட்டி பல உதவிகளையும் புரிய ஏற்படுத்திய விவசாய இலாகாவுக்கு பிரதிநிதியாக டிப்டி டைரைக்டர் அவர்களும், காலாகாலங்களில் வேண்டிய அளவு திரவியசகாயம் செய்ய நமது ஐக்கிய இலாகா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களும், இங்கு விஜயம் செய்து, தம் ஆழ்ந்த புத்திமதிகளை எடுத்துரைத்ததே பலவிதத்திலும் நம்தேசம் முன்னேற்ற மடையுமென்கிற நிச்சயத்தை தெரிவிக்கிறதெனவும் சொல்லி முடித்தார்.

பின்னர் இரவு 7 மணிக்கு வந்திருந்தோரனைவருக்கும் வந்தனோபசாரம் செய்வித்து சபை கலைந்தது.



# மலையாளத்தில் கோவாபரேஷன்

1916-17-ம் வருஷத்தில் மலையாளம் ஜில்லாவானது கோவாபரேஷனில் அடைந்த முன்னேற்றத்தை அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ, பி. குன்ஹுண்ணிமேனன் அவர்களால் தயாரிக்கப்பட்ட அடியிற்கண்ட இனிமையான ரிபோர்டினால் அறிந்துகொள்ளலாம்:—

1. வருஷ ஆரம்பத்தில் 49 சங்கங்களிருந்தன. அவற்றுள் 44 விவசாய சம்பந்தமுள்ளது ; 5 விவசாய சம்பந்தமல்லாதது. பிரஸ்தாப வருஷத்தில் 25 புதுச்சங்கள்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டபடியால் மொத்தம் 74 ஆயிற்று. இதில் 70 வருஷக்கடைசியில் வேலைநடத்திக்கொண்டிருந்தன. தேவையானபடி சங்கங்கள் இவ்வருஷம் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை யென்று நினைக்கலாம். ஆனால் இவ்வியக்கம் மலையாளத்திற்குப் புதிதானபடியால் அதிவிரைவான முன்னேற்றம் விரும்பத்தகுந்ததல்ல. விசேஷ சங்கங்கள் வளவநாடு தாலூக்காவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு சூபர்வைவஸிங் யூனியன் நடைபெறுகிறது. இது ஏற்பட்ட பிரதேசமும் விவசாய விஷயங்களுக்காகப் பொருளுதவியை மிகவும் நாடும் இடம்.

2. வருஷ ஆரம்பத்தில் தொழில்தனம் ரூ. 73,372 ஆக இருந்தது. முடிவில் ரூ. 1,42,482 ஆக உயர்ந்திருப்பதை அடியிற்கண்ட காட்டப்பட்டிருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | புது மெம்பர்களின் டிபாஸிட்டு ... | 32,714 | 0 | 0 |
| 2. | இதர சங்கங்களிலிருந்து வந்த கடன்கள்... | 43,800 | 0 | 0 |
| 3. | மெம்பர்களின் டிபாஸிட்டு ... | 33,393 | 0 | 0 |
| 4. | பங்குத்தொகை ... | 29,901 | 0 | 0 |
| 5. | சேமநிதி ... | 2,674 | 0 | 0 |

இதனால் ஷை தொகையில் சுமார் லக்ஷரூபாய் வரையில் சங்கங்கள் தங்களுடைய உள்ளூர் முயற்சிகளினால் பெற்றிருக்கின்றன வென்றும் பாக்கி சுமார் 100-க்கு 30 வரையில் அதாவது ரூ. 43,800 இதர சங்கங்களிலிருந்து வந்திருக்கின்றன வென்றும், அதிலும் ரூ. 41,350 டிஸ்ட்ரிக்ட் பாங்கியிலிருந்து வந்திருக்கிறதென்னும் கவனிக்கலாம். இந்த ரூ. 41,350 சென்ற வருஷம் இவ்வினத்தில் காட்டப்பட்டிருந்த தொகையைவிட சுமார் 5 மடங்கு அதிகம். இவ்வதிகம், புத்துசங்கங்

கள் ஏற்படுத்தியதினாலும் பழைய சங்கங்களை பலப்படுத்தியதானாலும் அவசியம் ஏற்பட வேண்டியதாயிற்று.

மெம்பர்களுக்கு கடன்கள் கொடுத்தல் :—வருஷ ஆரம்பத்தில் நிலுவையிலிருந்த கடன் தொகை ரூ. 66,215. இவ்வருஷத்தில் கொடுக்கப்பட்ட கடன் ரூ. 1,84,154. வருஷக்கடைசியில் நிலுவையிலிருந்த தொகை ரூ 1,34,010. இதில் ரூ. 14,854 தவணை மீறிய கடன்கள். நிர்வாகம் சரியாயில்லாத 7, 8 சங்கங்களே இதற்குக் காரணம். இவைகள் மலையாளத்தில் இவ்வியக்கம் ஆரம்பித்தகாலங்களில் ஏற்பட்டவை. அவைகளும் ஒதுக்குப்புறங்களில் இருக்கின்றன. இதுவரையில் அவைகளில் மேன்பார்வையே இல்லாமலிருந்ததினால் பிரஸ்தாப வருஷத்தில் அவைகளின் நிலைமையில் விசேஷச் சீர்திருத்தம் ஒன்றும் செய்யமுடியவில்லை. இவைகளுள் சிலவற்றில் புதுப்பஞ்சாயத்துகள் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. நிகழும் வருஷத்தில் அவைகளில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருவதனால் அவைகளின் நிலைமை இனி விருத்தியாகுமென்று நம்பலாம். இவ்வருஷ நிலுவையின் கணக்கு 100-க்கு 12 ஆக ஏற்படுகிறது. இவ்வினத்தில் 1914-15-க்கும் 1915-16-க்கும் முறையே 100-க்கு 31-ம், 21-மாக இருந்தது.

சங்கங்கள் கடன் வாங்குதல்:—முதலுக்கும் வட்டிக்குமாகக் கொடுபடவேண்டியிருந்த தொகை இவ்வருஷத்தில் முறையே ரூ. 74,118-ம் ரூ, 4,076-ம் ஆகஇருந்தன. 1917-ம் வருஷம் ஜூன் மாதம், 30-ம் தேதி இவ்வினங்களின் நிலுவை முறையே ரூ. 6)2-ம் ரூ. 39-மாக ஏற்பட்டது. இதில் டிஸ்ட்ரிக்ட் பாங்குக்கு யாதொன்றும் சேரவேண்டியதில்லை.

பொது:—இவ்வருஷம் 25 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. ஏற்கனவே சொன்னபடி மலையாளத்தைப்போன்ற அவ்வளவு பெரிய முக்கியமான ஜில்லாவிற்கு இது ஒரு பெரிய இலக்கமாகச் சொல்ல முடியாது. மலையாளத்திற்கு இவ்வியக்கம் புதிது. இப்போதுதான் உத்தியோக முறையில்லாத கௌரவ வேலைக்காரர்கள் கோவாபரேடிவ் வேலையின் பெருமையை உணர ஆரம்பிக்கிறார்கள்.

இப்பொழுது பெரிண்டல் மன்னாவில் ஒரு யூனியனிருக்கிறது. அதன் மெம்பர்கள் இவ்வியக்கத்தைப் பரவவைப்பதற்காக ஊக்கத்துடன் வேலைசெய்கிறார்கள். கள்ளிக்கோட்டையில் ஒன்றும், கன்னனூரில் ஒன்றுமாக, இரண்டு யூனியன்கள் சமீபத்தில் யேற்படும். இவைகளுக்காக சூபர்வைஸர்கள் பழக்கப்படுகிறார்கள். இப்புதிய யூனியன்களும் ஏற்பட்டு சூபர்வைஸர்களும் தங்கள் அலுவல்களைக்கைக் கொண்டுவிட்டால் இவ்வியக்கத்திற்கு ஒரு புதிய வலிமை உண்டாகும்.



இந்த ஜில்லாவில் ஒரு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன்கூட ஏற்பட்டு இயக்கம் விருத்தியாகவேண்டுமென்கிற இன்னொரு முக்கியமான ஏற்பாடு ஆலோசனையிலிருக்கிறது. இவ்விஷயம் சில வியாபகர்கள் கையிலிருக்கிறது. சீக்கிரத்தில் நடைபெறவேண்டும். கோவாபரேடிவ் விஷயங்களில் அநேக கனவான்கள் ஊக்கத்துடன் கவலை செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுள் மங்காடா, ராவ் பஹதூர் எம். சி, கிருஷ்ணவர்மராஜா அவர்களுடையவும், பெரிண்டல் மன்னாரில் வக்கீலாயிருக்கிற மா-ா-ா-ஸ்ரீ, சி. கருணாகரமேனன் அவர்களுடையவும் பெயர்களை முக்கியமாகக் குறித்துச் சொல்லவேண்டியது.

---

## திருவண்ணாமலை தாலூகா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

1918-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 11, 12-ம் தேதிகளில் திருவண்ணாமலையிலுள்ள வெட்டவாலன் ஜமீன்தாரின் பங்களாவில், திருவண்ணாமலை தாலூகாவிலுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகளின் கான்பரன்ஸ் கூடிற்று. பல சங்கங்களிலிருந்து சுமார் 80 டெலிகேட்டுகளும் இதர மெம்பர்கள் 00 பெயர்களுக்கு அதிகமாகவும் வந்திருந்தார்கள்.

11-ம்வ காலை 9-மணிக்கு கான்பரன்ஸ் தொடங்கி வேலூர் டிஸ்ட்ரிக்ட் பாங்கியின் சிகரிடேரியான மிஷ்டர் பி. சின்னசாமி ஐயரவர்களால் கிராம சங்கங்களின் பைலாக்களும் ஆக்டும் விவரித்துரைக்கப்பட்டு அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரவர்களால் வியக்தமாய் வியாக்கியானம் செய்யப்பட்டன. சங்கங்களில் கணக்குவைக்கும் விஷயங்களை தாலூக்கா கோவாபரேடிவ் யூனியன் சிகரிடேரியாகிய ம-ா-ா-ஸ்ரீ, எம். எஸ். சேஷாசல அய்யரவர்கள் போர்டு பலகையில் தெளிவாய் எழுதிகாட்டி விவரித்ததோடு சங்கங்களுக்கு வேண்டிய பல புஸ்தகங்களின்னவையென்றும் விளக்கிக் காட்டினார். பிறகு மாலை 4½-மணிக்கு உபாத்தியாயர்களின் சங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர் வி. எம். வெங்கோபாராவின் அக்கிராசனத்தின்கீழ் யூனியனின் பொதுஜன மீடிங் கூடிற்று. பிறகு நிர்வாக மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் யூனியனுக்கு சம்பந்தப்பட்ட சங்கங்களின் நாணயத்தை மதிப்பிடும் முக்கியமான காரியத்திலிறங்கினார்கள். இதனால் கடன் கொடுப்பதற்கு ஏற்படும் சௌகரியங்களை அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் விவரித்துச சொன்னவுடன் ஒவ்வொரு சங்கங்களின் நிலைமைகளும் நன்கு தெரிவிக்கப்பட்டு எல்லாம்

திருப்திகரமாக மதிப்பிடப்பட்டன. அடுத்ததினம் கான்பரன்ஸ் ஆரம்பித்தவுடன் விவசாய இலாகா டிப்டி டைரக்டரான ம-ள-ள-ஸ்ரீ, ஜே. செல்வரங்கராஜு அவர்களால் கம்போடியா பருத்தியைப்பற்றி உபந்நியாசம் செய்யப்பட்டது. அவர் சாதாரணப் பருத்திக்கும் கம்போடியாப் பருத்திக்கும் உள்ள வித்தியாசத்தையும் சாகுபடி செய்யும் விதங்கள், காலம், எரு, இதரசௌகரியங்கள் முதலியவற்றையும் கூட்டுறவினால் அவைகள் எப்படி லாபகரமாக விநியோகிக்கப்படலா மென்றும் விஷயத்தையும் விவரித்துரைத்தார். உபந்நியாசம் மிக்க போதனைத்திறம் வாய்ந்த விவசாயிகளான அக்கூட்டத்தாரின் மனத்தை ஒருங்கே கவர்ந்தது.

## தீர்மானங்கள்.

கான்பரன்ஸ் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களுள் பின் கூறியவைகள் உள:

1. கோவாபரேடிவ் சொஸைடிகள் இருக்கும் கிராமங்களில், சங்கங்களில் சம்பந்தப்பட்டு மெம்பர்களாகவோ பஞ்சாயத்தாராகவோ இருப்பவர்களின் உதவியை அனுசரித்தாவது அல்லது தனிப்பஞ்சாயத்து குணமாகப்பட்டால் அப்படியாவது கிராமப் பஞ்சாயத்து ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

2. இந்தத் தாலூகாவில் தபால் ஏற்பாடு போதாமையாக விருப்பதாலும், பென்னத்தூர், ஆவூர் பிருக்காக்களிலுள்ள அநேக கிராமங்களுக்கு திருவண்ணாமலைத் தபாற் சேவகனால் வாரத்திற்கு ஒருதரம் அல்லது மிக்க அதிகப்பட்டால் இரண்டு தடவைகள்தான் கடிதங்கள் முதலியன கொடுக்கப்படுகின்றமையாலும் (a) வயலூர், சோமாசிபாடி, துரிஞ்சாபுரம், பாப்பம்பாடி ஆகிய இவ்வூர்களில் பரீக்ஷார்த்தமாக போஸ்டாபீசுகள் தனிச் சேவகர்களோடு தினத்தபால் பட்டுவாடு செய்வதற்காகவும், (b) ஒவ்வொரு சங்கத்திற்கும் தபாற்பெட்டி சப்ளைசெய்து குறைந்தபக்ஷம் ஒன்றுவிட் டொருநாளாவது அவைகளிலுள்ள தபால்களை எடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று போஸ்ட்மாஸ்டர் ஜனரலைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. திருவண்ணாமலை தாலூக்கா போர்டையும், முனிஸிபாலிடியையும், தங்கள் தனிபண்டுகளையும் செக்யூரிட்டிப் பணங்களையும் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருவண்ணாமலை டிவிஷனில் வேலை செய்யும் விவசாய சம்பந்தமில்லாக் கோவாபரேடிவ் சங்கங்களில் போட்டுவைக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.



4. திருவண்ணாமலை, போளூர் தாலூகாக்கள் அடங்கிய இந்த டிவிஷனுக்காக, பணமுதவி செய்த தனி ஏஜன்ஸி வேண்டியதுஅவசியம் இவ்விரண்டு யூனியன்களின் நிர்வாகஸ்தர்களும் உடனே அம்மாமென்திரி ஏஜன்ஸி ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிக்கான மீடிங்கு கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

5. சங்கங்களுக்கு எரு விதைகளையும், விவசாயக் கருவிகளையும் ஜீவனத்திற்கு அவசியமான பண்டங்களையும் எவ்வளவு தேவையென்பதை அவைகளிடமிருந்து தெரிந்துகொண்டு அவைகளையெல்லாம் யூனியன் மொத்தமாய் வாங்கி ஏஜண்டுபோல நடந்துகொண்டு டிப்போவை விருத்தி செய்யவேண்டும்.

அக்கிராசனாதிபதியும் மீட்டிங்கு கலையுமுன் சங்கங்களெல்லாம் வெளியுதவியை எதிர்பாராமல் தாங்களே முதல் சேகரித்துக்கொண்டும் விவசாயத்திற்காக சிறுகாலக் கடன்களும் கொடுத்துக்கொண்டும் வேலையைத் தடைபடாமலும் சுறுசுறுப்பாகவும் நடத்திக்கொண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். பழையகடன்களை படைப்பதற்காக நீண்டகாலக் கடன் கொடுக்கும் ஏற்பாடு உண்டானபிறகு நாட்டுப்புறங்களின் கடன்கள் அதிகரித்திருக்கின்றன வென்றும் திருப்பிக்கொடுக்கும் காலம் நீடித்தமையால் சங்கங்கள் வேலையில்லாமல் சும்மாயிருக்கின்றனவென்றும் சொன்னார். யூனியன் யுக்தமானவழிகளில் வேலைசெய்வதைப் பார்க்க தனக்கு மிகச் சந்தோஷமுண்டாகிறதென்றும் மெம்பர்களின் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் இவைகளைவிருத்திசெய்யும் நோக்கத்துடன் நடத்தும் வேலைகள் மிகவும் திருப்திகரமாக இருக்கிறதென்றும் சொன்னார். இதரர்களால் அநுசரிக்கக் கூடிய முதல்தரமான உதாரணம் சக்கிலியர்களின் சங்கம். மகா ஏழைகளும் அக்ஷரவாசனையுமில்லாத வகுப்பினர் கொஞ்சகாலத்திற்குள் சுமார் நூறுரூபாய் வரையில் மிச்சம் பிடித்திருக்க தாலூக்காவிலுள்ள பெரிய மனிதர்களும், மிராசுதார்களும், வியாபாரிகளும் இதரர்களும் கூடிய மற்ற சங்கங்கள் டிபாஸிட்டுசெய்யவேண்டுமென்று நினைப்பதுகூட இல்லை. சில பள்ளிக்கூடங்கள்கூட ஏற்பட்டு சங்கங்களே அவைகளை நடத்திவருகின்றன என்று அறிய மிகவும் சந்தோஷமுண்டாகிற தென்றும் அடுத்த வருஷத்தில் அநேகவித சீர்திருத்தங்களேற்படுவதைக் கேட்க தனக்கு நம்பிக்கை யிருப்பதாகவும் சொன்னார்.

# ரிஜிஸ்ட்ரார்களின் கான்பரன்ஸ்.

மாகாண கோபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார்கள் ஸிம்லாவி
லுள்ள இம்பீரியல் செகரிடேரியட்டில் ஆகஸ்டுமாதம் 12-ம் தேதி 8-வது
கான்பரன்ஸ் கூடினார்கள்,அதில் சுமார் 20 உத்தியோகஸ்தர்களும், 7
உத்தியோக உரிமையில்லாதவர்களும் ஆஜராயிருந்தார்கள். ஸர் க்ளாட்
ஹில்துரை கான்பரன்ஸை ஆரம்பிக்க மிஸ்டர் மாண்ட்துரை அக்கிரா
சனம் வகித்தார்.

பீடிகை வசனங்களும் பிரஸிடெண்டின் வியாசமும் ஆனபிறகு அந்
தந்த மாகாணத்திய உத்தியோகப் பிரதிநிதிகளால் அவ்வவ்விடங்களின்
வேலைகள் காட்டப்பட்டதில் ஐக்கிய இயக்கம் விருத்தி மார்க்கத்தில்
விசேஷ முன்னேற்றமடைந் திருப்பதாகத் தெரிந்தது.

முதலில் எடுத்துக்கொண்ட விஷயம் 1894-ம் வருஷத்திய பூமியை
கிரகிக்கும் ஆக்டு. (Land Acquisition Act). அதன்படி கோவாபரேடிவ்
சொஸைடிகளுக்காக கவர்ன்மெண்டாரால் பூமிபெற முடியாமையைக்
காட்டி ஐக்கிய இயக்கத்தை விருத்திசெய்யும் விஷயத்தில் அது உபயோக
மாகும்படி. சீர்திருத்தப்பட வேண்டியது அவசியமென்று பிரஸ்தாபிக்
கப்பட்டது. இது விஷயமாய் சில விவாதங்களான பிறகு மிஸ்டர்
லாலுபாய் ஸாமல்தாஸ் பிரேரித்த தீர்மானம் அங்கீகரிகக்பட்டது.
அதாவது பூமிபெறும் ஆக்டின் 32-வது பிரிவினையில் "கம்பெனி" என்
னும் வார்த்தை எப்படி வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறதோ அப்
படியே கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட
சங்கங்களுக்கும் "பூமிபெறும் ஆக்டு" உபயோகமாகும்படி, சீர்திருத்தப்
படவேண்டும். ஐக்கிய இயக்கங்களின் தணிக்கைக்காக கவர்ன்மெண்ட்
ஒருவித சிப்பந்திகளையும் சங்கங்கள் மற்றொருவித சிப்பந்திகளையும்
நியமனமாக வேண்டிய பிரஸ்தாபத்தை ஆமோதித்து தற்காலம் தணி
க்கை வேலையை கவன்மெண்டு கையிலேயே யிருக்கவேண்டியதாய் தீர்
மானிக்கப்பட்டது. சில மெம்பர்கள் வெவ்வேறு மாதிரியாகச் சொன்
னார்கள். கடைசியில் மிஸ்டர் மக்கன்ஸி துரையின் பிரேரணைப்படி "இவ்
விஷயம் லோகல் கவர்ன்மெண்டிடமே விடப்படவேண்டும்" என்ற தீர்
மானம் அங்கீகரிக்கப்பட்டு அத்துடன் கான்பரன்ஸ் அன்று முடிந்தது.

மறுநாளை கான்பரன்ஸ் ஆரம்பித்தவுடன் செண்ட்ரல் பாங்கிகளின்
நிகரலாபங்களைப் பங்கிடுவதற்காகக் கணக்கிடும்போது குறித்தகாலம்
வரையில் யேற்பட்டதும் ஆனால் நிலுவையிலுமுள்ளதுமான வட்டியை
யும் தள்ளுபடி செய்யும் விஷயமாய் குறிக்கப்பட்ட கோவாபரேடிவ் இம்
பீரியல் கமிட்டியாரின் சிபார்சைப்பற்றி யோசிக்கப்பட்டது.



மத்திய மாகாணங்களில் இம்பீரியல் கமிட்டியாரின் அபிப்பிராயமே
நடைபெறுகிறதென்றும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கிக்கும் கோவாபரேடிவ்
பாங்கிக்கும் பொருத்தமான உவமையே இல்லையென்றும் மிஸ்டர்
கெல்கர் சொன்னார்.

மிஸ்டர் மாதியாஸ், மத்திய மாகாணங்களில் ஏற்படும் கஷ்டங்களைக்
காட்டி லாபங்களைக் கணக்கிட்டு டிவிடெண்டை விதிக்கும்போது,எல்லா
வட்டியும் கவனிக்கப்படவேண்டியது அவசியம் என்றும் ஆடிடர்களின்
ரிபோர்டுகளைப்பெற்ற பிறகு, வசூலிக்கமுடியாத கடன்களுக்கு வேண்டிய
ஏற்பாடு செய்யும்வரையில் டிவிடெண்டை நிறுத்த ரிஜிஸ்ட்ராருக்கு
அதிகாரம் வேண்டுமென்றும் சொன்னார்.

பரோடா தேசத்து மிஸ்டர் ஜே. சி. சென் என்பவர் லாபத்தையே
நோக்கமாகவுடைய பாங்கிகள் அதிகமான டிவிடெண்டை விதிக்கின்றன
வென்றும்,ஆனால் அதனால் பாங்கியின் நிலைமையை சரிவர தெரியமுடியா
தென்றும் சொன்னார்.

காலங்கடந்த கடனின் முதலே வசூலிக்கமுடியாத ஆஸ்தி
யென்று எழுதப்பட்டாலொழிய காலங்கடந்த வட்டியை வசூலிக்க முடி
யாத ஆஸ்தியென்று எழுதுவது யுக்தமில்லை யென்றும், கமிட்டியின்
158-வது சிபார்சில் "காலங்கடந்த" என்பதற்கு பதிலாக "6 மாதத்திற்
குக் காலங்கடந்த" என்று மாற்றப்படவேண்டுமென்றும் மிஸ்டர் யூபா
ங்கி சொன்னார்.

மிஸ்டர் காலின்ஸும், மிஸ்டர் தானவனும் மிஸ்டர் மாதியாஸின்
நோக்கத்தை அனுசரித்துப் பேசினார் பின்கூறியவர் இந்தியா கவர்ன்
மெண்டு இவ்விஷயமாக லோகல் கவர்ன்மெண்டுக்கு உத்திரவளிக்க
வேண்டுமென்றார்.

பிறகு, ப்ரொவின்ஷியல் பாங்காவது செண்ட்ரல் பாங்காவது டிவி
டெண்டு கொடுக்கும் விஷயத்தில் ரிஜிஸ்ட்ரார் அல்லது அவர் உத்திரவு
பெற்ற உத்தியோகஸ்தரிடம் உத்திரவு பெற்று ஏற்படுத்தும் நிபந்தனை
களுக்குக் கட்டுப்பட்டாலொழிய டிவிடண்டு கொடுக்கும் விஷயத்தில்
வசூலாகாத காலங்கடந்த வட்டியை சேர்க்கூடாது என்று மிஸடர்
கெல்கார் ஆமோதித்தார். இப்பிரேரணை விஸ்தாரமாகத் தர்க்கிக்கப்பட்ட
பிறகு அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு மிஸ்டர் காலின்ஸின் கீழ்கண்ட தீர்மானம் மீட்டிங்கில் வைக்
கப்பட்டது:—ரிஜிஸ்ட்ராராவது அவருடைய உத்திரவு பெற்றவராவது
ஆஸ்திப்பொருப்பு ஸ்டேட்மெண்டில் கையெழுத்துச் செய்தா லொழிய,

சென்ட்ரல் சங்கங்கள் ஒருகாலத்திற்கும் டிவிடெண்டு ஏற்படுத்த கூடாது. வசூலிக்க முடியாததும் சமுசயமுமுள்ள கடனுக்காகத் தமக்குத் தோன்றுகிறபடி ரிஜிஸ்ட்ராரவர்கள் ஏற்பாடு செய்யும்படி கேட்கமுடியும்.

இத்தீர்மானம் அங்கீகரிக்கப்படவில்லை.

டிவிடெண்டு ஏற்படுத்துவதற்கு முன் எல்லா ப்ரொவின்ஷியல் பாங்கிகளாலும் சென்ட்ரல் பாங்கிகளாலும் வசூலிக்கமுடியாக் கடன்களுக்கும் சமுசயக் கடன்களுக்கும் ரிஜிஸ்ட்ரார் அல்லது அவர் உத்திரவு பெற்ற உத்தியோகஸ்தரின் உத்திரவின்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிஸ்டர் மாதியாஸ் பிரஸ்தாபித்தார்.

கொஞ்ச விவாதத்தின் பிறகு இத்தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

டிஸ்ட்ரிக்ட் உத்தியோகஸ்தர்களுக்கும் கோவாபரேடிவ் இயக்கத்திற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய கமிடியின் சிபார்சு விவாதிக்கப்பட்டு ரிஜிஸ்ட்ராரின் அதிகாரம் டிஸ்ட்ரிக்ட் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுபடக்கூடாதென்ற தீர்மானம் நிலைபெற்றது. பிறகு டிஸ்ட்ரிக்ட் உத்தியோகஸ்தர்களாவது, ஸப் டிவிஷனல் உத்தியோகஸ்தர்களாவது ஸென்ட்ரல் சங்கங்களில் அமுல் செலுத்தகூடாதென்றும் அவசியமானபோது அவைகள் அவர்களின் ஆலோசனைகேட்டு அவ்விதம் உதவியைப் பெறலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கான்பரன்ஸும் கமிடியின் சிபார்சை ஒத்துக்கொண்டு சென்ட்ரல் பாங்கிகளின் டைரக்டரேட்டிலிருந்து உத்தியோகஸ்தினர்களைக் கிரமமாய் குறைப்பது யுக்தமென்றும் நாளடைவில் உத்தியோகஸ்தர்களையே விலக்கும் ஏற்பாடு உண்டாகலாமென்றும் அங்கீகரித்தது. பிறகு ஷை உத்தியோகஸ்தர்கள் பங்குக்காரர்கள் அல்லது டைரக்டர்களின் மீட்டிங்குகளில் ஆஜராக அதிகாரமுண்டா என்பதை விவாதித்து கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

பிறகு விவசாய விஷயமான சிறுகாலக் கடன்கள் கொடுப்பதைப் பற்றிய பிரஸ்தாபம் எடுத்துக் கொள்ளப்பட்டு பின்வரும் தீர்மானம் மிஸ்டர் மாதியாவினால் பிரேரித்து அங்கீகரிக்கப்பட்டது. எந்தக் காலத்திலும் பஞ்சமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ப்ரொவின்ஷியல் பாங்கி அல்லது சென்ட்ரல் பாங்கி அல்லது கிராம நாணயச் சங்கங்கள் இவைகளின் மூலமாய் விநியோகத்திற்காக, 1884-ம் வருஷத்திய 12-வது ஆக்டுப்படி விவசாயக்கடனுக்கு வருஷந்தோறும் யேற்படும் பட்ஜட்தொகையில் தங்களுக்கு கிரமமென்று தோன்றுகிற தொகையை லோகல் கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுக்கும் தொகை ரிஜிஸ்ட்



ராரின் சிபார்சின்பேரில் ஆக்டில் குறித்த விஷயங்களுக்கு மாத்திரம் உபயோகமாகும்படி விநியோகிக்கப்பட வேண்டும்.

லாண்டு இம்ப்ருவ்மெண்ட் ஆக்டின்படி கடனைப்பற்றிய கமிடியின் சிபார்சு கான்பரன்ஸால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று மிஸ்டர் இங்கிலீஷ் பிரஸ்தாபித்தபடி சம்மதிக்கப்பட்டது. விவசாயக்கடன் ஆக்டின்படி ஏற்படும் கடனுக்கும் நிலச் சீர்திருத்தக்கடன் ஆக்டின்படி யேற்படும் கடனுக்கும் தனித்தனிக் கணக்குகள் வைக்கப்பட வேண்டுமா என்னும் விஷயம் விவாதிக்கப்பட்டு மிஷ்டர் மாதியாஸால் பிரரேபிக்கப் பட்ட கீழ்க்காட்டிய தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. 1884-ம் வருஷத்திய 12-வது ஆக்டின் விஷயங்களுக்காக கொடுபடும் பணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தனிக்கணக்குத் தேவையில்லை. ஆனால் ஆக்டின் காரியத்திற்காகவே விநியோகிக்கும் காலம் வரையில் பணம் வாங்கப்படவில்லையென்று ரிஜஸ்ட்ரார் ஒரு பொது ஸர்டிபிகேட் கொடுக்கவேண்டும். பிறகு ஸப் கமிடிகளின் ரிபோர்டுகள் எடுத்துக் கொண்டு விவாதிக்கப்பட்டன. இவைகள் கணக்கு ஏற்பாடுகளைச் சீர்ப்படுத்துதல், கோவாபரேடிவ் இயக்கத்தின் க்ஷேமநிதிகளை டிபாஸிட் செய்தல், உத்திரவாத யூனியன்களின் ஏற்பாடு முதலிய வேலைகளின் விரிவைப் பற்றியன.

ப்ராமிசரி நோட்டுகளின் பேரில் சென்ட்ரல் பாங்கிகள் கிராம நாணயச் சங்கங்களுக்கு கடன்கள் கொடுக்கும் ஏற்பாட்டைப்பற்றியும், பாங்கியானது வெவ்வேறு வட்டி விகிதங்கள் ஏற்படுத்துவது யுக்தமா என்பதைப்பற்றியும் கிராம நாணயச் சங்கங்களுக்கு சென்ட்ரல் பாங்கிகள் கொடுத்த கடன்களை எப்படி வசூலிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் ஸப் கமிடியார் ரிபோர்டுசெய்து சிபார்சு செய்தபடி அங்கீகரிக்கப்பட்டது. கோவாபரேடிவ் சொஸைடிகளின் ப்ராமிசரி நோட்டுகளை அடமானமாக்கிப் பணம் புரட்டும் மார்க்கவிஷயமாய் மாக்ளகான் கமிட்டியின் சிபார்சைப்பற்றி சப் கமிடியார் பின் வரும் தீர்மானங்களை சிபார்சு செய்தார்கள்.

(a) சொஸைடிகளின் ப்ராமிசரி நோட்டுகளை அடமானம் பிடிப்பதுள்பட வேண்டிய திரவிய சௌகரியம் செய்ய இந்தியாமுழுவதையும் பொருத்த கோவாபரேடிவ் பாங்கி ஏற்படுத்தவேண்டும். (b) பிரஸிடென்ஸி பாங்கிகளிலிருந்து பொருளுதவியை அதிகப்படுத்த வேண்டும். (c) தகத்துள்ள பாங்கிகாரர்களும், வியாபாரிகளும், கோவாபரேடர்களும், கோவாபரேடிவ் இயக்கத்தை எல்லாவிதத்திலும் எப்படி கவனித்து பொருளுதவி செய்து உதவுவது என்பதை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஸர். டி. ஹாமில்டன் இத்தீர்மானத்தை பிரேரித்த பொழுது லார்ட் கர்ஸன் காலம் முதல் கோவாபரேடிவ் இயக்கம் அடைந்த விருத்தியை கிரமமாய் எடுத்துக்காட்டி இந்தியா கடனாளியாக எப்பொழுதும் இருக்கக்கூடாது என்று விரும்பினால் இவ்விஷயம் தீர்மானிக்கப்படவேண்டுமென்றார். இக்கேள்வியை முன்னுக்குக் கொண்டுவருவதற்காகத்தான் கீழ்க்காட்டிய பிரரேபணைகள் ஏற்பட்டன.

மாக்ளகான் கமிடியின் சிபார்சின்படி பணப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள பிரசிடென்ஸி பாங்கிகளையாவது கேட்கவேண்டும் அவைகள் ஒத்துக்கொள்ளாவிட்டால் ராஜாங்க அபெக்ஸ் பாங்கி ஏற்படுத்தப்பார்க்கவேண்டும் என்பதைப்பற்றியும், கோவாபரேடிவ் இயக்கத்திற்குத் தேவையான பணத்திற்காக பிரசிடென்ஸி பாங்கி மூலமாய் கவர்ன்மெண்டு பேபர் காரன்ஸி ஏற்படுத்தவேண்டு மென்பதைப்பற்றியும் (3) விசேஷமாக எல்லா ஜனங்களையும் கோவாபரேடிவ் சங்கங்களாக ஏற்பாடுசெய்ய முயற்சிக்க வேண்டியதைப்பற்றியும் தீர்மானிக்க ஆரம்பித்து பலவிதமான விவாதங்கள் நடந்தபிறகு கீழ்க்கண்ட சீர்திருத்தத்தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது:—கோவாபரேடிவ் சொஸைடிகளில் பேபர்களை பணமாகப் புறட்டுதற்கு ஏற்பாடு செய்தல் இலாபகரமான தொழில் என்பது கான்பரன்ஸின் அபிப்பிராயம். ஆகையால் கோவாபரேடிவ் இயக்கத்திற்கு எல்லாவிதத்திலும் பணம்புறட்டல் விஷயத்தை ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய பாங்கர்களும் வியாபாரிகளும் கோவாபரேடர்களும் சேர்ந்த ஒருகமிட்டியானது, இந்தியா கவர்ன்மெண்டார் எப்பொழுது சௌகரியமென்று [illegible] கிருர்களோ அப்பொழுது கூடி ஐக்கிய யியக்கத்திற்கு பணவுதவும் மார்க்கத்தை நிர்ணயிக்கவேண்டும்.

கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கோவாபரேடிவ் சொஸைடிகள் ஸேவிங்ஸ் பாங்கி டிபாஸிட்டுகள் பெறலாம் என்பதை ஆமோதித்து ஒரு தீர்மானம் ஏற்பட்டது:—

ஸேவிங்ஸ் பாங்கில் ஒரு டிபாஸிடர் போட்டு வைக்கக்கூடிய அதிகத் தொகை அந்தந்த வருஷத்தில் போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கில் நடைபெறும் சட்டத்திற்குட்பட்ட தொகையாகத் தானிருக்க வேண்டும். இவ்வேலைக்கு ரிஜிஸ்ட்ராரின் அனுமதிபெற்ற சங்கங்களில் கையிருப்புப் பண ஸாதனங்கள் அதிகமா யிருக்கவேண்டும். ரிஜிஸ்ட்ராரின் தனி உத்தரவு இல்லாமல் ஒரு சங்கமும் ஸேவிங்ஸ் பாங்கி வேலையை ஒத்துக்கொள்ளகூடாது.

மாக்ளகான் கமிட்டியார் பிரஸ்தாபித்தபடி அவ்வளவு அதிகப்பணம் புரளும் வழிகளை அனுசரிப்பது பொதுவாய் அநேக மாகாணங்களில் சாத்தியமாகாதெனத் தீர்மானிக்கப்பட்டது. இம்மட்டில் கான்பரன்ஸ் முடிவுபெற்று வழக்கமான மரியாதை வார்த்தைகளுடன் கலைந்தது.

---

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் X] 1918ஞு செப்டம்பர்மீ [இலக்கம் 3

## பத்திராதிபரின் குறிப்புகள்.

---

சிறிய சங்கங்களாக இருந்துகொண்டு பெரிய பயன்களைக் கொடுத்
தற்கு உதாரணங்கள் இதரதேசங்களைப்போல ருஷியாவில் அநேகமுண்டு.
அவைகளில் இரண்டொன்றைப்பற்றி வரைய நேயர்களுக்குத் திருப்தி
யையுண்டாக்கும். விஸ்கோவோ என்பது திருட்டுக்குப் பேர்போன ஒரு
சிறியகிராமம். அதில் 1902-ம் வருஷத்தில் ஒரு ஸ்டோர் சொஸைடி
ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஊக்கமும் திறமையும் காரணமாக 1908-ம்
வருஷத்தில் சொந்தத்தில் இரண்டடுக்கு மெத்தைக்கட்டிடம் ரூ. 22,000
செலவில் கட்டப்பட்டு அதில் ஒரு கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், ஒரு நெச
வுப் பள்ளிக்கூடம், எண்ணெய் யந்திரசாலை, கடன்கொடுக்கவும் பணம்
சேமித்து வைக்கவும் உதவும் பாங்கி, ரொட்டிக்கிடங்கு, ஸ்நான இடம்,
சலவை செய்யும்வேலை முதலிய உபயோகமான பலவேலைகள் நடைபெறு
கின்றன. இவைகள்தவிர இன்னம் ஐக்கிய சம்பந்தமுள்ளதும் இல்லாதது
மான அநேகவேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதேகிராமத்
தில் ஒரு கோவாபரேடிவ் கட்டிடச்சங்கமும், ஒரு நிரியாண அடக்க பண்
டும், விளையாட்டுக்கருவிகள் செய்யும் ஒரு தொழிற்சாலையும், கோவாபரே
டிவ் தீவிபத்து இன்ஷியூரன்ஸ் சொஸைடியும் ஆகிய இவைகளும் ஆரம்
பிக்கப்பட்டன. சமீபத்திலிருக்கும் போஸ்ட், ஸ்டேஷனுக்கு டிராம்போக்கு
வரத்து ஏற்படுத்த முயற்சி யெடுக்கப்பட்டிருக்கிறது. டெலிபோன் ஏற்
பட்டு விட்டது. விவசாயப்படிப்பிற்காகப் பள்ளிக்கூடம் கட்டிக்கொண்டி

ருக்கிறார்கள். கைத்தொழிற் காக்ஷிச்சாலை, விவசாயக்காக்ஷிச்சாலை இவைகள் ஏற்படுத்தப்படும் நோக்கமிருக்கிறது. கற்பனாசங்கம் வேலைசெய்யும் விதம் இது தான். அதன்வேலை ஆரம்பித்து கொஞ்சகாலமே ஆகியிருந்தாலும், படிப்பில்லாத குழந்தைகளின் கணக்கு 100-க்கு 80-லிருந்து 100-க்கு 20-ஆகக் குறைந்திருக்கிறது. திருடர்கள் பதுங்குமிடமென்று பெயரெடுத்திருந்த ஒரு சிறிய கிராமம் எப்படி முன்னேற்ற மடைந்திருக்கிறது பாருங்கள்.

கோவாபரேஷனின் பயனாக ஸைபீரியாவிலுள்ள ஒரு கிராமத்தில் பாற்சாலை, ஸ்டோர், எண்ணெய் யந்திரசாலை, மில்லுகள், நாணயச் சங்கம் இவைகளிருப்பதோடு காந்தவிளக்கு ஏற்பாடும் சினமோடகிராப் என்னும் சித்திரப்படக்காக்ஷிச்சாலையும் கூட இருக்கின்றன.

ஸைபீரியாவின் 'ஊரல்' பிரதேசத்திலுள்ள ஒரு உள் நாட்டுக்கிராமத்தில் ஏழைகளுக்கு கோவாபரேஷனிலுண்டாயிருந்த நம்பிக்கையைப்பற்றிய ஓர் உதாரணம் எல்லாமனதையும் கவரத்தகுந்தது. டம்பமில்லாத நல்ல குணம்வாய்ந்த ஒரு அம்மாள் கிராமக்குருக்களின் ஸம்சாரம்; உள்ளூர் வியாபாரிகளின் போட்டிகளைலக்ஷியம் செய்யாமல், உபாயமாக ஒரு கோவாபரேடிவ் சொஸைடியை ஆரம்பித்து அதை கியாதியடையும்படி செய்தாள். அந்த அம்மாள் கோவாபரேடிவ் வேலைகளைச் செய்ததோடு கூட குடியானவர்களுக்கு தேனீக்களை வளர்க்கும் விதங்களைக்கற்றுக்கொடுத்து, கள்முதலியவை குடித்தலை நிவர்த்தித்துக்கொண்டும், ஸ்திரீகளுக்கு தம் குழந்தைகளை எப்படி சரிவரப் போஷித்துக்காப்பாற்றுவது என்பதைக் கற்றுக் கொடுத்தும் உபகரித்து வந்தாள். அந்த கிராமத்தில் அநேககிழவிகள் தங்கள் தேகங்களை கடைசியில் அடக்கம் செய்யும் செலவுகளுக்காக இதில் சேர்ந்து பணம் சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் அக்குருக்களின் சம்சாரத்தைப் பார்த்து "அம்மா, நீ நல்லவேலையைச்செய்து எங்கள் மனதிற் கெல்லாம் ஒரு ஆறுதலையும் நம்பிக்கையையும் உண்டாக்கியிருக்கிறாய். எங்கள் பணத்தையெல்லாம் நீங்களே வைத்துக்கொண்டு நாங்கள் இறந்த பிறகு உத்திரக்கிரியைக்கு செலவழியுங்கள்" என்று சொன்னார்கள். சுமார் ரூ. 1,500 இம்மாதிரியாக அந்த அம்மாள் கையில் கொடுக்கப்பட்டு அவளும் அதைக் கொண்டு ஸ்டோரை விருத்திசெய்கிறாள்.

## கட்டிடச் சங்கங்களுக்கு ராஜாங்க உதவி.

கட்டிடச் சங்கங்களுக்கு ராஜாங்க உதவி வேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்டார் கேட்டதற்கு இந்தியா கவர்ன்மெண்டார் காட்டிய விரோதபாவம் 'லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்டு கஜெட்டில்' நன்கு கண்டிக்கப்பட்டிருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். இந்தியா வர்ன்மெண்டார், சங்கங்களுக்கு முதல் தனம்தான் தேவை போலவும் தற்காலம் தாங்கள் பெறும் வட்டி விகிதம் அதாவது 100-க்கு 5½வீதம் கட்டுப்படி ஆகாதென்றும், முனிசிபாலிடியால் உதவி செய்யமுடியாதென்றும் ஆகையால் இவ்விஷயம் தற்காலம் எழுத்து விவகாரத்தோடு மாத்திரம் நிற்கவேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டதாகத் தெரிகிறது. கெஜட்டும் இவ்வபிப்பிராயத்தைச் சுட்டிக்காட்டி கண்டித்திருக்கிறது. கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை வியாபாரப் பாங்கில் கவனித்து ஏழைகளுக்கு வீட்டு சௌகரியமும் அதனால் பொதுஜன சௌக்கியமும் உண்டாக்குவது ரெவினியூப் பணத்தின் முதற்செலவு என்பதை உணராமலிருப்பது விசனிக்கத்தக்கதே. கவர்ன்மெண்டார் வருஷாவருஷம் பஞ்ச இன்ஷியூரன்ஸுக்கென்றுஒருதொகைஎடுத்துவைத்துஅதைரெயில்வேமுதலிய விஷயங்களில் சிலவழிக்கிறார்கள். அதேமாதிரி கொள்ளை நோய், வியாதி இவைகளின் இன்ஷியூரன்ஸுக்காக ஒரு தொகை ஏற்பாடு செய்து அதை அல்லது அதின் ஒரு பாகத்தை வீடுகள் கட்டுதல், டிராம் ஏற்படுத்தல் முதலிய விஷயங்களில்செலவழிக்கவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மதறாஸ் கார்பொரேஷன் ரெவினியூ உத்தியோகஸ்தராகிய மிஸ்டர் எஸ். தண்டபாணி ஐயரவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி ஆழ்ந்த ஆலோசனையுடன் எழுதிய வியாசம் கவனிக்கத்தக்கது. அவர் சென்னையில் தாழ்ந்த வகுப்பினர்கள் வசிக்குமிடங்களின் நிலைமையைத் தெளிவாய்க்காட்டி, கட்டிடச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டாராவது முனிசிபாலிட்டியாராவது வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு 3-க்கு மேற்படாதவட்டிக்கு கடன் கொடுத்து 20 ௵ங்களில் திருப்பி வசூல் செய்து கொள்ளலாமென்றும் முனிசிபாலிடியும் தங்கள் வருஷ பட்ஜட்டில் இதற்கென்று ஒரு குறிப்பிட்டதொகைவருஷா வருஷம் எடுத்து வைக்கலாமென்றும் பிரஸ்தாபித்திருக்கிறார். சில காலத்திற்கு முன் கட்டிடச் சங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்து அவைகளின் வழக்க வட்டிப் பிரகாரம் கடன் பெறலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டிருந்தார். இப்பொழுது அப்பாங்கிகள் கவர்ன்மெண்டார் வாங்கும் கடன்களின்பேரில் கொடுக்கும் வட்டிப் பிரகாரம்தான் கடன்கொடுக்க அபிப்பிராயப் படுகின்றன. இச்சிறிய மாறுதலும் ஒரு கற்பனையே. ஆனால் சமீபத்தில் அவர்களும் நன்னிலைமைக்கு மாற்றப்படலாமென்று நம்புகிறோம்.



## நிதானிக்கச் சொல்லுதல்.

1918௵ செப்டம்பர் மாதத்தில் மைசூர் கோவாபரேடிவ் டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களின் கான்பரன்ஸ் மைசூரில் நடைபெற்றது. கவர்ன்மெண்டு உத்தியோகம் வகிக்காத சில பிரமுகர்களும் அதற்கு அழைக்கப்பட்டார்கள். ஸர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்களுடைய ஆளுகையில் வெகு தீவிரம் காட்டப்படும் கிராமச் சீர்திருத்த வேலைகளில்

கோவாபரேடிவ் சொஸைடிகள் ஈடுபடவேண்டுமென்றும், படிப்பு, சுகாதாரம், ஆசாரச் சீர்திருத்தங்கள் முதலியவைகளையும் கவனிக்கவேண்டுமென்றும், கௌன்ஸில் மெம்பராகிய மிஸ்டர் பி. ராகவேந்திரராவ் அவர்கள் கேட்டுக்கொண்டார். பிறகு கவர்ன்மெண்டு சிகரிடேரியாகிய மிஸ்டர் டிஸெல்வா என்பவர் சொஸைடிகளின் இஸ்ஸ்பெக்டர்களைப் பார்த்து பொருளாதாரத்தைப்பற்றிய கான்பரன்ஸ் வேலைக்காகவும் கிராமச் சீர்திருத்தத்திற்காகவும் குறைந்த பக்ஷம் ஆயிரம் பெயர்கள் உள்ளூர் வேலைக்கும், ஜில்லா வேலைக்காக சுமார் 50 பெயர்களும், சமஸ்தான மொத்தத்திற்கு 12 பெயர்களும் தருவித்துக் கொடுக்கும்படி கேட்டார். இப்பிரஸ்தாபத்தின் அமரிக்கையை கவனிக்க நமக்கு மிக ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

மைசூரில் எல்லாவித சொஸைடிகளையும்சேர்த்து இன்னம் ஆயிரம் கிராமச் சங்கங்கள் இருக்கின்றனவா என்பதே எங்களுக்கு நிச்சயமில்லை. மேலும் ஒவ்வொரு சொஸைடியிலும் தேசாபிமானம்,உண்மை,நாணயம், கௌரவம், முதலிய எல்லாக் குணங்களும் வாய்ந்த ஒரு வேலைக்காரராவது சராசரியில்இருக்கிறாரென்பதையும் தைரியமாய் சொல்லமுடியாது. ஆனால் நாம் இப்படிச் சொல்வது பிரிடிஷ் இந்தியாவின் அனுபவத்தை ஒட்டியே ஒழிய அவ்விடத்து அனுபவம் தெரிந்து அல்ல. மைசூர் ஸமஸ்தானத்திலுள்ள கிராம, நகரங்களில் இவ்விடங்களைவிட விசேஷ தேசாபிமானஊக்கமிருக்கிறதென்றுதெரிந்தால் நமக்கு சந்தோஷம்தான். கோவாபரேடிவ் சங்கங்களின் திறமை மிகத்தாழ்ந்த நிலைமையிலிருக்கும் தற்காலத்தில் நாணய சம்பந்த மில்லாத ஏற்பாடுகள் அநேகம்ஏற்படுத்தி விருத்தி செய்யவேண்டி யிருக்க, மேலும் இவ்வியக்கத்திற்கு சொந்தத்தில் இன்ஸ்பெக்டர்களும் சூபர்வைஸர்களும் இன்னம் ஏற்பாடாகாமலிருக்க, வெளி விஷயங்களில் மெம்பர்களின் கவனத்தைத் திருப்புவது மிகவும் பிசகான காரியம். சில மேனாடுகளில் கோவாபரேடிவ் சங்கங்கள் ஆசாரச் சீர்திருத்தங்களில் தலையிடுகின்றன வென்று நமக்குத்தெரியும். அவர்களுடைய திறமையும் தேசாபிமானமும் நமக்கு ஏற்பட்ட பிறகு இவ்விஷயத்தில் அவர்களுடைய மாதிரியைப் பின் பற்றலாம். ஸர் எட்வர்ட் மாக்ளகான் துரையவர்களின் அக்ராசனத்தின் கீழ் நடந்த கோவாபரேஷன் கமிட்டியில் "சுகாதாரம், படிப்பு, கிராமச் சீர்திருத்தம் முதலிய வேலைகளில் அக்கிராம நிர்வாகம் முற்றிலும் தங்களிடம் இருந்து தாங்களும் மனதார அவ்வேலைகளை ஏற்றுக்கொள்ளுகிறதா யிருந்தாலொழிய கோவாபரேடிவ் சொஸைடிகளை மேற்படி காரியங்களுக்கு உபயோகிக்கக்கூடாது" என்று தீர்மானித்திருக்கிறது. சீக்கிரமாக செல்வப் பெருக்குண்டாகு மென்னும் அவசர அவாவினால், மைசூரும் கரும்பு ருசியென்று வேருடன் பிடுங்கும்



முறையை அனுசரிக்காதென்று நம்புகிறோம். தேசாபிமான வேலையில் விசேஷ சாமர்த்தியத்துடன் உழைக்கக்கூடிய சில ஜனங்களை கோவாபரேடிவ் இயக்கத்தில் காணலாம். அப்படிப்பட்ட ஜனங்களை கிராமச் சீர்திருத்தத்திலாவது வேறு எந்த வேலையிலாவது நியமிப்பதைப்பற்றி விரோதமான பேச்சே கிடையாது. ஆனால் கோவாபரேடிவ் இலாகாவிலிருந்து முதல்தரமான 1000 பெயர்களை கோவாபரேடிவ் சம்பந்தமில்லாத வேலைகளுக்காகத்தயார் செய்வதென்றால் (அவர்களும் முழுப்பொழுதும் வேலை செய்யும் ராஜாங்க உத்தியோகஸ்தர்களல்ல) இயக்கத்தின் ஜீவவேரைக் களைவதற்குச் சமானமாகிறது. கோவாபரேஷனால் தேசத்திற்கு புது உயிர் கொடுத்தும், கொடுத்துக்கொண்டும் இருக்கிறது. ஆனால் இது இயல்பாகவும், தாராளமாகவும் விருத்தியடைந்து வந்தால், வேறு பெரிய பொறுப்புகளை சரிவர நிர்வகிக்க சக்தி யுள்ளதாகும்.

## திருவல்லிக்கேணி ஸ்டோர் சொஸைடி.

இலாபப் போட்டிகள், பஞ்சத்தினால் கொள்ளை, முதலிய இவைகள் தாராளமாய் நடைபெற்று அதனால் ஞாயமான விலைக்கு சரக்குகள் கிடைப்பது அருமையாயிருக்கும் இக்காலங்களில் கோவாபரேடிவ் ஏற்பாடுகளின் பெருமையை எப்பொழுதையும்விட விசேஷமாய் ஜனங்கள் அறிந்து வருகிறவிஷயம் ஒரு ஆச்சரியமல்ல. இச்சொஸைடியின் எல்லாக்கிளை ஆபீசுகளிலும் மெம்பர்கள் விரைவாய் அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள். 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஒவ்வொரு கிளை ஆபீசுகளிலும் செய்திருக்கிற வியாபாரம் சென்ற வருஷத்தின் இக்கால வியாபாரத்தைவிட சுமார் இரட்டிப்பாயிருகிறது. இப்படி ஆனதிற்கு விசேஷகாரணம் விலைவாசி ஏற்றமும்கூடத்தான். அன்னியர்களுக்குக்கூட சரக்குகள் விற்கப்படலாமென்று கவர்ன்மெண்டு அனுமதி கொடுத்திருக்கிறதாகத்தெறிகிறது. சற்றேறக்குறைய போக்குவரத்து சௌகரியம் சொஸைடிக்கு விசேஷமாக இருக்கிறதென்று கேள்விப்பட திருப்தி உண்டாகிறது. இதற்குக்காரணம் ரிஜிஸ்ட்ரார் அவர்களும், ஸிவில் ஸப்ளை டைரக்டரவர்களும் காட்டிய தயவே. சென்னையில் கொள்ளை நடந்தகாலங்களில் சொஸைடி போலீஸாரின் உதவியைப்பெற்று சுமார் 1000 அரிசி மூட்டைகள் படகிலிருந்து கிடங்கிற்கு இரண்டு இரவுகளில் 10 மணிக்குமேல் 3 மணிக்குள்ளாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. தானியங்கள் சம்பாதிக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டு உதவி செய்யப்பிரியப்பட்டால், தாங்களும் அநேக இடங்களில் ஸ்பெஷல் கடைகள் ஏற்படுத்தி ஏழைகளுக்கு கொள்முதலுக்கே விற்க இசைவதாக பிரஸ்தாபித்தார்களாம்.

சென்றசெப்டம்பர் மாதம் 8-ம்தேதி நடைபெற்ற சொஸைடியின்ஜனரல்பாடிமீட்டிங்கில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன:—

1. 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியுடன் முடியும் அரைவருஷத்திற்கு மெம்பர்கள் வாங்கின தொகையின்பேரில் ரூபாய் ஒன்றுக்கு 2·75 தம்படி வீதம் டிவிடெண்டு கொடுக்கப்படும்.

2. கிளை ஆபீசுகள் சௌகரியமான பொறுப்பை ஏற்று தாங்களே நிர்வகிக்கும்பொருட்டு அவ்வாபீசுகளின் பஞ்சாயத்துகள் சுதந்தரமானேஜிங் கமிட்டிகளாக ஏற்பட்டு எல்லாப்பொறுப்பையும் வகித்து நிர்வகிப்பார்கள். ஹெட் ஆபீசு அவைகளுக்கு மொத்த சப்ளைகள் செய்யும் ஏஜன்ஸிபோலவே வேலைசெய்யும்.

3. இவ்வேற்பாட்டை வேலைசெய்ய "டிஸென்ட்ராலிஷேன்" என்னும் மத்திய விருத்திக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

4. பொது நல பண்டிலிருந்து ரூ 5,000 எடுத்து அதைக்கொண்டு மெம்பர்களுக்கு விற்பதற்காக ஜவுளி வியாபாரம் ஆரம்பிக்கலாம்.

5. லைப்ரேரிகளை விஸ்தாரப்படுத்தி சலவை ஏற்பாட்டையும் ஒழுங்குபடுத்தி நடத்தவேண்டும்.

## விவசாயமும், கூட்டுறவும்.

மல எருவானது சீனா, ஜப்பான் முதலான தேசங்களில் பயிர்களுக்குச் சிறந்த எருவாக உபயோகிக்கப் பட்டுவருகின்றது. நாம் மாட்டுச் சாணியை எவ்வளவு பத்திரமாகச் சேகரித்து எருவாக உபயோகிக்கிறோமோ, அவ்விதமே அவர்கள் மல எரு விஷயமாய்ச் செய்து வருகிறார்கள். நமது தேசத்தில் கிராமாந்திரங்களில் அநேகமாக எங்கும் இந்த வழக்கம் அனுஷ்டிக்கப்படுவதில்லை.

மல எருவைக் கீரைத்தண்டு, முள்ளங்கி முதலான பயிர்களுக்கு உபயோகித்தால், அவை மிக்க வீர்யமாயும் பருமனாயும் வளர்கின்றன. இதைச் சாம்பலுடனாவது, மண்ணுடனாவது கலந்து மக்கவைக்காமல் உபயோகித்தால், பயிர் சில தினங்களுக்குள் மிக்க வீர்யத்தோடு வளர்ந்து, பிறகு மஞ்சள் நிறமடைந்து இறந்துபோம். இந்த எருவை ஏராளமாகப் பயிர்களுக்கு உபயோகித்தாலும் போதியவளவு மழையில்லாவிட்டால், எருவின் காரத்தால் அவை எரிந்துபோய்விடும். ஆகவே, நீர்ப்பாய்ச்சலுள்ள பயிர்களுக்கே இதை உபயோகிப்பது நல்லது.

## மேன்னை அடைப்பான்

இந்தவியாதியானது அடைப்பானைப்போல் ஒருவிதத் தொற்று வியாதியாகும். இதற்கான விஷம் பிராணிகளின் இரத்தத்தில் சேருவதனால், இது உண்டாகின்றது. அதிகமாய் இந்த வியாதி எருமைமாடுகளுக்கே உண்டாகின்றது. மற்ற கால்நடைகளுக்கும் இந்த வியாதிஉண்டாவதுண்டு. மழை காலத்தில்தான் இது அதிகமாகப் பரவுகின்றது. இளமையாயுள்ள கால்நடைகளே அதிகமாக இந்நோயால் தாக்கப்படுகின்றன.



கிருஷிகர்கள் இந்த வியாதியைத் திட்டமாக இன்னதென்று அறியாமல் அடைப்பானென்று தீர்மானித்துவிடுகிறார்கள். ஏனெனில், இந்த இரண்டு வியாதிகளின் குறிகள் ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. மாட்டுக்கு இந்த மென்னை அடைப்பான் கண்டவுடனே, அதற்குக் கொடூரமான காய்ச்சலடிக்கும், தொண்டையில் வீக்கமுண்டாகும்; நாக்கும் வீங்கியிருக்கும்; வாயிலிருந்து நீர் வடியும். மாடு ஆகாரத்தை விழுங்குவதற்குக் கஷ்டப்படும்; மிகுந்த வருத்தத்துடன் மூச்சுவிடும்; அதன் கண்களையும் மூக்குத்துவாரங்களையும் கவனித்தால், அவை சற்று ஊதா நிறமாயிருப்பதாகக் காணப்படும். மாட்டுக்கு வியாதி சற்று முற்றுமானால், மஞ்சள் நிறமுள்ள உமிழ் நீர் அதன் வாயிலிருந்து வடிவதையும், மார்புவரை வீங்கியிருப்பதையும் காணலாம். இந்த வியாதியால் தாக்கப்படும் சில கால்நடைகளுக்கு வேறு விதமான குறிகளும் காணப்படும்: மூத்திரம் இரத்தம்போல் சிவந்திருப்பது, வீக்கம் தொண்டையிலில்லாமல் முகம், வயிறு, கால் முதலான இடங்களில் காணப்படுவது ஆகிய இவைகளே. கிருஷிகர்கள் கால் நடைகளுக்கு இக்குறிகள் தோன்றியவுடன், வியாதியைத் திட்டமாக இன்னதுதானென்று அறிந்துகொண்டு வேண்டிய சிகித்ஸைகளை உடனே செய்யவேண்டும்.—ஜனோபகாரி.

## கோவாபரேஷன் ஏழைகளின் நேசன்.

கிருஷிகர்களுக்கும் ஜனங்களுக்கும் இடையினின்று ஜனங்களைக் கொள்ளையடிக்கும் தரகர்களைத் தொலைத்து, வியாபாரத்தில் நாணயமும் கௌரவமும் உண்டாகச் செய்வது அதன் ஓர் வேலை. ஆகையால் ஒவ்வொரு ஷோவாபரேடரும் நாட்டாரைப் பலவிதத்திலும் ஹிம்சித்து அயோக்கிய லாபம் பெறும் வியாபாரிகளும் தரகர்களும் செய்யும் வேலைகளை அலக்ஷியப்படுத்தி கவனிக்காமல் இருக்கமாட்டார்கள். தற்காலப் பொருட் கஷ்டத்திற்கு அநேக காரணங்களிருந்த போதிலும் தரகர்களுடைய பேராசையும் விலை யேற்றங்களுக்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று. அநேக இடங்களில் கொள்ளைகள் கலகங்கள் முதலியன ஏற்பட்டு ஏராளமான பொருள் நஷ்டமும் சில உயிர் நஷ்டமும் உண்டானதைப் பற்றியும், கோவாபரேஷன் ஏற்பாடாகவும் பலமாகவும் நம் நாட்டில் ஏற்பட்டிருந்ததால் இத்தகையகஷ்டம் வந்திருக்காதே என்பதைப்பற்றியும், ஒவ்வொரு கோவாபரேடரும் அநுதாபத்துடன் நினைக்கிறார்கள். அக்காலங்களில் போலிசார்களும் உத்தியோகஸ்தர்களும் வெகு ஒழுங்காக நட-

ந்து அமைதி யுண்டாக்கினர்களாயினும் கால நிலைமையை நேரில் அறிய சென்னைக்கு வந்த இரண்டு கொளன்ஸில் மெம்பர்களின் மனதில் பட்ட அபிப்பிராயம் நமக்கு அனுகூலமில்லை யென்றே தெரிகிறது. ஒரு கக்ஷியார் லாபப்பேராசையே விலையேற்றத்திற்குக் காரணமென்கிறார்கள். மறுகக்ஷியார் சரக்குப்போக்குவரத்தின் கஷ்டமே காரணமென்கிறார்கள். இருகக்ஷியாரின் அபிப்பிராயபேதமும் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. கவர்ன்மெண்டு ஒப்புக்கொண்டததுதான் ஆச்சரியம். போர்ட் டிரஸ்ட் உத்தியோகஸ்தர்கள் சர்க்கரை, அரிசி இதரதானியங்கள் இவைகளின் பேரில் குறித்ததினத்திற்குள் எடுத்துப்போகாவிட்டால் பளுவான அபராதம் ஏற்படுத்தியதே லாபப் பேராசை யென்பதை மறுத்தவர்களுக்குத் தீர்மானமாகிய சரியான மறுமொழி. உணவுப்பொருள்களின் வரத்து வழக்கத்தைவிடக் குறைவாக விருக்கும்போது வியாபாரிகள் துறைமுகக் கிடங்கிலிருந்து சரக்கைக்கொண்டுவர இஷ்டப்படாத காரணம் லாபப் பேராசையைவிட வேறு என்னவா யிருக்கும்? சர்க்கரை, துறைமுகக் கிடங்கில்போட்டு வைக்கப்பட்டு, கடைகளில்சர்க்கரையில்லாமல் அநியாய கிராக்கியில் விற்கப்பட்டபொழுது ஸர் பிரான்ஸிஸ் ஸ்ப்ரிங்துரையவர்கள் பின்வருமாறு சொன்னார். "தானியங்கள், சர்க்கரைமுதலியவைகளை நாம் ஜனங்களுக்குள் தான் செலவழிக்கவேண்டும். ஆகையால் எவ்வளவுக்கெவ்வளவு தரகர்கள் குறைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சரக்கு மலிவாகி அவைகளைச் செலவழிக்கும் ஏழைகளையடையும்."

இந்தியாவின் முக்கியமான ஐந்து துறைமுகப்பட்டணங்களிலுள்ள துணிக்கிடங்குகளையும் கடைகளையும் சோதிக்கும்படி சமீபத்தில் பிறந்த கவர்ன்மெண்டு உத்திரவினால் சரக்குகள் எதேஷ்டமாக விருக்கிறதென்றும் வியாபாரிகளும் தொழிலாளிகளும்கூடி பேராசையினால் விலைகளை உயர்த்தியிருக்கிறார்க ளென்றும் தெரிந்தது. ஷை யிடங்களைத்தவிர டெல்லியிலும் அம்ரிட்ஸாரிலும் கூட சோதித்ததில் 12,000 லக்ஷம் கெஜ துணிகள் சில்லரை வியாபாரிகளைக் கவனிக்காமலே, மொத்தக்கடைகளில் மாத்திரம் இருந்தன. இதர இடங்களிலுள்ள சரக்குகளையும் இவ்விடம் உண்டாகும் சரக்குகளையும் சேர்த்துப் போதுமான சரக்குகள் இருக்க, பேராசையினால் வியாபாரிகள் ஒளித்துவைத்துக்கொண்டு கவர்ன்மெண்டார் புகும்படியான கஷ்டத்தைக் கொடுக்கிறார்கள். உணவுப்பொருள்களின் விலையேற்றத்திற்கும் இத்தகைய அநியாயமே காரணமாகலாமென்று ஊகிக்கலாம். "சட்ட வரையறுப்பின்படியுள்ள லக்ஷணங்களில்லாமையால் இவ்விராஜதானியில் பஞ்சமில்லை" யென்னும் கவர்ன்மெண்டாரின் கொள்கை சரியென்றுதான் நமக்கும் படுகிறது. ஆனால் சிலவருஷங்களாக அடக்கப்படாமல் விட்ட ராஜீயப் பேச்சுகளே ராஜபக்திக்குறைவுக்குக் காரணம் என்று ராஜாங்கத்தார் நினைத்தது நம்மனதிற்குப் பொருந்தமில்லை.



# பஞ்சாயத்தின் கடமைகள்

வந்தவாசி தாலூக்கா 2273 நெர். சோகத்தூர் கோவாபரேடிவ் சொஸைடியின் காரியதரிசி, மிஸ்டர் M. S. விஜயராகவாசாரியாரால் வரையப்பட்ட வியாஸம்.

கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலிய ஒவ்வொரு விஷயங்களைக்குறித்தும் ஒவ்வொரு கனவான்களால் வியாஸம் வரையப்பட்டு, நமது புல்லெடின் பத்திரிகையில் வெளிவருவதை அவ்விஷயங்களை எல்லாம் சொஸைடியின் மெம்பர்களுக்கு செவ்வனே தெரிவிக்க வேண்டியதும், நடவடிக்கைகளுக்கு கொண்டுவர வேண்டியதும் சொஸைடியின் நிர்வாகஸ்தர்களாகிய பஞ்சாயத்து மெம்பர்களின் திறமையினாலேயே பூர்த்தியாகவேண்டியிருப்பதினால்தான் மேல் சொன்ன பஞ்சாயத்து மெம்பர்கள் இருக்கவேண்டிய மாதிரியையும், இருந்துவரும் தன்மையையும் நடந்தவைகளைக்கேட்டும், பார்த்தும், வந்ததையனுசரித்து என் புல்லறிவிற் கெட்டியவரையில் "பஞ்சாயத்தாருக் கோர் விஞ்ஞாபனம்" என்ற வியாஸத்தை வந்தவாசியில் நடந்த வருஷாந்தர யூனியன் கான்பரன்ஸில் என்னால் படிக்கப்பட்டது. இந்த வியாஸத்தில் கண்ட வண்ணம் நடந்துகொள்ளும் சொஸைடியின் மெம்பர்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனம் செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அக்ராஸனாதிபத்யம் வகிக்கும் மெம்பரானவர் தானும் பஞ்சாயத்தில் ஒரு மெம்பர் என்பதைமாத்திரம் எண்ணினால் போதுமானது. ஏனென்றால் பஞ்சாயத்து மெம்பரைவிட தான் வேறான ஒரு கிரீடம் புனைந்த யஜமான்யதை வகித்ததாக நினைத்து இருந்த ஒரு பிரஸிடெண்டிருக்கும் சொஸைடியைப்பற்றி நடந்த சம்பவங்களை அறிந்தபடி கீழேவரைகிறேன்:—

"பாடியாலா" என்னும் கிராமம் என்று வரைய ஆரம்பிக்கிறேன். ஏனென்றால் வாஸ்தவமாய் அனேக சொஸைடிகளிலும் கீழ்கண்டவாறிருக்கக் கூடுமாகையால் குறிப்பிடாமல் ஒரு சொஸைடியை நிர்மானித்து நடந்தவைகளை மாத்திரம் அப்படியே எழுதுகிறேன்.

பாடியாலா சொஸைடியில் முதலியார் அக்ராஸனாதிபதி, வர்மா என்ற காரியதரிசி, அண்ணாசாமி, அய்யர், அய்யங்கார், என்ற பஞ்சாயத்தார்களுக்கும், முத்தன் என்கிற ஒருமெம்பருக்கும் நடந்த சம்பவங்களாவன:—

முத்தன்:—(அய்யரைப்பார்த்து.) சாமி புதுமழை பேஞ்சுச் சிங்க, கயணி அல்லாம் பயம் புயுதிபட்டுக் கிடக் குதுங்க, பண்டிலே அஞ்சி ரூபா கொடுத்திங்கண்ணா பாலஞ்சம்பா தூலிடுரானுங்க, ஆண்டவன் புண்யத்தாலே பேஞ்சாலும் காஞ்சாலும் காளியாத்தாயிருக்கா,

அய்யர்:—வள, வள வென்று பேசாதடா, என்ன கேழ்க்குராயோ அதை பிரஸிடெண்டிடமோ அல்லது காரியதரிசியிடமோ சென்றறிந்து கொள்.

முத்.—பிரசண்டைக் கண்டேனு? காயதோசையைக் கண்டனு சாமி.

அய்:—அடே! அக்ராஸனுதிபதியிடம் அல்லது செகரிடிரியிடம் சென்று மணிவிஷயம் கேட்டால் கொடுப்பார்கள்.

முத்:— அப்படி சொன்னு நான் யாரை கேட்பது (இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அண்ணுசாமி பிள்ளை வருகிறுர்.)

அய்யர்:—What Mister? என்ன? இந்த முத்தன் சொஸைடியில் 4-வருஷ காலமாய் மெம்பராம், பிரஸிடெண்டு தெரியவில்லையே!

அண்ணு:—உமக்கு சொல்லத் தெரியாவிடில் அவன் என்ன செய்வன் பாவம், நீர்படித்த படிப்பை இவனிடமா காட்டுவது, அடேமுத்தா! ரூபாய்கள் எல்லாம் கஜானுவி லிருந்து வாங்கிவாரரே, அவரிடம் போய் கேள்.

முத்தன்:—(அப்படி சொன்னுல்தான் தெரியும். என்னமோ! செண்டாம், காயாம் பழமாம், இந்த ஐயமாருக்கு அல்லாம் கோணப்பேச்சே யொழிய நேராபேசத்தெரியாது. புள்ள என்னமாச் சொன்னுருபாரு, என்பதாக தன்மனதினுள் சொல்லிக்கொண்டு)வெளியில் ஆமாம் ஐயா! வாய்தாப்பணத்துக்கு என்மாட்டைக்கூட ஓட்டினுரு நான்கூட கடுக்கனை செட்டியாரிடம் அடவு வெச்சு ரூபாக்கி காலணுவட்டி வாங்கியே ரூபா தண்டத்துக்கு அயுதேன் அந்த ஐயர் தெரியும் சாமி.

அ. பிள்ளை:—அவரல்லடா, முதலியார் இருக்கார் தடியாய் மூக்கண்ணுடிபோட்டிருக்காரே! அவரிடம் போய் ரூபாய் இருக்கிறதாகேட்டுவா?

முத்தன்:—அடே யப்பா. மூணும்வாட்டி 50-ரூபாகடன்கேட்டேன். ரூபாக்கு ஒருநாள் வேலைவீதம் செய்தேன். பத்ரம் எயுதி ரிஜஸ்தரு பண்ணேன், வண்டி ஓட்டி, எருவு ஓட்டி, கையை பிடிச்சு, காலபிடிச்சு, அடா எப்பா எனக்கு வாணுமையா நான் செட்டியாரண்டையே வாங்கிக் கொள்கிறேன்.

இதற்குள் அய்யங்கார் வருகிறுர், இவரைப்பார்த்து, அண்ணுசாமி பிள்ளை கும்பிடு போட்டு மரியாதையாய் உட்காரவைத்து பிள்ளை, அய்யர், அய்யங்கார் மூவரும் யோசிக்கிறுர்கள். இவர்கள் யோசனையின் முடிவாக ஒருதீர்மானம் செய்தார்கள். அதாவது. அக்ராஸனுதிபதி தொகையை வெகுவாய் கையாளுவதாகவும், தனக்கு இஷ்டமிருப்பவர்களுக்கு மாத்திரம் கடன்கொடுப்பதாகவும், தனக்கு இஷ்டமில்லாவிடில் கொடுப்பதில்லை என்றும், அவர் இஷ்டப்பிரகாரம் நடக்கின்றதின் காரணம், தாங்கள் எல்லாம் முதலியாரிடம் முன் கடன்பட்டிருப்பதாகவும் இனி என்ன தாக்ஷண்யமிருந்த போதிலும் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் சொஸைடியில் நடக்ககூடா தென்றும், முடிவுசெய்து கொண்டு, முதலியாரை அழைத்துக்கொண்டு வரும்படி முத்தனை யனுப்பிவிட்டு தான் போய் வர்மாவை யழைத்து வருவதாய் அய்யங்கார் போய்விட்டார்.



எல்லோருமாக, அய்யர் தெருத்திண்ணையில் கூடி நடவடிக்கை புத்தகத்தில். "176 நெ. முத்தன் விதைவாங்க குருகிய காலக் கடனுக ரூ. 5 கேழ்க்கும் விஷயம்" என்று எழுதும்படி வர்மாவுக்கு பிள்ளை கட்டளை யிட்டார்.

நான்கு மெம்பரும் கடன்கொடுக்கலாமென்று ஒப்புக் கொண்டார்கள். அடியிற் கண்டவாறு முதலியாருக்கும் வர்மாவுச்கும் சம்பாஷணை நடந்தது:—

முதலியார்:—ஓய்! வர்மா! இந்த முத்தன் கொடுக்கவேண்டிய கெடுவுப்படி கடன் தொகை வந்துவிட்டதா?

வர்மா:—ஜூன்மாதமே வரவு வந்துபைசலாய் விட்டது.

முதலியார்.—பங்குத்தொகை.

வர்மா:—அதுவும் வந்துவிட்டது.

முதலியார்:—ஏ! முத்தா? இந்த 5 ரூபாய்க்கு ஏண்டா சங்கத்தில் தொந்திரவு செய்கிறுய். இதுவரையில் இம்மாதிரி சில்லரையாய் யாருக்குமே நான் கொடுக்கவில்லை. உனக்கு ஒருவனுக்கு கொடுத்தால் எல்லாரும் தொந்திரவு செய்வார்கள். நான்தானே கடைசியில் நிஷ்டூரப்பட வேண்டும். 216 மெம்பர்கள் இருக்கார்கள், கையிருப்போ ரூ. 134-10-6 இருப்பு, யாருக்குகொடுப்பது.

வர்மா:—5 ரூபாய் இவனுக்கு கொடுத்து விட்டு ஜில்லாபாங்கியில் கொடுக்கவேண்டிய பாக்கி யின்னும் 700 ரூபாய் போலிருப்பதால் ரூ. 125-0-0 அனுப்பி 4-10-6 கையிருப்பாக இருக்கட்டும். குருகியகாலக் கடனுக விவசாயிகளுக்கு வசூல் தொகையில் கொடுக்கும்படியும் டிபார்ட்டுமெண்டு உத்தரவும் இருக்கிறது.

முதலியார் :— வெகுலக்ஷணம். பாங்கிக்கும் அனுப்பிவிட்டால் கையில் பணமேது. இன்னும் தொந்திரவு செய்கிறவர்களுக்கும் வழியும் காட்டிவிட்டீர்கள். 1 ரூபாயும் 2 ரூபாயுமா கடன் கொடுப்பார்கள்?

வர்மா:—ஆமாம். நேற்றையதினம் அருணுசல முதலியார் தன் போக்யநிலத்தை மீட்க ரூபாய் 300 கேட்டால், இவ்வளவு ஜாஸ்தியாகத்

தொகை கொடுக்க முடியாது குருகியகாலக் கடனாக வேணுமானால் சிபார்சு செய்யப்படு மென்றீர். இதற்கும் இப்படி சொல்கிறீர்களே.

இதையெல்லாம் கேட்டிருந்த அய்யங்காருக்கு ஒருவிதமாய் மனம் மாறிவிட்டது. தானே முதலியாருக்கு 2,000 ரூபாய் போல் கடன் கொடுக்க வேண்டும். ஒன்றும் பேசமுடியவில்லை. வர்மாவும் நெட்டிப் பேச தைர்யமில்லாதவன், பிள்ளைவாளுக்கு கோபம்வந்துவிட்டது. முதலியாரைப் பார்த்து, சொல்லுகிறார்:—

முதலியாரே என்ன, எல்லாம் தங்கள் சித்தமாகவே இருப்பதாகத் தெரிகிறது. உம்மை வந்து தொந்திரவு செய்வது யார். கையில் பணம் வேண்டாமா என்கிறீர், யார் வீட்டுப் பணம் உமது கையில் இருக்க வேண்டும், நாங்கள் எல்லோருமாக இந்த முத்தனுக்கு என் ஜாமீனில் 5 ரூபாய் கொடுக்க தீர்மானித்தோம். கையொப்பம் போடும், பணத்தையெடும், என்று பிள்ளையவாள் சொல்லியதைக் கேட்டதும் தனக்கு அபிப்பிராயமில்லை என்றும் கடன் பணம் கொடுக்க முடியாதென்றும் சொல்லி எழுந்து போய்விட்டார்.

பிறகு நான்கு மெம்பர்களும் ஒன்று சேர்ந்து பத்திரத்தை பூர்த்தி செய்து காஷ்புக்கில் வரவுசெலவு செய்து ஜாமீன்தாரரும் கடன் வாங்கிய முத்தனுமாய் கையொப்பமிட்டு முத்தனிடம் கொடுத்து தனியாய் ஒரு சீட்டும் பிள்ளையால் கொடுக்கப்பட்டது.

## சீட்டின் விபரம்.

முதலியாரவர்களுக்கு பிள்ளை எழுதியது. இன்றோடு உம்மிடம் மெம்பர்கள் தண்டவேலை செய்வது நின்றுவிட்டது என்பதை ஞாபகத்தில் வையும். படையாச்சிக்குக் கடன் பட்வாடாசெய்ததில் இன்னும் 27 ரூபாய் நீர் கொடுக்கவில்லையாம். கேட்டால் பணபாக்கியில் உமக்குச் சேரவேண்டிய வட்டிக்கு பிடித்துக்கொண்டதாக தெரிகிறது. சொஸைடியின் பணத்தை வரவு செலவு செய்யவேண்டியமாதிரியை இனியாவது ஜாக்ரதையாய் நடத்த கற்றுக்கொள்ளும். கேவலம் சுயகாரியப் புலியாய் இருப்பீரேல் பணத்தை நீர் சுயப்ரயோசனம் செய்துகொண்டதல்லாமல்.....................................வேணும் இஷ்டன்

அண்ணுசாமி பிள்ளை.

இக்கடிதத்தையும் முத்தன் ரூபாயை கேட்பதையும் பார்த்த முதலியார் மனம்விண்டு, தன் அந்தஸ்தை ராஜீனமா செய்து விடலாமா? இந்த பஞ்சாயத்து மெம்பர்களை......என்ன செய்யலாம்? இந்த முத்தனுக்குப் பணம் கொடாமல் நிருத்திவிடலாமா? என்று சுமார் 10 நிமிஷம் யோசனைசெய்து, பிரதிமையைப்போல் இருந்தார். ஒரு பெருமூச்சுவிட்டு தான் இதுவரையில் அதாவது, 10-நிமிஷம் செய்தயோசனையில், மேல்கண்ட மூன்றுகாரியங்களையும், தன்னிஷ்டம்போல் செய்ய முடியாததைக்கண்டு, முத்தனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு, முத்தனையே கூப்பிட்டு, நாளையதினம் தனது பூவந்தித்தலை விதைப்பாடென்றும், பிறம்படிக்க (முத்தன்) வண்டிமாடுதேவை என்றும் கேழ்க்க, மாமூல் தாக்ஷண்யப்படி அவனும் சம்மதித்தான்.



இப்போதும் அந்த சொஸைடி இதேமாதிரி 4-மெம்பர்களுடைய தீர்மானப்படி நடந்து வருகிறது. இன்னமும் முதலியார் தன் எண்ணத்தை மாற்றினார் இல்லை. ஆனால் ஒரு மெம்பராவது முதலியாரிடமாவது வர்மாவிடமாவது போவதில்லை. எல்லாம் பிள்ளையின் இஷ்டமே. என்னகாரணம். பிள்ளைவாள் நியாயமாக மெம்பர்களுக்கு நீதி வழங்குவதுடன் தனக்கு இந்த சொஸைடியால் ஒருவிதமான நியாயமில்லாத லாபத்தை கருதியவரல்லர். தீனதயாளு, நல்ல எண்ணமுடையவர், சொஸைடியின் பெருமையையும் பொது நன்மைக்குப் பாடுபடுவதால் உண்டாகும் கீர்த்தியையும் நன்றாய் அறிந்தவர்.

ஆகையால் அக்ராசனம் வகிக்கும் ஸ்ரீமான்களே! நீங்களும் பஞ்சாயத்து மெம்பர்களில் ஒருவரென்று எண்ணியும், பஞ்சாயத்து மெம்பர்களின் பெரும்பாலோர் அபிப்பிராயமில்லாமல் ஒரு காரியமும் தனியாய் செய்ய முடியாதென்பதையும் சுயநலம் கருதாமலும், நன்மையையே நாடி, பொதுநலம் கருதுவதையும் அடிக்கடி கவனத்துக்கு கொண்டு வருவீர்கள் என்று தங்கள் ஊழியனான நான் ஞாபகமூட்டுகிறேன்.

1918-ம் வருத்திய ஜூன்மாதத்திய புல்லெடின் சஞ்சிகையினாலே அனேக சொஸைடிகள் புல்லெடின் சந்தாக்களை யனுப்பாமல் சிலவருஷ காலமாய் பாக்கியென்பதையும் அப்படி பாக்கி நிற்பதையும் காரணத்தையும் செவ்வையாய் எல்லாருக்கும் உருத்த வேண்டிய தற்காகவே, வெகு அழகாக ம-ா-ா-ஸ்ரீ. ஆநந்தராவ் எழுதிய வியாசத்தை ஜூன் மாதம் சஞ்சிகை (483)-ம் பக்கம் தொடங்கி படியுங்கள். மாதம் இருமுறையாவது சொஸைடியில் மீடிங்கி நடத்துங்கள், அம்மீடிங்குகளில் பத்திரிகைகளையும் பைலாக்களையும் படிப்பதும் ஒரு விஷயமாக வைத்துக்கொள்ளுங்கள். புல்லெடின் சந்தாத்தொகையை உடனே அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். பஞ்சாயத்து மெம்பர்கள் எல்லோருக்கும் ஒரே தன்மையான நல்ல அபிப்பிராயங் கொள்ளுங்கள். சொஸைடிக்கு எந்த விதத்தால் கீர்த்தியுண்டாகுமோ அம்மாதிரி பாடுபடுங்கள், 50 ரூபாயை ஜில்லாபாங்கியில் கட்டி 25,00ரூபாயை வாங்கி வியாபாரம் செய்துலாபம் அடைந்து மெம்பர்களும், மெம்பர்களல்லாதவர்களும் சுகமாய் இருக்க விரும்பினால் தவணைக்கடனையும் பங்கையும், தவறாமல் செலுத்துங்கள்.

சொஸைடியை சரிவர நிலைக்கும்படி விசேஷமான நடவடிக்கைகள் செய்வதில் முதலில் நல்லயோசனை செய்யுங்கள். பக்கக்கிளை யில்லாத மரம் எவ்வளவு தூரம் ஓங்கிநிற்கும் என்பதை யோசியுங்கள். அதிகமாக கடன் வாங்காதேயுங்கள், கூடியவரையில் 10 ஆறுதவணையில் வாங்கியகடனை 8 ஆறுத்தில் தீர்க்க முயலுங்கள். ஒரே தேதியில் தவணைத் தொகைகளைச் செலுத்திவிடலாம் என்று எல்லாமெம்பர்களுமே எண்ணுதேயுங்கள்.

---

## மத்திய மாகாணங்களில் கோவாபரேஷன்.

சென்னைக் கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் F. R. ஹெமிங்வே, I. C. S. துரையவர்களால் எழுதப்பட்டதின் சாராம்சம்:—

மத்திய மாகாணத்து விவசாய டிபார்ட்மெண்டார் விருத்தி செய்திருக்கிற அநேக முயற்சிகளில் கோவாபரேடிவ் சம்பந்தம் இலைமறைகாய்போலக் காணப்படுவதை விளக்கமாய் அறிய, கோவாபரேடர்களுக்குத் திருப்தியுண்டாகும். இக்கிளர்ச்சிகள் விவசாய டிபார்ட் மெண்டாரால் கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டைக் கலக்காமல் நடத்தபடுவதால் சில இனங்களில் ஐக்கிய ஒழுக்கம் இல்லாமலிருக்கிறது. ஆனால் கொஞ்ச சீர்திருத்தங்களினால் அவைகளை உண்மையான கோவாபரேடிவ் வேலைகளாக மாற்றிவிடமுடியும் என்று நன்ருய்த் தெரிகிறது.

விவசாய டிபார்ட்மெண்டின் போதனைவேலைகள் "விதை யூனியனையும்," "தாலூக்காசங்கத்தையுமே" விசேஷ ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இவை இரண்டிற்கும் முந்தி விவசாயத்தில் பற்றுள்ள பிரமுகர்கள் பலர்கூடி ஏற்படுத்திய "ஜில்லா அஸோஸியேஷன்கள்" அநேக ஜில்லாக்களில் இருந்தன. அவைகள் விவசாய டிபார்ட்மெண்டின் போதனையின்கீழ் 'மாதிரிச் சங்கங்கள்' ஏற்படுத்தின. இவைகள் இன்னும் இருக்கின்றன. ஆனால் சில வருஷங்களுக்குமுன் சென்னையில் இருந்த அம்மாதிரியான "ஜில்லா விவசாய அஸோஸியேஷன்களுக்கு" ஏற்பட்ட அதேகுறைகளினால் பிடிக்கப்பட்டு கட்டுப்பாடில்லாத தனி ஏஜன்ஸிகள்போலிருக்கின்றன. இவைகள் தவிர விவசாய டைரக்டரின் போதனையில் சீர்திருத்தமான விதைகளையும் கருவிகளையும் பகிர்ந்து கொடுக்கும் ஏஜண்டுகளாக சென்ட்ரல் பாங்கிகளும், கோவாபரேடிவ் நாணயச் சங்கங்களும் உபயோகப்படுகின்றன. கடைசியாக விவசாய டிபார்ட்மெண்டார் பொலிகாளைகளின் விருத்திக்காக ஒரு சங்கமும் நல்ல பால் கொடுப்பதற்காக ஒரு சங்கமும் கோவாபரேடிவ் ஏற்பாட்டில் அல்லது கலப்புக் கோவாபரேடிவ் ஏற்பாட்டில் ஏற்படுத்தி



யிருக்கிறார்கள். "விதைநிலம்" என்பதுசீர்திருத்தப்பட்டவிதைகளைவிதைப்பதற்காக, விவசாய டிபார்ட்மெண்டின் பார்வையில் சாகுபடி செய்து அதைவிதைக்குத் தவிர வேறு உபயோகம் செய்யக்கூடாது என்னும் நிபந்தனையுடன் தெரிந்தெடுக்கப்பட்டஒருயோக்கியமான குடியானவனுடைய நிலம். இதனால் குடியானவனுக்கு அதிக விளைவும் அதிக விலையும் ஏற்பட்டு லாபம் கிடைக்கிறது. கவர்ன்மெண்டுக்கும் சீர்படுத்தப்பட்ட விதையைப்பற்றி ஜனங்களுக்குத் தெரிவித்து அதைத் தானாகவே பரவச் செய்யும் பயன் ஏற்படுகிறது. இம்மாதிரி 'விதை நிலங்கள்' நம்தேசத்தின் சில பாகங்களில் இன்னம் ஆங்காங்கு தனித்திருக்கின்றன. கீழ்காட்டும் பிரகாரம் கோவாபரேடிவ் கிரெடிட் பாங்கிகளும் சங்கங்களும் விதைகளைப்பகிர்ந்துகொடுக்கும் ஏஜண்டுகளாக அடிக்கடி உபயோகப் படுத்தப்படுகின்றன. விதை நிலங்கள் அதிகரிக்க அதிகரிக்க மேன்பார்வை வேண்டியது அவசியமாகிறது. இதற்காக "விதை யூனியன்கள்" என்று சில இடங்களில் ஏற்பட்டன. இவைகள் மூன்று இனங்களாக ஏற்பட்டிருக்கின்றன (1) 'காடிஅல்லது கருப்புப்பருத்தி' இனம் (2) 'சோடா சிண்ட்வாரா' இனம் (3) 'ஹிஹோர இனம். ஆனால் இப்பொழுது இது இல்லை.

'காடிப்பருத்தி' யூனியன் நமது "திருநெல்வேலிக் கொட்டை யூனியனை" யே போன்றது. ஒவ்வொரு யூனியனுக்கும் அதன் மெம்பர்களுக்குச் சொந்தமான மத்திய நிலங்களும் கிளை நிலங்களும் உள்ளன. யூனியன் என்பது ஒரு கிராமம் எல்லைமாத்திர மிருக்கலாம். நாலைந்து மைல்களுக்குள் இருக்கும் சில கிராமங்கள்சேர்ந்து மிருக்கலாம். அதில் சாதாரணமாய் 10 முதல் 20 மெம்பர்கள் வரையில் இருப்பார்கள். 'கெய்கான்' யூனியனுக்கு 25 மெம்பர்களும், மத்திய பூமி 100 ஏகர்களும் கிளை பூமிகள் 700 ஏகர்களும் இருக்கின்றன. மத்திய பூமிக்கு ஒவ்வொரு வருஷமும் விவசாய இலாகாவிலிருந்து சீர்திருத்தக் கொட்டைகள் வந்து அவர்களுடைய பார்வையில் பயிரிடப்பட்டு மாசூலைக் கிளை பூமிகளுக்கு விற்கிறார்கள். மீதியிருந்தால் விவசாய இலாகாவுக்கே விற்று அவர்கள் மூலமாய் ஜனங்களுக்குச் செலவிடப் படுகிறது. இக்கொட்டைகளின் வியாபாரம் அதிக லாபகரமென்றும் ஒரு ஏகருக்கு கொட்டை விற்பனையால் மாத்திரம் 7 ரூ. லாபம் கிடைக்கிறதென்றும் விவசாய டைரக்டர்மதிப்பிடுகிறார். யூனியன் மெம்பர்கள், காவற்காரன் ஒருவனுக்கு மாத்திரம் ஏகர் ஒன்றுக்கு சிலஅணு வீதம் வசூலித்துச் சம்பளம் கொடுத்து மேன்பார்வையை யாராவது ஒரு மெம்பரைஇலவசத்தில் பார்க்கச் செய்கிறார்கள். சில யூனியன் சீர்திருத்தக்கொட்டையின் விலைக்கும் சாதாரணக்கொட்டையின் விலைக்குமுள்ள வித்தியாசத்தில் 100-க்கு25-வீதம் எடுத்துவைத்து சமீபத்தில் (Saving Fund) ஒருமிச்ச நிதி சேர்க்கத் தொடங்கியிருக்கின்றன. இந்நிதிகளிலிருந்து மெம்பர்களுக்குக் கடன்

கொடுப்பதாகவும், வாடகைக்கு விடும் பொருட்டு கருவிகள் வாங்குவதாகவும் உத்தேசம். கெய்கான் சொஸைடி இதற்காக இரண்டு கலப்பைகள் வாங்கியிருக்கின்றன. பொதுவாய்ப் பேசுங்கால் இவ்வேற்பாடு நடைபெறவில்லை. யூனியன்களுள் போட்டி ஏற்படாமலிருக்க எல்லாக்கொட்டைகளையும் சேர்த்துப் பொதுவில் விற்கமுயல, கெய்கான் சொஸைடி அவ்வேற் பாட்டை சிலாகித்தபோதிலும் பல மெம்பர்கள் தங்கள் சௌகரியம்போல் தனியாகவும் விற்கிறார்கள். ஆனால் அநேக யூனியன்கள் தங்கள் பஞ்சுகளைத் தங்கள் மெம்பர்களுள் ஒருவருக்கு சொந்தமான இடத்தில் கூட்டாகக்கடைகிறார்கள். விளைச்சலும் அதிர்ஷ்டமும் சரியாயில்லாவிட்டால் சிற்சில இடங்களில் இவ்வேற்பாடு இது வரையில் அநுகூலப்படவுமில்லை.

40 முதல் 50 விதை யூனியன்களிருப்பதாகத் தெரிகிறது, அவற்றுள் 23 ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் விவசாய இலாகாவின் இடைவிடாப்பார்வையின் கீழாகவே இருக்கின்றன. கோவாபரேடிவ் இலாகா இவைகளுக்கான சட்டங்களை ஏற்படுத்திக்கொடுத்தபோதிலும் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கங்களின் கணக்கை எப்பொழுதாவது தணிக்கை செய்வதைத்தவிர இது வரையில் அவைகளில் யாதொரு மேன்பார்வையையும் வகிக்கவில்லை.

இப்பொழுது அனுஷ்டானத்திலிருக்கும் இரண்டாவது தினுசு யூனியன் 'சோடசிண்ட்வாரா' மாதிரி என்று சொல்லலாம். இதில் சிலகுடியானவர்கள் சேர்ந்து கூட்டாக ஒரு மூலதனம் ஏற்படுத்தி ஒரு நிலத்தை வாடகைக்கு வாங்கி அதில் விவசாய இலாகாவின் பார்வையில் அவர்களிடமிருந்துபெற்ற சீர்திருத்தமான கோதுமைதினுசுகளை சாகுபடி செய்கிறார்கள். நல்லபலனைக் கொடுக்கும் தினுசை விதைக்காக மெம்பர்கள் தங்களுக்குள் பாகித்துக்கொண்டு இதர சாகுபடிகளை யூனியன் பேரால் விற்று விடுகிறார்கள். இந்த யூனியன்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை யாதலால் கோவாபரேடிவ் இலாகாவிற்கு அதில் யாதொரு வேலையுமில்லை.

இன்னும் விசேஷ ஏற்பாடுள்ள விதை யூனியன் சில வருஷங்களுக்குமுன் மிகப்பஞ்சகாலமாயிருந்தபொழுது சிஹோரா ஜில்லாவுக்காக ஆரம்பிக்கப்பட்டது. அதாவது விவசாய இலாகாவிலிருந்து சென்ட்ரல் பாங்கி மொத்தமாக விதைகளை வாங்கி குறிப்பிட்ட நிபந்தனைப்படி 3, 4 வருஷத்தவணையில் திருப்பிக்கொடுக்கும் ஏற்பாட்டுடன் அநேக யூனியன்களுக்குப் பகிர்ந்து கொடுத்ததே. ஆனால் இக்கடன்களை சீக்கிரம் திருப்பிக்கொடுத்துவிட்டு யூனியன்கள் வேலையை நிறுத்திவிட்டன. ஏனென்றால் சில குடியானவர்கள் சிரமப்பட்டு சிலாக்கிய



மாய் சேகரித்த விதைகளை மற்றவர்களதில் கலக்கவும் கூட்டினாலாகும் கட்டுப்பாட்டுக்கு உடன்படவும் பிரியப்படுகிறதில்லை. இந்த யூனியன்களை கோவாபரேடிவ் இலாகா எப்பொழுதாவது கணக்குப் பரிசோதனை செய்கிறதே ஒழிய மேன்பார்வை செய்கிறதில்லை. சிஹோரா ஜில்லாவில் யூனியன் ஏற்பாடு நின்றுவிட்டாலும் சீர்திருத்தக் கோதுமை சாகுபடி பரவி விட்டது.

ரிஜிஸ்ட்ராரிடமிருந்து அதிக உதவி யில்லாவிட்டாலும் தாலூக்கா அஸோஸியேஷன்களை விவசாய இலாகா நிர்வகிக்கின்றது. அவைகளின் மெம்பர்கள் வருஷச் சந்தாவாக ஒன்று முதல் மூன்று ரூபாய் கொடுத்தோ ஓரே தடவையாக ஆயுள் நன்கொடை கொடுத்தோ ஆதரிக்கிறார்கள். அதன் நோக்கங்கள் சதாரணமாய் 1. விவசாய விருத்தியைக் குறித்து சம்பாஷிக்கவும், அதற்கிணங்க நடக்கவும்; யூனியன்களின் வேலையில் ஒற்றுழைக்கவும் மீட்டிங்குகூடுதல். இம்மீட்டிங்குகளில் விசேஷ கற்பனா சக்தியிருப்பதாகத் தெரிகிறது. 2 சீர்திருத்த விவசாயக் கருவிகளை கமிஷனுக்கோ, சொந்தத்திலோ, மெம்பர்களுக்கு வாங்கிவிற்றல்; 3. அஸோஸியேஷனுக்குச் சொந்தமாகக் கருவிகளை வாங்கி மெம்பர்களுக்கு வாடகைக்குவிடுதல் முதலியவைகளே. இவைகளின் உபயோகம் பலவாறாகஇருக்கிறதென்றும் சில 1-வது ஏற்பாட்டிற்கு மேல் போகிறதில்லை யென்றும் தெரிகிறது. என்றாலும் நான்பார்த்த "காம்கவான்" அஸோஸியேஷன் விசேஷ நல்வேலைகளைச் செய்துகொண்டு இன்னம் அதிகமாகவும் செய்யமுயலுகிறது. அந்தச்சங்கம் ஆரம்பித்தது முதல் 100 கலப்பைகளுக்குமேல் மெம்பர்களுக்கும் அந்நியர்களுக்கும் விற்றிருக்கின்றது. முதலில் "பர்ன் அண்டுகோ" விலிருந்து 100-க்கு $2\frac{1}{2}$ கமிஷனுக்குத் தருவித்து விற்பனைசாலையில் வைத்து ஜனங்களுக்குக் காட்டி விற்றது. பிறகு விவசாய இலாகாவிலிருந்து வாங்கி 100-க்கு $12\frac{1}{2}$ லாபத்தில் விற்று மிகுதியைஅஸோஸியேஷனின் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுகிறது. மேலும் 24 கலப்பைகளை சொந்தத்தில் வைத்துக்கொண்டு கலப்பை ஒன்றுக்கு தினம் மூன்றணா வீதம் வாடகைக்கு விடுகிறது. இக்கலப்பையின் விலை ரூ. 45. வாடகைக்கு எடுத்துக் கொள்பவர் சுமார் 3 மாதத்திற்கு வைத்துக் கொள்ளுகிறார். இந்த அஸோஸியேஷன் சமீபத்தில் விவசாய இலாகாவின் போதனையின்பேரில் புண்ணாக்கு எருவை மொத்தமாய் வாங்கி மெம்பர், அந்நியர், எல்லோருக்கும் விற்று நல்ல லாபம் பெறுகிறது. உள்ளூர் விதை யூனியனுக்காக மெம்பர்கள் விற்கப்பிரியப்படும் சீர்திருத்தப் பருத்திக்கொட்டையை இப்பொழுது தான் இந்த யூனியனில் விற்பனையின் பொருட்டு சேகரித்திருக்கிறார்கள். ஏற்பாடுகள் முற்றும் இன்

னும் முடியாவிடினும் கொஞ்சம் கமிஷன் பெறுவது திண்ணம். கணக்குகள் விவரமாய் வைத்து வேலை அழகாய் நடைபெறுகிறது.

இவைகளொன்றும் ரிஜிஸ்ட்ர் செய்யப்படவில்லை. ஆனால் விவசாய இலாகாவின் வியக்தமான புத்திமதியையும் கூர்மையான மேன்பார்வையையும் இச்சங்கங்கள் பெறுகின்றன.

'காம்கவான்' அஸோஸியேஷனை கோவாபரேடிவ் விவசாயச் சங்கமாக மாற்றி அதில் விவசாயக் கருவிகளையும் வீட்டு சாமான்களையும்கூட மெம்பர்களுக்கு சப்ளை செய்வதுடன் அவர்கள் மாருலையும் விற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வதாக பிரஸ்தாபம் நடந்திருக்கிறது.

இது மூலதனத்தின்மேல் பொறுப் புள்ளதாக ரிஜிஸ்டர் செய்யப்படுமென்று தெரிகிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நீடாமங்கலம் சங்கம் போலவும் தென் ஆற்காட்டிலுள்ள கள்ளக்குரிச்சி விவசாய யூனியன் போலவும் இது ஒருக்கால் அமையலாம்.

நாகபூரிலுள்ள கோவாபரேடிவ் பாற்சங்கம் அம்மாதிரி ரிஜிஸ்டரும் செய்யப்படவில்லை, உண்மையான கோவாபரேஷனிலும் சேர்ந்ததில்லை. சென்ட்ரல் பாங்கிலிருந்து சகாய வட்டிக்குப்பணம் பெறுவதையும், நாணயச் சங்கங்களிலிருந்து அதின் நிலுவைகளை வசூலித்துக் கொடுப்பதையும் தவிர கோவாபரேடிவ் இலாகாவுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அது முற்றிலும் விவசாய இலாகாவின் ஆளுகையிலிருக்கிறது. அதின் நிலத்தில் இடையர் வகுப்பைச் சேர்ந்த 27 மெம்பர்கள் 276 கறவை மாடுகளை வைத்திருக்கிறார்கள். விவசாய இலாகாகூட, கவர்னமெண்டுக்குச் சொந்தமான 62 பசுக்களையும் எருமைகளையும் சில பொலிகாளைகளையும் வைத்திருக்கிறது. விவசாய இவாகாவும் நாகபூருக்கருகிலுள்ள தெலிங்கனே என்னும் நாட்டில் காட்டு இலாகாவிலிருந்து 1000 ஏகர் மேய்ச்சல் தரையும் ஒரு பெரிய குளமும் பெற்றிருக்கிறது. இதற்கெல்லாம் வேலியைக் கட்டி, தீனிச்சாலைகள் தொழுவங்கள் முதலியனவும் ஏற்படுத்தி யிருக்கிறது. விவசாய இலாகாவின் சட்டங்களுக்குட்படும் மெம்பர்கள் இதை உபயோகிக்கலாம். புல், மெம்பர்களின் உணவுப் பொருள் இவைகளை சப்ளைசெய்யவும், பால் வெண்ணெய் முதலியவைகளை விற்றுக் கொடுக்கவும் இலாகா ஏற்பாடு செய்கிறது. இக்கட்டிடம் நாக்பூரிலுள்ள தர்மப்பிரபு ஒருவரால் கட்டப்பட்டது. அவர் இலாகாவுடன் ஒரு ஏற்பாடு செய்துகொண்டு பால், வெண்ணெய் முதலியவைகளை யெல்லாம் வாங்கி ஜனங்களுக்கு ஒரு குறித்த விலைக்கு விற்க இசைந்திருக்கிறார். பாற்சாலையின் சிப்பந்திகளுக்குச் சம்பளம் முதலியன அந்தப்பிரபுவே கொடுத்தாலும் அவ்வேற்பாடு



விவசாய இலாகாவின் நியமனத்திலும் பார்வையிலேயுமே இருக்கிறது. மேற்படி ஏற்பாடுகள் கோவாபரேஷனில் இல்லாவிட்டாலும் மெம்பர்களுக்கு மிக லாபகரம் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு மெம்பருடைய கணக்கிலும் அவர் சப்ளைசெய்தபாலின்விலை, அவர் குடியிருக்குமிடத்திற்கும் சாமான்சாலைக்கும் சேரவேண்டிய வாடகை, சப்ளைசெய்த ஆகாரவஸ்துக்களின் கிரயம், முதலியவைகளை விவாமாய்க் குறித்து வைக்கப்படுகிறது. மெம்பர்களுடைய சென்ற வருஷத்திய சம்பாத்யம் சுமார் ரூ. 6,000 ஆயிற்று. இதில் மெம்பராவதற்கு மேன்மேலும் ஜனங்கள் பிரியப்படுவதால் லாபம் ஏராளமாகத்தானிருக்கவேண்டும். மேலும் சீர்திருத்தமான வழிகளையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். தற்கால ஏற்பாட்டின்படியே அந்த பிரபுவுக்கு வரும் லாபம் எதிர்பார்க்கமுடியாத அளவாயிருக்கிறது. காலவிலைப்படி பாலைவிற்றால் லாபம் இன்னும் எவ்வளவோ அதிகமாகும். ஏனப்படி செய்யக்கூடாது? மேலும் வேலி யெல்லையுள் ஒருபாகத்தில் கிடைக்கும் வைக்கோலை மெம்பர்களுக்கு விற்றுலாபம் அடைவதோடு மொத்தமாய் மளிகை சாமான்வாங்கி சில்லரையில்விற்றும் லாபத்தையும் பெற்றுவருகிறது. எருக்களை விற்றும் லாபமடைகிறது. வைக்கோல், மளிகை, எரு இவைகளினாலாகிய லாபத்தினாலேயே கட்டிடவிலையின் வட்டியையும் சிப்பந்திச் செலவுகளையும் கொடுத்து இன்னும் மிகுதிப்பணம் காட்டலாம். விவசாய இலாகாவின் மேன்பார்வையும் யோசனையும் இல்லாவிட்டால் இச்சங்கம் ஒருவாரங்கூட நிலைத்திருக்க முடியாது.

விவசாய இலாகா இரண்டு கால்நடை அபிவிருத்திச்சங்கங்களையும் பராமரிக்கின்றது. கால்நடைகள் மெலிந்து உழவுக்கு யோக்கியமில்லாமல் போனதினால் குடியானவர்கள் கஷ்டப்படுவதைப்பார்த்து பிரமுகர்களான விவசாயிகள் ரூ. 3,000 முதலாகவைத்து கால்நடைகளின் ஜாதியை விருத்தி செய்வதற்காக ஒருசங்கம் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். விவசாய இலாகாவின் புத்திமதிப்படி 60 நல்ல பசுக்களையும் ஒரு பொலி காளையையும் வாங்கி அதற்காக கவர்ன்மெண்டிலிருந்து வாடகையில்லாமல் 500 ஏகர் புல்தரைகளும் சில தகுதியான கட்டிடங்களும் பெற்றிருக்கிறார்கள். மாட்டுக்கு வேண்டிய தீனிகளை மொத்தமாக விவசாய இலாகாவின் ஏற்பாட்டின்படி வாங்குவதுடன் புல்லின் பெரும்பாகத்தை வைக்கோலாக மாற்றி மெம்பர்களுக்கும் ஜனங்களுக்கும் விற்கிறார்கள். பசுக்கள், கன்றுகள், பொலிகாளைகள் இவைகளின் போஷணைச் செலவுகளும் கட்டிடவாடகையும் மெம்பர்கள் கொடுக்கிறார்கள். சென்ற வருஷம் ரூ. 145 லாபம் கிடைத்தது. விசேஷ லாபம் வைக்கோல் விற்பனையால்தான். விவசாய இலாகா

அடிக்கடி மேன்பார்வை செய்கிறது. சீர்திருத்த விதைகளை கோவாபரேடிவ் சொஸைடிகளின் மூலமாய் பட்டுவாடா செய்து விவசாய, கோவாபரேடிவ், இலாகாக்கள் ஒற்றுமைக்கின்றன. இம்மாதிரி ஒற்றுமைப்பு இருப்பதினால் 1913-ம் வருஷத்திலிருந்து சில சென்ட்ரல் பாங்கிகளில், விவசாய இலாகாவின் போதனைப்படிகோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆக்டோ வியா ஸ்டீல் கம்பெனியார் கமிஷன் விற்பனைக்காகத் தங்கள் கருவிகளைக் கொடுத்துவைக்கச் சம்மதித்திருக்கிறதாகத் தெரிகிறது. இக்கருவிகளை எல்லாருக்கும் காட்டும் காக்ஷிச் சாலைகள் ஒவ்வோர் சமயம் ஏற்படுத்தப் படுகின்றன. இந்த இராஜதானியிலும் இவ்வேற்பாடுகள் உண்டாவது நலம். தற்காலம் இரும்புவிலை மிக்க அதிகமாயிருப்பதுதான் கஷ்டம்.

---

## கோவாபரேஷனில் பாய்ஸ்கௌட் என்னும் வாலிப உபகாரிகளின் கிளர்ச்சி.

புத்தூரிலுள்ள தென்கன்னடம் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கின் சிகரிடேரியாகிய மிஸ்டர் எம். அனந்தராவ், பி. ஏ., பி. எல். அவர்களால் எழுதப்பட்டதின் சாராம்சம்.

மங்களூர் கணபதி ஸெகண்டரி ஸ்கூலிலுள்ள மாணவர்களின் ஸ்டேஷனரி சொஸைடியைப் பார்வையிட்டபின் திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்கள் மாணவர்களுள் கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படுத்தும் விஷயத்தை பிரஸ்தாபித்தபோது அவ்வேற்பாட்டிற்குத் தலையில் காட்டியிருக்கும் பெயரிட்டார். இச்சங்கத்தின் இரண்டாவது வருஷரிபோர்ட்டு இப்போதுதான் கிடைத்தது. அதில் வெகு உபயோககரமான வேலைகள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. மாணவர்களுக்கு வேண்டிய புஸ்தகங்களுள்பட சகல வஸ்துக்களுக்கும் விலை அதிகரித்துக்கொண்டிருக்கும் தற்காலத்தில் அதின் பிரயோஜனம் மிகவும் நன்றாய் விளங்குகிறது. பள்ளிக்கூடப் புஸ்தகங்களின் விலைகளைப்பற்றி ஒரு ஒழுங்கான ஏற்பாடு கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்று சட்டநிரூபண சபையில் சமீபத்தில் ஒரு தீர்மானம் ஏற்பட்டது நேயர்கள் நினைவிலிருக்கலாம். அவ்வேற்பாட்டைப்பற்றி இங்கு விவரிப்பது அவசியமில்லை. ஆனால் அந்த தீர்மானத்தினால் விஷயத்தினுடைய நுட்பம் ஒருவாறு விளங்குகிறது. விலைகள் ஒருகட்டுப்பாட்டுக்கு உட்படாதவரையில் வாங்குபவர்களின் கஷ்டத்தைக் குறைக்கும் முதன்மையான வழியென்னவென்றால் கணக்கில்லாத தரகர்களின்



வசமாகாமல் தேவையான வஸ்துக்களை கோவாபரேஷன் மார்க்கமாய் தருவித்துக்கொள்வதுதான். பம்பாய் இராஜதானியிலுள்ள நம் கோவாபரேடிவ் சகோதரர்களின்வேலையிலிருந்து நமக்கு இவ்வெண்ணம் உதிக்கலாயிற்று. அங்கே மாணவர்களின் தேவைகளை வாங்கவும் விற்கவும் 200 சங்கங்களுக்குமேல் இருப்பதாகத் தெரிகிறது.

கோயம்புத்தூர் ஸர்க்கிள் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1915-ம் வருஷத்தில் மங்களூரில் நடந்தபோது இவ்விஷயம் முதல்முதல் பிரஸ்தாபிக்கப்பட்டது. இத்தீர்மானத்தைப் பிரஸ்தாபித்தவர் ஓர் உபாத்தியாயரானபடியால் தன் பள்ளிக்கூடத்திலேயே அவ்விதச் சங்கம் முதல்முதல் ஏற்படுவதைப் பார்த்தார்.

இரண்டு வருஷவேலைகளில் இச்சங்கம் அடைந்த நிகரலாபத்தில் ரூ. 110-10-7 க்ஷேமநிதிக்காக எடுத்துவைத்ததுபோக ஏழைப் பையன்களின் தருமநிதிக்கென்று ரூ. 47-0-9ம், பொது ஜனசகாய நிதிக்காக ரூ. 31-15-10-ம் ஏற்பட்டு மெம்பர்கள்வாங்கின தொகையின்பேரில்கணக்குப்படி "போனஸ்" வீதித்துக்கொடுப்பதற்காக ரூ. 154-15-1-ம் சேர்ந்திருந்தது. ஆகவே இவ்விரண்டு வருஷங்களில் இச்சங்கம் சம்பாதித்த தொகை. ரூ. 344-10-3. இச்சங்கம் ஏற்படாமலிருந்தால் இத்தொகை எவருடைய பெட்டியில் குவிந்திருக்கும் என்பதை கவனிக்க விசித்திரமும் புத்திபுகட்டக்கூடியவிஷயமும் மனதில் படக்கூடும். (ஸ்டேட்மெண்டில் காணப்படும்.) மிகவும் இனிமையான இன்னொரு இனம், என்னவென்றால் பையன்களுடைய டிபாஸிட்டு என்று ரூ. 220-11-11 இருப்பதே. இது எங்கிருந்து எவ்விதம்வந்ததுஎன்பதை கவனித்தால் பெற்றோர்களிடமிருந்து சில்லரைச் செலவுக்காகப் பையன்கள் பெற்ற சில்லரைகள் தான். இச்சங்கமில்லாவிட்டால் இத்தொகை எப்படிச் செலவாயிருக்கும் பாருங்கள்! பெற்றோர்களாவது கொடுக்காமல் வைத்திருந்தாலும் அவர்களும் இப்படி சேமித்திருப்பார்களா? இம்மாதிரி ஏற்பாட்டினால் வருங்கால வழக்கம் பையன்களுக்கு இப்படி இருக்கவேண்டும் என்பதை நிதரிசனமாய்ப்புகட்டும் சற்பன அனுபவம் ஏற்படுகிறது.

ரிபோர்ட்டில் காணப்படும் முடிவுக்குறிப்புகளுள் ஒன்று என்னவென்றால் "வர்த்தமான வருஷத்தில் சங்கம் வெகு உபயோககரமாகவும் நம்பிக்கை யுண்டாகும்படி வேலை செய்திருக்கிறதுபோல், வருகிற வருஷ வேலையையும் மிகத்தெளிவுடன் தொடங்குகிறது" என்பதே. எல்லாப் பள்ளிக்கூடங்களும் ஏன் இம்மாதிரி ஏற்பாடுகளைப் புதிதாகத் தொடங்கக் கூடாது! மாதிரி பைலாக்கள் இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. சமீ

16179

யத்தில் கூடியவரையில் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் அம்மாதிரி சங்
கங்கள் ஏற்படும் பிரயத்தினங்கள் நடக்கும், அதற்குள் இச்சஞ்சிகையில்
ப்ரொவின்ஷியல் யூனியனும் மாடல்பைலாக்களைப் பிரசுரிப்பதுதான்
அதற்குப் பெருமை.

இனி இச்சங்கங்களின் சிலபைலாக்களைப்பற்றி கொஞ்சம் பேசவேண்
டியது அவசியம். இதின் மெம்பர்களெல்லாம் பையன்களானபடியால் சட்
டப்படி அநேகர் மைனர்களாக இருப்பார்கள். ஆகையால் சங்கத்தின்பொ
றுப்புத்தொகையைப்பற்றி யாதொரு ஏற்பாடும் செய்யவேண்டிய அவசிய
மில்லை. இக்காரணத்தினாலேயே பங்குத் தொகை என்றுஒன்று உண்டாக
வேண்டியதில்லை. மெம்பர் என்னும் பெயருக்கு ஒரு கௌரவமுண்
டாவதற்காக ஒவ்வொருவருக்கும் கட்டணம் ஒருஅணா என்று ஏற்
படுத்தியிருக்கிறது. இத்தொகை க்ஷேமநிதியில் சேர்க்கப்படுகிறது. 5-வது
பைலா ஒன்றுதான், ஏற்பாடான வேலைகளிலெல்லாம் இருக்கவேண்டிய
முக்கியமான ஒழுங்குகளை பையன்களுக்கு அவசியமாய் வற்புறுத்துவதற்
காக "சங்கத்தினின்று விலக்கலாம்" என்னும் கடுமையானதும் ஆனால்
உபயோகமுள்ளதுமான ஒரு சட்டம். நிர்வாகத்தைப் பற்றியபைலாக்கள்
கோவாபரேடிவ் சங்கங்களின் சாதாரண பைலாக்களையே போன்றது.
ஆனால் தலைமை உபாத்தியாயரை பிரஸிடெண்டாக்குவது முதலிய சில
வித்தியா சங்களுண்டு. இதற்காகத்தான் 14-வது பைலாவில் பிரஸி
டெண்டு ஆஜரில்லாத மீட்டிங்கின் தீர்மானங்கள் அவருடைய சம்
மதியைப் பெறுதவரையில் செல்லாது என்று ஏற்பட்டிருக்கிறது.
17-வது பைலா சுயசித்தமாய் விளங்குகிறது. கடைசி பைலாவைப்பற்றித்
தான் கொஞ்சம்பேசவேண்டி யிருக்கிறது. அதனால் பையன்களுடைய
நியாயஸ்தலம் என்று ஒன்று ஏற்படுத்துவதாகிறது. இதிலிருந்து
பையன்கள் வாக்குவாதங்களைத் தக்கபடி தீர்த்துக்கொள்ளும் முக்கிய
மான நியாய இலாகாவின் பழக்கம் ஏற்படுகிறது.

ஸ்டேஷனரி சங்கங்கள் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் காலேஜி
களிலும் ஏற்படும்பொழுது ஒரு ஜில்லாமுழுமைக்கும் ஒரு சென்ட்ரல்
சங்கம் ஏற்படும் காலம்வரும். அப்பொழுது பையன்களுக்கும் புத்தகங்
கள் பிரசுரிக்கிறவர்கள், ஸ்டேஷனரி சாமான்கள் விற்பவர்கள், இவர்க
ளுக்கும் நேராக சம்பந்தம் ஏற்பட ஏற்ற ஒரே மார்க்கம் விளக்கமாகிறது.
அதனால் தரகர்கள், வியாபாரிகள் இவர்களின் பாதை நீங்கி நேராகப்
பெரும் பயனையடைகிறார்கள். படிப்புக்குத் தற்காலம் செலவுமிக
அதிகரித்து வருகிறது என்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளும் விஷ
யம். கவனித்துப்பார்த்தால் அவ்வதிகத்தொகை யெல்லாம் விசேஷமாய்
புஸ்தகம், ஸ்டேஷனரி, இவைகளின் விலைகள்தானென்று ஏற்படுகிறது.



ஆகையால் அச்சாமான்களை கோவாபரேடிவ் ஏற்பாட்டினால் பெற
முயன்றால் செலவுகள் மிகவும் குறையும் என்பது திண்ணம். இதனால்
பதிப்பிக்கிறவர்களுக்கும் ஸ்டேஷனரி செய்கிறவர்களுக்கும் ஏஜண்டுகள்
முதலியவர்களைத் தேடும் சிரமமும் அபாயமும் இல்லாமற்போகிறது.

மாணவர்களின்கோவாபரேடிவ் ஏற்பாட்டினால் ஆகக்கூடிய நன்மை
கள் வெகுவாயிருக்கின்றது. இப்பொழுது சொன்னதெல்லாம் அவற்றுள்
மிக அற்ப பாகமே. பையன்களுடைய விசித்ரமான உற்சாகத்தினால் உல
கத்தில் "முடியாது" என்னும் வார்த்தை நெபோலியனுக்கு இல்லாமலிருந்
ததுபோல் அவர்களுக்கும் கிடையாது. அபாயம் உண்டு என்று உணர
மாட்டார்கள். கவலைப்படுவதும் கிடையாது. எதையும் செய்துவிடுவோம்
என்னும் உறுதியுடன் தொழில் செய்வதிலேயே நோக்கம், லாபாலாபம்
ஜயாபஜயம் இவைகளைப் பிறர்கவனிக்கவேண்டியது. வேலைஜயமடைந்தால்
நலமே. இல்லாவிட்டால் அதையெல்லாம் தொலைத்துவிட்டுப் புதிதாய்
ஆரம்பிக்கத் தயாராகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட உற்சாகத்தில்
கோவபாரேஷனைப் புகட்டுவதின் ஆனந்தத்தைப்பற்றிச் சொல்லவும்
வேண்டுமோ! பள்ளியில் கோவாபரேஷனைப் போதிக்கும்படி வெகுவாய்த்
தூண்டப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்களுள் தீர்க்கமான ஒற்றுமை
யுண்டாகும்; அவர்களால் அப்பள்ளிக்கூடத்திற்கே அவர்கள் நீங்கின
பிறகும் கௌரவமுண்டு. இதுவே கோவாபரேஷனில் பாய்ஸ்கௌட்
கிளர்ச்சி என்று மதிக்கப்படும்.

---

# மாணவர்களுடைய ஸ்டேஷனரி சொஸைடியின் பைலாக்கள்.

## பள்ளிக்கூடம் அல்லது காலேஜ்.

1. இந்த சொஸைடி (இன்ன) பள்ளிக்கூடத்தில் அல்லது காலேஜினுடைய மாணவர்களின் ஸ்டேஷனரி சொஸைடி என்று சொல்லப்படும். இதன் ஆபீஸ் ——பள்ளிக்கூடத்தில் அல்லது காலேஜில் இருக்கும்.

2. இச்சங்கத்தின் நோக்கங்களாவன:— (a) பள்ளிக்கூடத்து அல்லது காலேஜின் பையன்களுக்கு விற்பதற்காக பள்ளிக்கூட உபகரணங்களை வாங்குதல், (b) பள்ளிக்கூட உபகரணங்கள் தேவை

யான ஜனங்களுக்கு அவைகளை மொத்தமாகக் கமிஷனின்பேரில் ஸப்ளை செய்தல் (c) மெம்பர்களுக்குள் கைங்கரிய புத்தியும் சுயநலத் தியாகமும் உண்டாகச்செய்தல். (d) மெம்பர்களுள் செட்டு, சுய உதவி, ஒற்றுமை முதலிய குணங்களைப் பரவவைத்தல்.

3.———பள்ளிக்கூடம் அல்லது காலேஜிலுள்ள எந்த மாணவரும் மெம்பர்க்கட்டணம் ஒரு அணவைக்கொடுத்து மானேஜிங் கமிட்டியாரால் மெம்பராக்கப்படலாம். ஆனால் யாதொரு மாணவராவது மெம்பராக்கத் தான் வேண்டுமென்று உரிமை பாராட்டக்கூடாது. கமிட்டியார் காரணம் சொல்லாமல் ஒரு மெம்பர்மனுவைத்தள்ளி விடலாம். எல்லா மெம்பர்களின் கட்டணத் தொகையும் அச்சங்கத்தின் க்ஷேமநிதியைச் சேரும்.

4. சாதாரணமாய் மாணவர் பள்ளியினின்று நீங்கினவுடன் மெம்பர்பாத்தியம் விலகிப்போகிறது. ஆனால் (a) குறைந்தது ஒரு ரூபாயாவது டிபாஸிட்டிலிருந்தாலாவது (b) பிறகுபோய்ச்சேரும் பள்ளிக்கூடத்தில் அல்லது காலேஜில் இம்மாதிரி சங்கம் இல்லாவிட்டாலாவது இதில் இன்னும் மெம்பராக இருந்துகொண்டிருக்க மானேஜிங் கமிட்டியார் சம்மதிக்கலாம்.

5. ஒரு மெம்பரை துர்நடத்தைக்காக விலக்கிவிடலாம். ஆனால் அவ்விலக்கலுக்கு யேற்படும் மீட்டிங்கில் மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களின் சம்மதிவேண்டும். மேலும் அந்த மெம்பருக்கு விலக்கும் காரணத்தை எழுத்து மூலமாய்த் தெரிவித்து அவருடைய சமாதான அபிப்பிராயத்தைக் காட்டத்தேவையான காலம் கொடுக்கவேண்டும்.

6. சங்கத்தின் நிர்வாகம் ஒருகமிட்டியார் வசம் ஒப்புவிக்கப்படும். அதில் பள்ளிக்கூடமாயிருந்தால் தலைமை உபாத்தியாயரும் காலேஜியாயிருந்தால் ப்ரின்ஸிபாலும் ப்ரஸிடெண்டாகவும் பொக்கிஷதாரராகவும் கூட இருப்பார்கள். பொதுஜனமீட்டிங்கில் வருஷாவருஷம் தேர்ந்தெடுக்கப்படும் இதரமெம்பர்களும் மானேஜிங் கமிட்டியில் இருப்பார்கள். இந்த இதர மெம்பர்கள் ஒவ்வொருவரும் தங்களுள் தீர்மானமாகிற காலவரைப்படி சிகரிடேரியாக கிரமப்படி வேலை செய்யலாம்.

7. ஒருதரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மானேஜிங் கமிட்டி அடுத்த வருஷத்திய கமிட்டி ஏற்பாடாகிறவரையில் தங்கள் காலவரைமீறி விட்டாலும்கூட உத்தியோகப்பொறுப்பை வகிக்கவேண்டும். கமிட்டி மெம்பர்களுள் இடையே காலிகள் ஏற்பட்டால் பிரஸிடெண்டின் சம்மதத்தின்பேரில் கமிட்டியார்கள் வேறு நியமனம் செய்யலாம்.



8. சங்கத்தின் வேலைகள் நடைபெறுவதற்காக மானேஜிங்கமிட்டியார் அப்போதைக்கப்போது கலந்து ஆலோசனை செய்வார்கள். ஒருமாதத்திற்கு குறைந்தது அவர்கள் மீட்டிங்கு ஒன்றாவது நடைபெறும். அதில் ஏற்படும் தீர்மானங்கள் ஆஜராயிருப்பவர்களுள்—பெயர்களாவது அங்கீகரித்தாலொழிய பலிதமாகாது.

9. தங்களால் தீர்மானிக்கப்பட்ட ஏற்பாட்டின்படி சங்கத்தின் வேலைக்காக கடன்வாங்கலாம். ஆனால் பொதுமீட்டிங்கில் பிரஸ்தாபிக்கப்பட்ட உயர்ந்த தொகைக்கு உள்ளாகவும் வட்டியும் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு   க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

10. மானேஜிங் கமிட்டியாரும் ஏற்பட்டிருக்கும் சட்டங்களை அனுசரித்து உதவிச்சட்டங்களேற்படுத்தலாம். சங்கத்தின் நிர்வாகம் எல்லாம்பொதுவாய் பிரஸிடெண்டின் கீழிருக்கும். சங்கத்தின் பணமும் விலையுயர்ந்த ஆஸ்திகளும் அவர் வசம் தான். சங்கத்தின் வேலைகளை நடத்த சிகரிடேரி ஜவாப்தாரி. மேலும் கணக்குகள் கடிதப்போக்குவரத்துகளெல்லாம் அவர் வசம்தான்.

11. சங்கத்தின் நிர்வாகத்திற்காக அப்போதப்போது ஆகும் செலவுகளை மானேஜிங் கமிட்டியார் செலவழிக்கலாம். கமிட்டி மெம்பர்கள் அவர்கள் செய்யும் வேலைக்கு யாதொரு ஊதியமும் பெறக்கூடாது.

12. சங்க ஆளுகையைப்பற்றிய முக்கிய அதிகாரங்களெல்லாம் பொது மெம்பர்களின் ஆதீனத்திலிருக்கிறது. தேவையான பொழுதெல்லாம் பொதுக்கூட்டம் கூடும். மானேஜிங் கமிட்டியார் அத்தகைய மீட்டிங்கு குறைந்தபக்ஷம் வருஷத்தில் ஒரு முறையாவது அல்லது தேவையான தடவைகளிலாவது நடக்கும்படி ஏற்பாடு செய்யலாம். பொதுசமூகங்களால் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களில் கீழ்க்கண்டவைகளுமுள. (a) வருஷாந்தர நிர்வாக ரிபோர்ட்டை அங்கீகரித்தல் (b) ஆடிடரின் வருஷ ரிபோர்ட்டைப்பற்றித் தீர்மானித்தல் (c) வழக்கத்திலிருக்கும் பைலாவைச் சீர்திருத்தல் அல்லது விலக்கல் அல்லது புதுபைலா ஏற்படுத்தல் (d) மானேஜிங் கமிட்டியாரைத் தேர்ந்தெடுத்தல் (e) சங்கத்தின் ஒவ்வொரு வருஷத்தியக் கணக்கையும் தணிக்கைசெய்ய கௌரவ ஆடிடர்களை நியமித்தல் (f) மானேஜ்மெண்டைப்பற்றிய புகார்களை கவனித்தல் (g) மெம்பர்களை விலக்குதல்.

13. புத்தகங்களிலுள்ள மெம்பர்களின்   அல்லது எது குறைவாகயிருந்தாலும், பொது மீட்டிங்குகளின் வோட்டுக்கு லாயக்காகும். ஆஜராகும் ஒவ்வொருமெம்பருக்கும் ஒரு வோட்டுத்தான் உண்டு.

பொதுமீட்டிங்கில்வரும் எல்லாக் கேள்விகளும்ஆஜராயிருக்கும் மெம்பர்கள் வோட்டுக்கொடுப்பதை அனுசரித்துத்தான் தீர்மானிக்கப்படும்.

14. பிரஸிடெண்டு ஆஜராயிருக்கும் பொழுது கமிட்டி மீட்டிங்கையும் பொதுஜன மீட்டிங்கையும் கூட அவர்தான் நடத்துவார். அவர் இல்லாதகாலத்தில் மெம்பர்கள் தம்மில் ஒருவரை அக்கிராசனுதிபதியாக நியமிக்கலாம். ஆனுல் பிரஸிடெண்டின் தலைமையின் கீழ் நடக்காத மீட்டிங்கில் ஏற்பட்ட தீர்மானங்கள் பிரஸிடெண்டின் சம்மதத்தின் பேரில் தான் அங்கீகரிக்கப்படும். இருபக்கங்களிலும் வோட் சரியாக இருந்து விட்டால் பிரஸிடெண்டு அல்லது சேர்மெனுக்கு இன்னொரு வோட்டுண்டு.

15. சங்கத்தின்கிரய விக்கிரயங்களெல்லாம் கண்டிப்பாய் ரொக்கப் பண ஏற்பாடே. ஜனங்களுக்கும் ஒரு கூட்டத்தாருக்கும் சரக்குகளை மொத்தமாய் கமிஷன் வியாபாரத்திற்குக் கொடுக்கும்போது கடனாகவும் கொடுக்கலாம்.

16. மானேஜிங் கமிட்டியார் எல்லாவிதமான சரக்குகளையும் குறிப்பிட்டகாலங்களில் பரிசோதிக்கலாம். அப்பொழுது ஏதாவது குறைவுகள் காணப்பட்டால் உடனே பொதுஜன சமூகத்திற்குத்தெரிவிக்க வேண்டும். அச்சமூகத்தின் தீர்மான ஆதார மில்லாமல் ஒன்றையும் தள்ளுபடிசெய்யக்கூடாது.

17. ஒவ்வொருவருஷமும் நிகரலாபத்தில் 100க்கு 25 வீதம்க்ஷேமநிதிக்கு எடுத்துவைக்கப்படும். 100க்கு  வீதம்ஏழைப்பையன்களின் தரும பண்டுக்கும் சேரும். இத்தொகை மானேஜிங் கமிட்டியாரால் பராமரிக்கப்பட்டு  பள்ளியில் அல்லது காலேஜில் படிக்கும் ஏழையாயும் யோக்கியதையும் உள்ளபையன்களுக்கு உபகாரச் சம்பளங்களும் பள்ளிக்கூட உபகரணங்களும் வாங்கிக்கொடுக்கப்படும். நிகரலாபத்திலிருந்து 100க்கு  ரூபாய்க்கு மேற்படாமல் பொதுஜனபண்டுக்காக எடுத்துவைக்கலாம். இது மானேஜிங்கமிட்டியாருக்கு சரி என்று தோன்றுகிறபடி மெம்பர்களின் ஆசாரச் சீர்திருத்தத்திற்காவது அல்லது வேறு பொது நலத்திற்காகவாவது உபயோகிக்கலாம். நிகரலாபத்தில் மிகுந்திருப்பதை மெம்பர்கள் வாங்கியிருக்கும் சாமான்களின் கிரயத்தின்படி வீதித்துப் பகிர்ந்துகொடுக்கப்படும். ஆனுல் இத்தொகை அவரவர்களின் டிபாஸிட்டில் சேர்க்கப்படுமே ஒழிய ரொக்கமாய் கையில் கொடுக்கப்படமாட்டாது. இந்த டிபாஸிட்டு மெம்பரிலிருந்து நீங்கினுல்தான் கொடுக்கப்படும். அதன் பேரில் 100க்கு  வீதம் வட்டி சேரும். போனஸ் கொடுத்தது போக மீதியிருப்பதை க்ஷேமநிதியில் சேர்த்துவிடலாம்.



18. க்ஷேமநிதிபாகிக்கப்படக்கூடாது. அதுஎல்லாருக்கும்சொந்தம். ஒருமெம்பரும் தன்பாகம் இன்னதென்று உரிமைகொண்டாடமுடியாது. அப்போதைக்கப்போது பொதுசமூக மெம்பர்கள் நிர்ணயிக்கிறபடி அப்பணம் கட்டிவைக்கப்பட்டிருக்கும். பொதுஜனசமூகத்தின் உத்தரவில்லாமல் நஷ்டங்களுக்கு ஈடுசெய்வதற்காக எடுக்கக்கூடாது. ஒரு சங்கம் மூடுபட்டாலும்கூட சேமநிதி மெம்பர்களுள் பாகிக்கப்படக்கூடாது.

ஆனுல்பள்ளிக்கூடம் அல்லதுகாலேஜியின் நிர்வாகிகளுக்குத் தகுதியென்றுதோன்றுகிறபடி செலவழிக்க அவர்களிடம்கொடுத்துவிடப்படும்.

19. கணக்கிடும்பொழுது ஒருதம்படியின் பின்னமெல்லாம் ஒருதம்படியாகவோ அல்லது தள்ளுபடிசெய்தோ, சங்கத்திற்குச் சாதகமாய்ச் செய்துகொள்ளலாம்.

20. சங்கத்தின் புத்தகங்களை பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டராவது, கோவாபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ராராவது,  பள்ளிக்கூடம் அல்லது காலேஜின் நிர்வாக உத்தியோகஸ்தர்களாவது, சங்கத்தின் எந்த மெம்பர்களின் கார்டியன்களாவது தடையில்லாமல் பரிசோதிக்கலாம்.

21. இந்த பைலாக்களின்படி பிரஸிடெண்டுக்கு ஏற்படுத்தியிருக்கும் கடமைகளையும் அமுல்களையும் அவர்  பள்ளிக்கூடத்தின் அல்லது காலேஜின் எந்த உதவி  க்கொண்டாவது பார்க்கும்படி எழுத்து மூலமாய் ஏற்பாடு செய்யலாம்.

22. பள்ளிக்கூடம் அல்லது காலேஜ் நடக்கும் நேரம் ஒழிந்த மற்றையப்பொழுதுதான் சங்கத்தின் வேலை நடக்கும்.

23. ஒருபைலாவின் வியாக்கியானத்தைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டால் பிரஸிடெண்டின் உதவியைத்தான் பெறவேண்டும். அவர் சொல்வது தான் தீர்மானம்.

24. சங்கத்தின் அலுவலைப்பற்றி மெம்பர்களுள் அல்லது பழைய மெம்பர்களுக்கும் மனேஜிங் கமிட்டி அல்லது சங்கத்தின் மகாஜனங்களுக்கும் தகரார் ஏற்பட்டால் ஒருமத்தியஸ்த போர்டாரின் விசாரணைக்கு மனுவுசெய்துகொள்ளவேண்டும். மத்தியஸ்தர்களில் இருதிறத்தாராலும் தனித்தனியாய் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். ஒருவர் பிரஸிடெண்டால் நியமிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட மத்தியஸ்தத் தீர்மானம் தான் முடிவு. அத்தீர்மானப்படி கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

# தொளசம்பட்டி கோவாபரேடிவ் யூனியன்.

ஷை யூனியனின் 1916-17 வது வருஷத்திய ரிபோர்டு, சேலம் செக்ஷன் கோவாபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட் ராரவர்களால் தயாரிக்கப்பட்டபடி கவனமாய் படிக்கத்தகுந்தது.

1. 1915-ம் வருஷம் மார்ச்சுமீ 16உ இந்த யூனியன் தன்னுடன் 15சங்கங்களைச் சேர்த்துக்கொண்டு வேலையாரம்பித்தது. பிரஸ்தாப வருஷத்தில் இன்னம் 19 சங்கங்கள் இத்துடன் சேர்ந்தன. வருஷக்கடைசியில் இத்துடன் சேர்க்கப்பட்டிருந்த மெம்பர் சொஸைடிகளின் சங்கியை 39 ஆயிற்று. இதில் ஓமலூர், திருச்செங்கோடு தாலூகாக்களில் புதிதாய் ஏற்பட்ட இரண்டு சங்கங்களும் அடங்கி யிருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் யூனியனைச்சார்ந்த சங்கங்களின் டெலிகேட்டுகள் 88 பெயர்கள், முந்திய வருஷத்திலோ 47 பெயர்கள்தான்.

2. இவ்வருஷத்தில் இரண்டுபொது மீட்டிங்குகளும் 11 நிர்வாக சபைமீட்டிங்குகளும் நடைபெற்றன. பிந்திய 11-ல் ஒரு மீட்டிங்குக்கு போதுமான மெம்பர் இல்லாமையால் ஒத்திவைக்கப்படவேண்டியதாயிற்று. நிர்வாக சபைமீட்டிங்கு மாதத்தில் குறைந்தபக்ஷம் ஒன்று வது குறித்த தினங்களில் நடத்தும்படி போதிக்கப்படும்.

3. யூனியனுடன் சேர்க்கப்பட்ட சங்கங்களின் தொழில் தனமும் அச்சங்கங்களிலுள்ள மெம்பர்களின் தொகையும் முந்திய வருஷத்தோடு ஒப்பிட்டு அடியிற்காட்டப்பட்டுள்ளது.

| | தொழில்தனம் ரூ. அ. பை. | மெம்பர்களின் சங்கியை |
|---|---|---|
| 1915—16 | 1,36,931 9 1 | 1,138 |
| 1916—17 | 2,81,147 5 0 | 2,831 |

இவ்வேற்றத்திற்குக் காரணம் இரண்டு புது சங்கங்களேற்படுத்தப் பட்டதினாலும் இருக்கிற சங்கங்களின் லேவாதேவியை பரவவைத்து விருத்தி செய்ததாலுமே.

4. நிலுவை, வசூல் (பொருளுதவும் பாங்குகளுக்கும் யூனியனுக்கு சம்பந்தப்பட்ட சங்கங்களின் முதலாளிகளுக்கும் சேரவேண்டிய) பாக்கிகள் ஆகிய இவைகளைக்காட்டும் ஸ்டேட்மெண்டு வருமாறு:—



முதல்.

| வருஷம் | நிலுவை | வசூல் | பாக்கி | காலமாகுமுன் வசூலானது. |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1915—16 | 10,056 10 9. | 995 10 9. | 100 0 0. | 6,250 0 0 |
| 1916—17 | 30,025 11 4. | 29,853 11 4. | 152 0 0. | 13,773 7 4 |

தவணைமீறியமுதல் தொகை கஞ்சநாயகன் பட்டி சங்கத்தால் ஆனது. அது 1917—18-ல் முறியடிவிக்கப்படவேண்டும்.

வட்டி.

| வருஷம் | நிலுவை | வசூல் | பாக்கி | காலமாகுமுன் வசூலானது |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1915—16. | 7,243 5 1 | 7,243 5 1 | 0 0 0. | 149 1 0 |
| 1916—17. | 15,489 1 9 | 15,430 1 7 | 59 0 2 | 1,458 7 0 |

இத்தொகைகள் மெம்பர்களுக்கு "பிராவிடெண்டு டிபாஸிட்டு" என்னும் ஆபத்து தனத்திற்காகக் கொடுக்கவேண்டியது.

முதலுக்காகவும் வட்டிக்காகவும் ஐக்கியசங்கங்கள் தங்கள் வசூலித்த எல்லாப்பணங்களையும் திரும்பவும் கடன் கொடுக்காமல் டிஸ்ட்ரிக்ட் பாங்கில் காலமாகு முந்தியே செலுத்தினது மிகவும் திருப்திகரமானது.

5. மெம்பர்களிடமிருந்து சேரவேண்டிய நிலுவை வசூல், பாக்கி இவைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

முதல்.

| வருஷம் | நிலுவை | வசூல் | பாக்கி | முன்பணம் வசூல் |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை |
| 1915—16. | 29,568 8 0 | 28,145 8 0 | 14,23 0 0 | 2,582 0 0 |
| 1916—17. | 55,780 8 0 | 49,850 6 2 | 5,930 6 10 | 11,620 8 0 |

வட்டி.

| வருஷம் | நிலுவை | வசூல் | பாக்கி | முன்பணம் வசூல் |
|---|---|---|---|---|
| 1915—16. | 10,148 12 0 | 9,281 2 9 | 897 9 3 | 378 8 10 |
| 1916—17. | 23,942 2 6 | 21,663 0 0 | 2,279 2 6 | 73 10 11 |

நிலுவைகள் அதிகமாவதற்கு விசேஷ ஹேதுவாயிருந்த சங்கங்கள் பாகல்பட்டி, ஓமலூர், சமுத்திரம், பண்ணப்பட்டி, குஞ்சாண்டியூர், பொட்டனேரி, மனத்தல், கஞ்சநாயகன்பட்டி ஆகிய இவைகளே. ஆளுகை அதிகாரச்சட்டங்களை இவைகளிடம் செலுத்தவேண்டிய ஏற்பாடு நடக்கும்.

6. சென்ற வருஷம் டிஸ்ட்ரிகட் முனிசீப் கோர்டில் 3 வியாஜ்யங்கள் தீர்ப்பாகாமலிருந்தன. இவ்வருஷம் 7 வியாஜ்யங்கள் தாகல் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பத்து வியாஜ்யங்களில் இரண்டுக்கு டிக்கிரி பெற்ருய் விட்டது. வருஷாரம்பத்தில் 24 டிக்ரிகள் நிறைவேற்ற வேண்டி யிருந்தன. இவற்றுள் 6 தீர்ந்துவிட்டன 20, 1917 ஜூன் 30 தேதி பாக்கியிலிருந்தன.

7. சேலம் டிஸ்ட்ரிக்ட் பாங்கியில் பணம் கட்டுவதெல்லாம் சௌகரியமுள்ள இடங்களாயிருந்தால் யூனியன் மூலமாய் செலுத்தப்படுகிறது. அப்படி பெறப்படும் தொகை கஸ்பா கிராம பாங்கின் வழியாய் பாங்கிக்குப்போகிறது.

பிரஸ்தாப வருஷத்தில் அப்படி பாங்கிக்கு அனுப்பப்பட்ட தொகை ரூ. 16,215-12-4.

8. மேன்பார்வை.—இவ்வினத்தில் ஏற்பாடான தண்டல் தொகை விவசாய கோவாபரேடிவ் சொஸைடிகளின் நிலுவைகளின் பேரில் 100-க்கு ½வீதம் நிர்ணயிக்கப்பட்டு, அத்தொகை யூனியனைச் சார்ந்த சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டது.

1916-17-ம் வருஷத்திற்காக100-க்கு ½வீதம் பங்குத்தொகை, சேம நிதி, கரண்டு டிபாஸிட்டுகள் இவைகளைவிலக்கி சங்கங்களின் தொழில் தனத்தின் மீதுமாத்திரம் ஏற்பட்டதொகை கணக்கிடப்பட்டு 1917-18-ம் வருஷத்தில் வசூலிக்கவேண்டிய தொகைகளும்கூட கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 9. 1916—17-வருஷத்திற்கு ஏற்பட்ட தண்டல் | 985 | 3 | 3 |
| 1916—17-வருஷத்திலிருந்த மொத்தத்தொகையின்பேரில் வரவேண்டியது | 1,112 | 2 | 7 |
| வசூலான அதிகத்தொகை | 31 | 15 | 8 |
| வசூலிக்கப்படவேண்டிய அதிகத்தொகை | 158 | 15 | 0 |
| 1917—18-வருஷத்திற்கு ஏற்பட்டதண்டல் | 1,114 | 3 | 10 |
| 1917—18-வருஷத்தின் மேன்பார்வைக் கட்டணத்திற்காக வசூலிக்கப்படவேண்டிய மொத்தம் | 1,311 | 3 | 5 |



10. ஐக்கிய1915-16 சங்கங்களின், 1916-17-ம் வருஷங்களின் லாபநஷ்டக்கணக்கும் கொடுபட்டிருக்கும் சூபர்விஷன் பண்டின் விவரக்கணக்கும்,சிப்பந்திச்செலவுக் கணக்குகளும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரினால் தீர்மானிக்கப்பட்டபடி ஒவ்வொரு சங்கத்தின் இனமும் வகுப்பும் காட்டும் ஸ்டேட்மெண்டுகூட இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இலாப ஸ்டேட்மெண்டில் மெம்பர்களுக்குக்கொடுத்த கடன்களில் சேர்ந்த வட்டிகளை விலக்கி ஆனால் நஷ்ட ஸ்டேட்மெண்டில் வழக்கம் போல் வட்டிகளைச் சேர்க்கும் புதுவழக்கத்தினால் அநேக சங்கங்கள் நஷ்டமடைந்திருக்கின்றன. 15 சங்கங்கள் மிகவும் திறமென்றும், 18 சாதாரணமென்றும், 1 கவனிக்கத்தகுந்ததல்லவென்றும், 3 சுத்த மோசமென்றும், 2 புது சங்கங்களென்றும் ஏற்பட்டது.

11. ரூ. 30 சம்பளத்துடனும் ஸிவில் ஸர்விஸ் ரெகுலேஷன் பிரகாரம், படியுடனும் ஒரு சூபர்வைஸரை யூனியன் நியமித்திருக்கிறது. ஒரு அஸிஸ்டெண்டு சூபர்வைஸர் கூட ரூ. 25 சம்பளத்துடனும் 5 ரூ. படியுடனும் நியமிக்கப்பட்டிருக்கிருர். அவர் துளசம்பட்டி சங்கத்திற்கு அநேக வருஷங்களாக பிரஸிடெண்டாக இருந்திருக்கிருர். அவருக்கு இந்த இயக்கத்தில் 6 வருஷத்திற்குமேல் அனுபோகமுண்டு. இவர் இலாகா சம்பந்தப்பட்டவரையில் வேலை திறமாய் நடந்திருக்கிறது. முந்தியவருடைய இலாகாவானது சமீபத்தில்தான் யூனியன் மேன்பார்வைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அடுத்தவருஷம் திறமான வேலை நடக்குமென்று நம்பலாம்.

12. யூனியனின் வேலை மொத்தத்தில் திருப்திகரமென்று சொல்லலாம். பாகல்பட்டி யூனியன் பிரஸிடெண்டிற்கும் அதிலிருந்த பிராமண உத்தியோகஸ்தர்களுக்கும் அறியாமையினால் ஏற்பட்ட மாச்சரிய பாவம் ஒன்றே விசனிக்கத்தகுந்தது. இவ்வறியாமை விலகுவதற்கு வேண்டிய புத்திமதி சொல்லப்பட்டிருப்பதனால் மாச்சரியபாவம் சீக்கிரம் நீங்கிவிடுமென்று நம்பலாம்.

---

## இலாபப் பிரிவினையும் தொழிற்கூட்டுறவும்.

பார்லிமெண்டு மெம்பரான மிஸ்டர் தியோடோர்குக் டேய்லர் என்பவரைப்பற்றி இத்தலைப்பின் கீழ் 1918-ம் வருத்திய டெய்லிமெயிலின் வருஷப் புஸ்தகத்தில் எழுதி யிருப்பதை நாம் கீழேகாட்டி யிருக்கிறோம். இதைப்பற்றி ஸ்காடிஷ் கோவாபரேடர் என்னும் பத்திரிகை சொல்லுகிறதாவது.—"பாட்லி என்னும் நகரத்திலுள்ள ஜே. டி. அண்டு ஜே.

டேலர் லிமிடெட் என்னும் கம்பளித் தொழிற்சாலைக்கு அவர் முதலாளி. அதில் அநேக வருஷங்களாக வேலை செய்பவர்களுக்கு இலாபத்தில் ஓர் பங்கு கொடுத்துவருகிறது. 1917-ம் வருஷம் வரையில் 26 வருஷகாலமாக பங்குப்பணத்தின்பேரில் டிவிடெண்டாகவும் தொழிலாளிகளின் க்ஷேமபண்டாகவும் 2,00,000பவுன் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வேற்பாட்டினால் நல்லொழுக்கத்திற்கு உண்டான பெருமை மிகவும் மதிக்கத் தகுந்த தென்பது மிஸ்டர் டெய்லரின் நம்பிக்கை. மேலும் எஜமானனுக்கு தன் தொழிலின் பொருள் லாபத்தைவிட அதிக சிரத்தையும் ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கின்றன வென்றும் சொல்லுகிறார். இவ்வேற்பாட்டினால் தினம் செய்யும் சாதாரண வேலைக்கு கௌரவமுண்டாகிறது. ஏனென்றால் அதின் தொழில் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் மிகப் பிரயோஜனமா யிருப்பதோடுகூட அதிலமர்ந்துள்ள வேலைக்காரர்களெல்லாருக்கும், மிகவும் உதவியாயும், மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாயும் ஏற்படுகிறது. வேலைக்காரர்களுக்கோ தங்கள் வேலையில் அதிக திருப்தியும் உற்சாகமும் ஏற்படுவதனால் அதிக சம்பாத்தியமும் கிடைக்கிறது.

தேசத்தார்களின் சண்டை முடிந்தால் அது ஜாதியார்களின் சண்டை முடியலாமென்பதைக் காட்டக்கூடும். யுத்தகளத்தில் உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் வித்யாசமில்லாத பரஸ்பர சகோதரத்வம் கொண்டாடுவது இதற்கு ஒரு பெரிய அத்தாக்ஷி. சண்டை முடிந்தபிறகு ஏன் இவ்வுணர்ச்சி அற்றுப்போகவேண்டும்? பிரபுவும், தொழிலாளியும், எஜமானனும் வேலைக்காரனும் வித்தியாசத்தைவிட்டு பக்கங்களிலிருந்து சண்டைசெய்த அப்போதைய நடத்தையினால் தங்களுக்குள் சகோதரத்வம் இயல்பாயிருப்பதை அறிந்து விட்டார்கள். அப்படியான பிறகு சத்துருஜெயம் செய்து, வீட்டுக்கு வந்தவுடன் ஏன் தங்களுக்குள் வித்தியாசம் காட்டி விரோதித்துக் கொள்ளவேண்டும்? யுத்தகளத்தி லேற்பட்ட அன்பென்னும் அழகிய பந்துத்வத்தை ஏன் எஜமானுக்கும் வேலைக்காரனுக்கும் இடையில் கொண்டுவரக் கூடாது? அதை எப்படி செய்கிறது?

முதலாவது வழி என்னவென்றால் பணக்காரர்கள் தங்களுடைய சுயநய சுகத்தைத் துறக்கவேண்டும். நமது வாலிப உத்தியோகஸ்தர்கள் தங்கள் சேனைகளை ஜெயம் அல்லது மரணத்திற்குள் நடத்தி தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள், அப்படியே முதலாளிகளும் சண்டைக்குப் பிறகு பணத்தை தாராளமாய் செலவழித்து வேலைக்காரர்களின் நிலைமையை உயர்த்தும் விஷயத்தில் தங்கள் வாழ்நாளை யீடுபடுத்த வேண்டும். நமது நாட்டிற்காக யுத்தத்தில் உயிரைக்கொடுத்து வீரசொர்க்கம் அடைவது கௌரவமானால்; அதின் ஜனங்களின் நிலைமைகளை உயர்த்துவதற்காகத் தன் வாழ்நாளைக் கழிப்பது அதைவிடக் குறைந்த கௌரவமன்று. இலாபப்பிரிவினையும் தொழிற்கூட்டுறவும், கௌன்ஸில்கள் பார்லிமெண்டுகள் முதலியவைகளின் வேலையைவிட ஒவ்வொரு முதலாளிக்கும் தன் சகோதர ஜனங்களுக்கு விசேஷ உபயோககரமான கைங்கரியம் செய்யும் பெருமையையும் சந்தர்ப்பத்தையும் கொடுக்கின்றன.



ஒவ்வொரு கைத்தொழிலிலும் நன்கு கவனிக்கவேண்டிய இரண்டு விஷயங்கள் ஏற்படுகின்றன. அதில் ஒன்று உண்டாக்கப்படும் பொருளில் எஜமானனுக்குச் சேரவேண்டிய பாகம் எவ்வளவு, வேலைக்காரர்களுக்கு எவ்வளவு? இதைவிட விசேஷ முக்கியமான இன்னொரு விஷயம் என்னவென்றால்,எவ்வளவு பொருள் உண்டாக்கப்படவேண்டும் அதிகமா குறைவா? கவனிக்கத் தகுந்த உண்மை யாதெனில் சாத்தியமான வரையில் உண்டாக்கினால் தான் தகுந்தபடி லாபம் பகிர்ந்து கொள்ளலாம். மூலதனத்தைக் கட்டுப்படுத்துவதனால் எந்த இனத்தாருக்காவது க்ஷேம முண்டாகிறது என்னும் கொள்கை பொருளாதார வழியாய் கவனித்தாலும் தவறுதலா யிருப்பதோடு ஒழுக்கமும் ஜாதிக்கட்டும் இல்லாமல் போகிறது.

சம்பள ஏற்பாட்டில் இவ்விதம் சீர்திருத்தம் செய்தால் என்ன பயன் உண்டாகும்? வேலைக்காரர்களுக்கு வேலையில் உற்சாக முண்டாகுகிறது. எஜமான் வேலைக்காரன் இருவருக்கும் நன்னடக்கை விருத்தியாகும். தற்பிரயோஜனத்தினால் ஏற்படும் மனச்சாக்ஷியை ஒவ்வொருவரிடமும் பலப்படுத்தும், உண்டாக்கும் பொருள்களும் அதிகப்படும். வருங்கால ஏற்பாட்டின் உத்தேசத்திற்கு உதவிபுரியும். நிர்வாகசக்திக்குக் கெடுதியில்லாமல் சகோதரபாவம் உண்மையாய் ஏற்படச்செய்யும். இவையெல்லாம் இலாபப்பிரிவினையினாலும் தொழிற்கூட்டுறவினாலும் விருத்தியடைகின்றன.

இலாபப்பிரிவினை யென்றால் என்ன? எஜமானன் தனக்குவரும் லாபத்தில் மனப்பூர்ணமாய் ஒரு பாகத்தைவேலைக்கார்களுக்கென்று தானாகவே ஏற்படுத்தி தருமத்திற்காக அதைப்பகிர்ந்து கொடுத்தல். அதை எல்லா வேலைக்காரர்களுக்குமாவது அல்லது சிலருக்கு மாத்திரமாவது கொடுக்கலாம். ஆனால் சாதாரணமாய் விசேஷஜனங்களே இவ்வினத்திலடங்கும். வேலைக்காரர்களின் பாகங்கள் முந்தியே தீர்மானிக்கப்படவேண்டும். எடுத்துவைக்கும் பணம் லாபத்திற்குத்தகுந்தபடியிருக்கும்; முதலுக்கு சாதாரணமான வட்டிகட்டியான பிறகு இருக்கும் தொகையில்தான் இத்தருமத்திற்கு ஒருபாகம் எடுத்துவைக்கப்படும்.

நிகரலாபத்திற்கு மூலதனத்தின் வட்டிதான் முதல்பொறுப்பு. மிகுந்ததை
முதலாளியும் வேலைக்காரர்களும் சரிபாதியாகப் பங்கிட்டுக்கொள்ளுகிறார்
கள். வேலைக்காரர்களுடைய பங்கு சம்பளத்திற்குத்தகுந்தபடி வீதிக்கப்
படும். இதுதான் அவ்விஷயத்தில் இதர ஏற்பாடுகளைவிடத் திறமானது.

தொழிற்கூட்டுறவு என்பது இலாபப்பிரிவினையேற்பாட்டின் சுபாவ
விருத்தியே. ஆனால் இவ்விதத்தொழில்களில் வேலைக்காரர்களே முத
லுக்கும் ஏற்பாடுசெய்து நிர்வாகத்தையும் வகிக்கிறார்கள். அம்மாதிரி ஏதா
வது வேலைகள் நடந்தால் அவற்றுள் பெரும்பான்மை மிகக்கொஞ்ச
வேலையே செய்கின்றன. இலாபப்பிரிவினை ஏற்பாட்டினால் வேலைக்காரர்
கள் பங்காளிகளாகிறார்கள். அதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்
றால் அவர்களுடைய லாபத்தை அவர்கள் கையில் ரொக்கமாகக் கொடுப்
பதில்லை. ஆனால் அவைகள் அவரவர்களுடைய மூலதனக் கணக்கில்
சேர்க்கப்படுகின்றன. இதற்காக ஒருதனி மனிதனுடைய தொழிலானது
ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனியாக ஆகிறது.

பாட்லியிலுள்ள ஜே. டி. அண்டு ஜே. டெய்லர் லிமிடெட் என்ற
பெயருடன் வேலை செய்யும் என்னுடைய சணல் தொழிற் சாலையில் 26
வருஷமாக இவ்வேற்பாட்டை அனுஷ்டித்து வந்திருக்கிறேன். வருஷ
ஆரம்பத்தில் எங்களுடைய மூலதனம் 180,000 பவுன் இருந்ததாகவும்,
வருஷத்தில் சம்பளத்திற்கும் சிப்பந்திச் செலவுகளுக்கும் மொத்தம்
40,000 பவுன் செலவழிந்ததாகவும், பாகித்துக்கொள்ள வேண்டிய
மொத்தலாபம் 33,000 பவுன் என்று ஏற்பட்டது. முதல் முதல்
மூலதனத்தின் வட்டியை 100-க்கு 5 வீதம் அதாவது பவுன்
9,000-ஐ. எடுத்து வைத்துவிட்டு மிகுதியாயிருக்கும் பவுன்
24,000-த்தை தொழிலாளிகளுக்கு 100-க்கு 7½வீதமும் முதலுக்காகஇன்
னம் 100-க்கு 7½வீதமும் பகிர்ந்து டிவிடெண்டு கொடுக்கப்படும். ஆகவே
தொழிலாளிகள் சம்பளம் தவிர இலாபத்தில் 100–க்கு 7½ பெறும்
பொழுது முதலாளிக்கு வருஷாந்தரத்தில் 100-க்கு 12½ வீதம் மாத்தி
ரம்தான் கிடைக்கிறது. வருஷத்தில் 500 பவுன் சம்பாதிக்கும் ஒரு
வனுக்கு பவுன் 37-0-0-ம், 100 பவுன் சம்பாதிப்பவனுக்கு பவுன்7-10-0
கிடைக்கும். வருஷம் முழுதும் வேலையிலிருக்கும் ஒவ்வொரு வேலைக்
காரனுக்கும் லாபாம்சம் உண்டு. வேறு நிபந்தனை கிடையாது. ஆனால்
கம்பெனியில் 5 வருஷம் வேலைசெய்து குறைந்தபக்ஷம் 21 வயதுள்ள
வர்கள் தங்களுடைய 6 மாதச்சம்பளத்திற்குச் சரியான பங்குத்தொகை
சேர்த்துவைத்திருந்தால் அவர்களுக்கு இரட்டிப்பு டிவிடெண்டு அல்லது
போனஸ் கிடைக்கும். ஒரு வருஷத்திற்கு உட்பட்ட ஸர்விஸ் உள்ள
வேலைக்காரர்களினால் ஏற்பட்ட டிவிடெண்டுத் தொகை தொழிலாளி



களின் உபகாரத்திற்கென்றே வைத்திருக்கும் உபகார பண்டில் சேர்க்
கப்படுகிறது.

தொழில் டிவிடெண்டானது முற்றிலும் கொடுபட்டிருக்கிற 1
பவுன் பங்குகளின்பேரில் ரொக்கமாய் கொடுக்கப்படுகிறது. வேலைக்கா
ரர்கள் வேலையைவிடுகிறவரையில் அவ்விதப் பங்குகளை விடமாட்டார்
கள். ஆனால் முந்தின வருஷத்திய சம்பளத்தைவிட அதிகலாபமடைந்
திருக்கிறவர்கள் அப்படி அதிகமாயிருக்கும் தொகையை, பிரியப்பட்டால்
விற்றுவிடலாம். வேலையை விடுகிறவர்கள் 6 மாதத்திற்குள் அவர்களு
டைய பங்குகளை விற்றுவிடவேண்டும். ஆனால் பணத்தை எடுத்துக்
கொள்வதற்காகவே வேலையை விடாமலிருக்கும்பொருட்டு கம்பெனி
யார், அவர்கள்விட்டு மூன்று மாதம்வரையில் பங்கை மாற்றாமல் தடைப்
படுத்தலாம். போனஸ் பெறும் பங்குகள் வேலைக்காரர்களுக்குமாத்தி
ரம்தான் உண்டு. ஆனால் வோட்டுக்கொடுக்க அதிகாரமில்லை. பொரு
ளுரிமை இதரப் பங்குக்காரர்கள் போலவே உண்டு.

என் 26 வருஷத்திய அனுபவத்தில், லாபமடைந்த வருஷங்களும்
சில உண்டு,நஷ்டமடைந்த வருஷங்களுமுண்டு. எங்கள் மூலதனமும் சிப்
பந்திகளின் தொகையும் மூன்று மடங்கு அதிகமாகி யிருக்கிறது: இப்
பொழுது 1900 வேலைக்காரர்களிருக்கிறார்கள். பணப் புழக்கமும் மிக்க
அதிகமாயிருக்கிறது.எங்கள் டிவிடெண்டுகளும் 100க்கு 12-க்குமேலாக
முதலுக்கும்,100-க்கு 9-வரையில் தொழிலுக்கும் கிடைத்திருக்கின்றன.
1916–ம் வருஷம் முடிய எங்கள் வேலைக்காரர்களுக்கு 'போனஸ்' பங்கு
களாகவும், அப்பங்குகளின்மேல் டிவிடெண்டாகவும், தொழிலாளிகளின்
உபகார நிதிக்காகவும் இரண்டு லக்ஷம் பவுனுக்குமேல் பகிர்ந்து கொடுத்
திருக்கிறோம். தற்காலம் கம்பெனியின் லாபத்தில் மூன்றில் இரண்டு
பங்கு வேலைக்காரர்களுக்குச் சொந்தமா யிருக்கிறது. இது ரொக்கச்
சம்பளத்தைத் தவிர அதிகமாகக் கிடைத்த நிதி.

நஷ்டப்பிரிவினை யுண்டோ? லாப நஷ்டம் என்று பேசுவதற்கு முன்
சம்பளங்கள் கொடுத்தாக வேண்டும் என்பதை ஒருவன் அறியாவிட்டால்
அவனுக்கு கொள்முதல் என்னும் பதத்திற்கே அர்த்தம் தெரியாது.

1897-98 இந்த வருஷங்களில் லாபமே கிடையாது. பங்காளி
களுக்கும் முதலாளிகளுக்கும் ஒரு தம்படிகூட டிவிடெண்டு இல்லை.
வேலைக்காரர்கள் சம்பளத்திலிருந்து திருப்பிக் கொடுப்பார்களென்று
முதலாளிகள் எதிர் பார்க்கவுமில்லை. வேலைக்காரர்களும் நிர்வாகத்தைப்
பற்றிக் குறை கூறவுமில்லை.

முதலாளிகள் கணக்கு விவரங்களைப் பிரசுரிக்க சம்மதப்படமாட்

டார்கள். பொருள் வரையுள்ள தனிக் கம்பெனிகளின் விஷயத்தில் 50-வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பங்காளிகளும் கம்பெனிக்காக வேலை செய்தால் சட்டப்படி அம்மாதிரியான பிரசுரம் அவசியமில்லை. ஆனால் நாங்கள் எங்கள் டிவிடெண்டுகளைப் பிரசுரிக்கிறோம். சொல்லிக் கொள்வதற்கு சங்கோஜப்படும்படி அவ்வளவு லாபம் ஒரு வியாபாரியும் அடையக்கூடாது. அப்படியே கஷ்டமான வருஷத்தில் விஷயம் தெரிந்துவிட்டால் நாணயமெல்லாம் அழிந்துபோகும்படி அவ்வளவு கண்மூடித்தனமாகவும் ஒரு வியாபாரமும் நடைபெறக்கூடாது.

ஆனால் முதல்தொகை ஓயாமல் அதிகரித்துக் கொண்டேயா வருகின்றது? ஏற்கனவே போதுமான மூலதனத்துடன் நடக்கும் பெரிய வியாபாரத்தைப்பற்றி என்ன சொல்லுகிறது? மேற்கூறியபடி லாபம் பகிர்ந்து கொடுப்பதல்லாமல் அதற்கு இன்னம் அநேக வழிகளுண்டு. வியாபாரத்திலிருந்து விலகுகிறவர்கள், ஒரு குறிப்பிட்டவயது சென்றவர்கள், இறந்தவர்கள், முதலியவர்களின் பங்குகளை திரும்பவும் விற்க ஏற்பாடுசெய்யலாம் அல்லது தொழில் டிவிடெண்டை ரொக்கமாய்க் கொடுக்கலாம். பணத்தைக் கொடுத்துவிட்டால் அதை செலவழிக்கும்படி மனம் தூண்டப்படுகிறது. கட்டாயப்படுத்தி நிறுத்திவைத்தால் ஆபத்து தனமாகக் கூடுகிறது. இன்னொருமார்க்கம் ஏற்படலாம். அதாவது தொழிற்கூட்டுறவின் லாபங்களிலிருந்து கட்டிட சொஸைடிபோன்ற ஒரு உதவி ஏற்பாடு செய்யலாம். பணத்தை விநியோகம் செய்தல் ஒரு பெரிய கஷ்டமல்ல.

இவ்வேற்பாட்டினால் உண்டாகும் ஒழுக்கப்பயன் மிகவும் மதிக்கத் தகுந்தது. அதனால் முதலாளிக்கு வேலையில் லாபக்கருத்தைவிட அதிகமான ஊக்கமும் உற்சாகமும் உண்டாவதோடு, சாதாரண தினசரி வேலைக்கே ஒரு கௌரவம் ஏற்படுகிறது. ஏனென்றால் தனக்கும் தன்னினத்தாருக்கும் தன் வியாபாரம் பிரயோஜனப் படுவதல்லாமல் அதில் உழைக்கும் எல்லாருக்கும், கிரமமாய் உலகம் முழுமைக்கும் உபகாரமாகிறது.

வேலைக்காரர்களோ முன்சொன்னபடி ஒழுக்கம் ஆக்கம் இரண்டிலும் நன்மையடைந்து தன்வேலையில் விசேஷ ஆசை உண்டாகி அதிக ஊதியத்தையும் அடைகிறார்கள். தங்களுடைய பொருப்பு, செட்டு, சுவாதீனம், கௌரவம் இவைகளில் விருத்தியாகப் பெறுகிறார்கள்.

கைத்தொழில் செய்த பெரியபாபம் ஒன்று என்னவென்றால் பரஸ்பர அவநம்பிக்கையே. இதை ஒழிக்கும் மார்க்கத்தைக் கைப்பற்றவேண்டும். தொழிலாளிகளுக்கு எஜமானனுடைய வியாபாரநுட்பம் அதிகம் தெரிந்தால், அதிலும் முக்கியமாய் இலாபத்தில் ஓர் அம்சமும் பெற்றால், அவர்கள் சாதாரணமாய் தாராளபுத்தியையே காட்டுவார்கள்.



புத்திசாலியான ஒவ்வொரு எஜமானனும் தன்வேலைக்காரனுடைய க்ஷேமலாபங்களை கவனிக்கிறான். இது லாபப்பிரிவினையின் காரியம். அறிவு அனுதாபம் இவைகளைக்கொண்டு அது ஏற்படுத்தப்பட்டது.

அப்படியானால் இம்மார்க்கம் சில இடங்களில் ஏன் அவநம்பிக்கையோடும் விரோதபாவத்துடனும் பார்க்கப்படுகிறது? எஜமானர்களுக்கு தன் லாபத்தில் ஒருபங்கை இழக்க இஷ்டமில்லை யென்பதோடு இழப்பதனால் பிரயோஜனமும் இல்லையென்று தோன்றுகிறது. சிலவேலைக்காரர்களுக்கோ அல்லது அவர்களுள் கொஞ்சம்பேசத் தெரிந்தவர்களுக்கோ "தொழிலாளிகளின் க்ஷேமம் சண்டையினால்தான் அடையமுடியும்" என்ற பழைய அபிப்பிராயமிருக்கிறது.

இருபக்கத்திலுமுள்ள அவநம்பிக்கைகளையும் பற்றிப்பேசியான பிறகு லாபப்பிரிவினையும் தொழிற்கூட்டுறவும் சர்வசௌகரியம் என்று முற்றிலும் சொல்லமுடியாவிடினும் விசேஷமுன்னேற்றத்திற்கு வழி என்பதில் ஆக்ஷேப மில்லை. ஜீவகாருண்யமே யில்லாத கொடுமைப்புத்தியுள்ள சுயநயவியாபாரிக்கும் அதேபுத்தியும் குணமுமுள்ள சங்கத்திற்கும் இடையில் மேற்கண்ட ஏற்பாடே சிலாக்கியமும், சாவதானமும் புத்தியும் பொருந்திய நடுமார்க்கம். இதன் ஆரம்ப ஏற்பாடு எஜமானனுடைய தாராளபுத்தியை பொருந்தினதாக இருக்கிறது.

---

# இந்தியாவின் இயற்கை விளைபொருள்கள்.

## மிஸ்டர் D. T. சாட்விக், ஐ. சி. எஸ். துரையவர்கள் எழுதியதின்சாராம்சம்.

இந்தியாவின் விளைபொருள்களை வெளியில் விற்க அனுப்பு முன் சரக்குகள் சுத்தமாயும், கலப்பில்லாமலும், ஒரே ராசியாகவும் இனவகுப்புகள் செய்யப்படவேண்டிய அவசியத்தை 'கூறியது கூறல்' என்னும் குற்ற மேற்பட்டாலும் கவனிக்காமல் இன்னோர்முறை கூறத்துணிந்தேன். ருஷியா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி முதலிய எந்த தேசங்களிலுமுள்ள தொழிற்சாலைகளில் நுழைந்தபோதிலும் 5 நிமிஷப் பேச்சுக்குள் மேற்கூறிய விஷயங்களைப்பற்றிய பிரஸ்தாபம் வராமலிருக்காது. இங்கிலாந்தில் பஞ்சு, சணல், அவுரி முதலியவற்றில் எதைப்பற்றியதானாலும் சரி, இடாலியில், பஞ்சு, தோல், கோதுமை அல்லது எண்ணெய் விதைகள் இவைகளில் எதுவாகிலும் சரி, பிரான்ஸில் கோதுமை, சணல், அல்லது எண்ணெய் விதைகளானாலும் சரி, ருஷியாவில் தேயிலையைத் தவிர மற்ற எந்தச் சரக்குகளும் முக்கியமாய் தேனீ மெழுக்கும் ஆகிய

எதைப்பற்றிய பேச்சா யிருந்தாலும் சரி, பழிச்சொல் இல்லாமலிருக்காது. இந்தியாவைப்பற்றி அகாரணமாய் இகழ்ந்து பேசவேண்டுமென்பது என் கருத்தல்ல. சமீபத்தில் ஏற்றுமதிச் சரக்குகளில் விசேஷ சீர்திருத்தமாகியிருக்கிறதாக எங்கும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மிளகு, தேயிலை, ரப்பர் காபிக்கொட்டை, இவைகளைப்பற்றி யாதொரு புகாரும் என் காதில் படவில்லை. சணலைப்பற்றி மிகக்கொஞ்சப் புகாரேதான். ஷை விஷயம் வற்புறுத்தப்பட வேண்டிய காரணம் என்னவென்றால், இனி ஏற்படக் கூடிய போட்டியே. அதைப்பற்றித்தான் இவ்விஷயங்களில் இடைவிடாக் கவலை யிருக்கவேண்டியது. சென்ற 20 வருஷங்களாக இந்தியா வியாபாரத்தில் இரண்டு பெரிய குணங்கள் காணப்படுகின்றன. இக்குணங்கள் விருத்தியாகி வியாபாரத்தை அவசியம் பாதிக்கும். அவையாவன:—

1. முதல்தரமான சரக்குகளை ஏராளமாய்ச் செய்யும் பொருட்டு கைத்தொழில்களை ஒற்றுமைப்படுத்தி விருத்திசெய்யவும் அத்தொழிலின் ஏற்பாட்டிற்கும் அதற்குவேண்டிய சரக்குகள் கிடைக்கும் இடத்திற்கும் நேரான உறவை உண்டாக்கி வைக்கவும் ஏற்பாடாகும்.

2. இயற்கை விளைபொருள்கள் உற்பத்தியாகும் உஷ்ணப் பிரதேசங்களை அதிகமாய் அடைய முயலுதல்.

அநேக உற்பத்திச் சரக்குகளில், இலாபம் நிரம்ப இருக்கின்றன. அதனால் சரக்குகள் செய்பவர்கள் ஏராளமாகச் செய்து சீக்கிரமாக அவைகளைப் பணமாக்கப் பார்க்கிறார்கள். தும்பு தூசிகள் கலந்தும் கலப்பிடமாகியும் இருக்கும் சரக்குகளில் ரெயில், ஸ்டீமர் சார்ஜுகள் கொடுக்கவாவது அல்லது அவைகளைவாங்கி சுத்தம்செய்து உதவாக் கரைச் சாமான்களை விநியோகிக்க சந்தை தேடவாவது அவர்களுக்கு மனமுண்டாகிறதில்லை. என்றாலும் ஏராளமான இலாபம் கிடைப்பதாயிருந்தால் மேற்கூறிய மட்டசரக்குகளையும் வாங்கிச் சீர்திருத்திக்கொள்ள சிலர் உண்டு. ஆனால் சுத்தமும் ஒரே ராசியுமுள்ள சரக்குகளுக்குத் தான் சாதாரணமாயும் நியாயமாயும் கிராக்கி ஏற்படுகிறது. அம்மாதிரி சப்ளையை விசேஷப்படுத்துவதற்காகவே அநேக தொழிற்சாலைகள் சரியான பராமரிப்பின்கீழ் உஷ்ணப்பிரதேசங்களில் விருத்தியாய்க்கொண்டு வருகின்றன. ஆகவே அநேக தேசங்களில் ஏற்பாடாகிக்கொண்டிருக்கும் சரியானமுயற்சியோடுகூடிய போட்டியைப் பொருத இந்தியா தயாராக இருக்கவேண்டும். அச்சரக்குகள் சீனாவிலிருந்து வரக்கூடிய எள்ளாக இருந்தாலும் இருக்கலாம். பெல்ஜியம் காங்கோவிலிருந்து வரக் கூடிய கொப்பரையோ, நிகேரியா அல்லது ஸூடானிலிருந்து வரும் பருத்தியோ எதுவானாலும்சரி இவ்விடங்களிலெல்லாம் ஒரேராசி, சிலாக்கியம், இக்குணங்களை ஆரம்பத்திலிருந்தே நிபுணர்களைக்கொண்டு விருத்திசெய்வதனாலேயோ அல்லது ஸூடானிலிருப்பதுபோல இன்னபரப்பில் இன்னதினுசப்பருத்திதான் விளைவிக்கவேண்டும் என்னும் அதிகார முறையினாலேயோ ஏற்பாடாய் கவனிக்கப்பட்டு வருகின்றன. இப்போட்டி கடுமையாவதற்குமுன் போக்குவரத்து, உழைப்பு, இவைகள் முக்கியமாய் சம்பந்தப்பட்டவரையில் ஜெயிக்கப்படவேண்டிய கஷ்டங்கள் அநேக மிருக்கலாம். ஆனால் போக்குவரத்து சௌகரியம் ஏற்பட்ட உடனே எதிர்பாராத அளவு விசேஷ முன்னேற்றமும் அதிகச் சரக்கு உற்பத்தியும் ஏற்பட்டுக்கொண்டிருப்பது உலக அனுபவமாயிருக்கிறது. சமாசாரப் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கிறபடி சண்டைக்குப் பிறகு உஷ்ணதேசத்தில் உண்டாகும் இயற்கைச்சரக்குகளுக்கு அதிகவிலையோடுகூடிய விசேஷகிராக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை யிருந்தால் எந்தச்சரக்கும்விற்று முதலாய்விடும் என்றருத்தம். ராசி, சுத்தம் முதலியவைகளை கவனிக்கவேண்டிய அவசியமில்லை என்று ஏற்படுகிறது. ஆனால் இது தப்பான எண்ணம். சண்டைக்குப்பிறகு, உஷ்ணப்பிரதேசங்களில் ரெயில்வேகள், தண்ணீர்க்கால்கள் முதலிய ஏற்பாட்டிற்குப் போதுமான மூலதனம் உண்டாவது கஷ்டமாயிருந்தாலும், தொழிலையும் போக்குவரத்தையும் சம்பந்தித்த விஷயத்தில் ஏற்கனவே ஜாக்கிரதையாய் வேலை செய்கிற இதரதேசங்களுக்கும்கூட இந்த அதிக விலை உபயோகமுள்ளதாகிறது என்பது கவனிக்கப்படவேண்டும். சரக்கின் நாணயத்தைப் பற்றி நன்றாய் நம்பிக்கை ஏற்பட்டால் அதன் பெருமையும் கௌரவமும் எப்படிப்பட்டது என்பது, சரக்குகிடைப்பது அருமையான காலத்தில் விளங்குவதோடுகூட, சாதாரணகாலங்களிலும் வியாபாரத்திற்கு ஏற்படும் சௌகரியத்தினாலும் ஒவ்வொரு தொழிலாளிகளும் தெரிந்து கொள்ளுகிறார்கள். இதற்கு அடையாளமாக லண்டனிலுள்ள, குடியேற்ற நாட்டுவியாபாரக் கமிஷனர்களில் ஒருவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். சில ஏற்றுமதிச் சரக்குகளைப்பற்றி கவர்ன்மெண்டார் கொடுக்கும் ஸர்டிபிகேட்டினால் வியாபாரத்திற்கு மிகச் சுலபம் உண்டாகிறது. இந்த ஸர்டிபிகேட்டை சரக்கின்பத்திரங்களோடு சேர்த்தனுப்பினால் அவைகள் சீக்கிரமாகவும் சுலபமாயும் மாறுகின்றன.



இது, பலவந்தமாகச் சீர்திருத்தத்தை வற்புறுத்தும் உபன்னியாசமல்ல. அப்படித்தோன்றினால் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாய டைரக்டர் ஸ்தானத்திலிருந்து பருத்திச் சீர்திருத்தத்தைப்பற்றி கவனித்த ஒருவரும் ஆடம்பர உபன்னியாசம் செய்யத்துணியார்கள். அநேக இனங்களில்சீர்திருத்தமாகியிருப்பதையும்அவ்விஷயங்களிலிருந்த கஷ்டத்தையும் அலக்ஷியம் செய்யமாட்டார்கள். அலக்ஷியம் செய்தல் அறிவீனம். இந்தியா, ஸ்திரமான பிரதேசங்களையும், வியாபாரத்திற்கு

உரித்தான கால்வாய்க்களையும் ஏராளமானவிளைபொருள்களையும் உடையதாகையால் உலகத்தின் உஷ்ணப்பிரதேசத்தில் தலைமை வியாபாரத்தை வகிக்கிறது. போட்டிவந்தே தீருமாகையால் இந்தியாவின் விற்பனைவிருத்தியைக்கோருபவர்கள் அதுகாலத்தை அனுசரித்து தானே சீர்திருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புவார்கள். பிரான்சிலும், இத்தாலியிலும், அல்ஜீரியாவின் கோதுமையும், சீனாவின் எள்ளும், முன் இந்தியாவிலிருந்து வந்த சரக்கைவிட மிகவும் மட்டமாக விருந்ததென்றும், இப்பொழுது அதைவிட சிலாக்கியமா யிருக்கிறதென்றும், பிரான்சிலுள்ள வேலைக்காரர்கள் இந்தியாவின் சணல், தும்பு தூசிகளுடன் இருப்பதால் அதைக்கையாடக் கூசுகிறார்களென்றும், ருஷியாவில் இந்தியாவின் மெழுக்கில் அவநம்பிக்கை யென்றும், காதில்படுவது நம் மனதிற்கு எவ்வளவு சங்கடத்தைக்கொடுக்கிறது பாருங்கள். இம்மூன்று தேசங்களில் சஞ்சரித்ததினால் ஏற்பட்டமுக்கிய தீர்மானமாவது "உஷ்ணப்பிரதேசச்சரக்குகளுக்கு கிராக்கி ஏறிக்கொண்டேயிருக்கிறதினால், இனி வருங்காலத்திய இந்தியா வியாபாரத்தின் கௌரவம், சரக்குகள் சுத்தமாயும் கலப்பில்லாமலும், ராசிவாரியாகவும் பிரித்த பிறகேதான் மொத்தமாய் அனுப்புவதில் இருக்கிறது." இவைகள் நன்றாய் கவனிக்கப்படாவிட்டால் இந்தியச்சரக்கிற்கு கிராக்கியற்றுப் போகும். ஆகையால் இந்தியச்சரக்கிற்கு நல்ல பெயர் ஏற்படுவதில் கவலையிருக்கவேண்டியது அவசியம்.

வியாபாரத்திற்கு சௌகரியமான ஒரு சிறியவிஷயம் என்னவென்றால் இனவகுப்புகளாகப் பிரித்தபிறகு ஒரே அளவான கோணிகளிலோ, பெட்டிகளிலோ எளிதாகக்கையாடக்கூடியபடி சரக்குகளை (pack) செவ்வையாய்கட்டிவைக்கவேண்டியது இவ்வேற்பாடு எங்கும் பரவவேண்டும்.

---

JAN 1919


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் X] 1918ளு அக்டோபர்மீ [இலக்கம் 4


## பத்திராதிபரின் குறிப்புகள்.

---

### விவசாய நிலங்கள்.

1917-ம் வருஷம் மேமாதத்தில் சட்ட நிருபண சபையில் கௌரவ ஏ. எஸ். கிருஷ்ணராவ் அவர்கள் இந்த ராஜதானியில் விவசாய நிலங்களின் உட்பிரிவினைகளை யெல்லாம் கவனிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி, கொண்டு வந்த தீர்மானம் சென்னை கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் காரணமாக, இஷ்டப்படும் இடங்களில் சட்டம் கட்டுப்படுத்தலாம் என்று பம்பாய் கவர்ன்மெண்டு சொன்னாற் போலவும் சொல்லாமல் தற்காலம் இது விஷயமாய் சட்ட நிருபணவேலையை எடுத்துக் கொள்ளமாட்டோமென்றும், மிஸ்டர் பாடிஸன் துரை பிரஸ்தாபித்தபடி ஒரு ஜில்லாவில் பிரியப்படும் ஒரு கிராமத்தின் நிலங்களில் மாதிரி வேலைகளை நடத்தும் சௌகரியத்தைப்பற்றி ரெவினியூ போர்டாருடைய ஆலோசனையைப் பெற்றுத் தான் அடங்கய மாற்றும்பொழுது புது ஏற்பாடு , செய்ய முயலவேண்டுமென்றும் மதராஸ் கவர்ன்மெண்டார் உத்திரவு கொடுத்திருக்கிறார்கள். இவ்வேற்பாட்டில் அநேக விஷயங்கள் சட்டம், ஆசாரம், பொருளாதாரம் முதலியவைகளோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. முதல் முதல் பொருளாதார ஸ்தலத்தின் விஸ்தீரணம் நிர்த்தாரணமாக வேண்டியது. இதை நிச்சயிப்பதற்கு அநேக விஷயங்கள் தெரியவேண்டும். அதில் முக்கியமானவைகளில் ஒன்று பல திசைகளில் துண்டு துண்டாகக்கிடக்கும் நிலங்களை பரிவர்த்தனை முதலிய வேலைகளால் ஒருங்கு சேர்க்க வேண்டியதே. மைசூர் விவசாய டைரக்டரான டாக்டர் கோல்மான் துரையவர்கள் சமீபத்தில் நடந்த மைசூர் பொருளாதாரக் கான்பரன்சில் இம்மாதிரியான தீர்மானமொன்

றைக் கொண்டு வந்த பொழுது கீழ்க்கண்டபடி சொன்னார். “இந்தியாவில் விவசாயச் சீர்திருத்தத்திற்கு இரண்டு தடங்கல்களிருக்கின்றன. அவைகளில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. அவைகளாவன (1) ஸ்தலத்தின் சராசரி விஸ்தீர்ணம் (2) அவைகள் சேர்ந்தாற்போலில்லாமல் சிதறி ஒன்றுக்கொன்று வெகுதூரத்தில் கிடத்தல். பம்பாய் விவசாய டைரக்டராகிய கனம் மிஸ்டர் கீடிங்ஸ்துரையவர்களும் இந்நிலைமையில் யாதொரு விவசாயச் சீர்திருத்தமும் உபயோகப்படாது என்று காட்டியிருக்கிறார். மைசூரில் சுமார் பாதி விவசாயிகளுக்கு 5 ஏகர் அல்லது அதற்குக் குறைவாகத்தான் நிலமிருக்கிறது. இதை ஒரு பொருளாதார ஸ்தலமென்று சொல்லமுடியாது. இவைகளும் பல இடங்களில் பரவியிருக்கின்றன. பம்பாயில்மிஸ்டர் கீடிங்ஸ் துரையவர்கள் விசாரித்ததில் ரத்னகிரி ஜில்லாவில் 30½ ஏகர்கள் 49 ஸ்தலங்களில் 17 நபர்களிடமிருந்ததாகத் தெரிந்தது. பம்பாய் மைசூர் முதலிய இடங்களிலேயே இப்படியிருந்தால் நமது நிலைமை அவைகளைவிட சிலாக்கியமாகாது. ஜப்பான் அல்லது ஆஸ்திரியாவானது நம்மைவிடத் தாழ்ந்த நிலைமையிலிருந்து எப்படி முன்னுக்கு வந்திருக்கிறதென்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இவ்விருதேசங்களிலும் ஸ்தலப்பகுப்பினால் உண்டான செலவுகளையும் அதனால் ஏற்பட்ட சௌகரியங்களையும் நோக்கமிகக்குறைவே. ஆஸ்திரியாவில் ஏகர்ஒன்றுக்கு செலவு ரூ. 3-0-0 முதல் ரூ. 7-8 ஆயிற்று. அதன்காரணமாக நிலத்தின்விலை யேற்றமோ சராசரியில் ஏகர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ஏற்பட்டது. ஸ்தலங்களின் பரிவர்த்தனைகள்கூட மூன்றில் இரண்டு பங்கு நிலங்களுள்ளவர்களின் தீர்மானத்தினால் நடைபெற்றன.

மைசூரில் இவ்வேற்பாட்டைப்பற்றிய பிரஸ்தாபம் கவனிக்கத்தக்கது. அதன் நோக்கத்தைப்பற்றி டாக்டர் கோல்மான் துரை பின்வருமாறு சொன்னார்.

“ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு “மாதிரித் தாலூக்கா”வை எடுக்கவேண்டியது. அவை ஒவ்வொன்றிலும் நல்ல சுபிக்ஷமுள்ள கிராமத்தைவிசாரணைக்காக எடுத்துக்கொள்வேன். பிறகு அக்கிராமத்தைச் செவ்வையாய் அளந்து, ஸ்தலங்களைப்பிரித்து, நிலத்தின் தரங்களையும், பாசன சௌகரியங்களையும், ஒன்று சேர்க்கப்படவேண்டிய ஒழுங்குகளையும் கவனிப்பேன். இப்படிச் செய்வதனால் மேற்படி விஷயங்களுக்குபிடிக்கும் செலவுகளை நிர்த்தாரணம் செய்யலாம். பொருட் பாங்கில் பரிவர்த்தனையானது குணமுள்ளதாக ஆனாலும் மூன்றில் இரண்டு பங்கு நிலக்காரர்களுள் பாதிப்பெயர்களாவது சம்மதப்பட்டால்தான் இவ்வேலையையும் ஏற்றுக் கொள்ளலாம். இவ்விதமாதிரிக் கிராமங்களினால் ஏற்படும் செலவு



களை யெல்லாம் கவர்ன்மெண்டாரே பொறுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட தொகை நல்ல ஈட்டில் போட்டு வைக்கபபட்ட பணம் என்பது என் துணிவு.”

பம்பாயும் மைசூரும் ஏற்கனவே முன்வந்து இவ்விஷயத்தைக் கைக்கொண்டு விட்டன. ரெவினியூபோர்டார்வசம் ஒப்புவிக்கப்பட்ட இவ்வேலைமிக்க ஆழ்ந்த யோசனையுடனும் ஆராய்ச்சியுடனும் நடைபெறுமென்று நம்புகிறோம்.

## தென்கன்னடத்தில் கோவாபரேஷன்.

மங்களூர் தாலூகா சங்கங்களின் கான்பரன்ஸ் :—1918-ம் ௵ அக்டோபர்மீ 19௳ கள்ளிக்கோட்டை செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களின் நேர்பார்வையில் தென்கன்னடத்து இரண்டாவது தாலூகாக்கான்பரன்ஸுகள் மங்களூரில் நடைபெற்றன. மங்களூர் தாலூகாவில் மொத்தம் 32 சங்கங்களுண்டு. அநேகமாய் எல்லா நல்ல சங்கங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். மங்களூரிலுள்ள 271-ம் நெம்பர் பஞ்சமர்களின் சங்கமும் 2,178-ம் நெம்பர் வலையர்களின் சங்கமும் தங்கள் பஞ்சாயத்துகளை கான்பரன்ஸுக்கு அனுப்பியிருந்தது தனியாக எடுத்துச் சொல்லத்தகுந்ததே. சங்கங்களின் பிரதிநிதிகளின் மொத்தம் 24 பெயர்கள். அவர்கள் தங்கள் வேலைகளை ஒப்பிட்டுப்பார்த்து ஒருவரொருவர் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களைக் கவனித்தது மிக அழகாயிருந்தது. புதுச்சங்கங்களின் பிரதிநிதிகள் கான்பரன்ஸ் ஏற்பாடுகளை அறிந்து கொண்டார்கள்.

கான்பரன்ஸில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களுள் மிகவும் முக்கியமானது சூபர்வைசிங் யூனியன் ஏற்படவேண்டியதைப்பற்றியதே. இந்நாட்டின் அனுபவம் என்னவென்றால் சூபர்வைசிங் யூனியன் ஆரம்பம் முதல் ஏற்பட்டாலொழிய சங்கங்கள் அதன் அருமையைச் சாதாரணமாய் அறிகிறதில்லை. சென்னை ராஜதானியிலுள்ள கோவாபரேடிவ் இலாகாவானது சங்கங்களைத் தாங்களே விருத்தி செய்துகொள்ளும்படியாகவிட்டு அதனால் சமீபத்தில் இந்த ஜில்லாவில் அநேக யூனியன்கள் ஏற்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். மங்களூர் கான்பரன்ஸில் ஒரு புதுச்சங்கத்தின் கமிட்டி மெம்பர் சூபர்வைசிங் யூனியனின் அவசியத்தை வற்புறுத்திக் கேட்டதினால் ஜனங்களுக்கு கோவாபரேஷனிலுள்ள மேலான ஊக்கம் தெரிகிறது. மங்களூரைச்சுற்றி சுமார் 10மைல்களிலுள்ள சங்கங்களுக்கு மங்களூரில் ஒரு யூனியன் ஸ்தாபிக்கவேண்டுமென்று ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது. அதை வேலை செய்யத்தகுந்த மனிதர்களுக்கும் குறைவில்லை. வருஷம் முடிவதற்குள் ஒன்றிரண்டு யூனியன்

கள் ஜில்லாவில் வேலைசெய்யப் பார்ப்பதோடு ஜில்லாவில் யூனியனில் சேராத சங்கங்கள் இராதென்றும் நம்புகிறோம்.

இன்னொரு முக்கிய விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. என்னவென்றால் மெம்பர்களுக்கு வேண்டிய மளிகை சாமான்கள் முதலியவைகளையும் விவசாயக் கருவிகளையும்கூட தாராளமாய் கூட்டாகவாங்கி விநியோகித்தல். ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய சாமான்களின் ஜாபிதாவைப் பஞ்சாயத்தாரிடம் கொடுத்து அவர்களும் அவைகளை எளிதாக வாங்கி விநியோகிக்கிறார்கள். யூனியன் ஏற்பாடானபிறகு தனி ஜாபிதாக்களின்பேரில் வாங்கும் சிரமமின்றி மொத்தமாகச் சரக்குகளை வாங்கி வைத்து விற்க ஏற்பாடாகும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களும் இன்ஸ்பெக்டர்களுக்கு போதிப்பதாகவாக்களித்திருக்கிறார்.

சங்கங்களின் ரிபோர்டுகளைப் படித்ததில் அநேக விஷயங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அவைகளுள் சில வருமாறு. (1) மெம்பர்கள் தங்கள் வார்சுகளை ஏற்படுத்தவேணடிய அவசியம் (2) முன் பாத்தியக் கடன்களை நிவர்த்திப்பதற்காகக் கடன்பெற அனுமதி, கிடைத்தால் சங்கங்களே நேரில் கடன்காரர்களிடம் கொடுத்துத் தீர்த்தல் (3) சங்கங்களின் கையிருப்புத்தொகை அதிகமாயிருந்தால் அதை விநியோகித்தல் (4) காலங்கடந்த கடன்களின்பேரில் அபராதவட்டி வாங்குதலுக்கும், பங்குத்தொகை, பிராவிடண்டு பண்டு டிபாஸிட்டுகள், ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள், இவைகள் கெடுத் தவறினால் வசூலிக்கும் அபராதத்திற்கும் உள்ள வித்தியாசம் முதலியன.

கோவாபரேடிவ் இலாகாவில் ஆலோசனைக்குக் கொண்டுவரவேண்டிய விஷயங்களில், நாணயச்சங்கங்கள் கூட்டுக் கிரய விக்கிரயங்களுக்கான பைலாக்களை ஏற்படுத்துதல், நீண்டகால, குறுகியகாலக்கடன்களுக்குத் தகுதியான பாத்திரங்களில் காலங்களை நீடிப்பித்தல், கடனைக் காலத்தில் திருப்பிக்கொடுக்கத் தவறுகிற இனங்களை இப்பொழுதுபோலஉடனே மூடும் வழக்கத்தைத் திருத்தி அபராதவட்டி ஏற்படுத்தலாம் என்றல் முதலிய விஷயங்கள் சொல்லத் தகுந்தன. மங்களூர் பப்ளிக் ஸர்வென்ட்ஸ் கோவாபரேடிவ் சங்கம், தன் மெம்பர்களின் அசௌகரியத்தைச் சொல்லிக்கொண்டதின்பேரில், அவர்களுள் வெளியூர் மெம்பர்களின் சௌகரியத்திற்காக அவர்கள் சம்பளத்தில் பல இடங்களிலுள்ள ஸப் டிரஷரிகளே தொகையைக் குறைத்து டிஸ்ட்ரிக்ட் டிரஷரிக்கு ப்ராவிடெண்டு பண்டுகளை அனுப்புதல்போல அனுப்ப உத்திரவு கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள ஒரு தீர்மானம் ஏற்பட்டது.



மங்களூர். தாலூகாவானது கோவாபரேஷனில் ஒருகாலம் பின்னடைந்திருந்தது. இப்பொழுது மங்களூர் டவுன் மத்தியில் ஒரு டவுன் பாங்க் ஏற்பட்டிருக்கிறது. மங்களூர் முனிஸிபாலிட்டிக்குள் மூன்று ஜாதி வித்தியாச மிலலாச் சங்கங்களிருக்கின்றன. இப்பொது மங்களூரில் கோவாபரேஷன் கொழித்துச் செழித்து வருகிறதென்று யார்தான் சொல்லமாட்டார்கள்.

## தென்·கன்னடம் ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்க்.

இப்பாங்கின் 5-வது வருஷ சாதாரணப் பொதுமீட்டிங்கு 1918-ம் வருஷம் அக்டோபர் மீ 20உ மெம்பர்களின் சௌகரியத்தை உத்தேசித்துத் தலையாபீஸ் புத்தூரிலிருந்தபோதிலும்கூட,முன் வருஷம்போல மங்களூரில் நடைபெற்றது. மொத்தம் 35 பெயர்கள் ஆஜராயிருந்தார்கள். அதில் 13 தனிப்பங்குக் காரர்கள். மற்ற 22 பங்கெடுத்துக்கொண்ட சங்கங்களின் பிரதிநிதிகள். கள்ளிக்கோட்டை செக்ஷன் கோவாபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரரான மிஸ்டர் பி. கே. குன்ஹுன்னிமேனன் அவர்களும் வந்திருந்தார்.

முதலில் கவினிக்கப்பட்ட வேலை 1918-ம் வருஷம் ஜுன் மீ 30-ம் தேதியுடன் முடியும் வருஷக்கணக்குகளை நிர்வாகசபையார் தயாரித்தபடி அங்கீகரித்தது. ரிபோர்டின்படி எல்லாவிதத்திலும் முன்னேற்றமே. கொடுப்பட்ட பங்குத்தொகையும் அதிகமாகியிருக்கிறது. பிக்செட் டிபாஸிட்டு முன் வருஷத்தைவிட $1\frac{3}{4}$ பங்கு அதிகம். டிபாஸிட்டுகள் மிகப் பரபரப்புடன் வந்து கொண்டிருக்கிறதினால், மெம்பர் சொஸைடிகளின் தேவைகளை யெல்லாம் திருப்திகரமாகக் கொடுக்கமுடிந்ததோடு அடிக்கடி ஏராளமான கையிருப்பும் இருக்கிறது.

ரிபோர்டில் காணப்படும் மிகவும் முக்கியமானபாகம் புதுச் சங்கங்கள் ஸ்தாபிப்பதையும் மேற்பார்வையையும் பற்றியது. இவ்வருஷம் ஏற்பட்ட புதுச்சங்கங்களின் தொகை முந்திய எல்லாவருஷங்களிலும்விட அதிகம். இவைகளில் பெரும்பான்மை, பாங்கின் உத்தியோகஸ்தர்களாலும் அதன் கீழ் வேலை செய்யும் சூபர்வைசர்களாலும் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஜில்லாவில் வேலை செய்யும் அநேக விதச் சங்கங்களுள் மங்களூரிலுள்ள கணபதி ஸகண்டரி ஸ்கூல் மாணவ ஸ்டேஷனரி சொஸைடியும், ரோட் கண்டிராக்ட் வேலை முதலியனசெய்யும் புத்தூர் பஞ்சமர்களின் சொஸைடிகள் போன்றவைகளும் முக்கியமாய் எடுத்துக் காட்டப் பட்டன. சென்னை கவர்னராகிய லார்ட் பெண்ட்லண்டு துரையவர்கள் ஒரு கோவாபரேடிவ் சொஸைடிக்கு பேட்டி கொடுத்ததை சங்கத்திற்கு இவ்வருஷத்தில் மிகவும் முக்கியமான கௌரவக் காரியமாகக் கொண்டாட

வேண்டுமென்று மிகப் பெருமையுடனும் ஆனந்தத்துடனும் நிர்வாக சபையார் எழுதிவைத்திருக்கிறதாக ரிபோர்டில் காணப்படுகிறது.

இராஜதானியின் தலைவரே நேரில் பேட்டி காட்டிக்கவனத்தினால் ஜில்லாவின் கோவாபரேடர்களுக்கு விசேஷ ஊக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதில் சமுசயமில்லை.

ரிபோர்டின் கடைசிபாகத்தினால் கோவாபரேடிவ் விஷயங்களில் இஜ் ஜில்லாவிலுள்ள தலையிடங்கள் இதுவரையில் மந்தமாக விருந்து இப்பொழுது பரபரப்புடன் வேலை செய்கிறதாகக் காணப்படுகின்றன.

வருஷாந்தர ரிபோர்டு அங்கீகாரமான பிறகு, ரிஜிஸ்ட்ராரின் தணிக்கை உத்திரவு, படிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. 100க்கு 8 வீதம் டிவிடெண்டும் 100க்கு 1 விதம் போனஸும் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. க்ஷேமநிதிக்குச் சேரவேண்டிய மொத்ததொகை ரூ. 2,466-15-5-ல், ரூ. 2,000 விலையுள்ள போஸ்டாபீஸ் காஷ்சர்டிபிகேட்டை ரூ. 1,550க்குவாங்கி மிகுதித்தொகையை யதரூஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் வழக்கம்போல் போட்டுவைக்கப்பட்டது.

பிறகு பைலாவில் சிலமாறுதல்களை ஏற்படுத்தி டைரக்டர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரவர்களைக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவரும் பாங்கின் வேலைகளைக் கொண்டாடிப் பேசி, சீக்கிரம் ஜில்லா முழுமையும் சூபர்வைசிங் யூனியன்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தைவற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். பிறகு வழக்கமான மரியாதையுடன் மீட்டிங்கு கலைந்தது.

*　　*　　*　　*

1918-ஹு மார்ச்சு மீ 30உ யன்று ஜர்மனிய விவசாயகோவாபரேடிவ் இயக்கத்தை ஸ்தாபித்தவரான ரெய்பீஸனுடைய 100வது அப்த பூர்த்திதினத்தை ஜர்மன் விவசாய கோவாபரேடர்கள் கொண்டாடினார்கள். ரெய்பீஸன் என்பவர் வெஸ்டர்வால் டைச்சேர்ந்த ஒரு கிராமத்திலுள்ள சாதாரணக் குடித்தனக்காரர். முதலில் அவர் இராணுவத்தைச் சேர்ந்து பிறகு கண் உபத்திரவத்தினால் அதை விடும்படியாயிற்று. பிறகு முனிசிபல் விஷயங்கள் அவர் கவலையைக் கவர்ந்து வேயர்புஷ், ப்ளம்மர்ஸ் பீல்ட், ஹெட்டஸ்டார்ப் முதலிய சிறிய கிராமங்களுக்கு மேயராக



21 JAN 1919 MADRAS

நியமிக்கப்பட்டார். ஆனால் சிலவருஷங்களுக்குள் விருத்தாப்பியத்தின் காரணமாக அற்ப பென்ஷனுடன் வேலையை விட்டு விலகியிருக்கவேண்டியிருந்தது. பிறகு சுருட்டு, சாராயம் இவ்வியாபாரங்களி லிறங்கி அதிலிருந்துகொண்டு கோவாபரேடிவ்வளர்ச்சியை ஆரம்பிக்கச்செய்து அதை வெகுவாய் விருத்திக்குக்கொண்டுவந்த பிறகு தன் கவனம் முழுவதையும் அதில் செலுத்தவேண்டியிருந்தது. சுற்று ஜில்லாக்களிலுள்ள ஜனங்கள், பொருட்குறைவால் படும் கஷ்டத்தைப் பார்க்கச் சகியாமல் அன்பினால் தூண்டப்பட்டு பரஸ்பர உதவியென்னும் கோவாபரேடிவ் மார்க்கத்தை ஸ்தாபித்தார். பேராசைப் பிணியால் பீடிக்கப்பட்ட குடியானவர்கள் பொருட்குறைவினால் சரியானபடி பொருளுண்டாக்க முடியாமையைக் கண்ட ரெய்பீஸன் அவர்களுக்கு "ஒப்புர ஒழுகு" என்பதைப் போதித்து தன்னுடைய கண்காணிப்பில் அவர்களுள் கூட்டுத்தொழிலை ஏற்படுத்தினார். இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட நன்மையின் காரணமாக அவருக்குக் கிடைத்தப் புகழ் சொல்லுதற்கருமையாகும். ஆதிகாலங்களில் குடியானவர்களுக்கிருந்த கோவாபரேடிவ் ஊக்கதை புதுமாதிரியாக அவர் கிளப்பிவிட்டார். மதவிஷயத்தில் ஆழ்ந்த பக்திபதிந்த ரெய்பீஸனை நினைக்கும்போது இங்கிலீஷ், தானியர்கள் அகிய இவர்களுடைய கோவாபரேடிவ் இயக்கங்களில் ஆரம்பகாலங்களில் காணப்பட்ட விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன. மேலும் அவருடைய குணம் ஜர்மனியில் ராக்டேலின் "வழிசீர்திருத்தும்" முறைகளை அக்காலத்தில் அனுசரித்து போதித்துக்கொண்டு வந்த வி. ஏ. ஹூபேரின் குணநிசயத்திற்கு சமானமாக விருந்தது.

விசேஷ விடாமுயற்சியினால் ரெய்பீஸன் பாங்கிகள் ஏற்பட்டு கிரமமாகச்சீர்திருத்தங்களேற்பட்டன. இச்சங்கங்கள் கிராமத்தார்களின் சௌகரியம், சக்தி, தேவை முதலியவைகளுக்கு அனுகுணமான பரஸ்பர ஒத்தாசை முறையை ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. ஜர்மனிய விவசாய கோவாபரேஷன் இவ்வளவு அசாத்திய முன்னேற்ற மடைந்திருப்பதற்கும், அநேக இடைஞ்சல்களிருந்தும் ரெய்பீஸன் சங்கங்களின் யூனியன் அம்மாதிரி ஏற்பாடுகளுள் தலைமையாக நின்று ஆயிரக்கணக்கான குடியானவர்களுக்கு சரியான பிழைப்பும் ஆதரணையும் கொடுத்துக்கொண்டிருப்பதற்கும், ரெய்பீஸனுடைய சுயநயம் கொஞ்சமும் பாராட்டாத விடா

முயற்சியோடு கூடிய அஸ்திவாரவேலையே காரணமாக இருக்கிறது. அவருடைய ஏற்பாட்டை உலகத்தில் அநேக இடங்களில் மாதிரியாகப் பின்பற்றி யிருக்கிறார்கள். ஆஸ்திரியாவிலும் ஹங்கேரியிலும் ரெய்பீஸனுடைய பெயர் கொண்டாடப்படுவதோடுகூட பால்கன் நாடுகளிலும் ரஷியாவிலுங்குகூட அப்பெயர் கியாதியடைந்து இந்நாடுகளிலெல்லாம் விவசாய கோவாபரேடிவ் வளர்ச்சிக்கே வழிகாட்டியாகி அநேக இதர நாடுகளும் அவர் ஏற்பாட்டைக் கற்றுக்கொண்டும் நடித்துக்கொண்டும் வருகின்றன. ரெய்பீஸன் உண்மையான கோவாபரேடரைச் சேர்ந்தவர். தன்கொள்கை மிக்க தருமமார்க்கமென்றும் எவ்விதத்திலும் அது ஜயமே அடையுமென்றும் நம்பிக்கையுள்ளவர். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சலிக்காதவர். எவ்வளவு அபஜயம் நேர்ந்தாலும் மனம் கலங்காதவர். தன் கொள்கையிலுள்ள நம்பிக்கையினால் தன் வேலையின் பயனையும் அடைந்தார். ரெய்பீஸனுடைய வேலையில் நன்றாய்ப் பழக்கமுள்ள காலஞ்சென்ற ப்ரொபெஸர் டாக்டர் தீல்ட் அவர்களும் இவருக்கு மேலான கொள்கைகளில்ஊக்கமும், ஊர்ஜிதமான நம்பிக்கையு மிருப்பதோடு வேலைகளைக் கையடுவதிலும் ஜனங்களுடைய தேவைகளைக் கவனிப்பதிலும் மகா சமர்த்தர் என்று மிகவும் கொண்டாடியிருக்கிறார். அவரது நூறாவது அப்தபூர்த்தியன்று எல்லா விவசாய அச்சாபீசுகளும் கொண்டாடிய பெருமை மிகத் தகுதியான ஆதாரத்தையும் மனமார்ந்த உண்மையையும் உடையதே. இச்சந்தோஷத்தை வியாபாரக் கோவாபரேடிவ் இயக்கத்தாரும் கொண்டாடினார்கள். அவ்வியக்கத்தார்கூட ரெய்பீஸனைப்போல பொருளாதாரத்தில் மேன்மையடைய தங்களுக்குள் ஐக்கிய முயற்சியால் பலமடைந்து, பரஸ்பரசகாயத்தை அனுசரித்து, எல்லா கோவாபரேடிவ் குடும்பமும் க்ஷேம மடையும் ஏற்பாட்டை முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கோவாபரேடிவ் வேலைகளும் சரியான கொள்கையுடனும் ஏற்பாடுனும் நடத்தப்பட்டால் இப்பெரிய கோவாபரேடிவ் இயக்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் அவசியம் நன்மையை அடைவார் என்பதில் சந்தேகமே யில்லை.

---



# வடாற்காடு ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

முதல் வடாற்காடு ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸ் அக்டோபர்மீ 19 தேதியில் வேலூரில் நடைபெற்றது.

அதின் அக்கிராசனாதிபதி சேலம் பாரிஸ்டர் ம-ள-ள-ஸ்ரீ, T. ஆதி நாராயண செட்டியார் அவர்கள் எழுதிய வியாஸத்தின் சாராம்ஸம் பின் வருமாறு :—

கனவான்களே !

சரித்திர சம்பந்தமான உங்கள் நகருக்கு நான் வந்து என் அயல் வீட்டுக்காரரான உங்களிடம் நான் விருந்தாளியென்னும் மேன்மையான பந்துத்வம் கொண்டாட எனக்கு மிக்க ஆனந்தத்தைத்தருகிறது. ஆனால் நீங்கள் எனக்கு அளித்திருக்கும் பாரமான கடமைகளைச்செலுத்த எனக்கு சக்தியுண்டென்னும் நம்பிக்கையைக் கொள்ள முடியவில்லை. நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கும் கௌரவமானது, இது உங்கள் ஜில்லாவில் முதல் முதல் (கான்பரன்ஸ்) ஆலோசனைக் கூட்டமானதினாலேயே சிரேஷ்டமானது. நீங்கள் என்னைக் கோரியதின் பெருமை எப்படியாயினும் என் சுயநலங்கருதி நான் இங்கு அமர வெகு சந்தோஷமாகிறேன். ஏனென்றால் கூட்டுத்தொழில் முயற்சியின் சாதாரண தினசரிவேலையில் ஒவ்வொரு வேலைக்காரருக்கும், அசிரத்தையாகக் கூடிய சமயம் நேரும்போது உங்களுடைய பிரதேசம்போன்ற நிர்ச்சந்தேகமான வெற்றிபூண்ட கூட்டுத்தொழில் சாலைகளுக்குச்சென்றால் அது ஒரு தீபகமருந்துபோலும் அம்ருத ஸஞ்சீவிபோலும் குணம்தருகிறது.

பிரிந்திருந்த உரிமையினாலேயே நான் விஷயங்களை ஆராய்ச்சி செய்ய விடப்படலாமென நீங்கள் நம்பினாலன்றி, என்னிட பலஹீனங்களினாலே இத்தேசத்தை விட்டு வெகுகாலம் வெளியே சென்றிருந்ததும், திரும்பிவந்தபிறகும் தற்கால நிலைமையைப்பற்றித் தெரிந்துக் கொள்ளப் போதுமான அவகாசமும் சமயமும் வாய்க்காமலிருந்ததும், ஒரு முக்யமான விஷயம். நான் அயர்லாந்திலிருந்த மூன்றரை வருஷகாலத்தையும், கூட்டுத்தொழில் விஷயத்தில் செலுத்தியிருந்தால் இக்குறையை நீங்கள் பெரிதாகப் பாராட்ட மாட்டீர்கள். ஆனால், பிளங்கட் அவுஸ் (Plunket House) உடனும், ஏ. இ. மஹரிஷி பாதர்பின்லே, இவர்களுடனும் மிகவும் நெருக்கமாய்ப் பழகினபோதிலும், மேஸ்தர் ஆண்டர்ஸனும், பெரும்வியாபாரச் சங்கத்தாரும் எனக்குவேண்டிய சௌகரியங்களைக் கொடுத்த போதிலும், இந்த அனுகூலங்களை போதுமான அளவு நான் கையாடவில்லை என்று விசனிக்கிறேன். ஆயினும், அந்த வனப்பமைந்த பூமியில் நடந்த முப்பது வருஷகாலங்களுக்குள் ஐக்கிய இயக்கத்தாலுண்டான ஆச்சரிய

கரமான மாறுதல்களால் நான் கவரப்படாமலிருக்க முடியவில்லை. அயர்லாந்து தேசசரித்திரத்தையும் இல்லற ஒழுக்கத்தையும், எண்பதாம் வருஷத்திற்கு முன் அயர்லாந்து குடிகளின் துக்கமான நிலைமையையும் அறிந்த ஒருவர், தற்காலத்தில் அவர்களிட பரிசுத்தமான வாசஸ்தானங்களையும், செழிப்பான கால் நடைகளையும், வளம் பொருந்திய கிராமவாசங்களையும், பண்டசாலைகளையும், ஜாதீய கலாசாலைகளையும், காலிச்சபைகளையும், பொதுப்புத்தகசாலைகளையும் அயர்லாந்தின் கிராமாந்திரங்களில் சாதாரணமாய்க் கண்டால், அத்யாச்சரியமடையாமலிரார். சட்டமிட்டதுபோல் அன்யதேசக்குடியேற்றம் தடுக்கப்பட்டது. சிறு கைத்தொழிற் சாலைகள் எங்குபார்த்தாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசத்திலும் அதின் நிராகரிக்கப்பட்டபுராதன பாஷையிலும் விசுவாசம் ஏற்பட்டு சிறிய தாபங்களுக்கெல்லாம் பரதேசம்போய்கொண்டிருந்தது நின்றுபோய் தேசவிஸ்வாசமும் வேரூன்றியிருக்கிறது. அயர்லாந்தில் பெரிய மிராசுதாரர்களுடைய நிலங்களை மொத்தத்தில் குத்தகைக்கு வாங்கிக்கொண்டு சில்லரையாகக் குடிகளிடம்அனியாய திட்டங்களுக்கும் பயிரிட்டுவந்த மத்தியஸ்தர்களான தரகு வியாபாரிகள் தலைக்காட்டாது மறைந்தனர். வெகு தூரமுள்ள மூலைக்காட்டிலிருக்கும் குடியானவன் கூட தன் மாருலுக்கு அன்றன்றுடம் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் சரியான விலையை தந்தி மூலமாய் அறிகிறான். ஐக்கிய இயக்கத்தால் ஏற்பட்டிருக்கும் பெரும் நன்மைகளையும் அதின் பெருமைகளையும் குறித்து, கட்டுக்கதைகளாய் உங்களுக்கு நான் சொல்ல முன்வரவில்லை. அப்படி செய்ய நான் விரும்பினால் மான்செஸ்டரில் இருக்கும்ஆங்கிலேய வியாபாரச்சங்கத்தின் நடவடிக்கைகளை மாத்திரம் வர்ணித்தாலே போதுமானது. ஏனென்றால் ஐஸ்வரியம் நிறைந்த, கைத்தொழில்களையுடையதும் ஏராளமான ஊதியத்தைத் தருவதும் உயர்தரக்கல்வி ஞானமுடையதுமான இங்கிலாந்து தேசத்தினுடைய விஷயமானது பாதிபட்டினியும் எழுத்துவாசனை இல்லாததும் சுவாதீன மற்றதும் தங்களுடைய நிலத்தையும் வானத்தின் தடுமாற்றத்தையுமே நம்பி இருப்பவர்களாகிய ஜனங்களையுடைய நமது தேசத்தின் விஷயத்திற்கு முற்றும் மாறானதென்பதை நான் மறக்கவில்லை.

இதுவரையில் நடந்தவைகளைப்பற்றி சற்றுகவனித்து முன் வருஷங்களில் என்னென்னவேலைகள் செய்யப்பட்டனவென்று ஆராய்வது இச்சபைக்கு அவசியமாயிருப்பதால் உங்களுடைய அபிவிர்த்தி நீங்கள் சந்தோஷிக்கக்கூடிய நிலைமையிலிருப்பதை சற்றுத் தெரிவிக்கிறேன். 1914ம் வருஷத்திலே இந்தியா கவர்ன்மெண்டார் அதற்கு முன்னிட்ட 10 வருஷங்களில் ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தியைப்பற்றி ஓர் சுருக்க



மான தீர்மானத்தை வெளிப்படுத்தினார்கள். அவ்வருஷத்தில் உங்கள் ஜில்லாவானது சங்கங்களின் எண்ணிக்கையின்பேரில் கணக்கிட்டதில் மத்திமநிலையை அடைந்திருக்கிறது. 1914-15ம்௵த்திய ரிஜிஸ்ட்ரார் ரிபோர்ட்டில் உங்கள் ஜில்லாவில் 3 யூனியன்களும் அவைகளின் கீழ் 69 விவசாயச்சங்கங்களும் தான் காணப்படுகின்றன. விவசாயச் சங்கங்களில் 126 வரையறுக்கப்படாத சங்கங்கள் 5696 மெம்பர்களுடனும் ஆறுலட்சத்திற்குமேல் கைமுதலுடனும் காணப்படுகின்றன. 1916-17ம்௵த்திய ரிபோர்ட்டில் 9771 மெம்பர்களுடன் பதினொன்று லட்சம் முதலுடைய 191 சங்கங்கள் இருக்கின்றன, இதுதவிர 38 நபர்களும் 163 சங்கங்களும் மெம்பர்களாகவும் 46056 ரூபாய் பங்கு முதலாகவுமுடைய சென்ட்ரல் பாங்கும் ஏற்பட்டது. 6 யூனியன்களில் 7592 மெம்பர்களை உடையதும்,900,000 ரூபாய் முதலுடையதுமான160 சங்கங்கள் அணைக்கப்பட்டிருந்தன. இவை 1917-ம்௵ ஜூன்௴ 30ம்௳ வரையில் நமக்கேற்பட்ட குறிப்புகள். ஆனால் நடந்த ஜூன் வரையில் முடிவான வருஷத்தில் இன்னும் திருப்திகரமான அபிவிர்த்தி காணப்படுகிறது. உங்களுக்கு அதிக முக்கியமான எண்ணிக்கைகளைச் சொல்லும்படி உதவிய ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு வந்தனம் செய்கிறேன்.

இது ஜில்லா கான்பரன்ஸ் என்பதையும், இதில் பொதுப்படையான அரசுமுறைகளைப்பற்றிப் பேசுவது சந்தர்ப்பமற்றதென்பதையும் நான் மறக்கவில்லை. ஆகையால் உங்கள் அனுமதியின்பேரில் இன்று சில அனுபவமான பிரச்னைகளைமாத்திரம் நம் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டு மற்ற பெரியவிஷயங்களை நம்மைக்காட்டிலும் பெரியசபைக்கு விட்டுவைப்போம்.

இந்த தேசத்திலாவது, ஐரோப்பாவிலாவது, கூட்டுத்தொழில் விஷயத்தில் ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தியதில் நிகர்வேறொருவரையும், சொல்லமுடியாத இரண்டாவது ரிஜிஸ்ட்ராரான கனம் ராமச்சந்திர ராவ் அவர்கள் எதிர்பார்த்தபடிக்கன்றி “ கணக்குப் பரிசோதனை மேற்பார்வை ” விஷயமாய் 1914-ம் ௵த்தில் ஏதோ சில யூனியன்களே இந்த ராஜதானியில் பல இடங்களில் திருப்தியாய் வேலைசெய்துக்கொண்டிருந்தன. ஆயினும் சங்கங்களில் பெரும்பாகம் யூனியன் கீழ் அல்லாமல் இலாகா சிப்பந்திகளாலேயே பரிசோதிக்கப்பட்டு மேற்பார்வை இடப்பட்டன. ஆனால் இந்த 4 வருஷங்களுக்குள்ளாக ஒரு பெரிய மாறுதல்—மிகநன்மையான மாறுதல்—ஏற்பட்டிருக்கிறது. அது பல விதங்களிலும் திருப்திகரமானது. அந்தக் காலத்திலே இது விஷயமாய் ஒரு ஆத்திரமான விவாதமிருந்தது. கவர்ன்மெண்டார் மேற்பார்வைச் செலவுகளில் பெரும்பாகம் சங்கங்கள் பொருக்கவேண்டுமென்றார்கள், சங்கங்

களோ இந்த பாரத்தை ராஜாங்கமே பின்வாங்காது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சாதித்தார்கள். இந்த வாதத்தினுடைய முழுவிவரம் எனக்குத்தெரியாது. ஏனெனில் அக்காலம் நான் வெளிதேசத்திலிருந்தேன். ஆனால் இருகட்சியிலும், அனுகூலமான ஓர் வழியை ஏற்படுத்திய அனுபவதந்திர ஞானிகளுக்கு மிக்கவந்தனம். இன்று எங்குபார்த்தாலும் யூனியன்கள் ஏற்பட்டு அவைகளின் அத்தியாச்சர்யமான வேலைகளை நான் காண்கிறேன்.

லோகல் யூனியன்களின் உபயோகத்தைப்பற்றி எங்கும் அபிப்ராய பேதங்களில்லை. ஆனால் சில இடங்களில் "ஜில்லா சூபர்விஷன் கவுன்சில்" விஷயமாய் சில மனத்தாங்கல்கள் காணப்படுகின்றன. உண்மையில் இவைகளில் உள்ள கஷ்டங்களில் சிலவற்றைச் சொல்லுகிறேன். கௌன்சில் வேலைகளை கவனிப்பதற்காக ஒன்று சேர்க்கமுடியாத விகர்ப்பமான மெம்பர்களையுடைய ஒரு சபை கூடப்படுகிறது. கவர்னிங்பாடி மெம்பர்களை அனுப்பி இருக்கும் சங்கங்களின்பேரில் கொஞ்சம் கண்டிப்பான மேற்பார்வை செய்தால் மனஸ்தாபங்களுக்கு இடமுண்டாகிறது. தவிர அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கும் ஜில்லா கவுன்சிலுக்கும் மேற்பார்வைகளில் எதெது சம்மந்தமானதென்கிற விவரம் வரையறுக்கப்படவில்லை. ஜில்லா சூபர்வைஸரையும் அவர்கள் வேலைகளையும் யார் தணிக்கை செய்வதென்று தெரியவில்லை. ஏனெனில் கவர்னிங்பாடி மெம்பர்கள் ஒருவருக்கொருவர் சம்மதமில்லாமல் தூரதேசங்களில் வசிக்கிறார்கள். அடிக்கடி மீட்டிங்கு கூடுவதும் சாத்தியமில்லை. கடித மூலியமாய் அபிப்பிராயங்களை அறிவதோ எப்போதும் அதிருப்திகரமான விஷயம். ஆனால் இந்த கஷ்டங்கள் அந்த ஏற்பாட்டில் உடன்தோன்றியவை. இவைகளுக்கு ஒரு பரிகாரம் ஏற்படுமென நான் நம்புகிறேன். இது தவிர ஒரு புதிய கஷ்டமும் நேருகிறது. அதாவது தற்காலம் யூனியனில் சம்பந்தமில்லாத சங்கங்களில் வருலான வட்டியின்பேரில் ஜில்லாபாங்கிலிருந்து கிடைக்கவேண்டிய பகுதியும் லோகல் யூனியன்களின் வரவில் 4 ல் 1 பாகமும் யூனியனில் சேராத சங்கங்களின் முதலின்பேரில் 100-க்கு எட்டாணா வீதமும் அர்பன் பாங்குகளிலிருந்து வரும் பகுதிகளுமே ஜில்லா கவுன்ஸிலுக்கு வருமானமாயிருக்கிறது. இப்போது சில யூன்யன்கள் ஜில்லாகவுன்சிலின் வேலைகளால் தங்களுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை என்று சொல்லி $\frac{1}{4}$ பாகம் கொடுக்கப் பின்வாங்குகிறார்கள். அவர்களின் இதத்தைமாத்திரம் கவனித்துப் பார்த்தால் அவர்கள் சொல்வது சரியாயிருக்கிறது. "கூட்டுத்தொழிலில் நாம் இதர மேன்பாடான காரணங்களைக் கவனித்து நடத்தவேண்டும். நம் ஜனங்களுக்கு தர்மசிந்தையானது சகஜமாய் உடன்தோன்றியது. ஆதலின் இந்த யூனியன்கள் தாங்கள் சற்றே அனு



கூலமான நிலையை யடைந்த பிறகு தங்கள் ஜில்லாவிலேயே அபிவிர்த்தி குறைவாயிருக்கும் இதர பிரதேசங்களுக்கு கூட்டுத்தொழில் இயக்கத்தைப் பரவச்செய்ய தங்களாலான உதவிபுரிய வேண்டுமெனச்சொல்லி தூண்டமுடியுமாதலால் இது விஷயத்தில் நான் அஞ்சவில்லை. எங்கள் ஜில்லாவில் 160 சங்கங்கள் யூனியன்களில் அணைக்கப்பட்டும் யூனியனில் சேராமல் 36 சங்கங்களும் இருக்கின்றன. உங்கள் ஜில்லாவிலோ யூனியனின்விவகாரங்கள் அதிகப்பட்டிருப்பதுடன், மொத்தம்242 சங்கங்களில் இரண்டுமாத்திரமே யூனியனுக்கு சம்பந்தப்படாதவை. இது அபிவிர்த்திக்கு வேண்டிய ஆரோக்கியமான அறிகுறி. ஒவ்வொரு பிரதம சங்கமும் ஒரு பிரதேச யூனியனின் கீழ் வேலை செய்யவேண்டுமென்பதைத் தாமதப்படுத்தாமல் வெகு சீக்கிரத்திலேயே நிறைவேற்ற நாம் முயல வேண்டும். திரவியசகாயம் செய்யும் சங்கங்களின் வேலை அக்காலம் வெகு சுலபமாகும். பம்பாய் ராஜதானியில் உத்திரவாதமுள்ள யூனியன்களிருப்பது பம்பாய் ராஜதானி பாங்கியை யந்திரவேலையாக்கிவிட்டது. யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களுக்கு உடனே கடன்கள் கொடுக்கபடுவது சங்கங்களுக்குத் தெரியும். யந்திரம்போன்ற இலாகா கணக்குப் பரிசோதனையைக்காட்டிலும், தம் ஜனங்களின் மேற்பார்வையில் அவர்களுக்குண்டாயிருக்கும் நம்பிக்கை பின்னமற்றது. ஐரோப்பாவில் இதரர்களால் கணக்குப் பரிசோதனை செய்யப்படுகிறதேயொழிய ரிஜிஸ்ட்ரார் இலாகா சிப்பந்திகளால் கணக்குப் பரிசோதனை என்பதே கிடையாது.

திரவிய சகாய விஷயமாய் நான் சொல்லும் பிரேரணைகளை இங்கும், மற்றவிடங்களிலும், பலர் அங்கீகரிக்கமாட்டார்களென்றும் நான் அஞ்சுகிறேன். என்கொள்கையாவது, பல உத்திரவாதமுள்ள யூனியன்களும் அவைகளுக்கெல்லாம் முடிவில் ஒரு தலைமை பாங்கியுமே. ஆனால் மத்தியஸ்தமாக இருதிறத்தாரும் கலந்த ஒரு ஸென்ட்ரல் சங்கம்தான் விசேஷமானது என்று பொறுப்பான ஜனங்கள் நினைத்தார்கள். ஏனெனில் பிரமுகர்களைச் சேர்ப்பதால் அந்த ஸ்தாபனத்துக்கு ஒரு கௌரவமுண்டாகி வேண்டிய திரவியம் கிடைக்கிறதுடன் ஜில்லாவிலுள்ள தலைவர்களிலனேகர்களுடைய உயர்தர ஞானத்தின் உதவியும் கிடைக்கிறதென்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தை ஐக்கிய கமிட்டியாரும் ஆமோதித்திருக்கிறார்கள். இது சாஸ்திர தர்க்கவாத ஸ்தானமல்லவாதலின், இந்த அபிப்பிராயத்தை நான் மறுக்கவிரும்பவில்லை. ஆனால் இது தற்கால சாந்தியாகச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடென்றும் நாளடைவில் தங்கள் காரியங்களை சங்கங்களே பார்த்துக்கொள்ள விடப்படுமென்றும் அறிவதால் இது திருப்திகரமாயிருக்கிறது. தவிர, தலைமை பாங்

னது ராஜதானியிலுள்ள திரவிய சகாயம் செய்யும் ஜில்லாபாங்கு முதலியவைகளை மாத்திரம் தான் மெம்பர்களாய் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருப்பதும் சந்தோஷகரமானது. இங்கேயாவது பிரமுகர்களைச் சேர்க்காமல் விடுவது மிக நல்லது. இக்கொள்கையையறிந்தே, மதராஸ் ஸென்ட்ரல் பாங்காரும் மாற்றிக்கொள்ள சம்மதித்ததற்கு சந்தோஷிக்கிறேன். ஆனல் நாம் இப்போது போகிற நிதானத்தில் நாம் கோரும் ஸ்தானத்தையடைய வெகு காலம் செல்லும். ஆதலால் இந்த ராஜதானியிலுள்ள எல்லா ஐக்யர்களும் இந்த மறுரூபம் சீக்கிரம் உண்டாகும்படி துரிதப்படுத்துவதைக் கவனிப்பது அவசியம்.

தற்காலம், எங்கள் ஜில்லா பாங்கியில் எனக்கு சம்பந்தமிருந்த சொல்ப காலத்தில் கூட திரவிய விஷயமாய் சில கஷ்டங்கள் நேர்ந்தன. இவைகள் எங்கும் பொதுவானவைகளே யொழிய என் ஜில்லாவுக்குமாத்திரம் தனியுரிமையுடையதல்ல. யுத்தத்தினலும் திரவிய மின்மையாலும் பணம் கிடைப்பது அரிதாயிருக்கிறது. யூனியன்கள் அதிகமாய் ஏற்பட்டு விசேஷ ஊக்கம் காட்டுவதால் சங்கங்களுக்கும் இக்காலத்தில்தான் கடன்கள் அதிகமாய் தேவையாயிருக்கிறது. பிரதேச யூனியன்களிருப்பதால் முன் போலல்லாமல் இப்போது கடன்கள் வெகு சீக்கிரமாய் உத்திரவு செய்யப்படுகின்றன. இவையிப்படி நிற்க, பத்து வருஷமாய் வேலைசெய்த சங்கங்களில் கூட சேமிப்புத்திரவியம் (டிபாசிட்) கொஞ்சம் காணப்படாமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்கது.

தவிர ஜில்லாபாங்க் ஒன்றற்கொன்று கடன் கொடுத்துக் கொள்ளும் வழக்கமும் காணப்படுகிறது. கடன்வாங்கும் ஜில்லாபாங்கி கடன் கொடுக்கும் பாங்கிக்கு கெடுப்படி கொடுக்கவும் அசக்தமாய் விடுகிறது. இந்த இடர்களை நிவர்த்திக்கவும், சாஸ்திர ரீதியாயும் வியாபார ஒழுங்காயும் சீர்திருத்தம் செய்யவும், வேண்டியசாதனம், நேர்மையான தலைமை பாங்குதான் என்று எனக்கு தோன்றுகிறது. அதாவது அப்படிப்பட்ட பாங்கியில் இதரர்கள் மெம்பரான போதிலும் ஜில்லா பாங்கிகளே அதிகாரஸ்தர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மதராஸ் ஸென்ட்ரல் அர்பன்பாங்கி ஒரு ஐக்கியமற்ற சங்கமென்றும் லாபக்கடையெனவும் முழங்கும் தூஷணைகள் செவிபடாது மறையும்.

ரிஜிஸ்ட்ரார் ஸ்தானத்தின் சம்பிரதாயத்தை நழுவவிடாது காப்பாற்றி வருபவரும், இன்று இங்கு வீற்றிருப்பவருமான தற்கால ரிஜிஸ்ட்ரார் அவர்கள் இன்னும் சில வாரங்களில் ஜில்லாபாங்குகளின் கூட்டம் ஒன்று சேர்க்கப்போகிருரென அறிய மிகவும் சந்தோஷிக்கிறேன். அக்காலம் மேற்கூறிய சிக்கலான விஷயங்கள் தீர்மானிக்கப் படுமென நம்புகிறேன். ஐக்யர்களுக்கும் பொது ஜனங்களுக்கும், நம்பிக்கை யன்



டாக்கி நாணயத்திலும் வருமானத்திலும், பம்பாய், ராஜதானியைப் போன்ற ஒருபலத்த செல்வம் நிறைந்த ஸ்தாபனம் நமது ராஜதானியில் இந்த இயக்கத்தில் அவசியம் தேவையாயிருக்கிறது. இதேமாதிரி யோசனையில் ஏற்படுத்திய வங்காள ராஜதானிச்சங்கமும் கடந்த பிப்ரவரியீ பதிவு செய்யப்பட்டது.

நீங்கள், ஜில்லா பாங்கிகளென்றே பாங்கிங்யூனியனென்றே சொல்லும் ஸென்ட்ரல் பாங்கிகளைப்பற்றி உங்களுக்கு சிலவிஷயம் சொல்ல விரும்புகிறேன். இப்போது இவைகள், அவைகளின் பிரதேசங்களில் டிபாசிட்டுகளைச் சேர்த்து அவற்றிற்கு 6 அல்லது 6½ வீதப்படி கொடுக்கிறது. உதவி செய்யக்கூடிய விசேஷதனவந்தர்களில்லாத சேலம் வடாற்காடுபோன்ற ஜில்லாக்களில் உபயோகிக்கும் திரவியம் விசேஷமாய் இதர ஜில்லா பாங்கிகளிலிருந்து கடனக வாங்கப்படுகிறது. இதற்கு கடன் வாங்கும் பாங்கிகள் 7 வீதம் வட்டி கொடுக்கிறது. இது தவிர கால் வீதம் மேற்பார்வைநிதிக்கு இவைகள் கொடுப்பதால், சிப்பந்திச் செலவு நஷ்டமாகக்கூடிய கடன், இவைகளுக்காக இவர்களுக்கு மீதிநிற்பது கால் வட்டி வீதமே. நாம் இப்போது யோசிக்க வேண்டிய விஷயமென்னவெனின், யாராவது சமர்த்தனை ஒருபாங்கர் இந்த வரம்புகளுக்குள் பட்டு லாவாதேவி செய்வானவென்பது தான். இதுவன்றியும் இந்த பாங்கிகள் வாங்கும் டிபாசிட்டுகள் சாதாரணமாய் 12 மாதம் தவணையுள்ளது. ஆனல் இவைகள் பிரதம சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களின் வாய்தாவோ வெகு நீண்ட காலங்களுக்காகயிருக்கிறது. ஆகையால் உண்மையில் இந்தக் கைம்முதல் (சீக்கிரம் திரும்பாது) சிறைப்படுகிறது. ஜில்லா பாங்கிகள் வைத்திருக்கும் பத்திரங்கள் வேண்டியபோது பணமாக மாற்றக் கூடியவைகளல்லவாதலின் தொழிலறிந்த எந்தபாங்கும் அவைகளை ஏற்றுக் கொள்ளாதென்பதும் யாருமறிந்த விஷயம். போதாக்குறைக்கு ஐக்கிய கமிட்டியார் சங்கங்களில் வேண்டியவளவு தயாராயிருக்கும்படி ரொக்கக்கையிருப்பு இருக்கவேண்டுமென்று சிபார்சு செய்து விட்டார்கள். சங்கங்களின் எண்ணிக்கையோ அதிகமாகிவருகிறது. பிரதேச யூனியன்கள் எங்கும் ஏற்படுத்தப்பட்டால், சங்கங்கள் இன்னும் விசேஷமாய் வளர்ந்துவிடும். வேண்டிய திரவியத்துக்கோவென்றல், இது வரையில் நாம் கொடுத்த திட்டங்களுக்குமேல் கவரக்கூடிய மாதிரி வட்டிவீதம் ஏற்படுத்தினலொழிய ஏற்கனவே வசூலித்திருக்கும் பாகங்களில் டிபாசிட்டு கிடைப்பதரிது. ஆகவே அதிக திரவியம் கிடைக்கவேண்டுமானல், டிபாசிட்டர்களை இழுக்கக் கூடிய (வட்டி) திட்டங்கள் ஏற்படுத்தவேண்டியதுதான் இதற்கு மார்க்கமென்று தோன்றுகிறது. கொஞ்சகாலமாய் பணம் கிடைப்பதே அரிதாய் விட்டதாத

லின் பணத்தின் அருமைக்கேற்றபடி நம்வீதத்தையும் நிரவிக் கொள்ள வேண்டும். வங்காள ராஜதானி ஐக்கியசங்கம் டிபாசிட்டுகளுக்கு 7 வட்டி வரையில் கொடுக்கிறது. பிரதமசங்கங்களுக்குக் கொடுக்கும் கடனுக்கு இது வரையில்போடும் வட்டியைக் காட்டிலும் அதிகப் படுத்த வேண்டு மென்று இதனாலேற்படுகிறது. ஏழு வட்டிக்கு மேல் விதிக்காத பம்பாய் ஸென்டரல் பாங்காரும் யுத்தத்துக்குப்பிறகு எல்லாவற்றிற்கும் 7½ யாக உயர்த்தி விட்டார்கள். இப்படியே பிரதமசங்கங்களும் கடன்வாங்குகிற வர்களிடம் இப்போது வாங்கும் வட்டி வீதத்தைவிட கொஞ்சம் அதிக மாகவே விதிக்க வேண்டிவரும். இப்போது கொடுப்பதைவிட அதிக மாய் செலுத்த யாரும் விரும்பமாட்டார்களாதலின் பிரதமத்தில் சில ருக்கு அதிருப்தி யுண்டாகலாம். ஆனால் ஸென்டரல் சங்கங்களில், கிராமசங்கங்களெல்லாம் பங்குக்காரரானால், இப்படி உயர்ந்த வீதாசாரம் விதிப்பதில் ஆட்சேபிக்க இடமிராது. கடன்வாங்கும் மெம்பர்களுக்கு இப்படிக் கிடைக்கும் அதிக லாபத்தை வித்தியாபிவிருத்திக்காவது இதர தர்மங்களுக்காவது உபயோகிக்கலாம். அல்லது கெடுத்தவருது பணம் செலுத்தும் மெம்பர்களுக்கு எதிர்வட்டியாகத் தள்ளிக்கொடுக்கலாம். தற்காலம் சில ஸென்ட்ரல் பாங்குகளுக்கு சங்கங்களின் ரிஸர்வுபண்டு களிருப்பதாலும், ராஜதானி பாங்கியிலிருந்து அதிகக்கடன் கொடுப்பதாலு மே லாபம் கிடைக்கிறது. இவையிரண்டும் எந்த நிமிஷத்திலும் வாபீசு வாங்கப்படலாம். ஐக்யக்கமிட்டியார் அனுபவ விரோதமானவும், ஐக்ய சங்கங்களில் சேரும் ஜனங்களின் நிலைமையை யோசித்தால் மிக அனாவசியமானதுமான ரொக்க கையிருப்பு சிபார்சு செய்திருக் கிறபடி யேற்படாமல் போனாலும் ஏதோவேண்டியவளவு இருப்பாவது வைப்பது சங்கங்களில் வட்டிவீதத்தை உயர்த்தினாலொழிய அசாத்திய மான காரியம். இவ்வபிப்பிராயத்தில் கூட்டுத்தொழிலில் பெரிய ஆதார கர்த்தாவான மிஸ்டர் வூல்ப் பம்பாய் கோவாபரடிவ் குவார்டர்; லியில்கீழ் கண்டபடி எழுதியிருக்கிறார்.

“ஸென்ட்ரல் பாங்குகள் எல்லா. சந்தர்பத்திலும், உண்மையான ஐக்கிய பாங்காயிருக்கவேண்டும். அது பார்வைக்கு ஐக்யசங்கமாகலாம், ஆனால் உள்ளபடியும் (ஐக்கியம்) இருக்கவேண்டியதவசியம். அதின் முயற்சியில் ஐக்யவிர்த்திக்குவேண்டிய அத்யாவசியங்களை யறிந்து ஐக்ய சாதனங்களை உண்மையில் கையாளவேண்டும். ஆனால் தொழில் முறை யில் அது வியாபார பாங்கிகளுடன் நிலையிலிருந்து வியாபாரவழியில் வேலைசெய்யக்கூடிய பாங்காயிருக்கவேண்டும். நிச்சயமாய் ஐக்கிய லாவா தேவியை தொழில்முறையாய் மாற்றும் ஒரு சாதனமாகவேண்டும். இதற்கேற்ப இதின் உத்தியோகஸ்தர்கள் கைதேர்ந்த பாங்கர்களானால், பாங்கியின்வேலை மேன்பாடாய் நடைபெறும். ஐரோப்பாவில் ஸென் டட்ரல் பாங்கானது ஐக்யசங்கமாயிருப்பதைவிடக் கூட்டுவியாபார கம் பெனியாக விருப்பது மேலென்று நான் நினைக்கிறேன்.”



ஆதலின் என்பிரேரேபணையில் மற்றொன்றென்னவெனில் இராஜாங்க உதவியையுடைய ஒரு இராஜதானி பாங்க் ஸ்தாபிப்பதுதான். ஆனால் அந்த பெரிய ஆதாரகர்த்தா பின்னும் தெரிவிப்பதாவது :—

“நான் இராஜாங்க உத்தரவாதத்தை விரும்பவில்லை. ஏனெனில் அது ஐக்ய ஊக்கத்தைப் பாழாக்கக்கூடிய ஒரு தொழிலுக்கு நன்கொடை கொடுப்பது போலாகும். ஐக்யசங்கங்களிலே நடைபெறும் தொழில் முறையானது முக்கியமாய் சுய உதவியாலேயே நடக்கவேண்டும்.”

கூட்டுத்தொழிலில் கடன்தவிர இதரவகைகளைப்பற்றி இப்போது நாம் யோசித்தால் நடந்த நான்கு வருஷங்களாய் இதில் அபிவிருத்தி விசேஷமிருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. சிலமனோகரமான சோதனைகள் செய்யப்பட்டபோதிலும் இந்த மார்க்கத்தில் விசேஷ மாறுதல்களுண்டா யிருப்பதாய்ச் சொல்லமுடியாது. உதாரணமாக, திருவண்ணாமலை சக் கிலியர் சங்கம் ஒன்று கவனிக்கக்கூடிய வெற்றியாகும். அப்படியே 1916-17-ம் வருஷத்திய ரிஜிஸ்ட்ரார் ரிபோர்ட்டிலும் இதர திருப்திகர மான விஷயங்கள் காணப்படுகின்றன. ஆனால் இப்போது நமக்கு சீக் கிரத்தில் தேவையான பாகம், நமக்கு வேண்டியவைகளைக் கூட்டாக வாங்குவதும் நம் சரக்குகளை கூட்டாய் விற்பதுமான சங்கங்கள்தான். ஒவ்வொரு குடித்தனக்காரனும் தன் மாசூல்களை ஒரு ஐக்யசங்கமூல மாகவே விற்கவும், தனக்கு வேண்டிய விதையோ! எருவோ உணவுப் பொருள்களோ எல்லாவற்றையும், ஒரு கூட்டுவியாபார ஐக்ய சங்கமூல மாகவே வாங்கவும் ஏற்பட்டால் அக்காலத்தில்தான் நாம் இந்த வகையில் விருத்தியடைந்திருப்பதாய்ச் சொல்லலாம். கடன்கொடுக்கும் சங்கத்தை நடத்துவதைவிட அப்படிப்பட்ட ஒரு சங்கம் நடத்துவது எவ்வளவோ கஷ்டம் என்கிற விஷயம் எனக்குத்தெரியும். தவிர மெம்பர்களுக்குள் அதிக நம்பிக்கையும் தேவை. அப்படிப்பட்ட ஒரு சங்கத்தை திருப்தி கரமாய் நடத்த தன் மனதை பூராவும் செலுத்தக்கூடிய மிஸ்டர், சேஷா சலய்யர் போன்ற ஒரு உத்தமமான ஐக்கியஸ்தர் இயக்கத்தின் ஆரம்பத்தி லாவது அவசியம் தேவையாயிருக்கிறது. பெரிய விஸ்தீரணமுள்ள நிலங் களும் அவைகளில் உற்பத்தியாக ஓரேவிதமான மாசூலில்லாமல் நிலங் கள் சிறுதாக்குகளாகச் சிதறுண்டு அவைகளினின்றும் பல ரகமான பல பாகுபாடுள்ளமாசூல்கள் உற்பத்தியாவது இத்தகையமுயற்சியில் இன்னொரு இடைஞ்சல். தவிர, அயர்லாந்தில் ஐக்ய இயக்கத்தில் முக்கிய பாகமாகிய பாற்சாலைத்தொழில், தென் இந்தியாவில் காணப்படவேயில்லை. கூட்டு

வியாபாரம், கூட்டுவிற்பனையை ஏற்படுத்துவதில் உள்ள சில கஷ்டங்களை நான் சொன்னதாலேயே அது அசாத்தியமான விஷயமென்று நினைத்து பயந்தோடிப் போகவேண்டுமென்பது என்னெண்ணமல்ல. ஒரு விதைச் சங்கமானது,ஒற்றுமை ஞானத்தைஉயர்த்தக்கூடியஇடைவிடாததொழில் நடத்தாது, ஏனெனில் அது விதைச்சங்கமாய் மாத்திரமிருந்தால், ஒரே ஒரு தொழிலுக்காக மாத்திரம் வரையறுத்து சேர்க்கப் பட்டிருப்பதால் வருஷமுழுவதும் மூடப்பட்டு உயிரற்றிருக்கும். ஆனால் அப்படிப்பட்ட தொழிலைஇப்போதைய நாணயச்சங்கங்கள் தங்கள்கடன்களுடன்சேர்த்து ஏன் நடத்தக் கூடாதென எனக்குக்காரணம் தோன்றவில்லை. சில சங்கங்களில் இவைகள் ஏற்கனவே திருப்திகரமாய் நடத்தப்பட்டிருக்கின்றன வென்பது நிரம்ப சந்தோஷத்தைத் தருகிறது. விலையுயர்ந்த விவசாயக் கருவிகளைப் பொதுவில் தருவித்து சங்கங்கள் உபயோகித்துப் பார்க்கலாம். சரக்குகள் பொதுவில் விற்பனைசெய்வதில்கூட, நம்பிக்கையான விதையினால் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியும், வெல்லம், நிலக்கடலை முதலிய மாருல்களும், மொத்த விற்பனைக்கு ஆரம்பம்செய்யத்தகுந்தவைகள். 1916-17-ம் வருஷத்தில் பம்பாயில் எட்டுலக்ஷம் ராத்தல் வெல்லம் லாபகரமான விலைக்கு விற்றிருக்கிறார்கள். இதுதவிர இதில் இன்னொரு முக்கியமான நன்மையும் உண்டு. ஐக்கிய முறையில் கூட்டு விற்பனை யானது பண்டங்களில் கலப்புங் கலந்து பாழாக்குவதை அடியோடு தடைசெய்கிறது. (இன்னும் வரும்.)

---

## கோயமுத்தூரில் கோவாபரேஷன்

கோயமுத்தூர் ஜில்லாவின் சமீபரிபோர்டின் சாராம்சம், கள்ளிக்கோட்டை செக்ஷன் கோவாபரேடிவ்சொஸைடிகளின் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரான ம-ள-ள-ஸ்ரீ பி. கே. குன்ஹுன்னி மேனன் அவர்களால் கீழ்காட்டியபடி தயாரிக்கப்பட்டிருப்பதைப் படிக்க நேயர்களுக்கு திருப்தியா யிருக்கும்:—

1. பிரஸ்தாப வருஷத்தில் 24 கிராம நாணயச் சங்கங்களும் 2 யூனியன்களும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. சென்ற வருஷத்தில் 19 சங்கங்கள் தான் ஏற்பட்டன. 1918ளு ஜூன்மீ 30-ம் தேதியில் முடிவு பெறாத மூன்று மனுக்கள் பட்டுவாடாகாம லிருந்தன. வருஷக் கடைசியிலிருந்த மொத்த சொஸைடிகள் 140. முன்னேற்றம் திதானமாய் விருத்தியாகி வந்தாலும் ஜில்லாவின் விஸ்தீரணத்திற்கும் முக்கியத்திற்கும் தக்கபடி ரிஜிஸ்டரான சங்கங்களின் எண்ணிக்கை போதுமானதன்று. அநேக பிரதேசங்களை இக்கிளர்ச்சி இன்னம் தொடக்கூடவில்லை.



ஆகையால் இது விருத்தியடைவதற்கு ஏராளமாக இடமிருக்கிறது. கோவாபரேடிவ் கிளர்ச்சி இந்த ஜில்லாவில் சென்ற 10 வருஷங்களாக இருந்தும் போதுமான அளவு உத்தியோகப் பற்றில்லாத வேலைக்காரர்களைப் பெறவில்லை. விருத்தி மெதுவாக ஆவதற்கு இன்னொரு காரணம், பொது ஜனங்களுள் படிப்பில்லாமையே. விஜய மங்கலம் பிரதேசத்தைத் தவிர இதர இடங்களில் நடந்திருக்கிற வேலைகளெல்லாம் விசேஷமாய் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலேயே நடந்திருக்கின்றன. இன்னம் அதிக விஸ்தாரமாக்குவதற்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் அதிகமாய் நியமனமாக வேண்டும்.

2. இந்த 140 சொஸைடிகளும் ஜில்லாவிலுள்ள 10 தாலூக்காக்களுள் 8 தாலூக்காக்களில் கீழ்க்கண்டபடி வகுக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஈரோடு 75, (2) பல்லடம் 22, (3) தாராபுரம் 2, (4) உடுமலைபேட்டை 6, (5) கோயமுத்தூர் 15, (6) பவானி 4, (7) கொபிசெட்டிபாளையம் 3, (8) அவனாசி 13, (9) (10) பொள்ளாச்சி, கொள்ளேகால் இவைகளில் இல்லை.

3. எல்லாச் சங்கங்களிலுமுள்ள மெம்பர்களின் தொகை சென்ற வருஷக்கடைசியில் 10,121 ஆக இருந்தது. இவ்வருஷக் கடைசியில் 10,712 ஆக அதிகப்பட்டிருக்கிறது. இவைகளின் பகுபாடுவருமாறு :—

பிராமணர்கள் 1645, பிராமணரல்லாத இந்துக்கள் 7603, கிறிஸ்தவர்கள் 517, மகமதியர்கள் 175, பஞ்சமர்கள் 736, இதரஜாதி 36, ஒவ்வொரு சங்கத்திற்கும் சராசரியில் 76 மெம்பர்கள் என்று ஏற்படுகிறது. எல்லா சங்கங்களின் தொழில் தனங்களும் சேர்ந்து ரூ 12,01,266 லிருந்து ரூ. 13,03,537 ஆகவும் கொடுபட்டிருக்கும் பங்குத் தொகை ரூ. 1,61,793-லிருந்து ரூ. 1,75,578 ஆகவும் உயர்ந்திருக்கின்றன.

4. வருஷக்கடைசியில் அந்த 140 சொஸைடிகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸென்ட்ரல் சொஸைடி | ... | 1 |
| 2. | வரையறுக்கப்படாத விவசாய நாணயச்சங்கங்கள். | | 124 |
| 3. | விவசாயமில்லாத நாணயச்சங்கங்கள் | ... | 11 |
| 4. | ஷை கிரயவிக்கிரய சங்கங்கள் | ... | 2 |
| 5. | ஷை இதரவித (கட்டிட) சங்கங்கள்... | | 2 |
| | மொத்தம் | ... | 140 |

இத்துடன் 6 சூபர்வைசிங் யூனியன்கள் சேர்க்கப்படவில்லை. அதில் 4 வருஷாரம்பத்தில் வேலைசெய்து கொண்டிருந்தன. அவற்றுடன் பிரஸ்தாப வருஷத்தில் 2 சேர்க்கப்பட்டன.

5. சென்ட்ரல் பாங்க்:—இந்த ஜில்லாவிலுள்ள எல்லாச் சங்கங்களுக்கும் கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கி பொருளுதவி செய்து கொண்டே வருகிறது. இதர ஸெண்ட்ரல் பாங்கிகளைப்போல் இதுவும் அதன்கடன்களின் பேரில் 100-க்கு 7½ வீதம் வட்டி விதிக்கிறது. டிஸ்ட்ரிக்ட் பாங்கியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் சங்கங்களின் சங்கியை முன்வருஷத்தைப் போலத்தான். அதாவது 16. பங்கெடுத்துக் கொண்டிருக்கும் தனிமெம்பர்களின் சங்கியை முன்வருஷத்தைக்காட்டிலும் ஒன்று குறைவு அதாவது 158.

வருஷக்கடையில் 'கொடுபட்டிருக்கும் பங்குத்தொகையும்' 'தொழில் தனமும்' முறையே ரூ. 79,700-ம் ரூ. 637,886-ம் ஆகவிருந்தன. சென்ற வருஷத்திய இவ்வினத்தொகைகள் ரூ. 77520; ரூ. 6,31,254. போதுமான டிபாஸிட்டுத் தொகைகள் பாங்கிற்குச் சேர்ந்துகொண்டிருந்ததினால் ஜனங்களுக்கு அதில் நல்ல நம்பிக்கை ஏற்பட்டிருத்தல் தெரிய வருகிறது. சென்ட்ரல் பாங்கியின் தண்டல், வசூல், நிலுவை, இவைகளைப் பொதுக்குறிப்பின் இரண்டாவது ஸ்டேட்மெண்டில் காட்டியிருக்கிறது. முதலிலாவது வட்டியிலாவது வசூலாகாத பாக்கிகள் சென்ற வருஷத்தில் முறையே 100-க்கு ஒன்றும் மூன்றுமாக இருந்தன. இவ்வருஷம் ஒன்றுமே இல்லாமலிருப்பது சிலாகிக்கத்தக்கதே. ஆனால் நீலகிரி ஜில்லாவிலுள்ள சாலமூர் சொஸைடியிலிருந்து மாத்திரம் முதலுக்காக வரவேண்டிய பாக்கி ரூ. 24 இருக்கிறது. பொருளுதவி பெறும் சொஸைடிகளிடம் பாங்கி காட்டும் கருணையும் அதனால் ஏற்பட்டிருக்கும் பரஸ்பர உறவும் உண்மையில் சிலாகிக்கத் தக்கதே.

இவ்வருஷம் பாங்கி அடைந்த நிகரலாபம் ரூ. 13,083. சென்ற வருஷ லாபம் ரூ. 11,936 ஆக இருந்தது. வருஷக்கடைசித் தேதியிலிருந்த பாங்கியின் ரிஷர்வ்நிதி ரூ. 10,970. பாங்கியின் ஆளுகை வெகு திருப்திகரம். செக்ரிடேரி குதூஹலத்துடன்வேலை செய்திருப்பது மிகவும் சிலாகிக்கத் தகுந்ததே.

6. விவசாயச் சங்கங்கள்:— இச்சங்கங்களின் இயக்கங்கள்முக்கியமாய்நாணயவேலைக்குள் அடங்கிவிட்டன. எல்லா விவசாயச் சங்கங்களின் மொத்த தொழில்தனம் வருஷக்கடைசியில் ரூ. 415,644. முந்திய வருஷத்திலோ இத்தொகை ரூ. 425,145. ஆக இருந்தது. ஆகவே ரூ. 9,501 குறைந்து விட்டது. இக்குறைவுக்குக் காரணம் இவ்வருஷம் விவசாயிகளின் நிலைமை அதிக சுபிக்ஷமாயிருக்கலாம். ஆனால் சங்கங்களில் மெம்பர்களின் தொகையை அதிகப்படுத்தப் பிரியப்படாமையே முக்கிய காரணமென்பது என் அபிப்பிராயம்.



இவ்வருஷம் 24 புது சொஸைடிகள் சேர்ந்தும் கூட சங்கங்களில் சேர்ந்திருக்கும் மெம்பர்களின் தொகை 591. இது மிகவும் குறைவே. தகுந்த மனிதர்களை மெம்பர்களாகச் சேர்க்கவேண்டிய அவசியம் வற்புறுத்தப்படும். இச்சங்கங்களின் கொடுப்பட்ட பங்குத்தொகை ரூ. 32,986-லிருந்து ரூ. 33,364 ஆகவும் மெம்பர்களின் டிபாசிட்டு ரூ. 8,276 லிருந்து ரூ. 11,301 ஆகவும் உயர்ந்திருக்கிறது. சொஸைடி அடைந்த நிகரலாபம் ரூ. 23,012. 1918-ம் வருஷம் ஜூன்மாதம் 30-ம் தேதியுடன் முடிந்த 5 வருஷத்திய தண்டல், வசூல், நிலுவைக்குறிப்புகளினால், சொற்ப சங்கங்களைத்தவிர விசேஷமாய் எல்லாச் சங்கங்களும் ஷை விஷயங்களில் வெகு ஒழுங்காய் நடந்து கொண்டிருக்கின்றனவென்று தெரிகிறது. பிரஸ்தாப வருஷத்தில், முதலின் பாக்கி 100-க்கு 24 லிருந்து 17 ஆகவும் வட்டியின்பாக்கி 100-க்கு 19 லிருந்து 17 ஆகவும் குறைந்திருப்பதினால் லோகல் சூபர்வைசிங் யூனியன்கள், அதிலும் முக்கியமாய் ஈரோடு, திருமங்கலம் யூனியன்கள் வெகு திறமாக வேலைசெய்திருக்கின்றனவென்று தெரிகிறது. (முதலின்பாக்கி 1915-16-ல் 100-க்கு 30 ஆகவிருந்து 1916-17-ல் 100-க்கு 24 ஆகக்குறைந்திருந்தது). இந்த நிலுவைகள்கூட இடைவிடா மேன்பார்வை யில்லாததினிமித்தம் 5, 6, படுக்காளி சொஸைடிகளினால் ஏற்பட்டது. அப்படிப்பட்ட பிராந்தியங்களில் இவ்வருஷம் லோகல் யூனியன்களை ஸ்தாபிப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனால் அவ்விடத்திய நிலைமைகள் விருத்தியாகுமென்று நம்பலாம்.

**கடன்கள்.**—ரூ. 1,55,265 மெம்பர்களுக்குள் 1504 கடன்களாகக் கொடுக்கப்பட்டன. அதில் சுமார் பாதி பழைய கடன்களின் நிவர்த்திக்காகவும், கால்நடைகள் வாங்குவதற்காக ரூ. 26,270-ம், வியாபாரத்திற்காக கடன் கொடுத்தது ரூ. 20486-ம் ஆக இப்படி விநியோகமாயிற்று.

வியாபாரத்திற்காகக் கொடுத்த கடன் குறைவாகவிருப்பது திருப்திகரமாயிருக்கிறது. பழையகடன்களைத் தீர்ப்பதற்காக வாங்கின கடன்கள் அதிகம்தான். ஆனால் இது இந்த ஜில்லாவில் மிக சௌகரியமுண்டாக்கியிருப்பது அனுபவ சித்தம். பழைய சங்கங்களின் மெம்பர்களெல்லாரும் முந்தியகடன் பந்தங்கலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். இச்சங்கங்களின் உதவி யில்லாவிட்டால் இன்னம் அவர்கள் கடன் சுமையினால் தள்ளாடுவார்கள். அம்படிப்பட்ட சங்கங்களில் இனிமேல் சாதாரணமாய் சொற்பகாலக்கடன்களே கொடுக்கப்படும்.

உற்பத்தி விஷயங்களுக்காக கொடுத்திருக்கிறகடன்கள் ரூ. 8,4411 என்றும் இதர விஷயங்களில் கொடுத்த கடன்கள் ரூ. 2654 என்றும் கீழ்க்கண்ட ஸ்டேட்மெண்டினால் தெரிகிறது:—

| | இனங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விவசாயம் ... ... | 6,570 |
| 2. | கால்நடைகள் வாங்கினது ... | 26,270 |
| 3. | வாயிதா ... ... | 3,421 |
| 4. | நிலச்சீர்திருத்தம் ... ... | 9,045 |
| 5. | கருவிகள் ... ... | 50 |
| 6. | வியாபாரம் ... ... | 20,486 |
| 7. | படிப்பு ... ... | 125 |
| 8. | வீடுகட்டுதல் ... ... | 8,797 |
| 9. | நாட்டுவண்டிகள் வாங்க ... | 1,130 |
| 10. | நிலம்வாங்க ... ... | 34,90 |
| 11. | உணவுப்பொருள் முதலியனவாங்க. | 5,027 |
| 12. | பழையகடன் அடைக்க ... | 68,200 |
| 13. | கலியாணம் ... ... | 2,314 |
| 14. | இதர சடங்குகள் ... ... | 240 |
| 15. | வியாஜ்ய விவகாரங்கள் ... | 100 |
| | மொத்தம் ... | 1,55,265 |

இக்கடன்களைத் திருப்பிக்கொடுக்கும் கால நிர்ணயங்கள் கீழே வரையறுக்சப் பட்டிருக்கின்றன:—

| | இனங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| ஒருவருஷத்திற்கு மேற்படாதகடன்கள் | 1128 | 90,670 |
| ஒருவருஷத்திற்கு மேற்பட்டது ஆனால் 2 வருஷங்களுக்கு மேர்படாதது ... | 67 | 7,310 |
| 2 வருஷங்களுக்கு மேற்பட்டது ஆனால் 3 வருஷங்களுக்கு மேற்படாதது. ... | 309 | 57,285 |

நாணய முறையல்லாத விவசாயசங்கங்களின் வேலைகள் :—

மிஸ்டர் கே. எம். சின்னரங்கய்ய கௌண்டர் அவர்களை பிரசிடெண்டாகக்கொண்டு நடைபெறும் விஜயமங்கலம் கோவாபரேடிவ்



யூனியன் கம்போடியாப் பருத்திக்கொட்டையை மொத்தமாக வாங்கி தன் பார்வையிலிருக்கும் சங்கங்களுக்கு விற்பனைக்காகப் பகிர்ந்து கொடுத்து வழி காட்டியிருக்கிறது. விவசாய இலாகாவிலிருந்து 1000 மணங்கு பருத்திக்கொட்டையை நல்ல சரக்காக மணங்கு ஒன்றுக்கு 13½ அணா வீதம் வாங்கி சங்கங்களுக்குள் பகிர்ந்து கொடுத்திருக்கிறது. வெளிகளில் இச்சரக்குகளின் விலை ரூ1-4-0. சாக்கும் வெகுதிறமென்று மெம்பர்கள் கொண்டாடுகிறார்கள். இவ்வியாபாரத்தினால் மெம்பர்களுக்கு முதல்தரமான சரக்கு சகாய விலைக்குக்கிடைப்பதால் இவ்வருஷம் அவ்வியாபாரம் அதிக பலப்படும் என்பதில் சமுசயமில்லை. இம்மாதிரி காரமடை யூனியனும் செய்து தங்கள் மெம்பர்களுக்குள் சில்லரையில் 300 மணங்குவரையில் விற்றன.

அப்பச்சிமார் மடத்துப்பாளையத்தில் நடைபெற்ற யூனியன் கான்பரன்ஸ்காலத்தில் விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர் பச்சை எருக்கள், மீன் உறம் இவைகளின் உபயோகத்தை பற்றிச்சொன்ன வுடன் மிஸ்டர் சின்னரங்கய்ய கௌண்டர் அதைப்பரீக்ஷித்துப் பார்க்கவிரும்பி இருவகை எருக்களையும் உடனே தருவித்து மெம்பர்களுக்குள் விநியோகம் செய்துவிட்டார்.

கூட்டாக சாமான்களை வாங்கிவிற்கும் ஏற்பாட்டில் அதிகவேலை நடக்கவில்லை. திருப்பூரில் பருத்தியைக்கூட்டாக விற்க ஒரு டிப்போ ஏற்படுத்தமுயற்சித்து அது ஆலோசனையிலிருக்கிறது. இதரவிவசாயவிளை பொருள்களைக் கூட்டாக வாங்கவேண்டிய விஷயம் இவ்வருஷம் பரிசீலனை செய்யப்படும்.

**விவசாய மில்லாத நாணயச்சங்கங்கள்.**—வருஷக்கடைசியில் இவ்வினத்தில் 11சங்கங்களிருந்தன. சென்ற வருஷத்தியதொகை 10. இப்பதினொன்றில் இரண்டு முனிசிபல் சிப்பந்திகளுக்காக ஏற்பட்ட பொறுப்பு வரையற்ற சங்கங்கள். மற்ற ஒன்பதும் வரையறுக்கப்பட்ட சுத்த நாணயச்சங்கங்களே. இச்சங்கங்களின் மூலதனம் ரூ. 91,312 லிருந்து ரூ. 124,910 ஆக உயர்ந்திருக்கிறது. இவ்வதிகத்தில் முக்காற் பங்கு ஈரோடு அர்பன் பாங்கினாலாயிற்று. அவைகளின் நிகர லாபம் ரூ. 4097 லிருந்து ரூ. 6,185 ஆயிற்று. ஈரோடு. அர்பன் பாங்கி இம்மாதிரி தொழில் தனத்தின் விருத்திக்குக் காரணமாயிருந்ததல்லாமல் ஜில்லாவுக்கு வெளியிலுள்ள சங்கங்களில்கூட பணம்போட்டு வைத்திருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் பப்ளிக் ஸர்வென்ட்ஸ் கோவாபரேடிவ் சொஸைடியும் நலலவேலை செய்துகொண்டு வருகிறது. முனிசிபல் சிப்பந்திகளுக்காக ஏற்பட்ட இரண்டு வரையறுக்கப்பட்டச் சங்கங்களுள் கோயமுத்தூரிலுள்ள சங்கம் நன்றாய்

வேலை செய்கிறது. ஈரோடிலுள்ளதோ சரியான வேலையே செய்யவில்லை. அதைச் சரிப்படுத்த வேண்டிய பிரயத்தினம் செய்யப்படும்.

கிரய விக்கிரயம்.—சென்ற வருஷத்திலிருந்த கோயமுத்தூர் அர்பன் பாங்க் அண்ட்ஸ்டோர் சங்கத்தைத்தவிர ஈரோடுக்கு இன்னொரு சங்கம் இவ்வருஷம் சேர்க்கப்பட்டது. வருஷக்கடைசி காலத்தில் ஏற்பட்ட இப்புதுச் சங்கம் கொஞ்சம் பங்குத் தொகையையும் ஒன்றிரண்டு சிறிய டிபாஸிட்டுகளையும் வசூலித்ததைத் தவிர வேறு அதிக வேலை செய்ய வில்லை.

வருஷக்கடைசியில் இவ்விரண்டு சங்கங்களிலும் வசூலாகி யிருந்த பங்குத் தொகை ரூ. 2760. சென்ற வருஷக் கடைசியில் கோயம்புத்தூர் ஸ்டோரில் வசூலாயிருந்த தொகை ரூ. 2010. கோயம்புத்தூர் ஸ்டோர் இவ்வருஷம் வாங்கின சரக்குகளின் கிரயம் ரூ. 62152. விக்கிரயம் ரூ. 68849. சரக்கு விற்பனையால் ஏற்பட்ட மொத்தலாபம் ரூ. 7134. முந்திய வருஷ மொத்தலாபமோ ரூ. 4517. இவ்விரண்டு சங்கங்களின் இவ்வருஷத்திய நிகரலாபம் ரூ. 3903. சென்ற வருஷ லாபமோ ரூ. 1701.

இதர மாதிரிக் கோவாபரேஷன்:—இவ்வினத்தில் இரண்டு கட்டிடச் சங்கங்கள் கோயம்புத்தூரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அவைகளுள் ஒன்று வருஷ கடைசி காலத்தில் ஏற்பட்டது. பழைய சங்கம் கட்டிடத்திற்காகக் கடன் கொடுத்து ரூ. 2375 நிகரலாப மடைந்திருக்கிறது. அதன் தொழில் தனம் ரூ. 3686-லிருந்து ரூ. ரூ. 38573 ஆகவும் பங்குத் தொகை ரூ. 6670 லிருந்து ரூ. 10520 ஆக உயர்ந்திருக்கின்றன.

புதுச்சங்கம் ஒத்தச்செக்கார்களுக்கென்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. சில வருஷங்களுக்கு முன் நகரத்தின் நெருக்கத்தை நிவர்த்திப்பதற்காக முனிசிபாலிடியார் இடங்களை வாங்கி இவ்வேழைகளைத் துரத்தி விட்டார்கள். ஆனால் அவர்கள் வீடுகட்டிக்கொண்டு வாழுவதற்கு மேட்டுப்பாளையம் ரஸ்தாவில் ஒரு பெரிய இடம் கொடுத்தாலும்கூட அதற்கு வேண்டிய சாதனங்கள் அவர்களுக்கில்லாமையால் சென்ற வருஷம் வரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. இவர்களுக்கு ஒத்தாசை செய்வதற்காக வருஷக் கடைசியில் ஒரு சங்கம் ஏற்படுத்தி ரிஜிஸ்ட்ராரவர்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து ஒரு கடனும் வாங்கிக்கொடுத்தார். மெம்பர்களுக்குப் பணம் கடன் கொடுப்பதோடு கட்டிடச் சாமான்களை கூட்டாக வாங்கிக்கொடுக்கும் சௌகரியத்தையும் இச்சங்கம் செய்திருக்கிறது. மெம்பர்களுக்கு வெகு எளிதாக இருக்கும்படி 100-க்கு 7½ வட்டிக்கு 20 வருஷங்களுக்குள் திருப்பிக் கொடுக்கலாம் என்ற சௌகரியமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



க்ஷேமநிதி.—வருஷக்கடைசித் தேதியில் எல்லாச் சங்கங்களின் க்ஷேமநிதிகளும் சேர்ந்து ரூ. 45,595 ஆயிற்று.

மேற்பார்வை.—யூனியன் மேற்பார்வையிலிருந்த சங்கங்களின் சங்கியை 119 தான். இந்த ஜில்லாவில் 15 சங்கங்கள் மேற்பார்வைக்குள் வரவில்லை. சூபர்வைஸிங் யூனியன்களுக்கு சம்பந்தப்பட்ட சங்கங்களின் சோதனை வேலைகள் லோகல் யூனியன்களால் நியமிக்கப்பட்ட சூபர்வைஸர்களாலேயே சாதாரணமாய் செய்யப்பட்டன. வருஷக்கடைசித் தேதியில் 4 யூனியன்கள் நன்றாய் வேலைசெய்து கொண்டிருந்தன. 2 யூனியன்கள் வருஷக்கடைசியில் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகள் இவ்வருஷம்தான் வேலை செய்யும். மொத்தத்தில் சூபர்விஷன் வேலை வெகு திறமாக நடந்து அதனால் சங்கங்களின் ஆளுகையில் சௌகரியமான மாறுபாடுகளை உண்டாக்கியிருக்கின்றன. யூனியனின் முக்கிய நோக்கம் சங்கங்களின் நிலுவைகளைக் குறைப்பதாக இருந்து கிராமகோவாபரேடர்கள் தங்கள் கௌரவத்தையும் மதிப்பையும் உணர்ந்துகொள்ளும்படி செய்திருக்கிறது. விஜயமங்கலம் யூனியன் தன் பிரஸிடெண்ட் ம-௱-௱-ஸ்ரீ கே. எம். சின்ன ரங்கய்ய கவுண்டர் அவர்களது பார்வையில் செய்த மிக்க சிலாக்கியமான வேலை தனியாக எடுத்துரைக்கத் தக்கது. இக்கிளர்ச்சியில் சின்ன ரங்கய்ய கௌவுண்டர் காட்டும் உற்சாகத்திற்கு முடிவில்லை. இது முந்திய எல்லா ரிபோர்டுகளிலும் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்பார்வை வேலைக்குப் போதுமானநிதி சாதாரணமாகக் கிடைத்திருக்கிறது. சங்கங்கள் தாங்கள் வாங்கும் கடன்களின் பேரில் ஏற்பட்ட வட்டியில் 15-ல் ஒருபங்கு இதற்காக எடுத்துவைத்து அத்துடன் கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் பாங்கி, சங்கங்களிலிருந்து வசூலித்த வட்டியில் 30-ல் ஒரு பங்கு சேர்த்து இத்தொகை ரிஜிஸ்ட்ராரவர்களின் பராமரிப்பில் யூனியன்களினால் நிர்வகிக்கப்படுகிறது.

ஜனங்களின் அபிப்பிராயம்.—இவ்வியக்கத்தில் பொதுஜனங்களின் அபிப்பிராயம் சாதாரணமாய் திருப்தியாகவே யிருக்கிறது. இவ்வருஷம் பஞ்சமர்களின் சௌகரியத்திற்காக 4 சங்கங்களேற்பட்டதற்கு பெரும்பாலும் ஒய். எம். ஸி. ஏ. கூட்டத்தாரின் பிரயத்தனமே காரணம். சிக்கனம் தெரியாத பஞ்சமர்களின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்னும் தாராள தரும புத்தியைக்கொண்டே அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். சாதாரணமாய் லகு வட்டிக்குக் கடன் வாங்கிக்கொடுத்ததைத் தவிர விசேஷ உபயோகமான வேலை இன்னும் ஒன்றும் நடக்கவில்லை. இப்பொழுது அப்படி 10 சங்கங்கள் வேலை செய்கின்றன. மிகவும் திருப்தியாய்

வேலை செய்கின்றனவென்று இன்னும் சொல்லமுடியாது. அச்சங்கங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொன்றிலும் தலைமையாயிருந்து எல்லா வேலைகளையும் நடத்த ஒவ்வொருவர் வேண்டும். இவைகளைச் சரிவர கவனிப்பதற்காக ஒரு கிறிஸ்துவ யூனியன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இனி சௌகரியமேற்படலாம்.

விஜயமங்கலம் யூனியனைச்சேர்ந்த சங்கங்கள் ஒரு கான்பரன்ஸ் ஏற்பாடுசெய்தது. அதற்கு ஈரோடு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அது விமரிசையாக நடந்தேறியதற்கு ம-ள-ள-ஸ்ரீ, கம்பளியம்பட்டி, கே. எம். சின்னரங்கய்ய கவுண்டரவர்களும், ம-ள-ள-ஸ்ரீ, அப்பச்சிமார் மடத்துப்பாளையம் ஆதிமூல கவுண்டரவர்களுமே காரண பூதர்கள்.

---

# 1613 நெ. கரூர் கோவாபரேடிவ் யூனியன் லிமிடெட்.

## 1917-18-வது வருஷத்திய ரிபோர்ட்டு.

இந்த யூனியன் 1915-ம் வருஷம் செப்டம்பர்-மீ 24-உ 11 சங்கங்களுடன் வேலை துவக்கிற்று. அவற்றில் கரூர் அர்பன் பாங்கியும் ஒன்று. பிரஸ்தாப வருஷ ஆரம்பத்தில் 22 சங்கங்கள் அணைக்கப்பட்டிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் புதிதாய் ஏற்பட்ட சின்னதாராபுரம், கரூர் டவுன் முனிசிபல் ஆட்களின் சங்கம், தாத்தய்யங்கார்பேட்டை, தும்பலம் ஆகிய இந்த நான்கு சங்கங்களும் சேர்ந்ததில் சென்ற ஜூன்மீ 30உயில் 26 சங்கங்களிருந்தன. இவற்றில் கரூர் தாலூகாவில் 13-ம் குளித்தலை தாலூகாவில் 4-ம், முசிரி தாலூகாவில் 9-ம் இருக்கின்றன. இச்சங்கங்கள் அநேகமாய் யூனியன் ஹெட்குவார்டரிலிருந்து சௌகரியமாய் போய்வரக்கூடிய தூரத்திலிருந்தபோதிலும் முசிரி தாலூகாவில் சில சங்கங்களுக்கு ஷை வசதி குறைவாயிருக்கிறது. இருந்தபோதிலும் சூபர்வைசர் ஷை சங்கங்களையும் அடிக்கடி போய் பார்த்துவருகிறார்.

2. வருஷ ஆரம்பத்தில் இச்சங்கங்களிலிருந்து யூனியனுக்கு 45 டெலிகேட்டுகளிருந்தனர். வருஷக் கடைசியிலோ டெலிகேட்டுகளின் சங்கியை 64-க்கு உயர்ந்திருந்தது.

3. வருஷ ஆரம்பத்தில் அணைக்கப்பட்ட சங்கங்களில் 1924 மெம்பர்களிருந்தனர். ஆங்காங்கே விலகிப்போனவர்களை நீக்கி வருஷக் கடைசியில் 2042 மெம்பர்களிருந்தனர். மெம்பர்களால் சங்கங்களுக்கு செலுத்தப்பட்டிருக்கும் பங்குத் தொகையோ ரூ. 21,911-லிருந்து



ரூ. 25,644-க்கு உயர்ந்திருந்தது. இவ்விஷயம் நமக்கு மிகவும் திருப்திகரமாகவே யிருக்கிறது.

4. சங்கங்கள் மெம்பர்களிடமிருந்தும், மெம்பர்களல்லாதவரிடமிருந்தும் சிறு டிபாசிட்டுகள் வாங்கிவருகின்றன. அணைக்கப்பட்ட சங்கங்கள் பிரஸ்தாபவருஷ முதலில் ரூ. 9,380 டிபாசிட் வாங்கியிருந்தன. பிரஸ்தாப வருஷத்திலும் சங்கங்கள் டிபாசிட்டுகள் வாங்கியும், கெடுவு தவறாமல் திருப்பிக்கொடுத்தும் இருக்கின்றன. வருஷக்கடைசியில் சங்கங்களிலிருந்த டிபாசிட் தொகை ரூ. 13,456. இதை கவனித்தால் மெம்பர்களுக்கும், இதர ஜனங்களுக்கும் இந்த கோவாபரேடிவ் பாங்குகளிலிருந்த ஒருவித பயம் நீங்கி நல்ல நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இதுவிஷயம் மிகவும் புகழத்தக்கதே.

5. நமது யூனியனுக்கு அணைக்கபெற்ற சங்கங்கள் எல்லாம் திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்ட் அர்பன்பாங்கியிலிருந்துதான் கடன் வாங்குகின்றன. வருஷ ஆரம்பத்தில் சங்கங்கள் டிஸ்டிரிக்ட் பாங்கியிலிருந்து ரூ. 1,33,111 வாங்கியிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 72,600 வாங்கியும், ரூ. 53,709-12-11 திருப்பிக்கொடுத்து மிருக்கின்றன. ஷை திருப்பிச்செலுத்திய தொகையில் ரூ. 27,291-0-11 பின் வருஷங்களுக்காக முன்கூட்டிச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் நாகயநல்லூர் சங்கத்திலோ வாய்தாப்படி செலுத்தவேண்டியச் தொகையை செலுத்தாமல் வருஷக்கடைசியில் ரூ. 2,886-4-0 பாக்கி நின்றது. இது விஷயத்தை ஷை சங்கத்து மெம்பர்கள் இனியாவது கவனித்து சங்கத்தைச் சீர்திருத்தி, கெடுவுகடந்த தொகையை டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு இந்த வருஷத்திலாவது செலுத்தி, சங்கத்துக்கும் யூனியனுக்கும் நாணயமும் நன்மையும் உண்டாக்குவார்களென்று எதிர்பார்க்கிறோம். வருஷக்கடைசியில் டிஸ்டிரிக்ட்பாங்கிக்கு சங்கங்களின்மீது பாக்கிநின்ற தொகை ரூ. 1,51,001-3-1. ஆனால் டிஸ்டிரிக்ட்டு பாங்கிக்கு சங்கங்களிலிருந்து வட்டி விஷயமாய் கடந்த வருஷத்தில் ஒன்றும் பாக்கியில்லை. டிஸ்டிரிக்ட் பாங்கிக்குச் சேரவேண்டிய தொகை ரூ. 9,866-11-8 முழுவதும் செலுத்தப்பட்டது.

6. மெம்பர்களுக்கு சங்கங்களில் ஒன்றுமுதல் பத்து வருஷம் வரை வாய்தாவில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. பிரதி வருஷத்திலும் மெம்பர்களிடமிருந்து தவணைத்தொகைகள் வசூலிக்கப்படுகின்றன. பிரஸ்தாப வருஷத்தில் மெம்பர்களிடமிருந்து வசூலாகவேண்டிய தவணைத்தொகை ரூ. 79,304-15-2. அதில் ரூ. 62,708-6-5 வசூலாயிற்று. சில மெம்பர்கள் தவணைக்கு முந்தியே ரூ. 29,091-0-0 செலுத்தியிருக்கின்றனர். ஆனால் வருஷக்கடைசிக்குள் செலுத்தப்படாமல் ரூ. 16,686-8-9 பாக்கி நின்றது.

இது சென்றவருஷத்தைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறது. இம்மாதிரி அதிகமாயிருப்பதற்கு சில சங்கங்கள்தான் முக்கிய காரணம் அவையாவன:—நாகயநல்லூர், மணவாசி, கரூர் டவுன் பாங்கி, நெரூர், ராஜபுரப், மேட்டுப்பாளையம், கோயம்பள்ளி.

இவற்றில் கரூர் டவுன் பாங்கிதவிர்த்து மற்றச் சங்கங்களிலெல்லாம் ஆர்பிட்ரேஷன் ரூல்ஸ்படி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களால் நடவடிக்கைநடத்தி டிக்ரிகள் ஏற்பட்டன. அப்படி டிக்ரியான தொகை முழுவதும் வாய்தாக் கடந்ததாகவே பாவிக்கப்பட்டிருக்கிறது. தவிர கரூர் டவுன் பாங்கியில் மட்டும் ரூ. 8,248 வாய்தாக் கடந்திருக்கிறது. ஷை பாங்கியின் டைரெக்டர்களும் இன்னும் இதர சங்கங்களின் பஞ்சாயத்தார்களும் தகுந்த நடவடிக்கை நடத்தி பாக்கிகளை கூடிய சீக்கிரத்தில் வசூல் செய்வார்களென்று நம்பப்படுகிறது.

மெம்பர்களிடமிருந்து ரூ. 2,535 5-0 சங்கங்களுக்கு வட்டி பாபத்தில் வாய்தா கடந்து நின்றது. கூடிய சீக்கிரம் இந்தத் தொகையும் வசூலாகிவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

7. பிரஸ்தாப வருஷ முதலில் திருச்சி டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கியில் சங்கங்களின் க்ஷேமநிதி ரூ. 9,246-6-10 ஆகயிருந்தது. பிரஸ்தாப் வருஷத்தில் டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு சங்கங்கள் அனுப்பிய ரூ. 1,096-9-0 யுடன்சேர்த்து வருஷக் கடைசியில் ரூ. 10,332-15-10 யிருந்தது. யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களில் நாயகநல்லூர் தவிர்த்து மற்றச் சங்கங்களெல்லாம்தங்கள் க்ஷேமநிதியைச் சரியாக டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு அனுப்பாமல் ரூ. 118-5-9 பாக்கியில் நிறுத்திக்கொண்டன.

8. தற்காலத்தில் சங்கங்கள் அதிகமாய்ப் ப்ரவவே டிபார்ட்மெண்டாரால் அடிக்கடி பார்வையிடமுடியாமல் சங்கங்கள் அபிவிர்த்தியடையவில்லை. அடிக்கடி மேற்பார்வையிருந்து அப்போதைக்கப்போது தொகைகளை சீர்திருத்தி வந்தால் சங்கங்கள் அபிவிருத்தி அடையும் என்று எண்ணி அங்கங்கே பல சங்கங்களைச் சேர்த்து யூனியன்கள் ஏற்படுத்தி சங்கங்களின் லேவாதேவியின் மேல் நூற்றுக்கு அரை ரூபாய் வீதம் கட்டணம் விதித்து ஷை யூனியன்களில் சிப்பந்திகளை ஏற்படுத்தி அவர்களைக் கொண்டு அடிக்கடி மேற்பார்வை செய்துவருவது எல்லாரும் அறிந்த விஷயமே. சங்கங்களிலிருந்து வசூலாகும் தொகையைத் தவிர்த்து டிஸ்டிரிக்ட் பாங்கியார் தங்களுக்கு வரும் ரூ. 7½ வட்டியில் கால் ரூபாய் யூனியனுக்குக் கொடுக்கின்றனர். இவற்றைக் தவிர்த்து சங்கங்கள் யூனியனில் சேரும்போது கொடுக்கும் சேர்க்கைக் கட்டணமும் (Affiliaton fees) மூன்று வருஷத்துக்கொருமுறை பிரதி டெலிகேட்டுக்கும் ரூ. 2 வீதம்



கொடுக்கும் டெலிகேட் கட்டணமும் தான் யூனியனுக்கு வருமானம். அணைக்கப்பட்ட சங்கங்களிலிருந்து பிரஸ்தாப வருஷத்தில் வசூலாக வேண்டிய ரூ. 625-15-11-ம் முழுவதும் வசூலாகி விட்டது. திருச்சி டிஸ்டிரிக்ட் பாங்கியாரோ தாங்கள் கொடுக்க வேண்டிய ரிபேட் ரூ. 299-14-2 யிருக்க ரூ. 145-8-10 தான் கொடுத்தனர். அதுவும் ஜில்லா சூபர்விஷன் கவுன்சிலுக்கு நமதுயூனியன் கொடுக்கவேண்டிய தொகைக்காக அட்ஜஸ்டு (ஈடு) செய்துகொள்ளப்பட்டது. சங்கங்களிலிருந்து இவ்வருஷத்துக்கு வசூலாக வேண்டிய தொகை ரூ. 670-3-6. இதை ஆடிட் உத்திரவு வந்ததும் வசூல்செய்யப்படும். ஜில்லா பாங்கியிலிருந்து நமக்கு வரவேண்டிய ரிபேட் தொகை ரூ. 329-15-4. இவ்வருஷமாவது ஜில்லா பாங்கியார் ரிஜிஸ்டிரார் அவர்களின் ஆடிட் உத்திரவுபடிப் குறைக்காமல் கொடுப்பார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

9. நமது யூனியனில் ஒருசூபர்வைசர் ஒருகுமஸ்தா இந்த இரண்டு பேரும் வேலைசெய்து வருகிறார்கள். சென்ற 1917 ௵ அக்டோபர்௴ முதல்தான் இந்த சூபர்வைசர் ஏற்படுத்தப்பட்டார். அதற்கு முன் ஒருவருஷகாலம் சூபர்வைசரில்லாமல் இன்ஸ்பெக்டர் ஒருவர் பிரத்தியேகமாய் நமது யூனியன் சங்கங்களை கவனித்து வந்தார். தற்காலம் சூபர்வைசருக்கு மாதம் 1-க்கு ரூ. 30-ம் குமஸ்தாவுக்கு ரூ. 5-ம் கொடுக்கப்பட்டுவருகிறது.

10. நமது யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களெல்லாம் பொறுப்பும் நாணயமு முள்ள மெம்பர்களைச்சேர்த்தே லேவாதேவி செய்து வருகின்றன.

சென்ற ஜனவரி மாதத்தில் இந்த கரூர்டவுன் முனிசிபல் ஆட்களுக்காக பிரத்தியேகமாய் ஒருசங்கம் ஏற்பட்டு நடந்து வருகிறது. அதன் மெம்பர்களுக்கோ மாதச்சம்பளம் தவிர்த்து வேறு சொத்து இல்லை. அவர்கள் வெளியில் மாதம் 1-க்கு ரூபாய்க்கு 2 அணா முன் வட்டி கொடுத்து கஷ்டப்பட்டு வந்தனர். அவர்களுடைய பழயகடன்களை யெல்லாம் தீர்த்து மாதச்சம்பளத்தில் சிறு தொகைகள் பிடித்துக் கொள்வதும் தவிர்த்து அவர்களுக்கு வேண்டியபோது சாப்பாட்டுக்காக அட்வான்சு கொடுத்தும் உதவப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் பிரதி மாதமும் 4 அணா துணி பண்டு என்று கொடுத்து வந்து வருஷக் கடைசியில் அவர்களுக்கு தொகையாகவோ அல்லது துணியாகவோ திருப்பிக்கொடுக்கப்படும். இம்மாதிரி ஏற்பட்டிருப்பதால் அவர்களுக்கு மிகவும் சௌகரியமாயும் இலவசமாயுமிருக்கின்றது.

மணவாசி சங்கத்தில் எரு, தழைடிப்போஒன்று ஏற்பட்டிருக்கிறது. சங்கத்திலிருந்து குறுகிய காலக்கடனாக டிப்போபேரில் செலவு போட்டு

மொத்த தொகைக்கும் புண்ணாக்கு, தழை எருமுதலியவை வாங்கி மெம பர்களுக்கு லாபமின்றி ரொக்கமாகவோ. அல்லது கடனாகவோகொடுத்து மாசூல் காலத்தில் ஷை தொகையைவசூல் செய்து வருகின்றனர். இது விஷயமாய் இன்னும் கொஞ்சம் சீர்திருத்தம் செய்து நடத்தி வந்தால் மிகவும் நன்மையுண்டு. இம்மாதிரியே மற்றசங்கங்களும் தங்கள் மெம் பர்களுக்கு வேண்டிய விவசாயசாமான்களை ஒருமிக்க வரவழைத்துக் கொடுத்தால் மெம்பர்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும்.

பிரஸ்தாப வருஷத்தில் சில யிடங்களில் பள்ளர்களுக்காக தனியாய் சங்கங்கள் ஏற்படுத்த முயற்சி செய்ததில் அவர்களுக்கு தகுந்த சொத்து மதிப்பு யில்லாததால் செய்யக்கூடவில்லை.

11. நமது யூனியன் ஏற்பட்டு மூன்றுவருஷத்தில் எல்லா அம்சங் களிம் அபிவிர்த்தியடைந்திருப்பதை பார்க்க மிகவும் திருப்திகரமாயிருக் கிறது. ஆனால் அணைக்கப்பட்ட சங்கங்களில் சில அடிக்கடி போய்பார் ப்பதற்கு அனுகூலமில்லாமல் தூரத்திலிருக்கின்றன. கூடிய சீக்கிரத் தில் முசிரிதாலூகாவில் இன்னும் சில சங்கங்கள் ஏற்படுத்தி பிரத்தியேக மாக அவ்விடம் ஒரு யூனியன் ஏற்படுத்த உத்தேசம். அப்போது கரூர் தாலூகாவில் சில சங்கங்கள் ஏற்படுத்தி கரூர் யூனியனை பலப்படுத்துவ தாயும் உத்தேசம். தற்காலம் இருக்கும் சங்கங்கள் அமைந்திருப்பதைக் கவனித்தால் ஒரு சூபர்வைசருக்கு வேலை சரியாகவே யிருக்கிறது.

அநேகமாய் நமது சங்கங்களெல்லாம் திருப்திகரமாய் வேலைசெய்து வந்தாலும் சில சங்கங்கள் அவ்வளவு திருப்திகரமாயில்லை. உதாரண மாக நாகயநல்லூர், நெரூர், கோயம்பள்ளி, தொட்டியம், இவைகளே. இவற்றில் மெம்பர்களிடமிருந்து வாய்தாவில் சரியாய் பணம் வசூலாகாத தினால் பிரஸ்தாப வருஷத்தில் ஆர்பிட்ரேஷன் ரூல்ஸ்படி நடவடிக்கை எடுத்து அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் அவர்களால் டிக்ரிகள் ஏற்பட்டன. ராஜபுரம் சங்கம் வருஷ ஆரம்பத்தில் மோசமாயிருந்து பிரஸ்தாப வரு ஷத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டது. கோயம்பள்ளி தொட்டியம் இவை களைப் பஞ்சாயத்தார் சிரத்தையுடன் கவனித்தால் சீர்திருத்தலாம். நெரு ரில் சங்கத்தை சிரத்தையுடன் கவனிக்க தகுந்தவர்களில்லாதகுறையே. ஆனால் இச்சங்கங்களிலிருந்து டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு அசல், வட்டி, ஒன்றும் பாக்கி யில்லை. நாகயநல்லூர் சொசைடியிலிருந்துதான் டிஸ்டி ரிக்ட் பாங்கிக்கு அதிகத் தொகை, வாய்தா கடந்திருக்கிறது. பஞ்சாயத் தாரும், மெம்பர்களும் இதுவிஷயத்தைக் கவனித்து சங்கத்தைச் சீர் திருத்தம் செய்வார்களென்று நம்பப்படுகிறது.

சங்கங்கள் டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு தற்காலம் நேராகவே தொகைகளை அனுப்பிவருகின்றன. சில சமயங்களில் யூனியன் மூலமாயும் அனுப்பி



வருகின்றன. அப்போது யூனியன் ஒன்று தனி யாய் போக்குவாத்துச் செலவுக்கென்று சங்கங்களிலிருந்து வசூலிப்பதில்லை.

அணைக்கப்பட்ட சங்கங்களின் உபயோகத்துக்காக, ரசீது புஸ்தகங் கள், ரிஜிஸ்டர்கள், பாரங்கள் முதலியவை ஒருமிக்க யூனியன் பண்டிலி ருந்து முன்தொகை கொடுத்து அச்சிட்டு அவைகள் வேண்டும்போது லாபமின்றி சப்ளை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் சங்கங்களுக்கு பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வரவழைப்பதைக்காட்டிலும் சர சமாகவே யிருக்கிறது. பிரஸ்தாப வருஷத்தில் ஷை விஷயத்தில் வேண் டிய ஏற்பாடுகள் செய்து தற்காலம் புஸ்தகங்கள் தயார்செய்து சப்ளையாகி வருகிறது.

பிரஸ்தாப வருஷத்தில் ஒரு மகாசபை மீட்டிங்கும் ஐந்து கமிட்டி மீட்டிங்குகளும் நடைபெற்றன. பிரதிமாதமும் ஒரு கமிட்டி மீட்டிங்கு நடந்தால்தான் வேலை திருப்திகரமாயிருக்கும். வெளியூர்களிலிருக்கும் கமிட்டி மெம்பர்களுக்கு மீட்டிங்கு கரூர் வந்து திரும்பிப்போக சௌ கரியமான வசதிகளில்லாததினால்தான் அடிக்கடி மீட்டிங்கு கூடவில்லை. ஆனால் எந்த பேபரும் அவர்களுக்கு ப்யூன்மூலமாயும் தபால் மூலமாயும் அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயத்துடன்தான் பைசல்செய்யப்படு கிறது.

இம்மூன்று வருஷகாலமாய், பொதுவாய் ஐக்கிய சங்கங்களின் அபிவிருத்தியையும், முக்கியமாய் இந்த யூனியனின் அபிவிர்த்தியையும் குறித்து எனக்கு அப்போதைக்கப்போது சங்கங்கள் விஷயத்தில் தேர்ச்சி யடைந்த அபிப்பிராயம் கொடுத்து என்னுடன் ஒத்து உழைத்துவந்த கவர்னிங்பாடி மெம்பர்களுக்கும் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் எனது அன்பார்ந்த வந்தனமளிக்கின்றேன். தவிர்த்து, சங்கங்களை மிகவும் அபிவிர்த்திசெய்தும் யூனியன் வேலைகளை எடுத்துரைத்து ஐக்கிய முறைகளை அபிவிர்த்திசெய்தும், சங்கங்களுக்கும் யூனியனுக்கும் சிரத்தையும் ஊக்கமும் உண்டாக்கி வந்த அசிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் ம-ள-ள-ஸ்ரீ, ராவபகதூர் A. வேதாசலமய்யர் B. A. அவர்களுக்கும் சர்க் கிள் இன்ஸ்பெக்டர் ம-ள-ஸ்ரீ, C. S. ராமசாமி அய்யங்காரவர்களுக்கும் இச்சபையிலுள்ளார் கடமைப்பட்டிருக்கிறபடியால் அவர்களுக்கும் மனப் பூர்ணமாய் வந்தனமளிக்கின்றேன். ஐக்கிய முறைகளை ஜனங்களுக்கு போதித்து ஆங்காங்கேயுள்ள ஏழைகளையும் விவசாயிகளையும் சீர்திருத்தி அவர்களை முன்னுக்கு கொண்டுவருவதே தன் கடமையெனக்கொண்டு உழைத்துவந்த நமது அசிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் ம-ள-ள-ஸ்ரீ, A. வேதா சலமய்யர் B. A. அவர்களுக்கு நமது கவர்ன்மெண்டார் மாட்சிமை

டிபாசிட்டுகளுடன் சேர்க்கப்பட்ட சங்கங்களின் க்ஷேம நிதிகள் ரூ. 42,270லிருந்து ரூ. 44,313 ஆக உயர்ந்திருக்கிறது.

பிரஸ்தாப வருஷத்தில் கிராம நாணயச் சங்கங்களுக்குக் கொடுத்திருக்கும் கடன்கள் ரூ. 105864. முன்வருஷத் தொகை ரூ. 50, 336 தான். இந்த ரூ. 10,5,864ல் ஐந்து சங்களுக்கு ரொக்க நாணய ஏற்பாட்டின்படி ரூ. 26,54 கொடுத்து மிகுதியான ரூ. 79,3-0 ஐ. 53 சாதாரணக் கடன்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் திருப்பி வசூலான கடன் தொகைகள் ரூ. 76,022. முந்திய வருஷத்திலோ ரூ. 62,836.

பிரஸ்தாப வருஷத்தில் இப்பாங்கி, மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் முழுத் தொகை ரூ. 5,0 0மும் கொடுத்து 50 பங்குகள் எடுத்துக்கொண்டதும் தவிர ரூ. 10,000 கூட அதில் போட்டு வைத்திருக்கிறது. மேலும் இரண்டாவது யுத்தக்கடன் பத்திரம்கூட ரூ. 4500-க்கு வாங்கி யிருக்கிறது. தவிர 1916-17 வருஷத்தின் தணிக்கை உத்திரவுப்படி ரூ. 440 எடுத்து வைத்திருப்பதல்லாம் சங்கங்களுக்குக் கொடுத்த கடன்களின்மேல் ஏற்பட்ட சாதாரண வட்டியில் 3-ல் 1 பங்கு அதாவது ரூ. 478-6-0-யும், மேன்பார்வைச் செலவுகளுக்காக யூனியன்களுக்குக் கொடுப்பதற் கென்று பாங்கியார் எடுத்து வைத்திருக்கிறார்கள். இத்தொகை ரூ. 918-6-0-ம் சீக்கிரம் யூனியன்களிடம் கொடுக்கப்படும்

பிரஸ்தாப வருஷத்தில் பாங்கி அடைந்த நிகரலாபம் ரூ. 4,944-13-7 அதன் விநியோகம் பின்வருமாறு அங்கீகரிக்கப்பட்டது:—

1. ரூ. 1,236 3 5.—அதாவது நிகரலாபங்களில் நான்கில் ஒன்று க்ஷேம நிதிக்கு.
2. ,, 618 1 8.—நிகர லாபங்களில் 8-ல் ஒன்று செகிரிடேரியின் கௌரவச் சம்பளம்.
3. ,, 374 4 9.—மூன்று மாதம் வேலை செய்ய ஆகும் செலவின் உத்தேசம்.
4. ,, 2,575 7 11.—100-க்கு 9-க்குமேல் போகாமல் டிவிடெண்டு கொடுக்க.
5. ,, 140 11 10.—க்ஷேம நிதியோடு சேர்க்கப்படவேண்டிய மிகுதித் தொகை.

4,944 13 7



இப்பொழுது க்ஷேமநிதிக்குச் சேரும் மொத்தத் தொகை 1-வது 5-வது ஆகிய இவ்விரு தொகைகளும் அதாவது ரூ. 13,761-5-3-ம் சென்ற வருஷம் செலவழிக்காமல் கையிருப்பில் சேர்க்கப்பட்ட ரூ. 307-10-0-ம் சேர்ந்து மொத்தம் ரூ. 1684-9-3 ஆகும்.

4-வது இனத்தில் செலவாகாமல் ஏதாவது தொகை நின்று போனால் அதுவும் க்ஷேம நிதியில் சேர்க்கப்படும்.

பிரஸ்தாப வருஷ ஆரம்பத்தில் இருந்த க்ஷேமநிதி ரூ. 3,349-10-1. இப்பொழுது உத்திரவான தொகையைச் சேர்த்தால் ரூ. 5,034-3-4 ஆகிறது. தற்காலம் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியில் இவ்வின தொகை ரூ. 2,701-3-4 இருக்கிறது. இதில் 1917-18ம் வருஷத்திற்கு பழைய க்ஷேம நிதியின்மேல் ஏற்பட்ட வட்டி ரூ. 126-9-3 சேர்ந்திருக்கிறது. ரூ. 775-க்கு தபால் யுத்தக்கடன் பத்திரங்கள் வாங்கி யிருந்தது இப்பொழுது பணமாக மாற்றப்பட்டு அதையும் சேர்த்து இரண்டாவது யுத்தக்கடன் பத்திரம் ரூ. 4,500க்கு வாங்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர க்ஷேமநிதிக்காக மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் போடவேண்டிய தொகை ரூ. 2,333. இத்தொகையை மதராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கியிலாவது அல்லது யுத்தப்பத்திரங்களிலாவது போட்டு வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பாங்கி நல்ல வேலை செய்துகொண்டு வருகிறது. அதன் வேலையைப்பற்றி டைரக்டர்களும் ம-ா-ா-ஸ்ரீ, வி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்காரவர்களும் மிகவும் கொண்டாடத்தக்கவர்களே.

---

## ஐக்கிய சங்கங்களும் ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவும்.

பின் வரும் வியாசம் கண்ணமங்கலம் கோவாபரேடிவ் சொஸைடியின் காரியதரிசியால் முதல் வட ஆற்காடு ஜில்லா கோவாபரேடிவ் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது :—

ஐக்கிய சங்கங்களின் பத்திர விஷயமாய் காருண்ய கவர்ன்மெண்டாரால் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டு இப்போது சில விடங்களில் வழக்கத்திலிருந்து வருகிறது. ஆனால் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதற்காக ரிஜிஸ்டர் ஆபீஸுக்குப் போனால் அநேக சந்தர்ப்பங்களில் ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் ரிஜிஸ்டர் செய்யாமலும் இதர பத்திரங்களைப் போலும் வாபீசு செய்து விடுகிறார்கள். இதர பத்திரங்களில் திருத்த வேண்டிய பிசகுகள் இருக்கக்கூடும். அதைத் திருத்துவதற்காக

வாபீசு செய்வதும் நியாயமாகவிருக்கலாம். ஆனால் ஐக்கிய நாணயச் சங்கங்களின் பத்திரங்களெல்லாம் ஐக்கிய சங்கம் ரிஜிஸ்ட்ரேஷன் இவ்விரண்டு இலாகாக்களின் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட நமூனாப்படி அச்சிடப்பட்டிருக்கும் பாரத்தில் எழுதிக்கொண்டு வரப்படுகிறபடியால் திருத்தவேண்டிய அவசியம் ஏற்படாது. இம்மாதிரி திருப்பி அனுப்பிவிடுவதால் சங்க மெம்பர்கள் அதிக அலைச்சலையும் வீண்செலவையும் பொறுக்க வேண்டியவர்களாகிறார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் பத்திரம் ரிஜிஸ்டர் செய்ய வரும்போது பிரதிசடவையும் 2 சாக்ஷிகள் கையெழுத்துப் தெறிந்தவர்களாக போடுவதற்கு அழைத்துவரவேண்டியிருப்பதால் அது விஷயமாய்ப் பிடிக்கும் செலவை கொடுக்கமெம்பர்கள் சம்மதித்தாலும் சாக்ஷிபோட கூடியவர் சமயத்துக்குக் கிடைப்பதில்லை. ஐக்கிய சங்கங்களில் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து கொண்டு வந்த பிறகுதான் பணம் பட்வாடா செய்யப்படுவதால் பத்திரம் ரிஜிஸ்டராய் பணம்கொடுக்கப்படும் வரையிலுள்ள நாட்களுக்கும் சங்கத்தில் வட்டி கட்டி வாங்கி விடுகிறார்கள். இதனால்ஜனங்கள் தாராளமாய் சங்கத்தில் மெம்பராய் பணம் வாங்க தடையுண்டாகிறது. ஆகையால் கீழ்க்காணும் விஷயங்களை கவனித்து தகுந்த ஏற்பாடு செய்தால் சங்கமெம்பர்களுக்கு சௌகரியம் ஏற்படுவதுடன் ஐக்கிய இயக்கம் விருத்தி யடைவதற்கும் வழியுண்டாகும். இம்மாதிரி செய்வதில் தவறுகள் நேராமல் சரியாய் நடக்குமாவென சிலர் வாதிக்கக் கூடும். இது விஷயமாய் ரிஜிஸ்டர் ஆபிசில் நடக்கும் விதம் அநேகருக்கு தெரிந்த விஷயம். பத்திரம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியவர் பத்திரத்துடன்ஆஜராக இரண்டு சாக்ஷிகள் இருக்கிறார்களாவென்று ரிஜிஸ்டர் உத்தியோகஸ்தர்களால் வினவப்படுகிறார்கள். இருப்பதாய்ச்சொன்னவுடன் பத்திரத்தில் எழுதிக்கொடுப்பவரிடமும் சாக்ஷிகளிடமும் கையெழுத்து வாங்கிக்கொண்டு சாக்ஷிகளை ஒன்றும் கேட்காமலேயே அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் ஊர் பெயர் முதலியவைகளை மாற்றி சொன்னாலும் அவர்களை ரிஜிஸ்டர் உத்தியோகஸ்தர் முன் அறிந்திராதவராகையால் மாற்றிச் சொல்லவும் கூடும். இம்மாதிரி நடப்பதிலுள்ள அபாயத்தை விட கீழ் சொல்லப்படும் முறையை கையாடுவதில் அதிகம் ஏற்படாது. தவிர சங்கத்தின் வரவு செலவுகளுக்கும் லாப நஷ்டங்களுக்கும்பஞ்சாயத்தார் மஹாசபையாருக்கும் சங்கம் அணைக்கப்பட்டுள்ள யூனியனுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்களாயிருப்பதால் பஞ்சாயத்து மெம்பர்கள கடன்களைச் சரியான முகாந்தரத்தோடு பட்வாடா செய்வார்கள். அதில் பிசகு நேரிடாமல் சங்கக் கணக்குகளை அப்போதைக்கப்போது பரிசோதனைக்கு வரும் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு தடவையிலும் புதிதாய் கொடுக்கப்பட்ட



கடன்களில் சம்பந்தப்பட்ட மெம்பர்களை வரவழைத்து விசாரிக்கும்படி திட்டம் செய்யலாம். சங்கத்தில் மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கபடாமலிருப்பதால் பஞ்சாயத்தார் செய்யும் வேலைகளைக் கவனிப்பது சங்கத்தைசேர்ந்த ஒவ்வொரு மெம்பருடைய கடமையாயிருக்கிறது. ஆகையால் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய பத்திரங்களை ரிஜிஸ்டர் உத்தியோகஸ்தரிடம் தாக்கல் செய்வதற்குப் பதிலாக சங்கம் அணைக்கப்பட்டுள்ள யூனியன் கவர்னிங்பாடி மெம்பரிடம் ஆஜர் செய்யப்பட்டு ஆஜர் செய்ய பெறுகிறவர் அந்த விஷயங்களை செம்மையாய் விசாரித்து திருப்தி அடைந்தபின் அதில்அத்தாக்ஷிக்கை எழுத்திட்டு சம்பந்தப்பட்ட ரிஜிஸ்ட்ராபீசுக்கு அனுப்பினால் அதைரிஜிஸ்ட்ர் உத்தியோகஸ்தர் ஆபிசிலுள்ளரிகார்டுகளில் பதிவு செய்து கொண்டு சங்கங்களுக்கு வாபீசுசெய்து விடலாம். ஆகையால் இம்மாதிரி திருத்தங்களை ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா சட்டங்களில் திருத்தியமைக்கும்படிக்காருண்ய கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்யும்படி கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்களைக் கேட்டுக் கொள்ள வேணுமாய் இந்த வியாசம் முடிவுற்றது.

---

# வந்தவாசி கோவாபரேடிவ் சோஸைடி

வந்தவாசிதாலூக்கா 2005நெ. இளங்காடு கோவாப்ரேடிவ்சொஸைடி பிரஸிடெண்டு ரகுநாததேசிகாசாரியார் பின்வருமாறுஎழுதியிருப்பதுஎல்லாக்கோவாபரேடர்களாலும் இன்புடன்படிக்கத்தக்கது. அவருக்கு கோவாபரேஷனிலிருக்கும் மனப்பூர்ணமான கவலை ஒவ்வொருஉண்மையான கோவாபரேடருடைய மனதையும் கவரத்தக்கதே. இவரைப் போல் ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் சுயநலத்தை அதிகமாகக் கருதாமல் கோவாபரேஷனின் விருத்திக்கு ஆதாரமாகிய அன்பு சகோதரபாவம் முதலியவைகளையே மேறகொண்டு ஒழுகுவார்களானால் நம் நாடு சீக்கிரத்தில் செழித்தோங்குவதில் தடையேயிராது. இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் ஏற்கனவேஇவரைப்போன்றதீவிரகோவாபரேடராயில்லாமலிருந்தால் இதைப்படித்தபிறகாவது படிப்பில்லாமல் "கண்டதே காக்ஷி உண்டதே உறுதி" என்று தெரியாத்தனத்தினால் நினைத்திருக்கும் ஜனங்களுக்கு ஒற்றுமையின் உயர்வைப்பலவிதத்திலும் போதித்து எல்லாரையும் அவரவர்களின் இயல்புத்குத்தக்கபடி உய்விக்க முன்வருவார்களென்று நம்புகிறோம். ஷை இளங்காடு கிராமத்தில் கோவாபரேடிவ் சொஸைடி ஏற்பட்டு இரண்டு வருஷமாயிற்று, ஸதாபிக்கும்போது சேர்ந்த மெம்பர்கள் 20. சொஸைடிகடன் வாங்கின ரூபா 3500, மெம்பர்கள்யெடுத்துக் கொண்ட பங்கு 70.

இப்போதிருக்கும் மெம்பர்கள் 47, வாங்கியிருக்கும் கடன் ரூபாய் 7,000, மெம்பர்கள் எடுத்திருக்கும் பங்குகள் 150, இந்த மெம்பர்களில் பிராம்மணாள், ஜைனாள், முதலியார், கவரைகள், வன்னியர், பறையர், ஸ்திரீகள், முதலிய பல ஜாதியார் சேர்ந்திருக்கிறார்கள். எல்லாரும் ஒற்றுமையாகவே இதுவரையில் கடனை கெடுவு தவராமல் தவணைப்பிரகாரம் திருப்பி செலுத்தி வருகிறார்கள்.

இந்த வருஷக்கடைசியில் ம-ா-ா-ஸ்ரீ இன்ஸ்பெக்டரவர்கள் தணிக்கை செய்தனுப்பிய வரவு செலவுக் கணக்குசளை ம-ா-ா-ஸ்ரீ சேலம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் வேதாசலய்யர் அவர்கள் பார்த்து நிரம்ப ஸந்தோஷமடைந்ததாக ஆடிட் உத்திரவு கிடைத்தது. இவ்வளவிருந்தும் இந்த சொஸைடி விஷயமாக கொஞ்சம் மனக்கவலை உண்டாயிருக்கிறது. அதாவது சொஸைடியில் சேர்ந்த மெம்பர்களில் ஒருவராவது ஷை நிபந்தனைகளைப் பார்க்கிறதுமில்லை கேட்கிறதுமில்லை. எவ்வளவு வருந்தி அழைத்தாலும் மஹாசபைக்கு ஆஜராகிறதில்லை. தங்களுக்குள்ள அதிகாரத்தைத் தெறிந்துக் கொள்ளாமலிருக்கிறார்கள்.

இம்மாதிரி பஞ்சாயத்தார்களும் மீடிங்குக்கு ஆஜராகிறதில்லை. எவ்வளவு வருந்தியழைத்தாலும் 'நீங்கள் எழுதவேண்டிய தீர்மானங்களை யெழுதிவைத்து விடுங்கள் நான் வரும்போது கையெழுத்துப் போட்டுவிடுகிறேன்" என்று சொல்லுகிறார்கள். எப்படியாவது சொஸைடி விருத்திக்கு வரவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு வந்தவர்களை வைத்துக்கொண்டு மீட்டிங்கு நடந்தேறி வருகிறது.

கோவாபரேஷன் என்னும் கூட்டுறவுச் சங்க டிபார்ட்மெண்டாருடைய ஊக்கம் கிராமங்கள்தோறும் ஷை சொஸைடிகளை யேற்படுத்தி அந்தந்த கிராமத்திலுள்ள ஜனங்களெல்லாரையும் மெம்பர்களாகச் சேர்த்து, ஏழைஜனங்களுக்கு அதிக வருத்தமில்லாமல் கேட்கும்போது தேவையான ரூபாய்களைக்கொடுத்து, விவசாயத்தை விருத்திபண்ணுவித்து, சிக்கனமாகக் குடும்பச்செலவை செல்வழிக்கும்படிசெய்து, கொடுத்த ரூபாய்களையும் கெடுவு தவறாமல் வசூல்செய்து கொண்டும் அடிக்கடி மீடிங்குசேர்ந்து சொஸைடிவேலைகளையும் இதரமான பொதுக் காரியங்களையும் நிறைவேற்றிக்கொள்ளவேண்டு மென்றும் மெம்பர்



களுக்குள் சச்சரவு நேரிடமலும் ஒருவேளை நேரிட்டால் கிராமத்தை விட்டு வெளிக்குப்போய்வீண்செலவுசெய்யாமல் இந்த பஞ்சாயத்தாரைக், கொண்டே பைஸல் பண்ணிக்கொள்ளலா மென்றும் தெறிகிறது. இந்த மாதிரியில் கம்மிட சொஸைடி மெம்பர்கள் நடக்கவில்லையென்று கொஞ்சம் கவலை யாயிருக்கிறது. இதற்கு முதற்காரணம் படிப்புக்குறைவு. இரண்டாவது சொஸைடி நிபந்தனைகளைத் தனிப்ரதியாக அச்சிட்டு ஒவ்வொரு மெம்பர்களுக்கும் கொடுத்து வாசிக்கசொல்லாமலிருப்பது, மூன்றாவது பரோபகார சிந்தையில்லாதவர்களைப் பஞ்சாயத்தாராக ஏற்படுத்துவது.'

இம்மாதிரி வந்தவனாயிசிதாலூகா இளங்காடு கோவாபரேடிவ் சொஸைடி பிரசிடெண்டாகிய மகா-ா-ா ஸ்ரீ ரகுநாத தேசிகாசாரியாரவர்கள் எழுதியிருக்கும் வியாசத்தை இதில் பிரசுரிக்க எங்களுக்குமிக்க ஆனந்தமுண்டாகிறது. ஒவ்வொரு சங்கத்தின் பிரசிடெண்டும் இவரைப்போல சுயநலத்தை விசேஷமாகக்கக்கருதாமல் ஜனங்கள்க்ஷேமமடையவேண்டுமென்னும் கவலையைக்கொள்ளவேண்டுமென்பதை இவர் வியாசத்தினால் ஒருவாறுதெறிந்துகொள்ளலாம். கோவாபரேஷனின் பெருமையை உள்ளபடி எல்லாருக்கும் ஓரே மாதிரியாகச் சொல்லமுயலுதல் முதல் வகுப்பில் படிக்கும் பையனுக்கு தத்துவசாஸ்திரங்களை யெல்லாம் போதிக்க ஆசைப்படுவதை யொக்கும். ஆகையால் பக்குவத்திற்குத் தக்கபடிதான் ஜனங்களின் ஆசைகளையும், பக்தியையும், புத்தியையும், படிப்பையும், சக்தியையும் அனுசரித்து அவர்களுக்குக் கொவாபரேஷனைக்கொஞ்சங் கொஞ்சமாய்க் கட்டாயப்படுத்தியாவது புகட்டவேண்டும். பஞ்சாயத்தார்கள் பணக்காரர்களாக யிருப்பதால் மாத்திரம் பிரயோஜனமில்லை. அன்பு ஒழுக்கம்முதலிய கோவாபரேடிவ் குணங்கள்தான் முக்கியமாயிருக்க வேண்டும். தான் இதைச் செய்தால் இதனால் தனக்கு என்ன கிடைக்கும் என்று பிரதிப்பிரஜோனத்தை எதிர்பார்க்காமல், கோவாபரேஷன் ஏழைகளின் நேசனாகையால் தனக்கு அதில் நிர்வாகவேலை கிடைத்தவுடன் அது ஈசுவகிருபை யென்றுணர்ந்து தன்னாலியனறவளவு எல்லாருக்கும் உபகாரம்செய் வதையே நாட்டமாகக்கொண்டு நான் இந்தமுயற்சியைச் செய்தால் இதனால் ஜனங்கள்எவ்வளவுஉபகாரம் பெறுவார்கள்" என்னும் கொள்கையைக்கொள்வதற்கு தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு

ஜனங்களுக்கு முன்வந்து பலவிதத்திலும் உபகாரம் செய்யவேண்டாங்டும். அத்தகையநாட்டம் ஏற்பட்டுவிட்டால் "வேனுமென்றால் வேரிலும் காய்க்கும்" என்னும் பழமொழிப்படி சந்தர்ப்பமும் சக்தியும் கிடைக்காமற்போகாது. சாதாரண ஜனங்கள் கோவாபரேஷனில் சேருவது லௌகிக உபகாரம்பெறும் பொருட்டே யாகையால் அவர்களைச்சீர்படுத்துவது, பஞ்சாயத்தாரும் பிரசிடெண்டும் புத்திசாலிகளாகவும் உண்மையான தேசாபிமானிகளாகவும் மாத்திரமிருந்தால், ஒரு கஷ்டமான வேலையாகமாட்டாது. எப்படியென்றால் வாரத்தில் ஒரு நளாவது ஒருகுறிப்பிட்ட நேரத்தைக் காலையிலோ, பகலிலோ, அநேகமாய் எல்லாருக்கும் சௌக்கியமான வேளையிலோ ஏற்படுத்தி அச்சமயம் ஒவ்வொரு கோவாபரேடரும் ஆஜரா வேண்டியது அவசியம் என்றுநிபந்தனை செய்து கோவாபரேடிவ் புல்லடீன் பத்திரிகைகளை அப்பொழுது படித்துவியாக்கியானம் செய்து பைலாக்களையும் போதித்து சுயநயஎண்ணத்தாலேயே மூடப்பட்டுள்ள மூட்டத்தை தேசாபிமான ஊக்கமென்னும் பலமான கையினால்திறந்து கோவாபரேஷன் என்னும் ஆனந்த ஒளியை அவர்களுடைய புத்தியில் புகவிட்டால் பிறகு ஒவ்வொருவருக்கும் உண்மையான கோவாபரேடிவ் ஞானம் நாளடைவில் ஏற்பட்டு ஓங்குவார்களென்று நம்புகிறோம். இப்படி ஏற்படுத்தும் கிளாசுகளுக்குச் சரிவரவரும்மெம்பர்களின் சௌகரியங்கள்தான் முந்திகவனிக்கப்படும் என்பது, முதலாவது நிபந்தனையானால் வெகுநன்மைகள் உண்டாகும் என்பது திண்ணம்.


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் X] 1918ஆ நவம்பர்மீ [இலக்கம் 5


MAR 1919

## பத்திராதிபரின் குறிப்புகள்

### கோவாபரேஷனின் பேர்துப்பெருமை.

"அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச்சிறப்பு.

கோவாபரேஷன் என்பது 'அன்பு' என்னும் குணத்தின் பேரப்பிள்ளை. எப்படியென்றால் அன்பிலிருந்து 'ஆர்வம்' என்று சொல்லும்படியான பிரேமை என்னும்பிள்ளை பிறக்கிறது. அகண்டபரிபூர்ண சமஷ்டியிலிருந்து வியஷ்டி யென்னும் தோற்றம் இயல்பாக ஏற்படும்போது, பகுக்கமுடியாமற் கலந்து, சொல்லவும் நினைக்கவும் முடியாமலிருந்த தன்மையிலிருந்து ஏற்படும் முதல் தோற்றம் அன்பின் தோற்றமே. ஆகவே அன்பின் பெருமை அபாரம். அது கடவுளின் முதல் வியக்தியான படியால்தான் அதற்கும் கடவுளுக்கும் வித்தியாசமில்லையென்றும் அதுவே கடவுளென்றும் திருமந்திரம் என்னும் அருமையான நூலில் பின்வருமாறு கூறுகிறது.

அன்பு சிவமிரண் டென்பா றிவிலார்
அன்பே சிவமா வதாருமறிகிலார்
அன்பே சிவமா வதாருமறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே.

ஆகவே இவ்வருமையான அன்பிலிருந்து ஆர்வம் என்னும் ப்ரேமை, அதாவது விசுவாசம்,பிறக்கிறது.இந்த விசுவாசம் என்னும் பக்தியினால் தான் விஷயபோகங்களின் பொய்நன்கு விளங்கி,தான்உய்வதோடுதிருப்தி

யடையாமல்,சுபாவமான ப்ரேமை உண்டாகி,எல்லோரும்சுகப்படவேண்டும் என்னும் சமரசபுத்தி உதிக்கிறது. இந்த அருமையான ஆர்வம். என்னும் ப்ரேமையிலிருந்துதான் நண்பு என்று சொல்லப்படுகிற கோவாபரேஷன் என்னும் பேரப்பிள்ளை பிறக்கிறது. ஆகவே கோவாபரேஷன் என்பது ஈசுவரனுடைய அருமையான நேர்சம்பந்தத்தைப் பெற்று, கடவுளின் கண்மணியாக இருக்கிறதென்பதை, 'கண்டதே காக்ஷி, யுடண்டதே உறுதி' யென்று தெய்வத்தன்மையைச் சற்றும் கவனியாது சுயநல, ஆசா, பாசக்கிலேச, விஷயங்களையே மெய்யென்று நம்பியிருக்கும் கோவாபரேடர்கள் கொஞ்சம் கவனித்து அதில் உண்மையான பக்தியை நாட்டிக் கோவாபரேஷனில் ஈடுபட வேண்டுமென்பதே எங்களுடைய அவா. மேலும் 'நண்பென்னும் நாடாச்சிறப்பு' என்று சொன்னதிலிருந்து கோவாபரேஷனின் சிறப்பு "நாடாச்சிறப்பு" என்னும் அப்பெருமையையும் பெற்றது. நாடாச் சிறப்பு என்றால் 'நாம் உபகரிக்கிறோம் அதனால் நம்மை யெல்லோரும் கௌரவிக்கிறார்கள், என்றதிருப்தியை நாடாமலும், தன்னை அறியாமலும் பிரதிபலனை நாடாமலும், இயல்பாக மலர் எப்படி "தான் மலர்ந்து அதினால் ஜனங்களுக்கு சுகந்தத்தைக் கொடுக்கிறோம்" என்று சங்கற்பித்துக் கொண்டு செய்யாமல் சுபாவமாக சுகந்தத்தைவீசுகிறதோ அப்படி சிநேகத்தை உலகத்தில் "லோகாஸ்ஸமஸ்தாத் சுகினோபவந்து" என்ற ஆசீர்வாதத்துடன் உதாரணமாகப் பரவுவித்து கோவாபரேஷனானது செய்வோன் சொய்விப்போன் இருவருக்கும் பயனளிக்கும் என்பது ஏற்படுகிறது. இக்கோவாபரேஷனின் பெருமையைக் கொஞ்சங் கொஞ்சமாய் எல்லார்க்கும் சொல்லிப் பலவிதத்திலும் ஜனங்களை உய்விக்கவேண்டுமென்பதே இப்புலெடினுடைய நோக்கம் என்பது யாருமறிந்த விஷயம். இப்புலெடின் பத்திரிகையை ஒவ்வொரு சங்கமும் வாங்கவேண்டியது அவசிமாவதல்லாமலும், பொருட் சௌகரியமுடைய கோவாபரேடர்கள் தங்கள் சொந்தத்திலுங்கூட வரவழைத்து அதனால் தங்கள் குடும்பத்திலுள்ள ஸ்திரீகுழந்தைகள் முதலியோர்களையுங்கூடக் கோவாபரேடர்களாக ஆக்கிவிடலாம். உண்மையான பெருமையை நாடுபவர்களெல்லாம், கோவாபரேஷனில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபடுவதனாலேதான் அப்பெருமையை அடைகிறார்கள்.

## ஓர்மதிப்புரை.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.

சோகத்தூர் கோவாபரேடிவ் சொஸைடியின் சிகரிடேரியாகிய M.S. விஜயராகவாசாரியாரவர்கள், வந்தவாசி கோவாபரேடிவ் யூனியன் மகா



நாட்டில் படித்த இனிய வியாசத்தை நேயர்கள் சவிஸ்தாரமாய் இச்சஞ்சிகையின் பக்கங்களிலேயே கண்டு மகிழலாம். அவருக்குக் கோவாபரேஷனிலிருக்கிற நம்பிக்கை, உற்சாகம், பக்தி கௌரவம் இவைகளை உள்ளபடி புகழ எம் தரமன்று. அச்சபையில் அவர் புல்லெடின் பத்திரிகையைப்புகழ்ந்து பாடியிருப்பதிலிருந்து அவருக்கு அதன் மீதுள்ள ப்ரேமை தெறிகிறது. அது ஒவ்வொரு சங்கத்திற்கும் போய் கவனித்துப்படிக்கப்பட்டால் கோவாபரேடிவ் ஒழுக்க உயர்வை எல்லாக்கோவாபரேடர்களும் நன்கு உணர்வார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது. இப்பத்திரிகை விசேஷமாய்ப் பரவுவதினால் ஏற்படும் பலவித க்ஷேமத்தை நன்றாய் நம்மிட விஜயாராகவாசாரியாரைப்போல எல்லாக் கோவாபரேடரும் உணர்ந்தால் காலக்கிரமத்தில் கோவாபரேஷனுடைய அந்த ரங்கத்தை அறிந்து உடம் பெடுத்தபயனைப் பெறுவார்கள் என்பதற்கு ஆக்ஷேபமில்லை.

மேற்சொன்ன கோவாபரேடிவ் பக்தரான M. S. விஜயராகவாசாரியார் "ஐக்கிய நாணய சத்திய சந்தன்" என்னும் பெயரிய ஓர் இனிய கதையை நாடகநடையில் எழுதியிருக்கிறார். அதையும் இச்சஞ்சிகையில் நேயர்கள் கண்டு களிக்கலாம். தெரியாத்தனத்தினால் அருமையான பொழுதை சீட்டாடுதல் முதலிய வீண் தொழில்களில் போக்கி, கண்டவிடங்களில் கவனியாது கடன்பட்டு நெஞ்சம் கலங்கிப் புண்படும் சாதாரண ஜனங்களுக்கு ஒழுக்க உயர்வையும் ஒப்புரவின் மேன்மையையும் இந்நாடகம் போதிக்கும். கோவாபரேஷனில் பக்தியுள்ள ஒவ்வொரு தேசாபிமானியும் இதை இனிமையுடன் படிப்பார்களென்று நம்புகிறோம். இவ்விஜயராகவாசாரியின் தன்னலங்கருதாத உழைப்பிலிருந்து படிக்கத்தெரிந்த ஒவ்வொரு கோவாபரேடரும் விசேஷ கற்பனைகளைப் பெறறு அவருடைய ஊக்கத்தைப் பின்பற்றி யுழைத்துத் தேச க்ஷேமமென்னும் பெரும் விருந்தைப் பகிர்ந்துண்ணும் பாக்யத்தைப் பெறுவார்களாக.

## சென்னிமலை லோகல் கோவாபரேடிவ் யூனியனின் வேலைத்துவக்கமும் ஷை யூனியனின் முதலாவது கான்பரன்ஸும்.

சென்னிமலை கோவாபரேடிவ் யூனியன் வேலைத்துவக்கமும் ஷை யூனியனின் முதலாவது கான்பரன்ஸும் 1918ஞு நவம்பர்மீ 19வ செவ்வாய்க்கிழமை சென்னிமலை கிராமச்சாவடிக்கு முன்புறம் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகையில் நடைபெற்றது. கான்பரன்ஸின் அக்கிராசனத்திற்காக உத்தேசிக்கப் பட்டிருந்த விஜயமங்கலம் கோவாபரேடிவ் யூனியன் பிரஸிடெண்டு ம-ள-ள-ஸ்ரீ K. M. சின்னரங்கய்ய கவுண்டர் அவர்களை ஷை யார் இறங்கியிருந்த ஜாகாவில் யூனியன் டைரி

கேட்டுகளும், இன்னும் மற்றுமுள்ள கனவான்களும் மரியாதைகளுடன் வரவேற்று வாத்யகோஷங்களுடன் ஷை யாரை ஊர்வலமாக கான்பரன்ஸ் பந்தலுக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டது.

ஷை தேதி பகல் 1 மணிக்கு ம-ா-ா-ஸ்ரீ ஈரோடு சர்க்கில் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் V. நயினார் செட்டியார் அவர்களால், சென்னிமலையில் கோவாபரேடிவ் யூனியன் ஸ்தாபிதமாகவும் அதன் வேலை துவக்கப் படவும் அத்தாக்ஷியாக, கள்ளிக்கோட்டை செக்ஷன் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ, O. K. குன்குன்னி மேனன், B. A., அவர்களால் கொடுக்கப்படலான ரிஜிஷ்ட்ரேஷன் ஸர்டிபிகேட்டு படிக்கப்பட்டு, வேலை துவக்க அனுமதிபெற்று, பைலாக்களுடன் கூடிய யூனியன் மினிட் புஸ்தகமும் கொடுக்கப்பட்டது. அச்சமயம் ஷை யூனியனில் அணைக்கப்பட்டுள்ள சங்கங்களில் 9 சங்கங்களி லிருந்து மட்டும் வந்து ஆஜர்ஆகி இருந்த 15 டெலிகேட்டுகளைக் கொண்டு யூனியன் மஹாசபை மீட்டிங் நடைபெற்றது. அதற்கு 72 நெ. சென்னிமலை சொசைடியிலிருந்து டெலிகேட்டாகவந்திருந்த ம-ா-ா-ஸ்ரீ G. செல்வப்பிள்ளை செட்டியார் அவர்கள் பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்னிட்டு யூனியின் விதிகள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. இந்த யூனியனை ரிஜிஸ்டர் செய்தும் வேலை துவக்க அனுமதித்தும் நம்முள் ஒற்றுமையை உண்டாக்கியதற்காக ம-ா-ா-ஸ்ரீ அசிஸ்டெண்டு ரிஜிட்ரார் அவர்களுக்கு ஷை சபையின் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. யூனியன் வேலையை நிர்வகித்து வர ஏழு கவர்ணிங்பாடி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களில் ம-ா-ா.ஸ்ரீ G. செல்வப்பிள்ளை செட்டியார் அவர்களை யூனியன் பிரஸிடெண்டாகவும் ம-ா-ா-ஸ்ரீ C. K.சுப்பிரமணிய அய்யர் அவர்களை யூனியன் செக்ரிட்டேரியாகவும் நியமிக்கப்பட்டது.கடைசியாகஇந்த மஹா சபையின் அக்கிராசனத்தை வகித்த ம-ா-ா-ஸ்ரீ G. செல்வப்பிள்ளை செட்டியார் அவர்களுக்கு வந்தனத்தைச் செலுத்துவதென்னும் தீர்மானத்துடன் யூனியன் வேலைத்துவக்க வைபவம் பகல் 2 மணிக்கு முடிவடைந்தது.

### சென்னிமலை கோவாபரேடிவ் யூனியன் முதலாவது கான்பரன்ஸ்

19-11-1918ல் பகல் 2-மணிக்கு கான்பரஸ் துவக்கமாய் விஜயமங்கலம் கோவாபரேடிவ் யூனியன் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ K. M. சின்னரங்கய கவுண்டர் அவர்கள் அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட,ஷையார் அக்கிராசனம் வகித்தார்.அச்சமயம் யூனியன் டெலிகேட்டுகளும் இன்னும் மற்றுமுள்ள கனவான்களான விஸிடர்களும் வரவேற்கப்பட்டார்கள். கான்பரன்ஸ் கொட்டகையானது வாழை, மாவிலை, கமுகு,



முதலிய தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன், யூனியன் ஜாக், கொடியும் உன்னதமாய்க் கட்டப்பட்டிருந்தது. யூனியனில் அணைக்கப்பட்டுள்ள சங்கங்களில் அனேகமாய் எல்லா வற்றிலிருந்தும் பிரதிநிதிகளும், ஊக்கமுள்ள ஐக்யஸ்தர்களும், அபிமானமுள்ள இதர ஜனங்களும் கூடி மொத்தம் 125 பேர்கள் பகல் 2-மணிக்கு சரியாய்க் கூடிவிட்டார்கள். விஸிடர்களில் முக்யஸ்தர்கள்:— கோயமுத்தூர் ஜில்லா பாடசாலைகளின் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ K. C. S. அனந்த நாராயண அய்யர் அவர்கள், சென்னிமலை சப்ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ B. ராமகிருஷ்ணராவ் அவர்கள், திருப்பூர் கோவாபரேடிவ் யூனியன் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ T. V. நஞ்சுண்டய்யர் அவர்கள், சென்னிமலை சால்டு சப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் அவர்கள், ஈரோடு சர்க்கில் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ V. நயினார் செட்டியார் அவர்கள், திருப்பூர் சர்க்கில் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ S. A. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், ஈரோடு வி Y. M. C. A. செக்ரிட்டேரி ம-ா-ா-ஸ்ரீ நல்லப்பா அவர்கள், கம்புளியம் பட்டி ம-ா-ா-ஸ்ரீ K. S. சின்னரங்கய கவுண்டர் அவர்கள் முதலியவர்கள். பிரஸிடெண்டு அவர்களும் எழுந்துதன்னுடைய அருமையான பிரசங்கத்தைப் படித்தார். பிரஸிடெண்டு அவர்களின் உபன்யாசம் முடிந்ததும் மேற்படியார் உத்திரவுப்படி C. K. சுப்ரமண்ய அய்யர், கான்பரன்சுக்கு வரக்கூடாமைபற்றிக் கனவான்கள் எழுதிய கடிதங்களைப் படித்தார். அவைகளில் முக்கியமானவைகள்:— ஆனரபில் Mr. B. V. நரசிம்மய்யர் அவர்கள், ராவ்பகதூர் T. S. பாலகிருஷ்ண அயயர் அவர்கள், நீலகிரி கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ U. L. வெங்கிட்ட நரசய்யா அவர்கள் முதலியோர்களின் கடிதங்கள். அப்பால் திருப்பூர் யூனியன்பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ T. V. நஞ்சுண்டய்யர் அவர்கள் யூனியன் நடத்தப் படவேண்டிய விஷயங்களைக் குறித்தும்,ஈரோடு Y. M. C. A. செக்ரிட்டேரி ம-ா-ா-ஸ்ரீ நல்லப்பா அவர்கள் ஷை விஷயமாயும், கோவாப்ரேஷன் மூலமாகப் பலவகைகளில் அடையக்கூடிய நன்மைகளைப் பற்றி ஈரோடு சர்க்கில் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ V. நயினார்செட்டியார் அவர்களும், திருப்பூர் சர்க்கில் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ S. A. சுப்பிரமண்ய அய்யர் அவர்களும் யூனியன் நிர்வாகம் நடித்தப்படவேண்டிய விதத்தைப்பற்றியும் சொஸைடிகளின் பஞ்சாயத்துகளுக்கு இருக்கவேண்டிய சிரத்தையைப்பற்றியும், கோயமுத்தூர்ஜில்லா பாடசாலைகளின் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ K. C. S. அனந்த நாராயண அய்யர் அவர்கள் கோவாபரேடிவ் சங்கங்களால் வித்யாவிஷயத்தில் செய்யக்கூடிய நன்மைகளைப்பற்றியும் அது விஷயத்தில் சொஸைடிகளின் டை

ரக்டர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய அக்கரைகளைப் பற்றியும் வெகு சவிஸ்தாரமாகவும் ருசிகரமாகவும் உபன்யசித்தார்கள்.

பின்வரும் முக்கியமான தீர்மானம் அக்கிராசனாதிபதியால் பிரேரேபிக்கப்பட்டு கான்பரன்ஸால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டதுடன் இதை கவரன்மெண்டுக்குத் தெரிவிக்கும்படியாகவும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது:—

பொதுஜனங்களின் நன்மையின் பொருட்டே ராஜாங்கங்கள் இருக்கின்றனவென்னும் கொள்கையை நிலைநிறுத்தும் பொருட்டு தர்மயுத்தம் நடத்திவந்த நம் ராஜாங்கத்தாரும் நேசதேச ராஜாங்கத்தாரும் வெற்றி அடைந்ததைப்பற்றி நாம் அளவற்ற சந்தோஷத்தை அடைந்திருக்கிறோமென்றும், அந்த யுத்தத்தில் இந்தியர்களும் சேர்ந்து வெற்றி அடையும்படி யுத்தம் செய்ய இடங்கொடுத்ததைப் பற்றி நம்முடைய நன்றியறிதலையும் கவர்ன்மென்டாருக்குத் தெரிவிக்கும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பேரில்மாலை 4-30 மணிக்குச் சரியாய் சபைகலைந்து டெலிகேட்டு-விஸிடர் என்ற வித்யாசமில்லாமல் பந்தலில் ஆஜர் இருந்த 150-ஜனங்கள் வரையில் எல்லோருக்கும் பல விதமான சிற்றுண்டிகளும், காபியும், தாராளமாய் வழங்கப்பட்டு பின்பு 5-30 மணிக்கு மறுபடியும் சபைகூடியதும் மரியாதையாக வாத்யகோஷங்களின் இடையில் முக்கியஸ்தர்களுக்கு யூனியன் பிரஸிடெண்டு அவர்களால் மாலை இடப்பட்டு. அனைவர்களுக்கும் தாம்பூலமும் வழங்கப்பட்டன.

மேற்கண்டவைகள் முடிவுபெற்றவுடன் அக்கிராசனாதிபதியவர்கள் தம்முடைய அருமையானதும், சந்தோஷத்துடன் கூடியதுமான முடிவுரைப்பிரசங்கத்தை செய்து முடித்து கான்பரன்ஸை முடிவுக்குக் கொண்டுவர, அக்கிராசனாதிபதி, டெலிகேட்டுகள், விஸிடர் முதலிய கனவான்கள் ஆகிய அனைவர்களுக்கும் மாமூல்படி சந்தனமளிக்கப்பட்டதின்மேல் வெகுகூட்டங்களின் இடையில் வாத்யகோஷ்டங்களுடன் அக்கிராசனாதிபதி அவர்கள் அவரிட ஜாகாவிற்கு அழைத்துவிடப்பட்டார்கள்.

இதுபோன்ற வைபவம் எக்காலத்திலும் இவ்விடத்தில் நடைபெற்றதைப பார்த்திராத டெலிகேட்டுகளும், விஸிடர்களும், அடைந்த சந்தோஷத்திற்கும், ஊக்கத்திற்கும், அளவில்லை.

ஷை தேதி ராத்திரி 9-மணி முதல் 12-மணிவரையில்கான்பரன்ஸை முன்னிட்டு ஊர் பொதுஜனங்களால் கல்பாத்தி பாகவதரைக்கொண்டு நடத்தப்பட்ட "வத்ஸலா" கல்யாணம் என்னும்ஹரிகதா காலக்ஷேபம் வெகு நன்றாய் இருந்தது.



## திருவல்லிக்கேணி, அர்பன் கோவாபரேடிவ் சோஸைடி, லிமிடெட்.

வி. வி. கங்காதர சாஸ்திரியா ரவர்கள் எழுதிய தன் சாராம்சம்:—ஆலோசனைகள் கொடுக்க வேண்டிய ஏற்பாடு 'ஆதரணை மாதிரியில்' இருக்க வேண்டுமென்பதே டைரக்டர்களின் நிபந்தனை. எனக்கும் அம்மாதிரி நோக்கமே யாகையால் கோவாபரேடிவ் அபிமானிக ளெல்லாரும் தீர்மானமுள்ள முன்னேற்றத்தைத் திருவல்லிக்கேணி கோவாபரேடிவ் சொஸைடி தேவையானபடி அடைவதற்காக இதைக் கண்டித்தோ ஆமோதித்தோ பேசிக் கோவாபரேஷனுக்கு உதவி செய்ய வேண்டும்.

சங்கம் வெகு திருப்திகரமாக இதுவரையில் வேலைசெய்து வந்திருக்கிறது என்ற விஷயம் அதில் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு கோவாபரேடர்களுக்கும் உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கு மாயினும் ஆரம்பம் முதல் அதில் ஈடுபட்டு அபிமானித்து வரும் எம் போலியர்களின் சந்தோஷம் சிறிதல்ல. இச்சந்தோஷத்தினால் சங்கங்களின் நடவடிக்கைகளில் குற்றங்குறைகள் காணப்பட்டால் அதை அலக்ஷியப்படுத்தாமல் வெகு ஜாக்கிரதையாய் வேண்டியமாறுதல்களைச் செய்து சீர்திருத்தங்களை, காலத்திற்கும் அனுபவத்திற்கும் தக்கப்படி கைகொண்டால் தான் சங்கம் மலின மடையாமல் செழித்து வளரும். ஆகையால் நல்ல முகூர்த்தம் என்று பார்க்கவேண்டியது, ஆலோசனையில்லாத மூடபக்தர்களுக்கே யொழிய பகுத்தறிந்து சங்கத்தின் க்ஷேமத்தை கவனிக்கும் புத்திமான் களுக்கல்ல. இப்பொழுது திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைடியின் வேலையை பலப்படுத்தப் பல முயற்சிகள் காணப்படுகின்றன. ஆனால் இம்முயற்சிகள் சித்தியடையுமா என்னும் விஷயத்தைத்தான் அபிமானிகள் அடிக்கடி கவனிக்க வேண்டும்.

சரக்கு முதலியவைகளைப் பகிர்ந்துகொள்ளும்கோவாபரேடிவ்முறையினால், வீட்டுச் சரக்குகளை சௌகரியமாகப்பெறும் உபயோகத்தைத் தவிர, மேலான ஒழுக்கம், படிப்பு இவைகளை நல்ல உணர்ச்சியுடனும் தங்களை அறியாமலேயும் பெறுகிறார்கள். லாபத்தை உத்தேசித்து பிறர் கஷ்டத்தை கவனிக்காமல் சமயம்போல்விலையை உயர்த்தாமை ஒரு விஷயம். சரியானபடிக்கல், படி முதலியவைகளையே எப்பொழுதும் உபயோகித்தல் மற்றொரு விஷயம். வியாபாரிகள் தங்களுக்குள் ஏதாகிலும் பேசிக்கொண்டு அனாவசியமாய் விலையை உயர்த்துவது இதில் கிடையாது. வியாபாரம் அதிகமாகப்புரளப்புரள லாபமும் அதிகமாகி, மெம்பர்களுள் பங்கிட்டுக்கொள்வதற்கு டிவிடெண்டும் அதிகமாகிறது. ஒழுக்க சௌகரியங்களை ஒவ்வொன்றாய் உரைக்கப்புகின் இடம் போதாது. இப்பொழுது ஒழுக்க உயர்வைப் போதிக்க சங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பது கேள்வி. திருவல்லிக்கேணியில் கோவாபரேடிவ்

சொஸைடியை ஆரம்பித்தகாலத்தில் ஒற்றுமை, ஒழுக்கம் இவைகளின்
உயர்வை அடிக்கடிமீட்டிங்குகள் கூடிபோதிப்பதுசங்கத்தின் தினசரி
வேலையாயிருந்ததினால்மெம்பர்களின்தொகை தினந்தோறும் விருத்தியாய்
க்கொண்டுவந்தது. பட்டணம்முழுதும் செய்யக்கூடியவேலை மிக்கவிசே
ஷமாயிருக்க அவ்வேலைதலையாபீசிலுள்ள சில சிப்பந்திகளிடம் ஒப்புவிக்க
ப்பட்டிருப்பதனால் தற்காலம் அப்போதனாவேலை சரிவரப் பரவுவதற்கு
இன மில்லை. இச்சங்கத்தின் பெருமையும் அபிமானமும் இப்பொழுது
அடைந்திருக்கும் மலினத்தைநீக்கி எல்லாவிஷயத்திலும் விருத்தியடைய
முயற்சிக்கவேண்டிய அவசியம் தெரிகிறது. இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்
டால் மதரூஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுக்கென்று ஏற்
படுத்தப்பட்ட வேலைகளை அபகரித்தவர்களாவோம் என்பது சிலசரியான
இடங்களில் ஏற்படும் வதந்தி. இவ்விரண்டின் வேலைக்கு முள்ளவித்தி
யாசம் அதிகமில்லை. தனிமையையும் போட்டியையுமே அங்கமாய்க்
கொண்டிருக்கும் ஜனங்களுக்கு ஒழுக்கம், பொருளாதார உயர்வு இவை
களை இரண்டு விதமாகப்போதிக்கும் ஒரே இயக்கத்தின் விகசிதமல்லவா?
ஆகவே திருவல்லிக்கேணி அர்பன் சொஸைடியின் வேலையிலிருந்து
கோவாபரேடிவ் போதனை வேலையைப்பிரிப்பது உடலிலிருந்து உயிரைப்
பிரிப்பதை யொக்கும்.

கோவாபரேஷன் முறையில் சரக்கு முதலியவைகளைப் பகிர்ந்து
கொள்வது, தகுதியான ஏற்பாட்டினால்தான் சாத்தியமாகும். தற்காலம்
தரகர் மூலமாகத்தான் சகலவியாபாரங்களும் நடக்கின்றன. கோவா
பரேஷனின் நோக்கம் இவ்வேற்பாட்டைத் துலைப்பதே. அதனால் சங்
கத்திற்கு இலாபமே ஒழிய நஷ்டமாகாது. தற்காலமிருப்பதுபோல்
மகா முக்கியமான அரிசியை, சங்கம் நேரில் வரவழைக்காமல் தரகர்
மூலமாய் வரவழைத்தால் அது முட்டாள்தனமல்லவா? இம்மாதிரி
விஷயத்தைப் பற்றிக் கிளர்ச்சி செய்தபொழுது, டைரக்டர்கள் சன்னை
யினால் ஏற்பட்ட ரெயில் கஷ்டமே நேரில் வரவழைக்கக்கூடாத கார
ணம் என்றார்கள். இம்மாதிரி பதில் சொஸைடிபோன்ற சகல சௌ
கரியங்களுமுள்ள இடத்திலிருந்து வருவது அனுசிதமென்றும், நெல்லூரி
லிருந்து ஏன் எளிதாய் படகு ஏற்பாடு செய்யக்கூடாதென்றும் கேட்ட
தற்கு, தகுந்த மனிதர்கள் கிடைக்காமையே, என்றபதில் வந்தது. எல்
லாக் கிளையாபீசுகளின் வேலைகளையும் தீர்க்கமாகக் கவனிக்கவே சிகரிடே
ரிக்கு நேரம் சரியாகப்போகிறதாம். பொருளாதார விஷயத்தில் சரக்கு
வாங்கும் விஷயம் முக்கியமாய் கவனிக்கப்படவேண்டியதாதாலால் அதற்
குத் தேவையான ஏஜண்டுகளைத் தனியாய் ஏற்படுத்தி அவ்வேலைகளையே
அவர்களுடைய தினசரிக்கடமையாக ஏற்பாடு செய்யவேண்டும்.



திறமைக்கும் பரஸ்பர ஒத்தாசைக்கும் கோவாபரேஷன் பிரதி நிதி
யாகவிருக்கிறது. அது ஒருவருடைய தயவையும் கோரவில்லை. தன் மெம்
பர்களை கௌரவஸ்தர்களாகச் செய்யவேண்டுமென்பதே அதன்நோக்கம்.
சொஸைடியின் நிர்வாகம் முழுவதும் ஒரு டைரக்டர் கூட்டத்தின்
வசமாகவே யிருத்தல் அக்கூட்டம் எவ்வளவு திறமையுள்ளதாக விருந்
தாலும் கோவாபரேடிவ் உணர்ச்சிக்கு பிரதி கூலமே யொழிய அனுகூல
மில்லை. தற்கால நிர்வாகத்தின்படி ஒருவருடைய குணம் ஒழுக்கம் இவை
கள் எப்படி யிருந்தாலும் சங்கத்தில் கஷ்டமில்லாமல் மெம்பராய்ச்
சேர்ந்துவிடலாம். முந்தியோ, ஒவ்வொரு மனுதாரரும் மெம்பராவதற்கு
லாயக்குள்ளவர்களா? மெம்பரானால் யாதொரு தொந்தரவும்கொடுக்காமல்
சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உபயோக முள்ளவர்களாவார்களா, என்ற
இம்மாதிரி விஷயங்கள் நன்றாய் கவனிக்கப்பட்டன. அவ்வித கவனம்
இப்பொழுது விஸ்தாரமாய்ப் பரவி ஏராளமான மெம்பர்களுடனிருக்
கும் தற்கால நிலைமையில் சாத்தியமாகாது. தற்காலம் மெம்பர்களுக்குச்
சங்கத்தில் ஏற்படும் ஒரே பற்று என்னவென்றால் சாமான் வாங்கினால்
ஏதோ டிவிடண்டு கிடைக்குமென்பதே. சுவாதீன மார்க்கத்தை மெம்
பர்களுக்குப் போதிக்கும் வித்தியா பாகம் தற்காலம் பூஜ்யம். மெம்பர்
களுக்குள் நேசமும் பரஸ்பரபாவமும் ஏற்படவேண்டுமானால் அந்தந்த
இடங்களிலுள்ள கிளை யாபீசுகளிலேயேதான் அவர்களுடைய பழக்கம்
இருக்கவேண்டுமென்று வரையறுக்கப்பட வேண்டும். கோவாபரேஷ
னின் நோக்கம் சிக்கனத்தைப் போதிப்பது. அதற்காகத்தான் 'கூட்டுச்
சீட்டு' பண்டு ஏற்பட்டிருக்கிறது. இக்கூட்டுச் சீட்டுக்கு அந்தந்த பிராஞ்சு
ஆபீஸ் மெம்பர்கள் அங்கங்கேயே விசேஷமாய்ப் பழகுவதனால் தான்
அவர்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும் சிநேகமும் ஏற்படும். தற்
காலம்போல எந்த பிராஞ்சு மெம்பரும் எங்கே யாகிலும் எதேச்சை
யாய் வாங்குவதினால் தன் பிராஞ்சு மெம்பர்களுடன் பரஸ்பரப் பழக்
கக் குறைவுண்டாகி சீட்டு சௌகரியத்திற்கு இருக்க வேண்டிய பரஸ்
பர நம்பிக்கையற்றுப் போவதினால் பிராஞ்சின் எல்லையை நிர்த்தாரணம்
செய்து கட்டுப்படுத்த வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

இப்பொழுதிருக்கும் வழக்கத்தை மூட பக்தியினால் மாற்றாப் பிரியப்
படாமலிருக்கக் கூடாதென்றும் படிப்பு, ஒழுக்கம், ஒப்புரவு முதலியவை
களை விசேஷமாய் விருத்தி செய்து, சாமான்களை நேராக வரவழைத்து
அதனால் ஏற்படும் சௌகரியங்களுக்கு மெம்பர்களை இலக்காக்கி, தற்கா
லம் சென்னையில் கோவாபரேஷனானது வேலை செய்யும் விஸ்தீர
ணத்தை சுவாதீனமாய் ஆளக்கூடிய சிறிய கும்பல்களாகப் பிரித்து,
அவ்வவ்விடங்களிலுள்ள மெம்பர்கள் பரஸ்பரம் ஒட்டிப் பழகவேண்டிய

அவசியத்தையேற்படுத்தி அதனால் சிக்கன புத்தியைப் பரவவைக்கவேண்டும், என்று என் மனதில் பட்டதனால் இவ்வாறு எழுதலானேன். இச்சீர்திருத்தம் நம்முடைய சங்கத்தில் எப்படி சாத்தியம் என்னும் சங்கைக்கு விடை வருமாறு. எல்லா விற்பனைச்சொஸைடிகளுக்கும்தேவையான சரக்குகளை சப்ளை செய்யும் மத்திய சொஸைடி ஒன்று இருக்கவேண்டும் என்னும் அவசியத்தை ஒரு சமயம் உணரத்தான் வேண்டும். நம் சங்கங்களுக்கு, தலை ஆபீசு அவ்வேலை செய்வதற்காக இருந்தபோதிலும் அது பல ஜோலியைக் கவனிக்கவேண்டி யிருப்பதால் சரிவர கவனிக்க முடியவில்லை. இதர வேலைகளின் சுமைகளை அதனிடத்தினின்றும் நீக்கி, விசேஷ பொருட்பாலனத்தைக் கையாடச் செய்து இவ்வேலையையே கவனிக்கும்படி அதைத் தூண்டினால் அதுவும் காலா காலங்களில் சரக்குகள் கிடைக்கும் மூல ஸ்தானங்களிலேயே சௌகரியமான ஏற்பாடுகள் செய்துவிடும். பட்டணத்திலிருக்கும் மொத்த வியாபாரிகள் நமக்கு சப்ளைசெய்யக்கூடிய அளவு அரிசியைச் சேமித்து வைக்கிறார்களென்றால் நம்முடைய பொருட் சௌகரியத்தைக் கொண்டு நாம் ஏன் அவ்வேற்பாட்டை நேராக நடத்திபயன் பெறக்கூடாது? பலவிதமாக மெம்பர்களெல்லாருக்கும் சொஸைடியில் உண்மையான பற்றை உண்டாக்கி குமாஸ்தாக்களையும் வியாபாரத்தில் பழக்கலாம். மத்திய சொஸைடி, இம்மாதிரி வேலைகளையும் பிராஞ்சு ஆபீசுகளைப் பரிசோதிக்கும் வேலைகளையும் வைத்துக் கொண்டு அந்தந்த பிராஞ்சு சொஸைடிகளை தங்கள் தங்கள் வேலைகளை நடத்தும்படி செய்தால்வேலை நன்றாய் நடக்கும். மத்திய சொஸைடியின் பராமரிப்பு, எல்லா பிராஞ்சுகளாலும் அங்கங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் சோதனைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். எந்த பிராஞ்சாவது பொருட்பாங்கில் மலினமடைந் திருந்தால் தலையாபீசானது பணத்தாலும் புத்திமதியினாலும் உபகாரம் செய்யலாம்.

மேற் சொன்னவைகளை எல்லாக் கோவாப ரேடர்களும் தீர்க்கமாய் கவனித்து ஆங்காங்கு மீட்டிங்குகள் ஏற்படுத்தி ஆலோசித்து ஏற்ற மாறுதல்களையும் கவனித்து கிரமமாகக்பரவவைத்தால் கோவாபரேஷனுக்கு மிக்க உபகார மாயிருக்கு மென்பது என் அபிப்பிராயம்.

---



# வடாற்காடு ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

(138-ம் பக்கத்தொடர்ச்சி.)

“கூட்டாய் வாங்கி விற்பதில் அதிகத் தொழில் நடத்தலாம். பிரதம சங்கங்களைச் சிறுக ஆரம்பித்து தங்கள் மெம்பர்களுக்கு வேண்டியவைகளைக் கூட்டாய் வாங்கியும் அவர்கள் மாசூல்களை ஒன்றுசேர்த்து விற்றும் பிரதி நிதிகளாயிருக்கச் செய்யலாமாதலின் இதற்கு தனிஸ்தாபனங்கள் அவசிய மில்லை.” என்று ஐக்ய இயக்கத்தில் என் முதல் குருவான ஹானரபில் மிஸ்டர் ராஜகோபாலாசாரியார், நடந்த மதராஸ் மாகாணக் கூட்டுத்தொழில் கான்பரன்ஸில் பிரசங்கித்தார். நான் ஏன் இவ்விஷயத்தில் இவ்வளவு வற்புறுத்துகிறேனென்றால், குடித்தனக்காரனுக்கு விரோதி, கடன் கொடுத்திருப்பவன் ஒருவன் மாத்திரமல்ல. வர்த்தகன், லாபக்கூட்டாளி, மத்யஸ்தனான தரகரி இவர்களும் கூடப் பெரும்பகையாளிகள். கடன் கொடுப்பவனுக்கு சுபாவமாய் இளகிய மனதுண்டென்று எனக்குத்தெரியும். ஆனால் வர்த்தகனுக்கும் தரகரிக்கும் ஒன்றும் கிடையாது. தற்காலம் ஏற்பட்டிருக்கும் உணவுப் பொருளின் பஞ்சம் கிரகஸ்தமுறையின் பலனேயல்லாது, கவர்ன்மெண்டார் தங்களுக்குத் தோற்றுவதாய்ச் சொல்லும் உபசாரமொழிப்படி, குழப்பம் செய்பவர்களின் வேலையன்று. இச்சமயத்தில் இந்த விஷயம் (கூட்டுத்தொழிலில் வியாபாரம்) முக்கியமானதாயும் ஜனங்களின் கவனத்தைக்கவர்ந்து மிருக்கிறது. இங்கிலாந்திலே யுத்தத்தின் நிமித்தமாய் ஏற்பட்ட உணவுப்பஞ்சம், ஐக்யர்களால் மிக தைரியமாய் நிவர்த்திக்கப்பட்டது. அதனால் ஐக்யர்களல்லாத பலர் வியாபாரிகளிடம் பெறும் அவமதிப்புக்கிடமின்றி இரண்டு லக்ஷம் ஐக்யர்கள் வாராவாரம் சர்க்கரையும் தேயிலையும் பெற்றுவந்தார்கள். தவிர, ரொட்டி (இதர இடங்களைவிட) ஸ்டோர்களில் கால்பணம் நயமாகவே 1917 ௵ நவம்பர் ௴ வரையில் கூடவிற்றது. ஐக்யர்கள் இங்கிலாந்தில் ஒரு அவசியமான தொழில் செய்துவருவதும் அடுத்த (பார்லியமெண்ட்) நியமனத்தில் சில ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைப்பதும் ஓர் ஆச்சரியமல்ல.

கூட்டுத்தொழிலில் நாணயம் தவிர இதர வகைகளைப்பற்றி சொல்லும்போது கிரகசங்கங்களின் அத்தியாவசியத்தைப்பற்றி நான் பேசாதிருக்கமுடியாது. அப்படிப்பட்ட சங்கங்களுக்கு, குறைந்த வட்டிக்கு வெகுவாய் நீண்டகாலத் தவணைகளுக்குப் பெருந்தொகைகள் தேவையா

யிருப்பதுதான் அவைகளுக்கேற்பட்டிருக்கும் கஷ்டம். மதுரை முத
லிய பெரிய நகரங்களுக்கு ஒருவர் சென்றால் அப்படிப்பட்ட சங்கங்கள்
எவ்வளவு அவசியமென்பது தெரியும். சண்டையினால் நேர்ந்திருக்கும் கிர
கஸ்தமுறையில் ஒரு குறித்த வரும்படியுள்ள (சம்பளம் வாங்கும்)மத்திம
ஜனங்களே அதிகமாய் வருந்துகிறார்கள். மதிப்புக் குறைந்த ரூபாய், உண
வுப் பொருள்களின் பஞ்சகாலவிலை, தாங்கமுடியாத விலையுள்ள துணிப்பஞ்
சம், இவைகளே சாதுக்களான பலருடைய மனதைத்தின்று விட்டது.
அவர்களிட பெருந்தன்மையானது, கஷ்டத்தை வெளியிடாது மனதுக்
குள் மக்கி அனுபவிக்கச் செய்திருக்கிறது. இது போதாமல் நகரங்களிலே
கிரமமான வாடகைக்கு இருக்க இடமும் கிடைக்கிறதில்லை. தற்காலம்
எங்கு பார்த்தாலும் பிளேகும், இதர தொத்துவியாதிகளும், பரவி வருவ
தால் நமது கிரகங்கள் சுகாதார நீதிப்படி கட்டப்படவேண்டும். இந்த
மத்திம வகுப்பு ஜனங்கள் வெகு முக்கியமான குமாஸ்தா முதலிய உத்தி
யோகங்கள் செய்து வருவதால் சண்டையால் தற்காலம் திரவியசகாயம்
செய்யசாத்திய மில்லையென்று சொல்லாமல் கவர்ன்மெண்டார் இந்த
ஜனங்களை கருணையுடன் ஆதரிக்கும்படி நான் வேண்டுகிறேன். பம்பா
யில் கிராமச்சங்கங்கள் செவ்வனவே வேலைசெய்கின்றன வென்பதையும்
இங்கு குறிப்பிடுகிறேன்.

இந்த கூட்டுத்தொழில் இயக்கத்தில் உத்தியோகப்பற்றில்லாத இதர
பிரமுகர்கள் எப்படி நடந்துக்கொள்ளுகிறார்கள் என்பதைப்பற்றி அபி
மானிகளும் சலிப்பில்லாத உழைப்பாளிகளும் நிறைந்த இந்த சபையில்
நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. இந்த இராஜதானியிலே ஐக்ய
இயக்கம் இவ்வளவு விருத்தியாயிருப்பது பல உத்தியோகஸ்தரல்லாத
பிரமுகர்களின் அன்பார்ந்த பரோபகாரமான உழைப்பில்லாவிட்டால்
நேர்ந்திராது. இனி பின் வருஷங்களில் பம்பாயிலும் மத்திய மாகாணங்
களிலுமிருப்பதுபோல் இன்னும் பலர் (உதவிசெய்ய) முன்வரவேண்டும்.
தற்காலம் இந்த இயக்கத்தில் நன்மை செய்யலாம் என்னும் உறுதி
மாத்திரமே ஏற்பட்டிருக்கிறது. நாம் இனி செய்யவேண்டிய வேலை
மிக விரிவானது. ஏனெனில் இந்தியாவில் மூன்றில் இருவர் கிராம
வாசம் செய்கிறார்கள். இந்த இயக்கமோ அப்படிப்பட்ட குடிகளுக்கு
அவசியம் தேவையானது. நமக்குள் இத்தகைய காரியங்களுக்கு மனுஷ
சக்திகுறையவேயில்லை. இதுவிஷயமாய் அனுபவ ஞானமுள்ள ஒரு இந்
திய உத்தியோகஸ்தர் கீழ்வருமாறு தெறிவிக்கிறார்.

" உபாயத்திலும், திருஷ்டிஞானத்திலும், சோதனைசெய்தோ அனு
பவித்தோ அனுகூலங்களை அனுஷ்டிப்பதில், இந்திய கிருஷிகன்,
ஐரோப்பாவில் மேம்பாடடைந்த பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்



குப் பின்வாங்கினவன் அல்ல. ஐரோப்பாவின் மேனாட்டில் எல்லா
தேசங்களிலும் சில வருஷங்களாய் விவசாய விருத்திக்கு ஐக்ய இயக்கச்
சார்வுதான் அவசியமென ஏற்பட்டதுபோல நம் தேசத்திலும் ஐக்ய
முறையில் விருத்திசெய்யவேண்டிய சாதகங்கள் நிறையவிருக்கின்றன."

இந்த அனுகூலங்களைக் கைக்கொண்டு பிரயோஜனப்படுத்த உத்தி
யோகமில்லாத பிரமுகர்களின் உதவி இப்போது அதிகமாய்த் தேவையா
யிருக்கிறது. "உத்தியோகமில்லாதோர் உதவி," யென நான் வற்புறுத்துவ
தால் உத்தியோகஸ்தர்களின் உதவி கூடாதென்றாவது இவர்களிருவருக்
கும் இடையில் ஒரு பெரிய மறைப்புண்டாக்க வேண்டுமென்றாவது
நான் சொல்வதாய் எண்ணக்கூடாது. இதர ராஜதானிகளில் இவர்க
ளிருவருக்கும் பிரிவினை யேற்பட்டிருக்கிறது. சென்ற மீ பம்பாயில்
சில முக்கியமான ஐக்கியர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில், அவர்
கள் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள், அதிகாரம் பூராவும் தாங்களே
செலுத்தவேண்டுமென்று மாற்சரியப்படுவதாய் சொன்னது, எனக்கு
ஆச்சரியமாயிருந்தது. நம், அதிர்ஷ்டவசத்தால் நமது இராஜதானியில்
அப்படிப்பட்ட பொறாமையொன்றும் கிடையாது. இதுவரையில் நாம்
ஒருவர்க்கொருவர் தோள் கொடுத்து ஒத்து உழைத்தோம். இனியும்
அதேபாந்தவ்யம் நிலைபெற்று வருமென்பது நிச்சயம். பாருங்கள்!
உங்களிட தற்போதிய அஸிஸ்டெண்டு ரெஜிஸ்திராருக்குப் பதிலாய்
ஒரு உத்தியோகமில்லாத ஒருவர் இருந்தால், இதைவிட அதிக விம
ரிசையாய் நடத்தியிருப்பாரென்று நான் நி?னக்கவில்லை. மிஸ்டர்
வேதாசலய்யரைப்போல, குடிகள் விஷயத்திலும் கீழ்தரத்தாரான குப்
பைவாரிகளின் விஷயத்திலும், எந்த உத்தியோகமில்லாதவரும் அவ்வ
ளவு பிரியத்தோடு வேலைசெய்யமாட்டார். உப்புமூட்டை தூக்கும் ஆள்க
ளுக்காக ஒருசங்கத்தை ஏற்படுத்தினது அவரிட செழிப்பான மூளையின்
ஆழ்ந்த யோசனையால்தான். தவிர, உத்தியோகஸ்தர்களும் உத்தியோக
மில்லாதவர்களும் ஒன்றுசேர்ந்து உழைப்பதில் இன்னொரு பலனுண்டு.
தங்கள் ஜாதித்தலைவர்கள் முன்வந்து உதவிசெய்த பிறகுதான் செம்பட
வர்கள் சங்கங்கள் ஏற்படுத்த முடி?ததென்கிற விஷயம் நமக்குத் தெரியு
மாதலின், அப்படியே படிப்பு வாசனையில்லாத குடிகளுக்கு உத்தியோக
மில்லாதோர் புத்திமதிசொல்லவும், பணத்தையும் அதைச்சார்ந்த கணக்
குகளையும் கையாட உத்தியோகஸ்தர்களிட சாஸ்திரஞானமும் முறை
யும் மிக்க பிரயோஜனமாகும். இன்னொரு வழியில்கூட உத்தியோகஸ்
தர்களின் சம்பந்தம் பிரயோஜனமானது தான். அதில்லாவிட்டால்
எல்லா ஸ்தாபனங்களும் தனித்தனி பிரிவுபட்டு நிற்கும். இப்படி தனித்
தனிமையான முயற்சிகளை ஒன்று சேர்த்து கிராம நாகரீகத்தை சிருஷ்டி

செய்வதென்னும் ஒரே பெரிய நோக்கத்துடன் அவைகளை மென்
மேலும் விருத்திசெய்யவேண்டும். உத்தியோகமில்லாதவர்களின் உதவி
யை உண்மையில் பிரயோஜனகரமாக்க வேண்டுமானால் தற்காலம் ஆங்
காங்கு தனித்தனியே செய்யப்படும் பிரயத்தனங்களுக்குப் பதிலாய்,
உத்தியோகமில்லாதவர்களின் ஸ்தாபனம் ஒன்றுவேண்டும். இந்தியா
முழுவதும் இது அவசியமானதென்று கண்டுகொண் டிருக்கிறார்கள்.
மத்தியமாகாணத்தில் ஐக்கியசங்கங்களின் கூட்டம் என்பது இந்த சந்
தர்ப்பத்தில் சொல்லத்தக்கது. அதின் கோட்பாடுகளாவன:—

அணைக்கப்பட்ட சங்கங்களின் கணக்குச் சோதனை, மேற்பார்வை,
விசாரணை இவைகளைப்பற்றி ஒரு ஒழுங்கான திட்டம் ஏற்படுத்தவும்,
ஒரே ரீதியான வாடிக்கையையும் நடவடிக்கையையும் கற்பிக்கவும் எல்லா
ஐக்யர்களுடைய பொதுநன்மைக்குச் சங்கங்களை உழைக்கும்படி தூண்
டிக் கூட்டுத்தொழில் விவகாரங்களை நல்ல பாதுகாப்புள்ள முறையில்
விருத்தி செய்யவும், இந்தக்கூட்டத்தின் சிப்பந்திகளுக்குக் கற்பித்துப்
பழக்கித் தயார்செய்யவும், ஜனங்களுக்குள் ஐக்கிய இயக்கம் பரவுதற்கு
வேண்டிய சகல கார்யங்களையும் செய்யவும், பம்பாயிலுள்ள ஸென்ட்ரல்
சங்கம் அதின் நோக்கங்களில் கீழ் கண்டபடி கண்டிருக்கிறது.

ஐக்கிய முயற்சி எல்லாவற்றையும் ஒருங்கு சேர்ப்பதும், ஐக்கிய விருத்
திக்கு வேண்டிய எல்லாவற்றிற்கும் பொறுப்பாயிருப்பதும் போதனை
விசாரணை முதலிய ஐக்கிய இயக்கத்தைச் சேர்ந்த சகல விஷயங்களிலும்
சுயமான அபிப்பிராயங் கொடுப்பதும், முதலிய இந்தக் காரியத்தில்,
நோக்கமும் போதனையும் ஒன்றுபட்டு ரணகளத்தில் கட்டளைகள் எப்படி
ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அப்படி ஏற்பட வேண்டுமென்பது சொல்
லாமலே தெறியும்.

நமது இராஜதானியிலே அவ்வாறான ஓர் ஸ்தாபனம் வெகு
காலத்திற்கு முன்னமே ஏற்படுத்தப்பட்டபோதிலும் வருஷாந்திர மா
காணக் கான்பரன்ஸ் கூட்டுவதும் புல்லெடின் பத்திரிகை பிரசுரிப்பதும்
தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. அந்த யூனியனில் சொல்ப
வேலையே நடைபெறக் காரணம் போதுமான திரவிய மின்மையே. ஆகை
யால்தான் பம்பாயில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஸ்தாபனத்தின்
பிரேரேபர்கள் அதற்கு வேண்டிய திரவியத்துடன் ஆரம்பிக்க வேண்டு
மென்கிறார்கள். சங்கங்கள் மாகாண யூனியனுக்குத் தேவையான திர
விய சகாயம்செய்ய முன்வருவார்களென்று நம்புகிறேன். வங்காளத்
திலே ஐக்யஸ்தாபன சங்கத்துக்கு கவர்ன்மெண்டார் பெரிய நன்கொடை
யளித்திருக்கிறார்கள். லார்ட் ரோனல்ட்ஷேயினின் காருண்யமான
மதிப்பை அங்கு உழைக்கும் பிரமுகர்கள் அங்கீகரிக்கவேண்டிய தவசியம்.



ஐக்கிய இயக்கத்தில் மதிராஸ் கவர்ன்மெண்டாருக்கு உண்மையில் சிரத்
தையுண்டானால் அப்படிப்பட்ட உதவிசெய்ய முன்வரவேண்டும். ஏனெ
னில் இப்படிப்பட்ட ஐக்கிய ஸ்தாபனங்கள்தான் ஐக்கிய இயக்கத்தைபடிப்
பில்லாத குடியானவர்களுக்குப் போதித்துப் பரவச்செய்யும். ஐக்கியப்
பயிற்சி யின்னதென்று தெளிவாய் அறியும்வரையில் உண்மையான விருத்
தியை எதிர்பார்க்கமுடியாது.ஒன்றும் அறியாதவன் ஐக்கியனாயிருக்கமுடி
யாது..சங்கிலியின் பலம் இளப்பமான கோர்வையின்பேரில்தான் நிற்கு
மென்பதும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.இந்த சாதாரண யதார்த்தத்தை
உபேட்சைசெய்தால் மணல்கோட்டை கட்டினதுபோலாகும். ஐக்யக்
கோட்பாடுகளைப் போதிப்பதென்கிற விஷயத்தில் யூனியன் கணக்குப் பரி
சோதகர்களையும் சங்க காரியதரிசிகளையும் பழக்கவேண்டிய தவசிய
மென்பதைச் சொல்லத் தவறக்கூடாது. இலாகா இனிஸ்பெக்டர் தங்கள்
வேலையில் வேறு தனியாகப் பழக்கப்படாவிட்டாலும் நேர்த்தியான வேலை
செய்துவருகிறார்களென்பது எனக்கு தெரியுமானாலும், யூனியன் சூபர்
வைஸர்களுக்காவது ஒருதனிப் பயிற்சி அவசியம் தேவையாய் இருக்
கிறது. ஏனெனில் சங்கங்களின் கணக்குகள் பிசிரலுடையனவாயும்
விஸ்தாரமாயும் கொண்டுவரப்படுகின்றன.ஸென்ட்ரல் சங்கங்களில் கூட,
பழகின மனிதர்களே தேவையாயிருக்கிறது. வேண்டிய திரவிய சகா
யம் செய்தால் மதராஸ் மாகாணக் கோவாபரடிவ் யூனியனும் இது
விஷயங்களை கவனிக்கும்படி ஏற்படுவதுடன் இந்த இராஜதானியில் சரி
யான ஐக்ய ஞானத்தைப் பரவச்செய்ய சாதனமான ஒரு ஸ்தாபனமாகு
மென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

ஐக்ய இயக்கத்தை வெகுவாய்ப் பாதிக்கிற ஒன்றிரண்டு விஷயங்
களைப்பற்றிச் சிறிது சொல்ல நான் விரும்புகிறேன். கடன்களைத் திருப்
பிக்கொடுக்க வேண்டிய கெடுவு ஒரு வருஷமாக யிருந்ததை, இப்போது
பத்து வருஷமாக மாற்றியது இந்த சங்கங்களின் முதலை வெளிக்
காட்டாது பூட்டிவிடுமோவெனப் பயமாயிருக்கிறது. இந்த இயக்கத்
தில் நன்மனமுள்ள ஒவ்வொருவரும் குறுகிய காலக்கடன்களையே ஜனங்
கள் அதிகம் விரும்பும்படி செய்யவேண்டியது. இந்த சொற்பத் தவணைக்
கடன்களின் உபயோகங்களைப்பற்றி உபாயக்காரர்களான கிராமவாசி
களுக்கு நாம் செவ்வனே தெரிவித்தால் அப்படியே செய்வாரென்பதில்
ஆக்ஷேபணையில்லை. ஒரு மெம்பர் கடன் வாங்கக்கூடிய அளவு நீண்ட
காலக்கடன் வாங்கிக்கொண்டானானால் பிறகு தனக்கு உண்டாகும் அவ
சரச்செலவுகளுக்கு ஒருபைசாவேனும் சங்கத்திலிருந்து எதிர்பார்க்கமுடி
யாது. கிஸ்தி முதலிய செலவுகளுக்குக்கூட வேறு கடன்கள் கிடைக்
காது. ஆனதால் சங்கத்தில் அவனுக்கு சிரத்தை அடியோடு இல்லாமற்

போய்விடுகிறது. அவன் விதியின்றி வட்டிக் கடைக்காரனுடைய உதவி
யைக் கோரும்படி நேருகிறது. அப்படி ஒருதரம் வட்டிக் கடைக்காரனி
டம் பத்து வரவுசெய்பவன் ஐக்யனென்கிற பெயரையிழக்கிறான். குறு
கிய கடன் அதிகமாய் வாங்கும் மெம்பர்களிருக்கும் சங்கத்திலும் அச்
சங்கம் சேர்ந்திருக்கும் ஸென்ட்ரல் பாங்கிலும் பணம் அடிக்கடி புரண்
டுக்கொண் டிருக்குமாதலால் மேற்படி கடன் மிகவும் அவசியமானது.
தவிர ஸென்ட்ரல் பாங்குகளில் வைக்கப்பட்டிருக்கும் டிபாஸிட்டு
களெல்லாம் விசேஷமாய் 12 மாதம் தவணைக்குள்பட்டவைகளாதலால்
இந்த டிபாஸிட்டுகளெல்லாவற்றையும் வாபீஸ் கேட்கப்பட்டால் இந்த
சங்கங்கள் கொடுக்க சாத்திய மில்லாமலிருக்கும். இதுநிற்க, சொற்பகாலக்
கடன்கள், நபர் ஜாமீனின்பேரில் கொடுக்கப்படுவதால் நீண்டகாலத்துச்
சொத்துக் கொதுவைக்கடனைவிட இவைகள் ஐக்கிய ஒழுங்குள்ளவை.

நான் சொல்லவிரும்பும் அடுத்த விஷயம் டிபாஸிட்டைப்பற்றித்தான்.
ஸென்ட்ரல் சங்கங்கள் தங்களுடைய பிரதேசங்களில் வேண்டியவளவு
டிபாஸிட்டுகளைக் கவர்ந்திருக்க, கிராம சங்கங்களோ ஏதோ ஒன்றிரண்டு
தவிர விசேஷமாய் சேமிப்புத்திரவியம் என்பதில் கொஞ்சமும் கவனிக்க
வில்லை. எந்தச்சங்கத்தில் மெம்பர்கள் கடன்மாத்திரம் வாங்கிக்கொண்டு
தங்களுடைய கைமீதங்களைக் கொடுக்காமலிருக்கிறார்களோ அந்தச்சங்கம்
தன் வேலையில் பாதிதான் செய்ததாகக்கருதப் படலாம். ஐக்ய ஏற்பாடா
னது அதன் மெம்பர்களுக்கு அதிக திரவியத்தைக் கொடுத்திருக்கிற
தென்றுயாரும் ஒத்துக்கொள்வார்கள். அப்படியிருக்க அவர்களுக்கு மீதி
யான திரவியங்களெங்கே? இதற்குக் காரணம் இரண்டி லொன்றாயிருக்க
வேண்டுமென்று தோன்றுகிறது. ஒன்று நமது சங்கங்களில் மெம்பர்க
ளுக்குப்பூரணமான நம்பிக்கையில்லாம லிருக்கவேண்டும். அல்லதுஜனங்க
ளுக்கு வேண்டியபடி சௌகரியமான விதமாய் நாம் டிபாஸிட்டு விதிகள்
ஏற்படுத்தாம லிருக்கவேண்டும். நமது தேசத்தில் விசேஷ புதையல்
திரவியங்களிருக்கிற தென்று சொல்லுங் கற்பனையை நான் நம்பவில்லை
யாயினும் நமது சங்கங்களுக்கு அவசியம் வந்து சேரவேண்டியபோது
மான அளவு திரவியம் வந்து சேரும் என்பது எனது அனுபவசித்தம்.

நமது சங்கங்களில் போதுமான நம்பிக்கையுண்டாகவில்லையென்கிற
காரணம் நிச்சயமானால் ஒவ்வொரு கிராமத்திலும் தலைவர்கள் சேர்ந்து
பிரயத்தனம் செய்தால் நல்லபடி ஆரம்பிக்கலாமென்பது நிச்சயம். உப
யோகமற்ற கிராமங்களில்கூட கொஞ்ச நாழிகைக்குள் தருமத்துக்காக
நூற்றைம்பது ரூபாய்கள் நான் வசூலித்திருக்கிறேன். சில வருஷங்களாய்
சங்கங்கள் திருப்தியாய் நடந்து வந்திருக்கும் கிராமங்களில் டிபாஸிட்
டாக கொஞ்சம் பணம் வசூலிப்பது இதைவிட எவ்வளவோ சுலப



மானது. டிபாஸிட்டுகள் போடுவதற்கு ஏற்ற சௌகரியமான விதிகள்
ஏற்படுத்தவில்லை என்பதினால் நீங்கள் நன்றாய் வேலைசெய்யும் ஒரு
நிதியையாவதுவேறு நம்முடையபிரதேச ஸ்தாபனங்களையாவதுபின்பற்றி
விதிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

ஐரோப்பாவில் புருஷர்கள் சம்பாதிப்பவைகள் ஸ்ரீகள் வசமாகயிருப்ப
தால் அவிடத்துகிராம சங்கங்களில் டிபாஸிட்டுசெய்பவர்களில் அவர்களே
முதன்மையாயிருக்கிறார்கள். இந்தியாவில் ஸ்ரீகள் பணம்சேர்த்துவைத்த
போதிலும், டிபாஸிட்டுசெய்யும் விதம் தெரியாததனாலும், சரியான மார்க்
கங்களில்லாததனாலும், பழிக்கஞ்சாத அயலாரால் ஏமாற்றப்படுகிறார்கள்.
ஸ்திரீகளுக்குள்ளேயே சிக்கனத்தைக் கற்பித்து டிபாஸிட்டைப் பெறக்
கூடிய ஒரு ஒழுங்கை, அவர்களில் விதரணையுள்ளவர்கள் சிலர் சேர்ந்து
ஆரம்பித்தார்களானால் வேண்டிய டிபாஸிட்டுகள் சேர்வதுமல்லாமல் நம்
தேசத்தின் ஸ்ரீகளுக்குள் ஒற்றுமையும் நன்னடத்தையும் பரவுமென்று
தோன்றுகிறது. ஐக்கிய இயக்கத்திற்கு திரவிய சகாயம் செய்யும் ஸென்
ட்ரல் சங்கங்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் ஒன்றும் செய்யமுடியாமல்
இனி அபிவிருத்திக்கு யாதொரு உதவியும்செய்ய முடியாத ஒரு நிலைமை
யிப்போது ஏற்பட்டிருப்பதால் இவ்விஷயத்தை இவ்வளவு தாங்கிப்பேசு
வதற்காக உங்கள் மன்னிப்பைக்கோருகிறேன். 1916-17 ஷ்டத்திய ரிஜிஸ்
ட்ராருடைய ரிபோர்ட்டிலும் இது விஷயம் காணப்படுகிறது. அதுவுந்
தவிர ஒரு சங்கத்தின் வேலையை நிர்த்தாரணம் செய்வதில் அச்சங்கத்
தில் வைக்கப்பட்டிருக்கும் டிபாஸிட்டுதான் அத்தாக்ஷியாயிருக்கிறது.
ஒரு சங்கம் ஸென்ட்ரல் சங்கத்துக்குக்கடன் பட்டிருக்கும் காலம் வரை
யில் அது அசௌக்கியமாய் வயித்தியசாலையிலிருப்பதாக நினைக்கவேண்டு
மென்றும், அந்தக்கடன் பூராவும் பைசலாவதற்குவேண்டிய பிரயத்தனம்
செய்யவேண்டியதென்றும், மிஸ்டர் வுல்ப் சொல்லுகிறார். அந்த பிர
தேசங்களிலேற்பட்டிருக்கும் ஐக்கிய சங்கங்கள் மேலே யிருக்கும் சங்
கங்களுக்கெல்லாம் அஸ்திவாரமானதால் தங்களுக்கு வேண்டிய கை
முதல் பூராவும் தாங்களே சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பதையும்
ஏதோ அவசரமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஸென்ட்ரல் சங்கங்களி
லிருந்து வேண்டியவளவு தருவித்துக்கொள்ளவேண்டு மென்பதையும்
ஒவ்வொரு சங்கமும் கோட்பாடாகக்கொள்ளவேண்டும். கவர்ன்மென்
டாரும், டிரஸ்டுபண்டுகளையும் கோர்ட் ஆப்வார்ட் வருமானங்களையும்
ஐக்கிய சங்கங்களிலே டிபாஸிட்டாக வைக்கும்படி உத்திர விட
வேண்டிய தவசியம்.

இன்னும் ஒரு விஷயம். அது ஐக்கியப் பான்மைக்கு முற்றிலும்
விரோதமானது. அதாவது வியாஜ்ய சம்பந்தமானது. சரியான ஐக்கியத்

தில் வியாஜ்யங்களே இருக்கப்படாது. இவ்வித நல்ல நோக்கத்துடனிருந்தாலும் தப்பிதங்கள் நேர்ந்தால் மெம்பர்களுக்கு எதிரிடையாய் மத்தியஸ்தக் கோர்ட்டுத் தீர்மான நடவடிக்கையாவது எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அல்லது சொஸைடியை மூடுவதற்குத் தீர்ப்புசெய்யவேண்டி வருகிறது. மத்தியஸ்தர் தீர்ப்பை நிறைவேற்றுவதில் நேரும் சட்ட சம்மதமான சங்கடத்தைத் தவிர வேறொரு அதிகமான பிரயாஸமும் ஏற்படுகிறது. பணம் வசூலாவதே கஷ்டமாயிருக்கிறது. ஏனெனில் சொஸைடி மூடப்பட்டுக் கோர்ட்டு மூலமாய் நடவடிக்கை எடுத்துக்கொண்டவுடனே கிராமத்திலுள்ள எல்லோரும் ஜில்லாபாங்கிக்கு விரோதமாய்ச் சேர்ந்துகொள்ளுகிறார்கள். சேலத்தில் இவ்விஷயத்தில் நாங்கள் கஷ்டமான நிலைமையிலிருக்கிறோம். இங்கு எங்கள் ஸ்திதியைவிட இதர இடங்களில் எவ்வளவோ உன்னதமாயிருப்பதைப் பார்க்க மிக்க சந்தோஷம். தவிர, மத்தியஸ்தக் கோர்ட்டு நடவடிக்கையானது பாக்கிகள் தடையின்றி வசூலிக்கப்படுவதற்கு மிகுந்த நல்ல மார்க்கமாகத் தெரிகிறது. மத்தியஸ்தர் தீர்மானத்துக் கனுப்பப்பட்டவைகள் இலகுவாய்த் தீர்ப்புக்கு முன்னமேயே வசூலாய் விடுகிறதென்பது சந்தோஷிக்கத் தக்கது.

கோர்ட்டுக்குப் போவதால் நீண்ட காலதாமதமும் டிக்ரி செய்வதில் வட்டி நஷ்டமும் ஏற்படுகிறது. இதர லேவாதேவிக்காரனுக்குள்ள கவனிப்பும் முன்ஜாக்கிரதையும் சங்கங்களில் இல்லாமையால் சீக்கிரம் வசூலிக்க சிரத்தையுள்ளோரையும் காணோம். இந்தக் கஷ்டங்களுக்காகத்தான் ஐக்கியர்கள் வசூல்செய்வதில் சுருக்கமான அதிகாரம் தங்களுக்குத் தரும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டார்கள். ஐக்கிய மாகாணத்திலே இதுவிஷயமாய் சட்டத்தில் திருத்துப்பாடுசெய்யப்பிரசுரமாயிருக்கிறது. கீழ்கண்ட உட்பிரிவுஒன்றைசட்டத்தின்42-வதுசெக்ஷனுக்கு சேர்ப்பதால் அவ்வண்ணம நிறைவேறுமென்று தோன்றுகிறது. அதாவது "சங்கத்தின் ஆஸ்திக்காவது முடிவு கட்டும் செலவுக்காவது பகுதியாக வசூலிக்கும்படி இந்த செக்ஷன்படி உத்திரவிடப்பட்ட தொகைகளை ஐக்கிய சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார், கலெக்டரைக் கோரினால் நிலவரியைப்போல் வசூலிக்கப்படலாம்" பீஹார் ஒரிசா நாடுகளில் 'பப்ளிக் டிமாண்டு சங்க சட்டத்தில் இதற்கு அனுகூலமான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வங்காளமாகாண கான்பரன்ஸிலும் இத்தகைய அதிகாரங்கள் கொடுக்கும்படி கோரப்பட்டது. இப்போது நமது ஜில்லாவில் நடந்த கோவாபரேடிவ் கான்பரன்ஸிலும்இந்த பிரேரேபணையை ஆமோதித்தார்கள். இப்படிப்பட்ட சுதந்தரங்கள் (மாயக்கால்கள்போல்) ஆரோக்கியமற்றவைகளென்பது கோட்பாடாயினும்முன்வருஷங்களில்ஐக்கியக் கோட்பாட்டை



யுதாசீனித்து நடந்தால் உண்டாயிருக்கும் இடையூறுகளை நிவர்த்திக்க இவைகள் பிரயோஜனப்படும். இதர கடன்காரர்களின் பாத்தியத்துக்குக் கெடுதி யுண்டாகாதபடியும் அவர்களுக்கு விரோதமில்லாமலும் இந்த அதிகாரத்தைச் செலுத்துவதில் ஜாக்கிரதையாயிருந்தால் இவ்வதிகாரம் எப்படியும் துர்விநியோகப்படக் காரணம் இல்லை.

இதுவரையில் வெகு ஜாஸ்தியாய்ப் பேசிவிட்டேன். ஆதலால் நான் முடிவுசெய்யுமுன் சில பொது விஷயங்களைப்பற்றிச் சொல்ல உத்திரவு கோருகிறேன். சில வருஷங்களுக்கு முன் சேலம் ஜில்லாவில் ஒரு தாலூகா கோவாபரேடிவ் கான்பரன்ஸில் நான் அக்கிராசனம் வகித்திருந்தபோது இராஜாங்கத்தில் தகுந்தபதவியை அடையுங்காலம் வரும்போது சங்கங்கள் தங்களுக்குவேண்டிய திறமையிருப்பதாக காணப்படும்படியாய் தங்கள் சங்கங்களைத் திருப்திகரமாய் நடத்திவரும்படி கிராமவாசிகளான என் நண்பர்களை வேண்டிக்கொண்டேன். சில வருஷங்கள் கழித்து இப்போது என்னுடைய அபிப்பிராயத்தை மறுபடி திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஐக்கிய விஷயங்களைக்கற்று ஜனங்கள் இராஜாங்கமுறைமைகளைத் தெரிந்து கொள்வதற்கு பதிலாக சில நாளாக உண்டாயிருக்கும் இராஜாங்க ஞானம் ஜனங்களை நல்ல ஐக்கியர்களாக்குகிறதென்று தெரிகிறது. இப்புதிய ஞானமுண்டானபின் கிராமஜனங்கள் தங்கள் சொஸைட்டி விஷயமாய் நடக்கும் காரியங்களில்அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மகாசபை மீட்டிங்குகள் அநேகம்நடைபெறுவதாலும் அவைகளுக்குஅநேகர் வருவதாலும் இதுதெரிகிறது. ராஜாங்க விஷயங்களோடு ஐக்கியவிஷயங்கள் சம்பந்தப்படுவது எனக்கு திருப்திகரமாய் இருக்கவில்லை. கவர்ன்மெண்டார் ஐக்கிய விஷயங்களைப்பற்றிக் கவனிக்கும் வரையில் மேற்சொன்ன இரண்டும் திட்டமாய் வேறுப்பட்டிருக்கவேண்டும். தேசத்தினுடைய முன்னேற்றமானது எல்லா வழிகளிலும் விருத்தியடையவேண்டுமென்கிற விஷயத்தை என் ஐக்கிய சிநேகிதர்களுக்கு நான் சொல்லுவேன். நாம் ஐக்கியர்களாய் இருந்து மற்றவிஷயங்களையும் கவனியாதிருப்பதும் சரியல்ல. எனக்கு சுதந்திரமில்லாமல் ஐசுவரிய விர்த்தி எவ்வளவு கிடைத்தபோதிலும் நான் விரும்பமாட்டேன். ஆதலின் என் சிநேகிதர்கள் உண்மையான ஐக்கியர்களாயிருக்கவேண்டுமென்று நான் விரும்புவதோடு சங்கக் காரியங்களுக் கப்பால் ராஜ்ய விவகாரங்களையும் தெரிந்துகொண்டிருக்கவேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன்.

நானிப்படிச் சொல்வதால் ஆச்சரியமான புதிய சங்கதி ஒன்றும் வெளியிட முன்வரவில்லை. ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் ஐக்கிய விருத்தினால்தான் இராஜாங்க ஞானம் பரவுமென்றும் அதன்றி, பொறுப்பான இராஜ

யம் இந்தியாவில் ஏற்படுவது அசாத்தியமென்றும் சொல்லி இருக்கிறார். ஆதலால் சிலர் நினைக்கிறபடி ஐக்கிய முயற்சிக்கும் இராஜாங்க ஞானத்திற்கும் ஒரு பெரிய விரோதம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

சென்ற மே மாதத்தில் லிவர்பூல் நகரத்தில் கூடிய பிரிட்டிஷ் ஐக்கியர்களின் கூட்டத்தில் இராஜாங்க விஷயமாய் அவர்களுக்குக் குறைமிக்க இருந்ததால் அவைகளெல்லாம் பேசப்பட்டதுடன் தங்களுக்கு பிரதிநிதியாக பார்லிமெண்டுக்கு மெம்பர்கள் அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பார்லிமெண்டில் லார்ட் கார்மிக்கேல் பேசியபோது இந்தியாவில் கிராமத்தார்கூட இராஜாங்க ஞானமுடையவர்களாய் இருக்கிறார்களென்றும் ஐரோப்பாவிலே வேலைக்காரர்களெல்லாம் இராஜாங்கம் செய்யவேண்டியதிட்டத்தை ஏற்படுத்துகிறார்களென்றும் சொல்லியிருக்கிறார். பிரஸிடெண்டு வில்ஸன், ஜாதீயக்கூட்டத்தில் பேசியபோது உலகிலுள்ள தேசங்களில் கூலிவேலை செய்பவர்களெல்லாங்கூட ஒன்றுசேர்ந்து இந்தச் சண்டையால் இராஜாங்கத்தார் என்னதெரிந்துகொண்டார்களென்றும் எப்படி முடிவு செய்யப் போகிறார்களென்றும் கேட்பதாகவும் தெரிவித்திருக்கிறார். பால்ய நாகரிகமுள்ள தேசங்களின் ஸ்திதியே அப்படியானால் புராதனமாய் உலகிற்கு ஜோதிபோன்ற நம்தேசத்தின் காரியங்களை நிர்த்தாரணம்செய்ய சக்தியில்லையென்பது சரியானதல்ல. இராஜாங்க சீர்திருத்தவிஷயமாய் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கவர்ன்மெண்டார் குடிகளின் அபிப்பிராயங்களை எதிர்பார்ப்பதால் இச்சமயம் மனப்பூர்ணமான அபிப்பிராயங்களை ஜனங்கள் வெளியிடவேண்டியது அவசியம்.

இப்போது நடந்த பிரத்தியேக காங்கிரஸில் கேட்கப்பட்டிருக்கும் ராஜாங்க உரிமைகளைவிட்டு, சீர்திருத்த மசோதாவில் கண்டவைகள் தாம் இப்போது எதிர்பார்க்கப்படலாமென இராஜப்பிரதிநிதி அவர்கள் இந்திய கௌன்ஸிலில் சொல்லியிருக்கிறார். இது விஷயமாய் அயர்லாந்தின் ஜனத்தலைவர் 'சார்லஸ் ஸ்டுவார்ட் பார்னெல்' என்பவருடையமொழி எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது; அதாவது ஒரு ஜனத்தொகுதியினுடைய அபிவிர்த்தி இவ்வளவுதானென்று வரையறுக்க முடியாது என்பதுதான்.

கனவான்களே, நான் உத்தேசித்ததற்கு அதிகமாகவே உங்களைக் கார்க்கச்செய்துவிட்டேன். என்னை இங்கு தருவித்து அதிக பொறுமையோடு இவ்வளவுநேரம் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்து என்னை கௌரவப்படுத்தியதற்காக நான் இன்னொருமுறை வந்தனம் செய்கிறேன்.

---



# ஐக்கிய நாணயச் சத்திய சந்தன்.

ஓய், பிங்களரே! எங்குபோகுதீர்?

'என்னடா அபசகுனமாகிறது, ஆமாம் இன்னும் பூராவும்...... வரவில்லையே' என்பதாய் மனதுக்குள் நினைந்து. (வெளியில்) யாரங்கே நளனா?

ந.—ஆமாம், எங்கே போகிறீர்.

பி.—உனக்கென்ன வயதானாலும், சமய சந்தர்ப்ப மறியாமல், நான் கையில் தடி, குடை முதலிய வேஷங்களோடு புறப்படுகையிலேயே, ஏதோ அவசர ஜோலியாய்ப் போகிறதாகத் தெரியவில்லையா? அப்படியிருக்க 'எங்குபோகிறீர்' என்று இரண்டாம் தடவையும் கேழ்க்கிறாயே, ஹூம்! வீட்டுக்காவதுபோய் ஜலபானம்பண்ணிப் புறப்படுகிறேன். மறுபடியுமாவது எங்கு போகிறாய் என்று கேளாதே.

ந.—என்ன தாதா, மார்கழிமாதத்தில் பெண்ணுக்கு வரன் தேடப்போகிறீரா என்ன? ஏதாவது பிச்சைக் காசுக்குத்தானே! ஒரு வளையம் விழுமானால் நானும் கூட வருகிறேன், கையையும் நீட்டுகிறேன். ஒருவளையம் விழுமா?

பி.—உள்ளகாலமெல்லாம் பாழும் பிச்சைக்காசா? ஐக்கிய ராஜ்யத்துக்குப் போகவேணுமென்று பிரயாணப்பட்டேன். மற்றப்படி வரனுமில்லை, பிச்சையுமில்லை.

ந.—ஐக்கியமென்றால் என்ன? ரூபாய்க்கு $2\frac{3}{4}$ படி போடுகிறளே—அதுவா, அல்லது வராகனுக்கு $2\frac{1}{2}$ கஜம் துணி விர்க்கிறார்களாமே அதுவா?

பி.—துணியுமில்லை அரிசியுமில்லை. நானும் உன்னைப்போலவேதான் தூக்கு மூன்று ரூபாய் என்று எண்ணியிருந்தேன். சிலநாளைக்கு முன் 'காலயுக்தி' என்னும் ஒரு உபன்யாஸகர்வந்து ஒரு கதை சொன்னார். அந்தக் கதையை அது சமயம் என்னமோ கேட்டேன். கேட்கும்போது மாத்திரம் இனிமையாக இருந்தது. பிறகு அந்தக் கதை உண்மைதானா என்று கவனிக்கவேண்டிய அவசியம் நேற்று இரவு தோன்றியபடியால் இப்போ பிரயாணமானேன். சரியான சகுனமாகாத காரணம் தெரியவில்லை.

ந.—காலயுக்தி என்பவர் யாரு? அது என்னமோ ஒரு வருஷத்தின் பெயராயிருக்கிறதே.

பி.—அப்படிப் பார்க்கப்போனால் உன்பெயர் மாத்திரம் நளனல்லவோ? அந்தக் காலயுக்திக்கு முன் மூன்றாவதாண்டல்லவோ?

ந.—நீர் மாத்திரம் காலயுக்திக்கு முன் வருஷமல்லவோ?

பி.—ஏண்டா தொண்டைக்கயை மண்டையுடையக் கண்டவாறு விண்டு கொள்கிறாய்? எல்லாம் வருஷத்தின் பேர்தான். பேரிலென்னவைத் திருக்கிறது. ஆனால் நான்மாத்திரம் காலயுக்திக்கு அடுத்த வருஷமா யிருக்கிறேன்.

ந.—அடுத்த வருஷமானால் சித்தார்த்தியல்லவா?

பி.—அந்த பேரையே சொல்லாதே, அதன் காரணம் பஞ்சாங்கத்தைப் பார். அடுத்த வருஷமென்றால் பிங்களாவாக விருக்கக்கூடாதோ? அதானே என்பேரும்.

ந.—இதெல்லாம் கிடக்கட்டும் தாத்தா, என்னமோ கதை சொன்னு னென்றீரே. அதென்னகதை? அதை எனக்குச் சொல்லும் எப்படி யிருக்கிறது பார்ப்போம்.

பி.—விரிவாகச் சொல்ல அவகாசமில்லே. சுருங்கச் சொன்னாலோ, நீ வம்பன், தாறுமாறுமாய் கேள்விகேட்பாய். இன்னொரு சமயம் சொல்லுகிறேன் எனக்குப் பொழுதாகிறது.

ந.—உம்மை விடவேமாட்டேன் நான் ஒன்றும் குருக்குப் பேசவில்லே. நீர் சொல்லுவதை மாத்திரம் கேட்டுக்கொண் டிருக்கிறேன். கதை யை மாத்திரம் ரஸம்போகாமல் சுருங்கச் சொல்லிவிடும்.

பி.—உலகமே கதைகளிலும் பாட்டுக்களிலும் தானிருக்கிறது. ஆனதி னாற்றான் நாவல்கள் மூலமாயும் பாட்டுகள் மூலமாயும் விஷ யங்களை விற்பனை செய்கிறார்கள். அந்தக் கதையைக் கேட்டவுடன் எனக்குமல்லவா ஒரு உணச்சியுண்டாய் விட்டது.

ந.—கதையைச் சொல்லச் சொன்னால் என்ன வெல்லாமோ சொல் கிறீரே. பழய நாளைய மனுஷியாளே ஒருமாதிரி, தாதா! கோவித்துக் கொள்ளாதேயும். கதையைமாத்திரம் சுவாரஸ்யமாகச் சொல்லி விட்டு பழய பாட்டைப் பாடும். அதையும் கேழ்க்குறேன்.

பி.—இந்த வருஷம் மழை மோசம் பண்ணிவிட்டதா? மாடுகளுக்கு நோய்கண்டு அப்படியாய் விட்டதா? போனவருஷம் முதல் கடன் வாங்கிச் சாப்பிடுகிறேனா? விதை முதல் குத்தியாய் விட்டதா? ஆச்சு—வாயிதா வந்து விட்டதா? பொம்மனாட்டிக்கு துணி கிடை யாதா? ஜுரம் ஒன்று வந்து பையன்—அடா அப்ப, அந்த துக்கம் போதாமல் ஜீவனம்சத்துக்குக் கோர்ட்டில்—.

ந.—இதானோ கதை? இந்தக் கதையையா நான் கேட்டேன். போது விடிந்தால் கடன்காரன் உம்மைத் தொந்திரவு செய்வதும், ரூ



ரூபாய்க்கு அரையணு வட்டி கொடுப்பதும் தினம் நான் பார்க்கிற கதைதானே இது. இதற்குக் காலயுக்தி சொன்னான் என்றீரே இதுதானோ அது?

பி.—அடே துஷ்டா! அப்போதே குறுக்கே ஒன்றும் பேசாதே என்றே னல்லவா, காலயுக்தியைக் காண்பதற்கு முன் சொல்லவேண்டி யதைச் சொன்னால்தானே ரஸமாயிருக்கும்.

ந.—எப்படியாவது சொல்லுமையா. உம்முடைய சங்கடங்கள் அப்படி யிருக்கும்போது!

பி.—காலயுக்தி வந்தானு, கோர்ட்டுக்குப் போய் ஒரு ஸ்டேட்மெண்டு போட்டுவிட்டு வரலாம் என்று போனேன், போனவிடத்தில் அந்த காலயுக்தி தன்பாட்டில் (நாலு சந்தும் கூடுமிடத்தில் பாட்டும் கூத்துமாய்) அந்தக் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான். அந்த சமையம் அதை கதையாகவே எண்ணினேன். இப்போது கிடை யாத மழை பேஞ்சு ஏரியும் கார்த்தி, மார்கழி, தை, மாசி, பங்குனீ, அஞ்சுமாசம் பாயும். மாடு கிடையாது இரண்டோர்மா டிருந்தால் தான் நாலுகாணியும் சீக்கிரமாய் உழுது காராவது நட்வு போட லாம். விதையில்லே, நேத்து முனியனைப் பிடித்துக் கொல்லேயை உழச்சொல்லி ஆறு மரக்கால் விதையிருப்பதையாவது முன்னாடி நாத்துவிடலாமா என்று யெண்ணி உழுதேன் 'நேத்தே கூலி கொடுக்கவில்லேயே, இன்றைக்கு உழமாட்டேன்' என்று போந்த யான் வீட்டு முனியன் சொன்னான்.

ந.—மறுபடியும் உம்மகதையேவா!

பி.—நான் என்ன தள்ளாதவன் உளறுகிறேன் என்று எண்ணினாயா? நான் சொல்லப்போகும் கதைக்குமுன் சம்ஸாரி கஷ்டங்களை நீ கவனித்தால் உனக்கும் கதை கேழ்க்கவும், என் பின்னோடு வரவும் சௌகர்யமா யிருக்குமென்றே இவ்வளவு தூரம் சொல்லும்படி யாயிற்று.

ந.—"தொலேயும்போதுதான் போகவேணும். பிரயாணம் நின்றுவிட்டால் தானே ராத்திரி சீட்டுக்கச்சேரிக்கு ஒரு ஆள் உத்தரவாதமாயிருப் பீர்' என்று மனதுக்குள் நினைத்துகொண்டு கதையைத் துடங்கச் சொன்னது தான் தாமதம்.

பி.—கையில் காலணு இல்லே. கடைசிப் பெண்ணுக்கு கல்யாணம் பண்ண வேணும், அதுக்காக ரூபாய் வேண்டும். இன்னும் எத்தினேயோ தொல்லே; இதையெல்லாம் யோசித்து, காலயுக்தியிடம் போரே னப்பா, இதுதான் என் கதை.

ந.—நன்னாயிருக்கு. இதுதானா கதை இது உம்மகதையாச்சு, காலயுக்தி சொன்ன கதையை சொல்லும். (மனதுக்குள்) அதில் ஏதோ லாபமிருக்கவேணடும். அதினால்தான் கிழம் அதைச் சொல்லாமல் வேறுவழியில் கதையை போக்கிவிடுகிறது. நானா விடுகிறபேர்வழி? காலனா லாபம்வந்தாலும் ஒரு மேஜாச்சு, ஓராட்டத்துக்காகுமல்லவா, ஏன் விடவேண்டும். (வெளியில்) நாழிகையாகிறது. சுருக்கமாகவே சொல்லும், போதுமானது.

பி.—ஐக்யநாடு என்று ஒரு ராஜ்யமாம், அந்த ராஜ்யத்துக்கு ராஜா ஸத்யஸந்தன் என்று பேராம், நாணயம்என்ற ஒருமந்திரியாம், மரியாதை என்று ஒரு சிநேகிதனாம்.

ந.—காலயுக்திக்கு சிநேகிதன் மரியாதையோ.

பி.—உனக்கு கோணலான புத்தியே தவிர நேர் வழியில் செல்லாத காரணமென்னவோ தெரியவில்லையே. எல்லாம் இராஜாவுக்கே அன்வயமாகவேண்டும். இராஜா, மந்திரி என்றால், சிநேகிதன் மாத்திரம், காலயுக்திக்கா? அப்படி மாறுதலான அன்வயமுண்டானால், நானே சொல்லுகிறேன். பாங்கிகள் என்று சேனாதிபதிகளாம். திரவியம் என்ற சிப்பாய்களாம். அவன் இராஜ்யத்தில் உள்ள ஊர்களுக்கு சொஸைடி என்று பேராம். அந்த இராஜ்யத்தில் அந்த சொஸைடி என்னும் கிராமத்தில் உள்ளவர்களுக் கெல்லாம் மெம்பர்கள் என்று பெயராம். சகாயம் என்ற தூதர்களாம். உபன்யாஸகர் என்ற வித்வான்களாம்.

ந.—அவர்தானோ காலயுக்தி.

பி.—எத்தினையோ வித்வான்கள் மேற்சொன்ன இராஜ்யத்தில் இருக்கிறார்கள். அதில் காலயுக்தியும் ஒருவனாகவேண்டும்போல் இருக்கிறது.

ந.—சரி மேலேசொல்லும். இதெல்லாம், கேழ்வைக்குப் புதிதாகவேயிருக்கிறது. ஆனால்......சரி இன்னும் குறையான கயிற்றையும் திரியும் பார்க்கலாம்.

பி.—உனக்குத்தான் உலகத்தில் தெரியாத சங்கதியே கிடையாதென்று நடிப்பவனாயிற்றே. அதனால்தான் உன்னிடம் விபரமாய் ஒன்றும் சொல்ல இஷ்டமில்லை.

ந.—இல்லை தாதா. நீர் சொல்லும் பின்னால் நான் ஒரு சங்கதி சொல்கிறேன்.

பி.—பின்னால் நீ என்ன சொல்லப்போகிறாயோ அதை இப்போதே சொன்னால்தான் எனக்கு கதை சொல்ல மேலே ஓடும்: இல்லா



விடில் என்றால் சொல்லமுடியாது. இதையெல்லாம் அனுசரித்துத் தானே இடையில் ஒன்றும் பேசாமலிருந்தால் கதை சொல்லுகிறேன் என்று சொன்னேன்.

ந.—என்னடா வம்பாகவந்து சேந்தது! தொல்லையாயிருக்கிறது. ஆனால் நான் சொல்லப் போவதற்கும் இந்த கிழம் சொல்வதற்கும் சம்பந்தமுண்டோ இல்லையோ, என்பதாக தனக்குள் யோசித்து (வெளியாய்) தாதா! நான் சுமார் நாலைந்து மாதத்துக்குமுன் வந்தவாசி போயிருந்தேன். அங்கு கா. மு. செட்டி சத்திரத்தில் சீட்டாடிக் கொண்டிருந்தேன்.

பி.—எந்த மாதம் கியாபகமில்லையோ ?

ந.—(டைரியைப் பார்த்துவிட்டு) 18-8-1918-ல் வந்தவாசியில் சீட்டாட்டத்தில் போக்கு ரூபாய் 11-12-0 என்பதாக டைரியில் எழுதியிருக்கிறேன், அன்றைக்காகத் தானிருக்கவேண்டும்.

பி.—சரி மேலே சொல்லும் பார்ப்போம்.

ந.—வீதியில் கும்பலாக ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். என்ன விசேஷம் எங்கேயாவது பாட்டுக்கச்சேரியா அல்லது ஏதாவது இன்னும் விசேஷமுண்டாவென்று என்னுடன் ஆடிக்கொண்டிருந்தவர்களைக்கேட்டேன். உடனே ஆட்டத்தை விட்டு விட்டு ஒருவர் எழுந்து, ‘மணி மூன்றாய்விட்டதே. மீட்டிங்குக்குப் போகவேண்டுமே, பாழும் சீட்டாட்டம் இப்படித்தானே காரியமெல்லாம் கெடுத்து விடுகிறது’ என்றார். உடனே என்ன மீடிங்கையா நானும் வருகிறேன், காபி கிடைக்குமா? என்றேன். அதற்கவரும் நாம் போகிறதாக உத்தேசிக்கிற சமையம் காபிகுடித்த டம்ளராவது, பார்க்கக் கிடைக்கலாம் என்று நினைக்கிறேன் என்றார். அப்படியானால் வாருமையாவென்று என் சிநேகிதரை பிடித்திழுத்துக்கொண்டு, மீட்டிங்கு கூடுமிடம் வந்து சேர்ந்தேன். அங்கு அடியில் வருமாறு என் சிநேகிதர் ராமண்ணாவுக்கும், மற்றொரு வாசக்காப்பான், ‘நல்வரவு’ என்பவனுக்கும் சம்பாஷணை நடந்தது :—

ராமண்.—ஏய் நல்வரவு. என்ன, ஐயா, டிபனுக்குப் போயிருக்காரோ ?

நல்வரவு.—டிபன் சாப்பிட்டுவிட்டு போலீஸ் ஐயா வீட்டுக்குப் போய் விட்டாங்கோ. தாங்கள் வரவேணும், சிற்றுண்டிக்கு உள்ளே போகிறீர்களா. போங்கள், (என்று வெகு விநயமாய் மொழிந்தான்.)

ராம.—ஏண்டா இங்கே யாரோ Magic (மாஜிக்) தமாஷாபண்ணப்போறாங்களாமே எப்போநடக்கும். இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்

நான் ராமண்ணாவைப்பார்த்து, வாரும் ஐயா காபி யாறிப்போகப் போகிறது என்றேன். அவர் அதற்குச் சொன்னபதிலை இங்கு எழுதினால்......எல்லோரும் என்னையே இகழ்வார்கள்.

நல்.—ஐயா இங்கு ஒரு ஐயர் ஒரு வியாஸம் படித்தார். அதில் இரண்டொரு பாட்டும் படித்தார். முடிவில், தான் தமாஷா செய்வதற்குண்டான சௌகர்யம் அன்று இல்லாமையாலே அந்த விஷயம் இன்று நடைபெறுகிறது என்றார். உடனே ஐயா அவர்கள் அனுக்காவூர் யூனியன் மீட்டிங்குக்கும் வரவேணுமென்று வியாஸம் படித்த ஐயருக்குச்சொன்னார். அவரும் அனுக்காவூர் வருவதாக ஒப்புக்கொண்டார். இதுதான் மகாராஜா விஷயம் நடந்தது.

ராம.—எந்த ஐயர் வியாஸம் படித்தார். அவர் ஊர் பேர் முதலியவைகள் தெரியுமா உனக்கு.

நல்.—அடிக்கடி கோவாபரேடிவ் மீட்டிங்குகளுக்கும், யூனியனுக்கும் வருகிறார். நபரைப் பார்த்தால் தெரியும். பேர் ஊர் தெரியவேண்டுமானால், அதோ ஆஸனத்தமர்ந்திருக்கும். ம-ா-ா-ஸ்ரீ, எம். எஸ். சேஷாசலமய்யரைக் கேட்டால் தெரியவரும்.

பிறகு இருவரும் உள்ளே போய் திருப்தியாய் லட்டு, பூந்தி, அல்வா, கார பக்ஷணம், காபி முதலியவைகளை திருப்தியாய் சாப்பிட்டு விட்டு வெத்திலை சீவலுடன் கொள்ளேகாலம் உருமாலை தொங்க Mr. M. S. சேஷாசலமய்யரை, ராமண்ணா அடியில் வருமாறு கேழ்க்கிறார்.

ராம.—Mr. சேஷாசலமய்யரவாள்! இங்கு யாரோ உபன்யாசம் ஒன்று படித்தாராம் அவருக்கு Magicகூட தெரியுமாம், இங்கு நடப்பதாக கேழ்விப்பட்டேன். கொஞ்சநேரம் பொழுதுபோக்க சாவகாசமுண்டாகலாமோ.

சேஷா.—இங்கு உபன்யாஸம் செய்தவர் நாளைக்கும் அனுக்காவூரில் செய்வார். உபன்யாஸம் மாத்திரம் கேழ்க்கவேண்டுமானால், 'கூட்டுத்தொழில் வர்த்தமானி, என்ற மாதாந்தரப் பத்திரிகையில் கூடிய சீக்கிரம் வெளிவரும், அதில் பார்க்கலாம். அந்த வியாஸத்தை எனக்கும் காண்பித்தார். நான் படிக்கச் சொல்லித் தான்படித்தார். அந்த விவரங்களைத் தங்களுக்குச் சொல்லத் தற்சமயம் அவகாசமில்லை. ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள். அல்லது வேலையிருந்தால் போய்வரலாம் என்றார்.

கீழ்கண்ட விதமாய், நளனும் தானும் ராமண்ணாவும் பேசிக்கொண்டதாய் தாதாவுக்குச் சொன்னார்.



நள.—ஏன் ராமு அந்த வாசக்காப்பான் 'ஐயா அவங்கள்' என்றானே யார் அது?

ராம.—சேலம் செக்ஷன் கோவாபரேடிவ் சொஸைடிகளின் கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ராரவர்கள் எ. ராமானுஜாசாரியார்.

ந.—ஆனால் அவர் அய்யங்காரோ.

ராம.—ஆமாம்.

ந.—கோவாபரேடிவ் என்றால் கும்பலாய் கூடி பலகாரம் காபி சாப்பிடுவதா என்ன!

ராம.—இல்லை, இல்லை, அது ஒரு சொஸைடி. அதன் விஷயம் இப்படி எல்லாம் அவசரத்தில் சொல்லிமுடியாது. 'புல்லடின்' என்னும் மாதாந்திரப் பத்திரிகையைப் படித்து, இந்த விஷயமெல்லாம் தெரிந்துகொண்டுதான் வேறு வேலை பார்க்கவேண்டும். அந்த சொஸைடியில் நாமும் சேர்ந்துவிட்டால் (இன்றையதினம், இரண்டு பேஸ்து நான் வைத்திருக்கும்போது, 5 பிடிகேட்டால் "பணம் கட்டினால்தான் எனக்கு ஆட்டம் விடுவேன் இல்லாவிடில் நீ கேழக்கக் கூடாது" என்று மிறட்டினாயே அப்படி மிறட்ட முடியாது.) வேண்டிய பணம் கிடைக்குமாம்.

நள.—அப்படியானால் நானும் சேருகிறேன். எனக்கும் பணம் கிடைக்குமே யொழிய கிடையாமல் போகாது. புல்லடின் படித்தால் தான் மெம்பராய் சேரலாகுமோ?

ராம.—அப்படியல்ல. வெகுவாய் எல்லா சமாசாரமும் ஒருவரைப் போய் கேழ்க்காமல், தெரிந்துகொள்ள "புல்லடின்" என்ற பத்திரிகையே போதுமென்றும், வருஷம் 3-1-0 தான் அதற்கு சிலவு என்றும் சொஸைடியில் சேராதவர்கள்கூட வரவழைத்தால் அனுப்புவார்கள் என்றும் ஒருவர் என்னுடன் அடிக்கடி சொல்லிபோயிருக்கிறார். ஒருவனைப் போய் சொஸைடி என்றால் என்ன? எப்படி சேருவது! எதற்காக? பணம் கிடைக்குமா? என்று கேழ்ப்பதைக் காட்டிலும், கௌரவமாய் மாதாந்திரப் பத்திரிகையை வரவழைத்து விட்டால். போதுமானது.

நள.—அப்படியானால் நீ வரவழைக்கும் புத்தகத்தை எனக்கும் காட்டினால் நானும் வரவழைக்கிறேன்.

இவ்வளவுதான் தாதா அந்த சமையம் நடந்த சங்கதி அன்றையிலிருந்து புத்தகம் எப்போவரும் என்று ராமுவைக் கேட்டிருந்தேன். இப்போதைக்கு நாலைந்து நாள் முன்பு ஒருபுத்தம் வந்ததாகவும் 10-வது சம்

படம் 3-வது இலக்கமிட்ட புத்தகத்தில் 89-வது பக்கத்தில் "பஞ்சாயத்தின் கடமைகள்" என்ற வியாஸம் இருப்பதாகவும் அதை எழுதியவர் தான் "பஞ்சாயத்தார்க்கோர் விக்ஞாபனம்" என்ற வியாயமும் இன்னும் சில விஷயமும் 18-8-18 ல் வந்தவாஸியிலும் 19-8-18 ல் அனுக்காவூரிலும் படித்த தாகவும் இந்த வியாஸம் என்ன காரணத்தினலோ முன் நடந்த வந்தவாஸி கோவாபரேடிவ் யூனியன் மீடிங்கின் விஷயம் வெளிவராமல் பின் நடந்த அனுக்காவூர் யூனியன் மீடிங்கின் ரிபோர்ட்டு புல்லடினில் வந்திருப்பதாகவும், ஆனல் வியாஸம் படித்தவர் வந்தவாஸி யூனியன் மூலமாகத் தன் வியாசத்தை யனுப்பி யிருப்பதால் யூனியன் ரிபோர்ட்டுடன் வெளிவரும் என்றும், 10-வது சம்புடன் 2-வது இலக்கம், 61-வது பக்கத்தில் 5-வது பாராவில் சொல்லி யிருக்கும் அளவு தான் அந்த யூனியனல் வெளிவரக்கூடும் என்றும் மத்த விபரம் பின்னல் தெரியவரும் என்றும் இப்படி யெல்லாம் பலவாருய் பலரும் சொல்லிகொண்டு வருகிருர்கள். தாங்கள் சொல்லும் விஷயமும் ஒருக்கால் இது சம்பந்தமாக விருக்குமோ வென்று எண்ணினேன். விருதாவாக இதில் கால்மணி போல் காலம் போக்கி விட்டீர்.

பிங்.—சரிதான் ஏறக்குறைய என் வழிக்குத் தான் நீயும் வருவாய்போல் இருக்கிறது. என் செட்டிக்கடன், காலணவட்டி, அரையணவட்டி எல்லாம் துலைத்து விடுகிறேன், நிலத்தையும் மீட்டு வீட்டையும் கட்டிவிடுகிறேன். மாட்டையும் வாங்கி ஷேரையும் கூட்டிவிடுகிறேன், விதையும் வாங்கி வயலில் விதைத்து விடுகிறேன்.

நள.—என்னதாதா ஒட்டுத்திண்ணைக் கதையாய் மனோராஜ்யம் செய்ய ஆரம்பித்துவிட்டீர். நெற்போரிலிருந்து கீழே விழப்போகிறீரே ! நானாவது தாங்கிக்கொள்ளட்டுமா.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் பழக்கடை அருணசலம் செட்டியார் வருகிருர்.

ப. அ.—சுவாமீ தண்டம். சௌக்யம் தானு?

பி.—விளக்கெண்ணை குடித்தவர்போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு இடதுகையை மார்புவரையில் உயர்த்தி 'மகராஜனக இரு' என்று சொல்லி விட்டு, வீட்டில் வெகு கஷ்டமாயிருக்கிறது, நீ எப்போது சாப்பிட்டையோ பாவம் ! வீட்டில்கூட சௌகர்யக் குறைவு, தை பிறக்காத முன்னமேயே வட்டிக்கு வந்து விட்டாய், மாடுவாங்க ஏதோபிரயத்தினம் செய்யப் புறப்பட்டேன். இந்த நளன் அபசகுனமாய்த் தடுத்தான். நல்லவேளை நீ வந்தாயே உட்கார்.

(தொடரும்)



# வந்தவாஸி கோவாபரேடிவ் யூனியன்.

## வருஷாந்திர மகா நாட்டில் 17-8-918ல் மேற்படி யூனியனுக்குட்பட்ட 2273 நெ. சோகத்தூர் கோவாபரேடிவ் சொஸைடியின் காரியதரிசி M. S. விஜயராகவாசாரியாரால் படிக்கப்பட்ட வியாஸத்தின் சாராம்சம்.

இம்மகா சபையில் அக்ராசனம் வகித்த ம-ா-ா-ஸ்ரீ வந்தவாஸி சப்ரிஜஸ்ட்ரார் ராமசாமி அய்யங்காரவர்களின்முன் கூடியிருக்கும் மகா ஜனங்களின் முன் எனக்கு பேசுவதற்கு உத்ஸாகம் உண்டாக்கிற காரணம் கனம் அஸிஸ்டெண்ட் ரிஜஸ்ட்ராரவர்களின் விஜயமும் சபையோரின் காருண்யப் பார்வையுமே தூண்டுதலாகும்.

பேசுவதும், படிப்பதும், ஹரிகதை முதலிய காலக்ஷேபங்கள் செய்வதும், இது போன்ற விஷயங்கள் செய்வதற்கெல்லாம், எதிர் நின்று கேழ்க்கும் (பார்க்கும்) ரஸிகர்களின் தன்மையிலிருந்தே உத்ஸாக முண்டாகி, அவ்வுற்சாகம் தான் பிரஸங்கம் செய்வோர்களையும், பிரஸங்கத்தையும், பிரகாசிக்கச் செய்கிறது.

வியாஸம் எழுதுவோர்களும் அப்படியே பத்திரிகா சாரியர்களால் பிரகாசிக்கிருர்கள். என்னையும் என்போன்றவர்களையும், அதாவது ; பேசுவதிலும் வியாஸம் எழுதுவதிலும் பூர்ண வல்லமை யில்லாதவர்களை சபா நாயகர்களாய் வீற்றிருப்போரும், சங்கங்களின் விஷயங்களை நன்கு கவனிக்கும் புல்லட்டின் பத்திராதிபரும் தான் விருத்திக்குக் கொண்டுவரவேண்டும். எல்லோரையுமே விருத்திக்குக் கொண்டுவருவதற்காகவேதான், கோவாபரேடிவ் சொஸைடி ஏற்பட்டிருக்கிறது. இதை யனுசரித்துத்தான் "கூட்டுத்தொழில் வர்த்தமானி" என்ற பத்திரிகையும் ஏற்பட்டிருக்கிறது. என்ருலும் என்னுடைய பிரார்த்தனையை நான் செலுத்தக் கடமைப்பட்டவனல்லவா ? ஆகையால் என் நன்றியறிதலைப் புல்லட்டின் பத்ராதிபருக்கும், இச்சபையோருக்கும் மனப்பூர்ணமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது புல்லடினுக்கு ஒன்பதாம் ஆண்டு பூர்த்தியாய், பத்தாவதாண்டு பிறந்துவிட்டது. கிராமாந்திரங்களில் தேசபாஷைகளில் வெளிவரும் பத்திரிகைகளைக்கூட வரவழைத்து உலக சமாசாரம் தெரிந்து கொள்ளச் சக்தியற்றிருக்கும் சமயம் இது. இவ்வைக்ய நாணயச் சங்கம் தோன்றி இதன் மூலமாய் "கூட்டுத்தொழில் வர்த்தமானி" என்ற இந்த மாதாந்திரப் பத்திரிகையையாவது, வரவழைத்து; ஒரு சமயத்தில் யாராவது ஒரு மெம்பராவது பார்க்கிருர்களே இதுவே நமது முன்னேற்றத்திற்கு அறிகுறியாகக் கருதவேண்டி யிருக்கிறது.

நான் எந்த பாஷையிலும் தேர்ச்சி யடைந்தவனல்ல வென்றாலும் இவ்வைக்ய நாணயச் சங்கத்தின் வேர் முதல் நுனிவரையில், யோசனை செய்துபார்த்தால் அதில்விடும் கிளைகளையும், புஷ்பங்களையும், நறுமணத்தையும், இலைகளையும், முடிவில் அது தரும் மதுரம் பொருந்திய கனிகளை (பலன்களை)யும், அப்பலத்தின் உருசியையும், (இக்காகிதப் பஞ்சகாலத்தில்) எழுதியே முடியாதென்று எனக்கே தோன்றுகிறது.

மேற்கூறிய ஐக்கியத் தருவின் ஒரு கிளையில் நமக்குக் கிடைத்தப் பலன் என்னவென்றால்: "சென்னை கூட்டுத்தொழில் வர்த்தமானி" என்ற மாதாந்திரப் பத்திரிகையாகும். இதன் விஷயம் விரிக்கப்பெருக்கும். ஆகையால் இந்தப் பலனையும் இதில் உதிக்கும் வித்து முதலிய விஷயங்களையும் கவனிக்கக் கடவுளருளால் மற்றொரு சமயம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இம்மாதாந்திரப் பத்திரிகையின்பலனை அனுபவித்தவர்களில் நானும் ஒருவனானபடியால் என் சிற்றறிவிற்கெட்டிய வரையில்வாழ்த்துப்பாட்டுக்களைப் படித்து—"பஞ்சாயத்தார்களுக்கு ஓர் விக்ஞாபனம்" என்ற விஷயத்தையும் சுருங்கச் சொல்லி முடிக்கிறேன். நான் கவியுமல்ல, வித்வானுமல்ல, ஆகையால் ஹம்ஸக்ஷீர நியாயமாய் பிழை பொருக்கக் கோருகிறேன்.

திருமகளின் உறைவிடமோதே மருகுழிப்பதியென்
றரமகளிர்ஐயுறு மாறந்தனர்கள் வாழ்கின்ற
பெருநகராம் சோகத்தூர்ச் சங்கத்தின் வேலையையென்
குறுகுதலை மொழிகொண்டு கூறலுற்றேன் விஜபன்யான்.

ஏற்றினேன் புல்லட்டின் ஏர்பெருநல் வாழ்நாளைப்
போற்றினேன் நாத்தழும்பப் பொற்புறுபத்திரர் புகழைச்
சாற்றினேன் சங்கத்தைச் சார்ந்ததனைத் தாங்கவென்
வீற்றியார்த்த தனதிபர் வியனருளால் வாழியவே.

கல்லாத மாந்தற்கு மறிவூட்டக் கலியுகத்தில்
பொல்லாத போர்முகத்தால் போதாமற் காகிதங்கள்
இல்லாத காலத்துமெளியோர்களீடேற
நல்லாராய்ச் சிசையச்செய்யும் நன் புல்லட்டின் வாழி.

பூர்த்தியாய் மும்மூன்று வயதாகிப் பூதலத்தில்
கேர்த்தியாய் நிறைந்துள்ள நிர்மல பூரணமதிபோற்
கீர்த்தியாய் தண்கருணைக் கேடிறுயில் பூத்தருளும்
மூர்த்தியே போற்பொலிந்து மொய்ம்பொடு புல்லடின் வாழி.

I. பெருமை தங்கிய பஞ்சாயத்து மெம்பர்களுக்கோர் விக்ஞாபனம். பஞ்சாயத்தார்கள் என்பவர்கள் புகழுடையவர்கள் என்று எந்தச்



சபையிலாவது பஞ்சாயத்து அதிகாரம் கிடைத்த உடன் ஒருவிதமான உணர்ச்சிதோன்றி, அவ்வுணர்ச்சி முதலில் அதிகாரத்தோரணையிலும் பிறகு மற்ற விஷயங்களிலும் பரவி, படிப்படியாய்ச் சிறிது காலத்திற்குள் சில்லரையான மனஸ்தாபத்துடன், தான் எந்தச் சபையில் பஞ்சாயத்து மெம்பராக விருந்தாரோ அந்தச் சபையினின்றும் நீக்கிவிடப்படவேண்டிய தென்றவரையில் (சிலர் மாத்திரம்) கருதப்பட்டுக் கடைசியாய் மெம்பரினின்றுங்கூட நீங்கி விடுகிறார்கள். ஏன் ?

II. உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் (எந்தப் பாஷையிலாவது) முக்கியமாய் தன் தாய் பாஷையில், கீழ்தரப்படிப்பாவது படித்து, அப்படிப் பினின்றும் கூடியவரையில் உலகத்தையும் வியவகாரத்தையும் பொதுவாய் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியையும், இன்னும் இதுபோன்ற விஷயங்களையும், கற்றோருடனும் மற்றோருடனும், கலந்து பழகியும், தினப்பதிப்பு, வாரம் மும்முறைப்பதிப்பு, மாதாந்திரப்பத்திரிகை முதலியவைகளைத்தங்கள் சக்தியானுசாரம் தனியாகவோ, கூட்டாகவோ, தருவித்துப்படித்தும், நன்னடக்கைகளையும், பொறுமையையும் சிறுகச் சிறுக அப்பியசித்துக் கற்றுக் கொள்ளவேண்டும்.

III. இரண்டாவது பாராவில் சொல்லியவண்ணம் எல்லா ஜனங்களும் கற்றறிந்தவர்களாயிருக்கக்கூடிய காலம் நம் இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கிறது என்பதற்கு என்ன அடையாளம் என்று கேட்பீர்களானால் ஐக்ய நாணயச் சங்கங்கள் ஒவ்வொரு நாளும் விருத்தியாய் வருவதுதான் என்று சொல்வேன்.

IV. ஐக்கிய நாணயச் சங்கத்தினால் விருத்திகள் பலவிதத்திலும், பல துறைகளிலும் உண்டாகிறதென்பது நான் சொல்லாமலே அநேகருக்குத் தெரியலாம். தெரியாதவர்களுக்கு எனக்குத் தெரிந்தவரையில் மற்றொரு சமயம் சொல்லுகிறேன். இப்போது பேச ஆரம்பித்தவிஷயம் முதலாவது பாராவில் நிற்பதால் அந்தவிஷயத்தைச் சிறிது கவனிப்போம்.

V. வெகுவாய் கிராமாந்திரங்களில் 100-க்கு 6 பேர்கள் கூட செவ்வையாய்ப் படித்தவர்கள் கிடையாது. சில கிராமங்களில் ஒருவர் கூடக் கிடையாதென்றும் சொல்லலாம். அதிலும் பஞ்சமர்களின் பரிதாப நிலைமை மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது.

VI. இப்படிப்பட்ட (படிப்புக்குறைவான) பரிதாபநிலையில் ஒரு ஆறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதுதான் 3-வது பாராவில் சொல்லிய ஐக்ய

நாணயச் சங்கம். இந்தச் சங்கமானது பஞ்சாயத்தார்களுடைய நிர்வாகத்தில் நிற்கிறது. ஆகையால் நான் பஞ்சாயத்தார்களுக்கு (எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தாலும்) என் மனதில் உதித்த சில விஷயங்களை மட்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

VII (a) பஞ்சாயத்தார்களுக்கு இருக்கும் அதிகாரம் கவர்ன்மெண்டாராலாவது, அல்லது பஞ்சாயத்தார்களுடைய பிதிரார்ஜிதமாகவாவது, கிடைத்துவிடவில்லை. ஆனால் 6வது பாராவில் சொல்லியபடி, படியாதவர்களானாலும், தெறியாதவர்களானாலும் சங்கத்தின் எல்லா மெம்பர்களும் சேர்ந்த மகாசபையாரிடமிருந்து (நடவடிக்கை புத்தகத்தில் + கைக்குறி என்று கைநாட்டு போடப்பட்ட மெம்பர்களிடமிருந்துகூட) மேற்சொன்ன பஞ்சாயத்ததிகாரம் கிடைத்ததென்பதைப் பஞ்சாயத்தார்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டியது ஒன்று.

(b) சொஸைடியின் மெம்பர்களுக்கும் பஞ்சாயத்து மெம்பர்களுக்கும், (சொஸைடியின் நடவடிக்கைகளுக்குச் சம்பந்தமில்லாத) நேரிடும் மனஸ்தாபங்களையும் மாற்சரியங்களையும் சொஸைடி விஷயத்தில் பேசும்போதாவது மற்ற நடவடிக்கைகளின் போதாவது மனதில் நினையாமல் அடியோடு மறந்திருத்தல் இரண்டாவது.

(c) சங்கத்தில் கடன் சாங்கிஷன் செய்வது, பொருப்பேர்ப்படுத்திக்கொள்வது முதலிய விஷயங்களில் நியாயமாகவும் நடுநிலையாகவும் கடவுளுக்குப் பொதுவாய் தன் மனதை நிறுத்தித் தன் பந்துவென்றும், தன்னைச் சார்ந்தவரென்றும், பக்ஷபாதம் காட்டாமல் சமமாகநினைத்து ஓரஞ் சொல்லாதிருத்தல் மூன்றாவது.

(d) தனக்கு ஒருவர் நன்மை, அல்லது, தீமையைச் செய்தால் தனக்குச் சம்மதம் தானா என்று யோசனை செய்து தனக்காக நல்லதை மற்றவர் செய்தால், தனக்கு எப்படி அது சம்மதமாயிருக்குமோ அதைபோல மற்றவருக்குத் தான்செய்யும் காரியத்தை தனக்கு மற்றொருவர் செய்வது போல கவனித்துப் பார்த்து தனக்குச் சம்மதமானால் தானும் இதரர்களுக்கு அப்படிச் செய்யலாமென யோசிக்க வேண்டியது நான்காவது.

(e) 'உதயாஸ்தயம்' (இரவில் நித்திரை கூட இல்லாமல்) தன்னலமே கருதி வேலை செய்பவர்கள் அடையும், பலன், கீர்த்தி முதலியவைகளையும், பொதுநலம் கருதிப்பாடுபடும் உத்தமர்களடையும் பேர், புகழ், வாழ்வு முதலியவைகளையும்பற்றி ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும் விசாரித்தறிந்து, தாங்களும் பொது நலத்தில் (தன்னலம் அணுவளவும் கருதாது) உழைத்து அதனால் தான் அடையக்கூடியபதவியை அடையப் பாடுபடுவது ஐந்தாவது.



VIII. பஞ்சாயத்து மெம்பர்களுக்கு மேற்சொல்லிய a. b. c. d. e. குறிப்பிட்ட ஐந்து குணமாவது இருக்குமேல், உலகத்தில் பஞ்சபூதங்களுக்கு ஒப்பிடக் கூடியவர்களாய் பஞ்சாயத்தார்கள் விளங்குவார்கள் என்பதற்கும் சந்தேகம் உண்டோ?

IX. மேற்சொன்ன 7-வது பாராவில் கண்ட விவரப்படி அந்த ஐந்து விதமான தன்மையற்றவர்களாய் இருப்பதுதான் முதலாவது பாராவிலுள்ள "ஏன்?" என்ற கேள்விக்குச் சமாதானமாகும். தவிர மேற்சொன்ன உத்தம குணங்களில்லாவிடில் "பஞ்சாயத்து." என்பதற்குப் பதிலாய் பஞ்சு ஆயிற்று. பஞ்சாயிற்று— என்பதாய் 'ய' என்னும் எழுத்திருந்தவிடத்தில் 'யி' என்னும் எழுத்து முளைத்து, சொஸைடியின் பேரும் கெட்டு ஒருவருக்கொருவர் ஒற்றுமை தேடப்போய் (குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாய்) மனஸ்தாபங்கள் நேரிடும் என்பது திண்ணம்.

X. இச்சமயம் மகா சபையின் எல்லா மெம்பர்களையும் குறித்து ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது. அதாவது:—பஞ்சாயத்தார்களுக்கு மகா சபையாரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றதாலேயே மெம்பர்கள் பஞ்சாயத்தார்களை பொம்மை யாட்டுவதுபோல் ஆட்டி வைக்கலாம் என்று கருதிவிடக் கூடாது. மகா சபையார்கள் வைத்த ஆள்கள் பஞ்சாயத்தார்கள் அல்ல. மகா சபையாரால் கொடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஸ்தானத்தை பஞ்சாயத்தார்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற விதியுமில்லை. பொது நலம் கருதி ஐக்கியம் விருத்தியாவதற்காக ஒருவருக்கொருர் செய்து கொள்ளும் மகோபகாரமேயாகும். இது கடவுள் தூண்டுதலுமாகும்.

XI. ஆகையால் மகாசபையாரும், பஞ்சாயத்து மெம்பர்களும், சத்யத்துக்குக் கட்டுப்பட்டும், உலக முன்னேற்றத்தையும், நன்மைகளையும் கருதி ஒற்றுமையுடனுழைத்தும் சங்கங்களை விருத்திசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

XII. பலவிதத்திலும் நன்மை செய்தவரும், செய்கிறவரும், செய்யப் போகிறவருமாகிய நமது சக்கிரவர்த்திப் பெருமான் மாக்ஷிமை

தங்கிய மகாராணியாருடன் நீடூழிகாலம் வாழவேணுமாயும் கொலை மாந்தர்களான கொடியஜெர்மன் இராணுவச்செருக்கை முறியடித்து வெற்றிமாலை சூடவேணுமாயும் எல்லாம் வல்ல இறைவனை அல்லும் பகலும் தொழுவோமாக.

---

## செங்கற்பட்டு ஜில்லா ஐக்கிய நாணய கூட்டுறவினர்கள்,

காஞ்சிபுரத்தில் 9—11—18-ல் நடத்திய 8-வது கான்பரன்ஸில், உபசரணை கமிட்டி பிரஸிடேண்ட் ராய் சாஹிப், கா. அருளய்யநாயுடுகாரு செய்த உபன்னியாசம்.

கனவான்களே! சகபாடிகளாகிய கூட்டுறவினர்களே!

வரவேற்புக் கமிட்டியாரின் பேரால், உங்களெல்லோரையும் மிகச் சந்தோஷத்துடன் வரவேற்கின்றேன். இந்த சந்தோஷகரமான செயலைச் செய்ய, வரவேற்புக் கமிட்டியில் என்னிலும் சிறந்தவர்கள் இருக்க, என்ன காரணம் பற்றியோ கமிட்டியார் அதனை என்னைச் செய்யச் செய்தார்கள். முன்னொரு சமயம் இதே மண்டபத்தில், எனது நண்பர் ஒருவரின்பொருட்டு, இந்த தொழிலை நான் செய்ய நேர்ந்த தருநிபற்றியோ, அல்லது மகா நாடுகளைக் கூட்டும் தொழிலை தனக்கு உரிமையாகக் கொண்டிருந்த செங்கற்பட்டுக் கூட்டுறவினர் சங்கத்தின் காரியதரிசியாயிருந்த காரணத்தினாலோ, நான் அறியக்கூடவில்லை. எந்தக் காரணம்பற்றி அவர்கள் என்னைத்தெறிந்தெடுத்திருந்த போதிலும், அவர்கள் ஏற்றின சுமையை, என்னாலியன்றவளவு மிகுந்த சந்தோஷத்துடன் வகிக்கின்றேன். ஆனால், என்னைத் தேர்ந்தெடுத்தவர்களும், இந்த சபையினர்களும் நான் சொல்லப்போவதில், ரஸமானவிஷயங்கள் அடங்கியிருக்கு மென்று, எதிர் பார்ப்பதில் பிரயோசனமில்லை.

2. நீங்கள் இங்கு கூடியிருப்பதினாலேயே சந்தோஷிக்கிற நான், நீங்கள் கூடியிருக்கும் சமயத்தையும் நினைக்கும்போது, எனக்கு அதிக சந்தோஷமுண்டாகிறது. இதுவரையில் எட்டி யிருக்கும் சங்கதிகளால், நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியாருக்கும், அவரது நேச தேசத்தினர்களுக்கும், வெற்றிமேல் வெற்றி கிடைத்து வருவதில், என்றும் ராஜ விசுவாஸம் நிறைந்த இந்தியர்களாகிய நமக்கு, முக்கியமாய் கோவாபரேடர்களாகிய நமக்கு அடங்காமகிழ்ச்சி உண்டாகிறது என்று, நான்வாய் விட்டு சொல்லவும் வேண்டுமோ. எல்லாம் வல்ல ஈஸ்வரன், நமது காரணம் நீதிவழிப்பட்டதால், நமக்கு ஜயத்தை உண்டுபண்ணுவாராக.



இது நிற்க,

3. நாம் சிலநாளாய், மகாநாடு கூடுவதை நிறுத்திக்கொண்டோம் என்பது, நீங்கள் யாவரும்அறிந்த விஷயம். டிஸ்ட்ரிகட்டு பாங்கி ஏற்பட்ட பின்னர், அதனுடைய மகாசபையே மகாநாடு போல்வதாகையால் "கான்பரன்ச" என்று சொல்லப்படும் கூட்டம் அனவசியமென்று நினைத்திருந்தோம். ஆனாலும், நமது மகாசபை நடக்கும் சமயத்தில், பழையபடி கான்பரன்சுகூடி நம்மை யன்றி இதரக் கூட்டுறவினர்களின் யோசனையையும் கேட்பதுஉசிதமென்று, நாம் இப்போது தீர்மானித்ததினாலேஇந்தமகாநாடு கூடுவதாயிற்று. நாம் கடைசியாய் மகாநாடு கூடினது 1915 மேமீ" த்தில் அன்று இச்சாமண்டபத்தில் பிரமுகர்களாக வீற்றிருந்த எனது நண்பர்களில் சிலரை இன்று இவ்விடம் காண்கிலேன். அவர்களைக் காலன் என்னும் கோலன், நம்மினின்றும் பிரித்து, தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான். இப்படி காலன் வழிப்பட்ட நண்பர்களில் முதன்மையானவர், நமது, ஆதி ஆக்கிராசனாதிபதி, திவான்பகதூர், ஆதிநாராயண அய்யர் அவர்கள். ஐக்கிய இயக்கத்தை நமதுஜில்லாவிற்கு முதல்முதல் கொண்டுவந்தவரும், அதனைவேருன்றச் செய்தவரும், அது தழைத்துவர மிகுதியும் உழைத்தவரும் ஆவர் அந்த பெருந்தகையார். அவருக்குச் செங்கற்பட்டுக் கூட்டுறவினர்கள், என்றும் மறவாநன்றிசெலுத்தக்கடமைப் பட்டிருக்கிறார்கள்.

4. முதல் முதல் நாம்கூடிய மஹாநாட்டுக்கும், இதற்கும், மிகுந்த வித்தியாசம் உண்டு. நாம் முதல் முதல் கூடிய மஹாநாடு, 1909-ஞு பிப்ரவரிமீ" 21வ. அந்நாளில் நமது ஜில்லாவில் 42 சங்கங்களுக்கு மேலில்லை. யூனியன் என்றாவது, டிஸ்ரிகட்டு பாங்கி என்றாவது, ஒன்றும் யிருந்ததில்லை. இப்போதோ, 327 சங்கங்ளிருக்கின்றன. அவைகளில் யூனியன்கள் பதினொன்று, டிஸ்ரிகட்டுபாங்கி ஒன்று; அப்போது கூட்டுறவினர்களுக் கிருந்த அறிவிற்கும் இப்போதைய அறிவிற்கும், மிக்க வித்தியாசம் உண்டு. ஆகலினாலே, அப்போது வரவேற்ற நான் 'இப்போதையக் கூட்டுறவினர்களை வரவேற்கும் திறமையில்லாமல் கஷ்டப் படுகிறேன்.

5. "கூட்டுறவினர்கள் கூடிக்குலாவுவது" என்னும் நினைப்பை மனதில் உன்னி, நமது ராஜதானிலேயே-(ஏன், இந்தியாவிலேயே) முதல் முதல் மகாநாடுகூடி, ஏனையோர் உங்களைப் பின்பற்றச் செய்த பெருமையை படைத்த நீங்கள், நான் முன்சொன்னபடி அடைந்திருக்கும் விருத்தியை நோக்கும்போது, உங்களை நீங்களே புகழ்ந்துக்கொள்ளலாம் என்று யாவரும் சொல்லக்கூடும்; ஆனாலும், நாம் அடைந்திருக்கும் விருத்தி, கூட்டுறவின் ஒருபாகத்தை சேர்ந்ததே. அதாவது, நாணயத்தில் மாத்திரம், நாம் ஒருவாறாய் முன்வந்திருக்கிறோம். கூட்டுறவு, நாணயத்தைத்

தவிர, இதர வழியிலும் நமக்குபயன் உண்டுபண்ணு மென்பது நீங்கள் அறிந்த விஷயம். இதில் நாம் இப்போது என்ன செய்யவேண்டு மென்று பின்னர் சொல்லுகிறேன்.

6. நாணயக்கூட்டுறவில், நாம் சற்றுவிருத்தியடைந்திருக்கிறோமென்று சொன்னேன். இதுவாஸ்தவமேயானாலும், நாம் நடத்தும் நித்தியத்தொழிலில், சிறிது குறைகள் காணப்படுகின்றன. குணங்களை "விர்த்தியடைந்திருக்கிறோம்" என்றுவார்த்தையால் சொல்லிவிட்டு, குறைகளைச் சற்று எடுத்துச் சொல்லுகிறேன் என்று, எனது சகோதரர்கள் என்மீது கோபிக்காமலிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். குறைகளை எடுத்துச்சொல்வது, அவைகள் நீங்குவதற்குக் காரணமாகும். ஆனது பற்றி கூட்டுறவினர்கள் என்னை மன்னிப்பார்களாக.

(1) நாணயச்சங்கங்களின் நோக்கங்களில், முதன்மையானவை இரண்டு. ஒன்று, மெம்பர்களுக்கு கடன் கொடுத்தல், மற்றொன்று அவர்களுக்கு சிக்கனம் கற்றுக்கொடுத்து அவர்களின் மிகுதிப்பணத்தை சேகரித்துவைத்தல். நமது சங்கங்கள்,முதற்சொன்ன நோக்கத்தைமாத்திரம் கையாண்டு, பின்னதை மறந்துவிட்டிருக்கின்றன. இது விசனிக்கத்தக்க விஷயம். ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் ராமசந்திரராவ் அவர்கள்,நமது ரிஜிஸ்திராராயிருந்த காலத்தில் மெம்பர்களின் சிறுமிகுதித்தொகைகளைவசூலிக்கப் பிரயத்தனம் செய்யாத சங்கங்களுக்கு, சென்டிரல் பாங்கிகளிலிருந்து கடன் கொடுப்பதில்லை என்று,ஒரு உத்திரவு செய்திருந்தார். அந்த உத்திரவு கடினமானதாய் காணப்பட்டாலும், நல்லது செய்ததென்றே நான் மதித்திருந்தேன். இப்போது மெம்பர்களின் மிகுதிப் பணத்தைச சேகரிக்க, போதுமான பிரயத்தினம் செய்யப்படுவதில்லை என்று, நான் நினைக்கின்றேன். பிராவிடண்டு டிபாசிட்டாகவோ, சேவிங்ஸ் டிபாசிட்டாகவோ, நமது மெம்பர்கள் பணம் மிகுப்பார்களானால், பிரதி சங்கத்திலும் முன் கடனையன்றி, சாதாரணச்செலவிற்குவேண்டிய பணமும்,அந்தந்தகிராமங்களிலேயேகிடைக்கக்கூடும். ஆரம்பவருஷத்திலேயேகிடைக்காவிட்டாலும், 5 வருஷத்தில் 10 வருஷத்தில் கிடைக்கலாம் இதுவிஷயமாய் 1911௵ ஜூன்மாதத்தில் நீடாமங்கலத்தில் நடந்தேறிய கூட்டுறவினர்களின் கான்பரன்சில், நான் சொன்னது இப்போது எனக்கு ஞாப



கம் வருகிறது. நான் சொன்னது என்னவென்றால், ஒருசங்கத்தில் 30 மெம்பர்கள் இருப்பதாக உத்தேசித்துக்கொள்வோம் இந்த மெம்பர்கள் 30 பேரும் கஷ்டப்பட்டு, வருஷத்தில் மெம்பரொன்றுக்கு 10 ரூபா வீதம் சேர்ப்பார்களானால், வருஷம் 1-க்கு ரூபா 300 ஏற்படும். 10 வருஷத்தில், அவர்களுக்கு சாதாரணமாய் செலவுக்கு வேண்டிய ரூபா 3,000 சுலபமாய்ச் சேர்ந்துவிடும்.தங்களுக்கு வேண்டியபோது, அதைத் தங்கள் சொந்தப்பணமென்றுஎடுத்துக்கொள்ளாது,தங்கள் பண ஆதரவின்பேரிலேயே கடன் வாங்கிக்கொண்டால், கடனால் திருப்பிக்கொடுக்கவேண்டிய அவசியமிருப்பதால், சங்கத்தின் மூல தனம் எடுபடாமல், மெம்பர்களுக்கு வேண்டியபோது பிரயோசனப்படும்.பார்த்தீர்களா, ஏழையும் தனக்குத்தானே கடன் கொடுத்துக் கொள்ளும் நிலைமைக்கு வந்து விடுவது சாத்தியமாவதை.

(2) "புக் அட்ஜஸ்டுமெண்டு" என்று பெயர் பெற்றிருக்கும் துர்வழக்கம், பெரிதும் எடுபட்டுப் போய்விட்டதாக நாம் பாவிக்கக்கூடுமாயினும், இன்னும் சிற்சில இடங்களில் அது காணப்படுவதாக அறிகிறேன். இந்தக்கெடுதியைக் குறித்து நான் சவிஸ்தாரமாய்ச் சொல்லக்கூடுமாயினும், அது உங்களுக்குத் தெறிந்தது பற்றி, விரித்துச் சொல்லாமல், நிற்கிறேன். புக் அட்ஜஸ்டுமெண்டு செய்வதால், வாங்கின கடன் தீருவதில்லை. சாவுகாரிடத்தில் கடன் வாங்குவதற்கும், சங்கத்தினிடம், கடன் வாங்குவதற்கும் சிறிதும் வித்தியாசமில்லை. இந்தக்குறை மிகுதியும் பஞ்சாயத்தாரிடம் காணப்படுவதால், அவர்கள் என்னை மன்னித்து, இதனைக்கைவிடுவார்களாக. அவர்களிடம் வைத்த நம்பிக்கையை, அவர்கள் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மல்லவோ?

(3) நாம் இப்போது மெம்பர்களுக்கு, அவர்கள் வருமானத்தை மிகுக்கக்கூடிய காரியங்களுக்குக்கடன் அதிகமாய்க்கொடுக்காமல், பழைய கடனைத்தீர்க்க விசேஷமாய்க் கொடுக்கிறோமென்றும், அதனால், நமது நிலைமை சீக்கிரம் விருத்தி அடைவதில்லை என்றும் நமது ரிஜிஸ்திரார் அபிப்பிராயப்படுவது, நீங்களெல்லோரும் அறிந்த விஷயம். இந்த விஷயத்தில் நமது பழைய அபிப்பிராயம், ரிஜிஸ்திராருடையது போன்றதேயானாலும் மத்தியில் பழைய கடனைக் கொடுப்பது சிலாக்கியமென்று

நினைத்தோம். பழைய கடனைக்கொடுப்பது சில சந்தருப்பங்களில் அவசியம்தான். ஆனால், வருமானத்தை அதிகரிக்கக்கூடிய வழியில் பணத்தைச் செலவிடுவது விசேஷமென்று நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் இவ்விஷயத்தைக் கையாடும் படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 1918ஹு ஜுன்மீ 30வ நமது சங்கங்கள் மெம்பர்களுக்கு கொடுத்த கடன் வசூல் செய்வதில், 100க்கு 30 பாக்கி வைத்திருந்தனவென்று, அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார் அவர்கள் சொல்லத்தெறிந்துக்கொண்டிருக்கிறேன். இதுவும்விசனிக்கத்தக்க விஷயமேயாம். இதுவிஷயத்தில் கூட்டுறவினர்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

7. நமது டிஸ்ட்ரிகட்டு பாங்கைக்குறித்தும் சில விஷயங்களை நான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்த பாங்கிற்குப் போதுமான பங்குத்தொகை இல்லாமையினால், நமதுசங்கங்களின் லேவாதேவிக்குப் போதுமான பணம் சேகரிப்பது, கஷ்டமாயிருக்கிறதென்கிற விஷயம், நீங்களெல்லோரும் அறிந்தது. பங்குத்தொகையும், க்ஷேம நிதியும், எவ்வளவோ, அவ்வளவின் எண்மடங்குதான், நாம் கடன் வாங்கக்கூடும். பங்குத்தொகை குறைந்திருக்கவே, நமது பாங்கு கடன் வாங்க இயலாமல், சங்கங்கள் சென்ற வருஷத்தில் கஷ்டப்பட்டனவென்று, நான் சொல்லாமலே விளங்கும். இந்தக் குறையை ஒருவாறுதீர்க்க, நமது ஆரம்பஏற்பாட்டைச் சிறிது மாற்றி, சங்கங்களையல்லாமல் வெளிநபர்களையும், தாராளமாய் மெம்பர்களாகச்சேர்த்திருக்கிறார்கள். இன்னும் சிலர் சேருவார்களென நம்பிக்கையு மிருக்கிறது. சங்கங்களாகிய நாம், இது விஷயத்தில் என்ன செய்யவேண்டியிருக்கிறதென்றால், பங்குத்தொகையாக எவ்வளவு தொகையைச்செலுத்தவேண்டுமோ, அவ்வளவுதொகையையும்செலுத்தவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். மெம்பர்களிடமிருந்து சங்கங்கள் வசூலித்திருக்கும் பங்குத்தொகையை, பூர்த்தியாகவோ, அல்லது பெரும்பாகத்தையோ, கொடுத்து, டிஸ்ட்ரிகட்டு பாங்கை பலப்படுத்தி, கூட்டுறவில் முதிர்ச்சியுள்ளவர்களாக எண்ணப்படுகிற நாம், நமது ஜில்லாவின் நற்பெயரைக் காப்பாற்றவேண்டும்.

8. நாணயத்தையல்லாமல் வேறுவழியிலும் கூட்டுறவு பிரயோசனப்படுமென்று, சற்று முன்னர் சொன்னேன். வேண்டிய சாமான்களை



ஒன்று சேர்ந்துவாங்குவதினாலும், உற்பத்தி செய்யும் சாமான்களை ஒன்றுசேர்ந்துவிற்பதினாலும் நாம்பெருத்தலாபத்தை அடையக்கூடும். இந்த விஷயங்களைச் சொல்வது எளிதாகக்காணப்படுகிறது. செய்வது வெகுகடினமாயிருக்கின்றது. கஷ்டமெப்படி யென்றால், நாணயசங்கத்தைஸ்தாபித்து, கொடுத்தகாலத்தில் என்ன கஷ்டப்பட வேண்டிருந்ததோ அவ்வளவுகஷ்டப்படவேண்டியிருக்கிறது. வரையறுக்கப்படாத பொறுப்பை விவரித்து சொன்னமாத்திரத்தில், கூட்டமாய் கூடியிருந்த ஜனங்கள் சொல்லாது ஒவ்வொருவராய் நழுவினவர்களை, மறுபடியும் சேர்த்த கஷ்டத்துக்கு சமானமாயிருக்கிறது. இப்போது கோவாபரேடர்கள் இல்லாத ஆக்ஷேபணைகளைச் சொல்லுகிறார்கள். ஒன்றிரண்டு செய்துவழக்கத்திற்கு வந்தவுடனே, கூட்டாய்வாங்குவதும், கூட்டாய் விற்பதும், சாதாரணமாய் விடுமென்று நான் நம்புகிறேன். கூட்டாய் வாங்குவதை பார்க்கிலும் விற்பதில் சில கஷ்டங்களிருக்கின்றன. உற்பத்தி தானியத்தை ஒன்று சேர்த்து வைக்க இடமும், ரகங்களை பிரிக்கும் தொல்லையும், கஷ்டமானவைதான். ஆனால், இவைகள் கடக்கமுடியாத கஷ்டங்களல்ல. சில நிபந்தனைகளின்பேரில் தானியம் மெம்பர்களிடத்திலேயே விடுபட்டிருக்கலாம். கூட்டாய் வாங்கும் விஷயத்தில், ஆரம்பத்திலேயே மெம்பர்களுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் வாங்குவது சாத்தியமென்று எனக்குத் தோன்றவில்லை. சிறு அளவாக வேண்டியிருக்கிற மிளகு, கடுகு, முதலிய சாமான்களை விட்டுவிடலாம். பெருவளவாக வேண்டியிருக்கிற மாட்டுத்தீவனங்கள் (பருத்திவிதை, கொள்ளு) மிளகாய், துணி, எரு; முதலியவை வாங்கலாம். இது விஷயத்தில்சங்கங்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

9. இப்போது ரிஜிஸ்திராராய் வீற்றிருக்கும் கனவானை உங்களில் இன்னும் சிலர் அறியாமலிருக்கலாம். இந்த உயர்ந்த பொறுப்பேரிய உத்தியோகத்திற்கு, நாம் எப்படிப்பட்ட கனவானை உடைத்தாயிருக்கிறோமென்றால், அவருக்கிருக்கும் மனோபலம், மிதமற்ற உற்சாகம், இது கெட்டது இது நல்லது என்று பகுத்தறியும் தன்மை, ஆகிய இந்த குணங்களால் நமக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்திலிருந்து நீங்க வழிகாட்டவும், நமது முயற்சியைப் பூர்த்திசெய்விக்கவும் வல்லமை வாய்ந்த கனவான், விவசாயியின் க்ஷேமத்தில் அவருக்கிருக்கும் ஆசை அளவு

கடந்தது. அவரை வழிகாட்டியாய்க்கொண்டிருக்கிற கூட்டுறவினராகிய நாம், ஒழுங்காகக் காரியம்செய்து, பயன்பெறுவோமென்பதில் சந்தேகமில்லை.

10. வரவேற்புக் கமிட்டியின் பெயரால், மற்றுமோர் முறை, 'உடனே வரவேற்கிறேன். நாடெங்கும் பரவியிருக்கும் ஜுரத்தின் கஷ்டத்தை கவனியாது, நீங்களெல்லோரும் வந்ததைகுறித்து, வரவேற்புக் கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன் ; உங்கள் வசதிக்காக நாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள் குறைவாகவிருக்கலாம். அதனை நீங்கள் பொருள்படுத்தாது, எங்கள் நல்லெண்ணத்தையே ஏற்று, மன்னிப்பீர்களாக. நான் உங்கள் காலத்தை அதிகமாய்ச் செலவழித்துவிட்டேன். இன்னமும் தடைசெய்யாமல், மஹா நாட்டுக்கு ஒரு அக்கிராசனாதிபதியை தெறிந்தெடுக்க வேண்டுகிறேன். லோகோபகாரமான காரியங்கள் ஒவ்வொன்றிலும் அனுதாபப்பட்டு, அதனுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளுகிற ஒருகனவான், இன்றைக்கு நீங்கள் நடத்தப்போகிற நடவடிக்கைகளுக்கு, தக்க அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க போகிறார் என்ற எண்ணம் தோன்றும்போது, எனக்கு உண்டாகும் சந்தோஷத்தை, தெறிவியாமல் இருக்க முடிய வில்லை. இன்று நடவடிக்கைகளில் தலைவராயிக்க, அவரை நாம் தெறிந் தெடுப்பது அவர் பலவித முயற்சிகளில் ஈடுபடுவதற்கும், அவருடைய முற்றின அறிவிற்கும் நாம்கொடுக்கக்கூடிய ஒரு கேவலமான காணிக்கையாகும்.

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் X] 1918ஞு டிஸம்பர்மீ [இலக்கம் 6

## பத்திராதிபரின் குறிப்புகள்

### வெற்றியும் சமாதானமும்.

உலக சரித்திரத்திலேயே இதுவரையில் ஏற்பட்டிராத யுத்தம், இப்பொழுது முடிவடைந்திருக்கின்றது. உயிர்கள் நஷ்டமும், பொருள்களின் சேதமும் இப்பொழுது ஒழிந்து போய் விட்டது. இக்கொடிய யுத்தத்தின் பலனாக ஏற்பட்டுள்ள கஷ்டமும், துக்கமும் இன்னும் சில நாட்கள் வரையில் தீராதென்பது உண்மையே. ஆயினும் யுத்தம் இவ்வளவுடன் முடிந்ததே யென்றும், இனியேனும் மனிதர்கள் தமது இலாபகரமான வேலைகளைக் கவனிக்க சமயம் வாய்த்துள்ளதே யென்றும் அல்லும் பகலும் கோடிக் கணக்கான ஆண்களும் பெண்களும் கடவுளை வாழ்த்துகிறார்கள். இந்த யுத்தத்திற்குக் காரணம் என்னவாயிருந்தாலும், ஒருவனுக்கு அல்லது ஒரு தேசத்திற்கு ஏற்படும் பேராசையே முக்கிய காரணமாகக் கொள்ளவேண்டும். இத்தகைய பேராசைக்கு இடங்கொடுப்பது மானிடவாழ்க்கையில் கெட்ட வழி யென்பது சொல்ல வேண்டிய அவசியமில்லை. பேராசை யென்னும் பேய் பிடித்தாட்டும்போது பிறருடைய கஷ்டங்களையும், துக்கங்களையும் சிறிதேனும் கவனிக்காமல் தம்முடைய சுகத்தையும் சுய நலத்தையுமே பெரிதாகப் பாராட்டச் செய்கின்றது. ஒரு தேசத்தை விட மற்றொரு தேசம், முன்னடைய வேண்டும், ஏராளமான பொருள் சேர்க்கவேண்டும் என்று பேராசை கொள்ளுமாகில் உலக சமாதானத்திற்கும் உலகத்தின் சந்தோஷத்திற்கும் சுகத்திற்கும் பங்கம் ஏற்படுகிறதென்று கவிச்சக்ரவர்த்தியாகிய ஸர் ரவீந்தரநாத் டாகோர் "தேசீயமெ"ன்னும் தமதரிய வியாசத்தில் வெகு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். யுத்தம் ஒழிய

வேண்டுமானால் பேராசையென்னும் பேய்விட்டகலவேண்டும். தேசங்கள் ஒவ்வொருவர்க்குள்ளும் பொருமை நீங்கவேண்டும். இரகஸ்ய உடன்படிக்கைகள் ஒழியவேண்டும். இவைகளுக்குப் பதிலாக கூட்டுறவு இயக்கம் பரவவேண்டும். இராஜ்ய விஷயங்களிலும், வியாபார விஷயங்களிலும், ஆத்ம விளக்கமடையும் விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும் க்ஷேமமாகவும் இருந்து வாழக்கூடிய கூட்டுறவு வாழ்க்கை நிலைபெற வேண்டும். இன உரிமைச்சங்க (லீக் ஆப் நேஷன்ஸ்) ஸ்தாபனத்தால் நன்மை விளையக் கூடுமென்று நாம் உறுதியாய் நம்புகிறோம். ஆயினும் பல தேசங்களினுடைய பேராசையும், சுயநலமும் இச்சங்கத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கக் கூடுமென்பதையும் நாம் மறந்து விடவில்லை. பல தேசங்களும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்ற கூட்டுறவு எண்ணம் இப்பொழுது முடிந்த யுத்தத்தால் நாம் அறிந்து கொண்டோமானால் இப்பொழுது நடந்த கொடிய யுத்தம் வீணாக நடந்தேறியதாகச் சொல்ல முடியாது.

* * *

### உணவுப்பொருள்களின் அகவிலை.

உணவுப்பொருள்களினுடையவும், மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக வேண்டிய சாமான்களினுடையவும் விலை தினந்தோறும் உயர்ந்து கொண்டே வர, ஏழைகளினுடைய கஷ்டமும் துக்கமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மாகாண கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் பயனற்ற முயற்சிகளில் எவருக்கேனும் நம்பிக்கை ஏற்படாமற் போவது ஆச்சரியமல்ல. "உணவுப் பொருள்களினுடையவும், இதர சாமான்களினுடையவும் விலைதினந்தோறும் உயர்வதைத்தடுக்கும்படிக்கும், கஷ்டம் அதிகமாக ஏற்பட்டுள்ள பாகங்களில் கஷ்ட நிவர்த்தி உதவி வேலைகள் (relief works) ஸ்தாபிக்கும்படி யாகவும்," கவர்ன்மெண்டாரை வேண்டி சென்னை சட்டசபையில் சென்ற மாதம் 20 ந் தேதி கனம். மிஸ்டர் சிவராவ் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இவ்விஷயம் சட்டசபையில் மிகவும் ஊக்கமாகவே வாதஞ்செய்யப்பட்டது. ஒரு ஓட்டின் பலக்குறைவால் தீர்மானம் தோற்றுப்போயிற்று. தீர்மானத்தை ஆமோதித்து 18 பேர் ஓட்டுக்கொடுத்தார்கள். தீர்மானத்திற்கு விரோதமாக 19 பேர் ஓட்டுக்கொடுத்தார்கள். இரண்டுபேர் எந்தப் பக்கத்திலும் ஓட்டுக் கொடுக்காமல் மௌனமாக இருந்து விட்டார்கள்.

உணவுப்பொருள்களின் விலை அதிகமாக உயர்வதைப்பற்றி மாகாணக்கவர்ன்மெண்டார் விலைகளை இங்கு நிர்ணயஞ் செய்வதால் பிரயோசனம் ஒன்றும் ஏற்படாதென்றும், அரிசி ஏராளமாக பர்மாவிலிருந்து வருவதால் விலையை அங்குக் கட்டுப்படுத்த மாகாண கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கிடையாதென்றும், இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானத்



தையே மாகாண கவர்ன்மெண்டார் எதிர் பார்க்க வேண்டியிருக்கிறதென்றும், மாகாண கவர்ன்மெண்டார் பதில் சொன்னார்கள். ஆயினும் உத்தியோக முறையில்லாத அங்கத்தினர்கள் ஸர் பேர்லஸ் பார்பர் உள்பட இந்த அபிப்பிராயத்தை அங்கீகாரஞ் செய்யவில்லை. இங்கு விளையும் சாமான்களினுடைய விலை உயர்ந்து வருவதாகவும், அதிக இலாபஞ் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே வியாபாரிகள் விலையை அதிகமாக உயர்த்தி வருகிறார்களென்றும், அவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்த மார்க்கம் ஒன்றும் ஏற்படவில்லை யென்பதாகவும், மெம்பர்கள் வற்புறுத்தினார்கள்.

கஷ்ட நிவர்த்தி உதவி வேலைகள் ஸ்தாபனஞ் செய்யும் விஷயமாக பஞ்சகால சட்டத்தின் படி தற்கால நிலைமையில் உதவி செய்ய இடமில்லை யென்பதாக ஸர் அலெக்ஸான்டர் கார்டியூ பதில் சொன்னார். பஞ்ச காலச் சட்டத்தைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் வேலை அகப்படாததின் நிமித்தம் கஷ்டம் ஏற்படவில்லை யென்றும், விலை அதிகமாக இருத்தல் காரணம் பற்றியே துக்கமும், கஷ்டமும், ஏற்பட்டுள்ளதென்றும் அநேக மெம்பர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். கஷ்டம் அதிகரித்துள்ளதென்று எல்லோரும் குறைகூற நமது மாகாண கவர்ன்மெண்டார் மட்டும் "சாவதானமாய்க் கவனிக்கலாம்" என்னும் கொள்கையைக் கைக்கொண்டிருப்பதாகத் தெறிகிறது. இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் தலையிட்டு அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விலையை உயர்த்தும் வழக்கத்தைக் தடுக்கும்படியாக மாகாண கவர்ன்மெண்டாரை மற்றொரு முறை வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

* * * * * *

### வீடுகள் கட்டிக்கொள்ள கூட்டுறவு உதவி.

"ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க கூட்டுறவு சங்கங்கள் உதவி செய்வதை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்றும், மாகாண கவர்ன்மெண்டாரால் தற்காலம் கூடுமான வரையில் பண உதவி கவர்ன்மெண்டார் இவ்விஷயத்திற்குச் செய்யவேண்டு மென்றும்" சென்ற மாதம் 21-ந் தேதியன்று மாகாண சட்ட சபையில் கனம் பி. வி. நரசிம்ஹஐயர் ஒரு தீர்மானங் கொண்டுவர, கனம் மிஸ்டர் ஏ. எஸ். கிருஷ்ணராவ் அத்தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினார்.

கவர்ன்மெண்டார் தரப்பில் கனம். மிஸ்டர். பி. இராஜகோபாலாச்சாரியார் இத் தீர்மானத்தை ஒப்புக் கொண்டாரெனினும், இவ்விஷயத்தில் பிரத்தியட்சமாக கவர்ன்மெண்டார் எத்தகைய உதவிசெய்யப் போகிறார்களென்பது இதற்குள் சொல்லமுடியாது. "கவர்ன்மெண்டாரால் தற்காலம் கூடுமானவரையில்" என்றிருத்தலால், எவ்வித உதவியும்

செய்யாமலே கவர்ன்மெண்டார் இருக்கக்கூடும். ஆனால் கவர்ன்மெண்டாருடைய நோக்கம் அதுவல்லவென நாங்கள் நம்புகிறோம்.

இது சம்பந்தமாக இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. கட்டடச்சங்கங்களுக்கு 100-க்கு 5½ வட்டிக்கு பணம் கொடுக்க இந்தியா கவர்ன்மெண்டார் அனுமதியை பம்பாய் மாகாண கவர்ன்மெண்டார் பெற்றிருக்கிறார்கள். சென்னை மாகாண கவர்ன்மெண்டாரும், இவ்வழியைப்பின்பற்றி ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

## வட்டியை உயர்த்துதல்.

நெல்லூர் கோவாபரேடிவ் பாங்கிங் யூனியனின் மகா சபைமீடிங்கில், யூனியன், சங்கக்களுக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டிவிகிதத்தையும், சங்கங்ள் மெம்பர்களுக்குக் கொடுக்கும் வட்டி விகிதத்தையும் சிறிது உயர்த்த வேண்டியது அவசியமென்பதாக கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் ஹெமிங்வே சொன்னார். டிபாசிட்டுகள் ஏராளமாகக் கிடைக்கும்படிச் செய்வதற்கு, சங்கம் கொடுக்கும் வட்டிவிகிதத்தை உயர்த்த வேண்டியது அவசியமாக இருக்கின்றது. கவர்ன்மெண்டார் யுத்தகடன்களுக்கு 5½ வட்டி கொடுக்கிறார்கள். டிபாசிட்டுகள் ஏராளமாக பெறுவதற்கு கூட்டுறவு சங்கங்கள் வட்டியாவது அதிகமாக கொடுக்கவேண்டியது அத்தியாவசியமாக ஏற்பட்டிருக்கின்றது. வருஷந்தோறும் சுமார் 500 புதுச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. வருஷந் தோறும் பழையச்சங்கங்களின் லேவாதேவி அதிகரிக்கின்றது. டிபாசிட்டுகள் ஏராளமாகக் கிடைத்தாலொழிய சங்கங்களின் லேவாதேவி சரிவர நடைபெற முடியாது. இவ்விஷயத்தை கிராமச்சங்க மெம்பர்கள் உணர்வார்களென்றும், வட்டிவிகிதம் சிறிது உயர்த்தப் படுவதை சங்கங்கள் மறுக்காமல் அங்கீகாரத்துடன் ஏற்றுக் கொள்வார்களென்றும் நம்புகிறோம்.

* * *

## தென்கன்னடம் தோட்டப் பயிரிடுவோர்களின் சங்கம்.

தென்கன்னடம் தோட்டப் பயரிடுவோர்களின்சங்கம் 1-10-18-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அன்றையதினமே வேலை துவக்கிவிட்டது. இச்சங்கம் விட்டல் என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இப்பாகம் கொட்டைப்பாக்கு வியாபாரத்திற்கு முக்கிய ஸ்தலம். தங்களிடம் விளைவாகும் கொட்டைப்பாக்கை இதரத்தாரகர்களுக்குக் கொடுக்காமல் தாங்களே தங்களின்சரக்கைவிலையாக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. விவசாயச் செலவுகளுக்கும் கவர்ன்மெண்டு கிஸ்தி கட்டுவதற்கும் இவர்களுக்குப் பணம் வேண்டியிருத்தலால் மெம்பர்களுக்குப் பணம் கடன்கொடுக்கவும் சங்கத்



தில் ஒருவிதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தோட்டப்பயிர்களின் ஏற்றுமதிக்காக மங்களூர் மத்திய ஸ்தலமாதலால் அங்கு ஒரு பண்டகசாலை ஏற்படுத்த மெம்பர்கள் எண்ணி அக்டோபர்மீ 26-ந் தேதியன்று ஜில்லா கலெக்டர் மிஸ்டர் வைபர்ட் அவர்களால் ஒரு பண்டக சாலையும் மங்களூரில் திறந்து வைக்கப்பட்டது.

## யுத்தகாலத்திலும் அதன்பின்னும்

யுத்தகாலத்தில்கூட தடைபடாமல் வேலை நடத்திவந்ததும் விர்த்தியடைந்ததும் கூட்டுறவு ஒன்றேதான். கலகங்களும் குழப்பங்களும், சுயராஜ்யக்கிளர்ச்சிகளும் ஏராளமாகவிருந்தும் ருஷ்யாவில் கூட்டுறவு முயற்சி மட்டும் செவ்வனே வளர்ந்தோங்கிவந்திருக்கின்றது. இராணுவங்களுக்கு வேண்டிய சாமான்களை சப்ளை செய்யவும், தேசத்தின் குடிகளுக்கு உணவுப்பொருள்கள் ஒழுங்காகப்பங்கிட்டுக் கொடுக்கவும் பிரான்ஸ்தேசமும், இடாலியும், கூட்டுறவு இயக்கத்தை ஏராளமாக உபயோகித்திருக்கிறார்கள். யுத்தகாலத்தில் ஜர்மனியிலும் ஆஸ்டிரியாவிலும் சங்கங்களின் தொகை அதிகரித்திருக்கின்றது. ஜர்மனியர்களின் கொடுமை அதிகமாகச் செய்யப்பட்ட பெல்ஜியம் தேசத்திலும் கூட்டுறவு முயற்சி வளர்ச்சியடைந்திருக்கின்றது. யுத்தகாலத்தில் ஏராளமாகப்பயன்பட்டது போலவே கூட்டுறவு முயற்சி யுத்தத்திற்குப்பின்னும் ஏராளமாகப் பயன் விளைவிக்கக் கூடும். யுத்தகாலத்தின் கொடுமைகளால் பாழடைந்து போன பூந்தோட்டங்களும் கிராமங்களும் பிறகு செவ்வனே சீர்செய்யப்பட்டு முன்போலப் பிரகாசம் பெறவேண்டுமானால் ஏராளமானப் பணஉதவி அவசியம். பணஉதவி கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டாலுஞ் சரிஅல்லது இதர தனவந்தர்கள் மூலமாகச் செய்யப்பட்டாலுஞ்சரி ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலமாகத்தான் ஜனங்களுக்குப் பட்வாடா செய்யப்படவேண்டும். யுத்தத்தினால் அழிந்துபோன வீடுகளைப் பழுதுபார்க்கவும், புது வீடுகளைக்கட்டவும்கூட்டுறவு கட்டடச்சங்கங்கள் ஆயிரக்கணக்காக ஸ்தாபிக்கவேண்டியிருக்கும். யுத்தத்தினால் நேர்ந்த நஷ்டமும் சேதமும் ஈடுசெய்யப்பட வேண்டியதற்காக ஒவ்வொரு தேசமும் சிக்கனமாக வேலைகள் நடத்தவேண்டுமென்பது அவசியம். இதுகாரணம் பற்றி விவசாயச் சங்கங்களும், வியாபாரச் சங்கங்களும் எவ்வகைச் சங்கங்களும் ஸ்தாபிக்கப் படவேண்டியது அத்தியாவசியமாக இருக்கின்றது.

## கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கு,

இந்தப்பாங்கின் 1916-17 வருஷத்திய ரிபோர்ட்டும், 1917-18 வருஷத்திய ரிப்போர்ட்டும் நமக்கு இப்போது கிடைத்திருக்கின்றன. முந்தின ரிப்போர்ட்டு பலநாட்கழிந்த ரிபோர்ட்டானதால் அதைப் பற்றி

விரிவாக எழுதுவதற்கு ஒன்றுமில்லை. ஆனாலும் முக்கிய விஷயம் ஒன்று இருக்கின்றது. 1916-17 வருஷத்திய ஆரம்பத்தில் இந்த பாங்கு தென்கன்னடம் ஜில்லா பாங்குக்கு கடன் கொடுக்க வேண்டியிருந்தது ஆனால் அவ்வருஷ முடிவில் தென்கன்னடம் ஜில்லாபாங்குக்கு கொடுக்க வேண்டியிருந்த தொகையை வாபஸ் செய்து விட்டதுமன்றி, ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் இதர ஜில்லா பாங்கிகளுக்கும் கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கு கடன் கொடுத்திருந்தது.

1917-18 வருஷத்தில் அச்சங்கத்தின் மெம்பர்களின் தொகையில் அநேகமாய் மாறுதல் ஏற்படவில்லை. வருஷக்கடைசியில் சுமார் 175 மெம்பர்களிருந்தார்கள். அவற்றுள் பதினாறு சங்கங்கள் மெம்பர்களாக இருந்தன. பாங்கின் பங்குத்தொகை ரூ. 77,520-லிருந்து ரூ. 79,700 க்கு உயர்ந்தது. இவ்வளவு சொற்ப தொகை உயர்ந்தது திருப்திகரமென்று சொல்லுவதற்கில்லை. 1916-17 வருஷக்கடைசியில் சங்கத்தில் இருந்த டிபாஸிட்டுகளின் மொத்தம் ரூ. 4,15,000, பிரஸ்தாப (1917-18) வருஷக்கடைசியில் இருந்த டிபாஸிட்டுகளின் மொத்தம் ரூ. 545,000. இவ்வளவு டிபாஸிட்டுகள் உயர்ந்ததற்குக் காரணம் 100-க்கு 50-திற்கதிகமாக அங்குள்ள நிதிகள் இப்பாங்கில் தங்களுடைய தொகைகளை கர்ரெண்டு டிபாஸிட்டுகளாக போட்டு வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பாங்கு இதர சென்ட்ரல் பாங்குகளுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்திற்கதிகமாகக் கடன் கொடுத்திருக்கின்றது. இத்தொகையில் ஒரு இலட்சம் ரூபாய் சென்னை சென்ட்ரல் அர்பன் பாங்கில் $6\frac{1}{2}$ வட்டிக்கு பிக்ஸட் டிபாஸிட்டாக போட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. சௌகர்யமாய் வேறெங்கும் கடன் கொடுக்க முடியாத காரணத்தால் தான் இங்கு டிபாஸிட்டு செய்யப்பட்டிருக்கின்றது.

சங்கத்திற்கு வசூலாக வேண்டியிருந்த தொகையில் வருஷக்கடைசியில் ஒரு பைசாகூட வசூலாகாமல் பாக்கி, நிற்கவில்லை. எவ்வளவு வசூலாக வேண்டுமோ அவ்வளவும் வசூலானது இவ்வருஷந்தான் முதல் வருஷம். யூனியன்களும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரும், அவருடைய சிப்பந்திகளும் இவ்விஷயத்தில் சங்கத்திற்கு செய்த உதவி மிகவும் பாராட்டத் தக்கதென்பதாக சங்கத்தின் ரிப்போர்ட்டில் காணப்பட்டிருக்கின்றது.

மலை வாசிகளுக்கென்று ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள் 20 லிருந்து 30-க்கு அதிகரித்தன. படகர் சங்கங்களின் முன்னேற்றத்திற்திற்காகவும் அவைகளின் திருப்திகரமான வேலைக்காகவும் "காயடீ" யூனியனின்



பிரஸிடெண்டு ராய் சாகேப் பெல்லி கௌடர் மிக்க ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் வேலை செய்து வருவதாக பைங்கின் ரிப்போர்ட்டு கூறுகின்றது.

பிரஸ்தாப வருஷத்தில் சங்கத்திற்கு ரூ. 13,033 இலாபம் கிடைத்தது. அதற்கு முந்தின வருஷத்தில் ரூ. 11,657 இலாபமாகக் கிடைத்தது. சங்கத்தின் வேலைகள் மிகவும் திருப்திகரமாக நடந்து வருகின்றன. சங்கத்தின் திறமான வேலைக்கு சங்கத்தின் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ, C. N. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுடைய ஊக்கமும், சிரத்தையும், விடாமுயற்சியுமே காரணம்.

* * *

சென்னை சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்களுக்கு பட்டமளிக்கும் வருஷாந்தரக்கூட்டம் (கான்வொகேஷன்) இவ்வருஷம் நடைபெற்றபோது பட்டதாரிகளெல்லோரும் சாஸ்திர ஆராய்ச்சியிலும், தொழில்களை அபிவிர்த்திசெய்யும் மார்க்கத்திலும், பிரயத்தனப்பட வேண்டுமென்பதாக கான்வொகேஷன் அட்ரஸ் வாசித்த ஸர் தாமஸ் ஹாலண்டு புத்திமதி கூறினார். இந்தியாவில் ஒரு ஏகரா நிலத்தில் விளைவதைவிடமூன்றுபங்கு அதிகமாகஒருஏகராநிலத்தில்இங்கிலாந்தில்விளைவதாக அவர் எடுத்துக்காட்டினார். விவசாயமே பிரதானத்தொழிலாகவுள்ள இந்தியா தேசத்தில் விவசாயக் கருவிகளிலும் முறைகளிலும் செய்யப்படும் சொற்ப மாறுதல்களினால்கூட ஏராளமான பலன் கிடைக்கிறதென்றுச் சொன்னார். விவசாயக்கருவிகளைக் கண்டுபிடிப்பதுமட்டும் போதுமானதல்லவென்றும் ஜனங்கள் அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டுவரும் படியாக தகுந்த முயற்சிகள் செய்யப்படவேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறுகிறோம். இத்தகைய விஷயங்களுக்கு விவசாயச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களுமே தகுந்தவை யாதலால் இவ்வருஷம் பட்டம்பெற்ற கனவான்கள் இவ்விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

* * *

தென்கன்னடம் ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கில் பிரஸ்தாப வருஷத்தில் (1917-18) நீண்டகாலத்தவணை டிபாசிட்டுகள் 100-க்கு 35-லிருந்து 77-க்கு உயர்ந்ததைப் பார்க்க சந்தோஷப்படுகிறோம். டிபாசிட்செய்யப்பட்டுள்ள தொகையில் " 100-க்கு 31, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள். 100-க்கு 28, ஸ்திரீகள். 100-க்கு 5, பணம் லேவாதேவி செய்பவர்கள். 100-க்கு 10, மைனர் டிபாசிட்டுகள். 100-க்கு 7 டிரஸ்டு பண்டுகளும், பொது ஜனசங்கங்களின் பண்டுகளும்."

திருநெல்வேலி ஜில்லாவிற்கு ஜில்லாபாங்கு ஒன்று வெகு நாட்களுக்கு முன்னமேயே ஏற்பட்டிருக்கவேண்டு மென்றாலும், அத்தகைய பாங்கு ஒன்று சென்ற ஏப்ரல் மாதந்தான் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பாங்கின் ஸ்தாபனத்தில் ராவ் பகதூர் சுந்தரசாஸ்திரிகளும் என். குப்புசாமிரெட்டியாரும் உதவி செய்தார்கள். வருஷக்கடைசியில் 43 நபர்களும், சங்கங்களும் மெம்பர்களாக விருந்து 220 பங்குகள் எடுக்கப்பட்டிருந்தன. சங்கத்தில் வசூலான பங்குத் தொகையின் மொத்தம் ரூ. 4,103-12-0. பிரஸ்தாப வருஷத்தில் சங்கத்திற்கு ரூ. 30-5-11. இலாபம் கிடைத்தது. இத்தொகையில் எட்டிலொருபாகம் ரூ. 3-12-9 காரியதரிசிக்கு சன்மானமாகச் சேரும். சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட இப்பால்ய சங்கத்திற்கு சகல பாக்கியங்களும் உண்டாக விரும்புகிறோம்.

---

## கோவாபரேடிவ் கட்டட சங்கங்கள்.

1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ந் தேதியன்று திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கத்தார் தங்கள் ஒன்பதாவது கோவாபரேடிவ் வருஷ தினத்தைக் கொண்டாடியபோது சென்னை கார்பொரேஷன் அஸிஸ்டெண்ட் ரெவினியூ ஆபீஸராகிய ம-ா-ா-ஸ்ரீ, எஸ். தண்டபாணி ஐயரவர்கள் மேற்படி விஷயத்தைப் பற்றிப் படித்த வியாஸத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

கூட்டுறவின் சௌகரியத்தினால், ஒருவன் தனிமையில் பெற முடியாத செல்வ சம்பந்தமான நாணயத்தைப் பெறலாம். மேலும் தங்களுக்குள் அன்பைப் பெருக்கி, பரஸ்பர உதவியைச் செய்து, கடன்பட்டு கலக்கமுறும் மெம்பர்களின் கஷ்டத்தை நீக்கி நல்லொழுக்கத்திலும் நல்ல நாகரிகத்திலும் அவர்களை ஈடுபடச் செய்யலாம்.

இக்கூட்டுறவு இயக்கமானது நம்முடைய நாட்டில் சென்ற 12 வருஷ காலமாகத் தான் வேலைசெய்து வருகிறதென்றாலும், ஏழைகளின் நிலைமையில் ஏற்கனவே விசேஷ மாறுபாடுகள் செய்திருக்கிறது. ஏராளமான நாணயச் சங்கங்களின் ஸ்தாபனத்தினால் அநேக ஜனங்கள் சாவுகாரின் வலையினின்றும் விடுபட்டிருக்கிறார்கள். விவசாயிகள், சேணியர்கள் முதலிய தொழிலாளிகளுக்காகவென்று ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேகச் சங்கங்களினால் அவ்வவ்வகுப்பினர்களுக்கு



வெகு உண்மையான உதவி உண்டாயிருக்கிறது. சென்னையில் சுமார் 5 வருஷங்களுக்கு முன் தரகர்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டு சிரமப்பட்டுக் கொண்டிருந்த பஞ்சமர்களாகிய உப்பு மூட்டைக்காரர்கள் இப்பொழுது கோவாபரேடிவ் இயக்கத்தினால் ரெயில்வே கம்பெனியுடன் நேர் போக்கு வரத்து வைத்துக்கொண்டு அழகாக விருத்திக்கு வந்திருக்கிறார்கள். திருவல்லிக்கேணி அர்பன் ஸ்டோரானது, தரகரைத்தொலைத்து கிரய விக்கிரயங்களை நேரில் செய்வதனாலாகிய சௌகரியத்தையும், அதனாலாகும் இலாபத்தையும் நிதரிசனமாகக் காட்டுகிறது. ஆகவே, எந்த இலாகாவில் கோவாபரேடிவ் இயக்கம் புகுந்தாலும், அது ஜனங்களுக்கு முன்னேற்றத்தையே தருகிறதாகையால் இம்முறையானது வீடுகள் கட்டும் முறைகளிலும் தீவிரமாய் கவனிக்கத் தக்கது.

சென்னையின் சென்ற வருஷத்திய ஸென்ஸஸ் கணக்கையாவது வருஷ நிரியாணக் கணக்கையாவது கவனிப்பவர்களுக்கு, இவ்விடத்தில் சரிவர வீடுகள் ஏற்பட வேண்டிய அவசியம் விளங்கும். நான் சென்னையைப்பற்றி மாத்திரம் என் வியாஸத்தில் விளக்கிச் சொன்ன போதிலும் அது எல்லா இடங்களுக்கும் பொருத்தமாகும். சென்ற ஸென்ஸஸ் கணக்குப்படி 520,000 ஜனங்கள் சுமார் 60,000 வீடுகளில் வசித்தார்கள். அதாவது வீடு ஒன்றுக்கு சாதாரணமாய் 9 ஜனங்கள். இந்த 60,000 வீடுகளில், 17,000 வீடுகள் அதாவது 100க்கு 30 வீடுகள், வருஷம் ஒன்றுக்கு ரூ. 14 கூட வாடகை பெறுகிறதில்லை. 100க்கு 40, வருஷம் ஒன்றுக்கு ரூ. 18 முதல் ரூ. 180 வரையில் தான் பெறுகிறது. அம்மாதிரி வீடுகளில் ஒருக்காலும் 9 ஜனங்களுக்கு சௌகரியமான இடமிருக்காது. ஜன நெருக்கமான வீடுகளைப்பற்றி டாக்டர் ஜியார்ஜ் நியூமான் துரை பின் வருமாறு சொல்லுகிறார். "ஜன நெருக்கமுள்ள இடங்களில் சாதாரணமான இதர இடங்களை விட ஜனங்களுக்கு அற்ப ஆயுசுதான். ஸர் ஷயர்லி மர்பி துரையவர்கள் ஹாம்ப்ஸ்டெட் ஜில்லாவிலுள்ளவர்களின் ஆயுளையும் ஜன நெருக்கமான ஸௌத்வார்க் ஜில்லாவிலுள்ளவர்களின் ஆயுளையும் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது, ஆண்களில் ஸௌத்வார்க்கில் பிறந்த 1000 குழந்தைகளுள் ஐந்து வயதாவதற்குள் 326 இறந்துபோகின்றனவென்றும், ஹாம்ப்ஸ்டெட்டிலோ அவ்வயதுக்குள் 189 தான் சாகின்றனஎன்றுசொன்னார் பலஜில்லாக்களின் மரணத்தைக்கவனித்தால் இதுசரி என்பதற்கு நிச்சயமான அத்தாக்ஷி ஏற்படுகிறது. உதாரணமாக, பர்மிங்காம் பக்கத்திலுள்ள இடங்களில் எட்க்பாஸ்டனில் சாதாரண மரணவிகிதம் 13·1. அசாத்தியஜன நெருக்கமுள்ள ப்ளட்கேட் பிரதேசத்தின் நகரநடுவில் அவ்விகிதம் 31·5. ஹாம்ப்ஸ்டெடில் 9.4 தான். லண்டனில் மிகவும் ஜன நெருக்கமுள்ள பின்ஸ்பியிலோ 21·5. இப்பின்ஸ்பியின் குறைந்

தநெருக்கமுள்ள பாகத்தில் சாவுவிகிதம் 14·4. மிக்க அடர்த்தியாயுள்ள பிரதேசத்தில் 31·4. சென்னைநகரில் ஒவ்வொரு வருஷமும் பிறக்கும் குழந்தைகளில் 1000க்கு 277 சாகிறது. ஜனத்தொகையின் மொத்த மரணவிகிதம் 1917-ம் வருஷத்தில் மைல் ஒன்றுக்கு 38.4. பலவிதமான வீடுகளைச் சோதித்த ரிபோர்டுகள், மேற்படி விஷயங்களை மறுதளிக்கவில்லை. 1917-18-ல் மதராஸ் கார்போரேஷன் பிரஸிடென்டின் ரிபோர்டில் இரண்டு உதாரணங்களைமட்டும் காட்டுகிறேன்.

(1) கூவம் ஆற்றங்கரையிலிருக்கும் காக்ஸ் பரச்சேரி தரை மட்டத்திற்குக் கீழேயிருக்கிறபடியால் சாக்கடைப் போக்கிற்கு சாத்தியமில்லாத நிலைமையிலிருக்கிறது. அங்கே புற்றில் ஈசல்கள்போல் ஜனங்கள் மொய்த்து அதனால் அம்மை முதலிய வியாதிகள் தற்காலம் மலிந்திருக்கிறது. அவிடத்தியவீட்டு ஏற்பாடுகளில் மூன்றுதினுசுகள் தென்படும் (1) கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரே அறையுள்ள வீடுகள் சில வரிசைகளாயுள்ளன. இவ்வீடுகள் முன்பக்கத்தில் ஒன்றும் பின்பக்கத்தில் ஒன்றுமாக எவ்வளவு சிறியஇடம் சாத்தியமோ அவ்வளவேஇடத்துடன் கூடியனவாய் காற்றோட்டத்திற்கே இடமில்லாமலிருக்கின்றன. இதுதான்அவ்விடத்தில் குடித்தனத்திற்கு சிலாக்கியமான இடமாம். இவைகளின்வாடகையும் மும்மடங்கு உயர்ந்திருகிறதாம். இவ்வாடகையைக் கொடுப்பதற்காக ஒவ்வொரு குடித்தனக்காரனும் ஒன்று அல்லது இரண்டு ஒட்டுக் குடித்தனம் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

(2) இரண்டாவதுதினுசு வீடுகளுக்கு தரைமட்டத்திற்குமேல் ஒன்று அல்லது இரண்டடி உயரமுள்ள சுவர்களின் ஆதாரத்தில் கூரைவேய்ந்திருக்கும். இந்தச் சுவற்றில் வெட்டியிருக்கும் துவாரத்தின் வழியாக நுழைந்து அதற்குள் தரைமட்டத்திற்குக் கீழ் தோண்டப்பட்டிருக்கும் குகைதான் சில துர்அதிருஷ்ட ஜனங்களின் வாசஸ்தலம்.

(3) மூன்றாவதுதினுசுவீடுகள் விசேஷமாக தட்டுகளினாலும் பழைய துணிகளினாலும், கயிறுகளினாலும் துணி துவைக்கஇடமில்லாமலும், சாக்கடைஜலம் போக இடமில்லாமல் நாற்றத்தினால் பரவப்பட்டு மிருக்கும்.

இன்னொரு இடத்தைப்பற்றி பிரஸிடென்ட் பின்வருமாறு சொல்லுகிறார். "மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நல்ல வெயில்காய்ந்து கொண்டிருந்த ஒரு தினத்தில் நல்லதெருவிலிருந்த ஒரு வீட்டைப் பார்க்கப் போயிருந்தேன். அந்தத் தெருவில்கூட அந்த வெயில் நேரத்தில் உள்ளே ஜனங்கள் அடர்ந்து கிடந்த அறைகளைக் கவனிக்க விளக்கு வெளிச்சம் தருவித்துக் கொள்ளவேண்டியதாக இருந்தது."



மேற்படி விஷயங்களினால் மூன்று விஷயங்கள் விளங்குகின்றன. (1) மரணவிகிதம் மிகவும் அதிகமாகிறது (2) இதனால் அளவுக்குமிஞ்சின கூட்ட மிருப்பது தெரிகிறது (3) ஆகையால் அசௌக்கியமும் நெருக்கமுமுள்ள வீடுகள் வெகுவாயிருக்கின்றன.

சென்ற மூன்று வருஷங்களாக நான் கார்போரேஷன் வேலையாகப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து வந்ததில் அநேகவிதமான வீடுகளைப் பார்த்திருக்கிறேன். தவழ்ந்துகொண்டு தான், நுழையக்கூடிய குடிசைகளையும், வெளிச்சமேவரமுடியாத ஒற்றை அறையுள்ள மண் குடிசைகளையும், 10 முதல் 20 அறைகளும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குடித்தனமுமுள்ள வீடுகளையும், நல்ல ஏற்பாட்டுடன் கட்டப்பட்ட வீடுகளையும் பார்த்திருக்கிறேன். பரச்சேரிகளும் குடிசைகளும் முதல் இரண்டு வகுப்புகளிலும், 20 முதல் 60 ரூபாய் உத்தியோகத்திலிருப்பவர்களின் வாசஸ்தலங்கள் மூன்றும் வகுப்பிலும் காணப்படும். பரச்சேரிகளில் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ. 1½ முதல் ரூ. 2½ வரையில் இருக்கிறது. அநேக அறைகளுள்ள வீடுகளில் கூட ஏழைகள் மாதம் ரூ. 1 முதல் ரூ. 2½ வரையில் குடிக்கூலி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஷை வீடுகளில் கொஞ்சம் அந்தஸ்துள்ள ஜனங்கள் இரண்டு அறைகள் எடுத்துக் கொண்டு ரூ. 5 முதல் ரூ. 10 வரையில் கொடுக்கிறார்கள். ஆகவே குடித்தன வீடுகளின் விஷயம் மிகவும் தீவிரமாய் கவனிக்கப்பட்டு சீர்திருத்தப் படவேண்டும்.

எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு ஏன் வீடுகள் அமைத்துக் கொடுக்கக்கூடாது? முதலாளிகளும் ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பெனிகளும் ஏன் வீடுகள் கட்டும் தொழில்களை வகிக்கக்கூடாது? நகர முனிஸிபாலிடிகள் ஜனங்களுடைய வசதிக்கு வேண்டிய ஏற்பாடுகளை ஏன் சரிவரக் கவனிக்கக்கூடாது? என்று இம்மாதிரிகேள்விகள் பிறக்கலாம். இவையெல்லாம் செய்யப்படவேண்டுமென்பதுதான் என் சொந்த அபிப்பிராயம். பக்கிங்ஹாம், கர்னாடிக் மில்களைப் பராமரிக்கிற பின்னி கம்பெனியார் தங்கள் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு விடுதிகள் அமைத்திருக்கிறார்கள். தங்கள் இதர வேலைக்காரர்களுக்காகவும் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நகரப்போலீஸுக்காககவர்ன்மெண்டார் விடுதிகள்ஏற்படுத்தியும் ஏற்படுத்திக்கொண்டு மிருக்கிறார்கள். தனி வீடுகளும் வருஷம் ஒன்றுக்கு சுமார் 1000 வீடுகள் வரையில்கட்டப்பட்டு வருகின்றன. முனிஸிபாலிடியும் பஞ்சமர்களுக்காக 200 மாதிரி வீடுகளுக்குமேல் கட்டி சொற்ப வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். இம்மாதிரி எவ்வளவு செய்தாலும் அற்பமேற் பூச்சே. இவ்விஷயத்தில் உண்மையான ஏற்பாடு எப்படியாகக்கூடுமென்றால் 'தன்கையே தனக்கு உதவி' என்னும் சுய உபகாரத்தாலேயேதான்

ஆகும். எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களுக்காக வீடுகட்டும் சிரமத்தை வகிப்பது மிகவும் துர்லபம். அப்படி ஒருக்கால் செய்தாலும் கூட ஒரு எஜமானுக்கும் உட்பட்டு வேலைசெய்யாத பாரி வேலைக்காரர்கள் எவ்வளவோ யிருக்கிறார்கள். முதலாளிகள்,வியாபாரப்பாங்கிற்கட்டுவதென்றாலோ அவர்கள் லாபத்தை முதலில் கவனிப்பார்களே ஒழிய ஜனங்களின் சௌகரியா சௌகரியங்களை கவனிக்கமாட்டார்கள். கார்பொரேஷனாலும் நகரத்து ஜனங்களெல்லாருக்கும் கண்டிப்பாய் வீடுகட்டிக்கொடுக்க முடியாது. மேலும் நாம் நினைக்கும் ஏற்பாடு கூலிக்காரர்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் உபாயமான குடியிருப்புக் குடிசைவரிசைகள் அமைத்துக் கொடுப்பதல்ல, பொதுவாய் எல்லா ஜனங்களும் சுகமாய்வசித்து, தங்கள் குழந்தைகளைச் சரிவரவளர்த்து தாங்களும் சிக்கனமாயும் சுறுசுறுப்புடனும் தன்னயம் பாராட்டாமலும் பரஸ்பர உபகாரிகளாயும் வாழ்வதற்கு வேண்டிய சௌகரியமான சுகாதாரமுறையில் வீடுகள் கட்டுவதற்கேற்ற ஜனக்கூட்டங்கள் ஏற்படவேண்டியது

இவ்வேற்பாடுகள் புதிதுமில்லை. பிரமாதமும் இல்லை. சீமையிலும் ஐரோப்பாவிலும் விருத்தியாகிக் கீழ்க்கண்ட மூன்றுவகுப்பில் வேலைசெய்கிறது.

(1) ஏகதேசத்தில் கட்டிடம் கட்டக் கூடிய பணக்காரர்கள் பலர் கூடி ஒரு பெரிய நிலத்தைக் கூட்டாக வாங்கியோ ஒத்தி முதலிய ஏற்பாட்டில் எடுத்தோ பிறகு தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு அவரவர்கள் வீடுகட்டிக்கொள்ளுதல். இங்கிலாந்து நில சொஸைடி இவ்வினத்தைச் சேர்ந்தது.

(2) வீடுகள் வாங்கப்பிரியப்படுகிறவர்கள், ஆனால் விலை முற்றிலும் கொடுக்க சக்தியற்ற ஜனங்கள், ஒரு சொஸைடியாகக்கூடி, தங்கள் வீடுகளின் அடமானத்தின் பேரில் கடன்வாங்கி அதை வட்டியுடன் எளிதான தவணைகளில் திருப்பிக்கொடுத்தல். இது பரஸ்பர சகாயகட்டிட சொஸைடிகள்.

(3) தனியாக வீடுகள் வைத்துக்கொள்ள சக்தியற்ற ஜனங்கள்கூடி, சங்கமாகச்சேர்ந்து தான்தான் வசிக்கும் இடத்தின் விலைக்காகக் கொஞ்சம் பணம் பொதுவில் கொடுத்துக்கொண்டே வருகிறது. பாக்கியாயிருக்கும் கிரயத்தொகையை சங்கம் கடனாகவோ பத்திர ஏற்பாட்டிலோ கொடுக்கிறது. இதுதான் இங்கிலாந்தில் முக்கியமாய் காணப்படும் குடித்தனப் பங்காளிச் சொஸைடிகள் எனப்படுகின்றது. இம்மாதிரி சங்கம் ஒன்று, 10 பவுன் விலையுள்ள 2911 பங்குகள் அதாவது 29,110 பவுன் பங்குத்தொகை வைத்துக்கொண்டு 72,955 பவுன்விலையுள்ள சரக்குப் பத்



திரத்தின்பேரில் 100-க்கு வருஷம் ஒன்றுக்கு 4 வட்டியில் அத்தொகையைக் கொடுத்திருக்கிறது. அது லண்டன், கெண்ட், பர்மிஹாம், லெச்வொர்த், ஹர்ட்ஸ் முதலிய அநேக இடங்களிலுள்ள குடித்தனக்கூட்டு சொஸைடிகளுடன்சேர்ந்தும் தனிநிர்வாகங்களுடனும் வேலை செய்கிறது.

இவ்விராஜதானியில் கோவாபரேடிவ் முறையில் வீடுகட்டும் ஏற்பாட்டை எவ்விதம் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதை கவனிக்குமுன், இந்நாட்டில் இவ்விஷயமாய் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சங்கங்கள் செய்தவேலையை ஒருவாறு கவனிப்போம். பம்பாயிலுள்ள ஸாரஸ்வத் கோவாபரேடிவ் ஹௌஸிங் சொஸைடி இவ்வினத்தில் மிகவும் முக்கியமானது. இது,ராவ்சாஹேப்,எஸ். எஸ்.தால்மகிஅவர்கள்1913-ம் வருஷத்தில் பம்பாய் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரன்ஸில் முதல் முதல் பிரேரித்து, விடாமுயற்சியுடன் உழைத்ததினால், 1914-ம்வருஷம், தற்காலம் இந்தியாகௌன்ஸலில் மெம்பராயிருக்கும் ஸர் ப்ரபாஷங்கர் பட்டணி ஸி. ஐ. இ. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் 36 முக்கியமான நகரவாசிகளைச் சேர்த்துக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது. பிறகு, வேண்டியவிசாரணை ஏற்பாடுகள் செய்தபிறகு, தங்களுக்குள் ஏற்கனவே 1000-மெம்பர்களையும் 2½லக்ஷம் தொழில் தனங்களையும் வைத்திருந்த "கானரா ஸாரஸ்வத்" வகுப்பினர் இவ்வேலையை மேற்கொண்டு 1915-ம் வருஷத்தில் கூட்டுப்பிரிவினைக் குடித்தன ஏற்பாட்டில் முதல் முதல் ஆரம்பித்தார்கள். உடனே அச்சங்கம் ரூ. 72,000 முதல் சேர்த்துவிட்டது. அத்துடன் ஸர். பி. பட்டணி அவர்கள் மிக உதாரத்வத்தோடு வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 4வீதம் வட்டியுடன் கொடுத்த ரூ 24000-ம் சேர்த்து 18-குடித்தனங்கள் குடியிருக்கக்கூடிய மூன்று கட்டிடங்களைக் கட்டினார்கள். 1916-ல் ரூ. 72,000செலவில் மாதம்குடித்தனம் ஒன்றுக்கு ரூ. 21-முதல் ரூ.28 வரையில் குடிக்கூலி வரக்கூடிய24 குடித்தனத்திற்கு ஆகும்படியான இரண்டு வீடுகளைக் கட்டினார்கள். தற்காலம் அதன்முதல் 1·33 லக்ஷம் ரூபாய். இதைத்தவிர ரூ. 1·62 லக்ஷம் பொருமான கட்டிடங்களிருக்கின்றன. 100-க்கு 4-வீதமும் 5 வீதமும் டிபாஸிட்டுகளும் இருக்கின்றனவாகத் தெரிகிறது.

'பம்பாய் காதோலிக் கோபார்டனர்ஷிப் சொஸைடி' என்றும் 'மங்களூர் கார்டன் ஹோம்ஸ் சொஸைடி' என்றும் இன்னம் இரண்டு புது சொஸைடிகள் ஏற்பட்டிருக்கின்றன. முந்தியது ஸாரஸ்வத் சொஸைடியைப்போலத்தான். பிந்தியது முன்சொன்ன முதலாவது வகுப்பைப் போன்றது.—அதாவது ஒவ்வொரு மெம்பரும் தன்தன் வீட்டைத் தானே கட்டிக்கொள்வது. இவ்விருசங்கங்களும் சாமான்களின் விலை

உயர்வினாலும் சௌகரிய வட்டிக்குப்பணம் கிடைக்காமையினாலும் கூலிகள் மிகவும் உயர்ந்து விட்டதாலும் வேலை செய்யமுடியவில்லை யென்று மிஸ்டர் யூபாங்க் துரையவர்கள் சொல்லுகிறார்.

நம்முடைய மாகாணத்திலேயே 10 சங்கங்கள் வேலை செய்கின்றன. அவைகளின் வேலைகளை கீழ்க்காட்டி யிருக்கும் அட்டவணையில்காண்க.

| ஜில்லா. | இடம். | ரிஜிஸ்டரான வருஷம். | 30-6-17-ல் இருந்த மெம்பர்கள் தொகை. | கொடுபட்ட பங்குத்தொகை. | தொழில் தனம். | கொடுக்கப்பட்ட மொத்தக் கடன். | 30-6-17-ல் இருந்த கடன் தொகை. | சேமநிதி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| விசாகபட்டணம். | பீமிலி பட்டணம். (a) | 1917 | 35 | 395 | 1251 | 265 | 265 | ... |
| குண்டூர். | சின்னகட்லவாரு. | 1917 | 99(b) | 1128 | 9965 | ... | ... | ... |
| மதராஸ். | மதராஸ். | 1914 | ... | ... | ... | ... | ... | ... |
| செங்கல்பட்டு. | மாம்பலம் | 1912 | 78 | 16,620 | 22,116 | ... | ... | ... |
| | உத்தரமேரூர் | 1915 | 41 | 150 | 76 | 325 | 175 | 917 |
| கோயமுத்தூர். | கோயமுத்தூர். | 1913 | 196 | 6670 | 36866 | 55700 | 37093 | 324 |
| தஞ்சாவூர். | கும்பகோணம். | 1915 | 59 | 1860 | 8910 | 14065 | 9042 | 125 |
| மதுரை. | மதுரை, | 1913 | 61 | 770 | 1075 | 1050 | 803 | 60 |
| | திண்டுக்கல். | 1913 | | | | | | |
| நீலகிரி. | உதகமண்டலம். | 1914 | 59 | 6035 | 6035 | ... | ... | ... |

(a) செம்படவர்களுக்காக ஒரு சொஸைடி (b) மண்தோண்டும் உப்பரவர்களுக்காக 76, பஞ்சமர்களுக்காக 21, பிராமணர்களுக்காக 2. 'டி சங்கங்கள் செய்திருக்கும் வேலை மிகக் கொஞ்சமே.'

மாம்பலம் சங்கம், கட்டிட வேலையொடு எண்ணெய் ஆட்டும் வேலையும் செய்கிறது. பிந்திய விஷயத்தில் 1916-17ல் கொஞ்சம் நஷ்டம் நேர்ந்தது. இப்பொழுது நன்றாய் கவனிக்கப்படுகிறது. அதன் குடித்தன இடங்களிற் சில, இன்னம் விற்பனையாக வில்லை. இப்பொழுது கட்டிட வேலைகள் மும்முரமாய் நடைபெறுகின்றன.

உத்தரமேரூர் சங்கம் மிகச்சிறியது. கோயமுத்தூர் சங்கம், வீடுகள் கட்டுவதற்காகவும், வாங்குவதற்காகவும் அல்லது ரிபேர் செய்வதற்காகவும் பழைய கடன் தீர்ப்பதற்காகவும் ஸ்தாவர சொத்துக்களின்



பேரில் கடன் கொடுக்கிறது. மதுரை சொஸைடி ஒரு வேலையும் செய்ததாகத் தெரியவில்லை.

திண்டுக்கல் சொஸைடி செய்த ஒரே வேலை யென்னவென்றால் ஒரு காலி நிலத்தை வாங்கி தன் மெம்பர்களுள் பகிர்ந்து கொடுத்தது.

மதராஸ் கோவாபரேடிவ் பில்டிங் சொஸைடி 1914-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ரிஜிஸ்டரான போதிலும் ஒரு வேலையும் செய்யவில்லை. அது மூடப்பட்டு விட்டாற்போ லிருக்கிறது.

உதக மண்டலம் கட்டிட சங்கம் தன் மெம்பர்களுள் பகிர்ந்து கொடுப்பதற்காக ஒரு பெரிய நிலத்தை வாங்கி யிருக்கிறது.

கும்பகோணத்தில் 10 புது வீடுகள் கட்டப்பட்டு மெம்பர்களும் குடித்தனம் செய்கிறார்கள். இன்னம் சில வீடுகள் கூட கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனவாம். இப்புதுவீடுகள் கட்ட சராசரி ரூ. 3,500 பிடிக்கிறது. சங்கம் பாதிப் பணத்திற்கு மேல் கடன் கொடுக்கிறதில்லை. பழைய வீடுகளை ரிபேர் செய்ய சிறிய கடன்கள் கூடக் கொடுக்கப்படுகின்றன. பங்குப் பணத்தாலும் டிபாஸிட்டுகளினாலும் 100-க்கு $7\frac{1}{2}$ வட்டி வீதம் வாங்கும் கடன்களினாலும் மூலதனம் சேகரிக்கப்படுகிறது.

பீமிலிபட்டணத்து செம்படவர்களின் சொஸைடி ஆரம்பித்ததற்கு நெருக்கத்தை நிவர்த்திப்பதற்காக அவர்களுடைய வீடுகளை கவர்ன்மெண்டார் வாங்கியதே காரணமாயிற்று. அவ்விடங்களுக்காக கவர்ன்மெண்டார் கொடுத்த ரூ. 1,216 தொழில்தனமாயிற்று. கவர்ன்மெண்டும் அவர்களுக்கு இலவசமாக வீட்டிடங்கள் கொடுத்தார்கள். சங்கத்திலிருந்து பெறக்கூடிய கடன் தொகைகளைக்கொண்டு அவர்களும் வீடுகள் கட்டுவார்கள். குண்டூர் சொஸைடியின் நோக்கம் தன் மெம்பர்களுக்குள் வீட்டுக்காகப் பகிர்ந்து கொடுக்கும் பொருட்டு விசாலமான இடத்தை வாங்குவதே. மெம்பர்கள் தங்கள் கடன்களை 10-வருஷங்களில் வருஷா வருஷம் கொடுக்கவேண்டும். ஒவ்வொருவரும் தன் வீட்டைத்தானே கட்டிக்கொள்ள வேண்டும். ஆலுகைக் கணக்கில் எழும்பூரிலுள்ள நரியங்காடு பஞ்சமர்களின் கோவாபரேடிவ் சொஸைடி சேர்க்கப்படவில்லை. அது நம்முடைய திருவல்லிக்கேணி ஸ்டோரிலிருந்து ரூ. 5,000 கடன் வாங்கி, தன் மெம்பர்களுக்காக குடித்தன இடங்கள் வாங்கி யிருக்கிறது. இது மதராஸ் ஸோஷியல் ஸர்விஸ் லீகின் பராமரிப்பில் இருக்கிறது. இந்த வீட்டுக்காரர்கள் தேனாம் பேட்டையிலுள்ள உப்பரபாளையத்திலும் இடம் வாங்க முயற்சித்தார்கள். ஆனால் அது அவர்களின் படிப்பின்மையினாலும் அவநம்பிக்கையினாலும் முட்டாள் தனத்தினாலும் பயன்படவில்லை.

தொடரும்.

# நீலகிரி ஜில்லா கோவாபரேடிவ் யூனியன்.

நீலகிரி ஜில்லா கேத்தி கோவாபரேடிவ் யூனியனுடைய, 1918ஹு ஜூன் மாதம் 30 தேதியோடு முடிவாகிற வருஷத்தின் ரிபோர்ட்டு :—

வருஷ ஆரம்பத்தில் 15 கிராமச் சங்கங்கள் இந்த யூனியனில் சேர்ந்திருந்தன: பிரஸ்தாப வருஷத்தில் 17 சங்கங்கள் சேர்க்கப்பட்டன. ஆகவே வருஷக் கடைசியில் அணைப்புச் சங்கங்கள் 32 இருந்தன. யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களின் டெலிகேட்டுகள் 33 லிருந்து 70-க்கு உயர்ந்திருக்கின்றன.

2. 1916-ம் வருஷத்துக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு பழைய சங்கங்களில் பங்கு 1-க்கு1 ரூ. வீதம்பங்குகள்சேர்க்கப்பட்டன.பிற்பாடுஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களில் பங்கு 1-க்கு 5 ரூபாய் வீதம் பங்குகள் போடப்பட்டன. இவ்வைந்து ரூபாய்களை வருஷம் 1-க்கு 1 ரூ. வீதம் ஒவ்வொரு மெம்பரும் செலுத்தத் தக்கது. ஆனால் கொல்லிமலை என்னும் கோத்தர்களுடைய சங்கத்திலும் குந்திக் கோடுமந்து என்னும் தொதவர்களுடைய சங்கத்திலும், அவர்களுடைய நிலைமையை உத்தேசித்து பழைய பங்கு விதியை அனுசரித்து பங்கு 1-க்கு 1 ரூ. வீதமே வசூலிக்கப்படுகிறது. வருஷக் கடைசியில் சங்கங்களின் மெம்பர்களின் பங்குப்பணம் வசூலா யிருப்பது ரூ. 3,963.

3. நடந்த வருஷக் கடைசியில் சங்கங்களால் கோயமுத்தூர் ஜில்லா பாங்குக்கு கொடுக்கும்படி ஏற்பட்டிருந்த கடன் ரூ. 27,783. நாளது வருஷத்தில் ரூ. 36,992 கடன் வாங்கப்பட்டது. ரூ. 3,658 கொடுக்க வேண்டியிருந்தது. அதில் ரூ. 3,331 செலுத்தப்பட்டது. வருஷக்கடைசியில் ஓரே ஒரு சங்கம் தான் தன் பாக்கியைச் செலுத்தாமல், வாய்தா கடந்து போகும்படி விட்டுவிட்டது. இச்சங்கம் பழைய சங்கங்களிலொன்றாகிய சாலமூர் என்பது. எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்யப்பட்டும் இச்சங்கத்தை சீர்திருத்தம் செய்ய முடியவில்லை. பஞ்சாயத்தார்கள் தங்களுக்கிருக்கும் வேறு கடன் தொல்லைகளினால், அவஸ்தைப் படடுக் கொண்டிருப்பதினால், மற்றவர்களின் கடன்களை வசூல் செய்ய வழி தேடாமல் சும்மா இருந்து விட்டார்கள். இச்சங்கத்திலிருக்கும் பாக்கிகளை புதிய ஆர்பிட்ரேஷன் ரூல்ஸ்படி தீர்ப்புக்கு உட்படுத்தி வசூல் செய்யத்தாமத மின்றி நடவடிக்கை செய்யவேண்டும். ஷை சாலமூர் சங்கம் ஒன்றைத் தவிர இதர சங்கங்கள் யாவும் கெடுத் தவறாமல் தங்கள் கடன்களை கட்டிவந்திருப்பது பஞ்சாயத்தார்களின் சிரத்தையையும், நாணயத்தையும் குறிப்பிடுகிறது.



4. வருஷ ஆரம்பத்தில் சங்கங்களின் க்ஷேம நிதிக்காக செலுத்தியிருந்த ரூபாய் 1,262-9-7. நடந்த வருஷத்தில் க்ஷேமநிதிக்கு அனுப்பிய தொகை ரூ. 75-0-1 ஆகவே வருஷக்கடைசியில் சங்கங்களின் க்ஷேம நிதி இருப்பு ரூ. 1,337-9-8.

5. மேற்பார்வைக்காக சங்கங்களில் வசூலாகும் வட்டியில் நான்கில் ஒருபாகம் மேல்தணிக்கை பண்டுக்காக யூனியனுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. சென்ட்ரல் பாங்கிலிருந்தும் ஷை பண்டுக்காக பணம் உதவப்பட்டுவருகிறது. சூபர்விஷன் பண்டுக்காக ரூ. 522-11-1 வசூலாயிற்று. யூனியன் வரவு செலவு கணக்கு கீழ்கண்டபடி:—

வரவு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சூபர்விஷன் பண்டு | ... | 522 | 11 | 1 |
| அபிலியேஷன் டெலிகேஷன் கட்டணம் | | 64 | 0 | 0 |
| | | 586 | 11 | 1 |

செலவு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சூபர்வைசர் சம்பளம் | ... | 360 | 0 | 0 |
| பிரயாணச் செலவு | ... | 186 | 15 | 6 |
| கண்டிஞ்செண்டு செலவு | ... | 50 | 0 | 6 |
| | | 597 | 0 | 0 |

மாதம் ரூ. 30+15 சம்பளத்தில் ஒரு சூபர்வைஸரும்5 ரூ. சம்பளத்தில் யூனியன் ஆபீஸுக்கு ஒரு குமாஸ்தாவும்யூனியனில் இருக்கிறார்கள். சூபர்வைஸர் எல்லா சங்கங்களையும் சங்கத்துக்குத் தகுந்தபடி தணிக்கை செய்துவருகிறார். கவர்ணிங்குபாடி மெம்பர்களில் யாரும், அணைப்புச் சங்கங்களை நேரில் போய்பார்க்க முடியாமல் போயிற்று. கவர்ணிங்குபாடி மீடிங்குகளும், ஒழுங்கீனமான சங்கங்களில் கூட்ட முடியாமற் போயிற்று. நாளது வருஷத்தில் 13 கவர்ணிங்குபாடி மீடிங்குகளும் 3 ஜெனரல் மீடிங்குகளும் நடந்தன. சங்கங்கள் அநேகமாய் பரவிவிட்டபடியால் இரண்டாவது சூபர்வைஸர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கேத்திக்குப் பத்து மைல் விஸ்தீரணத்திலுள்ள சங்கங்களுக்கு ஒரு சூபர்வைஸரும் ஒத்தைக்கு 10 மைல் விஸ்தீரணத்திலுள்ள சங்கங்களுக்கு ஒரு சூபர்வைஸரும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

6. படகர்களுடைய முக்கியமான விவசாயம் உருளைக்கிழங்கு. இவ்விவசாயத்தை விருத்தி செய்வதற்காக கவர்ன்மெண்டார் நஞ்சநாட்டில் ஒருதோட்டம் ஏற்படுத்தி யிருப்பதைப்பற்றி கவர்ன்மெண்டா

ருக்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களாகக் கடமைப்பட்டிருக்கிறோம். கனம் ரிஜிஸ்ட்ரார் துரையவர்கள் மிலிடேரி டிபார்ட்மெண்டுக்கு உருளைக்கிழங்கு நமது சொசைடிகளிலிருந்து சப்ளை செய்ய வேணுமாய்ச் செய்த ஏற்பாடு குதூகலத்துடன் ஒத்துகொள்ளப்பட்டது. இதற்காக கனம் அசிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் இங்கு விஜயம் செய்து, வேண்டிய விதிகளைச்செய்து சங்கங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சப்கமிட்டி ஏற்பாடு செய்து சகல நடவடிக்கைகளும் நடத்தப்பட்டன. ஆனால் மழையில்லாமையால் கிழங்கு மாசூல் மிகவும் சிதைவுண்டும், கொஞ்சமாயும் இருந்தபடியால் கனம் ரிஜிஸ்ட்ரர் துரையவர்கள் கோரிக்கை நிறைவேறாமல் போகும்படி நேரிட்டது. இந்த ஏற்பாடு நிறைவேறியிருக்குமாகில் நமது சொஸைடி மெம்பர்கள் மிகவும் லாபமடைந்திருப்பார்கள். லப்பைகளின் வலையில்அகப்பட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள். இம்மாதிரி மொத்தமாய் நமது மாசூல்களைவிற்க சங்கங்கள் எப்போதும் தயாரா யிருக்கின்றன். நமது சங்கங்களில் சில,அதாவது, கீழ்குந்தா, நுந்தாளா, ஹொண்ணதலை, உப்பதலை முதலியன தாங்களே ஒரு முக்கியஸ்தன் மூலமாய் மொத்தவிற்பனை செய்து லாபமடைந் திருக்கின்றன. பஞ்சாயத்து மெம்பர்களில் ஒருவர் இதர மெம்பர்களுடைய மாசூல்களைச் சேகரித்து மொத்தமாய்மேட்டுப்பாளையம்கொண்டுபோய் ரொக்கத்திற்குக் காலவிலைக்கு விற்பனைசெய்து பணத்தை உடனுக்குடனே மெம்பர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார். இதனால் ஒவ்வொரு மெம்பருக்கும் தான் படக்கூடிய கஷ்டமும் நஷ்டமும் ஒழிந்தது.பணம்கையில் கிடைத்தது. லப்பைகளுக்கு கிழங்கு தாராளமாய் கம்மிவிலைக்கு அளந்து அவர்களுடன் கணக்கு பைசல் செய்யும் கஷ்டம் நீங்கியது. இம்மாதிரி ஒவ்வொரு சங்கமும் செய்துவந்தால், படகர்கள் படும் கஷ்டம் சீக்கிரம் நிவர்த்தியாகும். இப்படிச் செய்யும்படி நமக்குத் தனியாய் ஒரு சங்கம் வைத்துக் கொடுக்கவேணுமாய் நமது அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம். மேட்டுப்பாளையத்தில் ஒரு டிபோ வைத்து சொஸைடிகளெல்லாம் தங்கள் கிழங்குகளை அங்கே கொண்டுபோய் போடச் செய்ய வேண்டும். மேட்டுப்பாளையத்திலிருந்து அயலார்கள் எவ்வெவ்விடங்களுக்கு, கிழங்கு அனுப்புகிறார்களோ அவ்விடங்களுக்கெல்லாம் சொஸைடிகளின் கிழங்குகள் தரகுக்காரர்களன்னியில் அனுப்பப்பட வேண்டும்.

7. படகர்களுடைய முன்கடன்களைத் தீர்த்து, அவர்களுக்கு வருஷாந்தரத்தில் விவசாயத்துக்கும் குடும்பச் செலவுக்கும் வேண்டிய பணத்தை சங்கங்களிலிருந்து கொடுத்துச் சுலபமாக வசூல் செய்துகொண்டுவந்தால் ஐக்கியச் சங்கங்களின் ஏற்பாடு நீலகிரி ஜில்லாவில் ஒரு பலமான ஆதாரமாய்விடும் என்பதில் சந்தேகமில்லை. முன்கடன்களைமட்டும் கட்டிவிட்டு விவசாயவழிகளில் பாடுபடாமல் சும்மா இருந்துகொண்டு வந்தால் படகர்கள் மறுபடியும் இதர இடங்களில் கடன்பட்டும், லப்பைகளிடத்தில் உணவு தானியங்கள் கடன் வாங்கி நிகரில்லா வட்டி கொடுத்தும், நசுக்குண்டு போவார்கள். இக்குறைவுகளை நீக்க எல்லாசங்கங்களும் குறுகியகாலக்கடன்கள் வாங்கி, விவ்சாயத்தை விருத்திசெய்து மாசூல் லாபகரமாய் விற்கும் காலத்தில் மொத்தமாய் விற்று ஷை கடன்களை வருஷாவருஷம் அடைத்துக்கொண்டு வந்தால் மிகவும் நல்லது. உணவு தானியங்களை இதர இடங்களில் கடன்வாங்காமவிருக்க ஐக்கியமுறையில் ஒரு சங்கம் அமைத்தால் வெகு உபயோகமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட சங்கம் இரண்டு வழிகளில் எங்களுக்கு ஒரு பெரிய உதவியாயிருக்கும். மெம்பர்களுக்கு விவசாயத்துக்கும், குடும்பச் செலவுக்கும் வேண்டிய சாமான்களை மொத்தமாய் வாங்கிக்கொடுப்பதற்கும், மெம்பர்களுடைய மாசூல்களைச் சேர்த்து மொத்தமாய் விற்று மெம்பர்களை லாபமடையச் செய்வதற்கும் ஆகிய இரண்டு காரியங்களுக்கு வெகு முக்கியமானவைகள். இத்தகைய ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டு வருகின்றன.



8. ஐக்கிய முறைமை ஏற்பாடு நமது ஜில்லாவில் வளர்பிறைச் சந்திரனைப்போல் விருத்தியாய்க் கொண்டுவருகிறது. இப்போது 40 சங்கங்களிருக்கின்றன. கூடலூர் தாலூக்காத் தவிர மற்ற இரண்டு தாலூக்காக்களினும் பரவியிருக்கிறது. இவைகளின் நன்மைகளை யறிந்து சங்கங்கள் இல்லாத இடங்களிலிருந்து புதிய சங்கங்கள் ஸ்தாபித்துக் கொடுக்க வேண்டுமாய் விண்ணபங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது இந்த ஜில்லாவுக்குத் தனியாய் ஒரு கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டரை நியமித்திருப்பதால் சொஸைடிகள் விருத்தியாகும் என்று நம்பப்படுகிறது.

9. கீழ் ஜாதிகளாகிய கோத்தர்களுக்கு ஒரு சங்கமும், தொதவர்களுக்கு (Todas) ஒரு சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டு, வேலை செய்து கொண்டுவருகின்றன. கோத்தர்களுக்கு இன்னொரு சங்கம் திருச்சகடி என்னும் ஊரில் புதிதாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இத்தகையார்களுக்கு இன்னும் சங்கங்கள் ஸ்தாபித்து இவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமை.

## தீர்மானங்கள்.

I. சென்ற $4\frac{1}{2}$ வருஷ காலமாய் நடந்து வந்த ஐரோப்பிய மகாயுத்தத்தில் நமது ராஜாங்கத்தாரும், நேசக்கக்ஷிக்காரரும் ஜெயமடைந்ததைப் பற்றி நீலகிரி ஜில்லாவிலிருக்கும் கூட்டுறவினர்கள் நமது கவர்ன்

மெண்டாருக்குத் தங்கள் சந்தோஷத்தைத் தெறியப்படுத்த தீர்மானிக்கிறார்கள்.

II. நீலகிரி ஜில்லாவில் ஐக்கிய நாணயச் சங்கங்களைப் பரவச் செய்யவேண்டுமென்றும், இதற்காக படகர்களின் தலைவர்கள் தங்களாலான உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

III. படகர்களின் ஏழ்மைத்தனத்தைஉத்தேசித்தும் இந்த ஜில்லாவின் விவசாய சம்பிரதாயங்களை உத்தேசித்தும், நமது சொஸைடிகளுக்குக் கடன் கொடுத்துக்கொண்டு வரும் கோயமுத்தூர் ஜில்லா பாங்குக்காரரை, மெம்பர்களின் நிகர ஆஸ்தியில், கீழ் ஜில்லாக்களில் போலல்லாமல் நான்கில் ஒரு பங்கு வீதம், கடன் கொடுக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

IV. நஞ்சனுட்டில் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் உருளைக்கிழங்குத் தோட்டத்திலுள்ள விதைக்கிழங்குகளை, கோவாபரேடிவ் சொஸைடிகளின் மூலமாய் ஜனங்களுக்குக் காலவிலைக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேணுமாய் ஜில்லா கலெக்டர் துரையவர்களைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. உருளைக்கிழங்கு சாகுபடிக்கு வேண்டிய எருவுகளை மெம்பர்களுக்கு விற்பதற்காக, ஒரு டிப்போ வைத்துக் கொடுப்பதற்கு கவர்ன்மெண்டார் சாங்ஷன் பெற கனம் கலெக்டர் துரையவர்களைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப் பட்டது.

V. படகர்கள் அதிகமாய்க் கடன் படாமலிருக்க, அவர்கள் குடும்பச் செலவுக்கும் விவசாயத்துக்கும் வேண்டிய சாமான்களை மொத்தமாய் வாங்கிக் கொடுப்பதற்கும் அவர்கள் மாசூல்களைச் சேர்த்து மொத்தமாய் லாபகரமாய் விற்பனை செய்வதற்கும், ஒரு சொஸைடி அவசரமாய் ஸ்தாபிக்கப்பட வேண்டுமோய் தீரமானிக்கப் பட்டது.

VI. ஒவ்வொரு சொஸைடியும் டிபாஸிட்டுகள் வசூல்செய்து தங்கள் சொஸைடிகளை விருத்திக்குக் கொண்டு வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

## மதுராந்தகம் கோவாபரேடிவ் பாங்கு மாறுதலான நிபந்தனைகள்.

1-ம் விதி.—மதுராந்தகம் ரூரல் கிரெடிட் ஸொஸைடி என்பதற்கு பதிலாக " மதுராந்தகம் கோவாபரேடிவ் பாங்கு" என்று வாசிக்கவும்.

4-ம் விதி.—" சொஸைடியின் மூலதிரவியம் தற்காலத்திற்கு ரூ. 10,000. இது பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 2000 பங்குகள் கூடியது. பங்குத்தொகையை ஐந்து சமபாகங்களாகச் செலுத்தலாம். அதில் ரூபாய் ஒன்று, பங்குகொடுக்கும்போதே செலுத்தவேண்டும். மிகுதியை அடுத்த வருஷங்களில் ஜூன் மாதம் 30உக்குள் பங்கொன்றுக்கு ரூபாய் ஒன்றுக்குக் குறையாமல் செலுத்தலாம். அப்படிச் செலுத்தத்தவறினல் தவறிய ரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு பை வீதம் அபராதவட்டி விதிக்கப்படும். ஆனல் ஒரு மெம்பர் மூன்று மாதங்களுக்கு மேல் செலுத்தத் தவறினல் அவருடைய பெயரை புஸ்தகத்திலிருந்து எடுத்துவிடப்படும்.



14-ம் விதி.—இந்த விதியின் கடைசியில் பின் வரும் வாக்கியத்தை சேர்த்துக்கொள்ளவேண்டியது. "மெம்பர்களிடமிருந்து வாங்கும் கடன்களுக்காவது, டிபாஸிட்டுகளுக்காவது வட்டி ரூபாய் 100-க்கு வரு 1-க்கு ரூபாய் 7-8-0-க்கு எக்காலத்திலும் அதிகப்படக்கூடாது." A. Savings deposit:—மெம்பராவது மெம்பர் அல்லாதவரர்வது மாதம் 1-க்கு ரூபாய் ஒன்று வீதம் கட்டிக்கொண்டு வரும் டிபாஸிட்டுக்கு " Savings" அல்லது " மாசாந்தர" டிபாஸிட்டு என்று பெயர். இப்படி 24 மாதங்களுக்குக் கட்டிக்கொண்டுவந்தால் 25-வது மீ முடிவதற்குமுன் அவர் கட்டின ரூபா 24-ம் வட்டிக்காக ரூபாய் 1-8-0 ஆக ரூபாய் 25-8-0 வாபீஸ் செய்யப்படும். இப்படி கட்டுகிறவர் பிரதி மாத கடைசி தேதிக்குள் கட்டி வரவேண்டியது. தவறினல் தவறின மாதம் 1-க்கு அபராத வட்டி ரூபாய் ஒன்றுக்கு 2 பை வீதம் வசூலிக்கப்படும். இப்படி நான்கு மாதம் கட்டத் தவறினல் அவருடைய கணக்கை முடிவுகட்டி அவரால் சங்கத்துக்கு சேரவேண்டிய பாக்கியிருந்தால் அதை கழித்துக்கொண்டு அவருடைய மீதிதொகையை வாபீஸ் செய்யப்படும்.

14 C. 1. Current deposit:—மெம்பராவது மெம்பர் அல்லாதவராவது ஒரு அணுவுக்குக் குறையாதளந்த தொகையும் இந்த பாங்கில் டிபாஸிட்டு செய்யலாம்.

2. அப்படி கட்டியிருக்கும் டிபாஸிட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபா 100-க்கு ரூபா 4 வீதம் பிரதி வருஷம் கடைசியில் வட்டி கணக்கிடப்படும்.

3. பிரதி மாதத்திலும் 4-ம் தேதிமுதல் மாதக்கடைசிவரையில் இருக்கும் குறைந்த தொகையின்பேரில் மாத்திரந்தான் வட்டி கணக்கிடப்படும்.

4. அப்படி வட்டியில்சேரும்தொகையைஅசலுடன் அப்போதைக்கப்போது சேர்க்கப்படும்.

5. பணம் வாபீசு பெற விரும்பும் டிபாஸிட்டர் ஆபீஸ் வேளையில் பாஸ் புஸ்தகத்தை ஆஜர் படுத்தினல் பணம் கொடுக்கப்படும்.

6. ஒரு டிபாஸிட்டர் தான் டிபாஸிட்டு செய்ய ஆரம்பித்த ஒரு வருஷத்திற்குள் தன் கணக்கை முடிவு கட்ட விரும்பினால் அப்படியே செய்யலாம். ஆனால் அப்பேர்பட்ட டிபாஸிட்டர் அந்த வருஷத்திலேயே மறுபடியும் ஒரு கணக்கு வைக்கக்கூடாது.

19. கடன் கொடுக்கும்போதே பஞ்சாயத்தார் அந்தக் கடனை திருப்பிகொடுக்கவேண்டிய வாய்தாகெடுவை கடனின் காரணத்திற்குத் தகுந்தபடி நிர்ணயித்துவிடவேண்டும். உதாரணமாக, கிஸ்தி, விதை, சாப்பாடு, விவசாயம் இச்செலவுகளுக்காகக் கொடுக்கப்படும்கடன்கள் மறுமாசூல் காலத்திற்குள்ளேயே செலுத்தப்படவேண்டும். பழைய கடன்களை தீர்த்தல், வீடுகட்டுதல், மாடு அல்லது வண்டி வாங்குதலான குறுகிய காலத்திற்கு வேண்டிய கடன்களையும், அநேக வருஷங்களிலும் பலனைக் கொடுக்கக்கூடியதாகிய கிணறு வெட்டுதல், நிலம் வாங்குதலான நீண்ட காலத்திற்கு வேண்டிய கடன்களையும், திருப்பி கொடுக்கவேண்டிய வாய்தா கெடுவு பஞ்சாயத் தாரால் வெகு ஜாக்கிரதையோடு இரண்டு முதல் பத்து வருஷங்களுக்குள் எத்தனை சமபாகங்களாகத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்பது நிர்ணயிக்கப்படவேண்டும். கடனைத்திருப்பி செலுத்தவேண்டிய வாய்தா கெடுவு, ஒரு வருஷத்திற்கு மேற்பட்டால் பத்திரத்தில் பத்து தவணைகளுக்கு அதிகப்படாது வருஷா வருஷம் எவ்வளவு திருப்பி செலுத்தவேண்டுமென்று குறிக்கப்படவேண்டும். மேலும் பத்திரத்தில் தவணைப் பிரகாரம் செலுத்தவேண்டிய தேதியில் அசலின் பாகத்தை அல்லது வட்டியை செலுத்தத் தவறினாலும் அல்லது கடன் வாங்குபவர் எந்தக் காரணத்தினாலேயாவது சொஸைடியவரா யில்லாமல் நீங்கினாலும், உடனே கடனின் மூழுதொகையையும் வசூலிக்கவேண்டுமென்று எழுதப்படவேண்டும். திருப்பிச் செலுத்தவேண்டிய வாய்தா காலம் கூடிய வரையில் மாசூலை விற்கும் காலமாயிருக்கவேண்டும். தவணைப்பிரகாரம் செலுத்தத்தவறிய அசலின் பாகத்திற்கு தவணை கடந்த நாள் முதல் செலுத்தப்படும் நாள் வரையில் வட்டி ரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு பை வீதம் வசூலிக்கப்படவேண்டும். அசலின் பாகத்தையும், வட்டியையும் திருப்பி செலுத்த நிர்ணயித்த காலம் மறுபடியும் அதிகப் படமாட்டாது.

21. துர்வினியோக காரணமாக 17-வது விதியின்படி ஏதாவது ஒரு கடனை பஞ்சாயத்தார் ரத்து செய்தாலாவது அல்லது 19-வது விதியில் குறித்தபடி கடனின் ஒரு பாகத்தைத் திருப்பி கொடுக்கவேண்டிய வாய்தா கடந்துபோனாலாவது அந்தக் கடன் கணக்கை உடனே முடிவு கட்டி அந்த சங்கதியையும் முடிவுகட்டின தேதிவரையில் கூடிய வட்டியும் முதலுமாக கடன்காரரால் வரவேணடிய தொகை இவ்வளவென்றும் ஷை. யாருக்கு பஞ்சாயத்தார் தெறிவிக்கவேண்டும். இவ்விதமாய் ஏற்



பட்ட தொகையின்பேரில் கணக்கு முடிவு கட்டின தேதிமுதல் கடன் வசூலாகும் தேதிவரையில் ரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு பை வீதம் வட்டி போட்டு மொத்தத்தை வசூல் செய்யதாமதமின்றி நடவடிக்கை நடத்தவேண்டும்.

25-ம் விதி.—பிரதி வருஷமும் நிகர லாபத்தில் பாதிக்குக் குறையாமல் க்ஷேம நிதியாக வைத்துவிடவேண்டும். அந்த நிதியானது க்ஷேம மூலதிரவியம், பங்கு மூலதிரவியம் இவைகளைத் தவிர சங்கத்தின் இதர மொத்த பொறுப்புகளில் பாதிக்குச் சரியாகிற வரையில் அந்தப்படிச் செய்துவரவேண்டும். பாதிக்கு வந்துவிட்ட பிறகு, நிகரலாபத்தில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாமல் எடுத்து க்ஷேமநிதியுடன் சேர்க்கவேண்டும். ஆனால் க்ஷேம மூலதிரவியம், பங்கு மூலதிரவியம் இவைகளைத் தவிர வேறே பொறுப்புகள் எப்போதாவது அதிகப்படுவேபானால், க்ஷேமநிதியானது அப்படிப்பட்ட பொறுப்புகளில் மறுபடியும் பாதிக்குக் குறைவாய்ப் போய்விடுகிற பக்ஷத்திலே அந்தப் பாதிக்கு மறுபடியும் வருகிறவரையில், க்ஷேமநிதிக்கு வரவு வைக்கவேண்டிய நிகர லாபத்தின் பாகத்தை அரைப்பங்குக்கு உயர்த்தவேண்டும். நிகர லாபத்தில் ரூ. 100-க்கு ரூ. $1\frac{1}{2}$ வீதம் 1890-ம் வருஷத்திய தருமச்சொத்தைப் பற்றிய 6-வது ஆக்டின் 2-வது பிரிவில் சொல்லியிருக்கும் காரியங்களில் ஒ[illegible]கிய படிப்பு விஷயத்திற்காவது அல்லது கிராமப் பொது விஷயத்தி[illegible]வது உபயோகிக்கும் பொருட்டு ஒரு பொது நன்மை பண்டுக்குச் செலுத்தலாம். க்ஷேமநிதிக்கும் பொது நன்மைபண்டுக்கும் வரவு வைக்கப்பட்ட பிறகு நிகர லாபத்தின் மிகுதியைப் பங்குக்காரர்களுக்குள் பிரித்துக் கொடுக்கலாம். இந்தப்படி பிரித்துக் கொடுக்கும் தொகையானது ஒவ்வொரு பங்குக்காகவும் செலுத்தப்பட்டிருக்கும் தொகையின் மேல் வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு $6\frac{1}{4}$-வீதத்திற்கு மேற்படக் கூடாது. மேற்கூறிய ஈவுத்தொகை கொடுத்த பின் நிற்கும் தொகையை, ஈவுத்தொகை சம பண்டுக்காவது க்ஷேம நிதிக்காவது கொண்டு போகலாம்.

28-ம் விதி.—இரண்டாம் வாக்கியம். "மஹாசபை வேலை நடத்துவதற்கு தற்காலத்தில் சொஸைடியிலுள்ள ஓட்டு நபர்களில் 40 பேர் ஆஜராக வேண்டும்.

30-ம் விதி.—'ஐக்கியச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் முன் அனுமதியின்றி விதிகளில் செய்த திருத்தப்பாடுகள், மாறுதல்கள், ரத்துக்கள் அல்லது புதுவிதிகள் ஒன்றும் அமுலுக்கு வரத்தக்கதல்ல.

31-ம் விதி.—பின் வருவதை கடைசியில் சேர்த்துக்கொள்ளவேண்டியது. " ஆனால் அப்படி மூன்று அடுத்த மீட்டிங்குகளுக்கு வரத்தவறிய பஞ்சாயத்தார், தான் வராததற்கு திருப்திகரமான காரணம் கொடுத்

தால், பஞ்சாயத்தார் மறுபடியும் அவரை பஞ்சாயத்தாராகவிருக்கும்படி நியமிக்கலாம்."

32-ம் விதி.—பின் வருவதை சேர்த்துக்கொள்ள வேண்டியது. யாதாம் ஒரு பஞ்சாயத்தார் தாம் சங்கத்திலிருந்து பெற்றிருக்கும் கடன் தொகையை காலத்தில் செலுத்தத் தவறினால், அது காரணத்தினாலேயே அவர் பஞ்சாயத்தாராக இருக்க அருகரல்ல. ஆனால் தவறிய காலம் மூன்று மாதங்களுக்கதிகப்படாமலிருந்து தவறியதற்குத்தகுந்த காரணம் காண்பிப்பாராயின் மஹாசபையார் அவரை மறுபடியும் மிகுதி காலத்திற்கு பஞ்சாயத்தாராக நியமிக்கலாம். ஆனால் ஒரு பஞ்சாயத்தார் தான் வாங்கியிருக்கும் கடனை வாய்தாக் கடந்தும் மூன்று மாதங்களுக்குமேல் செலுத்தத்தவறினால் இன்னும் பஞ்சாயத்தாராக யாது காரணத்தினாலும் இருக்க தக்கவரல்ல.

39-ம் விதி—ஜூன் மீ 30உ யோடு முடிவாகும் கோவாபரேடிவ் ஹூ முடிவான 15 நாளைக்குள் அந்த ஹூ த்தினுடைய (1) சொஸைடியின்வரவு செலவு கணக்கையும், (2) அந்தவருஷக் கடைசிதினத்தில் சொஸைடிக்கிருந்த ஆஸ்திக் கடன்கணக்கையும், (3) அந்த வருஷக் கடைசி தினத்தில் ஏற்பட்ட லாபநஷ்டக் கணக்கையும் தயார் செய்து தாமதமில்லாமல் ரிஜ்ஸ்ட்ரார் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. அந்தக் கணக்குகளை ரிஜிஸ்ட்ரார் பரிசோதித்து ஆடிட் ஸர்டிபிகேட் கொடுத்த பிறகு அவர் உத்தரவு செய்யும் மாதிரியாக அந்தக் கணக்குகளை பிரசுரப்படுத்த வேண்டியது. சங்கத்தின் தற்காலத்து மெம்பர்களுக்குள்ளாவது, மாஜி மெம்பர்களுக்குள்ளாவது, (தற்காலத்து) மெம்பர் அல்லது மாஜி மெம்பர் பெயரால் பாத்தியதைகொண்டாடுகிறர்கள் ஆகிய இவர்களுக்குள்ளாவது, (தற்காலத்து) மெம்பர் அல்லது மாஜி மெம்பர் அல்லது மேற்கண்டபடி பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் ஆகிய இவர்களுக்கும் கமிட்டியார் அல்லது எவரேனும் உத்தியோகஸ்தர்களுக்குமாவது, சங்கத்தின் விவகாரத்தைக் குறித்து விவாதம் உண்டாகிற விஷயத்தில், அதைப்பற்றி எந்தக்கக்ஷிக்காரராவது ரிஜிஸ்ட்ராருக்கு எழுதிஅவருடைய அபிப்பிராயம் கேட்கலாம். அந்தப்படி எழுதிக்கேட்பதைப் பெற்றுக்கொண்டதன்மேல் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் தாமே தீர்மானிப்பதற்கோ, அல்லது ஆக்டின் 43-வது பிரிவின்படி கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட 12-வது விதியின் 4-வது கிளாஸ்படி ஒரு அல்லது அநேக மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்திற்காவது அனுப்பவோ, அவருக்கு அதிகாரமுண்டு. ரிஜிஸ்ட்ரார் அல்லது மத்தியஸ்தர்களுடைய தீர்ப்பே கடைசியாகும். ஷை தீர்மானம் அல்லது தீர்ப்பின் விஷயமாய் விசாரணை அதிகாரமுள்ள ஸிவில்கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்மேல், அந்தக் கோர்ட்டார் அந்த தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.



40 ம் விதி.—(புது) சங்கத்தின் அருகாமையில் வேலை நடத்திவரும் அல்லது ரிஜிஸ்ட்ரா ரவர்களால் புதியதாய் ஏற்படுத்தப்படும் ஒரு கோவாபரேடிவ் யூனியனில் இந்தச் சங்கத்தைச் சேர்க்க பஞ்சாயத்தாருக்கு அதிகாரமுண்டு. யூனியன் செலவுக்காக சங்கம் முன் வருஷத்தின் ஜூன் மாதம் 30உயில் நின்ற கடன் தொகை ரூ. 100-க்கு 8 அணா வீதம் கொடுக்கலாம். இவ்விதியில் 'கடன்' என்பது ஸெண்ட்ரல் சொஸைடியிலிருந்து பெற்ற கடனையும், மெம்பர்களிடத் திலிருந்து பெறும் டிபாஸிட்டுகளையும் கடன்களையுமே குறிக்கும். மூலதனம், க்ஷேமநிதி, கரண்டு டிபாஸிட்டு இவைகளைக் குறிக்காது.

---

## திருப்போரூர் சூப்பரவைஸிங் யூனியன் ரிபோர்ட்.

1918-ம் ஹூ நவம்பர் மீ 9உ. காஞ்சீபுரத்தில் நடந்த கோவாபரேடிவ் 8வது கான்பரன்ஸில் 1957-வது நெ. திருப்போரூர் சூப்ரவைவிங் யூனியன்தரர் வாசித்த ரிபோர்ட்.

இந்த யூனியன் 1916-ம்ஹூ நவம்பர் மீ 5உயில் திருக்கழுக்குன்றம் யூனியன் என்ற பெயருடன் திருக்கழுக்குன்றத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. அதற்கு 1917-ம் ஹூ பிப்ரவரிமாதத்தில் சூப்ரவைஸர் Mr. ராஜகோபாலாச்சாரியார் நியமிக்கப்பட்டார். அந்த வருஷத்துக்குள் ஜூன் மீ 30உ வரையில் 21 சொஸைடிகள் அபிலியேஷன் ஆயிருந்தது. அவ்விடத்தில் யூனியன் வேலை சரிவர நடாவாமையால் 1917-ம்ஹூ ஆகஸ்டு மீ 15உ ஷை யூனியன் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ கே. கந்தசாமி முதலியார், திருப்போரூரில் ஜெனரல்பாடி மீட்டிங்கு கூட்டி யோசித்ததில் திருப்போரூரில் ஷை யூனியனை மாற்றிவிட வேண்டியதென்றும் T. கந்தசாமி முதலியார் செக்ரிடரி வேலை பார்க்க வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராராயிருந்த அருளானந்தம் பிள்ளை அவர்கள் அந்த சாங்ஷனை அங்கீகாரம் செய்து விட்டார். அச்சமயம் இரண்டு சொஸைடிகள் இதில் சேர்க்கப்பட்டன. ஆக 23 சொஸைடிகளிலும் செண்டரல் பாங்கிக்கு தவணை பாக்கிகளும் யூனியனுக்கு சூப்ரவைஸிங் காண்டிரிபியூஷனும் டிஸ்டிரிக்ட் பாங்கிக்கு க்ஷேமநிதியும் பாக்கியிருந்தன. இது விஷயமாய் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார், யூனியன் ஸெக்ரிடரி பிரஸிடெண்டுகளை காஞ்சீபுரத்திற்கு வரவழைத்து 1-9-17உயில் மீடிங் நடத்தி இந்த யூனியன் கடைசி ஸ்தானத்தில் 100க்கு 27 வீதம் தவணை பாக்கி யிருப்பதாயும் இதை முன்னுக்கு கொண்டு வரவேண்டுமென்றும் சொன்னார்.

அது முதல் இந்த யூனியன் சூப்ரவைஸர் ஸெக்ரிடரி அவர்கள் கூடுமானவரையில் பிரயத்தினம் செய்தும் அதிக கெட்ட நிலைமையிலிருந்த 311 காயார், ஓரகடம், சாலூர், திருநிலை, திருக்கழுக்குன்றம், இந்த சொஸைடிகளை கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார், சி. என். சுப்பரமணி அய்யர் சகாயத்தைக் கோரி, அவரால் ஆர்பிட்ரேஷன் கேசுகள் தாகல் செய்து வசூல் செய்தும் 1918-ம் ௵ ஜூன்௴ 30௳க்குள் கொண்டால் சங்கங்களுக்கு தவணை பாக்கி காலாதீதம் இல்லாமலும் காண்டிரிபியூஷன் பாக்கி இல்லாமலும் செய்தன.

1918-ம் ௵ ஜூன்மாதத்துக்குள், இவ்வருஷம் புதிதாய் ஸ்தாபித்த 6 சொஸைடிகளும் சேர்ந்து 29 சொஸைடிகள் ஆய்விட்டன. யூனியன் எல்லை 25 மைலுக்கு மேல் இருப்பதாலும், 9 சொஸைடி பஞ்சமர்கள் சொஸைடியாயிருப்பதாலும், யூனியனும் ஸூப்ரவைஸர்களும் சொஸைடிகளும் அதிக கஷ்டப்பட வேண்டியிருப்பதைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ, அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் உத்தேசித்துச் சொல்லியதை, இந்த யூனியனும் யோசித்து, 1918-ம் ௵ ஜூன்௴ 23௳யில் மறுபடியும் திருக்கழுக்குன்றத்தில் புதிதாக ஒரு யூனியன் ஸ்தாபித்து, இதில் இருந்த 16 சொஸைடிகளை அதில் சேர்த்து அதற்கு ஒருசூப்ரவைஸரை நியமித்து வேலை பார்க்கப்பட்டு வருகிறது.

இப்போது இந்த யூனியனில் 13 சொஸைடிகள் தானிருக்கின்றன. ஆனால் இதில் பஞ்சமர் சொஸைடிகள் 6 இருக்கின்றன. இன்னம் 7 சொஸைடிகளை ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று ம-ா-ா-ஸ்ரீ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரைக் கேட்டு இருக்கிறது. அவரும் ரிஜிஸ்டர் செய்து விடுவதாயும் சொல்லியிருக்கிறார். இந்த சொஸைடிகள் கெட்ட நிலைமைக்கு வந்ததற்கு அநேக காரணங்கள் உண்டு. (அதாவது,) தணிக்கைகள் சரியாயில்லாமை ஒன்று. 2. பஞ்சாயத்தார்கள் அதிக கடன் எடுத்துக் கொள்ளுதலும் அதற்கு டயம் வந்து விட்டால் அட்ஜஸ்ட்மெண்டு செய்து விடுவதுமே. 3. தங்களுக்கு வேண்டியவர்கள் கடனையும் அட்ஜஸ்ட்மெண்டு செய்து விடுவது. 4. பஞ்சாயத்தார்கள் கவனக்குறைவு. இந்த நான்கு காரணங்களால்தான் தவணைபாக்கி ஏற்பட்டு விட்டது. இவ்வருஷத்தில் அம்மாதிரி அட்ஜஸ்ட்மெண்டு செய்ய ஒட்டாமலும், சில சொஸைடிகளில் புதிய பஞ்சாயத்துகள் ஏற்படுத்தியும், கவர்னிங்பாடி மெம்பர்களின் ஊக்கத்தாலும் ஸூப்ரவைஸர் அதிக கஷ்டப்பட்டதனாலும், கனம் அஸிஸ்டெண்டுரிஜிஸ்ட்ராரும் ஒவ்வொரு சொஸைடியையும்கூடுமான வரையில் நேரில் பார்த்தும், பஞ்சாயத்து மெம்பர்கள் ஒத்து வேலை செய்ததாலும், கடைசி ஸ்தானத்தில் இருந்த இந்த யூனியன் ஒருவாறு நல்ல நிலைமைக்கு வந்திருப்பதாக தோற்றுகிறது. தவிரவும் ஆடிட் முடிந்த பிறகும் அநேக



சொஸைடிகள் கொண்டால் சங்கங்களுக்கு டிபாஸிட்டாகத் தொகை செலுத்தியுமிருக்கிறது.

இந்த யூனியனுக்கு ரூ. 8-0-0 சம்பளத்தில் ஒரு குமாஸ்தா தானஸ்மும், சூப்ரவைசருக்கு ஒன்றும் உண்டு.—

இந்த யூனியனில் சூப்ரவைஸராயிருந்த ராஜகோபாலாச்சாரி அதிக ஊக்கத்துடன் வேலை செய்ததை உத்தேசித்து 1918-ம் ௵ மே௴ 4௳யிலேயே ஆக்டிங் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டு விட்டார். அது முதல் சூப்ரவைஸர் இல்லாமலே 4 மாதம் செக்ரிடரி கந்தசாமி முதலியாரே ஷை யூனியன் சொஸைடிகளை கவனித்து வந்தார். ஆகஸ்டு௴ 19௳ ஒரு சூபர்வைஸர் பாஸ் செய்யாதவர் வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஏற்பாடு முதலில் ஏற்பட்டபடி இல்லாமையைப் பற்றி இந்த யூனியன் விசனிக்கிறது.

இந்த யூனியனில் கவர்னிங்பாடி மெம்பர்கள் 7 பேர்கள் இருக்கிறார்கள் 1917-18-ம் ௵ 2 மகா சபை மீட்டிங்கும் 8டைரக்டர் மீட்டிங்கும் நடந்திருக்கிறது.

நடந்த வருஷத்தில் இந்த யூனியன் 7 சொஸைடிகளுக்கு ரூபாய் 15,740 கடன் ஸாங்கிஷன் செய்து வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த யூனியன் 1918௵ பிப்ரவரி௴ 24௳ ராவ்பகதூர் டி. விஜயராகவாச்சாரியார் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கான்பரன்ஸ் நடத்தியிருக்கிறது.

தவிரவும் இந்த யூனியனில் சேர்ந்த சொஸைடிகள், ஸ்டேஷனரி, புஸ்தகங்கள் எல்லாம் யூனியன் மூலமாகவே வாங்கவேண்டுமென்றும் கொண்டால் பாங்கிகளுக்கு அனுப்பும் பணம் பூராகவும் யூனியனிலேயே செலுத்தவேண்டுமென்றும் தீர்மானமாகி அந்தப்படி நடந்து வருகிறது.

சொஸைடிகள் கடன்கொடுப்பது யூனியன் மேற்பார்வையிலே நடந்துவருகிறது. அந்தப்படி நடப்பதால் பஞ்சாயத்து மெம்பர்கள் அதிகக்கடன் வாங்குவதையும் தங்கள் பந்துக்கள் மூலமாய் கடன் வாங்குவதையும் தடுக்க சௌகரியமாயிருக்கிறது. 1072 நெ. தையூர் சொஸைடியில் தவணைகடந்த கடன்களும் கை பதில் பாக்கிகடன்களும் ஏராளமாய் இருந்து வந்தன. அதை செக்ரிடரி கந்தசாமி முதலியார் எவ்வளவோ கஷ்டப்பட்டு கைபதில் கடன்களை வசூலித்தும், பத்திரங்களைப் புதுப்பித்தும், கொண்டால் பாங்கியில் தவணை பாக்கியில்லாமல் செய்திருக்கிறார்.

தற்காலம் ஷை யூனியன் சொஸைடிகள் 13-ல் பங்கு மொத்தம் 2626 கொண்ட 628 மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ரூ. 39,819-4-0 கொண்ட 612 கடன்கள் பெற்றிருக்கிறார்கள்.

இந்த யூனியன் சொஸைட்டிகளால் மதராஸ் சென்ட்ரல் பாங்கியிலும் காஞ்சீபுரம் டிஸ்டிரிக்ட் யூனியன் பாங்கியிலும் ரூ. 3,45,70-ம், மதராஸ் கிரிஸ்தியின் ஸென்ட்ரல் பாங்கியில் ரூ. 19 25-ம், கடன் வாங்கப்பட்டிருக்கிறது. திருப்போரூர் சொஸைடி 1,500 ரூபாய் 6¼ வட்டி வீதம் டிபாஸிட்டாகவும் பெற்றிருக்கிறது.

இந்த 13 சொஸைடியில் 12 சொஸைடிகள் இந்த டிஸ்ட்ரிக்ட் யூனியனில் பங்கு எடுத்து 750 ரூ. செலுத்தி யிருக்கிறது.

இந்த யூனியன் சொஸைடிகள் க்ஷேமநிதியாக ரூ. 1,021-10-10 டி. யூ. பாங்கில் செலுத்தி யிருக்கிறது.

க்ஷேமநிதி பாக்கி சொஸைடிகளில் கிடையாது. மொத்தமாய்ப் பார்த்தால் இந்த யூனியனில் சேர்ந்த சொஸைடிகளில் ஸென்ட்ரல் சங்கங்களின் அசல் வட்டி தவணை பாக்கிகளாவது ஸூப்பர்வைசிங் காண்டிரிபியூஷன் பாக்கிகளாவது, க்ஷேமநிதி பாக்கிகளாவது கிடையாது. ஆனால் சில சொஸைடிகளில் சுமார் 25 கடன்கார மெம்பர்கள் தவணை தவறியிருக்கிறார்கள். அதை வசூல் செய்யவும் முயற்சிக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் வசூலாய்விடும்.

அதிகசீர்கேடான நிலைமையிலிருந்து நல்ல ஸ்திதிக்கு இவைகள் வந்ததற்கு ம-ா-ா-ஸ்ரீ, கனம். அஸிஸ்டென்ட் ரிஜிஸ்ட்ரார் ஸி. என். சுப்பிரமண்ய அய்யர் அவர்களின் ஊக்கமே காரணம். தவிரவும், இன்னம் நல்லதாய் 7 சொஸைடிகள் இந்த வருஷத்தில் ரிஜிஸ்டர் செய்து கொடுத்து யூனியனை விருத்திசெய்ததும் அவர் சகாயத்தாலேயே. இவ்வளவு உபகாரம் செய்த ஷை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு யூனியன் மனமார்ந்த வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

---

## காரமடை கோவாபரேடிவ் யூனியன் முதலாவது கான்பரன்சு

1918-வருஷம், டிசம்பர்மாதம் 9-ம் தேதி திங்கட்கிழமை காரமடையில், கனம் F. R. ஹெம்மிங்வே, I. C. S. அவர்களின், அக்கிராசனத்தின்கீழ் நடந்த கோயமுத்தூர் ஜில்லா, காரமடை கோவாபரேடிவ் யூனியனின் முதலாவது கான்பரன்சில்; ஷை யூர், மிஸ்டர், A. சாமிநாத முதலியாரவர்கள் ஐக்கிய முயற்சி என்னும், விஷயமாய் எழுதிவாசித்த வியாசம்.



கனவான்களே!

ஒரு தேசமானது மேலான நிலைமைக்கு வரவேண்டியதின் முக்கிய சாதனங்கள் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் ஆகிய இவைகளே. இம்மூன்றும் தினே, தினே, விருத்தி முகங்காட்டி ஓங்குவதற்குக்காரணம், ஐக்கியத்தினாலாகும். (அதாவது தேச ஜனங்களின் ஒற்றுமையே.) இத்தகைய வாழ்வில் நம்மிந்தியாவானது முன்னேற வேண்டுமெனக் கருதி நமது காருண்யம்வாய்ந்த கவர்ன்மெண்டார் ஐக்கிய சங்கத்தின் இயக்கத்தை ஏற்படுத்தி அதற்கேற்ற சட்டதிட்டங்களையுமுண்டாக்கி, அதற்காகப் பாடுபட்டுவருகிற விஷயத்தில், நாம் அவர்களுக்கு எத்தகைய நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணரவேண்டும்.

மேற்கூறிய மூன்றினுள் முதன்மையானது விவசாயம். விவசாயத்தொழில் ஒன்றே, அநேகமாய் இரண்டாவதாகிய கைத்தொழிலுக்கும், மூன்றாவதாகிய, வியாபாரத்திற்கும், வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்துகொள்ளச் சாதனமாயிருப்பதன்றி, தேசஜனங்களின் ஜீவனத்திற்கும், இன்றியமையாததாக ஆகின்றது. ஆனால் இவ்விவசாயத்தொழிலில், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், 100-க்கு 50;60; பெயர்கள் தானிருந்தார்கள். இப்பொழுதோ 100-க்கு, 80; 90, பெயர்கள் இருக்கிறார்கள். அவ்விதம் விவசாயத் தொழிலில், ஜனங்கள் விருத்தியாயிருந்தபோதிலும், ஈஸ்வரனுடைய அனுக்கிரகத்தினாலோ அல்லது நமது ஊழின் கொடுமையினாலோ, பலவருஷகாலமாய் சரியான. இயற்கையாய்ப் பெய்துவரும், மழை பெய்யாமையாலும், நிலங்கள் வறண்டு, வளமற்றுப் போய் விடுவதினாலும், உணவு, கைத்தொழில், வியாபாரம், ஆகிய, இவற்றிற்குரிய பண்டங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன வென்பதை அறியாதாருமுளரோ?

ஆயினும், அக்காலத்தில் மகோன்னதமான நிலைமையிலிருந்து வந்ததும், அன்னிய தேசங்களுக்கேற்றி அதினால் கீர்த்தியும், பொருளும், அதிகரித்துக் கொண்டு வந்ததுமான நம் தேசத்தின் மேன்மை வாய்ந்த இரண்டாவதாகிய, நெசவு முதலிய கைத்தொழில், விதிவசத்தாலோ, வேறுகாரணத்தாலோ, குறைந்து, இப்போதிருக்கும், கேவலநிலைமைக்கு வரலாயிற்று. இனிச்சென்றதைப்பற்றி சிந்திப்பதில் என்னபயன். மூன்றாவதாகிய வியாபாரமோ, விளை பொருளையும், கைத்தொழிலையும், அனுசரித்திருப்பதால், அதன் குறைவைப்பற்றி, நாம் இங்கு பேசவேண்டியது அனாவசியமாகும். ஆதலின் நம்தேசத்தின் முதலாவது சாதனமாகிய விவசாயத்தின் இயற்கைச் செல்வமான, கால மழையும், நில வளமும்

எப்போது குறைந்துவரலாயிற்றோ, அப்போதே நாம் இனிச்செய்யவேண்டுவது என்னவென உணர்ந்து இறங்கவேண்டிய மார்க்கத்தைக் கைப்பற்றி ஒழுகவேண்டியது நமது முதற்கடமையல்லவா?

இதையனுசரித்து நமது முயற்சியின்வலியால் ஜலாதாரம், நிலங்களை வளப்படுத்த எரு, உழவுமாடு, விதை, தசுகூலி முதலியவைகளைத் தேடிக்கொள்ள வேண்டியது. ஏனெனில், நமது தேசத்திலுள்ள குடிகள், மற்ற எந்த தேசத்தவர்களைப் பார்க்கிலும், எளியவர்களாயும், சொற்பவருமான முள்ளவர்களாயும், கல்விவிஷயத்தில் பிற்பட்டவர் களாயும், இருப்பதினால், ஜலாதாரமாகிய, கிணறு, முதலிய சாதனங்களைத் தேடிக்கொள்ளும், விஷயத்தில், முடியாமல், பலகஷ்டப் படவேண்டியிருக்கிறது. அவ்விதமன்றி வேறுசில விவசாயிகள், தமதுபக்கங் களிலுள்ள, பணம் வைத்துக் கொண்டு, வட்டிக்கு லேவாதேவிசெய்து வருபவர்களிடத்தில் கடன் வாங்கியாவது, தங்கள்பயிர்த் தொழிலைக்கவனித்து, முன்னுக்கு வரலாமென்று ஆரம்பித்தாலோ, அவர்களின் வட்டிவிகிதம், அதிகக் கூடுதலாய் விதிப்பதாலும், அதிலும், காம்பவுண்டுவட்டி, அதாவது, வருஷத்திற் கொருமுறை வட்டிக்கு வட்டி சேர்த் தெழுதி வாங்குவதாலும், கடன் ஏறிவிடுகிறதே என்று பயந்து, கடன்வாங்கினவர்கள் ஷை கடன் தொகையில், ஒரு பாகத்தையாவது, கொடுத்துவைப்போமென்று, மாசூலில் செலவானதுபோக, மிகுதியானதை விற்பனைசெய்து, ஷை சாவுகாரர்களிடத்தில் கொடுக்கப்போனால், ஷையார்கள் முழுத்தொகையையும், கொடுத்தாலொழிய, வரவுவைக்க முடியாதென்று சொல்லி விடுகிறார்கள். ஷை கடனாளிகள் தங்கள் எண்ணம், ஈடேறாமல் தயங்கும்போது, ஏழைகளிடத்தில் பணமிருந்தால் சும்மா விருக்குமா? எப்படியோ குடும்பச்செலவில்விழுந்து விடுகிறது. இவ்விதமாக அவர்கள் வாங்கின கடன்கள் தீரவழியில்லாமல் எந்தநிலத்தை ஈடுகாட்டி எழுதிவைத்தார்களோ, அந்தநிலங்களில் அநேகம், கடன்கொடுத்தவர் களுக்கே, கோர்ட்செலவுள்பட சாசனமூலமாகவோ அல்லது, கோர்ட் ஏலத்தின்மூலமாகவோ, சொந்தமாகிக் கொண்டு வந்திருப்பதையும், வருவதையும், ஏழைவிவசாயிகள் இருந்த சொத்தும் போய் கஷ்டப்படுகிறதையும் யாவரும் அறிந்தவிஷயமே? அன்றியும் மாசூல் அறுவடை யாவதற்கு முன்னமே பணமுடை ஏற்படின் வர்த்தகர் களிடத்தில் பணம்வாங்கப்போனால், சலகை ஒன்றுக்கோ, அல்லது பொதி ஒன்றுக்கோ, மார்கெட், ரேட்டுக்கு 100க்கு 20, 25; குறைத்து வர்த்தமானம் எழுதிவாங்கிக் கொள்கிறார்கள். அறுவடையானபிறகு அந்தநஷ்டவிலைக்குக் கொடுக்க ஏற்பட்டு விடுகிறது. இதற் கெல்லாம், காரணம் நமக்குள் ஐக்கியமில்லாமையே.



இதனடுத்த, கைத்தொழிலைப்பற்றி ஆராய்வோம். நமது தேசத்தில் பண்டையகாலந் தொடங்கி, மேலான நிலைமையிலிருந்து இங்கிலாந்து முதலான தேசங்களுக்கு அனுப்பும் பெருமைபெற்ற நெசவு முதலிய தொழில்கள்குறைந்ததற்குக்காரணத்தைஆலோசிக்கப்புகின், அந்நியதேசத்துப் போட்டியினாலென்று வீணே சொல்லி விடுவதில் பயனில்லை. இதற்கும் ஐக்கிய முயற்சியின் குறைவுதானென்று சொல்வதற்கு நான் பின்னடையேன். தறிவைத்து நெசவுதொழில் செய்பவர்கள், பருத்தி நூல், பட்டு நூல், சாயம் முதலியன வாங்கவேண்டுமென்றால், பக்கத்திலுள்ள வர்த்தகர்களிடத்தில் தரகர்கள் மூலமாய் வாங்கவேண்டியிருக்கிறது. அந்த வியாபாரி, சரக்குகளின்மேல், ஏற்படுத்தும் லாபம், நிலுவைச்சேதத்தை உத்தேசித்துவைக்கும் லாபம், கடன் கொடுப்பதால், வட்டியை உத்தேசித்து சுமத்தும் லாபம், தரகர்களுடைய தரகுக்காகவைக்கும் லாபம் ஆக இவ்வளவுலாபமும் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. இப்படி வாங்கினால், எப்படி அந்நியதேசத்துப் போட்டியை வெல்லக் கூடும்? அறுவடையான சரக்குகளை விற்கப்போகுங்காலத்திலும், மேற்கூறிய விவசாயச் சரக்குகளைப்போலவே, நஷ்டத்திற்கு விற்கவேண்டியிருக்கிறது.

இதனடுத்த வியாபார நிலைமையைப்பற்றிப் பேசப்புகின், விவசாயத் தொழிலாலும், கைத்தொழிலாலும், உண்டு பண்ணப்பட்ட சாமான்களுக்குப் பொருளுதவி செய்பவர்கள், பண்டங்களை, இருவகைத்தொழில்களாலும், உற்பத்திசெய்பவர்கள், ஆகிய இவ்விருவருக்கும் இடையே, யாதொரு மூலதனமுமின்றி, அவ்விருவரையும், ஒன்றுசேர்த்து, நடுவில் ஏராளமாய்த்தரகுசம்பாதித்துக்கொண்டுபோகும்தரகர்கள், ஆகஇம்மூவருடைய லாபமும், ஒன்று சேர்ந்ததினால் உயர்ந்த விலையோடு விற்பனையாகிவரும் உணவுப்பொருள், வஸ்திரம், முதலிய பொருள்களை ஜனங்கள் வாங்கி, சகிக்கமுடியாதகஷ்டத்தை இப்போதடைந்து வருவதை, இச்சபையிலுள்ள கனவான்களில் ஒருவராவது துணராதிராரென்று நம்ப இடமிருக்கிறது.

ஆகவே, இத்தகைய சிரம நிலையை அடைந்திருக்கும், இம்மூன்று சாதனங்களும், நிலைபெற்று விருத்தி யடையவேண்டுமானால், மூலதனத்தினாலும் தரகினாலும், கொண்டு போகும், இரட்டைப் பங்கு லாபங்களையும், பண்டங்களின் தலையினின்று இறக்கினாலொழிய, வேறுவழி இல்லை. இதற்கு மார்க்கம் எதுவெனில் தலைப்பிற் கூறியுள்ள ஐக்கிய சங்கத்தின் இயக்கம் ஒன்றே.

ஆனால் ஐக்கிய சங்கத்தின் இயக்கமென்னவென்பதை அச்சங்கத்தின் பங்காளிகளாயிருந்துங்கூட சற்று மறியாதிருப்பவர்கள், பெரும்பாலரென நம்ப இடமிருக்கிறது. அப்படித் தெரிந்து கொள்ள சக்தி யற்ற

வர்களுக்குத் தெரிவாய் விளக்கிக் காட்டவேண்டியது. சங்கங்களிலும், யூனியன்களிலும், சேர்ந்து அதன் விஷயங்களை யுணர்ந்திருக்கும் கற்றறிந்த கனவான்களும், பஞ்சாயத்து மெம்பர்களும், (மற்றும் கல்வித்திறமை வாய்ந்து, ஐக்கிய இயக்கமின்னதென்றுணரா ஜனங்களுக்கு தங்கள் போதனா சக்தியால் புகட்டிக்காட்டும் இதர மெம்பர்களும்,) கவர்னிங்பாடி மெம்பர்களும் இதுவரையில் தங்களால் இயன்ற அளவு அறியாதவர்களுக்கு அறிவித்திருப்பினும், இன்னமும், பிரயாசையெடுத்து சங்கங்களின் உண்மை இன்னதெனக் காட்ட வேண்டியது தங்கள் கடமையென்றுணர்ந்து ஒழுகிவரக்கேட்டுக் கொள்கிறேன்.

ஆயினும், இப்போது நடைபெற்றுவரும் ஐக்கிய சங்கங்கள் யாருக்குச் சொந்தமெனில்; சங்கங்களிற் சேர்ந்த மெம்பர்களுக்குச் சொந்தமானதே தவிர வேறல்ல. இதற்குமூலதனம் சங்கமெம்பர்களின் சிக்கனவாழ்விலிருந்து ஏற்படுத்தும் பங்குத்தொகையாகும். முந்தியிருந்த பைலாப்படி சங்கங்களுக்கு மூலதனம் குறைவாயிருப்பதினால் சங்கங்களிலுள்ள எல்லாமெம்பர்களின் பொருப்பின் பேரிலும் நகர பாங்கியில்கடன்வாங்கி, தங்களுக்குள்ளேயே சமயங்களில் உதவி செய்து கொள்ள இடமேற்பட்டிருந்தது. இப்போது வந்திருக்கும், மாடல் பைலாப்படி மெம்பர்கள் யாவரும் ஒப்புக்கொண்டு பத்துவருஷகாலத்திற்கு ஒழுங்காய் ஒற்றுமையுடன் பங்குத்தொகையைச் செலுத்திவரின், சங்கத்துக்கு வேண்டிய முதல் நகரபாங்கியில் கடன்வாங்காமலே நடைபெற்று வரும்படி ஏற்பட்டுவிடும். அப்படியாயின் சங்கத்திலுள்ள மெம்பர்களின் மூலதனத்தைக்கொண்டே அவர்கள்கடன் பெறவும், செலுத்திவரவும், என்ன தடை? இவ்விதமாக நமது மூலதனம் ஏற்டுகிறதும் நாம் வெளியில் அதிகவட்டிக்குச்கடன் வாங்கித் துன்பமடையாமலிருப்பதும் நமது ஐக்கியமுயற்சியின் விசேஷித்த பயனல்லவா?

மேலே குறிக்கப்பட்டுள்ள தேசவாழ்வுக்குற்ற மூன்று சாதனங்களின் நன்மைக்குரியது இந்த ஐக்கிய இயக்கம் என்பதை விளக்க வேண்டுவது என்கடமையாகும். அதாவது;

(1) ஐக்கிய நாணயச் சங்கங்களைப் பட்டணங்களிலும், கிராமங்களிலும் பரவச்செய்து விவசாயத்துக்குரிய ஜலாதாரம், எரு, உழவுமாடு, விதை, தசகூலி முதலியனவைகளைச் சுலபமாகத் தேடிக்கொள்ளுதல்.

(2) விளையும் பண்டங்களைப் பணமுடையின்றி, நிதானித்து சங்கத்தில் வேண்டியபொருளைப்பெற்று எல்லாவற்றையும் ஏகமுகமாய்ச் சேர்த்து விலையேறின காலத்தில் விற்றுப் பயனடைதல்.



(3) கைத்தொழிலுக்கு வேண்டிய நூல்முதலிய பண்டங்களை, உற்பத்திஸ்தானங்களிலிருந்து, தொழிலாளிகள் யாவரும் ஒன்று சேர்ந்து சங்கத்தில் ரொக்கம் பெற்று அதையனுப்பி வரவழைத்துப் பங்கிட்டுக் கொள்ளுதல்.

(4) கைத்தொழில் மூலமாய் உற்பத்தியான சாமான்களை அவசரப்பட்டுக் குறைந்த விலைக்குத் தனித்தனி முன்னாடி விற்காமல் மேற்கண்டவாறு பணமுடையின்றி ஒன்று சேர்த்து விற்று ஆதாயமடைதல்.

(5) உணவு, உடை, மற்றுமவசியமான பொருள்களை மேற்கூறிய விதமாய் ஒன்று சேர்ந்து சகாயமாய் வரவழைத்துப் பங்கிட்டுக்கொள்ளுதல்.

(6) விவசாயிகள் முதலாகிய யாவருக்குள்ளும் அவசியமான தேவைகளுக்குப் பொருளுதவிசெய்து கொள்ளுதல்.

(7) கட்டடங்களைச் சுகாதாரத்திற்கேற்றபடி சௌகரியமாய்க் கட்டிக்கொண்டு வாழ்வதற்குற்ற பொருளுதவிசெய்து கொள்ளுதல்.

(8) மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், மரணகால உதவி (இன்ஷியூரன்ஸ்) செய்து கொள்ளல், முதலியனவாம்.

இம்முயற்சியானது நம்மிந்திய நாட்டில் கவர்ன்மெண்டாரவர்களுடைய கிருபையினாலும், பல பரோபகார சிந்தை வாய்ந்த மேதாவிகளாலும், பரவிவருகிறது. இன்று இச்சபையில் அக்கிராசனம் வகித்து விளங்கும்படியான மிஸ்டர் F. R. ஹெமிங்வே I. C. S. துரையவர்கள் இந்த ஜில்லாவில் நீண்டகாலமாய்த் தலைமை அதிகாரத்தை வகித்து இஜ்ஜில்லாவாசிகளை மிக்க ஆதரவோடு ஆண்டுவந்தது மன்றி, நம்மவர்களின் மனப்போக்கையும் பொருளாதார நிலையையும் செவ்வையாய்ப் பழகியுணர்ந்திருக்கிறார். அத்தகைய கனவான் நம் சென்னை மாகாணத்திற்கு ஐக்கிய நாணயச் சங்கங்களின், "ரிஜிஸ்ட்ரார்" பதவியை, நம்ஜில்லாவாசிகளின் அதிர்ஷ்ட வசத்தினால் வகித்திருக்கிறபடியால் அவர்களுடைய காலத்திலேயே "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிப்படி நமக்கு வேண்டிய ஐக்கிய முயற்சிக்குரிய நன்மைகளை அவரது கிருபையினாலும், உதவியினாலும், பெற்று வாழ்வதற்குற்ற சமயம் இதுதானென்பதை நாமெல்லோருமுணர்ந்து ஐக்கிய முயற்சியில் ஈடுபட்டு முன்னேற்றமடைவோமாக.

## செங்கற்பட்டு ஜில்லாக் கான்பரன்ஸ்

1918-ம் வருஷம் நவம்பர்மாதம் 9, 10 தேதிகளில் நடந்த செங்கற்பட்டு எட்டாவது கான்பரன்ஸில் ம-ா-ா-ஸ்ரீ கே. பி. இராமனாதய்யரவர்கள் அக்கிராசனம் வகித்து ஜனங்களுக்கு உற்சாகம் விளையும்படி

யாகப் பேசியபொழுது, அத்தகைய கான்பரன்ஸினால் முக்கிய நோக்கங்கள் இரண்டிருப்பதாகக் காண்பித்தார். கூட்டுறவு இயக்கத்தில் ஜனங்களை மேன்மேலும் பழக்கி அதை விருத்திசெய்யும் மார்க்கத்தை ஜனங்கள் கையாளும்படிச் செய்வது ஒன்று. கூட்டுறவு இயக்கத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் ஒன்று கூட்டி அவரவர்களுடைய அனுபவங்களையும் ஏற்பாடுகளையும் ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டு நன்மைபெறும்படிச் செய்வது மற்றொன்று. தனக்குக் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்டுள்ள ஆசையானது அதனால் ஏற்படும் கல்வி அபிவிருத்தியையும் ஆசாரச் சீர்திருத்த நன்மைகளையும் உத்தேசித்தே என்பதாகச்சொன்னார். கோவாபரேடிவ் இயக்கத்தில் ஊக்கமாய் உழைப்பவர்கள், இலாபத்தை மாத்திரம் கவனித்துக்கொண்டிருப்பவர்களைவிட அதிக இலாபத்தை அடைகிறார்கள். ஆகையால் இம்மாதிரியான ஊக்கமான வேலையின் பயன் எங்கும் பரவுவதற்காகவும் அதன் குடியாக்ஷிப் பொறுப்பு நிலை பெறுவதற்காகவும் அவ்வியக்கத்தின் நிர்வாகம் முழுமையும் சிலருடைய ஆளுகையில் மாத்திரமே இருந்துவிடக்கூடாது. பிரத்தியேக சாமர்த்தியமும், அனுபவமும் விசேஷமுள்ளதானாலும், ஊக்கமும் புதிதான அபிப்பிராயங்களும், உற்சாகமுங் கூட அவசியமானவைகள்தான். முன்னின்று வேலை நடத்துபவர்கள் நழுவ நேரும்போது பின்னுள்ளவர்கள் அவ்வேலைகளைக் கைக்கொள்ளத் தயாராகவிருக்கவேண்டும். சங்கங்கள் ஆரம்ப இடங்களாக இருப்பதனால் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் திறமையைக் காட்டுவதற்கும் அனுபவம் பெறுவதற்கும் சௌகரியங்கள் பலவிருக்கின்றன. ஏற்கனவே இவ்விஷயத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் ஜயம் இனி வருங்காலத்திற்கும் நமக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

நம்முடையதேசத்தில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றம் விசேஷமாய் இராஜாங்கத்தாரின் அன்பார்ந்த பராமரிப்பினால் மட்டுமே உண்டாயிற்று. ஐரோப்பாவிலோ உத்தியோக உரிமையில்லாக் கனவான்களின் பிரசார முயற்சியினாலாயிற்று. இதனால், கவர்ன்மெண்டு தம் ஆதரணையை, திடீரென்று நிறுத்திக்கொண்டால் இயக்கத்தின் நாசமும் சீக்கிரம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் சிலர் மனதில் ஏற்பட்டது. அது எப்படியிருந்தாலும் உத்தியோக உரிமையில்லாதவர்கள், மேன்மேலும் சங்கங்களை ஸ்தாபிக்கும் வேலையைக் கைக்கொண்டால் கவர்னமெண்டார் வெகு திருப்தியடைவார்கள் என்பது நிச்சயம். ஏனென்றால் அம்மாதிரியான ஜனங்கள் மிகவும் அதிக தேவையாயிருக்கிறார்கள். ஆகையால் முன்னேற்ற வேலைகளில் ஈடுபட அதிக ஜனங்களைச்சேர்த்துப் பழக்கவேண்டுமென்றும், நடந்தவரையில் நடக்கட்டுமென்று அஜாக்கிரதையாயிருந்து கொண்டிருக்கக் கூடாதென்றும் அக்கிராசனர் வற்புறுத்திக் கூறினார்.



பிறகு கூட்டுறவு வேலையையும் அதன் சிலாக்கியத்தையும் அதன் ஒவ்வொரு நோக்கத்தையும் எடுத்துக்காட்டி அது ஜனங்களுடைய பொருட்க்ஷேமத்தையே கவனிப்பதால், மிகவும் ஊக்கத்துடனும் சுயநலங்கருதாமலும் உழைக்கத் தகுந்தஇடம் இதுதானென்று வற்புறுத்திக் கூறினார். அதிகப் பணத்தைச் சம்பாதித்துப் பணக்காரர்களாகவேண்டும் என்னும் அவலக்ஷணக்கோட்பாடு இதரநாடுகளில் இருக்கலாமேயொழிய தன்னலத்தையே கவனித்துச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்ற சிரத்தை சிறதுமில்லாத நம்நாட்டினரிடம் கிடையாது. ஏழையாக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்குச் சகாய வட்டிக்குப் பணநாணயமும், மூலதனம் கொடுத்தவர்களால் பீடிக்கப்படும் தொழிலாளிகளுக்கு நியாயமான ஊதியமும், வாங்குகிறவர்களுடைய பணத்திற்குச் சரியான பொருளும், கூட்டுறவு இயக்கம் கொடுக்கின்றது. அதன் பயன் இவ்வளவு அதிகமாயிருப்பதால், பொது ஜனசமூகத்தாருக்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாய் ஓய்வுடனிருக்கும் ஜனங்களுக்கு முதல்தரமான வேலையைச் செய்ய இது ஒரு நல்ல இடம்.

ராக்டேல் பயோனீரின் சரிதங்களைப் படித்தபின் திருவல்லிக்கேணியில் ஸ்டோர் (பண்டகசாலை) ஆரம்பிக்கப்பட்டு இவ்வியக்கம் எப்படி பரவிற்று என்பதையும், அதிலிருந்து எண்ணெய் செக்குகள் ஏற்பட்டதையும், அதிலிருந்து கட்டிட சொஸைடிகள் ஏற்பட்டதையும் வீடுகள் கட்ட மனைகள் வாங்க கடன் கொடுக்கும் ஏற்பாடுகள் முதலியன எப்படி பரவிற்று என்பதையும், மற்றுமுள்ள இதர விஷயங்களையும் விரிவாகச் சொன்னார். கூட்டுறவு இயக்கத்திற்கு, விருத்தியாகும் குணம் இயல்பாகவே யிருப்பதனால் அம்முன்னேற்ற வேலைகளெல்லாம் எளிதாகவும் விசேஷப்பயனுள்ளதாகவும் ஆய்விட்டன வென்பதாகக் கூறினார்.

பிறகு, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சங்கவேலைகளில் சம்பந்தப்படும் விஷயத்தைப்பற்றியும், கவர்னமெண்டுக்கும் இவ்வியக்கத்திற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும், பேச ஆரம்பித்து இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் சங்கங்களின் நிர்வாகத்தில் கலக்காமலிருத்தல் நாட்டிற்கு இரண்டு விதமான நஷ்டங்களை உண்டாக்குகிறதென்றுக் காட்டினார். அவர்களுக்குள்ள ஏராளமான ஞானத்தின் பயன் சங்கங்களுக்குப் பிரயோசனப்படாமற் போவது ஒன்று. சங்கங்களிடம் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வைத்திருக்கும் அன்பும் அனுதாபமும் வீணாய்ப் போவதுமன்றி சங்கங்களினிடத்து எவ்வித சிரத்தையும் அவர்களுக்குத் தோன்ற இடமேற்படாமற் போகின்றது. இப்படி பயன் படமாலிருப்பவர்களில் அநேகர், நம்நாட்டின்கண் தோன்றியவர்களுள் முதன்மையானவர்களாக இருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கம் கவர்ன்மெண்

டாருடன் சம்பந்தப்பட்டுள்ள விஷயத்தில் சங்கத்தின் வேலைகள் ஒழுங்காகவும், சரிவரவும் நடத்தப்படும் வரையில் கவர்ன்மெண்டு தாப்பிலிருந்து எவ்வித தொந்தரவும் இருக்காதென்று தாம் அபிப்பிராயப்படுவதாகக்கூறி, பிறருடைய உதவியும் மேற்பார்வையு மின்றி தங்களுடைய காரியங்களை நிர்வகிக்கக்கூடுமென்று நடத்திக் காட்டும்படியாகவும், பிறருடைய மேற்பார்வை அனுவஸ்யமென்று கருதும்படி நிர்வாகஞ் செய்யும்படியாகவும் கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவு வேலையில் இந்த ஜில்லா விசேஷத்திறமையைக் காட்டியிருப்பதைப்பற்றி, தாம் சந்தோஷப்படுவதாகவும் பிரத்தியேகமாக முக்கியமாய் பழவேற்காட்டிலுள்ள செம்படவர்களுக்குள்ளும், காஞ்சீபுரம் தோட்டிகளுக்குள்ளும் கொடுங்கையூர் பஞ்சமர்களுக்குள்ளும், கூட்டுறவு இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைப்பற்றி சந்தோஷங்கொள்ளுவதாகவுஞ் சொன்னார்.

சேணியர்களின் யூனியனையும், மாம்பலம் எண்ணெய் செக்கையும் குறித்தவரையில், முந்தியதில் எல்லோரும் சேணியரல்லாவிடினும், பிந்தியதில் எல்லோரும் வாணியரல்லாவிடினும், அச்சங்கங்கள் கோவாபரேடிவ் ஏற்பாட்டிலேயேயிருந்து உபயோகமான வேலைகள் பலவற்றைச்செய்கின்றன. தங்கள் வேலையை கௌரவத்துடனும் சந்தோஷத்துடனும் செய்யும்படியாகவும், அவர்களின் வேலைத்திறத்தை விருத்தி செய்வதற்குச் சீர்திருத்த மார்க்கத்தை அனுசரிக்கவும், அவர்கள் வரும்படிகளை அதிகரித்துக் கொள்ளும்படிக்கும், யூனியன் சேணியச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்துக்கொண்டு வருகின்றது. சென்னைச் சுற்றுப்புறங்களில கட்டடங்கள் ஏற்படத்தகுதியான இடமாகையால், இலாபத்தைநாடும் முதலாளிகள் கையில் அவ்வேலைகளை விடாமல், கட்டடச் சங்கங்களை ஸ்தாபிக்க எத்தகைய முயற்சிகளும் செய்யப்பட்டு வரவில்லையென்பதாக மிகவும் வருத்தப்பட்டார். சங்கங்களின் மேற்பார்வையைப்பற்றி பாங்கின் யூனியனுக்கும் லோகல் யூனியன்களுக்குமுள்ள அபிப்பிராய பேதம் மிக்க விசனிக்கத்தக்க மற்றொரு விஷயமென்பதாகச் சொன்னார். இருதிறத்தாரும் மன ஒற்றுமையுடன் வேலை செய்யவேண்டுமென்றும் தாராளகுணத்துடனும், பரோபகார சிந்தையுடனும் காரியங்களை நடத்தவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

---

## தீர்மானங்கள்.

செங்கற்பட்டு எட்டாவது கான்பரன்ஸ் சென்ற நவம்பர் மாதம் 9-10-தேதிகளில் நடைபெற்றபோது செய்யப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவைகள் பின் வருமாறு:—



(1) மெம்பர்களுக்குக் கடன்கள் எளிதாகவும் சீக்கிரமும் கிடைக்கும்படியாக, குறிப்பிட்ட சில இடங்களில் லோகல் சூபர்வைஸிங் யூனியனின் பிரசிடெண்டுகளுக்கும், காரியதரிசிகளுக்கும் பத்திரங்களை ரிஜிஸ்தர்செய்யும் அதிகாரம் கொடுக்கும்படிக்கு கவர்ன்மெண்டாருக்கு எழுதுவது உசிதமாவென்று பத்திரப்பதிவு இலாகா (ரிஜிஸ்ட்ரேஷன்) இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் யோசனை செய்யவேண்டுமாய் கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

(2) நூதனமாய் வந்துள்ள விவசாயக் கருவிகள் ஜனங்களுக்குள் பரவும் படியாக, விவசாயப் பாங்குகளுள்ள இலாகாக்களிலிருக்கும் ஜில்லா பாங்குகள், விவசாய இலாகா அதிகாரிகளின் யோசனையுடன் சில நூதன விவசாயக் கருவிகளைத் தம் சொந்தச் செலவில் வாங்கி சூபர்வைஸிங் யூனியன்கள் சிபார்சுசெய்யும் சங்கங்களுக்குக் கடனுக்குக்கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாக அவசியமானநிபந்தனைகளை ஏற்படுத்திக்கொள்ள நிர்வாகச் சபையாருக்கு சகல அதிகாரமுமுண்டு. கிராமச்சங்கங்களும் இத்தகையக்கருவிகளை வாங்க அவசியமான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(3) நாணயச் சம்பந்தமான விஷயங்கள் தவிர இதர விஷயங்களிலும் சங்கங்கள் பழக்கமும் அனுபவமும் பெறவேண்டுமென்னும் விஷயமாக, சங்கங்களின் மெம்பர்களுக்கு அவசியமான சாமான்களையும், பொருள்களையும் ஒன்றுகச் சேர்த்து வரவழைத்து பங்கிட்டுக்கொள்ளும் முறையை சங்கங்கள் கையாளவேண்டும். தவிரவும் மெம்பர்கள் பலருடையவும் சாமான்களை ஒன்றுகச் சேர்த்து விற்கும் வழக்கத்தையும் சங்கங்கள் அனுஷ்டானத்திற்குக்கொண்டு வரவேண்டும். இவ்விஷயங்களை யெல்லாம் நடத்துவதற்கு சென்டிரல்பாங்குகள் மெம்பர்களுக்கு வேண்டியப் பண உதவி செய்யவேண்டும்.

(4) ஜில்லா பாங்குகளும், நகரபாங்குகளும் உள்ளபட்டணங்களில், டிபாசிட்டுகளுக்குக் கொடுக்கப்படும் வட்டி ரேட்டானது கூடுமான வரையில் சமமாக இருக்கவேண்டும். அப்படிச் செய்யப்படாவிட்டால் பாங்குகள் ஒவ்வொன்றுக்குள்ளும் போட்டி அதிகமாக ஏற்படக்கூடும்.

(5) முனிசிபல் வேலைக்காரர்களுடையவும் லோகல் போர்டுகளின் கண்டிராக்டர்களுடையவும் ஜாமீன்தொகைகள் ஐக்கிய சங்கங்களில் டிபாசிட்டு செய்ய உத்தரவாக வேணுமாய் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(6) நிலம்வாங்கும் ஆக்டின் (லேண்ட் அக்குவிஸிஷன் ஆக்ட்) நிபந்தனைகளைப் பொறுத்தினமட்டில் கம்பெனிகளைப்போலவே ஐக்கிய சங்கங்களும் பாவிக்கப்படவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகின்றது.

(7) 1883வருஷத்திய நிலச்சீர்திருத்த ஆக்டின்கீழ் பட்வாடா செய்யப்படும் கடன்களும், 1884-ம் வருஷத்திய விவசாயசட்டத்தின்கீழ் பட்வாடா செய்யப்படும் கடன்களும் ஐக்கியசங்கங்கள் மூலமாக பட்வாடா செய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகின்றது:—

(8) கோவாபரேடிவ் சட்டத்தின் நிபந்தனைகளில் மாறுதல்கள்செய்யப் பட்டாலும், அல்லது புதியவிதிகள் ஏற்படுத்தப்பட்டாலும், ஐக்கிய சங்கங்களில் முக்கியமானவைகளின் அபிப்பிராயங்கள் கேட்கப் படவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகின்றது.

(9) கடன்கள் துரிதமாக வசூலாகும் பொருட்டு ஆர்பிட்ரேஷன்விதிகளின்கீழ் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்டிராரால் டிக்ரிசெய்யப்படும் கடன்களும், ஒருசங்கத்தின் லிகுவிடேடரால் தீர்மானஞ்செய்யப்படும் கடன்களும் நிலவாய்தாவைப்போல் வசூல்செய்யக்கூடிய அதிகாரம் வேண்டியது உசிதமென்று ஏற்படுவதாக இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

---

# கோவாபரேஷனுக்கு மிகவும் தேவையாயிருப்பது என்ன?

('அக்ரிகல்சரல் அண்டு கோபரேடிவ் கெஜட்') என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

1916-17-ம் வருஷத்தில் மத்திய மாகாணத்திலும் பீராரிலுமுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகள் செய்த வேலையைப்பற்றி, கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் எழுதிய ரிபோர்டில், பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"பிரதி பிரயோஜனம் எதிர்பாராமல் உத்தியோக உரிமையில்லாத கனவான்கள் அநேகர் கோவாபரேடிவ் வேலைகளில் ஈடுபட்டு உழைக்க வந்திருப்பதற்கு நான் மிக்க நன்றியறிவுள்ளவனாயிருந்தபோதிலும் அத்தகையோர்கள் மேன்மேலும் அதிகரிப்பதற்கு ஆகவேண்டிய விடாமுயற்சி எக்காலத்திலும் ஏற்படவேண்டும் என்று நான் மன்றாடுவேன். கோவாபரேடிவ் இயக்கம் விருத்தியாய்க்கொண்டு வருகிறது. ஆனால் அதற்குத் தக்கபடி உத்தியோக உரிமையில்லாத உழைப்பாளிகள் ஏற்படாமலிருப்பதைப்பற்றி விசனிக்கிறேன். தற்காலம் தங்கள் நாட்டிற்காக உழைக்கவும், பிறகு அதில் முக்கியமும் உபயோகமுமான வேலைகளை நிர்வகிக்க சக்தர்களாக்கிக் கொள்ளவும், விரும்பும் கனவான்களுக்கு கோவாபரேடிவ் கற்பனைகளைப்படித்து கோவாபரேடிவ் ஏற்பாடுகளைக்கையாளும்படி நான் சிபார்சு செய்வேன். இவ்வியக்கத்திற்கு கிராமங்களில் அதிக உழைப்பாளிகளும் அதிக மேற்பார்வையும், விசேஷ சிரத்தையுள்ள காரியதரிசி



களும், ஸர்க்கிள் யூனியன்களும் மிக்க உழைப்பாளிகளான பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளும் தேவையாயிருக்கின்றன. தற்கால உழைப்பாளிகள் தங்கள் சேர்க்கையில் ஊக்கமுள்ள இளைஞர்கள் பலரை அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்."

இவ்வியக்கம் முன்னுக்கு வரவேண்டுமானால் அது தேசியமாக ஏற்பட்டு ஜனங்களுக்காக ஜனங்களாலேயே பராமரிக்கப்பட வேண்டுமென்பதில் சந்தேகம் இல்லை. இது நம் நோக்கமாயிருக்க, இதையும் நமக்கிருக்கும் சொற்பவேலைக்காரர்கள் தொகையையும் கவனித்தால் சமுத்திரத்தோடு ஒரு துளி ஜலத்தை ஒப்பிடுவதை யொக்கும். மேன்மேலும் நம் கோவாபரேடிவ் சைன்யத்தில் படிப்பாளிகளும், கற்றறிந்த கனவான்களும் வந்து சேர்ந்து உதவிபுரியாவிட்டால் நமது முன்னேற்றங்கள் எல்லாம் கனவாகத் தானிருக்கும். நம் கோவாபரேடர்களில் பலர் தேச மந்திரிகளாகவும் நம்பிக்கையுள்ள ஜனத்தலைவர்களாகவும் மேம்பாடடைந்திருக்கிறார்கள். ஜனங்களுள் கல்வியைப் பரவவைக்க உழைப்பாளிகளின் தொகை உயரவேண்டும். இல்லாவிட்டால் அறியாத்தனத்தினாலும் அலக்ஷிய புத்தியினாலும் இயக்கத்தின் பெருமை தெரியாமல் மலினமடையக்கூடும். இக்கஷ்டத்தை நிவர்த்திக்க வழி சுருக்கமாய் கீழேகாட்டப்பட்டுள்ளது.

கோவாபரேஷன் விஷயமாய் மிக்க உபயோகமான வேலைகளைச் செய்ய அநேக வழிகளிருக்கின்றன. ஒவ்வொருவரும் கோவாபரேஷன் விஷயமாய் என்ன செய்யக்கூடும், என்ன செய்யவேண்டும் என்பது, அவ்வியக்கத்தில் நேராக உழைந்துப் பழகி அதன் போக்குகளை அறிந்திருப்பதற்குத் தக்கபடியும் அவரவர்களுக்குள்ள அவகாசத்திற்குத் தக்கபடியும் இருக்கும். பயிற்சி பெறவேண்டுமென்று இஷ்டப்படுபவர்கள் முதல் முதலில் இவ்வியக்க வேலையை அறிவதற்காகப்படிக்க வேண்டிய விஷயங்களில் முதல்தரமானது எதுவென்றால், மிஸ்டர் க்ராஸ்தவெயிட் துரையவர்கள் எழுதியிருக்கும் "கோவாபரேடிவ் படிப்பும் மத்திய மாகாண ஏற்பாடும்" என்னும்பெயருடைய புத்தகத்தில் 3-வது 4-வது பாகங்களில் காட்டியிருக்கிறபடி மத்தியமாகாணங்களிலும் பீராரிலுமுள்ள கோவாபரேடிவ் இயக்க விஷயங்களே. இப்புத்தகத்தைப் படித்தபிறகு வேலை நடந்துகொண்டிருக்கும் சில சொஸைடிகளை ஒரு அனுபவகோவாபரேடரோடுபோய்ப் பார்த்து புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை கவனிக்கலாம். அப்பால் தானாகவே ஒருகிராமத்தில் சங்கம் ஏற்படுத்தலாம் அல்லது இருக்கும் சொஸைடியானது கோவாபரேடிவ் ஆக்டு, நிபந்தனை, பைலாக்கள் இவைகளை அனுசரித்து தம் வேலைகளை நிர்வகிக்கும் விஷயத்தில் உதவி செய்யலாம். ஸெண்ட்ரல் பாங்கியின் செகரிடேரிக்காவது கோவாபரேடிவ் இலாகாவிலுள்ள எந்த உத்தியோகஸ்தருக்காவது, கோவாபரேடிவ் பாங்குகளின் தனி ஆளுகைக் கவர்னருக்காவது கோவாபரேடராக வேலை செய்யத் தமக்கிருக்கும் விருப்பத்தைத் தெரிவித்தால் அவர்களும் சந்தோஷமாய் தங்களாலான உதவியைச் செய்வார்கள். தான் தேர்ந்தெடுத்த சொஸைடியை சௌகரியப்படும் பொழுதெல்லாம் போய்ப்பார்த்து அதன் மெம்பர்களுக்குள் நவீன விவசாய

மாதிரிகளையும் கோவாபரேடிவ் ஸ்டோர், விவசாயம், கைத்தொழில், கால்நடைகளைப் பாராமரித்தல் முதலிய வேலைகளில் பழகும்படிக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். தன் நாட்டிற்கு உண்மையாய் உழைக்கவேண்டும் என்கிற ஆசை ஒருவனுக்கிருந்தால், அவன் சாவகாச நேரங்களில், ஒரு சொஸைடியே, அவனுக்கு வேண்டியவேலைகளைக் கொடுக்கக்கூடும். நாட்டிற்கு உழைக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றி அவனுக்கும் திருப்தியுண்டாகும். அவனுக்கு அதிக சாவகாசம் கிடைத்தால், 4,5 சங்கங்களைச்சேர்த்து அவைகளின் பிரதிநிதிகளால் ஆளப்படும் ஸர்க்கிள் யூனியனில் அதிகவேலைசெய்யலாம், பிறகுகாலக்கிரமத்தில் பாங்கின் டைரக்டராயிருந்துகொண்டு விசேஷ வேலைசெய்யசந்தர்ப்பம் பெறலாம். கோவாப்ரேடிவ் வேலையாக பிரயாணம் செய்தால் அச்செலவைக்கொடுக்க எல்லாபாங்கிகளும் ஏற்பாடு செய்திருக்கின்றன. ஆகவே நாட்டிற்கு உழைக்கும் சந்தர்ப்பம் விசேஷமாக இருக்கிறது. ஒற்றுமைப்படவும் உழைக்கவும் ஆசைதான்வேண்டும். உண்மையாய் நாட்டிற்குப் பாடுபட விரும்புகிறவர்கள் இப்பொழுது அகப்பட்ட சந்தர்ப்பத்தை எதிர்கொண்டு வேலைசெய்யமுந்துவார்களென்று நம்புகிறோம்.

மிகத்தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களுக்கும் உபகாரமான வேலை செய்ய கோவாபரேஷன் வேலையில் வேண்டிய இடமிருக்கிறது. ஒருவர், இருவர் கூட படிக்கத்தெரிந்தவர்களில்லாத கிராமம் தற்காலம் இருக்காது அவர்களெல்லாம் இவ்வியக்கவேலையில் ஈடுபடும் உழைப்பாளிகளுடன் சேர்ந்தால் அநேக விதங்களில் உபகாரமாகும். அதாவது சாதாரணக் கணக்குகளை வைக்கலாம். கோவாரேஷனைப்பற்றிய புத்தகங்களை தெரியாதவர்களுக்கு வாசித்து வியாக்கியானம் செய்யலாம். சீர்திருத்த விவசாயம், இயந்திரஇயக்க உபயோகம் முதலியவைகளை உதாரண வாயிலாகக் காட்டலாம். அநேகமாய் எல்லாக் கிராமங்களிலும் பிரைமரிப் படிப்புக்குமேல் படிக்க சக்தியற்று நின்று விடுகிற பையன்கள் அநேகரிருக்கிறார்கள். அத்தகைய பையன்களுக்கு கோவாபரேஷனில் வேலை செய்ய இடமுண்டு. அவர்கள் மிக்க உபயோககரமாக இயக்கவேலைகளில் ஈடுபடும்படி செய்யலாம். அவர்கள் கணக்குகளை எழுதலாம். அப்படிச் செய்வதனால் ஸென்ட்ரல் பாங்கி சிரமப்பட்டு சம்பளம் கொடுத்து நியமித்து வரும் பிரயாணக்கணக்கர்களின் தொகை குறைவுபடும். அப்படி வேலைசெய்பவர்களுக்கு ஊக்கமும் சிரத்தையுமுண்டாக அவர்களுக்கு ஒரு கௌரவச் சம்பளமோ, இனமோ கொடுக்கலாம். இப்படி பழக்கப்பட்டவர்கள் முன்னமே பழக்கமடைந்து வேலைசெய்து வருபவர்களை இதர வேலைகளுக்குச் செல்ல இடங்கொடுக்க நேருகின்றது. கூட்டுறவு முயற்சியில் வேலைசெய்ய ஜனங்கள் அதிகரித்துக்கொண்டே வருவார்கள்.

மேலே காட்டிய விஷயங்கள் எந்தக் கோவாபரேட்டருடைய மனதிலும் எப்பொழுதும் முக்கியமாய்க் குடி கொண்டிருக்கவேண்டிய எண்ணங்களிற் சில. இவைகள் பிரத்தியட்சமாக செய்கைகளில் கொண்டுவரப்பட்டால் உத்தியோக உரிமையில்லா உழைப்பாளிகள் ஏராளமாகக் கிடைப்பது அருமையல்ல. ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவரும் வேலையும் இனிவரும் காலத்தில் மிகச் சுலபமாகி விடும்.

24 MAY 1919
MADRAS.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் X] 1919ஆம் ஜனவரிமீ [இலக்கம் 7

## பத்திராதிபரின் குறிப்புகள்

**கோவாபரேடிவ் ரிஜிஸ்தராரின்வருஷாந்தாரிப்போர்ட்டின்மேல் கவர்ன்மெண்டார் உத்தரவு.**

1918ம் வருஷம் ஜூன்மாதம் 30ந்தேதியோடுமுடியும் கோவாபரேடிவ் வருஷத்திற்கு சென்னைமாகாண கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் அனுப்பித்துக் கொண்ட வருஷாந்தர ரிப்போர்ட்டினமேல், மாகாணகவர்ன் மெண்டார் 1918ம் வருஷம் டிசம்பர் மாதம் 16 ந்தேதியுள்ள 3977 நெம்பர் உத்தரவின் சுருக்கம் பின்வருமாறு:—

மிஸ்டர் ஹெமிங்வே அனுப்பியுள்ள ரிப்போர்ட்டு சகலவிதங்களிலும் அபிவிர்த்தியைக் காட்டுகின்றது. சங்கங்கள் பிரஸ்தாப வருஷத்தில் 100 க்கு 23 வீதம் அதிகரித்திருக்கின்றன. சங்கங்களின் மெம்பர்கள் 100க்கு 17. 1 வீதமும், சங்கங்களின் மூலதனம் 100க்கு 14. 6 வீதமும் உயர்ந்திருக்கின்றன. 1916 - 17 வருஷத்தில் சங்கங்களில் 85. .48 இலட்சம் ரூபாய்கள் டிபாசிட்டாக வசூல்செய்யப் பட்டிருந்தன. 1917 - 18 வருஷத்தில் 95, 27 ரூபாய்கள் டிபாசிட்டாக வசூல் செய்யப்பட்டிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் தாழ்ந்த வகுப்பினர்களுக்காகவென்று அநேக சங்கங்கள் நூதனமாக ஸ்தாபிக்கப்பட்டன. லோகல் யூனியன்கள் செய்யவேண்டிய, மேற்பார்வை பார்க்கும் வேலையையும் (ஸூபர்விஷன்) முன்வருஷத்தைவிட பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாகச் செய்து வந்தன. விவசாயிகளுக் கவசியமான பொருள்களையும் சாமான்களையும் ஒன்றுகச்சேர்த்து வாங்குவதும் ஒன்றுக விற்பதும் பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாகக் கவனிக்கப்பட்டு வந்தது. பிரஸ்தாப வருஷத்தில் நாணயச் சங்கங்களல்லாத இதரச்சங்கங்கள் அதிகமாக ஸ்தாபிக்கப்பட்டன. இவ்

விஷயத்தில் இன்னும் அதிக ஊக்கம் செலுத்தப் படுமென்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள்'

பிரஸ்தாப வருஷத்தில் ஆறு சென்டிரல் பாங்குகள் நூதனமாக ஏற்படுத்தப்பட்டன. இன்னும் எட்டு சென்டிரல் பாங்குகள் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நாணயச் சங்கங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன.

வட்டியும் முதலும் வசூல் செய்யப் படுவதில் சென்டிரல் பாங்குகளில் அபிவிர்த்தி ஏற்பட்டுள்ள தென்றாலும் விவசாயச் சங்கங்களல்லாத இதரச்சங்கங்களில் வட்டியும் முதலும் ஒழுங்காக வசூல் செய்யப்படவில்லை. வட்டியும் முதலும் வசூல் செய்யப்படும் விஷயத்தில் விவசாயச் சங்கங்களில் சிறிது அபிவிர்த்தி ஏற்பட்டுள்ளதென்றாலும், வசூலாகாமல் தவணைக் கடந்துநின்ற தொகை ஏராளம். சில சங்கங்கள் ஒழுங்காக நடை பெறாததால் இவ்வளவு ஏராளமான பாக்கி ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தின் அபிவிர்த்தியும், வளர்ச்சியும், சங்கங்களில் வட்டியும் முதலும் எவ்வளவு வசூலாகின்றதென்பதைப் பொருந்தி யிருப்பதால் கூட்டுறவினர்கள் எல்லோரும் இவ்விஷயத்தில் அதிக ஊக்கமும் சிரத்தையும் காட்டவேண்டும். வசூலாக வேண்டிய தொகைகள் தவணைப்பிரகாரம் வசூல்செய்யப்படாமல் ஒரு தடவை தவணைக்கடக்க விடப்பட்டால் பின்னால் அத்தொகைகள் வசூலாவது வெகு கஷ்டமாயிருப்பதாகத் தெரியவருகின்றது. ஆனது பற்றி இவ்விஷயத்தில் கூட்டுறவினர்கள் பிரத்தியேக ஊக்கமும் சிரத்தையும் காட்டவேண்டு மென்றும் தவணைப் பிகாரம் வசூலாகாததால் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், இதரத் துன்பங்களையும் கூட்டுறவினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் கோருகிறார்கள்.

கூட்டுறவு இயக்கம் விர்த்தியாகி வளர்ச்சி பெறும் பொருட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் உத்தியோகப் பற்றில்லாத கனவான்களின் உதவி ஏராளமாக அவசியமாயிருக்கின்றது. இக் கூட்டுறவு இயக்கத்தில் அவர்கள் உழைப்பதால் அவர்களுக்கும் அவர்களுடைய சகோதரர்களுக்குமட்டும், பிரயோசனம் கிடைப்பதுடன் அவர்களுடைய பின்சந்ததியார் கட்கும் ஏராளமான பிரயோசனமும் நன்மையும் விளையக்கூடும்.

பொது ஜனங்களுக்காக உழைக்கவேண்டு மென்றும் ஏழைகளுக்கு நன்மைசெய்யவேண்டு மென்றும் கருதுகிறவர்களுக் கூட்டுறவு இயக்கத்தைப்போன்ற இயக்கம் வேறொன்றும் கிடையாது. நம்இந்திய சகோ



தரர்கள் இவ்வுண்மையை உணர்ந்து கூட்டுறவு இயக்கத்தில் அதிகமாக உழைக்கவேண்டுமென்றும் இவ்வியக்கத்தின் அபிவிர்த்திக்காக பாடுபடவேண்டுமென்றும் நாம் கூறுகிறோம்.

* * * *

புதுக்கோட்டை டவுன் பாங்கு.

புதுக்கோட்டை டவுன்பாங்கு, 1918-ம் வருஷம் ஜூன் மாதம் 30ந்தேதியோடு முடியும் வருஷத்தில் நன்றாக வேலை செய்திருக்கின்றது. வருஷக்கடைசியில் சங்கத்தில் 1068 மெம்பர்கள் இருந்தார்கள், மெம்பர்களால் செலுத்தப்பட்ட பங்குத் தொகையின் மொத்தம் வருஷக் கடைசியில் ரூ. 5,767. வருஷக்கடையில் சங்கத்தில் ரூ. 87,399-2-9 டிபாஸிட்டு களாக வசூல் செய்யப்பட்டிருந்தது. பிரஸ்தாப வருஷத்தில் 47,518 ரூபாய் மெம்பர்களுக்குக் கடனுகபட்வாடா செய்யப்பட்டன. கடனாக பட்வாடா செய்யப்பட்டதொகையில் ரூ. 11,487. மெம்பர்களுடைய டிபாஸிட்டு ஜாமீன்பேரிலேயே கடனாகக்கொடுக்கப் பட்டுள்ளது. பிரஸ் தாப வருஷத்தில் சங்கத்திற்கு ரூ. 3,869-7-5 இலாபமாகக் கிடைத்துள் ளது. சங்கம் வேலை துவக்க ஆரம்பித்து இது எட்டாவது வருஷம். ஆரம்ப நாட்களிலிருந்தே சங்கம் விர்த்தியாய்க்கொண்டு வருவதைப் பார்க்க மிகவும் சந்தோஷப் படுகிறோம். பிரஸ்தாப வருஷத்தில் சங்கத் தில் 33 மீட்டிங்குகள் நடத்தப்பட்டு 814 தீர்மானங்கள் செய்யப்பட்டி ருக்கின்றன. சராசரிமீடிங்கு ஒன்றுக்கு 22 தீர்மானங்கள் நிறை வேற் றப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தீர்மானத்தின் பேரிலும் நீண்ட வாதஞ் செய்யவேண்டுமென்னும் அவா நம் ஜனங்களுக்குள் இருக்கையில் மீட் டிங்கு ஒன்றுக்கு 22தீர்மானங்கள் சராசரியில் நிறைவேற்றப்பட்டிருப் பதைப் பார்க்க, ஆச்சரியப்படும்படியாக சங்கத்தின் நிர்வாக சபைமெம் பர்கள் அவ்வளவு திறமாய் வேலைகளை நடத்தி யிருக்கிறார்களெனத் தெரிகிறது.

* * * *

பாளையங் கோட்டை அர்பன் சொஸைடி.

பாளையங்கோட்டை அர்பன் கோவாபரேடீவ் சொஸைடியில் வருஷ (1917-18) ஆரம்பத்தில் 422 மெம்பர்கள் இருந்தார்கள். பிரஸ்தாப வருஷத்தில் 70 மெம்பர்கள் புதிதாய்ச் சேர்ந்தார்களென்றாலும் வருஷக்கடைசியில் 359 மெம்பர்கள்தான் இருந்தார்கள். இதற்குக் காரணம் சில மெம்பர்கள் நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்ட திருநெல்வேலி பிரிட்ஜ் சங்கத்துடன் பிரிந்து விட்டார்கள். வருஷக்கடைசியில் சங்கத்தில் ரூ. 4,4000 டிபாசிட்டுகளாக நின்றன. பிரஸ்தாப வருஷத்தில் சங்கம் ரூ. 1,828-9-10 இலாபமாக அடைந்திருக்கின்றது.

பிரஸ்தாப வருஷத்தின் வேலை திருப்திகரமாக இருந்த தென்றும் இனி அடுத்த வருஷங்களிலும் சங்கம் இவ்விதமாகவே திருப்திகர மாகவே வேலை செய்யுமென்றும் நம்புவதாக ஆடிட் உத்தரவு குறிக் கின்றது. சங்கத்தின் லேவாதேவிக ளெல்லாம் ஒழுங்காகவும் தவணைப் பிரகாரமும் நடந்ததாகவும் இதற்கெல்லாம் காரணம் ஸ்ரீமான் என். கிருஷ்ணசாமிராவ் அவர்களுடைய திறமையும் ஊக்கமுந்தான் என்றும் ஆடிட் ஆர்டர் கூறுகின்றது.

* * * *

தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் எருச்சங்கம்.

1917-18 வருஷத்திற்கு மேற்படி சங்கத்தின் வருஷாந்த ரிப்போர்ட் டைப் பார்க்க அதிக சந்தோஷமடைந்தோம். சங்கம் வேலைசெய்ய ஆரம்பித்து இது இரண்டாவது வருஷ மாகும். இச்சங்கத்தின் அபிவிர்த்திக்கும், முன்னேற் றத்திற்கும் ராய் சாகேப், ஏ. சேதுராமையர் அவர் கள்தான் காரணம் என்பது நாம் சொல்லவேண்டியது அனுவஸ்யம். உள்ளங்கை நெல்லிக் கனிபோல் இவ்விஷயம் உலகமறியும். ஜில்லாவி லுள்ள சங்கங்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளும் படிக்கு சங்கம் பிரஸ்தாப வருஷத்தில் தன்னுடைய விதிகளில் மாறுதல்கள் செய்து கொண்டது. வருஷக்கடைசியில் 93 நபர்களும், 5 சங்கங்களும் மெம்பர்களாக இருந்தார்கள். பிரஸ்தாப வருஷத்தில் எலும்பு எரு தயார் செய்யப்பட்டு விற்கப்பட்டு வந்தது. பிளவர் பாஸ்பேட்டும், இதர வித மான எருக்களும், விதை தினுசுகளும் சங்கத்தால் வாங்கிவிற்பனை செய் யப்பட்டன. சுமார் நாலாயிரம் ரூபாய் வரைக்கும் சங்கம் சாமான்களை விற்பனை செய்திருக்கின்றது. சங்கத்திற்கு இலாபம் ரூ. 4,35ம் கிடைத் திருக்கின்றது. எலும்பு உரமும், பிளவர் பாஸ்பேட்டும், டன் ஒன்றுக்கு ரூ. 80 வீதம் வெளியில் விற்றுவர சங்கம் தன்னுடைய மெம்பர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 65 வீதம் (டன் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் இலாபத் தில்) விற்று வந்தது. சங்கம் தயார் செய்யும் எருக்களை விசேஷமாக பிளவர்பாஸ் பேட்டு வாங்குகிறவர்கள் அதிகமாக இருப்பார்களென்று நினைக்கிறோம். சங்கத்தின் நன்மையையும், எருக்களின் அவசியத்தையும் தஞ்சை ஜில்லா விவசாயிகள் நாளடைவில் உணர்ந்து கொள்ளுவார்க ளென்று எண்ணுகிறோம். சங்கத்தின் வேலை அதிகரிப்பது தவிர நாள டைவில் இத்தகை யச்சங்கங்களின் தொகையும் அதிகரிக்குமென்று நம்புகிறோம்:—

* * * *



" பம்பாய் கோவாபரேடிவ் குவாடர்லி" என்னும் சஞ்சிகை பின் வருமாறு எழுதுகின்றது :—

விஷசுரத்தைத் தடுக்கஒருசங்கம்

"வங்காளத்தில் நூதனத் தினுசான சங்கம் ஒன் று இப்போது எற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது விஷ சுரத்தைத் தடுக்கும் ஓர் கிராமச் சங்கம். விஷசுரத்தைத் தடுக்கும் வண் ணம் மெம்பர்களுக்கு வைத்திய உதவி இனுமாகச் செய்வதும், மெம்பர் களுக்கு இனுமாகவே இதர மருந்துகள் கொடுப்பதும் இச்சங்கத்தின் நோக்கங்கள். பிரவேச கட்டணம் தவிர மூன்றுமாதத்திற் கொருமுறை சந்தா ரூ. மூன்றும் மெம்பர்கள் செலுத்துகிறார்கள். தவிர செலுத்தும் சந்தாத் தொகைக்கு இருபங் கதிகமாக பொறுப்பையும் ஏற்றுக் கொள் ளுகிறார்கள். மெம்பர்கள் கொடுக்கும் தொகையையும், கவர்ன்மெண்டா ரும், இதர பொதுச்சபைகளும், சங்கங்களும், பரோபகார கனவான்க ளும், தனவந்தர்களும் கொடுக்கும் உபகார நிதியையும், உதவித் தொகை யையும் கொண்டு விஷசுரத்தைத் தடுக்கும் மார்க்கங்களும் மெம்பர்க ளுக்கு வைத்திய உதவியும் கொடுக்கப்பட்டு வருகின்றது. விஷசுரத்தைத் தடுப்பதற்காகச் செய்யப்படும் மார்க்கங்கள் பலவற்றுள் காடுகளை சுத்தஞ் செய்வதும், அசுத்தஜலம் நிற்கும் குட்டைகளையும் குளங்களையும் மூடி விடுவதும், கவனித்து வருவார்கள். மெம்பர்களுக்குவைத்திய உதவி புரி வதற்காக சங்கம் ஒரு வைத்தியரை (டாக்டரை) நியமிக்கும். சங்கத்தின் எந்த மெம்பரும் இவருடைய உதவியை ஒரு பைசாவேனும் கொடுக்கா மல் பெற்றுக்கொள்ளலாம். மெம்பர்களுக்கு மருந்து பட்வாடா செய் வதற்காக ஒரு வைத்திய சாலையும் சங்கத்தால் ஏற்பாடுசெய்யப்படும்.

* * * *

சங்கங்கள் ஒருவரையே நம்பியிருத்தல்.

ஒரு மனுஷ்யன் எவ்வளவு கெட்டிக் காரனுகவும், திறமை சாலியா கவும் இருந்த போதிலும், அவனின்றி சங்கத்தின் காரியங்கள் நடைபெறுதென்ற ஸ்திதியில் ஒரு சங் கம் இராதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு மனுஷ்யனின் திறமை எத்தகையதா யிருந்த போதிலும் அவனொருவனையே நம்பிக்கொண்டு ஒரு சங்கம் இருத்தல் கூடாது. தம்முடைய நிர்வாக அதிகாரம் முழுவதையும், கனம் ராவ் பக துர் என். கே. கெல்கார் வசம் ஒப்புவித்துள்ள மத்தியமாகாணம், மாகாண பாங்கின் (புரொவென்ஷியல் பெடரேஷன்) டைரக்டர்களின் செய் கையை நாம் அங்கீகரிக்க முடியாது. அப்படிச் செய்வது சரியல்ல வென்றும் கூட்டுறவு இயக்கத்திற்குத் தகுந்த தல்ல வென்றும் அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மத்திய மாகாணங்களிலிருந்தே மற்றொரு விஷயமும் நமக்குக் கிடைத்திருக்கின்றது. நாகப்பூர் கவர்ன்மெண்டு அச்சுக்கூட வேலைக்கா

ரர்களின் சங்கம் ஒன்று வெகு திருப்திகரமாக வேலை, செய்து கொண்டு வந்தது. அச்சுக்கூடத்தின் சூபிரன்டென்டெண்டு சங்கத்தின் அக்கிராசனாதிபதியாக இருந்து சங்கத்திற்காக இரவும் பகலும் உழைத்து வந்தார். அவர் நாகப்பூரிலிருந்து மாற்றப்பட்ட போது அவர் உதவியின்றி சங்கத்தை நடத்த முடியாதென்பதாக சங்கத்தின் அங்கத்தினர்கள் எண்ணி சங்கத்தை மூடிவிட (லிகுவிடேட் செய்துவிட) மெம்பர்கள் மனுசெய்து கொண்டார்கள். இவ்விஷயத்தில் தலையிட்டு ஒன்றும் செய்வதற்கு ரிஜிஸ்ட்ராருக்கு முடியாமற் போய்விட்டது. சங்கம் இவ்விதமாக ஒருவரையே ஆதாரமாகக் கொண்டு நின்று அவர் விலக நேர்ந்தபோது சங்கமே மூடிவிட நேர்ந்தது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம்.

* * * *

யுத்தகாலத்திலும் ருஷியாவில் கூட்டுறவின் வளர்ச்சி.

பிறதேசங்களுடன் யுத்தம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க உள் நாட்டுக் கலகங்கள் பல ருஷியாவில் நடந்து கொண்டிருந்தன வென்பது யாவரும் அறிந்த விஷயம். இது காரணம் பற்றி தபால் தந்தி முதலியவைகளின் போக்கு வரவு வெகு காலம் வரைக்கும் தடைபட்டிருந்ததால் ருஷியாவில் யுத்தகாலத்தில் என்ன நடந்த தென்பதே அறியக்கூடாமற் போயிற்று. சில சமயங்கள், சமாசாரம் நடந்த பல மாதங்களுக்குப் பின் விஷயம் தெரியவரும். இத்தகையக் காரணங்களை முன்னிட்டு யுத்தகாலத்தில் ருஷியாவில் நடந்த கூட்டுறவு வளர்ச்சியைப் பற்றி முழு விவரங்களும் சொல்லுவதற் கியலாமற் போகின்றது. ஆனதுபற்றி, நமக்குக் கிடைத்துள்ள விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு கூட்டுறவு முயற்சி, யுத்த காலத்தில் ருஷியாவில் எவ்வளவு வளர்ச்சி யடைந்ததென்பதை ஒருவாறு கவனிக்கலாம்.

கூட்டுறவு முயற்சி முழுவதும், ஒரு தேசம் அமரிக்கையாயும், சமாதானமாகவும் இருக்கும் காலத்தில் விருத்தி யடையக்கூடியதென்பதாக பலர் எண்ணங் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ யுத்த காலத்திலும் கூட்டுறவு முயற்சி அபிவிருத்தியடைந்திருக்கிற தென்று ரூபிக்க அத்தாட்சிகள் பல கிடைத்திருக்கின்றன.

ஸைபேரியாவின் வெண்ணெய் உற்பத்தி செய்யும் சங்கத்தின் கணக்கைப் பார்த்தால் 1914ம் வருஷத்தில் ஏழுமில்லியன் ரௌபில்ஸ-களுக்கு வெண்ணெய் விற்கப்பட்டது. 1915ம் வருஷத்தில் பதினாறு மில்லியன் ரௌபில்ஸ்களுக்கும், 1916ம் வருஷம் 58 மில்லியன் ரௌபில்ஸ்களுக்கும், 1917-ம் வருஷம் பத்தரை மாதங்களில் 103 மில்லியன்களுக் கதிகமான ரௌபில்ஸ்களுக்கும் வெண்ணெய் விற்கப்பட்டுள்ளது. ஆனால் "இதர சாமான்களும் பொருள்களும்" சப்ளை



செய்யப்பட்டவகையில் 1914ம் வருஷத்தில் 663, 539 ரௌபில்ஸ்களுக்கு விற்பனைசெய்யப்பட்டதென்றால் 1917ம் வருஷத்தில் 1,779,706 ரௌபில்ஸ்களுக்கு சாமான்கள் விற்பனை செய்யப்பட்டன. பண்டக சாலைகளிலிருந்து சப்ளை செய்யப்பட்ட சாமான்களின் தொகை ஏழு மில்லியன் களிலிருந்து பத்தொன்பது மில்லியன் களுக்கு உயர்ந்தன. புல், வைக்கோல், இறைச்சி, கொழுப்பு முதலிய சாமான்களின் ஏற்றுமதி நான்கு மில்லியன் களிலிருந்து ஒன்பது மில்லியன் களுக்கு உயர்ந்தன. இராணுவங்களின் உபயோகத்திற்காக இந்த யூனியன் 1915ம் வருஷம் 983,441 எடையுள்ள வெண்ணெய் சப்ளை செய்திருக்க 1916ம் வருஷம் 2,942,307 எடையுள்ள வெண்ணெய் சப்ளை செய்திருக்கின்றது. [ஒரு எடை யென்பது 36 பவுண்டு நிறையுள்ளது] இதே மாதிரியாக யூனியனின் வேலைகள் விர்த்தியாயிருப்பது மன்றி யூனியனில் தயாராகும் சாமான்களின் விற்பனையும் ஏராளமாக உயர்ந்திருக்கின்றது.

ரஷ்ஷியன் சென்டிரல் யூனியனில் 1909ம் வருஷம் முன்னூறு சங்கங்கள் இருந்தன. 1916ம் வருஷக் கடைசியில் மேற்படி யூனியனில் 3000 சங்கங்கள் இருந்தன. ஸைபேரியன் கோவாப்ரேடீவ் யூனியன் விற்பனை இலாகாவிலும் ஏராளமான அபிவிர்த்தி செய்யப்பட்டுள்ளது. ருஷ்யாவின் கூட்டுறவு சங்கங்களில் எல்லா பாகங்களிலும் வளர்ச்சியும் அபிவிர்த்தியும் யுத்தகாலத்திலும் ஏற்பட்டிருப்பதால் கூட்டுறவு இயக்கம் எக்காலத்திலும் விர்த்தியடையக் கூடுமென்று நன்கு புலப்படுகின்றது.

* * * *

காய்கறிகளும் சுகாதாரமும்.

உணவுப் பொருள்கள் சம்பந்தமாகவும் காய்கறிகள் சம்பந்தமாகவும் ஜனங்களின் அறிவு மிகவும் குறைந்திருக்கின்றதே யென்று "ஐரிஷ் ஹோம் ஸ்டெட்" என்னும் பத்திரிகை வருத்தப்படுகின்றது. காய்கறி பதார்த்தங்களை உணவுப் பொருள்களாகக் கொள்வதில் ஏராளமான பயன் இருப்பதாக அப்பத்திரிகை கூறுகின்றது. இறைச்சியையும் கொழுப்புக் கலந்த இதர வஸ்துக்களையும் உபயோகிப்பதைவிட காய்கறிகளை உபயோகித்தால் வெகு நன்மை இருக்கிறதென்றும், இறைச்சி வகைராக்கள் அதிக விலையாயிருக்கும் இக்காலத்தில் காய்கறிகளை உபயோகிப்பதால் செலவு மிகவும் குறைகிறதென்றும் நன்மையில் குறைவு சிறிதேனும் ஏற்படவில்லையென்றும் அப்பத்திரிகை எழுதுகின்றது. ஒரு மனிதனுடைய உயிர் நிலை தங்குவதற்கும் அவனுடைய தேகாரோக்கியம் சுகமாக இருப்பதற்கும் ஒரு அளவு இறைச்சியும், கொழுப்புக்கலந்த பதார்த்தமும் அவசியமென்று வெகுகாலமாக நம்பப்பட்டு வந்ததென்றும் டென்மார்க்கைச் சேர்ந்த டாக்டர் ஹின்ஹெடே என்பவர் சமீபத்தில் செய்த பரீட்சை

யில் இத்தகைய நம்பிக்கையில் சிறிதும் உண்மை யில்லையென்று ரூபித்திருக்கிறாரென்றும் அப்பத்திரிகை பிரசுரஞ் செய்திருக்கின்றது. ஜீவாதாரத்திற்கு கொழுப்பும் இறைச்சிப் பொருளும் அவசிய மில்லையென்பதாக மேற்சொன்ன டாக்டர் ரூபித்திருக்கிறார். ஜீரணத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி இறைச்சிக்கும் கொழுப்புக்கும் இருப்பது போலவே காய்கறி பதார்த்தங்களுக்கும் இருப்பதாக டாக்டர் கண்டு பிடித்திருக்கிறார். கொழுப்புவகைகளுக்கும் இறைச்சி வகைராக்களுக்கும் பதிலாக காய்கறிகளை உபயோகிப்பதால் செலவு குறைவதல்லாமல் நன்மையும் அதிகமென்பதாக டாக்டர் சொல்லுகிறார். இறைச்சியையும், கொழுப்புப் பதார்த்தத்தையும் விலக்குவதால் திரேகத்திற்கு எத்தகைய தீங்கும் ஏற்படுவதில்லை யென்றும் சுகாதாரத்தில் எவ்விதக் கெடுதலும் உண்டாவதில்லை யென்றும் இறைச்சிக்கும் கொழுப்புப்பதார்த்தத்திற்கும் பதிலாக உருளைக்கிழங்கும், காய்கறிகளும், கீரைவகைகளும் உபயோகிப்பதால் அதிக நன்மை விளைகிறதென்றும் அவர் ரூபித்திருக்கிறார். காய்கறிகளை விளைவிப்பதிலும், காய்கறிகளை உபயோகிப்பதிலும் அதிக சிரத்தையும் ஊக்கமும் இனி காட்டப் படவேண்டுமென்றும் டாக்டர் தெரிவித்திருக்கிறார்.

சமீபத்தில் ஐரோப்பாவில் நடந்த யுத்தத்தின் காரணத்தால் நேர்ந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ள செய்யப்பட்ட பரீட்சார்த்தங்கள் பலவற்றுள் இறைச்சியை விலக்குவதற்கு என்ன செய்யலாமென்றும் பரீட்சை செய்யப்பட்டது. அதன் பலனாகத்தான் காய்கறிகள் உபயோகிக்கப்படலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மேல் நாட்டார் இப்பொழுது கண்டு பிடித்துள்ள உண்மைகளை இந்தியர்கள் எத்தனையோ ஆயிரவருஷங்களுக்குமுன் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

* * * *

ஸ்ரீமான் டாக்டர் சுப்பிரமணிய ஐயரவர்களின் சிறப்புரையுடன் கூடிய "இந்தியாவும் சுய ஆட்சியும்" என்ற மகுடம் புனைந்த இராஜீய சரித்திர நூல் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மிகவும் உயர்ந்த காகிதத்தில் இந்நூல் நன்றாக அச்சிடப்பட்டுள்ளது. முன்னூற்று முப்பது பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் 1-8-0 வேண்டுவோர் "சென்னை கனேஷ் கம்பெனி" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



# கோவாபரேடிவ் கட்டட சங்கங்கள்.

(215-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

கட்டடச் சங்கங்கள் விஷயத்தில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் ஏராளமான அபிவிர்த்தி ஏற்பட்டிருக்க நம்முடைய தேசத்தில் இம்முயற்சி ஆரம்பத்திலேயே நசுக்குண்டு போயிருக்கின்றது. இதற்குக் காரணங்களைக் கண்டு பிடிக்க நாங்கள் அதிக தூரம் சிரமப்பட வேண்டியதில்லை. தேசத்தின் சீதோஷ்ண நிலைமையிலும், தொழில் நிலைமையிலும், ஏராளமான வித்தியாசமும், கஷ்டங்களும் அசௌகர்யங்களும். இருந்தமையால் இத்தகைய சங்கங்களின் அவசியங்களை 1850-ம் வருஷத்திற்கு முன்னரே அவர்கள் கண்டு கொண்டார்கள். சென்ற எழுபத்தைந்து வருஷங்களுக் கதிகமாக அவர்கள் இவ்விஷயங்களில் தம்முடைய கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள். தவிரவும் இத்தகைய காரியங்களுக்காக ஐரோப்பாக் கண்டத்தில் குறைந்த வட்டிக்குப்பணம் கிடைக்கின்றது. முக்கியமாக நகர முனிஸிபல் சங்கங்கள் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்துதவுகின்றன. தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்காக வென்று நேரும் செலவில் 100-க்கு என்பதுக் கதிமான வீதாசாரத்தொகையை இரண்டு முதல் நான்கு வரைக்கும் வட்டிக்குக் கொடுக்கப் படுகின்றது. தனித்தனியாக வீடுகள் கட்டிக் கொள்ள விரும்பும் நபர்களுக்கும், பலர் சேர்ந்து கூட்டாக வீடுகள் கட்டிக்கொள்ளக் கோரும் நபர்களுக்கும் குறைந்த வட்டிக்கு முனிஸிபல் சங்கங்கள் பணம் கொடுத்து உதவியிருக்கின்றன. ஜர்மனியிலோ இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும், சேவிங்ஸ் பாங்குகளும் தம்முடைய மூலதனத்தில் ஒரு பாகத்தை, வீடுகள்கட்ட குறைந்த வட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்றக் கட்டாய உத்தரவு ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதமாகக் குறைந்த வட்டிக்குக் கிடைக்கும் தொகைகளெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் காரியத்திற்கே உபயோகிக்கப் படுகின்றன. நம்முடைய தேசத்திலோ ஒன்பது வட்டிக்குக் குறைந்து பணம் கிடைப்பதே கிடையாது. ஏழைகள் இன்னும் உயர்ந்த விகிதப்படி வட்டிகொடுக்க வேண்டியிருக்கின்றது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் குடிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் பொறுப்பை நகர முனிஸிபல் சங்கங்களே ஏற்றுக்கொள்ளுகின்றன. வீடுகள் கட்ட நேரும் செலவில் 100-க்கு பத்து வீதம் ரொக்கம் கொடுப்பவர்களுக்கும், 100-க்கு பத்து வீதம் மிச்சம் பிடித்துக் கொடுக்கக்கூடியவர்களுக்கும் "அல்ம்" கார்பொரேஷன் வீடுகள் கட்டிக்கொடுத்து உதவி செய்கின்றது.

மேல் நாடுகளில் போக்கு வரவு சாதனங்கள் இலவாகக் கிடைக்கின்றன. வீடுகள் கட்டிக்கொள்ள கருவிகளும் சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. தவிர ஜனங்கள் எல்லோரும் படித்தவர்களாக இருப்பதால் பல காரியங்களும் சௌகர்யமாகவும் இலகுவாகவும் நடைபெறுகின்றன.

வீடுகளின் கஷ்டத்தைஉணர்ந்தவர்களாய் அக்கஷ்டத்தை நிவர்த்திசெய்ய என்னசெய்யக்கூடு மென்றும் கூட்டுறவு சங்கங்கள் இவ்விஷயத்தில் என்ன விதமாய் உதவி புரியக்கூடுமென்றும் நாம் சிறிது கவனிப்போம்.

நம்முடைய நகரத்தின் குடிகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (1) குடிசைகளில் வசிப்பவர்கள். (2) மாதம் அறுபது ரூபாயும் அதற்குக் குறைந்தும் வருமானம் பெறுபவர்கள் (3) மாதம் அறுபது ரூபாய் முதல் அறுநூறு ரூபாய் வரைக்கும் வருமானம் பெறுவபர்கள். (4) மாதம் அறுநூறு ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெறுபவர்கள்.

மாதம் அறுநூறு ரூபாய்க்கு அதிகமான வருமானம் பெறும் கனவான் களுக்கு எவ்வித உதவியும் அவசியமில்லை. அவரவர்களே தத்தம் காரியங்களைப் பார்த்துக் கொள்ளக்கூடும். இதர மூன்று வகுப்பினர்களைப் பற்றி நாம் சிறிது கவனிப்போம்.

## குடிசைகளில் வசிப்பவர்கள்.

இவர்களைப் பற்றித்தான் நாம் அதிகமாகக் கவனிக்க வேண்டும். இவர்களுடைய கஷ்டங்களைப் பற்றித்தான் நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டும். இவர்களுடைய குடிசைகளில் சுகாதார மென்பதே சிறிதும் கிடையாது. விஷப்பூச்சிகளும், தொத்து நோய்களும் உற்பத்தியாவதற்கும், அதிகரிப்பதற்கும் இவைகள் தகுந்த இடங்களாக இருக்கின்றன. விஷபேதி, வைசூரி முதலிய விஷநோய்கள் ஒரு நகரத்தில் அல்லது பட்டணத்தில் காணப்படுமானல் அவ்வியாதி முதல் முதலில் குடிசைகளில் தான் உற்பத்தியாகி யிருக்கு மென்று நாம் உறுதியாகக் கூறலாம். பரோபகாரச் சிந்தையின் நோக்கத்துடன் கவனிக்காமற் போனாலும் சுகாதார நிலைமையை முன்னிட்டேனும் அவர்களுடைய நிலைமையை சீர் படுத்தச் செய்வது நம்முடைய கடமையாகும். சென்னையில் குடிசைகளில் வசிப்பவர்களெல்லோரும் சென்னையிலேயே நிலையாக வசிப்பவர்களாதலாலும், அவர்களெல்லோரும் ஒருங்கே சேர்ந்து ஒரே இடத்தில் வசிப்பதாலும் அவர்களுடைய நிலைமையை சீர்பெறச் செய்யவேண்டியதற்கு மார்க்கங்களும், வழிகளும், வெகு இலகுவாயும் சௌகர்யமாகவும் இருக்கின்றன. பிரத்தியட்சமாய் அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவிகளில் சிலவற்றை இங்கு கூறுகிறேன்.



1. குடிசையில் வசிப்பவர்கள் எங்கெங்கோ யிருக்கிறார்களோ அவ
ரவர்களுடைய விவரமான ஜாபிதா ஒன்று தயார்செய்து சென்னையிலுள்ள
ஜனசார சீர்திருத்த சபைகளுக்கு அனுப்பவேண்டும்.

2. ஜனசார சீர்திருத்த சபைகளினின் அங்கத்தினர்கள் விஷயங்களை
நன்கு அறிந்துகொண்டு குடிசையில் வாழும் துரதிர்ஷ்டமுள்ள
ஏழைகளுக்கு புத்தி கூறக்கூடும். ஒவ்வொரு இடத்திலும் ஒரு கூட்
டுறவு கட்டடசங்கத்தை ஸ்தாபிக்கவாவது அல்லது கூட்டுறவு நாணயச்
சங்கம் ஸ்தாபித்து கட்டடச்சங்க கிளையொன்று அந்த நாணயச் சங்
கத்தை ஒட்டியே ஸ்தாபிக்கவாவது ஏற்பாடு செய்யக்கூடும்.

3. அந்த இலாகாவிலுள்ள ஒவ்வொருவரும் அச்சங்கத்தில் மெம்
பராகும்படியாகச் செய்யவேண்டும். பங்குத்தொகை பன்னிரண்டு ரூபா
யாக நிர்ணயித்து நாற்பத்தெட்டு மாதத்தவணைகளில் வசூல்செய்யக் கூடி
யதாக ஏற்படுத்தவேண்டும். வீடுகள் கட்டவாவது, பழுதுபார்க்கவா
வது நான்கு வட்டிக்கு அதிகப்படாமல் கடன்கள் மெம்பர்களுக்குக்
கொடுக்கப்படவேண்டும். அப்படிக் கொடுக்கப்படும் கடன்கள் மாதத்
தவணைகள் இருபதில் வசூல்செய்யப்பட வேண்டும்.

குடிசையில் வாசஞ்செய்வோர்களின் நிலம் அவர்களுக்குச் சொந்த
மாக இல்லாதிருக்கும்பட்சத்தில் அந்நிலத்தை சங்கத்திற்காகவாங்கிக்கொ
டுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்து கொள்ளலாம்.

5. வீடுகள் கட்டப் படும்போது பாதைகள் விசாலமாக
இருக்கும்படியாகச் செய்யவேண்டும். மனுஷ்ய வாழ்க்கைக்கு அசௌ
கர்யமென்று தெரிகிற வீடுகளை இடித்துவிட்டு வேறு புது வீடு
களைக்கட்ட ஏற்பாடுசெய்யவேண்டும். பழுதுபார்க்கவேண்டிய வீடுகளை
யெல்லாம் பழுதுபார்த்துக் கொடுக்கவேண்டும். இவ்விஷயங்களை யெல்
லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு சொற்பப் பணத்தில் சௌகர்ய
மாகக் கட்டக்கூடிய வீட்டின் நமூனுக்களை கார்பொரேஷன் சபையார்
தயார்செய்து சங்கத்தாருக்குக் கொடுத்துதவவேண்டும்.

7. வீடுகள் கட்டவும் மராமத்துச் செய்யவும் நல்ல சாமான்களை
குறைந்த விலையில் வாங்குவதற்கு சங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

குறைந்த வட்டிக்குப் பணம் மெம்பர்களுக்குப் பட்வாடா செய்யப்
படும் வண்ணம் கவர்ன்மெண்டாரும் கார்பொரேஷன் சபையாரும்
மூன்று வட்டிக்கு அதிகப்படாத விகிதத்திற்கு பணம் வட்டிக்குக்
கொடுத்து உபகாரஞ் செய்யவேண்டும். இந்தத் தொகையை இருபது
வருஷங்களில் திருப்பிக் கொடுக்கக்கூடிய சௌகர்யமும் ஏற்படுத்த
வேண்டும்.

8. இதுதவிர, இவ்விஷயத்திற்காகவென்று கார்பொரேஷன் வருஷாவருஷம் இவ்வளவு கொடுத்து உதவி செய்வதென்றும் ஒரு நிர்ணயஞ் செய்துகொள்ளலாம்.

9. வீடுகட்ட அல்லது மராமத்து செய்யவென்று வாங்கப்படும் கடன்கள் இதரக் காரியங்களில் செலவழிந்துபோகா வண்ணம் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம்.

10. இத்தகைய இலாக்காக்களில் எத்தகைய செலவையும் கேட்காமல் தண்ணீர் குழாய்களும், (லான்டர்ன்) விளக்குகளும், (லாட்ரின்) கக்கூசுகளும் இதர சௌகர்யங்களும் கார்பொரேஷன் செய்துகொடுக்க வேண்டும்.

## மாதம் அறுபது ரூபாயும் அதற்குக் குறைந்தும் வருமானம் பெறுபவர்கள்.

இவ்வகுப்பினரில் சிலர் சென்னையிலேயே நிலையாக இருப்பவர்கள். சிலர் வயிற்றுப் பிழைப்புக்காக சென்னையில் தங்கியிருந்து பிறகு தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பிப்போய் விடுபவர்கள். இவ்வகுப்பினர் சென்னைநகர் முழுவதிலும் பரவியிருக்கிறார்கள். இச்சென்னை நகரின் குடிகளில் பெரும்பாலோர் இத்தகைய வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். இவர்களெல்லோரும் தங்கள் உத்தியோகசாலை எங்கேயிருக்கின்றதோ அதைச்சுற்றி இருக்கின்றார்கள். போக்குவரவு சாதனங்கள் சௌகரியமாகக் கிடையாததால் இவர்கள் தங்களுடைய உத்தியோக சாலைகளுக்கு வெகுதூரத்தில் இருக்கும்படியாகச் சொல்லுவதற்கியலாது. தவிரவும் இவர்கள் சென்னை நகரிலிருந்து வெளியே சுற்றுப் பக்கத்தில் வசித்தால் போதுமான வைத்திய உதவியும் கிடைக்காது. பள்ளிக்கூட சௌகரியங்களும் கிடையாது. இத்தகைய வகுப்பினர்களுடைய வரவு அவர்களுடைய குடும்பச்செலவிற்குமட்டும் போதுமான அளவாக இருக்கின்ற காரணத்தால் வீடுகளைச் சொந்தத்தில் வாங்கிக் கொள்ளவும் கட்டிக்கொள்ளவும் இவர்கள் பணத்தை செலவழிக்க எதிர் பார்க்க முடியாது. இத்தகைய வகுப்பினர்கள் பலர் ஒன்றாகச் சேர்ந்து வீடுகளை மொத்தத்தில் வாடகைக்கு வாங்கி அவரவர்களுக்கவசியமான பாகத்தை வைத்துக் கொள்ளுவதால் வீட்டு வாடகை குறையக்கூடும்.

சென்னை சென்ட்ரல் அர்பன் பாங்கு சங்கத்தாரும், திருவல்லிக் கேணி அர்பன்பாங்கு சங்கத்தாரும் தங்களுடைய க்ஷேமநிதித்தொகைகளையும், தங்களிடம் மீதியாகக் கிடைக்கக்கூடியத் தொகைகளையும் இத்தகைய வகுப்பினர்களுக்காக பெரிய வீடுகளை வாங்கி வாடகைக்கு விட்டு, கஷ்டப்படும் ஏழைகளுக்கு வேண்டிய உதவி செய்யலாம்.



1921 ம் வருஷம் ஜனசங்கியை (சென்ஸஸ்) கணக்கு எடுக்கப்படும்போது ஒவ்வொரு வீட்டில் எவ்வளவு அறைகள் இருக்கின்றனவென்றும், ஒவ்வொரு வீட்டில் எத்தனைக் குடும்பத்தார்கள் குடியிருக்கிறார்களென்றும் கணக்கெடுக்கப்படவேண்டும். அப்படிச் செய்யப்பட்டால் ஒரு வீட்டில் நெருக்கமாகக் குடியிருக்கக் கூடாதென்ற, நகர பரிபாலன முனிஸிபல் சட்டத்தின் 310-வது விதியை அமுலுக்குக் கொண்டுவர சௌகர்யமாக இருக்கும்.

## மாதம் அறுபது ரூபாய்க்கு மேற்பட்டும் அறுநூறு ரூபாய்க்குக் குறைந்தும் வருமானம் பெறுபவர்கள்.

இத்தகைய வகுப்பினர்களுக்குள் கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபிக்க அவசியமான சௌகரியங்கள் இருக்கின்றன. இத்தகைய வகுப்பினர்களுக்குக்கூட வீடுகள் கட்டிக்கொள்ள சௌகர்யமான ஜாகா கிடைப்பது கஷ்டம். கடைகளும், பள்ளிக்கூடங்களும், வைத்திய சாலைகளும் சமீபத்தில் இருக்கக்கூடியதாகவும், போக்கு வரவு சாதனங்கள் கிடைக்கும் இடங்களுக்குச் சமீபமாகவும் இடம் கிடைப்பது கொஞ்சம் கஷ்டந்தான். சென்னை நகருக்குச் சுற்றுப் பக்கங்களில் ஜாகா தெரிந்தெடுக்கப்பட்டாலும் பாதைகள் சௌகரியமாக இரா. போதுமான விளக்குச் சௌகர்யங்களும், ஜலவசதியும் கிடைக்காது. இரண்டொரு இடங்களில் பரீட்சை செய்து பார்த்ததில் எத்தகையபலனும் விளைந்ததாகத் தெரியவில்லை. உதாரணமாக மாம்பலத்தில் பரீட்சை செய்ததில் எவ்விதப் பிரயோசனமும் ஏற்படவில்லை. சென்னை நகரின் விஸ்தீரணத்தை விசாலிக்கச் செய்யும் விஷயத்தை சென்னைக் கார்பொரேஷன் சபையார் விசாரணை செய்து இவ்விஷயத்தில் ஊக்கங்கொண்டுள்ளவர்களுக்கு தம் விசாரணையின் முடிவை அனுப்பலாம். போக்குவரவு சாதனங்களை ஏற்படத்தக்கூடிய உதவிகளையும் சௌகர்யங்களையும் கார்பொரேஷன் சபையார் செய்யலாம். அப்படிச் செய்தால் சுற்றுப் பக்கத்து இடங்களுக்குப் போக ஜனங்களுக்கு ஒருவித தூண்டுதலும் ஏற்படக்கூடும். மாதம் முன்னூறு ரூபாயும் அதற்கு மேலும் வரும்படியுள்ளவர்கள், "நிலம் வாங்கும்" கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கூட்டுச் சீட்டுகளை ஏற்படுத்தி பிரதி மாதமும் சீட்டு எடுக்கும் நபர் அத்தொகையை வீடு கட்டுவதிலேயே செலவழிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூட்டுச் சீட்டுகளை ஸ்தாபிக்கலாம். ஒரு சீட்டின் மொத்தத் தொகை, ஒரு வீடு கட்ட சாதாரணமாக எவ்வளவுதொகைவேண்டியிருக்குமோ அவ்வளவாக நிர்ணயித்து, பிரதி மாதமும் ஒரு நபரால் எவ்வளவு

கொடுக்க முடியுமோ அதை உத்தேசித்து மாதத்தவணையின் தொகை நிர்ணயஞ்செய்யவேண்டும். உதாரணமாக ஒரு வீடு கட்ட 2000 ரூபாய் வேண்டுமென்று வைத்துக் கொள்ளுவோம். பிரதி மெம்பரும் மாதம் நாற்பது ரூபாய் ஈட்டமுடியுமானால் ஐம்பது மாதம் கட்டும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும். இம்மாதிரியாக ஐம்பது பேருக்கும் ஐம்பது மாதங்களுக்குள் நல்லபக்காக் கட்டமுள்ள வீடுகள்கட்டி முடிந்துவிடும்.

மேற்சொன்ன மாதிரிகள் எவற்றிலேனும் சௌகர்யமான விதத்தில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு ஜன நெருக்க வாழ்வைக் குறையச் செய்து சுகமடைவார்களென்று நம்புகிறேன்.

ஜன நெருக்கத்தால் கஷ்டப்படும் ஜனங்களின் துக்கங்களை ஒழிக்க கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்கக்கூடிய சிலமாதிரிகளையும் வழிகளையும் மேலே காட்டி யிருக்கிறேன். மேற்சொன்ன விஷயங்கள் பிரத்தியட்ச அமுலுக்கு வருவதன் முன் ஜனங்களுக்கு நாம் ஏராளமாக கல்வி போதனை செய்யவேண்டி யிருக்கின்றது. தவிரவும் இவ்விஷயமாகச் செய்யக்கூடிய பிரசுர வேலையும் அதிகமாக இருக்கின்றது. இவ்விஷயங்களுக்காக வென்று பம்பாயில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பம்பாய் கூட்டுறவு 'கட்டட சங்கம்', போல இங்கும் ஒரு சங்கம் ஏற்படவேண்டியது அவசியம். இத்தகைய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டால் தற்கால நிலைமையின் அவசியங்கள் எல்லாவற்றையும் விசாரணை செய்து கொண்டு விஷயங்களை விர்த்திசெய்ய என்ன மார்க்கங்கள் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் ஜனங்களுக்குப் போதிக்கக்கூடும். கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை பரவச் செய்யக்கூடும். கூட்டுறவு சம்பந்தமான புத்தகங்கள் கொண்ட ஒரு புத்தகசாலை ஏற்படுத்தக்கூடும். கூட்டுறவு இயக்கத்தின் மார்க்கத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள பிரியப்படுகிறவர்களுக்கு கூட்டுறவு சங்கங்களை எப்படி ஸ்தாபிப்பதென்றும் எப்படி நடத்துவதென்றும் போதிக்கக்கூடும்.

வீடு கட்டும் சாமான்களை குறைந்தவிலையில் வரவழைத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்வதுடன் வீடு கட்டும் சாமான்கள் கொண்டுவருவதற்கு ரெயில்வே வாடகை விகிதத்தை குறைத்துக் கொடுக்கவும் இச் சங்கம் ஏற்பாடுசெய்யக்கூடும்.

யுத்தம் இப்பொழுதுதான் நின்றிருக்கின்றது. கட்டடச்சாமான்களின் விலை இன்னும் குறையவில்லை. ஆனால் இன்னும் சில நாட்களுக்குள் கட்டடச் சாமான்கள் இலகுவாயும் குறைந்த விலைக்கும் கிடைக்கக்கூடும். அப்போது வீடு கட்டும் விஷயத்தை 'அதிக ஊக்கத்



துடனும், சிரத்தையுடனும் கவனிக்க வேண்டும். கட்டடச் சாமான்களின் விலைகள் குறைந்தவுடன் வீடுகட்டும் விஷயங்களைக் கவனிக்க வேண்டுமானால் இப்பொழுதே கட்டடச் சங்கங்களின் ஸ்தாபனத்தைப் பற்றி சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சங்கந்தான் (திருவல்லிக்கேணி அர்பன்பாங்கு) பழமையான சங்கம். தவிர அனுபவத்திலும் அதிகமாக முதிர்ந்துள்ளது. இவ்விஷயத்தில் நம்முடைய சங்கந்தான் வழி காட்டியாக நின்று வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

---

# கூட்டுறவும் பள்ளிக்கூட மாணவர்களும்.

[சென்னை இராயப்பேட்டை வெஸ்லீ கலாசாலையின் போதகாசிரியரான ஸ்ரீமான். கே. பார்த்தசாரதி ஐயங்கார். அவர்கள் B. A. ஆங்கிலத்தில் எழுதிய தின் மொழி பெயர்ப்பு].

பள்ளிக்கூட மாணவர்களுக்கும் கலாசாலை மாணவர்களுக்கும் கூட்டுற விஷயங்களில் போதனை செய்ய தற்காலம் அநேக மாகாணங்களில் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அவர்களுக்கு பிரசங்கங்கள் மூல்யமாய் போதனை செய்து வருவதல்லாமல் அவர்களுக்காகவென்று பிரத்தியேகக் கூட்டுறவு சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய மாகாணங்களில் அநேகக் கலா சாலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டுள்ளனவென்று நாம் அறிகிறோம். நாகப்பூரிலுள்ள கவர்ன்மெண்டார்கலாசாலையிலும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அமிரிட்ஸாரிலுள்ள ஸீக்கியர்களின் 'சால்ஸா' கலாசாலையிலுள்ள சங்கம் செய்யும் வெகு திருப்திகரமான வேலையைப்பற்றி செப்டம்பர் மாதத்தின் பம்பாய் கூட்டுத்தொழில் வர்த்தமானியில் முழுவிவரமும் கொடுக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள கலாசாலை மாணவர்களின் பிரயோசனத்திற்காக வென்று சமீபத்தில் இரண்டு பண்டகசாலைச் சங்கங்கள் (ஸ்டோர்ஸ்) ஸ்தாபிக்கப்பட்டன. இன்னும் இத்தகையச் சங்கங்கள் பல ஸ்தாபிக்கவும் இத்தகையச் சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக அணைத்து ஒரு சர்வகலாசாலை ஸ்டோர் ஸ்தாபிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இச்சர்வகலாசாலை ஸ்டோர் சங்கம், தனக்குள் அணைக்கப்பட்டிருக்கிற சங்கங்கள் எல்லாவற்றினுடையவும் உபயோகத்திற்காக கூட்டாக புத்தகங்களும் இதர ஸ்டேஷனரி சாமான்களும் வாங்கி அணைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு கொடுத்துவரும். பள்ளிக்கூடமாணவர்களுக் கவசியமான சாமான்களை கூட்டாகக் குறைந்த விலையில் வாங்கி மாணவர்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுவதற்காக

வென்று பம்பாய் மாகாணத்தில் கூட்டுறவு மாணவர் சங்கங்கள் 200
இருப்பதாக நாம் அறிகிறோம். மாணவர்கள் வயதடைந்தவர்களாக (மே
ஜர்களாக) இல்லாமல் மைனர்களாகவே இருப்பதால் இச்சங்கங்களெல்
லாம் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர்செய்து கொள்ளக் கூடா
தனவாக இருக்கின்றன. ஆயினும் இச்சங்கங்களெல்லாம் வெகு திருப்தி
கரமாகவும் நன்றாகவும் வேலை செய்வதாகத் தெரியவருகின்றது.

நம்முடைய மாகாணத்தில் இவ்விஷயத்தில் எத்தகைய முயற்சியும்
செய்யப்படவில்லையே யென்று விசனிக்க வேண்டியிருக்கின்றது.
இந்தியா முழுவதிலுமுள்ள கூட்டுறவு ஸ்டோர்களைக் காட்டிலும் பெரிய
ஸ்டோர் சென்னையில்தான் இருக்கின்றது. சென்னையின் மாணவர்
கள் கூட்டம் அதிகமாயுள்ள இடத்தில் இந்த ஸ்டோர் இருக்கின்றது.
தவிரவும் இந்த பண்டகசாலையில், ஊக்கமும் சிரத்தையும் உள்ள வாலிப
உபாத்திமார்கள் பலர் இருக்கிறார்கள். இவ்வளவெல்லாம் இருந்தும்
மாணவர்களுக்குள் ஐக்கிய முயற்சியை ஸ்தாபிக்க பிரத்தியட்சமாய் எவ்
வித முயற்சியும் செய்யப்படவில்லை; மாணவர்களுக்காக வென்று சென்
னை இராஜதானி முழுவதிலும் நமக்குத் தெரிந்த வரையில் ஒரே ஒரு
சங்கந்தான் இருக்கின்றது. இச்சங்கமும் தென்கன்னடம் ஜில்லாவில்
பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஸ்டேஷனரி சாமான்கள் வாங்கி விற்பனை
செய்வதற்காக வென்று ஏற்பட்டுள்ளது. பம்பாய் மாகாணத்திலுள்ள
சங்கத்தின் மாதிரியில்தான் இச்சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது

நம் மாகாணத்தில் மாணவர்களுக்குள் கூட்டுறவு இயக்கம்
பரவாததற்குக் காரணங்கள் பலவற்றுள், மாணவர்கள் தங்களு
டைய பள்ளிக்கூட பாடங்களைத் தவிர கூட்டுறவுப் படிப்பானாலும் சரி,
இராஜ்ய சம்பந்தமான படிப்பானாலுஞ் சரி அல்லது வேறெவ்விதபடிப்பா
னாலும்சரி இதரபடிப்புகளில் தலையிடக் கூடாதென்று வேரூன்றியுள்ள
எண்ணமும் ஒன்றாக இருக்கலாம். இவ்விதமாகஎண்ணங்கொண்டுள்ளவ
ர்கள்கூட பள்ளிக்கூட புத்தகங்களுடன் பாடபுத்தமாககூட்டுறவு இயக்க
சம்பந்தமான புத்தகங்களைவாசிப்பதில் தடைசொல்லுகிறதில்லை. ஆனால்
பிரத்தியட்சமாய் சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்து வேலைநடத்தி அனுப
வம் பெறுவதற்குமட்டுமே ஆட்சேபனைச் செய்கிறார்கள். இவர்கள் இப்ப
டிக் கூறுவது வெகுகுறுகிய நோக்கத்துடன் சொல்லுகிறார்க ளென்றுச்
சொல்லலாம். இவர்கள் ஆட்சேபனையை சாரணச்சிறுவர்கள் சங்கத்
திற்கும்(பாய் ஸ்கௌட்ஸ்சங்கம்) ஜனசார சீர்திருத்தச் சங்கங்களுக்கும்
பந்தாட்டம் முதலிய விளை யாட்டுச்சங்கங்களுக்கும் கல்விப் பயற்சிச் சங்
கங்களுக்கும் (டிபேடிங் சொஸைடிகள்) சொல்லக்கூடுமே. இத்தகையச்
சங்கங்களினால் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பலவாறாக



இருக்கின்றன. இதுகாரணம்பற்றி இத்தகையச்சங்கங்களிலெல்லாம்மாண
வர்கள் ஊக்கமும், சிரத்தையும் காட்டும்படிக்கு அநுமதிக்கொடுக்க வேண்
டும். ஆனால்இவ்விஷயங்களிலும் ஓர்வரம்புஏற்படுத்தி தடைசெய்யவேண்
டியது அவசியந்தான். மாணவனின் படிப்பு விஷயம் கெட்டுப்போவதாகத்
தெரிந்தால் அச்சமயத்தில் தடைசெய்யலா மென்பதுதான் நம்முடைய
அபிப்பிராயம். கூட்டுறவு இயக்கத்தை, புத்தகமூலமாய் அறியும் விஷயத்
தில் நம்முடைய மாகாணமாணவர்கள் இதரமாகாண மாணவர்களுக்குப்
பின் னடைந்தில்லை. காலையில் காப்பிக்குடிக்கும் வழக்கம் எப்படி நம்மா
ணவர்களுக்கு கைவிடக்கூடாத அத்தியாவசியமானதாக இருகின்றதோ
அதேவிதமாகப் பத்திரிகைகளும் நம்மாணவர்களுக்காய்விட்டன. கூட்
டுறவுக் கான்பிரன்ஸகள் அடிக்கடி நேர்வதால் அவ்விஷயங்களும், பத்தி
ரிகைகளில் கூட்டுறவு சம்பந்தமாய் எழுதப்படும் தலையங்கங்களும் உப
தலையங்கங்களும் மாணவர்களுக்கு அதிகப்பிரயோசனத்தைக் கொடுத்து
வருகின்றன. பொருளாதார விஷயங்களை (எக்கனமிக்ஸ்) வாசிக்கும் மாண
வர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் படித்து வருகின்றனர். தவிர மிஸ்
டர் ஜில்பர்ட்டு ஸிலேடர்துரையவர்கள் முயற்சியாலும், ஸ்ரீமான் T. S.
சுப்ரமண்ய ஐயரவர்கள் முயற்சியாலும் பி. ஏ. ஆனர்ஸ் பரீட்சைக்கு
வாசிக்கும் மாணவர்கள் பலர்கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி விசேஷமா
கப் பயின்றுவருகிறார்கள். இருந்தாலும் பள்ளிக்கூடங்களிலும்; கலாசாலை
களிலும் கூட்டுறவு இயக்கம் அனுபவமுறையில் பிரத்தியட்சமாய்ப்
போதிக்கும் வண்ணம் சங்கங்கள் சீக்கிரம் ஸ்தாபிக்கப் படவேண்டியது
அவசியம்.

இவ்விஷயத்தில் நாம் எல்லோரும் உடனே ஊக்கஞ்செலுத்தி சிரத்
தை யெடுத்துக் கொள்ள வேண்டியதற்குக் காரணங்கள் மூன்று இருக்
கின்றன.

முதல்காரணம்:—எல்லாவிஷயங்களையும் உள்ளடக்கிக் கொண்
டிருக்கும் இராஜ்ய சம்பந்தமான விஷயம். நமக்கெல்லோருக்கும் பொ
றுப்பான ஆட்சிக் கொடுப்பதே தங்களுடைய நோக்கமென்பதாக
மாட்சிமைதங்கிய அரசாங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள். அப்பொறுப்
பான ஆட்சி எவ்வளவு சீக்கிரம் கிடைக்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரம்
அடைய வேண்டுமென்பதாக நாமெல் லோரும் ஆவலாக இருக்கிறோம்.
நம்முடையகாரியத்தில் முக்கியமானத் தடையாக நிற்கப் போவது—சுய
நிர்வாக ஆட்சிச்சபைகளில் போதுமானப் பழக்கமும் அனுபவமும் இல்
லாததே. சுயநிர்வாகத்தில் பழக்கமும் அனுபவமும் பெறுவதற்கு கூட்
டுறவு சங்கங்களைப் போன்ற சிலாக்கியமான இடம் வேறொன்றும் கிடை
யாது. இச்சங்கங்களில்தான் சுயநிர்வாகம் என்பது முழுவதும் நிலைத்

துள்ளது. குடியாட்சிச் சங்கங்களில் இவைகள் முதன்மையானவை. இச்
சங்கங்களில் மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் சமபாகமான ஓட்டொன்
உண்டு. பஞ்சாயத்து மெம்பர்களைத்தெரிந்தெடுப்பதிலும் சங்கத்தின் விஷ
யங்களைச் சரிவர நிர்வகிப்பதிலும் மெம்பர் தன்னுடையஓட்டின் பாத்திய
த்தை வெகுஜாக்கிரதையாகவும், புத்திசாலித்தனமாகவும் உபயோகித்து
அனுபவமடைந்து வருகிறான். எவன்நல்லவன் எவன்கெட்டவன் என்ப
தையும், எவன் சாமர்த்தியவான் எவன் கெட்டிக்காரன் என்பதையும்
எவன் வார்த்தையில் நம்பிக்கைவைக்கலா மென்பதையும், எவன்
சுறுசுறுப்பாய் வேலை செய்வா னென்பதையும் மெம்பர் அறிந்து கொள்
ளுகிறான். வீண்வார்த்தைகள் பேசி வாய்பந்தல் போடுகிறவர்களைக்கண்டு
மயங்கிவிடாமல் அவன்பக்கம் ஓட்டுக் கொடுக்கவோ சார்பாகப் பேச
வோ கண்டிப்பாய் மறுத்து விடுகிறான். குடியரசுக் சபைகளி
லும் பொறுப்பான ஆட்சிச் சபைகளிலும் ஒருவன் தனக்குள்ள
ஓட்டுப் பாத்தியத்தை சரிவர உபயோகிக்க கற்றுக்கொள்ள
வேண்டியதவசியம். ஒருவன் தனக்குள்ள ஓட்டை சரிவர உபயோ
கிப்பதில், கூட்டுறவு சங்கங்கள் பழக்குவதுபோல் இதர சங்கங்கள் பழக்
குவதில்லை. ஒரு கூட்டுறவு சங்கத்தில் ஏற்படும் பயிற்சிக்கும் கல்விப்ப
யிற்சிக்காக வென்று ஸ்தாபிக்கப்படும் சங்கத்தில் ஏற்படும் பயிற்சிக்கும்
வித்தியாசமுண்டு. அஃதென்ன வெனில் கல்விப்பயிற்சிக்காக வென்று
ஸ்தாபனமாகும் டிபேடிங் (Debating) சொஸைடிகளில் யாதொரு
பொறுப்போடும் பேசவேண்டுமென்பதே கிடையாது. கூட்டுறவு சங்கங்
களில் விவகாரம் முழுவதும் பண சம்பந்தமான லேவாதேவி விவகார
மாதலால் அதில் பழகுகிறவர்களுக்கும் சம்பந்தப்படுகிறவர்களுக்கும்
பொறுப்பு ஏற்படுகின்றது. யாதொருபிரதிபிரயோசனமும் எதிர்பாராமல்
ஜனங்களுக்காக உழைக்கவேண்டு மென்னும் சன்மார்க்கத்தை தினந்
தோறும் பஞ்சாயத்தார் உணர்ந்து கொள்ளுகிறார்கள். பிரதி பிரயோச
னத்தை எதிர்பாராமல் பொது ஜனங்களுக்காக உழைக்கவேண்டுமென்
பதை அநேகர் உணர்ந்துகொள்ளாத வரையில் சுயநிர்வாகச்சபைகள் அல்
லது சுய நிர்வாகக் காரியங்கள் ஒரு தேசத்தில் முன்னேற்ற மடைய
மாட்டா. இன்றைக்கு மாணவர்களாக இருப்பவர்கள் நாளைய தினம் இரா
ஜீவிய விஷயங்களில் உழைப்பவர்களாகவும், இராஜீய விஷயங்களில்
தலைவர்களாக இருக்கவும் நேரும். பொதுஜனக் காரியங்களைப்பற்றி பிற
ருக்கு எப்படி எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில் மட்டுமல்ல பொது
ஜனக்காரியங்களில் உழைப்பவர்களில் முதன்மையாகவும், உதாரணமாக
வும் விளங்கும்படியாக நம்முடைய மாணவர்கள் பழக்கப்படவேண்டும்.
இவ்விஷயத்தின் முக்கியம் அதிகமாக இருத்தலால்தான் 1917ம் வரு
ஷம் ஆகஸ்டுமாதம் 20ந் தேதி பார்லிமென்டில் சொல்லப்பட்டது முதற்



கொண்டுமோகான தலைவர்கள் முதல் இதர அதிகாரிகள் உள்பட கூட்டுறவு
சம்பந்தமாகவும், சீர்திருத்தங்கள் சம்பந்தமாகவும், பேசும்போ தெல்லாம்
இவ்விஷயத்தையே முக்கியமாக வற்புறுத்திக் கொண்டுவருகிறார்கள்.

மற்றொரு காரணம் என்ன வெனில் இவ்வியக்கத்தில் உழைப்பவர்
களில் படிப்பாளிகளின் அவசியம் அதிகமாக வேண்டியிருக்கிறதென்
பது. ஒவ்வொருமாகாணத்திலும் சங்கங்களின் தொகை அதிகரித்துக்
கொண்டேவருகின்றது. ஆனால் கூட்டுறவு இயக்கத்தில் உழைக்கும் உத்
தியோகஸ்தரல்லாதார் தொகை அவ்வளவுக் கவ்வளவு அதிகரித்து வர
வில்லை. கூட்டுறவு இயக்கத்தை பரவச் செய்வதற்தாக மட்டுமல்ல, இருக்
கும் சங்கங்களை மேற்பார்வை பார்த்து வரவும் இருக்கும் சங்கங்களில்
வேலைசெய்யவும், சங்கங்களில் தற்காலம் இருக்கும் தீமைகளையும் ஒழுங்
கீனங்களையும் விலக்கவும், ஜனங்களின் தேவை அதிகமாயிருக்கின்றது.
இவ்விஷயத்திற்கு வேண்டிய ஜனங்களின் தேவைக்காக நாம் கலா சாலை
களில்தான் தேடவேண்டும்.

மேற் சொன்ன காரணங்களெல்லாவற்றையும்விட முக்கியக் கார
ணம் என்னவென்றால் கூட்டுறவு இயக்கத்தில் மாணவர்கள் பழகுவதால்
மாணவர்களுக்கே ஏராளமான நன்மை உண்டாகின்றது. தற்காலமாணவர்
கள் சிக்கனமென்பதை முற்றும் மறந்திருக்கிறார்கள். சென்னையிலும்
திரிச்சிராப்பள்ளியிலும் வேறிடங்களிலும் மாணவர்கள், தங்களுடைய
பெற்றோர்களுடைய நிலைமையை மீறின அந்தஸ்தில் பணத்தைச் செல
வழிக்கிறார்கள். உதாரணமாக சென்னையில் ஹாஸ்டலில் இருக்கும் ஒரு
மாணவனையாவது அல்லது வேறெங்கேயாவது அறை வைத்துக் கொண்டு
ஹோட்டலில் சாப்பிடும் மாணவனையாவது கவனித்துப்பார்ப்போம். அவ
னுக்குக் காலையில் காப்பி அவசியமானதாய்விட்டது. வெறும் காப்பியுடன்
நில்லாமல் இதரதின்பண்டங்களும், பட்சணங்களும் அல்லது பலகாரங்
களும் சாப்பிடுகிறான். கலாசாலைக்கு நேரத்துடன்போவதற்காக ஒன்பது
மணிக்கெல்லாம் தன்னுடைய காலைப்போஜனத்தைச் சாப்பிடுகிறான்.
காலையில் காப்பியும் பலகாரமும் சாப்பிட்டிருப்பதால் ஒன்பது மணிக்கு
அதிகப் பசியெடுப்பதில்லை. அவசியமான சாப்பாடு சாப்பிடுவதற்கில்லாமற்
போய்விடுகின்றது. இதுகாரணம் பற்றி பிற்பகலில் அதிக பசியெடுப்பதால்
ஹாஸ்டலிலும் ஹோடலிலும் வழக்கப் பிரகாரம் கொடுக்கும் சிற்றுண்டி
யுடன் சொந்தச் செலவிலும் கொஞ்சம் வாங்கிச் சாப்பிடும்படி நேருகின்
றது. பிறகு கலாசாலையிலிருந்து வந்தவுடன் மாலையில் ஒரு கோப்பை
காப்பிக்குடிக்கவேண்டியது அவசிய மென நினைக்கிறான். வெறும் காப்பி
குடிக்கும் வழக்கமில்லாததால் கூட சிலபட்சணகளாவது பலகாரங்களா
வது சாப்பிடவேண்டியேற்படுகின்றது. ஹோட்டல் காரர்களும் மாதத்த

வணைக்குக் கடன் கொடுப்பதால் விஷயங்களெல்லாம் எளிதில் நடை
பெற்று விடுகின்றன. மாணவன் தனக்குச் செலவழிப்பதைவிட தன்னு
டைய நண்பர்களுக்கும், சிநேகிதர்களுக்கும் தகுந்தமாதிரியில் செலவழிக்க
வேண்டியிருக்கின்றது. ஹாஸ்டலிலும் ஹோட்டலிலும் கொடுக்கப்
படும் உணவை சரிவரச் சாப்பிடாமல் காப்பிக் கிளப்புகளில் ஏராளமான
பணத்தைச் செலவழிக்கிறார்கள். இவைகள் தவிர பயாஸ்கோப் கம்
பெனிகளுக்கும் நாடகச் சாலைகளுக்கும், இதர விளையாட்டுகளுக்கும்
பணம் செலவழிக்கிறார்கள். சில விஷயங்களுக்கு சந்தாவும் கொடுக்க
நேருகின்றது. ஏழையாயுள்ளவர்கள் ஏழ்மையை ஒப்புக்கொண்டு சிக்
கனமாய் நடப்பதற்குப்பதிலாக கௌரவமென்னும் வீண் போர்வையை
போற்றிக்கொண்டு சிக்கனத்தை மறந்து, வீண் செலவு செய்கிறார்கள்.
மாணவன் தன்னுடைய பெற்றோர்களை அல்லது ' தன்னுடைய மாம
னாரை பணத்திற்குக் கஷ்டப்படுத்துகிறான். மாப்பிள்ளையின் மனவருத்
தத்தைக்கொள்ள முடியாதவராய் ' மாமனார் எவ்விதத்திலும் பணத்தை
அனுப்பிவிடுகிறார். ஒருவர் மகன் அல்லது மாப்பிள்ளை ஒரு கலாசாலை
யில் படிப்பதென்றால் இக்காலத்தில் அவர் குடும்பத்தாருக்கு எவ்வளவு
செலவாகின்றதென்றுச் சொல்லமுடியுமோ? ஆனால் ஒரு மாணவன்
தன் குடும்பத்தார் படுங்கஷ்டங்களைச் சிறிதேனும் கருதுவதில்லை, பொ
றுட்படுத்துவதுமில்லை. தன்னால் கூடுமான காலத்தில் செலவழித்துச்
சுகம் பெறவேண்டுமென்று ஒரு மாணவன் சாதாரணமாக எண்ணி
யிருக்கிறான். தன்னுடைய சுகத்திற்காக யார் யார் கஷ்டப்படுகிறார்க
ளென்பதை மாணவன் சிறிதும் கவனிப்பதுமில்லை. கவலைகொள்ளு
வது மில்லை. சுகத்தை அனுபவிக்கும் பாக்கியமுள்ள மாணவர்கள் சுகத்
தை அனுபவிப்பதை ஒருவரும் தடுக்கவுமில்லை. பொறாமை கொள்ளவு
மில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் மாணவர்கள் தம்மனதில்
பதியச் செய்யவேண்டும்.

மாணவர்களின் நெருங்கிய பந்துக்களும், உறவினர்களும் வயிற்றுச்
சாப்பாட்டிற்கும், அவசியமானவைகளுக்கும் கஷ்டப்படும்போது மாண
வர்கள் சிற்றுண்டிகளிலும், இதரச் சுகங்களிலும் பணம் செலவழிப்பதை
விட்டொழிக்கும்படியாக போதிக்கப்படவேண்டும்.

மாணவர்கள் பலர் ஒன்றாகச் சேர்ந்து தமக்குள் நடத்தும் சாப்
பாட்டு வசதியைப்போய்ப்பார்ப்போம். தினந்தோறும் அங்கே வீணாகும்
நெய்க்கும், உணவுப் பொருள்களுக்கும் கணக்குக் கிடையாது. அங்கு
நடக்கும் வீண் செலவுகளையும் நம்முடைய சொந்த வீடுகளில் நடக்கும்
சிக்கனத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் வீண் செலவு செய்யப்படுவ
தாகச் சொல்லுவதெல்லாம் உண்மையென்று விளங்கும். என்னுடைய



நண்பரொருவருடைய அனுபவத்தை இங்கே சொல்லுகிறேன். மாணவர்
கள் தாமாகச்சேர்ந்து நடத்தும் சாப்பாட்டு விடுதியில் ஒருநாள் காலை
போஜனத்திற்கு வரும்படியாக என் நண்பர் அழைக்கப்பட்டிருந்தார்.
அவர் அங்கு சென்றபோது அங்கு நடந்த விருந்தைக் கண்டு அவரடை
ந்த ஆச்சர்யத்திற்கு அளவில்லை. அவர் விசாரணை செய்தபோது பிரதி
ஞாயிற்றுக்கிழமைகளிலும் அப்படியே நடைபெறுவதாக அவருக்குச்
சொல்லப்பட்டது. இத்தகைய விருந்துச் சப்பாடுகளில் பிரதிமாதமும்
மாணவன் ஒவ்வொருவனுக்கும் மாதம் மூன்று அல்லது நான்கு ரூபாய்
அதிகச் சிலவு ஏற்படுகின்றது. இத்தகைய அனாவஸ்யச் சிலவுகளை
ஒழித்து சிக்கனத்தைப் போதிக்கக்கூடியது கூட்டுறவு இயக்கத்தைத்
தவிர வேறொன்றுங்கிடையாது. கூட்டுறவு இயக்கத்தில்தான் சிக்
கனம், சுயஉதவி கூட்டுறவு என்னும் முக்கிய அம்சங்கள் போதிக்கப்
படுகின்றன.

வருஷந்தோறும் ஒவ்வொரு கலாசாலை மாணவர்களும், ஹைஸ்கூல்
மாணவர்களும் புத்தகங்களும், காகிதம் பென்ஸல் பேனா, முதலிய ஸ்
டேஷனரி சமான்கள் வாங்குவதிலும் செலவழிக்கும் ஏராளமானத் தொ
கையைக் கவனிப்போமானால் புத்தக வியாபாரிகளும் ஸ்டேஷனரி வியா
பாரிகளும் அடையும் அபரிமிதமான இலாபம் எவ்வளவென்றுத் தெ
ரியவரும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கம்
ஸ்தாபிக்கப்பட்டு பள்ளிக்கூட மாணவர்களுக்கு வேண்டியப் புத்தகங்
களும், இதர சமான்களும் மொத்தமாக வாங்கப்பட்டால் கடைகளில்
கிடைக்கக்கூடிய விலைக்கு 100-க்கு 20-25 குறைவாக மாணவர்கள் அ
டையக்கூடும். இந்த இலாபம் முழுவதும் பல உபயோககரமான காரியங்
களுக்குப் பிரயோஜனப் படுத்தலாம். ஏழைமாணவர்களுக்கு புத்தகங்கள்
வாங்கவும் பரீட்சைக்குப் பணம் கட்டவும் கடன்கொடுக்கலாம். பள்ளிக்
கூட ஹாஸ்டர்கள் உள்ள இடங்களிலெல்லாம் ஒரு ஸ்டோர் சொஸைடி
(பண்டகசாலை) ஏற்படுத்தலாம். ஹாஸ்டல்களுக்கு வேண்டிய சாமான்
கள் குறைந்த விலையில் கிடைப்பதுடன் சரியான அளவாகவும் நிறை
யாகவும் முறைந்த விலைக்கும் கிடைக்கக்கூடும்.

பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் புத்தக சங்கங்களும்,
சௌகர்யமான இடங்களில் ஸ்டோர்களும் ஸ்தாபிக்க பிரயத்தனப் பட
வேண்டுமென பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயர்களையும் கலாசாலை
பிரின்ஸ்பால்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

# கூட்டுறவு வைத்திய சாலைகளின் அவசியம்

[ஸ்ரீமான் வி. என். கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள் எம். ஏ. எல்., டி.
கோயமுத்தூர் ஜில்லா பாங்கின் காரியதரிசி.]

பிரிட்டிஷ் இந்தியாவில் இப்போது ஏற்பட்டுள்ள வைத்திய சாலைகளெல்லாம் மேல்நாட்டின் மாதிரியிலேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்த வைத்திய சாலைகளின் கட்டடங்களும் மேல்நாட்டின் மாதிரியில் அமைக்கப்பட்டுள்ளன. வைத்திய சாலைகளில் வழங்கப்படும் சாமான்களும் ஆயுதங்களும் மேல்நாட்டுச் சாமான்கள். வைத்திய நிபுணர்களும் நம்மவர்களானாலும் மேல்நாட்டுமுறையில் பழக்கப்பட்டவர்கள். நம்புராதன முறைகளில் வெறுப்புக்கொண்டவர்கள். மேல்நாட்டு முறைப்படி கூறப்படும் பத்திய முறைகளோ வியாதிஸ்தரின் நிலைமையையும் அவனுடைய ஏழ்மையையும் சௌகர்யங்களையும் சிறிதேனும் கவனிப்பதில்லை. எல்லோருக்கும் ஒரே விதமாய்க் கூறப்படுகின்றன. இவைகளெல்லாம் அற்ப விஷயங்களானாலும் சில சமயங்களில் இவைகளின் கஷ்டமும் உபத்திரவமும் ஏராளமாக இருக்கின்றது.

முக்கியமும் பெரிதானவும் கஷ்டம் என்னவென்றால் இத்தகைய உதவிகூட அநேகருக்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. கவர்ன்மெண்டாரும், லோகல் போர்டார்களும் சென்ற நாற்பதுவருஷ காலத்திற்கதிகமாய் ஏற்பாடுகள் செய்துவந்தும், ஏற்பட்டுள்ள ஆஸ்பத்திரிகளும் வைத்திய சாலைகளும் வெகுசொற்பம். அவைகள் ஸ்தாபிக்கப்படில்லாத கிராமங்களும், பட்டணங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடங்களிற்கூட அவைகள் செய்துவரும் உதவி போதுமானதாக இல்லை. வைத்திய சாலைகள் உள்ள இடங்களிலும் வைத்திய உதவி அடைய முடியாமல் கஷ்டப்படும் ஏழைகளின் தொகை சொற்பமல்ல.

ஏழைகள்கூட சொற்பத் தொகையில் வைத்திய உதவி அடையும்படியாக என்ன செய்யக் கூடுமென்பதை நாம் இப்போது கவனிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் சுய உதவியைக் கைக்கொள்ள வேண்டுமென்ற பழயகதையைத்தான் சற்று நூதனமாதிரியில் திருப்பிச்சொல்ல வேண்டியிருக்கின்றது. இராஜீய விஷயங்களிலும், ஜனசார சீர்திருத்த விஷயங்களிலும் மதவிஷயங்களிலும் இன்னும் இவைபோன்ற இதர விஷயங்களிலும், நமக்கு உதவி அவசியமென்று ஏற்படுகிறபோதும் உதவி அவசியமான அளவுமட்டுமே நாம் அடைகிறோம். சுய உதவிதான் முதன் முதலில் அவசியமானது. சுய உதவியே தான் பின்னும் அவசியமானது. இதர விஷயங்களில் சுய உதவியின் அவசியத்தைக் கண்டு



கொள்வதைக் காட்டிலும் வைத்திய சாலைகளின் நியமன விஷயத்தில் சுய உதவியின் அவசியத்தையும் முக்கியத்தையும் வெகு எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும். இவ்விஷயத்தில் நாம் செய்யவேண்டியதெல்லாம் விஷயத்தை ஆரம்பஞ் செய்யவேண்டியது மட்டுமே. இவ்விஷயத்தில் நிர்வாகஞ் செய்ய ஏராளமான சாமர்த்தியமும் திறமையும் வேண்டுமென்பதும் அவசியமல்ல. ஏராளமான பண உதவி வேண்டுமென்பதும் அவசியமல்ல.

தற்காலம் சுமார் ஆறு அல்லது அதற்கதிகமான கூட்டுறவு ஸ்டோர் சங்கங்கள் வேலைசெய்து கொண்டிருக்கின்றன. இச்சங்கங்கள் விஷயங்களை ஆரம்பஞ்செய்து சொற்ப விலையில் மிகத் திறமான வைத்திய உதவி கிடைக்கக் கூடுமென்பதை ஜனங்களுக்குக் காட்டவேண்டும். ஸ்டோர் சங்கங்களை நடத்துவதிலுள்ள கஷ்ட நிஷ்டுரங்களை நான் நன்கு அறிவேன். சென்ற பதினான்கு வருஷங்களுக்குள் ஸ்டோர் சங்கங்கள் வெகு சொற்பமாகத்தான் விர்த்தியடைந்திருக்கின்றன. ஸ்டோர் சங்கங்கள் விர்த்தியடையாத காரணத்தை முன்னிட்டு, வைத்திய சங்கங்களின் ஸ்தாபனத்தில் நாம் அடையக் கூடிய நன்மையையும் பிரயோசனத்தையும் வீணாக்கிக் கொள்ளுவது தகுதியல்ல. ஸ்டோர் சங்கங்கள் சரிவர நடத்தப்பட்டால் அவைகளினால் ஏற்படக்கூடிய நன்மைகள் அபரிமிதமாக இருக்கின்றன. ஆனால் இதுகாறும் ஸ்டோர் சங்கங்கள் விர்த்தியடையாததற்குக் காரணங்கள் மிகவும் சாதாரணமானவை. ஸ்டோர் சங்கங்களை நடத்துவதற்குத் தலையிட்டவர்களுக்கு அம்மார்க்கத்தில் போதுமானக் கல்வியும் அனுபவமும் இருக்கவில்லை. நாணயச் சங்கங்கள் அவ்வளவு ஸ்டோர் சங்கங்கள் விர்த்தியாகவில்லை யென்பது உண்மையே. நாணயச் சங்கங்களின் ஸ்தாபனத்திற்காக கவர்ன்மெண்டு டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரும் இதர உத்தியோகஸ்தரல்லாரும் சிரமப்பட்டு உழைத்ததுபோல் ஸ்டோர்ஸ் சங்கங்கள் விஷயமாக உழைக்கவில்லை. நாணயச் சங்கங்கள்விஷயமாக இவ்வளவுபாடுபட்டு உழைத்திருக்க, நாணயச்சங்கங்களினும் அதிகக் கடுமையாகவும் கஷ்டமாகவும்இருக்கும் ஸ்டோர்ஸ் சங்கங்கள் விஷயத்தில் சிறிதேனும் சிரத்தைக் காட்டப்படவில்லை. ஸ்டோர்ஸ் சங்கங்கள் விஷயத்தில். தற்கால ரிஜிஸ்தரார் சிறிது கவனஞ் செலுத்த ஆரம்பிக்கவே ஸ்டோர்ஸ் சங்கங்கள் விஷயத்தில் டிபார்ட்மெண்டார் தயவு சிறிது பிறந்திருக்கிறதென்றுச் சொல்லலாம்.

ஸ்டோர்ஸ் சங்கங்கள் இதுகாறும் விர்த்தியடையவில்லை யென்றால் அவைகள் விர்த்தியடைவதற்கு ஏற்ற மார்க்கங்களை நாங்கள் தேடவேண்டியது அத்தியாவஸ்யமாகும். எளியவர்கள்கூட சொற்பவிலையில் திறமான மருந்துகளை அடையும் மார்க்கத்தைக் கண்டுபிடிப் போமாகில் ஸ்டோர்ஸ் சங்கங்கள் பலமடைந்து விர்த்தியாகக்கூடும்.

ஸ்டோர்ஸ் சங்கங்கள் செய்யவேண்டியுள்ள வேலைகள் இருவகைகளாகப் பிரிக்கப் படலாம். வைத்திய உதவி அவசியமில்லாதிருப்பவர்களுக்கு ஆரோக்கியமான உணவுப்பொருள்களை விற்பது ஒன்று. சீக்காய்ப்போய் வைத்திய உதவியின் அவசியத்தைக்கோரி நிற்பவர்களுக்குக் குறைந்த விலையில் நல்லமருந்துகளை விற்பதும் மற்றொன்று இவ்விருகாரியங்களும் ஸ்டோர் சங்கங்கள் செய்யவேண்டிய முக்கியமானவைகளாம். இவைகளில் எதையேனும் ஒன்றை ஸ்டோர் சங்கங்கள் செய்யாமற்போகுமாகில் அவைகள் செய்யவேண்டிய கடமைகளைப் பூராவும் செய்ததாகச் சொல்லமுடியாது. ஒரு மனுஷ்யன் தேகாரோக்கிய மாயிருக்கும்போது அவனுக்கு நல்ல உணவுப்பொருள்கள் விற்றுவருவது ஸ்டோர்களின் கடமையாகும். இவ்வொருகாரியத்தை மட்டும் செய்து வருவது போதுமானதல்ல. ஒரு மனுஷ்யன் சீக்காய்ப் போய்விட்டால் அவனுக்கும் உதவி செய்யவேண்டியது ஸ்டோர்களின் கடமையாகும். தேகாரோக்கியமாக ஒருவன் இருக்கும்போது அவனுக்கு உதவி செய்யும் ஸ்டோர் சங்கங்கள் அவன் சீக்காய்ப்போன காலத்தும் உதவி செய்யவேண்டியதும் அவசியமாகும். இப்படி உதவிசெய்யாத காரணத்தையும், ஸ்டோர்ஸ் சங்கங்கள் விர்த்தியடையாததற்கு ஒரு காரணமாகச்சொல்லலாம். சீக்காயப் போனகாலத்தும் ஸ்டோர்ஸ் சங்கங்கள் உதவி செய்ய முன்வந்தால் களிமண் மூளையுள்ள ஒருவன் கூட ஸ்டோர்ஸ் சங்கங்களில் நன்மையிருக்கிற தென்பதை எளிதில் அறிந்து கொள்ளுவான்.

வைத்திய உதவிக்கு கவர்ன்மெண்டு உதவியை நம் ஜனங்கள் எதிர்நோக்கி இருப்பதனால் ஏராளமானவர்களுக்கு வைத்திய உதவியே கிடைக்காமற் போகின்றதென்பதை பிரத்தியட்சமாகப் பார்த்திருக்கிறோம். லோகல் போர்டுகள் செய்யும் உதவியும் போதுமானதாக இல்லை. இவைகளெல்லாம் எவ்வள உதவி செய்தாலும் சுய உதவிக்கு ஈடாகா தென்பதை எல்லோரும் அறிவார்கள்.

இது காரணம் பற்றி தற்காலம் ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஸ்டோர்ஸ் சங்கங்கள் இவ்விஷயங்களைக் கவனித்து வேண்டியவைகளைச் செய்ய வேண்டும். திருவல்லிக்கேணி, மதுரை கோயமுத்தூர் ஸ்டோர்ஸ் சங்கங்கள் சிறிதும் காலதாமதஞ் செய்யாது இவ்விஷயங்களில் கவனஞ் செலுத்தவேண்டும். திருவல்லிக்கேணி சங்கத்தில் "பொது நன்மை" பண்டில் ஏராளமானத் தொகை சேர்ந்திருக்கின்றது. இதுவரையில் இத்தொகைக்கு சரியான சிலவு ஒன்றும் தென்படவில்லை.

300 மெம்பர்கள் உள்ளசங்கத்திற்கு ஆரம்பச் செலவிற்கு ரூ.1,500 இருந்தால் போதுமென்று வைத்திய நிபுணரொருவர் கணக்கிட்டுச்சொன்னார். திருவல்லிக்கேணி, கோயமுத்தூர், மதுரை ஸ்டோர்ஸ் சங்கங்கள்



இவ்விஷயங்களை உடனே ஆரம்பஞ்செய்ய வேண்டும். மருந்து வகைகளின் ஜாபிதா தயார் செய்து கொண்டு மருந்து வகைகளை வாங்கி சேர்க்க வேண்டும். வைத்திய நிபுணர்கள் சிலரை நியமித்துக்கொண்டு காலையில் இரண்டு மணி சாவகாசம் அல்லது மெம்பர்களுக்குச் சௌகரியமான நேரத்தில் ஸ்டோர்ஸ் கட்டடத்திலேயே வைத்தியர்கள் வந்து சிகிட்சை செய்யும்படியாய் ஏற்பாடு செய்ய வேண்டும். மெம்பர்களிடம் எத்தகைய பணமும் வாங்காமல் சிகிட்சை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மெம்பர்களுடைய வீட்டிற்கு வைத்தியர்கள் செல்லவேண்டுமென்று யாரேனும் கோருவார்களின் அதற்காக இவ்வளவென்று ஒரு தொகையை நிர்ணயித்து விடவேண்டும். மெம்பர்கள் எல்லோருக்கும் வைத்திய உதவி இலகுவாயும் சொற்பத் தொகையிலும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

இத்தகைய முயற்சியினால் மெம்பர்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் நன்மை ஏற்படக்கூடும். மெம்பர்களிடமிருந்து வருஷம் இரண்டு ரூபாய் இதற்காகவென்று பிரத்தியேக சந்தா வசூல் செய்யப்படலாம். ஏழை மெம்பர்களுக்கு இன்னும் கொஞ்சம் குறைத்தே நிர்ணயிக்கலாம். ஜனங்களுக்கு உதவி செய்து அவர்கள் தயவைப் பெறவேண்டுமென்பதே வைத்திய நிபுணர்களுக்கு இம்முறையில் அவசியம் ஏற்படும். ஆகையால் ஏழைகளை அடிமைகள் போல் நடத்தும் சில வைத்திய நிபுணர்களின் வழக்கம் வேருடனழியக்கூடும். இத்தகைய முறைகளின் ஏற்பாட்டினால் கவர்ன்மெண்டாருக்கும் முனிசிபல் சங்கத்தாருக்கும் அதிக உதவி ஏற்படக்கூடும்.

தவிர இது வரையில் மேல்நாட்டு முறைகளையே நாம் கையாண்டு வருகிறோமென்ற அபவாதமும் நம்மை விட்டொழியும். ஆயுர்வேத முறைகளும் யூனானி முறைகளும் விருத்தி யடையக்கூடும். கோவாபரேடிவ் யூனியன்கள் மூலமாக கிராமச் சங்கங்களுக்கும் வெகு எளிதில் இத்தகைய உதவியை பரவச் செய்யக்கூடும். கிராமங்களில் வைத்திய உதவி பரவச் செய்வதற்கு கவர்ன்மெண்டாரும் லோகல் போர்டார்களும் செய்யும் ஏற்பாட்டைக்காட்டிலும் நம்முடைய ஏற்பாடு சீக்கிரமாகவும் எளிதாகவும் சித்தியடையக்கூடும். கூட்டுறவு இயக்கத்திற்கே மூலாதாரமாக உள்ள "சுய உதவி"யை நாம் கைக்கொண்டவர்களாக ஆவதுமன்றி இயக்கத்தில் அதிக அனுபவமும் நன்மையும் பெறக்கூடும்.

இம்முயற்சியால் நாம் அடையக் கூடியநன்மைகள் ஏராளமாக இருப்பதால் இதனால் ஏற்படும் சிரமத்தையும் கஷ்டத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல், கூட்டுறவு இயக்கத்தில் முதன்மையாக உள்ள தலை

வர்களெல்லோரும் இவ்விஷயத்தை ஆரம்பஞ் செய்து ஜனங்கள் சுகமடையும்படிச் செய்யவேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை.

---

# ரிஜிஸ்ட்ராரின் வருஷாந்தர ரிப்போர்ட்டு.

[1918-ம் ஞூ ஜூன்மாதம் 30ந் தேதியோடு முடிவாகும் 1917—18 வருஷத்திற்கு கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் கவர்ன்மென்டாருக்கு அனுப்பித்துக் கொண்ட ரிப்போர்ட்டின் சுருக்கம்.]

## சங்கங்களின் அபிவிருத்தி.

பிரஸ்தாப வருஷத்தில், காக்கினாடா, நெல்லூர், கள்ளிக்கோட்டை, ஆஸ்கா, திருநெல்வேலி முதலிய ஐந்து இடங்களில் சென்ட்ரல் பாங்குகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. தென் ஆற்காடு ஜில்லா சூபர்வைவிங் யூனியன் சென்ட்ரல் பாங்காக மாற்றப்பட்டது.

பிரஸ்தாப வருஷத்தில் பதினெட்டு யூனியன்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. முன்னிருந்த யூனியன்களையுஞ் சேர்த்து வருஷக்கடைசியில் 74 யூனியன்கள் இருந்தன. சங்கங்களின் மேற்பார்வை பார்த்து வரும் யூனியன்களின் ஆதீனத்தில் சென்ற வருஷத்தில் (1916-17) 1758 சங்கங்கள் இருந்தன. ஆனால் பிரஸ்தாப வருஷத்தில் யூனியன்களின் மேற்பார்வையில் 2415 சங்கங்கள் இருந்தன.

பிரஸ்தாப வருஷத்தில் 515 புதுச்சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. பழைய சங்கங்கள் பதின்மூன்றின் ரிஜிஸ்ட்ரேஷன் கியான்ஸல் செய்யப்பட்டது. (சங்கங்கள் மூடப்பட்டன) 1918-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதியன்றைக்கு யூனியன்களும் மூடப்பட்ட சங்கங்களும் நீங்கலாக 2644 சங்கங்கள் இருந்தன. இச்சங்கங்களில் பிரஸ்தாப வருஷத்தில் 1,91,041 நபர்கள் மெம்பர்களாயிருந்தார்கள். சென்றவருஷத்தில் 1,63,121 மெம்பர்கள்தான் இருந்தார்கள். சங்கங்களின் மூலதனம் 204.99 இலட்சத்திலிருந்து பிரஸ்தாப வருஷத்தில் 234·92 இலட்சத்திற்கு உயர்ந்தது. மெம்பர்கள் கட்டியுள்ள பங்குத்தொகை 20·49 இலட்சத்திலிருந்து 26·13 இலட்சத்திற்கு உயர்ந்தது. சென்ட்ரல் பாங்குகளும், இதர சங்கங்களும், சென்ட்ரல் சங்கங்கள்தவிர இதரச்சங்கங்களுக்குக் கொடுத்த கடன்களின் மொத்தம் 71·00 இலட்சத்திலிருந்து 79. 81 இலட்சத்திற்கு உயர்ந்தது. ரிஸர்வ்பண்டு (க்ஷேமநிதி) 9· 66 இலட்சத்திலிருந்து 11·88 இலட்சத்திற்கு உயர்ந்தது. விவசாயச் சங்கங்களிலிருந்த 136,054 நபர்களில் 99552 பேர்விவசாயத் தொழில் மட்டுமே செய்பவர்கள். பிரஸ்தாப வருஷத்தில் இருந்த மெம்பர்களில் 8144பேர் கிறிஸ்



தவர்கள் 8088 பேர் மகமதியர்கள். 7078 பேர் பஞ்சமர்கள். பஞ்சமர்கள் சென்ற வருஷத்தைவிட பிரஸ்தாப வருஷத்தில் 1455 பேர் அதிகரித்தார்கள். விவசாயச்சங்கங்கள் வசூல்செய்த அசல்தொகையிலும், வட்டியிலும், சென்ற வருஷத்தைக் காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்வதற்காக சென்ற வருஷக் கடைசியில் 78 மனுக்கள் பாக்கியாயிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் 546 மனுக்கள் வந்தன. பிரஸ்தாப வருஷத்தில் 515 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. 32 மனுக்கள் மறுக்கப்பட்டன. வருஷக்கடைசியில் 77 மனுக்கள் பைசலாகாமல் பாக்கியாயிருந்தன.

## மாகாண பாங்கு.

மாகாண பாங்கை பெடரேஷனாக மாற்றவேண்டுமென்பதில் பிரத்தியட்சமாய் ஒன்றும் செய்யப்படவில்லை. சங்கங்களுக்காக வென்று நான்கு இலட்சம் ரூபாய் பொறுமானத்திற்குப் பங்குகள் நூதனமாக ஏற்படுத்தப்பட்டன. பங்கொன்றுக்கு நூறு ரூபாய் பெறுமானமுள்ள 253 பங்குகள் 74 சங்கங்களால் வாங்கப்பட்டன. பங்குத் தொகைக்காக சங்கங்களால் ரூ. 22900 கொடுக்கப்பட்டுள்ளது. மாகாண பாங்கை பிரத்தியட்சமாய் ஒரு பெடரேஷனாகவே மாற்றுவதற்காக ஜில்லா பாங்குகளின் பிரதிநிதிகளுடன் இவ்விஷயத்தைக் கலந்துபேசி விஷயத்தை சீக்கிரம் முடிவு செய்வதாக எண்ணியிருக்கிறேன். இது தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் மாகாண பாங்கு வெகுதிருப்திகரமாக வேலைசெய்திருக்கின்றது. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சில சங்கங்களுக்கு காஞ்சீபுரம் பாங்கு பணங் கொடுக்க முடியாமற் போனதால் மாகாண பாங்கே செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள, சில பாங்குகளுக்குப் பணம் கொடுத்திருக்கின்றது. பங்குத் தொகை மூலமாய் பணம் அதிகரிக்கவில்லையென்றாலும், டிபாஸிட்டுமூலமாக பணம் ஏராளமாக அதிகரித்திருக்கின்றது. க்ஷேமநிதித் தொகையும் அதிகரித்திருக்கின்றது. சென்ற வருஷத்தைப்போல் பிரஸ்தாப வருஷத்தில் இலாபம் அதிகரிக்கவில்லை. கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட்டுகளின் விலை குறைந்துபோன காரணத்தை முன்னிட்டு ரூ. 12,000 பிரஸ்தாப வருஷத்தில் நஷ்டமாக வஜா செய்யப்பட்டது.

## சென்ட்ரல் பாங்குகள்.

பிரஸ்தாப வருஷத்தில் ஆறு சென்ட்ரல் பாங்குகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இவற்றுள் ஐந்து நூதனமாகவே ஸ்தாபிக்கப்பட்டன. ஜில்லா சூபர்வைவிங் யூனியன் ஒன்று சென்ட்ரல் பாங்காக மாற்றப்பட்டது. இந்த பாங்குகளெல்லாம் பாங்கிங் யூனியன்கள் மாதிரியிலேயே

ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இந்த பாங்குகளின் விதிகளில் நபர்களும், சங்கங்களும் மெம்பர்களாகச் சேருவதற்கும், சென்ட்ரல் பாங்குகளும், லோகல் யூனியன்களும் சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதற்கும் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பாங்குகள் வெகு திருப்திகரமாகவே ஆரம்பஞ்செய்திருப்பதாகச் சொல்லலாம். பங்குத் தொகைக்காக ரூ. 57,886 வசூல் செய்யப்பட்டுள்ளன. டிபாஸிட்டுகளாக ரூ. 90,698 வசூல் செய்யப்பட்டன. கடலூர், நெல்லூர், திருநெல்வேலியிலுள்ள பர்மனென்ட் பண்டுகளின் மானேஜர்கள் அங்கங்கே கூட்டுறவு சென்ட்ரல் பாங்குகளின் ஸ்தாபனத்தை வெறுப்பதற்குப் பதிலாக அவைகளின் ஸ்தாபனத்தில் ஏராளமான உதவி செய்திருக்கிறார்கள். இவர்களுடைய உதவிக்காக கூட்டுறவினர்கள் எல்லோரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

குண்டூர், அநந்தபூர், பெல்லாரி, கர்நூல், கடப்பை, சித்தூர் முதலிய பாகங்களில் சென்ட்ரல் பாங்குகளின் ஸ்தாபனத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சேலம் சென்ட்ரல் பாங்கு பாங்கின் யூனியன் விதிகளை அனுசரணைக்குக் கொண்டுவந்துள்ளது. 101 சங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துள்ளது. டைரக்டர்கள் போர்டில் சங்கங்களின் பிரதிநிதிகள் இருவர் டைரெக்டர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கோயமுத்தூர் சென்ட்ரல் பாங்கை பெடரேஷனாக மாற்றும் விஷயம் இன்னும் முடிவுபெறவில்லை. பாங்கின்யூனியன் விதிகளை ஏற்றுக்கொள்ள திருச்சினாப்பள்ளி ஜில்லாபாங்கு இன்னும் சம்மதப்படவில்லை. இது சம்பந்தமாகவும் கடிதம் போக்கு வரவுகள் நடந்துவருகின்றன. லால்குடிதாலூக்காவிலுள்ள பாங்குகளெல்லாம் அந்த தாலூக்காவிற்காக ஒருபாங்கின் யூனியன் ஏற்படுத்திக்கொள்ள ஏற்பாடுகள் செய்துவருகின்றன.

பஞ்சமசங்கங்கள் சம்பந்தமாக கிறிஸ்துவ சென்ட்ரல் பாங்கு ஏராளமான லேவாதேவி செய்திருக்கின்றது. சில சங்கங்களின் விஷயத்தில் மெம்பர்களின் நிகர ஆஸ்தியின் எட்டிலொரு பாகத்திற் கதிகமாகவே கடன்கொடுத்திருக்கின்றது. கொடுக்கப்பட்ட (Ceded districts) ஜில்லாக்களில் சில சங்கங்களால் கிறிஸ்துவ சென்ட்ரல் பாங்கில் பணம்கடன்வாங்கி மெம்பர்களுக்கு 12½ வட்டிக்குக் கொடுக்கப்பட்டது. அதிக வட்டியினால் வரும் இலாபத்தைக் கொண்டு வசூலாகாமற் போய்விடும் கடன்களின்நஷ்டத்தை ஈடுசெய்துகொள்ளுவதாக ஏற்பாடு. சேலம் ஜில்லாவிலுள்ள பஞ்சம சங்கங்கள் சிலவற்றிற்கும் இங்கிபந்தனையின் மேல் கடன் கொடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.



கடன் கொடுக்கும் எல்லா பாங்குகளினுடையவும் பங்குத் தொகை பிரஸ்தாப வருஷத்தில் ரூ.630,264லிருந்து ரூ.8,30,897-க்கு உயர்ந்தது. அப்பாங்குகளின் க்ஷேமநிதித்தொகை ரூ 1. 51 இலட்சத்திலிருந்து ரூ 2,01,504க்கு உயர்ந்தது.

சென்ற வருஷத்தில் இருந்த டிபாசிட்டுகள் ரூ. 60.23 இலட்சம் பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 66.04-க்கு உயர்ந்தன. பழையசென்டிரல் பாங்குகளின் டிபாசிட்டுகள் அதிகரிக்கவில்லை நூதனமாக ஆரம்பிக்கப்பட்ட பாங்குகளில் மட்டும் ரூ. 90,698 டிபாசிட்டுகளாக வசூல் செய்யப்பட்டன.

பிரஸ்தாப வருஷத்திலும் யுத்தத்தின் கஷ்டங்கள் ஒழியவில்லையானலும் சென்ற வருஷத்தைக் காட்டிலும் அசல் தொகையும் வட்டித் தொகையும் அதிகமாகவே வசூலாகி இருக்கின்றது. வசூலாக வேண்டிய தொகையில் அசலில் 100-க்கு 12.27 பிரஸ்தாப வருஷத்தில் பாக்கி நின்றது. சென்ற வருஷத்தில் 100-க்கு 14.85 பாக்கி நின்றது. வசூலாகவேண்டிய தவணை வட்டியில் பிரஸ்தாப வருஷத்தில் 100-க்கு 4.04 பாக்கி நின்றது. சென்ற வருஷத்தில் 100-க்கு 6.45 பாக்கி நின்றது.

பிரஸ்தாப வருஷத்தில் சென்ட்ரல் பாங்குகளுக்கு இலாபமும் ஒருவாறு வழக்கம்போலவே கிடைத்துள்ளதென்றுக் கூறலாம்.

## விவசாயச் சங்கங்கள்.

பிரஸ்தாபவருஷத்தில் விவசாயச் சங்கங்களில் 366 அதிகரித்துள்ளன. வருஷக்கடைசியில் விவசாயச் சங்கங்கள் 2271 இருந்தன. சங்கங்களின் மூலதனம் 88.03 இலட்சத்திலிருந்து 97.93 இலட்சத்திற்கு உயர்ந்தது. சங்கங்களின் பங்குத்தொகை 5.87 இலட்சத்திலிருந்து 7.22 இலட்சத்திற்கு உயர்ந்தது. பிரஸ்தாப வருஷத்தில் விவசாயச் சங்கங்கள் தங்களுடைய இலாபக் கணக்கில் தவணை நேராத வட்டித் தொகையை சேர்த்துக்கொள்ள கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்தார்கள். தவணை நேர்ந்து கெடுக் கடந்துபோன வட்டித்தொகையைச் சேர்த்துக்கொள்ள அனுமதி கொடுக்கவில்லை. இந்த அனுமதி கொடுத்ததினால் 2,271 சங்கங்களில் 1257 சங்கங்கள் இலாபத்தில் வேலை செய்தன. இச்சங்கங்களுக்கு பிரஸ்தாப வருஷத்தில் கிடைத்த இலாபம் ரூ. 2,01,459. விவசாயச் சங்கங்களில் ஏராளமான டிபாஸிட்டுகள் சேர்ந்துள்ள ஜில்லா தென்கன்னடம் ஜில்லாவாகும். தென்கன்னட ஜில்லாவில், சராசரி சங்கம் ஒன்றுக்கு ரூ. 2,440 வீதம் ஜில்லாவில் டிபாஸிட்டுகள் சேர்ந்திருக்கின்றன. பல்லாரி ஜில்லாவில் சங்கம் ஒன்றுக்கு சராசரி டிபாஸிட்டுகள் ரூ. 1,295 வீதம் சேர்ந்திருக்கின்றன. செங்கற்பட்டு,

மலையாளம், தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி ஜில்லாக்களில் சராசரி சங்கம் ஒன்றுக்கு ரூ. 500-க்குமேல் டிபாஸிட்டுகள் இருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் விவசாயச்சங்கங்கள் சென்ட்ரல் பாங்குகளிலிருந்தும், கடன் கொடுக்கும் இதர பாங்குகளிலிருந்தும் ரூ. 75. 47 இலட்சம் கடன் வாங்கியிருந்தன. சென்ற வருஷத்தில் 67. 92 இலட்சம் மட்டும் கடன்பட்டிருந்தன.

வசூலாகவேண்டிய தொகையில் விவசாயச் சங்கங்கள் பிரஸ்தாப வருஷத்தில் சென்ற வருஷத்தைக்காட்டிலும் அதிகமாக வசூல் செய்திருந்தபோதிலும் கெடுக்கடந்து வசூலாகவேண்டிய பாக்கி ஏராளமாக இருக்கின்றது. வசூலாகவேண்டிய பாக்கித்தொகையில் மதுரை செக்ஷனில், நிலைமை சென்ற வருஷத்தைப்போலவே இருக்கின்றது. இதர ஜில்லாக்களில் சென்ற வருஷத்தைக் காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் வசூல் சிறிது திருப்திகரமென்றே சொல்ல வேண்டும். சென்ற சில வருஷங்களாகவே கெட்டுப்போயுள்ள சங்கங்கள் பல மதுரை செக்ஷனில் இருக்கின்றன. இது காரணம் பற்றித்தான் அந்த செக்ஷனில் வசூலாக வேண்டிய பாக்கித்தொகை அதிகமாக நின்றுவிட்டது. அந்த செக்ஷன் லோகல் யூனியன்களெல்லாம் இளமையில்இருப்பதால் அவைகளெல்லாம் தங்களுடைய வேலைகளில் போதிய அனுபவம் இன்னும் பெறவில்லை.

கீழச்சேரி, பெரிந்தால்மன்னு, கலவை, அணைக்காவூர், இராமச்சந்திர்புரம், விழுப்புரம் யூனியன்கள் திருப்திகரமாக வேலை செய்திருக்கின்றன. விஜயமங்கலம், கெட்டி, செய்க்களூர், திருப்போரூர், மணிமங்கலம், திருவண்ணாமலை, லால்குடி யூனியன்களும் நன்றாக வேலை செய்திருக்கின்றன.

## விலைக்கு வாங்கவும், விலைக்கு வாங்கி வியாபாரஞ் செய்யவும் உற்பத்தி செய்யவும் சங்கங்கள்.

பிரஸ்தாப வருஷத்தில் இத்தலைப்பின் கீழ் நான்கு புதுச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. விலைக்கு வாங்கி வியாபாரஞ் செய்யும் சங்கங்கள் வருஷக்கடைசியில் 17-ம் உற்பத்திச் செய்து வியாபாரஞ் செய்யும் சங்கங்கள் வருஷக்கடைசியில் 2-ம் இருந்தன. கடைசியில் சொன்ன இரண்டு சங்கங்களில் இராதாதேவிபுரம் பட்டுபுரம் சங்கத்தில் மெம்பர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டிருந்ததால் சங்கம் வேலை செய்யவேயில்லை.

தல்லெருவி சங்கம் மொத்தமாக நிலம் குத்தகைக்கு வாங்கி கூட்டாக உழுது, சாகுபடி செய்து அறுவடை செய்து மொத்தமாக விற்று இலாபமடைந்தது. இப்படிச் செய்ததில் நல்ல நிலம் குறைந்த குத்தகைக்கு இவர்களுக்குக் கிடைத்தது.



கள்ளிக்கோட்டை, மசூலிப்பட்டணம், திருச்சிறுப்பள்ளி, கும்பகோணத்திலுள்ள முனிசிபல் வேலைக்காரர்கள் சங்கம், மெம்பர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், துணி வகைகளையும் மொத்தமாக வாங்கி மெம்பர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து கிரயத்தை மெம்பர்களின் சம்பளத்திலிருந்து வசூல் செய்து கொண்டன. சேலம் முனிசிபல் சங்கம் மெம்பர்களுக்கு வேண்டிய துணி வகைகளை மொத்தமாக வாங்கி மெம்பர்களுக்கு மலிவாக விற்று வந்தது.

சில பிரைமெரி சங்கங்களின் மெம்பர்களுக்காகவென்று, சீமை எண்ணெய் மெஸர்ஸ் ஷாவால்லேஸ் கம்பெனியாரால் சில சங்கங்களுக்கு விற்கப்பட்டு வந்தது.

தவிர கூட்டுறவு சங்கங்களுக்காக, உப்பு டெபோக்களிலிருந்தே உப்பு விற்பதற்காக கவர்ன்மெண்டார் சமீபத்தில் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

நீலகிரியிலுள்ள படகா சங்கங்களின் மெம்பர்களால் விளைவு செய்யப்படும் உருளைக்கிழங்கை மொத்தமாக விற்பனைச்செய்ய கெட்டி யூனியன் சங்கத்தார் இராணுவ டிபார்ட்டுமெண்டாருடன் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இவ்வருஷத்திய விளைவு சரியாக இல்லாதபடியால் இராணுவ டிபார்ட் மெண்டாருக்கு வேண்டிய அளவுபருமனான கிழங்குகள் விளையவில்லை. ஆனதுபற்றி இராணுவ டிபார்ட் மெண்டாருக்கு கிழங்குகள் சப்ளை செய்யவில்லை.

## விவசாயச் சங்கங்களல்லாத இதர சங்கங்கள்.

பருத்தி நெசவுக்காரர்களின் சங்கங்கள் ஐந்து பிரஸ்தாப வருஷத்தில் நூதனமாக பர்ஹாம்பூர், பெத்தாபுரம், கேஸனுபல்லி, பொன்னூர், காஞ்சீபுரம் முதலிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

பெர்ஹாம்பூர் சங்கம், ஸப் கலெக்டர் மிஸ்டர் R. W. டேவிஸ் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது. நெசவுக்காரர்கள் படுந்துயரத்தையும், கஷ்டத்தையும் பார்த்தவராய் ஒரு சங்கம் ஸ்தாபிக்க இவர் ஏற்பாடு செய்தார். பங்குத் தொகை ரூ. 3,000 வசூல் செய்யப்பட்டது. இவற்றுள் ரூ. 1,500 சப் கலெக்டர் மிஸ்டர் டேவிஸாலும், ஜட்ஜ் மிஸ்டர் B. C. ஸ்மித்தாலும் கொடுக்கப்பட்டது. வருஷக்கடைசியில் 99 மெம்பர்களிருந்தார்கள். இவர்களுள் 97 பேர் நெசவுக்காரர்கள். பெஸ்டு கம்பெனியைச் சேர்ந்த ஸர் கார்டன் பெரேஸர் இச்சங்கத்தாருக்கு நூல் வகைகளைக் கொடுத்து மெம்பர்கள் தயார் செய்யும் சாமான்களை மொத்தமாக வாங்கிக்கொண்டு சங்கத்திற்கு வேண்டிய உதவி செய்தார். பெர்ஹாம்பூரில் பிழைப்புக்கிடமில்லை யென்பதாக விட்டுப்போயிருந்த நெசவுக்காரர்

கள் பலர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டு பெர்ஹாம்பூருக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். இந்த ரிப்போர்ட்டு தயாராய்க் கொண்டிருக்கும்போது பெர்ஹாம்பூர் சங்கத்தில் இருந்த மெம்பர்களின் தொகை 150.

"காஞ்சீபுரம் அர்பன் வீவர்ஸ் யூனியன்" பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 1,000 இலாபத்தில் வேலை செய்தது.

பெர்ஹாம்பூர் பட்டு நெசவுக்காரர்களின் சங்கம் ரூ. 5,000 வரைக்கும் பட்டுவாங்கி மெம்பர்களுக்கு 100-க்கு 5 முதல் 10 வரைக்கும் குறைந்த விலைக்கு விற்று வந்தது. பட்டும் நல்லதினுசாகவும், நல்ல மாதிரியாகவும் வாங்கமுடிந்தது.

திருவண்ணாமலை செக்கிலியர்களின் சங்கம் மொத்தமாக தோல் வாங்கி மெம்பர்களுக்கு, சொற்ப இலாபம் வைத்துக் கொண்டு விற்றது. மெம்பர்களால் தயார்செய்யப்பட்ட ரூ. 398 பொறுமான செருப்புகளும் சங்கம் விற்றது. வருஷம் முடிந்தபின், ஸால்ட்(உப்பு இலாகா) டிபார்ட்டுமெண்டுக்கும் செருப்புகள் சப்ளை செய்யும் சொற்பக் கன்டிராக்டை சங்கம் வாங்கியிருக்கின்றது.

## இதரச் சங்கங்கள்.

சென்னைக்கட்டட சங்கமெம்பர்கள் வேலை செய்ய இஷ்டப்படாததால் அச்சங்கம் மூடப்பட்டு ரிஜிஸ்தரேஷன் கியான்ஸல் செய்யப்பட்டது. மதுரை, உதகமண்டலம், உத்தரமேரூர் கட்டடச்சங்கங்கள் பிரஸ்தாப வருஷத்தில் சிறிதேனும் வேலை செய்யவில்லை. கோயமுத்தூர், கும்பகோணம், திண்டுக்கல் கட்டடச் சங்கங்கள் வீடுகள் கட்டிக் கொள்ள மெம்பர்களுக்குப் பணம் கடன் கொடுத்தன. மாம்பலம் கட்டடச் சங்கத்தாரால் விற்பனை செய்யப்பட்ட இடத்தில் இரண்டு மெம்பர்கள் சங்கத்தின் உதவியில்லாமலே வீடுகள் கட்டிக்கொண்டார்கள். பீமிலிபட்டணம் கட்டடச் சங்கத்தின் மெம்பர்களால் சங்கம் கொடுத்த கடனின் உதவியைக் கொண்டு 62 வீடுகள் கட்டப்பட்டன.

சதானந்த அச்சுச் சங்கம் பிரஸ்தாப வருஷத்தில் வேலைதுவக்கிற்று. வருஷக் கடைசியில் 49 மெம்பர்களிருந்தார்கள். இவர்களுள் பத்து சங்கங்கள். சங்கத்தின் மூலதனம் ரூ. 17,370. இவற்றுள் ரூ. 2,870 சங்கத்தின் மெம்பர்கள் கட்டியுள்ள பங்குத்தொகை. பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 3,002-2-4 இலாபம் வந்ததென்றாலும் அச்சுச் சாலையின் ஆரம்பச் செலவு அதிகமாக இருந்தபடியால் சங்கத்திற்கு நிகரநஷ்டம் ரூ. 351-1-6 பிரஸ்தாப வருஷத்தில் வந்துள்ளது. இனி வரும் வருஷங்களில் சங்கத்திற்கு ஏராளமான இலாபம் கிடைக்குமென்றுத் தெரிகிறது :—



சென்ற ஜூன் மாதம் 8-ம் தேதிதான் கவர்ன்மெண்டுக்கு
ணிக்க சாவகாசம் ஏற்பட்டது, இதில் வெகு அருமையான
அடங்கியுள்ளன. ஆனால் இத்தாமதத்தினால் அதன் அருமை
வாய்க் குலைந்துபோனது விசனிக்கத்தக்கதே.

இந்த ரிபோர்டைப்படிக்க உற்சாகமுண்டாகிறது. பம்பாயி
கோவாபரேடிவ் இயக்கம் இவ்வருஷத்தைப்போன்ற கஷ்டமான
தை இதுவரையில் பார்த்ததில்லை. சண்டையினால் ஏற்பட்ட
கஷ்டம். (இப்படியிருந்தும்கூட அநேக சொஸைடிகள் பெரிய
களுக்கும் சிறியதொகைகளுக்கும் யுத்தக் கடன் பத்திரங்கள் வா
கின்றன). சண்டைக்கு ஜனங்கள் சேர்ப்பதனால் வேலைக்கு ஆ
படுவதும்கஷ்டம். ப்ளேக் என்னும் நோய் மிக மும்முரமாய்
திருத்தல், அகாலமழைகள், விசேஷவெள்ளப் பெருக்கினாலான
புகள் முதலியன கஷ்டத்திற்கு முக்கிய காரணங்கள். இப்படியெ
மிருந்துங்கூட ரிஜிஸ்டரான சொஸைடிகளின் தொகை, மெம்பர்க
தொழில்தனம் இவைகள் முந்திய வருஷத்தின் மொத்தத்தைவி
முறையே நூற்றுக்கு 27, 22, 25 வீதம் அதிகரித்திருக்கின்றன. கீழ்க்
காட்டிய இனவகுப்பு ஜாபிதாவில் உண்மையான இலக்கங்கள் காட்டப்
பட்டுள்ளன.

| சொஸைடியின் இனம். | சொஸைடிகளின் எண்ணிக்கை | | மெம்பர்களின் எண்ணிக்கை. | | தொழில்தனம் லெக்ஷக் கணக்கில் | |
|---|---|---|---|---|---|---|
| | 1916 | 1917 | 1916 | 1917 | 1916 | 1917 |
| சென்ட்ரல் பாங்கிகள் | 5 | 8 | 1,821 | 2,446 | 21·7 | 27·17 |
| விவசாய சொஸைடிகள் | 808 | 1,037 | 64,016 | 78,445 | 39·76 | 50·92 |
| விவசாயமில்லாச் சொஸைடிகள் | 150 | 186 | 39,057 | 47,570 | 35·32 | 43·83 |
| மொத்தம். | 963 | 1,225 | 1,04,924 | 1,28,461 | 96·78 | 121·92 |

விவசாய சொஸைடிகளின் இவ்வருஷத்திய தொழில் தனத்தில்
மெம்பர்களின் டிபாஸிட்டு 100-க்கு 39, முந்திய வருஷத்திலோ
38 ஆகத்தான் இருந்தது. அந்த இராஜதானிக்குள் கோவா
முதன்மையான ஜில்லாவான டார்வாரில் தொழில் தனத்தில்

மங்களூரில் உள்ள கணபதி சகெண்டரி பாடசாலையில், ரிஜிஸ்டர் செய்யப்படாமல் மாணவர்களுக்காக வென்று கூட்டுறவு முறையில் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. வருஷக் கடைசியில் 388 மெம்பர்கள் இருந்தார்கள். சங்கம் பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 1,500-க்கு புத்தகங்களும், ஸ்டேஷனரி சாமான்களும் வியாபாரஞ் செய்தது. வருஷக்கடையில் நிகாஇலாபம் ரூ. 197 கிடைத்துள்ளது. சங்கத்தின் நிர்வாகவேலை முழுவதும் பள்ளிக்கூட உபாத்திமார்கள் நடத்திவருவதாகத் தெரிகிறது.

தென்கன்னடம் புத்தூரிலுள்ள பஞ்சமர்களின் உபயோகத்திற்காக வென்று ஒருசிறு ஸ்டோர் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.பரோபகாரமுள்ள சில கனவான்களின் உதவியால் இச்சங்கம் நடத்தப்பட்டு வருகின்றது. பிரஸ்தாப வருஷத்தில் சங்கம் சொற்ப நஷ்டத்தில் வேலை செய்ததென்றாலும், இப்போது இச்சங்கம் விர்த்தியாய் இருக்கின்றது.

கிறிஸ்துவர்களின் சங்கக் காரியதரிசிகள் (Young Men's Christian Association) பிரஸ்தாப வருஷத்தில் பஞ்சமர்களுக்காக வென்று 3 சங்கங்களை ஸ்தாபித்தார்கள்.

சென்னை ஸோஷியல் ஸர்வீஸ் லீக் சங்கத்தாரும், சென்னையிலுள்ள ஏழை வகுப்பினர்களுடைய சங்கங்களை மேற்பார்வை பார்த்தும் அவைகளுக்கு வேண்டிய உதவியும் செய்துவந்தார்கள்.

செம்படவர்களுக்காக வென்று பிரஸ்தாப வருஷத்தில் பன்னிரண்டு சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அவற்றுள் ஒன்று இராயபுரத்திலும் மற்றப்பதினொன்றுமேற்குக் கடலோரத்திலும்இருக்கின்றன.

பிரஸ்தாப வருஷத்தில் நீலகிரி படகா வருப்பினர் களுக்காக வென்று நீலகிரியில் பதினான்கு சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன.

## ரிஸர்வுபண்டு.

பிரஸ்தாப'வருஷத்தில் உத்தர விடப்பட்டிருக்கிற ஆடிட் உத்தரவுகள் பிரகாரம் க்ஷேமநிதித் தொகையை சங்கங்கள் எல்லாம் கட்டுமானால் க்ஷேமநிதித் தொகை ரூ. 9,66,429 முதல் ரூ. 11,83,556-க்கு உயரும். விவசாயக் சங்கங்களில் மட்டும் ரூ. 29,1,649 க்ஷேமநிதி ஏற்படுகின்றது. விவசாயச் சங்கங்களில் இவ்வளவு ஏராளமானத் தொகை அதிகரிப்பதற்கு,நிகர இலாபத்தைக் கணக்கிடுவதில் கவர்ன்மெண்டார் பிரஸ்தாப வருஷத்தில் செய்துள்ள நூதன உத்தரவே காரணமாகும். சென்னை சென்ட்ரல் அர்பன் பாங்கில்மட்டும் ரூ. 9,846 க்ஷேமநிதிக்குக் கொண்டு போகப்படும். சென்ட்ரல் பாங்குகளின் க்ஷேமநிதி ரூ. 82,406 லிருந்து ரூ. 1,16,968-க்கு உயர்ந்திருக்கின்றது.

### சூபர் விஷன்

பிரஸ்தாப வருஷத்தில் பதினெட்டு லோகல் யூனியன்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. வருஷக்கடைசியில் 72 லோகல் யூனியன்கள் இருந்தன. சென்ற வருஷத்தில் 54 யூனியன்கள் தான் இருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் யூனியன்களுக்கு அணைக்கப்பட்ட சங்கங்களின் தொகை 1,725 சென்ற வருஷத்தில் 1,283 சங்கங்கள் தான் யூனியன்களுக்கு அணைக்கப் பட்டிருந்தன. யூனியன் மேற்பார்வைக்குள் அடங்காத பிரைமெரி சங்கங்கள் வருஷக்கடைசியில் 209 இருந்தன.

### கோர்ட்டில் வழக்குகள்.

சென்ற வருஷத்தில் 1077 வழக்குகள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன, பிரஸ்தாப வருஷத்தில் 431 வழக்குகள்தான் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளில் பாதிக்குமேல் தென்கன்னடம் மதுரை ஜில்லாக்களிலிருந்து தாக்கல் செய்யப்பட்டன கோர்ட்டில் தாக்கல், செய்யப்பட்ட வழக்குகள் ஏராளமாகக் குறைந்ததற்குக் காரணம், ஆர்பிட்ரேஷன் முறை சங்கங்களால் கையாளப்பட்டது. வருஷ ஆரம்பத்தில் ஆர்பிட்ரேஷன் பைசலாகாமல், 447 கேஸ்கள் இருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் 4487 கேஸ்கள் ஆர்பிட்ரேஷன் தீர்ப்புக்காக அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் வசம் கொண்டு வரப்பட்டன. டிக்ரிசெய்யப் படுவதற்கு முன் 1172 கேஸ்கள் பைசல் செய்யப்பட்டன. வருஷக்கடைசியில் 873 கேஸ்கள் பைசலாகாமல் பாக்கிநின்றன.

### பொது ஜனங்களின் உதவி.

பொன ஜனங்களின் உதவி முன்போலவே ஏராளமாகக்கிடைத்தது. சென்ட்ரல் பாங்குகளின் பிரஸிடெண்டுகளும் காரியதரிசிக்கும் செய்துள்ள உதவியுடன் அடியில்கண்ட கனவான்கள் செய்துள்ள ஏராளமான உதவியும் அதிகமாகப் பாராட்டத் தக்கது:—

ஸ்ரீமான்கள்: T. நடராஜபிள்ளை, லால்குடி யூனியன் பிரஸிடெண்டு; M. S. சேஷாசல ஐயர், திருவண்ணாமலை யூனியன் காரியதரிசி; ராவ் சாகேப் ஏ. சேதுராமையர், நீடாமங்கலம் விவசாய சங்கத்தின் காரியதரிசி; ராவ் சாகேப். H. பெல்லி கௌண்டர், கெட்டியூனியன் பிரஸிடெண்டு; K. N. சின்னரங்கைய கௌண்டர் விஜயமங்கலம் யூனியன் பிரஸிடெண்டு; W. பீமசேனராவ், நரசபூர் சங்கத்தின் (அனந்தபுரம் ஜில்லா) காரியதரிசி; ராவ்சாகேப் C. அருளையா நாயுடு, ஊச்சேரி யூனியன் பிரஸிடெண்டு; H. சிவராவ், அனந்தபூர் யூனியன் காரியதரிசி; M. சிவராவ் புத்தூர்.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் மிஸ்டர். A வேதாசல ஐயர் செய்துள்ள திறமான வேலைக்கு அறிகுறியாக பிரஸ்தாப வருஷத்



தில் மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி யவர்களின் பிறந்ததினக் கொண்டாட்டத்தின்போது இராஜப்பிரதிநிதி யவர்களால் ராவ்பகதூர் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது.

---

## திருவாங்கூர் சமஸ்தானம் முதல் கோவாபரேடீவ் கான்பரன்ஸ்.

திருவாங்கூர் சமஸ்தானம் முதல் கோவாபரேடீவ் கான்பரன்ஸ் 1918-ம் வருஷம் மேமாதம் 7,8 தேதிகளில் மணிலக்கரையிலுள்ள கவர்ன்மெண்டு ஹைஸ்கூல் ஆங்கிலேயப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. திருவாங்கூர் திவான்பகதூர், எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் B. A., B. L, அக்கிராசனம் வகித்தார்.

வரவேற்புக் கமிட்டியின் தலைவரான மிஸ்டர். ஈ. உதயவர்மா, ராஜா பிரதிநிதிகளை மலையாளத்தில் வரவேற்றுப் பேசுகையில் பின் வருமாறு கூறினார்.

இந்தச் சமஸ்தானத்தின் முதல் கான்பரன்ஸ், தீவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களால் திறந்து வைக்கப்படுவது நற்சகுனமென்றே கருதுகிறோம். தீவான் பகதூர் மிகவும் படித்தறிந்தவர். விஷயங்களை நன்றாக ஆராய்ச்சி செய்துள்ளவர். தயாள குணமுடையவர். பரோபகார சிந்தையோடு கூடியவர். கூட்டுறவு முயற்சி எவ்வளவுதூரம் விருத்தியாகவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கருதுகிறார்களோ அவ்வளவுதூரம் விருத்தியடையக்காணோம். குயிலன், அலெப்பே, கோட்டையம் முதலிய விடங்களில் ஜில்லா பாங்குகள் ஸ்தாபனஞ் செய்யு ரிஜிஸ்ட்ரார் செய்த முயற்சி வீணாகப்போய்விட்டது. கூட்டுறவு முயற்சியில் ஜனங்கள் அதிக சிரத்தைகாட்டவில்லை யென்பதற்கு இஃதொன்றே போதுமான திருஷ்டாந்தம்.

பிரைமரி சங்கங்களுக்கு சென்ட்ரல் சங்கங்கள் வேண்டிய அளவு பண உதவி செய்ய முடியாமலிருக்கின்றது. இதற்குக் காரணம் சென்ட்ரல் சங்கங்களில் போதுமான டிபாஸிட்டுகள் வருவதில்லை. இதற்குக் காரணங்கள் என்னவென்பதை கவர்ன்மெண்டார் விசாரணை செய்ய வேண்டும்.

கூட்டுறவு ஞானம் பொதுஜனங்களுக்கு அதிகமாக இல்லாமலிருக்கின்றது. தேச பாஷைகளில் சிறு கூட்டுறவு நூல்களை பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகமாக வைக்கவேண்டும். அப்படிச் செய்வதில் மாணவர்கள் படிக்கவேண்டிய பாடங்கள் அதிகப்படாவண்ணம் ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்,

### அக்கிராசனர் உபந்நியாசம்.

அக்கிராசனரும் தம்முடைய பிரசங்கத்தை மலையாள பாஷையிலேயே செய்தார். அவர் பேசியதின் சுருக்கம் பின்வருமாறு: நான் அக்கிராசனம் வகித்ததின் பலனாக கூட்டுறவு இயக்கத்தில் வளர்ச்சியும் விருத்தியும் ஏற்படுமானால் நான் அக்கிராசனம் வகித்ததில் உண்மையாகவே பலன் ஏற்பட்டுள்ளதென்றுக் கருதுவேன். கூட்டுறவு சங்கங்கள் விர்த்தியடைவதும் அவைகள் திருப்திகரமாக வேலை செய்வதும் பொது ஜனங்கள் எவ்வளவு ஆதரிக்கிறார்களென்பதையும், பொது ஜனங்கள் எவ்வளவு வரைக்கும் ஊக்கங் கொண்டிருக்கிறார்களென்பதையும் பொருந்தியிருக்கும் கூட்டுறவு சங்கங்கள் விஷயமாக ஒவ்வொரு நபரும் எவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொள்ளுகிறார்களோ அவ்வளவாகத்தான் கூட்டுறவு இயக்கம் விர்த்தியடையும் பொது ஜனங்கள் சிரத்தை யெடுத்துக்கொள்ளுவதில் அசட்டையாயிருந்து கொண்டு கவர்ன்மெண்டு சிரத்தையால் சகலமும் முடிந்துவிடுமென்று மனப்பால் குடிப்போமானால் கவர்ன்மெண்டு முயற்சி முழுவதும் பொது ஜனங்களின் சிரத்தைக்கு ஒருபோதும் ஈடாகாது.

பள்ளிக்கூடங்களில் கூட்டுறவு நூல்களை பாடபுத்தமாக வைக்க வேண்டுமென்று வரவேற்புக் கமிட்டியின் தலைவர் சொன்னார். நான் இவ்விஷயத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன். சிறு குழந்தைகளுக்குக் கூட்டுறவு விஷயம் போதிப்பதால் சிறிதேனும் நன்மை விளையக்கூடுமென்று நான் கருதவில்லை. கூட்டுறவு இயக்கத்தில் எத்தகையப் பயிற்சியும் வேண்டுமென்பது கிடையாது. கூட்டுறவு இயக்கம் முழுவதும் நடத்தையையும், நம்பிக்கையையும் பொருந்தியிருக்கின்றது.

சென்ட்ரல் பாங்கிற்கு கவர்ன்மெண்டார் கடன்கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கோவாபரேடீவ் ரிஜிஸ்ட்ரார் சொல்லுகிறார். சென்ட்ரல் பாங்கு ஸ்தாபனமாகி இரண்டுவருஷமாகின்றது. சென்ட்ரல் பாங்கில் பங்குகள் ஏராளமாக எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வாஸ்தவத்தில் விஷயம் அவ்வாறு முடியவில்லை. பங்குத்தொகை இது வரையில் ரூ 11,000 தான சேர்ந்திருக்கின்றது. கவர்ன்மெண்டார் ரூ. 50,000 கடன்கொடுத்திருக்கிறார்கள். இனிபொது ஜனங்கள் தான் ஏராளமாக டிபாஸிட்டுகள் செய்யவேண்டும். பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தில் சென்ட்ரல் பாங்குகளுக்கு கவர்ன்மெண்டாரால் கடன் கொடுக்கப்படுவதில்லை. திருவாங்கூர் சென்ட்ரல் பாங்குகளுக்கு நம்முடைய சமஸ்தானத்தார் கொடுத்துள்ள கடன் உதவியே அதிகமென்றுக்சொல்லவேண்டும.

கவர்ன்மெண்டாரிடம் கன்டிராக்ட்ர்களும் இதரர்களும் கட்டியிருக்கும் ஜாமீன் தொகைகளை சென்ட்ரல் பாங்கில்கவர்ன்மெண்டார் டிபாசிட்டு செய்யவேண்டும்மென்று சொல்லப்படுகிறது. ஜாமின்தொகைகள் திடீரென்று வாபீஸ்செய்ய வேண்டிவரும். ஆதலால், இதரவிடங்களில் டிபாஸிட்டு செய்வது வைத்தல் உசிதமாகாது.



திருவாங்கூர் சமஸ்தானம் கோவாபரேடீவ் ரிஜிஸ்ட்ரார் ஸ்ரீமான், வி. கோவிந்தபிள்ளை அவர்கள் B. A., B. L. "கூட்டுறவின் சில நன்மைகள்" என்னும் விஷயமாக ஒரு வியாசம் வாசித்தார்.

ஸீனியர் தீவான் பேஷ்கார் ஸ்ரீமான், என். சுப்ரமண்ய ஐயரவர்கள் M. A. "கூட்டுறவும், பொருளாதாரமும்" என்னும் விஷயமாக ஒரு வியாஸம் வாசித்தார்.

பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் கான்பரன்ஸ் கலைந்தது.

---

## தஞ்சாவூர் ஜில்லா ஆறுவது கோவாபரேடிவ் கான்பரன்ஸு.

தஞ்சாவூர் ஜில்லா ஆறுவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1919-ம் வருஷம் ஜனவரிமாதம் 18-ந்தேதி யன்று பாபநாசத்தில் சென்னை, ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் திவான்பகதூர், T. சதாசிவ ஐயரவர்கள் அக்கிராசனத்தில் நடந்தது.

கனம் சதாசிவ ஐயரவாகள் மனைவியாரும் வந்திருந்தார்கள்.

ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். கான்பரன்ஸின் நடவடிக்கைகள் முழுவதும் தமிழிலேயே நடந்தன.

### வரவேற்புக் கமிட்டியின் தலைவர்.

வரவேற்புக் கமிட்டியின் தலைவரான திருக்கலூர் மிஸ்டர் வி. வெங்கட்டராமயரவர்கள் தஞ்சை ஜில்லாவில் கூட்டுறவு இயக்கம் எப்படி விர்த்தியடைந்ததென்னும் சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொன்னார். ஜில்லா போர்டின் சத்திரப் பண்டின் மிகுதியான தொகையை சுமார் ஒரு இலட்சம் ரூபாய்வரைக்கும் கும்பகோணம் ஆர்பன் பாங்கியில் டிபாஸிட்டு செய்யும்படியாக ஏற்பாடுசெய்த, தஞ்சை ஜில்லா கலெக்டராகவிருந்த கனம் (மிஸ்டர்) R. B. வுட், ஐ. ஸி. எஸ். அவர்களுக்கு நன்றி பாராட்டிப் பேசினார்.

கல்வியிலும் பொதுஜன ஊக்கத்திலும் முதன்மையாக நிற்கும் தஞ்சை ஜில்லாவாசிகள், கூட்டுறவு விஷயத்தில் மாகாணத்தின் மற்ற ஜில்லாக்களைவிட பின்னடைந்திருப்பது விசனிக்கத்தக்கதென்றும் இனி வருங்காலத்தில் பிரயத்தனப்பட்டு தம்முடைய அசிரத்தைக்கு ஈடுசெய்யு

வேண்டுமென்றும் சொன்னார். தொழில் சம்பந்தமாக செய்யக்கூடிய முயற்சிகள் பலவாறாக இருப்பதாகவும், தொழில் முயற்சியுடன் கூட்டுறவு இயக்கத்தையும் சேர்த்து பாடுபடுவதனால் அதிக நன்மையுண்டென்றும் சொன்னார்.

கான்பரன்ஸிற்கு வரக்கூடாமைக்கு வருந்துவதாக வந்த தந்திகளும் கடிதங்களும் படிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை 1 திருப்பரந்தாள் பண்டார சன்னிதி தம்பிரான் அவர்கள் 2 கனம் ராவ் பகதூர், டி. அரங்காச்சாரியார் 3 கனம் மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார் 4 மிஸ்டர் F. R. எம்மிங்வே I. C. S. கோவாபரேடிவ் ரிஜிஸ்டரார்.

வக்கீல் மிஸ்டர் ஸர், எஸ். கிருஷ்ணஸ்வமி ஐயரவர்கள் பிரரேபணை செய்ய ராவ்சாகேப், C. R. லட்சுமி வராக ஐயங்காரும், இராஜகிரி அஞ்சுமன் காரியதரிசி மிஸ்டர் கே. அப்துல் மஜீத் சாஹேபும் ஆமோதிக்க ஜஸ்டீஸ் திவான்பஹதூர் சதாசிவ ஐயரவர்கள் அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

### அக்கிராசனர் உபந்நியாசம்.

அக்கிராசனர் தமிழிலேயே உபந்நியாசம் செய்தார் அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சங்கங்களில் சேர்ந்துள்ள மெம்பர்களுக்குக் குறைந்த வட்டிக்கு பணம் வாங்கிக் கொடுப்பதுமட்டும் ஐக்கிய சங்கங்களின் காரியமல்ல. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமும் அதுவல்ல. குறைந்தவட்டிக்கு மெம்பர்களுக்குப் பணம்வாங்கிக் கொடுப்பது, கூட்டுறவு இயக்கத்தின் ஒரு சிறிய பாகமாகும். தேசத்திற்குச் செய்ய வேண்டிய நன்மை, பரோபகாரம் முழுவதும், கூட்டுறவு இயக்கத்தில் அடங்கும். கூட்டுறவும், ஒற்றுமையும் ஒரு தேசத்திற்குச் செய்யக் கூடாத நன்மைகள் ஒன்றுமே கிடையா. கூட்டுறவு இயக்கத்தால் ஏற்படக்கூடிய நன்மைகள் பலவாறாக இருக்கின்றன. நன்மைகள் விளையக்கூடியதற்கு வித்துக்கள் போட்டாய் விட்டன. அவ்வித்துக்கள் செடியாகி மரமாகிப் பலனைத் தரும் வரைக்கும் சரிவரப் பாதுகாக்கப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கத்தினால் விளையக்கூடிய சன்மார்க்க போதனைகளும், நன்மார்க்க வழிகளும், அதிகமாயிருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தில் சமூகத்தினர்கள் எல்லோருடையவும் ஒற்றுமை ஏற்படக்கூடும். பொது ஜனங்களுக்கு உழைக்க வேண்டுமென்பதும், ஜாதிமத வேற்றுமையைப் பாராட்டக் கூடாதென்பதும் முன் காலத்தில் நம்தேசத்தில் வேரூன்றியிருந்தது. தற்காலத்தில் அவ்வழக்கங்கள் சீர்குலைந்து போகவே அவ்வழக்கங்கள் மீண்டும் கூட்டுறவு இயக்கத்தில் நிலைக்கக் கூடியதாக இருக்கின்றது. முன் காலத்தில் அரசர்களைத் தெரிந்தெடுப்பதற்கும் இராஜாக்களை சிம்மாசனத்தில் வீற்றிருக்க வைக்கவும் ஏற்பட்டிருந்த ஜனப்பிரதிநிதிகள் சபைகளில் ஜாதிமத வேற்றுமையின்றி எல்லோரும் சேர்ந்திருந்தார்களென்பதற்கு அத்தாட்சிகள் பலவிருக்கின்றன. நாளடைவில் இவ்வழக்கங்கள் சீர்குலைந்துபோய் ஒற்றுமையென்பது இருந்தவிடந் தெரியாமற் பறந்துபோய்விட்டது. தற்காலம் ஏற்பட்டுள்ள கூட்டுறவு இயக்கம் சரிவர நடத்தப்பட்டால் ஒற்றுமை யேற்பட்டு சகோதரபாவம் முதிரும். மானிடப் பிறவிக்கே நன்மை ஏற்படும்.



ஸ்திரீகளுடைய உதவியையும் கூடுமானபோது நாடவேண்டும். ஆடவர்களைப்போலவே ஸ்திரீகளுக்கும் புத்தி சாமர்த்தியமும், திறமையும் உண்டு. ஆடவர்களைப்போலவே ஸ்திரீகளுக்கும் சகல வேலைகளிலும், தொழில்களிலும் தலையிடக்கூடிய புத்திகூர்மையும் உண்டு. ஆனது பற்றி ஸ்திரீகளையும் துணைக்கொண்டுச் செல்வது நன்மையாகும். ஆண்மக்கள் மட்டுமேயல்லாது பெண்மக்களும் விர்த்தியடைவார்களாகில் தேசத்தின் முன்னேற்றம், வெகு எளிதிலும் சீக்கிரமாகவும் ஏற்படக்கூடும்.

கூட்டுறவு சங்கங்கள் ஏழைகளின் பிரயோசனத்திற்காக ஏற்பட்டவைகளாதலால் பணக்காரர்கள் இன்னும் செல்வ வந்தர்களாகவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஏழைகளுக்கிடங்கொடுக்காமல் தடைசெய்து நிற்கக்கூடாது. கூட்டுறவு இயக்கம் முதிரமுதிர குடி விலகும். சிக்கனம் ஏற்படும். வீண்செலவும் அதிகச்செலவும் ஒழியும்.

கடைசியாக நான் சொல்ல விரும்புகிற வார்த்தை யொன்றுண்டு இக்காலத்தில் மன்னர்களும் சக்ரவர்த்திகளும் அழிந்து போவது நமக்கு வழிகாட்டியாக இருக்கட்டும். ஏழைகளையும், தாழ்ந்த வகுப்பினரையும், தாழ்வாகவும் கேவலமாகவும் நடத்தும் வழக்கத்தை இன்னும் இந்தியர் கைக்கொள்ளல் தகுதியாகாது. அவர்களையும் முன்னடையச் செய்து சம ஸ்தானத்தில் உட்காரவைத்து சுகம் பெறுவதற்குக் கூட்டுறவு இயக்கந்தான் தகுந்த இடம். ஆகையினால் இந்த ஜில்லா வாசிகளும் கூட்டுறவு இயக்கத்தை இத்தகையக்காரணங்களில் உபயோகித்து சுகம் பெறவேண்டுமெனக் கோருகிறேன்.

### அஸிஸ்டேண்டு ரிஜிஸ்ட்ரார்.

தஞ்சாவூர் ஜில்லாவில் நடந்த சென்ற கான்பரன்ஸிற்குப் பின் தற்காலம் வரைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் விர்த்தியடைந்திருக்கும் விர்த்தாந்தத்தை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர், எம். கே. வெங்கடாச்சாரியார் கூறி இவ்வளவு தூரம் விர்த்தியடைந்தது போதாதென்றும் கூறினார். நூதன சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்வதில் தஞ்சை ஜில்லாவில் உள்ள பிரத்தியேகக் கஷ்டங்களையும் எடுத்துக் காட்டினார்.

### ராவ்பகதூர், என். கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.

தஞ்சை ஜில்லாவில் கூட்டுறவுச் சங்கங்கள் விர்த்தியடைந்ததையும் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு வரைக்கும் தஞ்சாவூர் ஜில்லாவில் வெற்றிப் பெற்றுள்ளதென்பதையும் போதுமான அளவு கூட்டுறவு இயக்கம் வெற்றிப் பெறாததற்குக் காரணங்களையும் விஸ்தாரமாக ராவ்பகதூர், என். கிருஷ்ணசுவாமி ஐயங்கார் எடுத்துச் சொன்னார். கூட்டுறவு இயக்கம் முற்காலங்களிலும் நம் இந்திய தேசத்தில் இருந்ததென்பதற்கு திருஷ்டாந்தங்களை எடுத்துக்கூறி அத்தகைய இயக்கம் தற்காலம் பலஹீனமடைந்திருப்பதற்கும் காரணங்களைச் சொன்னார். பஞ்சாப், பம்பாய் மாகாணங்களில் கூட்டுறவு இயக்கம் ஏராளமாக விர்த்தியடைந்திருக்கிறதென்றும், அம்மாகாணங்களைவிட பெரிய மாகாணமாகிய நம்முடைய சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் வேண்டிய அளவு விர்த்தியடையவில்லையென்றும் சொன்னார். கவர்ன்மெண்டு அதிகாரிகளின் ஆளுகை கொஞ்சங் கொஞ்சமாக குறைந்துவர வேண்டுமென்றுஞ் சொன்னார்.

### தீர்மானங்கள்.

பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

யுத்தம் முடிந்து நேசக்கட்சியாருக்கு வெற்றிக் கிடைத்துள்ளதின் விஷயமாய் மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்கட்கும் அரசர் பெருமாட்டிக்கும் இக்கான்பரன்ஸ மனமார்ந்த வந்தனமளிக்கின்றது.

மூடப்பட்ட சங்கங்களில் ஸிவில் கோர்ட்டுகள் மூல்யமாய் தொகைகளை வசூல் செய்வதற்குப் பதிலாக ரிவினியூ கோர்ட்டுகள் மூல்யமாய் வசூல் செய்ய அனுமதி கொடுக்கப்பட வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

இவ்விஷயமாக வாக்குவாதம் நடந்தபின் இவ்விஷயத்தை விசாரணை செய்து அடுத்த கான்பரன்ஸிற்கு ரிபோர்ட்டுச் செய்யும்படியாய் ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கு வேண்டிய எருக்களையும், விதை முதலியவைகளையும் வாங்குவதிலும், விற்பதிலும் கூட்டுறவு சங்கங்களின் உதவியை விவசாய டிபார்ட்டுமெண்டார் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

லோகல் போர்டுகளினுடையவும், முனிசிபல் சங்கங்களினுடையவும், ஸ்பெஷல் பண்டுகளை கூட்டுறவு சங்கங்களில் டிபாஸிட்டு செய்ய வேண்டும்.

மாணவர்களுக்கு கூட்டுறவு இயக்கம் பயன்படும்படியாக பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்க பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளும், லோகல் போர்டுகளிலும், மாகாணக் கௌன்ஸில்களிலும், மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் X] 1919௵ பிப்ரவரி & மார்ச்சு௴ [இலக்கம் 8, 9

## பத்திராதிபரின் குறிப்புகள்

கூட்டுறவும் இராஜீய விஷயமும்.

இராஜீய விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் அயர்லாந்து தேசத்தில் இருப்பதைப்போல் வேறெந்த தேசத்திலும் கிடையா. அப்படிக்கிருந்தும், இராஜீய விஷயங்களில் ஒருவருக்கொருவர் நேர்மாறான அபிப்பிராயமுள்ளவர்களைக்கூட, ஸர் ஹொரேஸ் பிளங்கட் என்பவரின் சாமர்த்திய முயற்சி கூட்டுறவின் ஐக்கியத்தின்கீழ் ஒன்றாகச் சேரும்படி செய்திருக்கின்றது. அப்படிச் சாத்தியமானதற்குக் காரணமென்னவெனில் இராஜீய விஷயக் கிளர்ச்சியையும் இராஜீய சம்பந்தமான விஷயத்தையும் கூட்டுறவினின்றுத் தனியே பிரித்து வைத்ததேயாகும். அதாவது முக்கியமாக மாறுபாடான அபிப்பிராயமுள்ள இராஜீய விஷயத்தை கூட்டுறவுடன் கலக்க விடாமல் காத்து வருவதே. இந்தியாவிலும் இவ்வழியையே பின்பற்ற நாம் பிரயத்தனஞ் செய்கிறோம். இது வரையில் இவ்வழியில் மிகச் சாமர்த்தியமாக நடந்து வெற்றிப் பெற்றிருக்கிறோமென்றே சொல்லலாம். கூட்டுறவு விஷயங்களில் இராஜீய விஷயமும், மதாசார விஷயமும் கலக்கக்கூடாதென்பதாக இரண்டொரு மாகாண கவர்ன்மெண்டுகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆயினும் இத்தகைய உத்தரவு மிக்க அனாவஸ்யமென்றே பெரும்பாலும் கருதப்பட்டு வருகின்றது. இராஜீய விஷயத்தை விரிவாக எடுத்துக்கொண்டு விசாலமான நோக்கத்துடன் கருதும்போது எத்தகைய இயக்கத்தினின்றும் இராஜீய விஷயத்தைத் தனியே பிரிப்பது சாத்தியமாகாது. எந்த இயக்கத்தினின்றும் இராஜீய விஷயத்தைத் தனியே பிரித்துவைப்பதும் உசிதமாகாது, உதாரணமாக, கூட்டுறவு சங்கங்களில் பழகுவதால் சுய ஆட்சி

யின் நிர்வாகத்திற்கு அஸ்திவாரம் ஏற்படுகிறதென்பதைச் சொல்லுவதினின்றும் கூட்டுறவு முயற்சிக்காரர் எவரையும் தடுக்க முயலுவது முட்டாள்தனமாகும். அதுபோலவே இந்திய ஆட்சியின் அரசாங்கக் கொள்கையை, உதாரணமாக ஸர் டேனியல் ஹாமில்டன் அவர்கள் தங்கநாணய ரிஸர்வைப்பற்றி சொன்னதைப்போன்ற விஷயத்தை (வேறிடத்தில் பிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது) கூட்டுறவு கான்பரன்ஸுகளில் பேசுவது கூடாதென்றுத் தடுப்பது முழு முட்டாள்தனமாகும். ஆனால் அபிப்பிராய பேதமுள்ள விஷயங்களை உதாரணமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் (Communal representation) பிராமணர், பிராமணரல்லாதார் இயக்கவிஷயம், சுயஆட்சி வேண்டுமா வேண்டாமா என்னும் விஷயம், இன்னும் இவைபோன்றவைகளை முழுவதும் விலக்கி வைக்கவேண்டும்.

சித்தூர்ஜில்லா கூட்டுறவு கான்பரன்ஸில் ஸ்ரீமான், டி. ஆதிநாராயண செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தபோது சில அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளார். இது சம்பந்தமாகத்தான் நாம் இந்த விஷயங்களை எழுத நேர்ந்தது. பார் அட்லா பரீட்சைக்குப் படிப்பதற்கு அயர்லாந்து செல்வதற்கு முன்னரேயே ஸ்ரீமான், செட்டியாரவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் அதிகமாகச் சம்பந்தப் பட்டுள்ளவர். இவ்விராஜதானியில் கூட்டுறவு இயக்கத்தில் சம்பந்தப் பட்டுள்ளவர்களில் முதன்மையானவர்களுள் ஸ்ரீமான் செட்டியாரவர்களும் ஒருவராக விளங்கினார். அயர்லாந்து தேசத்தின் கூட்டுறவு விஷயத்தையும், இங்கிலாந்து தேசத்தின் கூட்டுறவு விஷயத்தையும் அவர் அறிந்துகொண்டு கூட்டுறவு ஞானத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார். சீர்மையிலிருந்து திரும்பி வந்தபின் தம் வாழ்நாள் முழுவதையும் பொதுஜன ஊழியத்திற்கே செலவழித்து வருகிறார். அவருடைய திறமையையும், அறிவையும் உணர்ந்து கொண்டுள்ளவர்கள் கூட்டுறவு கான்பரன்ஸுகள் பலவற்றிற்கும் அக்கிராசனம் வகிக்கும்படி அவரைக் கேட்டுக் கொள்வது ஆச்சர்யகரமான விஷயமல்ல. கூட்டுறவு விஷயத்தை உள்ளது உள்ளது போலவே எடுத்துக் கூறும் சாமர்த்திய சாலி. கூட்டுறவு விஷயத்தைப் பண்படுத்திச் சொல்லும் அவர் திறமையைப் பாராட்டுகிறோம். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் நாம் மிக்க வருந்துகிறோம்.

கூட்டுறவு விஷயத்தையும் இராஜீய விஷ்யத்தையும் தனியே வைக்கவேண்டுமென்ற அயர்லாந்து தேசத்தின் அரிய வழக்கத்தை இவர் அநேகமாய்க் கையாளுவதில்லை. சித்தூர் கான்பரன்ஸில் பேசும்போது, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தை நம்ம தாக்கிக்கொள்ள வேண்டுமென்பதாகப் பேசினார். அதாவது இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக கூட்டுறவு இயக்கம் இந்தியர்கள் ஆளுகையில்



இருக்கவேண்டுமென்றுச் சொன்னார். இவ்வபிப்பிராயத்துடன் நாமும் கலந்து கொள்ளுகிறோம். "ஒரு சங்கத்தின் பணம் சர்க்காரின் பணமென்றும், சர்க்காரார் அன்னிய தேசக்காரராகையால் கிராமவாசியை புண்படுத்திப் பணம் பறிக்கவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாயிருக்கிறதென்றும் எண்ணி, தான் வாங்கும் கடனுக்குப் பொய்க்காரணத்தைக் கிராமவாசி சொல்லுகிறானென்றும், அல்லது பொய்க்காரணத்தைக்கொண்டு மறு கடன் கொடுக்கும்படியாக பஞ்சாயத்தாருக்கு உதவி செய்கிறா"னென்றும் சொல்லியதின் அபிப்பிராயத்தையாவது, சொல்லிய மாதிரியையாவது நாம் அங்கீகரிக்கவில்லை. பின்னும் மதப் பற்றுள்ளவர்களால் கூட்டுறவு இயக்கம் நடத்தப்பட வேண்டுமென்பதாகவும் சொல்லியிருக்கிறார். "வாஸ்தவமாகவோ அல்லது தவறாகவோ கூட்டுறவு இயக்கம் அன்னிய அரசாங்கத்தார் இயக்கமென்பதாகக் கருதப்பட்டு வருகின்றது. இம்மாதிரி நோக்கம் இருந்துவரும் வரையில் இத்தகைய மதப் பற்று சாத்தியமாகுமாவென்றும்" அவர் கூறுகிறார். கிராமவாசிகள் அநேகர் இவர் கூறுவதுபோல் சொல்லுகிறார்களென்று நாம் நினைக்கவில்லை. அவர்கள் அப்படிக் கூறுவதாக விருந்தாலும் அபிப்பிராய பேதத்திற்கிடமான இத்தகைய இராஜீய சம்பந்தமான விஷயம் கூட்டுறவுக் கான்பரன்ஸில் சொல்லப்பட்டமாதிரியை நாம் அங்கீகரிக்க முடியாது.

தவிர ஸ்ரீமான் செட்டியாரவர்கள் மற்றொரு விஷயத்தையும் சொல்லியிருக்கிறார். மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தக் கோரிக்கைகளின்கீழ் குடிகளிடம் ஒப்புவிக்கப்படப்போகும் சில விஷயங்களில் கூட்டுறவும் ஒன்றாக இருக்கக்கூடாதென்று, மிஸ்டர் ஹெமிங்வே லார்ட் ஸௌத்பரோ சீர்திருத்தக் கமிட்டியின் முன்பாகச் சொல்லியிருப்பதாக ஸ்ரீமான் செட்டியாரவர் கான்பரன்ஸில் தம் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். லார்டு ஸௌத்பரோ சீர்திருத்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டு இன்னும் பிரசுரிக்கப்படவில்லை. ஸ்ரீமான் செட்டியாரவர்கள் இப்படிச் சொன்னதில் ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கும், மிஸ்டர் ஹெமிங்வேய்க்கும் வாக்குவாதம் நடந்ததாகத் தெரிகிறது. கூட்டுறவு இயக்கத்தின் நன்மையை முன்னிட்டு இத்தகைய விவாதத்திற்கு இடமேற்பட்டிருக்கக்கூடாதென்று எல்லோருமே கருதுவார்களென்று நாம் நிச்சயமாய்க் கருதுகிறோம். இராஜீய விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித அபிப்பிராயமிருக்கக்கூடும். ஒவ்வொருவரும் தம் அபிப்பிராயத்தையே பிரதானமாகக் கொள்ளலாம். ஆயினும் தம் அபிப்பிராயத்தை இடம் பார்த்து வெளியிடுதலே நன்மை. இவ்விஷயத்தை நோக்கி நடக்காவிட்டால் கூட்டுறவு இயக்கம் வெற்றிபெறாது. இயக்கம் நடைபெறுவதே அசாத்தியமாகிவிடும்.

***

1917-18 வருஷத்திற்கு திருவாங்கூர் சமஸ்தானத்து கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் ரிப்போர்ட்டும் கொச்சி சமஸ்தானத்து ரிஜிஸ்ட்ரார் ரிப்போர்ட்டும் வரப்பெற்றோம். இவ்விரு ரிப்போர்ட்டுகளுக்கும் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றது. கொச்சி சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்கம் ஏராளமாக வளர்ச்சியடைந்தது. பிரஸ்தாப வருஷத்தில் சங்கங்கள் 44லிருந்து 58-க்கு அதிகரித்தன. சங்கத்தின் அங்கத்தினர்கள் 3000-த்திலிருந்து 5300-க்கு உயர்ந்தார்கள். சங்கங்களின் மூலதனம் ரூ. 55000த்திலிருந்து ரூ. 1,45,000-க்கு உயர்ந்தது. பிரஸ்தாப வருஷத்தில் ஒரு சென்டிரல் பாங்கும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. இச்சென்டிரல் பாங்கில் சங்கங்கள்மட்டுமே மெம்பர்களாகலாம். இச்சென்டிரல் பாங்கு பிரஸ்தாப வருஷத்தில் வேலை ஆரம்பிக்கவில்லை. சங்கங்களின் மூலதனம் சென்டிரல் பாங்கு ஏற்பட்டதால் அதிகரித்து விடவில்லை. பங்குத்தொகையும், மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து கடன்களும், டிபாசிட்டுகளும், ஜாமீன் தொகைகளின் டிபாசிட்டுகள் தொகையும் அதிகரித்ததால்தான் சங்கங்களின் மூலதனம் உயர்ந்தது. கடைசியாகக் கூறப்பட்ட, ஜாமீன் தொகைகளின் டிபாசிட்டுகளை கூட்டுறவுச் சங்கங்களில்போட்டுவைக்கும்படியாக சமஸ்தான தர்பார் தம்முடைய அதிகாரிகளுக்கு பிரத்தியேக உத்தரவு ஒன்று பிறப்பித்தார்கள். இந்த உத்தரவு தற்போது நகர பரிபாலன ஆபீஸர்களுக்கும், மதசம்பந்தமான சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் நிர்வாகஞ் செய்யும் தர்மகர்த்தாக்களுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் பிரயாணத்தில் (கியாம்பில்) சொற்ப நாட்களைச் செலவழித்ததற்காக கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ராரை தர்பார் கண்டித்து எழுதியிருக்கின்றது. சங்கங்கள் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் கண்ணாயிருக்கும் படியாக தர்பார் ரிஜிஸ்ட்ராருக்குக் கூறுகின்றது. ரிஜிஸ்ட்ரார் செய்துள்ள வேலையை சமஸ்தான தர்பார் புகழ்ந்து பேசுகின்றது. நாமும் அவ்வபிப்பிராயத்தை ஆமோதித்து சமஸ்தான கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் காயத்திரிநாத ஐயரவர்கட்கு நம்முடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்கள்**

கொச்சி சமஸ்தானத்தின் ரிப்போர்ட்டு இவ்விதமாக இருக்க திருவாங்கூர் சமஸ்தானத்தின் ரிப்போர்ட்டு நேர் மாறாக இருக்கின்றது. இதற்குக் காரணமென்னவென்று அறிந்துகொள்ளக் கூடவில்லை. கொச்சி சமஸ்தானத்திலும், பிரிட்டிஷ் இராஜதானியைச் சேர்ந்த மலயாள ஜில்லாவிலும், திருவாங்கூர் சமஸ்தானத்திலும், விஷயங்களும் நிலைமைகளும் ஒரே மாதிரியாகத்தானிருக்கின்றன. சுற்றளவில் மலை



யாளத்தை விடப் பெரிதாக இருக்கின்றது. கொச்சி சமஸ்தானத்தை விட ஐந்து மடங்கு பெரிதாக இருக்கின்றது. ஜனத்தொகையிலும் மலையாளத்தை விட அதிகமாக இருக்கின்றது. கொச்சி சமஸ்தானத்தைவிட நான்கு மடங்கு அதிகமாகவும் இருக்கின்றது. பொதுவாகக் கல்வி விஷயத்திலேயோ மேற்குக் கடலோரம் முழுவதுமே முன்னடைந்திருக்கிறதென்று சொல்லலாம். 1917-18 வருஷத்தில் மலையாள ஜில்லாவில் கூட்டுறவுச் சங்கங்கள் 74 லிருந்து 112-க்கு உயர்ந்தன. கொச்சி சமஸ்தானத்தில் 44 லிருந்து 58-க்கு உயர்ந்தன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் மட்டும் 40 லிருந்து 45க்கு அதிகரித்துள்ளன. இம்மூன்று இடங்களுக்கும் ஒவ்வோரிடத்திலும் ஒரு சென்ட்ரல் பாங்கு ஏற்பட்டிருக்கின்றது. மலையாள ஜில்லா சென்ட்ரல் பாங்கு பிரஸ்தாப வருஷத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டதென்றாலும் மிகவும் திருப்திகரமாக வேலைகள் நடந்திருக்கின்றன. கொச்சி சமஸ்தானத்து சென்ட்ரல் பாங்கு பிரஸ்தாப வருஷத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதென்றாலும் பிரஸ்தாபவருஷத்தில் வேலை துவக்கவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்து சென்ட்ரல் பாங்கு ஸ்தாபனமாகி சில வருஷங்கள் ஆகிறதென்றாலும் அதன் வேலை திருப்திகரமாக நடைபெறவில்லை. அப்பாங்கு நடத்தியுள்ள வேலையைக் கண்டு அப்பாங்கின் டைரெக்டர்களும், மெம்பர்களும் தலைசாய்த்துக் கொள்ள வேண்டியது தான். பங்குத் தொகை வசூல் செய்வதற்குக் கூட அதனால் கூடவில்லை போலும். அல்லது சிறிதேனும் கவனியாமல் அலட்சியமாக இருக்கிறது போலும். மெம்பர்களாவது, மெம்பர்களல்லாதவர்களாவது டிபாசிட்டுகள்செய்ததேகிடையாது. அந்தசென்ட்ரல்பாங்கின் மூலதனம் ரூ.65,000, அவற்றுள் ரூ. 50,000 சமஸ்தானத்தால் டிபாசிட்டு செய்யப்பட்டுள்ளது. இந்தபாங்கின் நடவடிக்கைகள் சம்பந்தமாக திருவாங்கூர் சமஸ்தானத்து முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸில் பலமாக வாதஞ் செய்யப்பட்டது. சமஸ்தானம் இன்னும் பணஉதவிசெய்ய வேண்டுமென்னும் விஷயமாக கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்த திவான்அவர்கள் அவ்விஷயத்தைப் பலமாகக் கண்டித்துப்பேசினார். பிரிட்டிஷ்இந்தியாவில் அரசாங்க உதவி வெகு சொற்பமாகவே செய்யப்படுகிறதென்றும் எடுத்துக்காட்டினார். சங்கங்கள் அதிகமாக ஸ்தாபிக்கப்படாததற்குக் காரணமாக, சங்கங்களை ஸ்தாபனஞ் செய்வதில் நிலைமையையும், இருக்கும் விஷயங்களையும் நன்கு ஆராய்ச்சி செய்துச் செய்ய வேண்டுமென்றும் விஷயத்தைக் கவனியாமல் அவசரப்பட்டுச் செய்யக்கூடாதென்றும், சமஸ்தானம் செய்துள்ள ஒரு உத்தரவை ரிஜிஸ்ட்ரார் எடுத்துக் காட்டுகிறார். இவ்விஷயத்தை நாம் அங்கீகரிக்கக் கூடவில்லை. வருஷ ஆரம்பத்தில் 400-சங்கங்கள் இருந்து பிரதி வருஷமும் 5-சங்கங்களுக்குப் பதிலாக 300, 400, சங்கங்கள் அதிகரித்திருக்குமானால் இவ்வெச்சரிக்கையை சரி

யென ஒப்புக்கொண்டிருப்போம். குறை எங்கிருக்கிறதென்று கண்டு பிடிக்கவேண்டிய தவசியம். இதற்கு வெளியிலிருந்து கூட்டுறவு இயக்கத்தில் நிபுண ரொருவரைக் கொண்டு தர்பார் விசாரணை செய்யச்சொன்னால் நலமா யிருக்கும்.

* * *

ஜமீன்தார்களும் கூட்டுறவு இயக்கமும்.

முன்னடைந்துள்ள ஜமீன்தார்கள் கூட்டுறவு இயக்கத்தில் அதிக ஊக்கங்காட்ட வேண்டுமென்றும், தங்களுடைய ரையத்துகளுக்குள் கூட்டுறவு இயக்கத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்றும் ஜமீன்தாரர்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஜமீன்தாரின் ரையத்துக்கு பிரத்தியேகமாக ஏற்பட்டுள்ள பொருளாதார கஷ்ட நிலைமையை முன்னிட்டு அவன்சிலோன் பர்மா, அஸ்ஸாம், பிஜிமுதலியஇடங்களுக்கு வெளிச்செல்லுகிறான். இதைத் தடுக்கவேண்டுமானால் கூட்டுறவு இயக்கந்தான் தகுந்த மார்க்கம். இவ்விஷயத்தில் சந்தேக அபிப்பிராயமுள்ளவர்கள் அயர்லாந்தின் விஷயத்தை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டியது அவசியம். ஸர் ஹொரேஸ் பிளங்கட்டும், அவர் நண்பர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ள தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டபின் வெளி நாடுகளுக்கு குடியேறுவது என்கிற விஷயம் அயர்லாந்தில் அறவே ஒழிந்துவிட்டதென்றே சொல்லலாம். நமது இவ்விராஜதானியின் வடக்கு ஜில்லாக்களின் ஜமீன்தார்கள் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டி வருவதை பார்க்கச் சந்தோஷப்படுகின்றோம். இவ்விஷயத்தில் செல்லபள்ளி குமார ராஜா அவர்கள் பெயர்போனவர். விஜய நகரம் மகா இராஜா அவர்கள் விஜயநகரம் கோவாபரேடிவ் பாங்கில் ஒரு மெம்பர். விஜயநகரம் ஜில்லா பாங்கில் ஏராளமானத் தொகையை டிபாசிட்டுச்செய்திருக்கிறார். வதவான் இராணி சாஹெபா அவர்களும், பொப்பிலி மகா இராஜா அவர்களும், அவருடையகுமாரர்களும் கூட்டுறவு இயக்கத்தில் அதிக சிரத்தையுள்ளவர்கள். வடஜில்லாக்கள் ஜமீன்தார்கள் போலவே இதர ஜமீன்தார்களும் பிரத்தியேகமாக மேல்பாகம், தென்பாகத்திய ஜில்லாக்கள் ஜமீன்தார்களும் ஊக்கங்காட்டி வருவார்களென்று நம்புகிறோம்.

* * *

வங்காள கோவாபரேடிவ் ஆர்கனைஸேஷன் சொஸைடி.

வங்காள கோவாபரேடிவ் ஆர்கனைஸேஷன் சொஸைடியின் முதல் வருஷாந்தர ரிப்போர்ட்டு கிடைக்கப் பெற்றோம். சங்கத்தின் நோக்கங்களும், சங்கங்கத்தின் இலட்சியங்களும் ரிப்போர்ட்டில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சங்கம், இங்கிலாந்து தேசத்தினுடையவும், அயர்லாந்து தேசத்தினுடையவும், அகிரிகல்சுரல் (விவசாய) ஆர்கானைஸேஷன் சங்கங்களின் மாதிரியில் ஸ்தாபிக்கப்பட்



டுள்ளது. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் கூட்டுறவுச் சங்கங்கள் அவசிய மென்றும் அவை முக்கியமென்றும் ஜனங்கள் அறிந்துகொள்ளச் செய்வதேயாகும். இச்சங்கத்தின் பிரதான வேலை பிரசார வேலையும், வேண்டிய அபிப்பிராயம் கூறுவதும், தெரிவிப்பதுமேயாகும். இதுவரையில் சங்கம் செய்திருக்கும் வேலையை முன்னிட்டும், வியாபாரி வகுப்பினுடையவும், மிராசுதார்கள் வகுப்பினுடையவும் பிரதானப் பிரதிநிதிகள்—ஸர் டானியல் ஹாமில்டன், ஸர் ஆர். என். மூகர்ஜீ, ஸர் பிரோட் மிட்டர், கனம் மிஸ்டர் ஜான்ஸைட், கனம் மிஸ்டர் பி. ஸி. மிட்டர் போன்றவர்க ளிருப்பதால் வங்காள மாகாணத்தில் பொருளாதார நிலைமையையும், செல்வ நிலைமையையும் உயர்த்துவதில் இச்சங்கம் ஏராளமான உதவிசெய்யக் கூடுமென்று நாம் உறுதியாய் நம்புகின்றோம். ஆங்கிலத்திலும், வங்காள பாஷையிலும். பத்திரிகைகள் பிரசுரஞ்செய்து. பிரசாரவேலை செய்துவருவதே சங்கம் தற்காலம் செய்துவரும்முக்கியவேலை. வங்காளப் பத்திரிகைக்கு வங்காள கல்விமான்கள் பலர்ஸர் ரபீந்த்ரநாத் டாகோர் உள்பட விஷயதானஞ் செய்துவருவது ஒரு முக்கிய விஷயமாகும். சங்கம் ஒரு கூட்டுறவுப் புத்தகசாலையையும் ஸ்தாபித்திருக்கின்றது. கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களில் அடிக்கடி பொதுப் பிரசங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு மியூஸியம் (காட்சிச் சாலை) ஒன்று ஸ்தாபனஞ் செய்து வங்காளத்தில் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு விர்த்தியடைந்திருக்கிற தென்பதைக் காட்சிச் சாலை மூலமாக அதைப் பார்ப்பவர்கள் எல்லோரும் அறிந்துகொள்ளும் படியாகச் செய்யவேண்டு மென்பது இச்சங்கத்தின் நோக்கம். கூட்டுறவு சம்பந்தமாய் வேலை செய்பவர்களைப் பழக்குவதற்காகப் பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்டு இப்போது பம்பாய் மாகாணத்தில் வெற்றியடைந்திருக்கும் முறையை வங்காளத்திலும் ஸ்தாபனஞ் செய்ய சங்கத்தின் கமிட்டியார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். வங்காள மாகாணத்தில் வெளியூர்களிலும் இச்சங்கத்தின் கிளைச் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி செய்யப்பட்டால் கூட்டுறவு இயக்கம் அதிகமாகப் பரவுவதுமன்றி, இராஜீய சம்பந்தமாய் அபிப்பிராய பேதங்கள் உள்ளவர்கள் ஒன்றுகூடி கலந்து பேசும் சௌகர்யமும் ஏற்படும். ஆனால் ஒரு விஷயத்தைமட்டும் சொல்லவிரும்புகிறோம். இச்சங்கத்தின் ஆபீஸ் கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் ஆபீசிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும், ரிஜிஸ்தரார் சங்கத்தின் உப அக்கிராசனராக இருப்பதும், ஆங்கிலேயப் பத்திரகையையை (இருமாதத்திற் கொரு முறை பிரசுரமாகின்றது) நடத்தும் செலவுமுழுவதையும் கவர்ன்மெண்டாரே கொடுத்து உதவுவதும், இச்சங்கம் தானகவே சுய அதிகாரத்துடன் நின்று கூட்டுறவு இயக்கத்தின் உண்மைப்பிரதிநிதியாக நடந்துகொள்ள முடியா தென்பதே.

* * *

இராஜீய சம்பந்தப்பட்ட சிலஐரிஷ்கைதிகள் பெல்பாஸ்டு ஜெயிலில் இருந்தபோது தங்கள் காலத்தை போக்குவதற்காக நல்லமார்க் மொன்றைக் கண்டு கொண்டார்கள். அவர்களுள் ஒருவர்கூட்டுறவில் அதிக ஊக்கமுள்ளவர். அவர் தம்மைச் சேர்ந்த கைதிகளுக்குள் பிரசாரவேலை அதிகமாகச் செய்தார். ஒருசமயம் கூட்டுறவு சம்பந்தமாய் ஒருவியாசம் வாசித்தார். அதுசம்பந்தமாய் ஏராளமான தர்க்கமுஞ் செய்யப்பட்டது. அவர் வாசித்த வியாசத்தில் அயர்லாந்தின் எதிர்கால நோக்குச் சம்பந்தமாய் இனிஏற்படக் கூடிய விஷயங்கள் பலவற்றைச் சொன்னார். "ஐரிஷ் ஹோம்ஸ் டெட்" பத்திரிகையில் பிரசுரமான அவ்வியாசத்தின் ஒருபகுதியைக் கீழேகுறிப்பிடுகிறோம்.

எதிர்கால நோக்கு

"அயர்லாந்தின் எதிர்காலநிலையை நோக்கும் போது, கூட்டுறவின் மூலமாய் அயர்லாந்தில் ஏற்படக்கூடிய ஆச்சர்ய கரமான விஷயங்கள் பல புலப்படுகின்றன. டப்ளின் நகரையும், பெல்பாஸ்டு நகரையும் உற்று நோக்கும் போது, குடிசைகளும், குறுகலான தெருக்களும், காணப்படவில்லை. அவைகளுக்குப் பதிலாக தொழிலாளர்கள் வேலை செய்யும் அறைகள் விசாலமாகவும் உல்லாஸமாகவும் இருக்கின்றன. எங்குபார்த்தாலும் மின்சாரசக்தி (எலெக்டிரிக்) வேலை செய்கின்றது. எங்குபார்த்தாலும் வேடிக்கைச் சாலைகளும், விநோதச்சாலைகளும் தென்படுகின்றன. கண்டவிட மெல்லாம் புத்தகச்சாலைகள் நிரம்பியிருக்கின்றன. புஷ்பச்செடிகளும், கனிதரும் மரங்களும் கண்களை குளிரச் செய்கின்றன. கடலோரத்திலும், ஆற்றோரங்களிலும், மலைப்பக்கங்களிலு, புஷ்பச் சோலைகளும், தோப்புகளும் நிரம்பியிருக்கின்றன. இப்போது பாழடைந்து கிடக்கும் நிலத்தில் உல்லாசமான கட்டடங்களும், பெரிய மாளிகைகளும் காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சங்கமும், கூட்டுறவுஸ்டோரும் (பண்டகசாலையும்) ஏற்படுத்தப் பட்டிருப்பதாகக் காண்கிறேன். அவைகளைச்சுற்றி புத்தகசாலைகளும், தொழிற்சாலைகளும், பள்ளிக்கூடங்களும், ஆடல் பாடல் விநோதச் சபைகளும், காண்கிறேன். பின்னும் ஆகாய விமானம் இறங்கவும், புறப்படவும் என்று கட்டப்பட்டுள்ள ஸ்தலத்தையும் காண்கிறேன்."

ஆகாய விமான ஸ்தலத்தைப்பற்றிக் கொண்ட எதிர்கால நோக்கை "ஐரிஷ் ஹோம்ஸ்டெட்." பத்திரிகையின் ஆசிரியர் மிகவுப் பாராட்டத்தக்க தென்றுக் கூறுகிறார். நம்தேசத்தி லுடையவும் கூட்டுறவினர்களுக்குள்ளும், இராஜீய விஷயத்தில் ஸம்பந்தப்பட்டுள்ளவர்களுக்குள்ளும் எதிர்கால நோக்கின் சம்பந்தமாய் கனவு காண்பவர்கள் அநேகர் இருக்கலாமென்றே நாம் கருதுகிறோம்.

***



ஒரு கூட்டுறவு நாடகம்.

காஞ்சீபுரத்திலுள்ள செங்கல்பட்டு ஜில்லா டிஸ்டிரிக்ட் பைங்கிங் யூனியனின் பிரசிடெண்டும், சமீபத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸின் வரவேற்புக் கமிட்டியின் தலைவருமான ஸ்ரீமான், வி, வெங்கடாச்சாரியார் அவர்கள் கான்பரென்ஸிற்கு வந்த டெலிகேட்டுகளையும், விஸிட்டர்களையும் களிப்பிக்கச்செய்ய ஒரு சிறு கூட்டுறவு நாடகமெழுதி நடித்துக்காட்ட செய்த முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். விநோதமாயும் விகடமாயும் ஜனங்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய விஷயங்கள் பலபொதிந்து கிடக்கின்றன. டிபார்ட்டுமெண்டு இன்ஸ்பெக்டர் கூட்டுறவு சங்கத்தை ஸ்தாபிக்கும் மாதிரி, ரிவினியூ இன்ஸ்பெக்டர் செய்யும்முயற்சி, தர்க்கஞ் செய்யவும், விதிகளில் குறைகளைக் கண்டு பிடிக்கவும் வக்கீல்களுக்குள்ள பிரியம், வரை யறுக்கப்படாத பொறுப்பின் சம்பந்தமாய் கிராமத்தாருக்கு ஏற்படும் பயம், கிராமத்தார்கள், மீடிங்கைவிட்டு நழுவிச்செல்ல செய்யும் தந்திரம், சுயபாஷை பேசமுடியாமல் சுயபாஷையும், ஆங்கிலமும் கலந்து கலந்து பேசும் இந்தியரின் குணம், பிறர் துன்புறக் கூடாதென்று எண்ணத்துடன்கூட நகைகள்மீதும் இந்துப் பெண்களுக்குள்ள ஆசை, இவைகளெல்லாம் நாடகம் பார்த்தவர்களுக்கு ஏராளமான களிப்பையும், நகைப்பையும் உண்டுபண்ணி யிருக்கும். உலக வாழ்க்கையை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டி யிருக்கிறார். நாடகம் எளியநடையில் சாதாரண மனிதன் கூடத்தெரிந்து கொள்ளக் கூடிய விதமாய் எழுதப்பட்டிருக்கின்றது. படித்த இந்தியனின் தற்காலப்போக்கைக் காட்டுவதற்கென்று ஆங்கிலவார்த்தைகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ள இடத்தில் சாதாரண மனிதன் அறிந்து கொள்ளக் கூடுமென்று சொல்லமுடியாது. கூட்டுறவின் நன்மைகள் நாடகத்தில் காட்டப்பட்டுள்ளன. இருந்தாலும் தெளிவாக எடுத்துக் காட்டப்படவில்லை. கூட்டுறவு இயக்கத்தை பரவச் செய்யவா அல்லது இயக்கத்தை கண்டிக்கவா இந்நாடகம் எழுதப்பட்டதென்று ஒருவன் கேள்வி கேட்கக் கூடும். இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு புத்தகங்களின் அவசியம் அதிகம். அதிலும் சாதாரண மனிதன்கூட எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய நடையில் எழுதப்பட்டப் புத்தகங்கள் அத்தியாவசியம். இன்னும் இதுபோன்ற நாடகங்கள் பலவற்றை அவர் எழுதுவாரென்று நம்புகிறோம்.

***

புதுக்கோட்டை சமஸ்தானம் முழுவதிற்கும் 29 சங்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் மூன்று தவிர மற்றவையெல்லாம் நாணயச் சங்கங்கள். இவற்றுள் இரண்டு பொறுப்பு வரை யறுக்கப்பட்ட சங்கங்கள். சங்கங்களில் உள்ள மொத்த அங்கத்தினர்களின் தொகை 7200. சங்கங்களின் வரவு, செலவு, வரவில் ஐந்து இலட்சம் ரூபாயும் செலவில் ஐந்து இலட்சம் ரூபாயும் நடந்து இருக்கின்றது. சங்கங்களின் க்ஷேமநிதியின் மொத்தம் ரூ. 15000 வரையில் ஏற்பட்டிருக்கின்றது. உற்பத்திச் சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பட்டுநெசவுக்காரர்களுக்கும், மற்றொன்று பருத்தித் துணி வகைகள் நெய்பவர்களுக்கும். சென்ற மார்ச்சுமாதம் 14-ந் தேதியன்றைக்கு சங்கங்களின் இரண்டாவது கான்பரன்ஸ் நடைபெற்றது. மிஸ்டர் F. R. ஹெமிங்வே I. C. S. அக்கிராசனம் வகித்தார். அவர் தமிழிலேயே பேசினார். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியால் அதிக வட்டி யென்பதே இல்லாமற் போய்விடுமென்பதாக எடுத்துக் காட்டினார். ஒவ்வொருவருக்கும் கூட்டுறவினால் சன்மார்க்கமும் நன்னடக்கையும் ஏற்படுமென்றும் சொன்னார். ஜனங்களுக்குள் சுய உதவி அதிகமாக ஏற்பட்டு அன்பும்நேசமும் விர்த்தியாகுமென்றும், ஏழைகளுக்கு அதிக நன்மை ஏற்படக்கூடுமென்றும் சொன்னார். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் முன்னர் ரிஜிஸ்த்ராராக இருந்த மிஸ்டர் M. K. வெங்கடாச்சாரியாரும், பஞ்சமர்களுக்கென்று பிரத்தியேகச் சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்ற தீர்மானத்தின்மேல், அக்கிராசனர் கேட்டுக்கொண்டதின்மேல், பேசினார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்கம்

பஞ்சமர்களுக்கென்று பிரத்தியேகச் சங்கங்கள் ஸ்தாபனஞ்செய்வதில் மெம்பர்களுககுக் கடன் கொடுக்கப்படும் தொகைகளுக்கு சென்னை மாகாணத்தில் வாங்கப்படுவதுபோல் அதிக வட்டி வாங்கப்படவேண்டுமென்றும், அதிகமாக வசூல் செய்யப்படும் தொகை ஏற்படக் கூடியநஷ்டத்தை ஈடு செய்வதில் உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்றுஞ் சொன்னார்.

செய்யப் பட்ட தீர்மானங்களுள் ஒன்று, உத்தியோகப் பற்றில்லாத கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் ஏற்படுத்தப் படவேண்டு மென்பதாகச் செய்யப்பட்டது. ஒருசதுர மைல் பரப்புள்ள ஒருசிறிய நாட்டில் சகலவிதமான டிபார்ட்டு மெண்டுகளும், பெரிய இராஜ்ஜியங்களிலுள்ள சகல நடவடிக்கைகளும் நடைபெற வேண்டு மென்ற டால்ஸ்டாய் கதை ஞாபகத்திற்கு வருகின்றது. சமஸ்தானத்தில் உள்ள இருபத்தொன்பது சங்கங்களில் ரிஜிஸ்தரார் எத்தனை பார்க்கக் கூடுமென்பதும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் எத்தனை அவசிய மென்பதும் அவர்களுள் எத்தனைபேர் கௌரவ அஸிஸ் டெண்டு ரிஜிஸ்தராராக இருக்க வேண்டுமென்பதும் யாராவது எடுத்துக் கூறுவார்களாகில் அவர்களுக்கு வந்தன மளிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.



***

நாயகான் கஞ்சா விவசாயிகளின் சங்கம்.

நாயகானில் கஞ்சா விவசாயிகளுக்கென்று ஒரு கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது காறும் ஏராளமான இலாபத்தை யனுபவித்துவந்த தரகர்களும், மத்தியஸ்தர்களும் இச்சங்கம் ஸ்தாபனமாகாதபடி எவ்வளவோ தடைசெய்தார்கள். சங்கத்தில் மெம்பர்கள் சேரவொட்டாத படிக்கு எவ்வளவோ கஷ்டப்படுத்தினார்கள். இவ்விதத் தடைகளெல்லா மிருந்தும் சங்கம் ஸ்தாபனமான ஒரு வருஷத்திற்குள் 2500-பேருக் கதிகமானவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். தரகர்கள் கொடுத்துவந்த விலைக்கு இரண்டு பங்கு மூன்று பங்கு அதிகமாக விவசாயிகள் அடைந்திருக்கிறார்கள். சங்கம் ஸ்தாபனமானபின் மெம்பர்கள் ஏராளமான இலாபமடைந் திருக்கிறார்கள். இச்சங்கம் ஸ்தாபனமான பின் கஞ்சா விவசாயிகளின் நிலைமை ஆச்சர்யப்படும்படியான மாறுதலடைந் திருக்கின்றது. கவர்ன்மெண்டாரும் தம்முடைய கிஸ்து தொகையை வசூல் செய்ய சிறிதும் கஷ்டப்படுவதில்லை. பெரிய வியாபாரிகளும் சரக்கு வாங்க வீடு வீடாய்ப் போகவேண்டிய அவசியமுமில்லை. பிரதி நபருக்கும் அட்வான்ஸ் கொடுத்து கஷ்டப்பட வேண்டியதுமில்லை. வேண்டிய சரக்கை சங்கத்திலிருந்தே யாதொரு கஷ்டமுமின்றி வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை விலக்கவேண்டுமென்ற பொதுஜன அபிப்பிராயமிருக்க கஞ்சா விவசாயிகளுக்காக கூட்டுறவு சங்கத்தை ஸ்தாபனஞ் செய்யலாமாவென்று சிலர் கருதலாம். கூட்டுறவு இயக்கத்தை தெய்வ சம்பந்தமான இயக்கமென்று சிலர் கருதிவருகிறார்கள். ஒரு மனுஷ்யனுக்கு சிக்கனம் சுய உதவி கூட்டுறவு போதிக்க உபயோகப்படுவதுடன் அவனுடைய நடத்தையையும் சீர்படுத்துவே கூட்டுறவு இயக்கம் பிரயோஜனப்பட்டு வருகின்றது. இத்தகைய இயக்கத்தை இவ்விதச் சங்கங்களின் ஸ்தாபனத்தில் விடக்கூடாதென்று சிலர் அபிப்பிராயப்படக்கூடும்.

***

சப்பாத்துக் கள்ளியைமாடுகளுக்கு உணவாக உபயோகித்தல்.

கால் நடைகளுக்கு உணவு வேண்டிய அளவு கிடைக்காமல் கால் நடைகள் சாகக்கூடிய நிலையில் இருக்கும்போது உணவுப் பொருளாக எதைதை உபயோகிக்கக் கூடுமென்பதை பரீட்சைசெய்வதில் ஜனங்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். சப்பாத்துக்கள்ளியை மாடுகளுக்கு உணவாக உபயோகிக்கூடு மென்னும் விஷயமாக பம்பாய் மாகாண விவ

சாய இலாகாதார் ஒரு துண்டுப் பத்திரிகை பிரசுரஞ்செய்து ஜனங்களுக்கு ஏராளமான நன்மையைச் செய்திருக்கிறார்கள். சப்பாத்துக் கள்ளியை மாடுகள் சாப்பிட்டு சப்பாத்துக் கள்ளியையே உணவாகக்கொண்டு ஜீவிக்கும் மாடுகளை உபகரணத்திற்கு வைத்து டிமான்ஸ்டிரேஷன் செய்து காட்டுகிறார்கள். சப்பாத்துக் கள்ளியை மாடுகள் சாப்பிடக்கூடிய உணவுப்பொருளாக எப்படிச் செய்வதென்பதைப் பற்றியும் துண்டுப் பத்திரிகையில் விவரமாய் சொல்லி யிருக்கிறார்கள். முதல் முதலில் முள்களையெல்லாம் ஜாக்கிரதையாக நீக்கிவிட வேண்டும். முட்களெல்லாம் நீக்கப்பட்டபின் துண்டு துண்டாகச் செய்யப்பட வேண்டும். முதல் முதலில் சில நாட்களுக்கு சப்பாத்துக் கள்ளியை மட்டும் உணவுப் பொருளாகப் போடுவதற்குப் பதிலாக முதலில் கொஞ்சம் பருத்திக்கொட்டையாவது அல்லது புண்ணாக்காவது கலந்துவைக்கவேண்டும். சப்பாத்துக் கள்ளியை தினம் கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகச் செய்துவரவேண்டும். பிறகு சப்பாத்துக் கள்ளியைமட்டும் உட்கொண்டுகால்நடைகள் ஜீவிக்கக்கூடும். முதல் சிலநாட்களுக்கு கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுக்கும் விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளப்படாவிட்டால் மாட்டிற்கு அஜீரணத்தால் கஷ்டம் ஏற்படக்கூடும். பம்பாயில் இவ்விஷயத்தில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள வெற்றியை ஆதாரமாக வைத்துக்கொண்டு இதர மாகாணங்களிலும் இவ்விஷயத்தை கவனிக்க வேண்டுமென விரும்புகிறோம். துண்டுப் பத்திரிகைகள் எல்லா பாஷைகளிலும் பிரசுரஞ் செய்வதுடன் அங்கங்கே டிமான்ஸ்டிரேஷன் மூலமாகவும் ஜனங்களுக்குப் போதித்து வரவேண்டும். கால்நடைகளுக்கு உணவுப் பொருள்களின் கஷ்டம் நேரும்போது சப்பாத்துக்கள்ளியை உபயோகிக்கக்கூடிய மார்க்கத்தை ஜனங்கள் அறிந்துகொண்டிருக்க வேண்டியது அவசியம்.

***

ஈரோடு அர்பன் பாங்கு திருப்திகரமாக வேலை செய்துவருவதாகத் தெரிகிறது. சென்ற வருஷக் கடைசியில் 507 மெம்பர்கள் 16,566 ரூபாய்க்கு பங்குகள் எடுத்திருந்தார்கள்; இவர்களுள் 27 பேர் பஞ்சம வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த பாங்கு வெல்லூர் ஜில்லா பாங்குக்கு ரூபா 5000, மலையாள ஜில்லா பாங்குக்கு ரூ. 6000, சத்யமங்கலம் அர்பன் பாங்குக்கு ரூ. 4000.ம் கடன் கொடுத்திருக்கின்றது. தவிர ரூ 1200-க்கு யுத்த பாண்டுகளும் வாங்கியிருக்கின்றது. சென்ற வருஷம் (1916-17) ரூ. 24,342 டிபாசிட்டுகள் கிடைத்திருக்க 1917-18 வருஷத்தில் ரூ. 94769 டிபாசிட்டுகள் கிடைத்ததே சங்கம் செய்துவரும் வேலையின் பயனும் நன்மையும் நன்கு விளக்குகின்றது. பிரஸ்தாப வருஷத்தில் சங்கத்திற்கு ரூ. 2511 இலாபம்.



# கவனக்குறைவும் நமது முன்னேற்றமும்

## ஸர். டானியல் ஹாமில்டன்!

[1919ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15ந்தேதியன்று நடந்த வங்காள கோவாபரேடிவ் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்ட ஒரு அரிய வியாஸத்தின் மொழிபெயர்ப்பு]

சண்டைநின்று ஜெயபேரிகை முழங்கும்போது பார்லிமெண்டு சபையையும், இராஜ்ஜியத்தின் குடிகளையும் நோக்கிப்பேசும்போது மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் பின் வருமாறுப் பேசினார்.

“சண்டை யென்னும் விஷயம் நீங்கவே நாம் புது விஷயங்களைக் கவனிக்கவும், நாம் நூதனக்கடமைகளைச் செய்யவும் கவனஞ் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய நிலைமையை நாம் சரிவர கவனித்துப் பார்ப்போமானால் நாம் இதுவரையில் கவனியாது அலட்சியஞ் செய்துவிட்ட சில முக்கிய கடமைகள் நமக்குத் தென்படுகின்றன. நம்முடைய முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய சில பலஹீன அம்சங்கள் நமக்குப் புலப்படுகின்றன.”

அரசர் பெருமான் கூறியுள்ள இம்மொழிகள் வேறெந்த தேசத்தைக் காட்டிலும் நம் இந்தியா தேசத்திற்கே அதிகமாகப் பயன்படக் கூடியவை. ஏனெனில் குடிமக்களின் பிரயோஜனத்திற்காக பாங்கிங் விஸ்டம் (பணம் லேவாதேவி செய்து கொள்ளுவதற்கு இலகுவானவும் சௌகர்யமானவும் மார்க்கம்) ஸ்தாபனஞ் செய்யவேண்டிய கடமை அலட்சியஞ் செய்யப்பட்டக் காரணத்தால் நம்முடைய முன்னேற்றம் முழுவதுமே தடைபட்டிருக்கின்றது.

ஆனால் ஒருவிதமாக முன்னடைந்து கொண்டு வந்திருக்கிறோமென்றே சொல்ல வேண்டும். அது எத்தகைய முன்னேற்ற மென்பதைக் கவனிக்க வேண்டும். தேசமெங்கும் எங்கு பார்த்தாலும் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. சணல் கம்பெனிகளின் அங்கத்தினர்கள் அடையும் இலாபம் அதிகரித்திருக்கின்றது. பம்பாய் நகர் தினந்தோறும் செல்வத்தில் மிகுந்து வருகின்றது. இவைகளெல்லாம் நடந்தும் பொது ஜனங்களுக்கு எத்தகையப் பலனும் பிரயோசனமும் உண்டானதாகத்தெரியவில்லை. ஜனங்களின் வாழ்க்கை நிலைமை முன்னடையவில்லை. ஏழைகளின்தரித்திரம் ஒழியவில்லை. தொழிலாளர்களின் கஷ்டமும் வருத்தமும் நீங்கவில்லை.

பிறகு கிராமவாசிகளின் நிலைமைகளைக் கவனிப்போம். அவர்கள் முன்னடைகிறார்களா அல்லது இருந்தபடியே இருக்கிறார்களா வென்று விசாரணை செய்வோம். நம் விசாரணைக்குப்பதில் தேடிக்கொண்டு நாம் வெகுதூரம் அலையவேண்டியதில்லை. கூட்டுறவு இயக்கத்தை விசாரணை

செய்ய நியமிக்கப்பட்ட மாக்ளீன் கமிட்டியார் பின் வருமாறுக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"முன்னேற்றமடையாமல் இருந்த நிலைமையிலேயே தடைப்பட்டிருக்கும் தாழ்ந்த வகுப்பினரின், முக்கியமாய் குடிமக்களின் பெரும்பான்மையோராகிய விவசாயிகளின், நிலைமையைச் சீர்திருத்துவதே கூட்டுறவை இந்தியாவில் ஸ்தாபனஞ் செய்ததின் நோக்கம். ஐரோப்பா தேசத்தின் பல நாடுகளிலும் இருந்ததுபோலவே இந்தியாவிலும், போக்குவரவு சாதனங்கள் அதிகரித்துக்கொண்டு வந்தும், வியாபாரம் வளர்ச்சியடைந்துவந்தும் விவசாயக்குடிமக்களின் பொருளாதார நிலைமை முன்னடையவில்லை யென்றும் குடிமக்களின் கடனளவு குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக்கொண்டுவந்ததென்றும், அதிக வட்டிவாங்கும் வழக்கம் எப்போதும்போலவே தலைகாட்டி நின்றதென்றும் கண்டு பிடிக்கப்பட்டது."

நூறு வருஷயத்திய பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பின் இருக்கும் நிலைமை இத்தகையது. ஆனால் இருக்கும் நிலைமையென்னமோ மேற்சொன்ன வரையில் உண்மையாகத் தானிருக்கின்றது. என்னுடைய சொந்த அனுபவமும், விசாரணையும் மேற்சொன்ன விஷயங்கள் உண்மையென நிச்சயப்படுத்துகின்றன. ஆறு அல்லது ஏழுமாதங்களுக்கு முன் தட்க்ஷணத்திலுள்ள என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு பாதிரிமார் எனக்குப் பின்வருமாறு எழுதினார். "பிளேக் நோயைக்காட்டிலும் இன்புளுயன்ஸா நோயின் கொடுமை அதிகமாக இருக்கின்றது. இவ்வருஷ ஆரம்பத்தில் நான் விவாகஞ்செய்துவைத்த பத்து தம்பதிகளில் இருவர்தான் பாக்கி இருக்கிறார்கள். என்னால் கூடுமான சொற்ப உதவியை நான் செய்துவருகிறேன். ஆயினும் கோடிக்கணக்கானவர்களுக்குள் என்னுடைய சொற்ப உதவி எங்ஙனம் நன்மை பயக்கக்கூடும். அகாலமழையினால் பருத்திப் பயிர்களெல்லாம் நாசமாய்விட்டதாக இரண்டு மாதத்திற்குப்பின் எழுதினார்." பிறகு இன்னுமிரண்டுமாதம் கழிந்தபின் சோளப் பயிர்களெல்லாம் பாழாய்ப்போய்விட்டதாக எழுதினார். கால்நடைகளுக்கு வேண்டிய தீவனம் கிடைக்கவில்லை யென்றும், தீவனம் கிடைத்தாலும் வாங்குவதற்குப் பணம் அகப்படாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களென்றும், தங்களுடைய ஆடுமாடுகளை மூன்று ரூபாய்க்கும், ஆறுரூபாய்க்கும் விற்று வருகிறார்களென்றும் எழுதினார். இவ்வருஷம் குடிமக்கள் விவசாய மாசூல் அறுவடைசெய்வதற்குப் பதிலாக இறந்துபோகும் கால்நடைகளின் தோல் மாசூலைத்தான் காண்கிறார்களென்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய மாகாணங்களில் இருக்கும் மற்றொரு நண்பர் எனக்குப் பின்வருமாறு எழுதினார். "ஈக்களைப்போல இவ்விடத்தில் ஜனங்கள் இறந்துவருகிறார்கள். இவர்களைக் கவனிப்போர்கள் ஒருவருமில்லை." இவர்களைக் கவனிக்கமுயல்வதானாலும் பணம் கிடையாது. வைத்தியர்கள் உதவி கிடைப்பது கஷ்டம். எத்தகைய உதவியேனும் கிடைப்பது அரிதாக இருக்கின்றது.



விசாலமான இந்தியா தேசத்தில் ஜனத்தொகை ஏராளமாக இருக்கின்றது. இருந்தும் என்ன ? கல்விகுறைந்திருக்கின்றது. வைத்தியர்களின் உதவிகிடைப்பது கஷ்டம். மருந்துகள் கிடைப்பது அருமை. சுகாதார மென்பது பூஜ்ஜியம். இக்குறைகளெல்லாம் எல்லா வருஷங்களிலும் சாதாரணமாக இருக்கின்றன. இந்த வருஷத்திலோ உணவுப் பொருள்களின் கஷ்டம் அதிகமாக இருக்கின்றது. ஜலவசதியும் குறைந்து போய்விட்டது. உடுக்கத் துணி வகைகள் அரிதாய் விட்டன. விளக்குக்கு எண்ணெய் கிடைப்பதும் கஷ்டமாய் விட்டது. மனித வாழ்க்கை சுகமாயும் சரிவரவும் நடப்பதற்குப் போதுமான எவையும் குறைந்து போய்விட்டன.

இக்குறைகளுக்கெல்லாம் ஒரே காரணந்தான் உண்டு. பணமில்லாக் குறை ஒன்றே யாகும்,பாங்கிங் ஸிஸ்டம் இல்லாததுதான்காரணம்.

பாங்கிங் ஸிஸ்டம் இல்லாதக் குறையை நிவர்த்திசெய்து வைக்க வேண்டியது யாருடைய கடமை யென்று விசாரிப்போம். பாங்கிங் ஸிஸ்டம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது இந்தியா கவர்ன்மெண்டாரின் கடமையாகும். இவ்விஷயம் அவர்களுடைய பொறுப்பைச் சேர்ந்ததாகும். ஏனென்றால்,

1. அதிக வட்டிக்குப் பணங்கொடுப்போர்களின் வலையில் சிக்கிக் கஷ்டப்படுபவர்களின் கஷ்டத்தை நீக்கி வைப்பது கவர்ன்மெண்டாரின் கடமை.

2. அதிக வட்டிக்குப் பணங்கொடுத்து ஜனங்களை கஷ்டப்படுத்தும் மஹா ஜனங்களின் இயக்கத்தை ஒழிக்கவேண்டியது கவர்ன்மெண்டாரின் கடமை.இத்தகைய "மஹா ஜனங்களால்" பிரிட்டிஷ் ஆட்சிக்கே கெட்ட பெயர் ஏற்படுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்படக்கூடிய நன்மைகளை இம் "மஹா ஜனங்களின்" இயக்கம் மறைத்து விடுகின்றது.

3. 315-கோடி ஜனங்களுக்கு வேண்டிய பண உதவியை அரசாங்கத்தாரைத் தவிர வேறெவரும் செய்துவைக்க முடியாது.

4. கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் "கரென்ஸி நோட்டுகளை" ஜனங்கள் நன்றாயறிந்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டு கரென்ஸி நோட்டுகளில் ஜனங்களுக்கு நம்பிக்கை யுண்டு. இந்த நோட்டுகள் மூலமாக ஜனங்களுக்கு வேண்டிய பணத்தை கவர்ன்மெண்டார் உண்டு பண்ணச் செய்யக்கூடும்.

5\. கர்ரென்ஸி ஸிஸ்டம் நடைபெறும் நிலைமை முழுவதும் கவர்ன்மெண்டார் கையில் இருக்கின்றது. வேண்டிய பணத்தைக் கவர்ன்மெண்டார் இவ்வழியில் உதவக்கூடும்

6\. குடி மக்களிடம் மிகுதியாக உள்ள உணவுப் பொருள்களை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குக் கொண்டுபோக இருப்புப் பாதைகளை ஏற்படுத்தி யிருக்கும் அரசாங்கத்தார், கொண்டு போகப்பட்ட தானியங்களுக்குக் கிரயம் வந்து சேரும்படியாகபாங்கிங் ஸிஸ்டம் ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தாரின் கடமை.

7\. ஜனங்களுக்கு அத்தியாவசியமான "பாங்கிங் ஸிஸ்டம்" வந்தாலொழிய ஜனங்களின் பணக்கஷ்டம் நீங்கப்போவது கிடையாது. அத்தியாவஸ்யமான இந்த "பாங்கிங்ஸிஸ்டம்" ஏற்படுத்தப்பட்டாலொழிய மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களால் நன்மை விளையுமென்று சொல்லமுடியாது. ஏற்படப்போகும் நூதனச் சட்டசபைகளால் பிரயோசனம் உண்டாகப்போவது ஒன்றுமே கிடையாது.

மேலே சொல்லியுள்ள ஏழு காரணங்களும் நான் கூற விரும்புகிற பதினான்கு காரணங்களில் பாதியளவுதான். பாக்கிக் காரணங்களை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை யென நினைக்கிறேன்.

இந்தியாவின் 300 கோடி ஜனங்களுக்கும் "பாங்கிங்ஸிஸ்டம்" ஏற்பட்டுவிட்டால் பணம் கடன் கொடுப்பதற்காக ஏராளமானப் பணம் கிடைக்கின்றது. கடன் வாங்கவும் சௌகர்யமும் சாதனமும் ஏற்படுகின்றது. "பாங்கிங்ஸிஸ்டம்" ஏற்படுத்த பணம் எங்கடமிருந்துக் கிடைக்குமென ஒரு கேள்விப் பிறக்கலாம். ஐரோப்பா தேசத்திலெல்லாம் பாங்கிங்ஸிஸ்டத்திற்கு ஜனங்களுடைய டிபாசிட்டுகளே ஏராளமாகப் பிரயோசனப்படுகின்றன. ஏழ்மையில் மூழ்கியிருக்கும் இந்தியர்கள் எங்ஙனம் டிபாசிட்டுகள் செய்யக்கூடும். வயிறுநிறைய சோற்றுக்கே திண்டாடும் இந்தியர்கள் டிபாசிட்டு செய்ய கனவு காண்பது எங்ஙனம் சாத்தியமாகும்? தவிரவும் "பாங்கிங்ஸிஸ்டம்" சரிவர பரவி போதிய உதவி ஜனங்களுக்கு உண்டாவதற்காக நாணய லேவாதேவி குறைந்து பேபர் கர்ரென்ஸி லேவாதேவி அதிகமாகவேண்டும். ரூபாயைச் சேர்த்துவைத்தால் யாதொரு பிரயோசனமும் விளையாமல் குவிந்து போகக் கூடும். கர்ரென்ஸி நோட்டுகள் சேர்த்து வைத்தால் கெட்டுப்போகக் கூடுமென்னும் காரணத்தால் அவ்விதம் குவிந்துபோக ஏதுவில்லை. ரூபாய் நோட்டுகளை அதிகச் செலாவணியாக்க கவர்ன்மென்டார் ஏற்பாடு செய்ய வேண்டும். கர்ரென்ஸி நோட்டுகள் ஒரே விடத்தில் தங்காமல் இங்குமங்கும் மாறிக்கொண்டிருப்பதால் "பாங்கிங்ஸிஸ்டம் வெகுத் திருப்திகரமாக நடைபெறும்." சென்ற நூறுவருஷங்களில் பிரிட்டிஷ்



ஆட்சியால் ஏற்பட்ட நன்மையை விட அதிக நன்மைகள், "பாங்கிங் ஸிஸ்டத்தை" இந்தியாவில் ஏற்படுத்துவதால் உண்டாகக்கூடும்.

இந்தியாவில் பாங்கிங்ஸிஸ்டம் ஏற்படுத்த நாம் டிபாசிட்டுகளுக்காகக் காத்துக்கொண்டு இருக்கவேண்டுமென்கிற அவசியம் கிடையாது. வியாபாரிகளிடம் தங்கியிருக்கும் தொகைகளும், பேபர் கர்ரென்ஸி ரிசர்வும், கோல்ட் ஸ்டான்டர்டு ரிசர்வும் (Gold Standard reserve, இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் தங்க நாணயத்தில் தான் லேவாதேவி நடக்க வேண்டியிருக்கிறது. தங்கத்தின் விலை குறைந்துபோனால் இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக வென்று தங்க ரிசர்வு ஏற்படுத்தப்பட்டு இந்தியாவின் ஏராளமானத் தொகை இங்கிலாந்தில் வைக்கப்பட்டிருக்கின்றது); பிரயோசனப் படுத்திக் கொள்ளலாம். இந்தியா பணத்திற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்தியாவின் ஏராளமானத் தொகையை இங்கிலாந்தில் வைத்திருப்பது சரியல்ல வென்பதாக சிம்லாவில் நடைபெற்றக் கோவாபரேடிவ் கான்பரன்ஸில் நான்எடுத்துச் சொன்னேன். இந்தியாவின் தலைவர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்தியாவின் பணம் இந்தியாவின் நன்மைக்கு உபயோகமாகும் படிச்செய்ய வேண்டும்.

பாங்கிங் ஸிஸ்டத்தை ஏபற்டுத்த அவசியமான பணத்தை தேடிக் கொண்டபின் இம்முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரச் செய்ய வேண்டிய மார்க்கத்தைத் தேடவேண்டும். இந்திய விவசாயியின் நிலைமையென்ன? அவனுக்குத் தற்காலம் இருக்கும் ஆஸ்தியென்ன? ஒன்று அல்லது இரண்டுஏகர் நிலமிருக்கும். இன்றைக்கோ அல்லது நாளைக்கோ சாகக்கூடிய நிலைமையில் ஒருஜோடி மாடு இருக்கும். ஒன்று அல்லது இரண்டு ரூபாய் பெறக்கூடிய கலப்பை இருக்கும், இவ்வளவு பெரிய ஆஸ்தி வைத்திருப்பவனை நம்பி எங்ஙனம் கடன் கொடுக்கமுடியும்?. நம்பிக்கையையும் நாணயத்தையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். அப்போதுதான் பாங்கிங் ஸிஸ்டம் சரிவர நன்மை பயக்கக்கூடும். நம்பிக்கையும், நாணயமுந்தான் எல்லா முயற்சிகளுக்கும் திறவு கோல். நம்பிக்கையும் நாணயமும் ஒரே இரவில் விளைந்து போகக்கூடிய பயிரல்ல. இப்பயிரை விளைவிக்க ஆயிரக்கணக்கான விவசாயிகளும், தோட்டக்காரர்களும் அவசியம். ஜனங்களுடைய நம்பிக்கையையும், நாணயத்தையும் விர்த்தி செய்ய வங்காளத்திற்குமட்டும் இரண்டாயிரம் பேர்கள் அவசியமென்று நினைக்கிறேன்.

வங்காளத்தின் இளைஞர்களுடைய அறிவும் ஞானமும் வீணே போகாதபடிக்கு இக்காரியத்திற்குப் பிரயோசனப் படுத்திக் கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டாரும் இவ்விளைஞர்களுக்கு உதவிசெய்ய முன்வர

வேண்டும் இத்தனை வருஷத்திற்குள் வங்காள மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தை விர்த்திசெய்து விடுவதாக கவர்ன்மெண்டார் ஒரு நிச்சயஞ் செய்துகொள்ளவேண்டும். சுமார் பத்து வருஷங்கள் செய்து விடுவதாக கவர்ன்மெண்டார் நிச்சயஞ் செய்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். வருஷம் 200 இளைஞர்கள் இக்காரியத்திற்காகவென்று கவர்ன்மெண்டாரால் எடுத்துக்கொள்ளப் பட்டால் பத்துவருஷங்களுக்குள் வங்காள மாகாணம் முழுவதிற்கும் அவசியமான இரண்டாயிரம் பேரும் நியமிக்கப் பட்டிருப்பார்கள்.

இவ்விதமாக ஒவ்வொரு மாகாணத்திலும் செய்யப்பட்டால் இந்தியாவின் நிலைமை எவ்விதமாக மாறியிருக்கக் கூடுமென்று யாராவது சொல்லக் கூடுமோ ?

இந்தியாவின் எழ்மை யென்பது அடியோடு பறந்து போய் இருக்கும். கடன்வாங்கிக் கஷ்டத்தில் அமிழ்ந்து கிடக்கும் விவசாயிகள், கடன் கொடுக்கும் நிலைமைக்கு வந்துவிடுவார்கள். விவசாயிகள் நிலைமை சீர்பெறவே தொழில் நிலைமையும் சீர்பெறும். தொழில்களெல்லாம் விர்த்தியடையும். பிறதேசங்களிலிருந்து இறக்குமதிசெய்வது குறைந்து போகும். இந்தியாவை விட்டு வெளியே செல்லும் பணம் இந்தியாவிலேயேதங்கும். இந்தியர்களின் லேவா தேவிக்கு அவசியமான பணம் வேண்டிய அளவு இலகுவாகக்கிடைக்கும்.

இந்திய விவசாயிகள் செல்வவந்தர்களாய் விடுவார்களாகில் தற்காலம் நகரைச் சீர்படுத்தவும், டிஸ்டிரிக்ட்போர்டுகளுக்கும், தாலூக்காபோர்டுகளுக்கும், இதரபரிபாலனச் சங்கங்களுக்கும் அவசியமான பணத்தை விவசாயிகளே கொடுத்துதவக்கூடும்.

இந்தியாவின் அரசாங்கப் பணப்பொறுப்பை தாமே வகிக்க வேண்டுமென இந்தியத்தலைவர்கள் கூக்குரலிடுகிறார்கள். இப்போதுள்ள பொறுப்பைக் கோருவதால் உண்மையாய் எத்தகைய பிரயோசனமும் ஏற்படப்போவதுகிடையாது. விளையவும் விளையாது. தற்கால நிலைமைக்கு உண்மையான உதவிசெய்யக் கூடியவன் விவசாயியேதான். அவனால் தான் இந்தியா முன்னடையக் கூடும், அவனுடைய முன்னேற்றத்தால் தான் இந்தியாவிற்கு நன்மை ஏற்படக் கூடும். இது வரையில் அலட்சியமாயிருந்ததுபோல் இனி இராமல் விவசாயியின் செல்வ நிலைமையை முன்னடையச் செய்ய முயலவேண்டும். அப்படிச் செய்வதால், தற்காலமுள்ள தாழ்ந்த நிலைமையிலிருந்து இந்தியா முன்னடைய முடியும். இதர நாடுகளைப்போல் இந்தியாவும் தலைதூக்கி நிற்கக்கூடும்.

---



# கூட்டுறவும் பள்ளிக்கூடங்களும்

ஸ்ரீமான். என். பஞ்சாபகேஸ ஐயர் அவர்கள் B.A.L.T.

[சமீபத்தில் பாபாநாஸத்தில் நடைபெற்ற தஞ்சாவூர் ஜில்லாகோவாபரேடிவ் கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட வியாசம்]

வழக்கத்தில் கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்யச் சில சாதனங்கள் அனுஷ்டானத்தில் இருக்கின்றன. நாணயச் சங்கங்கள், உற்பத்திச் சங்கங்கள், கிரய விக்கிரயச்சங்கங்கள் இவைகள் மூலமாய் அங்கத்தினர்களுக்குச் சௌகரியங்களைச் செய்து, புத்திபுகட்டி, அவர்களைச் சிக்கனத்தோடு செலவு செய்து வாழும் படியாக கூட்டுறவு ஐக்கியத்தில் ஊக்கமுள்ளோர் பாடுபட்டு வருகிறார்கள். இச்சங்கங்களின் நோக்கம் இப்பொழுது அறியாதவரிலர். மதுரமொழிகளாலும், பத்திரிகைகளின் இகழ்ச்சிகளாலும் இயலாத காரியம் இவ்வியக்கம் செய்துவருகின்றது. அங்கத்தினருக்குத்துன்பம் வந்த காலத்து துயரைநீக்க இச்சங்கங்கள் செய்யும் உபகாரம் அபிரிமிதமானது.

இச்சங்கங்களிலெல்லாம் வயது முதிர்ந்தவர்கள் தான் மெம்பர்களாகச் சேருகிறார்கள். ஒரு வழக்கத்தை வயது முதிர்ந்தவர்களுக்குள் உண்டாக்குவது சற்று சிரமமாகத்தானிருக்கின்றது. அக்காரணங் கொண்டேதான் நாணயச் சங்கங்கள் எவ்வளவு நன்மை பயக்க முடியுமோ அவ்வளவு நன்மை ஈந்ததாகத்தெரியவில்லை. மைசூரில் நடந்த ஓர் ஆராய்ச்சியில் (Ecnomic enquiry) மெம்பர்களின் கடன் குறையவில்லையென்று தெரியவந்தது. இஃது இருக்கட்டும். ஒரு குயவன் தான் விரும்புகிற உருவத்தைக் கையிலெடுத்த களிமண்ணுக்குக் கொடுக்கிறான். அந்த மண் காய்ந்திருந்தால் அது முடியுமோ ? காய்ந்த மண்ணைத் தண்ணீரில் ஊரவைத்துத் துகைத்தோ அறைத்தோ பதஞ்செய்து வேலை செய்யலாமென்றாலும் அதிலிருக்கும் சிறு கட்டிகள் உருவத்தை சரிவர ஏற்கவிடா. ஒருவாறு முடிவான எண்ணங்களுள்ள வயது முதிர்ந்தவர்களைத் திருத்துவதும் இம்மாதிரியே கஷ்டமாகவிருக்கின்றது. பையன்களுடைய நிலைமைப் பச்சைமண்ணுக்குச் சமமாகச் சொல்லலாம்.

ஒரே வயதுள்ள நாற்பது பையன்கள் ஓரிடத்து ஒருங்குகூடி ஒரே மனத்தினராய் உரு உபாத்தியாயரிடத்து ஓரேபாடங் கற்றுவருகிறார்கள். ஒரு நாளில் வெகு நேரம்வரைக்கும் சேர்ந்து இருக்கிறார்கள். ஐக்கிய விதையை ஊன்றுவதற்கு இவ்விடம்போன்ற தகுந்த வேறிடம் வாய்ப்பதரிது. ஐக்கிய விருட்சத்தின் விதையை அத்தகையவர் மனத்திலூன்றி சிக்கனம், சுயஉதவி, கூட்டுறவு, இவைகளைப் போதித்து உதவி செய்வது நமது கடமையாகும். உபாத்தியாயர் அடிக்கடி கூறும் புத்திமதியென்

னும் ஜலம்பாய அவ்வித்தை மரமாகி, காலந்தால் தழைத்தோங்கி, பருவத்தால் பழுக்கும். அவர்களுக்கு ஏற்படக் கூடிய மனோபாவத்தால், பிற்காலத்தில் ஜனங்கள வேற்றுமையற்று ஒற்றுமையா யிருந்தால் இன்புற்று வாழலாமென்று அறிவார்கள். இப்பொழுது நாம் சுய அரசாட்சிக்குத் தகுதியற்றவர்க ளென்று சாற்றும் குற்றம் அப்போது காரணமில்லாததாய்ப் போய்விடும். சுய அரசாட்சி வந்தகாலத்துத் தாங்க வேண்டிய பொறுப்பைத் தாங்கிச் செய்யவேண்டிய கடமையைச்செய்து கூடியவரையில் மற்றவர்களுத்கு உதவி புரியவேண்டும் என்கிற எண்ணம் மாணவர்களுக்குண்டாவது திண்ணம். ஸெகென்டரி பாடசாலைகளுள் (Secondary Schools) முதல் மூன்றுவகுப்புகளில் ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத பொருட்பாடங்களை அநேக சாஸ்திரங்களிலிருந்து பொறுக்கி யெடுத்து தற்காலம் நடத்தி வருகிறார்கள்.

கூட்டுறவு சம்பந்தமான பாடங்களையும் அவைகளோடு சேர்க்கலாம். முடியாதென்றால் தேசசரித்திரப் பாடத்தோடு சேர்த்து தேசாபிமானத்தை விருத்தி செய்யலாம். மேல் மூன்று வகுப்புகளில் சில பாடங்கள் 'பி' (B) வகுப்பு என்று பெயரிட்டு மாணவர்களுக்குப் பிரியமில்லாமல் செய்திருக்கிறார்கள். சரீர சாஸ்திரம் முக்கியமென்றால் கூட்டுறவு முக்கியமில்லையா? கடலுக்கப்பால் அநேக மைல்தூரத்திலுள்ள ஆங்கிலேய நாடு நன்றாய் அறியத்தகுந்தது என்றால் நம்மைச்சுற்றியுள்ள நாட்டைச்சீர்படுத்திக் கொள்ள வேண்டிய விஷயமாய்க் கூறவேண்டியது யாது? ஒருவாரத்தில் ஒருமணிநேரம் ஐக்கியபாடத்தை பையன்களுக்குப் போதித்தால் அது மாணவர்களைத் துன்புறுத்தாது. கூட்டுறவு அவர்கள் மனதைத் துன்புறச் செய்யக்கூடிய சாரமற்ற பாடமன்று. பாட தொகுதியால் பையன்கள் இளைப்பார்கள் என்றால் தள்ளக்கூடிய வேறுபாடமில்லையென்றாலும் உபயோககரமான இவ்வொரு பாடம் பையன் தாங்கமுடியாத சுமையாய் விடாது. பையன்கள் சிற்றறிவுக்குத் தகுந்த இலகுவான ஐக்கிய இயக்க இலக்கிய மில்லையென்று சிலர்சொல்லலாம். புஸ்தகங்கள் வேண்டுமென்று விலைக்குவாங்கினால் ஏராளமான புஸ்தகங்கள் எழுதப்படும். ஆங்கிலேய கம்பெனியார்கள்கூட இவ்விஷயத்தில் ஊக்கங்கொள்ளுவார்கள். இப்பொழுது நடக்கும் படிப்பினால் சர்க்காருக்கும், ஏனையோருக்கும் படிந்து நடக்கும் குமாஸ்தாக்களைத் தயாரித்துக் கொடுக்கிறோம். கூட்டுறவு, மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டால் தற்கால நிலைமை மாறி இல்வாழ்க்கையில் இன்புற எப்படி வாழலாமென்று மாணவர்கள் அறிந்து கொள்ளுவார்கள்.

சொல்லுதல் யார்க்குமெளிது. சொல்லியவண்ணஞ் செய்தலரிது. ஒருவன் நீந்தப் பழக்கங்கொள்ள வேண்டுமானால் ஜலத்திலிறங்காமலே அதைப்பற்றி புஸ்தகத்தை வாசித்து தெரிந்துகொள்ள முடியாது.



முன்னே சொன்னவாறு பையன்கள் ஐக்கிய சம்பந்தமான புஸ்தகங்களை வாசிக்கவேண்டும். வாசித்துத் தெரிந்து கொண்டவைகளை அனுபவத்தில்கொண்டுவர ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மாணவர்களுக்கு கிரய விக்கிரயச் சங்கம் ஒன்று இருக்கவேண்டும். மங்களூர் கணபதி மத்யதரப் பள்ளிக்கூடத்கூடத்தில் இம்மாதிரியான சங்கமொன்று இருக்கின்றது. திவான் பகதூர், L. D. சாமிக்கண்ணு பிள்ளையவர்கள் M.A.B.L.L.L.B. அச்சங்கத்தைப்பரிசோதித்துவிட்டு நிரம்பத்திருப்தியடைந்து இம்மாதிரியான முயற்சிக்கு ஐக்கியத்தில் சாரணச் சிறுவர்களின் கிளர்ச்சி என்று புகழாகச் சொன்னார். பம்பாய் இராஜதானியின் 200 பள்ளிக்கூடங்களில் இத்தகைய சங்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது பையன்களுக்குத் தேவையான காகிதம் பென்ஸல் முதலானஸ்டேஷனரி (Stationary) சாமான்களை வியாபாரிகள் மனம்போல் விற்று ஊதியமடைகிறார்கள். சில பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர் சங்கம் அதைச் செய்து வருகின்றது. அதினால்வரும் இலாபத்தின் பெரும் பாகத்தைச் சொந்த உபயோகத்திற்கு அவர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது முடிவுபெற்ற சண்டையினால் காகிதத்தின் விலை அதிகமாக ஏற்பட்டுவிட்டது. எப்பொழுதும் பள்ளிக்கூடங்களில் நடக்கும் பரீட்சைகளுக்குக் காகிதம் வாங்கிக்கொடுக்க முடியவில்லையே என்று ஏழைகள் பலர் முறையிடுகிறார்கள். கடுதாசியின் விலை ஒருபங்கு, கடைக்காரன் சண்டை சண்டை யென்று சாக்குக்கூறி விலை யேற்றுவதுமூன்றுபங்கு. இப்படிப்பட்ட சமயத்தில் தலைமை உபாத்தியார் ஆதரவின்கீழ் பையன்களால் நடத்தப்படும் ஒரு கிரய விக்கிரயச் சங்கம் எக்காலத்திலும் ஸ்டேஷனரி (Stationary) சாமான்களின் விலையைக் குறையும்படி செய்யும் என்பதில் தடையில்லை. வேண்டுமென்ற சாமான்களை நேரே செய்யுமிடத்திலிருந்து மொத்தமாக வாங்கிப் பையன்களுக்குச் சில்லரையாகக் கொடுத்தால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இலாபம் அதிகம். சங்கத்தினால் உண்டாகும் நன்மையை வரும் இலாபத்தைக் கொண்டு கணக்கிடக் கூடாது. பையன்கள் அனேக கற்பனைகளை அறிந்து கொள்ளுவார்கள். சுயஆட்சி வருங்காலத்துநாட்டை ஆளக்கூடிய சக்தியுள்ளவர்களாவார்கள். முனிசிபாலிடி, தாலூகா போர்டு, ஜில்லா போர்டு இவைகளில் மெம்பரெனவீற்றிருந்து பதுமையைப்போல் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டாமல் காரியங்களைக் கவனித்து முடிவு சொல்லக்கூடிய சக்தி மாணவர்களுக்கு உண்டாகும். சங்கம் தனக்குள்ளேயே உத்தியோகஸ்தர்களைப் பொறுக்குவதினால் மாணவர்களுக்கு ஏற்படும் பயிர்ச்சி, பிற்காலம் சட்ட நிருபணசபைக்குத் தக்கவாறு மெம்பர்கள் பொறுக்க உபயோகமாகும். பிறர் உதவியை நாடாமல் நாமே நமது காரியங்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணமுண்டாகும்.

161179

பள்ளிகூடங்களில் ஸ்தாபிக்கவேண்டிய சங்கங்களின் விதிகளில் சில அம்சங்களை ஒருவாறு இங்கே குறிப்பிடுகிறேன்.

1. பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் ஒவ்வொருவரும் மெம்பராக வேண்டுமென்பது அவசியமில்லை. இஷ்டமுள்ள பிள்ளைகளைமட்டும் சேரலாம். பிரவேசக்கட்டணம் நான்கு அணுவுக்கு அதிகமாக ஏற்படுத்தக் கூடாது. பங்குத்தொகை ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை. காரியம் நடத்தவேண்டுமெனின் மூலதனம் தலைமை உபாத்தியாராவது அல்லது அவர் மூல்யமாய் பரோகாரியாரொருவராவது அல்லது பக்கத்திலுள்ள ஐக்கிய நாணயச்சங்கமாவது கொடுக்கவேண்டும்.

2. துர்நடத்தைக்காவது சங்க நோக்கத்திற்குமாறுதலாக நடந்ததற்காவது ஒரு மெம்பரைச் சங்கத்தினின்றும் விலக்கலாம். பொதுமெம்பர்கள் அது சம்பந்தமாக நடத்தும் நடவடிக்கை நியாயஸ்தலங்களில் குற்றம் விசாரிக்கும் முறையை ஒத்திருக்கவேண்டும். சில தேசங்களில் பள்ளிகூடத்தில் பையன்கள் செய்யும் குற்றங்களை மாணவர் சபைகளே விசாரித்து தீர்மானஞ்செய்கின்றன.

3. சங்கத்தை நிர்வகிக்கவேண்டியவரான பஞ்சாயத்தார், காரியதரிசி, இவர்களை எல்லாமெம்பர்களும்கூடி வருஷம் ஒருமுறை ஓட்டுகள் மூலமாய் தெரிந்து எடுக்கவேண்டும். தலைமை உபாத்தியாயரே நிரந்தர அக்கிராசனாதிபதியாய் நியமிக்கப்படவேண்டும். பஞ்சாயத்தார் தீர்மானங்களெல்லாம் அக்கிராசனாதிபதி ஒப்புக்கொண்டாலொழிய அமுலுக்கு வரத்தக்கனவல்ல. காரியதரிசி செய்யவேண்டிய முக்கிய காரியங்களை அவருக்குதெரிவித்தேசெய்ய வேண்டும். அவர் சங்க கணக்கைத் தணிக்கை செய்ய வருஷம் ஒருமுறை ஒரு கௌரவ ஆடிடரை நியமனஞ் செய்ய வேண்டும். பொதுஜனக் கூட்டத்தில், சங்கங் கணக்கிலிருக்கும் மெம்பர்களில் 100-க்கு 75 பேர்கள் ஒரே அபிப்பிராயத்தோடு செய்த எந்த தீர்மானமும் உடனே அமுலுக்கு வரும். அப்படி அல்லாத இதர தீர்மானங்களெல்லாம் அக்கிராசனாதிபதி அந்த தீர்மானத்தை ஒப்புக் கொண்டாலல்லது அது அமுலுக்கு வரா.

4. வருஷக்கடைசியில் தணிக்கை உத்திரவு வெளியான உடன் நிகர லாபத்தில் கால்பங்கு க்ஷேம நிதியைச் சேரும். மறு காற்பங்கை ஏழைகளாயும் யோக்கியதை யுள்ளவராயுமிருக்கும் மெம்பர்களுக்கு உதவிச் சம்பளமாகக் கொடுக்கலாம். அது எப்படி கொடுக்கப்பட வேண்டியது என்பது பஞ்சாயத்தார் தீர்மானத்தை அனுசரித்து ஏற்படவேண்டும். மற்றொரு காற்பங்கை பஞ்சாயத்தார்கள் பொது நன்மைக்காக யுக்தப்படி செலவு செய்துகொள்ளலாம். மிகுதியான நாலில் ஒன்றை ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தில் சாமான் வாங்கியிருக்கும் ரூபாய்க்கு தக்க



வாறு மெம்பர்களுக்குப் பிரித்துக்கொடுக்கவேண்டும். இந்த தொகையை அந்த மெம்பர்கள் டிபாஸிட்டாக வைத்துக்கொண்டு ஏதாவது வட்டி சேர்த்து மெம்பர் சங்கத்தை விட்டு விலகுங்கால் கொடுப்பது நலமாகும்.

இந்த அம்சங்களில், பையன்களுடைய சர்வ சுவாதீனத்தில் விடப்பட்டது சொற்பந்தான் என்று சிலருக்குத் தோன்றும். குடி அரசின் தன்மை இதில் இல்லை என்று சிலர் ஆட்சேபனை சொல்லலாம். தலைமை உபாத்தியாயர் பணங்கொண்டோ, நஷ்டத்திற்கு பாத்தியப்பட்டு அவரால் வெளியில் வாங்கப்படும் கடன்கொண்டோ இச்சங்கங்கள் தற்காலம் நடைபெற வேண்டும். மேலும் பையன்கள் அசாத்தியம் என்று ஒன்றையும் நினையார்கள். கிளர்ச்சி மிகுதியால் நஷ்டத்தை உண்டு பண்ணக் கூடிய சில காரியங்களைச் செய்து விடலாம். இதை தடுப்பதற்காகவே போதுமான அதிகாரம் தலைமை உபாத்தியாருக்கு கொடுத்திருக்கிறது. பலருடைய அபிப்பிராயத்திற்கு மாறாக அவர் நடப்பார் என்று நினைக்க வேண்டுவதில்லை. சாதாரணமான கோட்பாடுகளுக்கு விரோதமாய் அவ்வளவு படித்தவர்கள் நடப்பது அபூர்வம். அவர்களுக்கு ஐக்கியத்தில் ஊக்கமுண்டு. மாணவர்களுக்கு இச்சங்கங்கள் நடத்துவதில் பழக்கம் மிகுதியாகி, வியாபாரம் நடத்துவதற்கு வேண்டிய மூலதனமாக உபயோகப்படக் கூடிய க்ஷேமநிதி விருத்தி அடையும்போது காலக்கிரமத்தில் சுயஅரசாட்சி கொடுத்துவிடலாம். நன்மையைநாடும் எண்ணங்கொண்ட ஐக்கியகூட்டுறவினரிடத்து இக்காரியத்தை ஒப்படைக்கலாம். ஆனாலும் கொஞ்சகாலத்திற்குத் தலைமை உபாத்தியாயரிடம் விடுவதே நலமாகும்.

இம்மாதிரியான சங்கம் ஏற்படுத்துவதற்கு தடை இருந்தாலும் ஐக்கிய அறிவை வேறு வழியாலும் புகட்டலாம். கூட்டுறவு இயக்கத்தின் ஒரு பாகத்தைப்பற்றி வியாசம் எழுதச் சொல்லி நல்ல வியாசத்திற்குப் பரிசளிப்பதனால் பையன்களுக்கு அதில் ஒருவித ஊக்கமுண்டாகும். மாணவ சங்கங்களில் இது சம்பந்தமான விஷயங்களை பேசச் சொல்லுவதினால் கூட்டுறவைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள ஒரு சாதனமாகும். பல மாகாணங்களிலுள்ள கூட்டுறவு வர்த்தமானிகளை வரவழைத்து மாணவர்கள் வாசிக்கும்படிச் செய்யலாம். புஸ்தகசாலைகளில் பையன்கள் அறிவுக்குத் தகுந்த ஐக்கிய இலக்கியத்தை வாங்கி வைத்து அப்புஸ்தகங்களின் சிலபாகங்களை அவர்களை வீட்டில் வாசிக்கும்படி செய்து அதில் வியாசக் கேள்விகளைக்கேட்டு ஆங்கிலேயத்திலோ தமிழிலோ எழுதும்படி செய்யலாம். மார்க்கு மார்க்கு என்று பறந்துக்கொண்டிருக்கும் பையன்களுக்கு இவ்வியாஸங்களுக்கு மார்க்குபோட ஆரம்பித்தால் கூட்டுறவின் அறிவு இலகுவில் விருத்தியாகும். இப்படியெல்லாஞ் செய்

வதற்கு வேண்டா மென்று கையைப்பிடிப்பவர் யாருமில்லை. "வேண்டு மென்றால் வேரிலும் காய்க்கும்."

ஹைஸ்கூலி (High School) லிருந்து கலாசாலைக்குப் பையன்கள் செல்வது கஷ்டமானாலும் கூட்டுறவை மாணவர்களுக்குப் போதிப்பது இலகு வானகாரியந்தான். கலாசாலைகளிலும் கிரய விக்கிரய சங்கம் ஏற்படுத்தவேண்டும். ஆனால் கலாசாலைச் சங்கங்களில் பங்குத் தொகையை வைத்து பையன்களே சங்கத்தை நடத்தும்படிச் செய்யலாம். இவ்வாறு செய்வதினால் கூட்டுறவு இயக்கம் மிகுதியாய், இந்தியா முன்னேற்ற மடைந்து கைத்தொழிலும் விவசாயமும் விருத்தியாகும். செல்வம் தழைத்தோங்கும். இந்தியர்கள் இன்புற்று வாழ்வார்கள்.

"நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" யென்பதற் கேற்ப இந்தியாவில் தரித்திர மென்பது பறந்து போய், எல்லோரும் தவனவந்தர்களாகவும் செல்வவந்தர் களாகவும் இருப்பார்கள்.

---

## விசாகப்பட்டணம் ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்

விசாகப்பட்டணம் ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1919-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ந் தேதி யன்று விஜயநகரத்தில் நடைபெற்றது. ஜில்லாகலெக்டர் மிஸ்டர் வர்னென் அக்கிராசனம் வகித்தார். விஜயநகரம் கோவாபரேடிவ் பாங்கின் பிரஸிடெண்டாகிய ஸ்ரீமான் நரசிம்ஹம் பந்துலுகாரு வரவேற்புக்கமிட்டியின் தலைவராக நின்று பிரதி நிதிகளை வரவேற்றார். பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் விசாகப்பட்டணம் ஜில்லாவில் விர்த்தியடைந்துள்ள சரித்திரத்தை விஸ்தாரமாக எடுத்துச்சொன்னார். விஜயநகரம் கோவாபரேடிவ் பாங்கு செய்துள்ள அரியமுயற்சியையும் பிரயத்தினத்தையும் விரிவாகச் சொன்னார். ஜில்லாவின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டாலொழிய விசாகப்பட்டணம் ஜில்லாவாசிகள் திருப்தியடையக் கூடாதென்றுச் சொன்னார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபனமாவது மட்டும் போதாதென்றும் கிராமவாசிகளின் பெருப்பாலோர் கிராம ஐக்கியச் சங்கத்தில் மெம்பர்களாகச் சேரும்படி ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யவேண்டியது அவசிய மென்றும் குறிப்பிட்டுக் கூறினார். பிறகு கூட்டுறவின் நன்மைகளையும், அதனால் ஜனங்கள் அடையக் கூடிய பலன்களையும் கேட்போர் மனதில் பதியும்படியாக தெளிவாக



எடுத்துச் சொன்னார். ஏழைகளின் கஷ்ட நிவர்த்திக்காக பணக்காரர்களும் தனவந்தர்களும் தம்முடைய செல்வத்தை பிரயோசனப்படும்படியாகச் செய்ய வேண்டுமென்றும் அப்படிச் செய்தால்தான் ஏழைகளின் கஷ்டமும், தரித்திரமும் நீங்குமென்றும் சொன்னார். கூட்டுறவு இயக்கம் முழுவதுமே சுய உதவியை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் முயற்சியாதலால் கவர்ன்மென்டுத் தரப்பிலிருந்து அதிக உதவி எதிர்பார்க்கக் கூடாதென்றும் கூறினார்.

பிறகு விஜயநகரம் பைங்கின் ரிப்போர்ட்டும், இன்னும் சில முக்கிய சங்கங்களின் ரிப்போர்ட்டுகளும் படிக்கப்பட்டன. பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்.

1. ஐரோப்பா யுத்தம் நேசக் கட்சியாருக்குத் திருப்திகரமாக முடிவு பெற்றதைப் பற்றி விசாகப்பட்டணம் ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் தன்னுடைய அளவிலா மகிழ்ச்சியைக் காட்டுகின்றது. இக்கான்பரன்ஸ் தன்னுடைய சந்தோஷகரமான வந்தனத்தையும் முதிர்ந்த இராஜபக்தியையும் சக்கரவர்த்தியாகிய அரசர்பெருமான் ஐந்தாவது ஜார்ஜ் மன்னரவர்கட்குச் செலுத்துகின்றது.

2. டிரஸ்டுபெண்டுகளும், என்டௌமென்ட் பண்டுகளும் கூட்டுறவுச் சங்கங்களில் டிபாஸிட்டு செய்துவைக்க அனுகூலமாக இருக்கும்படியாக இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் விதிகளை கூடிய சீக்கிரம் மாறுதல் செய்யும்படியாக இக்கான்பரன்ஸ் கவர்ன்மென்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

3. இவ்விராஜதானியிலுள்ள ஜில்லாபாங்குகள் ஒன்றுக் கொன்று கடன் கொடுத்துக் கொள்ள ரிஜிஸ்ட்ராரவர்கள் அனுமதிகொடாததினாலும், ஜில்லாபாங்குகளுக்குக் கடன் கொடுக்கும் சுதந்தரம் முழுவதையும் மெட்ராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கே வைத்துக்கொண்டிருத்தலாலும், மெட்ராஸ் சென்ட்ரல் அர்பன்பாங்கு $6\frac{3}{4}$வட்டிக்கு ஜில்லாபாங்குகளுக்குக் கடன் கொடுக்கும்படியாக இலாகா அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றாவது அல்லது மெட்ராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கை அப்படிச் செய்ய முடியாமற்போனால் அப்படிச் செய்யமுடிகிற வரையில் ஜில்லா பாங்குகள் ஒன்றுக்கொன்று கடன் கொடுத்துக்கொள்ளலா மென்று உத்தரவு செய்யும்படியாவது இக்கான்பரன்ஸ் இலாகா அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றது:—

4. இம்மாகாணத்தின் ஜில்லாபாங்குகள் பலவற்றிற்கும் கொடுத்திருப்பது போல் விசாகப்பட்டணம் ஜில்லா பாங்கிங் யூனியனுக்கு, மெட்

ராஸ் பாங்குடன் ரூ. 30,000-க்கு கியாஷ் கிரிடிட் ஸிஸ்டம் கொடுக்கும்படியாக இக்கான்பரன்ஸ் ரிஜிஸ்ட்ராரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

5. ஜில்லா பாங்குகளில் டிபாஸிட்டுசெய்து கூட்டுறவு இயக்கத்தை வளர்ச்சிபெறச் செய்யும்படியாக இக்கான்பரன்ஸ் இராஜாக்களையும், ஜமீன்தார்களையும், பெரிய மிராசுதார்களையும் கேட்டுக் கொள்ளுகின்றது.

6. கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெற்றோங்குவதற்கு சங்கத்தின் மெம்பர்கள் தாங்கள் தங்களிடமுள்ள சொற்பத் தொகைகளையுங்கூட ஐக்கிய சங்கங்களில் டிபாசிட்டுசெய்து வைக்கவேண்டியது அவசியமென்று மெம்பர்கள் மனதில் ஒவ்வொரு சங்கமும் பதியச் செய்யவேண்டியது அவசியமென்றும், இதற்காக சங்கங்கள் வேண்டிய பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப் படுகின்றது.

7. ஒவ்வொரு சங்கமும் தன்னுடைய மெம்பர்களின் கிரிடிட் (நாணய) அளவைத் தெரிந்துக்கொண்டு அதன்பேரில் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டியது அவசியமென்று இக்கான்பரன்ஸ் வற்புறுத்துகின்றது.

8. நாணயச் சங்கங்கள் தவிர இதரவிதமான கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஜில்லாவில் ஸ்தாபனஞ் செய்ய ஏற்பாடுகள் உடனே செய்யப்படவேண்டுமென்றும் தாழ்ந்தவகுப்பினர்களுக்காக நாணயச்சங்கங்கள் இன்னுஞ்சில ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும்இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கின்றது.

9. தவணைக் கடந்துபோன மெம்பர்கள்மீது செய்யப்படும் டிக்ரிகளை நில வாய்தாவின் பாக்கியைப்போல் வசூல் செய்ய கவர்மெண்டார் ரிவினியூ கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது. அப்படி உத்தரவு செய்யப்பட்டால் பாக்கிகள் துரிதமாக வசூலாக இடமேற்படும்.

10. நிலத்தைச் சீர்திருத்தவும், விவசாயச் செலவுகளுக்கும், கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலபாய் கவர்ன்மெண்டார் பட்வாடா செய்யவேண்டுமென்று, இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

11. கோவாபரேடிவ் சங்கங்கள் அனுப்பும் மணியாடர்களுக்குக் கமிஷன் இல்லாமல்செய்யும்படியாகவும், சப்டிரஷரிகள் மூலமாக ரெமிட்டன்ஸ் டிரான்ஸ்பர் ரசீது முறையால், பணம் அனுப்பவேண்டிய சௌகர்யங்களைச் செய்யும்படியாகவும் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

---



# கஞ்சம் ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

இக்கான்பரன்ஸ் பர்ஹாம்பூரில் நடைபெற்றது. இராஜ மஹேந்திரம் என். சுப்பராவ் பந்துலுகாரு அவர்கள் B.A.B,L. அக்கிராசனம் வகித்தார். வரவேற்புக்கமிட்டியின் தலைவரான ராவ்பகதூர். கே. கணபதி ஐயரவர்கள் இத்தகைய கான்பரன்ஸுகள் கூடுவதின்நோக்கம்,கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களை ஜனங்களுக்குப் போதிக்கவும், இது பரியந்தம் என்ன செய்யப்பட்டுள்ள தென்பதை அறிந்து கொள்ளவும்,இனி என்ன செய்யவேண்டும், அல்லது என்ன செய்யக்கூடு மென்பதை யோசிக்கவும் என்பதாகக் கூறிவிட்டு கூட்டுறவு சம்பந்தமாய் இந்தியாவில் அதன் சரித்திரத்தையும் மிகவும் விரிவாக எடுத்துச் சொன்னார்.

சமீபத்தில் வங்காளத்தில் நடந்த கோவாபரேடிவ் கான்பரன்ஸில் ஸர் டேனியல் ஹமில்டன் சொன்ன விஷயங்களை இவர் குறிப்பிட்டுக் காட்டி கூட்டுறவின் வளர்ச்சிக்கு இளைஞர்களுடைய ஏராளமான உதவியைக் கோரவேண்டுமென்றும் சொன்னார். கஞ்சம் ஜில்லாவின் கூட்டுறவு சரித்திரத்தை விவரமாய்க்கூறி கஞ்சம் ஜில்லாவில் கூட்டுறவு இன்னும் பால்யத்திலேயே இருக்கிறதென்றும், கூட்டுறவு இயக்கத்தில் வேலை செய்ய திறமானவர்கள் இன்னும் பலர் வேண்டியிருக்கிறார்களென்றும் உரைத்தார். பருத்தி நூல் விவசாயிகளுக்கும் பட்டுநூல் விவசாயிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி பற்பல தொழிற்களையும் விசாரணைசெய்து அவைகளின் விருத்திக்கு கூட்டுறவு முறையில் யாது செய்யக்கூடுமென்பதை நிர்ணயஞ் செய்யவும், அவ்வியக்கங்களை விர்த்தி செய்யவும் கவர்ன்மெண்டார் பிரத்தியேக ஆபீஸர்களை நியமனஞ் செய்யவேண்டியது அவசியமென்றும் சொன்னார்.

## அக்கிராசனர் பிரசங்கம்

அக்கிராசனர் செய்த பிரசங்கத்தில் ஒரு பகுதி பின்வருமாறு:—

உலகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த பெரும் யுத்தம்அதிர்ஷ்டவசமாய் நின்றுவிட்டது.யுத்தம் நின்றுவிட்டபின் நாம் கவனிக்கவேண்டிய காரியங்களும் முடிவு செய்யவேண்டிய விஷயங்களும் அநேகமிருக்கின்றன. இந்தியாவின் பொருளாதார நிலைமை இப்போ திருந்ததைப்போல் வேறெக்காலத்திலும் இருந்தது கிடையாது. உணவுப் பொருள்களின் விலைமட்டுமே யல்லாமல் தினசரி வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளினுடையவும் விலை, விஷம் ஏறுவது போல் தலைக்கேறி நிற்கின்றது. உடுக்கத் துணிகளில்லாத காரணத்தால் சிலர் தம்முடைய பெண்களைப்

பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதையும் நிறுத்தி விட்டார்கள். 100-க்கு 34 வட்டி கொடுக்கிறே னென்றாலும் பணம் அகப்படுவது கஷ்டமாய் இருக்கின்றது. கஷ்ட நிலை உலகத்தின் எல்லா பாகங்களிலுமே இருக்கிற தென்று ஒரு வாழுச் சொல்லலாம். இங்கிலாந்தின் பார்லிமெண்டு சபையை அரசர் பெருமான் சென்றமாதம் 11ந் தேதி திறந்து வைக்கும் போது இங்கிலாந்தின் தரித்திர நிலைமையைப்பற்றியும் இங்கிலாந்தில் ஜனங்கள் படுங் கஷ்டத்தைப்பற்றியும் தம்முடைய அரிய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்தார். செல்வம் மிகுந்த இங்கிலாந்தின் நிலையே இத்தகையதானால் எப்போதும் தரித்திரத்தில் மூழ்கி யிருக்கும் இந்தியாவின் கதியைப்பற்றி விரிவாகச் சொல்லவேண்டுவது அவசியமோ? சென்னை மாகாணத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி விசாரணை செய்ய மாகாண கவர்ன்மெண்டார் மறுத்துவிட்டார்கள். ஆ்,வாஸ்தவந்தானே. இம்மாகாண வாசிகள் கடனென்னும் காரிருளில் அடைபட்டிருக்கிறார்களென்னும் யாராலும் மறுக்க முடியாத உண்மையை விசாரணை செய்தறியவேண்டிய அவசியமென்ன? நாணயச் சங்கங்களின் ஸ்தாபனத்தால் ஏழைகளுக்கு அதிக நன்மை கிடைக்கிற தென்பது கிடையாது. கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியே, ஏழைகளுக்குப் பூஜ்ஜியமாக இருக்கின்றது. ரையத்துகளின் கடனை யெல்லாம் பைசல் செய்வதானால் 300 கோடி ரூபாய் அவசியம் ரையத்துகளுக்கு வேண்டிய பணத்தை சென்டிரல் பாங்குகளாலும் கொடுத்துதவுவதற்கு இயலவில்லை. சாம்பர்லேன் கமிஷன் சிபார்சு செய்த "ஸ்டேட்பாங்கு" ஒன்று ஏற்படவேண்டியது அவசியம். ரிஜிஸ்தரார்களுடைய கான்பரன்ஸும், வங்காளமாகாணக் கான்பரன்ஸும் இவ்வபிப் பிராயத்தை ஆமோதித்துப் பேசுகின்றன. மான்டேகு செம்ஸ் போர்டு ரிபோர்ட்டில் சொல்லிய பிரகாரம் கவர்ன் மெண்டார், வழிகாட்டியாகவும், உதவி கோலாகவும் தைரியமாகச் செல்ல வேண்டும். விவசாயத்தையும், தொழிலையும் வியாபாரத்தையும் விர்த்திசெய்வதற்கு சங்கங்கள் ஸ்தாபனமாக வேண்டும். வங்காள மாகாணத்தில் நடக்கும், நிலக்கரி, சணல்வியாபாரத்தில் பணம் வெளிச்செல்லுகின்றது. பம்பாய் மாகாணத்தில் பணம் நம் தேசத்திலேயே தங்குகின்றது. படிப்பாளிகளின் பெரு முயற்சியில்தான் கூட்டுறவுஇயக்கம் விர்த்தியகா வேண்டு மென்றும் வெற்றிபெற வேண்டு மென்றும் கர்ஸன் பிரபுசொல்லி யிருக்கிறார். கூட்டுறவு இயக்கத்தில் பொது ஜனங்களின் நோக்கமும் அபிப்பிராயமும், இயக்கத்திற் கனுகூலமாகவே இருப்பதாக ரிஜிஸ்தரார் தம்முடைய ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை மாகாணம் முழுவதிலுமே 50000 கிராமங்கள் இருக்கின்றன. தற்காலம் 4,202 கிராமங்களுக்கு 2718 சங்கங்கள் ஸ்தாபிக்கப்



பட்டுள்ளன. மாகாணத்தின் ஜனத்தொகை 450 இலட்சத்திற்கு, மூன்று இலட்சம் பேர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். தொழில்களை விர்த்தி செய்வதற்கேற்ற கூட்டுறவுச் சங்கங்கள் அவசியம். இயக்கம் ஆரம்பித்து பதினான்கு வருஷங்களாகின்றன. இயக்கம் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறதென்றுச் சொல்லவேண்டும். விவ தாழ்ந்த வகுப்பினர்களுக்காக சங்கங்கள் ஸ்தாபனமாக வேண்டும். சாயிகளுக்கு விதைகள் சப்ளைசெய்ய சங்கங்கள் ஸ்தாபனமாக வேண்டும். இயக்கத்தில் பாடுபட்டுழைக்க அபிமானிகள் அநேகர் வேண்டியிருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தை விர்த்திசெய்யவும் சுகாதாரம் முதலியவைகளை கிராமவாசிகளுக்குப் போதிக்கவும், ஜில்லா சங்கங்கள் (District Association) போதகர்களை கிராமங்களுக்கு அனுப்பவேண்டும். மேற் கண்ட விஷயங்கள் சம்பந்தமாக துண்டுப்பத்திரிகைகள் கிராமவாசிகளுக்குள் பட்வாடா செய்யப்படவேண்டும். கூட்டுறவு இயக்கத்தை விர்த்திசெய்ப கவர்ன்மெண்டாரும், குடிமக்களும் இவ்விருவர்களுமே பாடுபட வேண்டும். நம் தேசத்தில் தற்காலம் கூட்டுறவு மேல் நாட்டு, முறையில் நடந்து வருகின்றது. ஐரோப்பா கண்டத்தில் ஜர்மனி தேசத்தில் தான் கூட்டுறவு வேரூன்றி தழைத்தோங்கி நின்றது. அத்தகைய தேசமாகிய ஜர்மனியின் கதியும், நிலைமையும், நமக்கெல்லோருக்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

மான்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களில் கூட்டுறவு இயக்கம் ஜனப்பொறுப்புக்குள் வரக்கூடியதாகையால் இனி கூட்டுறவின் வளர்ச்சி முழுவதையும் ஜனங்களே பார்த்து வரவேண்டியிருக்கும்.

வியாபாரத்திற்காக சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்யப்படவேண்டும். ஸ்டோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஸடோர் சங்கங்களுக்காக இதர கூட்டுறவுச் சங்கங்கள் சௌகர்யமான காலத்தில் சாமான்கள் வாங்கிக் கொடுக்கும்படியாக ஏற்பாடு நடக்கவேண்டும். கூட்டாகச் சேர்ந்து வாங்குவதில் எப்படி இலாபமிருக்கிறதோ அதே மாதிரியாக கூட்டாகச் சேர்ந்து விற்பதிலும் இலாபமிருக்கின்றது.

பிறகு சில சங்கங்களின் ரிப்போர்ட்டுகள் வாசிக்கப்பட்டன. கான்பரன்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவைகள் பின்வருமாறு :—

## தீர்மானங்கள்.

1. கூட்டுறவு இயக்கத்தை இவ்விராஜதானியில் பரவச் செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஓர் முடிவானத் தீர்மானத்தைச் செய்ய வேண்டுமென்றும் இயக்கம் இவ்விராஜதானியில் பத்துவருஷங்களுக்குள் பரவிவிடும்படியாக, அதற்கேற்றவாறு சிப்பந்திகளை நியமிக்கவேண்டு

மென்றும் இக்கான்பரென்ஸ் மிக்க தாழ்மையுடன் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

2. பரீட்சார்த்தமாக ஒன்று அல்லது இரண்டு கிரெயின் பாங்குகள் (தானியபாங்குகள்) ஸ்தாபனஞ் செய்யப் படவேண்டுமென்று இக்கான்பரென்ஸ் தீர்மானிக்கின்றது.

3. நெசவு, நூல் நூத்தல், பித்தளை, செம்பு, வெங்கலம் முதலிய உலோகங்களின் தொழில்கள், முதலியதொழில்களைச் சீர்திருத்தவும் அவைகளை விர்த்திசெய்யவும் கூட்டுறவுச் சங்கங்களின் ஸ்தாபனம் சாத்தியமா வென்பதை விசாரணைசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்றும் கோவாப்ரேட்டிவ் ரிஜிஸ்தராரும், தொழிலிலாகா டைரக்டரும் அக்கமிட்டிக்கு வேண்டிய உதவி செய்யும்படியாய் அவர்கள் கேட்டுக்கொள்ளப் படவேண்டுமென்றும், இக்கான்பரென்ஸ் தீர்மானிக்கின்றது.

4. கிராம பாங்குகளுக்கு ஜில்லா பைங் கிங்யூனியன் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி விகிதத்தை தற்காலத்திற்கு நூற்றுக்கு ஒன்று வீதம் உயர்த்தவேண்டியது அவசியமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானஞ் செய்கின்றது.

5. டிரஸ்டு பண்டுகள் கோவாரேடிவ் சங்கங்களில் டிப்பாசிட்டு செய்துவைக்கும்படியாக டிரஸ்டு ஆக்டு மாற்றப்படவேண்டும். ஜில்லாவின் ரயில்வே பண்டுகள் (பணம்) ஜில்லாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் டிபாசிட்டு செய்துவைக்கும்படியாக விதிகள் மாற்றப் படவேண்டு மென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானஞ்செய்கின்றது.

6. கூட்டுறவு சங்கங்கள் அனுப்பும் மணியார்டர் தொகைகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரும் தொகைகளுக்கும், பம்பாய்மாகாணத்தில் 100க்கு 75 வீதம் மணியார்டர் கமிஷன்குறைத்து வைத்திருப்பது போலவே இம்மாகாணத்திலும் செய்யும்படியாக கவர்ன்மெண்டாருக்கு ரிஜிஸ்தரார் எழுதவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் ரிஜிஸ்தராரைக்கேட்டுக்கொள்ளுகின்றது,

7. பிரைமெரி சங்கங்களிலுள்ள மெம்பர்கள் கடன் பெறுவதற்கு மட்டும் சங்கத்தில் மெம்பர்களாவதென்று வைத்துக்கொள்ளாமல் மெம்பர்கள் சங்கங்களில் மாதம்மாதம் தங்கள் தங்களால் மீத்துவைக்கக் கூடிய சொற்பத் தொகையையாயினும் டிபாசிட்டுகள் மூலமாகவாவது, பங்குத் தொகையாகவாவது பாங்குகளில் கட்டிவரவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானஞ் செய்கின்றது:

8. முன்கடன்களைத் தீர்க்கவும், இன்னும் பலன்தரக் கூடிய இதர காரியங்களுக்கும் சங்கங்கள் மெம்பர்களுக்குக் கடன்கொடுக்கும்படியாக



சென்டிரல் பாங்குகளும், பாங்கிங் யூனியன்களும், கிராமச்சங்கங்களுக்கு நீண்ட காலத்தவணைக்கடன்களைக் கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்னமாஞ்செய்கின்றது.

9, கலாசாலைகளிலும், பள்ளிக் கூடங்களிலும் மாணவர்களுக்கு புத்தகங்கள் ஸ்டேஷனரி சாமான்கள் முதலியவை வாங்குவதற்காக, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட அல்லது ரிஜிஸ்தர் செய்யப்படாத கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் கலாசாலை மாணவர்களுக்கும் பள்ளிக் கூடமாணவர்களுக்கும், கூட்டுற விஷய சம்பந்தமான பாடங்கள் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும், கலா சாலை அதிகாரிகளும், பள்ளிக்கூட அதிகாரிகளும் கேட்டுக் கொள்ளப்பட வேண்டுமென்பதாக இக்கான்பரன்ஸ் தீர்மானஞ்செய்கின்றது.

10. வாஸ்தவமாக எதிர்பாராத காரணங்களை முன்னிட்டு தவணைப்பிரகாரம் கடனைத்திருப்பிக் கொடுக்கமுடியாமற் போகும் சில சமயங்களில் மெம்பர்களுக்கு தவணை நீடித்துக் கொடுக்கவேண்டுமென்றும் அப்படித்தவணை நீடித்துக் கொடுக்கப்டும் சமயங்களில் அபராத வட்டி வசூல் செய்யக் கூடாதென்றும், இவ்விதமாக கிராமச் சங்கங்களின் விதிகளில் விதி ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானஞ்செய்கின்றது.—

---

# பெருந்துறை கோவாபரேடீவ் கான்பரன்ஸ்

சமீபத்தில்பெருந்துறையில் நடந்த ஈரோடு பெருந்துறை இரண்டாவது கோவாபரேடீவ் கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியா ரவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

நாம் முன்னடைவதைத்தடுத்து நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பது கல்வியில்லாக் குறையேயாகும். கல்வியற்றிருக்கும் ஜனங்களிடம் பொருளாதார நிலைமையிலாவது, இராஜீய நிலைமையிலாவது எத்தகைய முன்னேற்றமும் எதிர்ப்பார்க்க முடியாது.

டென்மார்க்கும், ஹாலண்டும் கூட்டுறவு இயக்கத்தில் பெயர் பெற்று சிறப்புற்றோங்கி தலைதூக்கி நிற்கின்றன வென்பது யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயம். இதற்குக் காரணம் அத்தேசங்களின் செழுமையல்ல, நிலத்தின் செழிப்பல்ல. நம்முடைய பாரதபூமி மேற்சொன்ன நாடுகளின் பூமிகளைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு சிறந்த பூமி. ஹாலண்டு தேசத்தின் பூமி எப்போதும் ஜலத்தில் மூழ்கிய சதுப்பு நிலமென்றுயாவரும்அறிந்தவிஷயம். மேற்சொன்ன தேசத்தார்கள் அவர்

ளுடைய உழைப்பினால் அவ்விதம் முன்னடைந்திருக்கவில்லை. கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு ஜில்லாக்களிலுள்ள ரையத்துகள் தங்களுடைய உழைப்பிற்குப் பெயர் போனவர்கள். நம்மினும் பலவழிகளிலும் தாழ்ந்துள்ள ஹாலண்டு,டென்மார்க்கு தேசத்தார் நம்மைவிட சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் அவர்களுடைய கல்வியே யாகும். அவர்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி அத்தேசத்திய இராஜாங்கத்தார் அதிக கவலையும் சிரத்தையும் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தாரோ, ஜனங்களுடைய முறையீடுகளைச் சிறிதேனுங் காதுகொடுத்துக் கேளாமல் நம்தேசத்தின் வியாபாரத்தையும், தொழில்களையும் சாகடித்துவிட்டு வியாபாரமும், தொழிலும் க்ஷீணித்துப் போனதற்குக் காரணங்களை விசாரணை செய்ய ஒருகமிஷனை நியமனஞ்செய்கிறார்கள். அக்கமிஷனின் சிபார்சுகளும், யோசனைகளும்,ஏழை விவசாயிகள் கனவிலும் காணக் கூடாத அவ்வளவு பணத்தைச் செலவழிக்க வேண்டிய மார்க்கங்களா யிருக்கின்றன. கமிஷன் கூறும் யோசனைகளையும், சிபார்சுகளையும் அறிந்து கொள்ளவும் விவசாயிக்குக் கல்வியறிவு போதுமானதாகவில்லை. அவர்கள் சிபார்சு செய்யும், இயந்திரங்களும், விவசாய மாதிரிகளும், சொற்பநிலமுள்ள விவசாயிக்கு எத்தகைய தேனும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை. நம்தேசத்தின் விவசாயிகள் தங்கள் தேசத்திற்கு அத்தியாவஸ்யமான உணவுப் பொருள்களை விளைவு செய்வதற்குப் பதிலாக ஜப்பான் தேசத்து வியாபாரிகள் பயன் அடையக் கூடியதாய் அவர்களுக்கு வேண்டிய பருத்தியை விளைவு செய்து கொடுக்காமல் இருந்தால் அதிக நன்மையாக இருக்கும். நம்தேசத்தில் விளைவாகும் கோதுமையை அதிகப் பணவாசைக்காட்டி வெளித் தேசத்திற்குக் கொண்டு போகப்படாமல் இருந்தால் எவ்வளவோ மேலாக இருக்கும்.

நம்முடைய கிராமங்களின் நாகரீகத்தையும் செல்வநிலையையும், இதர தேசங்கள் சித்தி பெற்றுள்ள முறையில், சீர்படுத்தினாலொழிய நமக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லை யென்றும் நம்முடைய எண்ணங்கள் பூர்ணமாகப் போவதில்லை யென்றும் மீண்டும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுகின்றேன். இவ்விஷயந்தான் நாம் உடனே செய்ய வேண்டிய காரியம். இவ்விஷயந்தான் நாம் முதலில் கவனிக்க வேண்டிய காரியமாகும்.

விவசாயிகளுக்கு கல்விக்கு அடுத்ததாக அத்தியாவசியமாய் வேண்டியுள்ளது நாணயமாகும். அந்நாணயம் இலகுவாயும் சௌகர்யமாகவும் கிடைக்கக்கூடியதாய் இருக்கவேண்டும்., சுய மரியாதையை இழந்து கொண்டு கெஞ்சிக்கேட்டு அடைவதாக இருக்கக்கூடாது. தன்னுடைய உழைப்பிற்கும் யோக்கியதைக்கும் கொடுக்கக்கூடிய மதிப்பாக விருக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்னர்தான் தொழில் சம்பந்தமாய் வேண்



டிய பணத்தை உதவுவதற்காகவென்று ஒரு பெருங் கம்பெனி லண்ட
னில் ஸ்தாபிக்கப்பட்டது. நீங்கள் அஜாக்கிரதையாக இருப்பீர்களானால்
அச்செல்வம், முழுவதும் உங்களுக்குத்தான் தீங்கை விளைவிக்கக்கூடிய
தாக இருக்கும். யுத்தம் முடிவான இச்சமயத்தில் தொழிலையும் வியா
பாரத்தையும் விர்த்திசெய்ய ஐரோப்பிய நாடுகளெல்லாம் பாடுபட்டுக்
கொண்டிருக்க இந்திய ரையத்துக்கள்மட்டும் இவ்விஷயமாய் சிறிதும்
கவனிக்காமலிருக்கிறார்கள். எப்போதும் போலவே இந்திய ரையத்தின்
நிலைமை ஒரே கதியாக இருக்கவேண்டியதுதானோ? தனக்கு வேண்டு
மென்கிற கடனுக்கு நிலத்தை அடமானமாக வைத்துக்கொண்டு கடனை
அடைவதுகூட கஷ்டமாக இருக்கின்றது. நிலத்தைப்போல் வேறெந்த
ஜாமீனும் அவ்வளவு திறமானதாகக் கிடையாது. ஏனெனில் நிலத்தை
எவரேனும், கவர்ந்துகொண்டு போகமுடியாது. தூக்கிக்கொண்டு செல்ல
முடியாது. இத்தகைய ஆதாரத்தை ஜாமீனாகக் கொடுத்தும் பணம்
கடன் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. தற்காலம் 34, வட்டிக்குக்
கூட பணம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்று ஸ்ரீமான் என்.
சுப்பராவ் சமீபத்தில் எடுத்துக்காட்டி யிருக்கிறார். இவ்விஷயத்தில் இந்
திய ரையத்தின் துர்ப்பாக்கியம்போல் வேறெங்கேயும் காண்பது அரிது.
யுனைடெட் கிங்டத்தில் பட்டணங்களுக்கு வெகுதூரம் எட்டியுள்ள
சொற்பக் கிராமங்களிலுங்கூட பணம் எளிதில் கிடைக்கின்றது. சில
சமயங்களில் ஒருரையத்து ஒருபாங்கில்மட்டுமல்ல இரண்டுமூன்றுபாங்கு
களிலும் லேவாதேவி செய்கிறான். இது காரணம்பற்றித்தான் அத்தேசத்
தில் கோவாபரேடிவ் கிரெடிட் சங்கங்களின் தேவை அதிகமாகக் கிடை
யாது. ஆனால் நம் தேசத்திலோ மிகத்திறமானதும் பந்தோபஸ்தானதும்
ஜாமீனாகிய நில ஜாமீனைக் கொடுத்தும் பணம் கிடைப்பது கஷ்டமாக
இருக்கின்றது. சிறிது யோசனைசெய்து விஷயங்களைக் கவனிப்போமா
னால் காரணம் எளிதில் விளங்கும்.

ஒரு தேசத்தில் கஷ்டப்பட்டு உழைத்து பணத்தை உண்டுபண்ணச்
செய்கிறவன் விவசாயியேயாவான். நம் தேசத்தில் நிலத்துக்குரியவர்களா
கிய ரையத்துகள் 100க்கு 99 விவசாயிகளல்ல. இது காரணம்பற்றி
விவசாயத்தால் உண்டாகும் பணம் முழுவதும் பட்டணங்களிலும், நக
ரங்களிலும் வாசஞ்செய்யும் நிலத்துக்குரியவர்களுக்குப் போய்ச் சேர்ந்து
விடுகிறது. அப்படிப் போய்ச் சேராத இடங்களில் விவசாயி கொடுக்க
வேண்டியிருக்கிற, என்றும் தீராத கடன் பாக்கிக்குப் போய்ச் சேருகின்
றது. பட்டணங்களிலும் நகரங்களிலும் வாசஞ்செய்யும் கனவான்களி
டம் பணம் வந்தவுடன்-பாங்குகளிலும் கம்பெனிகளிலும் குறைந்த வட்
டிக்குப் போடுகிறார்கள். விவசாயியின் உழைப்பால் உண்டாகும் பணம்
முழுவதும் இம்மாதிரியாக, வெளிச்சென்று விடுவதால் விவசாயிக்குப்

பணம்வேண்டியபோது எளிதில் கிடைப்பது கிடையாது. விசாயிக்குப் பணம் வேண்டியபோது விவசாயி இந்தப் பெரிய பாங்குகளில் கடன் பெறமுடியாது. ஏனெனில் விவசாயி கொடுக்கும் ஜாமீனை தகுந்த ஜாமீனாக பெரிய பாங்குகள் கருதுவதுமில்லை. சொற்பக்கடன்களைக் கொடுக்க பெரிய பாங்குகள் முற்படுவதுமில்லை. ஆனதுபற்றி விவசாயிக்கும் பணம் வேண்டியபோது இதர மார்க்கங்களைத் தேடவேண்டியவனாக இருக்கிறான். இதரமார்க்கங்களைத் தேடி கடன் பெறுவதிலும் ஏராளமான வட்டி கொடுக்கவும் நேருகின்றது. தவிர கடன் பெறுவதற்கு முன் சில சமயத்தில் தன்னுடைய சுயமரியாதையை இழந்து யாசகம் கேட்பதிலுங் கேவல நிலைமைக்குச் செல்ல நேருகின்றது.

வியாபாரத்திலும் இத்தகைய நிலைமைதான் ஏற்படுகின்றது. சொற்ப விலைக்கு தோல்களை நாம் ஏற்றுமதி செய்து அதிக விலைகொடுத்து பூட்ஸ் ஜோடு முதலிய தோல் சாமான்களை, இறக்குமதி செய்கிறோம். விவசாயி கஷ்டப்பட்டுழைத்து உற்பத்திசெய்யும் பணத்தை அவன் உபயோகத்திற்காக அவன் தேடும்போது எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறதென்பது நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். இதற்குக் காரணமென்ன? ஒருவருக்கொருவர் நம்பிக்கை கிடையாதே. பக்கத்து வீட்டுக் காரர்களுக்குள்ளும் நம்பிக்கை கிடையாது. நாம் கஷ்டப்பட்டு உழைத்து ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கே நாம் அதிக விலைகொடுத்து இறக்குமதி செய்ய வேண்டியவர்களாக இருககிறோம். நம் தேசத்திலேயே அத்தகையத் தொழில்களைச் செய்யும் முயற்சிகள் பூஜ்ஜியமாயிருக்கின்றன. நம் தேசத்திலேயே அத்தகைய தொழில்கள் இருக்குமானால் நமக்கு இத்தகைய நிலைமை வந்திருக்காது.

நாம் தற்காலம் முக்கியமாக நாணய சம்பந்தமாகவே கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு கிராம நாணயச் சங்கத்தில் 100 மெம்பர்கள் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு ஜில்லாவில் 100 சங்கங்கள் இருக்குமேயானால், இந்த நூறு சங்கத்தின் மெம்பர்களுடையவும் நிகர ஆஸ்தி முப்பது இலட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டுக் கொள்வோம் இந்த முப்பது இலட்சம் ரூபாய் ஜாமீன்பேரில் பத்து லக்ஷம் ரூபாய் கடன் கிடைப்பது கஷ்டமாகாது. இவ்விதமாக ஜில்லாவின் சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு பத்து இலட்சம் ரூபாய்க்கும் ஏழு வட்டிகொடுப்பதாக பேபர் பாண்டுகள் பிறப்பிப்பீர்களானால் உங்களுக்கு வேண்டிய பணம் வெகு எளிதில் கிடைக்கக்கூடு மென்பதில் எவ்வித சந்தேகமுங் கிடையாது. இவ்வித யோசனையை ஆரம்பஞ்செய்து பார்ப்பீர்களானால் ஒன்றும் அசாத்யமல்லவென்பது உங்களுக்கே எளிதில் புலப்படும். இம்முயற்சியை



யும் நோக்கத்தையும் விளம்பரப்படுத்தவேண்டியது அவசியம். தற்காலம் விளம்பரஞ் செய்தாலொழிய எத்தகைய இயக்கமும் எத்தகைய முயற்சியும் வெற்றிபெறுவது கிடையாது. தற்காலம் கடவுள் இருக்கிறாரென்பதைச் சொல்லுதற்குக் கூட விளம்பரங்கள் தேவையிருக்கின்றன. பேபர் பாண்டுகளை பிறப்பிக்கும் விஷயம் இரண்டாவது ரிஜிஸ்தராராகிய தீவான்பகதூர் இராமச்சந்திரராவ் அவர்களால் கூறப்பட்டது. நேற்றைய தினம் கனவு கண்ட விஷயங்ள், இன்றையதினம் பிரத்தியட்சயமாக ஏற்படுவது சகஜம். இந்த எண்ணமும் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் சித்திபெறக் கூடுமென்றே நான் எண்ணியிருக்கிறேன்.

தற்காலம் உள்ளமுறையில் கிரமபாங்கு ஜில்லாபாங்கிற்கு கடனுக்கு மனு செய்கின்றது. ஜில்லாபாங்கு மெட்ராஸ் சென்டிரல் அர்பன் பாங்குக்கு கடனுக்கு மனு செய்கின்றது. இம்மாதிரி பெரியபாங்குகளை எதிர்பார்த்திருக்கும் வழக்கம் ஒழியவேண்டும். கிராமபாங்குகள் தமக்கு வேண்டிய பணத்தைத் தாமே அடைவதற்கு மார்க்கங்கள் தேடிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யப் பட்டால் தான் இந்திய தேசத்திற்கு உண்மையான நன்மை ஏற்படக்கூடும்.

தவிர உங்களுடைய கான்பரன்ஸுகளின் தீர்மானங்களால் கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை மாற்றும்படிச் செய்யவேண்டும். லண்டனில் வைக்கப் பட்டுள்ள ரிசர்வ் தொகைகளை பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு சொற்ப வட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ளதை இந்தியாவிற்கு மாற்றும்படிச் செய்யவேண்டும். இவ்வெண்ணத்திற்காக ஸர். டேனியல் ஹாமில்டன் அவர்களுக்கு வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்களெல்லோரும் ஒற்றுமையாய் இவ்வெண்ணத்தை வற்புறுத்துவீர்களாகில் கவர்ன்மெண்டார் இசைந்து விடுவார்களென்று எண்ணுகிறேன்.

கிராமஸ்தர்களின் தற்கால நிலையை சீர்படுத்துவதற்காக கல்விவிஷயத்தையும் செல்வ விஷயத்தையும் மட்டும் சொன்னேன். இன்னும் இது சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுள. ஆனால் உங்களுடைய அதிக அவகாசத்தை நான் எடுத்துக்கொண்டபடியால் ஓரே ஒரு விஷயத்தை சுருக்கிக் கூறுகிறேன. அவ்விஷயமென்ன வெனில் "குடி" தான். நீங்கள் எல்லோரும் ஒன்றாகக் சேர்ந்து உங்கள் முயற்சிகளனைத்தையும் குடியை விலக்குவதில் செலவழிப்பீர்களானால் நீங்கள் உங்களுடைய தேசத்திற்கும், உங்களது பின் சந்ததியாருக்கும் செய்யக்கூடிய பிரயோசனங்களெல்லாவற்றிலும் இஃது நிகரற்ற நன்மையாகும்.

"பண லேவா தேவி செய்வது மட்டும் கூட்டுறவல்ல, ஜனங்களுடைய நடத்தையிலும், அவர்களுடைய மார்க்கங்களிலும் ஒழுங்குபடச்

செய்வதுதான் கூட்டுறவாகும்." என்று கவிச் சக்கரவர்த்தியாகிய ஸர் ரா பிந்தரநாத் டாகோர் அவர்கள் சமீபத்தில் கோயமுத்தூரில் சொன்னார்.

இவ்வரிய வார்த்தைகளை நீங்களெல்லோரும் கவனிக்க வேண்டுமென்றும், உணர்ந்து கொண்டு அதன்படி நடக்கவேண்டுமென்றுமே நான் இவ்வார்த்தைகளை உங்களுக்கு எடுத்துக் காட்டியது. இவ்வார்த்தைகளின் பலனை நன்கறிந்து நீங்களெல்லோரும் சகஜீவிகளாய் வாழ்ந்து தேசத்திற்கு நன்மை பயப்பதுடன் பின்சந்ததி யாருக்கும் உலகத்திற்கும் நன்மை விளைவிக்க சக்தியுடையவர்களாக வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்

---

## வங்காள மாகாண பத்தாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்

வங்காள மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸ் வங்காள மாகாண கவர்னர் H. E. ரொனால்ட்ஷே பிரபு அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் கவர்னர் அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

சென்ற வருஷம் நீங்கள் செய்த தீர்மானங்களை யொட்டி என்னென்ன செய்யப்பட்டதென்பதை உங்களுக்கு ரிஜிஸ்தரார் விரிவாகச் சொல்லுவார். இரண்டொரு விஷயங்களைமட்டும் நான் குறிப்பிடுகிறேன். வங்காள ஆர் கானைஸேஷன் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளும் பலன்களும் ஏராளமாக இருக்கின்றன. வங்காள மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் இச்சங்கத்தால்தான் விர்த்தியடையப் போகின்றதென்பதாகக் கூறின் மிகையாது. சென்ற வருஷம் நான் உங்கள்முன் பேசியபோது கூட்டுறவு இயக்கத்தில் வங்காள மாகாண ஜமீன்தார்கள் அதிக சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் ஊக்கங் காட்டவேண்டுமென்றுஞ் சொன்னேன். நான் கூறியதுபோலவே சில ஜமீன்தார்கள் கோவாபரேடிவ் ஆர்கனைஸேஷன் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைப்பார்க்க நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். இவர்கள் சேர்ந்திருப்பது இதர ஜமீன்தார்களுக்கும் வழிகாட்டியாக நின்று இதர ஜமீன்தார்களும் இவ்வியக்கத்தில் அதிக ஊக்கமுஞ் சிரத்தையும் காட்டுவார்களென்று நினைக்கிறேன். தவிர சங்கங்களும் அனேகமாக இந்நூதனச் சங்கத்தில் சேர்ந்திருக்கின்றன. இச்சங்கத்தில் ஆயிரம் சங்கங்களுக் கதிகமாக அணைக்கப்பட்டுள்ளன. தினந்தோறும் இன்னும் சங்கங்கள் சேர்ந்துகொண்டே யிருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தில் கவர்ன்மெண்டார் கொண்டுள்ள நல்



லெண்ணத்திற்கும், ஊக்கத்திற்கும் அத்தாட்சியாக வருஷம் 2000 ரூபாயாக மூன்று வருஷத்திற்கு நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். இச்சங்கமும் பிரசாரவேலை மிக்க சுறுசுறுப்பாகவே நடத்திவருகின்றது. கல்கத்தாவில் கூட்டுறவு சம்பந்தமான பிரசங்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. கூட்டுறவு வர்த்தமானி ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. தவிர கூட்டுறவு சஞ்சிகையொன்று பிரதிமாதமும் வங்காள பாஷையில் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது. தவிர இன்னும் அரிய வேலைகள் பல செய்யவும் இச்சங்கம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது. கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கூடமொன்று (கோவாபரேடிவ் ட்ரெயினிங் கிளாஸ்) ஏற்படுத்தவும், காட்சிச்சாலையொன்று திறந்துவைக்கவும் ஏற்பாடு செய்துவருகின்றது. இச்சங்கத்தின் பெருமுயற்சியால் வங்காள மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் வெகு சீக்கிரம் விர்த்தியடையக்கூடுமென்று நினைக்கிறேன். இத்தகைய சங்கத்திற்கு பொது ஜனங்களும், பரோபகாரிகளும் தங்களாலியன்ற உதவியைச் செய்வார்களென்று நினைக்கிறேன்.

சென்ற வருஷம் நான் பேசியதற்குப்பின் நடந்திருக்கும் மற்றொரு விஷயம் என்னவென்றால் வங்காள மாகாண கோவாபரேடிவ் பெடரேஷன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்விஷயத்தைப்பற்றி நான் உங்களுக்கு முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த பெடரேஷனால் எவ்வளவு நன்மை ஏற்படக் கூடுமென்று எண்ணப்பட்டதோ அதற்கு அதிகமாகவே இந்த பெடரேஷனால் நன்மைகள் விளைந்திருக்கின்றன. இந்த பெடரேஷன் ஸ்தாபிக்கபடாமலிருந்தால் சென்ற வருஷ ஆரம்பத்தில் சணலின் விலை குறைந்துபோய் பணக்கஷ்டம் நேர்ந்தபோது சென்டரல் பாங்குகள் சிறிது கஷ்டத்தை அனுபவித்தே இருக்கும். இந்த பெடரேஷன் ஸ்தாபனமாகி ஒரு வருஷந்தானாகிறதென்றாலும், இந்த பெடரேஷனுக்கு டிபாசிட்டுகள் ஏராளமாக வந்துகொண் டிருக்கின்றன. கவர்ன்மெண்டு ரேட்டைவிட குறைந்த வட்டிக்கு இந்த பெடரேஷனுக்கு டிபாசிட்டுகள் கிடைக்கின்றன. இந்த பெடரேஷன் வேலை செய்த ஒன்பது மாதங்களுக்குள் இலட்சம் ரூபாய் வரைக்கும் சென்டிரல் பாங்குகளால் பங்குத் தொகையாக சேர்ந்திருக்கின்றது. ரூபாய் 13,000 வரைக்கும் இந்த பெடரேஷனுக்கு இலாபம் கிடைத்திருக்கின்றது.

சென்றவருஷத்தில் கூட்டுறவு இயக்கம் இம்மாகாணத்தில் எவ்வாறு வளர்ச்சி யடைந்திருக்கிறதென்று ஒருவாறு கவனிப்போம். பொருளாதார நிலைமையின் கஷ்டமும் வருத்தமும், இன்னும் குறையவில்லை. அடுத்த வருஷத்திலும் விவசாயிகளுக்கு குறைந்த விலையின் கஷ்டம் இருக்குமோவென்று நான் விசனித்ததுண்டு. எல்லோருக்கும் இவ்விஷ

யத்தில் கவலை அதிகமாகவே இருந்தது. கூட்டுறவு சங்கங்களுக்கோ கவலை இன்னும் அதிகமாகவேஇருந்தது. கூட்டுறவு சங்கங்களில் வசூலாக வேண்டிய தொகைகள் சரிவர வசூலாகவில்லை. கெடுக்கடந்த கடன்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வந்தது. சென்ற ஜூலை மாதத்திலும் அதன் பின் மாதங்களிலும் சணலின் விலை அதிகரிக்கவே சணல் விவசாயிகளின் நிலைமையும் ஒருவாறு சீர்பெற்றதென்றே சொல்லவேண்டும். விவசாயிகளின் நிலைமை சிறிது சீர்திருந்தியவுடன் சங்கத்திற்குக்கொடுக்க வேண்டிய கடன்களை யெல்லாம் விவசாயிகள் தாமதமின்றித் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

மற்றோர் முக்கிய விஷயத்தை இங்கே குறிப்பிடவேண்டுகின்றேன். இம்மாகாணத்தின் கூட்டுறவு முயற்சி இதுவரைக்கும் நாணயச் சங்கங்களின் ஸ்தாபனத்திலேயே இருந்தது. இனிமேல் இத்தகைய முறை அதிகமாக அனுஷ்டானத்தி லிருக்காது. இககான்பரன்ஸில் வாசிப்பதற்காக வென்று அனுப்பப்பட்டுள்ள வியாசங்களைப் பார்க்குமிடத்து இம்மாகாண வாசிகள் கூட்டுறவு இயக்கத்தை இன்னும் விசால்மான காரியங்களுக்கு உபயோகிக்க எண்ணுவதாகத்தெரிகிறது. "கூட்டுறவு முறையில் சுகாதாரத்தை பரவச்செய்யவும், விஷசுரம் முதலிய வியாதிகளைத் தடுக்கும் மார்க்கம்" என்பதாக கனம் மிஸ்டர் P. C. மித்தர் ஒரு வியாசம் தயார் செய்திருக்கிறார். கூட்டுறவு முறையை தொழில் சம்பந்தமாகவும் கல்வி சம்பந்தமாகவும் உபயோகிக்க மார்க்கங்களைக் கூறி வியாசங்கள் பல வந்திருக்கின்றன. விவசாயிகளின் விளைபொருள்களை கூட்டுறவு முறையில் கூட்டாக விற்பனை செய்வதில் ஏராளமான நன்மை ஏற்பட்டிருக்கின்றது. 1917ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட நாயகான் கஞ்சா விவசாயிகளின் சங்கத்தில் 3000 விவசாயிகள் சேர்ந்திருக்கிறார்கள், இச்சங்கத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கின்றது. இவர்கள் எண்பது சதுரமைல் பரப்புள்ள நிலத்தில்தான் விவசாயஞ் செய்து இவ்வளவு இலாபம் அடைந்திருக்கிறார்கள். இத்தகைய சங்கங்களால் ஏற்படக் கூடிய நன்மைகள் பலவாறு யிருக்கின்றனவென்று சென்றவருஷமே குறிப்பிட்டிருக்கிறேன். நாயகான் கஞ்சா விவசாய சங்கத்தால் ஏற்பட்டிருக்கும் பிரத்தியட்ச நன்மையை சொல்லாமலிருக்க முடியவில்லை. இச்சங்கம் கல்வி அபிவிர்த்திக்காகவும், சுகாதாரத்திற்காகவும் ரூபாய் 40,000 செலவழித்திருக்கின்றது. மாணுமிகளுக்காகவென்று அரசர் பெருமான் மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் ஏற்படுத்தியிருக்கும் நிதிக்கு ரூபாய்1000 இங்சங்கத்திலிருந்து நன் கொடைக் காக செக் வந்தபோது நான்அடைந்த சந்தோஷத்திற்கும் ஆச்சர்யத்திற்கும் அளவில்லை,



கல்கத்தா நகருக்கு சுயப்பால் சப்ளை செய்வதற்காக அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு சென்ற இரண்டுவருஷகாலமாக அவைகள் வெகுதிருப்திகரமாக வேலைசெய்து வருகின்றன. இச்சங்கங்கள் மிகவும் சொற்பமாக வேலை ஆரம்பித்தன. முதல் வருஷத்தில் மூன்று ரூபாய் இலாபம் கிடைத்தது. இப்போது ஒன்பது சங்கங்கள் வேலை செய்கின்றன. இச்சங்கங்கள் தினம் 700, 800 பவுன்டு பால் சப்ளைசெய்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் இச்சங்கங்களுக்கு சுமார் ரூபாய் 3000 இலாபம் கிடைக்குமெனத் தெரிகிறது. அடுத்த ஜூன்மாதத்திற்குப்பின் இச்சங்கங்கள் தினம் 1500 பவுன்டு பால் கொடுக்கக் கூடுமெனத் தெரிகிறது,

சென்ற வாரம் "பங்கபாஸி கலாசாலைக்கு" விஜயஞ்செய்தபோது அங்குமொரு கூட்டுறவுச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகத்தெரியவந்தது. இச்சங்கம் அங்கத்தினர்களுக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாக விலைக்கு வாங்கி சங்கமெம்பர்களுக்கு கடைவிலையைக் காட்டிலும் குறைந்த விலைக்குக்கொடுத்து மெம்பர்களுக்கு உதவிசெய்து வருகின்றது. இச்சங்கத்தின் ஸ்தாபனத்தால் இராஜ்யப் படிப்பும் மெம்பர்களுக்கு ஏற்பட்டு வருவதாகவுந் தெரிகிறது. சங்கத்தின் உத்தியோக மெம்பர்களைத் தெரிந்தெடுக்க ஓட்டுகள் மூலமாகத் தெரிந்தெடுத்து ஓட்டுகள் கொடுப்பதென்பதை இன்னதென்று பிரத்தியட்சமாகத் தெரிந்து கொண்டார்கள். கூட்டுறவு இயக்கம் நெசவுக்காரர்களுக்கும் பிரயோசனப்பட்டு வருகின்றது. பங்கூரா ஜில்லாவில் நெசவுக்காரர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபனஞ்செய்யப்பட்டு அவர்கள் அதிக நன்மை அடைந்து வருகிறார்கள்.

இன்னும் அதிக திருஷ்டாந்தங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் உங்களுடைய அதிக அவகாசத்தை நான் எடுத்துக்கொண்டதால் இத்துடன் நின்று விடுகிறேன். ஒருவிஷயம் மட்டும் நான் சொல்லிவிட்டு என்னுடைய பிரசங்கத்தை முடிவு செய்து விடுகிறேன். கூட்டுறவு இயக்கத்திற்கு மாகாணகவர்ண்மெண்டும், நானும் எப்போதும் போலவே வேண்டிய உதவி செய்வதில் மகிழ்ச்சியடைவோம்.

---

## கூட்டுறவினர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

இந்தியாவில் கூட்டுறவின் இயக்கம் சென்ற 14-வருஷங்களாக நடை பெறுகிறது. அவற்றில் சுமார் 10-வருஷங்களாக பிரசித்தியுடன் எங்கும் பரவி வருகின்றது. ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொரு விதமான விருத்தியுடன் நடை பெறுகிறது. ஆனால் இயக்கம் மாத்திரம்

ஒரே விதமாக இருக்கின்றது. இம்மாதிரி நடந்தேறி வருவதில் சர்க்கார் உத்தியோகஸ்தரும் கூட்டுறவினர்களும் சேர்ந்து இது ஒரு கூட்டுறவாக நடக்க வேண்டியிருக்கிறது. இந்த இலாகாதாரருமான சர்கார் உத்தியோகஸ்தர்களும் குடிகளும் நடப்பது போல் மற்ற இலாகா உத்தியோகஸ்தர்களும் குடிகளும் நடக்க சரிப்படாமல் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் உண்டாகி இருப்பதுபோல் இந்த இலாகாவும் நேரிடுமோ என்று சற்று பயப்பட வேண்டியிருக்கிறது. ஆகையால் அம்மாதிரி வரவொட்டாமல் இப்பொழுதே ஜாக்கிரதையாக ஒருவருக்கொருவர் நடக்கும்படி நாம் சீர்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கவர்ன்மெண்டாரின் நோக்கம் என்னவெனில் இந்த கூட்டுறவின் இயக்கத்தை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைக் கொண்டு பரவச் செய்து ஜனங்களிடத்திலேயே ஒப்பிவித்து விடுவது தான் என்று நான் நம்பி இருக்கிறேன். அப்படியானால் அமமாதிரிக் கொண்டுவருவதற்கு நாமும் சரிவர நடந்தால்தான் அந்த நோக்கம் சரியாய் பலிக்கும். இல்லாவிடின் வேறுவிதமாக முடியும் என்பதில் சிறிதேனும் தடையில்லை.

இந்த இராஜதானியில் முதல் 7 வருஷங்களுக்குமுன் இருந்தசங்கங்களைவிட இப்பொழுது சாதாரணமாய் இரட்டத்தனை சங்கங்கள் ஏற்பட்டாகி விட்டன. அதற்குத் தக்கவாறு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். நாள் பட்ட சங்கங்கள் ஊக்கம் குன்றி சில விதமான தவறுதல்கள் செய்கின்றன. அவைகளை உத்தேசித்தே கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் உள் பிரவேசிக்க நேரிடுகிறது. சங்கங்கள் சாதாரணமாய் செய்யும் தவறுகள் என்னவென்றால்:

1. மெம்பர்கள் தவணை வீதம் கால கிரமமாய் வாங்கின கடன்களைக் கட்டுவதில்லை. 2. ஒரு விஷயத்திற்காக கடன் வாங்கி மற்றொரு விஷயத்திற்காக உபயோகிக்கிறார்கள். 3. மெம்பர்கள் வரப்பட்ட வரும்படிக்கு அதிகம் கடன்பெறுகிறார்கள். 4. பஞ்சாயத்தார்கள் தங்களுடைய தவணை பாக்கிகளை சரிவர கட்டுவதில்லை. 5. பஞ்சாயத்தார்கள் தாங்களே எல்லாரையும் விட அதிகக்கடன் எடுத்துக் கொள்ளுகிறார்கள். 6. பஞ்சாயத்தாரர்கள் தங்களுக்கு வேண்டியவர்கள் அதாவது பந்துக்களுக்கு அதிக கடன் கொடுக்கிறார்கள். 7. பஞ்சாயத்துதார்கள் மித்திர பேதமான கடன் கணக்குகள் எழுதுகிறார்கள். 8. பஞ்சாயத்துகள் சிரத்தையாக வேலை பார்ப்பதில்லை. 9. சென்ட்ரல் பாங்கிக்கு தவணைப்போல் அனுப்பவேண்டிய பாக்கிகளை அனுப்பாமல் இருக்கிறார்கள். 10. அதிகமான தொகை கை இருப்பாக வைத்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் இவைகளைப் போன்ற தப்பிதங்களை செய்கிறார்கள். 11. பஞ்சாயத்துகளுக்குள் அல்லது மெம்பர்களுக்குள் சண்டை, மனஸ்தாபம், பொறாமைபடுதல் முதலியவைகளால் சங்கத்தின் வேலைகள் தடைபடுதல் ஆகிய



இந்தக் குற்றங்களினால் அதிகமாக மேல்பார்வை அத்தியாவசியமாய்
நேரிடுகிறது. அந்த குற்றங்களை தடுப்பதற்கும்; சங்கங்களை அபிவிருத்தி
செய்வதற்குமேதான் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் கூட்டு
றவு யூனியன்களை ஏற்படுத்தி இந்த வேலைகளை செம்மையாக யூனியன்கள்
நடத்துகிறார்களா இல்லையா வென்று பார்ப்பதற்கே ரிஜிஸ்ட்ராரின் கீழ்
அசிஸ்டெண்டு ரிஜிட்ரார்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இப்பொழுது இந்த இராஜதானியில் சுமார் 9 அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்
ரார்களை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்களுக்கு சுமார்
300 சங்கங்களுக்கு குறையாமலும் 450 சங்கங்களுக்கு அதிகப்படாம
லும் அவர்கள் வசம் ஒப்பிவித் திருக்கிறார்கள். அவர்களுக்கு ரிஜிஸ்ட்
ராருக்கு இருக்கப்பட்ட இரண்டொரு வேலை அதாவது சங்கங்களை
மூடுவது, லிக்கிவிடேடர்களை ஏற்படுத்துவது போன்ற வேலை தவிர
மற்ற வேலைகள் இந்த அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுக்கு உண்டு. இந்த
அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் ரிவின்னியூ டிவிஷனர்ராக பலவேலை
களைப் பார்த்து முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக இருந்தவர்களை இவ்
விடம் அசிஸ்டெண்டு ரிஜிட்ராராக ஏற்படுத்துவதினால் இவர்களுக்கு
இந்த வேலை அந்த ரிவின்னியூ வேலையைப்போன்ற கஷ்டமும் மனக்கவ
லையும் உள்ளவர்களாய் இல்லாமல் வேலை செய்வதற்கு இது சுலபமாக
இருக்கும். சங்கத்தார் அசிரத்தைதயாக இருந்தால் அவர்களுடைய அதி
காரங்களும் ஷை அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுடைய தாகவே முடிகின்
றன. இந்த அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களின் கீழ் நேர்பார்வையில் யூனி
யன்களும் ஜில்லா பாங்குகளும் இருக்கின்றன. நியாயமாய் யூனியன்
களின் மேல் பார்வை ஜில்லா பாங்கிங்கு யூனியனுடையதாகவேதான்
இருக்கவேண்டும். யூனியனுக்கும் பாங்கிங்கு யூனியனுக்கும் ஒத்து நடக்
கும்படியான விதத்தில் இப்போதிய நிலைமை சரிப்படவில்லை. ஜில்லா பாங்
கிங்கு யூனியனில் தனி நபர் மெம்பர்கள் சேர்ந்திருப்பது நீங்குகிறவரை
யில் ஒத்துநடக்கும் என்பது எனக்குத் தோன்றவில்லை. கூட்டுறவு விரு
த்தியாக வேண்டுமானால் சங்கலித்துடராக சங்கங்களின் மேல் யூனி
யன்களும், யூனியன்கள்மேல் பாங்கிங்கு யூனியனும் மேல் பார்வை
பார்த்தாலொழிய ஜனங்களே இந்த சங்கங்களை ஆளும் அதிகாரமும்
ஐக்கிய இயக்கமும் விருத்தியாக இடமும் ஏற்படாது. இதற்கு இணங்க
அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களும் ஒத்தாசைக்கு இடம் கொடார்கள்.
ஏனெனில் அவர்களுக்கு இந்த ஐக்கிய சங்கத்தில் யாதொரு அதிகாரங்
களை உபயோகிக்க இடமிராதப் போகும் தவிரவும் ஒரு அசிஸ்டெண்டு
ரிஜிஸ்ட்ராருக்கு சுமார் 500 சங்கங்களுக்குமேல் இருந்தாலொழிய அவ
ருக்கு போதுமான வேலை இருக்குமென்று சொல்ல ஒண்ணாது. அம்மா

திரி போதுமான வேலை இல்லாவிடின் எல்லா விஷயங்களிலும் அவர்கள் உட்பிரவேசிக்க வேண்டியிருக்கிறது. இதற்காகவே கோவாபரேடிவ் கமிட்டியார் 1000 சங்கங்களுக்கு ஒரு ஜாயண்டு ரிஜிஸ்ட்ரார்கள் வைத்தால் போதுமென சிபார்சு செய்திருக்கிறார்கள். மேலும் கலெக்டர் அந்தஸ்தி லிருக்கிறவர்களும், டிப்டீ கலெக்டர்கள் அந்தஸ்தி லிருக்கிறவர்களுக்கும் கண்டிப்பான பேதமும் நடத்தையும் வித்தியாசமிருக்கிறது என்பதை ஒருவரும் மறுக்க முடியாத விஷயம். நான் அதன் விஷயமாய் எடுத்து இங்கு சொல்லுவது முக்கியமென்று தோன்றவில்லை. பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களின்கீழ் மானேஜ்மெண்டில் இருப்பது தான் விருத்திகரமென்று சொல்ல அனுபவசித்தாந்தமாக இருக்கிறது.

ஆகையால் எல்லா கூட்டுறவினர்களும் நான் மேல் கண்ட 11 குறைவுகளையும் நீக்கினாலொழிய நாம் விருத்திற்கு வருவதற்கு இடமும் இல்லை. ஐக்கிய இயக்கமும் ஓங்கி யெழாது. நாம் குறைவுகளை உண்டுபண்ணினால் டிப்டி கலெக்டர்களுடைய அந்தஸ்திலிருக்கும் இந்த மானேஜ மெண்டுங்கூட நாளடைவில் இன்ஸ்பெக்டர்களுடைய கையில் ஒப்பிவைக்க நாமே இடம் கொடுப்பதாய் விடுமென்பதற்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை. நான் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் மேல் குறைகூறுவதாக நினைக்கக்கூடாது. முன் பின் அனுபவம் தெரியாமல் சிலர் குறை கூறுகிறார்கள். நம்மால் கூடிய பிரயத்தனத்துடன்செய்ய பாத்தியப்பட்டி ருக்கிறோமென்று ஒவ்வொரு கூட்டுறவினரும் நினைத்து குறைவுகளை நீக்க முயற்சிசெய்ய வேண்டும்.

ஒ. எம். வெங்கடநாத ஐயங்கார்.
உத்தர மேரூர்.



## Act II. *

### காட்சி 3

### ஓர் கிராமம்.

[கோபாலய்யர், இவர்பெண்ஜாதி, சாவித்திரி பிரவேசம்]

**கோபாலய்யர்.**—ஏண்டி! என்னன்மோ சொன்னாயே! பார்த்தையா! இந்த பண்டின் விபரீதம். கடன்வாங்கி கலியாணத்தை நடத்தி, திருப்பி கடனையும் கஷ்டமில்லாமல் கொடுத்து விட்டோம் ஏண்டி! மறுபடியும் ஒரு எரநூறு வாங்கி அந்த அரைக் காணியை மீட்டுண்டா என்ன? என்ன சொல்கிறாய்?

**சாவித்திரி.**—இஷ்டப்படி செய்கிறதானே. என்னைக்கேட்பானேன்? நான் சொல்லுகிறவார்த்தை தங்களுக்கு ஏறப்போகிற தாவென்ன?

**கோ.**—என்னடி அது? சொல்லேன்.

**சா.**—யார்சாஸ்வதம்-நீங்க சாஸ்வதமா? என்னமோ, இந்த சில்லரையெல்லாம் தொலைச்சுவிட்டு நல்லதாய் காதுக்கு வாங்கணுமன்னு.

**கோ.**—ஏண்டி! நிலத்தை மீட்டுண்டு ஜீவனத்திற்கு ஏற்பாடு செய்துட்டன்றோ இதெல்லாம் யோசிக்கவேணும். அப்படிதான்செய்யே இப்போ இருநூருவாங்கி, நிலத்தை மீட்டுக்கொண்டு, இதை திருப்பிக் கொடுத்துவிட்டு, மறுபடியும் வாங்கிக்கொண்டால் போச்சுது. ஏழைகளுக்கு என்னமோ சர்க்காரான் நீடித்த அனுகூலம் செய்திருக்கிறான்.

**சா.**—அதுமட்டும் நீங்கள் இருக்கிறது என்னநலெ! நான் இருக்கிறதும் என்ன நிச்சயம்! ஏதாவது வரம் வாங்கிண்டு வந்திருக்குமா என்ன! இது பின்னிட்டு பண்மாகாதா? இஷ்டமிருந்தால் எல்லாம் செய்யலாம்.

**கோ.**—ஏண்டி! உன் இஷ்டப்படிதான் செய்யே - நகை செய்யணுமன்னு சொன்னமோ, கடன் கொடுக்க மாட்டார்கள். என்னடி சொல்கிறாய்?

**சா.**—என்னைக் கேட்டா தெரிந்து கொணம்? இஷ்டமில்லை யென்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போறாதா என்ன?

**கோ.**—நல்லது ஆகட்டும் ஒருவேளை சொத்தின் பேரில் தான் கடன் கொடுப்பதாக சொன்னால், நம்முடைய கைக்கு காசளவும் அகப்

---

* காஞ்சீபுரம் வக்கீலும், செங்கற்பட்டு ஜில்லா பாங்கிங் யூனியன் பிரசிடெண்டு மான ஸ்ரீமான் வி. வெங்கிடாசாரியார் அவர்கள் எழுதிய "ஆந்தரிய கூட்டுறவு" (Co-operator in disguise) என்னும் நாடகத்தின் ஒருபகுதி.

இப்புத்தகத்தின் விலை அணாநான்கு. வேண்டியவர்கள் மேற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்

படாது. தெரிந்ததா? காஞ்சீபுரத்தில் ஏதோ இந்த பண்டார் கூட்டம் நடக்கப் போகிறதாம். இதற்கு பின்னிட்டு தான் எல்லா யோசனையும்

சா.—ஆனால் காஞ்சீபுரம் போரதாக தீர்மானமோ? சரி! நானும் வருகிறேன். அந்தக் கிழவியைப்பார்த்து நாளாச்சுது-ஏன்! நான்வருவதில் ஆட்சேபனையுண்டோ?

கோ.—ஆட்சேபனை என்னடி; நான்போனால் அழைத்துக் கொண்டு போகிறேன்?

சா.—என்னகூட்டம் இப்போ? என்னமோ, மார்கழியிலே எங்கேயோ கூட்டமென்று சொல்வாளே, அதுவா?

கோ.—இல்லே இல்லே-நம்மூர் பண்டுபோல் அனேக கிராமங்களில் பண்டிருக்கிறதோ அன்னோ!

சா.—அப்படியா! எனக்கு என்னதெரியும்! நம்ம பொண்ணுத்து ஊரில் கூட இந்தபண்டு ஏற்பட்டிருக்கிறதோ?

கோ.—ஆஹா! நம்மமாப்பிள்ளை தான் அதில் வேலைபார்க்கிறவர்

சா.—அப்படியானால், நம்ம பொண்ணு விஷயத்தில் ஏன் இவ்வளவு அசட்டையாயிருக்கிறார்! அந்த பிராமணனுக்கு சொல்லப்படாதா?

கோ.—போடி! நீ வெறுமைசொல்வே - அவாள் அவாளுக்கு எவ்வளவோ கஷ்டங்களிருக்கும்.

[தலையாரி ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு துரிதமாய் வருகிறான்]

ஏண்டா! பீமா! என்னடாது? முதலியார் கொடுத்தாரோ?

பீ.—ஆமாங்க (கொடுக்கிறான்).

கோ.—வாசித்துப்பார்த்து) சரிதான் போடா (பீமன் போகிறான்) கேட்டயாடி! சென்ற வருஷத்திலே நம்மூர் பண்டில் மெம்பர்களுக்கு 2000-0-0த் துக்கு மேல கடன் கொடுத்திருக்கிறார்களாம்!

சா.—அதிருக்கட்டும் திருப்பிக்கொடுத்தாளா?

கோ.—பேர் பாதிக்குமேல் வசூலாய் விட்டதாம்!

சா.—பக்கத்தாத்துக்கார் கடன் வாங்கியிருந்தாரே - திருப்பிக் கொடுத்து விட்டாரோ?

கோ.—எங்கேயிருந்து கொடுப்பான் பாவம்! போன வருஷத்திலே அவனுக்கு வளவே கிடையாது. பேர்பாதி சாவி என்ன செய்யப் போகிறானோ தெரியவில்லே.

சா.—இவ்வளவு இருக்கச்சேயும் ஆத்துக்காரி பூமியிலே நிக்கலேயே! ஏதோ நம்ம காமாட்சி ராத்திரி பிழக்கடையில் எச்சக்கலேயை போடச்சே, ஒரு எலே அவாள் பிழக்கடையில் விழுந்துவிட்டதாம்-அப்பா! அதற்காக ராத்திரியெல்லாம் ஜிம்பினாளே!



கோ.—இப்படித்தான். அப்புறம் காஞ்சிபுறம் போவதைப்பற்றி என்ன நீயும், வரையோ? காமாட்சி?

சா.—எல்லாருந்தான் போறதுதானே? எத்தனே நாளைக்கு, என்னமோ கூட்டமென்று சொன்னயளே?

கோ.—இரண்டு நாளைக்கு - நான் போயே ஆகவேணும். இந்த ரிபோர்ட்டிருக்கே-இந்த காகிதத்தை கூட்டத்தில் நான்தான் படிக்கவேணுமா?, நான் அவசியம் காஞ்சீபுரம் போகவேணுமென்று முதலியார் எழுதி யிருக்கிறார். (ரிப்போர்ட்டை படித்துக்கொண்டே) இன்னொன்று பார்த்தையாடி! இந்த பண்டியன் கணக்குகளை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பிரதிமாசம் தணிக்கை செய்கிறார்கள். இவர்களில் ஒருவர் எழுதுகிறார்.

“இந்த பண்டில் கடன்கள் உபயோகமான காரியங்களுக்கே கொடுக்கப்பட்டு வருகிறது. புது நகைகள் செய்யவும், வீண் கலியாண செலவுகளுக்கும் கடன்களை செலவழித்ததாக ஏற்படவில்லே” கேட்டையா?

சா.—சரிதான்-பலானதற்கு செலவழிச்சாவென்று, பார்த்துண்டிருக்காளா என்ன?

கோ.—நாளைக்கு சாப்பிட்டு விட்டு-புறப்படவேண்டியதுதான்.

சா.—நானும் வருகிறேன்-நான் சொன்னதைமாத்திரம் மறக்க வேண்டாம்-

---

## Act III

### காட்சி. I

ஓர் கிராமத்தில் சேரி.

[இரண்டு பஞ்சமர்கள்-அப்பாதுரை, வீரன், பேசிக்கொண்டேவருகிறார்கள்]

அப்பாதுரை.—அடே! வீரா! கேட்டையா! பணம் வேணுமெனேயோ, நிமிஷந்தாண்டா!

வீரன்.—என்னடா? குதூகலம்;

அ.—ஏண்டா! உனக்குத்தெரியாதோ! எங்கடாதூங்குறாய்! நமக்கென்று சர்க்காரில் ஒருபண்டு வைச்சிருக்காங்கோடாகேட்டபோது பணண்டா!

வீ.—எங்கடாது! ஒன்றும் தெரியலேபோடா

அ.—இங்கேதாண்டா-நம்மூர்லே-பாவம், நம்ம ஐயருடா-ஏண்டா! குப்பய்யருடா! இதெக்கெல்லாம் பாடுபட்டுவெராது-ஐயரைக்கேள்ரு கொடுப்பாரு.

வீ.—ஏண்டா நீதான் ஒரு பத்து ரூபாய் வாங்கிக்கொடண்டா

அ.—என்னத்துகடா?

வீ.—தெரியாதா! ஐயர்வாரண்டு பண்ணிட்டாரேடா!

அ.—அப்படியா சமாசாரம்! அடே இந்த சமாசாரம் சொன்னையோ, உடனே கொடுப்பாங்கோ. ஆமடா, உடனே கொடுப்பாங்டா. ஆனு மாத்திரம் ஒன்னுசொல்றேன், கேள். குடி, கள்ளு என்று தெரிஞ்சுதோ, உடனே பிடுங்கி விடுவாங்கோ! ஜாக்கிரதை! அடே குயந்தை, முனிசீப் முதலியாரைப் போய்பார்டா.

வீ.—நீ எவ்வளவு வாங்கினே? இருபது ரூபாய்தாண்டா! பாரு! ஐயருக்கும், எனக்கும் பாக்கியே கிடையாது. வரமாசத்திலே, நான் சொன்னேன்பார்-அந்த அரிக்காகாணி-அத்தாண்டா, அந்த பனைமரத்துதனை-அதை வாங்கி போடலாமன்று ஓசிக்கிறேன்.

வீ.—நல்ல எற்பாடுதாண்டா! இந்த ஐயமார் தொந்தரவு தொலையுமே! அடே! இன்னமோ, இந்த ஆண்டைகளை தொலைச்சுவிடலாமேடா?

அ.—ஏண்டா அப்படி சொல்றே, போடா! அவங்மாட்லே இக்ருங்கோ, குழந்தை! மறுபடியும் சொல்றேன்கேளு! கள்ளுகுடி வைச் சுண்டையோ, இருக்கப்பட்ட குடிசையும் பூடும்! கடன் எப்போவும் கொடுக்க மாட்டாங்கோ! பாரு! இப்போ அப்படியும், இப்படியும், உலாத்திரயே, அப்போ ஊரிலிருக்குட்ட மாட்டாங்கோ!

வீ.—வாயண்டா! போகலாம். முதலியாரைப் பார்த்துட்டு ஐயாண்டை போகலாம்.

(குப்பய்யர் வருகிறார்)

(இரண்டு பஞ்சமர்களும்) ஆண்டே கும்பிடுகிறேன்.

குப்பய்யர்.—ஏண்டா! வீரா! நேத்தே வரவனு நீ! ஏண்டா உங்களுக்கு ஏதோ சர்க்காரில் பண்டு என்று ஒன்று ஏற்படுத்தவே, உங்கள் கண்ணில் கொழுப்பு மேயாது! எப்படா கழனியில் களைபிடுங்குகிறது?

வீ.—ஏ. ஐயா! ரொம்பபேசரேயே! பெண்சாதியைப் பார்த்தையா சாகக் கிடக்ருய்யா! நீ என்னமோ பேசறயே!

கு.—அடே! என்னைக்கும் நீ ஒரேமாதிரி-ஏண்டா! எப்படா கணக்கு பாக்கியைக் கொடுக்கப்போறாய், எத்தனை நாளைக்கு பொறுத்துக் கொண்டிருப்பேன், அப்பாதுரை இந்தபண்டில் பணம் வங்கி பூராவையும் சொடுத்துவிட்டானே, நீயும் ஏண்டா! அப்படிச் செயயக்கூடாது? எப்படா தீர்க்கப்போறாய்?

வீ.—எனக்கும்வாங்கி குடய்யா-நானும் ஒழிச்சிவிடுகிறேன்.

கு:—வாயேண்டா வாங்கிக்கொடுக்கிறேன்-ஜாமீன் ஆருடா?

வீ:—என்ன! ஜாமீனு!! அதென்னய்யா! புச்சுப்புச்சாய் பேசரேயே!

கு:—அடே! எல்லாம் உனக்கு அப்படித்தான் தோன்றும். சொத்துள்ளவங்களாய் இரண்டுபேர் கையெழுத்து செய்தாதானேடா, பணம் கொடுப்பாங்கோ!



வீ.—நீ தான் இக்கரையே! இன்ன—மொரத்தெரே பிடிச்சுக்கோ நான் எங்கேபோவேன்.

கு.—உன் வீட்டை என்பேருக்கு எழுதிவைட-நான் கையெழுத்து செய்கிறேன்.

வீ.—இதுவும் சாமர்த்தியமா! ஒன்னுக்குத்தான் இவ்வளவு ஆச்சே, வீட்டையும் உன்வாயிலே போட்டுகிறயோ! ஐயோ பாவம்! என்னமோ, சொல்லுவாங்களே; பாப்பானுக்கு ஆசை.

அ.—அடே! அடே, குயந்தை! வாயைமூடடா? இப்படியாபேசாது! கொடுக்கவேண்டியகடனை கொடுத்துதாண்டா ஆகனும் - இப்படி பேசுட்டா, பூடுமோடா? ஏண்டா! நான் அதையும் சொல்லணுமா?

கு.—அதெல்லாமிருக்கட்டுண்டா. கழனியைப்பாருடா - உலர்ந்து போகிறது-ஏண்டா இப்படி செய்கிறாய்?

வீ.—என்ன உங்க அப்பன்வீட்டு உடமை கெட்டுப்போச்சு! உன்மேல் வாரம் எங்கையாபோச்சு? உன் நிலத்தில் இல்லாவிட்டால், வேறே நிலத்திலே கொடுக்கிறேன் அப்பா! என்ன சாமர்த்தியமாய் பேசராய்!

அ.—நீங்க, போங்கோ-சிவாமி! அவன், இப்போ, ஒருமாதிரியாய் இருக்கிறான். நான் புத்திசொல்லி அனுப்றேன்? போங்கோ.

கு.—நாசமாய்ப் போகட்டும். இவனை விட்டேனு! விட்டேனு பார்!!

வீ.—ஐயோ!

அ.—அடே! இப்படிவாடா! அறியாதவன்! உனக்கு புத்தி இல்லேடா. நீதினியம் சம்பாதிக்கிரதை இந்த பண்டில் போட்டுவைடா. பின்னிட்டு ஒருகாலத்தில் உதவுண்டா. பாரு!, இந்த செல்லன்-இவன் தாண்டா - முத்தன்வீட்டு செல்லன்-தினியந்தோறும், காலு, அரை ஐயாவண்டை-அவர்தான்டா-பண்டுலே கணக்கு எழுதுராரே-கணக்குப்பிள்ளை-அவர் பேரு என்னமோ கவனத்துக்கு வரலை ஆமாண்டா - தங்கவேலுபிள்ளை - அவரண்டை கொடுத்துண்டு வந்தான். நேத்து அவனுக்கு ரூ. 50-0-0 கொடுத்தாங்கோ!.

வீ.—ஏதுராபணம்! இன்னம் அந்தப்பாப்பான் 10 நாள் கூலி குடிக்கவேயில்லை - என்னமே செல்றான். அதிலே போச்சு, இதிலே போச்சு என்று சொல்றான்!.

[கணக்கு தங்கவேலுபிள்ளை பிரவேசம்]

அ.—அடே! வீரா! கணக்குபிள்ளை வாராடா! கேளுடா!

த.—ஏண்டா! அப்பாதுரை! செல்லன் இருக்கிறானு?

அ.—சேவிக்கிறே! செல்லன் தங்களிடந்தான் போனான். என்ன சங்கதிங்க!

த.—பண்டுக்கு பணம் கட்டணம்.இன்னைச்குத் தாண்டா, கடைசி நாளு.

அ.—போறுங்க பணம் எடுத்துண்டு சாவடிப்பக்கமாய்த்தான் போறுங்க.

த.—ஏண்டா! உங்கசேரியிலே, குடி, கிடி எல்லாம் எப்படியிருக்கிறது! பண்டிக்கு குல்லாபோடு வாங்களா? யோக்கியமாய் இருப்பாங்களா?

அ—ஏன் அப்படி செல்லறங்க! எல்லாம் அடங்கிப் போச்சுங்க! ரொம்ப பயப்படராங்க! முதல்தேதி வந்துட்டா கையில் அகப்பட்டதை கொடுத்திருங்காளே! அப்பா! என்னமாயிருந்தது எப்படியாச்சுங்க! நான் கட்டிவிட்டேங்க

த.—தெரியுண்டா. அவன் இருக்கிறானே அவன் தாண்டா உன்சம்பந்தி அவன் பேரென்ன ஏகாம்பரம்ண்டா? அவன் இருக்கிறானா வீட்டிலே? இன்னம் அவன் பணம் கட்டவில்லையே?

அ.—ஐயோ பாவம்! அவன்பெண்ணு குளிகுளிக்க மாட்டாதே ஆஸ்பத்திரிக்கி இட்டுண்டு போயிருக்காங்க. வந்துடுவான். அவனைப் பத்தி பயமில்லை.

த.—இவன் என்ன! இவனுக்கு யாரும் சட்டையில்லை. ஏண்டா! வீரா! இப்படித்தானே நீ அழிஞ்சுபோறாய்!

வீ.—நன்னா இருக்குதே. நீ சொல்றது! பெண்சாதி இத்தோ அத்தோ என்னு இக்ரா! இந்தபாப்பான் அக்ரமத்தை சத்துபார்!! இவனை பாக்கதா! பாப்பான்கழனியிலே வேலை செய்வதா! நீ தான் செல்லய்யா!.

த.—அடே! உனனோடு நாங்களெல்லாம் பேசமுடியாது. அப்பாதுரை! செல்லன்! ஏகாம்பரம், இவங்க வந்தவுடன் வரச்சொல்லு.

(போக ஆரம்பிக்கிறார்)

வீ.—ஐயோ! என்சங்கதி என்!

த.—என்னடா! உன்சங்கதி?

வீ.—பண்டிலே, ஒரு இருவது ரூபாய் வாங்கிக்கொடய்யா? அந்த பாப்பானை ஒழுச்சிவிடுகிறேன்.

த.—அதெக்கன்னடா, ஆகட்டு. பின்னிட்டுவாடா, சொல்லுகிறேன்.

(போகிறார்)

அ.—வாடா! போகலாம் நேரமாச்சுது. அடே! என் சொல்லுபாப்பானுக்கு நம்ம ஒத்தாசை; நமக்கு பாப்பான் ஒத்தாசை! ஏண்டா! என்னசொல்றே?

வீ.—ஒப்புண்டேன். சமயம்பார்!. மனசு நொந்திக்கிது! இப்போ தொந்தரவுபார்.

அ.—வாடா! வாடா! போவோம். உன்சமயதை அவர்கண்டாரா, அவர் சமயத்தை நீ கண்டாயா! வாடா போலாம் நேரமாச்சுது.

(போகிறார்கள்),



# இன்ஸ்பெக்டர்களைத் தெரிந்தெடுத்தலும் அவர்களைப் பழக்குவதும்

## கவர்ண்மேண்டார் உத்தரவு

இன்ஸ்பெக்டர்கள் உத்தியோகத்திற்கும் சூபர்வைஸர்கள் உத்தியோகத்திற்கும் தெரிந்தெடுக்கப்படு வர்களின் கல்வி சம்பந்தமான யோக்கியதையை நிர்ணயஞ் செய்யும் விஷயத்தை சில நாட்களாக் கவர்ன்மெண்டார் யோசனை செய்துகொண் டிருந்தார்கள். கடைசியாக அடியிற் கண்ட உத்தரவை பிறப்பிப்பதாக நிச்சயஞ் செய்திருக்கிறார்கள்.

1. குறைந்தது சகென்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட் பரீட்சையாவது அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையாவது தேறியிருந்தாலொழிய ஒருவரும் இன்ஸ்பெக்டராக நியமனம் பெறமாட்டார்கள். சகென்டரி ஸ்கூல் லீவிங்சர்டிபிகேட் திருப்திகரமானதாக இருக்க வேண்டும். ஒரு சர்டிபிகேட் திருப்திகரமானதா அல்லவா வென்பதை கோவாபரேடீவ் ரிஜிஸ்தரார் தீர்மானஞ் செய்வார்.

2. கோவாபரேடீவ் ரிஜிஸ்ட்ராரின் அனுமதியில்லாமல் ஒருவரும் சூபர்வைஸராக நியமிக்கப்படவுங் கூடாது, அல்லது புரொபேஷன் சூபர்வைஸர் பர்மெனன்டாக்கப் படவுங்கூடாது.

3. ஒரு இன்ஸ்பெக்டர் அல்லது சூபர்வைஸர் குறைந்தது ஒரு வருஷ காலமாவது புரொபேஷனாக இருந்தாலல்லது உத்தியோகத்தில் பர்மெனன்டாக்கப்படக்கூடாது. யாதொரு நபரின் விஷயத்தில் புரோபேஷன் காலத்தை ரிஜிஸ்ட்ரார் இன்னும் அதிகமாகவும் ஏற்படுத்தலாம்.

4. புரோபேஷனில் இருக்கும் சூபர்வைஸர்களை வேண்டாமென்று ரிஜிஸ்ட்ரார் உத்தரவு செய்தால் யூனியன் சபையார் அந்த சூபர்வைஸரை வேலையை விட்டு நீக்கிவிடவேண்டும்.

5. புரொபேஷனில் நியமிக்கப்படும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டரும் சூபர்வைஸரும் கீழ்க்குறிப்பட்டுள்ள முறையில் வேலையில் பழக்கப்படவேண்டும். இன்ஸ்பெக்டருக்கும் சூபர் வைஸருக்கும் ஒரே விதமான டிரெய்னிங்தான் கொடுக்கப்படவேண்டும்.

a. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் குறைந்தது இரண்டு வாரங்களாவது பயிற்சி பெறவேண்டும்.

b. ஒரு பெரிய அர்பன் அல்லது ரூரல் சொஸைடியின் கணக்குகளை எழுதுவதில் குறைந்தது பதினைந்து நாட்களாவது பழக்கப்படவேண்டும்.

c. ஒரு இன்ஸ்பெக்டரின் கீழ் ஆறுவாரம் பயிற்சி பெறவேண்டும். இந்நாட்களில் சில நாட்களுக்கு இன்ஸ்பெக்டர் செய்யும் வேலையைக் கவனித்து வரவேண்டும். சில நாட்களுக்கு இன்ஸ்பெக்டர் மேற்பார்வையின்கீழ் தாமே வேலைகளை நேராகச் செய்யவேண்டும்.

d. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தாருடன் குறைந்தது பதினைந்து நாட்களாவது பிராயாணத்தில் செலவழிக்கவேண்டும்.

ஒரு இன்ஸ்பெக்டர் பைனல் ஆடிட் (கடைசி வருஷாந்தர ஆடிட்) செய்ய யோக்கியதையென்று ரிஜிஸ்ட்ரார் கூறும் வரையில் கடைசித் தணிக்கைகளைச் செய்ய ஒரு இன்ஸ்பெக்டருக்கு அனுமதி கொடுக்கப் படக் கூடாது. புரொபேஷன் இன்ஸ்பெக்டரை சில சங்கங்களின் கணக்குகளை பரீட்சை செய்யச் சொல்லி பரீட்சை பார்க்கவேண்டும்.

இதற்குமுன் கூட்டுறவு இயக்கத்தில் அனுபவ முள்ளவர்களுக்கு மேற்சொன்ன டிரெய்னிங் முறை சிறிதுமாறுதலடையக்கூடும்.

டிரெய்னிங் காலத்தில் இன்ஸ்பெக்டரும் சூபர்வைஸரும் ஆக்டையும் பற்பல கூட்டுறவு சங்களின் விதிகளையும் டிபார்ட்டுமெண்டு ஸர்க்குலர் உத்தரவுகளையும் படித்தறிந்து கொள்ளவேண்டும்.

6. புரொபேஷனில் நியமிக்கப்படும் இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்ட்ர்களுடைய வரிசையில் கடைசி வகுப்பில் தாக்கல் செய்யப் படவேண்டும்.

7. புரொபேஷனில் இருக்கும் சூபர்வைஸருக்குக் கொடுக்கப் பட வேண்டிய சம்பளமும் பிரயாணப்படி விகிதமும் சூபர்வைஸரை நியமனஞ் செய்யும் யூனியன் சபையாரால் நிர்ணயஞ் செய்யப்பட வேண்டும்

8. இவ்விஷயத்தில் இன்னும் அனுபவம் அதிகமாகக் கிடைத்த பின் ரிஜிஸ்ட்ரார் அயிற்கண்ட விஷயங்களைக் குறித்து மறுபடியும் ஒரு ரிப்போர்ட்டை அனுப்ப வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(a) இன்ஸ்பெக்டரும், சூபர்வைஸரும் செய்ய வேண்டிய வேலைகளும் அலுவல்களும்:—

(b) சூபர்விஷன் சம்பந்தமாக லோகல்யூனியன்களுக்கும், ஜில்லா சூபர்வைஸிங் யூனியன்களுக்கும், ஜில்லா சூபர்விஷன் கௌன்ஸில் சபைகளுக்கும், ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பும், வேலையின் அளவும்.

(c) அர்பன் பாங்குகளின் சூபர்விஷன் விஷயமும்.

———



# ஜட்ஜ்மெண்டு

பல்லாரி ஜில்லா டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கோட்டில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ். எச். ஆர். பார்டவல் எஸ்கொயர், எம். ஏ. முன்பாக. 1918-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 5-ந் தேதி வியாழக் கிழமை. 1918-ம் வருஷத்திய அப்பீல் நெம்பர் 50—

விட்டபல்லி ரூரல் கிரெடிட் சொஸைடியின் பிரஸிடெண்டு } அப்பெல்லன்டு

எடிக நரசிம் ஹப்ப,— ரெஸ்பாண்டென்டு

1917-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 6-ந்தேதி பெனுகொண்டா டிஸ்டிரிக்ட் முன்சீபு செய்த உத்தரவின் மேல் இந்த அப்பீல் செய்யப் பட்டுள்ளது. மேற்படிக் கேஸில்.

விட்டபல்லி ரூரல் கிரெடிட் சொஸைடியின் பிரஸிடெண்டு. } பெடிஷனர்

எடிக நரசிம்ஹப்ப } கௌண்டர் பெடிஷனர்

இந்த அப்பீல் இன்று நம்முன் விசாரணைக்கு வந்துள்ளது. அபெல்லண்டுக்காக வக்கீல் வி. எஸ். சுப்பிர மணியம் ஐயா ஆஜராயிருக்கிறார். ரெஸ்பான்டென்டு நேரிலும் ஆஜராகல்வில்லை, வக்கீல்மூலமாகவும் ஆஜராகவில்லை. இந்தக் கேஸில் கோர்ட்டார் கீழ்க்கண்ட ஜட்ஜ்மென்டை தீர்மானஞ் செய்கிறார்கள்.

ஜட்ஜ்மேண்டு

அநந்தபூர் செக்ஷன் கோவாபரேடீவ் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் செய்துள்ள பிரலிமெனெரி டிக்ரியை உறுதியாக்கும் படியாக ஹின்டூபூர் தாலுக்கா விட்டபல்லி ரூரல்கிரெடி சொஸைடி அப்பெல்லன்டு (பெட்டி ஷனர்) செய்துகொண்ட மனுவை கீழ்க்கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். அத்தகைய டிக்ரீ தீர்மானஞ்செய்ய அஸிஸ்டெண்டுரிஜிஸ்ட்ராருக்குஅதி காரமில்லை யென்பதாக கீழ்க்கோர்ட்டர் சொல்லியிருக் கிறார்கள். தவிர வும் 1915 ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந் தேதியன்று மாகாண கவர்னமெண்டார் பிரசுரஞ் செய்துள்ள நோட்டீஸ் பிரகாரம் சென்னை மாகாண கவர்ண்மென்டார் செய்துள்ள விதிகளின் 12 (5) விதி இவ்வி ஷயத்தில் செல்லத் தக்கதல்ல வென்றும், ஸிவில் கோர்ட்டாருக்கு மனு செய்துகொள்ளப் பட்டதின்மேல் அஸிஸ்டென்டு ரிஜிஸ்ட்ராரின் தீர் மானத்தை அல்லது அவ்வார்டை எந்த கோர்ட்டுக்கும் மனுச் செய்து கொள்ளப் படுகின்றதோ அக்கோர்ட்டின் டிக்ரியாக நிறைவேற்றப் பட வேண்டியதாக கவர்ண்மென்டார் விதியில் சொல்லப் பட்டுள்ளது என் றும் டிக்ரி தீர்மானஞ் செய்ய அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு அதிகா

ரம்இல்லை என்பதாகவும் கீழ்க்கோர்ட்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ்க்கோர்ட்டார் செய்துள்ள தீர்மானங்களை நாம் ஒப்புக் கொள்ளவில்லை. ரிஜிஸ்ட்ரார்கள் செய்யும் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் சட்டம் ஏற்படுத்தப்படவில்லை யென்பதாக கீழ்க்கோர்ட்டார் சொல்லுகிறார்கள். ஜூடிஷியல் விஷயங்கள் சம்பந்தமாக எத்தகைய உத்தரவுகளையுஞ் செய்ய கவர்ண்மெண்டாருக்கு அதிகாரமிருப்பதாக 1912-ம் வருஷத்திய இரண்டாவது ஆக்டின் 43 வது பிரிவில் காணப்பட்டில்லை யென்பதாகக் கீழ்க்கோர்ட்டார் சொல்லியிருக்கிறார்கள். 1912-ம் வருஷத்திய இரண்டாவது ஆக்டு இந்தியா கவர்ண்மெண்டாருடைய சட்டமாகும். 43-வது விதியின் 1, 2, (1) உபவிதிகளின் கீழ் ஒரு சங்கத்தில் ஏற்படும் எவ்வித தகராறையும், ரிஜிஸ்ட்ராருடைய தீர்மானத்திற்கு அனுப்பப்படலாமென்று உத்தரவு செய்ய மாகாண கவர்ண்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. அது சம்பந்தமாக நடக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் குறித்து சட்டமேற்படுத்த மாகாண கவர்ண்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. அவ்விதமாய் ஏற்படுத்தப்படும் சட்டங்களும், விதிகளும் கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டால் அமுலில் வரத்தக்கதாகும். அதேமாதிரி இவ்விதிகளும் சென்னை போர்ட்டு ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டுள்ளன. சென்னை மாகாண கவர்ண்மெண்டார் பிரசுரஞ் செய்துள்ள 12-வது விதி செல்லத்தக்க தல்லவென்று கீழ்க்கோர்ட்டார் கூறுவது சரியல்ல. டிக்ரி தீர்மானஞ்செய்ய அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரமில்லை யென்பதாக கீழ்க்கோர்ட்டார்சொல்லும் விஷயமாக அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் செய்யும் டிக்ரியை அல்லது அவார்டை மனு செய்யப்படும் ஸிவில் கோர்ட்டார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் டிகிரியை தம்முடைய கோர்ட்டின் டிகிரியைப் போல் நிறைவேற்ற வேண்டுமென்று 12-வது விதியின் 5-வது உபவிதி தெளிவாகச் சொல்லுகின்றது. பெட்டிஷனர் செய்த மனு நியாயமானதால் கீழ்க்கோர்ட்டார் அம்மனுவை தள்ளியிருக்கக்கூடாது. கீழ்க்கோர்ட்டார் அம்மனுவை மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

கவுன்டர் பெடிஷனர் கீழ்க்கோர்ட்டில் மனுவை மறுத்துப் பேசாததாலும் இந்தக்கோர்ட்டில், ஆஜராகாமல் எக்ஸ்பார்டீ தீர்ப்பு செய்யப்பட்டிருப்பதாலும் செலவு தொகை கொடுக்கப்படமாட்டாது.

---

## கூட்டுறவினர்களும் இனஉரிமைச் சங்கமும் *

சமாதானக் கான்பரன்ஸில் முக்கியமாகப் பேசப்படும் விஷயம் இனஉரிமைச்சங்கத்தின் ஸ்தாபனந்தான். இனஉரிமைச் சங்கத்தின் ஸ்தா

*இனஉரிமைசசங்கத்திற்கு சர்வதேச சங்கமென்றும் மற்றொருபெயர் வழங்குகின்றது. இச்சங்கந்தான் லீக் ஆப் நேஷன்ஸ்(League of National) எனப்படுவது.



பன விஷயம் கூட்டுறவினர்களுக்கு மிகவும் முக்கியமானது. கூட்டுறவு இயக்கத்தில் இதுவரையில் சற்றேனும் பற்றில்லாதவர்களால் இத்தகைய சங்கத்தை ஸ்தாபனஞ் செய்ய முன்வந்துள்ளது. மனித சமூதுகத்திற்குள், கூட்டுறவைத்தவிர வேறொன்றும் திருப்திகரமாகப் பலிக்காதென்றும், போட்டி வியாபாரமும், ஒருவரை யொருவர் வெல்லவேண்டுமென்ற ஆசையும் சிறிதேனும் பிரயோசனப்படாதென்றும், தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மனித சமூகத்திற்கு கூட்டுறவுமட்டுமே நன்மையைச் செய்யக்கூடுமென்ற கூட்டுறவினர்களின் எண்ணம் இத்தகைய சங்கத்தின் ஸ்தாபனத்தால் உறுதிப்படுகின்றது. மனித வாழ்க்கையை சுகமானதாகச் செய்து மனித சமூகத்திற்கும், உலகத்திற்கும் நன்மையைச் செய்யத்தகுந்தது கூட்டுறவு ஒற்றே என்ற உறுதியை இத்தகைய சங்கத்தின் ஸ்தாபனம் நிச்சயப்படுத்துகின்றது.

இனஉரிமைச் சங்கம் எனப்படுவது பல்தேசங்களும் சேர்ந்த ஒரு கூட்டுறவுச் சங்கமாகும். சாதாரண கூட்டுறவுச் சங்கத்தைப் போல் இனஉரிமைச் சங்கம் தன்னுடைய அங்கத்தினர்களுள் ஒவ்வொரு நபரினுடையவும் நடவடிக்கைகள் விஷயத்தில் தலையிடாது. இன உரிமைச் சங்கத்தில் அங்கத்தினராக சேர்ந்ததை முன்னிட்டு சங்கத்தின் விதிகளுக்குத் தவறாமல் நடக்கிறவரையிலும் சங்கத்திற்கு எவ்விதத் தீங்கும் கெடுதலும் நினைக்காத வரையிலுந்தான் சங்கம் தன்னுடைய அங்கத்தினர்களுள், தனி நபர்களின் நடவடிக்கையில் தலையிடாது. அங்கத்தினர்கள் தாம் எடுத்துக் கொண்டுள்ளஉறுதிக்கு மாறாகவும், சங்க விதிகளுக்கு விரோதமாகவும் நடக்கும்போது இன உரிமைச் சங்கம் தன்னுடைய அங்கத்தினர்களுள் தனி நபர்களின் நடவடிக்கைகளில் தலையிடும். சங்கத்தின் விதிகளுக்குமாறாக ஒரு மெம்பர் நடந்தால் கூட்டுறவுச் சங்கத்தை விட்டு ஒரு மெம்பர் எப்படி விலக்கப்படுவானோ அதேமாதிரியாக இன உரிமைச் சங்கத்திலும் சங்க விதிகளுக்கு மாறாக ஒரு மெம்பர் நடந்துகொண்டால் அந்த மெம்பர் சங்கத்தினின்றும் விலக்கப்படுவான். சங்கத்தை விட்டு விலகிய பின் சங்கத்தின் நன்மைகளையும் பயன்களையும் அந்த மெம்பர் அனுபவிக்க முடியாது. ஒரு மெம்பரும் தான் சேர்ந்திருக்கும் கூட்டுறவுங் சங்கத்திற்கு சிறிதேனும் துரோகம் நினையாமலும், செய்யாமலும் நடந்துகொள்ளுவதாக எப்படி உறுதிப்பாடு செய்கிறானோ அதேவிதமாக இன உரிமைச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு தேசத்தாரும் உலகத்தின் நன்மையையும், சுயேச்சையையும் முன்னிட்டு தங்கள் தங்களுக்குள்ள உரிமைகளையும் சுதந்தரங்களையும் சிறிது விலக்கிவைப்பதாக ஒவ்வொரு தேசத்தாரும் உறுதிசெய்து கொடுப்பார்

கள். தற்காலம் ஒவ்வொரு தேசத்தாரும் படைகளைச் சேர்த்து வைத்துக் கொள்ளவும், படைகளைச் சேர்த்துவைத்துக் கொள்ளாமலிருக்கவும் சுதந்திரமுண்டு. ஆனால் இதர தேசங்களின் இராணுவபலமும், கடற்படை பலமும், சேனைகளை வைத்துக்கொள்ளவும், சேனைகளை தயார் செய்யவும் கட்டாயப்படுத்துகின்றது. இதர தேசங்களின் செய்கையால் சுதந்தரத்தை அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிற தேசத்தாரும் அனுபவிக்க முடியாமற் போகின்றது. தற்காலம் பற்பல தேசங்களுக்குள் உண்மையான சுதந்தரமும் சுயேச்சையும் இருப்பதாக தெரியவில்லை. இன உரிமைச் சங்கத்தின் ஸ்தாபனத்தால் பற்பல தேசங்களிலும் இதுகாறும் இருந்துவந்த சுதந்தரத்தையும், சுயேச்சையயும்விட அதிக சுதந்தரமும் சயேச்சையும் ஏற்படக்கூடும்.

இஷ்டமுள்ளவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேரக்கூடுமென்றிருப்பதுபோல் இன உரிமைச் சங்கத்திலும் இஷ்டமுள்ளவர்கள் சேரலாமென்று விதி ஏற்படவேண்டும். இன உரிமைச் சங்கத்தில் சேரவிரும்புகிறவர்களும், அதன் கொள்கைகள் நடக்க இஷ்டப்படுகிறவர்களும் எல்லோரும், இன உரிமைச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். மெம்பர்கள் சேருவதைத் தடைச் செய்யக் கூடியதாக நிர்ப்பந்தமான விதிகள் எவற்றையேனும் ஏற்படுத்துவது, கூட்டுறவின் தன்மையைக் கடந்து செல்வதாகும். அங்கத்தினர்கள் தாராளமாகச் சேருவதைத் தடுப்பதால் கூடிய சீக்கிரம் இத்தகையச் சங்கம் ஓரினத்தார், அல்லது ஒரு வகுப்பாருடையதாகி கடைசியில் வேற்றுமைஏற்பட்டு ஒருவரோடொருவருக்குள் விரோதத்தை உண்டுபண்ணக் கூடும். சில மெம்பர்கள் மட்டும் அதிக உரிமைகளையும் சுதந்தரங்களையும் அடையக்கூடும். கூட்டுறவுச் சங்கத்தைப் போல் எல்லோரும் அங்கத்தினர்களாகலா மென்று விதி ஏற்படுத்தினால் ஒற்றுமை அதிகமாகப் பரவி பலருக்குள்ளும் ஒற்றுமை யென்னும் பயிர் வேரூன்றக்கூடும்.

கூட்டுறவுச் சங்கத்தின் மெம்பர்களுக்குள் செய்யவேண்டிய பொறுப்பு ஒருவாறு நிச்சயஞ் செய்யப்பட்டிருப்பதுபோல் இனஉரிமைச் சங்கமும் செய்யவேண்டிய வேலைகளும், அலுவல்களும் ஒருவாறு நிர்ணயஞ் செய்யப்பட வேண்டும். மெம்பர்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்துகொள்ளாவண்ணம் தடுப்பதுமன்றி ஒருவரை யொருவர் கட்டுப்படுத்தி சிநேக பாவத்தில் இருக்கச் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். உலகத்தின் நன்மைக்காக உலகத்தின் விஷயங்கள் பலவும் சீர்திருத்தப்பட்டு ஒழுங்குபடச் செய்யப்பட வேண்டும். நேசக்கட்சியின் தேசங்கள் ஒருவருக்கொருவர் உணவுப் பொருள்களையும் இதரச்சாமான்களையும் உதவிக்கொண்டதிலிருந்து உலகத்தில் இத்தகைய ஒற்றுமை



யாலும் நட்பாலும் எத்தகைய நன்மை விளையக் கூடுமென்று நன்றாகப் புலப்படுகின்றது. இனஉரிமைச் சங்கத்தின் மெம்பர்கள் உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மையும் பலனும் ஏராளமாய் இருக்கின்றது. உலகத்தின் பொருளாதாரக் கஷ்டங்களையும் செல்வக் கஷ்டங்களையும் இன உரிமைச் சங்கம் எவ்வாறுத் தடுக்கக் கூடுமென்பதும் பிரத்தியட்சமாக உலகத்திற்குப் புலப்பட்டிருக்கின்றது.

இனஉரிமைச் சங்கம் உண்மையாகவே வெற்றிப் பெறவேண்டுமானால் கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளையும் முறையையும் தழுவியதாக இருக்க வேண்டும். இன உரிமைச் சங்கத்தின் ஸ்தாபனத்தில் வேலை செய்ய கூட்டுறவினர்களைப் போல் தகுந்தவர்கள் வேறெவருங் கிடையாது. இன்டர் நேஷனல் கோவாபரேடீவ் அல்லையன்ஸ் நமக்கு (பல தேசங்களுக்கும் ஒன்றாகச் சேர்த்து ஏற்படுத்தப் பட்டிருக்கும் கூட்டுறவினர்களின் நேசச் சங்கம்) வழிகாட்டும் அத்தாட்சியாக இருக்கின்றது. இராஜாங்கங்களும் இன்டர் நேஷனல் கோவாபரேடீவ் அல்லையன்ஸ் முறையில் தங்களுடைய இராஜ்ய விஷயங்களை நிலை பெறச் செய்து கொண்டிருந்தால் இன உரிமைச் சங்கம் நெடு நாட்களுக்கு முன்னரே ஸ்தாபனமாயிருக்கும்.

இன உரிமைச் சங்கத்தின் ஸ்தாபனம் வெற்றி பெருதென்று நினைக்கவும் இடமுண்டு. கஷ்டதிசையை விட்டு நீங்கும் இச்சமயத்தில் உண்மையாகவே மனப் பொறுப்பின்றி இன உரிமைச் சங்கத்தை ஆமோதிப்பதாக வாயால் மட்டும் சொல்லுபவர்களும் அநேகருண்டு. இன உரிமைச் சங்கம் உண்மையாக வெற்றிப்பெற வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்களில உள்ளது போல் மெம்பர்களுக்குள் நம்பிக்கையும் விஸ்வாஸமும் இருக்க வேண்டும் பொது நன்மையை உத்தேசித்து சுய நன்மையை நிராகரித்து விடும் எண்ணம் மெம்பர்களுக்குள் ஏற்பட வேண்டும். சடுதியில் ஏற்படக் கூடிய நன்மைகளைப் பொருட்படுத்தாது, இனி ஏற்படும் நிலையான நன்மைகளைப்பற்றி யோசிக்க வேண்டும். ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பாகவும், நேசமாக நடக்க வேண்டும். இவ்விதம் நடந்து கொள்ளுவதாக காகிதத்தில் எழுதி வைத்து விட்டால் மட்டும் போதுமானதல்ல. ஒருவரை யொருவர் நேசித்து நடப்பதாக உடன்படுவதுமட்டுமே யல்லாமல் வாஸ்தவமாக அப்படியே நடந்தும் காட்டவேண்டும். அப்படியே நடந்து கொள்ளுவதாகவும் உறுதிசெய்ய வேண்டும்.

கூட்டுறவு முறையின் கொள்கைகளும், நோக்கங்களும், இன உரிமைச் சங்கத்தில்கொண்டு வரப்பட்டாலொழிய இனஉரிமைச் சங்கம் சித்திபெறுமென்றுச் சொல்லுவதற்கில்லை. இனஉரிமைச் சங்கம் சித்தி

பெரும்படிக்கு கூட்டுறவுக் கொள்கைகளும், நோக்கங்களும் கைகொள்ளப்பட்டால்தான் உலகத்தின் முன்னேற்றத்தையே கருதி சுகத்தைத் தரக் கூடியது கூட்டுறவென்று ஜனங்கள் எல்லோரும் சர்வதேசத்தார் உள்பட அறிந்துகொள்ளக் கூடும்.

நம்முடைய ஜனசமூகக் கொள்கைகளிலும், நம்முடைய தொழில் சம்பந்தமான இயக்கங்களிலும், கூட்டுறவின் கொள்கை தலைதூக்கி நிற்கவேண்டும். இத்தகையக் கொள்கை தலைகாட்டி நின்றாலொழிய இனஉரிமைச் சங்கம் வாஸ்தவத்தில் வெற்றி பெறாது. அதனால் எத்தகைய நன்மையும் ஏற்படாது.

இத்தகைய கொள்கை பரவுவதற்கு, கூட்டுறவின் கொள்கைகளும் நோக்கங்களும் கற்பிக்கப்படவேண்டும. கூட்டுறவு இயக்கம் எங்கும் போதிக்கப்படவேண்டும். கூட்டுறவை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதால் மட்டும் நாம் உண்மையான அனுபவம் பெறுவதுமன்றி நன்மையும் அடையக்கூடும். நம்முடைய கல்விமுறை சீர்திருத்தப்படவேண்டும். நூதன முறை அமுலுக்கு வரவேண்டும். ஒருவருக்கொருவர் போட்டி போட்டு நடந்துக்கொள்ளுவதை நமது இளைஞர்களுக்குப் போதிப்பதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும் நேசமாகவும் எப்படி நடந்து கொள்ளுவதென்று போதிக்கவேண்டும். சுய நன்மையை போதிப்பதற்குப் பதிலாக எவ்லோருக்கும் நன்மை செய்வித்து சுகம் பெறுவது எப்படி யென்று போதிக்கப்படவேண்டும்.

சண்டை முடிந்தவுடன் உலகத்தில் ஏராளமான மாறுதல் ஏற்படப் போவதாக சிலர் கனவு காண்கிறார்கள். இஃது உண்மையல்ல. உலகத்தில் எப்போதும் இருந்தவர்கள் தான் இருக்கிறார்கள். இருக்கப்போகிறார்கள். உலகத்தில்உண்மையான மாறுதல் வரவேண்டுமானால் உலகத்தில் வாசஞ் செய்பவர்கள் மாறுதலடைய வேண்டும். அவர்களுடைய நோக்கங்களும், கொள்கைகளும் மாறுதலடையவேண்டும். இவ்விஷயத்திற்காகவென்று கல்வியைப் பிரயோசனப்படுத்த வேண்டும். புதுநோக்கங்களையும், புதுக் கொள்கைகளையும் உண்டாக்க கல்வியை உபயோகிக்க வேண்டும்.

இனஉரிமைச் சங்கம் ஸ்தாபனமாகி, உண்மையான பலன்கிடைக்க வேண்டுமானால், ஒவ்வொரு தேசத்தாரும் இதர தேசத்தாரின் விஷயங்களை நன்கறிந்துகொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் நன்கறிந்து கொண்டவர்களிடந்தான் கூட்டுறவு நன்கு விர்த்தியடையக் கூடும். ஒருவரை யொருவர் நன்கறிந்து கொள்வதால் வேற்றுமை ஒழிகின்றது. ஒற்றுமை ஏற்படுகின்றது. நேசம் பரவுகின்றது.

பற்பல தேசத்தாரும் ஒருவரையொருவர் நன்கறிந்து உணர்ந்து கொள்ளுகிற வரையில் இன உரிமைச் சங்கம் உண்மையானபலனை விளைவிக்காது. இன உரிமைச் சங்கத்தின் ஸ்தாபனத்தால் எவ்வித நன்மையும் ஏற்படாது. இப்படி ஏற்படவேண்டுமானால் கல்வியும், கூட்டுறவின் போதனையும் மட்டுமே இப்படிச் செய்க்கூடும். அவைகள் தான் ஒருவரையொருவர் சரிவர எளிதில அறிந்துகொள்ளச் செய்யக்கூடும்.

"ரஷ்யன் கோவாபரேடர்"

---


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் X] 1919ளு ஏப்பிரல்மீ [இலக்கம் 10


## பத்திராதிபரின் குறிப்புகள்.

சென்னை மாகாண கவர்னராகிய H. E. லார்டு வில்லிங்டன் அவர்களுக்கு நம்முடைய மனப்பூர்வமான நல்வரவை மிக்கத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம், லார்டு பென்ட்லண்ட் அவர்களைக் காட்டிலும் லார்டு வில்லிங்டன் சுகமாயும் சந்தோஷமாயும் காலங்கழிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். லார்ட் பென்ட்லண்டு அவர்களுடன் கூட்டுறவினர்களுக்கு எத்தகையதேனும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டதாக சொல்லுவதற்கில்லை. ஆனால் இராஜீய சம்பந்தமான விஷயங்கள் சில லார்டு பென்டலண்டு அவர்களுக்கு அதிகக் கவலையைக் கொடுத்துவந்தன வென்றும், அது, சம்பந்தமாக இம்மாகாணவாசிகள் பெரும்பாலருடனும் அதிருப்தியடையவேண்டி அவருக்கு நேர்ந்ததென்றும் எழுதமுடியாமலிருக்கவில்லை. லார்டு பென்ட்லண்டு அவர்கள் அரசாட்சியின் ஆரம்பகாலத்தில், இம்மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் துரிதமாகப் பரவுவதற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் இருந்ததாக உத்தியோகப் பற்றில்லாத (Non-Official) கூட்டுறவினர்கள் நினைக்கும்படி இடமேற்பட்டது. ஆனால் சிறிது காலத்திற்கெல்லாம் அவ்வெண்ணம் மாறுதலடையும்படியாக காரியங்களெல்லாம் நடைபெற்றன. லார்டு பென்ட்லண்டு அவர்கள் தம்பதவியைவிட்டு நீங்குங்காலத்தில், கூட்டுறவு சம்பந்தமாய் கவர்ன்மெண்டார் நோக்கத்தைக் குறித்தாவது நடவடிக்கையைக் குறித்தாவது விரோதமாகச் சொல்லுவதற்கு ஒன்றுமே இருக்கவில்லை. லார்டு வில்லிங்டன் பிரபு அவர்கள் பம்பாய் மாகாணத்தில் பிரத்தியட்சமாய் அனுதாபங்காட்டி ஜனங்களுடைய அன்பை ஏராள

லார்டு வில்லிங்டனுக்கு நல்வரவு.

மாகக் கொண்டுள்ளவர். ஜனசார சீர்திருத்த சம்பந்தமாய் செய்யப்படும் எல்லா முயற்சிகளிலும், தாழ்ந்த வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் எவ்வித இய்க்கத்திலும் அதிகப் பற்றுள்ளவராயிருந்தார். கூட்டுறவு இயக்கத்தில் முக்கியமாக கடன்களினின்றும் மீட்கும் ஏற்பாடுகளிலும் வீடுகள் கட்டிக்கொடுக்கச் செய்யப்படும் ஏற்பாடுகளிலும் அதிக ஊக்கமுஞ் சிரத்தையுங் காட்டிவந்தார். விவசாயத்தில் பிரத்தியட்சமாய் வேலைசெய்பவர். கனேஷ்கன்டில் உள்ள தம்முடைய சொந்த பாற்சாலையில் மிக்க ஊக்கத்துடன் உழைத்து அதில் வேலை செய்வதை மிக்கப் பெருமையாகப் பாராட்டிவந்தார். பம்பாய் மாகாண கவர்னர் பதவியைவிட்டு நீங்கிய சொற்ப நாட்களுக்கெல்லாம் ஸ்ரீமான், ஜி. கே. தேவதார் அவர்களின் அரிய வேலைகளைப் புகழ்ந்து பேசியது இத்தேசத்தின் கூட்டுறவினர்கள் எல்லோருடையவும் மனதைக் குளிரச் செய்தது. விஷயங்களெல்லாம் ஒழுங்காகவும் சரிவரவும் நடந்தேறுமாகில், சென்ற நூறு வருஷங்களாக இம்மாகாணத்தில் நடந்துள்ளதைக் காட்டிலும், லார்டு வில்லிங்டன் அவர்களின் அரசாட்சிக்காலம் மிகவும் முக்கியமானதாகவும் குறிப்பிடத்தக்கதாகவுமிருக்கும். லார்டு வில்லிங்டன் அவர்களுடைய அரசாட்சிக் காலத்தில் பொறுப்பான ஆட்சிக்கு வழி ஏற்பட்டுவிடும். கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய முக்கிய விஷயங்கள் ஜனங்களுடைய பிரதி நிதிகள் வசம் ஒப்புவிக்கப்படும். ஜனங்கள்பால் அன்பும் அனுதாபமும் கொண்ட லார்டு வில்லிங்டன் அவர்கள் போன்ற கவர்னரின் அரசாட்சிக் காலத்தில் விஷயங்கள் சரிவர ஆரம்பமாகக் கூடுமென்றும், நாம் கோரும் முடிவை சீக்கிரத்திலும் எளிதிலும் அடையக் கூடுமென்றும் நாம் எதிர்பார்க்கலாம். லார்டு வில்லிங்டன் அவர்கள் தம் கவர்னர் பதவியைவிட்டு நீங்கும்போது, நம்மெண்ணங்களெல்லாம் பூர்த்தியாகாமல் வருத்தப்படும்படிக்கு இடமேற்படா திருக்குமாறு, எல்லாம் வல்ல இறைவன் ஏற்பாடு செய்வானுக.

***

**நாம்**

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானியின் தற்கால நிலைமையின் விஷயம் சென்னை மாகாண கோவாபரேடிவ் யூனியனின் 1917-18-ம் வருஷத்திய ரிப்போர்ட்டிலும்; மேற்படி யூனியன் மஹா சபை மீட்டிங்கின் நடவடிக்கைகளிலும் (வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன) அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. கூறப்பட்டுள்ள குறைகளை யெல்லாம் நீக்கி விஷயங்களை ஒழுங்குபடச் செய்ய வேண்டுமானால் இவ்விஷயத்தில் கூட்டுறவினர்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும், சென்ற வருஷங்களைக் காட்டிலும் இனிமேல் கூட்டுறவினர்களிடமிருந்து அதிக உதவி கிடைக்கக் கூடுமென்று நாம்



எண்ணுகின்றோம். நம் பத்திரிகைக்கு விஷயங்கள் பலராலும் எழுதியனுப்பப்படாதது ஒரு பெருங் குறையேயாகும். விஷயங்கள் எழுதியனுப்புவோருக்குப் பணங் கொடுப்பதாக ஏற்பாடு செய்தால் நல்ல விஷயங்கள் கிடைக்கக் கூடுமோவென்று முயற்சி செய்யும்படியாக நமக்குப் பலர்கூறுகிறார்கள். நம்மால் கூடுமான வரைக்கும் பணங்கொடுத்து விஷயங்கள் வாங்க நாம் தயாராயிருக்கிறோம். சென்னை மாகாணக் கூட்டுறவு கான்பரன்ஸின் பிரதிநிதிகளை வரவேற்கும்போது ராவ்பகதூர் கே.பி. இராமனாத ஐயரவர்கள் எடுத்துக்காட்டியுள்ள வண்ணம் கூட்டுறவு விஷயமாய் எழுதுவது சாமான்ய காரியமல்ல. கூட்டுறவு விஷயம் சாதாரண விஷயங்களைப் போன்ற தன்று. கூட்டுறவு விஷயமாக எழுதவேண்டுமானால் அது சம்பந்தமாய்ப் படிக்கவேண்டும். அவ்விஷயத்தில் அனுபவம் வேண்டும். எழுதும் சாமர்த்தியமும் சக்தியும் மட்டும் இருந்துவிட்டால் கூட்டுறவு சம்பந்தமாய் ஒருவர் எழுதமுடியாது. அது சம்பந்தமாக படித்தும் இருக்கவேண்டும். அனுபவமும் வேண்டும். வங்காள மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலும் பொருளாதார விஷயங்களில் தேர்ச்சிப் பெற்ற மாணவர்களும் ஐ. ஸி. எஸ். இலாகா உத்தியோகஸ்தர்களும், இன்னும் இதர டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களும் முறையே அவரவர்கள் மாகாணத்துக் கூட்டுறவு சஞ்சிகைகளுக்கு விஷயங்கள் எழுதுகிறார்கள். நம்மாகாணத்திலும் அதேவிதமான அனுதாபம் ஏன் காட்டப்படவில்லை யென்பதற்குக் காரணந் தெரியவில்லை.

***

**அனுவஸ்யமாய்த் தலையிடுதல்.**

ஒரு சங்கத்தின் நடவடிக்கைகளில் ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அனுவஸ்யமாய்த் தலையிடுவதாக எண்ணங்கொண்டு ஒரு நிருபர் சில விஷயங்களை நமக்குத் தெரிவித்திருக்கிறார். கவர்ன்மெண்டு டிபார்ட்டுமெண்டார் அனுவஸ்யமாய்த் தலையிடும்படியாக மிஸ்டர் ஹெமிங்வே இடந்தரமாட்டாரென்பது நிச்சயம். தான் தலையிடக்கூடாத காரியங்களில் ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் தலையிட மாட்டாரென்பதும் நிச்சயம். நம் நிருபர் அனுப்பியுள்ள விஷயம் போன்றது வேறிடங்களிலும் நேரிடக்கூடுமாகையால் அவ்விஷயத்தின் விவரத்தை சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறோம். ஒருசங்கத்தில் உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட விஷயத்தில் டைரக்டர்களில் ஒருவருக்கு அதிருப்தி ஏற்பட்டது. மகாசபையின் முன் சில விஷய்ங்களைக் கொண்டுவரும்படியாக அந்த டைரெக்டர் அச்சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதினார்.

அவர் எழுதிய விஷயங்களில் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட முறை சரியல்ல வென்பதும் ஒன்று. அவ்விஷயங்களை

யெல்லாம் காரியதரிசி டைரெக்டர்கள் முன்பாகக் கொண்டுவந்தார். டைரெக்டர்களெல்லோரும் இவ்விஷயங்களின் ஆலோசனையை தள்ளி வைத்து விட்டார்கள். இது காரணம்பற்றி இவ்விஷயங்கள் மஹா சபை மீட்டிங்கின் முன் கொண்டுவர சாத்தியப்படவில்லை. இவ்விஷயத்தை, மனவருத்த மடைந்த டைரெக்டர் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு மனுசெய்து கொண்டார். இவ்விஷயம் 12-வது விதியின் கீழ் பைசல் செய்யக்கூடிய விஷயங்களில் ஒன்றெனக் கருதி ஆர்பிட்ரேடர்களை நியமிக்கும்படியாக இருதாரத்தாருக்கும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் எழுதிக்கொண்டார். இவ்விஷயம் ஆர்பிட்ரேடர்களால் தீர்மானிக்கக்கூடிய விஷயமல்ல வென்பதாக நம்முடைய நிருபர் எழுதுகிருர்.

ஆக்டின் 12 (1) விதி கூறுவது யாதெனில் சங்கத்தின் "தற்காலத்து மெம்பர்களுக்குள்ளாவது, மாஜி மெம்பர்களுக்குள்ளாவது (தற்காலத்து) மெம்பர் அல்லது மாஜி மெம்பர் பெயரால் பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் ஆகிய இவர்களுக்குள்ளாவது..............சொஸைடியின் விவகாரத்தைக் குறித்து விவாதம் உண்டாகிற விஷயத்தில் அதைப்பற்றி யாதொரு கட்சிக்காரர் ரிஜிஸ்ட்ராருக்கு எழுதிக் கொள்ளலாம். அப்படி மனுசெய்து கொள்ளப் பட்டதின்மேல் ரிஜிஸ்ட்ரார் அவ்விஷயத்தை தாமாகவே தீர்மானஞ் செய்யலாம், அல்லது மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்களைக் கொண்டு அவ்விஷயத்தை முடிவுசெய்யலாம். ரிஜிஸ்ட்ரார் அல்லது மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்களுடைய தீர்ப்பே முடிவானதாகும், சங்கத்தின் எல்லையின்பேரில் அதிகார வரம்புள்ள ஸிவில் கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப் பட்டதின்மேல் ரிஜிஸ்தரார் அல்லது மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்களுடைய தீர்மானம் ஸிவில் கோர்ட்டின் டிக்ரியைப்போல் அமுலுக்குக் கொண்டு வரப்படும்." சங்கத்தின் விவகாரத்தைக்குறித்து என்பதில் விவகாரமெனப்படுவது, மஹாசபை மீட்டிங்கில் அல்லது டைரெக்டர்கள் மீட்டிங்கில் கவனிக்கப்படும் சங்கத்தைக் குறித்த விவகாரம் எனப் பொருள்படுமா அல்லது சங்கம் செய்கிற லேவா தேவி விவகார மெனப் பொருள்படுமா வென்பது இங்கு உற்று நோக்க வேண்டிய விஷயங்கள். சங்கத்தின் விவகாரம் என்பது, சங்கத்தின் லேவா தேவி சம்பந்தமான விவகாரம் என்ற தாத்பர்யந்தான் சரியான தென்பதாக நாம் அபிப்பிராயப்படுகிறேரம். சங்கத்தின் விவகாரம் எனப்படுவது கடன் கொடுப்பதும், கடன் வசூல் செய்வதும், சாமான்களும், சரக்குகளும் வாங்குவதும், விற்பதும், சாமான்களை உற்பத்தி செய்வதும், அல்லது இதுபோன்ற இரண்டு மூன்று காரியங்கள் கலந்து செய்வதும் என்பதாக சங்கத்தின் விதிகளில் கூறப்பட்டுள்ளது. பிரைமெரி சங்கம் நடத்தும் விவகாரத்திற்கும், ஒரு செண்ட்ரல் பாங்கு நடத்தும் விவகாரத்திற்கும் வித்தியாசமுண்டு. ஒரு



கட்டடச் சங்கம் செய்யும் விவகாரத்திற்கும் ஒரு பண்டகசாலை (ஸ்டோர்) செய்யும் விவகாரத்திற்கும் வித்தியாசமுண்டு. ஒரு சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்படும் விஷயம் சங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விஷயமே யொழிய சங்கத்தின் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. மேற் குறிக்கப்பட்ட விஷயம் மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்திற்கு வரத்தக்க விஷயமல்ல வென்று நம்முடைய நிருபர் கூறுவது சரியென்றே நாமும் அபிப்பிராயப்படுகிறேரம்.

இங்கு கவனிக்க வேண்டிய மற்றொரு விஷய மென்னவெனில் ஒரு விஷயத்தை மஹாசபைமுன் கொண்டுவரும்படியாக ஒரு டைரெக்டர் கேட்டுக் கொண்டால் அதன்படி நடந்துகொள்ள காரியதரிசி கடமைப்பட்டவரா? வென்பது மகாசபை மீட்டிங்குகள் எப்பெப்போது கூட்டப்படவேண்டு மென்பது சங்கத்தின் விதிகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் வெளியிலிருந்து இதரர்கள் தலையிடுவதற்கு சிறிதும் இடங்கிடையாது. தெரியாத்தன்மையாலோ அல்லது தவறிப்போயோ இத்தகைய நிபந்தனை ஏற்பட்டில்லாவிட்டால் ரிஜிஸ்ட்ரார் ஒரு மஹாசபை மீட்டிங்கைக் கூட்டி ஒரு பிரத்தியேக விஷயத்தைக் கவனிக்கும்படிக் கூறலாம். ஆனல் அவ்விஷயத்தின் முடிவு மஹாசபையார்தான் செய்யக் கூடும். மேற்கூறிய விஷயத்திலும் சங்கத்தின் விதிகள் தெளிவாயில்லாமல் உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட விஷயத்தில் சந்தேகப்பட அல்லது அவநம்பிக்கைக் கொள்ள இடமேற்பட்டுண்டானல் மஹாசபையைக் கூட்டி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார், அவர்கள்முன் விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். அதற்கவசியமான பரிகாரத்தை மஹாசபையார் செய்திருக்கக் கூடும். இவ்விஷயத்தைத் தீர்ப்புச் செய்ய மத்தியஸ்தர்களை நியமிப்பது சரியான விஷயமல்ல. உத்தியோகஸ்தர்கள் அதிகமாய்த் தலையிடுவதையே ஜனங்கள் விரும்பாத இக்காலத்தில் இப்படி நடந்து கொள்ளுவது சமயோசிதமான விஷயமல்ல.

***

**சென்னை மாகாண ஏழாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.**

சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸின் ஏழாவது வருஷக் கூட்டம் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18, 19 தேதிகளில் வெகுத்திருப்திகரமாக நடைபெற்றது. இன்புளுயன்ஸாவின் கொடுமையும், பிளேக் நோயின் பயமும் இருந்ததால் வழக்கம் போல் கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் கான்பரன்ஸ் கூட்டமுடியவில்லை. பார்க் காட்சியின் (Park Fair) வேடிக்கைகளையும் இதர வேடிக்கைகளையும் முன்னிட்டு கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில்

சென்னைக்கு ஏராளமான ஜனங்கள் வருவது வழக்கம். இக்கான்பரன்ஸ் இவ்வருஷம் நடைபெற்றகாலம் அவ்வளவு திருப்திகரமானதென்று சொல்லுவதற்கில்லா விட்டாலும் 175 டெலிகேட்டுகள் வரைக்கும் வந்தது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். அவர்களுள் பெரும்பாலோர் சாதாரணக் குடித்தனக்காரர்களும் விவசாயிகளுமே. இம்மாகாணத்தின் அநேக கிராமங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். டெலிகேட்டுகள் தங்குவதற்கும், கான்பரன்ஸ் நடைபெறுவதற்கும், இந்திய ஊழியச் சங்கத்தாரும், வெஸ்லி காலேஜ் அதிகாரிகளும், தம்முடைய கட்டடங்களைக் கொடுத்துதவியதால் கான்பரன்ஸ் நடைபெறவும் டெலிகேட்டுகள் தங்கவும் அதிக சிரமும், கஷ்டமு மில்லாமற் போய்விட்டது. தேக அசௌக்கியத்தை முன்னிட்டு பிரயாணஞ் செய்யக் கூடாமையால், இக்கான்பரென்ஸிற்கு ஸர் பிரடரிக் நிகோல்ஸன் அவர்களை அக்கிராசனராகக் கொள்ளும் பாக்கியம் இல்லாமற் போய்விட்டது. தேக அசௌக்கியத்தை முன்னிட்டும் எதிர்பாராத வேறு சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டும், கூட்டுறவு இயக்கத்தில் ஊக்கமும், அநுதாபமும் உள்ள பலர் வரக்கூடாமற் போய்விட்டது. உதாரணமாக சிலரைக் குறிப்பிடுகிறோம். மதுரை ராய் சாகேப் இராமசுவாமி ஐயரவர்கள், ஸ்ரீமான் சிவராவ், புத்தூர், ஸ்ரீமான் பி. இராமச்சந்திரசாஸ்திரியார் காஞ்சிபுரம், ஸ்ரீமான் டி. ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார், தஞ்சாவூர், செல்லபள்ளிகுமார இராஜா அவர்கள்.

ஜனசார சீர்திருத்தச் சங்கத்தின் அக்கிராசனராகிய அட்வகேட் ஜெனரல் கனம் மிஸ்டர், எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் கான்பரென்ஸிற்கு அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனர் தம்முடைய பிரசங்கத்தில் மிஸ்டர் ஹெமிங்வேயின் தலைமையின் கீழ் கூட்டுறவு இயக்கம் சென்னை மாகாணத்தில் விர்த்தியடைந்து வருவதைக் குறிப்பிட்டுக்காட்டி, கட்டடச் சங்கங்களுக்குக் கவர்ன்மெண்டார் உதவி அவசியமென்றும், சென்னையில் மொத்தமாக வாங்கி மொத்தமாக விற்பனைச் செய்யக்கூடிய ஒல்சேல் (Wholesale) ஸ்டோர் ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும் வற்புறுத்திக் கூறினார்.

கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்துள்ள ரையத்துகளின் கடன் தொகை குறைந்துள்ளதா வென்றும், முன்னைவிட தற்போது ரையத்து சிக்கனத்தை அறிந்து கொண்டுள்ளாரா வென்றும் இம்முக்கிய விஷயங்களைக் குறித்து ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள் பேசினார். "சங்கங்களில் மட்டுமே மெம்பர்கள் கடன் வாங்குகிறார்களென்பதும், வெளியில் வேறெங்கும் மெம்பர்கள் கடன் வாங்கவில்லை யென்பதும் நிச்சயமாய்த் தெரிகிறதா? குறைந்த வட்டிக்குப் பணங்கிடைப்பதால் மெம்பர்



கள் சிக்கனம் அறிந்து கொண்டிருக்கிறார்களா? சங்கங்கள் கடன் கொடுக்கும் வட்டிரேட்டுக்கும் சாவுகார் கடன்கொடுக்கும் வட்டி ரேட்டுக்கும் வித்தியாசமுள்ள தொகையினால் மெம்பர்களுக்குப்பிரயோசனம் ஏற்படுகிறதா? அல்லது அப்பணம் சாவுகாரின் பெட்டிக்கே செல்லுகிறதா? மெம்பர்களுக்கு சிக்கனம் ஏற்படவில்லையென்றும், கடன்மட்டும் அதிகரித்து வருகிறதென்றும் பொது அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது." என்பதாக அக்கிராசனர் எடுத்துச் சொன்னார். சாவுகார் கொடுக்கும் வட்டித்தொகைக்கும், சங்கம் கொடுக்கும் கடனின் வட்டித்தொகைக்கும் உள்ள வித்தியாசத்தால் கூட்டுறவுச் சங்கங்களின் மெம்பர்களுக்கு நன்மையே ஏற்பட்டுள்ளதென்பதை சாதிக்க ஒருவருக்கு அதிக தைரியம் வேண்டும். சிக்கனம் என்னமோ அதிகரிக்கவில்லை யென்பதை ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயந்தான். ஆனால் கடன் சம்பந்தமாய் நாமொன்றும் இங்கு சாதிக்க விரும்பவில்லை. கூட்டுறவினால் என்னென்ன நன்மைகள் விளையவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அவையெல்லாம், பொருளாதார விஷயத்திலாவது ஒழுக்க முறையிலாவது சிறிதும் பலிக்கவில்லை யென்பது நிச்சயம். கூட்டுறவுச் சங்க மெம்பர்கள் சம்பந்தப்பட்ட வரையில் மெம்பர்கள் மத்தியஸ்தர்கள் மூலயமாய் வழக்குகள் தீர்த்துக்கொள்ளுவது ஏற்பட்டும், கோர்ட்டில் தாவாக்கள் செய்வது குறையவில்லையென்றும், மத்தியஸ்தர்கள் மூலயமாய் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளுவதை மெம்பர்கள் எல்லோரும் கட்டாயமாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்று விதி ஏற்படவேண்டுமென்றும் இவ்விஷயத்தை வற்புறுத்தி அவசியமானால் சட்டம் மாற்றப்பட வேண்டுமென்றும் அக்கிராசனர் கூறினார். நம்முடைய குறைகளை ஞாபகப்படுத்தியதற்கும் நம்முடைய தினசரி வேலைகளில் மறந்துபோகக்கூடிய நம்முடைய இலட்சியத்தை எடுத்துக் காட்டியதற்கும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களுக்கு நாம் அதிகக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

கான்பரன்ஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் குறித்து நாம் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. நம்முடைய தினசரி வாழ்நாளில் பிரத்தியட்சமாய்ப் பயன்படக்கூடிய விஷயங்களை யொட்டியே தீர்மானங்கள் செய்யப்பட்டன. தற்காலம் நமது நாட்டில் தலைகாட்டி நிற்கும், அதிக இலாபம் சம்பாதிக்கும் விஷயம், பொருள்களின் அதிக விலை, சாமான்களை வாங்குவதிலுள்ள கஷ்டம், பணம் கிடைப்பதிலுள்ள கஷ்டம் முதலிய முக்கிய விஷயங்கள் சம்பந்தமாகத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. செய்யப்பட்ட தீர்மானங்களுள் முக்கியமான தொன்று, சென்னையில் ஒல்சேல் ஸ்டோர் ஸ்தாபனஞ் செய்யும் விஷயமாய்ச்

செய்யப்பட்டது. மொத்தமாக வாங்கி மொத்தமாக விற்கும் காரியத்தை தற்காலம் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கம் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிற தென்பதை அறிய நேயர்கள் மகிழ்ச்சி யடைவார்கள். இப்பரீட்சார்த்தம் வெற்றி பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். ரிஜிஸ்ட்ராரவர்கள் சிபார்ஸின்மேல் சில சங்கங்கள் இரங்கூன் அரிசியை வரவழைப்பதாகத் தெரிகின்றது. அரிசியை மொத்தமாக வரவழைக்கும் விஷயத்தை திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கத்தார் செய்வார்களாகில் அவர்கள், இவ்விஷயத்தை திருப்திகரமாகச் செய்யமுடியும். கிரொஸயின் எண்ணெய் விஷயத்திலும் மொத்தமாக வரழைக்கப்பட்டு சங்கங்களுக்கு ஸப்ளை செய்யப்பட்டால் கிராமச் சங்கங்களுக்கு அதிக நன்மை ஏற்படக்கூடும். மெம்பர்களுக்குக் கடன்கள் சாங்கிஷன் செய்வதில் அவர்களுடைய குடும்பச் செலவிற்கும், அவசரச் செலவுகளுக்கும் வேண்டிய கடன்களை முன்னதாகக் கவனிக்கும் படியாகவும், அதன் பிறகேதான் முன் கடன்களைத் தீர்க்க கடன்கள் கவனிக்கப்படவேண்டுமென்றும், சங்கங்கள் கடன் கொடுப்பதிலும், முன்கடன் தீர்க்கக் கடன்கள் கொடுப்பதற்கு முன்னதாக, மெம்பர்களின் அவசரச் செலவுகளுக்கும், குடும்பச் செல்வுகளுக்கும் எவ்வளவு வேண்டியிருக்குமோ அத்தொகையை எடுத்து வைத்துவிட்டே, முன் கடன்களைத் தீர்க்க கடன்கள் கொடுக்கப்பட வேண்டு மென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரையத்துகளை கடனினின்றும் மீட்கா விட்டால் கூட்டுறவால் எத்தகைய நன்மையும் விளையா தென்று ஒருகாலத்தில் நினைத்ததுண்டு. முன்கடனைத் தீர்க்கவென்றே கடன்களெல்லாம் கொடுக்கப்பட்டு வந்தன. இம்முறையினால் ரையத்துக்கு ஏற்படக்கூடிய நன்மை அதிகமில்லையென்று கண்டிப்பாக இப்போது அறிந்துகொண்டோம். முன் கடன்களைத் தீர்க்க வென்று கடன்களைக் கொடுப்பதால் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய தவணைத்தொகையை வாய்தாப்பிரகாரம் மெம்பர்கொடுத்து வருவதுமில்லை. மெம்பருக்குச் சிக்கனம் என்பது ஏற்பட்டு வருவதாகவும் தெரியவில்லை. இத்தகையக் காரணங்களை முன்னிட்டு விவசாயச் செலவுகளுக்கும், மெம்பரின் விளை பொருள்களுக்குச் சரியான விலை ஏற்படுகிறவரையில் தானியத்தை கட்டிவைக்குங் காலத்தில் ஏற்படும் செலவுகளுக்கும் இன்னும் இதுபோன்ற செலவுகளுக்கும் கடன் கொடுப்பது உசிதமென்பதாக இப்போது கருதப்படுகின்றது. மிகவும் திருப்திகரமாய் வேலை செய்துவருகிற ஸ்டோர்கள் தம் வேலைகளுடன் வைத்திய உதவி செய்ய வைத்திய சாலைகளையும் ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்றும் ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது. திருவல்லிக்கேணி, கோயமுத்தூர் ஸ்டோர் சங்கங்கள் இவ்விஷயத்தில் வழிகாட்டியாக நின்று வேலையை ஆரம்பஞ் செய்யுமென்று நம்பப்படுகின்றது.



பெரிய மனுஷ்யர்கள் இரண்டு மூன்று பேர்களுடைய தீர்மானங்களுக்கு (அத்தீர்மானங்கள் அச்சாகியிருந்தன) விஷய ஆலோசனைக் கமிட்டியார் அதிக அவகாசங் கொடுத்ததாகவும், அத்தீர்மானங்களைக் கவனிப்பதிலேயே அதிக அவகாசம் எடுத்துக் கொள்ளப் பட்டதால் இதரர்கள் கொண்டுவந்த ஆலோசனைகளை கவனிக்கக்கூட அவகாசமில்லாமற் போய்விட்டதாகவும் சில டெலிகேட்டுகள் குறை கூறிக் கொண்டார்கள். விஷய ஆலோசனைக் கமிட்டியார்முன் கொண்டு வரப்பட்ட ஆலோசனைகள் முழுவதையும் கவனிக்க அவகாசமில்லாமற் போன தென்பது உண்மையே. ஆனால் பெரிய மனுஷ்யர்களுக்கு அதிக தாட்சண்யம் காட்டப்பட்ட தென்பதால் இவ்விதம் நேரவில்லை. பிரத்தியேகமாய் தாட்சண்யம் காட்டப்பட வேண்டு மென்று ஒருவரும் விரும்பவுமில்லை. ஒருவருக்கேனும் பிரத்தியேக தாட்சண்யம் காட்டப்படவுமில்லை. ஆலோசனைக்கு முதலில் எடுக்கப்படும் விஷயங்கள் அதிக காலம் வாதஞ் செய்யப்படுவதும் பிறகு காலமானவுடன் கடைசித் தீர்மானங்களை அவசரம்அவசரமாய்முடித்துவிடுவதும்நம்முடையமீட்டிங்குகளில் சகஜமாய் நடக்கும் விஷயந்தான். சென்ற கோவாபரேடிவ் கான்பரன்ஸிலும் விஷயம் இவ்விதமாகவே நடந்தது. கொஞ்சம் முன்னதாக வந்து சேர்ந்த ஆலோசனைகளெல்லாம் விஷய ஆலோசனைக் கமிட்டியாரின் சௌகர்யத்திற்காக அச்சிடப்பட்டன. ஆனால் கான்பரன்ஸிற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னர் அநேக விஷயங்கள் ஆலோசனைக்கென்று வந்து சேர்ந்தன. அவைகளைப் படித்துப் பார்க்கக்கூட அவகாசம் இல்லாமற் போய் விட்டது. இவ்வாலோசனைகளையெல்லாம் யோசித்து முடிவு செய்வதாக இருந்தால் கான்பரன்ஸின் நடவடிக்கைகளை இன்னொரு நாள் நீடிக்கச் செய்திருக்க வேண்டும். அப்படி நீடிக்கச் செய்வதில் டெலிகேட்டுகளில் பெரும்பான்மையோருக்கு இஷ்டங் கிடையாது. ஆலோசனைக்கு விஷயங்களை அனுப்புவதில் ஓர் கால வரம்பு ஏற்படுத்தாததுதான் இவ்விதம் நேர்ந்ததற்குக் காரணமாகும். இப்பொழுது நேர்ந்துள்ள குறைகளெல்லாம் நடவாவண்ணம் அடுத்த கான்பரன்ஸில் அவசியமான ஏற்பாடுகள் செய்யப்படும்.

டெலிகேட்டுகள் தெலுங்கு நாட்டிலிருந்து மிகவும் குறைவாய் வந்த காரணத்தை முன்னிட்டு அடுத்த மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸ் பெஜவாடாவில் கூடவேண்டுமென்று கிருஷ்ணா ஜில்லாவிலிருந்து வந்த டெலிகேட்டுகள் சிலர் கேட்டுக்கொண்டார்கள். சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸை நடத்திவரும் சென்னை மாகாண கோவாபரேடிவ் யூனியன் சபையார் இந்த யோசனைக்கு இணங்கவில்லை. பெஜவாடாவில் அடுத்த கான்பரன்ஸ் கூடவேண்டுமென்று கிருஷ்ணா டெலிகேட்டுகள் கேட்டுக்கொண்டதின் நோக்கம் தெலுங்கு ஜில்லாக்களில் கூட்டுறவு இயக்

கத்தை அதிகமாகப் பரவச் செய்ய வேண்டுவதற்கும் தமிழ் ஜில்லா சகோதரர்கூட்டுறவு இயக்கத்தில்அடைந்துள்ள அறிவையும் அனுபவத்தையும் தெலுங்கு ஜில்லாக்களில் தெரியச் செய்வதற்குமே. மாகாண கோவாபரேடீவ் யூனியன் கொடுத்த பதிலிலிருந்து அவர்கள் அதிகமாக ஏக்கமடைந்திருப்பார்களென்பதில் சர்தேக மில்லை. அவர்கள் அடைந்த ஏக்கத்தினால் ஏற்பட்டுள்ள குறையை தெலுங்கு பத்திரிகைகளும் பிரசுரஞ் செய்திருக்கின்றன. மாகாண கோவாபரேடீவ் யூனியனும் எவ்விதக் காரணமுமின்றி அப்படிச் சொல்லிவிடவில்லை. சென்னை மாகாணம் முழுவதற்குமே சென்னை நகர் மத்திய ஸ்தலமாகும். வழக்கமாகக் கான்பரன்ஸ் கூடுகிற கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் (கான்பரன்ஸ் கூட்ட இந்நாட்களே தகுந்த காலம்) சென்னையில் அநேக விதமான விஷயங்கள் நடைபெறுகின்றன.

கான்பரென்ஸிற்கு வரும் டெலிகேட்டுகளில் பெரும்பாலோர் கிராமவாசிகள். அவர்களுக்கு மாகாணத்தின் தலை நகராகிய சென்னைக்கு வருவதில் ஒருவித கல்வி போதனை ஏற்படக்கூடும். இங்கிருந்து அவர்கள் அநேக விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடும். தாலுக்கா கான்பரென்ஸுகளும் ஜில்லா கான்பரென்ஸுகளும் சகஜமாய் நடந்து வருகின்றன. அக்கான்பரென்ஸுகளுக்கு டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்களும் அக்கான்பரென்ஸுகளுக்குச் சென்று தாம் கற்றுக்கொண்ட விஷயங்களையும் அனுபவங்களையும் போதித்து வருகிறார்கள். இது காரணம்பற்றி மாகாணக்கான்பரென்ஸை மாகாணத் தலை நகராகிய சென்னையை விட்டு வேறிடங்களில் நடத்திவைக்கவேண்டுமென்பது அவசியமில்லை. சென்ற மூன்று நான்கு வருஷங்களுக்கு முன் மதுரை டெலிகேட்டுகள் மாகாணக் கான்பரென்ஸ் தம் நாட்டில் கூடவேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுதும் மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டே அவர்களுடைய அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாகாணக் கான்பரென்ஸை தெலுங்கு ஜில்லாக்களுக்கு அழைப்பதைவிட தெலுங்கு ஜில்லாக்களுக்கெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு கான்பரென்ஸை கூட்டுவது உசிதமென்று கூறப்பட்டது. அவர்களுடைய ஊக்கமும் சிரத்தையும் அதிகமாக இருப்பதால் இத்தகையக் கான்பரன்ஸ் கூடிய சீக்கிரம் ஏற்பாடாகி விடுமென்பதில் சந்தேகங்கிடையாது.

* * *

இச்சங்கம் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 17-ந் தேதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. ஆனால் ரிஜிஸ்தர் செய்யப்படுவதற்கு ஒரு மாதம் முன்னமேயே இத்தொழிற்சாலை வேலை ஆரம்பஞ்செய்து விட்டது.



இச்சங்கத்தில் தோல் சாமான்கள் தயார் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன.

மெட்ராஸ்கோவாபரேடீவ் லெதர் கூட்ஸ் (தோல் சாமான்கள்) பாக்டரி (தொழிற்சாலை.)

இத்தொழிற்சாலையில் வேலை செய்பவர்களெல்லோரும் வேலையில் மிகவும் கெட்டிக்காரர்கள். சிறந்த தொழிலாளர்கள். இவர்கள் முதல் தரமான, பூட்ஸுகள், ஜோடுகள் (Shoes) ஸிலிப்பர்கள், செருப்புகள், படுக்கைவார், பணப்பை, குதிரைச்சேணம் இன்னும் பலவிதமானதோல் சாமான்கள் யாவும் வெகு நேர்த்தியாகச் செய்கிறார்கள். தோல் வேலைச் செய்யும் தொழிலாளர்களுக்கென்றே (சக்கலியர்களுக் கென்றே) இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டாலும், சங்கத்தில் அனுதாபமுள்ளவர்கள் சிலரை (சங்கத்திற்கு மூல திரவியம் சேர்க்கவும், சங்கத்தின் காரியங்களை நிர்வாகஞ்செய்யவும், அவர்கள் உதவி அத்தியாவசியமாக இருக்கின்றது) இச்சங்கம் மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது. தொழிலாளர்களின் தொகைதான் பெரும்பான்மையாக இருக்கவேண்டுமென்றும் சங்கத்தின் நிர்வாகத்திலும் தொழிலாளர்களின் தொகைதான் பெரும்பான்மையாக இருக்கவேண்டுமென்றும் ஒரு விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு வாரக்கூலி அல்லது மாதச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய கூலி போக பாக்கி நிற்கும் இலாபத்தில் பங்குக்காரர்களுக்கு 100-க்கு 9 வீதம் டிவிடெண்டு கொடுத்துவிட்டு பாக்கியிருக்கும் தொகை கூலியாட்கள் பெற்றுள்ள கூலியின் வீதாசாரப்படி அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். இச்சங்கம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கின்றது. பன்னிரண்டுபேர் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இச்சங்கத்தின் காரியங்கள் முழுவதும் கூட்டுறவு இயக்கத்தின் உண்மை நிலையிலேயே நடைபெற்றுவருகின்றன. சாமான்களின் விலைகளோ அதிக இலாபமின்றி கூட்டுறவு இயக்கத்தின் விதிகளை யொட்டி நிர்ணயிக்கப் படுகின்றன. சங்கத்தின் காரியங்களெல்லாம் நாணயமாகவும், ஒழுங்காகவும் நடைபெற்று வருவதால் சங்கம் வெகு சீக்கிரம் விர்த்தியடையக் கூடுமென்றுக் கருதப்படுகின்றது. இந்திய ஊழியச்சங்கத்தின் அங்கத்தினர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான் வி. வெங்கிட்சுப்பய்யா அவர்களுடைய பெரு முயற்சியாலும் உழைப்பினாலுமே இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு பிரஸிடெண்டாகவும், காரியங்களின் நிர்வாகத்திற்கு மானேஜராகவும் இவரே இருந்து விஷயங்களைக் கவனித்து வருகிறார். இச்சங்கம் இராயப் பேட்டையிலுள்ள இந்திய ஊழியச் சங்கத்தின் கட்டடத்திலேயே வேலை நடத்தி வருகின்றது. இச்சங்கத்தின் தொழிலாளர்களெல்லோரும் பெரம்பூரில் வாசஞ் செய்பவர்கள். இவர்களிருப்பிடத்திலிருந்து இப்பேட்டைக்கு நடந்து வரவேண்டிய தூரத்தையும் கவ

ணியாது மெம்பர்கள் வந்து வேலை செய்வது மிகவும் பாராட்டத்தக்கது. மெம்பர்களுக்குள்ள ஊக்கமும் சிரத்தையும் நன்கு வெளியாகின்றது. சென்னை நகரிலுள்ள பிரமுகர்களில் பலர் இச்சங்கத்தில் அனுதாபங் காட்டி உதவி செய்து வருவது சங்கத்தின் பாக்கியமென்றே சொல்ல வேண்டும். திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ் சங்கத்தின் பிரஸிடெண்டாகிய ஸ்ரீமான் T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் அவர்கள் இச்சங்கத்தில் மெம்பராகச் சேர்ந்திருக்கிறார். சென்ற சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸிற்கு அக்கிராசனம் வகித்த கனம் மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் குறைந்த வட்டிக்கு இச்சங்கத்திற்கு பெருந்தொகையைக் கடனாகக் கொடுத்திருக்கிறார். இச்சங்கத்திற்கு தகுந்ததோர் கட்டடம் வாங்கிக்கொடுக்க கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயரவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார். இத்தகையச் சங்கங்களுக்கு நம்தேசத்தவர்கள் ஏராளமான உதவி செய்து வரவேண்டுமென்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. கூட்டுறவு இயக்கத்திற்கே இத்தகைய சங்கங்கள் பயன் தரக்கூடியவை யென்பது ஒன்று. இத்தொழில் முழுவதும் சுதேசியத் தொழில் என்பது மற்றொன்று. இத்தொழிற்சாலை சீக்கிரம் விர்த்தியடைந்து வெற்றிபெற வேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறோம்.

***

**ஸ்ரீமான் தெய்வ சிகாமணி முதலியார் அவர்கள்.**

சமீபத்தில் நூதனமாய் ஏற்படுத்தப்பட்ட கோயமுத்தூர் செக்ஷனின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராராக நியமனம் பெற்றிருக்கிற ஸ்ரீமான் தெய்வசிகாமணி முதலியாரவர்களுக்கு நம்முடைய மனப்பூர்வமான சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். டிபார்ட்டுமெண்டில் உள்ள உத்தியோகஸ்தர்களில் கெட்டிக்காரராகவும் மிக்க அனுபவம் பெற்றவராகவும் இருக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களில் இவரொருவர். இவர் முதலில் கீழச்சேரி ரூரல் க்ரெடிட் சொஸைடியில் காரியதரிசி வேலை பார்த்து வந்தார். கீழச்சேரி சங்கம், இவ்விராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களில் மூன்றாவதாகும். கூட்டுறவு இயக்கத்தில் இவர் அதிக அன்பும் ஊக்கமும் உள்ளவராய்க் காணப்பட்டதால் தன்னுடைய டிபார்ட்மெண்டில் சேர்ந்து விடும்படியாக அப்போது ரிஜிஸ்ட்ராராக இருந்த மிஸ்டர் பி. இராஜகோபாலாச்சாரியார் இவரை வேண்டிக்கொண்டதின் மேல் இவர் டிபார்ட்மெண்டில் சேர்ந்தார். அன்று முதல் இவர் டிபார்ட்டுமெண்டு உத்திகஸ்தர்களுடையவும், உத்தியோகப் பற்றில்லாத இதர கூட்டுறவினர்களுடையவும் உள்ளன்பை அடைந்திருக்கிறார். கூட்டுறவு இயக்கத்தில் இவருக்கு ஏற்பட்டுள்ள அறிவினாலும், அனுபவத்தினாலும் இவரிடம் எல்லோருக்கும் மரியாதையுண்டு. கிராமவாசிகளைப் பட்சமாயும், அன்பாயும் நடத்தும் திறமையினால் இவர்பால் அன்பு கொள்ளாதார் ஒருவருமே இல்லையெனச் சொல்லலாம். அநேக வருஷங்களாக டிபார்ட்மெண்டின் ஆடிட் வேலையில் இவர் முதன்மையாக இருந்திருக்கிறார். இவர் கீழச்சேரியிலுள்ள அதிக செல்வாக்குள்ள மிராசுதார்கள் குடும்பத்தைச்சேர்ந்தவர். கூட்டுறவு இயக்கத்தில் கீழ்ச்சேரி கிராமம் ஆரம்பமுதல் பிரகாசித்து வழங்குவதற்குக் காரணம், ராவ்சாகேப் ஸி. அருணைய்யா நாயுடுகாரு அவர்கள் குடும்பமும், மிஸ்டர், தேவசிகாமணி முதலியார் அவர் குடும்பமும் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டி வருவதேயாகும். இவர் உத்தியோக முறையில் கீழ்ப்பதவியிலிருந்து படிப்படியாக உயர்ந்து பதினைந்து வருஷங்களுக்கு உட்பட்ட காலத்திற்குள் இவர் உயர்பதவியையடைந்திருக்கிறார். இவர் இன்னும் பால்யதசையிலேயேயே இருக்கிறார். எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு நீடூழி வாழ்வும் சகல சம்பத்தும் கொடுத்தருளி இவரால் பலருக்கும் நன்மை ஏராளமாக விளையும்படிச் செய்யவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறோம்.



***

**திருவாங்கூர்.**

சென்றமாதத்திய சஞ்சிகையில் நாம் எழுதியதன்பின் திருவாங்கூர் சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்க சம்பந்தமான கொள்கை, இவ்வருஷ ஆரம்பமுதற்கொண்டு முழுமாறுதலடைந்திருப்பதாகத் தெரிகிறது. சென்ற ஆறுமாதங்களுக்குள் அநேக சங்கங்கள் நூதனமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சென்ட்ரல் பாங்கின் நிர்வாகத்திலும் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ட்ரல் பாங்கின் நிர்வாகம் சரிவர நடைபெறுததினாலோ என்னவோ, பிரைமெரி சங்கங்களெல்லாம் தம்முடைய சொந்த டிபாஸிட்டுகளையும், பங்குத்தொகைகளையுமே ஆதாரவாகக்கொண்டு வேலை நடத்திவர கற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த வருஷத்திய ரிப்போர்ட்டு திருப்திகரமாகவும் உற்சாகமாகவும் இருக்குமென எதிர்பார்க்கிறோம்

***

நாயகானில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கஞ்சா விவசாயிகளின் கோவாபரேடிவ் சங்கத்தைக் குறித்து வங்காள மாகாண கூட்டுறவு வர்த்தமானி பின்வருமாறு எழுதுகின்றது: "யுத்த நிதிக்கு நன் கொடையாக ஆயிரம் ரூபாய் கொடுப்பதும் வைத்திய சாலைக்காக பன்னிரண்டாயிரம் ரூபாய் செலவழிப்பதும், பிரதேச ஆஸ்பத்திரியில் ஒரு வார்டுக்கு ஐயாயிரம் ரூபாய் செலவழிப்பதும் கல்வி அபிவிருத்திக்காக பதினையாயிரம் செலவழிப்பதும் ரஸ்தாக்களை சீர்படுத்தப் பதினையாயிரம் செலவழிப்பதும் விவசாயிகளுக்கு போனஸாக இரண்டு இலட்சம் ரூபாய் பங்கிட்டுக் கொடுப்பதும்—இவையெல்லாம் ஒரு வருஷத்திய இலாபத்திலிருந்து

செய்வது இந்தியாவின் கூட்டுறவு இயக்கத்திலேயே மிகவும் வியக்கத்தக்க விஷயம். இச்சங்கத்தை ஸ்தாபனஞ்செய்தவர்களும், இதன் விர்த்திக்காக பாடுபட்டு உழைப்பவர்களும், உண்மையாகவே புகழுக்குப் பாத்திரப்பட்டவர்கள்.

* * *

நமக்குத் தெரிந்தவரையில் கோவாபரேடீவ் வைத்யசாலை இந்தியா தேசம் முழுவதற்குமே ஒன்றே ஒன்றுதான் இருக்கின்றது. அஃது பீஹாரில் பத்வா என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சென்ற வருஷத்தில் அச்சங்கம் திருப்திகரமாக வேலை செய்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். சென்ற வருஷத்தில் இந்த வைத்யசாலையில் 25,482 பேர் வைத்ய சிகிட்சை செய்யப்பட்டார்கள். இவர்களுள் 3000 பேர் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்கள். ஜில்லா போர்டார் இச்சங்கத்திற்கு பணஉதவி ஏராளமாகச் செய்து வருகிறார்கள். இந்த வைத்யசாலையின் நிர்வாகத்தை ஜில்லா போர்டார் இனி தாமே ஏற்றுக்கொள்ளுவதாக ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு சங்கம் விர்த்தியாகும்படி ஏற்பாடு செய்து, அச்சங்கம் விர்த்தியாய் விட்டதேயென்று அதை நசுக்க ஏற்பாடு செய்வது மிகவும் கொடுமையான காரியம். ருஷியர்களுடைய கொடுங்கோலாட்சியும் இத்தகையதாக நடந்துகொள்ளுமென்று நாம் கருதவில்லை. ஜில்லா போர்டாருக்கு பீஹார் மாகாணத்து கோவாபரேடீவ் ரிஜிஸ்ட்ரார் இது சம்பந்தமாய் சில புத்திமதியான வார்த்தைகளைக் கூறியிருப்பது ஆச்சர்யகரமான விஷயமல்ல.

* * *

ஸர் டானியல் ஹாமில்டன் எழுதியுள்ள கடிதத்தை ஆதரித்து கல்கத்தா சர்வகலாசாலை சபையார் அடுத்த மூன்று வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு பரிசுகள் கொடுப்பதாக நிச்சயஞ் செய்திருக்கிறார்கள். முதல் பரிசுக்கு ரூ. 250-ம் இரண்டாவது பரிசுக்கு ரூ. 200-ம் கொடுக்கப்படும். இந்த பரிசுக்கு சர்வகலாசாலை பட்டம் பெற்றவர்கள்தான் அபேட்சகர்களாக நிற்கலாம். அப்படிப்பட்டம் பெற்றவர்களும், பட்டம் பெற்றபின் குறைந்தது பத்துவருஷ அனுபவம் பெற்றிருக்க வேண்டும். கல்கத்தா சர்வகலாசாலை சங்கத்தாருடைய இச்செய்கைக்கு நம்முடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதுடன் நம்முடைய சந்தோஷத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இப்பரிசுகளுக்கு அநேகர் அபேட்சகர்களாக நிற்பார்களென கருதுகிறோம். இதர சர்வகலாசாலை சபையாரும் இவ்வழியைப் பின்பற்றி நடப்பார்களென நம்புகிறோம்.

---



# விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு வார்த்தை.*

[திருவாங்கூர் சமஸ்தானம் கோவாபரேடீவ் ரிஜிஸ்ட்ரார் ஸ்ரீமான் C. கோவிந்த பிள்ளை B.A. B.L. அவர்கள் எழுதியது.]

விவசாயிகளை, அவர்கள் அடைந்துள்ள கடனின்று மீட்க ஐக்கிய நாணயச் சங்கங்களை கவர்ன்மெண்டார் ஸ்தாபனஞ் செய்வதும் ஐக்கிய நாணயச் சங்கங்களை கதிமோட்சமென்று விவசாயிகள் நம்பி நிற்பதும் என்ன காரணமென்றும் அதன் இரகஸ்யம் விளங்கவில்லையென்றும் கேள்விகேட்பவர்கள் சிலர் இருக்கிறார்களென்றால் இவ்விஷயம் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடுமென்று எண்ணுகிறேன். இந்தியாவில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலைமை மிகவும் தாழ்ந்திருக்கிறதென்றும் காலப்போக்கையொட்டி அவர்கள் அதிகக் கஷ்டப்படவேண்டியிருக்கிறதென்றும் இத்தீங்குகளையும், குறைகளையும் சீக்கிரம் நிவர்த்திசெய்ய வேண்டுமென்று எல்லோரும் ஓரே விதமாய்க் கூக்குரலிட்டபோதிலும், விவசாயிகளின் நிலைமையை சரிவர பகுத்தறியவில்லையென்றும் அவர்கள் நிலைமைக்குத்தக்க நிவர்த்தி மார்க்கம் செய்யப்படவில்லையென்றும் சொல்லுபவர் சிலர் உளர்.

இவ்விதமாய்க் கூறுபவர்களின் தொகை மிகவும் சொற்பமாய் இருப்பது அதிர்ஷ்ட வசமே. விவசாயிகளின் அதிக கடனுக்குக் காரணம் அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கப்படுவதல்லவென்று அச்சிறு பகுதியார் கூறுகிறார்கள். அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கப்படும் காரணத்திலேயே ஒருவன் கடன்காரனாவதில்லையென்றும், சொற்ப வட்டிக்குக்கடன் கொடுக்கப் படுவதினால் கடனாளியின் நிலைமை சீர்பெறுவதற்கு மார்க்கமில்லையென்றும் அச்சிறு பகுதியார் வாதிக்கிறார்கள். அதிக வட்டிக்குப் பணம் கொடுக்கப் படுவதினாலேயே நம்முடைய விவசாயிகள் கடனாளிகளாய் விடவில்லையென்பது ஒப்புக் கொள்ள வேண்டியதானாலும், அதிக வட்டி வாங்கப்படுவதினால் விவசாயியின் கடன் அதிகரித்து வருகிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. கடன் வாங்க வேண்டியது எல்லா தேசங்களிலும், எல்லா காலங்களிலும் அவசியமானதாக ஏற்பட்டுள்ளது. கடன் வாங்க வேண்டியது அவசியமென்று ஒப்புக் கொள்ளுகிறவர்களுக்கு கடன் வாங்குவதற்கு இலகுவானவும் சௌகர்யமானவும் மார்க்கங்கள் ஏற்படுத்துவது அத்தியாவசியமென்று எடுத்துக் காட்டவேண்டிய அவசியமில்லை. கூட்டுறவு

* சென்னை மாகாண ஏழாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸிற்கு ஆங்கிலத்தில் எழுதியனுப்பிய வியாஸத்தின் மொழிபெயர்ப்பு.

இயக்கத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சகல குறைகளும் தீங்குகளும் காற்றாய்ப் பறந்து போகக்கூடுமென்று ஒருவரும் கூறவில்லை. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியினால் கடன் வாங்கும் வழக்கத்தையே ஒழிக்க முடியுமோவென்று கேட்கும் கேள்விக்குப்பதில், கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளையும், பயன்களையும் செவ்வனே அறிந்தவர்கள்தான் அறிந்துகொள்ளக்கூடும். கூட்டுறவு இயக்கம், விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும், குறைந்த வட்டிக்குப் பணத்தை வாங்கிக்கொடுத்தும் அவரவர்கள் வாங்கிய கடன்கள் சரியான காரியத்திற்கு செலவழிக்கப்படுகிறதா வென்பதைக் கவனித்தும் சிக்கனமாய்ச் செலவழிக்கும் மார்க்கத்தைப் போதித்தும், தான் சம்பாதிக்கக்கூடிய தொகைக்குமேல் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்க வழிகாட்டியும் வருகின்றது.

ஒரு மனிதன் கடன் வாங்குவதையே ஒழிப்பதற்கு மார்க்கங்களைத் தேடாமல், இலகுவானவோ அல்லது சௌகர்யமானவோ நிபந்தனைகளின்மேல் கடன் கொடுக்கப்படுவதால் கடன் பெறுபவனுக்கு எத்தகைய நன்மையும் விளையவில்லை யென்று வாதஞ்செய்வது நியாயமான வாதமல்ல. இத்தகைய வாதம் சரியான வாதமாகாது. இந்தியாவின் தொழிலாளர்கள் நிலைமையிலும் விவசாயிகள் நிலைமையிலும் உள்ள குறைகள் பலவும் தீமைகள் பலவும் ஒருவாறு ஒழிக்கப்படலாம். ஆனால் இலகுவானவும் சௌகர்யமானவும் நிபந்தனைகளின்மேல் பணம் எளிதாகக் கிடைக்கும் மார்க்கங்கள் பல இல்லாமையால் அவனுடைய ஸ்திதியை தற்கால நிலைமையில் முன்னடையச் செய்வதென்றால் மிகவும் அசாத்தியமானதாகத்தா னிருக்கின்றதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். தற்கால நிலைமையிலுள்ள தீங்குகளையும் குறைகளையும் ஒழிப்பதற்கு கூட்டுறவு இயக்கம் சாதகமான மார்க்கமல்லவென்று சொல்லுபவர்களெல்லோரும், தினந்தோறும் இந்தியாவினின்று வெளிச்செல்லும் பணப்பெறுக்கைத் தடுப்பதற்கு மார்க்கங்கள் தேடப்பட்டாலொழிய இந்தியாவின் செல்வ நிலையைச் சீர்திருத்த முடியாதென்று அபிப்பிராயங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்படுகிறவரையில் அல்லது அமுலுக்கு வருகிறவரையில், தற்கால நிலைமையினின்றுத் தப்பித்துக்கொள்ள சிறிதேனும் மார்க்கந் தேடாமல் இருக்கவேண்டுமோ வென்பதுதான் இப்போது கவனிக்கவேண்டியவிஷயம். தற்காலநிலைமையினின்றும்தப்பித்துக்கொள்ளப் பிரயத்தனஞ் செய்யவேண்டுவது அவசியமென்று ஒப்புக்கொள்ளப்படின் தற்கால நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ள கூட்டுறவைத் துணையாக கொண்டது சரியென்றேஎல்லோரும்ஒப்புக்கொள்ளவேண்டும். தற்காலம் நம்முடைய விவசாயிகளும், ஏழைக் குடியானவர்களும், மார்வாரிகளிடத்தும், சாவுகார்களிடத்தும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களிடத்தும்



கடன்பட்டுத் தப்பிக்கவொண்ணாது படுங்கஷ்டம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகறிந்த விஷயம். மார்வாரிகளும், சாவுகார்களும் வட்டிக்குப் பணங்கொடுப்பதே தொழிலாகக் கொண்ட இதரர்களும் ஏழைக் குடியானவர்களிடத்து சிறிது தயவாகவும், தாட்சண்யமாகவும் நடந்துகொள்ளுவார்களாகில் தற்காலம் சங்கங்களில் ஏற்பட்டுள்ள நன்மைகளில் சில, குடியானவர்களுக்கு ஏற்படாமல் போகா. ஆனால் தற்காலம் மார்வாரிகளிடத்தும், சாவுகார்களிடத்தும், இதரர்களிடத்தும் விவசாயிகளும், ஏழைக் குடியானவர்களும் படுந்துன்பமும் அடையும் கஷ்டமும் சொல்லவொண்ணாது. கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வாங்கும் வழக்கம் குடியானவர்களுடையவும் விவசாயிகளுடையவும் சம்பாத்தியம் முழுவதையும். உரிஞ்சுவிடுகிறதென்றே சொல்லவேண்டும். கூட்டுறவினால் இதுவரையில் நாம் என்ன நன்மை அடைந்திருக்கிறோமென்பதைச் சிறிது கவனித்துப் பார்ப்போம். யுத்தம் ஆரம்பமான காலம் முதற்கொண்டு நம்முடைய மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. இன்னும் அதிகமாக வளர்ச்சியடையவேண்டியது யுத்த காரணத்தால் தடைப்பட்டுப் போயிற்றென்பதை யாவரும் அறிவர். சென்னை மாகாணத்தில், சங்கங்களின் தொகை அதிகரித்தது போலவே சங்கங்களின் லேவாதேவியும் அதிகரித்திருக்கின்றது. 1914-ம் வருஷம் ஜூன்மாதத்தியக் கடைசியில் 1333 சங்கங்கள் இருந்தன. 1918-ம் வருஷம் ஜூன்மாதக் கடைசியில் 2644 சங்கங்கள் இருந்தன. சங்கத்தின் மெம்பர்கள் தொகையும், சங்கங்கள் லேவாதேவி செய்யும் மூலதனத்தொகையும் அதிகரித்துள்ளது. இந்நான்கு வருஷங்களுக்குள் சங்கங்களிலுள்ள மெம்பர்களின் தொகை 100,537 லிருந்து 191,041-க்கு உயர்ந்துள்ளது. சங்கங்களின் மூலதனத் தொகை ரூ. 123 கோடியிலிருந்து 2, 34 கோடிக்கு உயந்துள்ளது. க்ஷேமநிதியின் அளவு ரூ. 5, 69 இலட்சம் வரைக்கும் வளர்ந்துள்ளது. இவ்வளர்ச்சியையெல்லாம் கொண்டுள்ள எத்தேசமும் உண்மையாகவே பெருமை பாராட்டிக்கொள்ளச் சுதந்தரமுண்டு. யுத்தம் ஆரம்பமான காரணத்தால் சகலவித வியாபாரங்களும் இயக்கங்களும் சீர்கெட்டுப் போகக் கூடுமென்றும் அதேவிதமாக கூட்டுறவு இயக்கமும் கெட்டுப்போகக் கூடுமென்றும் யுத்த ஆரம்பகாலத்தில் சிலர் நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் கூட்டுறவு இயக்கத்திற்கு அவ்விதமாக ஒன்றும் ஏற்படாது, இயக்கம் அதிகமாக வளர்ச்சியடைந்ததைக் கண்டு வியப்படையாதவர்கள் ஒருவருமே இலர். நம்முடைய விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களால் எவ்வளவு நன்மை ஏற்பட்டுள்ளதென மதிப்பிடக்கூடுமானால் கூட்டுறவு இயக்கத்தால் எவ்வளவு நன்மை ஏற்பட்டுள்ளதென்பதை அளவிட்டுச் சொல்லக்கூடும். 1914-15 வருஷத்தியக் கடைசியில் விவசாயச்

சங்கங்களில் 90088 மெம்பர்களிருந்தார்கள். 1917-18 வருஷக் கடைசியில் விவசாயச் சங்கங்களின் மெம்பர்களில் தொகை 136054-க்கு உயர்ந்துவிட்டது. அதாவது 100-க்கு 50 வீதம் மெம்பர்கள் அதிகரித்திருக்கிறார்கள். மெம்பர்களுக்கு கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 26,44,203 லிருந்து ரூ. 2977-032-க்கு உயர்ந்தது. மெம்பர்களின் தொகை அதிகரித்ததும், மெம்பர்கள் கடன் வாங்கிய தொகை யதிகரித்ததும்சென்னை மாகாண விவசாயிகளின் கடனளவு கொஞ்சங்கொஞ்சமாக குறைந்து வருகிறதென்பதைக் காட்டுகின்றது.

ஒவ்வொரு மெம்பராலும் சராசரி வாங்கப்பட்ட கடன், 1914-15 வருஷக்கடைசியில் ரூ. 29.3; 1917-1918 வருஷக்கடைசியில் ரூ. 21.8 க்குக் குறைந்துள்ளது. மெம்பர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடன்பட்டிருப்பதைத் தவிர இதர இடங்களிலும் கடன்பட்டிருக்கிறார்களென்பதை ரூபிக்கதக்க சாட்சியங்கள் கிடையா. தற்காலம் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகையினால் மெம்பர்கள் தங்களுக்குள்ள முன் கடன்கள் முழுவதையும் தீர்த்திருப்பார்களென்றுச் சொல்லுவதற்கில்லை. ஏனென்றால் இப்போது மெம்பர்களுக்குக் கொடுச்கபபட்டுள்ள கடன் தொகை, அவர்களுடைய முன் கடன்களைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லை. ஆனால் ஒருவிஷயம் மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம். மெம்பர்கள் தற்காலம் சங்கங்களில் வாங்கிய கடன் தொகைகளை வெளியில் வாங்கியிருப்பார்களாகில் அதிக வட்டியைக் கொடுத்திருக்க வேண்டுமென்பதை யாவரும் மறுக்கமுடியாது. 1918-ம் வருஷம் ஜூன்மாதம் 30-ந்தேதியோடு முடிவாகும் ஐந்து வருஷத்திய எண்களைப் பரிசோதனை செய்து பார்ப்போமாகில் விவசாயச் சங்கங்களில் மட்டும் அதன் மெம்பர்களுக்கு சராசரியில் வருஷம் 1-க்கு ரூ 25,52 இலட்சம் கடனாகப் பட்வாடா செய்யப்பட்டிருக்கின்றது. சங்கங்களிலும் வெளியிடங்களிலும் வாங்கப்படும் வட்டியின் வித்தியாசத்தைக் கவனிப்போமாகில் குறைந்தது 100-க்கு ஐந்தாவது வித்தியாசமிருக்கும். இந்த வித்தியாசத்தைக் கணக்கிடுவோமாகில் மெம்பர்களுக்கு வருஷம் 1-க்கு ஒன்றேகால் இலட்சம் ரூபாய் மீதியாகின்றது. இச்சிறு தொகை சமுத்திர ஜலத்தின்முன் ஒரு துளி ஜலமானாலும் அநேக ஏழை விவசாயிகளுக்கும், குடியானவர்களுக்கும் பிரத்தியட்சமான நன்மை ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

கூட்டுறவு இயக்கத்தில் இன்னொரு விஷயமிருக்கின்றது. அவ்விஷயத்தை புறக்கணித்தல் சரியல்ல. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டுள்ள இடங்களி லெல்லாம் மார்வாரிகளும், சாவுகார்களும் இதரர்களும் கேட்கும் வட்டி ரேட்டுக் குறைந்திருக்கிறதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதனால் ரையத்துக்கு ஏராளமான பிரத்தியட்ச



நன்மை உண்டென்பதில் சந்தேசமில்லை. ரையத்து இதற்குமுன் பெற்றுள்ள கடன்களிலும் இனிபெறும் கடன்களிலும் குறைந்த வட்டிக்குக் கடன் பெறக்கூடும். இன்னும் செய்ய வேண்டியது ஏராளம் இருக்கிறதெனினும், இதுவரைக்கும்கூட்டுறவு இயக்கத்தினால் பெருத்த நன்மை ஏற்பட்டுள்ளதென்பதை ஒருவரேனும் மறுத்துக் கூறமுடியாது.

கூட்டுறவு இயக்கத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் மேலே கூறப்பட்டுள.நம்தேசத்து விவசாயிகளுக்குள்ள கடன் தொகையில் அளவைக் கண்டு நாம் பயந்து விடலாகாது. எத்தேசத்து சரித்திரத்தைக் கண்டாலும் விவசாயிகளின் நிலைமை இத்தகையதாகவே இருந்து,பிறகுதான் சீர்பட்டிருக்கின்றது. கடன் வாங்குபவன் வாங்கிய தொகையை சரியான காரியத்திற்குச் செலவழிப்பானேயாகில் அவன் பெற்ற கடனால் அவனுக்கதிக நஷ்டமுண்டாய் விடாது. கூட்டுறவுச் சங்கங்களின் மெம்பர்கள் பெறும் கடன் தொகையின் எந்தஅளவை விவசாயக் காரியங்களிலும் நிலம் சீர் திருத்துவதிலும் செலவழிக்கிறார்களென்பதைக் கவனிப்போம். சென்ற ஐந்து வருஷத்திய கணக்குகளைப் பரிசோதனை செய்து பார்ப்போமாகில் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களில் சராசரி வருஷம் 100-க்கு 3.46 வீதந்தான் நிலத்தின்மேல் செலவுச் செய்யப்பட்டதாக ஏற்படுகின்றது:—இவ்விஷயத்தைக் கவனிக்கும்போது ஆலோசனைக்கு ஏராளமான இடமேற் படுகின்றது. விவசாயத்தில் அதிகமாகச் செலவழிக்க வேண்டிய அவசியமில்லாமற் போகுமாறு விவசாயத்தில் அவ்வளவு முன்னடைந்து சிறப்புப் பெற்றிருக்கிறோமா? நிலத்தைச் சீர்திருத்தும் விஷயங்களில் இப்போது செலவழித்துள்ள தொகையைவிடஅதிகமாகச்செலவழிக்கவாஸ்தவமாகவேசக்தியில்லாமற் போய்விட்டதா? இவ்விஷயத்தில் தங்களாலானதைச் செய்து விவசாய விஷயத்தில் அதிகப் பணத்தைச் செலவழிப்பதில் விவசாயிகள் சிரத்தையா யிருந்தார்களென்று யார்தான் உறுதியாய்க் கூறமுடியும்.? இக்கேள்விகளுக்கெல்லாம் நம்முடைய விவசாயச் சங்கங்கள் தான் பதில் சொல்ல வேண்டும். விவசாயச் சங்கங்களில் சேர்ந்த மெம்பர்களெல்லோரும் தாங்கள் வாங்கும் கடன்களை யெல்லாம் நிலங்களை வாங்குவதிலோ அல்லது நிலத்தின் சாகுபடி அதிகரிக்கும்படியான சீர்திருத்தங்கள் செய்வதிலோ செலவழித்தாலல்லது தாங்கள் நன்மை பெறமுடியாதென்று அவர்கள் உணருகிற வரையில் கூட்டுறவினால் இதர தேசங்களில் ஏற்பட்டுள்ள நன்மைகள் போன்ற நன்மைகள் நம்தேசத்தில் ஏற்படக் கூடுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. மெம்பர்கள் வாங்கும் கடனில் 100-க்கு 50 வீதம் முன்கடன்கள் தீர்க்கப்போய் விடுவதாகத் தெரிகிறது. கடன்காரனின் தொந்திரவையும் அதிக வட்டியின்

கொடுமையையும் சகிக்கமுடியாமல் தன்னால் சேகரிக்கக்கூடிய ஒவ்வொரு பைசாவும் முன்கடனைத் தீர்ப்பதற் கென்று கொடுத்துவிட முயலுகிறானே யொழிய நிலத்தைச் சீர்ப் படுத்தவேண்டுமே யென்று சிறிதும் கவலைக்கொள்ளுவதாகத் தெரியவில்லை. அதிக வட்டியில் நேரும் கொடுமையைத் தவிர்த்துக் கொள்ள பிரயத்தனப் படுவதில் பிசகொன்று மில்லை. அக்காரியம் செய்ய வேண்டியது அவசியமே. ஆயினும் தனக்கு வரும்படி வரக்கூடிய நேரேமார்க்கமாகிய நிலத்தைச் சீர்திருத்தி வரும்படியை அதிகரித்துக் கொள்ள முயலாமலிருப்பது பெரிதும் தவறான காரியம். ஒவ்வொரு மெம்பரும் வாங்குகிற கடனின் இத்தனை அளவு நிலம் வாங்கவோ அல்லது நிலம் சீர்திருத்தவோ செலவழிக்க வேண்டுமென்று ஒருவரம்பு ஏற்படுத்துவது மிகவும் அவசியம். விவசாயச் சங்கங்கள் ஒவ்வொன்றும் இத்தகைய விதியொன்றை ஏற்படுத்தி அதைப்பின்பற்றுவது மிகவும் மேலான காரியம்.

கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர் களெல்லோரும் இவ்விஷயத்தைக் கவனித்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்பதே இவ்வியாசத்தின் நோக்கம். கூட்டுறவினர்கள் இவ்விஷயத்தை நன்காலோசனைசெய்து நமது முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள இக்குறையை நிவர்த்திசெய்துகொள்ள சங்கங்களின் மெம்பர்களுக்கு எச்சரிக்கை செய்யாமற் போவார்களாகில், கடைசியில் இவ்வியக்கத்தில சம்பந்தப்பட்டுள்ளவர்களெல்லோரும் மனவருத்த மடையும் படியாக விஷயங்கள் நடைபெறக்கூடுமென்பதிற் சந்தேகமில்லை.

---

# ஏழைகளுக்காக பண்டகசாலைகள் (ஸ்டோர்ஸ்)

ஸ்ரீமான் கே. இராஜாராவ் எழுதியது. *

கோவாபரேஷன் என்பது முக்கியமாய் ஏழைகளுக்காக வென்றே ஏற்பட்ட இயக்கமாகும். இயந்திரங்கள் ஏற்பட்டதனால் ஏழை ஜனங்களுக்கு வேலை யில்லாமற்போய் கூலிக்காரர்கள்படும் பொருளாதாரக் கஷ்டத்தையும் ஏழைகளுடைய இதர துன்பங்களையும் நிவர்த்திக்க கோவாபரேஷன்தான் நல்ல ஏற்பாடு என்பதாக, ஏழைகளுக்கு உபகாரஞ் செய்யக் கருதிய, இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளிலுள்ள கனவான்கள் பலர் கருதினார்கள். இப்பொழுதுகூட ஐரோப்பாவில் விசேஷமாய் ஏழைகள் தான் கோவாபரேஷனால் பயனடைகிறார்கள். நடுத்தரமானவர்களும் அதன் சௌகர்யங்களைக் கொண்டாடுகிறார்கள். இங்கிலாந்திலுள்ள கூட்டுறவினர்கள் விசேஷமாய் தொழிற் கூட்டத்தாரோடேயே சம்பந்தப்பட்டிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. விவசாயக் கூட்டுறவு அவ்விடத்தில் மிக்க் குறைவாயிருப்பதனாலும் ஜனங்களில் பெரும்பான்மையோர் நகரவாசிகளாகவே யிருப்பதனாலும் இத்தகைய சம்பந்தம் எளிதாக ஏற்பட்டிருக்கின்றது

* ஆங்கிலத்தில் எழுதிய வியாசத்தின் மொழி பெயர்ப்பு.



இந்திய தேசத்திலோ ஏழைகளுக்கும் கூலிக்காரர்களுக்குமே யென்று பிரத்தியேகமாகக் கூட்டுறவு ஏற்படவில்லை. கிராமங்களில் வாசஞ்செய்யும் தொழிலாளர்கள். நபர்ஜாமீனாவது சொத்து ஜாமீனாவது கொடுக்க முடியாமையால் விவசாய நாணயச் சங்கங்களினின்றும் அவர்கள் அதிகப்பயனடைகிறதில்லை. கிராமங்களில் வேலை செய்து பிழைப்பவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் நாணயச்சங்கங்களல்லாத இதரசங்கங்கள் நாம் கவனிப்பதற்குக்கூட இல்லாதபடிக்கு அவ்வளவு சொற்பமாக இருக்கின்றன. நகரங்களிலும் பட்டணங்களிலும் கூட்டுறவு இயக்கத்தில் தொழிலாளர்கள் சேர்ந்தில்லை. ஆனால் நடுத்தரமான ஜனங்களே கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஏனென்றால் தற்காலஏற்பாட்டின்படி ஏற்பட்டுள்ள கோவாபரேடிவ் சங்கங்கள் மேனாட்டு முறையை அனுசரித்து ஏற்பட்டிருப்பதால்இங்கிலீஷ் தெரிந்தவர்களால்தான் அதன் பயன்கள் உணரப்பட்டு அனுபவிக்கப்படுகின்றன. இவ்விதமாக ஏற்பட்டுள்ளது சரியென்று ரூபிக்கவாவதுஅல்லது நியாயமென்றுச் சொல்லுவதற்காவது நாம் இவ்விஷயத்தை எடுத்துக் கூறவில்லை. நாம் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டதின் நோக்கமே வேறு. ஆனால் விஷயம் உள்ளது உள்ளவாறு சொல்லப்பட வேண்டியது அவசியம்.

ஒவ்வொரு தேசத்திலும் பெரும்பான்மையோர் நெற்றித்தண்ணீர் நிலத்தில் விழும்படி உழைத்து ஜீவிக்கும் தொழிலாளர்களாகவே யிருக்கிறார்கள். விவசாயத்திலோ, சுரங்கத்திலோ வேலை செய்பவர் களாகவும் குமாஸ்தா வேலையிலோ, போர்க்களத்திலோ, அலைகடலிலோ யாதேனும் ஓரிடத்தில் உழைத்து வயிறு வளர்க்க வேண்டியவர்கள்தான். இந்தியாவில் இதர நாடுகளைக் காட்டிலும் தொழிலாளர்கள் அதிகமாக விருப்பார்களேயொழிய குறைவாயில்லை. இந்தியர்களின் வாழ்க்கை மிகவும் சாதாரணமான வாழ்க்கை என்றே சொல்லலாம். அதிலும் அவர்களில் ஏழை ஜனங்களின் வாழ்க்கை மிகவும் பரிதபிக்கக் கூடியது. ஆனதுபற்றி அவ்வேழைகளின் தேவைகளும் அவசியங்களும் மிகக் குறைவாகவே யிருக்கின்றன. இருந்தாலும் அவனுக்கு அவசியமானவைகள் அத்யாவசியானவைகளாகவே யிருக்கின்றன. சாப்பாடு, துணி விளக்கு, விறகு முதலியனஇவைகளையெல்லாம் அத்தியாவசியமானதேவைகளை,சேர்த்துப் பார்த்தால் மிகவும் ஏராளமாகத்தான் அவனுக்கு வேண்டியதாக ஏற்படுகின்றது. ஏழைகள் இத்தேவைகளை எளிதாக அடையச் செய்வதற்கு

ஸ்டோர்கள் ஏற்படுத்தும்படி கோவாப ரேடர்களுக்குச் சொல்வதுதான் இவ்வியாஸத்தின் நோக்கமாகும். ஒருவிதத்தில் கூலிக்காரர்கள் மாதச்சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் அல்லது நல்லநிலைமையிலுள்ள மிராசுதார்களைக் காட்டிலும் லேவாதாதேவி செய்ய, அல்லது வியாபாரஞ் செய்ய சௌகரியமானவர்கள். ஏனென்றால் அவர்கள் தினந்தோறும் கூலி சம்பாதிப்பதினால் ரொக்கத்திற்கே சரக்குகள் வாங்குவார்கள். வேலை செய்யாமல் இருக்கும் நாட்கள் தவிர இதர நாட்களில் அவர்கள் கடனுக்கு சரக்குகள் வாங்கமாட்டார்கள். அதனால் ஸ்டோர் கொழுத்து விருத்தியடையும். உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்கள் முதலிய பெரிய மனிதர்களோ கடனுக்கேவாங்க வேண்டியதாகி வெகு காலத்திற்குப் பிறகே பணம் கொடுப்பார்கள். இதனால் பணம் சீக்கிரமாய்ப்புரள முடியாமல் ஏராளமான மூலதனம் வைக்க வேண்டியதா யிருக்கிறது. அநேக சில்லரை வியாபாரிகள் உபாயமான முதலை வைத்துக்கொண்டு ஜீவிப்பதற்குக் காரணம் கூலிக்காரர்கள் முதலிய ஏழைகள் ரொக்கத்திற்கு வியாபாரஞ் செய்வதினாலேதான்.

சில்லரை வியாபாரிகளுக்கு இலாபம் சம்பாதிக்க வேறுவழிகள் தெரியாது என்பதல்ல. இலாபம் ஏராளமாகத்தான் வைக்கிறார்கள். சரக்கின் நாணயத்தைப்பற்றி அதிகமாய் கவனிக்கிறதில்லை. அளவு முதலியதும் மனச்சாக்ஷியை ஒத்திருக்காது. கூலிக்காரனுடைய மனைவிக்கு அல்லது அவன்வீட்டு குடித்தனம் நடத்துபவளுக்கு (அவர்கள் தான் சாமான் வாங்குகிறவழக்கும்) விலைவாசிகளில் அப்போதப்போது ஏற்படும் ஏற்றக்குறைச்சல்களை தெரிந்து கொள்ளும் சக்தி கிடையாது. இதர சம்பிரதாய வழக்கப்படியே அவர்களும் ஒரு குறிப்பிட்ட கடையை வழக்கம் செய்துகொண்டு வேறுகடையில் தன் வியாபாரத்தை மாற்ற இஷ்டப்படுகிறதில்லை அப்படிப் புதுக்கடைக்குப் போவதாயிருந்தால் அவிடத்துச் சரக்கும், விலையும் மிகச் சௌகரியமாயிருக்க வேண்டும், சரக்கு மட்டத்தையும் அளவுக் குறைவையும் நன்றாய் கவனித்துக் கண்டுபிடிக்கும் ஜனங்கள் மிகக் குறைவே, ஏனெனில் சாதாரண ஜனங்களுக்கு அவ்வளவு அனுபவமும் புத்தி நுட்பமுங் கிடையாது. போலீஸ், சுகாதார இலாகா ஆகிய இவைகளைச் சேர்ந்தவர்களே மேற்படி குறைவு நேராதபடி பாதுகாப்பார்களென்று பொது ஜனங்கள் நம்பியிருக்கிறார்கள். சில்லரை வியாபாரியின் க்ஷேம லாபத்திற்கு மேற்படி துர் நடத்தைகள் அவசியமேயில்லை. ரொக்க வியாபாரம் வைத்துக் கொண்டால் மட்டுமே போதுமானது. கோவாபரேடிவ் சங்கங்கள் ரொக்கத்திற்கே விற்கவேண்டிய நிர்ப்பந்த மிருக்கிறபடியால் ஏழைகளுக்காக ஸ்டோர்கள் ஏற்படுத்தப்படின் அவைகள் விருத்தியாகமலிருக்க முடியா.—



உதாரணமாக இரண்டு மூன்று குழந்தைகளுள்ள கூலிவேலை செய்யும் ஒரு ஏழைத்தம்பதி, தானியம், மிளகாய், எண்ணெய் முதலியன வாங்க சுமார் தினம் '8 அணா செலவழிப்பதாக நினைத்துக்கொள்வோம். நாம் ஏற்படுத்துவதாக எண்ணமிடும் ஸ்டோரில் 40, 50 கூலியாளர் குடும்பங்களை வாங்கும்படி தூண்டுவதாகவும் வைத்துக்கொள்வோம். எல்லா வியாபாரமும் ரொக்கமானபடியாலும் அதனால் அதிகச்சரக்குகள் சேகரிக்க வேண்டியதில்லையாகையாலும் நமக்கு வேண்டிய மூலதனமெல்லாம் 30, 40 ரூபாய்களுள் அடங்கும். அரிசிமுதலிய நிலவரமான சரக்குக்ள் தினம், தினம் மொத்த வியாபாரியினிடமிருந்து வரவழைத்துக் கொள்ளலாம். (ஏனென்றால் உற்பத்தி ஸ்தானத்திலிருந்தே வரவழைப்பதைப்பற்றி இப்பொழுதே ஏற்பாடு செய்வது சாத்தியமாகாது) நமது கொள்விலைக்குமேல் ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா இலாபம் வைத்தால் சாதாரண சில்லரைக் கடைக்காரனைவிட நமது விலை மிக சரசமாகத்தானிருக்கும். தவிர நமது சரக்குகள் கடைச்சரக்கைவிட நன்றாகவுமிருக்கும். அத்துடன் நமது அளவு முதலியன சமுசயத்திற்கிடமில்லாமலுமிருக்கும். இந்த ஒரு அணா இலாபத்தில் பாதியாவது, மூன்றில் இரண்டு பங்காவது ஸ்டோரின் நிர்வாகச்செலவுகளுக்கு வேண்டியிருக்கும். சுமார் காலணாவை க்ஷேமநிதியாக வைக்கலாம். மிகுதியை வாங்குபவர்களுக்கு போனஸாக (நன்கொடை) கொடுக்கலாம். சுமார் மூன்று மாதத்தில் க்ஷேமநிதி தொகை மூலதனத்திற்குச் சரியாக ஆகிவிடும். பிறகு க்ஷேமநிதிக்கு இவ்வளவு அதிகமாக எடுத்து வைக்காமல் கொஞ்சம் குறைத்துக்கொண்டு போனஸ் (நன்கொடை) பணத்தை அதிகரிக்கலாம். அந்த போனஸ் பணத்தை ஸ்டோரிலேயே மெம்பரால் டிபாஸிட்டாகவைத்து தேக அசௌகர்யம், வேலையில்லாமலிருத்தல் முதலிய அசந்தர்பங்களில் உபயோகித்துக் கொள்ளும்படிக்கு மெம்பருக்குக் கொடுக்கலாம். இங்கிலாந்தில் சில ஸ்டோர் சங்கங்கள் ஒரு பவுனுக்கு 2 ஷில்லிங், 6 பென்ஸ் வீதம் போனஸ்கொடுத்தனவாம். அதாவது ரூபாய் ஒன்றுக்கு சுமார் இரண்டணா வீதமாகிறது. ஷை தொகையில் பாதி, போனஸாகக் கிடைப்பது வெகு சாதாரணம். நம்மிடமுள்ள நன்றாய் வேலை செய்யும் ஒரு ஸ்டோராவது அவ்வளவு அதிகமான போனஸ் கொடுக்கமுடியவில்லை. இதற்கு முக்கிய காரணமென்னவென்றால் சரக்குகள் கவனித்து வாங்கப்படுவதில்லை. வியாபாரத்தில் நன்கு பழக்கமுள்ளவர்களால் வாங்கப்படவில்லை. மேலும் நம்முடைய சுயக்கைத்தொழில்களும் அதிகமாய்க்கிடையா. வேண்டிய சாமான்களையெல்லாம் வெளியிலிருந்தே வாங்கவேண்டியிருக்கின்றது. சாதாரண சில்லரை வியாபாரியைப் போல கோவாபரேடிவ் சங்கங்களும் மொத்த வியாபாரிகளையே சரக்குகளுக்காக நம்பவேண்டியிருக்கிறது. அதிலும் சில்லரை வியாபாரிகளுக்

காவது வியாபார நோக்கங்கள் தெரியும். கோவாபரேடர்களுக்கு அது கூட தெரியாது. ஸ்டோர் சங்கங்கள் இன்னும் விசேஷமான முன்னேற்றங்களை அடையக்கூடும். அப்படி அடையாத குற்றம் அதை நடத்துபவர்களுடையதேயாகும். அவர்களுக்கு வியாபார முறையும் பழக்கமும் அனுபவமும் இல்லாததோடு அவ்விஷயத்தைக் கவனிக்கவும் சாவகாசமற்றவர்களாகவுமிருக்கிறார்கள். சில இனங்களில் நஷ்டமடையக் காரணம் உபயோகமற்ற அல்லது சீக்கிரம் செலவாகமுடியாத சாக்குகளில் பணத்தை முடக்கிவைப்பதே. ஏழைகளின் ஸ்டோர்களை நடத்துவதிலோ இம்மாதிரி கஷ்டங்கள் கிடையா.

சென்ற ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரென்ஸில் சிபார்சு செய்யப்பட்ட சீர்திருத்தம் அனுசரிக்கத் தகுந்தது. அதாவது ஒவ்வொருவருடையதேவைகளையும் எழுதிக்கொடுக்கச் சொல்லி பிறகு எல்லாருடைய தேவைகளையும் சேர்த்து அதற்குத் தக்கபடிச் சாக்குகள் வாங்கி சப்ளை செய்தல். அச்சிபார்சு மாமூலாய் நடந்துகொண்டிருக்கும் ஸ்டோர்களுக்கல்லவென்றாலும் கூடியவரையில் அவர்களும் அனுஷ்டிப்பதில் பயனுண்டு. சங்கமானது மெம்பர்களின் ஏஜண்டாகவிருந்து அவர்களுடைய ஜாபிதாக்களின்படி கொஞ்சம் கமிஷன் கூட்டி தங்களுக்காக ஒன்றும் வாங்காமல் அவரவர்களுக்காக வாங்கிக் கொடுக்கவேண்டும். இதன் சௌகர்யம் என்னவென்றால்: விற்பனையாகாத பயம் கிடையாது. இவ்வேற்பாட்டில் போனஸ் கிடைப்பது மிக அருமையே. என்றாலும் அதிக இலாபம் வைத்து போனஸ் கொடுப்பதற்குப் பதிலாக கொஞ்சம் இலாபம் வைத்து கடைவிலைக்குப் குறைவாக அதிக சௌகர்யம் செய்வது விசேஷமல்லவா? போனஸ் ஏற்பாடு ஆங்கில நாட்டு கோவாபரேடர்களுக்கு முக்கியமாய் சௌகர்யமுள்ளது. இதை சமய சந்தர்ப்பப்படி ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

ஏழைகளின் சௌகர்யத்திற்கென்று ஏற்பட்ட இவ்வியக்கத்தை அலக்ஷியம் செய்த நாம் இனியாவது தாமதிக்காமல் அவர்களுக்காக ஸ்டோர்கள் ஏற்படுத்திக் கொடுத்து நாளடைவில் படிப்பு முதலிய இதர சௌகர்யங்களையும் கற்றுக்கொடுத்து, தேகப் பயிற்சி, விளையாட்டுகள், மனோமுயற்சிகள், வைத்திய விஷயங்கள் முதலிய இதர நன்மைகளையும், அடையும்படி செய்யவேண்டிய விஷயத்தில் காலஹரணம் செய்யக்கூடாது.

---



# மெட்ராஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் (லிமிடெட்)

மேற்படி யூனியன் மஹாசபை மீட்டிங்கு இராயப்பேட்டை வெஸ்லீ கலாசாலையில் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ந் தேதியன்று நடைபெற்றது. யூனியனில் நேராக பங்கெடுத்துள்ளவர்கள் அநேகரும் சங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் ஆஜராயிருந்தார்கள். யூனியனின் பிரஸிடெண்டு ராவ்பகதூர் கே. பி. இராமநாத ஐயரவர்கள், M. A. B. L. L. T. அக்கிராசனம் வகித்தார். யூனியனின் 1917—18 வருஷத்திய ரிப்போர்ட்டை ஸ்டாண்டிங் கமிட்டிக்காக யூனியனின் காரியதரிசிகளில் ஒருவர் ஸ்ரீமான் வி. வெங்கிடசுப்பய்யா அவர்கள் வாசித்தார். இந்த ரிபோர்ட்டு அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று சேலம் டிஸ்ரிக்ட் அர்பன் பாங்கின் காரியதரிசி ஸ்ரீமான் T. ஆதிநாராயண செட்டியாரவர்கள் பிரரேபணை செய்ய, ஈரோடு அர்பன் பாங்கின் பிரஸிடெண்டு ஸ்ரீமான் S. T. வெங்கட்டராம ஐய்யர் B. A. B. L. ஆமோதிக்க ரிப்போர்ட்டு எல்லோராலும் ஆங்கீகாரஞ் செய்யப்பட்டது. ரிப்போர்ட்டு பின்வருமாறு:—

## 1917-18 வருத்திய ரிப்போர்ட்.

1918-ம் வருஷம் ஜூன்மீ 30-ம் தேதியுடன் முடியும் கோவாபரேடிவ் வருஷத்தில் யூனியன் செய்த வேலையைப்பற்றிய ரிப்போர்ட்டை மஹா சபையார் முன் சமர்ப்பிக்கிறோம். அவ்வருஷம் முடிந்து சுமார் 10-மாதமாகி புது வருஷ முடிவாக இன்னும் இரண்டுமாதமே இருக்கும் இச்சமயத்தில் ரிப்போர்ட்டை சமர்ப்பிப்பது விசித்திரமாகத்தானிருக்கும் ஆனால் ப்ரொவின்ஷியல் கான்பரன்ஸ் நடக்கும் காலத்தில்தான்ஜெனரல் பாடி மீட்டிங்கு நடக்கக் கூடுமாகையாலும் கிறிஸ்துமஸ் காலமே கான்பரன்சுக்கு அனுகூலமென்று காணப்பட்டபடியாலும் பங்குக்காரர்களுக்கு ரிபோர்ட்டு அனுப்ப கால தாமதமாகவேண்டியதாயிற்று. என்றாலும் பொதுக்கூட்டத்தார் அனுமதி கொடுத்தால் இனிமேல் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்திற்குள் அது நிர்வாக சபையில் அங்கீகாரமான உடன் புல்லெடினில் பிரசுரிக்கப்பட ஏற்பாடு செய்யப்படும்.

2. ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள்:—23-12-1917-ல் நடந்த மஹா சபை மீடிங்கில் திவான்பகதூர் எல். ஏ. கோவிந்தராகவய்யர், மிஸ்டர் டி. நடேசய்யர், கனம் மிஸ்டர் வி. எஸ், சீனிவாச சாஸ்திரியார் ஆகிய இவர்கள் நீங்கலாக அப்பொழுது நிர்வாகசபையிலிருந்தவர்களும் பிரஸிடெண்டும் சிகரிடேரிகளும் மறுபடியும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். நீங்கின

வர்களுக்குப் பதிலாக மிஸ்டர் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார், கே. பார்த்தசாரதி அய்யங்கார். எம். வெங்கட்டரங்கய்யா, ஏ. சூர்ய நாராயண மூர்த்தி, வி. கிருஷ்ணமேனன் ஆகிய இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். செல்லபள்ளி குமார இராஜா அவர்கள் வைஸ் பிரஸிடெண்டு உத்தியோகத்தை இராஜீனுமா கொடுத்தபின்பேரில் ஸ்ரீமான் சி. என். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் M. A. L. T. அவ்வுத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டார். அவ்வளவு தீவிர கோவாபரேடரும் செல்வாக்குமுள்ள குமாரராஜா அவர்கள் விலகினதைப்பற்றி கமிட்டியார் தம்முடைய அனுதாபத்தை இச்சந்தர்ப்பத்தில் வெளியிடுகிறார்கள். அதே மீட்டிங்கில் பைலாவில் ஒரு சீர்திருத்தம் செய்யப்பட்டது. அஃது என்னவென்றால் நிர்வாக சபையார் யூனியன் நிர்வாகம் முழுமையையும் அந்நிர்வாக சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு இதர மெம்பர்களோடு சேர்ந்து பிரஸிடெண்டு, வைஸ் பிரஸிடெண்டு, செகரிடேரிகள் உள்பட ஆகும் ஸ்டாண்டிங் கமிட்டியின் (Standing Committee) பொறுப்பில் விடலாம் என்பதே. 1918-ம் வருஷத்திற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட அவ்விரு மெம்பர்கள் ஸ்ரீமான் டி. வி. வெங்கட்டராம சாஸ்திரியார், ஸ்ரீமான் எஸ். சத்யமூர்த்தி.

3. பங்குகளும் மெம்பர்களும் :—வருஷ ஆரம்பத்தில் 351 பங்குகள் எடுத்துக்கொண்டிருந்த 75 மெம்பர்களும் 394 பங்குகள் எடுத்துக்கொண்டிருந்த 195 சங்கங்களு மிருந்தன. இவ்வருஷத்தில் இரண்டு பங்குகள் எடுத்துக்கொண்ட இரண்டு மெம்பர்களும் 20 பங்குகள் எடுத்துக்கொண்ட 12 சங்கங்களும் சேர்ந்து மொத்த மெம்பர் 282-ம் பங்குகள் 767-ம் ஆயிற்று. வருஷம் முடிய வசூலான பங்குத்தொகை ரூ. 2,454-11-6. சென்ற கோவாபரேடிவ் வருஷக்கடைசியில் 2718 சங்கங்களுக்கு குறையாமல் இவ்விராஜதானியில் ரிஜிஸ்டராகி யிருந்தும் அவைகளுள் 12-ல் ஒரு பங்குகூட இந்த யூனியனில் மெம்பர்களாகச் சேரவில்லை. கோவாபரேடிவ் டிபார்ட்டுமெண்டாரும் லோக்கல் யூனியன்களும் நமக்காக இவ்விஷயத்தில் பரிந்து சங்கங்களைப் பங்கெடுத்துக்கொள்ளும்படி தூண்டி அடுத்த வருஷக் கணக்கின் இலக்கத்தை நாங்கள் அதிகமாகக் காட்டும்படி உதவிசெய்வார்களென்று நம்புகிறோம்.

4. மீடிங்குகள் :—ஒரு மஹா சபை மீடிங்கும், மூன்று நிர்வாகக் கமிட்டி மீடிங்குகளும், ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி மீடிங்கும் இவ்வருஷம் நடைபெற்றன.—

3. 22-12 1917-ல் நடந்த நிர்வாக ஸபை மீட்டிங்கில் இந்த யூனியனின் நோக்கங்களை விருத்திசெய்யும் விஷயங்களுக்காக செலவு செய்யும்



படி ரூ. 900 பல இனங்களில் தீர்மானிக்கப்பட்டது. புத்தகசாலைக்காக வென்று ரூ. 100 வைக்கப்பட்டது. வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்காக ரூ. 16-4-0 தான் செலவழிக்கப்பட்டதென்றாலும் அடுத்த வருஷத்தில் அதிகப் பணம் செலவாயிற்று. தற்காலம் யூனியன் கீழ்க்கண்ட வெளிநாட்டுப் பத்திரிகைகளை வரவழைக்கின்றது. 1. கோவாபரேடிவ் நியூஸ், 2. ஸ்காட்டிஷ் கோவாபரேடர், 3. ஐரிஷ் ஹோம்ஸ்டெட், 4. இண்டர் நேஷனல் கோவாபரேடிவ் புல்லெடின் 5. ரஷியன் கோவாபரேடர், 6. மில்கேட் மாதாந்தரப் பத்திரிகை. கொடுக்சப்பட்ட நாடுகளில் (Ceded Districts) பிரசார வேலை செய்வதற்காக ரூ. 100 சாங்கிஷன் செய்யப்பட்டது. ஆனால் ப்ளேக், சுரம் முதலிய காரணங்களினால் காலம் அனுகூல மில்லாமற் போனபடியால் அத்தொகையை செலவழிக்க முடியவில்லை. சென்னையிலுள்ள ஏழைச்சங்கங்களின் மேற்பார்வைக்காக ரூ. 100 சாங்கிஷன் செய்யப்பட்டது அப்பொழுது சென்னைக்காக ஒரு சூபர்விசிங் யூனியன் ஏற்படுத்தும் பிரஸ்தாப மிருந்தபடியாலும் அது அமுலுக்கு வாராமையினாலும் அத்தொகையை செலவழிக்க முடியவில்லை. நாணய லேவாதேவி யில்லாத இதரச் சங்கங்களேற்படுத்தவும் அல்லது விவசாய நாணயச் சங்கங்களில் நாணய லேவாதேவி அல்லாத இதர் நடவடிக்கைகள் நடத்தவும் ஏற்பாடுகள்செய்ய ரூ. 200 சாங்கிஷன் செய்யப்பட்டது. நீடாமங்கலத்திலுள்ள, ராய்சாகேப் ஏ. சேதுராமய்யரையும். கலியாணதுர்க்கிலுள்ள மிஸ்டர் என். பீமசேனராவையும், சின்னகட்லவருவிலுள்ள மிஸ்டர் பி. அனுமந்தராவையும் தங்கள் தங்கள் இலாகாவில் இந்த யூனியனுக்காக இவ்வேலையை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது. மிஸ்டர் சேதுராமய்யர் இதற்காக பலவாரங்கள்பாடுபட்டு 7 கிராமச்சங்கங்களில் நாணயலேவாதேவியல்லாத இதர நடவடிக்கைகள் நடத்தும்படியாக ஏற்படுத்தினார். பிளேக் உபத்ரவத்தினால் மிஸ்டர் பீமசேனராவினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அனுமந்தராவிடமிருந்து நமக்கு யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. மிஸ்டர் சேதுராமய்யரின் பிரயாணச்செலவு இதற்காக ரூ. 12-3-0 தான் ஆயிற்று. இவ்வலுவலுக்காக எடுத்துவைத்த தொகையில் இத்தொகை போகபாக்கி செலவாகாமலிருக்கிறது. ஜில்லா கான்பரன்ஸுகள் நடவாத ஜில்லாக்களில், ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸுகள் ஏற்பாடு செய்வதற்காக ரூ. 300 சாங்கிஷன் செய்யப்பட்டது. ஆனால் சில ஜில்லாக்களில் பிரமுகர்களாயிருக்கும் கனவான்களுக்கு இவ்விஷயமாக எழுதியதில் அவர்களிடமிருந்து வந்த பதிலிலிருந்து கான்பரன்ஸுகள் வைக்க ஏற்பாடாகிறதாகத் தெரிந்ததேயல்லாமல் குறிப்பிட்ட உதவி ஒன்றும் நம்மிடமிருந்து கோரப்படவில்லை. ஆகையால் அத்தொகை கூட செலவாகாம லிருக்கிறது.

6. புல்லெடின்.—பிரஸ்தாப வருஷம் முழுவதிலும் புல்லெடின் பத்திரிகை மாதாந்தரமாக பிரசுரமாயிருக்கிறது. இப்பத்திரிகையில் அநேக குறைகளிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். வங்காளம், பம்பாய் பத்திரிகைகளைப் பார்க்கிலும் விஷயங்களிலும் புத்தக அமைப்பிலும் மட்டமாகத்தான் இருக்கிறது. சுயமான வியாசங்கள் மிக்க அபூர்வம். சரியான காலங்களிலும் வெளிவருவதில்லை. தமிழ், தெலுங்கு புல்லடின்கள் இங்கிலீஷைவிட ரஸக் குறைவாகத்தானிருக்கின்றன. இத்தகைய பத்திரிகைகள் சம்பாதிக்கக் கூடியவும் சம்பாதிக்க வேண்டியவுமாகிய விளம்பரங்கள் கிடையாது. ஏராளமான சந்தாபாக்கியிலிருக்கிறது. இக்குறைகளின் ஜாபிதாவில் இன்னும் சிலகூடச் சேர்க்கமுடியும். நிர்வாகக் கமிட்டியார் செய்யாவிட்டாலும் ஸ்டாண்டிங் கமிட்டியாராவது விஷயங்களை சீக்கிரமாக தீரவிசாரித்து குறைகளை நிவர்த்திப்பார்களென்று நம்புகிறோம். ஆனால் சில சங்கடங்களிருப்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சொல்வது பொருத்தமாகும். தகுதியான வியாசங்கள் கிடைப்பது அருமை என்னும் விஷயம் புதிதல்ல. இவ்விஷயமாய் தகுந்த யோசனைகள் கிடைத்தால் யூனியன் சபையார் மிக்க நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்வார்கள். தவிர கோவாபரேடர்கள் கூட புல்லடின் இருப்பதை மறந்து விட்டார்கள்போ லிருக்கிறது. ஸ்டாண்டிங் கமிட்டியார் இவ்வருஷம் வேண்டிய சாதனங்களைச் செய்வார்கள். கோவாபரேடர்கள் எல்லாரும் இதில் கொஞ்சம் பொறுப்பும் ஊக்கமும் காட்டினாலன்றி சீர்திருத்தம் விசேஷமாயிருக்காது. சரியான காலத்தில் பத்திரிகை வெளிவராத காரணம் அச்சாபீஸின் குறையே பாதிப்பங்குக்கு மேலிருக்கிறது. இக்குறை எந்த அச்சாபீஸிலும் நிகழுமாகையால் நாம் சொந்தத்தில் அச்சாபீஸ் வைக்கும் விஷயம் தீவிரமாய் கவனிக்கப்பட வேண்டும். நல்லவேளையாய் சண்டையும் தீர்ந்து விட்டது. ஒவ்வொரு பாஷை புல்லெடினையும் கவனிக்க தனிக்கமிட்டிகள் நியமனமாவதும் கோவாபரேஷனில் சம்பந்த மில்லாமலும் ஆனால் இனிமையாகவும் வியாசங்கள் கிடைத்தால்புல்லெடினில் பிரசுரிக்கலாம்என்னும் தீர்மானமும் ஒருவாறு பத்திரிகையை அதிகக்கவர்ச்சியுள்ளதாகச் செய்யலாம். அநேக சங்கங்கள்பத்திரிகைகளை வரவழைக்கிறதில்லை. சென்ற கோவாபரேடிவ் வருஷக்கடைசியில் 1580 சங்கங்கள் தமிழ் ஜில்லாக்களிலும் 857சங்கங்கள் தெலுங்கு ஜில்லாக்களிலும் இருந்தன. ஆனால் அவைகளுள் முறையே 1050-ம், 569-ம் தான் சந்தாதார்களா யிருக்கின்றன. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள், லோகல் யூனியன்கள் இவர்களின் உதவியைக் கொண்டு இதர சங்கங்களையும் சமீபத்தில் சந்தாதாராகச் சேர்க்கலாம் என்று நம்புகிறோம் பாக்கியை வசூலிக்க பிரத்தியேகமான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.



7. டிவிடெண்டு.—சென்ற மகாசபை மீட்டிங்கில் 21-வது பைலாவிற்கிணங்க 1916 ஜூன் மீ 30.தேதியுடன் முடியும் 6 மாதங்களுக்கு 100-க்கு 3¼ வீதம் டிவிடெண்டு கொடுக்கலா மென்றும் 1916-17 வருஷத்திற்கு தணிக்கை உத்திரவு வந்தபிறகு அவ்வருஷத்திற்கும் அதே மாதிரி டிவிடெண்டு கொடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது அதை அனுசரித்து ரூ. 12-3-0 பங்குதார்களின் கணக்கில் சேர்க்கப்பட்டது. 1916-17 வருஷத்திற்கு தணிக்கை உத்தரவு வராமையினால் டிவிடெண்டு மேற்சொன்னவாறு பட்வாடா செய்வற்கில்லை. ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு இது விஷயமாக பலதடவை முறையிட்டிருந்தும் இப்ரொவின்ஷியல் இயக்கத்திற்கு இன்னும் தணிக்கை உத்தரவு கிடைக்காமலிருப்பது ஆச்சர்யமான விஷயந்தான்.

8. செல்வநிலை.—கையிருப்பு ரூ. 551-15-5. ஐ. ச்சேர்த்து இவ்வருஷ வருமானம் ரூ. 3,035-13-8. இதில். ரூ. 5,835-7-0. புல்லெடின் சந்தா (நிலுவையும், பிரஸ்தாப வருஷ சந்தாவும் சேர்ந்து) பிரத்தியேக முயற்சியினால் ரூ. 1,300 திருவல்லிக்கேணி அர்பன்கோவாபரேடிவ் சொஸைடி யாருக்காக பாக்கியில் வசூல் செய்திருக்கிறோம். இன்னும் ஏராளமான பாக்கிகளிருக்கின்றன. ஏற்கனவே சொன்னபடி அவைகளை வசூலிக்கத் தனிப் பிரயத்தினங்கள் நடக்கின்றன. சென்ற கோவாபரேடிவ் கான்பரன்ஸுக்காக வசூலான தொகை ரூ. 836. செலவு ரூ. 671-ம்சில்லரையும் போகபாக்கி யிருப்பு ரூ. 164-ம் சில்லரையும். புல்லெடினுக்காக சம்பளச்செலவு வாடகையுள்பட ரூ. 5,062செலவாகி யிருக்கின்றது. வருஷக்கடைசியில் பிக்சட் டிபாஸிட்டாக, மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கிலும், ஸௌத்கனரா டிஸ்ட்ரிக்ட் பாங்கிலும் சேர்த்து ரூ. 2,800ம், கர்ரண்டு அக்கௌண்டிலும், ஸேவிங்ஸ் அக்கௌண்டிலும் இந்தியன் பாங்கில் சுமார் ரூ. 1,890 யூனியன் கணக்கில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப வருஷத்தில் இன்னொரு ரூ. 1,000 பிக்ஸட் டிபாஸிட்டாக மாற்றப்பட்டிருக்கிறது. இத்தொகைகளில் ஏற்கனவே சொன்னபடி ரூ. 2,454 பங்குப் பணங்களாகவும் பாக்கித்தொகை யூனியனுடைய இதர வரும்படியுமாக விருக்கிறது.

கடைசியாக ரிஜிஸ்ட்ராரும் அஸிஸ்டெண்டு ரஜிஸ்ட்ரார்களும் செய்து கொண்டுவந்திருக்கும் உபகாரங்களுக்காக மனப்பூர்வமான வந்தனமளிப்பதுடன் யூனியன் மெம்பர்கள் அப்போதப்போது செய்து வந்த உபகாரங்களுக்கும் நன்றி பாராட்டுகிறோம். முக்கியமாய் மிஸ்டர் சிவராவ், ஆனந்தராவ் இவ்விருவரும் புல்லெடினுக்கு அப்போதப்போது வியாசங்கள் அனுப்பி உபகரித்ததை நன்றியறிதலுடன் சொல்லாமலிருக்க முடியவில்லை.

பிரஸ்தாப வருஷத்தில் உத்தியோகம் வகிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கனவான்களின் பெயர்கள் பின்வருமாறு.

பிரஸிடெண்டு ராவ்பகதூர் கே. பி. இராமனுதய்யர் அவர்கள், எம். ஏ. பி. எல். எல். டி.

வைஸ் பிரஸிடெண்டு.—மிஸ்டர், வி. என். கிருஷ்ணசாமி அய்யர் எம். ஏ. எல். டி.

செகரிடேரிகள்.—மிஸ்டர் வி. வெங்கடசுப்பய்யா, பி. ஏ. மிஸ்டர் கே. பார்த்தசாரதி ஐயங்கார். பி.ஏ.

நிர்வாகசபை மெம்பர்கள்.—

1. மிஸ்டர். ஏ. சூரியநாராயணமூர்த்தி, சாட்ர்பூர்.
2. ,, எம். வெங்கடரங்கய்யா, எம். ஏ., விஜயநகரம்.
3. கனம் திவான் பகதூர் எம். இராமசந்திரராவு, எல்லூர்.
4. மிஸ்டர். யு. வெங்கடப்பய்யா, பி. ஏ. பி. எல்., தெனுலி.
5. ,, கே. வி. ராகவாசாரியார், பி. ஏ. பி. எல்., நெல்லூர்.
6. ,, ஜே. கிருஷ்ணமூர்த்தி ராவ், பி. ஏ. பி. எல்., கடப்பா.
7. ,, எம். நாராயணராவ், பி. ஏ., பெனுகொண்டா.
8. ,, எம். எஸ். சேஷாசல அய்யர், திருவண்ணுமலை.
9. ,, ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், பி. ஏ., பி. எல், திருக்கோயிலூர்.
10. ராய், சாஹேப். ஏ. சேதுராம அய்யர், நீடாமங்கலம்.
11. மிஸ்டர், டி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், பி.ஏ., பி. எல்., தஞ்சாவூர்.
12. ராவ்பகதூர், வை. நாராயணராவ், திருச்சிணுப்பள்ளி.
13. ராய் சாஹேப், கே. ராமஸ்வாமி அய்யர். பி., ஏ. பி. எல்., மதுரை
14. மிஸ்டர் ஆர். ஆனந்தராவ், வடமலேபுரம்.
15. ,, என். கிருஷ்ணசாமி ராவ், பாளையங்கோட்டை.
16. ,, டி. ஆதிநாராயண செட்டியார், பார்-அட் லா, சேலம்.
17. ,, கே. சேஷகிரிராவ், கம்பயநல்லூர்.
18. ,, எஸ். டி. வெங்கட்ராமய்யர்., பி. ஏ., பி. எல்., ஈரோடு.
19. ,, சின்ன ரங்கய்ய கௌண்டர், கம்பளியம்பட்டி.
20. ,, சிவராவ், புத்தூர்.
21. ,, எம். ஆனந்தராவ்,. பி. ஏ,. பி. எல்.
22. ,, வி. கிருஷ்ண மேனன், கள்ளிக்கோட்டை.
23. ,, ஒ. எம். வெங்கடநாத அய்யங்கார், உத்திரமேரூர்.
24. ,, பி. இராமசந்திரசாஸ்திரி, காஞ்சீபுரம்.
25. ,, ராவ் சாஹேப், வி. அருளய்ய நாயுடுகாரு, கௌச்சேரி.



26. மிஸ்டர் டி. ஆர். வெங்கட்டருமசாஸ்திரி, பி. ஏ, பி. எல். மதராஸ்.
27. ,, எஸ். சத்தியமூர்த்தி, பி. ஏ. பி. எல்., மதராஸ்.
28. ,, வி. வி. ரங்கஸாமி அய்யங்கார், பி. ஏ., மதராஸ்.

நிர்வாக சபையார் ஸ்ரீமான், டி. ஆர். வெங்கட்டருமசாஸ்திரியாரை ஸ்ரீமான், எஸ். சத்தியமூர்த்தியையும் ஸ்டாண்டிங் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். மற்ற மெம்பர்கள் அதாவது பிரஸிடெண்டு, வைஸ் பிரஸிடெண்டு, செகரிடேரிகள் இவர்களும் தங்கள் வேலையுடன்கூட ஸ்டாண்டிங் கமிட்டியிலும் இருக்கிறார்கள்.

பிறகு மீட்டிங்கு மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. ப்ரோவின்ஷியல் கான்பரன்ஸ் முடிந்தவுடன் மீட்டிங்கு கூடிற்று. புல்லடினை விருத்தி செய்வதைப்பற்றி சில பிரஸ்தாபங்கள் நடந்தபிறகு அச்சியந்திரசாலை ஏற்படுத்த வேண்டிய முக்கியமாண விஷயத்தைப்பற்றி தேவையான ஏற்பாடுகளும் யுக்திகளும் செலவு முதலியனவும் தயாரித்து நிர்வாக கமிட்டியாருக்குள் சீக்கிரம் அனுப்பப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பிரசார வேலைக்காக சென்ற வருஷத்தில் எடுத்து வைத்திருந்ததொகையில் பாக்கியிருப்பதை இவ்வருஷம் செலவு செய்யும்படி சாங்க்ஷன் செய்யப்பட்டது.

---

## சென்னை மாகாண ஏழாவது கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

சென்னை மாகாண ஏழாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ் வழக்கம்போல் சென்ற கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் கூடியிருக்க வேண்டும். ஆனல் அச்சமயம் சென்னையில், பிளேக், இன்புளுயன்ஸா முதலிய கொடிய நோய்களின் பயமிருந்தால் அச்சமயம் கான்பரென்ஸ் நடைபெறவில்லை.ஈஸ்டர் விடுமுறைநாட்களில் கான்பரன்ஸ்நடத்துவதாக தீர்மானஞ் செய்த பிரகாரம் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18, 19 தேதிகளில் இக்கான்பரென்ஸ் நடந்தேறியது. இந்திய ஊழியச்சங்கத்தாரும் வெஸ்லீ காலேஜ் அதிகாரிகளும் தங்கள் தங்களுடைய கட்டடங்களைக் கொடுத்துதவியதால் டெலிகேட்டுகள் தங்கியிருக்கவும் கான்பரன்ஸ் நடைபெறவும் இடம் சௌகர்யமாக அமைந்தது. டெலிகேட்டுகளுக்கு அலைச்சலும் கஷ்டமும் குறைவுபட்டதுடன் பணச்செலவும் குறைந்தது.

மெட்ராஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனின் மஹா சபை மீட்டிங்கின் நடவடிக்கைகளில் ஆஜராயிருப்பதற்கென்று டெலிகேட்டுகளில் அநேகர் முன்னமேயே வந்திருந்தார்கள். மத்தியானம் 1 மணிக்கு டெலிகேட்டுகளெல்லாம் விஷய ஆலோசனைக் கமிட்டியைத் தெரிந்தெடுத்தார். பிரரேபணைகளில் சில விஷய ஆலோசனைக் கமிட்டியாரால் கவனிக்கப்பட்டன.

கான்பரன்ஸின் நடவடிக்கைகள் முழுவதும் மாலை 3 மணிக்கு ஆரம்பமாயின. கான்பரன்ஸின் அக்கிராசனர் கனம் மிஸ்டர். எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் அட்வகேட் ஜெனரல் வந்து ஆஸனத்திலமர்ந்தார். அச்சமயம் வந்திருந்தவர்களில் சிலர். மிஸ்டர் F. R. ஹெமிங்வே ஐ. ஸி. எஸ். கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார், சென்னை இராஜதானியின் கோவாபரேடீவ் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் எல்லோரும் திருவாங்கூர், கொச்சின், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார்கள்; ராவ்பகதூர், வி. கோவிந்தன், பிஷரிஸ் (மீன்) டிபார்ட்டுமெண்டு, மிஸ்டர், வி. ஸி. ரெங்கசாமி ஐயங்கார் மெட்ருஸ் சென்டிரல் அர்பன்பாங்கு, மிஸ்டர் எஸ் வீரராகவாச்சாரியார் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிஸ் சொஸைடி கௌரவக் காரியதரிசி, மிஸ்டர். T. ஆதிநாராயண செட்டியார் பார் அட்லா சேலம்ஜில்லா அர்பன் பாங்கின் பிரஸிடெண்டு, மிஸ்டர். ஸி. என். கிருஷ்ணசாமி ஐயர் எம். ஏ.; எல். டி. கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கின் காரியதரிசி, மிஸ்டர். பி. நாகபூஷணம் பந்துலு, மிஸ்டர் வி. வெங்கடாசாரியார், காஞ்சீபுரம், மிஸ்டர், கே. ஜி வெங்கடசுப்பய்யர் கவர்ன்மெண்டு பிளீடர் சேலம். மிஸ்டர், ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார், கோயமுத்தூர், சுந்தரேஸ சாஸ்திரியார், புதுக்கோட்டை மிஸ்டர் ஆர் நரஸிம்ஹ ஐயங்கார் மதுரை, மிஸ்டர் ஒ. விஸ்வநாதராவ் நெல்லூர், மிஸ்டர். கே. வி. ராகவாச்சாரியார் நெல்லூர், மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி ஐயர் சித்தூர், மிஸ்டர் சுந்தரராவ் கம்பயனல்லூர். மிஸ்டர். P. R. கிருஷ்ணமாச்சாரியார் செங்கற்பட்டு, மிஸ்டர் ஒ. எம். வெங்கடநாத ஐயங்கார் உத்தரமேரூர் மிஸ்டர் எம். எஸ். சேஷாஜல ஐயர் திருவண்ணாமலை. மிஸ்டர் K. இலட்சுமணராவ் கடப்பை, மிஸ்டர். எஸ். சத்தியமூர்த்தி, மிஸ்டர். டி. வி. கோபாலசாமி முதலியார், கே. வி. சேஷ ஐயங்கார், மிஸ்டர். கே. பார்த்தசாரதி ஐயங்கார்,

இம்மாகாணக் கான்பரன்ஸை நடத்திவரும் சென்னை புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனின் அக்கிராசனர் ராவ்பகதூர் கே. பி. இராமநாத ஐயரவர்கள் டெலிகேட்டுகளுக்கு நல்வரவு கூறி வரவேற்றார். டெலிகேட்டுகளை வரவேற்றுப் பேசுகையில் அவர் பின் வருமாறுச் சொன்னார்.



இவ்வருஷத்திய கான்பரன்ஸ் வெகு தாமதமாகக் கூடுகின்றது. கிறிஸ்மஸ் காலத்தில் சென்னையில் இன்புளுயன்ஸா இருந்தபடியால் கான்பரன்ஸ் அச்சமயம் கூட்டமுடியவில்லை. ஈஸ்டர் விடுமுறை நாட்கள் வரும் வரைக்கும் கான்பரன்ஸ்கூடும் தேதியை மாற்றிவைக்க நேர்ந்தது.

சற்று முன் வாசிக்கப்பட்ட யூனியனின்ரிப்போர்ட்டினால் புல்லெடீன் பத்திரிகையை நடத்துவது எவ்வளவு கஷ்டமாக இருக்கின்றதென்பது உங்களுக் கெடுத்துக் கூறப்பட்டது. தவிரவும் பத்திரிகைகளில் அனுபவமுள்ளவர்களுக்குபுல்லெடீனில்விளம்பரங்கள் பிரசுரஞ் செய்யப்பட்டால் எவ்வளவு இலாபம் கிடைக்குமென்பதும் தெரிந்த விஷயம். புல்லெடீன் பத்திரிகையின் செல்வாக்கு அதிகரிக்குமானால் யூனியனின் இலாபகாரமும் அதிகரிக்கும். பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்படும் வியாஸங்கள் தகுந்தனவா யிருக்குமாகில் சந்தாதார்கள் அதிகாரிக்கக் கூடுமென்று சிலர் சொல்லக்கூடும். புல்லெடீன் பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுபவர்கள் தான் ஏராளமாகத் தேவையா யிருக்கிறார்கள். கூட்டுறவைப் பற்றிய எழுதுவது சாமான்ய விஷயமல்ல.

சில பேர்தான் கூட்டுறவைப் பற்றி சரியான வியாஸங்கள் எழுதக்கூடும். கூட்டுறவைப்பற்றி எழுதுவதற்கு அவ்விஷயமாக படித்திருக்க வேண்டும். தவிரவும்இயக்கத்தில் அனுபவமும் பழக்கமும்உள்ளவராயிருத்தல் வேண்டும். இவ்வளவு அம்சங்களும் பொருந்தியிருந்தால்தான் கூட்டுறவைப்பற்றிய விஷயங்கள் ஒருவர் எழுதக்கூடும். இத்தகைய மனிதர்கள் அகப்படுவது வெகுப் பிரயாஸையாக இருக்கின்றது. தவிர கூட்டுறவு இயக்கத்தின்நோக்கத்தையும்பொருந்திச் சொல்லவேண்டி யிருக்கின்றது. கவர்ன்மெண்டாரையும் திருப்தி செய்ய வேண்டியது அவசியமாக இருக்கின்றது. இவையெல்லாம் கூறியதின் நோக்கம் புல்லெடீன் பத்திரிகையின் குறைகளுக்கெல்லாம் ஒருவித மன்னிப்பாக இருக்கட்டுமென்றே. ஆனால் இனிமேலாவது இவர்கள் விஷயங்களைச் சரிவர கவனித்துச் சீர்திருத்தவேண்டும். உண்மை என்னவோ புல்லெடீன் பத்திரிகை திருப்திகரமாக இல்லை யென்பதுதான்.

இப்பொழுது ஸ்தாபனஞ் செய்யப்பட்டுள்ள சங்கங்களெல்லாம் கூட்டுறவு நோக்கம் முழுவதையும் கையாளுவதாக ஏற்படவில்லை. உதாரணமாக ஒரு கட்டடச் சங்கத்தில் ஒரு ரஸ்தா போடுவதற்கு ஒரு நிலத்துண்டு வேண்டி யிருக்கிறதென்றால் அந்நிலத்துக் குடையவர் அந்நிலத்தைக் கொடுக்க மறுத்து விடுகிறார். கவர்ன்மெண்டாரிடமிருந்து அதிக தொகை வரும் வரைக்கும் அந்நிலத்தை விற்க அவன் இஷ்டப்படுவதில்லை, நம்முடைய சுயகாரியத்தையே மேலனதாகக் கொண்டிருத்தல் கூட்டுறவல்ல. பத்து பேர்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவுக் சங்கத்தை

ஸ்தாபனஞ் செய்துவிடுதல் வெகு எளிதான காரியமே. ஆனால் பொது நன்மையை உத்தேசித்து நம்முடைய சுயநன்மையில் சிறிது குறைத்துக் கொள்ளவேண்டும். இதுவே கூட்டுறவாகும். தங்களுடைய சுயகாரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதற்காக வென்று கூட்டுறவும் சங்கங்களில் சிலர் சேர்ந்துள்ள திருஸ்டாந்தங்களிருக்கின்றன. சங்கங்களின் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளுவதில் மெம்பர்களாக அவருக்கு யோக்கியதையுண்டா? கூட்டுறவு நோக்கத்தையொட்டி அவர் நடப்பாராவென்று தெரிந்துகொண்டே மெம்பராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறும்படியாக ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்.

பிறகு ஸ்ரீமான் K. B. இராமநாத ஐயரவர்கள் ஸ்ரீமான், எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ள, கரகோஷத்தினிடையே அவர் ஆசனத்திலமர்ந்தார்.

கான்பரன்ஸிற்கு வரக்கூடாமையை வருந்தியும் கான்பரன்ஸ் இனிது நடைபெறவேண்டுமென்று விரும்பியும் வந்த பல கடிதங்கள் படிக்கப்பட்டன. பிறகு அக்கிராசனர் தம்முடைய உபந்நியாசத்தைச் செய்தார் அஃது பின்வருமாறு:—

அக்கிராசனர் உபந்நியாசம்

சென்னை மாகாண ஏழாவது கூட்டுறவு மகாநாடு சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கலாசாலையில் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18ந் தேதி பிற்பகல் 1 மணிக்குக் கூடியது. பல ஜில்லாக்களி லிருந்தும் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். மகாநாட்டின் தலைவரான கனம் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் தம் முன்னுரைப் பிரசங்கத்தில் பின்வருமாறு பேசினார்:—

கனவான்களே!

இச்சமயம் நீங்கள் என்னைத் தலைவராகத் தெரிந்தெடுத்திருப்பதனால் எனக்குச் செய்த மரியாதைக்காக நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். ஆயினும் எனக்குமுன் தலைமை வகித்தவர்கள் இத்துறையில் மிக்க அனுபவமும் தேர்ச்சியு முள்ளவர்களாதலின் நான் இந்த ஸ்தானத்திற்கு எங்ஙனம் தகுதி யுடையவனாவேனென நினைத்தபோது எனக்குண்டான சந்தோஷஞ் சிறிது குறைந்து விட்டது. ஆதலின் நான் நீங்கள் சொல்வதைக் கேட்டுக் கற்க வந்திருக்கிறேனே யொழிய உங்களுக்கு ஆலோசனை சொல்லவாவது போதிக்கவாவது வரவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி ரிஜிஸ்ட்ரார் அனுப்பியுள்ள 1917-18-ம் வருஷத்திய ரிப்போர்ட்டு பல விதங்களில் முன்னேற்றத்தைக் காட்டுவதாயிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிலைமையை



அடைந்ததற்கு இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தாரின் உழைப்பு காரணமாயிருப்பதைப்போலவே மிஸ்டர் ஹெமிங்வேயும் அவர் கீழுள்ள உத்தியோகஸ்தர்களும் கூட்டுறவு விஷயத்தில் கொண்டுள்ள ஊக்கமும் காரணமா யிராநின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு இலாகாவுக்கும் அந்நியோந்நியமான சம்பந்த மேற்பட்டிருத்தல் மிக்க திருப்தியை உண்டுபண்ணுகிறது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் மிக்க சந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றன. பிரஸ்தாப வருஷத்தில் ஆறு சென்ட்ரல் பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. இப்பொழுது மொத்தத்தில் 19 சென்ட்ரல் பாங்குகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இதற்குமுன் யோசிக்கப்பட்டிருந்த பாங்குகளுள் சில இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேற்பார்வை செய்யும் யூனியன்கள் 18 புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேற்பார்வை செய்யும் யூனியன்களின் மொத்தத் தொகை இப்பொழுது 700. மேற்பார்வை செய்யும் வேலை மிகவும் இன்றி யமையாதது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஏதேனு மொரு மேற்பார்வை யூனியனுக்கு அடங்கியிருத்தல் வேண்டும். இதற்கு முன் வருஷம் 1758 சங்கங்களே மேற்பார்வை யூனியன்களுக்குக் கீழ் இருந்திருக்க, பிரஸ்தாப வருஷத்தில் 2644 சங்கங்களுள் 2415 சங்கங்கள் மேற்பார்வை யூனியன்களின் கீழ் இருக்கின்றன. 515 சங்கங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர்களின் தொகை 1,63,121 லிருந்து 1,91,041 ஆக உயர்ந்திருக்கிறது. இவ்வருஷ முடிவில் சங்கங்களின் மூலதனம் 235 லக்ஷம் ரூபாயெனத் தெரிகிறது. இதற்கு முன் வருஷம் 205 லக்ஷம் ரூபாயே மூலதனமாகவிருந்தது. வசூலான மூலதனம் இதற்கு முன்வருஷம் 2049 லக்ஷமாக இருந்திருக்க இவ்வருஷம் 2613 லக்ஷமாகஇருக்கிறது. விவசாயக் கூட்டுறவுச்சங்கங்களிலும் பிறவற்றிலும் பங்கு மூலதனம் திருப்திகரமாக அதிகரித்திருக்கிறது. விற்பனை செய்வதற்காகவும் வாங்குவதற்காகவும் விவசாயக்கூட்டுறவுச் சங்கங்களும் பிறவும் அதிகமாக ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் 18 நகரபண்டகசாலைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு முன்னரே ஏற்படுத்தப்பட்டிருந்த பண்டகசாலைகளுள் சில நஷ்டமடைந்து இப்பொழுது எடுத்து விடப்பட்டன. பரஹம்பூர், பெத்தாபுரம், பொன்னூர், காஞ்சீபுரம் முதலிய இடங்களில் நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் கவனிக்கத் தக்கது. நூலிழைகளின் விலை அதிகரித்ததன் பயனாக நெசவுத்தொழில் வேலைக்காரர் பலர் பரஹம்பூரிலிருந்து கல்கத்தாவுக்குப் போய்விடுவதாகத் தீர்மானித் திருந்தனர். அவர்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்காகவே அங்கே கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முன்

னரே கல்கத்தாவுக்குப் போனவர்களும் இச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் பர்ஹம்புரத்திற்கு திரும்பி வந்து விட்டார்கள். கூட்டுறவின் பயன் இதனாலேயே நன்கு விளங்குவதாகும்.

கூட்டுறவு விஷயத்தில் உலகத்தின் மற்றப் பாகங்களில் காணப்படும் ஊக்கம் இம்மாகாணத்திற் காணப்படாவிடினும், யுத்தத்தினால் கூட்டுறவு வேலை தடைப்படா திருத்தல் பாராட்டத் தக்கது. பணங் கொடுத்துதவும் சங்கங்கள் வழக்கம்போலவே கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டியில் பணங் கொடுத்து வந்தமையால், சங்க அங்கத்தினர்கள் முன்போலவே கஷ்ட மின்றிக் கடன் வாங்கிவந்தார்கள்.

ஆயினும் சென்னை சென்ட்ரல் அர்பன்பாங்கு முன்னிருந்த அதே நிலைமையில் இன்னும் இருப்பதாகத் தெரிகிறது. அதை ஒரு தொகுதியாகச் சேர்த்ததால் அதிக அபிவிருத்தி ஏற்பட வில்லை. புதிதாக ஏற்பட்ட பங்குகளைச் சங்கங்கள் போதுமானபடி எடுக்கவில்லை. ஆனாலும் இந்த பாங்கு ஒரு பூரணமான ஐக்கிய நாணயக்களஞ்சியமாக வேண்டுமென்ற சகல மெம்பர்களினுடையவும் நோக்கம். விரைவில் பூர்த்தியாகு மென்று நான் உறுதியாய் நம்புகிறேன். இதன் எதிர்காலம் இதுவரை யிருந்தது போலவே சிறப்பாயிருக்குமென்று நான் நம்புகிறேன். இதன் காரியசித்திகளுக்கு ஸர். வி. தேசிகாசாரியரே காரணரென்பதை நாம் அனைவரும் அறிவோம். அவர் வேலைகள் பாராட்டத்தக்கன.

அநேக சங்கங்களில் கடன்கள் பத்து வருஷத்துக்குக் கொடுக்கபட்டிருக்கின்றன வென்று தெரிகிறது. இந்த நீண்ட வாயிதாவை மிஸ்டர் ஹெமிங்வே அங்கீகாரம் செய்யவில்லை. நானும் அவரைப் போலவே அபிப்பிராயப்படுகின்றேன். அது கடன் வாங்குவோரைக் கெடுத்துவிடுகிற தென்றும் பணம் சங்கத்திற்கும் மெம்பர்களுக்கும் அதிகமாக உபயோகப்படுவதில் பாதகம் உண்டாகிறதென்றும் அவர் சொல்லுகிறார். அது நியாயமானது. கடன்காரர்களிடமிருந்து அதிகமானபணம் வரவேண்டியிருப்பது ஒரு பெருங் குறையாகும். வரவேண்டிய மற்றப் பணங்களும் ஒரு கோர்ட் டிக்ரி வசூலாவதுபோல வசூலாய் வருகின்றன. டிக்கிரி விரைவில் கிடைத்துவிடும். ஆனால் அதற்குரிய பணம் விரைவில் கிடைப்பதில்லை. இது யாரும் அறிந்த விஷயம். அவற்றைத் தீர்வைப் பாக்கிகளை வசூலிப்பது போலவே வசூலிக்க நேரிடலாம். கொடுக்க வேண்டியவர்கள் கிரமமாகப் பணங்களைக் கொடுத்தால்தான் பாங்கிகளுக்கும் சங்கங்களுக்கும் செல்வாக்கு ஏற்படும். இதில் மேலதிகாரிகள் கண்டிப்பா யிருக்கவேண்டுவது அவசியம்.

இந்த மாகாணத்திலும், இந்தியாவின் மற்றப்பாகங்களிலும் சென்ற 15 வருஷங்களுக்குள் ஐக்கிய நாணய முயற்சி நன்கு விருத்தியாயிருக்



கிறது. இது பாராட்டத்தக்கது. ஏனென்றால் பொதுவாக ஐக்கியத்தில்தான் இந்தியாவின் எதிர்காலம் பொறுத்திருக்கிறது. . அஸ்திவாரம் சித்தமாய்விட்டது. மற்ற வேலைகளும் ஏற்பாடாய்விட்டன. இனி உண்மையான கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட மார்க்கம் உண்டு.

இந்த மாகாணத்தில் எல்லா வகுப்பாரும் ஐக்கிய நாணய முயற்சியில் சம்பந்தப்பட்டு விட்டார்கள். 1917 18-ம் வருஷத்தில் சுமார் 1500 பஞ்சமமெம்பர்கள் அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். 25 அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சமெம்பர்களைக் கொண்ட சங்கங்கள் 202 தான் இருந்தன. இப்பொழுது 160 சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் பஞ்சமர்களைமட்டும் கொண்ட சங்கங்கள் முன் வருஷத்தில் 15 தான் இருந்தன. இப்பொழுதோ, 43 சங்கங்கள் இருக்கின்றன. அநேக சங்கங்களில் பஞ்சம மெம்பர்கள் தலையிட்டு நல்ல வேலை செய்து வருகிறார்கள். முனிசிபல் தோட்டிகளுக்காகத் திருவண்ணமலை, கரூர், காஞ்சிபுரம், மிலிப்பட்டணம், பரளக்குடி முதலிய இடங்களில் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டை, திருப்பதி, பாலகாடு முதலிய இடங்களிலும் இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்த யோசனை நடந்து வருகிறது. தென்கன்னடம் புத்தூரில் பஞ்சமர்களுக்காக ஒரு சிறிய பண்டசாலை ஏற்பட்டிருக்கிறது. வாலிப கிறிஸ்துவ சங்கத்தாரின் நன் முயற்சியால் கிறிஸ்தவர்களுக்காகவும் பஞ்சமர்களுக்காகவும் 37 சங்கங்கள் ஏற்பட்டன. சென்னையில் ஏழை ஜனங்களுக்காக ஏற்பட்டுள்ள சங்கங்களின் வேலைகளைச் சென்னையிலுள்ள ஸோஷியல் சர்விஸ் லீக் என்னும் ஜன ஊழியச் சங்கத்தார் மேற்பார்வை பார்த்துவந்தனர். செம்படவர்களுக்காக 12 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று தவிர மற்றவையெல்லாம் மலையாளக்கரையில் உள்ளவை. கம்பம் பகுதியிலுள்ள கள்ளர் குடியேற்றத்திற்காக ஒரு பிரத்தியேக சங்கமும், படகர் ஜாதியார்களுக்காக 14 புதிய சங்கங்களும் எற்பட்டிருக்கின்றன. தாழ்ந்த வகுப்பாருக்குள்ளும் முன்னேற்றமடையாத வகுப்பாருக்குள்ளும், ஐக்கிய உணர்ச்சி பரவுதல் மிகவும் நல்ல விஷயமாகும். அதனால் அநேக நன்மைகள் எற்படும். தாழ்ந்த வகுப்பார்களை அவர்களின் கஷ்ட நிலைமையிலிருந்து உயர்த்துவதற்கு மிகவும் சரியான உபாயம் அவர்களை இந்த ஐக்கிய முயற்சியில் அதிகமாகக் கொண்டுவந்து சேர்த்தலேயாகும். இதுவரை வந்த கணக்குகளால் ஜாதி வித்தியாசங்களும் மற்ற உணர்ச்சிகளும் ஜனங்களிடம் அதிகமாக வேலை செய்ய வில்லையென்று விளங்குகிறது. பஞ்சமர்களும் மற்ற உயர்ந்த வகுப்பாரும் சேர்ந்து மெம்பர்களா யிருக்கிற சங்கங்களையேதான் நான் விரும்புகிறேன். மேலே சொன்ன 160 சங்கங்களில் அநேகம் அத்தகைய சங்கங்களே. பஞ்சமர்களே மெம்பர்களாயிருக்கிற சங்கங்களாலும் பாதகமில்லை. அவற்று

லும் ஜாதித் துவேஷம் ஏற்படாது. பிராமணர் பிராமணரல்லாதார் பஞ்சமர் இவர்களுக்குள் நிகழும் மூலாதாரமான ஒற்றுமை உணர்ச்சி இந்தச் சங்கங்களில், எவ்வித ஜாதி உணர்ச்சியையும் உண்டு பண்ணாது. ஜாதிக்கொள்கை இந்துஜன சமூகத்தின் அஸ்திவாரமாக இப்பொழுது இருக்கவில்லை. இப்பொழுது வேறுவிதமான அஸ்திவாரங்களில் ஜனசமூகம் பொறுத்து நிற்கிறது.

கட்டடச் சங்கங்கள் அதிகமாக அபிவிர்த்தி ஏற்படவில்லை. கடன் வாங்குவதைப் பொறுத்து நிற்கும்வரை அது அப்படித்தான் இருக்கும். 7வட்டி வீதமும் 8 வட்டி வீதமும் கடன்வாங்கி வேலை செய்வதென்றால் அந்தச் சங்கத்துக்கு லாபம் ஏற்படுவது கஷ்டம். இந்த வழியில் சரியான அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்றால்;இராஜாங்கத்தாரிடமிருந்தாவது, பணக்காரர்களான பரோபகாரிகளிடமிருந்தாவது குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கவேண்டும். ஏழைகளுக்கும் தாழ்ந்த மத்திய வகுப்பாருக்கும் வீடுகட்டிக் கொடுக்கும் விஷயம் மிகவும் முக்கியமானது. சென்னை நகரமே அதற்குத்தக்க உதாரணமா யிருக்கிறது. அது உடனே முடிவு செய்ய வேண்டிய விஷயம். தஞ்சாவூரில் இந்தக் கஷ்டம் மிகுதியாயிருக்கிறது. ஆனால் எல்லாப் பட்டணங்களிலுமே வீட்டு விஷயம் மிகவும் கஷ்டமாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. விலையும் மிகுதியாய் வருகிறது. இடமும் கிடைப்பதில்லை. தற்கால நிலைமையில் கொடுக்கக்கூடிய பணத்தைவிட அதிகமான பணம் வாடகைக்காகப் போய் விடுகிறது. அதனால், சுகாதாரக் கேடுகளும் பெருகி வருகின்றன. வசிப்பதற்குச் சகாயமும் தகுதியுமான கட்டடங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்த வட்டியில்பணம் கிடைக்கும்படியும் ஏற்பாடு செய்ய வேண்டும். முனிசிப்பல் கவுன்ஸிலர்களும், ஐக்கிய முயற்சியில் சேர்ந்த தலைவர்களும் ஜமீன்தார்களும் ஐக்கிய நாணயச் சங்க இலாகா அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து வேலை செய்தால் இதை ஒருவாறு திருப்தியாக முடிவு செய்யலாம்.

உணவுப் பொருள்கள் கிடைப்பது தற்காலத்தில் கஷ்டமாயிருக்கிறது. விலைவாசிகளும் ஏறிப்போயிருக்கின்றன. ஒரு பெரிய மத்திய பண்டசாலை நாட்டுப்புறங்களுக் கொன்றும் நகர்புறங்களுக் கொன்றுமாக ஏற்படுத்தினால் இக்கஷ்டங்கள் அநேகமாய் நீங்கும். இரண்டு பண்டசாலைகளும் ஐக்கிய சங்கங்களுக்குச் சாமன்களைக் கொடுக்க வேண்டும். அந்தச் சங்கங்கள் தங்கள் மெம்பர்களுக்கு அவற்றைக் கொடுக்க வேண்டும். இந்த ஏற்பாட்டில் கஷ்டம் இருக்கலாம். ஆனால் கஷ்டங்களை யெல்லாம் நாம் மேற்கொள்ள வேண்டும். ஷை சங்கங்கள் சாமான்களை மெம்பர்களின் வீட்டு வாசல்களில் கொண்டு போய்ச் சேர்க்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஏற்பாடு மிகவும் பயனுள்ளதாகும். இதனால் ஏழைகளுக்கு மிகுந்த நன்மை யேற்படும்.



இந்தச் சங்கங்களின் மெம்பர்கள், விவசாயிகளானாலும், யாரானாலும் லேவாதேவிக்காரர்களின் அநியாயமான வட்டிக்குப் பணம் வாங்காமல் அற்ப வட்டிக்குப் பணம் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இது லாபமான காரியம்தான். ஆனால் இதன் மெம்பர்கள் அன்னியர்களிடமிருந்து வாங்காமல் சங்கத்திலிருந்து மட்டுமோ கடன் வாங்குகிறார்கள்? இது நமக்கு நிச்சயமாகத் தெரியாது. குறைந்த வட்டி விகிதத்தால் இவர்களிடம் செட்டுக் குணம் ஏற்பட்டிருக்கிறதா? சாவுகாரின் வட்டி விகிதத்திற்கும், சங்கத்தின் வட்டி விகிதத்திற்கும் உள்ள வித்தியாசமான லாபம் விவசாயிகளின் கையில் போய்ச் சேருகிறதா? சாவகாரின் பையில் போய்ச் சேருகிறதா?

ஜனங்கள் சிக்கனமாக விருப்பது கிடையாதென்றும், அவர்களுடைய ஏழ்மைத்தனமே அதிகமாகி வருகிறதென்றும் பொது ஜனங்களுக்குள் ஒரு பொது அபிப்பிராய மிருந்து வருகிறது. இப்போது கேள்வி யென்ன வென்றால், கூட்டுறவு இயக்கத்தால், விவசாயிகளின் ஏழ்மை நிலைமை அது பரவிய வரையில் குறைக்கப்பட் டிருக்கிறதா வென்பதாகும். அது விஷயமாக கூட்டுறவு இயக்கத்தை நடத்துபவர்களுக்குத் தெரியும். கூட்டுறவுச் சங்கங்களினால், ஜனங்களுக்கு எவ்வளவு பிரயோஜனம் உண்டாகி யிருக்கிற தென்பதை கவர்ன்மெண்டின் ரிபோர்ட்டிலேனும், அல்லது மாகாணக் கூட்டுறவுச் சங்கத்துப் பத்திரிகையிலேனும் வெளியிட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனம் திருப்திகரமாயில்லை, இவைகளின் மெம்பர்களால் செலுத்தடும் தொகை நூற்றுக்குப் பத்துவீதம் மிகுந்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களை ஜனங்கள் ஆதரிக்கவேண்டும். சிக்கனம் இந்தியாவிற் குரித்தானது. அதை வெகுகாலம் வரையில் இம்மாகாணவாசிகள் அனுஷ்டித்து வந்தார்கள். இப்போது அது இல்லாமலிருக்கிறது. சிக்கனத்தை இனியாகிலும் ஜனங்கள் அனுஷ்டிக்கவேண்டும்.

இம்மாகாணத்தில் கோர்ட்டில் வழக்குக்குச் செல்லுவது திருப்திகரமாகக் குறையவில்லை. இனிமேல் வழக்கிடுபவர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் மத்தியஸ்தர்கள் முன்பு தங்கள் வழக்குகளைக் கொண்டுபோகத் தூண்டப்பட வேண்டும். கோர்ட்டில் நீதிபதிகள் இரு கட்சியினர்களையும் திருப்திசெய்ய முடியாது. அப்படியே மத்தியஸ்தர்களும் இரண்டு கட்சியார்களையும் திருப்தி செய்ய முடியாது. நீதிபதிகளின் தீர்ப்பு எப்போதும் சரியான தீர்ப்பாக விருப்பதில்லை. இதை நாம் ஏற்றுக் கொள்ளும்போது மத்தியஸ்தர்களின் தீர்ப்பை ஏன் ஒத்துக்கொள்ளக் கூடாது? கூட்டுறவுச் சங்கத்தார்கள் தாங்களே அறியவேண்டும். கோர்டுகளுக்கு வழ்க்குகளைக் கொண்டுபோய்க் கஷ்டப்படுவதைக் காட்டிலும் அவர்கள் மத்தியஸ்தர்களுடைய தீர்ப்பை அங்கீகரிக்கலாம்.

பிறகு இச்சங்கங்களால் விவசாயிகளுக்குள், குடி எவ்வளவு தூரம் குறைந்திருக்கிற தென்பதை நாம் கவனிக்க வேண்டும். இன்னும் பல கஷ்டங்கள் கூட்டுறவு நாணயச் சங்கங்களாலும், கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை பார்க்கும் யூனியன்களாலும் நீக்கிக்கொள்ளலாம். இந்த யூனியன்களைப்பற்றிக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவரும் நல்லவிதமான அபிப்பிராயப் பட்டிருக்கிறார்.

சென்ற வருஷம் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி யடைந்திருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன்.

நாளடைவில் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டு கிராமக் கோர்ட்டுக்களும் சீர்திருத்தம் பெறும். மிஸ்டர், பாடிஸன் முயற்சியால் தாழ்ந்த வகுப்பினர் நலம் பெறுவார்களென்று நான் நிச்சயமாய் நம்புகின்றேன். கைத்தொழில் விருத்தி, பொருள் விருத்தி முதலிய முன்னேற்றத்திற்குரிய நாள் சமீபித்துவிட்டது. கூட்டுறவுக்காரர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும், அரிய வேலை செய்து தேசத்தின் பொருளாதார நிலைமை, ஆசாரநிலைமை இவைகளை உயர்த்தும் தலைவர்களாக முன்வருவார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை. ஆசாரச் சீர் திருத்தக்காரராகிய நான் இக்கூட்டுறவு முயற்சி எல்லாவகையிலும் வெற்றி பெற வேண்டு மென்று விரும்புகின்றேன்.

அக்கிராசனர் பிரசங்கம் முடிந்தவுடன் அடியிற்கண்ட சங்கங்களின் ரிப்போர்ட்டுகள் வாசிக்கப்பட்டன.

(1) திருவண்ணாமலை சக்கிலியர் ஐக்கிய சங்கம்.

(2) ஹாப்பதலைக் கூட்டுறவுச் சங்கம்.

(3) திருக்கோவிலூர் அர்பன் சொஸைடி.

(4) கம்பிளியம்பட்டி கோவாபரேடிவ் சொஸைடி.

(5) நரியங்காடு கோவாபரேடிவ் சொஸைடி.

(6) கீழச்சேரி கோவாபரேடிவ் யூனியன்.

இந்த ரிப்போர்ட்டுகளின் சுருக்கம் கடைசியில் (அனுபந்தம் A.) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பிறகு கான்பரன்ஸ்களின் நடவடிக்கைகள் அன்றைய தினத்திற்கு முடிவடைந்தன.

## இரண்டாம் நாள் நடவடிக்கைகள்.

ஏப்பிரல் மாதம் 19-ந் தேதி கான்பரென்ஸ் மீண்டும் கூடிற்று அப்போது அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.



## தீர்மானங்கள்.

### குறுகிய காலத்தவணைக் கடன்கள்.

அடியிற்கண்ட தீர்மானம் கோயமுத்தூர் V. C. வெங்கிடரமண ஐயங்காரவர்களால் பிரரேபணை செய்யப்பட்டது.

1. (a) பிரைமெரி சங்கங்களில் கொடுக்கப்படும் குறுகிய காலத் தவணைக் கடன்கள் (Short term loans) சரியான காரியங்களுக்கு உபயோகப்படும்படிச் செய்வதற்காக மேற்படி கடன்களை அடியிற்கண்ட காரணங்களுக்கு உபயோகித்தல் உசிதமென்பதாக இக்கான்பரென்ஸ் தீர்மானஞ் செய்கின்றது.

1. விவசாயக் காரியங்களுக்கு,

2. கிஸ்து செலுத்துவதற்கு,

3. அறுவடை மாசூலைக் கட்டிவைத்து விலை உயர்ந்தபின் விற்க வேண்டி நேரிடும்போது நேரும் செலவுகளைக் கவனிக்க,

4. மெம்பர்கள் கையில் பணமில்லாத சமயத்தில், விவசாயம் அல்லது குடும்பத்திற் கவசியமான சாமான்கள் சௌகர்யமான விலையில் கிடைப்பதாயிருந்தால், அத்தகைய சமயங்களில் உபயோகிக்க.

5. குடும்ப சம்பந்தமாய் நேரும் அவசர அல்லது எதிர்பாராத செலவுகளைக் கவனிக்க.

(b) கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்களா யிருப்பவர்கள் கூட்டுறவு சங்கத்தைத் தவிர இதர இடத்தில் கடன் பட்டிருப்பது சரியல்ல வென்பதை இக்கான்பரென்ஸ் ஒப்புக்கொள்ளுகின்றது. முன் கடன் தீர்ப்பதற்தாக ஒரு மெம்பருக்கு நீண்ட காலக்கடன் கொடுக்கப்படும் போது அம்மெம்பர் வாங்கக்கூடிய மொத்தக்கடன் தொகையில், அம்மெம்பருக்கு அவசியமாயிருக்கக்கூடிய குறுகிய காலத்தவணைக் கடன் மொத்தத்தைக் கழித்துக்கொள்ளவேண்டியது அவசியமென்றும், இதே விதமாகத்தான் பிரைமெரி சங்கம் கடன் வாங்கும்போதும், சங்கத்தின் மெம்பர்களுக்கு அவசியமாயிருக்கக்கூடிய குறுகிய காலத்தவணைக்கடன் தொகையின் அளவைக் கழித்துக்கொண்டுதான் சங்கம் கடன் பெற வேண்டுமென்றும் இக்கான்பரென்ஸ் தீர்மானஞ் செய்கின்றது.

(c) குறுகிய காலத்தவணைக் கடன்கள் கொடுக்கும் சௌகர்யம் சங்கங்களுக்கு ஏற்படும் பொருட்டு பிரைமெரி சங்கங்களில் யோக்கியதையுள்ள சங்கங்களுக்கு "கியாஷ் கிரிடிட்" கொடுக்கும்படியாக சென்ட்ரல் பாங்குகள் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

இத்தீர்மானத்தை பிரரேபணை செய்கையில், மெம்பர்கள் தாங்கள் வாங்கக்கூடிய கடன் அளவில் நீண்ட காலக்கடன்கள் வாங்கிவிடுவதால் குறுகிய காலத்தவணைக் கடன்களுக்கு சாவுகார்களிடத்தும், மார்வாரிகளிடத்தும் செல்லுகின்றனரென்றும் குறுகிய காலத்தவணைக் கடன்கள் சங்கங்கள் $12\frac{1}{2}$ வட்டிக்குக் கொடுத்தாலும் மெம்பர்கள் இதையே சிலாக்யமெனக் கொள்ளுவார்களென்றும் ஸ்ரீமான் வி. வி. வெங்கடரமண ஐயங்காரவர்கள் சொன்னார்.

நெல்லூர் ஸ்ரீமான் ஒ. விஸ்வநாதராவ் இத்தீர்மானத்தை ஆமோதிக்க கம்பிளியம்பட்டி ஸ்ரீமான் ரங்கய்ய கௌண்டர் ஆதரித்துப் பேசினார் பிறகு தீர்மானம் எல்லோராலும் அங்கீகாரஞ் செய்யப்பட்டது.

## சரக்குகளை மொத்தமாக வாங்குதல்.

II. 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ந்தேதி யன்றைக்குக் கூடிய கான்பரென்ஸில் தீர்மானஞ் செய்த பிரகாரம், சாமான்களை மொத்தமாக வாங்கும் விஷயத்தில் அதிகமாக ஒன்றுஞ் செய்ய முடியாமற் போனதைப்பற்றி இக்கான்பெரன்ஸ் வருத்தப்படுவதுடன், விதை, எரு, விவசாயக் கருவிகள், உப்பு, சீமை எண்ணெய், துணிவகைராக்களையும், இதர சாமான்களையும் மொத்தமாக வாங்குவதில் ஏற்படுகிற ஏராளமான நன்மைகளை கூட்டுறவினர்கள் கவனிக்கவேண்டுமென்பதாக இக்கான்பரென்ஸ் தற்போதுங் கூறுகின்றது. கிராமச் சங்கங்கள், ஸ்டோர்ஸ் (பண்டகசாலைகள்) சங்கங்களை ஸ்தாபனஞ் செய்ய முயலுவதற்குப் பதிலாக, ஒரு சங்கத்தின் மெம்பர்கள் எல்லோருக்கும் வேண்டியிருக்கும் சாமான்களின் ஜாபிதாவைத் தயார்செய்துகொண்டுமொத்தமாக சாமான்கள் வாங்குவது உசிதமென்பதாக இக்கான்பரென்ஸ் கூறுகின்றது.

இத்தீர்மானம் திருவண்ணாமலை எம். எஸ். சேஷாசல ஐயரவர்களால் பிரரேபணை செய்யப்பட்டது. தீர்மானத்தை பிரரேபணை செய்கையில் சாமான்களை மொத்தமாக வாங்குவதின் பயன்களை எடுத்துச் சொன்னார். தன்னுடைய சங்கம் அம்மாதிரி அநுஷ்டானஞ் செய்ததில் வெளியில் மிளகாய் வீசை ஒன்று ரூ. இரண்டுக்கு வெளியில் விற்கும்போது தங்கள் சங்கம் ரூ. 1-8-0 விற்க முடிந்த தென்றும் கூறினார்.

நெல்லூர் ஸ்ரீமான் K. V. இராகவாச்சாரியார் அவர்கள் இத்தீர்மானத்தை தெலுங்கில் ஆமோதிக்க திருத்துறைப்பூண்டி ஸ்ரீமான் ஜி. வெங்கடரங்காச்சாரியார் தமிழில் ஆதரித்துப் பேசினார். பிறகு தீர்மானம் எல்லோராலும் அங்கீகாரஞ் செய்யப்பட்டது.

## சரக்குகளை மொத்தமாக விற்பனை செய்தல்.

III. ஒரு சங்கத்தின் மெம்பர்கள் எல்லோருடையவும் விளைபொருள்களை ஒன்றாகச் சேர்த்து மொத்தமாக விற்பதில் ஏராளமான நன்மை இருக்கிறதென்பதை இக்கான்பரென்ஸ் மறுபடியும் தற்சமயம் ஞாபகப்படுத்துகின்றது. ஆயினும் விளைபொருள்களை சேர்த்து வைப்பதிலும், விளைபொருள்களை தினுசுவாரியாக பிரிப்பதிலும், இதுபோன்ற கஷ்டங்கள் பல இருப்பதையும் இக்கான்பரென்ஸ் ஒப்புக்கொள்ளுகின்றது.



இத்தீர்மானத்தை ராய் சாஹேப் சேதுராமையரவர்கள் பிரரேபணை செய்தார். பிரரேபணை செய்கையில் பின்வருமாறுச் சொன்னார்.

சங்கங்கள் மொத்தமாக விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யுமாகில் மத்தியில் தரகர்கள் அடையும் இலாபம் முழுவதும் சங்க மெம்பர்களுக்கே கிடைக்கும் இவ்வேற்பாட்டினால் சங்கமும் ஏராளமான இலாபமடையக்கூடும்.

இத்தீர்மானத்தை தெலுங்கில் கடப்பை ஸ்ரீமான் K. இலட்சுமண ராவ் அவர்கள் ஆமோதிக்க தமிழில் கம்பிளியம்பட்டி சின்னரங்கைய கௌண்டர் ஆதரித்துப்பேச தீர்மானம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இத்தீர்மானம் அங்கீகாரமாவதன்முன் மொத்தமாக விற்பனைச் செய்வதில் பல கஷ்டங்களையும் குறித்து ஸ்ரீமான் இராமச்சந்திரராவ் பேசினார்.

இப்படி மொத்தமாக விற்பதிலுள்ள பல நன்மைகளை மிஸ்டர் ஹெமிங்வே எடுத்துக் காட்டினார். இவ்வியாபாரத்தில் ஏற்படும் நன்மைகள் பலவும் சரக்குகளை விற்கும் மெம்பர்களுக்கே செல்லுமென்றும் சங்கங்கள் செய்யும் ஆரம்பச் செலவிற்கு இலாபத்தில் ஒரு சிறு பாகத்தைப் பெறுமென்றும் சொன்னார்.

## விவசாயக் கருவிகளை வாடகைக்கு வாங்குதல்.

IV. விவசாய இலாகாதார் கூறும் பிரயோசனமான நூதன விவசாயக் கருவிகளை சங்க மெம்பர்களின் உபயோகத்திற்காக பரீட்சார்த்தமாய் சங்கங்கள் வாடகைக்கு வாங்க வேண்டுமென்பது இக்கான்பரன்ஸின் யோசனை.

கம்பையனல்லூர் ஸ்ரீமான் வி. பி. சுந்தரராவ் அவர்கள் இத்தீர்மானத்தை பிரரேபணை செய்ய நெல்லூர், கே. இராஜாராவ் அவர்கள் ஆமோதித்துப் பேச வடமலைபுரம் ஸ்ரீமான், ஆர். ஆனந்த்ராவ் அவர்கள் ஆதரித்துப் பேச தீர்மானம் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

## கோவாபரேடீவ் ஸ்டோர்.

V. மொத்தமாக வாங்கி மொத்தமாக விற்கும் (ஹ்ல் ஸேல் ஸ்டோர்) ஸ்டோர் ஒன்று சென்னையில் பரீட்சார்த்தமாக ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கின்றது.

மதுரை ஸ்ரீமான் R. நரசிம்ஹ ஐயங்கா ரவர்கள் இத்தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் தரகர்கள் மத்தியில் வைக்கும் அதிக இலாபம் ஒழிந்துபோகு மென்றும் சென்னையில் இத்தகைய ஸ்டோர் ஒன்று இருக்க வேண்டியது அவசிய மென்றும் சொன்னார். இத்தீர்மானம் சித்தூர், ஸ்ரீமான் V. கிருஷ்ணசாமி ஐயரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. நெல்லூர்,கே. இராஜாராவ் அவர்கள் ஆதரித்துப் பேசினார்.

இத்தகைய ஸ்டோர் சென்னையில் ஸ்தாபனஞ் செய்வதால் பிரத்தியட்ச நன்மை யொன்றும் ஏற்படா தென்பதாக குடிவாடா, ஸ்ரீமான் இராமச்சந்திராவ் சொன்னார். இத்தகைய ஸ்டோர் ஸ்தாபன மாவதால் நன்மை ஏற்படாதென்று சொல்லுவது தகாதென்றும் இத்தகைய ஸ்டோர்கள் ஐரோப்பாவில் அநேகமிருக்கின்றன வென்றும் மிஸ்டர் ஹெமிங்வே சொன்னார்.

பரீட்சார்த்தமாக ஸ்தாபனஞ் செய்யவேண்டு மென்று மட்டும் தீர்மானத்தில் கூறப்படுவதால் இதை ஒப்புக் கொள்ளுவதில் ஆட்சேபனையொன்றுங் கிடையா தென்றும் இது சம்பந்தமான விவரங்கள் பின்னால் கவனித்துக் கொள்ளப்படலா மென்றுஞ் சொன்னார்.

பிறகு தீர்மானம் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இடைவேளைப் போஜனத்திற்காக கான்பரன்ஸ் மாலை மூன்று மணிக்குக் கலைந்தது.

## பிற்பகல் நடவடிக்கைகள்.

கான்பரன்ஸ் மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடிற்று

### இயக்கத்திற்கு கவர்ன்மேண்டார் ஆதரவு.

VI. யுத்தம் முடிந்து போன விஷயமாய் இம்மாகாணத்தின் கூட்டுறவினர்களெல்லோரும் சந்தோஷம் பாராட்டுகின்றனர். நம்முடைய கவர்ன்மெண்டார் வெற்றி பெற்றதை முன்னிட்டு 'கூட்டுறவினர்கள் தங்களுடைய உற்சாகத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். கூட்டுறவு இயக்கத்தால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவற்றையும் அடையும் படியாகக் கவர்ன்மெண்டார் உதவி செய்ய வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

இத்தீர்மானம் அக்கிராசன ரவர்களாலேயே பிரேரேபணை செய்யப்பட்டது.

### லோகல் டிபாசிட்டுகள்.

VII. பிரைமெரி சங்கங்கள் முழுவதும் தங்கள் லேவா தேவிக்கு வேண்டிய பணத்திற்காக சென்டிரல் பாங்குகளையே எதிர்பார்த்திருக்கக்



கூடாதென்றும், பிரை மெரி சங்கங்கள் டிபாசிட்டுகள் சேகரிக்க முயல வேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் வற்புறுத்துகின்றது.

இத்தீர்மானம் ஈரோடு ஸ்ரீமான் எஸ். டி. வெங்கடராம ஐயரவர்களால் பிரேரேபணை செய்யப்பட்டு ஸ்ரீமான் பிரஸன்ன ராகவஐயங்காரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. இத்தீர்மனம் எல்லோராலும் அங்கீகாரஞ் செய்யப்பட்டது.

### பொறுப்பு வரையறுக் கப்பட்ட சங்கங்களின் நிகர இலாபம்.

VIII. பொறுப்பு வரையறுக் கப்பட்ட சங்கங்களின் நிகர இலாபம் செலவழிப்பதன் சம்பந்தமாக தற்காலம் உள்ள விதியைமாற்றும் படியாக கவர்ன்மெண்டாருக்கு ரிஜிஸ்தரார் எழுதவேண்டுமென்றும் இப்போது உள்ள விதிக்குப் பதிலாக அடியிற் கண்ட விதியை ஏற்படுத்திக்கொள்ள அனுமதி வேண்டுமெண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் சிபார்சுசெய்கின்றது.

100க்கு 25க்கு அதிகமாக க்ஷேமநிதிக்குக் கொண்டு போகவேண்டுமென்ற கட்டாயம் இருக்கக்கூடாது· (a) சன்மானம், போனஸ் முதலியவைகள் சங்கத்தின் விதிகளில் உள்ள வாறு பட்வாடா செய்து கொள்ள அனுமதி வேண்டும். (b) பாக்கியுள்ள தொகையை நிர்வாகச் சபையாரும் மகாசபையாரும் தீர்மானிக்கும் யுக்தானுசாரப் படி உபயோகித்துக் கொள்ள அனுமதி வேண்டும். உதாரணமாக, கட்டடநிதி சங்கவேலைக்காரர்களுக்கு பிராவிடெண்டு பண்டு முதலிய கரியங்களுக்குஉபயோகித்தல், மெபர்களுடைய பங்குத் தொகையின்மேல் எக்காரணத்தை முன்னிட்டும் 100க்கு ஒன்பதற் கதிகமான டிவிடெண்டு கொடுக்கப்படக் கூடாது. கோவாபரேடீவ் சட்டத்தின் விதிகளுக்கு முரண்படக்கூடிய விஷயங்களில் பணம் செலவழிக்கப்படும் சமயத்தில் ரிஜிஸ்டரார் தலையிடலாம்.

கோயமுத்தூர் ஸ்ரீமான். வி.என்.கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் M. A. L. T. அவர்களால் இத்தீர்மானம் பிரேரேபணை செய்யப்பட்டு சித்தூர் ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுமி ஐயரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. குடிவாடா ஸ்ரீமான் ஜி. இராமச்சந்திராவ் அவர்களால் ஆதரிக்கப்பட்டது.

பிறகு இத்தீர்மானம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

### கோவாபரேடீவ் வைத்திய சாலைகளின் ஸ்தாபனம்.

நகரங்களில் கூட்டுறவு ஸ்டோர்கள் உள்ள இடங்களிலெல்லாம் மெம்பர்களுக்கு வைத்திய உதவி செய்யவும் மெம்பர்களுக்கு மருந்து பட்வாடா செய்யவும் கூட்டுறவு வைத்தியசாலைகள் ஸ்தாபனஞ் செய்ய

வேண்டுமென்றும் கிராம இலாகாக்களுக்காக நன்ருக நடத்தப்படுகிற லோகல் யூனியன் இவ்விஷயத்தைக் கவனிக்கலாமென்றும் அணைக்கப் பட்ட சங்கங்களின் பொது நன்மை பண்டை இக்காரியங்களுக்குச் செலவழிக்கலா மென்றும் அவசிய மேற்பட்டால் பிரத்தியேக சந்தா வசூல் செய்து கொள்ளலாமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது. இத்தீர்மானம் ஸ்ரீமான் எஸ் சத்ய மூர்த்தி அவர்களால் பிரரேபணை செய்யப்பட்டு ஸ்ரீமான். கே. இராஜாராவ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது,

## கரண்டு டிபாஸிட்டுகளுக்கும் சேவிங்ஸ் டிபாஸிட்டுகளுக்கும் வட்டி விகிதம்.

சென்டிரல் பாங்குகளில் ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படா திருக்கும் வரையில் கர்ரெண்டு டிபாசிட்டுகளுக்கும், சேவிங்ஸ் டிபாசிட்டுகளுக்கும் வட்டி விகிதத்தை நிர்ணயப்பதில் சென்டிரல் பாங்குகளுக்குச் சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அது சம்மந்தமாக ஏற்பட்டுள்ள கவர்ன்மெண்டு உத்தரவு மாற்றப்பட வேண்டுமென்றும் இக்கான்பரென்ஸ் தீர்மானஞ் செய்கின்றது.

இத்தீர்மானம் அக்கிராசன்ரால் பிரரேபணை செய்யப்பட்டது.

## அக்கிராசனரின் முடிவுரை.

இக்கான்பரென்ஸிற்கு அக்கிராசனம் வகிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததால் கூட்டுறவு இயக்கத்தில் இனி ஏராளமான சிரத்தையும் ஊக்கமும் ஏற்படும். இரண்டு நாள் நடந்த நடவடிக்கைகள் முழுவதும் வெகுத்திறமாக நடைபெற்றிருக்கின்றன. செய்யப்பட்ட தீர்மானங்கள் முழுவதும்பிரத்தியட்சபயனைத்தரக்கூடியனவை வகளாகஇருக்கின்றன. இம்மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் பலமாக வேரூன்றி இருக்கின்றது. கிராம வாசிகளுக்குள் கூட்டுறவு இயக்கம் நன்ருகப் பரவிவிட்டதேன்றே சொல்லலாம். கிராமவாசிகள் உத்தியோகங்கள் தேடிக் கொண்டு பட்டணங்களுக்கு அலேந்து செல்லாமல் கிராம விஷயங்களிலேயே அதிக ஊக்கமும் சிரத்தையும் காட்டிவருவது மிகவும் பாராட்டத்தக்கது. கிராமவாசிகள் இவ்வழியில் திரும்பிவருவதால் கிராமங்களின் வாழ்க்கை முன்னிருந்தது போலவே திரும்பக் கூடுமென்று நினைக்கிறேன். மிஸ்டர் ஹெமிங்வே மிகவும் பரோபகார சிந்தையுள்ளவர். கூட்டுறவு இயக்கம் அவர்காலத்தில் அதிகமாக முன்னேற்ற மடையக்கூடும் கூட்டுறவு விஷயங்கள் சிலவற்றில் அவருக்கும் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்களுக்கும் அபிப்பிராய பேதங்களிருந்த போதிலும் அவைகளெல்லாம் சௌகர்யமாகவே முடிவு பெறக்கூடுமென நினைக்கிறேன். கூட்டுறவு இயக்கம் இன்னும் இளமைப் பருவத்தில் இருக்கிற தென்றுச் சொல்ல வேண்டும். நாணயச்சங்கங்கள் தவிர இதர விஷயங்களில் கூட்டுறவு இயக்கம் இன்னும் விர்த்தியடைய வில்லே, நாணயச் சங்கங்கள் தவிர இதர விஷயங்களில் கூட்டுறவு இயக்கம் அதிகரித்தால் தான் நம்மாகாணத்தின் கைத்தொழில் அபிவிர்த்தியும் வியாபார அபிவிர்த்தியும் ஏற்படக்கூடும். கைத்தொழில்களும், வியாபாரமும் விர்த்தியடைந்தால் தான் நாம் தற்கால நிலேயிலிருந்து முன்னேற்ற மடையக்கூடும். கூட்டுறவு ஸ்டோர்கள் ஸ்தாபனஞ் செய்து இந்தியர் ளெல்லோரும் பழக்கப் படுவார்களாளுல் இந்தியர்கள் இதர வியாபாரங்களும், கைத்தொழில்களும் நடத்த சக்தி பெறுவார்கள். கூட்டுறவினுல் மட்டுமே நாம் முன்னேற்ற மடையக்கூடும். ஜனங்கள் குடியினின்று விலகும் படியாக கூட்டுறவு சங்கங்கள் பிரயத்தனப் படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்தவர் களெல்லோரும் சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டும். சிக்கனத்தைப் போன்றது வேறெதுவுங் கிடையாது. சிக்கனத்தைக் கைக்கொண்டால் சகலநன்மைகளேயும் அடையலாம்,



## வந்தன மளித்தல்.

அக்கிராசனருக்கு வந்தன மளிக்கையில் ராவ்பகதுர் K. B. இராமனுத ஐயரவர்கள் பின்வருமாறுச் சொன்னர்.

நம்முடைய கான்பரன்ஸிற்கு அக்கிராசனம் வகித்து விஷயங்களையெல்லாம் இனிதுமுடிவு பெறச் செய்த நம்முடைய அக்கிராசனருக்கு வந்தனமளிக்க எனக்கு நேர்ந்ததில் நான்மிகவும் சந்தோஷங் கொள்ளுகிறேன். ஆரம்பப் பிரசங்கத்தில் அவர் நமக்கு அநேக அரிய விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கிருர். முடிவுரைப் பிரசங்கத்திலும் அநேக அரிய விஷயங்களைக்கூறினர். நான் அவருக்கு யூனியனுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். டெலிகேட்டுகளுக்கு அநேக விதக்குறைகள் நேர்ந்திருக்கக் கூடும் ஆனல் டெலிகேட்டுகள் தங்குவதற்குச் சௌகர்யமாக இந்திய ஊழியச்சங்கத்தார் தம்முடைய கட்டடத்தைக் கொடுத்துதவினர். கான்பரன்ஸின் நடவடிக்கைகளுக்கு வெஸ்லீ காலேஜ் அதிகாரிகள் இக்கட்டடத்தைக் கொடுத்துவினர்கள். இவ்விரு கட்டடங்களும் நமக்குக் கிடைத்தமையால் டெலிகேட்டுகள் தங்கவும் கான்பரன்ஸ் நடைபெறவும் எவ்வித கஷ்டமும் இல்லாமற் போய் விட்டது. இவ்விரு கட்டடங்களின் அதிகாரிகளுக்கும் நம்முடை மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நம்முடைய நடவடிக்கையில் கலந்திருந்து நமக்குப் பல விதத்திலும் உதவிசெய்து வரும் கோவாப ரேடீவ் ரிஜிஸ்தரார் அவர்களுக்கு நம்முடைய அன்பமார்ந்த வந்தனத்தை இச்சமயம் தெரிவித்துக் கொள்ளுகி

றேன். ஆங்கிலேய ரிஜிஸ்தரார் நியமிக்கப் படப்போகிறாரென்கிற வதந்தி வந்த வுடனேயே அவரால் நமக்கு நன்மை ஏற்படுமோ வென்ற பல விதத் தோற்றங்கள் தோன்றின. அவைகளெல்லாம் இப்பொழுது முழுதும் மாறிவிட்டன. நாம் எதிர்பார்த்தற்கு மாறாக நமக்கு அவர்பல விதத்திலும் நன்மை செய்து வருகிறார். அவருடைய உதவியை நாடாமல் நாங்களே சகல காரியங்களையும் நடத்திக் கொள்ளும் சக்தி இன்னும் நமக்கு வந்து விடவில்லை. ஆகையால் அவருடைய அனுபவத்தின் பயனாகச் சொல்லுகிற சிலபுத்தி மதிகளையும் யோசனைகளையும் தடுக்காமல் நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமே.

நம்முடைய நடவடிக்கைகளை கவனித்துச் செல்ல தங்கள்களுடைய சமஸ்தானங்களின் ரிஜிஸ்தரார்களை அனுப்பியுள்ள திருவாங்கூர், கொச்சி புதுக்கோட்டை சமஸ்தான அதிகாரிகளுக்கும் நம்முடைய வந்தனத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இத்துடன் கான்பரன்ஸ் கலைந்தது.

---

# அனுபந்தம் A.

---

## கான்ப்ரன்ஸில் வாசிக்கப்பட்ட ரிபோர்ட்டுகளின் சுருக்கம்.

## திருவண்ணாமலை சக்கிலியர் ஐக்கிய சங்கம்.

இந்த சங்கமானது 20-6-17வல் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலம் 12 மெம்பர்கள் 21 பங்குகளோடு சேர்ந்தார்கள். எங்களுக் காதரவில்லாமல் சாதித்தொழிலான தோல்வேலைகளைக் கைவிட்டுவிட்டுபிழைப்புக்காக சூளையிலும் மரம் வெட்டுவதிலும் கூலிவேலைகள் செய்துவந்தோம். இதில் சூளை சொந்தக்காரர்களான மேஸ்திரிகளிடம் கூலி போதாதிருந்ததால் கடன் வாங்கி எங்களுடைய சொல்ப நிலமும் வீடும் அவர்களிடம் ஈடாயும் நாங்கள் கடனை பைசல் செய்யாமல் வேறு வேலை செய்யவும் முடியாமல் அவர்களிடம் கட்டுப்பட்டும் எங்கள் கடனும் மேலும்மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. இந்தச் சமயத்தில் ஐக்கிய சங்கத்தார் தயவு செய்து எங்களுக்கு சங்கம் வைத்துக் கொள்ளும்படி புத்தி சொன்னார்கள். எங்களுக்கு சாதாரணமாய் இதில் சந்தேகம் ஏற்பட்ட போதிலும் நம்பிக்கை வைத்துக்கொண்டு சிலபேர்மாத்திரமே ஒத்துக்கொண்டோம். எங்கள் நாட்டான்மைதாரரையே அக்கிராசனாதிபதி யாகவும் என்னை காரியதரிசியாகவும் இருக்கும்படி சேர்ந்தவர்கள் இஷ்டப்பட்டார்கள். மாதமாதம் ஒரு கூட்டம் கூடி அப்பப்போது எங்கள் சங்கவிதிகளைப்பற்றியும் நாங்கள் சுத்தமாயும் நல்ல நடத்தையுடனும் இருக்க வேண்டுமென்றும் குடி, வீண்செலவு, பொய் சொல்லுதல் முதலிய கெட்ட குணங்களை விட்டுவிடவேண்டு மென்றும் அப்பப்போது போதிக்கப்பட்டது. தவிர எங்கள் பழையகடன்கள் சுமார் 900 ரூபாய் ஜில்லாபாங்கியிலிருந்து வாங்கி பைசல் செய்யப்பட்டதுடன் அவைகளை மாதாமாதம் கூலியிலிருந்து சொல்ப பகுதிகளாய் அடைத்து விடும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதைக்கண்டு எங்கள் வகுப்பாரில் பலர் சங்கத்தில்சேர இஷ்டப்பட்டார்கள். ஆனால் குடிமுதலிய கெட்ட நடத்தைகளை விட்டாலொழிய சங்கத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டார்களென்பதும் அவர்களுக்கு தெரியும். பிறகு 1918-ம் வருஷம் ஜூன்மீ கடைசியில் 22 மெம்பர்களிருந்தார்கள். எங்களுக்கு போதுமான நிலங்க ளில்லாததால் பயிர்த் தொழில் சாத்தியமில்லை. முன்கடன்களை பைசல் செய்து விட்டபடியால் ஷை கடன்காரர்க ளிடமே மறுபடியும் முன்போல் கூலிவேலை செய்யவும் எங்களுக்கு மனமில்லை. ஆதலால் வெகு நாளாய் மறந்து கைவிட்டிருந்த

செருப்பு, தொண்டான், வார் முதலியது செய்யும் தோல்வேலையைக்கை யாளுவதாய் கூடிபேசி அதற்காக பொதுவில் ரூ. 200 கடன் கேட்டோம். எங்களுக்கு சங்கத்தை யேற்படுத்தி அதை தாங்களே நடத்தி வந்த தாலூக்கா யூனியனார் சிபார்சு செய்து இந்த ரூ. 200-ம் வாங்கிக் கொடுத்ததுடன் நாங்கள் செய்த செருப்புகளையும் வெளிக்கனுப்பி விற்று எங்களுக்கு பட்வாடா செய்து வந்தார்கள். அதில் எங்கள் பாகத்தில் ஜதை 1-க்கு இரண்டணு டிபாஸிட்டாக சங்கத்திலேயே கட்டும்படி செய்தார்கள். தவிர அவ்வருஷத்திலேயே ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் ஹெமிங்வே துரையவர்களின் சிபார்சின்பேரில் 300 ஜதை குரோம் பாதரட்சைகள் சால்ட் டிபார்ட்மெண்டாருக்கு செய்து கொடுத்தோம். அதில் ஜதை 1-க்கு எட்டணு வீதம் கூலி கிடைத்தது. அந்த ஜதைகள் வெகு திருப்திகரமா யிருப்பதாய் ரிவின்யூ போர்ட்டார் நற்சாட்சிப் பத்திரங் கொடுத்திருப்பதுடன் நடைமுதல் வருஷத்திற்கு 6000 ஜதை கொடுக்கும்படி கண்ட்ராக்டும் கொடுத்திருக்கிறார்கள்.

முன்வருஷக் கடைசியில் நாங்கள் கடன் வாங்கியிருந்த தொகை ரூ. 838-ல் அசலுக்கு ரூ. 100 செலுத்தினேம் பாக்கி ரூ. 738 மாத்திரமே கடன் நின்றிருந்தது. ரூ. 130 நாங்கள் டிபாஸிட்டு செய்திருக்கிறோம். இந்த டிபாஸிட்டானது எங்கள் தொழிலில் கூலிபோக நின்ற இலாபத்தில் பாதி. இது 5 வருஷம் வரையில் ஷை தொழிலுக்கு முதலாயிருக்கவேண்டு மென்னும் நோக்கத்துடன் நாங்கள் ஏற்படுத்திக்கொண்டது. வருஷாந்திரம் தொழிலில் கிரமமான கூலிபோக மீதிநிற்கும் இலாபத்தில் பாதியை எங்கள் வேலைக்கேற்றபடி தொழில் முதலுக்காக டிபாஸிட்டாயும் பாதியைஎங்கள்கணக்கு கடன் விவகாரங்களுக்கும் செலுத்தப்படுகிறது தவிர ஒரு சிறியபொது பண்டும் இலாபவிதாசாரம் செய்யும்போது ஏற்படுத்துகிறோம். அதைக் கொண்டுஎங்கள் சிறுவர்களில் சிலரை வெளியூர்களுக் கனுப்பி வேலைக்கற்றுவரும்படி ஏற்படுத்தினேம். இதில் இப்போது ரூ. 79—0—0 இருக்கிறது. எங்கள் கடன்களில் கெடு தவறின கடனே கிடையாது. நாங்கள் வாராவாரம் சரிவர கூலி பெற்று வருவதால் நாங்கள் இப்போது கடன் வாங்குவது கிடையாது.

இவ்வருஷத்தில் 6000 ஜதை செருப்பு செய்ய உத்தரவு கிடைத்தவுடன் எங்களுக்கு இந்த பஞ்சகாலத்தில் கூலிவேலை கிடைத்ததென சந்தோஷமும் இது நிறைவேற ரூ. 18,000 மதிப்புள்ள வேலையானதால் வேண்டியமுதல் தாழ்ந்த ஜாதியாரான எங்களை நம்பி யார் கொடுக்கப்போகிறார்க ளென்றும் இந்த பெரியவேலையை ஏழைகளான நாங்கள் எப்படி ஒருங்குபட்டு செய்யப் போகிறோமெனக் கவலையும் அதிகப்பட்டது. ஆனாலும் யூனியனாருடைய ஆதரவால் ஜில்லா பாங்கியிலிருந்து ரூ. 7,500 கடனுகக் கிடைத்தது.



எங்கள் சங்கத்திலேயே பாக்டரி பிரான்ச் ஒன்று ஏற்படுத்தி அதில் 30 மெம்பர்கள் இப்போது வேலை செய்து வருகிறார்கள். இந்தவேலையில் சேராத இதர மெம்பர்கள் 21 நபர்கள் மாத்திரம். தற்காலம் 3000 ஜதை செருப்புகள் நாங்கள்பட்வாடா செய்துகிரயமும் பெற்றுக்கொண்டோம். இப்போது 100 ஜதை தயாராயிருக்கிறது. இன்னும் 2000 ஜதைகளை நாங்கள் கொடுக்கவேண்டும். ஜில்லா பாங்கி கடனிலும் வட்டியும் அசலுக்கு ரூ. 4000 கொடுத்துவிட்டோம். வாரத்திற்கொருதரம் ஜதை 1-க்கு எட்டணுவீதம் கூலி பட்வாடா செய்து கொள்ளுகிறோம். மொத்தமாய் தோலை வாங்கி ஒரு வாடகை யிடத்தில் வைத்துக்கொண்டு நாங்கள் ஒன்று சேர்ந்து ஓரே யிடத்தில் வேலைசெய்கிறோம். தினம்தினம் செய்யும் ஜதைகளுக்கும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் தோல்களுக்கும் கணக்குவைக்கஒருசூபரின்டெண்டுமாதம் ரூ. 20-ல் வைத்திருக்கிறோம். காரியதரிசியாகிய நான் ஜதைகள் சரியாய் தைக்கப்படுகிறதா வெனப் பார்க்கவும் தோல் முதலிய இதரசாமான்கள் வாங்கவும் இன்னும் வேண்டிய சகல மேற்பார்வையும் செய்வதற்காக நான் மாதம் ரூ. 25 சம்பளம் பெறுகிறேன். எந்தெந்த ஜதைகள் தையல் ஒழுங்கா யில்லாமல் கேவலமாயிருக்கிறதோ அவைகளை கூலியில்லாமல் எடுத்துகொண்டு கன்ட்ராக்டில் சேர்க்காமல் விற்கப்படுகிறது. இந்த வேலை முடிந்தவுடன் எங்களுக்கிருக்கும் சங்க கடன் நிவர்த்தியாகி கொஞ்சம் டிபாஸிட்டும் சேருமென்றும் நடை முதல் வருஷத்தில் இதைப்போன்ற வேலைகளைச் செய்வதற்கு எங்கள் சொந்தமான சொற்ப முதலாவது ஏற்படுமென்றும் எதிர்பாாக்கிறோம்.

நாங்கள் இத்தகைய பலனையடைந்து வருவது நாங்கள் தாழ்ந்த ஜாதியாயிருப்பதும் எங்களிடம் சகலரும் பரிதாபங்கொண்டு உதவி செய்வதினுலுந்தான். எங்கள் நிலைமைக்கு உதவிசெய்ய வேலூர் சால்ட் ஆபீஸ் ஹெட்கிளர்க் ம-௱-௱-ஸ்ரீ P. நடேசய்யர் அவர்கள் ரூ. 50 கால் வட்டிக்கு டிபாஸிட் செய்தார். தவிர ஜில்லா பாங்காரும் யூனியனாரும் உதவிசெய்ய முன் வாராதிருந்தால் நாங்கள் இந்த பஞ்சத்தில் குடும்பம் குடும்பமாய் நசித்துப்போ யிருப்போம். இந்த வேலைக்காகவே வெளியூர்களில் வேலைக்காரராய் பிழைப்பில்லா திருந்தோர் பலர் பாக்டரி பிரான்சில் மெம்பராய் சேர்ந்து வேலைசெய்து வருகிறார்கள்.

எங்களூரில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்டோரில் எங்கள் சங்கத்தையும் சேர்த்து இருப்பதால் எங்கள் கூலியை ரொக்கமாய் வாங்கி கடைகளில் மட்ட திணுசுகளை தப்பு அளவு அளந்து அதிக விலை கொடுக்காமல் கேழ் வரகு, அரிசி, உப்பு, புளி, மிளகாய் முதலிய திணுசுகளை ஒரு மாதத்

திற்கு வேண்டியவளவு மொத்தமாய் வாங்கி பாகித்துக்கொள்வதால் கடையில் வாங்குவதைவிட அதிக நயமாய் கிடைக்கிறது.

எங்கள் மெம்பர்களுக்குள் நேரும் சச்சரவுகளை நாங்கள் கூடி பைசல் செய்கிறோம். எங்கள் தீர்மானத்தை மீறினவர்களை நாங்கள் சங்கத்தில் சேர்ப்பதில்லை. குடிக்கக் கூடாதென்று ஓர் நிபந்தனை ஏற்படுத்தியிருப்பதால் அநேகர் குடியினாலேயே கடன்பட் டிருந்தவர்கள் குடியை விட்டுவிட்டு டிபாஸிட்டு சேர்த்திருக்கிறார்கள்.

கூடிய சீக்கிரம் தோல்வேலை பாக்டரிக்கு ஒரு கட்டடம் கட்டி நிலையான மூல தனத்துடன் கன்ட்ராக்டு வேலை மாத்திரமன்றி இதர வேலைகளும் செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது. நாங்கள் தனியே செருப்பு தைத்து விற்றால் வாங்குபவருக்கும் நம்பிக்கையில்லை. விலையும் குறைவாக ஏற்படுவதால் நாங்கள் உண்மையாய் வேலை செய்யவும் முடிவதில்லை. ஒரு கம்பனியாய் எல்லாருடைய ஆதரவின் பேரிலும் வேலை செய்தால் எங்களுக்கு கவலையின்றி பிழைப்பு நடக்கிறது.

இதுவரையில் எங்களுக்கு பல உதவியும் செய்துவந்த ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் ஹெமிங்வே துரையவர்களுக்கும், ராவ்பஹதூர் ம-ா-ா-ஸ்ரீ வேதாசலய்யர் அவர்களுக்கும் இதர கனவான்களுக்கும் எங்கள் வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

## நீலகிரி ஜில்லா உப்பதலை கோவாப்ரேடிவ் சொசைடி

இந்த சொஸைடி 1916-௵ ஜூலை௴ 31-தேதி ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டு செப்டம்பர் மாதம் 29-தேதி வேலை ஆரம்பிக்கபட்டது. ஆரம்பமான தினத்தில் 26 மெம்பர்கள் 149 பங்குகள் எடுத்துகொண்டார்கள். பங்குதொகை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு வருகிறது 1916-17 வருஷக் கடைசியில் 31 மெம்பர்களால் 182 ரூபாயும் 1917-18 வருஷக் கடைசியில 46 மெம்பர்களால் 386 ரூபாயும் பங்குகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. நாளது தேதியில் 84 மெம்பர்களால் 462 பங்குகளுக்கு 889 ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் அநேக மெம்பர்கள் சேருவதற்கு பிரியப்படுகிறார்கள்.

### டிபாசிட்டுகள்.

நமது சொஸைடியை உள்ளூர் டிபாஸிட்டுகளுடன் நடத்த அதிக பிரியமுள்ளவர்களாய் சொஸைடி ஆரம்பமான மறுமாதம் முதற்கொண்டே ஒவ்வொரு மெம்பர்களிடத்திலிருந்தும் மாதாந்திர டிபாஸிட்டுகளும், பிரவிடெண்டு டிபாஸிட்டுகளும் வசூல் செய்ய ஆரம்பித்



தோம். 1916-17௵ மாகிய முதல் வருஷத்திலேயே மாதாந்திர டிபாஸிட்டு ரூ. 389-ம் பிராவிடெண்டு டிபாஸிட்டு ரூ. 87-ம் மெம்பர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருந்தது. மெம்பர்கள் அல்லாதவர்களிடமிருந்து பிக்ஸட் டிபாஸிட்டு ரூ. 50-ம் மாதாந்திர டிபாஸிட்டு ரூ. 100-ம் வசூல் செய்யப்பட்டிருந்தது. 1917-18 வருஷக் கடைசியில் மெம்பர்களால் மாதாந்திர டிபாஸிட்டு ரூ. 1133-ம் மெம்பர்கள் அல்லாதவர்களால் மாதாந்திர டிபாஸிட்டு ரூ. 296 வசூல் செய்யப்பட்டிருந்தது. மாதாந்திர டிபாஸிட்டுகளெல்லாம் 24 மாதத்திற்கு போடப்பட்டது. ௸ டிபாஸிட்டுகளை காலவதியில் மெம்பர்களுக்கு இலாபத்துடன் வாப்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. நமது அஸிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ரா யிருந்த ம-ா-ா-ஸ்ரீ குன்ஹண்ணிமேனன் அவர்கள் 16 வருஷத்திய பிராவிடெண்டு டிபாஸிட்டு மிகவும் நன்மையானதென்று ௸ டிபாஸிட்டுகளின் விதிகளை சொஸைடிக்கு அனுப்பி அதை ஏற்படுத்திகொள்ள உத்தரவு கொடுத்தபடி ௸ விதிகளை மகாசபையாரால் 1918௵ ஜூன்௴ 7 தேதியில் 2-வது தீர்மானத்தில் அங்கீகரித்து சென்ற டிசம்பர் மாதம் முதற்கொண்டு சில மெம்பர்பள் ௸ டிபாசிட்டுகள் கொடுத்து வருகிறார்கள். இப்படி வசூலாகும் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 88 ஆகிறது. மெம்பர்கள் 44 பேரும் மெம்பர்கள் அல்லாதவர்கள் 11 பேரும் ௸ டிபாஸிட்டுகள் கட்டுகிறார்கள். நாளது தேதியில் மொத்தம் டிபாஸிட்டு வசூலாயிருக்கும் தொகை ரூ. 226. எல்லா மெம்பர்களும் இம்மாதிரி டிபாஸிட்டு செய்ய ஆசைப்படுகிறார்ககள். இம்மாதிரி செய்து வந்தால் இரண்டு அல்லது மூன்று வருஷத்திற்குள் ஜில்லா பாங்கு கடன்களை பூராவும் கட்டிவிட்டு எங்களுடைய சொந்த டிபாஸிட்டுகளினாலேயே சொசைடியை நடத்திவரக் கூடுமென்பதில் சந்தேகமில்லை.

### இதர கடன்.

நமது மெம்பர்களில் அநேகர் முன் கடன்கள் பூராவும் தீர்க்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டபடியால் ஜில்லா பாங்கியிலிருந்து இதற்காக கடன் வாங்கபட்டது. 1916-17 வருஷக் கடைசியில் ஜில்லா பாங்குக்கு கொடுக்கவேண்டியிருந்தது. ரூ. 2,000. 1917-18 வருஷத்தில் ரூ. 2,000 வாங்கப்பட்டது. ௸ வருஷக் கடைசியில் ஜில்லா பாங்குக்கு கொடுக்கவேண்டியிருந்த ரூ. 3,790. நாளது வருஷத்தில் இந்த மாதத்தில் ரூ. 3,000 ஜில்லா பாங்கியிலிருந்து வாங்கப்பட்டு மெம்பர்களுக்கு பட்வாடா செய்யப்பட்டு வருகிறது. ஜில்லா பாங்குக்கு கொடுக்கவேண்டிய அசல், வட்டிகளை வாய்தா தவறாமல் செலுத்தி வந்திருக்கிறது. நாளது தேதியில் 86 கடன்களில் ரூ. 5,885 மெம்பர்களால் வரவேண்டியிருக்கிறது. 50 ரூபாய்க்கு உள்பட்ட கடன்கள்

37-ம் 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயிக்கு உள்பட்ட கடன்கள் 36-ம் 100 ரூபாயிலிருந்து 250 வரைக்குட்பட்ட கடன்கள் 11-ம் 250 ரூபாயிலிருந்து 500 ரூபாயிக்கு உள்பட்ட கடன்கள் 2-ம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| இதில் | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| முன் கடன் தீர்க்க | ... | 1,130 | 0 | 0 |
| பூமி விர்த்திசெய்ய | ... | 3,159 | 0 | 0 |
| மாடு வாங்க | ... | 575 | 0 | 0 |
| வீடு கட்ட | ... | 240 | 0 | 0 |
| குடும்ப செலவுக்கு | ... | 166 | 0 | 0 |
| சுபாசுப காரியங்களுக்கு | ... | 135 | 0 | 0 |
| கன்ட்ராக்ட் வேலைக்கு | ... | 400 | 0 | 0 |
| கிழங்கு விதைக்காக | ... | 80 | 0 | 0 |

நாளது தேதியில் எங்கள் சங்கத்தின் க்ஷேமநிதி ஜில்லா பாங்கியில் கட்டிவைத்திருப்பது ரூ. 174-9-6. ஜில்லா பாங்கியில் ஒரு பங்குக்காக ரூபாய் 100 செலுத்தபட்டிருக்கிறது.

அடிக்கடி பஞ்சாயத்து மீட்டிங்குகள் கூட்டி சங்கத்தின் காரியங்களை ஒழுங்காய் பார்த்து வருகிறோம்.

நமது செகிரிடெரி யாதொரு வெகுமானம் இல்லாமலே கணக்கு வேலைகளை சரியாய் செய்துவருகிறார்.

சங்கத்தின் செலவுகள் எவ்வளவு சுருக்கி செய்யவேண்டுமோ அவ்வளவு செய்யப்பட்டு வருகின்றன.

## கம்புளியம்பட்டி கோவாப்பரேடிவ் சங்கம்.

184 நெ. கம்புளியம்பட்டி சங்கமானது 20-7-09-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு 6-10-1909-ல் வேலை தொடங்கி 10 வருஷ காலமாய் வேலை செய்து வருகிறது.

அதில் முதல் வருஷமாகிய 1909-10 வருஷத்தில் 47 மெம்பர்கள் சேர்க்கப்பட்டு 4690 ரூபாய் லேவா தேவி செய்தது. இந்த சங்கத்தில் ஆரம்பத்திலிருந்து மெம்பர்களுக்கு தவணை தவராமல் கட்ட வேண்டுமென்று போதிக்கப்பட்டு வசூலித்து வரப்பட்டது. ஆனால் சங்கத்தில் மெம்பர்களாய்ச் சேருகிறவர்களுக்கு அப்போது இயக்கங்களில் ஏற்பட்டிருந்த நாட்டுக்கோட்டை செட்டிமார்களிட பாங்குகளில் கடன் வாங்கியும் ஜாமீன் போட்டும் ஏற்பட்ட கஷ்டங்களினால் பாங்கு என்றால் அதில் சேருவதற்கு ஒரு விதமான சந்தேகமும் அப்படி சேர்ந்த பின் ஜாமீன் போடுவதென்றால் பயமும் மிகுந்திருந்தது.



அதன் பிறகு வருஷா வருஷம் மெம்பர்கள் சேரவும் ஜாமீன் வகைறா போடவும் வாங்கின கடனை காலா காலங்களில் வாய்தா பிரகாரம் செலுத்தவும் சங்கம் முன்னேற்ற மடைந்து 30-6-18-ல் சங்கத்தில் இருந்த மெம்பர்கள் 247, மெம்பர்களின் பேரில் நின்றிருந்த கடன்கள் 209-க்கு தொகை ரூ. 11,622. மெம்பர்களில அனேகர் குறுகிய காலக்கடன் பெற்று வருஷக் கடைசிக்குள் தீர்த்து விடுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

மெம்பர்களுக்கு விதை பருத்திக்கொட்டையும் மீன் எருவும் இந்த சங்கம் அணைக்கப்பட்டிருக்கும் விஜயமங்கலம் யூனியனில் மொத்தமாய் தருவித்த 1000 மணங்கு விதை பருத்திக்கொட்டையிலும் மீன் எருவிலும் இந்த சங்கத்தின் மெம்பர்களுக்கும் கொடுத்ததில் அதிக பிரயோஜன மென்று தெரிந்ததோடு மொத்தமாய் வாங்கியதில் விதை பருத்திக்கொட்டை மணங்கு ஒன்றுக்கு ரூ. 0-13-6-க்கு கொடுக்கப்பட்டது. இதரர்கள் அப்போது இதைவிட மட்டமான சரக்கை ரூ. 2-8-0 முதல் ரூ. 3 வரையில் விற்றார்கள்.

குருகிய காலக்கடன்கள் மெம்பர்களுக்கு வரும்படி இல்லாத காலமாகிய ஜனவரி மாதத்தில் கிஸ்து செலுத்தவும் குத்தகை கொடுக்கவும் இதர குடும்ப செலவுகளுக்குமாக 1914 வருஷம் முதல் கடன் கொடுத்து வரும்படி காலமாகிய மே, ஜுன் மாதங்களில் வசூல் செய்து வருஷக் கடைசியில் பாக்கி யில்லாமல் செய்யப்பட்டு வந்தது. 1918, 19 வருஷமாகிய இந்த வருஷத்தில் 15 மெம்பர்கள் புதிதாய் சேர்க்கப்பட்டு மொத்த மெம்பர்கள் நாளது தேதியில் 255, பேர்கள் பங்குத்தொகை 1074 செலுத்தி இருக்கிறார்கள். இவ்வருஷத்தில் 140 கடன்களாக ரூ. 4,567. மெம்பர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் குறுகிய காலக்கடன்கள்98 க்கு ரூ.3,217, நீண்ட காலக்கடன்கள் 42-க்கு ரூ. 1,350. இதில் குறுகிய காலக்கடனை இப்போதே திருப்பிச் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வருஷம் 2 மகா சபை மீட்டிங்குகளும் 38, பஞ்சாயத்து மீட்டிங்குகளும் நடந்தன. இந்த வருஷத்தில் பர்மா அரிசியும், மாட்டுத்தீனி பருத்திக்கொட்டை, விதை பருத்திக்கொட்டை பிண்ணாக்கு, கொள்ளு, மீன் எருவு, இவைகளை யூனியன் மொத்தமாய் வாங்கி சங்கங்களுக்குக் கொடுப்பதாய் இருப்பதால் ஷை சாமான்களை இந்த சங்கத்தின் மெம்பர்களுக்கு தேவையாய் இருக்கிறதென்று யூனியனுக்கு தெரிவித்திருக்கிறோம்.

மொத்தமாய் மெம்பர்கள் சரக்கை விற்பதை இந்த வருஷம் யூனி யனுர் ஆலோசித்துக் கொண்டிருப்பதில் இந்த சங்கத்திலும் மொத்த மாய்ச் சேர்த்து யூனியன் மூலமாய் விற்பனை செய்வதாயிருக்கிறார்கள்.

இப்போது மாட்டுத்தீனிப் பருத்திக்கொட்டை 6,000 மணுவும், பர்மா அரிசி 300 மூட்டையும், யூனியன் மூலமாய் இன்னும் 2, 3 நாளில் வருவதாயிருக்கிறது. செய்டி யூனியனுக்கு மிளகாய் எங்கள் யூனியனி லிருந்து சப்ளை செய்வதாயிருக்கிறோம்.

## கீழச்சேரி கோவாபரேடிவ் யூனியன்.

இந்த யூனியனில் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி தவிர வேறு இதர விஷயங்கள் (Uon-creslits work) நடத்திய விவரங்களை காட்டும் ரிபோ ட்டு பின்வருமாறு பிரஸ்தாப வருஷத்தில் மதறாஸ் செக்ஷன் அ.ரி. அவர் களும் நமது விவசாய டிபார்ட்டுமெண்டு டி. டா. அவர்களும் ஷை யூனி யன் கிராமங்களில் விஜயம் செய்து சொஸைடி மெம்பர்களுக்கு மீன் எருவு (Fish guano) கொளுஞ்சி இவைகளை எருவாக உபயோகிக்கும் நன்மைகளையும் அது உபயோகப்படுத்த வேண்டிய விவரங்களை எடுத் துச் சொன்னதின் பேரில் ஷை யூனியனில் இதுவரையிலும் ஒரு டன் (Fish guano) தலைச்சேரியிலிருந்து வாவழைத்து 2 டெ. கீழ்ச்சேரி 356 எரையாமங்கலம் 16 அழிஞ்சிவாக்கம் 144 எடையர்பாக்கம் 143 கப்பாங்கோட்டூர் இச்சங்கங்களின் மெம்பர்களுக்கு கொடுத்து பயிர்க ளுக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுதவிர ஷை டிபார்மெண் டாரால் ஏற்படுத்தியிருக்கும் கலப்பை (Mnosoon) மெஸடன் முதலிய கலப்பை கொண்டு வந்து டிமான்ஸ்டிரேட்டர் மூலமாக சில நிலங்களில் உழுது அதனுடைய நன்மையை எடுத்து சொல்லி இதனால் அநேக மெம்பர்களுக்கு ஷை கலப்பைகள் உபயோகிக்கவேண்டுமென்று ஊக் கங்கொண்டு சில கலப்பைகளும், சொந்தமாகவே வாங்கப்பட்டு இருக் கிறது. இதுதவிர கம்போடியா பருத்தியை எங்கள் யூனியன் பிரஸி டெண்டு ராய் ஸாஹேப் அருளய்யனுபு அவர்களே வரவழைத்து பரி க்ஷார்த்தமாக 4 ஏகர் தன்னுடைய சொந்த பூமியில் சாகுபடி செய்து காட்டி யூனியனைச் சேர்ந்த சொஸைடி மெம்பர்களுக்கும் போதிக்கப் பட்டு இருக்கிறது. ஷை செடிகள் இப்போது பூத்து காய்க்க ஆரம்பித் திருக்கிறது. அது தவிர அக்கம் பக்கம் சங்க மெம்பர்கள் வந்து பார்த் துக் கொண்டு போயிருக்கிறார்கள். இவ்வருஷத்தில் அநேக சொஸை டிகள் ஷை கம்போடியா விதைக்காக இண்டெண்டு செய்துமிருக்கின்றன.

இவ்வித வேலைகள் விருத்தியடைந்து வருவதற்காக எங்களை தூண்டுதல் செய்த அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் அவர்களுக்கும் அக்ரி கல்சுரல் டிபார்ட்டுமெண்டாருக்கும் எங்களுடைய மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறோம்.



## திருக்கோவிலூர் அர்பன்சொஸைடி.

இச்சங்கம் 1916ம் வருஷம் நவம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 16 மெம்பர்கள் 750 ரூ பங்குத்தொகையாகச் செலுத்தி யிருந்தார்கள். 1917ம் வருஷம் ஜூன்மாதக் கடையில் மெம்பர்களின் தொகை 38க்கு அதிகரித்தது. பங்குத்தொகை ரூ 1696க்கு உயர்ந்தது; இவ்வருஷத்தில் ரூ 6100 வரைக்கும் 40 கடன்கள் பட்வாடா செய்யப் பட்டன. இவ்வருஷத்தில் ரூ 123-11-4 இலாபம் கிடைத்தது.

1917-18 வருஷத்திலும் இதே விதமாக திருப்திகரமாக சங்கம் வேலைநடத்திவந்தது சங்கத்தின் மெம்பர்களின் தொகை 144க்கு உயர்ந் தது. பங்குத் தொகை ரூ 2945க்கு உயர்ந்தது. ரூ 13336 டிபாஸிட்டாக வசூல் செய்யப் பட்டன. சங்கம் 114 கடன்களை படவாடா செய்தது. இக் கடன்மொத்த தொகை ரூ 17193. இவற்றுள் ரூ 9506 "பிரதிப லன் தரக் கூடிய காரியங்களுக்கும் ரூ 5238 முன்கடன் தீர்க்கவும், பட வாடா செய்யப்பட்டன. சங்கத்திற்கு ரூ 436-15-4 இலாபம்கிடைத்தது.

## மெட்ராஸ் நரியங்காடு கோவாபரேடீவ் சொஸைடி.

இச்சங்கம் 1916ம் வருஷம் செப்டம்பர்மாதம் ஸ்தாபிக்கப்பட்டது நரியங்காட்டிலுள்ள பஞ்சமர்களுடைய பிரத்தியேகப் பிரயோசனத்திற் காக வென்று இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கம் ராவ்பகதூர் T. விஜயராகவாச்சாரியார் அவர்கள் உதவியின்மேல் ராவ்பகதூர் T. வரத ராஜுலு நாயுடு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சங்கம் கடன் கொடுத்து கடன் வசூல் செய்து வந்தது. ஆனால் தற்காலம் சேரியின் சுகாதாரத்தை திருப்திகரமாகச் செய்யும் விஷ யத்தைக் கைக்கொண்டுள்ளது. கார்பொரேஷன், ஸோஷியல் சர் வீஸ்லீக் உதவியாலும் சேரியின் நிலத்தை விலக்குவாங்கி மெம்பர்க ளுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யபட்டு வருகின்றன. திருவல்லிக்கேணி அர்பன் சங்கத்திலிருந்து இச்சங்கம் ரூ 8400 கடனு கவாங்கியிருக்கின்றது,

இப்பொழுது 73 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். தற்காலம். வாடகை மட்டும் மாதம் ரூ 50 வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

## அனுபந்தம் B.

### யூனியனின் 1917—18-ம் வருஷத்திய வரவு செலவு கணக்கு.

| நெ. | வரவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | கையிருப்புத்தொகை ... ... | 147 | 6 | 7 |
| | ஸேவிங்ஸ் பாங்கிக் கணக்குத் தொகை ... | 385 | 0 | 11 |
| | கர்ரண்டு அக்கௌண்ட் கணக்குத்தொகை | 19 | 8 | 0 |
| 2 | திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் பாங்கி 1293 2 0; கவர்ன்மெண்டு முதலிய இடங்களிலிருந்து அதிகமாக வந்திருக்கும் கட்டணங்கள் ... 279 0 0; யூனியன் பாங்கிகளும் கடப்பு வருஷச் சந்தாக்களும் ... 4263 5 0 | 5835 | 7 | 0 |
| 3 | பங்குத்தொகை ... | 626 | 11 | 0 |
| | பங்கு டிவிடெண்டு (Adjusted) ... | 12 | 0 | 6 |
| 4 | கான்பரன்ஸ் நன்கொடை ... 438 0 0; வரவேற்புக் கமிட்டி ... 175 0 0; டெலிகேஷன் கட்டணம்... 223 0 0 | 836 | 0 | 0 |
| 5 | ஏழைச் சங்கங்களிலிருந்து வந்த மேன்பார்வைக் கட்டணம் ... | 10 | 1 | 8 |
| 6 | டிபாஸிட்டுகளின்பேரில் வந்த வட்டி ... | 167 | 12 | 0 |
| 7 | பாங்கிக்கணக்குகளின்பேரில் வட்டி ... | 33 | 9 | 0 |
| 8 | சில்லரைவரும்படி (கடிதங்கள் முதலியன விற்றது) ... | 10 | 5 | 0 |
| 9 | அனுமத்து ... | 2 | 0 | 0 |
| | மொத்தம்... | 8085 | 13 | 8 |

| நெ. | செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | கடிதங்கள் (பத்திரிகைகளுக்காக) ... | 1622 | 15 | 9 |
| 2 | அச்சடிக்கும் செலவுகள் ... | 1418 | 14 | 6 |
| 3 | ஸ்டாம்புகள் ... | 558 | 5 | 9 |
| 4 | சிப்பந்தி செலவு ... | 1023 | 11 | 9 |
| 5 | அபெக்ஸ் பாங்குப்பங்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது ... | 22 | 0 | 0 |
| 6 | திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைடிக்குத் திருப்பிக்கொடுத்தது... | 100 | 0 | 0 |
| 7 | ஒரு சங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்தது | 3 | 0 | 0 |
| | | 100 | 0 | 0 |
| 8 | வாடகை ... | 72 | 6 | 4 |
| 9 | கடிதம், பென்சில், பேனா முதலியன ... | 26 | 8 | 0 |
| 10 | மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் ... | | | |
| 11 | கான்பரன்ஸ் செலவு ரூ. 671-0-11 (அனுமத்தில் கொடுத்த ரூ. 12-13-6 உள்பட) ... | 671 | 0 | 11 |
| 12 | மொழிபெயர்ப்புச் செலவு ... | 338 | 4 | 0 |
| 13 | சம்பளமில்லா வேலைக்கு பிரயாணச்செலவு | 12 | 3 | 0 |
| 14 | சில்லரைச்செலவு ... | 39 | 1 | 1 |
| 15 | பங்குகள் வாங்கினது ... | 50 | 0 | 0 |
| 16 | வெளிநாட்டுப் பத்திரிகைகளின் சந்தா ... | 16 | 4 | 0 |
| 17 | டிவிடண்டு (அட்ஜஸ்ட் செய்தது) ... | 12 | 0 | 6 |
| 18 | பாங்கில் கர்ரண்டு அக்கௌண்ட் ... | 1085 | 13 | 4 |
| 19 | ஷை சேவிங்கிஸ் பாங்கிக்கணக்கு ... | 803 | 10 | 2 |
| 20 | கையிருப்பு ... | 109 | 10 | 7 |
| | மொத்தம் ... | 8085 | 13 | 8 |

## அனுபந்தம் C.

### சங்கங்களிலிருந்து வந்த நன்கொடைகள்.

| நெ. | ஜில்லாக்கள். | சங்கங்களின் பெயரும் நெம்பரும். | நன்கொடை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | அநந்தபூர். | 502 ஹிந்துபூர், கோவாபரேடிவ் சொஸைடி | 3 | 0 | 0 |
| 2 | ,, | 1985 கோன கொண்ட்ளா ,, ... | 1 | 0 | 0 |
| 3 | பெல்லாரி. | 1638 கம்பளி ,, ... | 1 | 0 | 0 |
| 4 | செங்கல்பட்டு. | 3 காஞ்சீவரம் டவுன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 5 | ,, | 381 சின்னக்காஞ்சீவரம் அர்பன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 6 | ,, | 613 முருங்தகிரி கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 7 | ,, | 1005 புல்லம் பாக்கம் ,, ... | 1 | 0 | 0 |
| 8 | ,, | 1560 செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன். | 5 | 0 | 0 |
| 9 | சித்தூர். | சித்தூர் டவுன் பாங்கி | 5 | 0 | 0 |
| 10 | கோயமுத்தூர். | 26 கோயமுத்தூர் கோவாபரேடிவ் பாங்க் அண்டு ஸ்டோர்ஸ் ... | 5 | 0 | 0 |
| | | ,, டிஸ்ட்ரிக் அர்பன் பாங்க் ... | 25 | 0 | 0 |
| 11 | ,, | 597 ஈரோடு அர்பன் பாங்க் ... | 5 | 0 | 0 |
| 12 | ,, | 1081 கோயமுத்தூர் கோவாபரேடிவ்கட்டிட சங்கம். | 5 | 0 | 0 |
| 13 | ,, | 1188 காரமடை கோவாபரேடிவ் சொஸைடி ... | 1 | 0 | 0 |
| 14 | ,, | 1655 நாயக்கன் பாளையம் ,, ... | 2 | 0 | 0 |
| 15 | ,, | 2085 இடிகரை ,, ... | 3 | 0 | 0 |
| 16 | ,, | 2211 அப்ப நாயக்கன் பாளையம் ,, ... | 2 | 0 | 0 |
| 17 | ,, | 2424 பன்னிமடை ,, .. | 1 | 0 | 0 |
| 18 | ,, | | | | |
| 19 | கஞ்சம். | 40 பர்ஹாம்பூர் அர்பன்பாங்க் ,, ... | 5 | 0 | 0 |
| 20 | குண்டூர். | சின்ன சட்லவர்ரு கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| | | 530 குண்டூர் டிஸ்க்ட் பாங்கிங் யூனியன் ... | 5 | 0 | 0 |
| 21 | ,, | 2009 டேவிஸ்பெட். கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 22 | ,, | | | | |
| 23 | கிருஷ்ணா. | 83 காவுதாரம் ,, ... | 1 | 0 | 0 |
| 24 | ,, | 1422 கிருஷ்ணாஜில்லா கோவாபரேடிவ் பாங்க் ... | 10 | 0 | 0 |
| 25 | மதராஸ். | 15 திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைடி ... | 50 | 0 | 0 |
| 26 | ,, | 18 மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்க் ... | 25 | 0 | 0 |
| 27 | ,, | 2352 ஸன். தோமா. குட்ஷெப்பர்ட் அண்டு. எஸ். ஜி. கோவாபரேடிவ் சொஸைடி ... | | 0 | 0 |

| நெ. | ஜில்லாக்கள். | சங்கங்களின் பெயரும் நெம்பரும். | நன்கொடை | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ | |
| 28 | மதராஸ். | 2753 ஆயிரம் விளக்கு கோவாபரேடிவ் சொஸைடி. | 1 | 0 | 0 |
| 29 | மதுரை. | 28 மதுரை அர்பன் ,, ... | 15 | 0 | 0 |
| 30 | மலையாளம். | 1536 கன்னனூர் ,, ... | 2 | 0 | 0 |
| 31 | ,, | 1538 கள்ளிக் கோட்டை அர்பன் பாங்க் ... | 5 | 0 | 0 |
| 32 | ,, | 2411 மலையாளம் டிஸ்டிரிக்ட் கோவாபரேடிவ் பாங்க் ... | 10 | 0 | 0 |
| 33 | வடஆற்காடு. | 64 அனக்காவூர் கோவாப ரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 34 | ,, | 2161 வடஆர்காடு பாங்கிங் யூனியன் ... | 5 | 0 | 0 |
| 35 | ,, | 2273 சோகத்தூர் கோவாப ரேடிவ் சொஸைடி ... | 1 | 0 | 0 |
| 36 | ,, | 309 வேலூர் ஜில்லா சூபர்விஷன் கௌன்சில் ... | 5 | 0 | 0 |
| 37 | புதுக் கோட்டை. | ஆத்னக்கோட்டை கோவாபரேடிவ் சொஸைடி | 3 | 0 | 0 |
| 38 | ராமனாதபுரம் | 995 வத்திராப்பு கோவாபரேடிவ சொஸைடி ... | 1 | 0 | 0 |
| 39 | ,, | 1336 சிவகங்கை ,, ... | 2 | 0 | 0 |
| 40 | சேலம். | 25 சேலம் அர்பன் ,, ... | 10 | 0 | 0 |
| 41 | ,, | 115 போட்டி புரம் ,, ... | 5 | 0 | 0 |
| 42 | ,, | 151 சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க் ... | 15 | 0 | 0 |
| 43 | ,, | 169 தொளசம்பட்டி கோவாபரேடிவ் சொஸைடி. | 3 | 0 | 0 |
| 44 | ,, | 266 லாலிகாம் ,, ... | 1 | 0 | 0 |
| 45 | ,, | 270 மாரமங்கலம் கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 46 | ,, | 289 மணத்தாள் ,, ... | 2 | 0 | 0 |
| 47 | ,, | 291 அமரகுண்டி ,, ... | 2 | 0 | 0 |
| 48 | ,, | 527 எம். கல்ல கவுண்டன் பட்டி ,, ... | 2 | 0 | 0 |
| 49 | ,, | 601 மட்டிகிரி அர்பன் பாங்க் ,, ... | 5 | 0 | 0 |
| 50 | ,, | 762 பெரிய சொரகை கோவாபரேடிவ சொஸைடி. | 2 | 0 | 0 |
| 51 | ,, | 768 கேதுநாயகன் பட்டி ,, ... | 2 | 0 | 0 |
| 52 | ,, | 897 திருச்செங்கோடு ,, ... | 5 | 0 | 0 |
| 53 | ,, | 1257 பெரியேரிப்பட்டி ,, ... | 2 | 0 | 0 |
| 54 | ,, | 1258 அம்பாலிகா மாரமங்கலம் ,, ... | 2 | 0 | 0 |
| 55 | ,, | 1269 உப்பாரப்பட்டி ,, ... | 2 | 0 | 0 |
| 56 | ,, | 483 தொளசம்பட்டி யூனியன் ... | 3 | 0 | 0 |
| 57 | ,, | 1709 கமலாபுரம் கோவாபரேடிவ சொஸைடி ... | 3 | 0 | 0 |
| 58 | ,, | 1947 ஷோரூர் டவுன் கோவாபரேடிவ பாங்க் ... | 5 | 0 | 0 |
| 59 | ,, | 2241 சேலம் டிஸ்ட்ரிக்ட் கௌன்ஸில் ஆப் சூபர்விஷன் ... | 10 | 0 | 0 |
| 60 | ,, | பெரிய சாத்தப்பாடி கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 61 | தென் ஆற்காடு. | 46 திண்டிவனம் அர்பன் பாங்க் ... | 2 | 0 | 0 |
| 62 | ,, | 1814 தென் ஆற்காடு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன். | 10 | 0 | 0 |



| நெ | ஜில்லாக்கள். | சங்கங்களின் பெயரும் நெம்பரும். | நன்கொடை | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப. |
| 63 | தென்னாகாடு. | 975 திருக்கோயிலூர் கோவாபரேடிவ பாங்க் ... | 5 | 0 | 0 |
| 64 | தென் கன்னடம். | 181 புத்தூர் கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 65 | ,, | 935 மங்களூர் காதோலிக் ,, ... | 10 | 0 | 0 |
| 66 | ,, | 958 உடுஷி கோவாபரேடிவ் ... | 5 | 0 | 0 |
| 67 | ,, | 1118 தென்கன்னடம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்க் ... | 10 | 0 | 0 |
| 68 | ,, | 2082 குர்பூர் கோவாபரேடிவ் சொஸைடி ... | 1 | 0 | 0 |
| 69 | தஞ்சாவூர். | 8 நிக்கல்ஸன் டவுன் பாங்க் ... | 5 | 0 | 0 |
| 70 | ,, | 27 மன்னார்குடி அர்பன் பாங்க் ... | 2 | 0 | 0 |
| 71 | ,, | 378 ஸ்ரீ கமலாம்பிகா அர்பன் பாங்க் .. | 3 | 0 | 0 |
| 72 | ,, | 1023 தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் சென்டிரல் பாங்க் ... | 5 | 0 | 0 |
| 73 | ,, | கன்னண்டாக்குடி மலையூர் கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 | 0 | 0 |
| 74 | ,, | விசாலாக்ஷியம்பாள் ,, ... | 1 | 0 | 0 |
| 75 | திருநெல்வேலி. | 1010 பாளையங்கோட்டை ... | 5 | 0 | 0 |
| 76 | ,, | 1474 அம்பா சமுத்ரம் ,, ... | 5 | 0 | 0 |
| 77 | திருச்சினாப்பள்ளி. | 301 லால்குடி ரூரல் பாங்க் ... | 1 | 0 | 0 |
| 78 | ,, | 178 திருச்சி டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க் ... | 10 | 0 | 0 |
| 79 | ,, | 1050 திருச்சி கோவாபரேடிவ் க்ரெடிட் பாங்க் ... | 8 | 0 | 0 |
| 80 | ,, | ம-௱-௱-ஸ்ரீ, எஸ். வி. வெங்கடராமய்யா அவர்கள் சைதாப்பேட்டை ... | 5 | 0 | 0 |
| 81 | ,, | ,, ஒய். ஜேகப் அவர்கள் (குத்தி) ,, ... | 1 | 0 | 0 |
| 82 | ,, | ,, வி. எம். ரங்காராவ் (சேலம்) ,, ... | 5 | 0 | 0 |
| 83 | ,, | ,, டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார். | 4 | 0 | 0 |

## அனுபந்தம் D.

### டெலிகேட்களின் ஜாபிதா.

| நெ. | ஜில்லா. | சங்கத்தின் பெயரும் நெம்பரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 1 | அனந்தபூர் | 618 கதிரி கோவாபரேடிவ்சொஸைடி | ஜி. வெங்கடசாமி. |
| 2 | ,, | 620 தானகள்ளு ,, ... | ஏ. சேஷாத்ரி ராவ். |
| 3 | ,, | 635 சிகடிமணிபள்ளி ,, ... | எம். லக்ஷ்மண் ரெட்டி. |
| 4 | ,, | 911 அப்பாஸ் செருவு ,, ... | வெங்கடதீக்ஷிதலு. |
| 5 | ,, | 1503 நல்லா செருவு ,, ... | கே. ராமசந்திர ரெட்டி. |
| 6 | ,, | 1977 எதோடு ,, ... | ராமசந்திர ராஜு. |
| 7 | ,, | 2013 கோக்கண்டி ,, ... | வி. கே. சுப்பயப்ப செட்டி. |
| 8 | பல்லாரி. | 36 ஹவினஹடகள்ளி ,, ... | நாருயண ராவ். |
| 9 | ,, | 1638 கம்ப்ளி ,, ... | |
| 10 | செங்கற்பட்டு. | 20 காஞ்சீவரம் டவுன் பாங்க் ... | ஸி. நாராயணசாமி அய்யங்கார். |
| 11 | ,, | 21 பெரிய காஞ்சீவரம் சேணியர்களின் யூனியன் ... | கே. ரங்கசாமி அய்யங்கார். |
| 12 | ,, | 41 உத்திரமேரூர் கோவாபரேடிவ் பாங்க் ... | அனுமந்தராவு. |
| 13 | ,, | ,, ... | சஞ்சிவி நாயுடு. |
| 14 | ,, | 141 சாலூர் ,, ... | |
| 15 | ,, | 149 மணிமங்கலம் ,, ... | |
| 16 | ,, | 192 மதுராந்தகம் பாங்க் ,, ... | கே. ஜானகிராம் பந்துலுகாரு. |
| 17 | ,, | 225 சாலவாக்கம் ,, ... | வடிவேலு பிள்ளை. |
| 18 | ,, | 343 கூவம் ,, ... | திருபுராந்தக குருக்கள். |
| 19 | ,, | 375 செங்கற்பட்டு ,, ... | பி. பி. கிருஷ்ணமாசாரி. |
| 20 | ,, | 380 உத்திரமேரூர் கோவாபரேடிவ் யூனியன் ... | ஓ. எம். வெங்கடனுதய்யங்கார். |
| 21 | ,, | 381 சின்னகாஞ்சீவரம் அர்பன் பாங். | வி. கிருஷ்ணமாசாரியார். |
| 22 | ,, | 525 ஸ்ரீபெரும்புதூர் கோவாபரேடிவ் சொஸைடி ... | எம். கிருஷ்ண ராவு. |
| 23 | ,, | 541 இருளாஞ்சேரி ,, ... | கணபதி முதலியார். |
| 24 | ,, | 613 முகுந்தகிரி ,, ... | எம். கே. சக்ரவர்த்தி அய்யங்கார். |
| 25 | ,, | 676 திருவெங்கரணை ,, ... | தி. பிரசன்ன ராகவாசாரியார் |
| 26 | ,, | 767 திருப்பாச்சூர் ,, ... | சுப்பருய பிள்ளை. |
| 27 | ,, | ,, ,, ... | பொன்னுசாமி செட்டியார். |
| 28 | ,, | 936 மதுராந்தகம் கோவாபரேடிவ் யூனியன் ... | வி. வெங்கடாசாரியார். |
| 29 | ,, | 1001 சைதாப்பேட்டை கோவாபரேடிவ் பாங்கி ... | எஸ். ஸி. வெங்கடருமய்யர் |
| 30 | ,, | 1005 புல்லரம்பாக்கம் கோவாபரேடிவ் சொஸைடி ... | பி. எஸ். அருணசலம். |
| 31 | ,, | 1282 ஊக்கரணை ,, ... | ஜயரங்க நாயுடு. |
| 32 | ,, | 1560 காஞ்சீவரம் டிஸ்ட்ரிக்ட் பாங்க். | வி. வெங்கடாசாயரிார். |
| 33 | ,, | 1625 காஞ்சிவரம் ரெட்டிபட்டி கோவாபரேடிவ் சொஸைடி ... | கோவிந்த செட்டியார். |



| நெ. | ஜில்லா. | சங்கத்தின் பெயரும் நெம்பரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 34 | செங்கற்பட்டு. | 1950 பூனமல்லி கோவாபரேடிவ் யூனியன் ... | ஷண்முக முதலியார். |
| 35 | ,, | 2196 மணப்பாக்கம் கோவாபரேடிவ் சொஸைடி .. | எம். சரவண முதலியார். |
| 36 | ,, | 2476 புதுவள்ளூர் ,, ... | பெருமாள் நாயுடு. |
| 37 | ,, | பெரிய காஞ்சிவரம் ,, ... | ஏ. சுப்பருய முதலி. |
| 38 | ,, | பள்ளம் ,, ... | கிருஷ்ணசாமி ஐயர். |
| 39 | சித்தூர். | 59 சித்தூர் டவுன் பாங்க் ... | வி. கிருஷ்ணசாமி அய்யர். |
| 40 | ,, | 619 காணிகிரி கோவாபரேடிவ் சொஸைடி ... | ,, |
| 41 | ,, | 837 பொந்தல பள்ளி கோவாபரேடிவ் சொஸைடி ... | ஸி. வி. வெங்கட்ரும அய்யங்கார். |
| 42 | கோயமுத்தூர். | 26 கோயமுத்தூர் அர்பன் பாங்க் அண்டு ஸ்டோர் ... | வி. கிருஷ்ணசாமி அய்யர். |
| 43 | ,, | 184 கம்பளியம் பட்டி ,, ... | அனந்த பத்மனுப அய்யர். |
| 44 | ,, | 935 கைகோலபாளையம் ,, ... | கே. பி. கிருஷ்ணசாமி கௌண்டர். |
| 45 | ,, | 234 பெருந்துறை ,, ... | நாருயணசாமி பிள்ளை. |
| 46 | ,, | 234 பெருந்துறை கோவாபரேடிவ சொஸைடி ... | நாகப்ப செட்டியார். |
| 47 | ,, | ,, ... | கரியன் செட்டியார். |
| 48 | ,, | 344 சுல்லிப்பாளையம் ,, ... | ராமசாமி கௌண்டர். |
| 49 | ,, | 386 பாலக்கரை ,, ... | முத்துசாமி கௌண்டர். |
| 50 | ,, | ,, ,, ... | அப்பாஜ கௌண்டர். |
| 51 | ,, | ,, ,, ... | கண்டையாக் கவுண்டர். |
| 52 | ,, | 409 மேட்டுப்புதூர் ,, ... | எம். என். அருணசல கவுண்டர். |
| 53 | ,, | 423 துடுப்பட்டி ,, ... | டி. ஆர். முத்துமாணிக்க முதலியார். |
| 54 | ,, | 427 கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க் ... | ஸி. என். கிருஷ்ணசாமி அய்யர். |
| 55 | ,, | 597 ஈரோடு அர்பன் பாங்க் ... | எஸ. டி. வெங்கடருமய்யர். |
| 56 | ,, | 988 விஜயமங்கலம் கோவாபரேடிவ யூனியன் ... | கே. எம். சின்னட ரங்கய்யா கௌண்டர். |
| 57 | ,, | 1081 கோயமுத்தூர் கட்டிட சங்கம் | ஸி. வி. வெங்கடரும அய்யங்கார். |
| 58 | ,, | 1170 நடுப்பட்டி கோவாபரேடிவ் சொஸைடி ... | குட்டியா கௌண்டர். |
| 59 | ,, | 1188 காரமடை ,, ... | ஆர். சேஷாத்ரி அய்யங்கார். |
| 60 | ,, | 1655 நாயக்கன் பாளையம் ,, ... | வி. ரங்காராவு. |
| 61 | ,, | 1811 காரமடை கோவாபரேடிவ்யூனியன் ... | திம்மப்ப கௌண்டர். |
| 62 | ,, | ,, ,, ... | வரதருஜ அய்யங்கார். |
| 63 | ,, | ,, ,, ... | ரங்கய்யா கௌண்டர். |
| 64 | ,, | 2030 அப்பச்சிமார் மடத்துப் பாளையம் ,, ... | எம். ஏ. ஆண்டமுத்து கௌண்டர். |

| நெ. | ஜில்லா | சங்கத்தின் பெயரும் நெம்பரும். | டெலிகேட்டின் பெயர் |
|---|---|---|---|
| 65 | கோயமுத்தூர். | 2088 இடிகரை கோவாபரேடிவ் சொஸைடி ,, ... | கரிவரதராஜுலு நாயுடு. |
| 66 | ,, | 211 அப்பநாயகன் பாளையம் ,, ... | தோப்பா நாயுடு. |
| 67 | ,, | 2283 வெள்ளன் கோயிர் ,, ... | வி. ஆர். சென்னிமலை கவுண்டர். |
| 68 | ,, | ,, ,, ... | செங்கப்ப கவுணடர். |
| 69 | ,, | ,, ,, ... | ஏ. எஸ். வேலுசாமி கவுண்டர். |
| 70 | ,, | ,, ,, ... | மார நாயகர். |
| 71 | ,, | 2287 கவுண்டன் பாளையம் ,, ... | பட்டுலிசக கவுண்டர். |
| 72 | ,, | ,, ,, ... | மாரப்ப கவுண்டர். |
| 73 | கடப்பா. | 1414 கோவாபரேடிவ் டவுன் பாங்க். | கே. லக்ஷ்மண ராவு. |
| 74 | குண்டூர். | 22 தெனாலி அர்பன் பாங்க் ... | கே. நரசிம்ம ராவ். |
| 75 | ,, | 66 ஓங்கோல் கோவாபரேடிவ் சொஸைடி ... | சி. வெங்கடராவ். |
| 76 | ,, | 392 சின்னகடிலவர்ரு ,, ... | எ. வெங்கய்யா. |
| 77 | ,, | 530 குண்டூர் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன் ... | எம். நரசிம்மம். |
| 78 | ,, | 1452 தெனாலி கோவாபரேடிவ் யூனியன் ... | பி. ராமனாத ராவ். |
| 79 | ,, | 1941 ரஸாரா லேடி கோவாபரேடிவ பாங்கி ... | சந்திரசேகர ராவு. |
| 80 | ,, | 2009 டேவிஸ்பேட் கோவாபரேடிவ் சொஸைடி ... | எ. ரங்கய்யா. |
| 81 | கிருஷ்ண. | 1715 குடிவாடர் லோகல் பண்டு வேலைக்காரர்களின் கோவாபரேடிவ் சொஸைடி. ... | ராமசந்திர ரால். |
| 82 | ,, | 1924 பெத்தபாலபுரம் ... | பி. நாகபூஷணம். |
| 83 | ,, | பெஜவாடா டிவிஷன் சென்டரல் டாங்க் ... | எஸ். வி. நரசிம்ம சாஸ்திரியார். |
| 84 | சென்னை | 15 திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைடி ... | எஸ். சத்யமூர்த்தி அய்யர். |
| 85 | ,, | ,, மைலாப்பூர் ... | டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி. |
| 86 | ,, | ,, ,, ... | வீரராகவாசாரி கௌரவ காரியதரிசி. |
| 87 | ,, | ,, ,, ... | ஏ. வெங்கடராய லய்யர். |
| 88 | ,, | ,, எழும்பூர ... | ஏ. கலியாணசுந்தரம். |
| 89 | ,, | மதருஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் ... | ராவுபகதூர் கே. பி. ராமனுதய்யர். |
| 90 | ,, | ,, ,, .. | வி. வெங்கட சுப்பய்யா. |
| 91 | ,, | ,, ,, ... | கே. பார்த்தசாரதி அய்யங்கார். |
| 92 | ,, | 1636 பெரம்பூர் சக்கிலியர் கோவாபரேடிவ் சொஸைடி. ... | பி. வீராசாமி. |
| 93 | ,, | 1909 நரியங்காடு ,, ... | பஞ்சரத்னம். |
| 94 | ,, | 2194 ப்ளவர்லேன் ,, ... | எம். வி. டி. வரதருஜா. |
| 95 | ,, | ,, ,, ... | வைத்தியநாதன். |



| நெ. | ஜில்லா. | சங்கத்தின் பெயரும் நெம்பரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 96 | சென்னை: | 2276 ஸன். தோம். குடி. ஷெப்பர்ட் அண்டு எஸ். பி. ஜீ. மிஷஷன் | வைத்யநாதன் |
| 97 | ,, | 2496 கொய்யாதோல் கோவாபரேடிவ் சொஸைடி ... | பி. சாரங்கபாணி. |
| 98 | ,, | 2752 ஆயிரம் விளக்கு ,, ... | ஜே. எஸ். அருளாபிஷேகம் |
| 99 | மதுரை. | 28 மதுரை அர்பன் ,, ... | ஆர். நரசிம்ம அய்யங்கார். |
| 100 | நெல்லூர். | 2212 தென். வெல்லூர் யுனியன் ... | ஓ. விசுவநாத ராவ. |
| 101 | ,, | 2523 நெல்லூர் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் பாங்கிங் யூனியன் ... | கே. வி. ராகவாசாரியார். |
| 102 | ,, | நெல்லூர் ஸ்டோர்ஸ் ... | கே. ராஜா ராவ். |
| 103 | நீலகிரி. | 673 கொர்ஹாடா கோவாபரேடிவ் சொஸைடி. | எம். கே. பெல்லே கௌண்டர். |
| 104 | ,, | 1179 நந்தாலா ,, ... | எம். கச்சா கௌண்டர். |
| 105 | ,, | 2021 தம்பட்டி ,, ... | தொண்ட்சவன கௌடர். |
| 106 | ,, | 2022 பாலசேரல ,, ... | தட்டா கௌடர். |
| 107 | ,, | தெனிலே ,, ... | கு. என். பாதே கௌடர். |
| 108 | வ. ஆற்காடு | 64 அணக்காடிர் ,, ... | குப்பன். |
| 109 | ,, | ,, ,, ... | வி. நடேச அய்யர். |
| 110 | ,, | ,, ,, ... | டி. சுப்பராய முதலியார். |
| 111 | ,, | 235 அருகூர் ,, ... | ஓ. வீரராகவ தீக்ஷிதர். |
| 112 | ,, | 570 திருவண்ணாமலை ஆர்பன் பாங்க். | வி. நரஸிம்ம ராவு. |
| 113 | ,, | 847 கலவை கோவாப்ரேடிவ் சொ. | கே. துரைசாமி. |
| 114 | ,, | ,, ,, ... | சின்னசாமி குருக்கள். |
| 115 | ,, | 1148 காவேரிபாக் கோவர்பரேடிவ் சொஸைடி ... | ஏ. கோவிந்தாசாரியார். |
| 116 | ,, | 1173 ராஜாரத்னபுரம் கோவாபரேடிவ் சொஸைடி ... | வீராசாமி. |
| 117 | ,, | 1175 எடயஞ்சாட்டு ,, .. | எல். லுக்கய்யா. |
| 118 | ,, | 1177 பெலாகுர் ,, ... | என். வெங்கட அய்யர். |
| 119 | ,, | 1225 விருபரக்ஷிபுரம் ,, ... | வி. கே. துரைசாமி. |
| 120 | ,, | 1260 ஆரணி கொளத்தூர் ,, ... | கே. ராமச்சந்திர சாஸ்திரி. |
| 121 | ,, | 1566 புங்கம்பாட் ,, ... | கே. கோபால பிள்ளை. |
| 122 | ,, | 3138 போனூர் கோவாபரேடிவ் யூனி. | பி. சாமி அய்யர். |
| 123 | ,, | 1557 தேவிகாபுரம் கோவாபரேடிவ் சொஸைடி... | ஏ. ஆர். சர்மா. |
| 124 | ,, | 1162 தண்டாம்பேட் ,, ... | எம். பி. ரங்கசாமி செட்டி. |
| 125 | ,, | 1703 வட்டவாளம் ,, ... | துரைசாமி பிள்ளை. |
| 126 | ,, | 1770 அமிர்பேட்டை ,, ... | ஏ. வெங்கடகிருஷ்ணய்யர். |
| 127 | ,, | 1787 குமலிமலை ,, ... | கே. வி. சுப்பரும அய்யர். |
| 128 | ,, | 1788 எலத்தூர் ,, | இ. ஆர். கிருஷ்ணய்யர். |
| 129 | ,, | 1830 அல்லியாளமங்கலம் ,, ... | இ. ஜானகிருமய்யர் |
| 130 | ,, | 1854 கலவை கோவாப்ரேடிவ் யூனி. | கே. எம். சிங்காரவேலு முதலியார். |
| 131 | ,, | 1375 வயலூர் கோவாப்ரேடிவ் சொ. | அமணஜலம். |
| 132 | ,, | 1937 வந்தவாசி ,, ... | தர்மலிங்கம் |
| 133 | ,, | 1965 போளூர் கூடலூர் ,, ... | எ. கிருஷ்ண[illegible] நாதாசாரி. |
| 134 | ,, | 2081 குளத்தூர் மட்டம் ,, ... | எம். [illegible]சாமி முதலியார். |
| 135 | ,, | 2275 திருவண்ணாமலை சக்கிலியர் ... | ஆதிமூலம். |

| நெ. | ஜில்லா. | சங்கத்தின் பெயரும் நெம்பரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 136 | வ.ஆற்காடு | 2374 திருவண்ணாமலை உபாத்தியாயர். | எஸ். சக்ரவர்த்தி நாயனார். |
| 137 | ,, | 2487 சுமங்லி ,, ... | நாருயண அய்யர். |
| 138 | ,, | 2567எஸ்ஸயப்பனூர் ,, ... | விசுவநாத அய்யர். |
| 139 | ,, | செய்யூர் தாலுக்கா யூனியன் ... | பி. நாராயணய்யர். |
| 140 | ,, | மூடையூர் கோஆபரேடிவ் சொஸைடி ... | எம். ருமசந்திரன். |
| 141 | ,, | திருவண்ணாமலை Y. M. C. A. ... | பி. என். துரைசாமி. |
| 142 | புதுக் கோட்டை. | பரஸ்பர சகாயசபா அண்டு குடியான வர்கள் சங்கம் .. | கே. எஸ். ராமசந்திர அய் யர். |
| 143 | ராமனாத் | 292 திருத்தாங்கல் கோ. சொஸைடி. | சொக்கலிங்கம் பிள்ளை. |
| 144 | ,, | ,, ,, | தி. வி. நல்லமாணிக்க முதலி |
| 145 | ,, | ,, ,, | தேவமாணிக்கம் பிள்ளை. |
| 146 | ,, | 1526 கொத்தங்குளம் கோ.சொஸைடி | ஆறுமுக தேவர். |
| 147 | ,, | 2858 ஸ்ரீ வில்லிபுத்தூர் கோ. யூனி. | வீரப்ப தேவர். |
| 148 | ,, | 2722 சாத்தூர் கோவாபரேடிவ் யூனி. | ஆனந்தராவ். |
| 149 | சேலம். | 19 நாமக்கல் அர்பன் பாங்க் ... | எஸ். ராமஸாமி ஆசார். |
| 150 | ,, | 43 பாகல்பட்டி ருரல்பாங்க் ... | பி. எஸ். ருமசாமி நாயகர். |
| 151 | ,, | 115 போட்டிபுரம் கோ. சொஸைடி | கே. வி. விஜாரகவய்யர். |
| 152 | ,, | 125 கம்பெல்நல்லூர் ,, ... | ஓ. ருஜகோபால்ராவ். |
| 153 | ,, | 151 சேலம் டிஸ்ட்ரிக்ட் பாங்க் ... | கே. சுந்தரராஜர். |
| 154 | ,, | ,, ,, | டி. ராஜாராவ். |
| 155 | ,, | 762 பெரிய சொரகை கோ. சொ. | கந்தசாமி பிள்ளை. |
| 156 | ,, | 1483 தௌசம் பட்டி கோ. யூனியன். | ருமஸ்வாமி அய்யர். |
| 157 | ,, | 1609 கமலபுரம் கோ. சொஸைடி ... | ராஜகோபாலய்மர். |
| 158 | ,, | 1946 கெலமங்கலம் கோ. யூனியன். | பி. கே. தேவய்யர். |
| 159 | ,, | 2004 முகர்கிபிரண்டூர் கோ.சொஸைடி | குடிரப்ப கவுடர். |
| 160 | ,, | 2235 கம்பேநல்லூர் யூனியன் ... | வி. பி. சுந்தரராவ். |
| 161 | ,, | கட்டளபல்லியர் கோ. சொஸைடி ... | வி. வெங்கடரங்கய்யங்கார். |
| 162 | ,, | கம்ளாபூர் ,, ... | டி. கிருஷ்ணமூர்த்தி. |
| 163 | ,, | ,, ,, | சீதாராம அய்யகாரு. |
| 164 | தென்ஆற். | 1611 திருக்கோயிலூர் யூனியன் ... | ஸ்ரீனிவாச அய்யங்கார். |
| 165 | ,, | 1844 தென் ஆற்காடு பாங்கிங் யூனி. | |
| 16 : | ,, | 2246 அரசமங்கலம் கோ. சொஸைடி. | பி. எஸ். சீனிவாசாரி |
| 167 | ,, | 2276 மேல்ஸெவமங்கலம் ,, ... | |
| 168 | ,, | 2520 மேல் ஓலக்கூர் ,, ... | |
| 169 | ,, | 2521 ஆலம் பூண்டி ,, ... | வெங்கடராமய்யர். |
| 170 | தென்கன். | 181 புத்தூர் ,, ... | டி. வேணுகோபாலராவ் |
| 171 | ,, | 1113 தென்கன்னடம் டிஸ்ட்ரிக்ட் பா. | எம் ஆனந்தராவ். |
| 172 | ,, | 2082 குர்பூர் கோ. சொஸைடி ... | |
| 173 | தஞ்சாவூர். | கீடாமங்கலம் கோவாபரேடிவ் சொ. | ஏ. சேதுராமய்யர். |
| 174 | ,, | 2453 திருத்துறைப்பூண்டி யூனியன் ... | டி. வெங்கடரங்காசாரியார். |
| 175 | ,, | கனன்ண்டிடிடி மெலயூர் கோ. சொ | |
| 176 | ,, | விசாலாக்ஷியம்மாள் ,, ... | |
| 177 | திருச்சி. | 2112 ஆலங்குடி மாகாணம் ... | எஸ். நாருணசாமி அய்யங் |
| 178 | திருநெல். | விலட்டிகுளம் ,, ... | [கார். |
| 179 | விசாகபட். | 1396 பர்வதபுரம் கோ. பாங்க் ... | |



THE HON'BLE MR. S. SRINIVASA AIYANGAR,
ADVOCATE GENERAL

PRESIDENT THE SEVENTH
MADRAS PROVINCIAL CO-OPERATIVE CONFERENCE



F. R. HEMINGWAY, I. C. S.
REGISTRAR OF
CO-OPERATIVE SOCIETIES, MADRAS.



RAO BAHADUR
K. B. RAMANADHA AIYAR, AVL.,
PRESIDENT
THE MADRAS PROVINCIAL CO-OPERATIVE UNION, LTD.


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் X] 1919ளு மேமீ [இலக்கம் 11


## பத்திராதிபரின் குறிப்புகள்.

**நெல்லூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்**

நெல்லூர் ஜில்லா முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் பிரதிநிதிகளை வரவேற்கையில் ஸ்ரீமான். எம். செங்கையா பந்துலு காரு சொல்லிய சில விஷயங்களைக்கண்டு சிலர் ஆச்சரியப்படுவார்களானால் அவ்விஷயம் நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணாது. கரும்பு, பருத்தி முதலிய நூதன பயிர்களை விளையச் செய்வதால் கூட்டுறவு முக்யமாய் விவசாயத்தை விர்த்திசெய்யக் கூடுமென்றும், தற்காலம் பயிரிடப்பட்டுவருகிற நெல், சோளம் முதலிய பயிர்களை பயிரிடச்செய்வதால் எத்தகைய விர்த்தியும் முடியாதென்று அவர் கூறுகிறார். இதற்குக் காரணம் நிலங்களின் பெரும்பான்மை பெரிய மிராசுதார்கள் வசமிருப்பதே யென்று சொல்லுகிறார். இக்காரணத்தை முன்னிட்டு நெல் முதலிய பயிர்களுக்கு நல்ல விதமான விதை, எரு முதலியவை உபயோகிப்பது தடைபடுமானால் புதிய பயிர்கள் சாகுபடி செய்யவும் இதே காரணம் தடையாக நிற்கக்கூடும். ஸ்டோர் சங்கங்கள் விர்த்தியடையக் கூடுமென்று அவர் சிறிதும் நம்பிக்கை வைக்கவில்லை. உணவுப்பொருள்களின் அதிக விலையும், துணி, சீமை எண்ணெய் முதலியவைகளின் அதிக விலையும் நகரவாசிகளுக்குமட்டுமல்ல கிராமவாசிகளையும் கஷ்டங்களுக்குள்ளாக்குகின்றன. கோவாபரேடிவ் சங்கங்கள் ஜனங்களுடைய பொருளாதார நிலைமையை அதிகமாக உயர்த்த முடியுமென்றும், ஜனங்களுக்கு அவசியமான பொருள்களையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் சௌகரியமாகவும் இலகுவாயும் ஜனங்களுக்கு பட்வாடா செய்யக்கூடுமென்றும் அக்கிராசனர் கனம் ஸ்ரீமான். இராமச்சந்திரராவ் அவர்கள் தம்முடைய உபந்நியாசத்தில் கூறினார். சாலியர், தேவாங்

கர், இன்னும் இதர உயர்ந்த ஜாதி இந்துக்களெல்லாம், பஞ்சமர்கள் செய்து வந்த நெசவுத்தொழிலை ஆரம்பஞ் செய்யவே நெசவுத் தொழில் க்ஷீணிக்க ஆரம்பித்ததென்று ஸ்ரீமான். செங்கையா கூறுவதைக்கண்டு நாம் ஆச்சர்யப்படக்கூடுமே யொழிய வேறொன்றும் சொல்லுவதற்கில்லை. இவ்விஷயமாக சரித்திர சம்பந்தமாய் எவ்வித மேனும் ஆராய்ச்சி செய்திருப்பாரானால் அவர் அத்தகைய ஆராய்ச்சிகளை சொல்லியிருக்கவேண்டும். உயர்தர இந்துக்கள்தான் முதல்தரமான உயர்ந்த தினுசு துணிகளை நெய்து வந்தார்களென்றும் இவர்களுடைய நெசவுதான் ஐரோப்பாவெங்கும் பெயர்பெற்று விளங்கியதென்றும் ஜிப்ரால்டர், வெனீஸ் முதலிய நாடுகளில் இவர்களுடைய நெசவுத்தான் பெருமையாகக் கொள்ளப்பட்டதென்றும் பொதுஜனங்களெல்லோருடையவும் அபிப்பிராயம். பஞ்சமர்கள் மிகவும் தாழ்ந்த தினுசான மட்டத் துணிகளைத்தான் நெய்து வந்தார்கள். கூட்டுறவு மூல்யமாய் நெசவுத் தொழிலை விர்த்திசெய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டுள்ளவர்களெல்லோரும் உயர்ந்தஜாதி நெசவுக்காரர்களையே எதிர்பார்த்திருக்கிறார்களேயொழிய முரட்டு தினுசுகள் நெய்யும் பஞ்சமர்களை எதிர் பார்க்கவில்லை. அப்ரக்குத் (Mica) தொழிலில் கூட்டுறவு இயக்கத்தை அதிகமாகப் பரவச்செய்யக் கூடுமென்று மிஸ்டர் செங்கையா கூறுகிறார். அப்ரக்குத் தொழிலைப்பற்றி நமக்கொன்றும் அனுபவம் கிடையாது. எனினும் கூட்டுறவு இயக்கம் அத்தொழிலில் எவ்விதமாகப் பரவக்கூடுமென்பதை அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம்.

நிலத்தின் சொந்தக்காரர்களால் அப்ரக்குத் தோண்டியெடுக்கப்படுகிறதென்று அறிகிறோம். திறமையும் புத்திநுட்பமும் வாய்ந்த டைரெக்டர்கள் உள்ள ஜாயின்டு ஸ்டாக்கம்பெனிகள் சுரங்க வேலைகளை வெகுத் திறமையாய்ச் செய்யக்கூடும். திறமையும் புத்திநுட்பமும் இல்லாதகாரணத்தால் விர்த்தியடையாத சுரங்க வேலைகள் கூட்டுறவினால் மட்டும் அடைந்து விடக்கூடுமென்று சொல்லக்கூடாது. கூட்டுறவு, புத்திநுட்பத்திற்கும், சாமர்த்தியத்திற்கும் ஈடாக ஏற்பட்டதல்ல. கூட்டுறவு இயக்கத்தின்கீழ் சங்கங்களின் ரிஜிஸ்தரேஷன் சுலபமாக முடிவதன்றி சில சௌகர்யங்களும் இருக்கிறதென்பது உண்மையே. ஆனாலும் விஷயம் விர்த்தியாகி முன்னுக்கு வரக்கூடுமென்ற நிச்சயங் கிடையாது.

தெலுங்கு ஜில்லாக்களுக்கென்று மூன்று அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தரார்களை நியமித்திருப்பதால் கூட்டுறவு சங்கங்களின் ஸ்தாபனத்திற்கு வேண்டிய ஊக்கம் ஏற்பட்டுள்ளதென்றும் ஜில்லா போர்டுகளும், தாலூக்கா போர்டுகளும் கூட்டுறவு இயக்கத்திற்கு இன்னும் அலட்சியமாகவே இருப்பது வருத்தப்படக்கூடிய விஷயமென்பதாக கனம்



மிஸ்டர். இராமச்சந்திரராவ் தம்முடைய உபந்யாசத்தில் கூறினார். விவசாயிகளின் கடனைப்பற்றி கவர்ன்மெண்டார் விசாரணை செய்ய வேண்டியது அத்தியாவச்யமென்று கூறினதல்லாமல் கனம் மிஸ்டர். ஏ. எஸ். கிருஷ்ணராவ் அவர்களுடைய தீர்மானத்தின்பேரில் நடவடிக்கைகள் நடத்தும்படியாகவும் கவர்ன்மெண்டாரை வற்புறுத்தினார். ஐரோப்பாவின் யுத்தத்தினால் ஏற்பட்ட கஷ்டங்கள் பலவற்றையும் நிவர்த்திசெய்ய இடாலி, பிரான்ஸு, பெல்ஜியம், ருஷியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமான உதவிகள் செய்திருக்கின்றனவென்றும் எடுத்துக்காட்டினார். அத்தேசங்களிலிருந்து நாம் அறிந்துகொண்ட அனுபவங்களை நம் தேசத்தின் கஷ்ட நிலையை நிவர்த்தி செய்வதில் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். பட்டணங்களிலும், கிராமங்களிலும் கட்டடச்சங்கங்களுக்காக குறைந்த வட்டிக்குக் கவர்ன்மெண்டார் பணம் கொடுத்து உதவி செய்யவேண்டும். பம்பாய் மாகாணத்தில் செய்யப்பட்டுள்ள உதவியை சென்னை மாகாண கவர்ன்மெண்டும் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார். அவருடைய உபந்யாசம் ஊக்கத்தைத் தரக்கூடியதாகவும், அநேக விஷயங்களை விளக்கிக் காட்டுவதாகவும், பிரத்தியட்சமாய் அனுபவத்தில் செய்யத்தக்க திருஷ்டாந்தரங்களைக் காட்டக் கூடியதாகவும் இருந்தது. கான்பரன்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்கள் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவர் கூறிய யோசனைகள் பல கான்பரன்ஸில் அங்கீகாரஞ் செய்யப்பட்டு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட வியாசங்களில் முக்கியமானவை இரண்டு. அவை இரண்டும் ஸ்ரீமான். கே. இராஜா ராவ் அவர்களால் வாசிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று கோவாபரேடீவ் லைப் இன்ஷீயூரன்ஸ் சம்பந்தமானது. கோவாபரேடீவ் இன்ஷீயூரன்ஸ் ஸ்தாபனஞ் செய்யப்பட்டால் கட்டடச் சங்கங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்குமென்றும் அவ்வியாசத்தில் எடுத்துக் காட்டினார். இன்டென்டு முறையில் ஏழைகளுக்கு ஸ்டோர்கள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டால் அதிக நன்மையும், பிரயோசனமும் ஏற்படக் கூடுமென்றும் சொன்னார்.

***

பர்மாவில் கூட்டுறவு இயக்கம்.

1917—18 வருஷத்தில் பர்மா மாகாணத்தில் விவசாயச் சங்கங்களும், இதரச் சங்கங்களும் அதிகரித்தன வென்றும், அநேக யூனியன்கள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டன வென்றும், மோல்மீனில் ஒரு சென்டிரல் பாங்கு ஸ்தாபனஞ் செய்யப்பட்டதென்றும் பர்மா கோவாபரேடீவ் ரிஜிஸ்தராருடைய ரிபோர்ட்டு தெரிவிக்கின்றது. பிரஸ்தாப வருஷத்தில் சங்கங்கள் 2575-லிருந்து

3056-க்கு உயர்ந்தன. நூற்றுக்குப் பதினெட்டு வீதம் சங்கங்கள் அதிகரித்திருக்கின்றன. சங்கங்களின் மூலதனம் 100-க்கு 25 வீதம் 150 இலட்சத்திலிருந்து 187½ இலட்சத்திற்கு அதிகரித்திருக்கின்றது. நகரச் சங்கங்கள் அதிகமாக விர்த்தியடைந்திருக்கின்றன. நகரச் சங்கங்கள் 100-க்கு 61 வீதம் அதிகரித்திருக்கின்றன. நகரச் சங்கங்களின் மெம்பர்களின் தொகை 100-க்கு 75 வீதம் அதிகப்பட்டிருக்கின்றது. நகர இலாக்காக்களில் மட்டும் கூட்டுறவு இயக்கத்தை மேற்பார்வைபார்க்கவும், இயக்கத்தை பரவச்செய்யவும் பிரத்தியேக அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் ஒருவரை நியமித்ததால் நகர இலாக்காவில் இவ்வளவு தூரம் விர்த்தி காணப்படுகின்றது. நகரங்களுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று வியாபாரத்தை விர்த்தி செய்து, மத்தியிலுள்ள தரகர்கள் அடையும் இலாபத்தை நீக்கி குறைந்த விலையில் சாமான்களை அடையச்செய்து வரும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. வர்த்தகர்களும், சில்லரை வியாபாரிகளும் சேர்ந்து நகரச் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்து வருகிறார்கள். பொது ஜனங்களும் இச்சங்கங்களில் டிபாசிட்டு செய்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கம் பர்மா மாகாணத்தில் இன்னும் இதர துறைகளிலும் வேலை செய்து வருகின்றது. தானியங்களுக்கு நல்ல விலை வருகிறவரையில் கட்டிவைப்பதில் விவசாயிகளுக்கு நெல் வியாபாரச் சங்கங்கள் ஏராளமான உதவி செய்திருக்கின்றன. மெம்பர்களின் தானியங்களைக் கட்டிவைப்பதற்கு பெருங்களஞ்சியங்களை ஏற்படுத்திக்கொடுத்து கனடாவில் கோதுமை வியாபாரத்தின் பொருட்டு எலிவேடர் கம்பெனிகள் என்ன செய்தனவோ அத்தகைய உதவியை நெல் வியாபாரச் சம்பந்தமாய் செய்ய, ஏற்பாடுகள் நடந்து வருவதாகச் சொல்லப் படுகின்றது. பர்மாவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கால் நடை இன்ஷீயூரன்ஸ் சங்கங்கள் எவ்வளவு தூரம் விர்த்தியடையுமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அவ்வளவு தூரம் விர்த்தியடையவில்லையென்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் சென்ற சில வருஷங்களாக கால் நடைகளுக்கு எவ்வித வியாதியும் தீண்டினதே கிடையாது.

ஒவ்வொரு ஜில்லாவிலும் கூட்டுறவு இயக்கத்தை பரவச்செய்ய வேண்டுமென்ற அவசியத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு ஜூனியர் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் நியமனஞ்செய்து நாளடைவில் இவரை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் பதவிக்கு உயர்த்திவிட செய்திருக்கும் யோசனை மிகவும் பாராட்டத்தக்கது. சங்கங்களை ஸ்தாபனஞ்செய்வதையும் இயக்கத்தைப் பரவச்செய்ய பிரசாரவேலைசெய்துவருவதையும்கவனித்துக்கொண்டு சங்கங்களின் மேற்பார்வையையும் இவர் கவனித்துவருவார். கூட்டுறவு இயக்க



சம்பந்தமான விஷயங்கள் எல்லாவற்றிலும் டிப்டி கமிஷனருக்கு யோசனையும் யுக்தியும் கூறும் நிபுணராகவும் இவரையே நியமிக்க வேண்டுமென்ற யோசனையை உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்கள் அங்கீகரிப்பார்களென்று சொல்ல முடியாது. பர்மாவில் கூட்டுறவு விஷயத்தில் ஜில்லா அதிகாரிகள் ஏற்கனவே அதிகமாகச்செய்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தினால் எவ்வளவு நன்மைகள் ஏற்பட வேண்டுமென்று நினைக்கிறோமோ அவ்வளவும் ஏற்படவேண்டுமானால் அதிகாரிகளின் சம்பந்தம் ஆக்டில் சொல்லப்பட்டுள்ளவரைக்கும் நின்றுவிட வேண்டும். சங்கங்களின் ஸ்தாபனமும் சங்கங்களின் மேற்பார்வையும் சகல விஷயங்களும் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்களிடம் எவ்வளவு சீக்கிரம் ஒப்புவிக்கக்கூடுமோ அவ்வளவு சீக்கிரம் ஒப்புவித்து விட்டால் இயக்கத்தினால் எதிர்பார்க்கப்படுகிற நன்மைகள் பலவும் விளையக்கூடும். கூட்டுறவு இயக்கத்தில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஜில்லா அதிகாரியையே தலைவராகச் செய்யும் யோசனையை கவர்ன்மெண்டார் அங்கீகாரஞ் செய்துகொண்டது மிகவும் ஆச்சர்யகரமாக இருக்கின்றது.

சங்கங்கள் தங்களுடைய நிர்வாகச் செலவிற்காகச் செலவழிக்கும் தொகை ரூ. 205,000-த்திலிருந்து ரூ. 282,000-க்கு உயர்ந்திருக்கின்றது. இவ்விஷயம் தீர விசாரிக்கப்படவேண்டியது அவசியமாக இருக்கின்றது. டிபார்ட்டுமெண்டுக்காக கவர்மெண்டார் செலவழிக்கும் தொகையும் அதிகமாகவே செலவழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

***

"மெட்ரூஸ் டைம்ஸ்" பத்திரிகையில் விவசாயக் குறிப்புகள் எழுதும் நேயர் ஒருவர் இந்திய விவசாயிகளுக்கு விவசாய விஷயத்திலுள்ள அசிரத்தையை எடுத்துக் காட்டி ஒற்றை நாற்று நடுவதால் உள்ள பிரயோஜனங்களை எடுத்துக் கூறுகிறார்.

ஒற்றை நாற்று நடுதல்.

ஒற்றை நாற்று நடுவதால் விதை குறைவாக செலவாகிறதென்றும், பயிர் திடமாகவும், செழிப்பாகவும் வளர்கிறதென்றும் நெல்லும் வைக்கோலும் அதிகமாக விளைகிறதென்றும் சொல்லுகிறார். இத்தகைய நன்மைகளைக் கைகொள்ள படித்த இந்தியர்களும் தாமதஞ் செய்வது மிகவும் ஆச்சர்யத்தைக் கொடுக்கின்றது. உதாரணமாக குடகு நாட்டைச் சேர்ந்த படித்த மிராசுதார் ஒருவர் ஒற்றை நாற்று நடுவதால் அதிகப்பணம் செலவாகிறதென்றுச் சொன்னார். நாற்றை ஒவ்வொன்றாகப் பிரிப்பதில் அதிகத் தாமதம் ஏற்படுகிறதென்றும் அதற்காக அதிக கூலிகள் நியமிக்க வேண்டியிருக்கிறதென்றும் அதனால் செலவு அதிகமாகிறதென்றும் அவர் சொன்னார். ஒற்றை

நாற்றை நட்டுப்பார்த்த இதரஜில்லாக்களிலெல்லாம் அனுபவம் வேறுவிதமாக இருக்கின்றது. குடகு நாட்டிலும் இம்முறை அதிகப் பலனைத் தரக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. ஆரம்பத்தில் செலவு கொஞ்சம் அதிகமானாலும் நாளடைவில் அதிக நன்மை ஏற்படக்கூடும்.

தென் ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த மிஸ்டர். கொழுந்தைவேலு முதலியார் 1910-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் மெட்ரூஸ் மெயில் பத்திரிகைக்கு இவ்விஷயதில் தமது சொந்த அனுபவத்தை எழுதினார். அஃது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் எழுதினது பின்வருமாறு:—

"ஒரு வாரத்தில் நாற்றில் கிளைகள் ஆரம்பித்தன. இரண்டு மூன்று வாரங்களுக்குள் 10, 15 கிளைகள் ஆரம்பித்துவிட்டன. பயிர் மிகச் செழிப்பாக வளர்ந்தது. இதைப்பார்த்த அக்கம்பக்கத்து ரையத்துகளெல்லாம் நிலத்தின் செழிப்பென்றுச் சொன்னார்கள். சிலநாற்றுகளை மேற்படி இடத்திலிருந்து எடுத்து தாழ்ந்த உப்புப் பூமியில் நட்டேன். அங்கும் அவைகள் எவ்விதக் குறைவுமின்றி செழிப்பாகவே வளர்ந்தன. நாற்று நட்ட நாள் முதற்கொண்டு மழை சிறிதும் இல்லாமற் போனாலும பயிர் தினந்தோறும் செழிப்படைந்தே வந்தது. நெற்பயிருக்கு சகஜமாக வரும் பூச்சி வியாதிகள் இப்பயிருக்குவரவில்லை. வைக்கோலும் அதிகமாகவே கண்டது. என்னுடைய சொந்த அனுபவத்தில் பார்த்த வரைக்கும் இந்த நிலங்களிலிருந்து இதுவரைக்கும் இத்தகைய மாசூல் கிடைத்தது கிடையாது. ஏகர் ஒன்றுக்கு முன்னதாக 25 கலம் காணும் இடத்தில் 45 கலம் அறுவடையாயிற்று. பக்கத்து விவசாயிகளின் பயிர்களுக்கு பூச்சிகளாலும் வியாதிகளாலும் சேதமாயிற்று. என் பயிருக்கு பூச்சியும் வியாதியும் வந்தாலும் அவைகளைத் தாங்கிநிற்க பயிர்களுக்குத் தக்க பலமிருந்தது"

கூலிகள் விஷயமாக முதலியார் கூறுவது என்னவென்றால் காணி ஒன்றுக்கு முன்னர் 16 பேர் வேண்டியிருந்தால் இந்நூதன முறையில் 10 பேர் போதுமானதாக இருந்ததென்றுச் சொல்லுகிறார். அனுபவமும் பரீட்சையும் ஜனங்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை.

* * *

வங்காள மாகாண கூட்டுறவு வர்த்தமானியில், கிராமப் பஞ்சாயத்துகளிலும், லோகல்போர்டுகளிலும், ஜில்லாபோர்டுகளிலும் மாகாணசட்டசபைகளிலும், இந்தியா சட்டசபைகளிலும் கூட்டுறவினர்களின் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதாக கல்கத்தாவாசியாகிய புரொபெஸர் கோயாஜி என்பவர் எழுதியிருக்கிறார். கவர்ன்மெண்டார் நியமனஞ் செய்யும் நாமினேஷன் முறையில் இத்தகையப் பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடுமா

**கூட்டுறவினர்களின் பிரதிநிதித்துவம்**



னாலும் எலக்ஷனைவிட அது சிலாக்கியமானதல்ல. வங்காளத்தில் சற்றேரக்குறைய மூன்று கிராமங்களுக்கொரு கிராமப்பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கின்றது. மூன்று கிராமங்களில் ஒன்றிலேனும் கூட்டுறவுச் சங்கம் இருக்குமாகில் கூட்டுறவினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்காகவென்று ஒரு பிரதிநிதியின் ஸ்தானத்தை தனியாகப் பிரித்து வைக்கவேண்டுமென்றும் இரண்டு அல்லது மூன்று கிராமங் களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருக்குமாகில் ரிஜிஸ்தராரவர்களுடைய சிபார்சின்மேல் இரண்டு மூன்று ஸ்தானங்களையே கூட்டுறவுப் பிரதிநிதிகளுக்காகவென்று பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்று அவர் சொல்லுகிறார். தாலுக்கா போர்டுகளிலும், ஜில்லா போர்டுகளிலும் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிநிதிகள் ஸ்தானம் கூட்டுறவினர்களுக்காக பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்றும், அவ்விரண்டு ஸ்தானங்களில் கிராமச்சங்கங்களின் பிரதிநிதியொருவரும் சென்டிரல் பாங்குகளின் பிரதிநிதியொருவரும் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும் சொல்லுகிறார்.இதேவிதமாக மாகாண சட்டசபைகளிலும்,இந்தியா சட்ட சபையிலும் இதேவிதமாக இரண்டு ஸ்தானங்கள் கூட்டுறவினர்களுக்காக தனியாகப்பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டுமென்று அவர் கூறுகிறார். பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவதில் ஒவ்வொருவித இயக்கத்தார்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுவது அவசியம். விவசாயிகளுக்குப் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் வேண்டியது அத்தியாவசியமாக இருக்கின்றது, விவசாயிகளுக்குள் கூட்டுறவினர்கள் மிகவும் தேர்ந்தவும் புத்திசாலியுமான விவசாயிகளாதலால் அவர்களுக்குப் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டியது அவசியமென்று புரொபெஸர் கோயாஜி சொல்லுகிறார். கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதில் சுய ஆட்சிக்கு வேண்டிய பழக்கமும் அனுபவமும் ஏற்படுவதால் இவ்விதமாகப் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் வேண்டுமென அவர் கூறுகிறார்.

அவர் கூறும் காரணங்கள் தகுந்தவையென்றும் நியாயமானவையென்றும் நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. விவசாயத்தில் தேர்ந்த அனுபவசாலிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேருகிறார்களென்றுச் சொல்லுவது சரியான விஷயமாகாது. அத்தகையவர்கள் சேருவார்களாகில் சட்டசபைகளில் அத்தகையவர்கள் ஸ்தானம் பெறுவது நிச்சயம். கூட்டுறவு நம்தேசத்தில் எப்படியாகிலும் தற்காலம் பிரத்தியேக விஷயமாகச் சொல்லக்கூடாது. கூட்டுறவு ஒருதனி விஷயமென்றும் அதற்குத் தனியாக பார்லிமென்டில் பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் பிரிட்டிஷ் கூட்டுறவினர்கள் சென்ற எலக்ஷனில் தான் உரிமை கொண்டாட ஆரம்பித்தார்கள். அவர்கள் அப்படிக்கேடபதற்கு சில உண்மையான காரணங்கள் இருந்தன, வரிவிஷயமாகவும், உணவுப்பொருள்களின்

நிர்வாக விஷயமாகவும், நிலக்கரி ஸப்ளை விஷயமாகவும் உண்மையாகவே அவர்களுக்குச் சில குறைகளிருந்தன. தவிர கோயலிஷன் கவர்ன்மெண்டார் முதலாளிகள் வார்த்தையை அதிகமாகக்கேட்டு அதன்பிரகாரம் நடப்பதாக கூட்டுறவினர்கள் எண்ணினார்கள். இவ்வெண்ணம் சரியானதோ இல்லையோ நமக்குத் தெரியாது. கூட்டுறவினர்களுக்குப் பிரத்தியேகப் பிரதிநிதிகள் அனுப்பும் விஷயமாக அபிப்பிராயம் எல்லோருடையதும் ஒன்றாக இருக்கவில்லை. இருந்தபோதிலும் மேஜாரிடியார் அபிப்பிராயம் அனுகூலமாக இருந்தபடியால் பத்துப்பிரதிநிதிகளையனுப்புவதாக நிச்சயஞ்செய்தார்கள். ஆனால் அவர்களுள் ஒருவர்தான் வெற்றியடைந்தார். அயர்லாந்திலும் விசேஷமாக இந்தியாவிலும் வாக்குவாதத்திற்கிடமான இவ்விஷயங்களில் கூட்டுறவினர்கள் தலையிடாதிருக்க வேண்டுமென்பதே கூட்டுறவினர்கள் பெரும்பான்மையோருடையவும். அபிப்பிராயம். கூட்டுறவிற்கென்று தனிப்பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டால் கூட்டுறவினர்கள் இராஜீய விஷயங்களில் தலையிடாமல் இருக்கமுடியாது. இந்தியாவின் குடிமக்களில் பெரும்பான்மையோராகிய விவசாயிகள் இராஜீ விஷயங்களில் தலையிட்டுள்ள படித்தவர்களினின்றும் காப்பாற்றப்படவேண்டுமென்றும் ஒரு அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது. இதே அபிப்பிராயந்தான் புரொபஸர் கோயஜீயையும் "கியாபிடல்" (Capital) பத்திரிகைக்கு விஷயமெழுதிய நிருபரையும் இத்தகைய எண்ணத்திற்கு ஆளாக்கியதென்று எண்ணுகிறோம். இந்தியர்களுடைய எந்தவகுப்பும் அல்லது எந்த விஷயமும் கவர்ன்மெண்டார் மீது செல்வாக்குப்பெற்று அந்தசெல்வாக்கின் காரணமாக இதரவிஷயங்கள் கெட்டுப்போகுமென்று சொல்லக் கூடிய அவ்வளவு செல்வாக்குப் பெற்றுவிடவில்லை. பொறுப்பான ஆட்சி சமீபத்தில் கொடுக்கப்படும் அச்சமயம் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் அதை திருத்திக்கொள்ள வேண்டிய அவகாசமிருக்கின்றது. தற்சமயம் கூட்டுறவினர்கள் பொது ஜனங்களிடமிருந்துபிரிவுபடாமல்இருத்தலேமேலனதென்றுகருதுகிறோம்.

* * *

சென்னைமாகாண சட்டசபையின் கடைசிமீடிங்கில் கவர்ன்மெண்டாருடைய பிரசுரங்கள் எல்லாவற்றிலும் கூட்டுறவுச் சங்கங்களுடைய விளம்பரங்கள் இலவசமாய்ப் பிரசுரிக்கப்படவேண்டுமென்று கனம் மிஸ்டர். பி. வி. நரசிம்ஹ ஐயரவர்கள் ஒரு பிரேரபணை கொண்டுவந்தார். கவர்ன்மெண்டு பிரசுரங்களின் இத்தகைய விளம்பரங்களில் எத்தகைய நன்மையும் விளையாதென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டாலும், இது விஷயமாக கோவாபரேடிவ் ரிஜிஸ்தாரரை. கலந்து யோசனை செய்வதாக கவர்ன்மெண்டார் பதில் கூறினார். கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம்போலவே நாமும் அபிப்பிராயப்படுகிறோம். இராஜாங்கப் பிரசுரங்களில் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அதிக பயன்கிடைக்காது.



# கூட்டு வியாபாரம்.

[கோவாபரேடிவ் சங்கங்களின் கௌரவ (ஹானரெரி) அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராராகிய திருவண்ணாமலை எம். எஸ். சேஷாசல ஐயரவர்கள் எழுதியது.]

ஐக்கிய சங்கங்களில் மெம்பர்களுக்கு வேண்டிய சகல தினுசுகளையும் நயமாய்க் கிடைக்குமிடத்தில் மொத்தமாய் வாங்கி வேண்டியபடி பிரித்துக்கொள்ளுவதாலும் தங்களிடம் உள்ள மாசூல்களை ஒன்றுசேர்த்து தக்க காலத்தில் நல்ல விலைக்கு விற்று பாகித்துக்கொள்ளுவதாலும் ஏராளமாய் இலாபம் மெம்பர்களுக்குக் கிடைக்குமென்றும், இடையிலுள்ள வியாபாரிகள் அநியாயமாய் அடையும் அனுகூலங்களனைத்தும் மெம்பர்களுக்கே அகப்படுமென்றும் ரிஜிஸ்ட்ரார்களும் இதர ஐக்யர்களும் பலதரம் தெரிவித்தும் நமது சங்கங்கள் இன்னும் இவைகளை சரிவரக் கையாளவில்லை. சில விடங்களில் சொற்ப பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளால் அனுகூலங்கள் எவ்வளவிருக்கிறதோ அவ்வளவு கஷ்டங்களும் காணப்படுகின்றன. என்னுடைய சொற்ப அனுபவத்தை யொட்டிய சில விஷயங்களை சிநேகிதர்களுக்கு தெரிவித்தால் இவ்விஷயம் அவரவர்களுடைய ஆழ்ந்த யோசனைக் கருகாகுமென்று எண்ணிச் சொல்லத்துணிந்தேன்.

சங்கங்களின் மெம்பர்களுக்கிருக்கும் முன் கடன்களை நாம் பைசல் செய்து 5 அல்லது 10-வருஷத்தில் திருப்பிச் செலுத்த வேண்டுமென ஷரத்து ஏற்படுத்துவதினாலேயே கடன்கள் பைசலாகி விடுவதில்லை. விசேஷமாய் வெளிகளில் நல்ல வரும்படி யுள்ளவர்களுக்கு குறைந்தவட்டிக்குப் பணம் கிடைக்கிறது. வட்டி கொடுக்க முடியாதவனுக்குத்தான் அதிக வட்டிப்போடப்படுகிறது. ஆகவே எந்தெந்தவிடத்தில் முன் கடன் அதிக வட்டி யிருக்கிறதோ அவ்விடத்தில் சொத்தும் ஒரு வரையறுக்கப்பட்டும், வருமானமும் ஏராளமின்றியுமே யிருக்கும். இப்படிப்பட்டவர்களைத் தான் அதிகவட்டியினின்று நிவர்த்தி செய்து முதலாளிகளாக்க வேண்டும். முன் கடன் தீரவேண்டுமானால் மெம்பர்களின் வருமானம் உயர்த்தப்படவேண்டும். வட்டி வீதத்தின் வித்தியாசம் ஒன்றினாலேயே கடன் பைசல் செய்யப்படுமா அல்லது செய்ய முடியாதாவென யோசித்தால் ஒரு தலைமுறை காலம் கடனுக்கு கெடுகொடுத்தாலும் ஒருகால் கடன் தீருமோ என்னமோ அதுவும் சந்தேகம். ஆதலால் குடித்தனக்காரர்களின் உழைப்பிலிருந்து கிடைக்கும் இலாபத்தை எந்தெந்த விதத்தில் இதரர்கள் அடைகிறார்களோ அல்லது கொள்ளையிடுகிறார்களோ அந்த வழிகளை எடுத்துக்காட்டி அந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்து அந்த மீதியை குடித்தனக்காரர்களின் கடனுக்கோ இதர அனுகூலங்களுக்கோ உபயோகித்தால்அப்போதுதான் அவனுக்கு நாம் நிலையான

53

வும் உண்மையானவும் நன்மை செய்ததாகும். முன் கடன் தீர்க்க கடன் கொடுக்குமுன் அவனுக்கு வருஷாந்திர செலவுக்குவேண்டிய தொகையை நிறுத்தி வைத்துக்கொண்டு மீதியையே கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் அவனுடைய விவசாயம் விர்த்தியாகும். தக்க வரும்படியும் கிடைக்கும். ஒரு சாதாரண ஏழை குடும்பத்தில் வருஷம் 1-க்கு சராசரி ரூ. 250 வருமானம் வந்தால் அதில் கிஸ்தி ரூ. 20 கடனுக்கு வட்டி ரூ. 30. சாப்பாட்டு செலவு 200 ரூபாயுமாகிறது. வருஷ முதலில் முன் வருஷத்தைவிட ரூ. 20 அதிக கடனாகிறது. இவற்றில் தன் மாசூலை நல்ல விலைக்கு அதாவது அது கடைசியாய் விற்கும் விலை தனக்கு கிடைக்கும்படி விற்றால் இன்னும் ரூ. 50 அதிகமாயும் தன் சாப்பாட்டு செலவுகளை மொத்தமாய் நயமான விலைக்கு வாங்கினால் அதில் சராசரி ரூ. 20 ஆக ரூ. 70 அதிகமாய்க் கிடைக்குமென்றால் இந்த மீதியை அவன் அடையும்படி ஏற்பட்டால் அவனுக்கிருக்கும் கடன் எவ்வளவு துரிதமாய் அடைக்கப் படுமென்றும் அவனது நிலையை எப்படி உயர்த்தப்படலா மென்பதும் கனவான்களே யோசித்துக்கொள்ளலாம்.

ஐக்ய சங்கமானது ஒரு பெரிய சக்தி. இச்சக்தியால் அசாத்யமெனத் தோன்றும் காரியங்களை யெல்லாம் வெகு சுலபமாய் செய்ய சாத்தியமாகிறது. 1917-ம் வருஷத்தில் திருவண்ணாமலை தாலூக்காவில் மழையில்லாமல், புஞ்சைப் பயிர்கூட நஷ்டப்பட்டது. விசேஷமான மணிலாக் கொட்டை சாகுபடிகள் கேள்வி முறையின்றி குறைந்தவிலைக்கு விற்கப்பட்டு பயிரிடுவோருக்கு லாபமின்றி கஷ்டப்பட்டார்கள். விவசாய இலாகாதாரர் அச்சமயம் கம்போடியா பருத்தி சாகுபடி செய்தால் தக்க லாபம் கிடைக்குமென போதித்ததுடன் விதையும் கொடுப்பதாய்ச் சொன்னார்கள். இது விஷயத்தை ஷை தாலூக்கா சங்கங்கள் ஏற்றுக்கொண்டு மெம்பர்களுக்கு சொன்னதில் சுமார் 3000 ஏகர் நிலங்களில் கம்போடியா சாகுபடி இவ்வருஷம் செய்யப்பட்டது. ஆனால் தெய்வாதீனமாய் மழைக் குறைவால் எதிர்பார்த்தபடி மாசூல் கிடைக்காமற் போனாலும் இந்த மழை யில்லாத காலத்தில் இதர பயிர்களில் கிடைக்கக்கூடிய மாசூலைவிட அதிக லாபம் கிடைத்திருப்பதாய் மெம்பர்கள் திருப்திகரமாய் சொல்லுகிறார்கள். இதிலும் சங்கங்கள் செய்யவேண்டிய உதவி யிருக்கிறது. அனுபவ மில்லாத ஓர்பயிரைப்பற்றி சொல்லி விதை வாங்கிக் கொடுத்து பயிர் செய்யும்படி சங்கம் தூண்டுவதும், அப்படியே விலை தெரியாத புது தினுசான பருத்தியையும் சரியான விலை யெடுக்கும்படி செய்யவேண்டியதும் சங்கங்களின் கடமையாகும். கொட்டை எடுத்த பருத்தியானால் பம்பாய்க்கு நேரே யனுப்பலாம். கொட்டை யெடுக்கும் மிஷன் நம் பிரதேசத்தில் இல்லை. அதை இவ்வருஷம் நாம் ஐக்ய சங்கத்



தில் ஆரம்பிப்பதென்றால் முதல் வருஷமா யிருப்பதாலும் பின் வருஷங்களில் இப்பயிரின் நிலைமை யெப்படி யிருக்குமென ஒரு தோற்றம் இப்போது ஏற்படாதபடியாலும் இப்போது சாத்தியமில்லை. எஞ்சின்கள் வைத்திருக்கும் சிலரை அதாவது கொட்டை யெடுக்கும் யந்திரம் (Engine) வாங்கும்படி பிரயத்தனம் செய்திருக்கிறது. அதுவரையில் பருத்தி மாசூலை விற்பதற்காக கொட்டையுடன் கூடின பருத்தியையே பின்னி கம்பனியாருக்கு அனுப்புவதென்றும் அவர்கள் அப்பப்பொழுது காலவிலைப்படி கிரயம் கொடுப்பதென்றும் தீர்மானித்து 4-5 பாரம் பருத்தியும் அனுப்பி பணம் பட்வாடா செய்யப்பட்டது. பின்னி கம்பனியார் இப்படி சில்லரை சில்லரையாய் வாங்க ஒத்துக்கொண்டது குடித்தனக்காரர்களுக்கு சரியான கிரயம் நேரில் கிடைக்கிற தென்னும் ஒரே நோக்கத்துக்காக வென்று எனக்குத்தெரியும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்காக திருவண்ணாமலை தாலூக்காவிலுள்ள சங்கங்களை யெல்லாம் சேர்த்து ஒரு ஸ்டோர் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் இதரர்களும் மெம்பர்களாகலாம். அதாவது தினுசு வாங்குபவர்களும் தினுசு உற்பத்தி செய்பவர்களும் ஒருங்கு சேரும்படி ச்செய்வது நோக்கம் (Prpoducer & consumer) இதில் இந்த பருத்தி மாசூல் கொண்டு வந்தவுடன் நிறைபோட்டு ரசீது கொடுப்பதுடன் அவ்வப்போதிய பருத்தி விலையும் தெரியுமாதலால் 100-க்கு 50-அட்வான்ஸும் கொடுக்கப்படுகிறது. உடனே பின்னி கம்பனியாருக்கு அனுப்பி தொகை கிடைத்தவுடன் மணங்கு 1-க்கு 0-2-0 கமிஷன் பிடித்துக்கொண்டு மீதியவ்வளவும் சம்பந்தப்பட்ட சங்கத்துக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் இதில் 100-க்கு 50 அட்வாஸ்ன் பட்வாடா செய்ய பெருமுதல் வேணும். அதற்கென்ன செய்வதென சந்தேக முண்டாகலாம். இந்த ஸ்டோருக்கு அவ்வளவு முதலும் கிடையாது. அது அட்வான்ஸ் செய்தும் இல்லை. சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஜில்லா பாங்கார் 1000, 2000 குறுகிய காலகடன் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இந்த கடனிலிருந்து மாசூல் அட்வான்ஸ் சங்கங்கள் நேரில் பட்வாடா செய்து சரக்கின் கிரயம் கிடைத்வுடன் வட்டியுடன் எடுத்துக்கொண்டு மீதியை பட்வாடா செய்கிறது. இம்மாதிரி செய்வதால் மூலைக்காட்டிலுள்ள ஒரு குடித்தனக்காரனிடமுள்ள மாசூலுக்கு ஏற்றமதி விலை கிடைப்பதுடன் இடையிலுள்ள பல வர்த்தகர் அடையும் லாபங்கள் எடுபட்டுப்போகிறது. இந்த ஸ்டோர் இந்த ஜனவரிமீ 25உ ஆரம்பித்தது. அக்காலம் கிடைக்கக்கூடிய உளுந்து துவரை முதலிய தானியங்களை சேர்த்து அனுப்பும்படி சங்கங்களுக்கு சொன்னதில் ஏதோ சிலர் மாத்திரமே அப்படி செய்தார்கள். இந்தஸ்டோருக்கு ஆரம்பதினத்தில் 150 ரூ. மூலதனமா யிருந்தது. அதைக்கொண்டு இந்த உளுந்து துவரைகள் சங்கங்கள் மூலமாய் வாங்கி, மெம்பர்களுக்கு பட்வாடா செய்ததில் ரூ

50-லாபம் கிடைத்தது. கிராமங்களில் வியாபாரிகள் சரக்கு வாங்கும் காலத்தில் விலையை தூக்கலாக வைப்பது வழக்கம். அப்படியே ஆரம்பத்தில் ரூபாய்க்கு 3-படி முதல் 4-படி வரையில் விலை யிருந்தது. அதன்படி மெம்பர்களை சப்ளை செய்யச்சொல்லி ஒரு வாரம் கழித்ததும் விலை படி $2\frac{1}{4}$க்கு இறங்கிவிட்டது. மார்க்கெட் விலைப்படி விற்றதில் லாபம் கிடைத்தது தவிர க்ஷாமகாலமா யிருப்பதால் உணவுப்பொருள்களான அரிசி, கேழ்வரகு சோளம் முதலிய தினுசுகள் கிராமங்களில் அனியாய விலைக்கு விற்பதால் இந்த ஸ்டோர் மூலமாய் தருவித்து ஒவ்வொரு சங்கத்துக்கும் கொடுக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு சங்கத்துக்கும் இவ்வளவிவ்வளவு தினுசுகள் வேண்டுமென ஒரு இண்டெண்டு அனுப்புகிறார்கள். அவைகளை ஸ்டோர் மொத்தமாய் தருவித்து சங்கத்துக்கு சொல்ப கமிஷன் மாத்திரம் வைத்து பட்வாடா செய்துவிடுகிறது. இப்படி சங்கங்கள் மாதாமாதம் அரிசி மூட்டை உப்புமூட்டை மிளகாய் கிரோஸிஞயில் இவைகளை சங்கங்கள் எடுத்துச் செல்லுகின்றன. இப்போது இந்த சங்கத்தின் மூலதனம் 600 ரூபாய். அரிசி முதலியவை வாங்க இந்த தொகை போதாதலால் லோகல் அர்பன் பாங்காரை ரூ. 3000. கடன் கொடுக்கும்படியும் அதற்கு ஜாமீனாய் சரக்குகளை தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டு ரூ 500-க்கு மாத்திரம் பெற்றுக்கொண்டு பட்வாடா செய்யும்படி கோரினோம். அதன்படி அந்தக்கடன் கிடைத்தது. ஏற்கனவே உப்பும் கிரோஸினுயிலும் சங்கங்களுக்காக மொத்தமாய் வாங்கி பட்வாடா செய்துவருகிறோம். பர்மா அரிசி 200 மூட்டை 2 தடவை மதராஸ் மார்க்கட்டில் வாங்கினோம். இந்த அரிசி வியாபாரிகளிடம் நாங்கள் பட்டபாடு சொல்லிமுடியாது. வியாபார அனுபவமில்லாத இதரர்கள் இவர்களிடம் அகப்பட்டால் அதோடு சங்கத்தின் கதி அதோகதிதான். நிலையானவரம்பு கிடையாது. நாணயம் கிடையாது. ஆனாலும் 200 மூட்டை வேறு விதியில்லாமல் வாங்கிப்போய் சங்கங்களுக்கு பட்வாடா செய்ததில் விலை அதிக சரசமில்லாவிட்டாலும் மற்ற வியாபாரிகளைவிட அனுகூலமாகவே யிருந்தது. அதிலும் சுமார் 100 ரூபாய் லாபம் கிடைத்தது. மிளகாய் கேழ்வரகு சோளம் கொஞ்சம் வாங்கி சங்கங்களுக்கு கொடுத்தோம். மிளகாய் டௌனில் தூக்கு 1-12-0ம் கிராமங்களில் ரூ 2 வீதமும் விற்கும்போது டௌன் மெம்பர்களுக்கு 1-8-0-க்கும் கிராமங்களில் ரூ 1-9-0-க்கும் பட்வாடா செய்யப்பட்டது. அதிலும் சுமார் 50 ரூபா லாபம் கிடைத்தது. பிறகு மெஸர்ஸ் பெஸ்ட் கம்பனியார் முனிசிபாலிடி தாலுக்கேபார்டார் மூலமாய் அரிசி விற்க ஏற்பாடு செய்திருப்பது தெரிந்து ஐக்ய சங்கங்களுக்கு பட்வாடா செய்தால் கிராமங்களில் பரவுமென ரெஜிஸ்திரார் அவர்கள் மூலமாய் மனுசெய்ய முனிசிபாலிடி முதலியவைகளுடன் அதேகன்டிஷனில் ரெஜிஸ்திரார்



சிபார்சுசெய்யும் ஐக்ய சங்கங்களும் சேர்க்கப்பட்டன. அதின்படி முதல் தரம்பெரியமில் அரிசி 200 மூட்டை திருவண்ணாமலைக்கும், 206 மூட்டை போளூருக்கும் தருவித்தோம். வேறு அரிசி அங்கு கிடையாதாதலால் திருவண்ணாமலையில் அந்த அரிசி 15 தினத்தில் செலவாய்விட்டது. சிலர் ரங்கூன் அரிசியில் சிறியமில் உயர்ந்ததும் கோறுவதால் லிவில் ஸப்ளைஸ் டிரக்டர் அவர்கள் மூலமாய் 200 மூட்டை சிறியமில்லும் 50 மூட்டை நொய்யும் கண்ட்ரோல் விலைக்கு கிடைத்தது. அவைகள்தான் இப்போது விறக்கப்படுகிறது. $3\frac{1}{4}$ படி அரிசியும் 5 படி நொய்யும் சில்லரையிலும் 0-8-0 லாபத்துச்கு சங்கங்களுக்கும் பட்வாடா செய்கிறது. தற்காலம் சிப்பந்தி செலவு வாடாகை மீ 40 ரூபாய் ஆகிறது. இந்த $2\frac{1}{2}$ மாதகாலத்துக்குள் 600 ரூபாய் மூலதனத்துக்கு, குறைந்தது 400 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இப்படி சங்கங்கள் அங்கங்கே ஆரம்பித்து வேலைசெய்யவும், வேண்டிய தினுசுகள் சரியான விலைக்கு கிடைக்கும்படி செய்யவும், சென்னை போன்ற இடத்தில் ஒருஸ்டோர் தேவை இப்போது திருலல்லிக்கேணி ஸ்டோர் ஏதோ அப்படி ஒருஏற்பாடு செய்ய முன்வந்திருப்பதாய் தெரிகிறது. அவ்வகையான ஓர் பொது ஸ்தானம் நமக்கு ஏற்படும் வரையில் இதர வியாபாரிகளிடம் வியாபார அனுபவமில்லாத நாம் போய்சிக்கிக்கெண்டால் ஐக்ய பிரபாவத்துக்கே நஷ்டமாகும். உதாரணமாக இப்போது இந்த பர்மா அரிசி இந்த ராஜதானியில் நம் சங்கங்கள் மூலமாய் சுமார் 50000 மூட்டைகள் மாதா மாதம் செலவாகுமென தற்காலம் தோன்றுகிறது. திருவல்லிக்கேணி ஸ்டோர் மாதம் 50000 மூட்டை நேரில் பர்மாவிலிருந்து தருவித்து பட்வாடா செய்ய ஏற்பாடு செய்தால் கண்ட்ரோல் லாபமான மூட்டைக்கு எட்டணு வீதம் மாதம் 25000 ரூபாய் இலாபம் தருகிறது. இந்த தொகை திருவல்லிக்கேணி சங்கத்துக்காவது வரடடும் அல்லது எல்லா சங்கத்துக்கும் பாகித்தாவது கொடுக்கப்படடும். ஐக்கியஇயக்கத்தை விட்டு இந்த லாபம் போவதில்லை. ஒருவருஷத்தில் லட்சக்கணக்கான முதலாகிறது. இப்படியே நாம் ஒன்று சேர்ந்து வியாபாரத்தில் கவனம் செலுத்தினால் நம்கிராமவாசிகளை பிடித்திருக்கும் தரித்திரம் என்கிறநோய் தலைகாட்டாது. அதினின்று செல்வநிலை நல்ல ஸ்திதியடையும். இந்த பெரும் விஷயத்தில் கனம் ரெஜிஸ்திரார் அவர்கள் எடுத்திருக்கும் பெரும் முயற்சியும் எப்போதும் நமக்குதயாராக கார்த்திருக்கும் அவருடைய மனப்பூர்வமான உதவியும் நாம் கோரும் உன்னத நிலையை நமக்கு சீர் திருத்திக் கொடுக்குமென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

— —

# விவசாய ஏற்பாடும் கிராமச் சீர்திருத்தமும்.

ஸ்ரீமான் சி. வி. கங்காதரசாஸ்திரி பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது.

நிர்வாக கௌன்ஸில் மெம்பர் கனம்—மிஸ்டர் ஜே. ஜி. கம்மிங் துரையவர்களின் அக்கிராசனத்தின்கீழ், வங்காள கோவாபரேடிவ் ஆர்கானிஸேஷன் சொஸைடியின் ஆதரணையில் பங்காளத்திலுள்ள பீபம், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் கலெக்டருமான மிஸ்டர் ஜி. எஸ். டட். ஐ. ஸி. எஸ். 1919-ம் வருஷம் மார்ச்சுமாதம் 28-ந் தேதி ஒரு உபந்நியாசம் மேற்படி விஷயமாய்ச் செய்தார். இவ்வுபந்நியாசத்தில் விளக்கப்பட்ட முக்கியமான மூன்று விஷயங்களாவன (1) இந்நாட்டில் விவசாயமே எல்லாத்தொழில்களையும் விட, பெரிய கைத்தொழிலாக இன்னும் இருக்கிறது. (2) கிருஷிகளில் நவீன சாஸ்திரமுறைகளை அனுசரிப்பதினால் மேன்மேலும் விருத்தியாகும் மார்க்கமிருக்கிறது. (3) இம்மாதிரி உணர்ச்சிகளைப் பரவவைப்பதற்காக மத்தியஸ்தலங்கள் ஏற்படுத்தும் முறையையும் கோவாபரேஷன் முறையையும் ஞானத்தைப்பரவவைக்கும் ஏஜன்ஸி ஒன்று ஏற்படுத்தலாம்.

முதல் இரண்டு விஷயங்கள் நன்கு விளங்குவதால் அவைகளைப் பற்றி விரித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. இந்தியக் குடியானவர்கள் தங்களுக்குள் வழக்கமாகக்கொண்டிருக்கும் அனுஷ்டானங்களையும் மாசூல்களையுமே கையாளுவதில் கிடைக்கும் சொற்ப ஊதியத்தையும், இதர நாடுகளில் நவீன ரசாயனசாஸ்திரீய ஏற்பாடுகளை அனுஷ்டித்துப் பெறும் விசேஷ இலாபத்தையும் ஒப்பிட்டுக்காட்டி இந்தியாவின் ஸ்திரமான விளைபொருள்களின் பஞ்சம் விலக்கமுடியாததல்ல வென்றும், புதிய ஏற்பாடுகளை இந்தியக் குடியானவர்களுக்கெதிரில் செய்து காட்டினால் அவர்கள் அஞ்ஞானம் நீங்கி மிக்கப்பயனடைவார்களென்றும் மிஸ்டர். டட் நன்கு விளக்கிக்காட்டினார். குடியானவர்கள் இம்மாதிரி பரீட்சார்த்த ஏற்பாட்டை எப்படி செய்து பார்க்கமுடியும்? அவர்களிடத்தில் பரீக்ஷைபார்க்க பணமில்லை. விவசாய உபந்நியாசகர்களோ தங்களுடைய மாதிரிகளை அனுஷ்டித்தால் ஏராளமான விளைச்சல் அவசியம் கிடைக்குமென்று வற்புறுத்துகிறார்கள். அதிர்ஷ்டம் வாய்ந்த இந்தியச் செல்வர்களோ நியாயஸ்தலத்தில் கக்ஷிக்காரர்களுக்காக வழக்காடுவதிலாவது, பெரிய தொழிற்சாலைகளில் பங்கெடுத்துக்கொண்டு அதினின்றும் டிவிடெண்டு பெறும் ஆசையிலாவது அல்லது ராஜாங்கத்தின் வேலைகளில் சேர்ந்தாவது ஈடுபடுகிறார்களே யொழிய விவசாயச் சீர்திருத்தமுறைகளை கவனிப்பதேயில்லை. அற்ப வருமானமுள்ள ஒரு குடியானவன் நல்ல எண்ணத்துடன் இம்மாதிரி ஏற்பாட்டைத் தன் செலவில் பரீக்ஷைசெய்து பார்க்க ஆரம்பித்தால் அவன் ஜீவனோபாயத்தின் மார்க்கம் கெட்டுப்போய்



அவன் கஷ்டப்படநேரும். ஆனால் டிபார்ட்மெண்டார் குடியானவனையும்கிட்ட வைத்துக்கொண்டு அவனுடைய நிலத்திலேயே சீர்திருத்த ஏற்பாடுகளை செய்து காட்டி ஒவ்வொரு மார்க்கத்தையும் விளக்கிப் போதித்து அதனால் விளைவுகளின் பெருக்கத்தையும் காட்டினால் அவனைவிட புத்திசாலித்தனமாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்து இலாபம் சம்பாதிக்கக்கூடியவர் கிடைப்பது அருமை. இம்முறையை எப்படி ஏற்படுத்துவதென்றால் டென்மார்க்கு முதலிய இதர ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் வழக்கங்களை கிராமப் பொதுவிலுள்ள நிலங்களில், மாதிரியாகச் செய்து காட்டுவதிலும், அம்மாதிரி இடங்களில் விவசாயக் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்துவதிலுமே. பீபம் ஜில்லாவில் இம்முறையாக ஏற்பட்டிருக்கும் சங்கங்களைப்பற்றி மிஸ்டர் டட் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்.

இப்பொழுது இருக்கிற கிளைச்சங்கங்களில், பணக்காரனும், ஏழையும், படித்தவரும் படிப்பில்லாதவரும், தாழ்ந்த வகுப்பினரும் கூலிக்காரனும் குடியானவனும் கூடி, இருக்கிறார்கள். பரஸ்பர ஆலோசனை செய்து விஷய ஆராய்ச்சி செய்வதற்காகவும், விதை, எரு, கருவிகள் முதலியவற்றை விவசாய டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களின் சிபார்சின்படி வாங்கி நவீன முறைகளை அனுஷ்டிப்பதும் தான் இச்சங்கத்தின் நோக்கம். ஒவ்வொரு கிளைச்சங்கத்திலும் தற்காலம் 50 முதல் 100-வரையில் மெம்பர்களும் ஒரு பிரசிடெண்டும் ஒரு காரியதரிசியும் இருக்கிறார்கள். கிளைச்சங்கத்தின் எல்லைக்குள் வசிக்கும் எவரும் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தினால் இதில் மெம்பராகலாம். கிளைச்சங்கங்களில் மூன்று மாதத்திற் கொருமுறை மீட்டிங்குகள் நடைபெறும்படி காரியதரிசிகள் ஏற்பாடு செய்வதுடன், மாதிரி நிலங்களின் வெள்ளாமை திருப்தியா யிருக்கும்போது அதைப் பார்ப்பதற்காக தனி மீட்டிங்குகளும் கூட்டுகிறார்கள். விதைகள், எருக்கள், கருவிகள் இவைகள் தேவையான மெம்பர்களிடமிருந்து ஆர்டர்கள் வாங்குவதுடன் தன் வீட்டிலேயே விதைகளைச் சேகரம் செய்து கிளைச்சங்கங்களின் செலவில் அவைகளை வாங்குதல் விற்றல் முதலிய வேலைகளையும் செகிரிடேரியே செய்கிறார். மெம்பர்களுக்குக் கொடுக்கும் விதைகள் எருக்கள் இவைகளின் கணக்குகளைக் கூட ஒவ்வொரு செகிரிடேரியும் வைப்பதும் தவிர வெள்ளாமையின் பலன் சோதனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் செய்துவைக்கும் குறிப்புகளைக்கூட எழுதிவைக்கிறார்கள். அந்தந்தப் பிரதேசங்களுக்கு சம்பந்தப்பட்ட விவசாய உத்தியோகஸ்தர்களும் உதாரண வேலைகளைக் காட்டுபவர்களும் கிளைச்சங்க மீட்டிங்குகளில் ஆஜராகி எந்த மாசூலை எந்த பூமியில் எப்படி, எக்காலத்தில், பயிரிட வேண்டுமென்பதையும் பொதுவாக விவசாயத்தையும் பற்றி போதிக்

கிறார்கள். கிளைச்சங்க காரியதரிசி, டிஸ்ட்ரிக்ட் விவசாய அஸோஸியேஷனில்எக்ஸ் அபிஷியோ மெம்பர். எவ்விதக் கட்டணமும் செலுத்தும் அவசியம் இவருக்குக் கிடையாது.

ஜில்லா விவசாய அஸோஸியேஷனானது வருஷத்திற் கொரு முறை ஒவ்வொரு கிளைச் சங்கத்திலுமிருந்து சில மெம்பர்களை, சின்சூரா அல்லது பர்டுவானில் நடக்கும் விவசாயக் கான்பரன்சுக்குபிரயாணப் படுத்தி அனுப்புகிறார்கள். மேலும் இவ்வஸோஸியேஷன் உதாரண வேலைகள் கற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு வருஷமும் சின்சூரா தோட்டத்திற்கு ஒரு வித்தியார்த்தியை அனுப்ப ஸ்காலர்ஷிப் ஒன்று கொடுக்கிறது. கிளைச் சங்கங்களிலெல்லாம் பூச்சி புழுக்கள் முதலிய வற்றைப்பற்றியும் இதர இனிய விஷயங்களைப் பற்றியும் எளிய நடையிலெழுதிய புத்தகங்களிருக்கின்றன. மெம்பர்கள் சேர்ந்தும் தனியாகவும் அவைகளைப் படிக்கிறார்கள். கிளைச்சங்க வேலைகளை ஒற்றுமைப் படுத்தவும் மெம்பர்களின் பரஸ்பர சேர்க்கையை நிலைபெறச் செய்யயும். ஜில்லாவிவசாய அஸோஸியேஷனானது "பூமி லக்ஷ்மி" என்னும்பெரிய பத்திரிகை ஒன்று மூன்று மாதத்திற் கொரு முறை பிரசுரிக்க ஆரம்பித்திருக்கிறது. அது மெம்பர்களுக்கு சகாய சந்தாவில் கொடுக்கப்படுகிறது. இப்பத்திரிகைக்கு பிபம் ஜில்லாவைத் தவிர அன்னிய ஜில்லாக்களிலிருந்துங் கூட சந்தாதார்கள் சேருகிறார்கள். நேராக வேலை செய்யும் குடியானவர்களுக்கு வேலைக்கு அனுகூலமாய் உள்ள விஷயங்களைச் சொல்லும் பத்திரிகை இதுவாதலால் எல்லாராலும் கவனிக்கத் தகுந்தது.

இப்பத்திரிகையிலுள்ள வியாசங்கள் அந்தந்த கிளைச்சங்கங்களின் மெம்பர்களால் வரைந்தனுப்பப் படுகிறபடியால். எருக்களின் அளவு முதலிய பல வெள்ளாமைகளின் குறிப்புகளும் அவரவர் சொந்த நிலங்களில் கண்ட அனுபவமும் எழுதப்படுகிறது.

மிஸ்டர். டட்டின் உபந்நியாசத்தின் மற்ற பாகங்களில் இச்சங்கங்கள் வேலை செய்யும் மாதிரியும், பின்னால் விருத்தியாகும் மார்க்கங்களும், எப்படி இந்த விவசாயச் சங்கங்களில் கோவாபரேடிவ் எண்ணங்கள் பரவும்படியான சம்பந்த மிருக்கிறது என்பதும், ஐரோப்பாவிலுள்ள டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், இடாலி, ஸர்வியா, முதலிய இடங்களிலும் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் எப்படி கோவாபரேஷன் தளிர்த்து மேன்மை பெற்றிருக்கின்றதோ அதேமாதிரி நம்நாட்டிலுள்ள இக்கிளர்ச்சியும் விருத்தியாகி நன்மை செய்தே தீரும் என்பதும், நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.



இவையெல்லாம் சென்னை ராஜதானிக்கு ஒரு கற்பனைப் பாடம் போல் ஆகவில்லையா என்று சாதாரணமாய்க் கேட்கலாம். சமீப காலங்களில் சென்னை விவசாயம் மலினமடைந்திருக்கிறது. டெல்டா பிரதேசங்களில் கொஞ்ச காலத்திற்கு முன் செழித்திருந்த சில கிராமங்கள் இப்பொழுது வரண்டு கிடக்கின்றன. உரமே போடாத சத்தில்லாத நிலத்தில் யாதொரு மேன்பார்வையும் ஒத்தாசையு மில்லாமல் தனியாய் விடப்பட்டிருக்கும் குடியானவன் முக்கியமாய் பயிர் செய்யும் தானியம் நெல்லே. கொஞ்சம் படித்து சம்பாத்திய ஆசை ஜனித்த ஒவ்வொருவரும் கிராமத்தில் யாதொரு இலாபமும் கிடைக்காதென்றும் அவிடத்தில் படிப்பின்மை காரணமாக அசுசையும், போட்டியும் குடிகொண்டிருக்கும் கீழ் வகுப்பினரோடு கலந்திருத்தல் நரக வேதனைக்குமேல் கஷ்டமானதென்றும் கண்டு கிராமத்தைவிட்டு நீங்குகிறபடியால் அவிடத்து ஜனத்தொகையும் மெலிந்து வருகின்றது.

அம்மாதிரி நிலைமையைச் சீர்திருத்த இந்திய தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? நம்முள் சில பிரமுகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் சாதுர்யங்களைக் கவுன்சிலிலாவது வேறு விதத்திலாவது காட்டுவதற்கு சௌகரியம் ஏற்படாவிடின் அணைந்துபோன எரிமலையைப்போல் அசையாமலிருந்துகொண்டு, தனியாய் அவஸ்தைப் படுவோர்க்குத் தென்பு சொல்லுதல், தாழ்ந்த வகுப்பினருக்கு உதவுதல் கோவாபரேஷன், விவசாயம், முதலிய வேலைகளை முன்னுக்குக் கொண்டு வரும் கௌரவமான அலுவல்களில் ஈடுபடுதல், முதலிய எதையும் கவனிக்காமலிருக்கிறார்கள். சந்தோஷமாய் நல்ல உணர்ச்சியுடனும் சகோதர பாவத்துடனும் மனப்பூர்வமாய் இந்த கோவாபரேஷன் முதலிய மேலான விஷயங்களில இவர்கள் ஈடுபடுவார்களானால் நமது வேலையில் யாதொரு தடங்கலும் ஏற்படாமல் நம்நாடு, ஆச்சரியப்படும்படியான முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமே இல்லை. வங்காள நாட்டு உழைப்பு, நமக்கு கற்பனை பாடமாக ஏற்பட்டு அம்மாதிரி வழிகளைக்காட்டி தொழில் செய்யும்படி ஊக்கங் கொடுக்குமென்று என்று நம்புகிறோம். விடாமுயற்சி, ஊக்கம், ஒற்றுமை இவைகளில் நம்மையும் தாண்டி

---

# நெல்லூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

நெல்லூர் ஜில்லா முதலாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1919-ம் வருஷம் மார்ச்சு௴ 29, 30 தேதிகளில் நெல்லூர் கனம் திவான் பக-

தூர் எம் இராமசந்திரராவ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. வரவேற்புக் கமிட்டியின் சேர்மெனான மிஸ்டர் எம். செங்கய்யா அவர்கள் இந்த ஜில்லாவில் கோவாபரேடிவ் இயக்கம் ஏற்பட்ட வரலாறுகளைச் சுருக்கமாய் எடுத்துக்காட்டி, 1918-ம் வருஷத்தில் டிஸ்ட்ரிக்ட் பாங்கி ஏற்பட்ட பிறகு மொத்தம் ஏற்பட்டிருக்கும் 78 சங்கங்களுள் 32 சங்கங்களுக்குக்குறையாமல் நூதனமாக ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகவும் திருப்திகரமான முன்னேற்றம் என்று விளக்கிக் காட்டினார்.

கோவாபரேடிவ் சம்பந்தமுள்ளவும் இதர மாதிரியுமான லேவாதேவிகள் விருத்தியாகி வருவதில் தனக்கு மிகச் சந்தோஷமே என்றாலும் கடன் வாங்கும் தொகைகள் ஆடம்பரமான கலியாணங்கள் முதலிய சடங்குகளுக்கும் நேர்த்தியான வீடுகள் முதலியன கட்டுவதற்கும் செலவாகிற தல்லாமல் விவசாயம் கைத்தொழில் முதலியவைகளில் ஈடுபடுத்தப்படவில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டார். நஞ்செய் நிலங்கள் விசேஷமாய் சில பெரிய மிராசுதார்களுக்குச் சொந்தமாயிருக்கிறபடியாலும் உண்மையான விவசாயிகளில் பெரும் பான்மையோருக்கு நில மின்மையாலும் கோவாபரேஷனால் விவசாய விருத்திக்கு விசேஷ சௌகரியமில்லை யென்றார். ஆனால் கரும்பு, அவுரி, பருத்தி, பழவர்க்கங்கள் முதலிய புதிய மாசூல்கள் தான் கோவாபரேஷனால் பயன்பெறலாம் என்றும் சொன்னார். விசேஷமாய் வெள்ளாமையைக் கைக்கொண்டிருக்கும் ஜில்லாக்களில் ஸ்டோர் சங்கங்கள் விருத்தியாகாதென்றும் ரயத்துக்களின் மாசூல்களை விற்கவும், ஏற்றுமதி செய்யவும் சங்கங்கள் எற்பட்டால் பயன் பெறலாமென்றும் அபிப்பிராயப்பட்டார். சாலியர்கள், தேவங்கார்கள் முதலிய உயர் வகுப்பு இந்தியர்கள், முன் பஞ்சமர்களின் தொழிலாகவே யிருந்த நெசவுத்தொழிலைக் கைக்கொண்ட பிறகு அத்தொழில் இந்த ஜில்லாவில் கொஞ்சம் க்ஷீணதசை யடைந்ததாகத்தான் அனுமானப் பட்டதாயும், பிறகு நெல்லூரில் பஞ்சமர்களுக்காக நெசவு சொஸைடி யொன்று ஏற்படுத்த முயற்சி செய்துள்ளது மிகவும் பாராட்டத் தக்கதென்றும், இந்த ஜில்லாவில் 'அப்ரக்கு (Mica) சுரங்க வேலை, கோவாபரேடிவ் ஏற்பாட்டில் நடத்தத் தகுதியான இடங் கொடுக்குமென்றும் அபிப்பிராயப்பட்டார். நகரங்களிலும் கிராமங்களிலும் கட்டடச் சங்கங்கள் கோவாபரேடிவ் மாதிரியில் ஏற்படுத்தவும், கிராமப் பள்ளிக்கூடங்கள் கோவாபரேடிவ் சங்கங்களின் பராமரிப்பில் நடை பெறவும் வேண்டுமென்று வற்புறுத்தினார்.

### அக்கிராசனர் உபந்நியாசம்.

கனம் ஸ்ரீமான் எம். இராமசந்திரராவ் அவர்கள், தனக்கு இச்சந்தர்ப்பத்தில் அக்கிராசனம் கொடுத்து கௌரவித்ததற்காக வந்தனை புரிந்து,



திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்களை இஜ்ஜில்லா தலைவராகப் பெற்றிருக்கும் பாக்கியத்தைப்பற்றிக் கொண்டாடினார். தமிழ் ஜில்லாக்களில் இவ்வியக்கம் முன்னேற்ற மடைந்திருக்கிறபடி அவ்வளவு முன்னேற்றம் தெலுங்கு ஜில்லாக்களில் இல்லை யென்று அனுதாபப்பட்டு அதற்குக் காரணம் அதிகாரிகளிடம் அனுதாபம் போதாமையும் அதிகாரம் வகிக்காத செல்வாக்குள்ள அநேகர் இவ்வியக்கத்தை கவனியாதிருப்பதுமே காரணமென்று அபிப்பிராயப்பட்டு வருஷாவருஷம் இம்மாதிரியான கான்பரன்ஸ் கூட்டங்களைத் தீவிரமாய்க் கூட்டி கோவாபரேஷனின் கொள்கைகளைப் பரவச்செய்வது நமது கடமையென்றும் வற்புறுத்தினார்.

### விவசாயிகளின் கடன்கள்.

விவசாயிகளின் கடன்களைப்பற்றிப் பேச ஆரம்பித்து, 1402 கிராமங்களடங்கிய இந்த ஜில்லாவில் 2426 மெம்பர்களையுடைய 78 சங்கங்களே யிருந்துகொண்டு ரூ. 75,000 லேவாதேவி செய்கிறபடியால் இஜ்ஜில்லா விவசாயிகளின் கடன்களின் ஒரு முனையைக்கூட இவ்வியக்கம் தொட்டிருக்காது என்றும், ரையத்துக்களின் நிலைமையை சீர்திருத்தும் பொருட்டு அவர்களின் பொருளாதார நிலைமையைப்பற்றி சட்ட நிரூபண சபையில் விசாரிக்க வேண்டுமென்று கனம் ஸ்ரீமான் ஏ. எஸ். கிருஷ்ணராவ் அவர்கள் எடுத்துக்கொண்ட பிரரேபணையைக் குறிப்பிட்டு கோவாபரேஷனானது விவசாயக் கடன்களை ஒழிக்க எவ்வித முயற்சி செய்திருக்கிறது என்பதை நமக்கு விளக்கிக் காட்ட அம்மாதிரியான விசாரணை மிக்க அவசியமானதென்றும் சொன்னார். இச்சந்தர்ப்பத்தில் வங்காளத்திலுள்ள பாரிக்பூரில் உள்ள மிஸ்டர் ஜாக்ஸ்துரை யவர்கள் தம் விசாரணையில் குறித்துக்காட்டி யிருப்பது பின்வருமாறு என்பதாகச் சொன்னார். விவசாயிகள் என்று வகுக்கப்பட்ட ஜனங்களுள் 100-க்கு 55 கடனில்லாதவர்களாயும், பாக்கி ஜனங்களுள் 100-க்கு 24 விழுக்காடு அவர்களுடைய வருஷவரும்படியில் நான்கில்ஒரு பாகக் கடனாளியாகவும் 100-க்கு 13 விழுக்காடு வருஷ வரும்படியில் பாதிக்கடனாளியாகவும், 100-க்கு 7 விழுக்காடு சுமார் வருஷ வரும்படியும் கடனாகவும், ஜனத்தொகையின்படி சராசரியில் ஒவ்வொருவனுக்கும் 11 ரூபாய் கடனும் 52 ரூபாய் வருமானமும் இருப்பதாகவும் ஏற்பட்டது. மைசூர் சமஸ்தானத்தில் கோவாபரேஷன் ஏற்பட்டு நான்கு வருஷம் ஆனபிறகு கோவாபரேடர்களின் நிலைமையைப்பற்றி விசாரித்ததில் அவர்களுடைய கடன்கள் அப்படியே இருந்ததாகவும் சங்கங்களைவிட சாவுகார்களிடமே அவர்கள் அதிகக் கடன் பட்டிருந்ததாகவும் தெரிந்தது. சங்கங்களையெல்லாம் ஒவ்வொரு வருஷமாவது சோதிக்கவேண்டும் அல்லது மெம்பர்களின் பொருளாதார நிலைமையை குறிக்கப்பட்ட காலங்களில்

அவசியம் கவனிக்க வேண்டும் என்பது மிஸ்டர் இராமசந்திரராவ் அவர்களின் அபிப்பிராயம். சங்கங்களால் கொடுக்கப்படும் குறைந்த காலக் கடனினுல் விவசாயக் கடன்களைச் குறைக்கமுடியாது. அம்மாதிரி செய்யவேண்டுமானுல் நீண்ட காலக்கடன் கொடுக்கும்படியான ஏற்பாடுள்ள சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். பொருளுபகாரத்தைப் பற்றிய வரையில் இந்த ஜில்லாவில் ஒரு சென்ட்ரல் பாங்கி யிருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும், பொது தர்மங்களுக்காக வைத்திருக்கும் தனங்கள், ஆங்காங்குள்ள கூட்டத்தினர்களின் பிராவிடெண்டு முதலிய இதர ஸெகூரிடிப் பணங்கள், ஆகிய இவைகளை மேற்படி பொருளுபகார விஷயங்களுக்கு உபயோகப்படும்படி செய்யலாமென்றும் பாங்கிகளில் போட்டு வைப்பது நிலத்தில் போட்டு வைப்பதைப் பார்க்கிலும் அதிக பத்திரமானதென்றும் சொன்னுர்.

## ஸ்டோர் சோஸைடிகளும் தற்காலத்திய பொருளாதார நிலைமையும்.

இராஜதானி முழுவதும் இப்பொழுது வழங்கும் பேச்சு, உணவுப் பொருள்களின் அசாத்திய விலை யேற்றத்தைப் பற்றியதே. ஊரிலுள்ள ஒவ்வொரு நாடும் தங்கள் தங்கள் உணவுப்பொருள்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதே ஒருவாறு நம்முடைய கஷ்டத்திற்குக் காரணம். சாலாகால மழையில்லாமல் அதனுல் முக்கியமான தானியங்களின் வெள்ளாமை அநேக பரப்புகளில் இல்லாமற் போனதும் ஒன்று. சென்ற டிசம்பர் மாதக்கடைசியில் நெல் விளையும் பரப்பில் 100-க்கு 27 விஸ்தீரணம் தரிசாய் விடப்பட்டதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. என்ன குறை எப்படியிருந்தாலும் நம் நாட்டில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை சரிவர ஏற்பாடாய்ப் பங்கிடுவது கஷ்டமாயிருக்கிறது. சமீபத்தில் மதராஸ் கவர்ண்மெண்டாரால் கூட்டப்பட்ட உணவுப் பொருள்களைப்பற்றிய கான்பரன்ஸின் நடவடிக்கையினுல் இராஜாங்கத்தார் ஏற்படுத்தும் எவ்விதமான கடுஞ்சட்டத்தினுலும் அழுலினுலும் தரகர்களின் சூழ்ச்சிகளைச் சிதைக்க முடியாது என்று ஏற்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் கிரோசின் எண்ணெய் வியாபாரத்தைப்பற்றிய கட்டுப்பாடு பயன் பெறவில்லை. இப்பேர்ப்பட்ட காலத்தில் கோவாபரேடிவ் இயக்கம் அத்தியாவசியமாக விருத்தியாகவேண்டும் என்று நன்கு விளங்குகிறது. நம் நாடு கோவாபரேடிவ் ஏற்பாட்டில் அமைந்து பெரிய அளவில் ஸ்டோர் சங்கங்கள் ஏற்பட்டு விட்டால் நமது தற்கால நிலைமை எவ்வளவோ எளிதாகவும் அனுகூலமாகவும் இருக்கும். இப்பொழுது முடிவுக்குவந்த அசாத்தியச் சண்டையினுல் எல்லா தேசத்தாரும் உணவுப் பொருள்களில் வெகு சிக்கனம் காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. பிரான்சில் சென்ற 4 வருஷச் சண்டையினுல் கோவாபரேடிவ் இயக்கம் மிகவும் விர்த்தி செய்யப்பட்டது. எப்



படியென்றுல் ஸ்டோர் சங்கங்களுடன் உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து அவசியமான உணவுப்பொருள்கள் இலாபத்தை வியாபாரிகளிடம் சேராமல் தடுக்கிருர்கள்.

பிரான்சில் பத்து லக்ஷம் மெம்பர்களடங்கிய 3000 ஸ்டோர் சங்கங்களினுல் உணவுப்பொருள்களை சரிவரப்பகிர்ந்து கொடுக்க நல்ல சாதனமானதோடு கஷ்டமான சண்டைக்காலங்களில் தொழிலாளிகளுக்குச் செய்த மேலான உபகாரங்களும் நன்கு விளங்கின. பெல்ஜியத்தில்கூட கோவாபரேடிவ் சங்கங்கள் உணவுப்பொருளைப் பகிர்ந்து கொடுக்கும் கவர்ண்மெண்டு ஏற்பாட்டில் முக்கிய உதவி வகித்தன. சண்டைக்காலத்தில் ஸ்டோர் சங்கங்கள் இத்தாலியில் விசேஷ முன்னேற்றமடைந்தன. அங்கே ஸ்டோர்களின் மொத்த வியாபாரம் இந்திய இலக்கப்படி $5\frac{1}{2}$ கோடியிலிருந்து $13\frac{1}{4}$ கோடியாக அதிகரித்தது. இந்த பயங்கரமான யுத்தத்தில்கூட இத்தாலியருக்கு கோவாபரேஷனிலிருந்த நம்பிக்கையினுலும் உறுதியினுலும் போக்குவரத்துகளும் பொது ஜன உணவுச்சாலைகளின் ஸ்தாபனங்களும் சாத்தியமாயின. 'போல்ஷவிக்' கூட்டத்தின் பயங்கரமும் நாசகரமுமான நடவடிக்கைகளுக்கும் இடையில்கூட ருஷியாவில் கோவாபரேடிவ் ஏற்பாட்டினுல் அநேக ஜனங்கள் பட்டினியால் சாகாமல் பிழைத்தார்களாம். இவ்வுதாரணங்களினுல் நமக்குக்கிடைக்கும் கற்பனை என்னவென்றுல் இவ்வியக்கம் கிராமங்களில் புகுந்து அச்சனங்களின் மனதில் பட்டுவிட்டால் எவ்வளவு கஷ்டகாலத்தினுலும் ஜனங்களுக்கு சந்தோஷத்தை விருத்தி செய்யும் குணம் இதில் இருக்கிறது என்ற விஷயம் மறுக்கத் தக்கதன்று.

தற்கால கஷ்ட நிலைமையில் கிடைக்கும் உணவுப்பொருள்களை எப்படி உத்தியோகஸ்தர்களும் கோவாபரேடிவ் சங்கங்களும் ஜனங்களுக்குள் ஓரினத்தாருக்கு ஜாஸ்தியா காமலும் மற்ருேரினத்தாருக்கு குறைவாகவும் அல்லது இல்லாமலும் போகாமல் நியாயமாய்ப்பகிர்ந்து கொடுக்கமுடியும் என்பதை யோசனைசெய்யவேண்டும். சமீபத்தில் மதருஸ் கவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட உணவுப்பொருள்களைப்பற்றிய கான்பரன்ஸில், ஸ்தல உத்தியோகஸ்தர்கள் கோவாபரேடிவ் சங்கங்களுக்கும் உணவுப்பொருள்களை கூடியவரையில் குறைந்தவிலைக்கு ஜனங்களுக்கு சப்ளை செய்வவற்கு, வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நம் இயக்கத்தை பலப்படுத்தி விருத்திசெய்வதற்கு இது ஓர் நல்ல சந்தர்ப்பமாக பாராட்டவேண்டும். இந்த ஜில்லாவில் ஓரே ஸ்டோர் சொஸைடிதான் இருக்கிறதாகத் தெரிகிறது. இதர சொஸைடிகளெல்லாம் கிடைத்த சமயத்தை நழுவவிடாமல் உடனே அரிசி, கிரோஸின் எண்ணெய், துணிகள் முதலியவற்றை வாங்கி மெம்பர்களுக்கும் இதரர்களுக்கும்கூட

ஏன் விற்கக்கூடாது? இம்மாதிரியான அலுவல்களை எல்லாச்சங்கங்களும் கைக்கொள்ளும் பொருட்டு ரிஜிஸ்ட்ராரவர்கள்கூட அனேக சௌகரியங்கள் செய்திருக்கிறதாகவும் இதரர்களுக்குக்கூடக் கொடுக்கும் பொருட்டு சட்டங்களைக் கொஞ்சம் மாற்றியுமிருக்கிறதாகத் தெரிகிறது.

### கோவாபரேடிவ் கட்டடச் சங்கங்கள்.

கோவாபரேடிவ் இயக்கங்கள் உபயோகமாய் விருத்தியாகக் கூடிய இன்னொரு மார்க்கம் ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுத்தலாகும். வீடுகள் கட்டிக்கொடுத்ததால் தொழில்களின் திறமைக்கும் ஆசாரத்திருத்த சௌகரியத்திற்கும் ஆகும் பயன்களைப்பற்றி பல உபந்நியாசங்கள் சமீப காலங்களில் நடந்திருக்கிறபடியால் அதைப்பற்றி விரித்துரைக்கவேண்டிய அவசியமில்லை. சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றியப்பேச்சு விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் சரிவர வீடுகள் அமைத்துக் கொடுக்காதவரையில் பிரயோஜனமாகமாட்டாது. இங்கிலாந்தில் மிஸ்டர் லாய்ட் ஜியார்ஜ் சமீபத்தில் பேசியபொழுது தன் சீர்திருத்த ஏற்பாடுகளில் ஒரு அமிசம் ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுக்கும் ஏற்பாடாகுமென்றுச் சொன்னார். இவ்விஷயமாய் நாமும் நம் நாட்டில் கொஞ்சம் விருத்தியடைந்திருக்கிறோம். பொது ஜனப்பண்டுத்தொகைகளை கோவாபரேடிவ் கட்டடச் சங்கங்களுக்கு இலகுவான வட்டியில் கொடுக்கப்பிரியப்படுவதாக நமது இந்தியா கவர்ண்மெண்டார் சமீபத்தில் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விஷய விருத்தியைப் பற்றி பம்பாய் ராஜாங்கத்தாரும் தங்கள் கவனத்தைக் கொஞ்சகாலமாக செலுத்துகிறார்கள். அவர்களுடைய தீர்மானமென்னவென்றால் கூட்டுறவை நோக்கமாகக் கொண்ட கோவாபரேடிவ், கட்டட சொஸைடிகளுக்கு, தகுதியான இடங்களில் தொழிலாளிகள், குமாஸ்தாக்கள், முதலிய வீடு வேண்டிய அவசியமுள்ளவர்களுக்கு சௌகரியமான வாடகையில் வீடுகள் கட்டிக்கொடுக்க ராஜாங்கத்தார் கடன்கொடுக்கலாம் என்பதே. இப்பொழுது 100க்கு 6 வட்டி வீதம் கடன் கொடுக்க சித்தமாயிருக்கிறார்கள். சிலதனிக்காரணங்களிருந்தால் இன்னம் குறைந்தவட்டிக்கும் கடன் கொடுப்பார்கள். நமது மதராஸ் கவர்ண்மெண்டாரும் இதேமாதிரி ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவில் ஆரம்பஞ் செய்வதற்காக ஒரு தனி உத்தியோகஸ்தரையும் நியமித்து கோவாபரேடிவ் ஏற்பாட்டில் கொஞ்சகாலமாய் வேலை நடத்தப்பட்டுவருகிறது. உபயோககரமான வேலை செய்ய இது நமக்கு ஒரு நல்லசமயம். நமது நாடு சௌகரியமாய் இடங்கொடுக்கக் கூடிய இன்னொரு ஏற்பாடு என்னவென்றால் கால்நடைகளை கோவாபரேடிவ் ஏற்பாட்டில் வளர்த்துப் பாஷித்தல். நெல்லூர் மாடுகள் இந்தியாவிற்குள் பெயர் பெற்ற இனங்



கள். இஜ்ஜில்லாவும் ராஜதானி தலைநகருக்கு சமீபத்திலிருப்பதோடு கவர்ண்மெண்டு கால் நடை வளர்ப்புச்சாலையும் இஜ்ஜில்லாவிலிருக்கிறதினால் ஒரு தனிச்சௌகரியமும் இருக்கிறது. இந்நிலைமையில் பால் நெய் முதலியவைகளை ஏராளமாகப்பெறும்படி செய்து சென்னைக்கு அனுப்பினால் மிக்க இலாபகரமா யிருக்குமென்பதில் சந்தேகமில்லை. உள்நாட்டு சௌகரியங்களைச் சீர்தூக்கிப்பார்த்து நல்லதொழில் தெரிந்தவர்களுடன் போஜனைசெய்து இவ்விவசாயத்தொழில்களை ஆரம்பித்தால் இது அவசியம் பயனடையும்

ஸ்ரீமான் ராமச்சந்திரராவ் அவர்களும் தம் உபந்நியாசத்தை முடிக்குமுன், ராஜாங்கத்தாரால், விவசாயக்கடன் சட்டம், நிலச்சீர்திருத்தச்சட்டம் இவைகளின்படி கொடுக்கப்பட்டிருக்கும் சௌகரியங்கள் ரயத்துக்களால் சரிவர அனுபவிக்கப்படவில்லை என்பதைக்காட்டி கோவாபரேடிவ் சங்கங்கள் இக்கடன்களை மெம்பர்களுக்கு சரிவரப் பகிர்ந்து கொடுக்கும்படிச் செய்யவேண்டுமென்றும் சொல்லிமுடித்தார். பிறகு சில சங்கங்களின் ரிபோர்டுகள் படிக்கப்பட்டு கான்பரன்ஸ் மறு நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### தீர்மானங்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் 1919-௵ மார்ச்சு௴ 30௳ நிறைவேற்றப்பட்டன.

(1). கோபாவரேடிவ் சங்கம் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் இன்ஷியூரன்ஸ் பிராஞ்சோடு கூடிய போஸ்டாபீசு ஸ்தாபிக்கப்படவேண்டும்.

(2). ஏழைகளுக்கும் பஞ்சமர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக கட்டடச் சங்கங்கள் ஏற்படுத்திக்கொடுத்து அதற்காக சகாயவட்டிக்கு கடன் கொடுத்து உதவும்படி கவர்ண்மெண்டைக்கேட்டுக்கொள்ளவேண்டும். நெல்லூரில் ஒரு கட்டடச் சங்கம் ஏற்படுத்தப் படவேண்டும்.

(3) லோகல்போர்டுகளும் முனிசிபாலிடிகளும் தங்களுடைய மிகுதித் தொகைகளையும் கண்டிராக்டர்கள் கொடுத்துவைத்திருக்கும் செகூரிடித்தொகைகளையும் கோவாபரேடிவ் பாங்கிகளில் போட்டுவைக்கலாமென்று கவர்ண்மெண்டு அதிகாரமளிக்கும்படி கேட்டுக் கொள்ளவேண்டும்.

(4) கோவாபரேடிவ் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரும் அவரால் அதிகாரம் பெற்றவர்களும் இப்பொழுது அஸிஸ்டெண்டு ரஜிஸ்ட்ராரினால் கொடுக்கப்பப்பட்டிருக்கும் தீர்ப்புகளை நிறைவேற்றலாமென்று, கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டு மாற்றப்படவேண்டும்.

(5) நிலம் வாங்கிக்கொடுக்கும் ஆக்டில் 'கம்பெனி'என்ற பதத்தின் அர்த்தத்திற்குள் கோவாபரேடிவ் சொஸைடிகள் சேர்க்கப்படவேண்டுமென்றும் ஆக்டுப்படி கோவாபரேடிவ் சொஸைடியின் பெறுப்பு

கள் "பொதுப்பிரயோஜனம்" என்று பாவிக்கப்படவேண்டுமென்றும், அர்த்தமாகும்படி மாறுதல் செய்யப்படவேண்டும்.

(6) இந்தியன்டிரஸ்டு ஆக்டும் அதில் ஹைகோர்டால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டங்களும், மதவிஷயமாகவும் தருமத்திற்காகவும் டிரஸ்டிளால் வைக்கப்பட்டிருக்கும் தொகைகளின் மிகுதிப்பணங்களை கோவாபரேடிவ் சொஸைடிகளில் போட்டுவைக்கலாம் என்று மாற்றப்படவேண்டும்.

(7) மெம்பர்களுக்கும் அந்நியர்களுக்கும் கொடுப்பதற்காக கோவாபரேடிவ் சொஸைடிகள் கிரோஸின் ஆயில் பெறும் பொருட்டு இலவசமாய் அவர்களுகக்கு லைஸென்ஸ் கொடுக்கும்படி கவர்ன்மென்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும். (b) இத்தீர்மானத்தை உடனே கலெக்டருக்குத் தெரிவித்துக் கொள்ளும்படி கான்பரன்ஸின் செகிரிடேரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

(8) கோவாபரேடிவ் சொஸைடி இருக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் விவசாய நிபுணர்களை அனுப்பி ஜனங்களுக்கு சாஸ்திரீயமான எருக்களையும் கருவிகளையும் உபயோகிப்பதின் பயன்களை அவர்களைக் கொண்டு போதிப்பிக்கும்படி கவர்ன்மென்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும். (b) கோவாபரேடிவ் சொஸைடியுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறிய நிலத்தில் சீர்திருத்த மாதிரிகளை உதாரணமாய்ச்செய்து காட்டும்படி கவர்ன்மென்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும். (c) மேற்படி விஷயங்களை நடைபெறச் செய்யும் பொருட்டு பெஜவாடா இலாகாவிலுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகளைப்பார்க்க விவசாய இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமிக்கும்படி கவர்ன்மென்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

(9) தங்கள் பொருளுதவிக்காக சென்ட்ரல் பாங்கிகளையே நாடாமலிருக்கும் பொருட்டு, ஒவ்வொரு சொஸைடியும் தம்தம் மெம்பர்களிடமிருந்து டிபாஸிட்டுகள் சேர்க்கும்படி இக்கான்பரன்ஸ் வற்புறுத்துகிறது.

(10) இதர கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்களைப் போல கோவாபரேடிவ் சொஸைடிகளைப் பார்வையிடப்போகும் இன்ஸ்பெக்டருக்கும், அவர் வேலைகள் எளிதாகும் பொருட்டு ஒரு பியூன் கொடுப்பது அவசியம் என்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

(11) விவசாய கடன் ஆக்டின்படியும் நிலச்சீர்திருத்தக்கடன் ஆக்டின்படியும் ஏற்படும் தொகைகளை கோவாபரேடிவ் சொஸைடிகளின் வசத்தில் தகுந்தஜாமீன் பேரில் கொடுத்துவைத்து அவரவர்களுடைய எல்லைக்குள் அத்தொகையை உபயோகிக்கும்படி கவர்ன்மென்டு அநு



தாபம் காட்டவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

(12) மேற்பார்வையைத் திறமாய் நடத்தும் விஷயத்தில் கோவாபரேடிவ் யூனியன்களிடம் தேவையான பணமில்லாமல் சிரமப்படும்போதெல்லாம் கவர்ன்மென்டு உதவிசெய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக் கொள்ளுகின்றது.

(13) கிராமங்களில் புத்தகசாலைகள் ஸ்தாபிப்பதால் கூட்டுறவு இயக்கம் நன்றாகப்பரவி விர்த்தியாகக் கூடுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுவதால் கிராமப் புத்தகசாலைகளை ஸ்தாபனஞ் செய்யவும் அவைகளை நிர்வாகஞ் செய்யவும் கோவாபரேடிவ் டிபார்ட்மென்டாருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கவர்ன்மென்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(14) கோவாபரேடிவ் சொஸைடிகளால் சென்டரல் பாங்கிக்கு எழுதிக்கொடுக்கப்படும் பிராமிசரி நோட்டுகள் ரிஜிஸ்தராக வேண்டியது அனாவசியமென்றும் அப்படி ரிஜிஸ்டர் செய்யாததால் சென்டரல் பாங்கிக்கு நஷ்டம் ஏற்படுவதில்லையென்றும் ஆகையால் கடன் ஸாங்கிஷன் செய்யும்போது அஸிஸ்டென்டு ரிஜிஸ்ட்ராரவர்கள் அவ்விஷயத்தைக் கட்டாயப்படுத்தாமலிருக்கவேண்டு மென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக் கொள்ளுகின்றது.

(15) கோவாபரேடிவ் இயக்கமானது கைத்தொழிற் சார்பாகவும் பரவவேண்டியது மிக்க அவசியமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறபடியால், ஸைடாபுரத்தில் இண்டஸ்டிரியல் ஸோப் ஸ்டோன் (மாவுக்கல்) கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படுத்தியதற்கு கவர்ன்மெண்டுக்கு நன்றி யறிவு பாராட்டுவதோடு மெழுகுவத்தி, சணல், துணி முதலிய கைத்தொழில்களுக்காகவும் கோவாபரேடிவ் சொஸைடிகள் ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியமும், சௌகரியமும் தெரியும்படிச் சொல்லி அதற்காகப் பொருள் முதலிய உதவியளித்துக் கைகொடுக்கும்படி கவர்ன்மெண்டை இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

(16) கோவாபரேடர்களையும், நெல்லூர் ஜில்லாவிலுள்ள பொது ஜனங்களையும், நெல்லூர் ஜில்லா கோவாபரேடிவ் பாங்கிங் யூனியனில் அதிகப் பங்குகள் எடுத்துக்கொள்ளும்படி இக்கான்பரன்ஸ் வேண்டிக் கொள்ளுகின்றது.

(17) சொஸைடியின் மெம்பர்களுக்கு அவசியமானவைகளைக் கூட்டுறவில் வாங்குவதற்கும் அவர்களுடைய விளைபொருள்களைக் கூட்டுறவில் விற்பதற்கும் நெல்லூர் ஜில்லாவில் வேலைசெய்யும் ஸ்டோர்களை வியாபார யூனியன்களாக மாற்றுவது உசிதமாகுமென்று இக்கான்ப

ரன்ஸ் அபிப்பிராயப் படுகிறபடியால் கோவாபரேடிவ் டிபார்ட்டுமெண்டார் அங்ஙனம் செய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

(18) கோவாபரேடிவ் சங்கங்களிலிருந்து சென்டரல் பாங்கிகளுக்கு அனுப்பும் தொகைகளுக்கு போஸ்டேஜ் கட்டணங்களில்லாமற் செய்யும்படி கவர்ன்மெண்டாரை இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

---

# கோவில்பட்டித் தாலூக்கா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்

## முதல் கொண்டாட்டம்.

1. கோவில்பட்டித் தாலூக்கா கோவாபரேடர்களின் முதல் சமாஜம் கோவில்பட்டி கஸ்பாவில் 1919-ம் ௵ மார்ச்சு ௴ 23உயில் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் மிஸ்டர் A. R. காக்ஸ் துரையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் தாலூக்கா கச்சேரியில் நடைபெற்றது. தாலூக்கா முழுவதிலிருந்தும் 34 பிரதிநிதிகளும், சுமார் 200 கூட்டுறவினர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். வெளியிலிருந்து F. R. ஹெமிங்வே துரையவர்கள், விவசாய இலாகா டிப்டிடைரெக்டர் ஸாம்ஸன் துரையவர்கள், கோவில் பட்டி ரெவினியூ டிவிஷனலாபீஸர் ம-ா-ா-ஸ்ரீ C. S. கிருஷ்ணய்யரவர்கள், மதுரை செக்ஷன் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஸ்ரீமான் A. ராமானுஜாச்சாரியாரவர்கள் விவசாய அஸிஸ்டெண்டு டைரெக்டர். மிஸ்டர் N. S. குழந்தைசாமிபிள்ளை அவர்கள்; வித்தியா இலாகா சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ ஹரிஹரமய்யரவர்கள், பாளையங்கோட்டை டவுன் பாங்க் காரியதரிசி ஸ்ரீமான் N. கிருஷ்ணசாமி ராவ் அவர்கள், வடமலைபுரம் விவசாய சங்கம் மானேஜர் ஸ்ரீமான் R. ஆனந்தராவ் அவர்கள். திருநெல்வேலி ஹைகோர்ட்டு வக்கீல் ஸாது கணபதி பந்துலு அவர்கள், கோவில்படி தாசில்தார் மிஸ்டர் M.G. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்; சப்மாஜிஸ்ரேட்டு மிஸ்டர் P. இராமஸ்வாமி அய்யரவர்கள் இன்னும் அநேக கனவான்களும் வந்திருந்தார்கள்.

2. கான்பரன்ஸ் கூடினவுடன் வரவேற்புக் கமிட்டியின் சேர்மன் மிஸ்டர் V. K. ராமசாமி அய்யரவர்கள் விஜயம்செய்திருக்கும் கனவான்கள் அனைவருக்கும் நல்வரவு கூறி திருநெல்வேலி ஜில்லா முழுவதிலும் கோவில்பட்டி தாலுகாவே ஐக்கிய இயக்கத்தில் முன்னுக்கு வந்திருக்கிறதென்றும், அது காரணத்தாலேயே கோவில்பட்டி தாலுகா கோவாபரேடிவ் யூனியன் இம்முதல் கான்பரன்ஸை கூட்டி நடத்துவதற்கு உரித்தானதென்றும் இன்னும் இத்தாலூகாவில் 100 சங்கங்கள் ஏற்படுத்த இடமிருக்கிறதென்றும் மாக்ஷிமை தங்கிய கவர்ண்மென்டாரை அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கேட்டுக்கொள்ளவேண்டு மென்றும் சொன்னார்கள்.



3. பின்னர் மிஷ்டர் காக்ஸ் துரையவர்கள் ஐக்கியமுறையில் தேர்ச்சி பெற்ற கனவான்களிருக்கும் அம்மஹாசபையில் அம்முறையில் பழகாதவரானதால் கான்பரன்ஸின் அக்கிராசனாதிபதியாக ஆலோசனை சொல்வதற்கு அங்கு வரவில்லையென்றும் ஐக்கிய இயக்கத்தைப் படித்துக்கொள்வதற்கும் கவர்ண்மென்டு உத்தியோகஸ்தரால் நீக்கக்கூடிய கஷ்டங்கள் யாதேனும் உள்ளனவா என்பதை அறியும் பொருட்டும் தான் வந்ததாயும் கூறினார்.

4. பாளையங்கோட்டை அர்பன் பாங்க் காரியதரிசி பிரம்மஸ்ரீ N. கிருஷ்ணசாமி ராவ் அவர்கள் "கூட்டுறவின் கடமைகள்" என்பதைப் பற்றி ஓர் உபந்நியாசம் எழுதி வாசித்தார். பஞ்சாயத்தார் மாத்திரமல்ல ஒவ்வொரு சங்கத்தின் ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தின் அபிவிருத்திக்காக உழைப்பெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கிராமத்தில் இருக்கப்பட்ட ஒவ்வொருவரையும் மெம்பராக்கப் பிரயாசைப்பட வேண்டுமென்றும் மெம்பர்கள் வாங்கவேண்டிய விற்கவேண்டிய சாமான்கள் தரகர்களின் கைக்குள்ளாகாதபடி மொத்தமாய்ச் சங்கங்கள், வாங்கி விற்க வேண்டுமென்றும் கிராமப் பள்ளிக்கூடத்தைத் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளவேண்டு மென்றும் மெம்பர்கள் டிபார்ட்டுமெண்டாரின் உதவியை எதிர் பாராமல் டிபாஸிட்டுகள் சேகரித்து லேவா தேவியை நடத்தவேண்டுமென்றும் கடன்களை ஒருபோதும் கெடுத்தவரவிடக் கூடாதென்றும் இன்னும் பல விஷயங்களைப்பற்றி விரிவாய்க் கூறினார்.

5. ஐக்கிய இயக்கத்தின் மஹிமையைப்பற்றி கலெக்டராபீஸ் கிளர்க் பிரம்மஸ்ரீ V. S. பத்மநாபய்யரவர்கள் இந்தியா நாடு தழைத்தோங்குவதற்கு இதுவே தகுந்த சாதனமென்றும் தரித்திரனாயிருந்தாலும் ஒருவன் யோக்கியனாயிருக்கும் பக்ஷத்தில் ஐக்கிய இயக்கத்தைச் சார்ந்து நன்மை பெற்று ஒரு காலத்தில் ஆஸ்திவந்தனாகிறதற்கு இடமிருக்கிறதென்றும் நமது தேச முழுமையும் ஐக்கிய இயக்கத்தை அபிவிர்த்தி செய்வதனால்தான் எல்லோருக்குள்ளும் ஜாதி மத பேதா பேதமின்றி, அன்பும் ஐக்கியமும் ஏற்பட்டு ஐரோப்பிய நாடுகளைப்போல கைத்தொழில்களிலும் வியாபாரங்களிலும் முன்னுக்கு வர முடியுமென்றும் ஸவிஸ்தாரமாய் ஓர் உபந்நியாசம் எழுதியனுப்பி வாசிக்க ஏற்பாடு செய்தார்.

6. ஒட்டப்பிடாரம் சங்கத்தின் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ, A. வீரபத்திர பிள்ளை அவர்கள் "கடன்களும் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைகளும்" என்ற விஷயத்தைப் பற்றி கடன்கள் திருப்பிக் கொடுக்கவேண்டிய காலத்தை நிர்ணயிக்கும் பொழுதே பஞ்சாயத்தார் வெகு ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கடன் வாங்கும் மெம்பர்களின் சௌகரியத்தைக் கேளாமல் வாயிதா நிர்ணயிக்கக் கூடாதென்றும் அப்படி வாயிதா நிர்ணயித்த பிற்பாடு மெம்பர்கள் தவணை தவிறவிடக் கூடாதென்றும் அதே கால்த்தில் யாதேனும் அசந்தர்ப்பமாய்ச் செலவு ஏற்படும் பக்ஷத்தில இந்தக் கடனைச் செலுத்திவிட்டு வேறு கடன் வாங்கிக்கொள்ள வேண்டு மென்றும் தெளிவாய் எடுத்துக்காட்டி ஓர் உபந்நியாசம் செய்தார்.

7. கழுகுமலை சங்கத்தின் பிரஸிடெண்டு பிரம்மஸ்ரீ R. சுப்பய்யரவர்கள் "ஐக்கியச் சங்கமும் வட்டிக்கடையும்" என்ற விஷயமாய் சங்கங்கள் லேவாதேவியை மாத்திரம் நடப்பித்து வருகிறது தப்பிதம் என்று அபிப்பிராயப்படுவது சரியல்லவென்றும் பிரதமத்தில் மெம்பர்களைச் சாவுகார்களின் கையினின்று விடுதலை செய்தபின்தான் ஐக்கியச் சங்கத்தில் வேறு தொழில்களைச்செய்விக்க முயற்சிசெய்ய வேண்டுமென்றும் சங்கத்தில் கடன் வாங்குவதற்கும் வட்டிக்கடையில் கடன் வாங்குவதற்குமுள்ள வித்தியாசத்தை மெம்மர்கள் சரிவர நன்குணரவில்லையென்றும் வட்டிக்கடைக்குப் போவதினால் ஒருவனைப் பூராவாகக் கெடுத்துவிடவேண்டுமென்பதே சாவுகார்களின் அபிப்பிராயம் என்பதை ஜனங்கள் அறியாமலிருக்கிறார்கள் என்பதையும் ஐக்கியச் சங்கத்தில் கடன் வாங்குவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டாலும் அதனுடைய மேன்மையும் சிலாக்கியமும் அதிகமென்பதைப்பற்றியும் தெளிவாய் வியாசம் எழுதி வாசித்தார்.

8. மதுரை விவசாய இலாகா அஸிஸ்டெண்டு டைரெக்டர் ஸ்ரீமான் N. S. குழந்தைசாமிபிள்ளை அவர்கள் "விவசாயமும் ஐக்கிய இயக்கத்தில் அதன் சம்பந்தமும்" என்னும் விஷயமாய் விவசாய டிபார்ட்டுமெண்டார் கோவில்பட்டி சர்க்கார்பண்ணையில் சீமைக் கலப்பைகளைக் கொண்டும் மற்றும் இதர யந்திரங்களைக்கொண்டும் செய்து காட்டியிருக்கும் சாகுபடி மாதிரியை எல்லாஜனங்களும் பின்பற்றுவதால் அதிகலாபமிருக்கிறதென்றும் அந்தக் கலப்பைகளையும் யந்திரங்களையும் சாதாரணக் குடித்தனக்காரர்களால் வாங்கக்கூடியது சாத்தியமில்லையானதால் ஐக்கிய சங்கத்தில் விலைக்குவாங்கி வைத்துக்கொண்டு சொற்பவாடகைக்கு மெம்பர்களுக்கும் மற்றும் விவசாயிகளுக்கும் கொடுத்துதவி விவசாயத்தை அபிவிர்த்திசெய்யவேண்டுமென்றும் டிபார்ட்டுமெண்டார் சிரமமெடுத்து



ரசாயன சாஸ்திர யுக்தமாய்க் கண்டுபிடித்திருக்கும் எருமுதலியவைகளை வாங்கி உபயோகித்து மாகாலை விர்த்திபண்ண வேண்டுமென்றும் மெம்பர்கள் யாவரும் தங்களுக்குக் கிடைக்கும் பருத்தி மாசூல்களை மொத்தமாய் அறைத்து கிடைக்கும் ஆதாயங்களைப் பிரித்துக்கொள்ளவேண்டுமென்றும்,நமது ஜில்லா மாகாலை அன்னிய தேசத்து மார்க்கட்டுகளில் விலையைக் குறைத்துக் கெடுக்கும் புளிச்சை முதலிய தாழ்ந்த வகுப்புப் பருத்திகளை வேரோடே எடுத்துவிடவேணுமென்றும் தெளிவாய் உபந்நியாசம் செய்தார்.

இதன் பின்னர் இக்கான்பரன்ஸை உத்ஸாகத்தோடு நடத்திவருகிற கோவில்பட்டி கோவாபரேடிவ் யூனியனின் வருஷாந்திர ரிப்போர்ட்டை யூனியன் செகரடேரி அவர்கள்வாசித்தார். அதோடுகூட சில குறிப்பிட்ட சங்கங்களின் ரிப்போர்ட்டுகளும் வாசிக்கப்பட்டன.

## தீர்மானங்கள்.

பின்வரும் தீர்மானங்கள், கான்பரன்ஸில் நிறைவேற்றப்பட்டன.

சென்ற 4½-வருஷகாலமாய் நடந்துவந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தில் நமது ராஜாங்கத்தாரும் நேசகக்ஷிக்காரரும் ஜெயமடைந்ததைப் பற்றி கோவில்பட்டி தாலுக்கா கூட்டுறவினர்கள் நமது கவர்ண்மென்டாருக்குத் தங்கள் சந்தோஷத்தை தெரியப்படுத்த தீர்மானிக்கிறார்கள்.

2. இந்தத் தாலூகா படிப்பில் (Backward Locality) மிகவும் குறைந்திருப்பதால் 1000-ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் எலிமென்டரிபாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்று தாலூகா போர்டு ஜில்லா போர்டார்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

3. ஐக்கிய சங்கங்களிலிருந்து வெளியில் அனுப்பும் மணியார்டர்
கள் பைசாக்களாயிருந்தாலும் கவர்ன்மெண்டு மணியார்டர்களைப்போல்
மணியார்டர் செய்யலாமென்றும் பம்பாய் ராஜதானியில் ஐக்கியச் சங்கங்
களுக்கு போஸ்டேஜ் ரிமிஷன் பாதி முஜரு செய்திருப்பதுபோல் இந்த
ராஜதானியிலுள்ள சங்கங்களுக்கும் சுதந்தரம் கவர்ன்மெண்டார்
கொடுக்கவேணுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

4. கடன்கள் துரிதமாக வசூலாகும்பொருட்டு ஆர்பிட்ரேஷன்
விதிகளின்கீழ் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராரால் டிக்கிரி செய்யப்படும்
கடன்களும் ஒரு சங்கத்தின் லிக்கியூடேட்டரால் தீர்மானஞ் செய்யப்
படும் கடன்களும் லாண்டு ரெவினியூ கிஸ்துவசூல் செய்வதுபோல
இலாகாதாசில்தார் டிப்டி தாசில்தார் அவர்கள் மூலமாக வசூல் செய்யக்

கூடிய அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

5. இந்த ஜில்லாவிற்குப் போதுமான சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இல்லாததால் அதிகமாய் இன்னும் இரண்டு இன்ஸ்பெக்டர்கள் நியமித்தால் சங்கங்கள் அதிகமாவதுடன் வேலை நன்றாய் நடந்தேறி வருமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

6. மண்ணெண்ணெய் விற்க B. பெர்மிட்டுகள் ஒவ்வொரு சங்கங்களுக்கும் கொடுக்கும்படி காருண்ய கவர்ன்மென்டாரவர்கள் உத்திரவு செய்து ஜனங்கள் படும் கஷ்டங்களை நிவர்த்திசெய்யவேண்டுமென்றும் இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

7. இந்த ஜில்லாவிலுள்ள ஐக்கியச் சங்கங்கள் மதராஸ் சென்ட்ரல் அரபன் பாங்கில் கடன்வாங்குவதில்நேரிட்டகஷ்டங்களையும் தாமதத்தையும் நிவர்த்தி செய்ய வேணுமென்று மிக்க சிரத்தையுடன் விஜயம் செய்து திருநெல்வேலி ஜில்லாவில் கோவாபரேடிவ் பாங்கிங் யூனியன் ஸ்தாபனஞ் செய்து நமது பெருங்குறையை நிவர்த்திசெய்த ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் F. R. ஹெமிங்வே துரையவர்களுக்கு நம்முடைய வந்தனத்தைத் தெரிவிக்கவேணுமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

8. ஒவ்வொரு ஐக்கிய நாணயச் சங்கத்திலும் விவசாயக்கருவிகள் வாங்குதல் சாமான்களை ஒன்றுசேர்த்து சரியான காலத்தில் மொத்தமாய் வாங்குதல் விற்பனை செய்தல் இவைகளை புது பைலாப்படி சங்க விதிகளுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் கோருகிறது.

9. கோவில்படி ஹெட்குவராட்டரில் வியாபார யூனியன் ஒன்று ஏற்படுத்தி அந்த யூனியனில் எல்லா ரூரல் சொசைடிகளும் அணைக்கப்பட்டு அதில் பங்குகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்தக் கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

10. மெம்பர்களுக்குவரும் மாசூல்களை லாபகரமாய் விற்கும் காலம் வரும்வரை அவர்களுக்கு அவசரமாய் வேண்டும் கடன்களை குறுகிய காலக்கடனாகக் கொடுத்துதவவேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

தீர்மானங்கள் முடிவானவுடன் வந்த கனவான்களனைவருக்கும் வந்தன மளித்து சிற்றுண்டிகள் பரிமாறி வெகு குதூகலத்துடன் கான்பரன்ஸ் முடிவு பெற்றது.

---



## மாணவர்களும் கூட்டுறவும்.

1919-ம் வருஷம் மார்சுமீ 26வ. கல்கத்தாவில் நடந்த மாணவர்களின் கூட்டுறவுக் கான்பரன்ஸில் ப்ரொபஸர், பி. முகர்ஜி அவர்கள் படித்த உபந்நியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு.

பொதுவாக கோவாபரேடிவ் ஸ்டோர்களின் ஆரம்பத்திற்கும் ஆதாரத்திற்கும் நாம் எப்படி கிரேட்பிரிட்டனை நாடினோமோ அப்படியே யூனிவர்ஸிடிக் கூட்டுறவு ஸ்டோர் ஆரம்பிப்பதற்கும் அத்தேசத்தின் மாதிரியையே பின்பற்ற வேண்டி யிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி கோவாபரேடிவ் சொஸைடியின் செகிரிடேரி அதைப்பற்றிய சகல கடிதங்களையும் எனக்குக் கொடுத்து உதவியதற்கு என்நன்றியறிதலைச் சொல்லவேண்டியது அவசியம். 1913-ம் வருஷக்கடைசியில் ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடியின் அண்டர் கிராஜ்வேட்களில் சிலர்கூடி ஒரு கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படுத்துவதாயும் அதில் அந்த ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி மெம்பர்களும், உபாத்தியாயர்களும் மாணவர்களும் மாத்திரமே சேரலா மென்றும் தீர்மானித்தார்கள். அச்சங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(1) கோவாபரேஷனின் ஒழுக்கங்களையும், சௌகரியங்களையும் பிரயோஜனங்களையும் ஆசாரச் சீர்திருத்தக்கருவிகளென்று நடவடிக்கையில் காட்டுதல்.

(2) சங்கத்தின் ஸ்டோரில் வாங்குவதனாலும் அக்ஸ் போர்டிலுள்ள பெரிய மொத்தக்கடைகளில் தனி டிஸ்கௌண்டு ஏற்பாடுகளின் பேரில் சரக்குகள் பெற ஏற்பாடு செய்வதாலும் ரொக்க வியாபாரத்தை கௌரவப்படுத்தி கடன் வியாபாரத்தை அனாதரவு செய்தல்.

(3) ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியில்வசிக்கும் செலவைக்குறைத்தல். இவ்வியக்கமானது லார்ட் ரோஸ்பரிதுரையவர்களின் அபிமானத்தைப் பெற்றதோடு, கௌரவக் கௌன்ஸிலின் மெம்பர்கள் பிரமுகர்கள், கோவாபரேடிவ் நிபுணர்கள், காலேஜ்தலைவர்கள், ப்ரொபெஸர்கள், யூனிவர்ஸிடிப்பட்டம் பெற்றவர்கள் முதலியோர்களுங்கூட இதில் மெம்பர்களாகச் சேர்ந்தார்கள். 1914-ம் வருஷம் மேமாதம் 18-ம் தேதி யன்று ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி கோவாபரேடிவ் ஸொஸைடி என்ற பெயருடன் 1893-ம் வருஷத்திய இண்டஸ்ட்ரியல் அண்டு ப்ராவிடண்டு சொஸைடி ஆக்டுப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டது.

அந்த யூனிவர்ஸிடியின் கிராஜ்வேட் Graduates அல்லது அண்டர் கிராஜ்வேட்களும் (undr graduahes) அதில் உபாத்தியாயராகவாவது

படித்துக் கொண்டாவதுஇருக்கும்எவரும்குறைந்தபக்ஷம் ஒருபங்காவது எடுத்துக் கொண்டு மெம்பராகலாம். ஒரு பங்கின் விலை 1 பவுன். பிரவேசக்கட்டணம் 1 ஷில்லிங். ரூல் புத்தகத்திற்கும் பங்குப்பாஸ் புஸ்தகத்திற்கும் விலை இதில் அடங்கும். சொஸைடிகளும், கிளப்புகளும், சபைகளும் கூட மெம்பர்களாகச் சேரலாம். மெம்பராவதனால் ஏற்படும் சௌகரியங்கள் பின்வருமாறு :—

(1) எல்லா லாபங்களையும் குறித்த காலங்களில மெம்பர்களுக்கு அவரவர்கள் சாமான்கள் வாங்கின தொகைகளுக்குத் தகுந்தபடி விதித்துக் கொடுக்கப்படும். ஒரு பங்கு எடுத்துக் கொண்டு தன்தேவைகளையெல்லாம் ஸ்டோரிலேயே வாங்குபவன் இருநூறு பங்குகள் எடுத்துக் கொண்டு ஒன்றும் வாங்காமலிருக்கும் மெம்பரைவிட மிக்க அதிகமான டிவிடண்டைப் பெறுகிறான்.

(2) மெம்பர்கள் கட்டியிருக்கும் மூலதனத்தின் பேரில் 100 க்கு 5 வீதம்வட்டி கொடுக்கப்படுகிறது. (அம்மூலதனம் 10 ஷில்லிங் முதல 200 பவுன் வரையில இருக்கலாம்). மேலும் 1 பவுனும் அதற்கதிக மாகவும் இருக்கும் டிபாஸிட்டுகளின் பேரில் வட்டியும் கொடுக்கப்படும்.

(3) ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி கோவாபரேடிவ் சொஸைடியில் வாங்கும் சாமான்களுக்காக டிவிடண்டு கொடுப்பதலலாமல் ஒவ்வொரு மெம்பரிடமும் கொடுக்கப்பட்டிருக்கும் ஜாபிதாவில் கண்ட எந்த ஆக்ஸ்போர்டுகடைகளில் சாமான் வாங்கினாலும் டிவிடண்டு உண்டு. அதனால் மொத்த டிவிடண்டு அதிகரிக்க இடமிருக்கிறது.

மேனாட்டிலுள்ள இதர யூனிவர்ஸிடிகளும் இம்மாதிரியான கோவாபரேஷனின் பெருமையைக்கண்டு அதைப் பின்பற்றி யிருக்கின்றன. அயர்லாந்திலுள்ள டப்ளின் யூனிவர்ஸிடி, யுனைடட் ஸ்டேட்ஸிலுள்ள ஹார்வர்ட் யூனிவர்ஸிடி மாடிஸன் யூனிவர்ஸிடி ஆகிய இவைகள் தங்கள் எல்லைகளுக்குள் அநேக கோவாபரேடிவ் ஏற்பாடுகள் ஏற்படுத்தி யிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள வித்தியாசாலைகள் இப்பொழுதுதான் சரக்குகளின் கூட்டுக் கொள்வனை விற்பனைகளின் உபயோகத்தை உணர ஆரம்பித்திருக்கின்றன. அம்மாதிரியான முதற்சங்கம் இந்தியாவில் 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி அல்லஹபாத்இந்து போர்டிங் ஹௌஸ் கோவாபரேடிவ் ஸ்டோர், என்ற பெயருடன் ரிஜிஸ்டர் செய்யப் பட்டதாக நம்புகிறேன். இந்த ஸ்டோர் ராக்டேல் ஏற்பாட்டில் நடை பெறுகிறது. நெய், சர்க்கரை, மாவு, அரிசி, பருப்புகள் உப்பு, கிரோஸைன் ஆயில், மெழுகுவர்த்தி, சோப்பு முதலிய தினசரி



செலவாகக்கூடிய எல்லாசமான் களையும் இச்சங்கம் சேகரிக்கிறது. இவைகள் மொத்தமாக வாங்கப்பட்டு காலவிலைபடி மெம்பர்களுக்கு சௌகரியமாகவும் இலாபகரமாகவும் விற்கப்படுகின்றன. சுத்தமான பால் சப்ளை செய்வதற்கு தனி ஏற்பாடுகள் செய்திருப்பதோடு சொந்தத்தில் பாற்சாலை ஒன்றுவைக்கவும் ஆலோசிக்கிறது. முதல் இரண்டு வருஷங்களில் 100க்கு 6¼ இலாபத்தில் வேலை செய்தது. இந்த சங்கமானது கொண்டிருக்கும் கொள்கைகளைப்பற்றி மிஸ்டர் ஏ. வி. சட்டர்ஜி அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியிருக்கிறார்.—“சங்கமானது பொருட்பாங்கில் அதிக இலாபம் பெறுவிடினும் மெம்பர்களுள் வியாபார நோக்கத்தையும் சாதாரணக் கடைவிலைகளுக்கு உயர்ந்த சரக்குகளாகப் றும் விதத்தையும், தேசஜனங்களுக்குள் கோவாபரேடிவ் எண்ணங்களைப் பரவச்செய்யும் மார்க்கங்களையும் கற்பிக்கிறது,” நிச்சயமாகவே இந்நோக்கம் ஒன்றிற்காகவே ஒருவர் முயற்சிக்கவும் ஜீவிக்கவும் தகும்.

இந்நோக்கங்களை சாதிப்பது அருமையாகத்தோன்றலாம். ஆனால் இந்தியாவில் ஒரு காலேஜ் கோவாபரேடிவ் சங்கம் அநேகமாய் சாதித்து
விட்டது. அது அமிருதஸரஸிலுள்ள(Amritsar)கால்ஸா காலேஜ் கோவா
பரேடிவ் ஸ்டோர். அதன் நோக்கங்கள் தன் மெம்பர்களின் பொருட்பாங்
கை வியாபாரமார்க்கங்களினால் உயர்த்துவதும், முக்கியமாய் வீட்டுக்கு
வேண்டியசாதாரண சாமான்களை நல்லதாகவும் சரசமாகவும்வாங்குவதும்
மெம்பர்களுடைய பணங்களை டிபாஸிட்டில் வாங்கிவைத்துக்கொண்டு
அவர்களுள் செட்டையும், சுய உதவியையும் கோவாபரேடிவ்
உணர்ச்சியையும் விளக்குவதே. இலாபம் சம்பாதித்தல் அதன் நோக்கம்.
அல்ல என்று வியக்தமாய் பைலாக்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மெம்
பர்கள் இருவகை (1) கால்ஸா காலேஜைச் சேர்ந்த மாணவர்கள் மாத்தி
ரம் மெம்பர்களாயிருத்தல் (2) கால்ஸாகாலேஜ் உத்தியோகஸ்தர்கள்
அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட அக்காலேஜ் மாணவர்கள் மெம்பரா
யிருத்தல். “இச்சங்கம் ஆரம்பித்து இரண்டுவருஷங்கள் தான் ஆகிறது.
ஆரம்பத்தில் ஒன்று அல்லது இரண்டு சாக்கு மாவும் டெக்ஸ்டு
புத்தகங்களுக்காக ஒரு ஆர்டரும், சில உள் நாட்டு குஜ்ஜார்களுக்குபால்
சப்ளை செய்ய ஒரு உடன்படிக்கையும், ஆகிய இவைகள் தான் இருந்தன.

இப்பொழுது தினந்தோறும் இரண்டு வேளைகளிலும் பால்கறப்பதற்காக 100 எருமைகளும் பசுக்களும் வருகின்றன. ஒரு சாக்கு மாவு விஷயம் வருஷம் ஒன்றுக்கு ரூ. 14000-க்கு வியாபாரமாகும், ஒரு மொத்த ஸ்டோராக வளர்ந்துவிட்டது. புத்தக ஆர்டர் சாதாரணக்கடையாய் எல்லாவிதமான பாடப்புத்தகங்கள் மிகவும் சரசமானவிலைக்கு கிடைக்கக் கூடிய இடமாயிற்று. சொஸைடியின் வருஷவியாபாரம் ரூ. 42,000. மிகவும் குறைந்த இலாபத்திற்கு விற்றும்கூட அதன் நிகர இலாபம் ஒரு வருஷத்தில் சுமார் ரூ. 1.000 ஆயிற்று. புஸ்தகக்கடையில் மாத்திரம் இரண்டு வருஷங்களில் ரூ. 20,000க்குமேல் விற்பனையாயிருக்கிறது. பாற்சங்க வியாபாரம் இன்னும் விசேஷம். சென்ற வருஷத்திய முதல் 8 மாதங்களில் ரூபாய் ஒன்றுக்கு 7¼ சேர் வீதம் 148 மணங்கு பால் மாணவர்களுக்கு விற்கப்பட்டிருக்கிறது. அச்சமயம் கடை விலை சேர் ஒன்றுக்கு 3 முதல் 6 அணுவாக இருந்தது. இதனால் சங்கத்தின் மெம்பர்களுக்கு 5000 ரூபாய்களுக்கு மேல் நஷ்டமாகாமல் பொருள் மிச்சப்பட்டதைக் காணலாம். நிகர இலாபம் காட்டுவதை விட இம்மாதிரியான சௌகரியம் சங்கத்திற்கு உண்மையான கீர்த்தி. மொத்தத்தில் இச்சங்கமானது தன் மெம்பர்களுடைய பணத்தில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 8000 வீணாகாமல் காக்கிறது. இது கவர்ன்மெண்டிலிருந்து அதிக கிராண்டுப்பணம் பெறுவதற்குச் சமானமாகுமன்றோ."

கால்ஸா காலேஜ் கோவாபரேடிவ் ஸ்டோரில் ஐந்து டிபார்டுமெண்டுகள் இருக்கின்றன. அதாவது (1) புத்தக டிப்போ (2) பலசரக்கு மளிகை (3) பாற்சாலை (4) ஜவுளி. (5) விறகு டிப்போ. பூட்ஸ் ஸ்டோரும், பொடகிராப் பிடிக்கும் ஏற்பாடும் ஸ்தாபிக்கப்படுவது ஆலோசனை யிலிருக்கிறது இந்த டிபார்டுமெண்டுகள் ஒவ்வொன்றும் ஒரு புரொபஸரின் பார்வையில் மாணவச் சப்கமிட்டி ஒன்றால் நிர்வகிக்கப்படுகிறது. உண்மையாகவே கால்ஸா காலேஜ் கோவாபரேடிவ் ஸ்டோரானது மாணவர்களும் புரொபஸர்களும் மனதொருமித்து உண்மையான கூட்டுறவு பாவனையில் நடத்தக் கூடிய கோவாபரேடிவ் கிளர்ச்சிக்கு உதாரணமாக இருக்கிறது. வங்காளத்திலுள்ள நாங்கள் தூரத்திலிருக்கும் அமிருட்ஸாரின் கோவாபரேடிவ் வேலைகளுக்கு சமமாகப் பேசமுடியாவிட்டாலும் ரங்பூர், ராஜாஷஹி



கல்கத்தா இவ்விடங்களில் நல்ல ஏற்பாடான சங்கங்கள் ஆரம்பஞ் செய்திருக்கின்றோம். ரங்பூர் கார்மிகேல் காலேஜ், ராஜஷாஹிகாலேஜ், பங்கபாஷி காலேஜ், வி எம். எஸ். காலேஜ் ஆகிய இவைகள் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் கோவாபரேடிவ் ஸ்டோர்களை சமீபத்தில் ஆரம்பித்திருக்கின்றன. (1) சங்கத்தின் மெம்பர்கள் தங்களுக்கு சாதாரணமாய் தேவையாயிருக்கும் வஸ்துக்களை சரசமான விலைக்கு வாங்கும்படி உபகரித்தல் (2) மெம்பர்களின் சௌகரியத்திற்காக மொத்தத்திலும் சில்லரையிலும் வியாபாரங்களை நடத்துதல் (3) மெம்பர்களுக்குள் சிக்கனம், சுயஉதவி, கூட்டுறவு இவைகளை வளரும்படி செய்தல். கோவாபரேடிவ் எண்ணங்களையும் ஊக்கங்களையும் விருத்தி செய்தல். இப்பெருமையான நோக்கங்களோடு சங்கங்கள் மனமாறவேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றன. வேறிடங்களில் இம்மாதிரி வேலை செய்யும் சங்கங்களை கவனித்து அவைகளின் கற்பனையை கவனிக்க இது நல்லசமயம். இதற்காகத்தான் இவ்வளவு ஸ்டோர்களின் மாதிரிகளையும் வேலைகளையும் பற்றி விரிவாகச்சொன்னேன். மாணவர்களும் உபாத்தியாயர்களும் பரஸ்பர ஊக்கத்துடனும் சுய நலம் கருதாமலும் செய்யும் மனமார்ந்த வேலையினால் தான் இம்மாதிரிச் சங்கம் விருத்தியாகிறது. அவர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களின் கொஞ்ச காலத்தை இவ்விஷயங்களில் ஈடு படுத்தவேண்டியிருக்கும். தற்கால உற்சாகமின்றி எக்காலமும் உற்சாகத்துடன் உழைத்தல் அச்சங்கங்களின் விருத்திக்கு அவசியம். வி. எம். எஸ். காலேஜ் ஸ்டோர் திறக்கப்பட்ட காலத்தில் ஹாமில்டன் பெருமாட்டி பின்வருமாறு பேசினாள் "அதாவது உங்களுக்கு நம்பிக்கை, தைரியம் விடாமுயற்சி இவைகள் தேவை. உற்சாகம் முதலில் உண்டாகும்போது ஏதாவது பெரிய வேலையைக் கைக்கொள்வது எளிது. சோதனைகாலங்கள் ஏற்பட்டு கஷ்டங்களும் உண்டாகி வேலைக்கு மந்தகதி உண்டானால் உங்கள் நம்பிக்கையை மலினப்படாமல் வைத்துக்கொண்டு யுத்தகளத்தின் வீரர்கள்போல உறுதியாயுழைத்தால் ஜயம் கிடைப்பது திண்ணம்" உங்கள் சங்கவேலைகளை ஆரம்பித்து விட்டால் "இக்கோயிலைச்சுற்றி வியாபாரிகளுடைய சட்டம் நியாயமாயும், அவர்களுடைய எடை உண்மையாயும், அவர்கள் ஏற்பாடுகள் களங்கமற்றும் இருக்கட்டும் என்று ரஸ்கின் சொல்லியிருக்கும் புத்திமதியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

காலேஜ் கோவாபரேடிவ் சொஸைடியினால் மாணவர்களுக்கு காலேஜ் ஒழுக்கங்களில் ஒழுங்கான மார்க்கங்களைப் போதித்து உபகரிப்பதோடு அவர்களுக்கு இப்பெரிய கிளர்ச்சியின் பலன் நம்நாட்டின் க்ஷேமத்திற்கே ஹேது என்று போதிக்கிறது. இந்தியா, வங்காளம் இவைகளின் பொருளாதார விஷயங்களை இது மிகத்திறமாய்க் கையாடுகிறது. இந்தியாவின் தற்காலப் பொருளாதார விஷயமான இந்த முக்கியமான விஷயம் அதிர்ஷ்ட வசத்தினால் இதுவரையிலிருந்தது போலல்லாமல் படித்த இந்தியர்களால் நன்கு கவனிக்கப்படுகிறது. கோவாபரேஷனுக்கும் இந்தியாவில படித்த ஜனங்களுக்கும் ஏற்படவேண்டிய உறவு காலேஜினால்தான் உண்டாகவேண்டும். கல்விக் கழகத்தில் ஒருதரம் கோவாபரேடிவ் ஒழுக்கம் புகும்படிவிட்டால் அநேகங்கள் விசேஷமாய் விருத்தியாகுமென்று நாம் கண்டிப்பாய் நம்பலாம். ஆசார விஷயம் விருத்தியாக கல்விக்கழகமே தகுதியான இடமாகத் தோன்றுவதால் கோவாபரேடிவ் வேலைகளுக்கு நாம் அவ்விடங்களையே நாடலாம். கலாசாலையில் பொருளாதார விஷயங்களைப் போதிக்கும்போது கோவாபரேடிவ் சொஸைடிகளை நிதரிசனமாகக்காட்டி நன்றாய் போதிக்கலாம். தற்காலம் யூனிவர்ஸிடிகளின் தேவை முற்காலத்தைவிட அதிகம். மாணவர்களுக்கு சாதாரண ஒழுக்கங்களை யூனிவர்ஸிடி போதிக்கக் கடமைப்படவேண்டியதோடுகூட பொருளாதாரம் ஆசாரவிஷயம் ஆகிய இவ்விஷயங்களையும் கையாளும்படி செய்யவேண்டும். ஏனென்றால் இவ்விஷயங்கள்தான் தற்காலத்தில் மற்ற எல்லாவற்றையும்விட முன்னால் நிற்கின்றன. பொருளாதாரப்படிப்பு உபயோகப்படவேண்டுமானால் புத்தகப்படிப்போடுகூட அநுபவஞானத்திலும் பழக்கம்வேண்டும். ரசாயன சாஸ்திரம் கற்றுக்கொள்வதற்கு புத்தகப்படிப்பு மாத்திரம் போதாமல் நேரில் உதாரணம் செய்து காட்டவும் வேண்டியிருக்கிறதல்லவா? அப்படியே கோவாபரேடிவ் படிப்போடுகூட அநுபவமும் உண்டாகும்படி செய்தால் விஷயம் நன்கு பிரயோஜனகரமாகுமென்று நம்புகிறேன்.

இதுவரையில் சொன்னதிலிருந்து காலேஜ் கோவாபரேடிவ் ஸ்டோரும் இதர ஸ்டோர்களைப்போல இலாபம் சம்பாதிக்கும் ஏற்பாடாக



இருந்துகொண்டு மெம்பர்களுக்கு டிவிடெண்டு சம்பாதித்துக்கொடுக்கும் தொழிலையுடையது என்று நினைக்கலாம். ஆனால் பழைய ஆசாரவழக்கங்களை ஒழித்து ஜனங்களை முன்னுக்கு கொண்டுவரும், புதிய ஆசார வழக்கங்களை ஏற்படுத்தும் மார்க்கமென்று பெயரிடுவது பொருந்தும். கோவாபரேடிவ் சொஸைடியில் மாணவர்கள் பெறும் அநுபவஞானம் கிராமச் சங்கமெம்பர்களை உபயோகமாகப் படிப்பிக்கப் பிரயோஜனப்படும். கோவாபரேடிவ் எண்ணங்களை கிராமவாசிகளுக்குள் அநுபவஞானத்தில் பழக்கப்பட்டவர்களல்லாமல் வேறு யாரால்தான்போதிக்கமுடியும்? மாணவர்களுக்கு ஆசாரச் சீர்திருத்தத்தில் தற்காலம் உண்டாயிருக்கும் உற்சாகத்திற்குத் தக்கவேலை இக்கிளர்ச்சியில் கிடைக்கும். காலேஜ் கோவாபரேடிவ் சொஸைடியினால் உபாத்தியாயர்களுக்கும், மாணவர்களுக்கும், மனப்பூரணமாயும் ஒழுங்காயும் ஒற்றுமையுடன் வேலை செய்ய இடமுண்டாகிறதோடு தற்கால வங்காளக் காலேஜ் வழக்கங்கள் போல மாணவர்களுள் இருக்கும் வேற்றுமைப்புத்திகள் இல்லாமல் அன்னியோன்னிய சிநேகமும் ஒற்றுமையும் ஏற்படும்

கடைசியாக நான் சொல்லுவது என்னவென்றால் உங்களுக்கு சத்தும் இன்பமுமுள்ளபுது ஆகாரம் வயிறு நிறைய வேண்டுமானால், சிக்கன புத்தியை விருத்திசெய்து பொருள்கள் கஷ்டங்களை நிவர்த்திக்க விரும்பினால், கோவாபரேடிவ் வேலைகளிலும் வியாபார விஷயங்களிலும் அநுபவஞானம் பெற விரும்பினால், சுய ஆக்ஷியின் முதற்பாடங்களைக் கற்க வேண்டுமானால், பரஸ்பர உபகாரத்தினை காலேஜுகளில் கூட்டுறவைப் பரவவைக்க முயன்றால, உபாத்தியாயர்களும் ஐரோப்பியரும் இந்தியரும் இந்துக்களும், மகமதியர்களும், கிறிஸ்துவர்களும் ஒற்றுமையுடனும் பொறுமையுடனும் பரஸ்பரக்ஷேமக் கோரிக்கையுடனும் உழைக்கக்கூடிய பொது இடம் ஒன்றை விரும்பினால், வங்காளத்தில் கோவாபரேடிவ் இயக்கத்தை விருத்திசெய்து கல்கத்தாவிலுள்ள ஒவ்வொரு காலேஜிலும் வெளியூர்களிலும் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் ஏற்படுத்தும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# நில அக்ரிமெண்ட் பத்திரம்.

## நமுனா பாரம்.

### நரியங்காடு கோவாபரேடிவ் சோஸைட்டி.

1. சென்னைப்பட்டணம் சிந்தாதிரிப்பேட்டைக்கடுத்த நரியங்காட்டில்
ஸ்தாபித்திருக்கும் நரியங்காடு கோவாபரேடிவ் கிரிடிட் சோஸைடியின்
பஞ்சாயத்தார்களுக்கு ஷை நரியங்காட்டில்வசிக்கும் ஷை சொஸைடியின்
மெம்பர் நெம்பர் குமாரன்
எழுதிக்கொத்த நில அக்ரிமெண்டு என்னவென்றால்:—

2. மதராஸ் செங்கற்பட்டு ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட், மேல்மத
ராஸ் சப்டிஸ்ரிக்ட், மதராஸ் முனிஸிபல் டிவிஷன் 13-ல் சேர்ந்த நரியங்
காடு என்றுவழங்கும் ரீசர்வே நெம்பர் 1283-நிலத்தை மதராஸ் முனிசி
பாலிடியார் Land Acquisition Act பிரகாரம் acquire பண்ணி ஷை
நரியங்காடு கோவாபரேடிவ் சொஸைடியாருக்கு சுவாதீனப்படுத்தியவகை
யில் ஷை சொஸைடியார் மேற்சொல்லிய acquisition க்காகவும் அதுசம்
பந்தமான இதர விஷயங்களுக்காகவும் திருவல்லிக்கேணி அர்பன் கோவா
பரேடிவ் சொஸைடியிலும் ஷை சொஸைடியின் மெம்பர்களிடத்திலும்
சேர்ந்து வாங்கின தொகைகள் ரூபா 10,000 இந்த இரண்டு தொகைக
ளுக்காக கட்டவேண்டியதாக தீர்மானிக்கப்பட்ட வட்டி ரூபா
ஆகமொத்தம் ரூபா ஷை நரியங்காடு ரிசர்வே நெம்பர்
1283-ல் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கும் ஷை சொஸைடி மெம்பர்கள்
தீர்க்க வேண்டி கடமைப்பட்டவர்களாக இருக்கின்றபடியால், அந்தமெம்
பர்களில் ஒருவராகிய நான் ஷை சொஸைடியின் அநுமதியின் மேல் என்
வசத்திலிருக்கும் தெருவு கிழக்கு
மேற்கு தெற்கு வடக்கு
சதுர அடியுள்ள மனைக்கு தாமாஷாபடிக்கு நான் கொடுக்கவேண்டிய
ரூபாய் எழுத்தால் ரூபாய் இந்த ரூபாய்
தங்களுக்கு செலுத்த கடமைப்பட்டு இன்றைய தேதிமுதல் 10-வருஷத்
திற்குள்ளாக செலுத்தவேண்டியிருப்பதால் மாதப்பிரதியாதம்
சொஸைடியின் பஞ்சாயத்தார்களாகிய தங்களுக்குத் தப்பாமல் செலுத்து



கிறேன். எந்தமாதமாவது செலுத்தத்தவறினால் அந்த பாக்கி தொகைக்கு
ரூபாய் 1-க்கு 2பைவட்டியுடன் கட்ட ஒப்புக்கொண்டேன். நான்
செலுத்தவேண்டிய பூராத் தொகையை செலுத்துகிறவரையில் மேற்
சொல்லிய மனைக்கு சொஸைடிக்காக பஞ்சாயத்தார்களாகிய தாங்களே
ஸர்வ பாத்தியதாராய் இருக்கவும். நான் மேல்சொல்லிய மாதமாததவணை
கிரமமாய் கட்டத்தவறினால் தாங்கள் என்வசமிருக்கும் மனையின்மேல்
கட்டப்பட்டிருக்கும் கட்டடத்திற்கு ஒன்றும் காம்பன்சேஷன் கொடுக்
காமல் மனையிலிருந்து என்னை தாங்கள் நீக்கிவிட்டு நான் மனையிலிருந்து
நீங்குகிற தேதிவரைக்கும் மனையின் அனுபவத்திற்காக சொஸைடி பஞ்
சாயத்தார்கள் குறிப்பிடும் வாடகையை நான் அதுவரைக்கும் சொஸை
டிக்குசெலுத்தியிருந்த மொத்தத்திலிருந்து கழித்துக்கொண்டு மிகுதியை
எனக்கு கொடுத்துவிடவும் அல்லது வாடகைத்தொகையை நானே அதி
கமாய் கொடுக்கவேண்டியதாக ஏற்பட்டால் என்னிடத்திலிருந்து வசூ
லித்துக்கொள்ளலாம்.

3. மேல்சொல்லிய மனையில் நரியங்காட்டை சீர்திருத்துவதற்காக
சிலபாகங்கள் தாங்களாவது அல்லது கவர்ன்மெண்டாராவது அல்லது
முனிஸிபாலிட்டியாராவது எடுத்துக்கொள்ளுகிற விஷயத்தில் நான்
யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லாமல் அந்தபாகங்களை காலிசெய்து
விட்டு விடுகிறேன். ஷை சர்வே நெம்பரில் தாங்களாவது கவர்ன்மெண்
டாராவது அல்லது முனிசிபாலிட்டியாராவது சிலபாகங்களை எடுத்துக்
கொள்வதினால் நான் கொடுக்கவேண்டிய மொத்தத்தொகை ஜாஸ்திபட்
டாலும் குறைவுபட்டாலும் தாங்கள் ஏற்படுத்தும் தொகையை தாங்கள்
நியமிக்கும் மாதமாதப்பிரிவுபடிக்கு நான்கொடுக்கக்கடவேனாகவும். இந்த்
தொகை விஷயத்திலும் மேல்கண்ட ஷரத்துகள்பிரகாரம் நடக்கவுத்துக்
கொள்ளுகிறேன்.

4. நான் இன்றையதேதிவரைக்கும் என்சுவாதீனத்தி லிருந்து
வரும் மனைக்காக சொஸைடிக்கு செலுத்த வேண்டிய குடிக்கூலி வகை
யராபாக்கி மொத்தத்தை இன்றையதேதிமுதல் 1-வருஷத்திற்
குள் செலுத்திவிடுகிறேன். 10-வருஷங்களுக்குள் நான் சொஸைடிக்கு
செலுத்தவேண்டிய மேற்சொன்ன தொகையை செலுத்தத் தவறினால்
சொஸைடிபஞ்சாயத்தார் என்னை என் சுவாதீனத்திலிருக்கும் மனையி

விருந்து நீக்கிவிடலாம். அல்லது எனக்கு பஞ்சயாத்தார் இஷ்டப்பட்டால் மேற்சொல்லிய 10-வருஷக்கெடுவை இன்னும் இரண்டு வருஷத்திற்கு அதிகப்படாமல் அதிகப்படுத்திக் கொடுக்கலாம். என்னை மனையிலிருந்து நீக்கிவிட தீர்மானிக்கிறபக்ஷத்தில் சொஸைடியாருக்கு நான் அதுவரையிலும்செலுத்தியிருந்த மொத்தப்பணத்தில் சொஸைடியார் அவர்களுக்கு நான் பணம் செலுத்த தவறுதலினாலும் என்னை மனையைவிட்டு நீக்குவதினாலும் நேரிடும் எல்லா நஷ்டங்களையும் தள்ளி மிகுதி பணத்தை எனக்கு வாபீசு செய்துவிடலாம்.

5. நான் சொஸைடிக்கு செலுத்தவேண்டியபணத்தை பூராவாக செலுத்துகிறவரைக்கும் என் சுவாதீனத்தில் சொஸைடியார் விட்டிருக்கும் மனையை நான் எவ்விதத்திலும் விக்கிரயமாவது, அடமானமாவது, இதர எவ்வித வில்லங்கமாவது செய்கிறதில்லையென்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

6. நான் சொஸைடிக்கு செலுத்தவேண்டிய பணத்தை பூராவாக செலுத்தினபிறகும் என் சுவாதீனத்தில் இருந்துவந்த மனையையாவது அதின்பேரில் இருக்கும்கட்டடத்தையாவது விற்க அல்லது அடமானம் வைக்க நேரிட்டால் சொஸைடியாருக்காவது அல்லது சொஸைடிபஞ்சாயத்தார்தீர்மானத்தின்படி ஏற்படுபவர்களுக்காவது விற்கவும் அடமானம் வைக்கவும் கடவேனேயல்லாமல் இதரார் யாருக்கும் விற்பனையாவது அடமானமாவது செய்கிறதில்லை என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

இந்தப்படிக்கு என்மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த நில அக்ரிமென்ட்:—

சாக்ஷிகள். கையொப்பம்.

—

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் X] 1919ளு ஜூன்மீ [இலக்கம் 12.

## பத்திராதிபரின் குறிப்புகள்.

—

ஆந்திரதேச கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

ஆந்திரதேச முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் (நடவடிக்கைகள் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன) 1919-ம் வருஷம் ஜூன்மாதம் 28, 29 தேதிகளில் பெஜவாடாவில் நடைபெற்றது. சென்னைவாசி ஸ்ரீமான் V. இராமதாஸ் பந்துலு அவர்கள் அக்கிராசனம் வகித்தார். இந்தக் கான்பரன்ஸைக் கூட்டிவைப்பதில் அதிக ஊக்கமும் சிரத்தையும் எடுத்துக்கொண்டவர் குடிவாடா ஸ்ரீமான். ஜீ. இராமச்சந்திர ராவ் அவர்கள். சென்னையில் நடந்த மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸிற்கு ஆந்திர தேச பிரதிநிதிகள் மிகவும் குறைவாய் வந்த காரணம்பற்றி ஆந்திர தேசத்திற்குத் தனி கான்பரன்ஸ் கூட்டவேண்டுமென்று இவருக்கு ஊக்கமுஞ் சிரத்தையும் ஏற்பட்டது. தவிர இன்னொரு காரணமும் உண்டு. தெலுங்கு ஜில்லாக்கள் சம்பந்தமான சில தீர்மானங்கள் அவகாசக் குறைவினால் மாகாணக் கான்பரன்ஸில் கவனிக்கமுடியாமற் போய்விட்டது. பிரதிநிதிகள் எவ்வளவு வந்திருக்கவேண்டுமோ அவ்வளவு வரவில்லை. கான்பரன்ஸ் கூடினது ஜனங்களுக்குச் சௌகர்யமான காலமல்லவபோலும். கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள் (Ceded Districts) கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களின் பிரதிநிதிகள் கான்பரன்ஸிற்கு வரவில்லை. சித்தூர் நெல்லூர் ஜில்லாக்களிலிருந்து வெகுசொற்ப பிரதிநிதிகள்தான் வந்திருந்தார்கள். கான்பரன்ஸில் தீர்மானங்கள் வெகு நன்றாக வாதிக்கப்பட்டன. அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சிலவற்றை நாம் அங்கீகரிக்க முடியாதெனினும் கான்பரன்ஸ் மிகவும் சிறப்பாகநடை

பெற்றதென்றே சொல்லவேண்டும். ஆந்திரதேச கான்பரன்ஸ் வருஷா வருஷம் சரிவர நடைபெறுமென்றும் இயக்கத்தில் வேலை செய்வதற்கு ஆட்கள் வருஷாவருஷம் நூதனமாகச் சேர்ந்துகொண் டிருப்பார்களென்றும் நம்புகிறோம்.

ஆந்திர இயக்கம் என்று சொல்லப்படுகிற ஒரு பெரிய இயக்கத்தின் கிளையாக இக்கான்பரன்ஸ் ஏற்பட்டுள்ளதென்று அக்கிராசனர் மிஸ்டர் இராமதாஸ்பந்துலு தம்முடைய பிரசங்கத்தில்சொன்னார். அந்தந்த பாஷா பேதங்களை யொத்து இவ்வியக்கமும் தனியே நடத்தப் படவேண்டியதன் அவசியத்தைக்குறித்து வரவேற்புக்கமிட்டியின் சேர் மென் தம்முடைய பிரசங்கத்தில்சொன்னார். கான்பரன்ஸில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானது தெலுங்கு ஜில்லாக்களைத் தனியே பிரித்து அதற்கென்று பிரத்தியேக ரிஜிஸ்தரார் ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதே. அப்படித்தனியே பிரிப்பதால் ஆந்திரர்கள் முன்னேற்றமடைய தனியே முடிவதன்றி கூட்டுறவு இயக்கத்தை பாஷைப்பிரகாரம் தனியே பிரித்து முன்னேற்றமடையச்செய்ய வேண்டுமென்பதே கருத்து. கடைசியில் சொல்லப்பட்ட விஷயம் இன்னதென்பதை நாம் செவ்வனே அறிந்துகொள்ளமுடியவில்லை. கூட்டுறவு இயக்கத்தை பாஷைப்பிரகாரம் எப்படி விர்த்தி செய்வது ?. சில ஜில்லாக்கள் அல்லது ஜாதியார் கூட்டுறவு இயக்கத்தில் அல்லது இயக்கத்தின் ஒரு பகுதியில் பின்னடைந்திருப்பார்களானால் அந்த ஜில்லாக்களின் அல்லது ஜாதியாரின் பாஷையை கவனியாது அவர்களுக்கு ஏற்பட்டுள்ளக் குறைகளை நிவர்த்திசெய்ய பிரத்தியேகமாகச் செய்யக்கூடிய ஏற்பாடுகளைப் பற்றிக் கவனிக்கவேண்டும். தெலுங்கு ஜில்லாக்களுக்கு தெலுங்குபாஷையும், தமிழ் ஜில்லாக்களுக்கு தமிழ் பாஷையும் தவிர வேறு பாஷைகள் வேண்டுமென இதுவரைக்கும் ஒருவருங் கூறவில்லை. தெலுங்குஜில்லாக்கள் தமிழ்பாஷைகளில்கணக்குகள்வைக்கவில்லை.தமிழ் ஜில்லாக்கள் தெலுங்குபாஷையில் கணக்குகள் வைக்கவில்லை. தற்காலமுள்ள முறையில் ஏதேனும் குறைகளிருக்கின்றனவென்றும் அவைகளை நீக்குவதற்கென்று தனி ரிஜிஸ்தரார் கோறப்படவில்லை. ஆந்திர இயக்கத்திற்குக் காரணமான ஆந்திர அபிமானத்தைதிருப்திசெய்யவே தனி ரிஜிஸ்தரார் வேண்டுமென கோறப்படுகின்றது. ஆந்திர ஜில்லாக்களையெல்லாம் சேர்த்து தனிமாகாணமாக்கவேண்டுமென்னும் எண்ணம் ஆந்திர இயக்க நோக்கத்தைச்சேர்ந்தது. இராஜீயவிஷயமான இத்தகைய கொள்கைளுடன். கூட்டுறவினர்களாகிய நாம் சிறிதும் சம்பந்தப் பட்டில்லையாதலால் இத்தகைய நோக்கங்களும், எண்ணங்களும் நமக்குச் சிறிதளவும்சிந்தனைக்கிடங்கொடுக்கவில்லை.



ஆந்திர மாகாணம் தனியாக ஏற்படும் போது ஆந்திர ஜில்லாக்களெல்லாம் ஒருதனிப்பிரிவாக ஏற்படுத்தப்பட்டு அதற் கென்று ஒருதனி ரிஜிஸ்தராரும் நியமிக்கப்படுவார். ஆந்திர மாகாணம் தனியாக ஏற்படுவதன் முன் இத்தீர் மானம் அமுலுக்குக் கொண்டுவரப் படவேண்டு மென்றால் ஒரு புது ரிஜிஸ்தராரை நியமனஞ் செய்து அவருக்கு வேண்டிய சிப்பந்திகளை யெல்லாம் கவர்ன்மெண்டார் நியமிக்க வேண்டுமானால் இதற்குத்தகுந்த காரணங்கள் காட்டப்பட வேண்டும். அபிமானத்தை மட்டும் ஆதாரமாகக் காட்டுவது போதாது.

தற்காலம் வடசர்க்கார் நாடுகள் இரண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்த ரார் களின் கீழ் இருக்கின்றன. கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள் (ஸீடட் டிஸ்டிரிக்ட்ஸ்) ஒரு அஸிஸ் டெண்டு ரிஜிஸ்தராரின் கீழ் இருக்கின்றன. அஸிஸ் டெண்டு ரிஜிஸ்தரார்கள் ஒவ்வொருவரும் அந்தந்த செக்ஷனின் ஜில்லாவாசிகள். தற்காலம் அவர்கள்சங்கங்களின் ரிஜிஸ்டரேஷனை கியான் ஸல்செய்வதைத்தவிர ரிஜிஸ்டிராரின் அலுவல்கள் முழுவதையும்செய்து வருகிறார்கள். அந்தந்த ஜில்லாக்களுக்கு தகுந்தபடி வேண்டுவன வற்றை யெல்லாம், டிபார்ட்டு மெண்டார் செய்யவில்லை யென்று டிபார்ட்டுமெண் டார் மீதுபழி சுமத்தாதபடிக்கு, வேண்டுவனவற்றையெல்லாம் டிபார்ட்டு மெண்டார் செய்துவருகிறார்கள். எவ்வளவு துரிதமாய் இயக்கத்தைப் பர வச்செய்ய முடிமோ அவ்வளவு துரித மாகவே அஸிஸ் டெண்டு ரிஜிஸ்த ரார்களும் வேலை செய்து வருகிறார்கள். தற்காலம் ரிஜிஸ்தராரும், அஸிஸ் டெண்டு ரிஜிஸ்தரார்களும் செய்ய முடியாத எக்காரியம் தனி ரிஜிஸ்தரார் வந்தால் செய்து முடிக்கக் கூடுமென்பது நம்முடைய யோசனைக்கு எட்ட வில்லை. தனித்தனி பாஷைகளை யுடைய பிரிவுகள் ஒரே ரிஜிஸ் தராரின் கீழ் இருப்பதால் ஒரு பிரிவின் அனுபவமும், பயிற்சியும் இன்னொரு பிரிவுக்கு பிரயோசனப்படக்கூடும். இந்தப்பிரயோசனம் வீணாகும் படிச் செய்வது சரியல்ல. கூட்டுறவு இயக்கம் உத்தியோகஸ்தர்களின் இயக்கமாகவே தினந்தோறும் வளர்ந்து கொண்டே போகிற தென்றும் உயர் பதவி உத்தியோகங்கள் அனாவஸ்யமாய் அதிகப் படுத்தப் படுகின் றன வென்றும் உத்தியோகப் பற்றில்லாத கூட்டுறவினர்கள் சிலர்சொல்லு கிறார்கள். கெடுதலுக் கிடமில்லையானாலும் அனாவஸ்ய மான உயர் பதவி உத்தியோகங்களில் பொதுஜனங் களின் பணம் செலவழிக்கப் படுமுன் இத்தகைய யோசனைக்குத்தகுந்தவும் பலமானவும் நியாயங்களும் ஆதாரங் களும் காட்டப்பட வேண்டும். இத்தீர்மானத்தின் மேல் எத்தகைய நட வடிக்கையும் நடத்துதல் நாம் சிறிதேனும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.
பைங் கொன்றும் (மாகாண
இது தவிர தனி அபெக்ஸ்
செய்தார்கள். ஆந்திர மாகா
பைங்கு) வேண்டுமென தீர்மானஞ்
ணம் தனியாக வேண்டு மென்றும், தனி ரிஜிஸ்தரார் வேண்டு மென்

றும் செய்யப்பட்ட தீர்மானங்களை யொட்டியே இத்தீர்மானமும் செய்யப்பட்டது. பிரத்தியட்ச நடவடிக்கைகளில் பயிற்சியும் அனுபவமும் கூட்டுறவினர்களுக்கு அதிகமாயுண்டு டென்று சொல்லப்பட்டு வருகின்றது. இத்தகைய கூட்டுறவினர்கள் கூட ஆந்திர தேசத்திய கூட்டுறவுச் சங்கங்களின் தற்கால நிலையை சற்றுங் கவனியாமல் இத்தகைய தீர்மானத்தை ஆமோதித்தது நமக்கு மிக்க ஆச்சரிய காமாக இருக்கின்றது. தெலுங்கு ஜில்லாக் களிலுள்ள ஜில்லா பைங்குக ளெல்லாம் இன்னும் குழந்தைப் பருவத்தில் தான் இருக்கின்றன. மெட்ராஸ் சென்டிரல் அர்பன் பாங்கின் உதவியின்றி காரியங்கள் நடைபெறக் கூடியவாறு தெலுங்கு தேசத்திய ஜில்லா பாங்குகளில் டிபாசிட்டுகள் அவ்வளவு வளர்ந்து விடவில்லை. அபெக்ஸ் பைங்கு ஸ்தாபனஞ் செய்யப் பட்டால் அதற்கு வேண்டிய பணம் தானாகவே வந்து விடக் கூடுமென்று சொல்லப் பட்டதாக கேள்விப் படுகிறோம். அதாவது ஏதாவது ஒரு பாங்கை ஸ்தாபனஞ் செய்து விடுங்கள் அஃது எப்படியாவது வெற்றி பெற்று விடுமென்று சொல்லுவதற் கொப்பாகின்றது. இக்கொள்கை உண்மையாயிருக்குமானால் ஸ்தாபிக்கப்பட்ட ஒவ்வொரு சங்கமும் வெற்றி பெற்றிருக்க வேண்டுமே?

தனியாகப் பிரித்துக் கொள்ள வேண்டு மென்கிற எண்ணம் முழுவதும்—கூட்டுறவு இயக்கத்தின் தனிப்பிரிவு வேண்டு மென்பதும், தனி ரிஜிஸ்தரார் வேண்டு மென்பதும், தனி அபெக்ஸ் பைங்கு வேண்டு மென்பதும்,—ஆந்திர ஜில்லாக் களின் கூட்டுற இயக்கத்திற்குதவி புரியக்கூடிய மெட்ராஸ் சென்டிரல் பைங்கின் அதிகாரிகளுக்கும் வேறு இதர சங்கங்களின் அதிகாரிகளுக்கும் எத்தகைய வெறுப்பும் உண்டாக் காமலிருக்கவேண்டுமென்பதே நம்முடைய எண்ணம். ஏனெனில் ஆந்திர ஜில்லாக் களின் கூட்டுறவு இயக்கத்திற்கு இவர்கள் உதவி தற்காலம் இன்றியமையாதது.

ஆந்திர மாகாண கோவாபரேடிவ் ஆர்கானைசேஷன் சங்கம் ஒன்று ஸ்தாபனஞ் செய்ய தீர்மானம் நிறை வேற்றப் பட்டது. அச்சங்கத்தின் நோக்கம், சங்கங்களுக்கு போதிப்பதும், சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யவும், இயக்கத்தைப் பறவச் செய்யவும் ஏற்பாடுகள் செய்வது. இத்தகைய சங்கங்கள் எவ்வளவிருந்தாலும் போதுமானதாக ஏற்படாது. சங்கங்கள் எவ்வளவு அதிகமாக வளர்கின்றனவோ அதற்குத்தக்குந் தாப்போல் இயக்கத்தில்வேலைசெய்யஉத்தியோகப் பற்றில்லாத கூட்டுறவினர்கள் முன்வருவதில்லை. இவ்விஷயத்தில் தெலுங்கு ஜில்லாக்களும் இதர ஜில்லாக்களைப் போலத்தான் இருக்கின்றன. ஆர்கானை சேஷன் சங்கம் ஸ்தாபனஞ் செய்ய கான்பரன்ஸால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் தெலுங்கு ஜில்லாக்கள் ஒவ்வொன்றி லிருந்தும் உத்தியோகப் பற்றில்லாத தேர்ந்த கூட்டுறவினர்கள்



சிலரை அடைவார் களானால்தேசத்திற்கு ஏற்படக்கூடிய நன்மை சொற்பமென்றுச் சொல்ல முடியாது. தெலுங்கு ஜில்லாக்களிலும், வேறு இடங்களிலும் இயக்கத்தைப் பரவச் செய்வதற்கு இடம் விசாலமாக விருக்கின்றது. கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு கூட்டுறவின் ஞான உபதேசம் பெற்றவர்கள் கூட இயக்கத்தின் தர்மத்தைசரிவர அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் கற்றுணர வேண்டியது ஏராளமாக இருக்கின்றது ஆந்திர ஆர்கானை சேஷன் சங்கம் எவ்விதத்திலும் சித்தி பெறவேண்டுமென்று விரும்புகிறோம். கமிட்டியார்இதன் விஷயத்தில் அசிரத்தையாயிருக்க மாட்டார் களென்று நாம் உறுதியாய் நம்புகிறோம்.

* * *

இங்கிலாந்தில் தற்காலம் ஒருபவுனின் விலை ரூபாய் பன்னிரண்டாக இருக்கின்றது. இந்தியாவிலோ ஒரு பவுனின் விலை சற்றேரக் குறைய இருபது ரூபாயாக இருக்கின்றது. தற்காலம் வெள்

தங்கமும்
வெள்ளியும்

ளியும் தங்கமும் மட்டாயிருப்பதன் காரணத்தை முன்
னிட்டு பவுன் விற்கக்கூடா தென்றும், உருக் கக்கூடா தென்றும் அர
சாங்கத்தார் சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். கவர்ன் மெண்டார் ஏற்
படுத்தியிருக்கும் விலை பவுன் ஒன்றுக்கு ரூபாய் 15. இதைவிட அதிக
விலைக்கு விற்பவன் அல்லது அதிகவிலை கேட்பவன் கவர்ன் மெண்டு உத்
தரவு பிரகாரம் குற்றவாளி யாகிறான். அதே விதமாக பவுனை உருக்கு
கிறவனும் குற்ற வாளியே. கவர்ன் மெண்டாருடைய சட்டம் இவ்வித
மாக ஏற்பட்டிருந்தும் பவுன்கள் விற்கப்பட்டும் வருகின்றன. நகைகள்
செய்வதற்காக பவுன்கள் உருக்கப் பட்டும் வருகின்றன.ஜனங்களுடைய
எண்ணத்தின் மேல் கவர்ன்மெண்டு உத்தரவு பலிக்கவில்லை யென்பது
ஏற்படுகின்றது. இவ்விஷயத்தை இங்கு எடுத்துக் காட்டுவதால் கவர்ன்
மெண்டு சட்டம் பலிக்க வில்லை யென்பதை எடுத்துக் காட்ட
வேண்டு மென்பது எண்ணமல்ல. ஜனங்கள் சிக்கனத்தை அறிந்து
கொள்ளாத குறையையும், பொருளாதார விஷயங்களின் உண்மை நிலை
யை அறிந்து கொள்ளாத அஞ்ஞானத்தையும் மட்டுமே குறிப்பிட்டுக்
காட்டவேண்டுமென்பது நம்முடைய எணணம். இவ்விஷயத்தில் படித்த
வர்களும் படிக்காத பாமரர்களும், அறிந்தவர்களும்,அறியாதவர்களும்
வர்த்தகக் கூட்டத்தாரும் வியாபார வகுப்பாரும் எல்லோரும் ஒரேவிதமா
கத்தான் நடந்துகொள்ளுகிறார்கள். இவ்விஷயந்தான் நமக்குஅதிக வருத்
தத்தைக் கொடுக்கின்றது. ஆனால் பொருளாதார விஷயத்தின் நிலைமை
யை எல்லாவகுப்பாரும் உணர்ந்தே யிருக்கிறார்கள். பிரத்தியட்சமாய் அனு
பவத்தில் மட்டும் உணர்ந்தே விஷயத்தைக் கையாளுவதில்லை.எங்கு கண்
டாலும் "தேசாபிமானம்" "தேசாபிமானம்" என்னும் சப்தம் பலமாக
இருக்கின்றது. ஸ்வதேசியத்தைப் பலப்படுத்த வேண்டுமென்ற ஆர

வாரமும் தேசத்தின் விவசாயம், தொழில்கள் க்ஷீணித்துப்போயிருப்ப தைப்பற்றி கூக்குரலும் குறைந்தில்லை. அரசாங்கத்தார் என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி ஏராளமான யோசனைகள் சொல்லப் படுகின்றன. ஒருதேசத்தின் தொழில்களை விர்த்தி செய்து அதன் குடிகளின் சௌகர்யாசௌகர்யங்களைக் கவனித்து வரவேண்டியது அரசாங்கத்தாரின் கடமையே. இந்தியாவின் க்ஷேமத்திற்கு வேண்டியவைகளை இதுபர்யந்தம் கவனிக்கவில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார்மீது சுமத்தப்படும் பழியை நாமும் ஒப்பாமலிருக்கமுடியவில்லை. நம் தேசத்தின்தொழில்களையும் விவசாயத்தையும் விர்த்திசெய்வதற்கு கவர்ன்மெண்டார் உதவியின்றியே ஜனங்களே எவ்வளவோ செய்திருக்கலாமென்பதை நாம் இங்கே வற்புறுத்தவேண்டுகிறோம்.

தொழில்களையும் விவசாயத்தையும் விர்த்திசெய்ய அத்தியாவசியமாக வேண்டியது மூலதனம். இந்த உதவி எல்லாவற்றிலும் முதன்மையாக வேண்டியிருக்கின்றது. இந்தியாவின் விசாலத்திற்கும், ஜனத்தொகைக்கும் தகுந்தாற்போல் வேண்டியஅளவு நம்மிடம் மூலதனம் இல்லையென்பது உண்மையே. ஆயினும் இக்காரணத்தை சாக்காக வைத்துகொண்டு இருப்பதையெல்லாம் வேறு வழிகளில் செலவழிப்பது சரியல்ல. தங்க நகைகளைச்செய்வதும் வெள்ளி தங்கப் பாத்திரங்களைச் செய்வதும், முதல் தினந்தோறும் வளரக்கூடிய காரியங்களைவிட்டு இதரகாரியங்களில் அதாவது முதல் வளரவிடாமல்க்ஷீணித்துப்போகக்கூடிய காரியங்களில் செலவழிப்பதாகும். நகைகளும் பாத்திரங்களும் நாளடைவில் தேய்ந்து போய் கடைசியில் நஷ்டத்தையுண்டுபண்ணுகின்றன. சென்ற ஐம்பது வருஷங்களில் உலகத்தின் உற்பத்தியான தங்கத்தின் ஒன்பதிலொரு பாகம் இந்தியாவில் செலவழிந்துபோனதாக ஸ்டேடிஸ்ட் பத்திரிகையோ அல்லது அதுபோன்ற பெயர்வாய்ந்த சிறந்த பத்திரிகையோ சிந்நாட்களுக்கு முன் பிரசுரஞ்செய்திருந்தது. தரித்திரத்தால் மூழ்கியிருக்கும் தேசங்களில் ஒன்றாகிய இந்தியாவின் நிலைமை இத்தகையது. தற்காலம் தங்கம் வெள்ளி விற்பவர்களுக்கு இலாபம் அதிகமாக இருக்கிறது. இதர சாமான்களைப்போலவே தங்கம்வெள்ளியை வியாபாரஞ்செய்தால் தகுந்த இலாபம் கிடைக்கும். ஒவ்வொரு கல்யாணத்திலும் தங்கநகைகளும் வெள்ளிநகைகளும் வாங்கப்படுகின்றன. அவற்றுள் வெகு சொற்பந்தான் பின்னால் விற்கப்படுகின்றன. இந்தியாவின் தொழில்களை விர்த்தி செய்ய இது தக்கசமையம். நம்முடைய தங்கவெள்ளி நகைகளை விற்று வியாபாரத்திலும் தொழில்களிலும் செலவழிப்போமானால் தேசத்திற்கு பெரும் நன்மையை செய்தவர்களாவோம். படித்த அறிவாளர்கள் இத்தகைய செய்கைகளைச் செய்து இதரர்களுக்கு வழிகாட்டவேணடும். கூட்டுறவுபோதிக்கும் முதல்பாடம் சிக்கனம். கூட்டுறவினர்கள் இவ்



விஷயத்தை முற்றும் மறந்திருக்கிறார்கள். தங்கவெள்ளி நகைகளை அணிவதிலும் ஒரு பைங்கில்—விசேஷமாக ஒரு கோவாபரேடிவ் பாங் கில்—பணம் போட்டுவைப்பது மேலானதென்று கூட்டுறவினர் தம் வீட்டு பெண்டிர்களுக்குப் போதிக்கவேண்டும். விவசாயக் கருவிகளில் அதிக விலையானவைகளை நம்முடைய கூட்டுறவுச்சங்கங்கள் போதிப்பது கிடையாது. ஏனெனில், இரண்டு அல்லது மூன்று வருஷத்திற்குக் கிடைக்கும் டிபாசிட்டுகளைக் கொண்டு அவைகளை நீண்ட காலத்தவணைக் கடன்கள் கொடுக்க முடியாமற்போகின்றது. பிளேக்நோயும், இன்புளுயன்ஸாவும் ஏராளமாக இருக்கும் இக்காலத்தில் அசுத்தவீடுகளை வைத்துக்கொண்டிரும்பது அபாயகரமான விஷயம். தம் கணவனுடையவும் குழந்தைகளுடையவும், ஆரோக்கியத்தைவிட தங்கநகைகளை அணிய ஒரு ஸ்திரீ ஆசைப்படுதல் தகுதியா? நகைகளையெல்லாம் விற்றுவிட்டு பணத்தையெல்லாம் வீடுகள் கட்ட கூட்டுறவுச் சங்கங்களில் போட்டு வைக்க ஸ்திரீகளுக்கு நாம் போதிக்கவேண்டும். நகைகள் ஸ்திரீக்கு எப்படி ஆபரணமோ அதே விதமாக சுத்தமானவீடும் ஒருநல்ல ஆபரணமாகும். கூட்டுறவுக் கட்டடச்சங்கங்களில் ஆண்மக்கள் மெம்பர்களாவதிலும் ஸ்திரீகள் மெம்பர்களாவார்களானால் தேசத்தின் நற்காலமே. கூட்டுறவினர்கள் இதரர்களுக்கு வழிகாட்டியாக நின்று இவ்விஷயத்தைக் கைக்கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

***

திருவல்லிக்
கேணி அர்பன்
கோவாபரேடிவ்
சங்கமும் கூட்டு
வியாபாரமும்.

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கத்தில் சமீபத்தில் நடந்த மகாசபை மீடிங்கில் சென்னைமாகாணத்திலுள்ள கோவாபரேடிவ் சங்கங்களும் அங்கத்தினர்களாகலாமென்று விதியை மாற்றி யிருக்கிறார்கள். சங்கத்தின் மூலதனம் ரூ. 60,000.லிருந்து ரூ 100,000.க்கு உயர்த்தப்பட்டது. இந்த ஏற்பாட்டினால் சென்னை மாகாணம் முழுவதிற்கும் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கம் மொத்தமாக வாங்கி மொத்தமாக விற்பனை செய்யும் ஏற்பாட்டை நடத்தி வரலாம். இரங்கூன் அரிசி வியாபாரத்தை திருவல்லிக்கேணி அர்பன் சொஸைடி ஏற்றுக்கொள்ளுவதால் அச்சங்கம் ஏராளம் இலாபமடைவதன்றி இதர சங்கங்களுக்கும் ஏராளமான உதவியைச் செய்யக்கூடுமென்பதாக ஸ்ரீமான் எம். எஸ், சேஷாசல ஐயரவர்கள் தம்முடைய அரிய வியாயத்தில் கூறுகிறார். (வியாசம் சென்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.) இதே விதமாக இன்னும் வேறு பலவித சாமான்களிலும் திருவல்லிக்கேணி சங்கம் மொத்த வியாபாரஞ்செய்யக்கூடும். இத்தகைய வியாபாரம் திருப்திகரமாக முடிவதற்கு ஒரு விஷயம் நிறைவேற வேண்டும். சாமான்கள் உற்பத்தி

செய்பவர்களிடம் நேரில் திருவல்லிக்கேணி சங்கம் வாங்கவேண்டும். தவிரவும் ஆங்கிலேய நாட்டில் உள்ளதுபோல் சில சாமான்களை திருவல்லிக்கேணி சங்கமே உற்பத்திசெய்யவேண்டும். ஆங்கிலேய நாட்டிலுள்ள ஸ்டோர் சங்கங்கள் போனஸ் (டிவிடெண்டு) கொடுப்பது போல் திருவல்லிக்கேணி ஸ்டோர் சங்கம் டிவிடெண்டு கொடுக்க முடியவில்லை. இங்டலாந்தைவிட இந்தியாவில் சில்லரை வியாபாரத்திற்கும் மொத்த வியாபாரத்திற்கும் இலாபம் சொற்பமாக வைக்கப்படுவது ஒரு காரணமெனச் சொல்லலாம். ஆயினும் வியாபாரத்தில் மத்தியிலுள்ள தரகர்களுடைய உதவியின்றி திருவல்லிக்கேணி சங்கம் நேரே வியாபாரஞ்செய்ய சக்தியற்றிருப்பது முக்கிய காரணமென கருதுகிறோம். இனியாகிலும் ஏற்பாடுகள் திறமாகச் செய்யப்படுமென நினைக்கிறோம்.

***

மெட்றஸ் அண்டு
தென்மராட்டா
ரயில்வே கோவா
பரேடிவ் சங்கம்.

இச்சங்கம் இந்தியக் கம்பெனிகளின் ஆக்டின்கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது. கோவாபரேடிவ் ஆக்டின்கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதல்ல. சென்ற வருஷத்தில் ஏராளமாக விருத்தியடைந்திருக்கிறது. சங்கத்தின் மூலதிரவியம், சங்கத்தின் அங்கத்தினர்கள் தொகை, சங்கமெம்பர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பங்குத்தொகை, இவைகளெல்லாம் அதிகரித்திருக்கின்றன. முந்தின வருஷத்தைவிட சென்ற வருஷத்தில் வியாபாரம் $2\frac{1}{4}$ இலட்சம் ரூபாய்க்கு அதிகமாய் நடந்தது. சென்ற வருஷத்தில் ரூ. 3200 இலாபமாகக் கிடைத்தது. பங்குத்தொகையின்பேரில் 100-க்கு $6\frac{1}{4}$ வீதம் டிவிடெண்டு கொடுத்தபின், 100-க்கு 50 பிரிமயம் பண்டுக்குச் சேர்த்து விட்டு, மெம்பர்கள் வியாபாரஞ் செய்த தொகையில் ரூபாய்க்கு அரையணா வீதம் ரிபேட்டும் கொடுக்கப்பட்டது. கோவாபரேடிவ் ஆக்டின் கீழுள்ள சௌகர்யங்களெல்லாம் இச்சங்கத்திற்கு இல்லாமலிருக்கும் போதே இவ்வளவு திருப்திகரமாய் வேலை நடந்திருக்கிறது. திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சங்கத்தார் இச்சங்கத்தினிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

***

வங்காளத்தில்
ஒரு கோவா
பரேடிவ் பள்ளிக்
கூடம்.

வங்காளத்திலுள்ள மால்டா ஜில்லாவில் ஸனடோலா கோவாபரேடிவ் சொஸைடியில் கோவாபரேடிவ் லோவர் பிரைமெரி ஸ்கூல் ஒன்று ஸ்தாபனஞ் செய்யப்பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் சங்கங்களால் கோவாபரேடிவ் சங்க மெம்பர்களின் பையன்களுக்கென்றே பிரத்தியேகமாய் பள்ளிக்கூடம் ஸ்தாபனஞ் செய்யப்பட்டது இந்தியா தேசத்தில் இதுவே முதற் பள்ளிக்கூடமெனத் தெரிகிறது. கோவாபரேடிவ்



சங்கங்களால் பொருளுதவி செய்யப்படுகிற பள்ளிக்கூடங்கள் இருக்
கின்றன. உதாரணமாக கும்பகோணம் முனிசிபல் சிப்பந்திகள் கோவா
பரேடிவ் சங்கம் கும்பகோணம் பஞ்சம ஸ்கூலுக்கு பணஉதவி செய்து
வருகின்றது. ஆனால் கோவாபரேடர்களின் குழந்தைகளுக்கென்றே
பிரத்தியேகமாக ஏற்பட்ட பள்ளிக்கூடம் வேறொன்று இருப்பதாக நமக்
குத் தெரியாது. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பையன்களை கட்டாயம்
பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமென்றும், இப்படிச் செய்யாதவர்
கள் மெம்பர் ஸ்தானத்தைவிட்டு விலக்கப்படுவார்களென்றும் சமீபத்தில்
நடந்த சங்கத்தின் மகாசபை மீட்டிங்கில் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.
இத்தகைய நிர்ப்பந்தத்தை தாமாகவே ஏற்படுத்திக்கொள்வது மிகவும்
பாராட்டத்தக்கது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம்
விதாபிக்கப்பட்டு ஒவ்வொரு சங்கமும் அதன் மெம்பர்களுக்கு போதனை
விஷயம் கவனிக்கும் காலம் கிட்டுமாகில் இந்தியாவிற்கு அதைவிட
வேறு என்ன பெருமை வேண்டியிருக்கின்றது. ?

நமக்கு நாமே உபகாரஞ்செய்து கொள்ளக்கூடும்போது, கவர்ன்
மெண்டார் உதவியை நாம் ஏன் நாடவேண்டும்? தனக்குத்தானே உதவி
செய்துகொள்ளும் வழியைக் கற்றுக்கொள்ள கூட்டுறவுதான் தகுந்த
இடம். கூட்டுறவு சங்கத்தில் கட்டாயப் படிப்பு விஷயம் பல வந்தப்
படுத்தக் கூடாதென்றும், சங்கம் இத்தகைய தீர்மானம் செய்வது தவ
றென்றும், கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் இதை அங்கீகரிக்காமலிருக்க
முடியுமென்றும் சிலர் சொல்லக்கூடும். ஜனங்கள் சுகமாயிருப்பதற்கும்
சௌகர்யமாய் வாழ் நாளைக்கழிப்பதற்கும் கல்வி, சுகாதாரம், கூட்டுறவு
இவைகள் இன்றியமையாதவை. இவைகளின் சம்பந்தமாக கட்டாயமான
விதிகள் ஏற்படுத்தப்பட்டாலும் இதை டிபார்ட்டுமெண்டார் குறைகூறக்
கூடாது. கல்வியின் அபிவிர்த்திக்கு இத்தேசத்தாரின் அவாவும், கட்டா
யப்படிப்பு சீக்கிரமாக அமுலுக்குவரவேண்டுமென்ற அவசியமும் சன
டோலா சங்கத்தாருடைய நடவடிக்கை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

***

மதறாஸ் ரயத்வாரி பூஸ்திதி வந்தர்களின் சங்கத்திற்கு செகரி
டேரியாயிருக்கிறமிஸ்டர் இ. வி. சுந்தர ரெட்டியாரவர்கள். எம். ஏ.
பி. எல். நமது பரிசீலனைக்கு அனுப்பிய சிறு புத்தகத்தில்

மதிப்புரை.

கிராமப் பஞ்சாயத்துகளில்ஏற்படும் கஷ்டங்களையும்
அவைகளைநிவர்த்திக்கும்மார்க்கங்களையும் எடுத்துக்காட்டுவதற்காக ராம்
பாக்கம் கிராமப்பஞ்சாயத்தின் சாரமான சுருக்கக்கதையை எழுதி
யிருக்கிறார். ஒரு பஞ்சாயத்தும் தன் மெம்பர்களுக்கு வரிபோடக்கூடா
தென்றும் முக்கியமாய் ஆரம்ப காலங்களில் அப்படி செய்வது
தவறு என்றும் அதனால் ஆரம்பத்திலேயே ஜனங்கள் பயப்பட்டு

விடுவதனால், ராம்பாக்கம் கிராமப்பஞ்சாயத்தைப் போல் இஷ்டப்பட்டுத் தானாகக் கொடுக்கும் வசூல்களைத்தவிர சிலநிச்சய வருமானத்திற்குள் திருப்தியடைய வேண்டு மென்றும் வெகு நியாயமாய் நிலை நாட்டுகிறார். ஒரு கிராமத்தில் கக்ஷிகள் ஏற்பட்டு வசூல் வேலைக்கு குந்தகம் ஏற்படலாம். இதுவிஷயத்தை மிஸ்டர் ரெட்டியார் ராம்பாக்கம் பஞ்சாயத்தின் அனுபவத்தைக் கொண்டு வெகு அழகாய் விளக்கி யிருக்கிறார்.—முதல் மூன்று வருஷங்களுக்கு அதன் வருமானம் (அதாவது 1913. 1914, 1915.) முறையே ரூ1385-1-6, ரூ. 788-1-9, ரூ. 559-10-0, ஆகக்குறைந்து கொண்டு 1916-ம் வருஷத்தில் திடீரென்று ரூ. 56-14-0க்கு விழுந்து விட்டது. இதற்குக் காரணம் கக்ஷிப் பிரதி கக்ஷி தான் என்று ரெட்டியார் ஸ்தாபிக்கிறார். இக்கக்ஷியைத் தொலைக்கப் பஞ்சாயத்தார் தீவிரப்பிரயத்தனம் செய்யவே அடுத்தவருஷத்தில் அதாவது 1917-ல் அவர்களுடைய வருமானம் ரூ. 581-0-0 ஆயிற்று.

இதனால் கக்ஷிப்பிரதி கக்ஷியில்லாத கிராமங்களிலேயே பஞ்சாயத்து மிக ஒழுங்காகவும் உபயோக மாகவும் வேலை செய்யும் என்று வற்புறுத்துகிறார்.—கிராமப் பஞ்சாயத்தை ஏற்படுத்தப் பிரியப்படுகிறவர்கள் கக்ஷியில்லாத கிராமங்களையாவது எடுத்துக் கொள்ளவேண்டும் அல்லது கக்ஷியிருந்தால் கிராமப் பஞ்சாயத்து என்னும் அன்பான வேலையை ஆரம்பிக்குமுன், அக்கக்ஷியை அமைதி செய்யவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள் கக்ஷியில் சிரமப்படுவது போலவே உத்தியோக அதிகாரத்தினாலும் சிரமப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்திற்காக ஏற்பட்டபிரபல ஆர்டர் 1410, 1915, இவைகளின்படி, ரஸ்தாக்கள், மீன் பிடித்தல், புரம்போக்கு நிலங்கள், தோப்புகள் முதலிய கிராமப்பொது ஏற்பாடுகளை பஞ்சாயத்துகளிடம் மாற்றும்படி திண்டிவனம் தாலுக் போர்டாரால் 1911-ம் வருஷம் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டு தீர்மானம்ஒன்று செய்யப்பட்டது ஆனால் இவ்வேண்டுகோளுக்கு யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. மறுபடி 1913ல் தாலூகா போர்டார் ரூ. 37-8-0 வெகுமானம் கொடுக்கும் படிக்கும் ராம்பாக்கம் கிராமத்திற்காக 6 விளக்குகள் வாங்கும் பொருட்டு வருஷம் ஒன்றுக்கு ரூ. 9 வீதம் அத்துகையுடன் சேர்க்கும் படிக்கும் சிபார்சு செய்தார்கள். விஷயம் 5 வருஷங்களாக ஆலோசனை யிலிருந்த போதிலும் லோகல் போர்டு சிபார்சு செய்த தொகைகளை கவர்ன்மெண்டு இன்னும் சாங்ஷன் செய்யவில்லை. நமது கிராமப் பஞ்சாயத்து படும் பல கஷ்டங்களுக்கு ரெட்டியார் அநேக உதாரணங்கள் கொடுக்கிறார். அவர் முழு அனுபவ புத்தியுடன் பேசுகிற படியால் கிராமப் பஞ்சாயத்தின் அபிவிருத்தியைக் கோறும் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை கவனித்தல் மிகவும் நலமாகுமென்று நாம் மிக்க உறுதியுடன் சொல்லுகிறோம்.



## அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள்.

தற்காலம் ஏற்பட்டுள்ள ஒன்பது செக்ஷன்களுக்கும் செக்ஷன்ஒன்றுக்கு ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராராக ஒன்பது அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் இருக்கிறார்கள். சங்கங்களின் ரிஜிஸ்டரேஷனை கியான்ஸல் செய்யும் அதிகாரம்தவிர ரிஜிஸ்டராருக்கு இருக்கும் வேறு எல்லா அதிகாரங்களுக்கும் இவருக்கு உண்டு. இப்பொழுது கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள நான்குபேரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் அவரவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இலாகாவில் ஆர் பிட்ரேஷன் வேலைகளைக் கவனித்து கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களுக்குள்ள பெரும்பழுவைக் குறைத்து வருகிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு அஸிஸ்டெண்டு ரிஜீஸ்தராரை நியமனஞ் செய்யவேண்டுமென்பது கவர்ன்மெண்டாருடைய நோக்கமென்பதாகத் தெரியவருகிறது. இப்படி ஜில்லா ஒன்றுக்கு ஒவ்வொரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிராரை நியமிப்பதில் கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களுடைய தொகையையும் சேர்த்துக்கொண்டா அல்லது சேர்க்காமலா என்பது இன்னும் வெளிப்படவில்லை. இவ்வியாசத்தின் தர்க்கத்திற்காக கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களையும் சேர்த்தேயென்று நாம் வைத்துக்கொள்ளுவோம். ஒவ்வொரு மாகாணத்திலும் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஆயிரம் சங்கங்களுக்கு ஒருஜாயிண்டு ரிஜிஸ்தரார் நியமிக்கப்படவேண்டுமென்று ஸர் எட்வர்ட் மாகளிகன் கமிட்டியார் சிபார்சு செய்தபோது இவ்விராஜதானியின் கூட்டுறவினர்கள் இந்த சிபார்சுக்கு மாறாக இருந்து கமிட்டியார் சிபார்சுசெய்யும் மாதிரியான ஒரு ஜாயிண்டு ரிஜிஸ்தராருக்குப் பதிலாக, தற்கால அந்தஸ்தில் ஏற்பட்டிருக்கும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களைப் போல் இரண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் வேண்டுமென அபிப்பிராயப்பட்டார்கள். இப்படி தீர்மானஞ்செய்ததிலிருந்து எத்தனை வேண்டுமானாலும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராரர்களை நியமனஞ்செய்ய சிபார்சுசெய்ததாக எண்ணுதல் கூடாது. கோவாபரேடீவ் கமிட்டியார் இந்த மாகாணத்தில் விசாரணை செய்யும்போது மேற்பார்வைப் பார்க்கும் சூபர்வைவிஸ் யூனி

யன்கள் வெகு சொற்பமாகத்தான் ஏற்பட்டிருந்தன. அச்சமயம் சங்கங்
களின் மேற்பார்வையும் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களாலேயே செய்
யப்பட்டுவந்தது. இன்ஸ்பெக்டர்களுடைய வேலைகளையெல்லாம் அஸிஸ்
டெண்டு ரிஜிஸ்தரார்கள் மேற்பார்வை பார்த்துவர வேண்டி யிருந்தது.
அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களுடைய காலத்தில் பெரும்பாகத்தை எடுத்
துக் கொள்ளும் ஆர்பிட்ரேஷன் வேலையினின்று அவர்களை நீக்கிவைக்க
இப்போது ஏற்பட்டிருப்பதுபோல் ஹானரரி அஸிஸ்டெண்டுரிஜிஸ்தரார்
கள் அப்போது ஏற்பட்டில்லை. தற்காலம் சௌகர்யமான இடங்களிலெல்
லாம் சூபர்வைஸிங் யூனியன்கள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டிருக்கின்றன.
யூனியன்களில் அணைக்கப்படாத சங்கங்கள் வெகு சொற்பமாகத்தான்
இருக்கின்றன. கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களால் செய்யப்பட்டுவந்த
வேலையில்பெரும்பாகம்தற்காலம்யூனியன்களின் சூபர்வைஸர்களாலேயே
செய்யப்பட்டு வருகின்றது. இக்காரணங்களைப்பற்றி அஸிஸ்டெண்டு
ரிஜிஸ்தராருடைய அலுவல்கள் தற்காலம் வெகுவாக குறைந்திருக்கின்
றது. நானூறுமுதல்ஐந்நூறு சங்கங்கள் வரைக்கும் மேற்பார்வை பார்க்க
ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் போதுமென்பதாக கோவாபரேடிவ்
கமிட்டியார் எழுதியிருக்கும்போது இப்போதுள்ள நிலைமையில் ஒரு
அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் இன்னும் அதிக சங்கங்களைப் பார்க்கக்கூடு
மென்பது நாம் எதிர்பார்க்கவேண்டும். விஷயமிப்படியிருக்க அஸிஸ்
டெண்டு ரிஜிஸ்தரார்களை அதிகப்படுத்துவதின் காரணமும் ஒவ்வொரு
அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராருடைய மேற்பார்வையிலுள்ள சங்கங்களின்
தொகையை குறைப்பதின் காரணமும் நமக்கு விளங்கவில்லை.

சென்னை சட்டசபையில் சிலதீர்மானங்கள்பிரரேபிக்கப்பட்டதையும்
சில கேள்விகள் கேட்கப்பட்டதையும் முன்னிட்டு கவர்ன்மெண்டார் இந்
நோக்கத்தைப் பின் பற்றி யிருப்பதாகத் தெரிகிறது. தற்காலம் இருப்பதை
விட இன்னும் அதிக சங்கங்களை துரிதமாய் ஏற்படுத்தாததற்கு கவர்ன்
மெண்டாரை பொது ஜனங்கள் தூஷிப்பதாகவும், இன்னும் அதிக ஆபீ
ஸர்களை நியமனஞ் செய்யா விடில் இன்னும் அதிக சங்கங்களை ஸ்தா
பனஞ் செய்ய முடியாததால் கவர்ன்மெண்டார் இத்தகைய ஏற்பாடு
களைச் செய்ய முன்வந்திருப்பதாகவும் சொல்லப் படுகின்றது. சங்கங்களை
அதிகமாக ஸ்தாபனஞ் செய்ய அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் அதிக



மாகநியமிக்கப் படவேண்டியது அவசிய மென்று நாம் சிறிதும் நினைக்க
வில்லை. புதுசங்கங்களை ஸ்தாபனஞ் செய்ய மேலதிகாரிகள் தான் அவசிய
மென்று எண்ணுதலும் தவறான விஷயம். சங்கங்களை ஸ்தாபனஞ் செய்
யும் விஷயத்தில் அனுபவமில்லாத ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராரை
விட பழக்கமுள்ள ஒரு இன்ஸ் பெக்டர் மிகத்திறமாக வேலையைச் செய்
யக்கூடும். தவிர சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யும் விஷயம் பெரும்பாகம்
உத்தியோகப் பற்றில்லாத உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்கப் பட
வேண்டும். சிலமாகாணங்களில் இவ்வேலை முழுவதும் உத்தியோகப் பற்
றில்லாத உத்தியோகஸ்தர் களிடமே ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றது. நம்
மாகாண கவர்ன்மெண்டாரும் அவ்வழியை முழுவதும் பின்பற்ற வேண்டு
மென்றுச் சொல்ல வில்லை. ஆனால் ஹானரரி ஆர்கானை ஸர்ஸ் (சங்கங்
களை ஸ்தாபனஞ் செய்ய நியமிக்கப் பட்டிருக்கும் கௌரவ உத்தியோகஸ்
தர்கள்) களுக்கு இன்னும் அதிகமாக கவர்ன் மெண்டார் உதவிசெய்து
அவர்களுக்கு ஊக்கமும் சிரத்தையும் ஏற்படும் படியாகச் செய்ய வேண்
டும். ஹானரரி ஆர்கானைஸர்ஸ்களுடைய நிலைமை இம்மா காணத்தில்
எச்சமயமும் திருப்திகரமாக இருக்கவில்லை. அவர்களுக்குக்காக நிய
மிக்கப் பட்டிருக்கும் பிரயாணப்படியும் மிக்கத்தாழ் வாக நியமிக்கப்
பட்டுள்ளது. இதுகாரணம் பற்றி அநேகர் இந்தப்படியை வாங்க
பிரியப் படுவதில்லை. இந்தப்படியைக் கொண்டு ஜீவனஞ் செய்வதாக
கவர்ன்மெண்டார் எண்ணியிருப் பதாகத் தெரிகிறது. அனுபவமும் பழக்
கமும் உள்ள ஹானரரி ஆர்கானை ஸர்களுடைய ரிப்போர்ட்டுகளை மூலை
யில் எறிந்து விட்டு அந்தரிப் போர்ட்டுகளின்பேரில் மேல்விசாரணை செய்ய
நேற்று நியமனம் பெற்ற அனுபவமற்ற இன்ஸ்பெக்டர்களும் சூபர்வை
ஸர்களும் அனுப்பப் படுகிறார்கள். டிபார்டுமெண்டார்ஹானரரி ஆர்கானை
ஸர்களுடைய உதவியை நாடவில்லை யென்னும் எண்ணம் தினந்தோறும்
பலப் பட்டுவருகிறது. ஹானரரி ஆர்கானை ஸர்கள் ஏற்பாடு செய்யும் சங்
கங்கள் சில வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட இப்போது வெகு
சொற்பமாகத் தான் இருக்கின்றன. சங்கங்களின் தொகையை அதிகப்
படுத்த ஹானரரி ஆர்கானை ஸர்களை அதிகப்படுத்தி அவர்களுக்கு வேண்
டிய சௌகர்யங்களைச் செய்து கொடுப்பதும், இன்ஸ்பெக்டர் களின்
நிலைமையை உயர்த்துவதும் பெரும் பயனை விளைவிக்கக்கூடும். இன்ஸ்

பெக்டர் களின் நிலைமையை உயர்த்து வதால் திறமான சாமர்த்திய மானவும் தேர்ந்தவும் இன்ஸ்பெக்டர்கள் கிடைக்கக் கூடும். சட்டசபையில் செய்த கிளர்ச்சியின் பயனாக அஸிஸ் டெண்டு ரிஜிஸ்தரார்கள் அதிகமாக நியமனஞ் செய்யப்படுவார் களென்பதைக் கேட்கஉத்தியோகப் பற்றில்லாத கௌன்ஸில் மெம்பர்களுக்கு அதிகத் திருப்தியைக் கொடுக்கும். சட்ட சபையின் உத்தியோகப் பற்றில்லாத கௌன்ஸில் மெம்பர்கள் இரவும் பகலும் கூக்குரலிட்டும் கவர்ன்மெண்டார் சிறிதளவும் செவி சாய்க்காத விஷயங்கள் பலவுள. கூட்டுறவினர்கள் தங்களுடைய எண்ணங்களை வெளியிட அவர்களுக்கென பிரத்தியேகக் கான்பரன்ஸுகள் இருக்கின்றன. பத்திரிகைகள் இருக்கின்றன. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் தொகை அதிகப்படுத்தப் படவேண்டு மென்று கூட்டுறவினர்கள் ஒன்றும் கேட்கவில்லை. அவர்கள் எங்கேனும் கேட்டிருப்பதாகவும் நமக்குத் தெரியவில்லை. சட்டசபையில் செய்யப்படும் கிளர்ச்சியானது ஜனங்களாலும் ஆமோதிக்கப் பட்டாலல்லது அவ்விஷயம் பொது ஜனங்களுடைய அபிப்பிரய மாகாது. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் அதிகப்படுத்தப் வேண்டுமென்று பொதுஜன அபிப்பிராயம் சிறிதளவும் இல்லை யென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடும்.

கூட்டுறவு இயக்கம் முழுவதும் உத்தியோகப் பற்றில்லாதவர்களுடைய இயக்கமென்றும், இயக்கம் முழுவதும் ஜனங்களாலேயே நடத்தப்படும் என்றும், கவர்ன்மெண்டார் அடிக்கடி அவர்களின் பிரதிநிதிகள் மூல்யமாய் தெரிவித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் பல வழிகளிலும் தற்காலம் உதவிபுரிந்து வருவதற்குக்காரணம் உத்தியோகப் பற்றில்லாத ஏஜென்ஸிகள் தற்காலம் அதிகமாக ஏற்பட்டில்லையென்பதே. இந்நோக்கத்தைக்கொண்டேதான் கோவாபரேடிவ் டிபார்ட்டுமெண்டு ஸ்தாபனஞ் செய்யப்பட்டது. டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் இது காரணம்பற்றியே நெடுநாள்வரைக்கும் அதிகப்படுத்தாமலிருந்தார்கள். டிபார்ட்டு மென்டை பர்மெனன்டாக்க வேண்டுமென்று தற்காலம் கருதப்படுகின்றது. ஆனால் டிபார்ட்டுமெண்டு இன்டிபென்டன்டு (தனி) ஆடிட் செய்தவற்கும் சங்கங்களுக்கு யோசனைகளைச் சொல்லுவதற்கும் அனுபவங்களைத் தெரிவிப்பதற்கு மட்டுமே இருக்கவேண்டும். கூட்டுறவு இயக்கத்தை தனியாகச் செய்து தங்கள் வேலையை தாங்களே செய்து



கொள்ளும்படிச் செய்வது, கவர்ன்மெண்டு உத்தியோகப் பற்றை பலப்படுத்துவதாலும்,கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களை அதிகப்படுத்துவதாலும் ஆகாது. ஹானரரி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களாக நியமனஞ் செய்வது மிகவும் பாராட்டத்தக்க விஷயமே. இந்நியமனம் உத்தியோகப் பற்றில்லாதவர்களுக்கு பொறுப்பைக் கொடுத்து இயக்கத்திற்கு அவசியமான முக்கிய அலுவல்களைக் கற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய சௌகர்யங்களைக் கொடுக்கின்றது. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அலுவல்கள் இன்னும் விசாலப்படுத்தப்படவேண்டும். கவர்ன்மெண்டு ரிஜிஸ்தரார்களின் தொகை குறைக்கப்படவேண்டுமென்றும், அவசியமான அளவுதான் வைக்கப்பட வேண்டுமென்றும் நாம் எண்ணுகிறோம்.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களின் தொகை எத்தகையதாயிருந்தாலும், அவர்கள் ரெவினியூ டிபார்ட்டுமெண்டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டியதில்லை. இத்தனை வருஷங்களாக இரண்டேபேர்தான் வெளியிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள் நியமனம்பெற்றார்கள்.இவர்களுள்ஒருவர் டாக்டர் ஜான் மதே. அவர்சென்னைசர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம்பெற்றவர். இங்கிலாந்துசென்று பொருளாதார விஷயங்களிலும், இராஜீய விஷயங்களிலும் பிரத்தியேகப் பரீட்சைகள் தேறியிருக்கிறார். அவருடைய நியமனம் கோவாபரேடிவ் டிபார்ட்டுமெண்டுக்கே ஒரு கௌரவம். மற்றொரு நியமனம் ஸ்ரீமான் தெய்வசிகாமணி முதலியாருடைய நியமனம். இவர் கூட்டுறவு இயக்கத்தில் ஆரம்ப முதல் வேலை செய்து தேர்ச்சிபெற்றவர். இவர் இயக்கத்தில் செய்த திறமான வேலையும், சாமர்த்தியமும் ஊக்கமும் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இவ்விருவர்களின் நியமனத்தை நாம் பாராட்டுவதைப் போல் டிபார்ட்டுமெண்டில் நியமனம் பெறும் ஒவ்வொருவருடையவும் நியமனத்தைப் பாராட்ட முடியாது. ரிவினியூ டிபார்ட்டுமெண்டிலிருந்து சில நியமனங்கள் மிகவும் திறமானதாகச் செய்யப்பட்டிருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆயினும் ரிவினியூ டிபார்ட்டு ஒன்றிலிருந்து மட்டும் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாக பொதுவாக எல்லா இடங்களிலிருந்தும் தேர்ந்தவர்களை பொறுக்

யெடுத்திருந்தால் டிபார்ட்டுமெண்டுக்கும் தேசத்திற்கும் எவ்வளவோ நன்மை ஏற்பட்டிருக்கும். கூட்டுறவு இயக்கத்தில் ஊக்கமும், சுய நிர்வாக குடியர்சிற்கு மரியாதையும், அனுதாபமும் உத்தியோகத்திற்கு அத்தியாவசியமான யோக்கியாம்சங்களென்று நாம் கருதுகிறோம். கல்வியிலாகாவிலும், விவசாய இலாகாவிலும், இன்னும் இதர டிபார்ட்டுமெண்டுகளிலும் கூட்டுறவு இயக்கத்தில் சிரத்தையுள்ளவர்கள் அநேகரிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தவிர வெகு சாமாத்தியமாய் உத்தியோகஞ் செய்யக்கூடிய உத்தியோகப் பற்றில்லாதவர்களும் பலர் இருக்கிறார்கள். வக்கீல்களை நேரே ஜட்ஜ் முன்சீப் உத்தியோகங்களுக்கு நியமனஞ்செய்வது போல், ஒன்று இரண்டு உத்தியோகங்கள் உத்தியோகப்பற்றில்லாத வகுப்பிலிருந்து செய்யக்கூடும். எந்த வகுப்பிலிருந்தும் மிகவும் தேர்ந்தவும் திறமானவும் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று கேட்க நமக்கு உரிமையுண்டு. கூட்டுறவு இயக்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்க ரிவினியூ டிபார்ட்டுமெண்டு ஒன்றுதான் தகுந்ததென்று கொண்டுள்ள எண்ணம் முழுவதையும் மாற்றிவிட காலம் சமீபத்து விட்டது.

---



# ஐக்கிய இந்துக்குடும்பங்களும், கோவாபரேடிவ் சங்கங்களில் அவைகளின் பொறுப்பும்.

[திருக்கோயிலூர்ஸ்ரீமான் ஆர்.ஸ்ரீனிவாசஅய்யங்கார்.அவர்களால் எழுதப்பட்டது.]

ஹிந்து ஐக்கிய குடும்ப ஏற்பாட்டிலும் அதிலுள்ள சட்டசம்பந்தமான விஷயங்களிலும் உரிமைகளிலும் சில பிரத்தியேக அம்சங்கள் இருக்கின்றன. அவைகள் ஐக்கிய இயக்கத்திற் சம்பந்தப்பட்டிருக்கும் ஒவ்வொருவராலும் கவனிக்கத்தக்கது. இதைப்பற்றி என்மனதில் முதன்மையாகத் தோன்றுகிற சிலவற்றைமாத்திரம் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். சாதாரணமாய் ஒரு குடும்பத்தில் மேஜரான ஆண்பிள்ளைகள் ஒருவருக்கு மேலுண்டு. ஒவ்வொருவரும் கோவாபரேடிவ் சங்கத்தில் மெம்பராய்ச் சேரப்பாத்தியமுள்ளவர்கள். சொஸைடி கடன் வாங்கும் விஷயத்திலும் சொஸைடியிலிருந்து மெம்பர்கள் கடன் வாங்கும் விஷயத்திலும் கஷ்டம் ஏற்படுகிறது.

ஐக்கியக் குடும்பத்திலுள்ளவர்களில் கடைசியானவர் ஒருவர் பொறுப்புவரை யறுக்கப்படாத ஒருசங்கத்தில் மெம்பராகிறதாகவைத்துக் கொள்வோம். அப்பொழுது குடும்பசொத்தில் அவருடைய பாகம் மாத்திரம் தான் அவர் எடுத்த கடனுக்கு ஈடாகிறது. அந்த சொத்தை பந்திக்கும் படியான அவசியம் ஏற்பட்டால் மொத்த ஆஸ்தியின் வரும் படியில் அவர் பாகத்தை மாத்திரம் தான் கட்டுப்படுத்தலாம். உண்மையான கஷ்டம் எப்பொழுது ஏற்படுகிற தென்றால் அத்தகைய மெம்பர் இறந்து விடும்பொழுது தான். ஏனென்றால் மரணமாகி ஒருவருஷத்திற்குள் தான் அவர் பங்கின் மேல் பாத்தியம் செல்லும். பிறகு அவருடைய பாகம் சட்டப்படி அக்குடும்பத்திலுள்ள மற்ற உரியோர்களுக்கே சொந்தமாய் விடுமாகையால் அவருக்கு வேறு சொந்த சொத்து இருந்தாலொழிய கடனை வசூலிக்க இயலாது.

இம்மாதிரி சம்பவம் அபூர்வமாகவே ஏற்படக்கூடுமானாலும் இவ்விஷயமும் கவனிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட வேண்டியது சங்கத்தின் உண்மை ஆஸ்திப் பொறுப்பு தயார்செய்ய அத்தியாவசியம். இக்கடினமான விஷயத்தை எப்படி சௌகரியமாகத் தீர்மானிக்கலா மென்றால் அவிபக்த குடும்பங்களில் நிர்வாக மெம்பர்களா யுள்ளவர்கள் முதலில் மெம்பர்களாக வேண்டுமென்பதை பஞ்சாயத்தார்கள் அவசியம் கட்டாயப்படுத்தவேண்டியது. பிறகு அக்குடும்பத்திலுள்ள எவர் சேர்ந்தாலும் குற்றமில்லை.

மெம்பர்கள் சங்கங்களிலிருந்து கடன் வாங்கும் விஷயத்தை இதிலிருந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. ஐக்கிய குடும்பங்களைப்பற்றி

சமீபகாலம் வரையில் பிரத்தியேகமாக யாதொன்றும் பைலாவில் சொல்லப்பட்டதில்லை. ஒரு மெம்பர் எவ்வளவுவரையில் கடன் வாங்கலாம் என்பதை நிச்சயித்த பொழுது ஒரு ஐக்கியகுடும்பமும் மெம்பருக்கு எப்படியோ அந்த அளவுதான் வாங்கலாமென்று ஒரு பைலா இப்பொழுது தான் ஏற்படுத்தப்பட்டது. இது போதாது. ஐக்கிய குடும்பத்தில் நிர்வாக மெம்பரல்லாத மற்றவர்களுடைய பொறுப்பு குடும்ப சொத்தை பந்தப்படுத்தா தாகையால் அத்தகையோருக்குக் கடன் கொடுப்பது உசிதமல்ல. இதே காரணத்தினுல் தான் அத்தகையோரின் ஜாமீன் கையெழுத்தும் பிரயோஜனமில்லை. ஒரு குடும்பத்திலுள்ள ஜூனியர் மெம்பர் கையெழுத்தின்பேரில் மற்றொரு குடும்பத்து ஜூனியர் மெம்பருக்காவது அல்லது அதே குடும்பத்து மற்றொரு ஜூனியர் மெம்பருக்காவது கடன் கொடுத்தல் மிகவும் கெடுதல். ஐக்கிய குடும்பத்தின் கடன்வாங்கும் முழுச்சக்தியைப் பற்றிச்சொல்லும் பைலாவானது ஒரே குடும்பத்திலுள்ள பலமெம்பரும் கூட தனித்தனியாகக் கடன் வாங்கலாமென்று இடங் கொடுக்கிறது. இத்தகைய கஷ்டங்களினுல் ஒரு ஐக்கிய குடும்பத்தில் நிர்வாக மெம்பர் ஒருவர்தான் கடன் வாங்கலாமென்றும், பிறருக்கு ஜாமீனுக இருக்கலமென்றும் ஒருசட்டம் ஏற்படுத்துவது உசிதமல்லவா?

பொதுவாய் நல்ல நிர்வாகமுள்ள சங்கங்களில் இவ்விஷயம் வற்புறுத்தப்படுகிறது. ஐக்கிய குடும்பங்களில் ஜூனியர் மெம்பர்களுக்கு அத்தகையோர்களின் பரஸ்பர ஜாமீன் கையெழுத்தின் பேரில் அநேக கிராம நாணயச்சங்கங்கள் கடன் கொடுக்கின்றன. சூப்பர் வைசர்களும், இன்ஸ்பெக்டர்களும் இத்தகைய சட்ட கஷ்டங்களை அறியாமலோ ஒவ்வொருவருடைய கடனையும் சரியானபடி கவனிக்க சாவகாசமில்லாமலோ இருக்கிருர்கள். ஆகையால் மேற்சொன்ன கஷ்டங்களுக்கு வேறு நிவர்த்தி ஏற்படுகிற வரையில் தகுதியான பைலா ஒன்று ஏற்படுத்தலா மென்று பிரரேபிக்கிறேன்.

---

# பஞ்சாயத்தாரைக் கொண்டே வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளுதல்

ஒரு கோவாபரேடர் எழுதியது

தன் மெம்பர்களுக்குள் கோர்ட்டுக்குப்போகும் வழக்கத்தை நிறுத்தி தங்கள் வழக்குகளைப் பஞ்சாயத்தைக் கொண்டே தீர்த்துக்கொள்ளும் படிசெய்தல் ஐக்கிய இயக்கத்தின் முக்கியமான அம்சம். கோவாபரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்துவோர் இவ்விஷயத்தை சாதாரணமாய்



வற்புறுத்தி கோர்ட்டு நடவடிக்கைகளினுல் ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்
டங்களையும் நஷ்டங்களையும் விவரமாய்ச்சொன்னுலும் இந்நோக்கத்தை
செய்கையில் காட்ட பஞ்சாயத்தார் யாதொன்றும் செய்வதில்லை. இதனுல்
தான் சென்றமதருஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரன்ஸில்
அக்கிராசனர் கனம் எஸ் ஸ்ரீனிவாச அய்யங்காரவர்கள் கோவாபரேஷ
னுது ஒழுக்க வழிகளில் மிகவும் அசிரத்தையிருப்பதற்கு அனுதாபம்
காட்டி பஞ்சாயத்து முறையினுல் கோர்ட்டு விவகாரங்கள் ஏதாவது
குறைந்திருக்கிறதா என்று கேட்டார். அதன் சம்பந்தமாக பெரம்பூர்
செக்கிலியர்களின் கோவாபரேடிவ் சொஸைடி செய்து கொண்டிருக்கும்
முயற்சி இங்கு குறிப்பிடத்தக்கது.

அதன் முதல் முயற்சி எள்ளளவும் பலிக்கவில்லை. அவ்வழக்கு ஒரு
பஜனை கூடத்தைப்பற்றியது. ஜீர்ணமடைந்திருந்த ஒருபஜனைக்கூடத்தை
அவ்வூரில் செல்வாக்குள்ள ஒருவர் அதற்குவேண்டிய ரிபேர்களைச் (மரா
மத்துகளை) செய்து கொஞ்ச காலம் பஜனையை நடத்திவந்தார். பிறகு
கொஞ்சம் ஆடம்பரத்துடன் ஒரு உற்சவத்தையும் நடத்தவிரும்பினுர்.
அந்நோக்கத்துடன் ஊர்வலத்திற்காகப் பெறவேண்டிய போலீசு அனுமதி
க்காக மனுக்கொடுத்து வாத்தியக்காரர் முதலியோர்களுக்கும் ஏற்பாடு
செய்தார். இவருக்கு விரோதிகள் சிலர் சேர்ந்து அந்த பஜனைக்கூடத்தை
யும் உற்சவத்தையும் நடத்த இன்னொருவருக்கும் பாத்திய முண்
டென்று ஒருவரைக்கொண்டு வந்தார்கள். பஜனைக்கூடத்தை ஜீர்ணோத்
தாரணம் செய்த விஷயத்தில் அவர் சிறிதும் ஈடுபடாமையினுல் அவ
ருக்கு யாதொரு பாத்தியமுமில்லையென்று முந்தியவர் வாதித்தார். பிந்தி
யவரோ தன் தந்தைகாலத்திலிருந்து அதன் டிரஸ்டிவேலை தன் குடும்
பத்திலிருக்கிறதென்று பாத்தியம் கொண்டாடினுர். முந்தியவர் கோவாப
ரேடிவ் சொஸைடியின் மெம்பராகையால் பஞ்சாயத்தார் மத்தியஸ்தம்
பேச ஆரம்பித்தார்கள். ஆனுல் இருதிறத்தாரும் தங்கள் பிடிவாதத்தி
னின்று கொஞ்சமும் இணங்காமையினுல் அம்மத்தியஸ்தம் பலிக்க
வில்லை. ஆகவே விஷயம் கோர்ட்டுகுப் போய் இரண்டு வருஷம் திண்டா
டின பிறகு தீர்மானம் ஏற்பட்டது. யார்ஜெயித்தார் என்பது நமக்கு அக்
கறையில்லை. கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றுல் ஒவ்வொரு
திறத்தாரும் ரூபாய் 700 முதல் 800 வரையில் செலவழித்ததோடு அநேக
அடிதடிசண்டைகளும் ஏற்பட்டு போலீசுக்கும் சாக்ஷிகளுக்கும் கணக்
கில்லாமல் பணத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது. தவிர அநேக
ஜனங்கள் தங்கள் வேலைகளை யெல்லாம் நிறுத்தி விட்டு சாக்ஷி சொல்வதற்
காக கோர்ட்டிலும் வக்கீல் வீடுகளிலும் காலங்கழிக்க வேண்டியிருந்தது.
கடைசியாக பஜனைக்கூட விஷயத்திலேயே உற்சாகம் குறைந்து விட்டது.

ஆனால் இவ்வளவு சிரமத்துடன் ஒரு கடினமான பாடத்தைக்கற்று
அடுத்த வழக்கு பஞ்சாயத்தாலேயே தீர்க்க சாத்தியமாயிற்று. அவ்வழக்
கானது ஒரு நாட்டுப்பெண்ணை வீட்டில் சேர்த்துக்கொள்வதைப்பற்றியது.
ஏதோ சில காரணங்களினால் ஒருவன் A என்பவன் சாதிவழக்கத்தை
மீறி தன்மருமகளை வீட்டில் சேர்க்கமாட்டேன் என்றான். அதனால்
சம்மந்தி B என்பவனுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு பேச்சில் ஆரம்பமான
சண்டை அடிதடியில் முடிந்தது. குடியும் பணமும் இருதிறத்தின
ருடைய கக்ஷியையும் பலப்படுத்தியதினால் சாயங்கால வேளைகளில் தவறா
மல் சண்டையும் வைதலும் கல்லெறிதலும் போலீசுக்கு ரிப்போர்ட்டு
செய்தலும் நியதமாய் ஏற்பட்டு விட்டன. இதைப் பஞ்சாயத்தார் கவனிக்க
வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொண்ட தன் பேரில் அவர்கள் அவ்
விரு திறத்தினரையும் வரவழைத்து புத்திமதிகளைச் சொல்லி அவர்கள்
செய்யும் காரியங்களினால் அவர்களுக்கே ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை
எடுத்துக் காட்டி தாங்கள் செய்யும் தீர்ப்பின்படி நடந்து கொள்ளும்
சௌகரியத்தைப் போதித்தார்கள். பிறகு பஞ்சாயத்தார் இருதிறத்தின
ரையும் குற்றங்களை மறக்கும்படிக்கும் பரஸ்பர மன்னிப்புக் கேட்டுக்
கொள்ளும்படிக்கும் செய்தார்கள். பிறகு A என்பவனைக் கூட்டிக்
கொண்டு எல்லோரும் B என்பவன் வீடுசேர்ந்தார்கள். அங்கே ஒரு புதிய
சங்கடம் ஏற்பட்டது. வழக்கப்பிரகாரம் A என்பவனும் அவன்
பெண்சாதியும்சேர்ந்து தான் ஒரு பெண்ணின் ரக்ஷணையை ஏற்றுக்
கொள்ளவேண்டுமென்று B என்பவன் சொன்னான். உடனே பஞ்சாயத்
தார் அந்த ஸ்திரீயை வரும்படி ஆளனுப்பினார்கள். அவள் பிடிவாதமாய்
வரமாட்டேன் என்று மறுத்ததின்பேரில் பஞ்சாயத்தாரெல்லாரும்
அவளிடம்போய் அவளைக் கெஞ்சி சண்டையை நிறுத்தும்படி ரொம்பவும்
மன்றாடிக் கேட்டுக்கொள்ள அவளும் சம்மதித்தாள். இவ்விஷயத்தில்
பஞ்சாயத்தார் காட்டின பொறுமை கிராமம் முழுவதும் அநேக வாரங்
கள் வரைக்கும் கொண்டாடிப் பேசப்பட்டது. ஸ்திரீகளுடைய வம்புப்
பேச்சும் சில வாரங்கள் வரைக்கும் இதேவிஷயந்தான்.

இன்னொரு கேஸ் விபசாரக்கேஸு. ஒரு புருஷனும் பெண்சாதி
யும் சரிவர சமுசாரம் நடத்தமுடியாமல் ஓயாச்சண்டையில் உழன்றமை
யால் இருவரும் இரண்டுவருஷமாகப்பிரிந்து அந்த ஸ்திரீயும் தன் கணவ
னிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ 5 வீதம் ஜீவனாம்சம் வாங்கி வந்
தாள். அந்தப்புருஷனுக்கு அவளிடம் ஏதோ சந்தேகம் தோன்றவே அவ
ளுடைய நடவடிக்கைகளை கவனிக்க ஆரம்பித்தான். ஒருநாள் அவள் தன்
சோரநாயகனுடனிருந்தபொழுது சாக்ஷிகளை வைத்துக்கொண்டு இவன்
அவர்களைப் பிடித்துவிட்டான். உடனே அச்சோரநாயகனுக்கும் இவனுக்
கும் அசாத்திய சண்டை ஏற்பட்டு கிராமம் மறுபடி கொந்தளிக்கத் தலைப்



பட்டது. பிறகு விஷயங்கள் ஒழுங்குபடவேண்டியதற்காக பஞ்சாயத்தா
ருக்கு மனுவு செய்து கொள்ளப்பட்டது. இருதிறத்தாரையும் வர
வழைத்து விசாரித்ததில் அந்த ஸ்திரீ தன் குற்றத்தை ஒத்துக்கொண்
டாள். உடனே பஞ்சாயத்தார் விசாரணை செய்து பின்வரும் தீர்மானஞ்
செய்தார்கள். புருஷன் இனிமேல் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டிய
தில்லை அத்தொகை அச்சோரபுருஷன் கொடுக்கவேண்டும். அதோடு
அந்த ஸ்திரீ தன் தாலியை எடுத்து தனக்கு முன் கணவனாயிருந்தவ
னிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும். சோரபுருஷனும் ஓர் அபராதம்
விதிக்கப்பட்டான். அத்தொகையின் ஒரு பாகம் பெண்டிழந்தவனு
டையை கலியாணத்திற்கும் கொஞ்சம் அங்கிருந்தவர்களுள் பங்கிடப்பட
வும் உபயோகிக்கப்பட்டது. முன் காலத்தில் இம்மாதிரி விஷயங்கள்
ஜாதிப்பஞ்சாயத்தினால் தீர்க்கப்பட்டன. இப்பொழுதுதான் இவையெல்
லாம் கோர்டுக்குப் போகின்றன. இவ்விஷயத்தில் கோவாபரேடிவ் பஞ்
சாயத்து ஜாதிப்பஞ்சாயத்தாக நடந்துகொண்டார்கள்.

இன்னொரு கேஸில் ஒருவன் தனக்கு விரோதியாக ஏற்பட்டவனை
இம்சை செய்வதற்காக அநேக சோம்பேரிகளை நியமித்தான். இந்த வெறி
யர்கள் குடித்துவிட்டு கண்டபடி மற்றொரு மூன்றாம் மனிதனுடைய
வீட்டுக்கெதிரில் கலகம் செய்யவே அவ்வீட்டுக்காரன் பஞ்சாயத்தார்
இதை கவனித்து அமைதி செய்யவேண்டுமென்று மிகவும் கேட்டுக்
கொண்டான். பஞ்சாயத்தார் சோம்பேரிகளை நியமித்த ஆசாமியை வர
வழைத்து அவனை நன்றாய்க்கண்டித்து எச்சரித்து விட்டார்கள். அது
முதல் அவன் சண்டைக்கும் போகிறதில்லை. சோம்பேரிகளையும் சேர்க்
கிறதில்லை.

இப்பொழுது அப்பஞ்சாயத்தாரிடம் ஒரு கேஸ் தீர்மானத்திற்காக
நிற்கிறது. அதில் ஒரு விதவை தன் மைத்துனன்மார்களிடமிருந்து
ஜீவனாம்சம் கேட்கிறாள்.

கிராமத்திற்கு ஸ்திரமான நியாயஸ்தலம் ஏற்பட்டு அதிலேயே
எல்லா விவகாரங்களும் தீர்மானமாக வேண்டுமென்று நிச்சயஞ்செய்து
ஆர்பிட்ரேஷன் போர்டு நியமனஞ் செய்யப்போகிறார்கள். இம்மாதிரி
சிலவில்லாத பஞ்சாயத்துத் தீர்மானம் கிராமத்தில் எல்லோராலும் புக
ழப்படுகிறது. கிராமத்தில் வெகுநாளாய் ஆலோசனையிலிருக்கிற கிராமப்
பஞ்சாயத்து பில் ராஜாங்கத்திலிருந்து வருவதற்கு முந்தியே இம்மாதிரி
ஏற்பாடு கிராமத்தில் நிலைத்துவிடும் என்று நாம் நம்பலாம். அதற்குள்
எந்த வக்கீலாவது சட்டபரிபாலகர்களாவது இத்தகைய பஞ்சாயத்தா
ரின் செய்கையை சட்ட விரோதமென்று குறை கூறமாட்டார்களென்று
நம்புகிறோம்.

# சென்னையில் மத்தியக்கூட்டுறவு அச்சுக் கூடம் ஒன்று ஏற்படுத்தும் ஆலோசனை.

கீழ்க்கண்ட ஆலோசனை மதருஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுடைய ஸ்டாண்டிங், கமிட்டியாரால் தயார் செய்யப்பட்டு அதன் நிர்வாகக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டது:—

1917-ம் வருஷம் டிஸம்பர்மாதம் 23உ நடைபெற்ற ஆறுவது புரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரன்ஸில், ஒரு கோவாபரேடிவ் அச்சுஇயந்திர சாலையை சென்னையில் ஸ்தாபிக்கும்படி ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. சண்டையினால் விலைவாசிகளெல்லாம் அசாத்தியமாக உயர்ந்திருந்ததால் அவ்விஷயம் உடனே கவனிக்கப்படவில்லை.

1919-ம் வருஷம் ஏப்ரல்மாதம் 19-ந்தேதி நடந்த ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனின் ஜனரல்பாடி மீட்டிங்கில் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் அச்சியந்திரசாலை ஒன்று சென்னையில் ஸ்தாபிக்க புரொவின்ஷியல் யூனியன், ஸ்டாண்டிங் கமிட்டியார் மதிப்பு முதலியதுகளோடு கூடிய ஒரு ஆலோசனையைத் தயாரித்து எக்ஸிகுடிவ் கமிட்டியாரிடம் அனுப்பவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. எக்ஸிக்யூடிவ் கமிட்டியாருக்கு மதிப்பு முதலிய ஆலோசனை திருப்திகரமாயிருந்தால் உடனே வேலை துவக்க எக்ஸிகியூடிவ் கமிட்டியாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

கீழ்க்கண்டபடி ஒரு ஸ்கீம் ஸ்டான்டிங் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்டது. இவ்விராஜதானியிலுள்ள கூட்டுறவு இயக்கத்திற்குத் தேவையானபடி ஒரு அச்சியந்திரசாலை ஏற்பட அவ்வேலைகளில் நிபுணர்களாயுள்ளவர்களின் மதிப்பின் பிரகாரம் ரூ 25,000 மூலதனம் போதுமானது. அதாவது ரூ 15,000 மெஷின் முதலிய கருவிகளுக்கும், ரூ 5,000 செலவுகளுக்கும் ரூ 5000 கடிதம் முதலியவைகள் வாங்குவதற்கும்.

ஆரம்பம் முதல் இந்த அச்சியந்திரசாலைக்குப் போதுமான வேலையிருக்கும் என்பதில் சந்தேகமில்லை—வருஷம் ஒன்றுக்கு ரூ 12,000-க்கு வேலைவர்தால் கட்டுபடியாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறபடியால், ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன், திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ் ஸெண்ட்ரல் பாங்கிகள், விவசாயச் சங்கங்களல்லாத இதர முக்கியமான சங்கங்கள் சில ஆகிய இவைகளே ஷை தொகைக்குக் குறையாமல் வேலை கொடுக்கும்.



கணக்குப்புஸ்தகங்களும் பாரங்களும் செய்து கொடுப்பதிலேயே
ஏராளமான ஆர்டர்களை எதிர்பார்க்கலாம். தற்காலம் சுமார் 500 புதுச்
சங்கங்கள் வருஷாவருஷம் ஏற்படுகின்றன. இனி இத்தொகை இன்னும்
அதிகமாகும். இப்பொழுது ஒவ்வொரு சங்கமும் குறைந்தபக்ஷம் கணக்
குப் புஸ்தகங்களுக்காக ரூ 25 செலவழிக்கின்றது. அதாவது ரூ 12,500
இதிலேயே ஆகும். இற்தகுக் குறையாதவேலை, புத்தகங்கள் முடிந்துபோன
பழைய சங்கங்கள் புதுப்புத்தகங்களுக்காகக் கொடுக்கும் ஆர்டர்களி
னின்றும் கிடைக்கும். ஹோ அண்டு கம்பெனிக்குத் தற்காலம் போகும்
இந்தவேலையெல்லாம் நமது அச்சுக்கூடத்திற்கே அவசியம் வரும்.
இதுமாத்திரமே அந்தவேலையை ஆதரிக்கப் போதுமானது. போது
மான வேலைகொடுக்க சங்கங்களால் முடியாவிட்டால் வேறு வெளி
வேலைகளைக்கூட எடுத்துக்கொள்ளலாம்.

தேவையான மூலதனத்தைச் சேகரிப்பதில் ஸ்டாண்டிங் கமிட்
டிக்கு யாதொரு கஷ்டமுமில்லை. தற்காலம் 3000 சங்கங்களுக்குமேல்
இருக்கிறபடியால் எல்லா மூலதனத்தையும் எளிதில் அடைந்துவிடலாம்.
பங்கு ஒன்றுக்கு ரூ 10 வீதம் 5000 பங்கு அதாவது ரூ 50,000 மூல
தனத்தோடு அச்சு இயந்திரசாலையை ஆரம்பித்து விடலாம். ரிஜஸ்டர்
செய்யப்பட்ட சங்கங்களே மெம்பராக யிருக்கவேண்டுமேயொழிய தனி
நபர்களை மெம்பராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ப்ரொவின்ஷி
யல் கோவாபரேடிவ் யூனியன், திருவல்லிக்கேணி ஸ்டோர், மதருஸ்,
ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி முதலிய சில பெரிய சங்கங்களைமாத்திரம்
ஒவ்வொன்றும் ரூ 1000க்குப் பங்குகள் எடுத்துக்கொள்ளும்படி
கேட்டுக்கொள்ளலாம். இத்தொகைவரையில் தான் ஒரு சங்கம் பங்குகள்
எடுத்துக்கொள்ளலாம். சில பெரிய ஸெண்டிரல் பாங்கிகளைக்கூட ரூ
500 முதல் ரூ 1000-வரையில் பங்கெடுத்துக்கொள்ளும்படி தூண்ட
லாம். ஒவ்வொரு சாதாரண ஸெண்ட்ரல் பாங்கிகள்கூட 25 பங்குகள்
வரையில் எடுக்கும்படி சொல்லலாம். சூபர்வைசிங் யூனியன்களெல்
லாம் 10 அல்லது அதற்கதிகமாகவும் பங்குகள் எடுத்துக்கொள்ளும்.
பாக்கியிருக்கும் பங்குகளை இதர கிராம நாணயச் சங்கங்கள் எடுத்துக்
கொள்ளலாம்.

ஆரம்ப சில்லரைச் செலவுகளுக்கு உதவும்பொருட்டு ஒவ்வொரு
பங்கிற்கும் பிரவேசக்கட்டணம் நான்கு அணாவீதம் வசூலிக்கலாம். பங்
கிற்கு ஏறபடும் முழுத்தொகையையும் பங்குமனு அங்கீகாரமான
உடனே கொடுக்கவேண்டும். பங்குத்தொகையை தவணைகளாக வசூலிக்க
வேண்டியது அவசியமில்லை.

மேலே மதிப்பிட்ட ரூ 25,000 இருந்தால் வேலையை உடனே ஆரம்
பிக்கமுடியும். என்றாலும் இன்னம் அதிகமான மூலதனம் சேருவது

வேலையின் விருத்திக்கு நலம். ஆகையால் சங்கங்களெல்லாம் எவ்வளவு பங்குகளை சௌகர்யமாய் எடுத்துக்கொள்ளமுடியுமோ அவ்வளவையும் எடுத்துக்கொள்ளும்படி தூண்டவேண்டும்.

கூட்டுறவின் மேலான ஒழுக்கங்களை இவ்வேலையில் அனுபவத்தில் காட்டுவது அத்தியாவச்ய மாகையால் சிப்பந்திகளுக்கும் இலாபத்தில் பங்கு கொடுக்கவேண்டும். ஆகவே ஒவ்வொரு வருஷத்தின் ஜனரல் மீட்டிங்கில் பங்குத்தொகையின்பேரில் டிவிடெண்டு தீர்மானமானபிறகு மிச்சமாயிருக்கும் நிகரலாபத்தை முதலாளிகளும் தொழிலாளிகளும் தகுதியான அளவுபடி பங்கிட்டுக் கொள்ளலாம். (இந்த அளவைப் பற்றிய விவரம் சாவகாசமாய் தீர்மானிக்கலாமானாலும் இலாபத்தில் தொழிலாளி களுக்கும் பிரிவினை உண்டு என்னும் மேலான கொள்கை ஆரம்பத்தி லேயே கூட அங்கீகரிக்கப் படலாம்.)

நிர்வாக கமிட்டியின் சௌகரியத்திற்காக இந்நோக்கங்கள் டிராப்ட் பைலாக்களாக காட்டப்பட்டிருக்கின்றன.

## டிராப்ட் பைலாக்கள்.

1. "சென்ட்ரல் கோவாபரேடிவ் ப்ரிண்டிங் வொர்க்ஸ் லிமிடெட்" என்னும் பெயருடன் 1912-ம் வருஷத்திய கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டுப்படி இது ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. அதன் விலாசம் சென்னை, இராயப்பேட்டை. அதன் விவகார எல்லை சென்னை ராஜதானி முழுவதும்.

### நோக்கம்.

2. சங்கத்தின் நோக்கங்களென்ன வென்றால் கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கும் அவைகளின் மெம்பர்களுக்கும் அச்சு வேலைகள் செய்து கொடுத்தல், பேனா, இங்கி, காகிதம் முதலியவைகளையும், கணக்கு புஸ்தகங்கள், ரப்பர் ஸ்டாம்புகள் முதலியவைகளையும் சங்கங்களுக்கு சப்ளை செய்தல். இதர ஜனங்களுக்குக்கூட காகிதம் முதலியவைகளை விற்றும் அச்சடித்தும் கொடுக்கலாம்.

### மூலதனம்.

3. சங்கத்தின் மூலதனம் தற்காலம் ரூ. 50,000. இது பங்கு ஒன் றுக்கு ரூ. 10-வீதம் 5,000 பங்குகள் கூடியது.

### மெம்பர்கள்.

4. 1904ம் அல்லது 1912-ம் வருஷத்திய கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டுகளின்படி ரிஜிஸ்டர் செயயப்பட்ட சங்கங்கள் தான் மெம்பர்களாக



லாம். ஒவ்வொரு மெம்பரும் குறைந்த பக்ஷம் ஒரு பங்காவது எடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் எந்த மெம்பரும் 100 பங்குகளுக்குமேல் எடுத்துக்கொள்ளக்கூடாது.

5. மெம்பராகச் சேரும் சங்கத்தின் உரிமைகளையும் கடமைகளை யும் அச்சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி அக்கூட்டத்தில் தீர்மானித்த காலம்வரைக்கும் நடத்துவார்.

6. ஒரு மெம்பரின் பொறுப்பு அவரவர்கள் எடுத்துக்கொண்ட பங்குத்தொகையின் அளவா யிருக்கும்.

7. ஒவ்வொரு மெம்பரும் மெம்பராகச் சேர்க்கப்பட்டவுடன் பங்கு ஒன்றுக்கு 4 அணு வீதம் எடுத்துக்கொள்ளும் பங்குகளுக்குப் பிர வேசக் கட்டணம் செலுத்தவேண்டும்.

8. பங்குக்காக செய்யப்படும் விண்ணப்பம் அங்கீகாரமானவுடன் ஒவ்வொரு பங்கின் முழுத்தொகையையும் கட்டிவிடவேண்டும்.

9. பங்குகள் வாபீசு செய்யப்படமாட்டா. ஆனால் ஒரு மெம்பர் சொஸைடி குறைந்தது ஒரு பங்கைத் தனக்கு வைத்துக்கொண்டு மற்றபங்கு அல்லது பங்குகளை, போர்டு ஆப் டைரக்டர்களின் அனுமதி யின்பேரில் 4-வது பைலாவிற்குட்பட்டு இன்னொரு மெம்பர்சொஸை டிக்கு மாற்றலாம்.

10. ஒரு சங்கத்தின் ரிஜிஸ்ட்ரேஷன்ரத்து செய்யப்பட்டால் அது மெம்பரினின்றும் விலக்கப்படும்.

11. அப்படி விலக்கப்பட்ட சங்கத்தின் பங்குத் தொகையாவது இதரப் பணமாவது அதனால் சேரவேண்டிய பாக்கிகள் ஏதாவதிருந்தால் அவற்றைக் கழித்துக்கொண்டு வாபீசு செய்யப்படும்.

12. ரத்தான மெம்பரின் பொறுப்பு நீங்கின காலத்தில் சங்கம் கடன் பட்டிருந்த தொகைக்கு நீங்கின தேதிமுதல் ஒரு வருஷம் வரை யிலிருக்கும்.

### தனங்கள்.

13. சொஸைடியின் தனங்கள் சாதாரணமாய் கீழ்க்காட்டியவாறு.

(1) பங்குத்தொகைகள்.

(2) டிபாஸிட்டுகளும், இதரக் கடன்களும்.

(3) பிரவேசக் கட்டணங்கள், விக்கிரயங்கள், சில்லரைவரும்படிகள்.

14. போர்ட் ஆப்டைரக்டர்கள், மெம்பர்களிடமிருந்தாவது அன்னி யர்களிடமிருந்தாவது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படியோ, கோவா

பரேடிவ் சொஸைடி ஆக்டுப்படியே ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கங்களி னின்ருவது கடன் வாங்கலாம். ஆனுல் மெம்பர்களுக்காவது அன்னியர் களுக்காவது சொஸைடி கொடுக்கவேண்டிய கடன் தொகை, எக்காலத் திலும் பங்குத்தொகையையும் க்ஷேமநிதியையும் சேர்ந்த எட்டு மடங்கு தொகைக்கு அதிகமாகக்கூடாது. மேலும் எச்சமயத்திலும் 100-க்கு 7½க்கு அதிகமான வட்டிக்கு வாங்கக்கூடாது.

## தனங்களின் ஈடுபாடு.

15. சங்கத்தின் பணத்தை முக்கியமாக அச்சுவேலையிலும் புஸ்தகம் கட்டும் வேலையிலும் உபயோகிக்கவேண்டும். அதற்கு ஆகவேண்டிய சாமான்களையும் மெஷின் முதலானவைகளையும் அவசியத்திற்கும், காலத்திற்கும் விலைக்கும் தக்கவாறு அவர்களுக்கு சௌகரியமாகத் தோன்றுகிறபிரகாரம் போர்ட் ஆப் டைரக்டர்கள் வாங்கலாம்.

## நிர்வாகம்.

16. சங்கத்தின் நிர்வாகம் முழுவதும் போர்ட் ஆப் டைரக்டர்களைச் சேர்ந்தது. அவர்கள் ஒரு பிரசிடெண்டு, ஒரு காரியதரிசி மூன்று இதர மெம்பர்கள் ஆவார்கள். இவர்கள் மூன்று வருஷங்களுக் கொருமுறை மகா சபையினுல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மத்தியில் போர்டில் காலி ஏற்பட்டால் அவர்களுள் மற்றவர்களே சேர்ந்து நியமித்துக் கொள்ளலாம். புதுபோர்டார் ஏற்படும் வரையில் பழைய போர்டார் வேலையைப் பார்த்துவரவேண்டும்.

17. போர்ட் ஆப் டைரக்டர்களுக்கு கீழ்க்கண்ட அதிகாரங்கள் உண்டு.

(1) டிபாஸிட்டுகள், கடன்கள் இவைகள் வாங்கல் அவைகளுக்கு வட்டி முதலியவைகளை நிர்ணயித்தல்.

(2) மானேஜரையும் தேவையான இதர சிப்பந்திகளையும் அவர்களுக்கு சம்பளங்கள் கடமைகள் இவைகளை நிர்ணயித்து நியமிக்கவும் தண்டிக்கவும், விலக்கவும் அதிகாரமுண்டு.

(3) அச்சுவேலை புத்தக பைண்டுவேலை இவைகளை நடத்தி இவைகளின் நிமித்தமாய் ஆகவேண்டிய எல்லாவேலைகளையும் செய்தல்.

(4) மெஷின்கள்கருவிகள், சாமான்கள் இன்னம் சொஸைடிக்குச் சேர்ந்த இதர சொத்துகள் இவைகளை வாங்கிப்பத்திரமாய் வைப்பதோடு எல்லாக்கணக்குகளும் சரிவர வைக்கப்படுகிறதா என்பதையும் பார்த்தல்.

(5) பைலாப்படிக்கும் ஜனரல்பாடியின் தீர்மானப்படிக்கும் சங்கத்தின்எல்லாவேலையையும் கவனித்தல்.



(18) சொஸைடியின் வேலை நிமித்தமாய் போர்ட் ஆப் டைரக்டர்
கள் அப்போதப்போது கூடுவார்கள். என்றுலும் விஷயங்களை சுற்றுக்
கடிதங்களினுலும் தீர்மானிக்கலாம். மூன்றுமெம்பர்கள் சம்மதப்பட்டா
லொழிய போர்டின் ஒரு தீர்மானமும் செல்லாது. இவ்விதிப்படி எல்லா
விஷயங்களும் மெஜாரிடியைக்கொண்டே தீர்மானிக்கப்படும். வோட்டுகள்
சமனுயிருந்தால் பிரசிடெண்டின் அபிப்பிராயமாவது அல்லது அப்பொ
ழுது அக்கிராசனராயிருப்பவருடைய அபிப்பிராயமாவது தீர்மானமாகும்.

19. சொஸைடிக்குவரும் எல்லாப்பணத்திற்கும் ரசீது கொடுக்
கப்படும். அம்மாதிரி ரசீதுகளை சிகரிடெரியாவது அல்லது
அதற்காகபோர்ட் ஆப் டைரக்டர்களினுல் உத்தரவு பெற்றவராவது
தான் கையெழுத்துப்போடவேண்டும். அன்னியர்களிடமாவது இதர
கோவாபரேடிவ் சங்கங்களிலிருந்தாவது வாங்கும் கடன்களுக்கு ரசீதோ
பத்திரமோ போர்ட் ஆப் டைரக்டர்களுள் குறைந்தபக்ஷம் மூன்று
பெயர்களால் கையெழுத்துச் செய்யப்படவேண்டும்.

## மகாசபை மீட்டிங்குகள்.

20. சொஸைடியின் நிர்வாகத்தைப்பற்றிய கடைசியான முடிவு,
மகாசபையினுடையதே. மகாசபை சங்கவேலையை நடத்துவதற்காக
அப்போதப்போது நடைபெறும்.

21. மெம்பர்களின் மாகசபை மீடிங்கு வருஷத்திற்கு ஒரு
முறையோ அல்லது எப்பொழுதெல்லாம் அவசியமோ அப்பொழுது
போர்ட் ஆப் டைரக்டர்கள் ஏற்பாடு செய்வார்கள். கீழ்க்கண்ட விஷயங்
களும் இதர விஷயங்களும் மகாசபையில் கவனிக்கப்படும்.

(1) வருஷாந்தர ரிபோர்டடை அங்கீகரித்தல்.

(2) ரிஜிஸ்ட்ராரின் வருஷத்தணிக்கைக் குறிப்புகளையும், உத்தரவுகளையும் கவனித்தல்.

(3) ஏதாவது பைலாவை மாற்றுதல் அல்லது ரத்துசெய்தல், அல்லது புதுபைலா ஏற்படுத்தல்.

(4) போர்ட் ஆப் டைரக்டர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(5) அடுத்த வருஷம் என்னவேலை செய்யலாம் என்று தீர்மானித்து அதற்காகப் பண்டுகள் வைத்தல்.

(6) 13-வது பைலாவிற்குட்பட்டு சங்கம் கடன் வாங்கும் மொத்த அளவை நிர்ணயித்தல்.

(7) போர்டார் கொண்டுவருகிற இதர விஷயங்களைக் கவனித்தல்

22. மொத்த மெம்பர்களின் தொகையில் மூன்றில் இரண்டு பங்காவது அல்லது 10 மெம்பர்களாவது இவ்வெண்ணிக்கைகளுள் எது குறைவோ அது மகாசபை மீட்டிங்கிற்கு கோரம் ஆகும் பிரசிடெண்டு ஆஜரிலிருந்தால் எல்லாமகாசபை மீட்டிங்குகளிலும் அக்கிராசனம் வகிப்பார். அவர் இல்லாவிட்டால் ஆஜராயிருக்கும் மெம்பர்கள் தங்களுள் ஒருவரை அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒருவோட்டுத்தான் உண்டு. பொது மீட்டிங்கில் எல்லாவிஷயங்களும் ஆஜராயிருக்கு மெம்பருள் மெஜாரிடி வோட்டைக்கொண்டு தான் தீர்மானிக்கப்படும். இருதிறமும் சமமாயிருந்தால் அக்கிராசனாதிபதிக்கு சுதந்தரமான இன்னொருவோட்டை உபயோகிக்கலாம்.—

## சில்லறைத் தொழில்கள்.

மகா சபையின் அனுமதியின் பேரில் போர்ட் ஆப்டைரக்டர்கள் ஒரு சில்லரைக்கடை வைத்து நடத்தலாம். அதில் அச்சாபீஸ் பைண்டு செய்யுமிடம் இவ்விடங்களின்தயாராகிற எல்லாப் புத்தகங்கள் பாரங்கள் முதலியவைகளை விற்பதோடு, சங்கத்தின் நோக்கங்களுக்கு விரோதமாகாதவும், உபயோகமும் லாபகரமுமான எந்தவேலையையும் மேற்கொண்டு காகிதம் முதலியவைகளையும் வாங்கி சில்லரையில் விற்கலாம்.

## இலாபங்கள்.

ரிஜிஸ்ட்ராரவர்கள் நிர்ணயிக்கும் நிகரலாபத்தில் நான்கில் ஒரு பங்கு க்ஷேமநிதிக்கு வைக்கப்படும். பாக்கியிலிருந்து 100க்கு 9 வீதம், வசூலாகியிருக்கும் மூலதனத்தின் பேரில் டிவிடண்டு கொடுக்கப்படும். மீதி தொகையிலிருந்து நிகரலாபத்தில் 100க்கு 7½க்கு மேற்படாமல் பொது நலபண்டுக்காக எடுத்துவைத்து, மகாசபை ஆலோசனைக்குட்பட்டு நிர்வாகக் கமிட்டியார் கோவாப்ரேஷனின் விருத்தி விஷயத்தில் எப்படி தீர்மானிக்கிறார்களோ அவ்விதம் செலவழித்தல். மிகுதியிருந்தால் அதை கூலிக்காரர்களும் சிப்பந்திகளும் ஒருபாகமும் சாமான்கள் வாங்குவோர் ஒரு பாகமுமாகப் பங்கிட்டுக்கொள்ளலாம். ஆனால் சாமான் வாங்குவோர் முதலியவர்கள் கோவாபரேடிவ் சொஸைடிகளாகவும் அவைகளின் மெம்பர்களாகவும் இருந்தால்தான் லாபப்பிரிவினை கிடைக்கும்.

(25) போர்ட் ஆப்டைரக்டர்கள் அப்போதைக்கப்போது சங்கத்தின் நிர்வாகத்திற் கவசியமான பைலாக்களை ஏற்படுத்தலாம். இவ்விதிகள் சிப்பந்திகளின் கடமை அவர்களால் கட்டப்படவேண்டிய ஜாமீன் தொகை முதலியவைகளைத் திட்டப்படுத்தும்

---



# சென்னை நகருக்கு ஒரு டிஸ்டிரிக்ட் பாங்கு.

[ஸ்ரீமான் பி. இராமனுதன் அவர்கள், ஸொலிஸிடர் சிந்தாதிரிப்பேட்டை.]

இவ்விராஜதானியிலுள்ள ஜனங்களுக்கு கோவாபரேடிவ் இயக்கத்தில் அபிமானம் ஏற்பட்டகாலம் முதற்கொண்டு செங்கற்பட்டு ஜில்லாவிற்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் ஸெண்ட்ரல்பாங்கிங் யூனியன் ஏற்படுத்த ஆலோசித்த நாளிலிருந்து சென்னை நகரிலேயே மதருஸ், செங்கற்பட்டு, ஆகிய இச்சில்லாக்களுக்காக அநேக ரிஜ்ட்ரேஷன் முதலிய இதர கவர்ன்மெண்டு ஆபீஸுகள் ஏற்பட்டிருப்பதுபோல, ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியனும் ஏற்படும் என்று நம்பப்பட்டிருந்தது. செங்கற்பட்டு ஜில்லாவானது இந்த இராஜதானியின் கோவாபரேடிவ் இயக்கம் வளர்ந்த இடம் என்றும், கோவாபரேடிவ் புது எண்ணங்கள் ஒவ்வொன்றும், அவ்விடத்தினின்று தான் உதிக்கிறதென்றும், கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கு முதல் ரிஜிஸ்ட்ராராக இருந்தவர் (அதாவது தற்காலத்திய ஆனரபில் திவான் பகதூர் பி. ராஜகோபாலாசாரியார் அவர்கள் சி. ஐ. இ.) சொல்லியிருக்கிறார். தற்காலம் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனால் செங்கற்பட்டுஜில்லா ஐக்கிய சங்கங்கள் எல்லாவற்றிற்கும் திருப்திகரமாகப் பொருளுதவி செய்ய முடியவில்லையென்றும் ஆகையால் அந்த ஜில்லாவிலுள்ள கிராம நாணயச் சங்கங்களிற் பல மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன்பாங்கியிலேயே கடன் வாங்க வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படுகிறதென்றும் 1917—18-ம் வருஷக் கோவாபரேடிவ் ரிஜிஸ்தராரின் வருஷாந்தர ரிபோர்டின் 5-வது பக்கத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இம்மாதிரிக் கடன் வாங்கமுடியாது. ஏனென்றால் சமீபத்தில் புது ஏற்பாடுகள் முடிவடைந்தவுடன் மதராஸ் சென்ட்ரல் அர்பன்பாங்கி பிரத்தியேக நிர்வாக ஏற்பாட்டுடன்கூடிய அபெக்ஸ்பாங்கி ஆகமாறி கிராம நாணயச் சங்கங்களுக்கு நேரில் கடன் கொடுக்க முடியாமற் போகும்.

இராஜாங்கமானது சென்னையிலுள்ள பலவகுப்பு ஜனங்களுக்காக நாணயச் சங்கங்களேற்படுத்தி தாய் போலக் கருணை காட்டினால் கோவாபரேடிவ் இயக்கம் விசேஷ விருத்தியடைய இடமுண்டு. இத்தலை நகரில் 5 லக்ஷத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையும் 90க்குக் குறையாத பெரிய பறச்சேரிகளும் அடங்கியுள்ளன. கோவாபரேஷனுக்கு கவர்ன்மெண்டு மாத்திரம் சரிவர உபகரித்தால் இன்னம் ஒன்று அல்லது இரண்டுவருஷங்களுக்குள் 200 சங்கங்களுக்குக் குறையாமல் இந்நகரில் ஏற்பட்டுவிடும். சென்ற சென்னைச் சட்ட சபை மீட்டிங்கில் ஆனரபில் மிஸ்டர் பி. வி. நரசிம்மய்யர் கொண்டுவந்த தீர்மானத்தை கவர்மெண்டு அங்கீகரித்த பொழுது இனிவருகிற வருஷங்களில் கோவாபரேடிவ் இலாகா

விற்கு இன்ஸ்பெக்டர்களையும் டிப்டிகலெக்டர்களையும் அதிகப்படுத்துவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

தற்காலம் சென்னையில் மாத்திரம் 35 நாணய சங்கங்களிருக்கின்றன. இயக்கம் சீக்கிரமாக விருத்தியாக இந்நகருக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன் அவசியமான தேவையென்று, ஒவ்வொரு கோவாபரேடிவ் அபிமானிகளாலும், இதர இடங்களில் பணம்போட்டு வைப்பதைவிட கோவாபரேடிவ் டிஸ்ரிக்ட் பாங்கிகளில் போடுவது சிலாக்கியமென்று உணரும் ஜனங்களாலும், வெகு ஆவலுடன் விரும்பப்படுகிறது.

மேற்கூறிய காரணங்களல்லாமல் செங்கற்பட்டு ஜில்லாவில் கடனுக்காக மனுவு செய்துகொள்ளுகிற கிராம நாணயச் சங்கங்கள் ஏராளமாக விர்த்தியாய்க்கொண்டிருக்கின்றன. அச்சில்லா தீவிர கோவாபரேடர்களில் சிலர் சென்னையில் டிஸ்ட்ரிக்ட் பாங்கி ஏற்பட்டால் செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்கு உரித்தான சங்கங்களெல்லாம் இல்லாவிட்டாலும் அவைகளின் ஒரு பாகத்தையாவது சென்னை டிஸ்ட்ரிக்ட் பாங்கிற்கு மாற்றிக்கொள்ள வெகு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று நாள் நம்ப இடமிருக்கிறது. இச்சில்லாவில் அணைக்கப்பட்ட கிராம நாணயச் சங்கள் 400-க்கு மேல் இருக்கின்றன. இவைகளின் பொருள் தேவைகளை செங்கற்பட்டு டிஸ்ரிக்ட் பாங்கியினால் திருப்திசெய்விக்க எப்பொழுதும் முடிகிறதில்லை. இச்சில்லாவில் இவ்வியக்கம் சீக்கிரமாக மேன்மேலும் விருத்தியடைவதை முன்னிட்டு காஞ்சீபுரத்தில் இருக்கும் இந்த டிஸ்ட்ரிக்ட்பாங்கி எல்லாச் சங்கங்களின் தேவைகளையும் அதிலும் முக்கியமாய் இன்னம் 200 சங்கங்கள் இரண்டு வருஷத்தில் அணைக்கப்படப்போவதாய்க் கேட்கும்பொழுது திருப்திசெய்யும் என்று நினைப்பது பிரயோஜனப்படாது.

கோவாபரேஷனைப் பற்றி இம்பீரியல் கமிட்டியார் சென்ட்ரல் பாங்கியின் பொறுப்புகளை நிர்த்தாரணம் செய்து அது 120 முதல் 250 கிராம நாணயச் சங்கங்களின் தேவைகளை உடனேயாவது ஒரு நியாயமான காலத்திற்குள்ளாவது சாதாரணமாய் கவனிக்கவேண்டும் என்று காட்டியிருக்கிறார்கள் (இந்தியாவின் கோவாபரேடிவ் கமிட்டியின் ரிபோர்டு, பக்கம் 69.)

ஆகையால் சென்னையில் ஒரு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங்யூனியன் தண்டியார்பேட்டையில் உடனே ஸ்தாபிக்கஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான கோவாபரேடர்களும் தேசோபகார உழைப்பிலுள்ள எத்தகைக் கூட்டத்தினரும் முன்வந்து தயங்காமல், அதில் பங்குகள் எடுத்துக்கொண்டாவது பணம் டிபாசிட்டுகள் கட்டியாவது இயக்கத்திற்கு



புரிந்து அதனால் சமீபத்தில் மதராஸ் டிஸ்ட்ரிக்ட்பாங்கி ஏற்பட்டு உதவி அது ராஜதானியிலுள்ள சமஸ்த உழைப்பாளிகளுக்கும் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையும் தர ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்பப்படுகிறது.

மதராஸ் டிஸ்ட்ரிக்ட்பாங்கி ஏற்படுத்தும் விஷயத்தில் சிரத்தையுள்ள எல்லாரும், மதராஸ், சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள, சொலிஸிடர் மிஸ்டர் பி. இராமனுதனுக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்.

---

# ஆந்திரதேச கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

ஆந்திர தேச கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1919-ம்வருமுதலாவது ஆந்திர தேச கோவாபரேடிவ் கான்பரன்ஸ் 1919-ம்வரு
ஷம் ஜூன் மாதம் 28, 29 தேதிகளில் பெஜவாடாவில் நடை பெற்றது.

நம் நாட்டிலுள்ள அநேக பிரமுகர்களும் பற்பல அஸிஸ்டெண்டு
ரிஜிஸ்ட்ரார்களும் இன்ஸ்பெக்டர்களும் இக்கான்பரன்ஸுக்கு வந்திருந்
ததோடு முனகாலாராஜா அவர்களும் கோவாபரேடிவ் சொஸைடிகளின்
ரஜிஸ்ட்ராரான ஹெமிங்வே துரையவர்களும் ஆஜராயிருந்தார்கள்.

டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜும் ஸெஷன் ஜட்ஜுமாகயிருந்து பென்ஷன்
வாங்கிக்கொண்டிருக்கிற திவான்பகதூர் எல்லபெட்டி ஜானகிராமய்யா
பந்துலு அவர்கள் வரவேற்புக்கமிட்டிக்கு சேர்மனாகவிருந்து டெலிகேட்
டுகளுக்கு நல்வரவு கூறினார். இவ்வியக்கம் பாஷைப் பிரிவினை பிரகாரம்
தனியாக நடைபெறுவதற்கு அவசியங்களை எடுத்துக்காட்டி, பொருளா
தார நிலைகளை விர்த்திசெய்ய சில முக்கியமான வழிகளைக் காட்டினார்.
அவைகளுள் இரண்டுபின்வருமாறு தங்கஸ்டாண்டர்டு ரிசர்வையும்பேபர்
கரன்ஸி ரிஸர்வ் தொகைகளையும் இந்தியாவிற்குள் மாற்றி அத்தொகைகள்
இவ்வியக்கத்திற்குப் பயன்படும்படி செய்தல் ஒன்று. அநியாய வட்டி
யைப்பற்றிய ஆக்டை எல்லாமாகாணங்களின் சௌகரியத்திற்குத்தக்கபடி
தாழ்ந்தவட்டி விகிதத்தில் சீர் திருத்தல் மற்றொன்று.

பிறகு பிரஸிடெண்டாகிய ஹைகோர்ட்டுவக்கீல் மிஸ்டர் வி. ராம
தாஸுபந்துலு அவர்கள் உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சம்
பின்வருமாறு:—

சென்னையில் வருஷாவருஷம் நடைபெறும் ப்ரொவின்ஷியல் கான்பரன்ஸைத்தவிர இம்மாதிரியான தனிக் கான்பரன்ஸ் அவசியமா
என்பது சாதாரணமாய் ஏற்படக்கூடிய முதற்கேள்வி. தெலுங்
குபேசும் ஜனங்களுள் கோவாபரேஷனை விருத்திசெய்யும் ஏற்பாடு
"ஆந்திரக்கிளர்ச்சி என்று சொல்லப்படும் பெரிய ஏற்பாட்டின் ஓர்பாகம்
என்பதில் சந்தேகமில்லை. ஆந்திர தேசத்திலுள்ள கிராமநாணயச்

சங்கங்கள் சூபர்வைஸிங் யூனியன்கள், சென்ட்ரல் பாங்கிகள் இவைக
ளின் நிலைமைகளையும் இவ்விசாலமான பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்
களின் குணகுணங்களையும் கவனித்தால் இம்மாதிரியான கான்பரன்
ஸின் அவசியம் நன்ருய் விளங்கும்"

ஆந்திரதேசம் தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டு தனி ரிஜிஸ்டி
ராரின் கீழிருக்கும்படி அவ்வளவு பெரிதான தேசம் என்றுகூட நான்
சொல்லுவேன். எவ்வளவு திறமையான உத்தியோகஸ்தராக இருந்த
போதிலும் மதருஸ் மாகாணம் ஒரு ரிஜிஸ்ட்ராரின் பொறுப்பிற்கு மிகவும்
பளுவானது. இந்தியாவின் கோவாபரேஷனைப்பற்றிய மேன்மையான
விஷயங்களுக்குக் களஞ்சியம்போலிருக்கும் மாக்ளகான் கமிஷனின்
அபிப்பிராயத்தை அனுசரித்ததாகவே என்னுடைய மேற்கூறிய அபிப்
பிராயமும் இருக்கிறது—

மாக்ளகான் ரிபோர்டானது நாணயச் சங்கங்களல்லாத இதர சங்
கங்களின் விருத்தி அவசியமென்பதை வற்புறுத்தினதோடு முன்னேற்ற
மடையாத ஐரோப்பிய நாடுகளில் வாங்குதல், விளைவித்தல் விநியோ
கித்தல் முதலிய வேலைகள், நாணயச் சங்கங்கள் நன்ருய் ஏற்படும் வரை
யில் கையாளப்படவில்லை என்றும், இந்தியாவில் கோவாபரேடிவ் விருத்
தியும் மேனுட்டின் போக்கை அனுசரித்திருக்கிறதென்றும், வாங்குதல்,
விளைவித்தல், விநியோகித்தல், முதலிய நாணயமில்லாத கோவாபரேஷ
னின் விருத்திக்கு இங்கிலாந்தும் இதரதேசங்களும் உதாரணமாயிருக்
கிறதென்றும் காட்டுகிறது.

சமீபத்தில் நடந்த வங்காள கோவாபரேடிவ் கான்பரன்ஸில் ஸர்
டானியில் ஹாமில்டன் துரையவர்கள் ஜனங்களுக்கு பாங்கிங் ஏற்பாடு
கவர்ன்மெண்டார் செய்துகொடுக்கத் தவறினதே அவர்களின் முன்னேற்
றம் தடைபட்டு நின்பதற்கு முக்கிய காரணம் என்ருர். ஜனங்களுக்கு
பாங்கிங் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியது கவர்ன்மெண்டின்
கடமை என்பதற்கு அவர் ஏழுகாரணங்கள் கூறுகிருர் அவை பின்
வருமாறு.—

(1) கொடுமையான நிர்ப்பந்தங்களினின்றும் ஜனங்களைக்காப்பாற்று
வது ராஜாங்கத்தின் கடமை. (2) மகாஜபினி என்னும் பெரிய பொருள்
லேவாதேவி ஏற்பாட்டை அழிக்கவேண்டியது கவர்ன்மெண்டின்
பொறுப்பு. ஏனென்ருல் அது பிரிடிஷ் அரசாக்ஷிக்கு அபக்கியாதியும்
பிரிடிஷ் கொடிக்கு அகௌரவமும் உண்டாக்கி கவர்ன்மெண்டின்
உபயோகமான வேலைகளைத் தடைப்படுத்துகிறது. (3) முப்பத்தொரு
கோடியே ஐம்பதுலக்ஷம் ஜனங்களுக்குத் தேவையான பண லேவா
தேவி, வேரொருவராலும் செய்யமுடியாது. (4) கவன்மெண்டு காரன்ஸி
நோட்டுத்தான் ஜனங்களால் அறிந்து நம்பப்படுவதும் சௌகரியமுமான



நாணயம் (5) கவர்மெண்டின் கையில் கரன்ஸி ஏற்பாட்டினால்
புரளுகிற தொகைகளின் கையிருப்பு தேவையான தொழில்தனத்தை
கூடியது. (6) ஜனங்களுடைய மிகுந்துபோன மாசூல்களை அப்புறப்
படுத்திப் பரவவைக்க ரெயில்வே ஏற்பாடுகள் செய்யவேண்டியது எப்படி
கவர்ன்மெண்டின் பொறுப்போ அப்படியே சிலவழிந்த தொகையை திரும்ப
வசூலிக்க பாங்கிங் ஏற்பாடு செய்யவேண்டியதும் அவர்களுடைய
பொறுப்பு (7) தேசத்தின் பொருட்சக்தியை விருத்தி செய்யும் பாங்கிங்
ஏற்பாடு இல்லாமல் மாண்டேகு செம்ஸ்போர்டின் சீர்திருத்த ஏற்பா
டாவது வேறு எந்த ஏற்பாடாவது பயனடையாது. புதிய ராஜாங்க சட்ட
சபையும் எட்டுச்சுரைக்காய் போன்ற ஒரு விளையாட்டேயாகும்.

தற்காலம் நடைபெறுகிற மாதிரியில் கோவாபரேஷன் ஆந்திரதேசத்
தில் விருத்தி யடையவேண்டுமானல் ஆந்திரர்கள் தங்கள் கவனங்களை,
கிராம நாணயச்சங்கங்கள், சூபர்வைசிங் யூனியன்கள், சென்டரல் பாங்கி
ப்ரொவின்ஷியல் பாங்கிகள் முதலிய ஏற்பாடுகளை உண்மையான கோவா
பரேடிவ் முறையில் தொழில் தோதுடன் நடத்தும் விஷயத்தில் முதல்
விஷயமாக செலுத்தவேண்டும். கிராம நாணயச்சங்கங்கள் தற்காலம்
நடைபெறுவது திருப்திகரமாக இருப்பதால் இவ்வேற்பாடே உபயோக
கரமாக அனுஷ்டிக்கப்படலாம்.

அடுத்தபடி, சூபர்வைசிங் யூனியன்களை கவனித்தால் அவ்வழியி
லும் நாம் நல்லவிருத்தியடைந்திருக்கிறோம். மேன்மேலும் அதிக சங்கங்
கள் யூனியன்களின் பராமரிப்பிற்குள் வருகின்றன. கிராம நாணயச்
சங்கங்களின் ஸ்திரமும் பொருள் விருத்தியும் பெரும்பாலும் தணிக்கை
வேலையையும் மேன் பார்வையையுமே பொறுந்திருக்கிறது. இவ்வேலை
உத்தியோகப் பொறுப்பில்லாத வர்களால் ரிஜிஸ்ட்ராரின் கீழும் அவர்
சிப்பந்திகளின் பார்வையின்கீழும், மிகவும் நன்ருய் நடைபெறுகிறது.
ஆனல் இந்த யூனியன்யன்களை தங்களுடைய ஆளுகையில் சுயேச்சை
யாக இருக்கும்படி விடவேண்டும்.

சென்ற வருஷம் ரிஜிஸ்டரான ஐந்து புதிய ஸெண்ட்ரல் பாங்கிக
ளுள் மூன்று ஆந்திரதேசத்தில் உள்ளன. அவைகள் காகனடா, நெல்
லூர், ஆஸ்கா ஆகிய இவ்விடங்களில் உள. ஆனல் கிராம நாணயச்சங்கங்
களுக்கு மதருஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கிதான் இதுவரையில்
பொருளுதவி செய்துகொண்டிருந்தது. இப்பொழுது லோகல் பாங்கி
கள் அவ்வுதவி செய்ய முன் வந்திருப்பது புகழத்தகுந்த விஷயமே.
ஆந்திரதேசத்திலுள்ள முக்கியமான இடங்களிலெல்லாம் இம்மாதிரி
பாங்கிகள் ஏற்படுத்த நாம் முயலவேண்டும். எல்லாவற்றிற்கும் தலைமை
யாயிருப்பது மாகாணபாங்கு அல்லது அபெக்ஸ் பாங்கே. இது வாஸ்தவ

மான அபெக்ஸ் பாங்கி என்று சொல்லக்கூடிய அபெக்ஸ் பைங்கு, சென்னையில் கிடையாது. உள்ளூர்களில் பணம் கொடுத்து உதவும் பாங்கிகள் எல்லாம் சேர்ந்து ஒரு மாகாண பாங்கியாக தனிப்பொறுப்பதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட்டாலன்றி அபெக்ஸ் அல்லது கோவாபரேடிவ் பாங்கி என்று சொல்லமுடியாது. சமீபத்தில் சென்டரல் பாங்கியானது லோகல் பாங்கிகளுக்கு கடன்கொடுத்தும் அவைகளின் அதிகத்தொகையை டிபாஸிட்டாக வாங்கியும் அபெக்ஸ் பாங்கியின் பொறுப்பை வகிக்கப்பார்த்தபோதிலும் கிராமநாணயச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதையே முக்கியவேலையாகப் பாராட்டிவருகிறது. வேறு சில இடங்களில் லோகல் சங்கங்களே வெளி உபகாரத்தையும் சிறிதும் வேண்டாமல் பணம்கொடுத்து உதவுகின்றன. மாகாண லேவாதேவி முழுவதும் ஒரு அபெக்ஸ் பாங்காகச் சேர்க்கப்பட்டு சென்டரல் பாங்குகளின் லேவாதேவி இப்பாங்கின் மூலமாகவே நடக்கும்படி செய்வது நம்முடைய பிரதமகொள்கையாக இருக்கவேண்டும். ஆந்திரதேசத்திற்கு அபெக்ஸ் பாங்கி ஏற்படுத்தும் வேலை நமது சக்தியை மீறினதாக இருக்கும் என்று முதற் பார்வையில் தோன்றும். ஆனால் விடாமுயற்சியோடும் உண்மையான நம்பிக்கையோடும் டாக்டர் பி. டட்டாபி சீதாராமய்யாவைப்போன்ற சக்தி வந்தவர்கள் தீவிரமாகப் பிரயத்தனப்படுவதால் சாத்திய மாகாமற்போகாது. பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

1. நேய தேசங்களுக்கு அனுகூலமாக சண்டைமுடிந்து ஜர்மனியும் சமாதானஉடன் படிக்கையில் கையெழுத்து இன்றைய தினம் போடுவதாக பகிரங்கப்படுத்தப் பட்டிருப்பதைப்பற்றி இக்கான்பரன்சு தன்னுடைய சந்தோஷத்தைத்தெரிவித்துக் கொள்ளுகின்றது.

2. ஆந்திரதேசக் கோவாபரேடிவ் இயக்கத்திற்கே வழிகாட்டியாயிருந்து அவ்விஷயமாய்ப் பெரிதும் உழைத்த மிஸ்டர் அல்லூர்ராமராஜு பி. ஏ. அவர்களின் அகாலமரணத்தினால் ஆந்திரதேசம் அடைந்த நஷ்டத்தை இக்கான் பரன்ஸ் மிக்க விசனத்துடன் உணருவதோடு அவருடைய குடும்பத்திற்கும் மனதார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

3. ஆந்திர தேசமானது ஒரு பொதுப் பாஷையுடனும், பொதுச் சாஸ்திரங்களுடனும், புராதனப் பொதுப் பெருமையுடனும் கூடிய ஒரே இனமுள்ள தேசமாகையால் அது ஒரு தனி, ரிஜிஸ்ட்ராரின் ஆளுகையில் இருப்பது உசிதமாகுமென்று உறுதியுடன் அபிப்பிராயப்படுவதாய் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து கொள்ளுகிறது. அதனால் ஆந்திரர்களிடம் தனிக்கவனம் உண்டாகக் கூடுவதோடு, கோவாபரேஷனின் முன்னேற்றமும் துரிதமாய் விருத்தியடையும்.



4. ஆந்திர தேசத்திற்காக "ஆந்திர தேசீய கோவாபரேடிவ் ஆர்கானைஸேஷன்" சொஸைடி ஒன்று ஏற்படவேண்டியது அவசியமென்று இக்கான்பரன்ஸ் கருதுகிறது. படிப்பிலும் முன்னேற்ற வேலைகளிலும், பத்திரிகைகளாலும், துண்டு விளம்பரங்களினாலும் உபந்நியாசங்களினாலும், காக்ஷிச் சாலைகளாலும் இடைவிடா வேலைகள் நடத்தி ஜனங்களை கோவாபரேஷனில் பழக்குவதற்கு அவ்வவ் விடங்களின் நிலைமைகளுக்குத்தக்கப்படி கோவாபரேடிவ் விஷயங்களைப் பிரபலப்படுத்த வேண்டும். இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு பலமான கமிட்டி நியமிக்கப்பட்டது.

5. டோல்கேட் வசூல்களை கோவாபரேடிவ் பாங்கிகளில் போட்டு வைக்கலாமென்று லோகல் பண்டு அக்கௌண்டு கோட் என்னும் புத்தகத்தில் திருத்தம் செய்ய கவர்ன் மெண்டு அனுமதி கொடுத்ததற்கு இக்கான் பரன்ஸ் நன்றியறிதல் பாராட்டுவதோடு கோவாபரேடிவ் பாங்கிகளில் தேவையான பணம் வந்து அதனால் ஜனங்களின் ஏழ்மையையும் கஷ்டத்தையும் நிவர்த்திக்கும் பொருட்டு ரெயில்வே வரி பிராவிடண்டு பண்டு, கவர்ன் மெண்டு ஸேவிங்க் பாங்கி டிபாஸிட்டுகள், இன்னம் எல்லாவிதமான சில்லரை செகூரிடித் தொகைகள் ஆகிய இவை யெல்லாவற்றையும் கூட கோவாபரேடிவ் பாங்கிகளில் போட்டு வைக்கலாம் என்றும் கவர்ன்மெண்டு அனுமதி கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

மேற்படி இனத்தில் முனிஸிபல் பண்டுகள் கூட சேர்க்கப்படலாமென்று ஓர் பிரேரபணை ஏற்பட அதுவும் அங்கீகரிக்கப்பட்டது.

6. தற்காலம் இங்கிலாந்தில் 'பேபர்கர்ரன்ஸி,' 'தங்க ஸ்டாண்டார்டு ரிஸர்வ்' ஆகிய இவ்விரு இனங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான தொகைகளை இந்தியாவிலேயே நிறுத்தி அவைகளை இந்தியக் கைத்தொழில்கள் விவசாயம், இவைகளின் விருத்திக்காகவும், கோவாபரேடிவ் இயக்கத்தின் பொருளாதாரத்தைப் பெருக்கி அதனால் விவசாயிகளுக்கு சரியான காலங்களில் மலிவான வட்டிக்குப் பணம் கொடுத்து உதவுவதற்காகவும் உபயோகப்படுத்தலாம் என்று சட்டம் ஏற்படுத்துதலோ அல்லது எந்த விதமோ சாத்தியமாகுமா அவ்விதம் செய்யவோ இக்கான்பரன்ஸ கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது. இத்தீர்மானத்தை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கும்படி இக்கான்பரன்ஸு ரிஜிஸ்ட்ராரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. கைத்தொழிற்சங்கங்கள் நிதரிசனமாய் வேலைசெய்யக்கூடிய ஏற்பாடு ஒன்றை அதிலும் முக்கியமாய் குடிசைக் கைத்தொழில்கள் விருத்தியடையவும் அவைகளுக்கு வேண்டிய சாமான்களை சப்ளை செய்து அப்ப

டித் தயாரிக்கப்பட்ட சாமான்களை விக்கிரயம் செய்யவும் சரியான மாதிரியில் ஏற்படுத்தித் தருவதற்கு கோவாபரேடிவ் இலாகா பிரதிநிதிகளும் பெரிய கைத்தொழிற்சாலைப் பிரதிநிதிகளும் அடங்கிய கமிட்டி ஒன்றை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது.

8. 1882-வது வருஷத்திய இந்தியன் டிரஸ்டு ஆக்டானது டிரஸ்டுத்துகையைப் போட்டுவைக்கும் மாதிரியைப் பற்றி அனுவசியமான நிர்ப்பந்தம் செய்திருப்பதாக இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுவதோடு கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கிலும் அபெக்ஸ் பாங்கிலும் அத்துகை போட்டுவைக்கப்படுதல் பத்திரமானது தானென்று கவர்ன்மெண்டு அங்கீகரிக்கலாமென்றும் இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

9. ஆதி ஆந்திரர்கள் என்னும் தாழ்ந்த வகுப்பினரை மீளாத தரித்திரப் பிடிப்பினின்றும் விடுவித்து அவர்களது ஜீவனத்திற்கு இன்றியமையாதவைகளைச் சம்பாதித்துக் கொடுக்கும்பொருட்டு ராஜாங்கமும் ஜனங்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்பட்டு அப்பரிதாபஜாதியாரைப் பொருளாதாரக் கஷ்டத்திலிருந்தும் ஆசார அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க கீழ்க்கண்ட மார்க்கங்களை உடனே கைக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(a) மனிதர்கள் வசிக்கத்தகுந்த கட்டடங்கள் அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க கோவாபரேடிவ் கட்டடச்சங்கங்கள் ஏற்படுத்தல். அதற்கு ராஜாங்கம் தாராளமாகப் பொருளுதவி செய்தல்.

(b) அயல்நாட்டுப் போட்டியினால் அழிந்துபோன குடிசைக்கைத்தொழில் விருத்தியாகும்பொருட்டு அவைகளைத்திரும்பவும் ஆரம்பிக்க கைத்தொழிற் சங்கங்கள் ஏற்பட்டு அவைகளை தாராளமான பொருளுதவியினால் கவர்ன்மெண்டு ஆதரிக்கவேண்டும்.

10. சென்ட்ரல் பாங்கியின் இலாகாவிற்கு ஏற்பட்ட மேன்பார்வைத்தொகை அவ்விலாகாவிலுள்ள யூனியன்களின் பிரதிநிதிகளாகிய ஒரு கூட்டத்தாரால் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரையும் ஸெண்ட்ரல் பாங்கியையும் கலந்து செலவழிக்கப்படவேண்டியது உசிதமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது.

11. கிராமச் சங்கங்களில் கூட்டுக்கிரய விக்கிரயங்களிலும் தாலூகாக்களிலும் ஜில்லாக்களிலுமுள்ள தலைமையிடங்களில் ஸ்டோர்கள் ஏற்படுவதிலுமுள்ள முன்னேற்றம் வெகுமந்தமாயிருப்பதை முன்னிட்டு ஒவ்வொரு ஸெண்ட்ரல் பாங்கித்தலைமையிடங்களிலும் கோவாபரேடிவ் வியாபார யூனியன்களை ஏற்படுத்தி அங்கிருந்துபட்டணங்களுக்கு சாமான்களை சப்ளை செய்வித்து கிராமச்சங்கங்களுக்காக சரக்குகளை வாங்கச் சொல்லலாமென்றும் இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் தகுதியான உத்தியோகஸ்தரும் சிப்பந்திகளும் ஏற்படுத்தப்படலாமென்றும் இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.



12. சென்ட்ரல் பாங்கிகளுக்கு கிராமநாணயச் சங்கங்கள் தங்கள் பங்குத்தொகைகளை சீக்கிரமாகக் கொடுத்தல் அவைகளின் கடமையை விளக்குவதோடு பாங்கிகளின் பொருட்பாங்கையும் திடப்படுத்துவதால் அப்பங்குத்தொகை 5-வருஷங்களுக்குள் கொடுபடுவது யுக்தமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

13. கோவாபரேடிவ் இயக்கம் கடன்வாங்குவதற்குத்தான் என்று எண்ணி அதன் முக்கியமான மற்ற விஷயங்களை மறந்திருத்தலை இக்கான்பரன்ஸ் எடுத்துக்காட்டுவதோடுகூட கிராமநாணயச் சங்கங்களின் நிர்வாகிகளைக்கொண்டு அவரவர்களின் சங்கமெம்பர்களுக்கு சிக்கனத்தையும் கெடுதவருமையையும் புகட்டும்படி வற்புறுத்துகிறது.

14. கோவாபரேடிவ் சங்கங்களிலிருந்து தங்கள் பங்குகளுக்கு இலாபமாகப் பெற்ற தொகைகளை இன்கம்டாக்ஸ் என்னும் வருமான வரி ஆக்டின்விதிகளின் வஜாசெய்துவைக்கும்படி ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கு கவர்ன்மெண்டு விளங்கச் செய்யும்படி இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

15. உள்நாட்டுச் சங்கங்களுக்கும் உள்நாட்டுஜில்லா சங்கங்களுக்கும் பணம் போக்கு வரத்துக்கு ஆகவேண்டிய சௌகரியங்களை இக்கான்பரன்ஸ் உணர்ந்து 50 ரூபாய்க்குக் குறையாத துகைகள் கோவாபரேடிவ் சங்கங்களிலிருந்து 'சப்டிரஷரி' வாங்கி அதே ஜில்லாக்களிலுள்ள சங்கங்களுக்குள் கொடுக்கலாமென்று கவர்மெண்டு அனுமதிகொடுக்க வேண்டிய தவசியமென்று இக்கான்பரன்ஸ் கருதுகின்றது.

16. பொதுஜன வேலைகளைச்செய்ய பொதுஜன ஏற்பாடுகள் உண்டாகின்றன. அதற்கு குறிப்பிட்ட சில இடங்களிலிருந்து பொருள் வருவாய் வேண்டியிருக்கிறது. ஆகையால், கோவாபரேடிவ் சொஸைடிகள் தங்கள் இலாபங்களிலிருந்து ஆக்டின்படி ரிஸர்வ்பண்டு முதலியன எடுத்துவைத்தபிறகு பொது நலபண்டிற்கு சங்கத்திற்குச் சௌகர்யமான அளவில் நிர்ணயஞ் செய்துகொண்டு எடுத்துவைக்க ஒவ்வொரு சங்கத்திற்கும் அனுமதி கொடுக்கவேண்டுமென்று, கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்வதுடன் அதற்கு ஆகவேண்டிய சட்டங்கள் ஏற்படும் வரையில் மேற்சொன்ன விஷயம் நிலைபெறும் பொருட்டு ரிஜிஸ்ட்ராரவர்கள் அவ்வேற்பாட்டை அங்கீகரிக்கலா மென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

17. கவர்ன்மெண்டு கிஸ்து வசூல்செய்ய "ரெவினியூரிகவரி ஆக்டில்" சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகளின்படியே, கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டின் 12-வது விதிப்படி செய்யப்படும் தீர்மானம் அல்லது தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவர கோவாபரேடிவ் இலாகா சிப்பந்திகளுக்காவது, அல்லது ரிவினியூ டிபார்ட்டு மெண்டாருக்காவது அதிகாரம் கொடுக்கும்படி கோவாபரேடிவ் சொஸைடி ஆக்டு மாற்றப்படவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது.

18. க்ஷேமநிதிக்கும் தர்ம பண்டுகளுக்கும் எடுத்துவைத்ததுபோக பாக்கியிருக்கும் இலாபமானது டிவிடண்டை சமரசப்படுத்தும் பண்டுக்கென்று எடுத்துவைக்கப்படலாமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

19. ஆந்திர கோவாபரேடிவ் கான்பரன்ஸின் இரண்டாவது கூட்டம் கோதாவரி ஜில்லாவில் நடைபெறவேண்டுமென்ற வேண்டுகோளை இக்கான்பரன்ஸ் அங்கீகரிக்கிறது.

---

## ரிஜிஸ்ட்ராரவர்களின் ஸர்குலர்.

### கால்நடைகளுக்கு சூடுபோடுதலும் அவைகளின் தோலை உரித்துப் பதனிடுதலும்.—

இந்தியாவில் தோல்சாமான்கள் செய்வதற்காவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காவது தயாரிக்கப்படுகிற கால் நடைகளின் தோல்களை இந்தியர்கள் கெடுத்து விடுவதனால் உண்டாகும் பெரிய நஷ்டத்தை மிராசுதாரக் கோவாபரேடர்களும் கால்நடைகளை வைத்திருக்கும் கோவாபரேடர்களும் கவனிக்கவேண்டும். அஜாக்கிரதையாகத் தோலுரிப்பதனால் வருஷா வருஷம் இந்தியாவிற்கு ஏற்படும் நஷ்டம் குறைந்தபக்ஷம் ஒருகோடி ரூபாய்கள் ஆகின்றன. அஜாக்கிரதையாய் உரிக்கப்பட்ட தோலைவிட நன்றாய் உரிக்கப்பட்ட தோலுக்கு பவுண்டு ஒன்றுக்கு இரண்டணா அதிக விலை கிடைக்கிறது. சூடுபோடுவதனால் ஏற்படும் நஷ்டம் வருஷம் ஒன்றுக்கு 42 கோடி. இந்நஷ்டம் பெரும்பாலும் சென்னையையும் தென்னிந்தியாவையுமே பொறுத்திருக்கின்றது. ஆழ்ந்த சூடு என்றால் ஒரு தோலுக்கு ரூ. 4 அல்லது 5 நஷ்டம் என்று அர்த்தம். ஆகவே தோல் வியாபாரம் இந்தியாவின் வியாபாரத்தில் மிகவும் முக்கியமானது என்றும் தோல்களைக் கெடுத்துவிடுவதனால் ஒவ்வொரு வருஷமும் விசேஷ நஷ்டமடைகிறதென்றும் நன்றாகப் புலப்படுகின்றது. மேலும் இத்தகைய நஷ்டம் ஏற்படுவது மிகவும் அனாவசியம். ஏனென்றால் இதற்குக் காரணங்கள் அனாவசியமும் அதிகமுமான சூடு



போடுவது ஒன்று. அஜாக்கிரதையாயுரித்தல் மற்றொன்று; அஜாக்கிரதையாய்ப் பதனிடுதல் இன்னொன்று. ஆகவே நாட்டின் பொருளை இம்மாதிரி அனாவசியமாய்ப் பாழாக்காமல் நிறுத்துவது கோவாபரேடர்களால் கவனிக்கத்தகுந்தது.

சாதாரணமாய் ரயத்துக்கள் தங்களுடைய இறந்துபோன கால்நடைகளின் தோல் எப்படிப்போனாலென்ன என்று கவனிக்கப் பிரியப்படாமலிருக்கிறதாகத்தெரிகிறது. ஆனால் தேசத்திற்கு இதனால் ஏற்படும் அசாத்திய நஷ்டத்தை எடுத்துக்காட்டி அதைத்தடுப்பது எல்லா இந்தியர்களுடையவும் கடமை என்று எடுத்துக்காட்டுவதே இந்த சர்குலரின் நோக்கம். ஆகையால் ரிஜிஸ்தரார் கூறுவது என்னவென்றால், எல்லா கோவாபரேடர்களும் தங்கள் கால்நடைகளுக்கு அனாவசியமும் அதிகமுமான சூடுபோட வொட்டாமல் தடுப்பதோடுகூட சக்கிலியர்களையும், பறையர்களையும் தோலை சரிவர உரித்துப் பதனிடும்படி தூண்டுதல் செய்யவேண்டும். சூடுபோடுதல், உரித்தல், பதனிடுதல் இவைகளைப் பற்றிய பிரத்தியேகமாய் குறிப்புகள் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன.

நல்ல தோல்களை சரிவர உரித்து, பதனிட்டு கோவாபரேடிவ் ஏற்பாட்டில் விற்றால் தரகர்களின் தலையிடுதலில்லாமல் விசேஷ இலாபம் பெறலாமென்று ரிஜிஸ்ட்ராரவர்கள் பிரஸ்தாபிக்கிறார்.

தங்களுடைய இறந்து போன கால்நடைகளின் தோல் விற்பனையில் ரயத்துக்கள் சாதாரணமாய் யாதொருபொருட் பிரயோஜனத்தில்சிரத்தை பெறுகிறதில்லை யென்றும் ஆனால் கோவாப ரேடர்கள் தங்கள் சுற்றுப்பக்கங்களிலுள்ள சக்கிலியர்களை சரிவரத் தோலை உரித்துப்பதனிட்டு கோவாபரேடிவ் ஏற்பாட்டில் விற்கச்சொல்லி ஏற்பாடு செய்யலா மென்றும் அபிப்பிராயப்படுகிறார். மேலும் இம்மாதிரி கோவாபரேடிவ் விற்பனையினால் கால்நடைகளின் சொந்தக்காரர்கள்கூட அதிக இலாபத்தின் ஒரு பாகத்தை அடையும்படி ரயத்துகள் ஒரு ஏற்பாடு செய்யலாம்.

எல்லா யூனியன்களுடையவும் கிராமச் சங்கங்களுடையவும் பஞ்சாயத்துக்கள் இவ்விஷயத்தைத் தீவிரமாய் கவனித்து இந்த அனாவசிய நஷ்டத்தை நிறுத்த கோவாபரேஷனால் ஒன்றும் செய்ய முடியாதா என்று மிக உருக்கத்துடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### சூடுபோடுதல்.

மாடுகளை அடையாளம் தெரிந்துகொள்வதற்கு மாத்திரம் அல்லது நொண்டியாய்ப்போனால் மாத்திரந்தான் சூடுபோடலாம். முந்திய விஷயத்திற்கு கன்னத்திலாவது கழுத்திலாவது ஒரு சிறிய சூடுபோதுமானது. அதனால் தோலுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது. சில சமயங்களில் நொண்டித்தனத்தை நீக்க சூடுபோடுதல் உபயோகப்படுகிறது. ஆனால் இத்தகைய சூடு கூடியவரையில் சிறிதாயிருக்கும்படி செய்யப்படவேண்டும். தேகம் முழுவதும் போட்டிருக்கும் சூடுகள்தான் தோலை மிகவும் கெடுக்கின்றன. இம்மாதிரி சூடு அவசியமேயில்லை. சில சமயங்களில் அத்தகைய தோலுக்கு விலையே யில்லாமற்போகின்றது. இம்மாதிரி சூடு அதிகமாய்ப்போடுகிற ஜில்லா வாசிகள் அதிகமாகச் சூடு போடாத ஜில்லா வாசிகளைவிட தண்ணீரிறைக்கும் கபிலை முதலியவற்றிற்காக அதிகச் செலவு செய்து வாங்கவேண்டியிருக்கிறது.

## தோலுரித்தல்.

உரிக்கும்பொழுது தோலை வெட்டக்கூடாது. ஒரு தோலில் ஒரு வெட்டுக்குறியிருந்தால் 4, அல்லது 5 ரூபாய்கள் நஷ்டம். நஷ்டம் தோலுக்குச் சொந்தக்காரனுடையதே. ஆகையால் உரிக்கும்போது தோலில் செய்கிற ஒவ்வொரு வெட்டுக்குறிக்கும் கசாப்புக்காரனை அபராதம் கொடுக்கும்படி செய்யவேண்டும்.

மிருகம் செத்த உடனே தோலை உரிக்கவேண்டும். கொஞ்சம் அழுகும்படிவிட்டால் தோலின் விலை நஷ்டமாய்விடும். கூர்மையானது $\frac{1}{8}$ அங்குலத்திற்கு அதிகமாக அழுந்தாமல் தடை வைத்த கத்தியை உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்தால் தோல் அதிகமாய் வெட்டுப்படாது. உரிக்கும்போது முழங்காலின் முன் பாகத்திலிருந்து அதை சரிபாகமாகப்பிரித்துத் திறக்கவேண்டும். முழங்காலின் கீழ் பாகத்திலிருந்தாவது அல்லது பின்பாகத்திலிருந்தாவது திறக்கக்கூடாது.

## பதனிடுதல்.

நனைக்கப்பட்ட உப்பைக்கொண்டு செய்வதாயிருந்தால் கீழ்க்கண்டபடி செய்யவேண்டும். மாமிசபாகம் மேலேயிருக்கும்படி தோலைப் பரப்பி பிடி உப்புப்பொடியை அதில் முழுவதும் நன்றாய்ப்படும்படி அதில் தூவவேண்டும். இதை உரித்த உடனே செய்யவேண்டும். இல்லாவிட்டால் தோல் அழுகி சொந்தக்காரனுக்கு அதன் விலை நஷ்டமாய்விடும். தோல் மடிக்கப்படும்போது உப்பு வெளியே விழுந்து விடக்கூடாது. மடிக்கும்போது இரண்டு பேர் இரண்டு பக்கங்களையும் பிடித்துக் கொண்டு ஒருபக்கம் இன்னொருபக்கத்துடன் சரியாகப் பொருந்தும்படி வைக்கவேண்டும். பிறகு வயிற்று பாகம் ஓரத்தில் வரும்படி மடிக்கவேண்டும். பிறகு அதன் பேரில் ஒருபிடி உப்பைத் தெளிக்கவேண்டும். தோலில் இரண்டு முனைகளையும் கூடியவரையில் உப்பை இரைக்காமல் தாங்கிக்கொள்ளும்படி மடித்திருக்கவேண்டும். இம்மாதிரி மடித்து முடிந்தால் தோல் வெகுநாளைக்கு அழுகிப்போகாமலிருக்கும்.

**உலர்ந்த உப்பைக்கொண்டு பதனிடுதல்.** உலர்ந்த உப்புப் போடப்பட்டதோல், நனைந்த உப்புப் போடப்பட்ட தோலின் நிறையால் அரைப் பங்குதானிருக்கும். ஆகையால் ரெயில் சிலவு குறையும். இம்மாதிரி உப்புப் போடப்பட்டபிறகு அத்தோலைத்திறந்து மாமிசபாகம் வெளியே இருக்கும்படி ஒரு மரத்தின்மீது நிழலில் உலர்த்தவேண்டும் இம்மாதிரி நிழலில் அநேகமாய் உலர்ந்தபிறகு அது பரவி சமமாக பூமியில் கிடப்பதற்காக ஓரங்களில் பளுவுவைக்க வேண்டும். பிறகு அதை முற்றிலும் உலரும்படி விடவேண்டும். தோலைக் கட்டுவதற்குமுந்தி முற்றிலும் உலர்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தோல்கள் உரைப்பதால் உஷ்ணம் உண்டாகி தோல் அழுகிப்போகும். முக்கியமாய் இது கோடைகாலத்தில் கவனிக்கப் படவேண்டும். சீக்கிரமாக அனுப்பும் பொருட்டு நன்றாய் உலருவதற்கு முந்தியே தோல்களைக்கட்டுப் போடுவதினால் ஏராளமான பொருள் நஷ்டமாகிறது.

16179
XM m211N19
N09.10